CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



## மஹான் கோடகநல்லூர்

# ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் திவ்ய சரிதம்

ஆசிரியர்
ராமகிருஷ்ண சுப்ரமணியன் (மணி ஐயர்)
அரிமழம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மஹான் கோடகநல்லூர் ஸ்ரீ ஸுந்தர ஸ்வாமிகள் திவ்ய சரிதம் |
| ஆசிரியர் | : | ராமகிருஷ்ணன் சுப்ரமணியன் (மணி ஐயர்)<br>அரிமழம்–622 201 புதுக்கோட்டை மாவட்டம்<br>அலைப்பேசி : 99947 30808. |
| தாள்விபரம் | : | 70 GSM (14CM x 21CM) |
| பதிப்பாளர் | : | சோம. சிவ. பரம்பரை டிரஸ்ட்<br>ஸ்ரீ ஸுந்தர ஸ்வாமிகள் அதிஷ்டானம்<br>அரிமழம்–622 201 புதுக்கோட்டை மாவட்டம் |
| உரிமை | : | ©ஆசிரியருக்கே |
| பிரதிகளுக்குத் தொடர்பு கொள்ள | : | ஆர்.சுப்ரமணியன் 99947 30808<br>சோம.சோமசுந்தரம் 87542 42810 |
| விலை | : | ரூ.750/– |


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Phone : 2498474

**SRI SESHADRI SWAMIGAL SEVA SANGAM**

Regd. Office : Sri Seshadri Nilayam,
6th Street, Tatabad, Coimbatore - 641 012.
Registered under the Societies Registration Act, as No.2 of 1954

Ref : ..........................

Date 10.03.2023

மஹான் கோடகநல்லூர் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் சரிதம், பிரபல சித்த வைத்திய பரம்பரையைச் சேர்ந்த அரிமழம் ராமகிருஷ்ணன் சுப்ரமணியனால்(மணி ஐயர்) எழுதப்பட்டு நூலாக வெளிவருவதில் மிகுந்த சந்தோஷம். முன்னரே ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் சரிதம்பற்றி சில நூல்கள் வெளியாகி உள்ளன.

இப்பொழுது அரிமழம் சுப்ரமணியன் எழுதியுள்ளது முழுமையான சரிதத்தை வெளிக்கொணர்ந்து உள்ளது.

ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் பற்றிய தகவல்களையும்,வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளையும்,லீலாவிபூதிகளைப் பற்றியும் நூல் ஆசிரியர் மிக விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளார்.அவருடைய ச்ரத்தை வெளிப்பட்டுள்ளது.

ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் விபூதி,ருத்ராக்ஷ தாரண மஹிமைகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறி யுள்ளார்கள்.செட்டிநாட்டுப் பகுதியைச்சேர்ந்த நகரத்தார்கள் இவரின் உபதேசங்களைப் பின்பற்றி சிறப்புகளை அடைந்துள்ளனர்.

இந்த சரிதத்தை அன்பர்கள் அனைவரும் படிப்பதோடு மட்டுமல்லாது,மஹானின் அருள் வாக்குகளையும் பின்பற்றி ஆன்மீக வழியில் எல்லா க்ஷேமங்களையும் அடைய ஆசிர்வாதங்கள்.

.......ஸ்ரீஸ்ரீஸ்ரீசேக்ஷாத்ரி ஸ்வாமிகள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation



# மகான் கல்யாணகுணகம்பீர

# ஸ்ரீஸ்ரீ ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



# மகான் ராஜபூஜித

# ஸ்ரீஸ்ரீஸ்ரீ குழந்தை ஆனந்த ஸ்வாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



**மகான் ஸ்ரீநாராயணசிவன்**

ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளின் பிரதான சீடர்

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிறந்திடும் எண்ணங்கள்
சொல்லிடும் சொற்கள்

சிறந்திடும் உன்னருளால்:
என்னாற்றல் யான்உணர

எந்நாளும் உன்பாதம்
போற்றித் தொழுதிடுவேன்

சுந்தர ஆனந்த சேஷா!

நூலாசிரியர்
ராமகிருஷ்ண சுப்ரமணியன் (மணி ஐயர்)

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தெய்வத்தைத் தொழும் தெய்வங்கள்

ருக்மணியம்மாள் – ராமகிருஷ்ணன் ஐயர் (மணி ஐயர்)

என்றும் உங்கள் நல் ஆசியுடன்
ஸ்ரீ ராகவேந்திரா'ஸ் என்வலப்ஸ் & பிரிண்டர்ஸ்
Mobile: 95007 91582 E-mail : arimalamkumar@gmail.com

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்



குருவருள் எல்லோருக்கும்
பரிபூரணமாக கிடைக்க வேண்டி வணங்கும்

ராம. ப. கதி. பழ. பழ. பழனியப்பன் உமையாள்
குடும்பத்தினர்

அரிமழம்.

சூரியா மெடிக்கல்ஸ், வேலூர் - 632006.
வாழ்க வளமுடன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



# RITAMBHARA JNANA SABHA NEW DELHI

ஓம் சக்தி! ஜய சக்தி!!

ஞானாம்ருதம் சமரசம் காகனோபமோஹம்

## அணிந்துரை

நமது பாரத தேசம் மகான்கள், முனிவர்கள், சித்த புருஷர்கள் நிறைந்தது.

அதனால் இந்த பாரத தேசத்தில் பிறந்த எனக்கும் சிறு வயது முதலே மகான்கள் சித்தர்கள் இவர்களைப் பற்றிய விஷயங்களை அறிந்து கொள்ளும் ஆர்வம் இருந்ததில் வியப்பில்லை.

நான் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் அருகே நாகரசன் பேட்டை என்ற கிராமத்தில் இளம் வயதில் வசித்து வந்த சமயத்தில் அங்கிருந்த காரை சித்தர் என்பவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது.

மேலும் எங்கெங்கெல்லாம் மஹான்கள் சித்தர்கள் இருந்தாலும் அவர்களைப் பற்றி படிக்கும் ஆர்வம் ஏற்பட்டது.

சித்தரின் மறைவுக்குப் பிறகு இடையில் எனக்கு ஸ்ரீசத்குரு தரிசனம் ஏற்பட்டு, ஸ்ரீவித்யா மார்க்கத்தில் பிரவேசம் ஏற்பட்டது.1975ஆம் ஆண்டு வாக்கில் மஹான் சித்த புருஷர் ஸ்ரீ சுந்தர சுவாமிகள் அவர்களைப் பற்றிய விவரம் காணக் கிடைத்தது. ஆனால் அப்போது அவர்களின் சரித்ரம் முழுவதும் கிடைக்கவில்லை. எனது ஸ்ரீ சத்குரு நாதரும் ஸ்ரீ சுவாமிகளை பற்றிய அற்புதங்களை அவ்வப்போது அருளியது உண்டு.

விடையல் கருப்பூர் கிராமத்தில் வேலை நிமித்தம் வசித்த போது ஸ்ரீ சுந்தர சுவாமிகள் இயற்றிய சுவானுபூதி ரசாயனம் என்ற கிரந்தம் கிடைத்து படித்து வரும்போது அது மிகவும் பழைய காலத்து தமிழில் இருந்ததால் புரிந்து கொள்ள முடியுமா என்று எண்ணத் தோன்றியது.

அதன் பின் தொடர்ந்து இந்த சுவானுபூதி இரசாயனத்தை படித்து வரும்போது அதில் இருந்த ஒரு பிரகரணம் லலிதானுபூதி பிரகரணம் என்று இருந்ததை படிக்க படிக்க அருட்தோன்றலால் அது முழுவதும் ஒரு ஸ்ரீ வித்யா அத்வைத பிரம்ம ஞான கிரந்தம் என்பது புலனாகியது.

அதில் ஸ்ரீ சுவாமிகள் எழுதியவாறு லலிதா என்பது ஒரு மார்க்கத்தின் தேவதையாக இருந்ததாலும் அவள் ஒரு அனுபூதி நிலையில் அடையப் பட வேண்டிய அத்வைத ஆத்மானுபூதி சுவரூபம் என்று அருளியது புலனாகியது

அந்த பிரகரணம் மிகவும் பழைய தமிழ் நடையில் இருக்கவே அது அனைவராலும் படித்து புரிந்து கொள்ள ஏதுவாக லலிதா ஓர் இன்பக் கலப்பு என்ற, அளவில் சிறிய நூலாக, (இருந்தாலும் பொருளில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெரியதாக) எழுதி வெளியிட்டேன். அவ்வப்பொழுது நம்மை மஹான்கள் ஆட்கொண்டு அருள்கிறார்கள் என்பது இதன் மூலமும் கண்கூடாக அறிய நேர்ந்தது.

அதன் பின் ஸ்ரீ சுந்தர சுவாமிகள் சரித்திரம் ஆங்காங்கே சில பல அதிசயங்கள் கேட்க படிக்க நேர்ந்தது. அப்போது இந்த மகானின் சரித்திரம் அனைவராலும் கேட்கப் பட வேண்டும் என்ற அவா இருந்து கொண்டே இருந்தது. அப்போதுதான் அரிமழம் ஸித்தவைத்தியர் ஸ்ரீஸுப்ரமணியம் அவர்கள் முகநூல் மூலம் நட்பாகி மஹானை நன்றாக தெரியப்பண்ணினார். அப்போது அவர் சுவாமிகளின் சரித்திரத்தை எளிமையாகவும் விவரமாகவும் எழுதப் போவதாக அறிவித்தார்.

அடுத்த வேளை உணவிற்கே இல்லாத ஏழை ஒருவனுக்கு கடலளவு பொன்னும் மணியும் கிடைத்தால் எத்தகைய சந்தோஷம் ஏற்படுமோ அதைப் போன்று அப்போது நான் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. எந்த மஹானுடைய புத்தகம் என் ஸ்ரீ வித்யா மார்க்கத்தைப் பற்றிய எனது அணுகு முறையை மாற்றி என்னை அந்த அத்வைத பிரம்ம ஞான கடலில் முத்தெடுக்க வைத்ததோ அத்தகைய மகானின் சரித்திரம் அனைவராலும் கேட்கப் பட போகிறது என்று அறிந்தபோது தான் எனக்கு அத்தகைய அளவில்லா ஆனந்தம் ஏற்பட்டது.

மேலும் அந்த அன்பர் இந்த புத்தகத்தில் எனது ஒரு உரை இடம் பெற வேண்டுகோள் வைக்க அதற்கு இணங்க இந்த விஷயங்களை பகிர நேர்ந்ததும் அந்த மகானின் இச்சையே என்றால் மிகையாகாது.

ஆகாயத்தில் பொத்தல் விழுந்தால் அதை கொசுவின் ரக்கையால் தைத்து விடலாம், ஆனால் மகான்களை அவர்களை உள்ள வண்ணம் அறிவது கடினம் என்று எனது சத்குரு நாதர் அவர்கள் கூறுவார்கள்.

அத்தகைய ஒரு சித்த புருஷரான ஒரு மகானின் சரித்திரம் இப்போது நம் கையில் இருக்கும் போது நாம் அனைவரும் கொடுத்து வைத்தவர்கள் என்பதில் எந்த விதமான ஐயமும் இல்லை. அவரின் எழுத்தில் மஹான் இன்று நம்மிடயே அருள்பாலிக்கிறார்.

இந்த நூலை எழுதிய அரிமழம் ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்களுக்கு மஹான்களின் அருளாலும், லலிதா அனுபூதி வடிவ ஆத்ம ஸ்வரூபிணியான பரதேவதையின் அருள் கிடைக்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

ஸஜ்ஜன பந்து
அருட்சக்தி நாகராஜ ஐயர்
*Founder/President : Ritambhara Jnana Sabha, New Delhi*

*March, 2023*

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

*Shubamasthu* *Sri:* *Mangalaani Bhavanthu*

*Srimathe Ramanujaya Namaha*
*Sri Govinda Gurave Namaha*

*Godhaa Gaana Mani, Sangeetha Kala Rathna,*
*Sangeetha Kala Bharathy, Kanchi Kamkoti Peeta Asthaana Vidwan (Harikatha),*
*Pravachana Tapasvi, Sath Sampradaaya Siromani,*
*Dharmathma Awardee (Sringeri Vidya Samithi),*
*Abinava Sampradaaya Sangeetha Pravachana Nirupama*

*Thiruvali Thirunagari, Keezha Thirumaaligai* *01.03.2023*
***Embar R Kasturi Swami*** ***Camp: Srivilliputtur***

வேதத்தை முதன்மையாகக் கொண்ட வைதீக சித்தாந்தத்தில், தர்மஸம்ஸ்தாபனார்த்தமாகவும், சேதனர்களின் உஜ்ஜீவனத்திற்காகவும், எம்பெருமான் மஹான்களை அவதரிப்பித்து அருளுகிறான். அவ்வகையிலே வைதீக தர்மத்திற்கு நலிவு ஏற்பட்டபொழுது, ஸ்ரீ சிவபெருமானே ஸ்ரீ ஆதிசங்கராச்சாரியாராகவும், ஸ்ரீ ஆதிசேஷனே ஸ்ரீ ராமானுஜாச்சாரியாராகவும், ஸ்ரீ வாயுபகவானே ஸ்ரீ மத்வாச்சாரியாராகவும் அவதரித்து, வேதாந்த அர்த்தங்களை நிகமனம் செய்து அருளினார்கள்.

அவ்வகையிலேயே "ச்ரோத்திரியம், ப்ரஹ்மநிஷ்டம்" என்று வேதாந்தம் பகரும் ரீதியில் உபநிடத அர்த்தங்களை அனுபவத்திலே கண்ட மஹான் "கோடகநல்லூர் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள்". அவர்கள் தம்முடைய சுவானுபவத்தை விளக்கி அருளியுள்ள "சுவானுபவ ரஸமஞ்சரி"யின் கண் காணக்கிடைக்கும் ஔபநிஷதிகமான அர்த்தங்கள், மஹத்தாகவும் தொகுத்தலுக்கு அப்பாற்பட்டு அரிதாகவும் இருக்கும். அவ்வனுபவ கடலினின்றும் ஒரு முத்தை அனுபவிப்போம்.

நாமார்த்தவைபவத்தில் 'மதுசூதன்' என்ற நாமாவிற்கு தன் அனுபவத்தை உரைக்கும்கால், “ஸகல ஜகத்தையும் சுகலேசத்தால் ஆனந்தமய கோஷ அபிமானியாம் சிவனென்ற அசுரனையும், ஸகல ஜகத்தையும் தானான தன்னருளாம் அதிஷ்டான வல்லமையால் வென்று, ரக்ஷித்து, தானாய் கொண்டு விளங்கும்” என்ற விவரணத்தில் சிவனின் தன்மையையும், அதைவெல்லும் எம்பெருமானின் வல்லமையும் பேசப்படும் இடம் அதி அற்புதமாகவும் பிரமாண ஸித்தமாகவும் இருக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அம்மஹானின் சிஷ்யர்கள், வையை சகோதரர்களாகிய சங்கீத மாமேதைகளான ஸ்ரீ ராமஸ்வாமி சிவன் அவர்களும் ஸ்ரீ மஹாவைத்தியநாத சிவன் அவர்களும். ஸ்ரீ ராமஸ்வாமி சிவன் அவர்களின் கீர்த்தனையில்:

"சுந்தர குருவை நிரந்தரம் பணிந்து நான் தொந்தம் அகன்றேனே" என்றதினால்,

ஜீவனுக்கு "த்வந்த்வம்" (தொந்தம்) என்கிற வேறுபாட்டுடன் காணக்கிடைக்கும் இவ்வுலகம், அவ்வேறுபாடு நீங்கி "ஏகம் ஸத்" என்ற அனுபூதி ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளுடைய க்ருபையினால் ஸித்திக்கும் என்றாயிற்று.

ஏதோ புராணகாலங்களில் இருந்த பக்தர்களைப் போலன்றிக்கே, நம்மிடையே சுமார் *150-200* வருடங்களுக்கு முன்பு எழுந்தருளியிருந்து, ஜீவகோடிகளுக்கு பேருபகாரம் செய்தும்-செய்துகொண்டுமிருக்கிற ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளை நிதம் நிதம் நினைத்தாலும் போதும். உயர்ந்த பாக்யோதயம் ஆகும். அன்னாரின் அதிஷ்டானம் அமைந்துள்ள அரிமளத்தில் அவருடைய பக்தர்கள் உயர்ந்த இந்த பெருவிழாவை எடுத்து தங்களையும் இவ்வுலகையும் தன்யர்கள் ஆக்கி கொள்வது பற்றி மிக்க மகிழ்ச்சி.

இப்படிக்கு,
எம்பார் R. கஸ்தூரி

354, Vadakku Mada Vilaagam, Tirunagari, Sirkali Taluk, Mayiladuthurai District, Tamil Nadu, India.
Pin 609106. Mobile: 8525892293, 9362288557 Landline 04364-291720.
Email: kasturi.embar@gmail.com

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

**சிவமயம்**

**திருச்சிற்றம்பலம்**

விரிந்த எழில் பகராகாசத்தில், வரிந்துத்திகழும் பேரண்டபெருவெள்ளத்தனைத்தையும் துன்னணுவாக்கி, 'கடந்து நின்றும்' அதனிருந்து பிரிந்த தகராகாசத்தில் பரிந்துத்திகழும் பிண்டப்பெருவெள்ளமனைத்திலும் துன்னணுவிற்கணுவாகி, 'உள்ளே ஒன்றி நின்றும்', இவ்வாறு அனைத்தையும் கடந்தும் அனைத்தின் உள்ளேயும் வியாபிக்கும் கடவுளானோன், விரிந்த செஞ்சடையை சரிந்து அதன்மேல் சிறந்த கங்கையையும் பிறைச்சந்திரனையும் அசைத்தும், குழலிமங்கையை அதிசயிப்ப இடைபாகத்தில் வைத்தும், அருணையில் இருந்து கருணை சொரிந்து அருள் புரிந்து அம்பலத்தில் வீற்றிருக்கும் எம்பிரான், புவியில் தர்மம் நிலைநாட்டுவதன் பொருட்டும், ஆங்கு வாழும் மாந்தர்கள் மேம்படும் பயனாகவும், அவ்வப்பொழுது சகல சித்திகள் பொருந்திய ஞானியோர் வடிவில் அவதரிக்கிறார். இந்த சத்தியசங்கல்பர்கள் நந்தவனமாம் இப்புவியில், தொந்த வேதனை தரும் பந்த வாதனையில் இருந்து கடைத்தேற்றும் சிந்தனைக்கொண்ட அந்தகாரியின் ஸ்வரூபமாய் வந்தவதரித்தவர்கள். இம்மஹான்களின் தனிப்பெருந்தன்மை எளிதில் சொல்நடையில் இயம்ப இயலாது.

ஒற்றுமையின் அடிப்படையில், இமயமலையில் இருக்கும் பனிப்பாறைகள் தமது நிலையில் இருந்து இறங்கி, அழகான கங்கை நதியாக பிரவாகித்து நாடெங்கும் பரவி, பாயும் இடமெல்லாம் செழிப்பை பெருக்க செய்து, நல்லெனவையே கொடுத்துதவி, பிறகு சாகரம் தன்னில் எவ்வாறு கலந்து விடுகிறதோ, அதே போல், இறைவனும் தமது ஹ்ருதயத்தில் உருகும் தயையின் வெளிப்பாடாக, ஸர்வஞானம் உடைய சற்குருவின் அவதாரமாய் தோன்றுகிறார். இம்மஹான்கள், கல்லான மன(மு)டைய அநேக ஜீவகோடிகளை உய்விக்கும் பொருட்டும், அவர்கள் வாழ்விலும் தயையுடன் கூடிய அறநெறி ஒழுக்கம் விளங்கிட எல்லோருக்கும் நல்லாம் தத்துவஞானோபதேசம் செய்து சத்துவகுணம் தழைத்தோங்க நாடெங்கும் சஞ்சாரம் செய்து, நற்குணம் மிகுந்த ஜீவர்களின் பவசாகரம் களைந்து, பின்பு தமது இருப்பிடமான இறைத்தன்மையுள்ளேயே ஒன்றரக்கலந்து விடுகிறார்கள். இவ்வாறு நமது பாரத புண்ணிய பூமி ஈன்றெடுத்த எண்ணிலடங்கா தவசிரேஷ்டர்களுள் ஒருவர் தான் சர்வலோக நாயகனான சிவபெருமானின் அம்சமுடைய ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள்.

அறியாமை எனும் இருளில் வாடும் அநேக ஜீவர்களுள், முமுக்ஷுத்வம் நிரம்பிய ஜீவர்கள் சிலரே. ஜீவனின் உண்மையான ஸ்வரூபம் மற்றும் நிலையை அறிந்து தெளிந்து, அதை அடைவதற்கு வேண்டி குருவை நாடி செல்வார்கள் அவர்கள். ஆனால், வெகு சிலருக்கே, இறை அம்ஸமான அந்த மஹாகுரு அவர்களே சீடனின் வைராக்கியம் அறிந்து அவர்களை ஆட்கொள்ள விரைந்தோடி வருவார்கள். அந்த பாக்கியசாலியான சீடர்கள், பூர்வ ஜென்மத்தில் அளவிற்கடந்த புண்ணியம் சம்பாதித்திருக்க வேண்டும், இல்லையெனில் இந்த ஜென்மத்தில் இவ்வற்புத பேற்றை பெறுவதற்கு சாத்தியமில்லை. அவ்வாறு ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள், தாமே விரைந்து ஆட்கொண்டு அருளும் வண்ணம், எங்களது பாட்டனார்களான இராமஸ்வாமி சிவன் மற்றும் அவரது கனிஷ்டராகிய மஹாவைத்தியநாத சிவனவர்கள் திகழ்ந்துள்ளார்கள் என்பதை அறிந்து நாங்கள் பெருமிதம் அடைகிறோம். இவர்கள் தஞ்சை ஜில்லா வையை (என்கிற) வையைச்சேரி கிராமத்தில் ஜனித்து, பரம கியாதி பெற்று, இசை உலகில் வல்லுனர்களாகவும், கர்நாடக சங்கீதத்தில் சிகரம் எட்டிய மாமேதைகளாய் விளங்கினார்கள். வாழ்வில் அனைத்து செல்வங்களும், எவருக்கும் கிட்டாத பெரும் புகழும், சென்ற இடமெல்லாம் விஜயம் சித்திக்கும் தன்மையான திக்விஜயமும், இவர்களிடம் எந்நேரமும் நிலைத்து நின்றதற்கு ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளின் குரு-சிஷ்ய பந்தமே காரணம் என்று சொல்லாமலேயே அறியப்படும்.

சிவபெருமானான ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளின் பொற்பாதஸ்பரிசம் எங்களது பூர்வீகமான வையைச்சேரி கிராமத்திற்கு வாய்த்தது என்பது எங்கள் பரம்பரையினருக்கே எங்கேயும், எவ்வளவும் எம்முறையிலும் பெற இயலாத ஒரு அரிய பாக்கியமாகும். அன்னார்கள் செய்த நல்வினைப்பயனே, ஈசனே எங்களது கிராமத்தை நாடி வருவதற்கு காரணமாய் இருந்திருக்கிறது. அது மற்றும் அல்லாது ஸ்வாமிகள் மாதக்கணக்கில் எங்கள் முன்னோர்களின் இல்லத்திலே வசித்து அவர்களுக்கு புராண-இதிஹாச-உபநிடத விஷயமாகவும், வேதத்தில் உள்ள சாராம்சங்கள் விஷயமாகவும், சூத சம்ஹிதா பிரசங்கமாகவும், இவ்வாறு தமது திருவாய்க்குமுதம் மலர்ந்து அமுதமயமொழிகளனைத்தையும் கிராமத்தில் உள்ள அனைவருக்கும் அருள்மாரியாய் பொழிந்துள்ளார்கள். இவ்விதமான பாடங்களை ஸ்வாமிகள் கிட்டத்தட்ட 32 ஆண்டுகளுக்கு இருந்தும்-சென்றும் நடத்தியுள்ளார்கள். இப்பாடங்களில் சிவன் சகோதரர்கள் பயனடைவது மற்றுமன்றி ஏனையோர்களும் கலந்துக்கொண்டு ஆன்ம விளக்கத்தில் மேன்மையடைந்தார்கள். இவை அனைத்தும் இச்சரித்தை படிப்பதன் மூலம் நன்றாக புலனாகும்.

வையை இராமஸ்வாமி சிவனவர்கள் ஸ்வாமிகளின் குருபரம்பரையை பற்றி ஓரழகான கட்டளைகலித்துறையின் மூலம் தெரிவிக்கிறார்:

"பொன்னார் கயிலைமலைமேல் அமர்ந்து புவிபுகழப்
பின்னாவலூரில் உதித்து அரன் தோழர் என் பேருமடைந்து
அந்நாவிற் கோடகநல்லூரில் தோன்றி அரிமளமாம்
தென்னாட்டிவில் அமர்ந்தாய் அருள் சுந்தரதேசிகனே"

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதில், ஸ்வாமிகளை தேவார மூவருள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனாரின் மறுஅவதாரம் என்று கூறுகிறார். திருத்தொண்டர் புராணம் தொகுத்த சேக்கிழார் பெருமான் சுந்தரரை பொன்னார்மேனியனான சிவனின் பிம்ப வடிவமாகவே குறிப்பிட்டுள்ளார். அதனால், கயிலாய மலையில் அமர்ந்திருக்கும் சிவபெருமானின் அம்சமே, ஏழாம் திருமுறை தேவாரம் இயற்றிய சுந்தரரும், நம் காலத்துக்கு சற்றே 200 ஆண்டுகளுக்கு முன்பு இப்பாரில் அவதரித்த ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளும் ஆகும். இவை, வடமொழியில் பிராபல்யமான குருபரம்பரை தோத்திரத்திற்கு இணங்கு இருக்கிறது:

सदाशिवसमारम्भां शङ्कराचार्यमध्यमाम्।
अस्मदाचार्य पर्यन्तां वन्दे गुरु परम्पराम्॥

("சதாசிவ சமாரம்பாம் சங்கராச்சார்ய மத்தியமாம், அஸ்மத் ஆச்சார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்"). பிறகு இராமஸ்வாமி சிவனவர்கள் தமது பெரியபுரான கீர்த்தனைகள் நூலிற்கு குருவணக்கமாக சுந்தர ஸ்வாமிகளின் பெயரில் "சுந்தர குருவை நிரந்தரம் பணிந்து நான் தொந்தம் அகன்றேனே" எனும் ஒரபூர்வ கீர்த்தனையை புனைந்துள்ளார்கள். அதில் "இப்போதினும் சென்ற அப்போதினும் நண்ணும் எப்போதினும் நம் ஆன்மஸ்வரூபமே ப்ரஹ்மம் என்ற உயர்ந்த அத்வைத தத்துவத்தை அறியவும், இவ்விகவாழ்விலேயே பேரானந்த வாரிதியில் தழைக்கவும்" ஸ்வாமிகள் அருளினார் என்று கூறுகிறார்.

ஸ்வாமிகளின் ஆசிகளால் வையை இராமஸ்வாமி சிவனவர்களின் புதல்வர்களும் வேதாந்தஞான செல்வத்தை பெற்று வாழ்ந்தார்கள். மூத்த புதல்வரான வையை சுப்பிரமணிய ஐயரவர்கள் "எல்லாம் ஒன்றே" எனும் பெரும்பொருள் பொதிந்த நூலை இயற்றியிருக்கிறார். இதில் சிறப்பு என்னவென்றால்; அண்ணாமலையில் ஐக்கியம் ஆகிய பகவான் ரமண மஹரிஷியே, அவரின் கைப்பட இவ்வுத்தம நூலிற் தென்படும் உயர் ஞான விஷயங்களை அத்தியாயங்களாக தொகுத்து, இதனை உலகெங்கும் பரவி இருக்கும் அவர்களது சீடர்களுக்கு போதித்து, வீடுபேறு பெறுவதற்கு இந்நூலில் குறிப்பிட்டுள்ள விஷயங்களை தத்தமது வாழ்வியலாக பின்பற்றினாலே போதுமானது என்று பரிந்துரைத்துள்ளார். இது மற்றும் அன்றி "திருவருட்கைவல்யம், திருவருட்கோவை, திருவருட்கதம்பம், திருவருட்கலம்பகம்" என பற்பல நூல்களின் மூலம் தாமறிந்த மெய்ஞ்ஞான பரமான விஷயங்களை தெளிவுபட குறித்துள்ளார். இரண்டாம் புதல்வருக்கு ஸ்வாமிகளை நினைவூட்டும் வண்ணம் 'கல்யாணசுந்தரம்' எனும் பெயரை சூட்டினார். அவரும் தஞ்சையில் புகழ்பெற்ற தமிழ்புலவராய் திகழ்ந்தார். மூன்றாம் புதல்வரான இராமலிங்கம் மத்திய வயதில் சந்நியாச தர்மம் மேற்கொண்டு "பரிபூர்ணானந்த ப்ரஹ்மேந்திர சரஸ்வதி" எனும் அதிவர்ணாஸ்ரம நாமத்தை கொண்டு விளங்கினார். இவையெல்லாம் ஸ்வாமிகளின் அருட்கடாக்ஷமே!

ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளின் திவ்விய வரலாற்றை மிகவும் கடினமான முயற்சிக்கு உட்பட்டு , எவரும் இதுவரை கண்டறியாத பல அரிய , முன்பு கிடைத்த நூல்கள், ஓலைச்சுவடிகள் மற்றும் சான்றோர்கள், மெய்யன்பர்களின் தகவல்களையும் உடன்சேர்த்து மிக அருமையான நூலை இயற்றிய எங்கள் அன்பு பரம பாந்தவியர் அரிமளம் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்களுக்கு எங்களது உளம்கனிந்த நன்றி உரித்தாகுக. பண்டித பாமரர் யாவருக்கும் விளங்குமாய் மிகவும் எளிய நடையில் இயற்றி, தகுந்த சொல்லாற்றலில் கையாண்டு புனைந்த திறம் வியக்கவைக்கிறது. இந்த திவ்விய புத்தகம், ஒரு அரும்பெரும் மகானின் வாழ்க்கையினையும், அன்னார் நடத்திய திருத்தொண்டுகளையும், தத்துவஞான போதனைகளையும், அறநெறி ஒழுக்கங்களையும், அன்னதானத்தின் முதன்மைத்துவத்தையும், ஜீவாத்மாவிற்கும்-பரமாத்மாவிற்கும் இடையே என்றும் நிலைத்து நிற்கும் ஆதியான பாந்தவ்யமும் விளக்கமும், அவருள் பொருந்திய இறைத்தன்மையையும், தெய்விக ஆற்றல்களையும் மிகவும் தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளது. இந்நூல், உலகில் இருக்கும் அனைத்து பக்தகோடிகளுக்கும், ஆன்மவிசாரம் செய்வோருக்கும், ஏனைய பொதுஜனங்களுக்கும், ஒரு கிடைத்தற்கரிய மாபெரும் பொக்கிஷமாக விளங்கும் என்பதில் ஐயமேதுமில்லை

திருத்தொண்டர் அடி போற்றி! மெய்ஞானோபதேச குருவான சுந்தர ஸ்வாமிகளின் பாதபங்கயம் போற்றி போற்றி!!

நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!! இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!!!

வீற்று வளமாம் நாதசாரதம் வேதபாரதம் நல்வினைவீற்றும்
ஏற்று தவப்புதல்வர் பலரவதரித்து மெய்யுவப்பேற்றும்
கூற்று உதைத்த பரமன் வடிவாகி விதைத்த கூற்றும்
சாற்று இறை ஞானோபதேசம் பறைசாற்றும்
வேற்றுரு ஈசானன் தோன்றிய ஆசானாய் நிறைவேற்றும்
ஆற்று செயல் அனைத்தும் இயல் பயிலாற்றும்
தேற்று கன்மபாசம் வினை ஜென்மம் கடைத்தேற்றும் -வீடு
பேற்று அளிக்கும் சுந்தரகுருவின் பொற்றாமரை தாள் போற்றி!!

ஸ்வாமிகளின் வையைச்சேரி கிராம சிஷ்ய பரம்பரையினரின் சார்பில்,

இங்ஙனம்,

வையை S. வேங்கடராமண ஐயர்

01.03.2023

மேற்கு மாம்பலம்

சென்னை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# நுழைவாயில்...

**'முத்தமிழ் அரசி'**

**முனைவர் சரஸ்வதி ராமநாதன்**

ஸ்ரீகுருப்யோ நம:

மஹான் அப்பைய தீக்ஷிதர் பரம்பரையில் அவதரித்தவர் மஹான் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள்.

அவதார புருஷர்கள் ஸ்ரீராகவேந்திரர், ரமண மஹரிஷி, சதாசிவ பிரம்மேந்திராள், ஆதிசங்கரர், ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள், ஸ்ரீ குழந்தை ஆனந்த ஸ்வாமிகள் காஞ்சி மஹாப் பெரியவர் ஆகியோர் சரிதங்கள் மிகப் பிரபலமானவை; நாம் அனைவரும் அறிந்தவை.

ஆனால் மஹான் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளின் சரிதம் பலரும் அறியாத ஒன்று ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் வரலாற்றை எழுதும் துணிச்சலான தவத்தை வைத்தியர் அரிமழம் மணி அவர்கள் மேற்கொண்டு வெற்றிபெற்றுள்ளார். ஸ்ரீஸ்வாமிகள் மணியின் உள்ளிருந்து இயக்கி உள்ளார் என்பதே உண்மை. தம்மை வெளிப்படுத்திக்கொள்ள மணியைக் கருவிஆக்கிக் கொண்டுள்ளார் என்பது நிதர்சனம். இறையருளும், குருவருளும், பெற்றோர் அருளும் மணிக்கு பரிபூரணமாகக் கிடைத்துள்ளது.

மனித தெய்வங்களான ராமகிருஷ்ண மாமாவும் –மாதர்குல மாதரசி ருக்மணி மாமியும் ஈன்ற பொழுதில் பெரிதுவந்து, புண்ணிய லோகத்திலிருந்து ஆசிகளை வாரிவாரி வழங்கிக் கொண்டுள்ளனர். திருநெல்வேலி மாவட்ட ம் கங்கைகொண்டான் என்ற ஊரில் அவதரித்து, பல லீலைகள் புரிந்து, சிவ போதனை செய்து, சிவ தத்துவக் கருத்துகளை மக்களிடையே பரப்பி, அவர்களை உய்விக்க வந்த மஹான் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் அவர்களின். ஜீவசமாதி செட்டிநாட்டைச் சேர்ந்த அரிமழம் நகரில் அமைந்திருப்பது நாம் செய்த பேறு.

தேனீக்கள் இனிமையான தேனை சேகரிப்பது போல, ஸ்ரீஸ்வாமிகள் பற்றிய பல அரிய தகவல்களைச் சேகரித்து, நாம் ஆன்மீகப் பயன்பெற அருமையான நூலாக அழகு தமிழில் வழங்கியுள்ளார் அரிமழம் வைத்தியர் மணி அவர்கள்.

முகநூலில் ஸ்ரீஸ்வாமிகள் சரிததத்தை எழுதி வரும்பொழுதே இந்த எழுத்து நூல் வடிவம் பெற வேண்டும் என்று விரும்பினேன்.

அந்தக் கனா இன்று நிறைவேறியுள்ளது கண்டு நெஞ்சம் பூரிக்கிறேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒரு எழுத்தாளர் என்ற முறையில் ஆன்றோர்களின், வாழ்க்கையையும், அவர்களின் போதனைகளையும் எழுத்தில் எடுத்தியம்புவது எத்தனை கடினம் என்பதை யான் அறிவேன். ஸ்ரீஸ்வாமிகளின் மஹிமையை எளிதில் வார்த்தைகளில் எழுதி அடக்கிவிட முடியாது.

மணி, தன் மணியான எழுத்தால், மிக எளிமையான நடையில், நிரடலின்றி நிகழ்வுகளை நம் கண்முன்னே கொண்டு வருகிறார். அதுவே அவரது எழுத்தின் வெற்றி!

ஜானகி அம்மையாருக்குப் போதனை செய்தது, சுந்தரருக்கு ஜானகி அம்மாள் இட்ட பிக்ஷையை சிவபிரான் இருகரம் நீட்டி ஏற்றுக் கொண்டது,அம்மணி அம்மாள் விரும்பிய வண்ணம் திருமணம் நடைபெற அருளியது, குலசேகரன்பட்டினத்தில் இருந்தவாறே குப்பாணிசிவனின் கைலாஸ யாத்திரையை அன்பருக்குக் காட்டியது, அங்கிருந்தபடியே பெரும் கூக்குரலிட்டு பத்தமடை கோயில் திருட்டைத் தடுத்தது, ஒரே நாளில், ஒரே நேரத்தில் ஏழு ஆலயங்களில் கும்பாபிஷேகம் நடத்தி அனைத்து இடங்களிலும் பக்தர்களுக்குக் காட்சி கொடுத்தது, மனோண்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்கள் ஸ்ரீஸ்வாமிகளைத் தத்துவ ஞானாசிரியராக ஏற்றுக் கொண்டு தமிழ் நாடகக் காப்பியம் வடித்து உச்சம் தொட்டது......இப்படிப் பலப்பல தகவல்கள் நாம் அறியக் கிடக்கின்றன இந்த சரித நூலில்.

இவைமட்டுமன்றி ,ஸ்ரீஸ்வாமிகளின் சமகாலத்தவர்களான திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை,தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர், ஆறுமுக நாவலர், வள்ளலார் பெருமான், கோபாலகிருஷ்ண பாரதியார், கர்நாடக சங்கீத மேதை மஹா வைத்யநாதசிவன், ராமஸ்வாமி சிவன் மற்றும் ஸ்ரீதியாக ப்ரும்மம், திருவாடுதுறை ஆதினம், திவான் சேஷய்யா ஆகிய பெருமக்களின் வரலாறுகளும் பொருத்தமான இடங்களில் சுருக்கமாக ,சுவையாக இடம் பெறுகின்றன.

ஸ்ரீஸ்வாமிகள் ஜீவசமாதி புகும் பகுதியைப் படித்துக் கண்கள் குளமாகின; நெஞ்சு நெகிழ்ந்தது. குருவருளால் அரிமழம் மணி அவர்களால் எழுதப்பட்ட மஹான் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளின் திவ்ய சரிதத்தை நாம் அனைவரும் பாராயணம் செய்வோம்; அரிமழம் ஜீவசமாதியைத் தரிசிப்போம்; பிறவிப் பெருங்கடல் நீந்தி உய்வோம்.வாருங்கள் சரிதத்திற்குள். நுழைவோம்!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



# முன்னுரை

**அனைவருக்கும் வணக்கம்!**

சரித்திர கதைகள், நவீனங்கள் எழுதுவதுடன் ஒப்பிடும் பொழுது, பெரியவர்களின்–சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது சிரமசாத்தியமானதே. குறிப்பாக இந்த புண்ணிய பூமியில் அவதரித்து, நம்மிடையே வாழ்ந்து வழிகாட்டிய ஆன்மிக அருளாளர்கள்–மகான்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது கடினமானதாகும்.

ஆயினும் மஹான் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் முழுவதும் என்னை ஆட்கொண்டு வழிநடத்தினார், நடத்துகிறார் என்றே நம்புகிறேன். அவரின் அருளாசி என்னை கருவியாகக் கொண்டு அடியேனை எழுத வைத்தது, இயக்கியது என்பதே சத்தியம்.

அதிகமான வரலாற்றுக் குறிப்புகளின்றி,கிடைத்திருக்கும் சில ஆதாரங்களைத் தொடர்புபடுத்தி, நூலில் பூக்கோப்பது போல் இம்முயற்சியை மேற்கொண்டேன்.

உலகம் முழுக்க வரலாற்று நூல்களுக்கு இன்று நல்ல வரவேற்புள்ளது. ஆயினும் நான் எழுதியுள்ள மஹானைப்பற்றிப் பலரும் அறிந்தலர்;எழுதுபவனைப்பற்றி எவரும் அறியார்.அதையே எனக்கு சாதகமான சூழ்நிலையாய் மாற்றிக்கொண்டேன்.

எந்தவித ஒரு எதிர்பார்ப்புமின்றி இந்த சரிதத்தைப் படியுங்கள்; உங்கள் கருத்துக்களைப் பதியுங்கள்.

ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளின் சரிதத்தை எழுதப்போகிறேன் என்று உத்தரவு கேட்டுப் பணிவுடன் வேண்டுகோளை சமர்ப்பித்தவுடன் தனது ஆசிகளை வழங்கி அனுக்கிரஹித்த கல்யாணகுண கம்பீர ஸ்ரீஸ்ரீஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் பாதங்களை என் கண்ணீரால் கழுவி வணங்குகிறேன்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கோவை ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் ஸேவா சங்கத்தின் தலைவர் மற்றும் எங்களின் போற்றுதலுக்குரிய மத்தியஸ்தர் ஸ்ரீ ஸ்ரீராம் அவர்கள், மஹான் ஸ்ரீஸ்ரீஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளின் அருட்கடாக்ஷமும் அனுக்ரஹமும் எங்களுக்குப் பரிபூரணமாகக் கிடைக்க ஒருங்கிணைத்து வழிகாட்டுபவர். அடியார்கள் எங்களுக்கு அந்தப் பேறு கிடைக்க தன் சிந்தை, உழைப்பு, நேரம் ஆகியவற்றைச் செலவிடும் அவருக்கு குருநாதர் பரிபூரண ஆசிகளை வழங்க பிரார்த்திக்கிறேன்.

அச்சங்கத்தின் உப தலைவர் ஸ்ரீ ஸ்ரீநிவாசன் உட்பட்ட அனைத்து நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு என் நன்றியைப் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

அடியேன் எழுதியதை நூல்வடிவில் வெளியிட முதன்முதலில் விருப்பத்தை தெரிவித்து ஊக்கமூட்டிய என்னுடைய உடன்பிறவா சகோதரன் அரிமழம் பாலு என்கிற பாலசுப்ரமணியன் அவர்களுக்கு நான் என்றும் கடப்பாடு உடையவன்.

இந்நூல் வெளிவருவதில் பல்லாற்றானும் எனக்குத் துணையாக நின்ற பெங்களூர் ஸ்ரீ V.M.S வாஸன் அவர்களுக்கு 'நன்றி' என்ற ஒரு சொல் போதாது. இவர் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளின் பிரதான சீடர் ஸ்ரீநாராயணசிவன் அவர்களின் நேரடி வம்சாவளியைச் சேர்ந்தவர் என்பது கூடுதல் சிறப்பு.

முகநூலில் இச்சரிதத்தை எழுதுவதற்கு காரணமாய் இருந்த திருமதி. விஜயாகிருஷ்ணமூர்த்தி, பெங்களூரு அவர்களுக்கும்,

ஒவ்வொரு நாளும் சிறப்பான பின்னூட்டமிட்டு, பொருத்தமான வினாக்களை எழுப்பி, விளக்கங்கள் அளிக்க ஊக்கப்படுத்திய திருமதி. கீதா ஆதிராஜ் அவர்களுக்கும் நான் என்ன கைமாறு செய்வது ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'முத்தமிழ் அரசி', 'செட்டி நாட்டு செண்பகப்பூ' என்று ஆன்றோர்களால் போற்றப்படும் திருமதி. சரஸ்வதி ராமநாதன் அவர்கள் இந்த எளியவனின் எழுத்தைப் பாராட்டி, இந்த நூல் வெளிவர ஆக்கபூர்வமான அறிவுரைகள் வழங்கியவர். நாற்பதாண்டு கால குடும்ப நண்பருக்கு 'நன்றி' என்ற ஒற்றைச் சொல் போதுமோ!

இந்த சரிதம் தொடங்கியதில் இருந்து எனக்கு ஊக்கம் அளித்து வரும் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் அதிஷ்டான பரம்பரை டிரஸ்டி திரு.சிவ.சோம.சோமசுந்தரம் அவர்களுக்கு என் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள். இவர் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அதிஷ்டானம் நாள்தோறும் நல்ல ஆன்மிக நிகழ்வுகளால் நிரம்பி வழிகிறது.

அதிஷ்டான செயல்பாடுகள் சிறப்புடன் செயல்பட உறுதுணையாய் இருப்பவர் திரு. ச.முத்துகுமார் (DSP Retd) அவர்கள். ஒரு சில அரசியல்வாதிகளின் பிடியில் சிக்கி இருந்த, பலகோடி மதிப்பிலான ,காசி நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்க சொத்துக்களை மாநில,மத்திய அரசுகளின் வழிகாட்டுதலின் பேரில் மீட்டெடுத்து சொத்துக்குரிய நகரத்தார் சங்கத்தினர் வசம் ஒப்படைக்கப் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

தன்னுடைய பல அலுவல்களிக்கிடையிலும்,பரம்பரை டிரஸ்டியுடன் ஸ்ரீஸ்வாமிகளின் சரிதம் நூல்வடிவம் பெறுவது பற்றி ஆக்கபூர்வமாய் மணிக்கணக்கில் என்னுடன் அமர்ந்து விவாதிப்பார்.

இவர்கள் இருவருக்கும், இவர்களின் குடும்பத்தினருக்கும் ஸ்ரீஸ்வாமிகள் பரிபூரண அருளை வழங்கட்டும்.

என் எழுத்து நூல்வடிவம் பெறுவதில் ஆரம்பத்திலிருந்தே பல பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு கண் துஞ்சாது,பசி நோக்காது பாடுபட்ட என் இளவல் ஸ்ரீ GK. சிவக்குமார் பெரும் பாராட்டிற்கு உரியவன்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அதிஷ்டானம் வளமையாய் இருப்பது கண்டு மகிழ்ந்தும், க்ஷீணித்திருந்த காலத்து நொந்தும் போனவர்கள் என் பெற்றோர்கள். அரிமழத்தில் எங்கள் வீட்டுக் கொல்லைப்புறக் கதவு மற்றும் சமையலறை ஜன்னலைத் திறந்தால் அதிஷ்டானத்தின் மூலஸ்தான கோபுர ,ராஜகோபுர தரிசனங்கள் ஒருங்கே கிடைக்கும். அங்கிருந்தே ஸ்ரீஸ்வாமிகளுக்கு நாள்தோறும் அம்மா நிவேதனம் செய்வார்கள்.

அதிஷ்டானத்தின் இன்றைய சிறப்புகளைப் பார்த்தால் மனம் மகிழ்ந்திருப்பார்கள்.அவர்களுக்கு மைந்தனாய்ப் பிறந்தது என் பாக்யம். இருவரும் படித்தது 'அந்தக் காலத்து ஏழாம் வகுப்பு' தான் என்றாலும் பிள்ளைகளின் படிப்பில் அதிகம் அக்கறை செலுத்தினர். அவர்களின் பாதங்களில் இந்நூலை காணிக்கை ஆக்குகிறேன். என் எழுத்து அவர்கள் இட்ட பிச்சை.

என்னால் நன்றி கூறப்பட வேண்டியவர்கள் பலர் உள்ளனர்.அவர்கள் அனைவரையும் குறிப்பிட்டால் அது சரிதத்தின் மற்றொரு பாகமாக விரிந்து விடும்.

அனைவரும் தங்களுக்கு உரியதாக இந்த "நன்றி" யை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அரிமழம் அமர்ந்த ஸ்ரீஸத்குருநாதரின் பாதாரவிந்தங்களே சரணம்!

— ராமகிருஷ்ண சுப்ரமணியன் (மணி ஐயர்)
அரிமழம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உ

# துணை நின்ற நூல்கள்

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

ஸ்ரீகுருப்யோ நம:

"நீயே சரணம் நினதரு ளேசர ணஞ்சரணம்."

பாருக்குள்ளே மிகப் புண்ணிய பூமி என்று போற்றப்படுவது நமது பாரத தேசம். நம்நாட்டில் அவதரித்தது போல் உலகில் வேறு எங்கும் ஞானிகளும், தபஸ்விகளும், ஆச்சாரியப் பெருமக்களும், மஹான்களும் தோன்றியதில்லை.

கங்கை கொண்டானில் அவதரித்து, 47 ஆண்டுகளே ஸ்தூல சரீரத்துடன் இப்பூவுலகில் சஞ்சரித்து, அன்பர்கள் உய்ந்திட அருளாசிகள் வழங்கிய ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் ஜீவசமாதி அடைந்தது நம் அரிமழம் க்ஷேத்திரத்தில். மஹானின் பாதம்பட்ட புண்ணிய பூமி இந்த மண்.

"சொல்லினுக் கரியனாய்ச் சிந்தனைக் கரியனாய்ப்
பல்லுரு வாகிப் படர்ந்தவான் பொருளை,
உள்ளுயி ராகி உலகங் காக்கும்
சக்தியே தானாந் தனிச்சுடர்ப் பொருளை....."

தத்துவ மாகியதோர் பிரணவத்தை இறையருளாலும், குருவருளாலும் அடியேன் எழுத்தில் வடிக்க முயற்சித்துள்ளேன்.

பிழைகள் பொறுத்தருள்க!

இந்நூலை எழுத எனககுத்துணையாக இருந்த நூல்கள்:

ஸ்ரீயக்ஞ சுப்ரமணிய சர்மா–G.K.சுப்பையர்;

ஸ்ரீ ஸுந்தர தாஸர்;

ப்ரும்மஸ்ரீ B.V. காமேஸ்வர ஐயர்;

T.K. ராமபத்ர சர்மா;



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ராமானந்த பாரதி (ஆங்கிலம்–தமிழ் மொழிபெயர்ப்பு கல்லாடர் கிருஷ்ண மூர்த்தி) ஆகியோர் ஸ்ரீஸ்வாமிகள் பற்றி எழுதியவை.

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்களின் "என் சரித்திரம்"

வாசுதேவ நல்லூர் பல்லவி சுப்பையா ஐயர் குமாரர் வைணிக, கானகலா சிகாமணி, கலைமாமணி வித்வான், V.S. கோமதி சங்கர ஐயர் எழுதிய குறிப்புகள்; "இசை உலகில் வைத்தியநாத சிவன்"நூல்; மற்றும் ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் சேவா சங்கம், கோயம்புத்தூர் வெளியீடான "மோக்ஷப்ரதர்சனி" இதழ்கள்.

என் தந்தையார் கூறிய செய்திகள் மற்றும் பழைய – அன்றைய ஓலைச்சுவடிகள்.

என்னைப் புதிய உயிராக்கி, மதி தன்னைத் தெளிவு செய்து, என்னுள் இருந்து இயக்கி எழுதவைத்த அப்பரம்பொருளாம் குருவடி தொழுது, என்னை ஈன்ற என் பெற்றோர்கள் ருக்மணி– ராமகிருஷ்ணன் ஆகியோர் பாதங்களில் இந்நூலை காணிக்கை ஆக்குகிறேன்.

இந்நூலைப் படிக்கும் யாவர்க்கும்,

"மனத்தில் சலனமில்லாமல்
மதியிலே இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந் திடநீ அருள வேண்டும் "

குருவின் திருவடிகளே சரணம்!

13.03.2023

ராமகிருஷ்ண சுப்ரமணியன் (மணி ஐயர்)
அரிமழம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஜயசக்தி!

லலிதா ஓர் இன்பக் கலப்பு

இந்தப் பாடல் ஸ்ரீவித்யா உபாசகர் ஸ்ரீ அருட்சக்தி நாகராஜன் அவர்களின் குமாரர் ஸ்ரீ நாகசுந்தரம் அவர்கள் இயற்றியது.

கோடகநல்லூர் ஸ்ரீஸுந்தரஸ்வாமிகள் எழுதியுள்ள ஸ்வானுபூதிரஸாயனம் என்ற நூலில் கண்ட லலிதானுபூதிபிரகரணம்என்ற வியாஸத்தை சுலப தமிழில் லலிதாஒருஇன்பக்கலப்பு என்றபெயரில் அருட்சக்தி புத்தகம் எழுதி வெளிவந்தது. லலிதா என்றாலே அது அனுபவம். அதை ருசித்து, ரஸித்துப் பார்த்துத்தான் அனுபவிக்க வேண்டும்.

*ராகம் லலிதா*

**பல்லவி**

இன்பக்கலப்பொன்று கண்டேன்
இதயத்தில்
துன்பமெல்லாம் நீங்கி தூய
லலிதையென்னும்(இ)

**அனுபல்லவி**

லலிதா லலிதா என்று நாளும்
சொன்னேன்
பலிதமான அந்த பரம்பொருளைக்
கண்டேன்(இ)

**சரணம்**

ஐந்தான மலரம்பை அவள் கையில்
கண்டேன்
சிந்தையில் சின்மயம் தானாய் மலரக்
கண்டேன்
விந்தையாய் வியனுலகு வேகமாய்
சுழலக் கண்டேன்
புந்தியில் பக்குவமும் பொறுமையும்
பழகக் கண்டேன்(இ)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சிவமும் சக்தியும் சேர்ந்தொன்றாய்
ஆகக்கண்டேன்
நவநவ அமிழ்தமாய் நாயகி நிற்கக்
கண்டேன்
சிவோஹம் பாவனை சீக்கிரம்
சேரக்கண்டேன்
பவரோகம் மறைந்து சிவபோதம் சூழக்
கண்டேன்(இ)
காதிலே சப்தமது காததூரம் நிகழக்
கண்டேன்
பேதத்தை விலக்கியே பூரணத்வம் ஆகக்
கண்டேன்
பாதத்தைப் பணிந்திட பேதமும் விலகக்
கண்டேன்
சீதமாய் மனதாகி சர்க்கரையாய்
இனிக்கக் கண்டேன்(இ)
ஞானாநந்த அமிழ்தை நாவில்
சுவைக்கக் கண்டேன்
தேனாக இன்பமது தோதாகக் கலக்கக்
கண்டேன்
வானாக விரிந்திட்ட உண்மையை
உலகில் கண்டேன்
கூனுள்ளம் நிமிர்ந்தே கவியுள்ளம் ஆகக்
கண்டேன்(இ)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



# வாழ்த்துரை

வணக்கம்.

மஹான் கோடகநல்லூர் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளின் சரிதம் ,ஸ்ரீஸ்வாமிகளின் அருளாசியால் நம் அரிமழம் வைத்தியர் மணி அய்யர் அவர்களால் எழுதப்பெற்று, வெள்ளிக்கிழமை, 07.04.2023 அன்று ஸ்ரீஸ்வாமிகளின் அதிஷ்டான சந்நிதியில் வெளிவருவது அறிந்து மகிழ்ச்சி.

இந்நூற்றாண்டில் முதன்முதலாக ஸ்வாமிகள் சரிதம் மிக விரிவாக,அரிய தகவல்களுடன், சிகரமாக அவரின் உபதேசக் கருத்துக்களை உள்ளடக்கி வெளிவருகிறது.

மிகச்சிறப்பான முறையில் சரிதம் சொல்லப்பட்டு நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டு வெளிவருவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி.

இந்நூலை இயற்றியுள்ள திரு. சுப்பிரமணியன் (மணி அய்யர், வைத்தியம்) அவர்களின் முன்னோர் நான்கு தலைமுறைக்கு முன் ஸ்வாமிகளுடன் மிகவும் நெருக்கமாக இருந்துள்ளார்கள் என்பது கூடுதல் சிறப்பு.

அவர்கள் பரம்பரையில் பின்வந்தவர்கள் ஸ்வாமிகள் பற்றிய பல நிகழ்வுகளைத் தொடர்ந்து சொல்லி வந்தார்கள்.அவர்கள் தூண்டுதலும் ஸ்வாமிகள் அனுக்ரஹமும் ஒருங்கே அமையப் பெற்று இந்நூல் வெளிவருகிறது..

அந்த காலகட்டத்தில் 4 தலைமுறைக்கு முன் எங்களது தாத்தாவுக்கு தாத்தா சிவராமன் செட்டியார் அவர்கள் ஸ்வாமிகளின் பிரதான சீடராக இருந்து ஸ்வாமிகள் கட்டளைக்குக் கீழ்படிந்துச் சமாதி மேல் ஸ்வாமிகள் வழிபட்ட பாணலிங்கம் (இந்த பாணலிங்கம் அர்த்தநாரீஸ்வரர் தத்துவத்தை உள்ளடக்கிய சிறப்பு மிக்கது)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிரதிஷ்டை செய்து அரிமழத்தில் அதிஷ்டானம் உருவாக்கினார்கள்.

அதிஷ்டானத்தில் தினசரி பூஜை புனஷ்காரங்கள் சிறப்புடன் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்நூல் ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்கவேண்டிய ஒன்றாகும். ஸ்வாமிகள் சரிதம் தினசரி படித்து நாம் அனைவரும் குருவருளும் திருவருளும் ஒருங்கே பெறவேண்டும் என்று விழைகிறேன்.

வாழ்த்துக்கள் வாழ்க வளமுடன்.

01.03.2023

அன்புடன்

**சோம. சோமசுந்தரம்,**
பரம்பரை தர்மகர்த்தா
மஹான் கோடகநல்லூர் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் அதிஷ்டானம்.
அரிமழம்–622 201, புதுக்கோட்டை மாவட்டம்.
அலைபேசி எண் : 87542 42810.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் திவ்ய சரிதம் நூல் வடிவம் பெற்று 07.04.2023 அன்று ,அரிமழம் அதிஷ்டானத்தில் வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி.

அரிமழத்தில் பிறந்து,வளர்ந்து. பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தவன் நான் 1960 களில் வேலை நிமித்தமாக அரிமழத்தை விட்டுப் புறப்பட்டேன்.

எங்கிருந்தாலும் அரிமழம் நினைவுகள் இன்றும் பசுமையாக உள்ளன.

சிறுவயதில் அதிஷ்டானத்தில் நடைபெறும் ஆராதனை விழாவைக் கண்டவன்; ஸ்ரீஸ்வாமிகள் பிரசாதத்தை உண்டவன்; இடையில் சில காலம் அதிஷ்டானம் செயல்பாடுகள் தடையுற்றது அறிந்து மனம் விண்டவன்.

கடந்த சில வருடங்களாக அதிஷ்டானம் செம்மையாகச் செயல்படுவது அறிந்து மனம் மகிழ்கின்றது. ஒரு ஊரில் ஜீவசமாதி அமைவது மிகமிக அரிது. மஹான் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் அரிமழம் நகரைத் தேர்ந்தெடுத்து இங்கே சமாதியுள் புகுந்தார் என்பது இந்த ஊரும். மக்களும் செய்த பெரும் தவப்பயனாகும்.

சிரஞ்ஜீவி ராமகிருஷ்ணன் சுப்ரமணியன் மூலம் தன்னை ஸ்வாமிகள் வெளிப்படுத்திக் கொண்டுள்ளார். மஹான்கள் முற்றும் அறிந்தவர்கள். மணியின் மூலமாகத்தான் தமது முழுமையான சரிதம் வெளிவரவேண்டும் எனத் திருவுள்ளம் கொண்டு அதை நடத்திக் காட்டியுள்ளார்.

ஸ்ரீஸ்வாமிகள் பற்றிய சிறிய அளவிலான நூல்கள் சில வெளிவந்துள்ளன. ஆயினும் 07.04.2023 அன்று வெளியிடப்படும் இந்நூல் முழுமையானது; மகத்தானது.

சிரஞ்ஜீவி.மணி எடுத்துக்கொண்ட உழைப்பும், சிரத்தையும், அர்ப்பணிப்பும் தெளிவாகத் தெரிகிறது.

ஸ்ரீஸ்வாமிகள் தகுதியானவரையேத் தேர்ந்தெடுத்திருக் கிறார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மணியின் மனைவி ஸ்ரீமதி.பாரதியின் பங்கு மறைமுகமானது; மகத்தானது. பாரதி அன்னபூரணி. பெரியவர் மணி ஐயர் இருந்தபொழுது வீடு உறவினர்களால் நிரம்பி வழியும். இப்பொழுதும் மணி குடும்பத்தினர் விருந்தோம்பும் பண்பில் சிறந்து விளங்குவது அறிந்து மகிழ்ச்சியாக இருக்கிறது.

அரிமழம் நகரின் பெருமையும், நாட்டார்–நகரத்தார் சிறப்புகளும் இச்சரிதத்தில் பல இடங்களில் வெளிப்படுகின்றன. தமிழுக்கும், சைவத்திற்கும் தொண்டாற்றிய நகரத்தார் ஒவ்வொருவர் இல்லங்களிலும் இந்நூல் பூஜை அறையில் இடம்பெற வேண்டும் என்பது அடியேனின் அவா!

இது பொழுதுபோக்கு நூல் அல்ல:உங்கள் பொழுதைப் பயனுள்ளதாக ஆக்கும் நூல்.

எளிமையாக, ஆற்றொழுக்காக எழுதப்பட்ட மஹானின் சரிதநூல் அனைத்து ஆன்மீக அன்பர்களின் கைகளிலும் திகழ வேண்டும். இந்நூலைப் பொக்கிஷமாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். வேண்டும் குருவருள் அனைவருக்கும். மணி குடும்பத்தினருக்கு.

ஆசிகளுடன்,

**அரிமழம் மு.பாலசுப்ரமணியன், கோவை.**



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் சரிதத்தை சிறந்த முறையில் மணி என்கிற சுப்ரமணியன் முகநூலில் எழுதி வந்தார். இன்று சில மாற்றங்களுடன் அந்த எழுத்து, நூல் வடிவம் பெறுகிறது. மிக ஒழுக்க சிந்தனை உள்ள ஒருவரையே ஸ்ரீஸ்வாமிகள் தம்முடைய முழுமையான சரிதத்தை எழுதத் தேர்ந்தெடுத்துள்ளார்.

இன்றைய பரம்பரை டிரஸ்டி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதில் இருந்து அதிஷ்டானம் நல்லவகையான மாற்றங் களைக் கண்டு வருகிறது. ஸ்ரீவைத்தியநாத கனபாடிகள், சுள்ளனி பரமேஸ்வர அத்யான பட்டர், கீழப் பூங்குடி ராமநாத அத்யானபட்டர், பாபு ஆகியோர் அதிஷ்டான பூஜை முறைகளைச் செவ்வனே செய்து வந்தனர்.

கோவிந்தராஜ பட்டர் இக்கோயிலின் அர்ச்சகர் பொறுப்பை ஏற்று, பக்தர்களுக்குப் பல எளிய பரிகாரங்களைக் கூறி பலரையும் அதிஷ்டான நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளத் தூண்டினார். நம் ஸ்வாமிகளுக்கு சைவ–வைணவ வேறுபாடில்லை என்பது இதனால் நிதர்சனமாகிறது.

நிறையப் படித்து, நிறைய செய்திகளை சேகரித்து மிக சிரத்தையாக இந்நூலை மணி வெளியிட்டுள்ளார். இந்த நூலின் எந்தப் பக்கத்தைப் படித்தாலும் படிப்பவருக்கு ஏதேனும் செய்தி கிடைக்கும். அனைவரும் இந்நூலை வாங்கி, படித்து பயன் பெறுவோம்.

இந்த ஊரைச் சார்ந்தவன் என்ற முறையில், ஸ்வாமிகளின் சரித நூல் வெளிவருவதில் பெருமிதம் கொள்கிறேன்.

மணி ஐயர் குடும்பப் பரம்பரையில் மற்றுமோர் மாணிக்கக் கல் மணியின் இந்தப் புனித முயற்சி.

வேண்டும் அனைவருக்கும் குருவருள்.

அன்புடன்,<br>
**V. ராமசுப்ரமணியன்**<br>
துணைக் கலெக்டர் (ஓய்வு) தஞ்சாவூர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



## வாழ்த்துரை

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉருச் சிந்தித்தல் தானே!"

*(திருமந்திரம்—திருமூலர்)*

வேதாந்த, தத்துவஞானி நமது ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள். அவருடைய நேரடியான பிரதான சீடர் ஸ்ரீநாராயண சிவன் அவர்கள்.அவரின் நேரடி வம்சாவளியின் ஐந்தாம் தலைமுறையைச் சேர்ந்தவன் அடியேன் என்பதைப் பணிவுடனும்,பெருமையுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மணி ஐயருடன் ஆன எங்கள் சந்திப்பு குருவருளால் நிகழ்ந்தது என்பதே உண்மை.சில ஆண்டுகளுக்கு முன்பு அரிமழம் அதிஷ்டானத்தில் அடிப் பிரதக்ஷணம் செய்து கொண்டிருந்தேன். அது பூர்த்தியாகும்வரை காத்திருந்த ஒருவர் என் அருகில் வந்து 'நீங்கள் எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள் ?' என்று கனிவுடன் விசாரித்தார்.

அவர் தன்னை மணி என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். பரஸ்பரம் அறிமுகம் முடிந்தது.

'நீங்கள் எங்கே தங்கி இருக்கிறீர்கள் ?'

'கோவிந்தராஜ பட்டர் வீட்டில்'. (அப்பொழுது அவர்தான் அதிஷ்டான அர்ச்சகர்.)

பட்டர் வீட்டில் இருந்து லக்கேஜ்களை எடுத்துக் கொண்டு மணிஐயர் வீட்டில் நுழைந்தோம்.

அரிமழத்தில் எங்களுக்கு மற்றொரு சொந்த வீடு அமைந்தது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



என்னுடைய பெற்றோரும் அன்று உடன் வந்திருந்தனர்.அதன் பிறகு பலமுறை பெற்றோர், மகன், மகள், சகோதரி, சித்தப்பா குடும்பம், நண்பர் என்று பலருக்கும் மணி ஐயர் வீடே வாசஸ்தலம் ஆகியது. கடியாபட்டி அருகில் கொத்தமங்கலம் கிராமத்தில் உள்ள மஹான் ஸ்ரீநாராயணசிவன் அதிஷ்டானம் சென்று வழிபாடு, ஆராதனைகள் நடத்த அரிமழம் மணி ஐயர் வீடு எங்களுக்கு வசதியாக அமைந்தது.

எங்களின் முதல் சந்திப்பே எங்கள் இரண்டு குடும்பக்களுக் கிடையே ஒரு பந்தத்தை ஏற்படுத்தி விட்டது. இருவரும் சேர்ந்து மஹாசந்நிதானம் அவர்களின் ஜயந்தி விழாவை நடத்தி வருகிறோம். இதுவும் குருவின் கட்டளையே!

'அரிமழம் மணி ஐயர் அவர்களே தம் முழுமையான வரலாற்றை எழுத ஏற்புடைய நபர்' என்று மஹாசந்நிதானம் அவர்கள் தீர்மானித்தது. அரிமழத்தில் பல இரவுகள் நாங்கள் நீண்ட நேரம் உரையாடிவிட்டு உறங்கச் செல்வோம்.

மறுநாள் காலையில் ஸ்ரீஸ்வாமிகள் சரிதத்தின் அன்றைய பகுதி புலனத்திலும்.முகநூலிலும் வெளிவந்திருக்கும்.

'எப்படி சார் ?எப்ப எழுதினீங்க ?'

'நான் எங்கே எழுதினேன் ?எல்லாம் குருநாதர் செயல். '

மெலிதான புன்னகையுடன் பதில் வரும்.

இப்படிப் பலப்பல நெருக்கமான நிகழ்வுகள்.

மணிமாமாவைப் பற்றி இவ்வளவு என்று சொல்லிவிடலாம்.

இவருக்குப் பக்கபலமாக இருக்கும் இவரின் மனைவி பாரதி மாமியைப் பற்றி எவ்வளவு புகழ்ந்தாலும் அது குறைவாகவே இருக்கும்.எத்தனை அன்பர்கள் வந்தாலும் அனைவருக்கும் குறிப்பறிந்து சுவையான காபி, டீ, சத்துமாகஞ்சி, டிபன், சாப்பாடு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



என்று முகமலர்ச்சியுடன் பரிமாறுவார். இன்முகம், விருந்தோம்பல், இனிமையான பேச்சு, பொறுமை, சலியா உழைப்பு – இத்தகைய உயர்குணங்கள் அமைந்த தம்பதியினர். மாமியின் அனுசரணையே மாமா இத்தகைய அருமையான, புனிதமான சரித்திர நூலை எழுத உறுதுணையாக அமைந்தது என்பதே உண்மை.

ஸ்ரீஸ்வாமிகளின் பிரதான சீடர் ஸ்ரீநாராயண சிவன் அவர்களின் பரம்பரையின் ஐந்தாம் தலைமுறையைச் சேர்ந்த எங்கள் குடும்பத்தினருக்கு அரிமழம் வைத்தியர் குடும்பத்தினருடன் பிணைப்பு ஏற்பட ஸ்ரீகுருநாதர் அவர்களின் எல்லையில்லாக் கருணையே காரணம்.

இந்த சரிதத்தைப் படிப்பவர்களுக்கு எல்லா மங்கலங்களும் குருவருளால் சித்திக்கட்டும்.

அன்பன்

**V.M.S வாஸன், பெங்களூரு.**

ஸ்ரீஸீதாராம பட்டாபிஷேகத்தில் கலந்துகொண்டவர்கள் பற்றி வால்மீகி ராமாயணம், கம்ப ராமாயணத்தில் விபரங்கள் உண்டு. அதே போல் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜீவ ஸமாதி திருநாளில் சேவை செய்த பாக்யசாலிகளைக் குறிப்பிட்டது சிறப்பாக உள்ளது.

**M. நாராயணன் சாஸ்திரி,**
**சென்னை.**

இதெல்லாம்.... இறைவன் உனக்களித்த கொடையும், கொடுப்பினையும்...

**B. ராஜ்மோகன்,**
**மதுரை.**



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பல மஹான்களின் அருமை, பெருமை உலகுக்குத் தெரியாமலோ அல்லது ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளேயே நின்று விடுகின்றது.

ஸ்ரீ மஹா சந்திதானத்தின் பெருமை ஒருகாலத்தில் உள்ளூர்வாசிகளுக்கே தெரியாமல் இருந்திருக்கும் ஆனால் தற்காலத்தில் அவருடைய அதிஷ்டானம் பிரபலமடைந்து பல அன்பர்களைக் கவர்ந்திருப்பதாகத் தெரிகிறது. அவருடைய அருளாசியினால்தான் இந்த சரிதம் எழுதும் அன்பர் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார். அவர் புகழ் மேலும் பரவும் காலத்தில் இந்த சரிதத்தின் படைப்பாளரின் பெயரும் நிலைத்திருக்கும்.

புதுக்கோட்டை பாலாஜி

புண்ணியம் சேர் பூதலமாம்
அரிமழம் என்னும்
மாதலத்தில்
ஞான அருட்கடல்.
சுவாமிகளின்
ஜீவசமாதியை
நினைக்க நெஞ்சம்
விம்மிடுதே
கண்களில். நீர் கூட
கசிந்திடுதே!



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



குருவருள் பொங்கிட

திருவருள் பெருகிட

அவர் தாள்பணிவோம் – அவர் அருளை

நினைவோம்..

C. காசிவிஸ்வநாதன்,
தேவகோட்டை

இத்தகைய அருமையான பல செய்திகள் எல்லாம் யாவரும் அறியும் வண்ணம் பதிவு செய்தமைக்கு மிக்க நன்றி. கோடகநல்லூர் மகாசன்னிதானம் அவர்களின் திவ்ய சரிதமும் தங்கள் வாயிலாகத்தான் அறிந்து கொண்டேன். தங்களின் நூல் வெளிவந்தால் பலரும் அறிய வாய்ப்பு கிட்டும். முயற்சி வெல்ல எல்லாம் வல்ல இறையை வேண்டுகிறேன். இது தங்கள் வாழ்நாளின் சாதனையாகவும் அறியப்படும். வாழ்த்துக்கள். மிக்க நன்றி.

ராதாகிருஷ்ணன், பல்லாவரம்.

அருமை ஐயா!

எல்லாம் தமிழுக்கு. எண்ணம் சொல் செயல் எல்லாம் தமிழுக்கு... பிறவியின் நோக்கம் இறை உணர்தல். அதைவிட இதுபோல் தெய்வீகம் அறம் பொருள் இன்பம் உரைக்கும் தமிழுக்குத் தொண்டு செய்வது. எல்லாம் மறந்து தன்னையும் மறந்து..... அர்ப்பணிப்பது.... இறைவனுக்கு நன்கு தெரியும் இறை உணர்தலைவிட இது சாலச் சிறந்தது ...... இதுவும் –குருவே ஐயா நன்றி.

மழைக் கடவுள், சென்னை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மணியும், நானும் குழந்தைப் பிராயத்திலிருந்தே அறிமுகம் ஆனவர்கள். தமிழ் இலக்கியங்களில் ஆர்வம் உடையவன். கல்லூரி நாட்களிலேயே மரபுக் கவிதைகளும், புதுக் கவிதைகளும் இயற்றி உள்ளான். அரிமழத்தின் அடையாளங்களில் ஒன்றாக விளங்கும் வைத்தியர் மணி ஐயர் பரம்பரை என்ற சிறந்த குடியில் பிறந்து, வளர்ந்தவன்.

மகான் ஸ்ரீஸுந்தரஸ்வாமிகள் அவர்களின் விரிவான சரிதத்தை எழுதத் தகுதியானவன் இவன் என ஸ்ரீமஹாஸந்நிதானம் அவர்களே மணியைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

சிறு சிறு வாக்கியங்களில், நெருடல் இல்லாத எளிய வார்த்தைகளில் சரிதத்தைப் படைத்துள்ளான். சில ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளின் மிகச்சில சரித நிகழ்ச்சிகளை–பெயர் குறிப்பிடாத ஒருவர்–குரல் பதிவாகப் புலனத்தில் உலவவிட்டிருந்தார். அதைக்கேட்ட நான் மணிக்கு அனுப்பினேன்.

அதில் ஸ்ரீஸ்வாமிகளின் சரிதத்திற்குப் புறம்பான தகவல்கள் உள்ளதாகத் தெரிவித்தான். இதோ இன்று அருமையான, ஆதாரபூர்வமான ஸ்ரீஸ்வாமிகளின் சரிதம் நம் கைகளில் தவழுகிறது.

மணியான இந்த சரித்திர நூலை மணி எழுதியதில் நான் பெருமைப்படுகிறேன்.

இந்த நூலின் விலை என்பது அச்சிடும் தாள், அச்சகக் கூலி, பதிப்பு மற்றும் வெளியீட்டுச் செலவுகளை மட்டும் உள்ளடக்கியது. மணியின் உழைப்பு, ஈடுபாடு, செலவிட்ட நேரம் ஆகியவற்றிற்கு என்ன மதிப்புப் போட முடியும் ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மணி எழுதிய நானூறு இன்னிசை வெண்பாக்களுக்கு மேல் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அன்றைய காலமாக இருந்தால் இந்தப் பாக்களுக்காகவே பாராட்டிப் பரிசில் அளித்திருப்பார்கள்.

மணிக்கு ஒரு வேண்டுகோள்!

இன்னும் சில வெண்பாக்களை இயற்றி, இணைத்து ஸ்ரீமஹாசந்நிதானம் அவர்களின் சரிதத்தைக் கவிதை நூலாகப் படைக்க வேண்டும் .

மணிக்கு, என்றும் இறையருளும், குருவருளும் துணை நிற்கட்டும்.

அன்பன்,

**கவிப்ரியா S.S. ராஜன்,**
முதுநிலை அறிவிப்பாளர்,
அகில இந்திய வானொலி நிலையம் (ஓய்வு),
**சென்னை–600 087.**



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



*What shall I call it ? Is it your ambition or passion,? No it definitely Guru blessings on you. "Wishing all the best for your sincere efforts*

**-V.Balajaya**

*I understand the spiritual ecstasy you experience on receiving the copies of your committed work in the book format; it is equivalent to a mother's joy on giving birth to a healthy baby. My hearty congratulations.*

**- Prof.Subramanian Palanivel**
**Pudukottai**

"மிக்க நன்றி சார்.

தொடர்ந்து அத்தனை பதிவுகளையும் படித்தேன்...

சிலநாட்க்ள் படிக்கத் தவறிய போதும் அவற்றை உங்கள் Timelineக்கு வந்து படிக்கத் தவறியவற்றையும் முழுமையாக படித்து மகிழ்ந்தேன்.

பொதுவாக எனக்கு வரலாறு மிகவும் பிடிக்கும். ஆனாலும் சில வரலாற்றுப் புதினங்கள் சலிப்பை ஏற்படுத்தும். ஆனால் தாங்கள் எழுதிய மகானின் வரலாற்று தொடர் எப்போதுமே அப்படி இருந்ததில்லை.

இதை அப்படியே வெறும் முகநூல் பதிவாக நிறுத்திவிடாமல் புத்தகமாக வெளியிடுங்கள் சார்.

காலாகாலத்துக்கும் நிலைத்து வருங்கால தலைமுறைக்கு மகானின் சரிதம் போய்சேரட்டும்.."

**முத்து சிவகுமார், ஓணாங்குடி.**



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"Excellent presentation. I request you to bring it out as book. It will be of great help to one and all. With prayerful wishes. Wish you Happy healthy wealthy and prosperous years ahead..."

Kind regards

**Naganatha Iyer Subramanian,Chennai.**

"மகான் சுந்தரஸ்வாமிகளின் சரிதத்தையும் அருளையும் உலகறிய செய்த அண்ணா அவர்களுக்கு இம்மண்ணின் மைந்தன் என்றமுறையில் என்மனமார்ந்த நன்றியை இருகரம் கூப்பி தெரிவித்து வணங்குகிறேன் "

**வெங்கடாசலம் மீனாக்ஷிசுந்தரம்,சென்னை.**

"மகானின் சரிதத்தைப் படித்தது பெரிய பாக்கியம் ....

அரிமழத்தில் பிறந்து அவர் நிழலில் வளர்ந்தது மற்றும் ஒரு பாக்கியம்.

ஆலயத்தில் தொண்டு செய்ய வாய்ப்பு கிட்டியது மிகப்பெரிய பாக்கியம் நாம் எல்லோரும் வரம் பெற்றவர்களே.... சரிதம் படித்த பின்பே அருமை உணர முடிகிறது,,,"

**சிவகுரு காசிவிஸ்வநாதன்,சென்னை.**

"அதிகம் அறியப்படாத மகானைப்பற்றி இத்தகைய அரிய செய்திகளா ? பிரமிப்பை ஏற்படுத்துகிறது. ஸ்வாமிகளின் சமாதிப் பிரவேசம் கல்நெஞ்சையும் கரைய வைக்கும். மகான்களின் சரித நூல் வரிசையில் இந்த சரிதத்தொடர் தனிஇடம்பெறும்.படித்த நாங்கள் புண்ணியம் செய்தவர்கள்."

**அரிமழம் GK. சிவகுமார், திருச்சி.**



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"ராம ராம ராம. நமஸ்காரங்கள். ஸ்ரீ ஸ்வாமிகளின் சரித முடிவுக்குப் பல பதிவுகளுக்கு முன்பே மனதைத் தயார்படுத்த நினைத்தும் இன்னும் சமாதானமாகவில்லை. இனி இப்போது படிக்க முடியாது என்பது ஏமாற்றமே. ஆயினும் விரைவில் சரிதம் நூல்வடிவம் பெற அனுக்ரஹிக்குமாறு ஸ்ரீ ஸ்வாமிகளிடம் விண்ணப்பம் வைப்போம். ஓம் ஸ்ரீ ஸத்குரு சரணாரவிந்தாப்யாம் நம: ஓம் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமினே நம: "

**கீதா ராமதாஸ், ஈரோடு.**

"அரிமழ மண்ணுக்குள் அமர்ந்திருந்து அகிலத்திற்கும் அருள்புரியும் அன்பே சிவமான அரிமழநாதனை ஆராதித்தே வருவோம் அனவரதம்."

**நாராயணன் சாஸ்திரி சென்னை.**

"இவ்வளவு அருமையா நான் புரிந்து கொள்ளும் விதமாக எழுதியதற்காக நன்றிகள் பல கோடி."

**மஞ்சு பாஷிணி சென்னை.**

"சுவாமிகளின் சரித்திரம் யாரும் வரையா ஓவியம்" இது ஒரு தொடர் காவியம் குருவின் அருள்கிட்ட இறைவனை வேண்டுகிறேன்"

**C. காசிவிஸ்வநாதன்,**

(Manager PCC Bank,Retd) மதுரை.

"மகானின் சரிதம் படித்தவர்கள் பாக்கியசாலிகள். பாக்கியசாலிகள் சரிதத்தைப் படித்தனர். எந்த இடத்திலும் தொய்வு ஏற்படாமல் இன்னும் படிக்க வேண்டும் என்று தோன்றுகிறது. மிகச்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சவாலான பணி மிகத் திறம்பட நடந்துள்ளது. நாலுவரி எழுதிவிட்டு நான்நான் என்று விளம்பரம் தேடும் உலகம் இது.ஆனால் எந்தவித ஆர்ப்பாட்டமான பின்புலமும், ஆதரவும் இல்லாது அதிகம் தெரியாத ஒரு மஹானைப்பற்றி எழுதுவது மிகவும் கடினமான பணி.இனி சுந்தரரைப்பற்றிப் பேசுபவர்களோ, எழுதுபவர்களோ இந்த சரிதத்தைப் புறந்தள்ளி விட்டுச் செய்ய முடியாது. அதுவே இவரின் எழுத்தின் மகத்தான சாதனை."

**சிவக்குமார், அரிமழம்.**

"ஸ்வாமிகள் ஜீவசமாதி அடையும் நிகழ்ச்சி பற்றிய வர்ணனை ரொம்ப வருத்தமாக,மனதை உருக்குவதாக இருக்கின்றது."

"உங்களில் இன்னும் திறமை இருக்கிறது. உங்கள் புத்தகங்களைக் கண்டு பிரமித்ததென்னவோ உண்மை. தாங்கள் வாங்கிய புத்தகங்களை ஒருதரம் படிக்கவே இந்த பிறவி போறாது என்று நினைத்துக் கொண்டேன். குறிப்பாக உங்கள் இல்லத்தில் பெரிய புராணம் மொத்தப் புத்தகங்களும் பார்த்த போதுதான் நீங்கள் குழுவில் எழுதினால் பெரும் பாக்கியமாக இருக்கும் எனக்கருதி உங்களைக் கேட்டுக்கொண்டேன்.

பிறகு நடந்தது சரித்திரம்.

புத்தகம் வெளியாகும் போது கண்டிப்பாக வருகிறேன்.

என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து எழுதியதற்கு மிக்க நன்றி.

நான் மறுபடியும் சொல்கிறேன் உங்கள் பலம் உங்களுக்குத் தெரியவில்லை. மேன்மேலும் உங்கள் எழுத்துப் படைப்புகள் சிறக்க மனமார்ந்த வாழ்த்துகள்."

**விஜயா கிருஷ்ணமூர்த்தி,பெங்களூரு.**



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



## பாயிரம்

### கடவுள் வாழ்த்து

1. உலக முதல்வன் உருத்திரன் மைந்தன்
நிலவினைச் சூடியோன் அன்பிற் குகந்தவன்
அந்தி நிறத்தவன் விக்கின ராஜனைப்
புந்தியில் வைத்துப் பணிந்தேன்.

2. சிந்தை நிறைந்தவன் சீரெல்லாம் நல்குபவன்
விந்தை புரிபவன் விக்கினங்கள் தீர்ப்பவன்
ஆவியுள் நிற்பவன் ஆற்றல் தருபவன்
மேவிய சீரடி போற்று.

3. படைத்தவன் பல்லுயிர் காக்கும் அருளை
உடைத்தவன் என்னுள் உறைபவன் இந்தக்
கடையேனைக் காக்கும் கடமை உடையோன்
சடையனைப் போற்றுவேன் என்றும்.

4. அண்டரும் நான்முக அய்யனும் பால்நிறை
வெண்கடலில் பள்ளியே கொண்ட திருமாலும்
கண்களால் காணியலா செஞ்சடைத் தூயோனே!
தெண்டனிட்டுப் போற்றினேன் உன்னை.

5. ஆதியே! அம்மையே! அப்பனின் செம்மைசீர்
பாதியே! பெண்மையே! உண்ணா முலையே!
உமையே! உலகத்து நாயகியே!கண்ணின்
இமைபோல் கசடனைக் காப்பாய்.

6. மனோன்மணி தாமரைப் பாதங்கள் தன்னை
மனதினில் வைத்தேக் கவிபாட வந்தேன்
வனம்சூழ் அரிமழம் வந்துறை தெய்வம்
தனம்பெருக நல்லருள் தா!

7. வேதா கமத்தின்மெய் ஞானப் பொருளாகி
ஆதார சக்தியாய்த் தாலாட்டும் அம்மையே!
தாதா யெனுமுன்னே அன்போடு காப்பவளே!
மாதாவுன் தாளே சரண்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



8. திருநந்தி தேவனை சென்னியில் வைத்தே
உரைக்கின்றேன் சுந்தரனின் உன்னதக் காதை
உருவாகும் பெற்றி அனைத்தும் உனக்கே!
வருபிழை யாவும் பொறுப்பாய்.

9. ஆடல் அரசுடன் நற்கூடல் தேவியும்
பாடும் பொருளாய் மனதில் நிலைத்தனர்
வாடும் பொழுதினில் வல்வினை மாய்ந்திட
ஓடியே வந்தருள் செய்.

10. மூவிரண்டு ஆறுமுகம் முற்றும் பொலிந்திட
ஏவரும் போற்றியே நாளும் வணங்குவோம்
சேவலும் பன்னிறத் தோகை மயிலுடன்
வேலைத் தொழுவோம் இனிது.

11. அந்தமில் நற்றமிழ் வல்லோர்தம் ஊன்தனில்
சிந்தையில் மூச்சில் உறைந்தே ஒளிர்விடும்
இந்திரன் ஒப்ப உயர்ந்து விளங்கிட
கந்தவேள் காப்பான் இனிது.

12. பூமலர் நாபியில் தோன்றிய நான்முகன்
ஆணவம் நீக்கிப் பிரணவ தத்துவம்
ஓதியே உய்வித்த உத்தமன் ஞானகுரு
சேவடி ஏற்றிப் பணிவோம்.

13. கற்பனை என்றனர்; கற்சிலை என்றனர்;
தற்பரன் உன்னைக் கணமும் நினையார்;
கயவரே ஆயினும் கல்லோ ரெனினும்
மயிலேறி வந்துநீ காப்பாய்.

14. பரிஅழல் மேனியில் மால்கரி போர்த்தி
பரிவுடன் காத்திடும் ஈசனைப் போற்றிடா
வீணரைத் தண்டித்து ஆலயம் மேவியே
பேணும் வடுகனைப் போற்று.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



## குரு வந்தனம்

15. திருவருணை சேர்ந்து திருவருளில் ஒன்றி
கருணையால் அன்பரைக் காத்த தலைவன்
குருவாய் மனத்திருந்து மாசுகள் நீக்கி
அருளினான் இன்னுயிர் சேஷன்.

16. சேஷனே என்றனர்;பித்தனே என்றனர்;
நேசனே என்றனர்;புண்ணியன் என்றனர்;
தாசனே என்றனர்;தத்துவம் என்றனர்;
ஈசனை முற்றுணர்ந்தோர் யாரே ?

17. குழந்தைபோல் புன்னகை செய்யும் செயல்கள்
குழந்தையின் வேடிக்கை !இன்பமே பொங்கும்
குழந்தையின் பார்வை !உளமே புகுந்த
குழந்தையாம் ஆனந்தன் போற்று !

18. அம்மையும் அப்பனும் ஒன்றெனத் தேர்ந்தபின்
பின்னை வினைகள் தொடர்ந்தே வருமோ ?
குருவடி பற்றியே ஞானம் அடைந்தேன்
திருவடி என்றும் துணை !

## பெற்றோர் போற்றுதல்

19. சீர்மிக்க ஊராம் அரிமழம் தன்னிலே
பேர்பெற்ற சித்த மருத்துவத் தெய்வம்
எளியோர் தொழுதிட வந்துதித்தான் பாதம்
களிப்புடன் நானும் தொழுதேன்.

20. சுவேத நதிபாயும் நல்லூர் அரிமழத்தில்
வேதம் பயின்றோர் நற்குடியில் தோன்றியோன் !
பேதமின்றி யாவரையும் ஒன்றாய்க் கருதியே
ஈதலுடன் வாழ்ந்தனன் எந்தை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



21. இறைவனே தந்தையாய் நற்றவத் தாயாய்
இறைவியும் வந்திங்கே ஆட்கொண்டீர்! யான்செய்
தவமோ ?பெரியவர் ஆசியோ ? முன்னூழ்
வரமோ ?அறிந்திலன் நானே.

22. உமையே அடியவன் அன்னை;அவள்தன்
இணையாம் சிவனே அடியவன் தந்தை;
மதியினைச் சூடியோன் அன்பர்கள் வாழும்
பதியே எனக்குக் கதி!

23. ஏதவன் நோற்றலின் கூடும் பயனதாய்
மாதவன் போலொரு மைந்தன் பிறக்க
பராத்பரன் நல்லருளால் சூட்டினர் நாமம்
இராம கிருட்டிணன் என்றே!

24. அணங்காய் அகிலத்தின் அன்பெல்லாம் மிக்க
இலங்கிய தோர்உருவாய் பண்பினில் மிக்க
கருணை நிரம்பிய காரிகை உன்னையே
ருக்கு மணியென் றழைத்தார்.

## அவையடக்கம்

25. புலனடக்கம் சான்றோர்முன் நாவடக்கம் சற்றும்
குணவடக்கம் அற்றதோர் தற்குறியும் உய்ய
அவதார நாயகனைப் பாடவே வந்தேன்
சிவபிரானே நீயே துணை.

26. வான்புகழ் செற்றமிழ் வல்ல அறிஞர்முன்
'நான்என வந்தே ' எழுதிட எண்ணுதல்
வானகத்து வான்மதி கண்டதோர் மின்மினி
ஆணவத்தில் மின்னுதற் கொப்பாம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



27. முன்சொன்ன வித்தகர் இங்கே பலருண்டு
தென்சொலால் யானுமே செப்பிட வந்தனன்
புன்சொல்லே ஆகினும் வீணுரையாய்த் தள்ளாது
மென்சொலால் வாழ்த்துவீர் என்னை.

28. குற்றமே காண்போர் குறையினைத் தள்ளியே
முற்றும் துறந்த முனிவன் சரிதத்தில்
கற்றிலா எந்தன் கருத்தின் குறைகளைக்
கற்றோர் பொறுத்தல் கடனே!

29. கோதிலா ஞானிஎம் சுந்தரன் காதையை
ஓதியே வந்ததை என்னுரையாய்ச் செய்தனன்
சூதரின் சம்ஹிதை நாளும் உரைத்திட்ட
நாதனார் காக்கவே நம்மை!

### சரித்திர நாயகன்

30. "ஓதி உணர்ந்த உயர்நல(ம்) மிக்கரும்
கோதில்லா சுந்தரன் காதையை ஈடில்லா
சூதனை ஏத்தித் தொழுது உரைத்திட
பேதையேன் வந்தேன் பணிந்து.

31. இறைவனே உன்சரிதம் பாடவே இந்தச்
சிறுவனை நீயும் படைத்தாய் அடியவன்
நானும் தெளிந்தேன் கயிலையின் நாதனும்
நீயுமே வேறல்ல என்று.

32. செக்கர் வெளிபோல் செந்நிற மேனியன்
ஒக்கவே பூமியில் வந்தாய் அடியார்க்கு
தக்கவே வேதாந்த சாரம் இயம்பியே
ஒப்புமை யின்றித் திகழ்ந்தாய்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



33. செம்மைசேர் எங்களின் சற்குருவே! நின்பாதம்
மும்மலம் தீர்த்திடும் மாமருந் தென்ப
தறிந்தோம் பணிந்தோம் நெகிழ்ந்தோம் கசிந்தோம்
மறந்திலம் உன்பெற் றியை.

34. புவிதன்னில் பன்னூல் தெளிந்தவர் எல்லாம்
சிவகதையாம் உன்கதை ஓர்ந்திலர் என்னில்
புலவரென்றே செப்பிடல் கூடுமோ ?செல்வ!
உலகின் அச்சாணியே போற்றி.

35. அருமணி எங்கள் அரிமழும் வந்தே
பெருமை யடைந்திட கோயில் அமர்ந்தாய்
உருகியே பாடிய தற்குறி என்னைக்
கருத்துடன் காப்பாய் கனிந்து.

36. பாரத மெங்கும் பலகாதம் சுற்றியே
நானிலத் தோர்க்கு நல்வழி காட்டினாய்
சொல்லாண்ட வேந்தனாம் சுந்தர தேசிகனைப்
பல்லாண்டு பாடிப் பணிவோம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



# சுந்தர ஸ்வாமிகளின் குருபரம்பரை

***சங்கர தீக்ஷிதர் (ஸ்ரீவத்ஸகோத்திரம்) வம்சாவழி***

***எலியார் வம்சம்***

சங்கர தீக்ஷிதர்









Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta








Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



## அரிமழம் மண்ணின் மாண்பு

## ஸ்ரீ ஸுந்தர ஸ்வாமிகள் திவ்விய சரிதம்

"குருர் ப்ரும்மா குருர் விஷ்ணு
குருர் தேவோ மஹேஸ்வர:
குருர் சாக்ஷாத் பரப்ரும்மம்
தஸ்மை ஸ்ரீகுரவே நம:"

உலகெலாம் உள்ள உயிர்கள் உய்யும் பொருட்டு, எங்கும் நிறைந்த பரம்பொருள் மேலிருந்து கீழிறங்கி வருகிறான். இதுவே அவதாரம் எனப்படும்.

ஈசன் விதித்த திருவருட்படி தத்தமக்கு ஏற்பட்ட சுகதுக்கங்களை அனுபவித்தே ஆகவேண்டும். அவ்வித அனுபவத்தால் மனம் பக்குவம் அடைய வேண்டும். அவ்வாறு பக்குவமடைந்த ஆன்மா இப்பிறவியிலோ, தொடர்ந்து வரும் பிறவியிலோ இறைவனைச் சென்றடையும்.

மனம் சுத்தப்படுதல் அரிது. மனம் ஒரு குரங்கு. அதைக்கட்டி வைத்தாலும் கயிறு எட்டுமட்டும் குதித்து ஆட்டம் போடும். குரங்கு குதிப்பதற்கு ஏற்ப நமது சரீரமும், கருமங்களும் செல்லும்.

ஆகவே மனத்தைத் தொலைப்பதே சிறப்பு.

கல்வியும், விவேக நுட்பமும், அறநெறி ஒழுக்கமும் ஒருங்கே வாய்ந்த தாயுமானவஸ்வாமிகளே 'பாழான என் மனம் குவியவொரு தந்திரம்' என்று புலம்பினார்.

புலன்களின் செயலற்று மனத்தைத் தொலைத்து, துவைத (இரண்டு) பாவம் நீங்கி நின்றவர்கள் இறைவனுடன் கலப்பர்.

இவர்களை ஆத்ம ஞானி என்பர்.

'வெகு பிறப்புகளின் முடிவில் ஆத்ம ஞானம் அடைந்தவன் என்னை அடைகிறான்' என்கிறார் கீதையில் கிருஷ்ணன்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இத்தகைய ஆத்ம ஞானியாக, கலி நாலாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தி மூன்றாம் ஆண்டில், கொல்லம் 1007–ம் ஆண்டு, கர வருஷம், கார்த்திகை மாதம் இருபதாந் தினத்தில், அமாவாசை, அனுஷ நக்ஷத்திரத்தில், ரிஷப ல்கனத்தில், சனிக்கிழமை (03.12.1831) பரமேஸ்வரனே ஒரு மகவாய் அவதாரித்தார்.

யாருக்கு அவதரித்தார் ?

இக்குழந்தையை ஏன் அவதாரம் என்று கூறுகிறோம் ?

இவர் பரமேஸ்வரனே என்று எவ்வாறு அறிவது ?

ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளின் சரிதம் ஸ்ரீயக்ஞ சுப்பிரமணிய ஸர்மா – ஸ்ரீ ஜி.கே.சுப்பையர் ஆகியோரால் இயற்றப்பட்டு, சென்னை எஸ்.எஸ்.அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டு, 1940–ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

அதற்கு முன்னர் 1914–ல் ஸ்ரீ சுந்தரதாஸர் அவர்களும், 1925–ம் வருடம் ப்ரும்மஸ்ரீ B.V.காமேஸ்வர ஐயர் அவர்களும், 1939–ம் ஆண்டு ஸ்ரீ T.K. ராமபத்ர ஸர்மா அவர்களும் எழுதிய ஸ்ரீஸ்வாமிகளின் சரிதங்களின் அடிப்படையில் மேற்படிநூல் இயற்றப்பட்டுள்ளது.

எதற்காக இத்துணை விளக்கங்கள் என்றால், ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் மேல் 1940–ல் இயற்றப்பட்ட, (தற்போது ஒரே பிரதிதான் கிடைத்து உள்ளது.) இந்நூலிற்கு முன்னுரை வழங்கிய ஆன்றோர்கள் : வணக்கத்திற்குரிய ஸ்வாமி சிவானந்தர், ரிஷிகேஷ் 19.06.1940; மகோமகோபாத்திய ஸ்ரீ உ.வே.ஸ்வாமிதாதய்யர்; திருவொத்தீஸ்வரன் பேட்டை – சென்னை, 04.10.1940; மற்றும் ஸ்ரீஸ்ரீவிஜயேந்திர தீர்த்த ஸ்வாமிகள், உடுப்பி.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இவர்கள் ஸ்ரீ ஸுந்தர ஸ்வாமிகள் பற்றி எழுதிய முன்னுரைகளைப் படிக்கும் பேறு எனக்கு பூர்வஜன்ம பலனாலும், குருவருளாலும், பெற்றோர்கள் மற்றும் பெரியோர்கள் ஆசிகளாலும் கிடைத்ததாகக் கருதுகிறேன்.

இவற்றையும், ஸ்ரீஸ்வாமிகளின் வரலாற்றையும், என் சிற்றறிவிற்கு எட்டியபடி எளிமையாகவும், சுருக்கமாகவும் எழுத முயற்சிக்கிறேன்.

உங்கள் நல்லாசிகளுடனும், வாழ்த்துக்களுடனும் குருவருள் துணை நிற்கட்டும்.

ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளின் அவதாரம் எந்தச் சூழலில் நடைபெற்றது ?

அடைச்சாணி கிராமமே கடந்த ஒருவாரமாக அல்லோகலப் பட்டுக் கொண்டிருந்தது;

ஆனந்தத்தில் மூழ்கி இருந்தது.

பின் என்ன ?

அவ்வூரில் வைதிகத்தில் சிறந்து விளங்கிய ஸ்ரீ ராமசுப்பையர் அவர்களின் திருப்புதல்வி ஜானகிக்கும்,

கங்கைகொண்டான் கிராமத்தில் வேதவித்தாய் விளங்கிய ஸ்ரீயக்ஞராமன் திருப்புதல்வன் சுந்தரனுக்கும்

திருமணம் என்றால் கேட்க வேண்டுமா ?

வீதி அடைத்துக் கொட்டகை.

வேதவித்துக்கள் பலரும் ஒன்று சேர்ந்து அடைச்சாணி வந்திருந்தனர்.

ஊரில் இருந்தவர்கள், வந்தவர்கள் அனைவருக்கும் திருமண



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வீட்டில் தான் பலகாரம், சாப்பாடு அனைத்தும்.

எனவே எவர் வீட்டிலும் அடுப்புப் பற்றவைக்கவில்லை.

ஐந்து நாள் கல்யாணம்.

ஆர்ப்பாட்டத்திற்குக் கேட்க வேண்டுமா ?

வாண்டுகளின் கூச்சல், விளையாட்டு.

பெண்களின் கலகலப் பேச்சு; பாட்டு.

வேதவித்துக்களின் தர்க்கம், தத்துவ விசாரங்கள்.

ஒரு வாரமாக திருநெல்வேலி மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் உறவினர், நண்பர்கள், வேதவிற்பன்னர்கள் இவர்களின் வருகையால் ஊரே திமிலோகப்பட்டது.

சில மாதங்களுக்குப் பிறகு திருமண நிகழ்ச்சியின் ஒரு அங்கமாக முதலிரவு....

காலில் விழுந்து நமஸ்கரித்து எழுந்த ஜானகியிடம் நாலே வார்த்தைகளை உதித்தார் சுந்தரர்.

அவர் கூறியது கேட்டு ஜானகி அதிர்ந்தாள்.

அப்படி என்ன சுந்தரர் கூறினார் ?

('வைணிக, காயககலா சிகாமணி, மகாவித்வான், கலைமாமணி ஸ்ரீ வா.சு.கோமதி சங்கர ஐயர் அவர்கள் ஸ்ரீசுந்தரஸ்வாமிகளின் வாழ்க்கை வரலாற்றைப் சில கட்டுரைகளாகத் தொகுத்துள்ளார்.

அவர் கூறியுள்ளது : என் தந்தையார் ஸ்ரீ பல்லவி சுப்பையா பாகவதர் அவர்கள் எழுதியுள்ள குறிப்புகளிலிருந்து கட்டுரைக்கு செய்திகள் திரட்டப்பட்டவை'.

ஆனால் ஸ்ரீகோமதி சங்கர ஐயர் அவர்கள் திரட்டிய குறிப்புகள்


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நூல் வடிவம் பெற்றதாகத் தெரியவில்லை.)

ஸ்ரீ சுந்தரஸ்வாமிகளின் வாழ்க்கை சரிதத்தில் நுழையும் முன்பு, அவர் அவதரித்த பத்தொன்பதாம் நூற்றாண்டில், நம் புராதன பாரத தேசமும் குறிப்பாகத் தமிழ்தேசமும் எங்ஙனம் இருந்தது என்பதை சுருக்கமாகக் காண்போம்.

அப்படிப் பார்த்தால்தான் ஸ்ரீ சுந்தரஸ்வாமிகளின் வாழ்க்கை எவ்வாறு தமிழ்நாட்டின் ஆன்மிக, அரசியல், சமுதாயக் கூறுகளுடன் பின்னிப் பிணைந்து மக்களை நல்வழிப்படுத்தியது, அவரின் துணிவான, நேர்மையான பங்களிப்பு என்ன என்பதையும் உணர முடியும்.

ஆன்மிகத்திற்கு அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது.

தமிழ்நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நமது சனாதன மதம் பல சோதனைகளையும், சவால்களையும், அரசாள்பவர்களின் அடக்குமுறைகளையும் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருந்தது.

அன்றைய மக்களில் பெரும்பாலோர் சுமார் 85 விழுக்காட்டிற்கு மேல் இந்துக்கள்.

அதன் இரண்டு பெரிய பிரிவுகள் சைவமும்,வைணவமும்.

இந்துக்களில் சுமார் நாற்பது விழுக்காட்டினர் சிறு தெய்வ வழிபாட்டைப் பின்பற்றி வந்தனர்.

அவர்களையும் இந்து தர்மம் அரவணைத்தே சென்றது. சகோதர பாவத்துடனே அனைவரும் பழகி வந்தனர்.

ஆனால் அவர்களிடையே ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தியது கிருத்துவ ஆங்கிலேய அரசு.

அதனுடைய தாக்கம் இந்து தர்மத்தை எந்தளவு பாதித்தது ?

மக்களிடையே நிலவிய சாதிப் பிவினைகளைத் தமக்குச்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சாதமாகப் பயன்படுத்திக் கொண்டனர் நவாப் மற்றும் கிருத்துவ ஆட்சியாளர்கள்.

சாதி வேறுபாடுகளின்றி ஒற்றுமையாய் இருந்த மக்களிடையே சனாதன தர்மத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பதாகப் பொய்யுரை பரப்பினர்.

'சமூகத்தில் சாதிப்பிரிவினால் நீங்கள் தாழ்ந்த நிலையில் உள்ளீர்கள்' என்ற பொய்ப்பிரசாரம் மக்களின் சில பிரிவினரிடையே அவர்கள் எதிர்பார்த்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்தியாவின் சில பகுதிகளை ஆண்டு கொண்டிருந்த நவாபுகளுக்குக் கடன்களை வாரி வழங்கினர் ஆங்கிலேயர்.

கடனை வட்டியுடன் திருப்பித்தர இயலாத நவாபுகளின் ஆட்சியை ஏற்கனவே செய்துகொண்ட உடன்படிக்கை மூலம் ஆங்கிலேயர் எடுத்துக் கொண்டனர்.

சனாதனமதக் கலாசாரம் ஆழமாகப் பதிந்திருந்த இந்த சனாதன தேசத்தின் வெளிப்படையான பண்பாட்டைக் குலைத்தனர்.

பொதுவாக அன்றைய நாட்களில் சாதி இன வேறுபாடின்றி மிகப் பலரும் குடுமி வைத்திருந்தனர்.

பஞ்ச கச்சமாய் வேட்டி அணிந்திருந்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பாதி வரை நாட்டை ஆண்ட ஆங்கிலேயர்கள் கல்வியிலும், மருத்துவத்திலும் தங்கள் மதத்தை நுழைத்து மக்களை மதம் மாற்றும் வேலையில் மும்முரமாக இயங்கினர்.

இஸ்லாமியர்கள் ஆட்சியிலும், பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியிலும் கட்டாயத்திற்காகவோ, உயிருக்குப் பயந்தோ, ஆண்ட அரசுகளின் சலுகைகளை எதிர்பார்த்தோ பலரும் மதம் மாறிக் கொண்டே இருந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நவாப்கள் மற்றும் ஆங்கிலேயரின் ஆட்சியிலும் இந்துக்கள் பல இன்னல்களை அனுபவித்தனர்.

அன்றைய ஆங்கிலேய அரசு ஒரு உத்தரவு போட்டது.

அது என்ன ?

'இன்று இந்தியாவில் முஸ்லீமாக இருப்பவர்களின் முன்னோர்கள் பத்து அல்லது பன்னிரெண்டு தலைமுறைகளுக்கு முன்னர் இந்துவாக இருந்தவர்களே.

இன்று கிருத்துவர்களாக இருப்பவர்கள் ஐந்து அல்லது ஆறு தலைமுறைகளுக்கு முன்னர் இந்துவாக இருந்தவர்களே!'

(மேலே உள்ளது என் கருத்தல்ல. முகமது கவுஸ் என்பவர் 'தி ஹிந்து' நாளிதழில் 1973,ஜூன் மாதம் 13–ம்தேதி எழுதிய கட்டுரை.)

'In those days there was a regular crusade against the kudumi in Christian circles, as it was regarded as a proof and emblem of caste pride........Bishop Sargent would not baptise any Hindu convert unless he had removed his kudumi...and employment opportunities were denied to people with kudumi.'-Fifty years' Pilgrimage of a convert by A.S.Appaswami, pages 8 and 140.

படிப்பு, பதவி மேல் ஆசை கொண்ட அந்தக்கால இளைஞர்கள் பலர் குடுமியுடன் இருந்தனர்.

குடுமியினால் கிருத்துவ மதத்தில் சேர்வதிலும், ஞானஸ்நானம் பெறுவதிலும், அவ்வாறு மதம் மாறியதால் கிடைக்கும் பயன்களான படிப்பும், பதவியும் மறுக்கப்படுவதையும் எதிர்த்துப் போராடினர்.

கிருத்துவ ஆங்கிலேய அரசும் இந்துக்களை மதம் மாறச்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



செய்வதே இன்றியமையாதது, குடுமியும், இந்திய சம்பிரதாயங்களும் ஒரு பொருட்டல்ல எனத் தீர்மானித்து அவ்வாறு வந்தவர்களை கிருத்துவத்தில் அனுமதித்தது.

(இன்று இந்துக்களின் அனைத்துக் கலாச்சாரங்களையும் தங்களுடையவை என்று உரிமை கொண்டாடுவதற்கு அன்றே கால்கோள் நாட்டப்பட்டது.)

இனி ஆங்கிலேயருக்கு முன்பு ஆட்சி புரிந்த இஸ்லாமியர் ஆட்சி நம் தேசத்தின் அரசியல், சமூக, பொருளாதாரத் தளங்களில் ஏற்படுத்திய பாதிப்புகள் என்னென்ன ?

ஆங்கிலேயர் பாரத தேசத்தை ஆக்கிரமிப்பதற்கு முன்பு வரை அரசு செய்த இஸ்லாமிய அரசர்களும்,நவாபுகளும் இந்துக்களுக்கு செய்த கொடுமைகள் எண்ணிலடங்கா.

கண்களில் இரத்தக் கண்ணீரை வரவழைக்கும்.

குறிப்பாக ஓரிரெண்டு நிகழ்வுகளை மட்டும் பார்ப்போம்.

'Malabar Manuel' என்ற நூலில் William Rohan குறிப்பிடுகிறார்:

'முகலாயர்களின் ஆட்சியில் மைசூரைத் தலை நகராகக் கொண்டு ஆண்ட ஹைதர் அலி,திப்பு சுல்தான் ஆகியோரின் ஆட்சிக் காலம் இரத்தக்கறை படிந்த காலம்.

பல இலட்சக்கணக்கான இந்துக்கள் வாள் முனையில் மதம் மாற்றப்பட்டனர். திப்பு சுல்தான் ஆட்சிக் காலத்தில் மட்டும் 5,00,000 இந்துக்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டனர்.

1790–ம் ஆண்டு இந்துக்களின் மிக முக்கிய பண்டிகையான தீபாவளி அன்று மதம்மாற மறுத்த மண்டையம் என்ற ஊரைச் சேர்ந்த 800 வைணவர்களைத் தூக்கில் ஏற்றினான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அக்குடும்பத்துப் பெண்கள் அனைவரும் திப்புவின் படைவீரர்களால் மானபங்கப்படுத்தப்பட்டனர்; அந்த பெண்கள் அனைவரும் உயிரை நீத்தனர்;

சிறைப்பிடிக்கப்பட்ட14000 குழந்தைகளின் தோலை உரித்து உடலில் உப்பும், மிளகாயும் தேய்த்துக் கொடூரமாகக் கொன்றான்.

(இந்த நிகழ்ச்சியின் காரணமாக அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் இன்றுவரை தீபாவளிப் பண்டிகை கொண்டாடுவதில்லை.)

திண்டுக்கல் வரை படை எடுத்து வந்த திப்பு மலைமேல் இருந்த அபிராமி கோயிலைத் தகர்த்து பள்ளிவாசல் கட்டினான்.

பின்னர் மலையாள தேசம் நோக்கிச் சென்ற அவன் படையை சமோரின் என்ற தேசப்பற்றுடைய அரச பரம்பரையினர் தடுத்து நிறுத்தி வெற்றி கொண்டனர்.

திப்புவின் மகன் ஒருவனையும் கொன்றனர். (மற்ற ஐந்து மகன்களை ஆங்கிலேயர் கைது செய்தனர். அவர்களின் கதி பிறகு என்னவாயிற்று என்று தெரியவில்லை.)

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ்நாடு முழுவதும் போர்கள் நிகழ்ந்த வண்ணமே இருந்தன.

இதனால் அரசியல் குழப்பங்களும்,சமூக ஏற்ற தாழ்வுகளும், பொருளாதாரச் சரிவும், வன்முறையும் பரவி வந்தன.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் மதுரை மீது நடைபெற்ற மாலிக்காபூரின் படையெடுப்பும் அதனால் இந்து ஆலயங்களுக்கு –குறிப்பாக மதுரை, திருவரங்கம் – ஏற்பட்ட நாசங்களும், இந்துக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளும் எழுத்தில் அடங்காது.

இக்கால கட்டத்தில்தான் நவாபிற்கு தளபதியாய் இருந்த யூசுப்கான் பின்னர் நவாபிற்கும், கும்பினிக்கும் எதிராகப் போர் செய்து மதுரையைக் கைப்பற்றினான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தைக் கொள்ளை அடித்து ஒரு அரண்மனையைக் கட்டிக் கொண்டான். யூசுப்கான் என்ற இவன் இந்துவாக இருந்து நவாபால் இஸ்லாமியனாக மதம் மாற்றம் செய்யப்பட்டான்.

இந்துவாய் இருந்தபோது அவன் பெயர் – மருதநாயகம்.

இத்தகைய போர்களால் மக்களின் ஆன்மிக வாழ்க்கை எவ்வாறு பாதிக்கப்பட்டது?

(கிர்மானி என்ற இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர் எழுதிய கட்டுரை அடிப்படை.)

19–ம் நூற்றாண்டில் நமது சனாதன தேசம்–குறிப்பாக அதன் ஒரு பகுதியான தமிழ்நாடு பல இன்னல்களுக்கு ஆளாகியது.

பஞ்சமும், வறட்சியும் எங்கும் தலை விரித்தாடின.

மக்களின் பொருளாதார நிலை மிக மோசமாக இருந்தது.

கோயில்களில் முறையான பூசைகளும், வழிபாடுகளும், திருவிழாக்களும் தகுந்த முறையில் நடைபெறவில்லை.

ஆலய நிர்வாகம் அன்னியரின் ஆதிக்கத்தில் இருந்தது.

எனவே ஆலயங்களின் பராமரிப்பில் அரசு அக்கறை காட்டவில்லை.

இதனால் மேலை நாட்டுப் பாதிரிகளின் மதமாற்ற முயற்சிகள் தங்கு தடையின்றி நடந்தன.

இக்காரணங்களால் இந்துக்களிடம் ஒருவித தளர்ச்சி மனப்பான்மை வளர்ந்தோங்கியது.இதைத்தானே அந்நியர்கள் எதிர்பார்த்தது!

சில பெரிய ஆலயங்களின் நிர்வாகம் மடங்களின் வசம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இருந்ததால் அவை பிறமதத்தவரின் ஆக்கிரமிப்பில் இருந்து தப்பின.

பல ஆலயங்கள் குறுநில மன்னர்களாய் இருந்த ஜமீன்தார்களிடமும், நிலக்கிழார்கள் வசமும், தர்மகர்த்தா குழுக்களிடமும், பெரிய குடும்பங்களின் சொத்தாகவும் விளங்கின.

அரசாங்கம் பல கோயில்களின் சொத்துக்களை முழுமை யாகவோ அல்லது ஒரு பகுதியையோ பல்வேறு காரணங் களுக்காகக் கையகப்படுத்திக் கொண்டது.

அதற்கு ஈடாக 'தஸ்திக்' என்ற வருடாந்திர மானியத் தொகையை ஆலய நிர்வாகிகளுக்கு அளித்தது.

ஆலயங்களின் நிர்வாகத்திலும், சொத்துக்கள் பராமரிப்பிலும் விரும்பத்தகாத பல மாறுதல்கள் ஏற்பட்டன.

ஆங்கிலப் படிப்பு மக்களின் சமுதாய, ஆன்மிக நோக்கில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தின.

மெத்தப் படித்தவர்கள்(!) பலர் இந்துதர்ம பழக்க வழக்கங்களையும், மதச் சடங்குகளையும் கேலி செய்தனர்.

மொத்தத்தில் வாழ்வில் உயர்ந்த சிலரிடம் இந்து தர்மத்தின் மீதும், இந்து ஸ்தாபனங்களின் மீதும், இந்து கலாச்சரங்களின் மீதும் ஒரு இகழ்ச்சி மனப்பான்மை தோன்றியது.

புதிதாக இஸ்லாமிய, கிருத்துவ மதங்களுக்கு மாறியவர் களிடம் ஒற்றுமையும், தெம்பும் இருந்தன.

இந்துக்களிடம் இவை அன்றும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மை.

காலப்போக்கில் இயற்கையும், மனிதனும் விளைவிக்கும் இடையூறுகளுக்கு எல்லாம் காலம்தோறும் தீர்வையும் இடையூறு இல்லாமல் வழங்கி வருபவன் ஒருவன் இருந்தான்.

அவன் யார் ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இயற்கையும், மனிதனும், அரசும் எத்தனையோ இடையூறுகளை இந்து தர்மத்திற்கு அளித்து வந்தாலும் பாரத நாடு பாக்கியம் செய்தது. இது கர்ம பூமி.

காலத்திற்கு ஏற்றவாறு தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் ஆற்றல் உண்டு.

ஆலயங்களும், மடங்களும் நம் மதத்திற்கும், தமிழ் மொழிக்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியது.

இவைகள் சமயத்துறையில் மக்களுக்கு வழிகாட்டியாய் இருந்தன. இவை நம் சமயப் பண்பாடுகளைப் பேணுவதிலும், சமய தத்துவ ஞான நூல்களை அழியாமலும், நமது பாரம்பரிய கலாசாரங்கள் முற்றிலும் அழிந்து விடாதபடியும் பாதுகாத்தன.

இந்த மடங்கள் கல்வி அறிவும், தர்க்க ஞானமும், சமயத் தேர்ச்சியும், நிர்வாக ஆற்றலும், தெளிந்த சிந்தனையும் கொண்ட சந்நியாசிகளின் பொறுப்பில் இருந்தன.

மக்களிடையே இவர்களுக்கிருந்த செல்வாக்கினால் அரசு தனது அதிகாரத்தை அதிகம் செலுத்த இயலவில்லை.

அத்து மீறியவர்களுக்கு ஆண்டவனே உரிய தண்டனை வழங்கியது போல் செயல்கள் நிகழ்ந்தன.

ஒருவகையில் மனிதன் பிறந்து, வளர்ந்து, மறையும்வரை அவன் வாழ்வு சமயத்துடன் பின்னிப் பிணைந்து இருக்கும்படி அமைந்தது.

நம் சனாதன தர்மத்திற்கு இடையூறும், சோதனைகளும் ஏற்படும் போது ஞானிகளும், அவதார புருஷர்களும் தோன்றிக் கொண்டே இருந்தனர்; இனியும் தோன்றுவர்.

செயற்கையான மற்றும் இயற்கையான நம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இன்னல்களுக்கெல்லாம் தீர்வினைச் சொல்ல இந்த அவதார புருஷர்களையும், ஞானிகளையும், முனிவர்களையும் நமது புண்ணிய பூமிக்கு ஒருவன் அனுப்பிக் கொண்டே இருப்பான்.

அந்த ஒருவன், ஓர் நாமம், ஓர் உருவம் இல்லாதவன்.

பல நாமம், பல உருவம் கொண்டவன்.

பக்தர்கள் மனதில் அவர்கள் நினைத்தவுடன் தோன்றுபவன்.

நல்லவர்களின் வேண்டுதலுக்கு இரங்குபவன்.

நம் போன்றவர்களின் கண்களுக்குப் புலப்படாதவன்.

ஞானிகளின் நெஞ்சில் உறைபவன்.

அவன் தான்.....

இறைவன்.

அந்த இறைவனுக்கும்–எல்லாமுமாய் ஆன அந்த சிவ பரம் பொருளுக்கும்,

நம் சுந்தரருக்கும் என்ன தொடர்பு ?

(ஒரு சிலருக்கு சந்தேகம் எழலாம். ஸ்ரீஸுந்தரர் சரிதம் என்று ஆரம்பித்து விஷயம் இஸ்லாமியர் ஆட்சி, ஆங்கிலேயர் நிர்வாகம் என்றெல்லாம் போகிறதே என்று.

எழுதுவது சிறுகதையோ, புதினமோ அல்ல. சரிதம். சரிதம் என்றால் வரலாறு.

வாராது போல் வந்துதித்த ஒரு மாபெரும் மகானின் சரிதத்தைக் கூறும்பொழுது அவர் திருவவதாரம் செய்த காலமும், அதற்கு சற்று முன்னும் பின்னும் அந்நாட்டில் நடந்த சமூக, அரசியல், மதம் தொடர்புடைய நிகழ்ச்சிகளையும் கூறினால்தான் எத்தகைய சூழலில் அந்த மகான் ஆன்மிக உலகில் நுழைகிறார், அதனால் சமுதாயத்தில் நிகழ்ந்த அற்புத மாற்றங்கள் என்ன



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மகான்களின் வரலாற்றை மட்டும் கூறாமல் அவர்களின் உபதேசங்கள், மகான்கள் என்று போற்றப்படும் முன்னர் அவர்கள் சந்தித்த சோதனைகள், வேதனைகள் பற்றியும் கூற வேண்டிய கடமையும் உள்ளது.

பத்தாயிரம் பாக்களுக்குமேல் எழுதிய கம்பனும் அயோத்தி, மிதிலை, கிஷ்கிந்தை மற்றும் இலங்கை நாடுகளின் வளங்கள், நாடுகளின் அமைப்பு, மக்களின் மனநிலை, அரசு செய்பவர்களின் ஆற்றல், வீரம், சமயம்..... இவை பற்றியெல்லாம் விரிவாகச் சொல்லுகிறான்.

'ராமன் பிறந்தான், சீதையை மணந்தான், அவளைப் பிரிந்தான், ராவணனைக் கொன்றான், பின்னர் மனைவியை மீட்டான், மகுடம் சூடினான்' என்ற அளவில் மட்டும் காப்பியத்தை அமைக்கவில்லை என்பதை நோக்கவும்.

வான்மீகி, வியாசர், இளங்கோவடிகள் ஏனையோரும் அவ்வாறே.

இதைப் படிக்கும் பலரும் அந்தக் காலச் சூழ்நிலைகளை அறிந்து கொள்ள வேண்டும், இத்தகைய பல எதிர்நிலை நிகழ்வுகளிலும் எவ்வாறு அவர் தனித்து விளங்கினார் என்பதைப் புரிந்து கொள்ளவுமே அன்றைய அரசுகளைப்பற்றி ஓரளவு எழுத வேண்டியிருந்தது.)

இமயமலை தொட்டு குமரி வரை பரந்து விரிந்துள்ள பாரத புண்ணிய பூமியில் அவதரித்த மகான்கள், மகாத்மாக்கள் பல்லோர்.

அதைப்போலவே பல நதிகளும் பாரத புனித பூமியை அலங்கரித்தன.

இத்தகைய புண்ணிய நதிகளுள் ஒன்று பொருநை என்று குறிப்பிடப்படும் தாமிரபரணி.

இது அன்றைய தென்பாண்டி நாடு (இன்றைய திருநெல்வேலி


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மற்றும் அருகிலுள்ள மாவட்டங்கள்) முழுவதையும் செழுமை உள்ளதாக்கியது.

இந்நதியும் காவிரி,வைகை போன்று இலக்கியங்களில் குறிப்பிடப்படும் சிறப்புடையது.

வால்மிகி முனிவரின் ராமாயணத்திலும், வியாசரின் மஹாபாரதத்திலும் இந்நதிபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

இது ஒரு ஜீவநதியாய் விளங்கி, தன்னுடன் வந்து சேரும் சில உப நதிகளுடன் நெல்லைச்சீமையைப் பொன்கொழிக்கும் பூமி ஆக்கிற்று.

இந்தப் பகுதியிலுள்ள ஒரு புனித மண்ணிற்குள் இப்பொழுது நாம் நுழைகிறோம்.

நான்,எனது என்ற அகங்காரங்களைத் துறந்து மனதிலும், உடலிலும் பக்தி ஒன்றை மட்டும் வைத்துப் பணிவுடன் இந்த ஊரில் நுழைவோம்.

இது எந்த ஊர் ?

காலத்தால் கணக்கிட முடியாத புண்ணிய தேசம் பாரத தேசம்.

இந்நாட்டின் தென்பகுதியாம்

தென்பாண்டித் திருநாட்டில் தக்ஷிண கங்கை என்று பெயர் பெற்று விளங்கிய தாமிரபரணி நதி பாய்ந்து வளமையை வாரி வழங்குகிறது.

தென்பாண்டி நாட்டின் நிலவளமும், நீர்வளமும் பொருந்திய பகுதி சாலிவாடிபுரம் என்று திருப்பெயர் பெற்று விளங்கியது. இன்று அதன் பெயர் திருநெல்வேலி.

இந்நகருக்கு வடக்கே 12 கல்தொலைவில் ஆனந்தவல்லி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சமேதரராய் ஸ்ரீகைலாசநாதர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ளார்.

இந்தப் புனித தலத்தின் பெயர் கங்கை கொண்டான் என்பதாகும்.

தாமிரபரணியின் முக்கிய உபநதியான சித்ரா நதி பாயும் ஸ்ரீவல்லபன் ஏரி (இன்று பெயர் மருவி சீவலப்பேரி என்று அழைக்கப்படுகிறது.) என்ற ஊருக்கு இரண்டு மைல் தொலைவில் உள்ளது கங்கை கொண்டான் என்ற புனிதப்பதி.

(கங்கை கொண்டான் ஸ்ரீகைலாசநாதர் கோயிலில் சோழ, பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன.

சோழ வம்சத்தினரில் சிறந்து விளங்கிய முதலாம் ராஜராஜன், அவன் மைந்தன் ராஜேந்திரன் மற்றும் முதலாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுக்கள் இன்றும் உள்ளன. 'கங்கை கொண்டான்' என்று புகழப்பட்ட ராஜேந்திர சோழனின் காலத்திற்கு முன்பே இக்கோயில் இருந்ததெனவும், ராஜேந்திர சோழன் திருப்பணிகள் செய்து ஸ்ரீகைலாசநாதர் ஆலயத்தைப் புதுப்பித்த பிறகு 'கங்கை கொண்டான்' என்று அவன் பெயரில் விளங்கி வருவதாகவும் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.)

இந்த ஆராய்ச்சிகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அவ்வூரின் அந்தணர் தெருவில் பணிவாக நுழைவோம்.

அவ்வாறு நுழைவதற்கு முன்பு அவ்வூர் மண்ணை பக்தியுடன் நெற்றியில் அணிந்து கொண்டு,

இப்போதுதான் பிறந்த குழந்தையின் அழுகுரல் வந்த வீட்டை நோக்கிச் செல்வோம்.

அந்தக் குழந்தையை தரிசப்பதற்கு முன்னர்,

அக்குடும்பத்தின்—பரம்பரையின் முன்னோர்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவதாரம் செய்த குழந்தையைப் பார்ப்பதற்கு முன்பு அக்குழந்தையின் பரம்பரையைப் பற்றி சிறிதேனும் தெரிந்து கொள்வது அவசியம்.

'நகரேஷு காஞ்சி' எனப் புகழப்படும் காஞ்சி மாநகரின் அருகே உள்ள சிற்றூர் அடையப்பலம்.

அக்கிராமத்தில் ஆச்சாரிய தீக்ஷிதர் என்ற புகழ்பெற்ற பன்மொழி வித்தகர் இருந்தார்.

16ம் நூற்றாண்டின் விஜயநகரப் பேரரசன் கிருஷ்ண தேவராயரின் குலகுருவாய் இருந்தார்.

அவரின் காலத்திற்குப்பின் அவர் மைந்தன் ஸ்ரீரங்கராஜத்வரி அந்தப் பதவியை அலங்கரித்தார்.

கிருஷ்ண தேவராயர் கி.பி.1529–ல் காலம் சென்ற பிறகும் அப்பேரரசின் குலகுருவாய்த் தொடர்ந்து இருந்து, பட்டமேற்ற அரசருக்கு நல்வழி காட்டி நடத்தினார்.

கி.பி.1554–ல் அவர் மனைவி ஒரு புதல்வனை ஈன்றாள்.

அவன் நாளடைவில் வளர்ந்து கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினான்.

வடமொழியில் எல்லையற்ற பாண்டித்யம் பெற்று பல வேதாந்த நூல்களை எழுதினான். இலக்கியம், இலக்கணம், பன்மொழி ஆற்றல், விவாதம் அனைத்திலும் மிகச் சிறந்து விளங்கினான்.

ஏராளமான நூல்களை உரைநடையிலும், செய்யுள் நடையிலும் எழுதினான்.

தத்துவஞான விஷயங்களில் எதிரிகளிடம் வாதிட்டு வென்றான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இத்தகைய சிறப்பு மிக்க சிறுவனை அவன் என்று விளிப்பதே தவறு. எனவே 'அவர்' என்று தொடர்வோம்.

இவர் எழுதிய பரிமளம் என்ற உரைநடை விளக்க நூலும், சிவார்க்கமணி தீபிகை,நிராய ரக்ஷாமணி, சதுர்மத சார சங்கிரகம் ....மற்றும் பல நூல்கள் கற்றோரால் போற்றப்பட்டன.

பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் சிவபதம் அடைந்த இவர் "அப்பய்ய தீக்ஷிதர்" என்று போற்றப்பட்டார்.

(இவர் வாழ்வில் சில அற்புதங்கள் நிகழ்ந்தன. அவற்றை விரிக்கின் பெருகும். நம் சரிதத்திற்கு இடையூறில்லாமல் இத்துடன் அவரைப் பற்றி நிறுத்திக் கொள்வோம்.)

அப்பய்ய தீக்ஷிதரின் சகோதரரின் பேரன் நீலகண்ட தீக்ஷிதர். இவர் மதுரையை ஆட்சி புரிந்த மன்னன் திருமலை நாயக்கருக்கு அமைச்சராய் இருந்தார்.

இவர் அமைச்சராய் இருந்த காலத்தில்தான் மதுரை ஸ்ரீமீனாக்ஷி அம்மன் கோவில் விரிவுபடுத்தப்பட்டது.

இன்று புதுப்பொலிவுடனும், விஸ்தாரமாகவும் இக்கோயில் விளங்குவதற்கு இவரே மூலகாரணம்.

திருக்கோயில் திருப்பணி நடைபெறும் பொழுது நடந்த ஒரு நிகழ்வால் அரசன் ஆத்திரம் கொண்டான்.

நீலகண்ட தீக்ஷிதரைக் கொல்லும் அளவிற்கு மன்னனின் சிந்தனை சென்றது.

அப்படி செய்யத் தகாத குற்றம் என்ன செய்தார் நீலகண்ட தீக்ஷிதர்?

வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் பாண்டிய நாட்டை ஆண்ட ஒரு சில மன்னர்கள் தீர ஆராயாது தண்டனை கொடுப்பவர்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



களாகவே தோன்றுகின்றனர்.

பின்னர், செய்த தவறை உணர்ந்து உயிரை விடுத்தோ அல்லது வேறு

கழுவாய்கள் செய்தோ வளைந்த செங்கோலை நிமிர்த்துகின்றனர்.

பாண்டியன் நெடுஞ்செழியன் தீர ஆராயாது கோவலனைக் கள்வன் எனக்கருதி கொலைசெய்து விடுகின்றான்.

பின்னர் கண்ணகி அரசவை வந்து வழக்குரைக்க செய்த தவறை உணர்கிறான்;

உயிரை விடுகிறான்; வளைந்த செங்கோல் நிமிர்ந்தது.

வீட்டின் உள்ளே, இரவு நேரத்தில் பெண்ணுடன் பேசுவது கணவனல்லன் எனக் கருதி மாறுவேடத்தில் வந்த பாண்டிய மன்னன் கதவைத் தட்டுகிறான். உள்ளிருந்து அப்பெண்ணின் கணவன் வருகிறான்.

மறுநாள் பாண்டியனின் அரச சபையில் வழக்குத் தொடுக்கப் படுகிறது, வீட்டின் கதவை நடுஇரவில் தட்டிய – யாரென்று தெரியாதவனின் மேல்.

கணவனும், மனைவியும் வழக்குத் தொடுக்கின்றனர். அறியாமல் ஐயத்தின் பேரில் கதவைத் தட்டிய பாண்டிய மன்னன் தட்டிய தன் கையை அரிந்து கொள்கிறான். பொற்கை பூண்டு பொற்கைப் பாண்டியன் என அப்பெயரிலேயே அழைக்கப் படுகிறான்.

வீரனும், விவேகியுமான மதுரை வீரனின் மாறுகால், மாறுகை வாங்கப்படுகிறது – தீர விசாரியாத திருமலை நாயக்கரால்.

மாணிக்கவாசகரின் அருமை, பெருமைகள் அறியாத அரிமர்த்தன பாண்டியன் அவரை சிறையில் அடைக்கிறான். கிழவி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வந்திக்காக மண் சுமக்க வந்தவனை சாட்டையால் அடிக்க அந்த அடி மன்னனின் மீதும் விழுகின்றது.

அதே, திருமலை நாயக்கர் சநதேகப்படுகிறான் நீலகண்ட தீக்ஷிதர் மீது.

நடந்தது என்ன ?

மீனாக்ஷி அம்மன் ஆலய சுற்றுப்பிரகார மண்டபத்தில் அரசர் திருமலை நாயக்கருக்கும் பட்டத்து அரசிக்கும் சிலை எடுக்கும் வேலை நடைபெற்று வந்தது.

தலைமைச் சிற்பியின் பெயர் சுந்திர ஆசாரி.

சிற்ப சாஸ்திரத்தில் கரை கண்டவர்.

ஆனால் அவரால் பட்டத்து அரசியின் சிற்பத்தைத் தெளிவாக வடிக்க இயலவில்லை. அரசியின் இடது தொடைப்பகுதி ஒரு இடத்தில் மிக இலேசாகப் பெயர்ந்திருந்தது.

மிகச்சிறிய குறைதான்; எவர் கண்களுக்கும் எளிதில் புலப்படாது தான். ஆனால் ஒரு சிறந்த கலைஞன் சிறு குறைகூட இல்லாத வண்ணம் தன் செயலை நிறைவு செய்யவே விரும்புவான்.

சிற்பத்தைப் பார்வையிட வந்தார் நீலகண்ட தீக்ஷிதர். மனதில் கலக்கமுடனும், முகத்தில் கவலையுடனும் தோன்றிய அவனிடம் 'கவலை எதனால் ?' என்று வினவினார்.

'நான் பலமுறை முயன்றும் அரசியாரின் சிற்பம் சிறிது மூளியுடனேயே இருக்கிறது. அக்குறையைச் சரிசெய்ய இயலவில்லை' என வருத்தம் தோய்ந்த குரலில் கூறினார் ஆசாரியார்.

ஒருகண நேரம் நிட்டையில் ஆழ்ந்தார் தீக்ஷிதர். கண்விழித்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவர் கூறினார்:'அரசியாரின்உடலில் அந்த இடத்தில் சிறு மரு ஒன்று உள்ளது. ஆகவேதான் சிற்பம் சரியாக அமையாதது போல் உங்களுக்குத் தோன்றுகிறது.'

தீக்ஷிதர், ஆசாரியரிடம் கூறிய செய்தி மன்னனின் செவியை எட்டியது.

தீக்ஷிதர் மேல் சந்தேகம் வந்தது; சினம் எழுந்தது.

தீக்ஷிதரைத் தண்டிக்க விரைந்தான்.

அரசனின் ஐயத்தையும், சினத்தையும் தீக்ஷிதர், அறிந்தார்; அதிர்ந்தார்.

அடுத்து மனம் பதைக்கும், உடல் வதைக்கும் செயல் ஒன்றைச் செய்தார்.

அது என்ன ?

திருமலை நாயக்கர் கடுஞ்சினத்துடன் நீலகண்ட தீக்ஷிதரைத் தண்டிக்க விரைந்து மீனாக்ஷி அம்மன் கோயில் நோக்கி வருகிறான்.

அவன் வந்து சேரும் முன்னமேயே பெரும் கட்டிக் கற்பூரத்தை எரிய வைத்தார். எரியும் அந்த நெருப்பை இரு கண்களிலும் வைத்துக் கொண்டார், தீக்ஷிதர்.

கண்கள் கருகின; பார்வையை இழந்தார். அனைவரும் தீக்ஷிதர் செயல்கண்டு திகைத்தனர்.

வந்த மன்னனும் கலங்கிப் போனான். தீர விசாரியாது தண்டிக்க வந்த மன்னனை வெறுப்புடன் நோக்கினர்.

பழுதுபட்ட கண்களும், நொந்து போன இதயமும் தீக்ஷிதரை வதைத்தன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மன்னவன் இருந்த திசைநோக்கிக் கூறினார்:

'ஆய கலைகள் அறுபத்து நான்கில் சாமுத்திரிகா லக்ஷணம் என்ற சாஸ்திரமும் ஒன்று.

அது கூறும் இலக்கணப்படி மகாராணியின் அங்க அமைப்பு இப்படித்தான் இருக்கும் என்று உரைத்தேன். ஆனால் தாங்களோ ஐயத்தின் வசப்பட்டுத் தீர விசாரிக்கும் தன்மையை இழந்தீர்கள்; தண்டனையை நிறைவேற்ற வந்தீர்கள்.

குற்றமற்றவனைத் தண்டித்த பாவம் குவலயம் காக்கும் மன்னனைச் சார்ந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் எனக்கு நானே தண்டனை அளித்துக் கொண்டேன்.

நடந்த நிகழ்வுகளுக்கு நீங்கள் வருந்தற்க!'

திருமலை மன்னன் தீக்ஷிதரின் திருவடிகளில் பணிந்து வணங்கினான்.

'என்னை மன்னித்துவிட்டீர்கள் என்றால், அன்னை மீனாட்சியை வேண்டுங்கள்; இழந்த பார்வையை மீண்டும் பெறுங்கள்' எனக் கண்களில் கண்ணீர் மல்க வேண்டினான்.

மீனாட்சி அம்மையைச் சிந்தையில் நிறுத்தி,

'ஸ்ரீஆனந்த சாகரஸ்தவம்' என்ற துதிப்பாடலை மனமுருகிப் பாடினார்.

60–வது பாடலைப் பாடும்போது கயற்கண்ணி அம்மை கருணை காட்டினாள்.

தீக்ஷிதரின் பார்வை மீண்டது.

இவரின் அறிவு, ஆற்றல், இறைபக்தி, உயர்வான புலமை இவற்றை உணர்ந்து கொண்ட அரசன் பாலமடை என்ற கிராமத்தை இறையிலி நிலமாக அளித்தான்.

தீக்ஷிதரும் அரசுப் பதவியிலிருந்து விலகி துறவறம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மேற்கொண்டு பாலமடையில் சிவத்தொண்டுகள் புரிந்து உரிய காலத்தில் இறைவனுடன் கலந்தார்.

மேலே கண்ட இத்தகைய சான்றோர் பெருமக்களுக்கும் நம் ஸுந்தரருக்கும் என்ன தொடர்பு?

மாபெரும் தபஸ்வியும், ஞானியுமான அப்பய தீக்ஷிதர்

104 கிரந்தங்களை இயற்றியவர்;

வேதாந்த சூத்திரத்திற்கு

ஸ்ரீசங்கர பகவத்பாதர் செய்த பாஷ்யத்திற்கு விளக்கவுரை எழுதியவர்.

'படித்தால் அப்பய்ய தீக்ஷிதர்போல் படிக்க வேண்டும்'என்று அன்றைய காலகட்டத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டவர்.

வாஜ்பேயி முதலிய யாகங்களைச் செய்து முடித்தவர்.

சகலகலா விற்பன்னரும், பண்டிதருமான ஸ்ரீநீலகண்ட தீக்ஷிதர் இவர்களின் பரம்பரையில் வந்துதித்தவர்தான் நமது ஸ்ரீஸுந்தர மகான்.

ஸ்ரீநீலகண்ட தீக்ஷிதரின் பெண்வழிச் சந்ததியில் நான்காம் வம்சாவளியைச் சேர்ந்தவர் ஸ்ரீயக்னேஸ்வர சிவன்.

ஸ்ரீவத்ஸ கோத்திரத்தில் தோன்றியவர்.

இவர் வேத வேதாகங்களை நன்கு கற்றவர்.

தம்பால் கற்க வருவோருக்கு உன்னத குருவாய் இருந்தவர்.

வேதம் கற்றல் கற்பித்தல்,

வேள்விகள்

வேட்டல், வேட்பித்தல்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



யாசகம் கொள்ளல்

கொடுத்தல்'என்ற அன்றைய அந்தணருக்கு உரிய இலக்கணப்படி வாழ்ந்தவர்.

இவருடைய தர்மபத்தினி காமாக்ஷி அம்மாள் அவர்கள்.

ஸ்வாமிகளின் திருமேனியைத் தன் கருவில் சுமக்கும் பெரும் பேறு பெற்றவர்.

கருணை உள்ளம் கொண்டவர்.

கணவரின் குறிப்பறிந்து பணிவிடை செய்பவர்.

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து, சுற்றத்தைப்பேணி விருந்தோம்பியவர்.

தெய்வ வழிபாட்டில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர்.

இத்தம்பதிகள் முன்னைப் பிறவிகளில் செய்த தவத்தின் பயனாய்,

கலி 4933–ம் ஆண்டு கொல்லம் 1007–ம் ஆண்டு கரவருஷம் கார்த்திகை மாதம் இருபதாம் தினத்தில்அமாவாசை நிறைந்த நன்னாளில் ஆங்கிலத் தேதி 03.12.1831 அன்று அனுஷ நக்ஷத்திரம் விருச்சிக ராசி ரிஷப லக்கினத்தில் இத்தம்பதியருக்கு

பரம கருணா மூர்த்தியான பரமேஸ்வரனே ஆண் மகவாய் அவதரித்தார்.

இக்குழந்தை அவதரித்த தினத்தில் புள்ளினங்கள் இனிய குரலில் இன்னிசை எழுப்பின; கங்கைகொண்டானின் சித்திர கங்கை தீர்த்தம் தெளிந்து விளங்கிற்று; ஆண்டுள்ள பல்வகைப் பிராணிகளும் மங்கல ஒலிகள் எழுப்பின. வானம் எக்களங்கமுமின்றித் தெளிவாய் இருந்தது; மலர்கள் தங்கள் மணத்தை நாலாபுறமும் பரப்பின; கோவில் மணியின் ஓங்கார ஒலி எங்கும் வியாபித்தது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பூமித்தாயின் மனம் குளிர்ந்ததால் செழித்து வளர்ந்திருந்த மரம், செடி, கொடிகள் வரவேற்பது போல் மெலிதாகத் தலையசைத்தன;

கார்த்திகை மாதம் வீசும் வாடைக் காற்று கூட தென்றலாய் மாறி தேகத்திற்கு சுகம் அளித்தது.

அந்த பெருமைபெற்ற குடியின் ஸ்ரீயக்ஞேஸ்வர சிவன்–காமாக்ஷி அம்மாள் தம்பதியருக்கு இரண்டாவது ஆண்மகவாக அவதரித்த இக்குழந்தையின் வாழ்க்கைப் பயணம் எவ்வாறு இருந்தது ?

சில நாட்களுக்கு இக்குழந்தையுடனே பயணிப்போம்.

பரமேஸ்வர ஸ்வரூபமான குழந்தை பிறந்தது அனுஷ நக்ஷத்திரத்தில்.

அனுஷம் மிக உன்னதமான நக்ஷத்திரம்.

ஜோதிட சாஸ்திர வல்லுநர்கள் இந்த நக்ஷத்திரத்தை மூன்று நக்ஷத்திரங்களின் கூட்டு என்பர்.

மன்னவனின் வெண்கொற்றக்குடையினைப் போல் இக்கோளின் அமைப்பு இருக்கும் என வானநூல்சாஸ்திரம் கற்றோர் கூறுவர்.

இந்தக்கோள் அனுராதா, மிருதுதாரா என்ற பெயர்களிலும் அறியப்படும்.

இதனுடைய அதிதேவதை சூரியன்;

கிருஹம் சனிபகவான்.

சனிபகவான் தர்மதேவதை.

இன்னார், இனியர் என்ற வேறுபாடு கிடையாது.

நேர்மை, தர்மம், உண்மையின் வழிநடப்பவர்களுக்கு உதவி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



புரிவார்.

பொய், புரட்டு, நம்பிக்கை துரோகம் செய்வோரைப் புரட்டி எடுத்துவிடுவார்.

அனுஷ நக்ஷத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஆரம்பம் சனி தசைதான்.

எனவே தொடக்க காலம் இவர்களுக்கு அலைச்சலும், இழப்புகளும், தேடுதலுமாகவே இருக்கும்.

ஆனால் உண்மையான உழைப்பிற்கேற்ற உயர்வையும், உன்னத கீர்த்தியையும் தரும்.

நாலாயிர திவ்யப்பிரபந்தப் பாடல்களைத் தொகுத்தவர் வைணவப் பெரியவர் நாதமுனி;

இவர் காலத்தில் வாழ்ந்தோம் நாம் என்றும் பெருமையுடன் கூறிக்கொள்ளும் மஹாப்பெரியவர் காஞ்சிமுனி;

இவர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பிறந்த இக்குழந்தை சிவமுனி.

19–ம் நூற்றாண்டில் இவர் காலத்தே சிறந்து விளங்கிய அவதார புருஷர்கள்;

ராமகிருஷ்ண பரமஹம்சர்

வள்ளலார் ராமலிங்க அடிகளார்

வீரத்துறவி விவேகானந்தர்

தமிழுக்குப் பெருந் தொண்டாற்றிய ஆறுமுக நாவலர், திரிசிரபுரம் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை, உ.வே.சாமிநாத ஐயர், கோபாலகிருணஷ்பாரதி ஆகியோர் ஆவர்.

அறியாமையில் உழலும் ஜீவாத்மாக்களைக் காத்து, அரவணைத்து, ஞானத்தை ஊட்டி அவர்களைப் பரமாத்மாவுடன் இணைப்பது குருவருளே ஆகும்.

ஸ்தூலமாகவும் (உருவம் கொண்டும்), சூக்ஷமமாகவும் (அரூபமாகவோ, வேறு ஒரு உடலில் நுழைந்தோ) இவர்கள் நம்மை வழிநடத்துவர்.

மிகுந்த தேஜஸுடனும்,தெய்வீகஅழகுடனும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவதரித்த இக்குழந்தைக்குப் பெயர் சூட்டுவது குறித்து குடும்பத்தினர் என்ன முடிவெடுத்தனர்?

யக்னேஸ்வர சிவன்—காமாக்ஷி அம்மாள் ஆகிய உத்தம தம்பதிகளுக்கு இரு மைந்தர்கள்.

மூத்த குழந்தையின் பெயர் 'ராமசுப்பன்'. இவரைச் செல்லமாக 'குப்பானி சிவன்' என்று அழைத்தனர்.

அக்குழந்தைக்கு அப்பெயரே நிலைத்து நின்றுவிட்டது.

இரண்டாவது குழந்தை ஜனனமானதும் பெற்றோர் அக்குழந்தையின் பரிபூரண அழகில் மயங்கினர்; மகிழ்ந்தனர்.

குழந்தையின் யோக பாவாதி பலன்களை அறிய விரும்பினர்.

சோதிடர்களை அணுகினர்.

தெய்வ நியதிகளை எளிதில் உணரும் ஆற்றல் பெற்ற சோதிட சாஸ்திரத்தில் கரைகண்ட வல்லுனர்கள் அனைவரும் ஒருமித்தைக் கருத்தை வெளியிட்டனர்:

'இந்த ஜாதகன் பூத உடலால் ஒளிபெற்று விளங்குவது போல் தெய்வீக ஞானத்தால் உயர்ந்து விளங்குவான்;

இக்கலியுகத்தில் சிவதர்மப் பயிரை வளர்க்கும் சிரேட்டனாகவும்;

ஆண், பெண் மற்றும் அனைத்து இனத்தவரும் பிரம்ம ஞானத்தை அடைந்து உய்யவேண்டும் என்ற கருத்தைக் கொண்டவனாகவும்;

பலப்பல யோகசித்திகள் கைவரப் பெற்றவனாகவும்; உத்தம குணசீலனாகவும்; சிவத்யானம், யோகம், நிஷ்டை, தபஸ், சித்தி ஆகியவற்றில் தீரனாகவும்; அமானுஷ்ய சக்தி மிகுந்தவனாகவும்; எல்லாக் கலைகளிலும், எல்லாத் துறைகளிலும் தனித்துவம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கொண்டவனாகவும்; இராஜ யோகத்துடன் விளங்கிப் பிரகாசிப்பான்; பார்வைக்கு மிக எளியவனாவான்; ஞானி எனப் போற்றப்படுவான்; பிற்காலத்தில் இவன் கடவுளின் அவதாரம் என்று உணரப்படுவான்.'

சோதிடர்கள் கணித்துக் கூறியதைக் கேட்டு பெற்றோர்கள் மகிழ்ந்தனர்.

இரண்டு குழந்தைகளையும் மனதில் தாங்கிக் கொண்டாடினர்.

குழந்தைகளின் விளையாட்டுகளிலும், பார்வைகளிலும், புன்சிரிப்புகளிலும், கை–கால் அசைவுகளிலும் தங்கள் மனங்களைப் பறிகொடுத்தனர்.

குழந்தையைப் பற்றி இத்தனை உயர்வாகக் கணித்துக் கூறிய சோதிடர்கள் மிகமிக இன்றியமையாத இரண்டு கணிப்புக்களைப் பெற்றோரிடம் கூறாது விட்டுவிட்டனர்.

அவர்கள் மனம் ஒப்பியேக் கூறாது விட்டனரா ? அன்றி இவற்றைக் கூறக்கூடாது என மறைத்து விட்டனரா ?

பாகவதத்தில் வரும் ஒரு நிகழ்ச்சி :

"இறைவனிற்கு பத்து அவதாரங்கள் என்று தீர்மானிக்கப்பட்டது. ஒன்பது அவதாரங்கள் நிகழ்ந்து விட்டன. "கலியுகத்தில் 'கல்கி' அவதாரம் மட்டுமே மிச்சமுள்ளது. "இதுதொடர்பாக பரீக்ஷித்து மகாராஜாவிற்கும், அவருக்கு பாகவதம் சொல்லி வந்த சுகப்பிரும்ம ரிஷிக்கும் நடந்த உரையாடல்:

"அரசர்: 'கலியுகத்தில் தர்மம் நலிவடைந்து விடும் என்றால் அதைக் காப்பவர் எவர் ?'

"சுகர்: 'தர்மம் நலிவடைவதில்லை; நலிவடைவது போல் தோன்றும்.தர்மம் தனக்கு அழிவு வரும்பொழுது தன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சக்தியைக்காட்டி தானே நிலை நிறுத்திக் கொள்ளும் ஆற்றல் உடையது. தர்மம் குறைந்து அதர்மம் ஓங்கிய மாதிரி தோன்றும். “கலியுகத்தில் இறைவனுக்கு ஒரே ஒரு அவதாரம் மட்டுமே.

“கலியுகத்தில், ‘இறைவன்–பகவான் உண்டா ? கண்ணால் காண முடியுமா ?’ என்று கேட்பவரின் எண்ணிக்கை பெருகுவது போல் தோன்றும். “தான் அவதாரம் செய்வதற்கு முன்னுள்ள இடைக்காலத்தில் இறைவன் தன் ஸ்வரூபமாக பல அவதார புருஷர்களைத் தோற்றுவிப்பான். அவர்கள் மூலம் தர்மம் அழிந்து விடாமல் காப்பான். “ஆன்மிகம் என்றால் என்னவென்று அறியாதவர்களும், அறிந்து கொள்ள விருப்மில்லாதவர்களும், ஆன்மிகப் போர்வையில் நாத்திகம் பேசுபவர்களும், மக்களிடையே மதத்தைப்பற்றி அவதூறு பரப்புபவர்களும், மதத்தின் பெயரால் பிரிவினை செய்பவர்களும், செல்வம் சேர்ப்பவர்களும் பெருகி வரும் காலமாக இக்கலியுகம் இருக்கும். “அதற்கு ஏற்றாற்போல் அந்தந்த காலகட்டங்களில் இறைவனின் அவதாரமாக மகான்கள் தோன்றுவர்.

“அரசர் : என்னதான் இத்தகைய மகான்கள் தோன்றினாலும் பகவான் தோன்றிய மாதிரி இருக்காதே மகான்கள் மூலம் தர்மம் எப்படி நிலைநாட்டப்படும் ?

“சுகர்: ‘கலியுகத்தில் இறைவன் நேரில் வந்தால்’ நீ இறைவன்தானா ?’ என்று கேட்பார்கள். பகவானை திடசித்தமாய் நம்புபவனுக்கு மகான்கள் மூலம் அற்புதங்கள் நிகழ்த்திக் காட்டுவார். “மகான்கள் தோன்றுவது சுலபமில்லை. மகான்களுக்கும், கடவுளுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது.

“ஒருதாயின் இடைவிடாத பிரார்த்தனையால், வேண்டுதலால், தவப்பயனாய் அவர் கருவில் மகான்–குரு வளர்ந்து பூமியில் அவதாரம் செய்கிறார்.

“அரசர் : ‘அனைவரையும் தர்மவழியில் திருப்ப முடியுமா ?’



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



“சுகர் : ‘பத்துபேர் திரும்பினால் போதும். அவர்களைப் பார்த்து மற்றவர்களும் மகானைப் பின்பற்றுவர்.’

“(இவ்வாறு அவர்கள் விவாதம் மிக நீண்டு கொண்டு போகிறது.அரசரின் அனைத்து கேள்விகளுக்கும்—சந்தேகங்களுக்கும் தகுந்த விளக்கமளித்துத் தெளியவைக்கிறார் சுகப்ரும்ம ரிஷி.)

“மேலே குறிப்பிட்ட உரையாடலில் இருந்து ஒன்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம் : ‘இறைவனே மகான்களாய், குருவாய் அவதாரம் செய்கிறார். அவ்வாறு ஒரு தாயின் கருவின் மூலம் பிறந்த அவர்கள் வாழ்வின் நியதிகளையும், விதிகளையும் மீற முடியாது. அவற்றின் மூலம் மக்கள் இனத்திற்கு பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

“எனவே நாம் காணப்போகும் குருநாதரும் இறைவனே என்பதை அனைவரும் தெளிதல் வேண்டும்.)

“குழந்தையின் அழகிலும்,முகத்தில் ஒளிரும் கவர்ச்சியிலும் அனைவரும் மயங்கினர்.

‘இறைவன் அருளால் தோன்றிய இக்குழந்தை சொல்லாற்றல் மிக்கதாய் இருக்கும்; கேட்போர் அனைவரையும் தன்வயப்படுத்தும் எனவே நாவுக்கரசன் என நாமம் சூட்டலாம்’ என்றனர் ஒருசிலர்;

‘சைவம் தழைக்க வந்த பிள்ளை, ஞானம் மிகக் கொண்டவன், சிவனைத் தூற்றியவர்கள் தண்டனைக்குள்ளாக அவதரித்த ஞானசம்பந்தரின் மறுபிறவி, எனவே ஞானசம்பந்தன் பெயர் சூட்டுக’ என்றனர் வேறு சிலர்;

“குழந்தையின் அழகோ வார்த்தைகளில் வடிக்க முடியாதது, அதன் குமிண் சிரிப்பும்,கொவ்வைச் செவ்வாயும், பவளம் போல் மேனியும் எவர் மனதையும் கொள்ளை கொள்ளும். எனவே சுந்தரன் எனப்பெயரிடுக’ எனச் செப்பினர் சிலர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கங்கைகொண்டான் அருகிலுள்ள பொதிகை மலையில் அகத்திய முனிவர் எழுந்தருளி வடக்கோடு தென்திசையைச் சமன் செய்தார்.அங்கிருந்தே பார்வதி–பரமேஸ்வரன் திருமணத்தைக் கண்ணாரக்கண்டு அகமகிழ்ந்தார்.மீனாட்சி உடனாய–சுந்தரராய் எழுந்தருளி காட்சி அளித்த ஊருக்கு அருகாமையில் இருப்பதால் குழந்தைக்கு "சுந்தரன்" எனப் பெயர்சூட்ட குடும்பத்துப் பெரியோர்கள் தீர்மானித்தனர். அந்தக்கால வழக்கப்படி பெரியவர்களின் வாக்கிற்கு அனைவரும் உடன்பட்டனர்.

"இந்த சுந்தரனின் வாழ்வின் தொடக்கம் சுந்தரமாக இருந்ததா ?

"இலகு மாயிரத் தோடேழ தாமாண்டுக்கின சந்திருங் கர வருடத்தில் நலங்கொள் கார்த்திகை நன்மதியினி ......நாட் சனிவாரத்தில் விடையிற் கலங்கலில் பொருனைக் கோடகநல்லூர்க் காமர்பூசுரர் செய்மா தவத்தால் பொலங்கொளும் பரம சுந்தர குருவாய்ப் புவிமிசை யவதரித் தனனே."

(ஸ்ரீசுந்தரஸ்வாமிகளின் பிரதம சீடராகிய திருநெல்வேலி திம்மராஜபுரம்ஸ்ரீமத் பிச்சு சாஸ்திரிகள் ஸ்ரீரீஸ்வாமிகளின் அவதாரம் பற்றி அருளிச் செய்தது.)

"சுந்தரத்தின் பெற்றோர்கள் மட்டுமின்றி உற்றார் உறவினரும், ஊர்மக்களும் இரு குழந்தைகளின் விளையாட்டிலும், சிரிப்பிலும், பார்வையின் லாவண்யத்திலும், சரீர ஒளியிலும் மனத்தைப் பறிகொடுத்தனர்.

குலமரபிற்கு ஏற்றபடி, நெறிமுறை தவறாமல் சாத்திரத்தில் கூறப்பட்டுள்ள அனைத்துச் சடங்குகளையும் வெகு சிறப்பாகச் செய்து மகிழ்ந்தனர்.

இந்த சடங்குகளை வேதங்களைக் கற்றிருந்த வேத விற்பன்னர்கள் செய்துவைத்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ராமசுப்பன் என்ற குப்பாணி சிவமும்,சுந்தரமும் நாளொரு மேனியும்,பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தனர்; பெற்றோர் மகிழ்ந்தனர்.

1833,விஜய வருடம் பிறந்தது;சித்திரை முடிந்து வைகாசி வந்தது.

குப்பாணி சிவனுக்கு வயது சுமார் மூன்று;சுந்தரனுக்கு ஒருவயது ஆறு மாதம்.

இவர்கள் வாழ்வில் இடி இறங்கியது.

என்ன நடக்கிறது என்று புரிந்து கொள்ளமுடியாத விளையாட்டுப் பருவம்.

முதலில் இவர்களின் தாயார் காமாக்ஷி அம்மாளும் ஒருமாத இடைவெளியில் தந்தை யக்னேஸ்வரசிவனும் ஒருவர்பின் ஒருவராக பரகதி அடைந்தனர்.

குழந்தைகள் நிராதரவாய் ஆயினர். அந்தக் காலத்தில் அவர்அவர் குடும்ப காலட்சேபம் நடத்துவதே மிகக் கடினமானதாக இருந்தது. குழந்தைகளின் பெற்றோருக்கு எந்தவித சொத்துபத்துக் களோ கையில் ரொக்கமோ கிடையாது.

உறவினர்கள் நிலையும் அவ்வாறே. சோற்றுக்கும், தண்ணீருக்கும் அல்லல்படுபவர்களே.

அநாதரவான குழந்தைகளை எவர் அழைத்துச் செல்வது, வளர்ப்பது, படிக்க வைப்பது, உணவிடுவது என்ற பிரச்சினைகள் எழுந்தன.

யக்னேஸ்வரசிவனின் பதின்மூன்று நாள் காரியங்கள் முடிந்தவுடன் உறவினர்கள் ஒன்றுகூடி அமர்ந்து குழந்தைகளை யார் அழைத்துச் சென்று வளர்ப்பது என்பது பற்றி விவாதித்தனர்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தை முன்வைத்துத் தத்தமது இயலாமையைத் தெரிவித்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அக்கூட்டத்தில் பலர், குழந்தைகளின் தாய்மாமனும்;காமாக்ஷி அம்மாளின் தமையனும் ஆகிய பத்தமடை ராம வேங்கடசுப்பு ஐயர் அவர்களே மிக நெருங்கிய பந்தம்,அவரே குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை ஏற்கவேண்டும் எனக் கூறினர்.

அவரும் வசதி படைத்தவரல்லர். ஆகவே தயங்கினார். ஆனால் மற்றவர்கள் வலியுறுத்தினர்.

நடப்பவற்றைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ராமவேங்கடசுப்பையரின் மனைவி விடுவிடென புயல்போல் அக்கூட்டத்தில் நுழைந்து படபடவெனப் பேசலுற்றார்.

அந்த அம்மையார் என்ன சொன்னார்?

"தெண்டிசை வளாகத்து அறம்உரை நாவார்
தில்லைவாழ் அந்தணர் முதலாம்
தொண்டரோடு அறுபான்மூவர்களுடனே
சுந்தரஸ்வாமியைச் சேர்த்து
எண்தகுமாம் அறுபானால் அவர்இயம்பல்
ஏற்றமுள்ளோர் கடன்அவனே
வண்தமிழ் அதனால் உற்பத்திப் பிரகரண
முதல் வழுத்தினன் மகிழ்ந்தே!"

திருநெல்வேலி சிவபக்தசிரோமணியாகிய புராணிகர் திரு. சண்முகம் பிள்ளை அவர்கள் பாடிய விருத்தம்.

கற்றறிந்த ஆடவர்கள் நிறைந்த இந்த சபையில் அறிவிலி என்பேச்சு எடுபடுமோ? தெரியாது. ஆனால் சிறிது நான் சொல்தை சற்று செவிமடுத்துக் கேளுங்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இந்தக் குழந்தைகளைப் பாருங்கள். தங்களுக்கு ஏற்பட்ட இழப்பு எத்தகையது என்பதைக்கூடப் புரிந்து கொள்ள முடியாத வயது.

வீதிக் குழந்தைகளுடன் சிரித்து விளையாடிக் கொண்டிருக்கின்றன. அவர்களின் முகத்தில் தெரியும் களங்கமற்ற சிரிப்பைப் பாருங்கள்.

இந்த அறியாத வயதிலேயே இறைவன் அவர்கள் தலைகளில் பெரும் சுமையைச் சுமத்திவிட்டான்.

நாம் பணம், காசில், வசதிகளில் வறியவர்களாக இருக்கலாம்; ஆனால் இரக்க சிந்தனையில், மற்றவர்களின் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்வதில் வறியவர்களாக இருக்கக் கூடாது.

இந்தக் குழந்தைகள் இனிமேல் என்குழந்தைகள். எனக்கு இனி மகப்பேறு வேண்டாம் என்பதை ஏற்றுக்கொண்டு இக்குழந்தைகளை என் குழந்தைகளாக ஏற்றுக் கொண்டேன். (கணவர் வேங்கடசுப்பையரை நோக்கி) இன்னும் ஏன் தயக்கம்?

வசுதேவருக்கும், தேவகிக்கும் கிடைக்காத பேறு நந்தகோபனுக்கும், யசோதைக்கும் கிடைத்தது. இவை உங்கள் தங்கையின் குழந்தைகள் அல்ல, என் குழந்தைகள் – நம் குழந்தைகள்' என்று கணீரென்ற–உறுதியான குரலில் கூறினார்.

(தாயே! மீனாக்ஷி அம்மையே! உங்கள் பெயர் சரிதத்தில் அதிகம் இடம்பெறவில்லை. ஆயினும் நீங்கள் மட்டும் இவ்வளவு தீர்க்கமாகப் பேசி இருக்காவிட்டால் ஒரு மகான் இந்தப் பூவுலகிற்குக் கிடைத்திருக்க மாட்டார். முகம் அறியாத ஒப்பற்ற பெண்மையே! உன் பாதகமலங்களில் எங்கள் பணிவான வணக்கங்கள்.)

குப்பாணி சிவம், சுந்தரம் ஆகிய குழந்தைகளின் தாய், தந்தையரின் மாதக்கிரியைகளும், ஆண்டுக் கிரியைகளும் தாமே



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



முன்னின்று நடத்திவிட்டு, வேங்கட சுப்பையர் குழந்தைகளை பத்தமடை அழைத்துச் செல்வது என அனைவரும் ஒருமனதாக முடிவு செய்தனர்.

ஒரு வருடம் முடிந்தது;"புது வருடம் பிறந்தது.

சுந்தரனின் சரிதத்தில் முதல் பாகம் முடிந்து இரண்டாம் பாகம் பத்தமடையில் தொடங்கியது.

சுந்தர சரிதத்தின் இரண்டாம் பாகம் எப்படி இருந்தது ?

"பொன்னாடு செயும் தவத்தால்
பொற்புறு கயிலையில் அமர்ந்தாய்
தென்னாடு செயும் தவத்தாற்
சிறப்புற ஈண்டு அவதரித்தாய்
முன்னாடும் செயல் அனைத்தும் முடித்து அரிமளம் தனில்
என்னாடும் தொழ அமர்ந்தாய்
சுந்தர தேசிக மணியே!"

ஸ்ரீசுந்தரஸ்வாமிகளின் மாணாக்கரில் ஒருவரும், வையை மஹாவைத்திய நாத ஐயர் அவர்களின் மூத்த சகோதரருமான ராமஸ்வாமிஐயர் அவர்கள் இயற்றியது.

(எளிதில் விளங்குமாறு பதம் பிரிக்கப்பட்டது.)

ஐய வருடம், வைகாசி மாதம். அதாவது ஆங்கில வருடம் 1834 ஜுன் மாதம். யக்னேஸ்வர ஐயர், காமாக்ஷி அம்மாள் ஆகியோரின் ஓராண்டுத் திதிகள் நிறைவு பெற்றன.

குப்பாணிசிவம், சுந்தரன் ஆகியோரை அழைத்துக் கொண்டு கங்கைகொண்டான் ஊரிலிருந்து பத்தமடை வந்தனர் தாய்மாமனாகிய வேங்கடசுப்பு ஐயரும், மாமி மீனாக்ஷி அம்மையாரும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அப்பொழுது குப்பாணிசிவனின் வயது நான்கு; சுந்தரனின் வயது இரண்டரை.

தாம் பெற்ற குழந்தைகள் போன்றே அன்பு பாராட்டி குழந்தைகளை வளர்த்தனர்.

அவர்களை அரவணைத்துப் பேணி தக்கமுறையில் பாதுகாத்து வந்தனர்.

வீட்டில் வறுமை இருந்ததே அன்றி அவர்களின் உள்ளங்கள் செழுமையாக இருந்தன.

குழந்தைகளை வீட்டின் சிரமங்கள் தெரியாமல் வளர்த்தனர்.

மீனாக்ஷி அம்மாளுக்கு வீட்டில் எத்தனை வேலைகள் இருந்தாலும், பலவித சிரமங்கள் இருந்தாலும் அவற்றை வெளியில் காட்டிக் கொள்ளாது குழந்தைகள் மீது பாசத்தைப் பொழிந்தார்.

தங்களது சுகங்கள் அனைத்தையும் அறவே உதறித் தள்ளிவிட்டு இரு குழந்தைகளையும் இரண்டு கண்கள் போல் கவனமுடன் வளர்த்தனர்.

வேளாவேளைக்கு குழந்தைகளின் குறிப்பறிந்து உணவு கொடுத்தனர்.

குழந்தைகளுக்கு எந்த நோவும், ஊறும் நேராதபடி பார்த்துக் கொண்டனர்.

பெற்ற மக்கள் போல் இம்மக்கள் மேல் அக்கறை செலுத்தினர்.

குழந்தைகளும் யாதொரு கவலையும் தெரியாது சிரித்து விளையாடி மகிழ்ந்தனர்.

வேங்கடசுப்பையர் நித்தியப்படி பூஜை செய்பவர்.

சாளக்ராமம், விநாயகர், தவழும் கிருஷ்ணர், நடராஜப் பெருமான் ஆகிய மூர்த்தங்களுக்கு அபிஷேகம் செய்வார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உருத்ரம், சமகம், புருஷஸூக்தம் ஆகிய வேதமந்திரங்களைச் சொல்லுவார்.

குப்பாணிசிவமும்,சுந்தரனும் பூஜையில் கலந்து கொண்டு மாமா சொல்லும் மந்திரங்களைக் கூர்ந்து கேட்பர்.

'விளையும் பயிர் முளையிலே' என்பது போல் சுந்தரனின் குழந்தைப் பருவ நிகழ்வுகள் அமைந்தன.

அவை யாவை ?

"அமுதமய வாரிதி
பேரணை கடந்தால்எனத் திருவாய்க்
குமுதம்மலர்ந்து ஒருநாளும்
குறையாத வன்மனத்தார்
தமதுஉடலும் குழையும்வகை
தத்துவமெய்ப் பொருள் உரைக்கும்
ஏந்துபுகழ் சுந்தர தேசிகமணிக்கு" இணை எவரே.

(ஸ்ரீராமஸ்வாமி ஐயர் அவர்கள் இயற்றிய தோத்திரப் பாமாலை.)

சுந்தர இளங்குழவி இளம்பிராயத்தில் விளையாடிய விளையாட்டுக்கள் எல்லாம் எண்ணி மகிழத்தக்கவை.

சிறுவன் செய்யும் விளையாட்டு பூஜை வேத புராணங் களையும், சைவ ஆகமங்களையும், ஸ்மிருதிகளையும் நல்லாசிரியர் மூலம் கற்றுத் தேர்ந்த தலைமாணாக்கன் புரியும் சிவபூஜை போலவே இருந்தது.

விநாயகர், சிவன், தேவி இவர்களுக்குச் செய்யும் விளையாட்டு பூஜைகளில் சில நாமாவளிகளைக் கூறுவான். அவன் கூறும் மந்திரங்களைக் கேட்டு மாமா, மாமி பூரிப்படைவர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வீதிவழியே செல்வோர் எல்லாரும் சுந்தரன் செய்யும் பூஜையைக் கண்டு மயங்கி நிற்பர்.

அன்று மாமன் பூஜை செய்ய ஆரம்பித்த போது நான்கு வயது, நான்கு மாதமேயான சுந்தரன் கேட்டான் : 'மாமா உங்களோடு நானும் மந்திரம் சொல்லவா ?'

மாமாவோ குழந்தை வேடிக்கையாகக் கேட்கிறான் என நினைத்து 'சரி! சொல்லு' என்றார்.

மாமா பூஜையை ஆரம்பித்து உருத்திரம் சொல்லி அபிஷேகத்தை ஆரம்பித்தார். சுந்தரமும் வார்த்தை பிசகாமல் கணீரென்ற குரலில் உருத்திரம் கூறினான்.

வேங்கட சுப்பையர் அவர்களுக்கு ஆச்சரியம். தாம் கூறிவதைப் பின்பற்றி சொல்லுகிறான் என நினைத்தார். எனவே மந்திரத்தை வெளியில் கேட்காதவாறு மனதிற்குள் உச்சாடனம் செய்தார்.

இந்த நிலையில் எவரும் அறியா வண்ணம் வெள்ளைக் கலையுடுத்தி, வெள்ளை அணிகள் அணிந்து, வெள்ளைக் கமலத்தினில் அமர்ந்திருக்கும் சரஸ்வதி சுந்தரனின் நாவினிலே வந்து அமர்ந்தாள்.

பிறகு என்ன ?

சிறுவனோ தயக்கம் இல்லாமல், தெளிவாக உருத்திரம் உரைக்கத் தொடங்கினான்.

பின் புருஷசூக்தம், சமகம், நாமாவளிகள், மந்திர புஷ்பம் என்று பூஜைக்குரிய அனைத்து மந்திரங்களும் அவன் நாவினிலிருந்து வந்து விழுந்தன.

மாமாவும், மாமியும் அசந்து போய் நின்றார்கள்.

ஆச்சரியம் அடைந்தார்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



குருவினிடம் முறையாக இவற்றைக் கற்றுக் கொள்ளவே ஒரு சீடனுக்கு மூன்று, நான்கு வருடங்கள் ஆகும்.

ஆனால் நான்கு வயது நிரம்பிய பாலகன் ஏற்ற இறக்கங்களுடன், உச்சரிப்பு மிகத்தெளிவாக, தொய்வில்லாமல், கணீரென்று சொல்லுகிறானே என வியந்தனர்.

இவன் இவற்றைக் கற்காமல் கற்றது

எப்படி என்று ஆச்சரியமும், இவ்வாறு நிகழுமா ? என்று சிறிது அச்சமும் கொண்டனர்.

இது சுந்தரனில் அவர்கள் கண்டு அதிசயத்ததில் ஒரு துளியே!

இந்தக் கருணைக்கடல் பலப்பல அதிசயங்களைத் தன்னகத்தேக் கொண்டது என்பதை அவர்கள் அப்பொழுது அறிந்திருக்கவில்லை.

அப்படி சுந்தரன் வாழ்வில் நிகழ்ந்த அதிசயங்கள் என்னென்ன ?

"ஐயாறு முதற் பலவாம்
ஆலயங்கட் குரியபணி
செய்துஆளும் அதிசயிப்ப
செய்துதிரு விழாவணியும்
ஐய்யாறு உய்ந்திட நீ
யுஞற்றினை ஈதுஉரைப்பதால்
துய்யாதென் அரிமளம்வாழ்"சுந்தரதேசிக மணியே!"

(ஸ்ரீசுந்தரஸ்வாமிகளின் மாணாக்கர் மஹாவைத்தியநாத ஐயர் அவர்களின் மூத்த சகோதரர் ஸ்ரீராமஸ்வாமி ஐயர் அவர்கள் இயற்றியது.)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



குழந்தைகள் குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி, இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும், நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும் செய்யும் சேட்டைகளில் மாமனும், மாமியும் மனம் பறிகொடுத்தனர்; மகிழ்ந்தனர்.

மாமன் செய்யும் தினசரி பூசைகளை சிறுவர்கள் கூர்ந்து கவனித்து வந்தனர்; மந்திரங்களைக் காதால் கேட்டு மனதில் பதியவைத்துக் கொண்டனர்.

இரண்டரை வயதுக் குழந்தையான சுந்தரனை பூசை நடக்கும் இடத்தின் அருகில் சிறிய பாயில் படுக்க வைப்பார்கள்.

வேங்கடசுப்பையர் சாளிக்கிராமங்களுக்கு அபிஷேகம் செய்யும் பொழுது எழுந்து உட்கார்ந்து விடுவான்.மாமன் செய்யும் அபிஷேகம், நிவேதனம், தீப ஆராதனை ஆகியவற்றை உன்னிப்பாகப் பார்ப்பான்.

மாமன் மாலையில் அருகிலுள்ள சிவன் ஆலயத்திற்குச் செல்லுவார். அவருடன் கோயிலுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான் சுந்தரன்.

ஊரிலுள்ள மற்ற குழந்தைகள் வீதியில் விளையாட்டுகளில் ஈடுபட்டிருப்பார்கள். சுந்தரனோ கொலுவில் வைக்கும் பிள்ளையார், தவழும் கிருஷ்ணர் பொம்மைகளை வைத்து மாமா செய்வதுபோல் அபிஷேகம் செய்வான்.

அலங்காரம் செய்வான். பூக்களைக் கொய்துவந்து அர்ச்சிப்பான். மாமியிடம் கேட்டு கற்கண்டு அல்லது திராக்ஷை வாங்கி வருவான்.நிவேதனம் செய்வான்.

சுந்தரனுக்கு மூன்று வயதாகியது. பேச்சு நன்றாக வந்து விட்டது.

மாமனும், மாமியும் அவன் மழலைப் பேச்சில் மயங்கினர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



குப்பாணி சிவத்திற்கு ஐந்தரை வயதும், சுந்தரனிற்கு நான்கு வயதும் ஆகியது.

வருடம் 1835.

சுந்தரன் செய்யும் விளையாட்டு பூசையில் ‘சுமுகாய நம:,பவாய தேவாய நம:,பவஸ்ய தேவஸ்யபத்தினி நம:’ என்ற மந்திரங்கள் வந்து விழுந்தன.

வேங்கட சுப்பையரும், மீனாக்ஷி அம்மாவும் சிறுவன் செய்யும் பூஜையைக் கண்டு அகமகிழ்ந்தனர்.

சுந்தரனுக்கு நான்கு வயது நான்கு மாதங்கள். வழக்கம்போல் சிறுவன் செய்யும் விளையாட்டு பூஜையைக் கண்டு களித்துக் கொண்டிருந்தனர். சில நாமாவளிகளைக் கூறும் சுந்தரன் அன்று கூறிய வழிபாட்டுத் துதிகளைக் கேட்டு அதிசயித்தனர்; மகிழ்ந்தனர்;சிறிது அச்சமும் கொண்டனர். அப்படி அன்றைய சுந்தரனின் வழிபாட்டுத் துதிகளில் என்ன சிறப்பு இருந்தது ?

“அந்தநாள் முதல் உன்சீரடி
பிரியாது இனிது இருந்தும்
வந்து சேர்வார் இனத்துடன்வாழ்
மண்டுகம் போலிருந்தேன்
எந்தநாள் உன் அருளுக்கு
இலக்காவேன் ? விலக்காமல்
எந்தன் வேதனை தவிர்த்து ஆள்“சுந்தரதேசிகாமணியே!”

‘சுந்தரம்! நீ என்னுடன் சேர்ந்து உருத்திரம் சொல்ல விரும்புகிறாய். முறைப்படி பல ஆண்டுகள் வேத அத்யயனம் செய்தவர்களே சிலசமயங்களில் தவறாகக் கூறிவிடுகின்றனர்.நீ குழந்தை. உனக்குப் பூணூல் போட்டு வேத அப்பியாசம் செய்த



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிறகு சொல்லலாம் தவறாக உச்சரித்தால் ஸ்வாமி கோபித்துக் கொள்வார்; கண்ணைக் குத்திவிடுவார்.' "என்று மாமா கூறினார்.

'குழந்தை வேறொன்றும் கேட்கவில்லையே! அபிஷேக மந்திரம் தானே சொல்கிறேன் என்கிறான். குழந்தையைப்போய் ஸ்வாமி கோவிச்சுக்கும், கண்ணைக் குத்தும்னு ஏன் பயமுறுத்துகிறீர்கள். சுந்தரம்! நீயும் மாமா கூடவே மந்திரத்தைச் சொல்' என்று மாமி பரிந்துரைத்தார். மாமனும் அரை மனதுடன் ஒப்புக்கொண்டார். இங்கும் மாமியே சுந்தரனுக்கு ஆதரவாய்ப் பேசினார்.

இந்த தர்க்கவாதங்களுக்குப் பின்னரே சுந்தரன் மந்திரங்களைக் சொல்ல ஆரம்பித்தான்.

அழுத்தமாக, அக்ஷரம் பிசகாமல்,வாக்கு சுத்தத்துடன் சுந்தரம் மந்திரங்களைச் சொல்லி முடித்ததும், மகிழ்ச்சியில் அவனைக் கட்டிக் கொண்டு உச்சிமோந்தனர் தம்பதிகள். 'முன்பிறவியின் தவப்பயன்தான் இவனை இவ்வாறு சொல்லவைக்கிறது' எனத் தெளிந்து திருஷ்டி சுற்றிப் போட்டனர்.

'எப்போதும் இறைவனின் செந்தழல் கழல்கள் அன்றிப் பிறிதொன்றை சிந்தையிலும் நினையேன்.' என்று உறுதியுடன் இருந்தான் சுந்தரன்.

அண்ணன் குப்பாணிசிவனின் பக்தி வேறுவிதமானது. மாமாவின் பூஜைக்குக் கூடவே இருந்து உதவிபுரிவான்.

மாமா குளித்தவுடன் அவனும் குளித்து விடுவான். ஈரத்துண்டை இடையில் கட்டிக்கொண்டு பூஜைப் பாத்திரங்களை எடுத்து வைப்பான். 'பூஜை மண்டபம் வெள்ளியில் இருந்தால் நன்றாக இருக்குமே, ஸ்வாமியை வைக்கும்பீடம் தங்கத்தில் இருந்தால் நன்றாக ஒளிவீசுமே'என நினைப்பான்.

புழுவிழுந்த வில்வங்களையும், கருகிய புஷ்பங்களையும் விலக்கி விடுவான். நல்ல புஷ்பங்களை மட்டும் பூஜைக்குத் தனியாக எடுத்து வைப்பான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஊரில் உள்ள வயோதிகர்களுக்கு கன்னடியன் வாய்க்காலில் இருந்து குடங்களில் தண்ணீர் எடுத்து வந்து உதவுவான்; மழை,வெயில் பாராமல் கடைகளுக்குச் சென்று சாமான்கள் வாங்கி வருவான்; பிறர் துன்பப்படக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தான்.

இவ்வாறு இருவரும் ஊரினரால் மிக விரும்பப்படும் குழந்தைகளாய் வளர்ந்து வந்தனர்.

ஒருநாள்,

வீட்டின் திண்ணையில் அமர்ந்து கொண்டு இருக்கும் பொழுது வீதியில் ஒருசிறு நிகழ்வு நடந்தது.

நிகழ்வு மிகச் சாதாரணமானதுதான். ஆனால் அந்த நிகழ்ச்சிக்கு சுந்தரன் பெற்ற விளக்கம், அதனால் அவனுள் ஏற்படுத்திய மாற்றம் மகத்தானது.

அது என்ன நிகழ்ச்சி ?

❀❀❀❀❀

"எல்லாமும் தானாகி
யாவையும் தன்னிடைக் காணும்
வல்லார்கள் பலர்இருக்க
வலிந்தென்னை ஆட்கொண்டாய்
கல்லாத கடையன் எனைக்
காத்தலே கருணை எனும்
சொல்லாள நினைந்தனையோ "சுந்தர தேசிக மணியே!"

ஒருநாள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டு வீதியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் சுந்தரன். கும்பலாக நின்றுகொண்டு ஒருசில அந்தணர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அயலூரிலிருந்து ஒருவன் ஊருக்குள் நுழைந்தான். வந்தவன் கூட்டமாய்ப் பேசிக் கொண்டிருந்தவர்களுள் ஒரு பெரியவரின் பாதம்தொட்டுக் கீழே விழுந்து வணங்கினான்.

நடுத்தெரு என்றும் பாராமல் வந்த சிறுவன் பெரியவரை வணங்கியது வியப்பை அளித்தது சுந்தரனுக்கு.

அக்கூட்டத்தில் இருந்த ஒருவர் விழுந்து வணங்கி எழுந்த அயலூர்ப் பையனிடம் கேட்டார் : 'நடுவீதி என்றும் பாராமல் கீழே விழுந்து வணங்குகின்றாயே,இது முறையா ?'

அந்தச் சிறுவன் கூறிய பதில் சுந்தரனின் மனதில் பசுமரத்து ஆணிபோல் பதிந்து விட்டது.

அப்படி என்ன அச்சிறுவன் கூறினான் ?

'நாடாளும் அரசன், கற்பித்த ஆசான், பெற்றெடுத்த தாய்,நான் பிறக்கக் காரணமாகிய தந்தை, என் குடிப் பிறந்த மூத்தவர்கள், இவர்கள் தெய்வத்திற்கு இணையானவர்கள். அவர்களைக் கண்டவிடத்துப் பாதம் தொட்டு வணங்க வேண்டும் என்பது நல்லவர்கள் யாவரும் கண்ட நெறி.

அவ்வாறு வணங்குவதால் ஈசன் சிவபெருமானின் அருளிற்கு உரியவர்கள் ஆவோம்'என்றான் அயலூர் சிறுவன்.

இது சுந்தரனின் மனதில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியது.

விரைந்து வீட்டினுள் சென்றான்.

தாய், தந்தையருக்கு நிகரான மாமி, மாமாவையும் மூத்த சகோதரன் குப்பாணிசிவன் என்கிற ராமசுப்புவையும் கிழக்கு நோக்கி நிற்கச் சொன்னான்.

அவர்களின் பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினான்.'ஏன் இவ்வாறு வணங்கினாய் ? இப்போது நமஸ்காரத்திற்கு என்ன தேவை ?' என்று அவர்கள் கேட்டதற்கு "சுந்தரன் கூறிய பதில் என்ன ?"



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"யான்எனது என்றெழும் மாயை எனும் பேயால் அலைப்புண்டு"தான் எனும் ஓர் சொற் பொருளின்,

தகையுணராத் தமியேனை
மான தனான் மான்பிடித்தான்
மான வலிந்தாட் கொண்டு
சோனை அருள்மழை பெய்யும்
சுந்தர தேசிக மணியே"

'ஏண்ணா! சுந்தரன் எவ்வளவு அழகாப் பேசறான்.பெரிய விஷயத்தை ரொம்ப சாதாரணமாச் சொல்லிட்டானே! இப்பவே பாத்தேளா! அவனோட செக்கச் சிவந்த நிறமும், முகத்துல தெரியற தேஜஸூம், சாக்ஷாத் பரமேஸ்வரனே நேர்ல வந்து நிக்கறாப்பல இருக்கு. நெத்தி நிறைய,உடம்பெல்லாம் விபூதி பூசிண்டு நிக்கறப்ப அவன் கால்ல விழுந்து நமஸ்காரம் பண்ணலாம் போலத் தோனறது.

நேத்து நம்மளை நமஸ்காரம் பண்ணினான்.என்னடா இப்ப எதுக்கு நமஸ்காரம் ?ன்னு கேட்டதுக்கு பதில் சொன்னானே! 'காலையும்,மாலையும் குழந்தைகள் தாயாரையும், தகப்பனாரையும் ஸ்வாமியை வணங்குவதுபோல் வணங்க வேண்டும். என்னோட தாயும், தகப்பனும் நீங்கள் தானே! உங்களையும், மூத்தவர்களையும் வணங்கினால் ஈஸ்வர கிருபை கிடைக்கும்; புண்ணியம் சேரும்; முகத்தில் தேஜஸ் வரும்; வாக்குப் பலிதம் உண்டாகும்; வித்தைகள் கைகூடும். இவை அனைத்திற்கும் மேலாக இறைவனின் அருள் பரிபூரணமாகக் கிட்டும். இனிமேல் நாள்தோறும் உங்கள் மூவரையும் நமஸ்கரிப்பேன். நல்ல முறையில் ஆசிர்வாதம் பண்ணுங்கோ' என்று சொன்னானே. அப்படியே மெய்சிலிர்த்துப் போச்சு; கண்கள் குளமாச்சு. இந்தக் குழந்தை நம்மளை நமஸ்கரிக்க நாம என்ன பாக்கியம் செய்தோமோ ?ன்னு தோன்றது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இந்த சிறு வயசுல ரொம்ப புத்திசாலியாக இருக்கிறான். ஈஸ்வரன் சகல சம்பத்தையும் இக்குழந்தைக்குக் கொடுத்துக் காப்பாற்ற வேண்டும் என்று திரிகரண சுத்தியாய் (மனம், மொழி, மெய்) பகவானைப் பிரார்த்திக்கிறேன்'என மாமி மீனாக்ஷி அம்மாள் மூச்சு விடாமல் பேசினார்.

சுந்தரனுக்கு வயது நான்கு வருடமும் பத்து மாதங்களும் ஆயின. (கர்ப்பகால வயதாகிய பத்து மாதங்களையும் சேர்த்தால் வயது ஐந்து வருடம் எட்டு மாதங்கள் ஆகின.)

எனவே சுந்தரனிற்கு அட்சராப்பியாசம் செய்து வைக்க மாமா வேங்கடசுப்பையரும், மாமி மீனாக்ஷி அம்மாளும் தீர்மானித்தனர்.

கற்பிக்கும் ஆசிரியனுக்கு உதவியாய் இருந்தும், மிகுந்து உள்ள பொருளைக் கொடுத்தும், சினத்திற்கு இடம் கொடாது பணிவுடன் கல்விகற்றல் வேண்டும்.

இத்தகைய குணாதிசயங்கள் சுந்தரனிடம் இயல்பாகவே அமைந்திருந்தன.

துர்முகி வருடம், புரட்டாசி மாதம் விஜயதசமி அன்று தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் மொழிகளைக் கற்பிக்கும் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்தனர்.

சுந்தரனின் பள்ளி வாழ்க்கை எப்படி இருந்தது ?

"பிறப்பதுவும் இறப்பதுவும்
பெருப்பதுவும் இளைப்பதுவும்
மறப்பதுவும் நினைப்பதுவும்
வாழ்வதும் தாழ்வதும் இன்றிப்
பெறப்படுமோர் பேறில்லாப்
பெரும்பேறு பெறவருள்வாய்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



துறப்பவர்தம் அகத்து அணியே
சுந்தர தேசிக மணியே"

சுந்தரத்தைப் பள்ளியில் சேர்ப்பதைப் பெரும் விழாவாகக் கொண்டாடினர் மாமனும்,மாமியும்.

சுந்தரனை நல்லமுறையில் அலங்கரித்தனர்.""அன்று ஊர்மக்கள் எல்லாரும் திரளாக வந்திருந்தனர்.

முன்அறிவிப்பின்படி பல உறவினர்களும் வெளியூர்களில் இருந்து பத்தமடை வந்திருந்தனர்.

முதலில் வீட்டில் வடமொழி என வழங்கப்படும் சமஸ்கிருத அக்ஷராப்பியாசம் செய்யப்பட்டது.

திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தமிழும்,ஆங்கிலப் பாடங்களும் ஆரம்பம் செய்யப் பட்டன.

சுந்தரனை ஒத்த மாணவர்களுக்கு காப்பரிசி, சுண்டல், வாழைப்பழம், கற்கண்டு போன்றவை வழங்கப்பட்டன.

அக்காலத்தில் தமிழ்,ஆங்கிலம் ஆகியவற்றைக் கற்பதற்குத் திண்ணைப்பள்ளிக் கூடங்களே பல ஊர்களில் இருந்தன. அரசாங்கப் பள்ளிகள் பெரிய நகரங்களில் மட்டுமே இருந்தன.

வேதநூல் வல்லோர்கள், சாஸ்திரிகள், தீக்ஷிதர்கள் ஆகியவர்களுக்கு வேங்கட சுப்பையர் இல்லத்தில் விருந்தோம்பல் சிறப்பாக நடைபெற்றது; அவர்களுக்கு தக்ஷிணைகளும் வழங்கப்பட்டன.

வேத விற்பன்னர்கள் விருந்து அருந்தி முடிந்ததும் வீட்டின் ஒரு இடத்தில் இருந்து வீட்டின் எஜமானரும அவரது சந்ததியினரும் நலமுற்று வாழ பஞ்சாதி (வாழ்த்து மந்திரங்கள்) ஓதினர். பின்னர் தாம்பூலம் பெற்றுக்கொண்டு விடைபெற்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கிராமத்தில் இயங்கிய அன்றைய திண்ணைப் பள்ளிக் கூடங்கள் அறிவுக் கருவூலமாகத் திகழ்ந்தன.

அதன் ஆசிரியரை ஊர்மக்கள் அனைவரும் பெருமதிப்புடன் நடத்தினர்.அவருக்கு ஊதியமாக விசேட நாட்களில் நெல், அரிசி, காய்கறிகள், கனிகள் ஆகியவற்றை வழங்கினர்.

பத்தமடை திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர் மிகுந்த அறிவாளி; திறமை ஆனவர்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்ற மிகச் சிலரில் ஒருவர்.

உலக அறிவு நிரம்பப் பெற்றவர். உலக நடப்புகளை, விஷயங்களை அறிந்தவர்.

விஷய ஞானம் அளிக்கும் ஏட்டுக் கல்வியையும், ஆன்ம ஞானம் அளிக்கும் பக்தி இணைந்த இயற்கைக் கல்வியையும் போதிக்கும் ஆற்றல் மிக்கவர்.

இத்தனை அறிவை எப்படித் தன் சிறியதலையில் அடைத்து வைத்துக்கொண்டு உள்ளார் என ஊரார் வியந்தனர்.

கல்வியை மாசறக் கற்றவர்; சென்ற இடங்களில் எல்லாம் சிறப்புப் பெற்றவர்; ஆதலால் மக்களால் மதிக்கப்பட்டவர்.

அவருக்கு மாணவர்கள் செலுத்தும் பதில் சன்மானம் மாதம் ஒருபடி நெல்லும்,ஒரு பணமும்தான். (இன்றைய மதிப்பில் சுமார் 12பைசா.)

பண்பையும்,ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் வளர்க்கும் இடமாக அன்றைய திண்ணைப்பள்ளிகள் விளங்கின.

மாணாக்கர்களிடம் கடுமையாகவும், அதே சமயம் அவர்கள் வளர்ச்சியில் அக்கறை உள்ளவர்களாகவும் அன்றைய ஆசிரியர்கள் விளங்கினர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இத்தகைய ஆசிரியரின் வழிகாட்டுதலில் சுந்தரனின் பள்ளி வாழ்க்கை எவ்வாறு அமைந்தது ?

"தேகந்தான் மனமுதற்றான்
ஜெகம்தான் என்று உகந்திடச்செய்
மோகம்தான் பவக்கடலின்
மூழ்குவிக்கும் ஆழ்குமெனக்
கேகந்தான் பிரமமல
தில்லைபிறி தெனக்களிக்குஞ்
சோகம் பாவனை யருள்வாய்
சுந்தர தேசிக மணியே!"

சுந்தரனின் திண்ணைப் பள்ளிக்கூட அனுபவங்கள் இனிமையானவை.

'விளையும் பயிர் முளையிலே' என்பதற்குக் கட்டியம் கூறுவதுபோல் அமைந்திருந்தது. அந்தக் காலத்தில் ஆசியர்களுக்கு சமுதாயத்தில் பெரும் மதிப்பு இருந்தது. அதுவும் ஆங்கிலம், வடமொழி அறிந்த ஆசிரியர் என்றால் தனி மரியாதைதான்.

பத்தமடையில் கீழத்தெருவில் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்தி வந்த சங்கர ஐயர் என்று அழைக்கப்பட்ட சுப்பையா சாஸ்திரி அவர்கள் ஊர்மக்களால் பெரிதும் மதிக்கப் பட்டார். அவருடைய திண்ணைப்பள்ளியில் தங்கள் குழந்தைகள் பயிலுவதைப் பெற்றோர்கள் பெருமையாக நினைத்தனர்.

சுப்பையா சாஸ்திரியாரை ஐயரென்றும்,சாமி என்றும் விளித்துப் போற்றினர். ஐம்புலன்களையும் அடக்கி, அறிவை மேலான அருளாகிய வெளியுள் அடக்கி, இறைவனின் அருள் எனும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சூரிய ஒளியில் தமது அறிவு எனும் சந்திர ஒளி அடங்குமாறு கலந்து நின்ற ஞானி அவர். அக்காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் இரண்டு மணிநேரமே நடக்கும்.

கல்வியில் சிறந்து விளங்கும் மாணவன் ஒருவனை சட்டாம்பிள்ளையாக ஆசிரியர் நியமிப்பார்.

அந்த அந்த வகுப்புக்குரிய பாடங்களை ஆசிரியர் நடத்துவார். சட்டாம்பிள்ளை அந்தப் பாடங்களைக் கூர்மையாக கவனித்துக் கொண்டும், கிரகித்துக் கொண்டும் வரவேண்டும்.

மறுநாள் அந்தப் பாடங்களை மற்ற மாணவர்க்கு சட்டாம்பிள்ளை நடத்துவான்.

ஒவ்வொரு நாளும் ஆசிரியர் நடத்தும் பாடங்களை ஒருமுகப்பட்ட மனதுடன் (ஏகசந்தக்ரஹி) சுந்தரன் கவனிப்பான். எல்லாப் பாடங்களையும் ஒருமுறை கேட்டால் போதும். அனைத்தும் மூளையில் பதிந்துவிடும். பாட சம்பந்தமாய் ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்குத் தட்டுத்தடங்கலின்றி பதில் கூறுவான். அவனின் அதிஅற்புத– குசாக்ர–புத்தியைக் கண்டு ஆசிரியர் மகிழ்ந்தார். அவனது அசாதரண புத்திக் கூர்மையைக் கண்டு ஆசிரியர் அதிசயித்தார்; அவனை வகுப்பின் சட்டாம்பிள்ளை ஆக்கினார்.

உடன் படித்த மாணவர்களும் சுந்தரனின் மதிநுட்பத்தைக் கண்டு மகிழ்ந்தனர்.ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியவற்றை இவனிடமே கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

சுந்தரனையே வகுப்பு எடுக்கச்சொல்லி, அவன் பாடம் நடத்தும் நேர்த்தியைக் கண்டு சுப்பையா சாஸ்திரிகள் மிக்க மகிழ்ச்சி கொண்டார்.

சுந்தரன் மற்ற மாணவர்களுக்கு எவ்வாறு வகுப்பு எடுத்தான் ? தேர்வுகளில் எப்படித் தேறினான் ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"மாடு என்றும் கன்றுஎன்றும்
மகவென்றும் மனைஎன்றும்
நாடுஎன்றும் நகர்என்றும்
நான்என்றும் நீஎன்றும்
ஓடுஎன்றும் பொன்என்றும்
உழிதரேல் எமதுபதம்
சூடுஎன்றும் சூட்டுவித்தாய்
சுந்தர தேசிக மணியே!"

சட்டாம்பிள்ளை சுந்தரம் தன்னோடு படிக்கும் மாணவர்களிடம் மிகவும் அன்பாகப் பழகினான்.

எவர்எவருக்கு என்னென்ன பாடங்களில் ஐயப்பாடு என்பதை நன்றாகத் தெரிந்து கொள்வான். அந்த மாணவர்களை முன்னதாகப் பள்ளிக்கு வரச்சொல்லுவான். ஆசிரியர் வரும் முன்பே அவர்களுக்குப் பாடங்கள் எடுப்பான். பசுமரத்து ஆணிபோல் மனதில் பாடங்களை ஊன்றும்படி செய்துவிடுவான்.

அந்த மாணவர்களையும் படிப்பில் சிறந்தவர்கள் ஆக்கிவிடுவான்.

அக்காலத்தில் அரசுப் பள்ளிகளில் ஆண்டுக்கு ஒருமுறை தேர்வு வைப்பார்கள். அதில் தேர்ச்சி பெற்ற மாணவர்களே மேல் வகுப்புகளுக்குச் செல்வார்கள்.

அபூர்வமாக ஒருசில அதீத புத்திசாலி மாணவர்களை ,தலைமை ஆசிரியர் இனம் கண்டு கொண்டு அவர்கள் ஒருவகுப்பு கூடுதலாகப் பெறவைப்பார்.

ஆனால் திண்ணைப்பள்ளிக்கூட முறைகள் அவ்வாறன்று.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாணவர்களைச் சோதிப்பார்கள். ஒரு வருட பாடதிட்டங்களை மூன்று



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மாதங்களிலேயே போதித்து விடுவார்கள். ஒரு மாணவன் ஒரு வருடத்திற்கான பாடதிட்டங்களை ஐயம்திரிபற அறிந்திருப்பானாகில் மட்டுமே அவனை அதே ஆண்டில் அடுத்த வகுப்பிற்கு உயர்த்துவர்.

பல மாணவர்கள் ஒரு ஆண்டிற்கு ஒருமுறை மட்டுமே மேல்வகுப்பிற்குச் செல்வர். ஆனால் சுந்தரமோ ஒவ்வொரு காலாண்டிலும் அதற்கடுத்த வகுப்புப் பாடங்களில் சிறப்பாகத் தேறி ,வருடத்திற்கு நான்கு வகுப்புகள் தேறி முன்னேறி விடுவான்.

சுந்தரம் பள்ளியில் சேரும்போது நான்கு வருடம் பத்து மாதம்.

அன்றிலிருந்து ஒன்றரை ஆண்டிற்குள் –அதாவது ஆறுவயது நான்கு மாதம்–ஆகும் பொழுது பத்தாம் வகுப்பிற்குரிய பாட அளவுகளைத் தமிழிலும்,ஆங்கிலத்திலும்,வடமொழியிலும் கற்றுத் தேர்ந்தான்.

பல ஆண்டுகள் முயன்று பயில வேண்டிய அனைத்துப் பாடங்களையும், அப்பாடங்களில் வரும் அரும்பெரும் செய்திகளையும், நுட்பமான பகுதிகளையும் மிகச்சிறிய வயதில் அறிந்து கொள்ள முடியுமா ?

மிக திட்பநுட்பமான விபரங்களை ஒன்றரை ஆண்டில் கற்றுக் கொண்டான் என்றால் உலகம் ஒப்புக் கொள்ளுமா ? மக்கள் ஏற்றுக் கொள்வார்களா ? என்ற வினாக்கள் எழாதா ?

மன்னவன் வயதில் மிக இளையவனாய் இருக்கிறான், முறையான தீர்ப்பு வழங்குவானா என்று ஐயுற்ற நரை முதுமக்கள் உவப்ப நரைமுடித்து முறைசெய்த சோழனைப் பற்றி தமிழ் இலக்கியம் போற்றிக் கூறுகிறதே !

திருஞானசம்பந்தர் மூன்று வயதிலேயே தேவாரம் பாடவில்லையா ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மிக இளவயதில் போர்க்களம் புகுந்து மார்பில் வேல் ஏந்திய வீரனைப்பற்றிப் புறநானூறு புகல்கிறதே!

ஆதிசங்கர பகவத்பாதர் ஐந்து வயதிலேயே அனைத்துக் கலைகளையும் அறிந்து கொள்ளவில்லையா?

எத்தனை புலவர்கள்– காளிதாசன் முதல் காளமேகம்வரை – ஏட்டுப் படிப்பு இல்லாமலேயே இறையருளால் கவிதைகள் புனையவில்லையா?

இதுபோலவே சுந்தரனும் இறைவனின் அருள் ஊற்றினால் வித்தைகளை யாவரும் வியக்கும்படிக் கற்றான்.

அனைத்து வித்தைகளையும் ஐயமறக் கற்றறிந்தாலும், கற்றதின் பயன் வாலறிவனின் நற்றாள் தொழுதலே ஆகும் என உணர்ந்து இறைவழிபாட்டை ஈடுபாட்டுடன் தொடர்ந்து செய்து வந்தான்.

அந்த இறைவன் அருளால் ஏழு குருமார்கள் சுந்தரனுக்கு அமைந்தனர்.

அவர்கள் யாவர்?

"மெய்ம்மாறு படுமாறு
வெவ்வேறாய்ப் பாவித்து
பொய்ம்மாயப் பெருங்கடலுள்
புகாவண்ணம் புரிந்தாய்க்குக்
கைம்மாறு காணேன்இனிக்
காயமுதன் மூன்றளித்தேன்
சும்மா நிற்பவர்க்கெளிய
சுந்தர தேசிக மணியே!"

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரன் திண்ணைப் பள்ளிக்கூடம் சென்று வந்ததும் வீட்டில் வாளா இருக்க மாட்டான்.

வடமொழி பாடத்தில் மிக்க அவாக்கொண்டு அதைக் கருத்தூன்றிப் படிப்பான்.

சுந்தரனிற்குப் பாடம் நடத்துவதில் மிக்க விருப்பம் கொண்ட சமஸ்கிருத பண்டிதரும் மிகுந்த நேரம் பாடத்தை மிக மகிழ்வுடன் கற்பிப்பார்.

நேரம் கடந்து செல்கிறதே என்ற எண்ணம் அணுவளவேனும் இல்லாமல் கற்பிப்பார்.

சுந்தரனுக்குப் பாடம் நடத்துவதில் அவருக்கு சலிப்போ, சிரமமோ ஏற்பட்டதே இல்லை.

பாடம் கற்கும்போது தன் மனோதர்மப்படி தனக்குத் தோன்றும் புதுப்புது கருத்துக்களை ஆசிரியரிடம் கற்றுக்" கொண்டான்.

சுந்தரன் திண்ணைப்பள்ளியில் படிக்கும்போது தான்மட்டும் ஒன்றரை ஆண்டில் உச்சநிலையை அடையவில்லை; தான் சிந்தித்துப் படித்த நற்பயன்களை உடன்பயின்ற மாணவர்கள் மனங்களில் பசுமரத்தாணி போல் பதிய வைத்தான்; அவர்களும் விரைந்து மேல்வகுப்புகள் செல்ல உதவினான்;அதில் மகிழ்ந்தான்.

தன் வகுப்பு நண்பர்களுக்கு மட்டுமன்றி மேல் வகுப்பு மாணவர்களுக்கும் பாடங்கள் நடத்தும் அறிவையும், ஆற்றலையும் பெற்றிருந்தான் சுந்தரன்.

மேல் வகுப்பு மாணவர்களும் எவ்விதத் தயக்கமும் இன்றி சுந்தரன் நடத்தும் வகுப்புகளைக் கவனித்துக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டினர்.

வயது ஏற ஏற சுந்தரனின் அழகும் கூடிவந்தது. முகம் லக்ஷ்மி களைகொண்டு விளங்கியது. தீர்க்கமான நாசிகளும், கருணை பொழியும் கண்களும் அனைவரையும் கவர்ந்தன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரன் சிவந்த தேகமுடையவன். இருகரங்களும் முழங்கால்கள்வரை நீண்டிருக்கும்.

அவன்வாயினின்று நல்ல மங்கலச் சொற்களே வெளிவந்தன.

விரைந்து உரையான்; பிறர் புரிந்து கொள்ளும் முன்னர் மேன்மேலும் உரையான்; பொய்யுரையான்; ஒருதலைபட்சமாகப் பேசமாட்டான்; சொல்ல வந்ததை மிகச்சில வார்த்தைகளிலேயே கேட்பவருக்குப் புரியவைப்பான்; கால நேரம் அறிந்து பேசுவான்; எவரிடம் எதைப்பேச வேண்டும் என்பதைத் தெளிந்து பேசுவான்.

அவன் சொல்லும், செயலும் அனைவரையும் பரவசப்படுத்தும்.

அனைவரிடமும் இரக்க சுபாவம் உள்ளவனாக இருந்தான்.

மனிதர்களிடம் மட்டுமன்றி மனிதர்களுக்காக உழைக்கும் மாடு,ஆடு,நாய் போன்ற ஜீவராசிகளிடமும் கருணை காட்டினான். குறிப்பாக பசுக்களைத் தெய்வத்திற்கு இணையாகப் போற்றினான்.

இத்தனை சிறப்புக்களைக் கொண்ட சுந்தரனைக்கண்டு களிப்பெய்தினர் மாமா ராமசுப்புஜயரும்,மாமி மீனாக்ஷி அம்மாளும்.

நெற்றியில் திருநீறும்,கழுத்தில் ஒற்றை உருத்திராக்கமும் அணிந்து மிகுந்த தேஜசுடன் விளங்கினான்.

இந்த நிலையில் சுந்தரன் வாழ்வின் திருப்புமுனையாக ஏழுகுருமார்கள் அமைந்தனர்.""அவர்களின் பின்புலம் என்ன ?

"ஊனந்தான் அணுகாமல்
உள்ளபடி உணர்ந்து உவக்கும்
ஞானந் தந்த எப்பொருளும்
நான் எனது இல்லை எனப்
பேரானந்த வாரிதியில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஆழும்ஒரு வாழ்ருள்வாய்
தூனந்தன் சேய்க்கரிய
சுந்தர தேசிக மணியே!"

சுந்தரனிற்கு இளம் பருவத்திலேயே ஏழுகுருமார்கள் அமைந்தனர். இதில் நம்மால் அறிந்து கொள்ள முடிதயாத சூக்ஷ்மங்களும் (இரகசிய அம்சங்கள்) இருக்கலாம்.

சுந்தரன் தான் கற்கத் தொடங்கிய நூல்களை எல்லாம் முன்னமேயே கற்றது போல் ஆசிரியர் வியப்பெய்தும்படி எளிதில் கற்று வந்தான்.

தாய், தந்தை இல்லாத குறை தெரியாதபடி இரு குழந்தைகளையும் பேணிக் காத்தனர் மாமியும், மாமனும்.

அவர்கள் இருவரும் சேர்ந்து குழந்தைகளின் மேன்மைக்குப் பாடுபட்டது சிறப்பினும் சிறப்பு;பல குடும்பங்களில் காணமுடியாத ஒப்புயர்வற்ற செயலாகும்.

சுந்தரத்தின் முதல் குரு:

நாம் ஏற்கனவே அறிந்த சங்கர ஐயர் என்கின்ற சுப்பையா சாஸ்திரி.

பல பொருளாதார இடர்ப்பாடுகளுக்கிடையேயும் திண்ணைப் பள்ளிக்கூடத்தை சிறப்பாக நடத்தி வந்தார். மாணவர்களின் முன்னேற்றம் ஒன்றையே கருத்தில் கொண்டிருந்தார்.

மாணவர்கள் கல்வியில் மட்டுமல்ல ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும் என விரும்பினார்.

அவரிடம் சுமார் இருபத்தைந்து மாணவர்கள் முதல் நாற்பது மாணவர்கள்வரை பயின்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அந்தக் காலத்தில் அந்த வட்டாரத்தில் ஆங்கிலம் தெரிந்தவர் சங்கர ஐயர் ஒருவரே என்ற பெயருமுண்டு.

இரண்டாவது குரு:

சுந்தரனுக்கு ஆறுவயது மூன்று மாதம் நடந்து வந்தது.

1838–ம் வருடம், ஹேவிளம்பி வருடம், மாசி மாதம் சுந்தரனுக்கு உபநயனம் (பூணூல் அணிதல்) விழா நடைபெற்றது.

பத்தமடை கிருஷ்ண கனபாடிகள் என்ற உத்தமரிடம் வேத அத்தியயனம் செய்ய அனுப்பப்பட்டான்.

வேதத்தில் கரை கண்டவர். மகா மேதாவி. மிகவும் புகழ் வாய்ந்தவர். வேதவிற்பன்னர்களால் மதித்துப் போற்றப்பட்டவர்.

சுற்றியுள்ள பல கிராமங்களில் இருந்து மாணவர்கள் இவரைத் தேடி வந்து வேதம் பயிலுவர்.

கிராம மக்கள், இந்தப் பெரியவர் நம்மிடையே இருப்பது ஊருக்குப் பெருமை என்று கருதி அவரின் குடும்பச் செலவுகளைக் கவனித்து வந்தனர். அதில் பெருமையும் கொண்டனர்.

வேதம் படிக்க வந்தவர்கள் அவ்வூரிலுள்ள நீர்நிலைகளில் குளித்தனர்; நெற்றி மற்றும் உடல் நிறைய விபூதி இட்டுக் கொண்டனர்; அருகிலுள்ள கோயிலுக்குச் சென்று வழிபட்டனர்; வீடுதோறும் பிக்ஷை எடுத்து உணவு உண்டனர்; வேதத்தைப் பணிவுடன் பயின்றனர்.

காலையும், மாலையும் வேத ஒலி அவர் இல்லத்தில் கேட்டுக் கொண்டே இருக்கும். ஒவ்வொரு ஆண்டிலும் இவரிடம் பதினைந்து முதல் இருபது மாணவர்கள் வரை புதிதாகச் சேர்ந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


சுந்தரத்திற்கு இவர் வேத அத்யயனம் செய்து வைத்ததோடு வடமொழியையும் பயிற்றுவித்தார். அப்பாடங்களில் நல்ல தெளிவினை ஏற்படுத்தினார்.

அம்மொழியின் லட்சணங்களுடன் பேசும் முறையைப் பயிற்றுவித்தார்.

கல்வியில் தக்கமாணவனாக உயர்த்தினார்.

சுந்தரனின் கிரகிக்கும் தன்மையையும், அறிவின் ஆழத்தையும் கண்டு மகிழ்ந்தார்.

அவனின் அறிவிலும்,சொல்லாற்றலிலும் ஈடுபாடு கொண்ட

பத்தமடை கிருஷ்ண கனபாடிகள் கூறினார்:

'நாம் பலவற்றையும் கற்றுவிட்டோம் என்ற தற்பெருமையை என்றும் அடையக்கூடாது. உலகம் முழுதும் ஒளிவீசும் சூரியனை மறைக்க ஒருகுடை போதும்.இது கற்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய அச்சாணி போன்றதொரு கருத்து.'

இவரின் சொல் சுந்தரனின் மனதில் ஆழமாய்ப் பதிந்தது.

மூன்றாவது குரு:

இவருடைய பெயர் சோமசுந்தர சாஸ்திரி என்பதாகும். வீரவநல்லூர் என்ற ஊரினர் ஆதலால் வீரவநல்லூர் சாஸ்திரிகள் என்று அழைக்கப்பட்டார். எனவே இவரிடம் பாடம் கற்க சுந்தரன் வீரவநல்லூர் வந்தான்.

இவர் பாடம் நடத்தும் முறை அலாதியானது;ஆழமானது.

பாடத்தின் எதிர்மறைச் செய்தியைக்கூறி ஏன் இவ்வாறு இருக்கக் கூடாது என வினவுவார்.

அவ்வாறு கடினமான தத்துவங்களை எளிதாக எப்படி விளக்குவார் ?


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



**கலிவிருத்தம் :**

“பொன்பொழி அரிமளமாம்
பொன்புரி நிகர்புரியில்
முன்பொழி அருள்மிகு நின்
முண்டக மலரடியில்
அன்பொழி கொடியனும்
அன்பர்களொடு வரலாற்றில்
உன்பொழி தரவருள்வாய்
சுந்தர குருமணியே!”

தனது புத்திநுட்பத்தால் எல்லாம் உணர்ந்த சுந்தரனுக்கு உலகமுறையாக ஒரு பண்டிதர்பால் பாடம் கற்றுக்கொள்ள கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

இதை உணர்ந்து கொண்ட தாய்மாமன் வேங்கட சுப்பையர், சுந்தரனை வீரவநல்லூர் சோமசுந்தர சாஸ்திரிகளிடம் ஒப்புவிக்க முடிவு செய்தார்.

பிரம்மசூத்திர பாஷ்யம்,உபநிஷத்தின் பேருரை,கீதையின் விரிந்த கருத்து (ஆகிய மூன்றும் சேர்ந்த பிரஸ்தான த்ரியங்கள்) ஆகியவற்றைக் கற்றுக்கொடுப்பதில் வல்லவர் மகாமேதையாக விளங்கிய வீரவநல்லூர் சோமசுந்தர சாஸ்திரிகள்.

இவ்வாசிரியர் பண்டித சிரோமணி.
மேலோரிடத்தில் பக்தி,
முதியவர்பால் அன்பு,
கீழோரிடத்தில் கருணை,
உலகப் பொருள்களிடத்து அவாவின்மை,
கற்றவன் என்ற அகங்காரமின்மை

ஆகிய ஜீவன்முக்தர்களுக்கு உரிய லக்ஷணங்களோடு விளங்கியவர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நமது சுந்தரனும் சுந்தர குணங்கள் நிரம்பிய ஸ்ரீசுந்தர சாஸ்திரிகளின் அன்பிற்குரிய மாணவனானான்.

நாளடைவில் சிவபிரானின் அருளாலும், ஆசானின் அனுக்கிரகத்தாலும் வேதங்களின் உரைகளையும்,

புராணம்,
தர்க்கம் (ஊஹம்),
வியாகரணம் (இலக்கணம்),
மீமாம்ஸை (ஆராய்ச்சி),
இதிகாசம் (புராதன சரிதம்),

முதலான கலைகளைக் கசடறக் கற்றறிந்தான்.

அந்தந்த சாஸ்திரங்களில் வல்லோர் செய்யும் எதிர்வாதங்களைத் தகர்த்தெறிந்தான்.

இதனால் சுந்தரனின் புகழ் எங்கும் பரவியது.

வீரவநல்லூர் சோமசுந்தர சாஸ்திரிகளிடம் பாடங்களைப் பயின்று வந்ததுடன் யோகாசனப் பயிற்சியும் மேற்கொண்டான்.

பத்மாசனத்தில் அமர்ந்து பாடங்களைக் கேட்டு வரலானான்.

உபநயனம் நடந்த நாளில் இருந்து காயத்ரி ஹோமம் ஜபம் செய்வதைக் கடமையாகக் கொண்டான்.

சுந்தரனும் வைகறையில் எழுந்து, புனித நீராடி, திருவெண்ணீறு அணிந்து, பத்தமடையில் இருந்தால் தாய்-தந்தையருக்கு நிகரான மீனாக்ஷி அம்மாளையும், வேங்கடசுப்பையரையும் வணங்குவான்; வீரவநல்லூரில் இருக்கும் பொழுது ஆசிரியர் சோமசுந்தர சாஸ்திரிகளை வணங்கி நாளைத் தொடங்குவான்.

மாணவனின் மனப்பக்குவம் அறிந்து பாடம் சொல்லுவதில் சாஸ்திரிகள் திறமை ஆனவர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரனுக்கு ஓய்வு கிடைக்கும் போது சாஸ்திரப் பாடங்களையும்,பாஷ்யப் பாடங்களையும் பயிற்றுவித்தார்.

இவர் தன் மாணவருக்குப் பாடம்செய்துவிட்டு அப்பாடத்தின் எதிர்மறைச் செய்தியைக் கூறி'இது ஏன் இவ்வாறு இருக்கக் கூடாது' என்பார்.

அவ்வாறு அவர் எதிர்மறையாக விளக்கிய ஒரு பாடம்.

அது என்ன பாடம் ?

"எந்தைநின் வடிவுறவே
எங்கணும் இசைபெறவே
இந்திர நகர்வளமே
இங்குறு அரிமளமே
சந்தனின் அடிஇணையே
சந்ததம் ஒருதுணையே
சுந்தர குருமணியே
சுந்தர குருமணியே!"

வீரவநல்லூர் சுந்தர சாஸ்திரிகள் கூறும் நயத்தினால் பாடங்கள் மனதிற் பதிந்துவிடும்.

'இறைவன் படைப்பில் முதலில் தோன்றியது ஆகாயம், அதனின்று வாயு, அதிலிருந்து அக்னி, அக்னியிலிருந்து அப்பு, அப்புவிலிருந்து பூமி உண்டாயிற்று.

இம்முறையில் கூறாமல் நிலம், நீர், நெருப்பு, காற்று பின்னர் வெளி என்று கூறுகிறோம், ஏன் ?' என வினா எழுப்புவார்.

இக்கேள்வி மாணவர் மனதில் ஆழமாகப் பதிந்துவிடும். அதற்கான விடையைத் தேட ஆரம்பிப்பார்கள். ஒருவருக்கொருவர் விவாதித்துக் கொள்வார்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சிந்தனையைத் தூண்டும் விதமாகக் ஆசிரியரின் கேள்விகள் அமையும்.

இந்த விவாதங்களில் சுந்தரன் அளிக்கும் பதில் தெளிவானதாகவும், ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் அமையும்.

அவனுடைய பதில் இவ்வாறு இருக்கும்: அனைத்தையும் படைக்கும் கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர். (Omnipresent)

அவரை எவராலும் முழுவதும் உணர்ந்து கொள்ள முடியாது. அவர் மிகுந்த உயர்ந்த இடத்தில் இருக்கிறார். அவர் சர்வ வல்லமை உடையவர். (Omnipotent.)

அவரை அறிந்து கொள்ளாமல், அவரால் சிருஷ்டிக்கப் பட்டதை மட்டும் அறிந்து கொள்வது ஞானம் அடைந்து விட்டதாகாது.

உலகம் முதற்கொண்டு அனைத்துமே அவனுள் ஒடுக்கம். இதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு காணுவதில் நிலம்(பிருத்வி), நீரில் (அப்பு) கரைந்து ஒடுங்கி விடும்;

நீர், நெருப்பில் (தேயு) வற்றிவிடும்;

நெருப்பு, காற்றில் (வாயு) அணைந்து விடும்;

காற்று, வெளியில் (ஆகாயம்) கலந்து விடும்.

எனவே ஆகாயத்தில் தோன்றிய மற்ற நான்கு பூதங்களும் படிப்படியாக ஆகாயத்துடனேயே ஒன்றிவிடும்.

அந்த ஆகாயமும் எங்கும் நிறைந்த – சர்வவியாபி ஆகிய – சிவனிடம் கலந்து விடுகின்றது.

ஆகவே சிவனை அறிந்தால் பஞ்சபூதங்களையும் அறிந்து கொண்டதாகும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஆகவேதான் நாம் ஆகாயம், வாயு, அக்னி, அப்பு, பூமி என்று இவ்வரிசையில் கூறாமல் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்று கூறுகிறோம்.'

இவ்வாறு மிக எளிய முறையில் பெரியபெரிய தத்துவவாதிகளே வியக்கும் வண்ணம் சொல்லும் சாமர்த்தியம் இயற்கையாகவே சுந்தரனிடம் அமைந்திருந்தது.

சுந்தரனின் இந்த மேதா விலாசத்திற்கு அவன் மேற்கொண்டுள்ள கோடி காயத்ரி ஜப ஹோமமே காரணம் எனக் கருதினார் சுந்தர சாஸ்திரிகள்.

'ஒருவன் கற்பது அரிது; கற்றதை எழுத்தில் வடிப்பது அரிது; எழுத்தில் வடித்ததைக் குற்றமின்றிக் கூறுதல் அரிது; கற்றதை மனப்பாடம் செய்தல் அதனினும் அரிது; மனப்பாடம் செய்தாலும் கற்றதில் நற்பயனைக் காண்பது அரிதாகும்; அதன் வழிநிற்றல் அதனினும் அரிதே ஆகும்.

ஆனால் சுந்தரனோ நூலை நன்கு கற்கின்றான்,கசடறக் கற்கின்றான், கற்றதை மனப்பாடம் செய்து மற்றவருக்கும் தெளிவாய் உரைக்கின்றான்; உரைப்பதில் நற்பயனைக் காண்கிறான்; நூல் கூறும் நன்னெறியில் அதற்குத்தக நிற்கின்றான். இதற்கெல்லாம் காரணம் அவன் பிரம்மசரிய விரதத்தை முறையாகக் கடைப்பிடிப்பதே ஆகும்' என்பதை உணர்ந்தார்.

சுந்தரன் கடைப்பிடித்த பிரம்மசரிய தர்மம் எப்படிப்பட்டது?

"மந்திர நிலையறியேன்
வண்புகழ் மறையறியேன்
தந்திர நிலைபுரியேன்
தண்தமிழ் நிலைதெரியேன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



யந்திர நிலைதெளியேன்
என்செய்வன் இனிஎளியேன்?
சுந்தர குருமணியே
சுந்தர குருமணியே!"

'ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்'

என்பதற்கேற்றவண்ணம் சுந்தரன் நித்தியகர்மாக்களை நியமமுடன் செய்து வந்தான்.

ராமசுப்பு என்கிற குப்பாணிசிவனிற்கும், சுந்தரனுக்கும் வெவ்வேறு நாட்களில் பூணூல் அணியும் விழா (உபநயனம்) சிறப்பாக நடைபெற்றது.

அப்போது குப்பாணிசிவனிற்கு ஏழுவயது ஒன்பது மாதம்.

சுந்தரனுக்கு ஆறுவயது மூன்று மாதம்.

விளம்பி வருடம் மாசி மாதம் (1938) உபநயன விழா நடைபெற்றது.

சாத்திர விதிப்படி ஒரே வீட்டில், ஒரே நாளில், ஒரே சமயத்தில் அண்ணன் தம்பிக்கு உபநயனம் செய்து வைக்கக் கூடாது.

எனவே குப்பாணிசிவம் உபநயனம் மாசிமாதம் முற்பகுதியில் வேறொரு உறவினர் வீட்டிலும், மாசி மாதம் பிற்பகுதியில் மாமா வேங்கட சுப்பையர் வீட்டில் சுந்தரனுக்கும் பூணூல் அணிவிக்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

பூணூல் அணிந்த நாள்முதல் சுந்தரன் பிக்ஷை எடுத்த உணவையே உண்டு வந்தான்.

மாமன் வீட்டில் சாப்பாட்டிற்கு குறைவேதும் இல்லாது போனாலும் சாஸ்திரம் தர்மப்படி ஏழுவீடுகளில் படிகள் ஏறி இறங்குவான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பகலில் 'பவதி பிக்ஷாந்தேஹி' எனவும், இரவில் 'தர்மம் பிக்ஷாந்தேஹி' எனவும் கூறி பிக்ஷை எடுப்பான்.

ஏழுவீடுகளுக்குமேல் செல்லமாட்டான்.

அப்படிக் கொண்டுவந்த அன்னத்தை வீட்டில் சமைத்திருந்த குழம்பு, காய்கறி முதலியவற்றுடன் உண்பான்.

பிரம்மச்சாரி பிக்ஷை எடுத்து உண்பதே பிராமண தர்மம் ஆகையால் பூணூல் அணிந்த நாளிலிருந்து,திருமணம் ஆகும் நாள்வரை பிக்ஷை எடுத்தே உண்டான். இத்தர்மவிதியை மிகக் கண்டிப்பாகப் பின்பற்றி வந்தான்.

சுந்தரன் கால்முட்டிக்கு மேலே ஒருதுண்டுடனோ அன்றிக் கோவணத்துடனோதான் (இடைஆடை) பிக்ஷை எடுப்பான்.

அவ்வாறு பிக்ஷை எடுக்கும் போது பகலில் சென்ற வீட்டிற்கு இரவிலும், இரவில் சென்ற வீட்டிற்குப் பகலிலும் செல்லமாட்டான்.

அத்துடன் மட்டுமன்றி தன்னிடம் எப்போதும் இரண்டடி நீளமுள்ள பலாஸம் (புரசம்) குச்சியை வைத்திருப்பான்.

இதற்குத் 'தண்டம்' என்று பெயர்.

தண்டம் என்னும் கழியைக் கைக்கொள்வோர் வேணு (மூங்கில்), பலாஸம் (புரசு), அத்தி–கல்அத்தி (அத்தி), வடம் (ஆல்), அஸ்வத்தம் (அரசு) ஆகியவற்றில் ஒன்றை வைத்திருப்பர்.

தாங்கள் செய்யும் அனுட்டானக் காலங்களில் இத்தண்டத்தை வைத்திருந்தால் அவர்களைத் எவ்விதத் தீமையும் அண்டாது; இகத்தில் எல்லா நன்மைகளும் கிடைக்கும்; பரத்தில் மேலான சுகத்தை அனுபவிப்பர்.

அனுட்டானத்தின் போது நாம் சொல்லும் மந்திரங்களின் சக்தி அத்தண்டத்தில் ஏறிவிடும்; அது நம்மை மேன்மையுறச் செய்யும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



முற்பிறவியில் உள்ள குணதோஷங்களே இப்பிறவியில் நம்மைத் தொடரும்.

பிரம்மச்சரியம், கிருஹஸ்தம், வானப்பரஸ்தம், சன்யாஸம் ஆகிய நான்கு தர்மங்களிலும் முன்னேறி ஜீவன்முக்தி என்ற பிரம்ம ஞானத்தை அடையும் வழிக்கு இந்த தண்டம் ஊன்றுகோலாய் இருக்கும்.

நாள்தோறும் சுந்தரன் பொழுது விடிய ஐந்து நாழிகைக்கு முன்னரே எழுந்து விடுவான். புனித நீராடி நித்திய கர்மாக்களை முறைப்படி செய்வான். நெற்றியில் விபூதியைக் குழைத்து இடுவான். திருக்கழுத்தில் சிவ உருத்திராக்க மாலை ஒளிரும்.

அனுட்டானம் முடிந்ததும் சிவதரிசனம்.(சிவபிரானின் மேல் தீராத பற்று. யாக்கை நிலையாது. அரச இலையின் நுனியிலுள்ள நீர்த்துளி போன்று என்றும் விழுந்துவிடும் தன்மையானது. எனவே சிவசொரூபத்தை தரிசப்பதுவும்,தொழுவதுமே நன்மை பயக்கும் என்ற அசையாத நம்பிக்கை அந்த வயதிலேயே சுந்தரனின் சிந்தையில் நிலைத்து நின்று விட்டது.

பின்னர் படிப்பு, பாடங்கள்.

இந்தநெறி தவறாமல் வாழ்ந்து வந்த சுந்தரனின் வாழ்க்கையில் ஒருயோகியார் வந்துசேர்ந்தார்.

அவரால் சுந்தரனின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன ?

"புன்செயல் பலபுரிவேன்
புந்திசெல் வழிதிரிவேன்
உன்செயல் எனநினையேன்
உன்செயல் இவைஒழியேன்
இங்கு உனது இசைமொழியேன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அஞ்சலி நெறிபணியே

சுந்தர குருமணியே!”

தண்டமாகிய கழியைக் கீழே போட்டால் அதன் அடியும், நுனியும் பூமியில் நன்கு பதிந்து கிடக்கும்.

ஆண்கள் கடவுளை வணங்கும்போது அக்கழிபோல நெடுஞ்சாண்கிடையாக கீழேவிழுந்து வணங்க வேண்டும்.

அவ்வாறு வணங்கும்காலை,(பொழுது) கால்முதல் தலைவரை உள்ள சகல உறுப்புகளும் தரையில் நன்றாகப் படிய வேண்டும்.

அவ்வாறான வணக்கமே கடவுளின் அருளைப்பெற நல்லதொரு பக்குவமான வழியாகும்.

உடலெல்லாம் அடங்கி ஒடுங்கி விழும்போது மனம் ஒடுங்குகிறது.

ஒருமுகப்படுகிறது.

உயர்ந்த பிரம்மஞானத்தை அடைவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டு ஜீவன்முக்தர்களாகப் போற்றப்படுபவர்கள் இவ்வாறே சிவபெருமானைப் பணிவர்.

த்விஜன் என்றும் இருபிறப்பாளன் என்றும் அழைக்கப்படும் அந்தணன் பிறப்பு ஒழுக்கத்துடன் கடமைகளைச் செய்ய வேண்டும்.

அந்தணன் கற்ற வேதத்தை மறந்தாலும் உண்மை, நேர்மை, நன்றி மறவாமை, சாத்திரங்களைக் கற்றல், அவற்றின் வழிநடத்தல்,நம்பியவரை வஞ்சியாதிருத்தல், புலனடக்கம் இத்தகைய ஒழுக்கங்களைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

இதையே வள்ளுவப் பெருந்தகையாரும்

“மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்” என்றார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இத்தகைய ஒழுக்கநெறி நின்றவர்களுக்கே அடுத்த பிறவி மேன்மை ஆனதாக அமையும். அத்தகைய பிறவி அடைவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டு ஜீவன்முக்தர்களாக விளங்குபவர்கள் கையில் தண்டத்தை ஏந்தி இருப்பர்.

இந்தத் தத்துவங்களை சுந்தரன் நன்கு அறிந்து, தெளிந்திருந்தான்.

'தமக்குரிய தொழிலை அவரவர் முனைப்புடன் செய்து வந்தால் பஞ்சம் உண்டாகாது; அன்புடன் வழிபாடு செய்தால் பாவங்கள் நீங்கும்; முழுவதும் மௌனத்தை மேற்கொண்டால் கலகம் வராது; உறங்காது விழிப்பு நிலையில் உள்ளவருக்கு அச்சம் ஏற்படாது.' என்ற தத்துவத்தையும் சுந்தரன் இளம்பிராயத்திலேயே அறிந்து கொண்டான்.

இந்நிலையில்......

சுந்தரனுக்கு உபநயனம் முடிந்த ஒருவார காலத்திற்குள் வடதேசத்திலிருந்து ஒரு யோகீஸ்வரர் பத்தமடை வந்தார்.

ஸ்ரீபரமேஸ்வரனே நேரில் வந்ததுபோல் உருவ அமைப்பு-தோற்றம்.

தலையெல்லாம் சடைடையாகத் திரிந்து வெகுநீளம் தொங்கிற்று.

பலசடைகளைச் சுருட்டி தலை உச்சியில் சிவலிங்க உருவம்போல் கட்டி இருந்தார்.

உடலெங்கும் விபூதிப் பூச்சு.

இடையில் ஒற்றைக் காவியாடை.

கையில் கமண்டலமும்,ஜபமணிமாலையும் கொண்டிருந்தார்.

பத்தமடை வந்த அந்த சந்நியாசி சுந்தரனின் மாமா வீட்டில் பிக்ஷை செய்து கொண்டார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'ஸ்வாமிகள் எங்கிருந்து வருகிறீர்கள் ?'என்று வேங்கட சுப்பையர் கேட்டார்.

'நான் காசியிலிருந்து புறப்பட்டு வருகிறேன்.புனிதயாத்திரை மேற்கொண்டு உள்ளேன்.'

அந்த யோகி காசியிலிருந்து வருவதாகக் கூறியதும் சுந்தரனுக்கு உடலெங்கும் பரவசம் பரவியது.

காசிவிசாலாக்ஷி சமேத விஸ்வநாதரே இத்தவ வேடம்பூண்டு இங்கு வந்துள்ளார் என எண்ணினான்.

அந்த யோகியைப் பலமுறை விழுந்து வணங்கினான்.

விழுந்து வணங்கிய சுந்தரனிடம் சந்நியாசி கூறத் தொடங்கினார்.

யோகியார் என்ன கூறினார் ?

"எங்கணும் உயர்சிவமே
என்றெணும் அநுபவமே
இங்கு அணுவளவும் இலேன்
இன்புறு வழியினிலேன்
மங்கல கர !எனையே
வஞ்சகன் எனநினையேல்
துங்கவ மலவணியே
சுந்தர குருமணியே!"

சுந்தரனை அருகழைத்தார் வடதிசை சந்நியாசி. அவர் கூறலுற்றார்.

யோகியின் வாக்கு உபதேசமாய் உட்புகுந்தது சுந்தரனின் செவிகளில்:


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'உனக்குப் பரமேஸ்வரனின் கருணாகடாட்சம் பரிபூரணமாக உள்ளது.

சிவனின் அருளாற்றல் உன்னிடம் மிக்கு இருக்கிறது.

ஆதிசங்கரர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் சாயல் உன்னிடம் சார்ந்து இருக்கிறது.

நான் வடநாட்டவனாயினும் தென்திசை அடியார்களின் ஆற்றலை அறிந்தவன்;போற்றுபவன்.

சிறிது காலத்திற்குள் ஈஸ்வர சக்தி அனைத்தையும் பெறுவாய்; சகல வித்தைகளிலும் கரை காண்பாய்; இறைவனின் திருவிளையாட்டாகிய சித்துகள் அனைத்தையும் நீ புரிவாய்;

ஈஸ்வர தேஜஸ் உன் முகத்தில் ஒளிர்கிறது.

உன்னுடைய செயல்கள் யாவும் இறையைச் சார்ந்தே இருக்கும்.

ஆனால் நீ சிறிது முயற்சி செய்ய வேண்டும்.....'

யோகியார் இவ்வாறு கூறுவதை சுந்தரனின் மாமா,மாமி மட்டுமின்றி அங்கு குழுமி இருந்த வேதபண்டிதர்கள் மற்றும் ஊரினரும் ஆவலோடு கேட்டு வந்தனர்.

மேற்கொண்டு என்ன சொல்லப் போகிறார் என்பதைக் கேட்க அவர்கள் ஆவலாய் இருந்தனர்.

சிவயோகி தொடர்ந்து கூறினார்:'...சில விஷயங்களை அறிந்திருந்தாலும் அனைத்தையும் வெளிப்படையாகக் கூறமுடியாது.

நீ ஒரு மெய்ஞ்ஞானி.மெய்ஞ்ஞானியர் எந்த நிலையிலும் மேன்மையானவரே!

புலியின் நகமும், கவரிமானின் முடியும், யானையின் ஒளிபொருந்திய கொம்பும், எங்கிருந்தாலும், எந்த நிலையில் இருந்தாலும் அவை சிறப்பானவையே ஆகும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மெய்ஞ்ஞானியரும் அவ்வாறே.எந்த நிலையில், எங்கிருப்பினும் போற்றுதலுக்கு உரியவயரே!

உன்னை நீ அறிந்து கொள்ளும் காலம் வரும்.

அந்தப் பக்குவத்தை அடைய நான் சொல்லுவதைக் கேள்.

நீ சிறுவனாய் இருப்பதால் முயற்சி செய்து கோடி காயத்ரி ஜபஹோமம் செய்.

அனைத்து மந்திரங்களின் தாய் காயத்ரி மந்திரமே ஆகும். புரசம் சமித்தை அக்னியில் போட்டு,புரசம் இலையில் பசும்நெய் எடுத்து காயத்ரி மந்திரம் ஜபித்து (ஆஹுதி) நெருப்பில் இடவும்.

இவ்வாறு செய்துவிட்டால் நீ பரமேஸ்வரனாக ஆகிவிடுவாய்.

உன்னால் காயத்ரி ஜப ஹோமத்தின் மேன்மையை இவ்வுலகம் அறிந்து கொள்ளும்;நீ உலகோர் போற்றும்படி விளங்குவாய்.

நான் வந்த பணி நிறைவு பெற்றது.வருகிறேன்.'என விடைபெற்று அங்கிருந்து அகன்றார்.

சுந்தரன் அந்த யோகியார் சென்ற திசையையே அவர் உருவம் கண்ணிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தான்.

அன்று இரவு.....

சுந்தரன் சிந்தனை செய்தான்.

இந்தக் கடுமையான பயிற்சியை மேற்கொள்ள முயற்சி செய்து பார்ப்போம் என்றெண்ணினான்.

காலையில் அவ்வூர் விவசாயம் செய்யும் பெரியவரிடம் ஏராளமான புரசம் சமித்துகள் கொண்டு வரும்படிக் கூறினான்.

அவரும் அப்பொறுப்பைப் பெருமையுடன் ஏற்றுக்கொண்டார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தான் கற்கும் கல்விக்கும்,சிவவழிபாட்டிற்கும் இடையூறன்றி எவ்விதம் கோடிகாயத்ரி ஜபஹோமம் செய்வது என சிந்தனை எழுந்தது.

கோடிகாயத்ரி ஹோமத்தை எப்போது ஆரம்பித்து எப்போது நிறைவு செய்தான் ?

“அண்டர்கள் புகழ்வடிவே
அந்தமின் மறைமுடிவே
மண்டருள் பொழிபுயலே
வந்தனன் உனதயலே
கண்டுஉளம் உருகிடவே
கண்புனல் பெருகிடவே
தொண்டுசெய் முறைபணியே
சுந்தர குருமணியே!”

‘நூலது வேதாந்தம்,நுண்சிகை ஞானமே’ என்பதை அறிந்த சுந்தரன் ஞானத்தை அடைய காயத்ரி ஜபஹோமம்தான் வழி என்பதை உணர்ந்தான்.

சைவர், வைணவர் எவராயினும்,

அவர்களுள் எப்பிரிவினராயினும் அனைவருக்கும் ”காயத்ரி ஜபம்” ஒன்றேதான்.அதில் கருத்து வேறுபாடே இல்லை.

சனாதன தர்மத்தை இணைக்கும் இழை காயத்ரி மந்திரமே.

எனவே காயத்ரி ஹோமத்தை விரைவில் தொடங்க எண்ணினான்.

உபநயனம் நடந்த பதினைந்தாம் நாளிலிருந்து ஆரம்பித்து, ஆறு ஆண்டுகளுக்குள் நிறைவு செய்வது என உறுதி பூண்டான். அதிக ஆண்டுகள் நீட்டித்துக் கொண்டு போக சுந்தரனிற்கு விருப்பமில்லை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பன்னிரண்டு வயதளவில் ஒருகோடி எட்டு காயத்ரி ஜபஹோமத்தை பூர்த்தி செய்ய சங்கல்பித்தான்.

சுந்தரனின் காயத்ரி ஜபஹோம விபரம்;

காலை –நான்கு மணிக்கு எழுதல்.

மழை, குளிர், பனி எதுவானாலும் குளிர்ந்த நீரில் குளித்தல்.

விபூதி அணிந்து,

ஐந்து மணிக்குள் பிரம்மச்சாரி அக்னிதேவனை வேண்டிச் செய்யும் சமிதாதானம்.

காலை சந்தியாவந்தனம், நூற்றி எட்டு காயத்ரி ஜபம்.

மதியம், மாத்யானிகம், முப்பத்திரண்டு காயத்ரி ஜபம்.

மாலை சந்தியாவந்தனம், அறுபத்தி நான்கு காயத்ரி ஜபம்.

இவை நித்திய அனுட்டானங்கள் எனப்படும்.

(இவை காயத்ரி ஜபஹோம எண்ணிக்கையில் சேராது.)

ஒரு ஆண்டில் அமாவாசை, பௌர்ணமி இருபத்தைந்து நாட்கள்; பிரதமை திதி இருபத்தைந்து நாட்கள் வரும்.

ஆறு ஆண்டுகளுக்கு ஆறு காயத்ரி ஜப நாட்கள் வரும். மொத்தம் 286+6=292 நாட்கள்.

இத்தினங்களில் ஒரு நிமிடத்திற்கு எட்டு காயத்ரி வீதம் ஒருமணி நேரத்திற்கு 480 காயத்ரி ஜப ஹோமம் வீதம் நடக்கும்.காலை ஐந்து மணியிலிருந்து உச்சிவேளை வரை 480x7=3360 காயத்ரி ஜபஹோமம்.

மதியம் ஒன்றரை மணிமுதல் மீண்டும் ஹோமம் தொடங்கும்.

மாலை ஐந்தரைவரை நீடிக்கும்.

480×4=1920



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இவற்றுடன் மாலை அனுட்டானங்களை முடித்து அருகிலுள்ள சிவன்கோயில் தரிசனம்.

இரவு சிவபஜனை, சிவகதைகள், சிவன் பெருமை முதலியவற்றை மனம் ஒன்றிச் செய்வான்.

சிவாய நம என்று பரமேஸ்வரனை தியானிப்பவர்களுக்கு அபாயம் ஒரு நாளும் இல்லை; துன்பங்களைப் போக்கும் உபாயம் இதுவே;இதுஒன்றே அறிவு பூர்வமானதாகும் என்பதில் தெளிவாய் இருந்தான்.

இவ்வாறு 292 நாட்களில் (5280×292)=15,41,760 காயத்ரி ஜப ஹோமம் செய்தான்.

இவற்றுடன் சாஸ்திர பாடங்களையும் வீரவநல்லூர் சோமசுந்தர சாஸ்திரிகளிடம் பயின்று வந்தான்.

வேதபாடம் இல்லாத 1803 நாட்களில் அதிகப்படியாக ஒருநாளைக்கு பத்துமணிநேரம் காயத்ரி ஹோமம் செய்தான்.

அதாவது,480×10=4800. இந்த எண்ணிக்கையை சற்றுக் குறைத்து 4691 என்று ஹோமத்தை முடிப்பான்.

இவ்வாறு 1803 நாட்களில் (4691×1803)=84,57,873 என்ற கணக்கில் காயத்ரிஹோமத்தை விடாது செய்து வந்தான்.

எனவே ஐந்தாண்டு ஒன்பது மாதகால அளவில் 84,57,873+15,41760=99,99,633. காயத்ரி ஹோமத்தை இடைவிடாது மிகத் தீவிரமாகச் செய்து முடித்தான்.

அவனுடைய ஹோமத்தை குருநாதரும் இடம் அளித்துஆதரித்து வந்தார்.

மீதமுள்ள 367 ஹோமத்தை பத்தமடையில் செய்ய ஒருகோடி பூர்த்தியானது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிறகு தனிப்பட்ட முறையில் 108 காயத்ரி ஹோமம் செய்யப்பட்டது.

இதனால் மொத்தம் ஒருகோடியே நூற்றி எட்டு ஆனது.

அன்று வேதவிற்பன்னர்களை வீட்டிற்கு வரவழைத்து தான தர்மங்கள் செய்யப்பட்டது;விருந்துபசாரமும் நடைபெற்றது.

சுந்தரனின் இவ்வாறான செயல்களைக் கண்டு மாமியும்,மாமனும் மனம் பூரித்தனர்.

அத்தோடு அவர்களுக்கு ஒரு அச்சமும் எழுந்தது.

அது என்ன அச்சம் ?

கட்டளைக் கலித்துறை

“பொன்னார் கயிலை
மலைமேல் அமர்ந்து
பின்நாவலூரில் உதித்தான்
தோழரென்று பேருமடைந்தாய்
தந்நாளிற் கோடக நல்லூறில்
தோன்றி அரிமளமாம்
தென்னாட்டில் அமர்ந்தாய் அருள்
சுந்தர தேசிகனே!”

நாலு வர்ணத்தினரும் பூணூல் அணியவேண்டும் என்பது அக்காலவிதி.

(இக்கால விதியும் இதுதான் ;ஆனால் நாகரிகம் கருதி(!) பலர் பின்பற்றுவதில்லை. அந்தணர்களுக்கு ஐந்து முதல் ஏழு வயதிற்குள்ளும், மற்றவர்களுக்கு எட்டு முதல் பதினாறு வயதிற்குள்ளும் பூணூல் விழா செய்வித்தல் நலம் பயக்கும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இவ்வாறு விதி இருந்தாலும் ஐந்து வயதிலிருந்து பதினாறு வயதிற்குள் அனைத்து இனத்தவர்களும் பூணூலை விதிப்படி அணிந்து கொள்வதில் தவறில்லை.)

காயத்ரி ஹோமம் சூரியனுக்குப் பலம் உள்ளவரையே செய்ய வேண்டும்.

பொதுவாக மதியம் ஒன்று அல்லது இரண்டு மணிக்குள் செய்யும் ஹோமத்திற்கே பலிதம் அதிகம்.

அதன்பிறகு சூரியன் வலுவிழந்து மலைவாயிலில் விழும் தருணம்.எனவே மதியம் இரண்டு மணிக்கு மேல் செய்யும் ஹோமத்திற்கு அத்தனை பலம் இல்லை.

ஆனால் சுந்தரன் இடைவிடாது ஹோமத்தை நடத்தியதால் எந்தவிதப் பழுதும் இல்லை.

292–நாட்களில் சூரிய உதயத்திலிருந்து சூரியன் இருக்கும்வரை இடையூறின்றி ஹோமத்தைச் சுறுசுறுப்புடனும்,தீவிர பக்தியுடனும் செய்தான்.இதில் எந்த தோஷத்திற்கும் இடமில்லாது போயிற்று.

இதில் கவனிக்க வேண்டிய ஒன்று:ஒரு நிமிடத்திற்கு முறையாக சந்தி பிரித்து செய்தால் எட்டு காயத்ரி ஜபமே செய்ய முடியும்.ஒரு மணிநேரத்தில் 480 காயத்ரி வீதம்,1000 காயத்ரி சொல்ல இரண்டு மணி நேரத்திற்கு மேல் சில மணித்துளிகள் கூடுதலாகும்.

(காயத்ரி ஜபம் செய்பவர்கள் இதைக் கவனித்துக் கொள்ளவும்.)

இந்த இளம் வயதில் சுந்தரன் செய்து வந்ததும்,செய்து வருவதுமான செயல்களைக் குறித்து ஊரினர் வியந்து போற்றினர்.

அவனிடம் அளவிடமுடியாத மரியாதையும்,ஈர்ப்பும் கொண்டனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இயற்கையிலேயே பெயருக்கு ஏற்றாற்போல் அழகன்;கோடி காயத்ரி ஹோமம் செய்ததும் அவன் முகத்தில் தேஜஸ் மேலும் கூடியது.

சுந்தரனிற்கு உபநயனம் ஆன நாளிலிருந்து மூன்று வேளைகளிலும் சந்தியாவந்தனம்,காயத்ரி ஜபம், பிராணாயாமம், பிரம்மசாரிகள் நெறியோடு செய்ய வேண்டிய சமிதாதானம் ஆகியவற்றை நெறிபிறழாமல் செய்து வந்தான்.

மாமனுடன் சிவபூஜையையும்,சிவன்கோயில் சென்று சிவ அஷ்டோத்திரம் சொல்லி வழிபாடு செய்வதையும் முறை தவறாது விடாமல் பின்பற்றி வந்தான்.

இரவில் சிவபஜனை,சிவமஹாத்மிய உரைகள் முதலியன.

ஊரினரும்,உறவினரும் சுந்தரனை சுந்தரசிவன் என்ற பெயர்கொண்டே விளித்தனர்.

தன்னுடைய மூன்றாவது குரு வீரவநல்லூர் சோமசுந்தர சாஸ்திரிகளிடம் திடவைராக்கியத்தையும், சிவதர்மங்களையும் கற்றுத் தேர்ந்தான்.அவர்,

சுந்தரனுக்கு வித்தைகளில் சூக்ஷ்மமான பகுதிகளை விவரித்துரைத்தார்.

சுந்தரனை வாக்கு வன்மையில் பெரும் ஆற்றல் உடையவர் ஆக்கினார்.

(வித்தையில் கரைகண்டவனாகச் செய்த குருநாதரை பின்னாளில் தாம் இயற்றிய 'சுவானுபூதி ரஸாயனம்' என்ற நூலில் குரு வந்தனமாக இவ்வாறு குறிப்பிட்டுப் போற்று கிறார்:

'அருள் நிறைந்த பரமசிவமே மூன்று உரு ஆனாற்போல்,அடியேன் உய்ய பரவிய பாஷியம் உரைத்த சுந்தர சாஸ்திரிகள்.')



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மெய்வருத்தம் பாராது,பசி நோக்காது, கண்துஞ்சாது, பிறநிகழ்வுகளைப் பற்றிக் கவலை கொள்ளாது,செய்ய வேண்டிய செயலின் கடினத்தையும் கருதாது,பிறரின் அவமதிப்பையும் பொருட்படுத்தாது ஞானத்தேடல் ஒன்றிலேயே மனம் செலுத்தி வந்தான்.

அவனுடைய மாமனும், மாமியும்' இவனின் ஆன்மீகத் தேடல் மிக விரிந்ததாய் இருக்கிறதே,ஒருகால் வயது ஏற ஏற சந்நியாசி ஆகிவிடுவானோ ?' என அச்சம் கொண்டனர்.

அவர்களின் அந்த அச்சம் ஒருபுறம் இருக்கட்டும்.

சுந்தரனின் வாழ்வில் நேர்ந்த அடுத்த நிகழ்வுகள் யாவை?

“ஐந்நதியே முதலாம் பல
கோயில் அணிபணிக்குப்
பொன்நிதி நல்கியே
கும்பாபிஷேகம் புரிவித்த நின்
சந்நிதி வந்தனன் ஆண்டருள்
தாமிர பரணி பொன்னி
தென்னதி நேரருள் வள்ளலாம்
என் சுந்தரதேசிகனே!”

சுந்தர சிவன் வேதபாடங்களையும், சாஸ்திர பாடங்களையும் மிக விரைவாகக் கற்றுத் தேர்ந்தான்.

ஆசிரியர் கற்றுக் கொடுத்ததுடன் தானாகவும் பல நூல்களைத் தேடிப்படித்தான்.

சுந்தர சிவனின் புத்திக் கூர்மையையும், பல நுட்பமான செய்திகளை கிரகித்துக் கொள்ளும் ஆற்றலையும் கண்டு ஆசிரியர் மகிழ்ச்சி அடைந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவரும், இவன் கூறும் புதுவிதக் கருத்துக்களையும், அவற்றை விளக்கும் நுண்ணிய அறிவையும், பொருளமைதியையும் கண்டு வியந்தார்.

குருவோ சாந்தகுணம் உடையவர்.ஆகையால் சுந்தரன் மாணவனாக இருந்தாலும் அவன் கூறுவதை சாதாரணமாகக் கருதி ஒதுக்க மாட்டார்.தான் கற்ற வித்தையை மேலும்,மேலும் அவனுக்குத் தெளிவாய் உரைப்பதில் மகிழ்ச்சி கொண்டார்.

சுந்தரன் கல்வி கற்றதில் மட்டுமல்ல ,கற்றதைச் சொல்ல வேண்டிய இடத்தில் கேட்பவர்களின் மனதில் பதியும் வண்ணம் சொல்லும் நாவன்மையும் பெற்றிருந்தான்–பொன்மலர் வாசம் பெற்றது போல்.

ஒருகோடி காயத்ரி ஜபஹோமத்தை சிரத்தையுடன் சுந்தரன் நிறைவு செய்தது அறிந்து குரு மகிழ்ச்சி கொண்டார்.

சுந்தரன் வேத அத்தியானத்தில் நல்ல திறம் கொண்டதோடு, அட்சர சுத்தமாக ஸ்வரத்துடன் சிறிதும் தவறின்றிக் கூறும் ஆற்றலையும் பெற்றிருந்தான்.

மாமா வேங்கட சுப்பையர் வெளியூர் செல்ல நேரும்போது தானே ஸ்படிக லிங்கம், சாளக்கிராமம் ஆகியவற்றிற்கு முறைகள் தவறாமல் பூஜைகள் செய்து வந்தான்.

மனம், வாக்கு, காயம் (மனம், மொழி, மெய்) ஆகிய திரிகரணங்களும்

ஒன்றி ஒருமுகமாக வழிபாடு நடத்தியதால் இந்திரியங்கள் (ஐம்புலன்கள்) அவன் வயப்பட்டன.

1843–சோபகிருது வருடம் கார்த்திகை மாதம்வரை வீரவநல்லூர் சோமசுந்தர சாஸ்திரிகளிடம் நன்முறையில் குருகுலவாசம் செய்து வந்தான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரன் சாத்திரப் பாடங்களைக் கற்று வரும்பொழுது சிவதரிசன மகிமை,க்ஷேத்ராடன மகிமை,ஸ்நானகட்ட மகிமை,நதிப் பிரதட்சண மகிமை போன்ற பல செய்திகளையும் செம்மையாக அறிந்திருந்தான்.

எவ்வாறேனும் நதிப்பிரதட்சணம் செய்ய வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டான்.

நதிப்பிரதட்சணம் என்றால் என்ன ?

"நந்தா மணிவிளக்கே
மறையால் நுவல்அரிய
நந்தாமணி முடிக்கென்று
அடியார்க்குச் சரண்உதவும்
சிந்தாமணி அனையாய் அருட்
சுந்தர தேசிகனே!"

சுந்தரன் நீர்நிலைகளையும், நதிகளையும் மிகப் புனிதமாகக் கருதினான்.

நதிகள் கலாச்சாரங்களை, கலைகளை, ஆன்மிகத்தை வளர்க்கும் இடம் என்பதில் உறுதியாக இருந்தான்.

எனவே புண்ணிய நதிப்பிரதட்சணம் செய்து அதற்குத் தன் நன்றிக்கடனை செலுத்த விரும்பினான்.

புண்ணிய நதியின் இலக்கணம் என்ன ?

ஒரு ஆறானது உற்பத்தி ஆன இடத்திலிருந்து, செல்லும் வழியெல்லாம் செழிப்பானதாக்கி ,நேராகக் கடலில் கலக்குமானால் அது புண்ணிய நதி எனப்படும்.

அம்முறையில் தாமிரபரணி நதி ஆனது பாணதீர்த்த மலையில் உற்பத்தி ஆகிறது. ஆத்தூரின் அருகில் நேர்முகமாகக் கடலில் கலக்கிறது. ஆகவே தாமிரபரணி புனித நதியாகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தாமிரபரணி தொடங்கும் இடத்திலிருந்து கடலிலே கலக்கும் இடம்வரை சுமார் எழுபத்து ஐந்து மைல்; அதாவது இன்றைய கணக்கில் நூற்றிருபது கிலோமீட்டர் தூர அளவு.

எனவே புண்ணிய நதியாம் தாமிரபரணியை வலம்வர சுந்தரன் தீர்மானித்தான்.

தன் குருநாதர் ஸ்ரீசோமசுந்தர சாஸ்திரிகளின் அனுமதி பெற்றான்.

குரு, சுந்தரன் ஒரு சுயம்பு என்பதை அறிந்தவர்.

பலா, அத்தி போன்ற சில மரங்கள் பூக்காது காய்ப்பன.வயதில் சிறியவராயினும் அறிவில் மூத்தவராய் விளங்குவோரும் உண்டு. பாத்தி கட்டி வளர்க்காமலேயே விதைகள் வளரும். அதைப்போல் பாடங்கள் சொல்லித் தராது போனாலும் சுந்தரனின் ஞானம் உச்சம் தொடும் என்பதை த் தெளிந்தவர் அவர்.

நதிப்பிரதட்சணம் என்பது மூன்று வகைப்படும்.

1) ஆறு உற்பத்தி ஆகும் இடத்திலிருந்து தொடங்கிக் கடலில் சங்கமம் ஆகும் இடம்வரை நடந்து, பின்பு சங்கமம் ஆகும் இடத்திலிருந்து கிளம்பி ஆறு உற்பத்தி ஆகும் இடம்வரை நடந்து செல்வது. திரும்ப வரும்போது அந்தந்த ஸ்நான கட்டங்களில் குளித்து, அனுஷ்டானம் செய்து, கரையோரமுள்ள ஆலயங்களில் வழிபாடுகள் நடத்தித் திரும்புவது.

2) ஆறு உற்பத்தி ஆகும் இடத்திலிருந்து பிரதக்ஷணமாகப் புறப்பட்டு எதிர்ப்படும் ஸ்நானகட்டங்கள் அனைத்திலும் குளித்து, அனுஷ்டானங்கள் செய்து, சிவாலயங்களில் வழிபாடு செய்து சங்கமத்தை அடைந்து அக்கரை செல்வது. பின்னர் அங்கிருந்து எதிர்க்கரை வழியாக பிரதக்ஷணமாக ஸ்நான கட்டங்களில் குளித்து, அனுஷ்டானங்கள் செய்து, ஆலய வழிபாடுகள் செய்து ஆற்றின் ஆரம்ப இடத்தை அடைவது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



3) ஆற்றின் ஆரம்ப இடத்திலிருந்து புறப்பட்டு முதல் ஸ்நான கட்டம் சென்று புனித நீராடி, அனுஷ்டானங்கள் செய்து, ஆலய தரிசனம் செய்து ஆறு ஆரம்பிக்கும் இடம் வருவது.

பிறகு நடந்து இரண்டாவது ஸ்நான கட்டம் வந்து புனித நீராடி, அனுஷ்டானங்கள் செய்து, அங்குள்ள ஆலயத்தில் தரிசனம் செய்து ஆறு ஆரம்பிக்கும் இடத்தை அடைவது.

பின்பு அங்கிருந்து புறப்பட்டு மூன்றாவது ஸ்நான கட்டம்; புனித நீராடல்,அனுஷ்டானங்கள், அங்குள்ள ஆலய வழிபாடு செய்து நதி உற்பத்தி ஆகும் இடம் திரும்புதல்.

பின்னர் அடுத்த ஸ்நான கட்டம்......

இவ்வாறு ஆறு உற்பத்தி ஆகும் இடத்திலிருந்து புறப்பட்டு ஒவ்வொரு ஸ்நானகட்டமாக வந்து,புனித நீராடி, அனுஷ்டானங்கள் செய்து, ஆலய வழிபாடு நடத்தி, திரும்ப வந்து... இவ்வாறு நதிப் பிரதட்சணம் செய்ய சில மாதங்கள் ஆகும்.

இந்த முறையான பிரதட்சணம் ‘அங்குல்ய பிரதட்சணம்’ எனப்படும்.

சுந்தரன் தாமிரபரணி ஆற்றை இந்த மூன்று விதமாகவும் மூன்று முறை வலம் வர உறுதி பூண்டான்.

எந்தெந்த ஆண்டுகளில் இந்த பிரதட்சணங்களை மேற்கொண்டான் ?

“செத்துப் பிறந்து திரிவாரை
நம்பித் திரிந்து திரிந்து
எய்த்துக் கிடக்கும் எளியேனை
ஆளவும் எண்ணுவையோ ?
முத்திக்கண் வாஞ்சை
மிகுமடியார்தம் முளரிமலர்ச்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சித்தத்தில் ஊறும் அமுதே என்
சுந்தர தேசிகனே!"

1843–ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குச் சரியான சோபகிருது வருஷம் மார்கழிமாத முற்பகுதியில் முதல்முறையாக தாமிரபரணி பிரதட்சணம் செய்ய சங்கல்பம் செய்து கொண்டான். குருவின் ஆசியுடன் புனிதப் பயணம் மேற்கொண்டான்.

மார்கழி மாதம் முதல் வாரம் கடுங் குளிர்காலம்.உடல் விரைத்து விடும். கைகால்கள் எங்கும் மரமரத்துவிடும். பற்கள் கிட்டிவிடும்.

அக்குளிரைச் சிறிதும் பொருட்படுத்தாமல் சுந்தரசிவன் தனியாகக் கிளம்பினான்.

பாபங்களை நாசம் செய்யும் பாபவிநாசம் அருவி சென்றான். மலைமேல் ஏறினான். பாணதீர்த்தம் அடைந்து அங்கு குளித்தான்.

அங்குள்ள குகைக்குள் சென்றான். வழிபாடு நடத்தினான்.

அன்று மாலை மலையினின்று கீழிறங்கி பாபநாசம் வந்தான்.

பாபவிநாசக் கட்டத்தில் குளித்து அனுட்டான விதிகளை நிறைவு செய்தான்.

இரவு சிவ வழிபாடு.

அன்றிரவு பாபநாசத்தில் தங்கினான்.

மறுநாள் விடியற்காலை புனித நீராடி,அனுட்டானங்கள் முடித்து தாமிரபரணி நதிப்பிரதட்சணம் தொடங்கினான்.

தாமிரபரணி நதியின் இருகரைகளிலும் பல ஸ்நான கட்டங்களும், ஆலயங்களும் இருக்கின்றன. அவை அனைத்தையும் பற்றிக் குறிப்பிடாமல் முக்கியமான சிலவற்றைப் பற்றி மட்டும் காண்போம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரசிவன் பாபநாசத்திலிருந்து வடகரை வழியாகப் புனிதப் பயணத்தைத் தொடங்கினான். அதாவது அவனது வலதுகர வழியாக ஆத்தூர் சங்கமம் வரை வந்தான்.

(ஆற்றின் உற்பத்தி இடத்தை நோக்கி நாம் இருந்தால் நம் வலதுகைப் பக்கம் வலது கரை, இடதுகைப் பக்கம் இடது கரை ஆகும் வலதுகரப் பக்கம் உள்ளது வடக்கிலுள்ள கரை; இடது கரப் பக்கம் இருப்பது தெற்கிலுள்ள கரை.)

சுந்தரன் பாபநாசத்தில் இருந்து புறப்பட்டு வலது கரையிலுள்ள விக்கிரமசிங்கபுரம்

அம்பாசமுத்திரம்

ஊர்க்காடு

ரங்கசமுத்திரம்

அரியநாயகிபுரம்

மேலக்கல்லூர்

கோடகநல்லூர்

பழவூர்

திருநாங்கோயில்

சுத்தமல்லி

திருநெல்வேலி நகரம்

குறுக்குத்துறை

திருநெல்வேலி பாலம்

ஆரவங்குளம்

அனந்தகிருஷ்ணபுரம்

செப்பரை

பாலாமடை

உதயனேரி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சீவலப்பேரி

மணக்கரை

ஸ்ரீவைகுண்டம்

அப்பன்கோயில்

இரட்டைத் திருப்பதி

பெருங்குளம்

ஆகிய ஸ்நான கட்டங்களில் நீராடி, அனுட்டானங்கள் செய்து, சிவ–வைணவத் திருக்கோயில்களில் தரிசனம் செய்து ஆத்தூர் சங்கமத்தை அடைந்தான்.

ஆத்தூரின் அக்கரையாகிய தென்கரை வழியாக வந்தபோது எந்தெந்த ஸ்நானகட்டங்களில் புனித நீராடி,என்னென்ன தலங்களை தரிசித்தான் ?

"மருவாய் மருமலராய்
மணியாய் அம்மணியின் ஒளியாய்
உருவாய் அருஉருவாய் அருவாய்
மெய்யுணர்வு தரும்
குருவாய் நல்லின்ப
மகாநதியாய் என்குலதெய்வமாய்த்
திருவாய் அருளவருவாய்என்
சுந்தர தேசிகனே!"

(மூன்று விதமான நதிப்பிரதட்சணங்கள் பற்றி சிறிது எளிமையாக விளக்க முயற்சிக்கிறேன்.

அருவி பூமியில்
நதியாக விழும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பகுதியில், புனித நீராடி, அனுட்டானங்கள் செய்து, அங்குள்ள ஆலயங்களில் வழிபாடு செய்து யாத்திரையை த் தொடர்வது. வலமாக அந்நதி கடலில் கலக்கும் இடம்வரை அனைத்து நீராடு துறைகளிலும் நீராடி, வழிபாடுகள் செய்து, அந்நதி கடலில் கலக்கும் இடத்திலும் (சங்கமம்) நீராடி, வழிபாடு செய்வது.

திரும்பும் வழியிலுள்ள அனைத்து நீராடுதுறைகளிலும் நீராடி, அனுட்டானங்கள் செய்து, ஆலய தரிசனம் செய்து தொடங்கிய இடத்தை அடைந்து முன் சொன்ன அனைத்து நியதிகளையும் செய்வது.

இரண்டாவது வகையில் நதி தொடங்கும்

இடத்திலிருந்தே (உற்பத்தி ஸ்தானம்)

மேற்கூறிய விதிமுறைகள், அனுட்டானங்களுடன் புனிதப் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.

பிறகு ,முதல் வகையில் கூறிய அனைத்து விதிமுறை களையும் பின்பற்றி, வலமாக நதியின் உற்பத்தி இடத்தை அடைந்து நீராடி,அனுட்டானங்கள், வழிபாட்டுடன் புனித நதிப்பயணத்தை நிறைவு செய்தல்.

மூன்றாவது வகையில் நதி உற்பத்தி ஆகும் இடத்தில் வழக்கமான விதிகளுடன் தொடங்கி முதல் புனித நீராடு துறையை அடைந்து அங்கு அனைத்து விதிமுறைகளையும் முடித்து, மீண்டும் ஆறு ஆரம்பிக்கும் இடம் சென்று அங்கு அதே வழிபாட்டு முறைகளைச் செய்து, இரண்டாவது நீராடுதுறையை அடைவது.

அங்கு அனைத்து சம்பிரதாயங்களையும் முன்பு போல் பின்பற்றி மீண்டும் நதி தொடங்கும் இடம்,செல்வது.

இவ்வாறு ஒவ்வொரு நீராடு துறையிலும் செய்து இறுதியில் வலமாக ஆறு உற்பத்தி ஆகும் இடத்தை அடைவது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



(மிகக் கடினமான,காலம் அதிகமாக எடுத்துக் கொள்ளும் முறை. இது 'அங்குல்யப்பிரதட்சணம்' எனப்படும்.)

நதி நிலத்தில் தொடங்கும் இடம்,

நதி உற்பத்தி ஆகும் முகத்வாரம்,

நதி உற்பத்தி ஆகும் இடத்திலிருந்து தொடங்கி முதல் நீராடு துறை முதல் அனைத்துத் துறைகளிலும் நீராடி.

ஒவ்வொரு கட்டத்தில் நீராடிய பிறகு மீண்டும் முகத்வாரத்தில் இருந்து தொடங்குவது என சுருக்கமாக இம்மூன்று வகைகளையும் கொள்ளலாம்.

ஆத்தூர் சங்கமத்தில் நீராடி அனைத்து நியதிகளையும் பின்பற்றி தாமிரபரணியின் தென்கரை வழியாக வலம் வந்த புண்ணியத் தலங்கள் :

ஆத்தூர்
திருக்கோளூர்
தென்திருப்பேரை
ஆழ்வார் திருநகரி
கருங்குளம்
கொட்டாரம்
கீழ்நத்தம்
திருவண்ணாதபுரம்
வண்ணாரப்பேட்டை
தருவை–முன்னீர்ப்பள்ளம்
கோபாலசமுத்திரம்
கரிசூழ்ந்த மங்கலம்
பத்தமடை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சேரன்மகாதேவி

வீரவநல்லூர்

திருப்புடைமருதூர்

அத்தாழநல்லூர்

கல்லிடைக்குறிச்சி

அம்பாசமுத்திரம் வழியாக

பாபவிநாசம் அடைந்து மலைமேலுள்ள தாமிரபரணி ஆற்றின் முகத்வாரமாகிய (உற்பத்தி ஸ்தானம்) பாணதீர்த்தம் வந்து

புனித நீராடி, அனுட்டானங்கள் முடித்து,சிவதரிசனம் செய்து தனது முதலாவது நதிப்பிரதட்சணத்தை நிறைவு செய்தான் சுந்தரசிவன்.

சென்ற இத்தலங்களிலெல்லாம் தனிஒருவனாக நீர்நிலைகளை தூய்மை செய்து,அவற்றைத் தெய்வமாய் வணங்கி நீராடினான்.

திருக்கோயில்களில் முட்செடிகள், புதர்கள் நீக்கி, உழவாரப் பணி செய்து தொழுதான்.

(இத்தனை ஊர்ப்பெயர்களையும் குறிப்பிட வேண்டுமா? என்ற வினா எழலாம்.

என்னைப்போன்ற சிலர் இந்த ஊர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம்; சென்றிருக்க மாட்டோம்.

பின்னாளில் ஸ்ரீஸ்வாமிகளாய் திகழப்போகும் மகான் ஒருவரின் புனித காலடிகள் பட்ட இந்த ஊர்களின் பெயர்களை யாவது அறிந்து கொண்டு, அங்கு சென்று நதியையும், ஆலயங்களையும் தரிசித்து உய்வதற்கான வழிதேடலாமே என்ற எண்ணம்தான்.)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரன் இவ்வாறு தாமிரபரணி ஆற்றை வலம்வர பன்னிரண்டு தினங்கள் ஆயின.

இவ்வாறு வலம் வந்து நிறைவு செய்தபின் சுந்தரன் செய்த முதற் செயல் என்ன ?

"கல்வித்திருவையும் செல்வத் திருவையும் காதலர்க்குச்
சொல்வித்து அடைவித்தருள வல்லாய்
என்றுஎன் துயர் களைவாய்
நல்வித்தியா நிதியாகிய
மேலவர் நாடுமுத்திச்
செல்விக்கினிய தலைவாஎன்
சுந்தர தேசிகனே!"

சுந்தரன் தாமிரபரணி ஆற்றை விதி முறைப்படி வலம் வந்து நிறைவு செய்த பன்னிரண்டாம்நாள் தனது சாஸ்திரப் பயிற்சி குருவாகிய வீரவநல்லூர் சோமசுந்தர சாஸ்திரிகளையே முதலில் தரிசித்து ஆசிபெறச் சென்றான்.

அவர் பாதத்தில் விழுந்து வணங்கினான்.

தாமிரபரணி புண்ணியநதி பிரதக்ஷணம் செய்து வந்தது பற்றி விரிவாகக் கூறினான்.

இந்த சின்னஞ்சிறு வயதில் தன்னந்தனியனாக நதி வலம் வந்தது அறிந்து மகிழ்ந்தார்.

இரவு, பகல், காடு,ஊர், மார்கழிப் பனி, ஒவ்வொரு கட்டத்திலும் விடியற்காலை நீராடல், தவறாத நியமமுறைகள், வழியில் எதிர்ப்படும் விஷ ஜந்துக்கள், 'சத்திரா போஜன, மடா நித்ரா' என்பதுபோல் கிடைத்த நேரத்தில் சிறிது உணவு, மரத்தடி அல்லது ஏதேனும் மடத்தில் சற்றே ஓய்வு, ஆலய தரிசனங்கள்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உழவாரத் திருப்பணி....... இப்படி எத்தனை இன்னல்களை எதிர்கொண்டானோ ?

பத்து வயதே நிறைந்த ஒருவனால் இவ்வளவும் நிறைவேற்ற முடியுமா ? என மற்றவர்களுக்கு வியப்பு ஏற்படலாம்.

சுந்தரனின் குருநாதருக்கும் இந்த ஐயம் சற்றே ஏற்பட்டது.

ஆனால் 'சுந்தரன் இவை எல்லாவற்றையும் கடந்து மிகப் பெரும் ஆன்மீக சாதனை செய்யப் பிறந்தவன்' என்று அவருடைய உள்ளுணர்வு கூறியது.

'நல்லது –கெட்டது,நான் –அவன்,ஆம்–இல்லை என்ற இரட்டைகளின் பேதங்களைக் கடந்தவன். அசையாத கர்மயோகி. எதையும் சம நோக்குடன் பார்ப்பவன். நானே அவன், அவனே நான் என்ற தத்துவ நோக்கை அடையப் போகிறவன்.

இவனை மாணாக்கனாக அடைந்தது நம்பேறு'

என்பதை குருநாதர் உணர்ந்து கொண்டார். மெய்சிலிர்த்தார்.

அவனது ஆன்மிக பற்றுதலையும்,கொண்ட கொள்கையில் அசையாத உறுதியுடன் இருப்பதையும் அறிந்து மகிழ்ந்தார்; அவனைப் பாராட்டினார்.

அவனிடம் காலத்திற்கேற்ற சில அறிவுரைகளைக் கூறினார்.

வெறும் அறிவுரைகளா அவை ?

எதிர்காலத்தை மாயக் கண்ணாடியில் பார்ப்பதைப் போல் தெளிவாக உரைத்தார்.

அப்படி என்ன கூறினார் ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"ஐயாதிருப்பணி நின்னடிக்கு
என்கை செய்யாது கண்ணீர்
பெய்யாதிருப்பதும் அகம்
குழையாதுஅறும் பேய்மதியை
மெய்யாய் திருப்ப உன்னால்
முடியாதுகொல் ? மிக்க அருள் நீ
செய்யாது இருப்பது அழகோ ? என்
சுந்தர தேசிகனே !"

அந்தக் காலத்து ஆசிரியர்கள் தம்மினும் தன் மாணவன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினால் பெருமிதம் கொள்வர்; இறும்பூது எய்துவர்.

தாம் கற்றது கையளவே; கல்லாதது உலகளவு என்று அடக்கமுடன் இருந்தனர்.

கைநிறைய சம்பாத்தியமோ, வருமானத்திற்கான வேறு வழிகளோ இல்லாத போதும் தாம் கற்றதை மாணவர்களுக்குக் கற்பிப்பதிலும்,அக்கல்வியில் அவர்கள் மேம்பட்டு விளங்குவதிலும் மகிழ்வு கொண்டனர்.

வெறும் ஏட்டுப்படிப்பு மட்டுமன்றி புராண,இதிகாசங்கள்,நீதி நெறிகள்,ஸம்ஹிதைகள்(இதைப்பற்றிப் பின்னர் விரிவாகப் பார்ப்போம்.) இலக்கண, இலக்கிய நூல்கள் அனைத்தையும் பயிற்றுவித்தனர்.

இதிகாச நாயகர்கள் அவர்களின் ஆட்சி முறைகள் மட்டுமின்றி தற்கால நாட்டு நடப்பையும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர்.

நாம் இத்தொடரின் தொடக்கத்தில் கண்டது போல் நமது சனாதன தர்மமும், அதன் வழிமுறைகளும் அன்னியர்களின் வன்முறைகளாலும், ஆட்சி அதிகாரத்தாலும் பாழ்பட்டு இருந்தன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நமது பண்பாடும், கலைகளும், இலக்கியங்களும், சமய நெறிமுறைகளும் பலமுனைத் தாக்குதல்களுக்கு ஆளாகி இருந்தன.

இந்தப் பின்னணியை மனதில்கொண்டு வீரவநல்லூர் சுந்தர சாஸ்திகள், சுந்தரனிடம் கூறத் தொடங்கினார்:

'சுந்தரா! என்னிடம் கற்றுக்கொள்ள வேண்டிய சாஸ்திரங்கள் அனைத்தையும் கற்றுக்கொண்டு விட்டாய்.

நானும் வஞ்சனையில்லாமல் உனக்குப் போதிக்க வேண்டியவற்றைப் போதித்து விட்டேன்.

இத்தனை ஆண்டுகால அனுபவத்தில் உன்னைப்போன்ற ஒரு ஒப்புயர்வற்ற மாணவனை இதுவரை நான் கண்டதில்லை.

என் தலைமாணாக்கன் நீயே!

என்னிலும் சிறந்த ஆசிரியரைத் தேடி நீ செல்லும் நேரம் வந்துவிட்டது. (இதைச் சொல்லும்போது அவருடைய நா தழுதழுத்தது;ண்கள் பனித்தன.)

சித்திரம் வரைவது கைப்பழக்கத்தால் வரும்,

நாவின் பழக்கதால் மொழி செம்மையடையும்,

கற்ற கல்வி மனதின் பழக்கமாய் அமையும்,

ஒழுக்கத்தின் வழி நடக்க நடக்க நடையில் நின்றதொரு நாயகனாகலாம், நட்பு, தயை, வள்ளல் தன்மை இவை அனைத்தும் ஒருவனின் பிறவிக் குணமாகும்.

இவை அனைத்தும், இவை அனைத்திற்கும் மேலான குணாதிசயங்களும் உன்னிடம் அமைந்துள்ளதை நான் அறிவேன்.

இதைத் தவிர நம் பாரததேசத்தைப் பற்றிய சில சிந்தனைகளும் என்னுள் எழுகின்றன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நம் சனாதன, புராதன பூமி மற்றும் அதன் எதிர்காலம் பற்றி என்னுள் எழும் சிந்தனைகளைக் கூறுகிறேன். கேள்!"எனத் தொடர்ந்து கூறினார்.

மேலும் என்ன சொன்னார்?

"பள்ளமடையினில் வெள்ள
முற்றாங்கு உன்பதத்தில் அன்பாம்
உள்ளம் அடையச்செய
எனைஆளவும் உன்னுவையோ
வெள்ளமடை கடந்து ஆங்கு அடியார்க்கு
அருள்வெள்ளம் நல்கும்
தெள்ளமுதே! கற்பகமே! என்
சுந்தர தேசிகனே!"

'நான் உனக்குப் பாடங்கள் நடத்தும் பொழுது செய்திகளைக் கூறி பொருள் விளக்கம் கேட்பேன்.

மிக நுட்பமானதும், புனிதமானதும், உண்மையான தும், உன்னதமானதுமான விளக்கங்களைக் கூறுவாய்.திறம்பட உரைக்கும் பொருளையும், நயம்பட உரைக்கும் செய்திகளையும் கேட்டு வியப்பேன்.

உனக்கு முன்ஜன்ம வாசனாபலமும் (நல்லூழும்), கடவுள் அருளும் பரிபூரணமாக் கிட்டியுள்ளன.

உனது பருவ வயதிற்கு மேலான பாண்டித்தியம்(புலமை) பெற்று யாவரையும் வியக்க வைக்கிறாய்.

பத்தமடையும், வீரவநல்லூரும் உன்னால் சிறப்புப் பெற்றுள்ளன.

ஆனால்.....' (என்று கூறி, சிறிது நிறுத்தி, பெருமூச்சொரிந்து, இடைவெளி விட்டுத் தொடர்ந்தார்.)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'சுந்தரா! வருகின்ற காலம் நமது சனாதன தர்மத்திற்குப் பல சோதனைகள விளைவிக்கும் காலமாகத் தோன்றுகிறது.

நமது பண்பாட்டின் மீதும், நாகரிகத்தின் மேலும் கடுமையான தாக்குதல்கள் நடக்க உள்ளன. அதற்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்து விட்டன.

வெளிதேசங்களிலிருந்து வியாபாரம் செய்கிறோம் என்ற போர்வையில் நுழைந்த அந்நிய ஆதிக்க சக்திகள் நம் அரசியலையும் ஆன்மீகத்தையும் அசைத்துப் பார்க்கின்றன. அதில் அவர்கள் வெற்றிபெற்று விட்டார்கள் என்றே தோன்றுகிறது.

முதலில் மதராசப் பட்டனத்திலும் அதன் பிறகு நம் பகுதியிலுள்ள சாயர்புரத்திலும் அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் காலூன்றி விட்டனர்.

பணத்தையும், பதவியையும் காட்டி மக்களைத் தங்கள் பக்கம் இழுக்கின்றனர்.

வந்திருப்பவர்கள் வாய்பேச்சில் மட்டுமல்லாது நவீன ஆயுதங்களைப் பிரயோகம் (செலுத்துதல்) செய்வதிலும் வல்லவர்களாய் உள்ளனர்.

நமது பண்பாட்டை அசைத்தால் நாட்டையே அசைத்து மக்களை நமது சனாதன மதத்திலிருந்து அவர்களின்மதத்திற்கு மாற்றிவிடலாம் என்பதைக் கண்டுகொண்டுள்ளனர்.

நம் தாய்நாட்டின் மொழியையும் அதன் வழி எழுந்த பக்தி இலக்கியங்களையும் சிதைக்கும் முயற்சிகள் தொடங்கி விட்டன.

மொழிபெயர்ப்பு என்ற பெயரில் தங்களது மதத்தின் கருத்துக்களைத் திணித்து வருகின்றனர்.

நம் மக்களும் அவர்களின் வஞ்சக எண்ணங்கள் புரியாது அவர்கள் விரித்த வலையில் விழுந்து வருகின்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தமிழ்மொழியைப் பக்தியின் மொழியென்றே உண்மை அறிஞர்கள் உரைப்பர்.

மொழிக்குத் தொண்டு செய்தாலே நம் சமயத்திற்குத் தொண்டு செய்வது போல். நம் புண்ணிய தேசத்தின் புனிதத்தைக் காக்கும் பணி நம் அனைவருக்கும் உள்ளது.

தாய்த் திருநாட்டைத் தகர்த்திடும் மிலேச்சரின் செயல்களை நாம் அறவழியில் எதிர்கொள்ள வேண்டிய நேரமிது!

தொல்பொருள் ஆய்வாளர்களும், பழம்பொருள் ஆர்வலர் களும் நம் தாய்க்கு நிகரான தாய்நாட்டின் கலாச்சாரம், நாகரிகம் தொடங்கிய காலத்தைச் சரியாகக் கணிக்க முயலாமல் இன்னமும் திணறிய வண்ணமே உள்ளனர்.

அத்தகைய தாய்க்கு நேரிடும் ஊறைக் கண்டு நாம் மௌனமாக இருத்தல் தகுமோ ?

வித்தையில் தெளிவு, உறுதி, உண்மை, நல்லொழுக்கம் யாவும் ஒருங்கே அமைந்த உன்னிடம் மேற்கொண்டு சொல்ல வேண்டிய சில செய்திகள் இன்னமும் உள.கேட்பாயாக!'

என்று அவனின் அறிவு தோய்ந்த முகத்தைக் கூர்ந்து கவனித்தார் வீரவநல்லூர் சுந்தர சாஸ்திரிகள்.

மேலும் என்ன சொன்னார் ?

"வான்மாரி நோக்கும் பயிர்எனத்
தாய்தன் மதுரமுலைப்
பான்மாரி நோக்கு மகவென
உள்ளம் பதைத்து விழி
தான்மாரி பெய்ய உடல்புளகிப்ப



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நின்தண்ணருளாக
தேன்மாரி நோக்குமெனக் கருள்
சுந்தர தேசிகனே!"

மேலும் சுந்தரசாஸ்திரிகள் கூறியதாவது:

"வேள்வி, தானம், தவம், வேதம், வாய்மை ஆகிய ஐந்தும் புனிதமானவை.

யார் கோபம், காமம், பேராசை, டம்பம் இன்றி, மெய், மொழி, வாக்குத் தூய்மையுடன் தங்களின் செயலைக் கடமை எனக் கருதுகின்றாரோ அவரே சீடர் என்பர்.

உலகின் புற இன்பங்களைத் துறந்து உண்மையை உரைத்து அறத்தின்படி ஒழுகுபவர்களே ஆச்சாரமுடையவர்கள் (ஒழுக்க முள்ளோர்).

இத்தகைய ஒழுக்கம் மிக்க தலையாய சீடன் நீயே!

உன்னுடைய ஆற்றலுக்கு நீ கற்றுக்கொள்ள வேண்டியவை இனி எதுவும் இல்லை என்பது எனது கருத்து. ஆயினும், உலகியல் நோக்கில் மேலும்,மேலும் கற்றுக்கொள்ள வேண்டியவை பரந்து விரிந்து, எல்லையற்று உள்ளன.

நான் முன்னரே கூறியதுபோல் நமது சனாதன சமயம் பரந்த விரிந்த நோக்கமுடையது .சனாதன சமயத்தில் பிறந்தவன் மிகவும் பாக்கியசாலி(பேறு பெற்றவன்.) எவனும் வேறு சமயங்களில் இருந்து சனாதனவாதியாக கட்டாயமாக மாற்றப்படுவதில்லை.

நம்சமயம் பல்வேறு வகையான கொள்கைகளுக்கும் இடம் கொடுத்து, அவைகளில் சரியானவற்றை ஏற்றுக்கொள்ளும் தன்மை உடையது.

இந்த சனாதன மதத்திற்கு இந்துசமயம் என்று தற்போது பெயர் குறித்துள்ளனர்.

இந்துமதம் என்ற எழில்மிக்கப் பூங்கொடியிலே வாசம் மிகு பல



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வண்ண மலர்களுண்டு. அந்தப் பலவற்றுள் சைவமும், வைணவமும் சிறந்து திகழ்கின்றன.

நமது தமிழ்சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, கலை, வாழ்வியல், மொழியின் வீச்சு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இவ்விரு பிரிவுகளும் பெரும்பங்காற்றி வருகின்றன.

தம்மை இகழ்ந்தவர்களையும் பொறுத்துக் கொண்டு, அவனுடைய தீவினைப் பயனால் அவ்வாறு நம்மை இகழ்கின்றான் என்பதை உணர்ந்தவன்தான் சனாதனவாதி. அவ்வாறு இகழ்வதால் இகழ்ந்தவன் நரகத்தில் இடர்ப்படுவானே என இரங்கும் உத்தமனே நம் சமயத்தவன்.

எனவே வேதம் சிறந்த நம் தமிழ்நாட்டில் நம் சமயமும், பண்பாடுகளும் அழிந்துபட நம்மக்களே காரணமாக உள்ளனர் என்பதே வருத்தம் தரக்கூடியதாக இருக்கிறது.

இந்த நிலையில் உன்னுடைய வாழ்வின் அடுத்த அத்தியாயம் தொடங்குகிறது.

இந்த சோபகிருது வருடம் (1843) தை மாதத்துடன் நீ என்னிடம் பாடம் கற்க வந்து மூன்றாண்டுகள் நிறைவடைகின்றன.

இனி மேற்கொண்டு கற்க கல்லிடைக்குறிச்சி சாஸ்திரிகளிடம் போ. (அவர் பெயர் குறிப்பிடப்படவில்லை).

அவர் வேதசாஸ்திர பண்டிதர், சிவபூஜை செய்வதில் மேன்மை பெற்றவர், வேத ஆகமங்கள் கூறிய நியதியுடன் வாழ்வை அமைத்துக் கொண்டவர், நியம நிஷ்ட அனுஷ்டானங்களுடன் விளங்குபவர், பல இளம் மாணாக்கர்களுக்கு வேத அத்தியயனம், சாஸ்திர பாடங்களைக் கற்றுத் தருபவர்.

அவரை இனி குருவாகக் கொள்வாயாக!' எனக்கூறி சுந்தரனுக்குப் பிரியாவிடை கொடுத்து வழி அனுப்பி வைத்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பத்தமடையிலிருந்து, கல்லிடைக்குறிச்சி கன்னடியன் வாய்க்கால் அருகில் அமைந்துள்ள விநாயகர் கோயில் நோக்கி சுந்தரசிவனின் வாழ்வின் அடுத்த கட்டம் நகர்ந்தது.

அங்கு சிவனின் பின்னாள் சீடர்கள் இருவரின் அறிமுகம் கிடைத்தது.

யார் அவர்கள்?

"சங்க மலங்களை வாவி அரிமளம்
தன்னில் வந்தென்
துங்க மலங்களை யென்றிறைஞ்
சாமையிற் றுன்னுபவ
பங்க மலங்களைத் தீர்த்துஅருள்
என்றுஉன் பதமலராஞ்
செங்கமலங்களை வாழ்த்தினன்
சுந்தர தேசிகனே!"

(பத்தமடையில் சுந்தர சாஸ்திரிகளிடம் பாடம் பயின்ற சுந்தரனிற்கு அவர் கூறிய அறிவுரைகளையும், அன்றைய சமுதாயம் சந்தித்த இனி சந்திக்கப் போகும் அவலங்களைப் பற்றிக் கூறினார்.

கலாசார, பண்பாடுகள் சீரழிந்து வருவதைச் சுட்டிக் காட்டினார்.

"வானாய் வளியாய் ஒளியாய்ப்
புனலாய் வசுந்தரையாய்
குருவாய் நல்லின்ப மகாநதியாய்
என்குல தெய்வமாய்த்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருவாய் அருளவருவாய் என்
சுந்தர தேசிகனே!"

சுந்தரன் பெயருக்கேற்றாற்போல் அழகான உருவ முடையவன்.

முகத்தில் லக்ஷ்மிகளை கொண்டு விளங்கும் சுந்தரன் சிவபிரானைப்போல் சிவந்த தேகம் உடையவன்.

இருகைகளும் முழங்கால் வரை நீண்டிருக்கும்—உலகில் மிகச்சிலருக்கே உரிய கம்பீர அமைப்பு.

ஆஜானுபாகு.

கருணைபொழியும் கண்கள்.

அவன் வாயினின்று நல்ல சொற்களே வெளிவரும்.

எல்லோரிடத்தும் இரக்க சுபாவம் உடையவன்.

எல்லோரும் மேலான நிலை அடைய வேண்டும் என்று விரும்புபவன்.

பெரியவர்களை எங்கு கண்டாலும் வணங்கும் தன்மை உடையவன்.

சிவசிந்தனை அன்றி வேறொன்றை அறியாதவன்.

அவன் சொல்லும்,செயலும்,செய்கையும் அனைவரையும் பரவசப்படுத்தும்.

சுந்தரனுடன் பேசுவதிலும்,அவனுடைய கருத்தமைந்த சொற்களைச் செவிமடுப்பதிலும் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

பெரியோர்முதல் சிறியோர்வரை, படித்தவரிலிருந்து பாமரர் வரை அனைவரிடமும் இன் முகத்துடன் பழகி வந்தான்.

கழுத்தில் ஒற்றை உருத்திராக்கமும், நெற்றியில் எப்போதும் விளங்கும் திருநீற்றுப் பூச்சுமாய் தேஜசுடன் விளங்கினான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தனது பெயராலும், உருவத்தாலும், குலத்தாலும், குணத்தாலும், கல்வி அறிவாலும், நல்லொழுக்கங்களாலும் ஊரினரிடையே சுந்தரனின் பெருமை உயர்ந்து விளங்கியது.

நீரின் அளவினதே ஆகும் நீராம்பல்; கற்ற நூலின் அளவே ஆகும் நுண்ணறிவு; முன்பு செய்த தவத்தின் அளவே ஆகும் ஒருவன் பெறும் செல்வம், குடிப்பிறப்பின் அளவே ஆகும் ஒருவன் கொண்ட குணம் என்பதற்கொப்ப சுந்தரனின் வாழ்க்கை முறை அமைந்திருந்தது.

பத்தமடையிலிருந்த அனைத்து மக்களும் ,சாத்திரத்தில் கரைகண்ட மேதைகள் உட்பட தத்தமது வீட்டு நிகழ்ச்சிகளுக்கு சுந்தரனிடம் உத்தரவு கேட்டு அதன்படி நடந்து கொண்டனர்.

ஒரு முனிபுங்கவரை சீடர்கள் எப்படி மதித்துப் போற்றுவரோ அவ்வாறே ஊரினர் அவரை மதித்து மரியாதை செலுத்தினர்.

எல்லா இனத்தவரும் தங்கள் வீட்டில் நடைபெறும் திருமணம், காதணி, உபநயனம், குழந்தைகளின் முதலாமாண்டு கொண்டாட்டங்கள் பள்ளிப்படிப்பு, சீமந்தம், பிறந்தநாள்...... இவ்வாறு எந்த நிகழ்ச்சி ஆனாலும் சுந்தரன் குறித்துத் தரும் நாட்களிலேயே நடத்தினர்.

தொடர்ந்து வேதங்கள் ஓதியும்,காயத்ரி ஜபித்தும் ,சிவபூஜை செய்தும் வந்ததால் சுந்தரன் அறியாமலேயே (!) அவனிடம் வாக்குப் பலிதம் –சொல்வது நடக்கும்– ஆற்றல் இயல்பாக அமைந்தது.

ஒருநாள்...

பத்தமடை வீதியில் நடந்து செல்லும் சுந்தரனைப் பார்த்து ஒரு அம்மையார் கேட்டார்:

‘டேய் சுந்தரம்! என் பெண்ணிற்குத் திருமணம் ஒவ்வொரு முறையும் பேசிப் பேசி நின்று விடுகிறது. அவளுக்கு எப்பத்தான் கல்யாணம் நடக்கும் ? உன் வாயால் நல்லவார்த்தை சொல்லேன்.’

இதைக்கேட்ட சுந்தரன் என்ன பதில் சொன்னான் ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீஸ்வாமிகளின் மாணாக்கரில் ஒருவரான திருநெல்வேலி மாவடி சிதம்பரம் பிள்ளை அவர்கள் இயற்றிய அஷ்டபந்தன கவிதை :

**நேரிசை வெண்பா**

“உருவாவா னோர்கா லுணர்வா லுணரா
வருவாவா னம்புவிகட் கெல்லாங் –குருவாவான்
மூடக நில்லாது மோன மளித்தாடி
கோடகநல் லூர்பிறந்த கோன்.”

அந்தப் பெண்ணிற்கு ஒரு வாரத்திற்குள் திருமணம் நிச்சயமாகியது.

ஒவ்வொரு முறையும் பெண் பார்க்கும் படலம் நடக்கும். ‘ஊருக்குப் போய்த் தகவல் சொல்கிறோம்’ என்று பஜ்ஜி, சொஜ்ஜியைத் தின்றுவிட்டுப் போவார்கள்.

ஆனால் ஒருவர்கூட ஊர் சேர்ந்து பதில் போட்டதில்லை.

இத்தனைக்கும் அழகான பெண்தான். ஆனால் என்ன செய்வது ?

பெண்ணைப் பெற்ற தந்தை ஒவ்வொரு ஊராக அலைந்து வரன் பார்த்து, ஜோசியர்களைத் தேடிப்போய்ப் பொருத்தம் பார்த்ததுதான் மிச்சம்.

எத்தனை செலவு, எத்தனை அலைச்சல், எத்தனை சிரமம், கடைசியில் திருமணம் நிச்சயம் ஆகாமலேயே வருடங்கள் ஓடின.

பெண்ணிற்குப் பத்து வயது நிரம்பி விட்டதே, இன்னும் திருமணம் ஆகவில்லையே என்று பெற்றோர்கள் மனம் மருகினர்.

அவர்கள் வேண்டாத தெய்வமில்லை.

பெற்ற மகளைப் பார்க்கும் பொழுதெல்லாம் ‘துக்கிரிப் பொண்ணு, குதிராட்டம் வீட்டுல உக்காந்திண்டு இருக்கு.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இதுக்கு எப்பத்தான் கல்யாணம் ஆகி புகுந்த வீட்டுக்குப் போவாளோ? இவ வயசொத்த பொண்ணுங்கெல்லாம் கல்யாணமாகி, சமத்தாக் குடித்தனம் நடத்தறதுகள். இதுக்கு இன்னும் பகவான் கண்ணைத் திறக்கலியே!' என்று அங்கலாய்த்தனர்; கவலைப்பட்டனர்.

அந்தப் பெண்ணின் அம்மா, சுந்தரனிடம் 'என் பொண்ணுக்கு எப்பத்தான்டா கல்யாணம் ஆகும்? நல்ல வார்த்தையாச் சொல்லுடா' என்று கேட்டதற்கு சுந்தரன் அளித்த பதில் மனதில் நிழலாடியது.

'மாமி! ஏன் கவலைப்படறேள். ரொம்ப நல்ல இடமாய் அமையும். சீக்கிரம் கல்யாணம் நடக்கும்'

கல்யாணம் விரைவில், வெகு விமரிசையாக நடந்தது. ஊரினர் அனைவரும் அந்தப் பெண்ணிற்குக் கிடைத்த மணவாளனைப் பற்றி மனம் மகிழ்ந்து பேசினர்.

பெற்றவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

சுந்தரனின் வாக்குப் பலிதம் ஊர் முழுவதும் பேச்சாயிற்று. அனைவரும் சுந்தரனை மதிப்புடனே பார்த்தனர்.

அவனுடன் உரையாடுவதையும், நேரம் செலவிடுவதையும் பெரும் பேறாகக் கருதினர்.

சுந்தரன் ஸ்திதப் ப்ரக்ஞன்.' (உறுதியான உள்மன ஆற்றல் உள்ளவன்.)

நல்லவர்கள் அவனிடம் நெருங்கி வந்தனர்.

அல்லவர்கள் அவர்களே ஒதுங்கிக் கொண்டனர்.

இது உலக நியதிகளுள் ஒன்று.

அவனுடன் நெங்கியவர்களுடனான நட்பு வளர்பிறை போல் நாளும் வளர்ந்து வந்தது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சிறுமதி படைத்தோர் இவனை நெருங்க அஞ்சினர் – (அதற்கான அருகதை இல்லாததால்) – அத்தகையோரின் தொடர்பு தேய்பிறை நிலவு போல் மறைந்தே போனது.

ஆனால் இதுபற்றி, இவர்களைப்பற்றி மனதில் எதையும் நினையாது தனது தகுதிகளை மேலும் பெருக்கிக் கொள்வதிலேயே முனைப்பாக இருந்தான்.

அத்தகுதிகளால் மக்கள் மேலான நிலையை அடைய வேண்டும் என்ற உறுதிப்பாட்டை மனதில் கொண்டான்.

பிறிதொரு சமயம் மாலை நேரம்.

கோயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்த சுந்தரசிவனிடம், அவனது வாக்குப் பலிதத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த ஒரு பாட்டியம்மாள் தன் குறையைத் தெரிவித்தார்.

அந்தப் பாட்டியம்மாளின் குறை என்ன ?

**எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்**

“பொன்பூத்த பொழில்சூழுங் கோடகநல் லூரின்முன்
பூசுராகு லந்த ழைப்பப்
புனைமதிச் சடையின்மிட றடகறையை விடவுனிப்
பூங்குழவி யாயு தித்தே
மின்பூத்தி லங்கவத னாற்சுந்த ரப்பெயர்
விளங்கமறை முடிவ னைத்து
மெய்யுடன்வ ளர்ந்துவர வானந்த மேவீட்டில்
வீண்போக்கு மென்போ லியர்க்
கன்பூற்றி யின்பாக்கி யகிலங்க டன்னடிக்
கடிமையாயேவல் பூரிநா
ளரிமளந் தன்னில்வந் தானந்த மயமாகி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



யரிய பிர மத்த டங்கத்
துன்பூத்தை யில்லாத விவனுளா ரவனடியர்
தொலைவில்பொரு ளால மைத்த
சொன்னமய மாகவொளி ராலயங் குடிகொண்ட
துய்யசற் குருநாதனே."

'டேய்! சுந்தரம். இங்கே வாடா. எங்கள் வீட்டில் ஆண் பிள்ளைகளே இல்லை. என் மருமகளுக்கு ஒரு பையன் பிறப்பானா? அக்குழந்தைக்கு நான் விளையாட்டுக் காட்டுவேனா? குழந்தை என் முகம் பார்த்துச் சிரிக்குமா? இந்த பாக்கியம் (பேறு) எனக்குக் கிட்டுமா? நல்லதாக ஆருடம் கூறி என் மனதைக் குளிரச் செய்வாயா?' என்று தள்ளாத வயதிலும் தளராமல் கேள்விக் கணைகளைத் தொடுத்தார் ஒரு பாட்டி.

இப்படிக் கேட்ட பாட்டி உரிய காலத்தில் தன்பேரனை மடியில் போட்டு சீராட்டினாள்; கொஞ்சினாள், உச்சிமோந்தாள், திருஷ்டி கழித்தாள். இரண்டு பொக்கை வாய்களும் ஒன்றின் முகம் பார்த்து மகிழ்ந்தன.

பாட்டி நினைத்துக் கொண்டாள்: அன்றே சுந்தரம் சொன்னான்.' பாட்டி! உன் மருமகளுக்குத் தங்க விக்ரஹம் போல பிள்ளைக் குழந்தை பிறக்கும். நீ அதை மடியில் போட்டுக் கொஞ்சுவாய். கவலைப்படாதே!'.

இன்று அவன் சொல் பலித்து விட்டதே என ஊர் முழுதும் சொல்லி ஆனந்தம் அடைந்தாள்.

மற்றொரு நாள்...

சுந்தரன் கோயிலுக்குச் செல்லும் போது ஒரு பெரியவர் அவனுடன் சேர்ந்து கொண்டார். சுந்தரனுடன் பேசத்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தொடங்கினார்: ‘சுந்தரம்! என் பையனுக்குப் பன்னிரண்டு வயதாகிறுது. படிப்போ ஏறவில்லை. பைத்தியம் பிடித்தவன்போல் இருக்கிறான். சோம்பேறியாய்த் திரிகிறான். தனக்காகவும் எதுவும் தெரிவதில்லை; நாம் சொல்வதையும் கேட்பதில்லை. வெளியில் யாரிடமும் நானும் என் மனைவியும் இத்துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதில்லை.

நீ வயதில் சிறியவனாயினும் ஒழுக்கத்திலும், கல்வியிலும் மேம்பட்டு இருக்கிறாய். நீ சொன்னால் அது பலிக்கும் என்று ஊரே சொல்லுகிறது. எங்கள் குறை தீருமா? எங்களுடைய பையன் மற்றவர்களைப்போல் நல்லபடியாக இருப்பானா? சொல்லு சுந்தரம்.’

கோயிலில் சிவதரிசனம் செய்து இருவரும் வெளியில் வந்தனர். சுந்தரம் சொன்ன பரிகாரத்தை அந்தரங்க சுத்தியோடு செய்தார்.

சுந்தரம் கூறியதை நினைவு படுத்திப் பார்த்தார்.

‘உங்கள் பையன் சிறந்த சிவபக்தனாகவும், ஊரினர் மெச்சும் மேதையாகவும் ஆவான். இரண்டாண்டுகள் பொறுத்திருங்கள்.

தினமும் சிவன்கோயிலில் இலுப்பை எண்ணெய் தீபம் போட்டு வாருங்கள்.’

தன் பிள்ளை நல்லபடியாக வேண்டுமென்று முழு நம்பிக்கையுடன் சுந்தரன் சொன்னபடி சிவன்கோயிலில் இலுப்பை எண்ணெய் தீபம் தினந்தோறும் ஏற்றி வந்தார்.

இரண்டாவது ஆண்டில் அந்தச் சிறுவன் மற்றவர்களைப் போல் இயல்பு நிலைக்கு வந்தான். இதுநாள் படிக்காத பாடங் களையும், சாஸ்திரங்களையும் ஒருசேரக் கற்றான். அப்பகுதியில் சாஸ்திரத்தில் மேதையாகத் திகழ்ந்தான். அவனின் குடும்பத் தினரும், ஊரினரும் சுந்தரனைத் துதித்துக் கொண்டாடினர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மாட்டு நிறை வைத்திருந்த கோனார் பெருமகனார் ஒருவர் சுந்தரனிடம் 'தன்மாடு காணவில்லை அது கிடைக்குமா? மாடுதான் தன் ஜீவனம்' என்றார் .

சுந்தரன் கூறியபடி சிவன் கோயிலைச் சுற்றியிருந்த முட்செடிகள் புதர்களை நீக்கி உழவாரப்பணி செய்தார். இரண்டாவது நாள் காணாமல் போன மாடு தன் எஜமானர் வீட்டிற்கு வந்தது. மாட்டின் உரிமைக்காரர் மிக்க சந்தோஷமடைந்தார்.

தான் சொல்வதெல்லாம் நடக்கின்றன என ஊரார் போற்றுவதால் தன் நிலையில் திரியாது அடக்கமாகவே இருந்தான்.

விளக்கு ஒளிரும் இடத்தில் இருள் இருக்காது அல்லவா?

அதுபோல் ஒழுக்கம் நிறைந்த சுந்தரனிடம் புன்மைக் குணம் என்ற இருட்டு என்றுமே இல்லாது ஒடிற்று.

ஒழுக்கமும், சினமின்மையும், பொறையுடைமையும், பிறர் துன்பம் கண்டு இரங்கும் அருளுடைமையும் இயல்பாகவே சுந்தரனிடம் அமைந்திருந்தன.

பத்தமடையில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் காணாமல் போன ஒருவனின் பெற்றோர் சுந்தரனை நாடி வந்தனர்.

அவர்களின் குறை என்ன?

"துய்யதா மாயிரத் தெழுபதா மாண்டினைத்
தொடருசெய வருடமதனிற்
சொன் மகர மாதமுந் தேதியிரு பத்தாறு
சூழ்ந்தகுரு வாரமிடையே
செய்யபுனர் பூசநாண் மிதுனலக் கனமுமாய்ச்
சேர்ந்த சுபநாளின் முனிவோர்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



செப்புமறை யோர்வேத மோதமற்ற வனடியர்
செந்தீ வளர்ப்ப வெங்குந்
தையலர்க ளாடவர்கள் சகலதே யத்திலுள
சற்சனர்க ணற்சீடர்கள்
சயசயவெ னக்கீத நாதாந்த யங்கவெந்
தணரசன மேன டக்கப்
பையவெண் பந்தனங் கொண்டதரி சனமுதற்
பாலித்த பரம குருவே
பாருளோர் வாழ்கவரி மனம் வாழ்க வதிலுறும்
பைங்கூழ்கண் முதல் வாழ்கவே!”

பத்தமடையில்...... பெற்றோருக்கு அவன் ஒரேபிள்ளை.

மிக செல்லமாக சீராட்டி, பாராட்டிப் பெற்றோர் வளர்த்தனர்.

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த அந்தக் குழந்தை நன்கு வளர்ந்து வந்தது.

ஆண்டுகள் உருண்டோடின.

குழந்தை, சிறுவனாகியது. வயது இப்பொழுது 15.

ஒருநாள் அவனுடைய தந்தை பையனை சிறிது கடினமாகக் கடிந்துகொள்ள நேரிட்டது.

மிகச் செல்லமாக, செல்வத்தில் வளர்ந்த பையனால் கடினமான வார்த்தைகளைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

வீட்டை விட்டு யாருக்கும் தெரியாமல் வெளியேறி விட்டான்.

கோபம் தணிந்ததும் வீட்டிற்குத் திரும்பி விடுவான் எனப் பெற்றோர் எதிர்பார்த்திருந்தனர்.

அன்று இரவு திரும்பி வரவில்லை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இப்படிப் பல இரவுகள் பெற்றோர்கள் காத்திருந்தனர்.

இரவுகள் பல கடந்தன.

ஆனால்.....

உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் கடிதங்கள் எழுதினர். பலனில்லை.

நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் என்று காலம் உருண்டோடியது.

பெற்றவர்களின் கண்ணீர் மட்டும் நிற்கவில்லை.

'நாள்தோறும் விடிவதும், அஸ்தமிப்பதுமாக நாட்கள் குறைந்து வருவது கண்டும் அதை உணராமலேயே வாழ்வைக் கழித்து வருகிறோம். யாக்கைக்கு ள்ள வயதை செலவழித்து வருகிறோம்.' என்ற நினைவே இல்லாமல் பெற்றவர்களின் நாட்கள் கடந்தன.

பையன் வீட்டை விட்டுச் சென்று பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன.

கவலையினால் பெற்றோர்கள் மனம் தளர்ந்தனர். முதுமையினால் உடலும் தளர்ந்தது.

தகப்பனார் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையானார்.

அப்பையனுடைய தாயார் சுந்தர சிவனைத் தேடி வந்தார். 'சுந்தரம் வீட்டை விட்டு ஓடிய பையன் எங்கே இருக்கிறானோ? தெரியவில்லை. மாமாவிற்கும் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. ஏதாவது நடக்கறதுக்கு முன்னாடி அவன் வந்துவிடுவானா ?...' இப்படிச் சொல்லி வரும்பொழுதே தொண்டை அடைத்தது;கண்கள் கலங்கின.

அவரின் துன்பநிலையைக்கண்ட சுந்தரசிவன் இரண்டொரு ஆறுதல் வார்த்தைகள் கூறி அனுப்பினான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரன் கூறியபடி இரண்டாவது நாள் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல்போன பையன் திரும்பி வந்தான்.அவன் கொழும்பு,சிங்கப்பூர் என வெளிநாடுகளுக்குச் சென்றான். உழைத்தான்; சம்பாதித்தான். அலுவலக நிமித்தமாகத் தாய்நாடு வந்தான். வேலைகளைச் செவ்வனே முடித்துக் கொண்டான்.பெற்றவர்களைத் தேடி ஓடி வந்தான். வீட்டினுள் நுழைந்தான். தாய் தந்தையரைத் தொழுதான். அவர்களின் ஆசியைப் பெற்றான்.

சுந்தரன் கூறிய ஆறுதல் வார்த்தைகள் உண்மையானது அறிந்து பெற்றோரும் ஊரினரும் மகிழ்ந்தனர்.

இவ்வாறான நிலையில் மகன் திரும்பி வந்த ஒருவாரத்திற்குள் தந்தை இறைவன் அடி சேர்ந்தார்.

தந்தையின் அபரக் கிரியைகளைத் தனயன் தவறாமல் செய்தான்.

தாயுடனேயே தங்கி விட்டான்.

அந்தப் பையனுடைய தகப்பனார் காலமான செய்தி மகிழ்ச்சிக்குரியதல்ல.

ஆனாலும் பதினைந்து ஆண்டுகள் காணாமல் போயிருந்த மகன் திரும்பி வந்ததும்,சிலநாட்கள் தந்தையுடன் இருந்ததால் அவர் மகிழ்ச்சி அடைந்ததும்,அவர் மறைந்த பிறகு ஒரு மகனாக இறுதிக்கடன் செய்ததும் நினைந்து உருகக் கூடியதொன்றல்லவா ?

'இரண்டு நாட்களில் மகன் திரும்பி வருவான்'

என்று சுந்தரன் கூறிய ஆருடம் பலித்ததையும்,பெற்றமகன் சரியான நேரத்தில் வீடு திரும்பி வந்ததையுமே ஊரினர் பேசி வியந்தனர்.

சுந்தரசிவன் நிகழ்த்திய அற்புதங்கள் இவை மட்டும்தானா ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஆரம்ப கால அற்புதங்கள் இவ்வாறு பல இருப்பினும் நம் சரித நிகழ்வுகளுக்கு இடையூறு இல்லாது சிலவற்றை மட்டும் அவ்வப்பொழுது காண்போம்.

தனது ஆன்மீக அறிவுத்தேடலின் அடுத்த கட்டமாக குரு ஒருவரைத் தேடிச் சென்றான் சுந்தரன்.

அவர் யார்?

"படைப்பது காப்பது துடைப்பதெ லாமந்தப்
பரம்பொரு ளாலே நடக்கிறது ;இங்கு
நடப்பது நடக்கும்;நடந்தே தீரும்
நம்கையில் என்ன இருக்கிறது; இந்த
நினைப்புடன் என்றும் நீயிரு;ஆமாம்
நிம்மதி அதில்தான் கிடைக்கிறது;இரு
வினைப்பகை அறும்;இறைமலர்ப்பதம் தொழுஎன
விரும்பி ஒருகுரல் அழைக்கிறது! எனை
ஆலயம்தொழ அழைக்கிறது–பெரும்
ஆனந்தம் பெற உரைக்கிறது!"

(11.12.1991 அன்று நடைபெற்ற அரிமழம் கோடகநல்லூர் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் அதிஷ்டான கும்பாபிஷேகத்தின் போது வெளியிடப்பட்ட மலருக்கு கவியரசி சௌந்திரா கைலாசம் அவர்கள் அனுப்பிய கவிதை.)

வேலை இல்லாதிருந்த ஒரு இளைஞனுக்கு சுந்தரனின் வாக்கின்படி நல்ல உத்தியோகம் கிடைத்தது.

சுந்தரனிடம் நல்வாக்கை எதிர்நோக்கி ஊரினர் காத்திருந்தனர். சுந்தரன் சொல்லி விட்டால் போதும். அதை அப்படியே சிரமேற்கொண்டு ஏற்று செயல்படுத்தினர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஒருவருடைய பேச்சில் மக்களுக்கு ஆர்வம் உண்டாவதற்குப் பல காரணங்கள் உண்டு.

பேச்சில் உள்ள இனிமை,

அறிவொளி,

நடைமுறைப்பயன் தரும் இயல்பு,

சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைதல்,

கருத்தை அழகு படுத்திச் சொல்லும் முறை,

யாவரும் நலம்பெற வேண்டும் என்ற பரிவு,

கனிவும், கருணையும் நிரம்பியதாக,

மக்களின் நிலையறிந்து அவர்கள் முன்னேறுவதற்கு ஊன்றுகோலாய்,

மக்களை நல்வழிப் படுத்துவதாய்,

உடலுழைப்பை ஊக்குவிப்பதாய்,

நற்சிந்தனையை மேம்படுத்துவதாய்,

ஒழுக்கத்தையும், உண்மையையும் வலியுறுத்துவதாய்,

சாஸ்திர, வேத, உபநிடத தத்துவங்களை விளக்குவதாய்,

அனைத்திற்கும் மேலாக மனித நேயத்துடன் மக்களின் ஆன்ம சக்தியை உயர்த்துவதாய்

..... அமைவதே வாக்கின் சக்தி என்பதை சுந்தரசிவன் பூரணமாய் உணர்ந்திருந்தான்.

இத்தகுதிகளை மேலும் செம்மைப்படுத்திக் கொள்ள விரும்பி மற்றொரு ஆசானைத் தேடிச் செல்ல விரும்பினான்.

இந்நிலையில் சுந்தரனின் இணைபிரியா நண்பர்கள் ஆயினர் நாராயண சிவன், ரங்கநாத சிவன் என்ற இருவர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நாராயணசிவன், ரங்கநாத சிவனிடம் கேட்டான்: 'மேற்கொண்டு சுந்தரன் கற்க வேண்டியது எதுவுமுளதோ ? மேலும் மேலும் கற்க வேண்டும் என்பதில் ஆர்வமுள்ளவனாய் இருக்கிறானே! அவன் அறிவு பூரணத்துவமான ஒன்றல்லவா ?'

ரங்கநாத சிவன் பதிலுரைத்தான்: 'சுந்தரன் தேடிப்போவது அறிவை அல்ல. ஞானத்தை தோண்டத் தோண்ட மணற்கேணி ஊறுவது போல அவன் கற்க,கற்க அவனின் ஞானம் சுடர் விடுகிறது. தாம் இன்பம் அடையும் ஒன்றினால் உலகம் இன்புற வேண்டும். அவ்வாறு மற்றவர்களும் இன்புறுவதற்குக் காரணமான ஒன்றைத் தான் மேலும், மேலும் கற்றுத் தெளிதல் வேண்டும் என்று அதை மிகவும் விரும்புவர் கற்றுத் தெளிந்தவர்.

'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு

காமுறுவர் கற்றறிந்தார்.' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கைக் கேள்விப் பட்டுள்ளோமே நாம்.

தென்றல், எவ்வாறு மணம்மிக்க மவர்ச் சோலையில் நுழைந்து, தடாகத்தில் பூத்துள்ள தாமரை மலர்களைத் தழுவி, மல்லிகை, முல்லை போன்ற மலர்களின் மணத்தைத் சேர்த்துக்கொண்டு சிறப்புப் பெறுகிறதோ அவ்வாறே ஒரு சிறந்த மாணவன் எங்கெங்கே கலைகள்—அறிவு—ஞானம் கிடைக்கின்றதோ அங்கெல்லாம் தேடித் தேடிச் சென்று கற்கிறான்.

சுந்தரசிவன் அந்த தென்றலைப் போன்றவன்.

அவன் ஞானம் விரிவடைந்து மணம் வீசும் நேரம் நெருங்கி விட்டதென உணர்கிறேன். அவன் ஞானம் உலகிற்குப் பயன்படும் காலம் வெகு அருகில் உள்ளது என்று என் உள்ளுணர்வு உரைக்கின்றது.'

சுந்தரனின் சரிதத்தில் மிகமுக்கிய பங்கு வகிக்கப்போகும்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரனின் ஆன்மீகப் பயணத்தின் அடுத்த முக்கிய கட்டத்திற்குக் காரணமான ஒரு குருவை நாம் காண உள்ளோம்.

தனக்கு வழிகாட்டியாய், கலங்கரை விளக்காய் அமையப் போகும் ஒருவரை நாடிச் சென்றான்.

யார் அவர் ?

"சுந்தர மணியே போற்றி
சுடரொளி விளக்கே போற்றி!
மந்திரம் உணர்ந்தோய் போற்றி
மாதவ மேலோய் போற்றி!
நொந்தவர் துணையே போற்றி
நொடியினில் வருவோய் போற்றி!
அந்தமில் இன்பே போற்றி
அடியவர் உறவே போற்றி" –

*கல்லாடர் கிருஷ்ண மூர்த்தி.*

புதிய குருநாதரை நாடிச்செல்லும் முன்பு தன் பெற்றோரினும் மேலான மாமா, மாமியின் அனுமதியையும், ஆசியையும் பெற விரும்பினான் சுந்தரன்.

சுந்தரனின் உள்ளக் கிடக்கையை அறிந்து அவர்கள் மிகவும் மகிழ்வெய்தினர்.

அதே நேரம் அவர்களின் மனதில் 'கல்வி,மேலும் கல்வி, மேலும் மேலும் கல்வி என்று அலைந்து கொண்டிருக்கிறான். ஊரினருக்கு இவன் சொல்லும் வாக்குகள் பலிதமாகின்றன. அனைவரின் கண்களுக்கும் இவன் ஞானியாகத் தோன்றுகிறான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இவனுடைய செயல்கள் யாவும் ஒரு மகானின் அற்புதங்கள் போலவே இருக்கின்றன.

தர்மசாஸ்திரங்களில் மிகப் பெரும் ஈடுபாடு உடையவனாய் விளங்குகிறான்.

பராசரர், மனு, சங்கரர், லிகிதர், சாதா தபர் ஆகியோர் தர்மசாஸ்திரம் பற்றி எழுதியுள்ளனர். அந்த தர்ம சாஸ்திரங்கள் கூறும் நியதிகளின்படி தன் பிரம்மசரிய வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளான்.

இனி அடுத்த கட்டத்திற்கு இவன் நகர்ந்து செல்வானா?

அடுத்த கட்டம் என்பது கிருஹஸ்தம் அல்லவா?

இவன் இல்லற வாழ்க்கையை விரும்பி ஏற்றுக் கொள்வானா? இல்லை சந்நியாசியாகித் திரிவானா? இந்தக் கவலை மனதை அரிக்கிறதே! என் செய்வது? அவனிடம் எப்படிக் கேட்பது?' என்று தயங்கினர்.

சுந்தரனின் நண்பர்கள் நாராயண சிவனையும், ரங்கநாத சிவனையும் அழைத்துத் தனிமையில் கேட்டனர்;

'சுந்தரனுக்கு திருமணம் செய்து கொள்ளும் அபிப்பிராயம் உள்ளதா? அதுபற்றி உங்களிடம் ஏதேனும் தெரிவித்தானா?'

'சுந்தரன் குருபக்தியும், தெய்வபக்தியும் நிறைந்தவன். வியாச பகவான் செய்த பிரும்ம சூத்திரத்தை இந்த இளவயதிலேயே கற்றுத் தேர்ந்தவன்.

எளியவர்களின் துயரைத் தன் துயராய்க் கருதுபவன். அனலில் இட்டமெழுகு உருகுவதுபோல் பிறரின் துன்பம் கண்டு தான் துடிப்பவன். உடலின் உறுப்புகளில் எங்கேனும் அடிபட்டால் கண்கள் கலங்குகின்றன அல்லவா?

சுந்தரசிவனும் அப்படிப்பட்டவனே! அவனே எங்கள் குரு.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இறைவனிடம் என்னென்ன உத்தம குணங்கள் உள்ளனவோ அவை அனைத்தும் குருவினிடத்திலும் இருக்கின்றன....'

"உளம்நிறை கோவே போற்றி
உலகவர்க் கொளியே போற்றி!
புலநெறி வென்றோய் போற்றி
பொழியுமா மழையே போற்றி!
வளர்அரி மளத்தாய் போற்றி
வாழ்குணப் பயிரே போற்றி!
நலந்தரு குருவே போற்றி
நல்லடி போற்றி போற்றி!!"

*கல்லாடர் கிருஷ்ண மூர்த்தி*

'சுந்தரன் சாஸ்திரங்களையும், வேதங்களையும் பழுதறக் கற்றவன். எனவே நான்கு ஆசிரமங்களில் ஒன்றான கிருஹஸ்தாஸ்மரத்தைப் புறந்தள்ள மாட்டான் என நினைக்கிறோம். பூஜை, புனஸ்காரங்கங்கள், யாகங்கள் மற்ற அனைத்து சம்ஸ்காரங்களுக்கும் மனைவி அருகிலிருக்க வேண்டும் என்பது விதி.

எனவே திருமணத்திற்கு அவன் ஒப்புதல் பெறுவதில் எந்தவித இடையூறும் இருக்காது என்பதே எங்கள் அபிப்பிராயம்.

இதுவரை எங்களிடம் தனது திருமணம் பற்றி சுந்தரன் பேசியதில்லை.

ஆனால் திருமணம் தன்னுடைய ஞானத்தேடலுக்குத் தடையாக இருக்கக் கூடாது என்பதில் உறுதியாய் இருப்பான்.

ஏனெனில் அவன் விநயன்.

அவன் குருவைத் தேடிச்சென்று வித்தையைக் கற்றுக் கொள்ள விழையும் விநயன்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தேன் நிறைந்த மலர்களைத்தேடி வண்டுகள் செல்லும்; கசக்கும் வேப்பம் பழத்தை நாடி காகம் செல்லும்.

அதுபோல

கற்றோரைக் கற்றோரே காமுறுவர்.

கற்றறிவில்லாத மூடரை மூடரே சேர்வர்.

இந்த காலகட்டத்தில் நல்லவர் இருவர் சேர்வது என்பது அபூர்வம். ஆனால் மூர்க்கர்களும், மூடர்களும் உடனடியாக ஒன்று சேர்ந்து நல்லவர் ஒருவரைத் தூற்றி இகழ்வது என்பது

பொதுவான விதியாக உள்ளது.

தற்குறியான செல்வந்தரைவிட கல்வியிற் பெரியோரையே அறிவுடையோர் விரும்பிச் சேர்வர்.

கள்ளிப்பூ பார்க்க அழகாய் இருந்தாலும் அதை எடுத்து சூடிக்கொள்ளும் விருப்பம் கொள்ள மாட்டார்கள்.

அதைப் போன்றே அவனது ஞானத் தேடல்களும் உன்னத மானவை.

அவன் மனம் ஒப்பித் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பினால் அவன் ஆன்மீக வாழ்வுடன் ஒத்துப் போகும் குணநலன் நிரம்பிய மணமகளாகப் பாருங்கள்.

தாய் தந்தையினரிலும் சாலப் பரிந்து வளர்த்த உங்கள் வாரத்தைகளைத் தட்டமாட்டான் என்று எதிர்பார்க்கிறோம்'

என்று நம்பிக்கை வார்த்தைகளைக் கூறினர் நாராயண சிவனும், ரங்கநாத சிவனும்.

இவர்களின் வார்த்தைகளில் ஆறுதல் கொண்டனர் மாமனும், மாமியும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரனை அழைத்து அவனுக்குத் திருமணம் நடத்தத் தாங்கள் விரும்புவதாகத் தெரிவித்தனர்.

சுந்தரன் அவர்களின் விருப்பத்திற்கு இணங்கினானா?

“பாய்மரக் கப்பல் பேய்க்காற்றில்
படுகிற அவதியைப் போல்நாங்கள்
ஆயிரம் கவலைகள் அலைமோத
அலைக்கழி கின்றோம் துணைதேடி
நோய்நொடி துயர்பசி ஆனாலும் வேள்வியெனப்
பாயிரம் பாடி வரவேற்கும்
பக்குவம் அருள்வாய் குருநாதா!”

***கவித்தென்றல் அரிமழம் செல்லகணபதி.***

மாமனும், மாமியும் சுந்தரனை அழைத்துப் பேசினர்.

அவனுக்குத் திருமணம் செய்து வைக்கத் தாங்கள் விரும்புவதாகக் கூறினர்.

அவனின் கருத்தறிந்த பிறகு மணமகள் தேடும் படலத்தைத் தொடங்கலாம் என்றிருப்பதாகத் தெரிவித்தனர்.

சுந்தரன் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டான்.

மாமன் வேங்கட சுப்பையரும் மாமி மீனாக்ஷி அம்மாளும் சுந்தரன் திருமணத்திற்கு ஒப்புதல் அளித்ததில் மனம் மகிழ்ந்தனர்.

ஆனந்தக் கண்ணீர் உகுத்தனர்.

(சுந்தரனின் அண்ணன் குப்பாணிசிவம் திருமணம் செய்து கொண்டதற்கானக் குறிப்புகள் ஏதும் காணப்படவில்லை.)

(அந்தக் காலகட்டத்தில் பெண்ணைத் தேடிச் சென்று பிள்ளை வீட்டார் மணம் பேசுவதுதான் பழக்கத்தில் இருந்திருக்கிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிள்ளை வீட்டார் திருமண செலவை ஏற்றுக் கொண்டு தங்கள் வீட்டிலேயே திருமண விழாவை நடத்துவதும் உண்டு. (இடையில் ஏற்பட்ட கோளாறுகளே இந்த வரதக்ஷிணைக் கொடுமைகள். இப்போது காலம் திருந்தி மாறிவிட்டது போல் தோன்றுகிறது!)

ஆனால் திருமணத்திற்கு சுந்தரன் ஒரே ஒரு அனுமதியை மாமன் மாமியிடம் கேட்டிருந்தான்.

அதாவது தன் திருமண வாழ்க்கை, தான் குருமார்களைத் தேடிச் செல்வதற்கும், அவர்களிடம் ஞானத்தை அடைய நேரம் செலவிடுவதற்கும் தடையாய் இருக்கக் கூடாது என்பதே.

அத்துடன் 'பிக்ஷை' எடுத்து அதன் ஒருபகுதியைக் குருவின் குடும்பத்தினருக்குக் காணிக்கையாக்கி மீதம் உள்ளதையேத் தான் உண்பதாகவும், குருவிடம் பாடம் கற்கும் வரை இது தொடரும் என்றும் கூறியதையும் நினைவு கூர்ந்தனர்.

('பிக்ஷை' என்பது வேறு, 'பிச்சை' என்பது வேறு.

பிக்ஷையில் அரிசியை மட்டுமே ஏற்றுக் கொள்வர்;

பிச்சையில் கிடைக்கின்ற எதையும் ஏற்றுக் கொள்வர்.

'பிக்ஷை' குறிப்பிட்ட வீடுகளில்—தேவையான அளவு மட்டுமே பெறுவர்.

காலையில் சென்ற வீட்டிற்கு மாலையில் செல்ல மாட்டார்கள்.

ஆனால் பிச்சையில் இவ்விதக் கட்டுப்பாடுகள் ஏதும் கிடையாது.

'பிக்ஷை' இடுவது நமது கடமை;

பிச்சை இடுவது கருணை.

'பிக்ஷை' வழங்காது போனால் பாவம் பின்தொடரும்;

பிச்சை கேட்டு கொடுக்காது போனால் புண்ணியம் மட்டும் சேராது போகும். பாவம் இல்லை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஏனெனில் பிக்ஷை வாங்குபவர் நமது பாவத்தையும் சேர்த்து வாங்கிக் கொள்கிறார்.

சுகமாக வாழவழி இருந்தும் 'பிக்ஷை' எடுப்பது தர்மம்;

வயிற்றுக்கு வேறு வழியின்றி எடுப்பது பிச்சை.) – (கேட்டதும் படித்ததும்).

'குருவின் திருமேனியைக் காண்பதும், அவரின் திருநாமத்தைச் செப்புவதும், அவரின் திருவார்த்தைகளைக் கேட்பதும், அவரைப் பற்றி சிந்திப்பதுமே ஒரு சீடனுக்கு மேன்மையையும், அறிவு மற்றும் உள்ளத் தெளிவையும் அளிக்கும்' எனக் கூறி இருந்தான்.

'ஒருவருக்கும் உதவாத உப்புக் கடல் நீரானது, மேகங்களால் கவரப்பட்டு மழைநீராய் மக்களுக்குப் பயன்படுகிறது. அதைப்போல யாருக்கும் பயன்படாத உப்பு நீராய் என் அறிவுச் செல்வம் உள்ளது. இந்த உப்பு நீரை உறிஞ்சி பயனுள்ள மழை நீராக்க மேகத்திற்கிணையான தகுந்த ஆசானால் மட்டுமே இயலும். எனவே என் சங்கல்பத்திற்குத் துணை நிற்கும் பெண்ணாகப் பாருங்கள்.' எனவும் சொல்லி இருந்தான்.

இவற்றை மனதில் கொண்டு பெண் பார்க்கும் படலம் ஆரம்பமாயிற்று.

சுந்தரனின் விருப்பப்படி மணமகள் கிடைத்தாளா?

"பிறவிப் பயன்தான் என்னவெனும்
பெற்றியை அறிய மனம்வேண்டும்
உறவில் கலந்து சுற்றமதில்
உறும்சுகம் துயரம் பிரித்தறிந்து
பிறப்பில் இறப்பில் சிரித்தழுது



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிதற்றும் உயிர்க்கே உனதுதுணை
துறவில் பிரிந்து விலகிவிட்டால்
துணேயேன் நமக்கு குருநாதா"

***கவித்தென்றல் அரிமழம் செல்லகணபதி***

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பது ஔவையின் வாக்கு.

இறைவன் ஒரு உயிருக்கு அளிக்கும் வரங்கள் மூன்று:

மனிதப்பிறவி,

வாய்மையுடன் வாழ்தல்,

நல்ல குருவை அடைதல்.

அப்பைய தீக்ஷிதர் மரபினரான சுந்தரனின் குருதி நாளங்களில் எல்லாம் சிவபக்தி ஓடிக்கொண்டிருந்தது.

பஜனையிலும், பக்தியிலும் மற்றவரை விஞ்சி நின்றான். அப்பைய தீக்ஷிதருக்கு இணையான சிவபக்தி உடையவன் சுந்தரசிவன்.

'அர்க்கத்ரோண' என தீக்ஷிதர் பாடியுள்ளார். அப்படிப் பாடிய சந்தர்ப்பத்தைப் பார்ப்போம்.

தீக்ஷிதருக்கு ஒருமுறை ஐயம் வந்தது.

'சிவபெருமானிடத்தில் பக்தி செய்கிறேனே, என் பக்தி உண்மையானதா? என் பிறவி கடைத்தேறுமா? கடைத்தேறாதா? உண்மையான பக்தி செலுத்துகிறோமோ? இல்லை வேஷம் போடுகிறோமோ? நெருக்கடியான நேரம் வரும்பொழுது ஈஸ்வரனை நினைப்போமோ? மறந்து போவோமோ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வித்வத் கர்வம் ஏற்பட்டு இறைவனைப் புறந்தள்ளி விடுவோமோ ? இல்லை காசுபணம் சேர்ந்ததும் ஈசனைத் தூற்றுவோமோ ?

நன்றாக இருக்கும் வரை பக்தன் என நினைத்துக் கொண்டிருப்போம்.

சோதனைக் காலத்தில் ஈஸ்வரன் நினைப்பு நிலையாய் இருக்குமோ ?'

எனவே தன் பக்தியை சோதித்துப் பார்க்க விரும்பினார்.

அவருக்கு எல்லா சாஸ்திரங்களும் தெரியும். நூற்று நான்கு கிரந்தங்களை எழுதியுள்ளார். சிவபக்திக்குப் பல நூல்களைப் படைத்துள்ளார்.

ராமானுஜர், மத்வர் ஆகியோர் நூல்களுக்கும் விளக்க உரை எழுதி இருக்கிறார்.

தீக்ஷிதர் மாதிரி எல்லா சாஸ்திரங்களுக்கும் நூல்கள் எழுதியவர் எவரும் இல்லை. மிக உயர்ந்த அத்வைதி.

இத்தனை கற்றும், தீக்ஷிதருக்குக் கல்வியால் விளைந்த அகந்தை நெல்முனை அளவேனும் இல்லை.

நம் கல்வியின் வீச்சு கடல்போல் பரந்துள்ளது என்ற செருக்கு அடலேறு போன்ற ஒருவனைக்கூட கீழே வீழ்த்தி விடும்.

சிறிய உருவம் கொண்ட அகத்தியர் தன் உள்ளங்கையில் பெரும் வாரிதியையே அடக்கி அருந்தி விடவில்லையா ?

அத்தகைய அகத்தியருக்கே கல்வியின் செருக்கு ஒருதுளியும் இல்லாதபோழ்து தான் கற்றது வெறும் கையளவு கூட இல்லையே !

இத்தகைய பணிவு தீக்ஷிதரிடம் இருந்தது. பணிவு என்ற ஈடில்லாச் செல்வம் இவரைப்போல் அனைத்தையும் கசடறக் கற்றவர்களிடம் மட்டுமே காணப்படும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பணிவும், இன்சொல்லும் தானே ஒருவருக்கு அணி.

இந்த அணியைப் பூண்டு அப்பைய தீக்ஷிதர் ஒப்புயர்வற்று விளங்கினார்.

அனைத்தையும் ஐயம் திரிபுறக் கற்ற பெரியவருக்கே-ஞானிக்கே இந்த சந்தேகம் வந்து விட்டது.

தம்முடைய பக்தியை சோதித்துப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

மஹேஸ்வரன் ஒரு பிச்சைக்கார பிராமணன்.

பித்தன்–பைத்தியக்காரன்.

எனவே தானே ஒரு பைத்தியமாகத் தீர்மானித்தார்.

அதற்கு என்ன செய்தார் ?

'நாம் ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டிருக்கிறோம்.மழை வந்தால் ஓடிவிடுகிறோம்.

கோயில் மண்டபத்தில் மெத்தப் படித்தவர் சிறப்பாக உபன்யாசம் செய்து கொண்டிருக்கிறார். பிரசாத வினியோகம் நடக்கிறது என்று கேள்விப்பட்டால் அங்கே கூட்டத்தில் உள்ளவர்களை மிதித்துக் கொண்டேனும் வேகமாக முந்திக் கொண்டு ஓடுகிறோம்.

இதுதான் நம் பக்தியின் நிலை.

இறைவனிடம் நம் மனது நிலைத்து இருந்தால் பக்திவெளிப்பட வேண்டும்.

அறிவையும், மனதையும் ஈஸ்வரனிடம் வைக்காமல் கெட்ட வழியில் வைப்பவர்கள் தீயவர்கள். நல்லவர்கள் போல் தோன்றும் தீயவர்கள் மனதில் கபடம், வஞ்சம், பொய், ஆசை, கோபம், வீண்பெருமை, பொறாமை, அகங்காரம், புகழாசை இருக்கும். போலியான வேடம் அதை மறைத்திருக்கும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஞானத்தில் சிறந்தவனிடம் இக்குற்றங்கள் இருக்காது.

ஞானி எதையும் இம்சிக்க மாட்டான்.

எல்லோருக்கும் நண்பனாக இருப்பான்.

எவரிடத்தும், எதனிடத்தும் பகையற்றவன்.

மகிழ்ச்சியோ, துக்கமோ அவனுக்குக் கிடையாது.

பற்றற்றவன்.

திடமனது—வைராக்கியம் உள்ளவன்.

மற்றவர்கள் தன்னைத் தவறாகக் கருதினாலும் அதைப் பொருட்படுத்தாது அறத்தை விடாது கடைப்பிடிப்பவன்.

ஞானியும், தீயவனும் பார்ப்பதற்கு ஒன்றுபோல் இருந்தாலும் தீயமனம் கொண்டவர் என்றும் ஞானியாக முடியாது.

கற்பூரமும், கடல் உப்பும் பார்ப்பதற்கு ஒன்றுபோல் இருந்தாலும் கடல்உப்பு கற்பூரம் ஆகிவிடுமா ?

புன்மையாளர்கள், புண்ணியர்களைப் போல் வேடம் போட்டாலும் புண்ணியராகி விடுவார்களா ?

நான் புண்ணியனா ? புல்லியனா ? என்பதை நான் எப்படி அறிந்து கொள்வது ?

நான், என்னை சோதனைக்கு உள்ளாக்கிக் கொண்டால்தான் இதை உணர முடியும்.

நான் பாவியா ? புனிதனா ?

உலகத்தில் பாவம் பண்ணாமல் இருப்பவர் இருவரே: அவர்கள் குழந்தையும், பைத்தியக்காரனும்தான்.

ஞானிகளின் உயர்ந்த நிலையை ‘பாலோன்மத்தவத்’ என்று கூறுவர். அதாவது பாலகன்(குழந்தை), உன்மத்தன் (பைத்தியம்).

நான் இனி குழந்தை ஆக முடியாது.உன்மத்தமன்(பைத்தியம்) ஆகலாம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சிவபிரானுக்கு 'உன்மத்த சேகரன் ' என்ற பெயரும் உண்டு.

வடமொழியில்

உன்மத்தம் என்றால் ஊமத்தையைக் குறிக்கும்.

ஊமத்தம் பூ, தும்பைப்பூ, எருக்கம்பூ மூன்றையும் விரும்பி அணிபவன் சிவன்.

இந்தப் பூக்கள் விலைகொடுக்காமலேயே கிடைக்கும்.

'அர்க்கத்ரோண ரப்ருதி குஸுமைரர்ச்சநம் தே விதேயம்.'என ஸ்தோத்திரம் செய்துள்ளேன்.

அர்க்கம் என்றால் எருக்கம் பூ, துரோணம் என்றால் தும்பைப்பூ, மற்றும் ஊமத்தைம் பூ இவைகளால் அர்ச்சனை செய்வதை இறைவன் விரும்பி ஏற்றுக் கொள்வான்.

உன்மத்தசேகரன் என்றால் 'பைத்தியங்களின் தலைவன்' என்ற பொருளும் உண்டு.

'பித்தா' என்று அழைத்தால் மிகவும் மகிழ்வான். அதனாலன்றோ சுந்தர மூர்த்தி நாயனாரும் 'பித்தா! பிறைசூடி' என்று பாடினார்.

அப்படிப் பாடியதாலன்றோ 'தம்பிரான் தோழர்'ஆனார்.

எப்பொழுதும் பைத்தியமாய் இருப்பவனிடம் பாவம் சேராது.

ஆகவே பைத்தியக்காரன் ஆகி விடுவோம்' எனத் தீர்மானித்தார் அப்பய்ய தீக்ஷிதர்.

ஊமத்தங்காய், ஊமத்தம்பூ சாப்பிட்டு பைத்தியம் ஆவது எனத் தீர்மானித்தார்.

இந்நிலையில் பயம் கலந்த ஐயமும் அவருள் எழுந்தது.

எதைப்பற்றிய பயம், ஐயம் ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அப்பைய தீக்ஷிதர் என்ற மாபெரும் ஞானிக்கு ஒரு ஐயமும் அதன் காரணமாக பயமும் தோன்றியது.

என்ன ஐயம் ?

'பொய்ப்புலன்களால் வரும் மயக்கங்கள் யாவும் புல்லியருக்கே உரியவை. மெய்யன்பர்களுக்கு அவைகளால் தீங்கு எதுவும் நேராது.

பெரும் சூறாவளிக் காற்று சிறுதுரும்பினை அலைக்கழிக்குமே அன்றி பெரும் கற்றூணைப் பாதிக்காது.

நான் ஐம்புலன்களால் அலைப்புறும் சிறுதுரும்பான புல்லியனா அன்றி உறுதியான கல்தூணான புண்ணியனா என்பதை சோதித்து அறிய வேண்டும்.

அதற்கான சோதனையே இது.

நமக்குப் பைத்தியம் பிடித்தால் நல்லது. ஆனால் பைத்தியம் பிடித்து பிதற்றும் பொழுது நாம் உளறுவது ஈஸ்வர நாமாவாக இருந்தால் நல்லது.

அவ்வாறன்றி பைத்தியம் பிடித்த நேரத்தில் கெட்ட வார்த்தைகளும், காம வார்த்தைகளும், வஞ்சனையான வார்த்தைகளும் வந்து விட்டால் ? ஆயுள் முழுவதும் பைத்தியமாகத் திரிய வேண்டி வருமே !நம்பிறவி முழுவதும் கொன்னே (வீணாக) போய்விடுமே !திரும்பவும் புத்தி தெளிந்தால்தானே மீண்டும் இறைவனிடம் பாவ நிவர்த்தி செய்து கொள்ளலாம்.எனவே பைத்தியம் தெளிய மாற்று மருந்தையும் தயார் செய்து கொள்வோம்' என்று பைத்தியம் தெளிவதற்கான மாற்று மருந்தையும் தயாரித்து வைத்துக் கொண்டார்.

தன் சீடர்களை அழைத்தார். தன் எண்ணக் கிடக்கையை வெளியிட்டார். பைத்தியம் தெளிவதற்கான மருந்தின் அனுபானத்தையும் தெரிவித்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஊமத்தைம்பூவையும்,இலையையும் சாப்பிட்ட பின்பு தன் புத்தி பேதலித்து உளறுவதையெல்லாம் எழுதிக் கொள்ளச் சொன்னார்.

பைத்தியம் பிடிக்கும் மருந்தைச் சாப்பிட்டார்.

புத்தி பேதலித்து பிதற்ற ஆரம்பித்தார்.

சீடர்கள் அவர் உளறல்களைக் குறித்துக் கொண்டனர்.

உன் மத்தம் பிடித்திருந்த அந்த பைத்திய காலத்திற்குள் மாற்று மருந்தை தீக்ஷிதருக்கு சீடர்கள் கொடுத்தனர்.

பைத்தியம் தெளிந்தது.

இப்பொழுது புத்தி தெளிவாய் இருக்கும் போதே கெட்ட, காம, வஞ்சனையான வார்த்தைகளைப் பேசும் மக்களும் சிலர் உள்ளனர்.இந்த நிலையில் வலிந்து வரவழைத்துக் கொண்ட பைத்தியக்கார உடல்,மன ,அறிவு நிலையில் அந்த மகான்

என்ன உரைத்திருந்தார் ?

அப்பைய தீக்ஷிதரின் பைத்தியம் தெளிந்ததும் தாம் 'உளறியதை' ப் படித்தார். பரவசமடைந்தார்.

அவர் பிதற்றியது எல்லாம் ஈஸ்வரன் மேல் பாடிய ஸ்லோகங்களாக அமைந்திருந்தன.

ஒன்றல்ல, இரண்டல்ல......ஐம்பது ஸ்லோகங்கள்.

பக்திப் பரவசத்தால் கண்கள் பனித்தன.

'நான் பரம பாவி. எனக்கு மந்திர, தந்திரங்கள், முறையான பூஜை முறைகள், சடங்குகள், எதுவும் தெரியாது.

வடமொழியிலும் பிற மொழிகளிலும் பாண்டித்யம் இல்லாதவன். உன்னையோ உன் சௌலப்யம் (எளிவந்த தன்மை) பற்றியோ எதுவும் அறிந்திடாத தற்குறி நான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எனக்கு எத்தகைய பேரருளை நீ அளித்துள்ளாய்.

உன் அநுக்கிரகத்தை எங்ஙனம் போற்றுவேன்?

நான் வெறும் தும்பைப்பூவைப் போட்டு பூஜித்தேன். ஆனால் நீ எனக்கு எவருக்கும் கிட்டாத மோக்ஷ சாம்ராஜ்யத்தை அல்லவா அளித்திருக்கிறாய்.

செய்வினைத் தொடர்பினாலே ஜடம் போன்ற நூற்றுக் கணக்கானப் பிறவிகள் எடுத்து, நரகத்தில் உழன்று இன்று இப்பிறவியை எடுத்திருக்கிறேன்.

புண்ணியம், பாவம் எனப்படும் இருவித கர்மாக்கள் ஜீவனுடன் கர்ப்பத்திலேயே சேர்ந்து விடுகின்றன. நல்வினை தீவினைக்கேற்ப பிறவிகள் அமைகின்றன.

மனிதன் ஜனனம் மரணம் வயோதிகம் நோய்கள் இவைகளை இந்த பந்தப்பட்ட வாழ்வில் அனுபவிக்கிறான்.

இறுதியில் உன் கருணையினாலன்றோ முக்தியை அடைகிறான்.

இதை உணராதவன் தீமைகளையே செய்து பாவியாகின்றான்.

பொய், வஞ்சம், ஏமாற்று, கபடம், நம்பிக்கை துரோகம்.... இவைகள் நிரம்பிய மனிதர்கள், தாம் மறவழியில் குவித்த செல்வத்தினால் போலியான புகழையும், பாராட்டையும் பெற்று அதிலே சுகம் காண்கின்றனர். அவர்கள் பாவம்! இவை எல்லாம் நிலையற்றவை என்பதை உணரவில்லை. அவர்கள் மீண்டும், மீண்டும் பிறப்பெடுத்து அல்லல் படுகின்றனர். இன்றைய சுகத்தை மட்டுமே நம்பி ஏமாந்து விடுகின்றனர்.

ஆனால் இறைவனின் நினைப்போடு அவன் நாமத்தைக் கூறியபடி உயிர்விடுகின்றவர்கள் ஈஸ்வரனுடனேயே ஐக்கியமாகி விடுகின்றனர்;அவர்களுக்கு இனி ஜனனமே கிடையாது.


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இறைவனைப் பற்றிய ஞானிகள் எந்த நிலையிலும் மேன்மை அடைவர்.

புலியின் நகமும், வெண்மையான கவரிமானின் முடியும், மதத்தை உடைய யானையின் கொம்பும் தாம் இருந்த நிலையினின்று வேறுபட்டாலும் சிறப்பையே அடையும்.

அஞ்ஞனமே ஞானியர் தம் நிலையினின்று மாறுபட்டாலும் அவர்கட்குப் பெருமையே உண்டாகும்.

இதுவும் உன் கருணையன்றி வேறில்லை.

அவ்வாறெனில் 'உயிர் விடுகிற சமயத்தில் இறைவனை நினைத்தால் போதாதா ?அப்பொழுது அவன் பெயரைத் தியானம் புரிந்தால் போதாதா ?' என்ற கேள்வி எழலாம்.

ஜீவிய காலத்திலேயே நாம் இறைவனின் நாமத்தை உச்சரிப்பதில்லை. துக்கம் வரும் போதோ அம்மா, அப்பா என்று புலம்புகிறோம்.

துக்கம் வந்தாலும் அவற்றை எல்லாம் உதறிவிட்டு எப்பொழுதும் ஈஸ்வரன் பெயரைச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

எப்பொழுது யாரைப் பார்த்தாலும் 'ராம்ராம்' என்றோ 'சிவ !சிவ' என்றோ சொல்ல வேண்டும்.

எழுதத் தொடங்கும் போதும் இறைவன் நாமாவையே எழுத வேண்டும்.

முற்பிறவியில் புண்ணியம் செய்தவர்கள் மட்டுமே இதைச் செய்வார்கள்.

அந்தப் புண்ணியத்தை செய்யும் பேற்றை நீ அருளியுள்ளாய்.

நீ பரம சுலபன்; ஏழைப் பங்காளன் 'என்று ஈஸ்வரனைப் பணிந்து கூறிய தீக்ஷிதரின் கண்களிலிருந்து தாரைதாரையாய் கண்ணீர் பெருகியது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவர் பைத்தியமாய் இருந்தபோது கூறிய வார்த்தைகள் ஐம்பது ஸ்லோகங்களாக உருப்பெற்றன.

அந்த கிரந்தம் 'ஆத்மார்ப்பண ஸ்துதி' அல்லது 'உன்மத்த பஞ்சாசத்' என்று புகழ் பெற்றது.

இத்தகையவரின் பரம்பரையில் வந்த சுந்தரசிவன் , அப்பைய தீக்ஷிதரை எவ்வகையில் ஒத்திருந்தான் ?

❀❀❀❀❀

சுந்தர சிவன் திருமணம் புரிந்து கொள்ள ஒப்புதல் தெரிவித்ததில் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர் மாமனும், மாமியும்.

அவர்களைவிட நாராயண சிவனும், ரங்கநாத சிவனும் அதிகம் சந்தோஷப்பட்டனர்.

முதன்முதலாக சுந்தர சிவனைக் கண்டபோதே அவன்பால் இருவரும் ஈர்க்கப்பட்டனர்.

சுந்தரனின் ராஜகம்பீரமான நடை, எவரையும் ஈர்க்கும் தீக்ஷண்யமான பார்வை , சுறுசுறுப்பான செயல்பாடுகள் , எப்போதும் ஏதோ முக்கியமான நிலையான ஒன்றிடம் மனத்தை ஒடுக்கி நிற்பது போன்ற பொலிவு, நெடிதுயர்ந்த அழகிய சிவந்த திருமேனி, எடுப்பான நீண்டநாசி, கற்றவர்களை மதிக்கும் பண்பு, வயதில் பெரியவர்களும், கற்றவர்களும் கூட சுந்தரத்தினிடம் நிதான மாகவும், கவனத்துடனும் உரையாடும் தன்மை, ஸத்தியத்தையும், நன்மையான வார்த்தைகளையுமே உதிர்க்கும் சிவந்த உதடுகள், நல்லவற்றை உடனே கிரஹித்துக் கொள்ளும் அறிவு, நீண்ட கைகள். இவ்வாறு புற அழகும், அக அழகும் ஒருங்கிணைந்த உருவமாக விளங்கினான்.

கல்வி கேள்விகளில் தனித்து சிறப்புற்று விளங்கினாலும், தன் வித்வத்துவத்தைப் பற்றி விளம்பரம் ஏதும் வெளிப்படுத்தாமல் அமைதியுடனிருந்தான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வெண்கலம் என்ற உலோகத்தினால் ஆன கலன்களிலிருந்து மிக்க ஓசை மிகுந்து எழும்; ஆனால் பசும்பொன்னால் ஆன கலத்தினின்று அத்தகைய பெரிய ஓசைகள் எழாது.

அதுபோன்று சிற்றறிவுடையவர் எப்போதும் படபடவென்று ஆரவாரமாகப் பேசுவர்; ஆனால் கல்வி கேள்விகளில் நிறைந்து விளங்கும் பேரறிவாளர்கள் அப்படிப் பேச மாட்டார்கள்; நிதானமாகவே இருப்பர்.

சுந்தரன் பொற்குடமாகவே பொலிந்தான்.

இவற்றினாலோ அல்லது விளக்க முடியாத வேறொரு தனிச் சிறப்பினாலோ சுந்தரன் பால் அனைவரும் ஈர்க்கப்பட்டனர்.

நாராயண சிவனும், ரங்கநாத சிவனும் ஈர்க்கப்பட்டதில் வியப்பென்ன ?

சுந்தர சிவனுக்கும் தன்னையறியாமலேயே இவ்விருவரிடமும் பற்றுதல் ஏற்பட்டது.

கல்லிடைக்குறிச்சியில் கல்வி முடிந்து பத்தமடை செல்லவிருந்த சுந்தரனிடம் தாங்களும் அவனுடன் வர விருப்பம் தெரிவித்தனர்.

இவர்களுடைய விருப்பத்திற்கு உடனே பதில் கூறாமல் பத்தமடை பயணமானான் சுந்தரன்.

ஏன் உடனே பதில் உரைக்கவில்லை ?

பத்தமடையில் மாமாவாகிய வேங்கட சுப்பையரிடம் வேண்டுகோள் ஒன்றை வைத்தான். வேத அத்தியயனம் செய்யும் நாராயண சிவனும், ரங்கநாத சிவனும் மேற்கொண்டு சாஸ்திரப்பாடங்களைத் தன்னிடம் கற்க விரும்புவதாகவும், அவர்களும் தன் கூடவே பத்தமடை வர ஆவல்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கொண்டுள்ளதாகவும் தெரிவித்தான். அவர் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு அனுமதி அளித்தார்.

மாமாவின் சிந்தனை இவ்வாறு இருந்தது.

'சுந்தரன் இரண்டு மாணவர்களுக்கு சாஸ்திரப் பாடம் கற்பித்தால் அவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதில் பொழுது போகும். சாஸ்திரப் பாடத்தின் நுட்பங்களை அறிந்து கொள்வான். அறிவு மேலும் அபிவிருத்தியாகும். படிப்பின் மேலான தன்மையைப் பிறருக்குச் சொல்லிக் கொடுப்பது புண்ணியமாகும்.

அத்துடன் பஜனை, சூதஸம்ஹிதைப் பிரசங்கம், வேதாந்தப் பிரவசனம் ஆகியவற்றிற்கான நேரம் குறையும். லௌகிக (உலகியல்) நோக்கில் இந்த வயதில் அவன் மனம் செல்ல உதவியாய் இருக்கும்.'

நாராயணசிவனிடமும், ரங்கநாதசிவனிடமும் மாமாவின் அனுமதி கிடைத்ததைப் பற்றிக் கூறி, அவர்களைப் பத்தமடை அழைத்து வந்தான்.

இவர்கள் இருவருக்கும் சாஸ்திரப் புத்தகத்தை வைத்துக் கொண்டு பாடங்கள் நடத்தி அறிவை வளர்க்கவில்லை.

சாதாரணமாகப் பேசிக் கொண்டிருக்கும் பொழுதும், சொற்பொழிவு செய்யும் போதும், சூதஸம்ஹிதை பிரவசனம் செய்யும் காலத்தும் சாஸ்திரப் பாடங்களின் நுணுக்கங்களை எளிதாக விளக்கி விடுவான்.

சாத்திரப் புத்தகத்திலுள்ள எல்லா லட்சணப் பாடங்களையும் இவ்விருக்கும் சிறிதுகூட ஐயம் எழாதபடி அவர்கள் அறிவில் புகுத்தி விட்டான். அவர்கள் சாஸ்திரப் பாடத்தில் கரை கண்டவர்கள் ஆனார்கள்.

அந்தப் பகுதியிலேயே, ஏன் நாட்டிலேயே சூதஸம்ஹிதைப்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிரவசனத்தில் சுந்தரனை மிஞ்ச எவரும் இல்லை என்ற சொலவடையே பிரசித்தம் ஆனது.

சுந்தரசிவன் அருகிலேயே இருந்ததால் நாராயணசிவனும், ரங்கநாதசிவனும் ஸூதஸம்ஹிதைப் பேருரையில் சிறந்து விளங்கினர்.

செல்வத்தை நாடிச் சென்றவர்க்கு அதன்மீது ஆசை ஏற்படும்; நீதி அறியாப் பாதகரைக் கூடியவர்க்கு தீமையானவற்றில் நாட்டம் ஏற்படும்; குளிர்ந்த மலர்களைக் கண்டவர்க்கு அதன் மணம் மயக்கம் தரும்; கற்றறிந்த சான்றோரை அடைந்தவர்க்கு நல்லவழி உடனே ஏற்படும்.

கற்றறிந்த சுந்தரசிவனின் நட்பு கிடைத்ததால் நாராயண சிவனுக்கும், ரங்கநாதசிவனுக்கும் மிகச் சிறந்த வாழ்க்கை அமைந்தது.

அவர்களின் பிற்கால வாழ்க்கை, சரிதத்தின் பிற் பகுதியிலும் வரும்.

அதற்கு முன்,

'ஸூதஸம்ஹிதை'ப் பேருரையில் சுந்தரசிவன் தன்னிகரற்று விளங்கினான்'என்றோமே அந்த

'ஸூதஸம்ஹிதை ' என்றால் என்ன ?

ஸம்ஹிதை என்றால் தொகுப்பு.

ஸூத ஸம்ஹிதை என்றால் ஸூத முனிவர் உரைத்தவற்றின் தொகுப்பு எனக் கொள்ளலாம்.

சம்ஹிதை சைவ சன்னியாசிகளால், மகான்களால் ஆழ்ந்து படிக்கப்பட்ட, உபதேசிக்கப்பட்ட நூல்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



லக்ஷம் ஸ்லோகங்களைக் கொண்ட கந்தபுராணத்தின் ஒரு அங்கம் சம்ஹிதை.

சூத முனிவர் சௌனக முனிவருக்கு உரைத்த உபதேசங்கள் அடங்கிய பகுதி சூதசம்ஹிதை எனப்படும்.

சிவமகாபுராண மகாத்மியம் இதில் இடம் பெறுகிறது.

சூதசம்ஹிதை சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சைவத்தின் 28 ஆகமவிதிகளைப் பற்றி விரிவாகப் பேசுகிறது.

வித்யேஸ்வர சம்ஹிதை

ருத்ர சம்ஹிதை

சதருத்ர சம்ஹிதை

கோடிருத்ர சம்ஹிதை

உமா சம்ஹிதை

என்று பல சம்ஹிதைகளை உட்பிரிவாய்க் கொண்டது சிவமகாபுராணம்.

சூதசம்ஹிதை ஆகமம் பற்றி விரிவாகப் பேசுகிறது.

திருமூலரும் தனது திருமந்திரத்தில் ஆகமச் சிறப்பைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

ஆகமம் இருபத்தி எட்டு கோடியே ஒரு லக்ஷம் வடமொழிச் செய்யுள்களை உள்ளடக்கியது .

உப ஆகமங்களைப் பற்றிய குறிப்பு சூதசம்ஹிதையில் காணப்படவில்லை.

சூதசம்ஹிதை, நான்கு காண்டங்களையும், ப்ரம்ம கீதை, ஸூதகீதை ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கியது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மிகமிக உயர்ந்ததான புண்ணியத்தைத்தரும் இந்த சம்ஹிதை வேதத்தின் கருவூலம். சிவஞானமாகிய மெய்யறிவின் பெருங்கடல். இக–பர நன்மைகளை வாரி வழங்கக் கூடியது இது' என்கிறார் சூதர்.

கற்ற கல்வி ஆன்மீகம் தொடர்பான நற்சிந்தனைகளைத் தூண்டவேண்டும்.

'நல்லவற்றை சிந்திக்கலேன், இறைவனைத் தொழுதிலேன், தண்டைச் சிற்றடியை மனதில் நினைந்திலேன், அவனை வாழ்த்திப் போற்றுகிலேன், மயில்வாகனனின் அழகிய திருக்கோலத்தைக் கண்டு களித்திலேன், பொய்யை நிந்தித்திலேன், உண்மையை உரைத்திலேன். . . . ' என்றெல்லாம் அருணகிரிநாதர் புலம்புகிறார்.

மனிதன் செய்யும் பெரும்பிழை , மெய்யறிவுதரும் நூல்களைப் பற்றி சிந்தனை செய்யாமையும், கல்லாமையும் ஆகும்.

சூதசம்ஹிதையின் முதல் அத்தியாயமே இவைபற்றிக் கூறுகின்றது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரனின் நான்கு வயது முதல் பதினாறு வயது வரையில் கல்வி கற்பதிலேயே வாழ்வின் பெரும்பகுதி கடந்தது.

பதினாறு வயதிற்குள் படிப்பு, வேதம், சாஸ்திரம், பிரஸ்தானதிரியம், வியாகரணம், தர்க்கம், பூர்வமீமாம்ஸை, வேதாந்தம், ஸூதஸம்ஹிதை, ஞான சாக்ஷாத்காரமாகிய வேதாந்தம், சகஜ நிஷ்டை, அமானுஷ்யமான சக்தி இவை அனைத்தையும் சுந்தரனுக்கு ஒப்பற்ற அந்த ஏழு சற்குருமார்கள் கற்றுக் கொடுத்தனர்.

சுந்தரனுக்கு ஏழு குருமார்கள் அமைந்ததில் ஏதேனும் நாம் அறியாத ஸூட்சுமமும் இருக்கலாம்.

(ஏழின் பெருமையை இச்சரிதத்தின் வேறு ஒரு பகுதி விவரிக்கிறது.)

சுந்தரன் செய்து காட்டிய அமானுஷ்ய சக்தி ஒவ்வொன்றும் அதி அற்புதமானவை.

இந்த சித்த சக்திகள் சுந்தரனுக்கு அமைந்த சத்குருக்களின் அனுக்கிரஹத்தாலும், ஆண்டவனின் கருணைப் பெருக்கினாலும் ஏற்பட்டவை என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

மனிதர்கள் கர்மாவினால் பிறக்கின்றனர்; மகான்கள் கருணையினால் பிறக்கின்றனர்.

இத்தகைய உயரிய சக்திகளைத் தன் சுய லாபத்திற்காகவும், விளம்பரத்திற்காகவும் பயன்படுத்திக் கொண்டதில்லை சுந்தரன்.

சுந்தர சிவனுக்கு அமைந்த ஏழு சற்குருக்களைப் பற்றிச் சிறிய அளவிலேனும் அறிந்து கொள்வோம்.

**சுந்தரனின் முதல் குரு :**

சங்கர ஐயர் என்கின்ற சுப்பைய சாஸ்திரி. பத்தமடைத் திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்.

வயது : நான்கு வருஷம் பத்து மாதங்கள் முதல் ஆறு வருஷம் மூன்று மாதங்கள் வரை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



**இரண்டாவது குரு :**

பத்தமடை கிருஷ்ணய்யர். இவரிடம் சமஸ்கிருத பாடமும், வேத அத்யயனமும் கற்றுத் தேர்ந்தான்.

ஆறு வயது மூன்று மாதம் முதல் எட்டு வயது பத்து மாதங்கள்.

**மூன்றாவது குரு :**

வீரவநல்லூர் சோமசுந்தர சாஸ்திரிகள்.

பிரமகீதை, உபநிஷதங்கள், பகவத் கீதை முதலிய பாஷ்ய பாடங்கள்; தர்க்கம், பூர்வ மீமாம்ஸை, வியாகரணம் முதலியவை.

வயது : எட்டு வருடம் பத்து மாதங்கள் முதல்

**நான்காவது குரு :**

சுந்தரனின் தாய் மாமனாகிய ராமசுப்பையர் அவர்கள்.

சிவதர்ம பூஜைவிதி, சிவபூஜை பாராயண விதிகள், அக்னிஹோத்ரம், ஔபாசனம் கற்றுக் கொடுத்த குரு.

இவர்களைப் பற்றி ஏற்கனவே நாம் பார்த்து விட்டோம்.

**ஐந்தாவது குரு :**

சுந்தரனின் வாழ்வில் நுழைந்த மிக முக்கியமான ஆன்மிக ஞானகுரு இவர்தாம்.

கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். ஊரும், நாடும் இவரைப் போற்றியது. நாற்றிசை ஊரும் இவருக்குச் சொந்த ஊராயிற்று. அனைத்து மக்களும் இவருக்கு உறவாயினர். புனிதமான வாழ்க்கையைக் கைக்கொண்டு புகழுடையவராய் விளங்கினார்.

ஒரு மகானை உருவாக்கிய மகத்தான குருவைப் பற்றி நாம் அறிய உள்ளோம்.

யார் அவர் ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"ஒன்று இரண்டுடன் மூன்றுபின் நான்குமாய்
ஐந்தாகி ஆறோடு ஏழுமாகி நம்முடைய
சுந்தரன் கண்டதோர் ஆசான்கள் யாவரின்
அந்தமில் ஆற்றலைப் போற்று"

(மேற்குறிப்பிட்ட நான்கு குருமார்களும் சுந்தரனிற்குத் திருமணம் நடப்பதற்கு முன் அமைந்த குருமார்கள். ஆயினும் தொடர்ச்சி கருதி ஏழு குருமார்களைப் பற்றியும் பார்த்து விடுவோம். பிறகு சுந்தரனின் திருமணம், 'இல்வாழ்க்கை' பற்றிப் பார்ப்போம்.)

சுந்தரனிற்குத் திருமணம் நடந்த போது வயது பன்னிரண்டு. அந்த வயதிலேயே ஞானசாக்ஷத்திற்குரிய சிறப்பைப் பெற விரும்பினான். அந்தச் சிறப்பைப் பெறுவதற்கும், அந்த அறிவை முறைப்படிப் பெறுவதற்கும் ஒரு உத்தமமான ஞானாசிரியன் வேண்டுமென்று ஏங்கினான்.

தனது அறிவுத் திறனைச் சோதித்து அறிந்து, ஏற்ற வகையில் பக்குவம் சொல்லி வழி நடத்தும் குருவைத் தேடத் தொடங்கினான்.

விருப்பு,வெறுப்புகளுக்கு ஆளாகாமல், தெளிந்த தூய சிந்தனையுடன் தன்னை ஆட்கொள்பவரே குரு. இவர் இறைவனுக்கு ஒப்பானவராவார், என்பதை உணர்ந்தான்.

தன் மாமனார் ராமசுப்பையரிடம் விதிமுறைகள்படி சிவபூஜை கற்றுக் கொண்டபின் அவரிடமே கேட்டான்: 'சிறந்த ஆன்மீக வித்வான்களும், மகனீயர்களும் எங்கு எங்கு உள்ளனர் ?' என்று.

அடைச்சாணி ஊரிலேயே அக்ரஹாரத்துத் தென்கோடி வரிசையில் விஸ்வேஸ்வர சாஸ்திரிகள் என்ற பெரியவர் இருப்பதாகவும் அவர் வேதாந்த அறிவிற் மிகச் சிறந்தவரென்றும் அவரிடம் அறிந்து கொண்டான்.

'விஸ்வேஸ்வர சாஸ்திரிகள் மனத்தைச் சென்ற இடத்தில் செல்ல விடாமல், தீமையானவற்றினிருந்து நீக்கிக் காத்து, நன்மையானவற்றில் செல்ல விடுவதே அறிவாகும் என்பதை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உணர்ந்தவர். எதிர்காலத்தில் நிகழப்போவதை முன்னே அறியும் திறன் பெற்றவர். தான் சொல்லுவதை எளிமையாகச் சொல்லி சீடனுக்குப் புரிய வைப்பவர். தான் பிறரிடம் கேட்டவற்றின் நுட்பமான பொருளை ஆராய்ந்து அறியும் அறிஞர். ஐம்புலன் களையும் அவற்றின் வழியே செல்லவிடாது அடக்கி ஆளும் ஆற்றல் பெற்றவர். தொன்றுதொட்ட பெருமையை உடைய குடிப்பிறப்பினர். பல்வகை அறிஞர்கள் கூடியுள்ள இடத்தில் மேன்மையான கல்வியினால் தனித்து உயர்ந்து விளங்குபவர். தன் ஆற்றலின் சிறப்பைத் தானே புகழ்ந்து கூறிக்கொள்ளும் அற்பகுணம் நீங்கியவர்.'

இவ்வாறு விஸ்வேஸ்வர சாஸ்திரிகளின் பரிபக்குவ நிலையை அறிந்து கொண்ட சுந்தர சிவன் அவரை நாடிச் சென்றான். அவரைக் காணச்சென்ற அன்றைய தினமே மேற் கல்வியைத் தொடர உகந்த நாளாய் அமைந்தது.

நக்ஷத்திரம், லக்னம், வித்தையானது ஓங்கி வளர்வதற்குரிய வளர்பிறை சுபநாளாகவும் அமைந்தது.

'இவரே நான் நாடிவந்த குருநாதர்' என்பதை உணர்ந்து கொண்டு விழிகளில் ஆனந்தக் களிப்புப் பொங்க,மெய்சிலிர்க்க, புத்தி பரவசம் கொள்ள அவரது பாதகமலங்களில் மும்முறை விழுந்து பணிந்து வணங்கினான்.

'சுந்தரா! எழுந்திரு'என்று கனிவு பொங்கக் கூறிக் காலடியில் வீழ்ந்திருந்த சுந்தரனின் சிரசைத் தொட்டார்.

நிகழ்ந்தது மாயம்.

என்ன மாயம் நிகழ்ந்தது ?

'சுந்தரா! எழுந்திரு!' என்ற இரு வார்த்தைகளும், குருவின் கரம் சிரசில் பட்ட ஸ்பரிசமும், சுந்தரனுள் பெரும் மாயத்தை ஏற்படுத்தின. சுந்தரன் தன் உணர்வை இழந்தான். தன்னை மறந்தான். தன் நாமம் கெட்டான். தலைப்பட்டான் குருவின் தாளே!



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கண்கள் தாமாக மூடின. சமாதி நிலைக்குரிய தன்மையை அடைந்தான். அவன் உடலினுள்ளே ஜிலுஜிலுப்பான, இதமான குளிர்ச்சி பரவியது. எதையும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத நிலையை அடைந்தான்.

தன்னை அறியாமலேயே தான் அடைந்த விசேஷ அனுபவத்தை உணர்ந்தான்.

சத்குருவின் பரிபூரண அனுக்கிரஹத்தை அடைந்ததாக ஆனந்தித்தான்.

கண்கள், அவனறியாமலேயே தாரை தாரையாக ஆனந்த வெள்ளத்தை ஆற்றுப் பெருக்கைப் போல் சொரிந்தன. எழுந்தான்.

குருவின் பாதகமலங்களிலேயே மீண்டும் விழுந்தான்; பணிந்தான்.

இன்று தானடைந்த இன்பப் பரவசநிலை சாஸ்வதமாக நிலைத்திருக்கும்படி வேண்டினான்.

சுருக்கமாக –

குருநாதரின் "ஸ்பரிச தீக்ஷை' அன்று, அங்கே சுந்தரனுக்குக் கிடைத்தது.

பிறருடைய குறைகளைப் பற்றிக் கூறாமல், குணத்தை மட்டும் பேசும் உயர்ந்த கொள்கையும்,நூல் பல கற்றிருந்தும் பணிவிற்கு உறைவிடமாய்த் திகழ்ந்த, கற்றறிந்த ஆன்றோரால் மதிக்கப்படும் ஆசானின் ஆசிகளை எதிர்நோக்கிக் காத்திருந்தான் சுந்தரன்.

பரம அத்வைத ஞானியும், முக்காலமும் உணர்ந்த உத்தம சீலருமான விஸ்வேஸ்வர சாஸ்திரிகள் சுந்தரனிடம் ஒரு முக்கிய வருவதுணர்த்தும் நிகழ்வைக் கூறினார்.

அது என்ன நிகழ்வு ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அத்வைத ஞானம் நிரம்பப் பெற்ற விஸ்வேஸ்வர சாஸ்திரிகள், சுந்தரனை நோக்கிக் கூறத் தொடங்கினார்:

'சுந்தரா! உன்னை நான் அறிவேன்.

யான் ஜன்மஜன்மாந்திரமாக செய்த தவத்தின் பலனாய் நீ என்னைத் தேடி உரிய காலத்தில் வந்துள்ளாய்.

சிறிது காலந்தாழ்த்தி இருந்தால் யானே உன்னைத் தேடி வந்திருப்பேன். (என்ன ஒரு அடக்கம் பாருங்கள்!)

உலக சம்பிரதாய விதிகளை ஒட்டியே உனக்கு குருவாய் அமைந்துள்ளேன். ஈஸ்வர கடாக்ஷமும், சிவானுக்கிரகமும் பெற்றவன் நீ!

உன்னுடைய பெருமையும், சிறப்பும், சீரும் உலகம் அறிந்து கொள்ளும் காலம் விரைவில் வரும்.

உன்னுடைய உள்ளுணர்வின் விசேஷத்தால் நீ சகல ஞானத்தன்மைகளையும் இந்த சிறு பிராயத்திலேயே பரிபூரணமாக அடைந்துள்ளாய்.

உலகில் எவரும் எய்தாத நிலையாகிய ஜீவ–பிரம்ம ஐக்கிய பரமசாந்த நிலையில் நின்று

சிவன் வேறல்லன்; சுந்தரசிவன் வேறல்லன் என்று உலகோர் போற்ற வாழ்வாய்" இவ்வாறு சுந்தரனின் உண்மை நிலைகளை எடுத்து விளக்கினார்.

சுந்தர சிவன் பன்னிரண்டு வயது முதல் பதினைந்து வயது வரை தன்னுடைய ஞானாசிரியரான விஸ்வேஸ்வர சாஸ்திரிகளிடம் வேதாந்த மார்க்கமான பல தத்துவங்களைக் கற்றறிந்தான்.

அவர் வேதாந்தங்களைக் கற்றவர் மட்டுமல்ல அதன்படி வாழ்ந்தவர்.

திங்கள் உலகின் புறத்திருளை நீக்குகிறது; சான்றோரான குரு சீடனின் அகத்திருளை நீக்குகிறார். திங்கள் குளிர்ச்சி ஆனது;



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சான்றோரின் அருளும் குளுமையானது. அத்தகைய திங்கள் போன்ற சான்றோர்தாம் விஸ்வேஸ்வர சாஸ்திரிகள்.

அவருடைய உபதேச மார்க்கங்களையும், ஞானசாக்ஷாத் காரத்திற்கு உரிய அறிவையும் பெற்றான்.

(சுந்தர சிவன் தன்னுடைய ஞானகுருவாகிய விஸ்வேஸ்வர சாஸ்திரிகளின் மீதுள்ள குருபக்தியைக் காட்ட ,பின்நாட்களில் தன் சீடர்களுக்கு உபதேசித்த 'சுவானுபூதி ரஸாயனம்' என்ற வேதாந்தப் பிரவசனத்தில் இவ்வாறு குரு ஸ்துதியில் குறிப்பிடுவான்: 'அருணிறைந்த பரசிவமே மூன்றுருவானாற்போல் வந்தடியேனுய்ய, பரவிய பாஷ்யம் உரைத்த சுந்தர சாஸ்திரிகளையும், பரிவாய் ஞான தருமுயர் விஸ்வேஸ்வரரானையும்' என்று துதித்துப் போற்றியே அருளுரையைத் தொடங்குவான்.)

சுந்தரன் தன்னுடைய ஆறாவது குருவை இந்த மண்ணில் சந்திக்கவில்லை.

பின்......

எங்கே சந்தித்தான் ?

கல்வி புகழைத் தருகிறது. கொடுக்கக் கொடுக்கக் குறையாது இருக்கிறது.

கற்றவன், கற்பிப்பவன் புகழை உலகெங்கும் விளங்கச் செய்கிறது.தகுதியானவன் கற்கும் கல்வி, கற்றவன் உள்ளவரை அழிவதில்லை.

எனவே சுந்தரனே தனக்கு உகந்த சிஷ்யன் என்பதைத் தீர்மானித்தார் ஸ்ரீவிஸ்வேஸ்வர சாஸ்திரிகள்.

சுந்தரனின் அனுஷ்டான முறைகளையும், சிவபூஜையில் உள்ள ஈடுபாட்டையும், அனைத்து சாத்திரங்களையும் வித்வத்வம் நிரம்பிய மகாமேதைகளிடமிருந்து கற்றுக் கொண்டதையும், வேதாந்த அறிவை அடைய அவனுடைய ஆர்வத் துடிப்பையும்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எக்காலத்திலும் நெறி தவறாத குணச்சிறப்பையும், நிறைகுடமாய் இருக்கும் அனுபூதியின் ஆற்றலையும், அனைத்திற்கும் மேலாக இயல்பாகவும்– வித்யையினால் விளைந்த வினயமும், மகா தேஜஸ் நிரம்பிய முகாரவிந்தமும் ஸ்ரீவிஸ்வேஸ்வர சாஸ்திரிகளைக் கவர்ந்தன.

எனவே தனது வேதாந்த அறிவுக் களஞ்சியத்திற்கு உரிய வாரிசாக அவனை ஏற்றுக் கொண்டார்.

தானறிந்த அனைத்து வேத, வேதாந்த சாரங்களை சுந்தரனிற்குப் போதிப்பதைத் தனக்குக் கிடைத்த பேறாகக் கருதினார் ஸ்ரீவிஸ்வேஸ்வர சாஸ்திரிகள்.

அவர் 1857–ம் ஆண்டு நள வருஷம், தைமாதம் தனது 82–ம் வயதில் சித்தியானார்.

அந்த சமயம் சுந்தரன் தன்னுடைய முதல் மாணாக்கர் களாகிய நாராயண சிவம், ரங்கநாத சிவம் ஆகியோருடன் காசியில் இருந்தான்.

1857–ம் ஆண்டு நள வருஷம் மாசி மாதம் அடைச்சாணி வந்ததும் முதல் மாணாக்கர்களுடன் தம் ஞான குருநாதரின் சமாதியை தரிசித்து ஏழுநாட்கள் தங்கி மௌனவிரதம் அனுஷ்டித்தான்.

**சுந்தரனின் ஆறாவது குரு :**

சுந்தரனின் வயது பதினாறு வயது இரண்டு மாதம்.

1848–ம் ஆண்டு பிலவங்க வருஷம் தைமாதம் முதன் முறையாகக் காசி க்ஷேத்திரத்தை தரிசிக்கத்

தன்னந்தனியாக, கால்நடையாகப் பல தீர்த்தங்களையும், ஆலயங்களையும் தரிசித்துக் கொண்டு புறப்பட்டான். காசி நகரை அடைய நான்கு மாதங்கள் ஆயின.

1848–பிலவங்க வருஷம் வைகாசி மாதம் காசி நகரின் மணிகர்ணிகா கட்டத்தை அடைந்தான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அங்கே பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

சுந்தரன் அக்கூட்டத்தினரை நோக்கி : 'இங்கு ஏன் இத்தனை ஜன நெரிசல் ?

எதற்காக இத்தனைபேர் கூடியுள்ளீர்கள் ?' என வினவினான்.

அவர்கள் கூறிய பதில் என்ன ?

'மஹாகணபதி முனீந்திரர் என்ற மாபெரும் மகான் கங்கை நதியின் ஆழத்தில் கடந்த ஆறுமாதமாக ஜலசமாதியில் இருக்கிறார். அவர் எப்பொழுது சமாதி நிலை நீங்கி மேலே வருவார், இத்தனை நாட்களாகக் காத்திருக்கிறோம். அவரைத் தரிசனம் செய்யும் பேறு எங்களுக்குக் கிடைக்குமா என்பது தெரியவில்லை.' என ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.

இதைக்கேட்ட சுந்தரன்'கவலைப்படாதீர்கள். இதோ நான் சென்று அந்தப் புனிதரை அழைத்து வருகிறேன்' என்று கங்கையில் குதித்தான்; மூழ்கினான்; மற்றவர் கண்களிலிருந்து மறைந்தான்.

கல்விச் செல்வம் வேண்டுவோர் அச்செல்வம் உடையவ ரிடத்துப் பணிவாக நடக்க வேண்டும் என்பதை அறிவர்.

அந்தச் செல்வத்தை முனீந்தரரிடம் கற்க, நீந்தி, நீந்தி கங்கையின் ஆழத்திற்குச் சென்றான். ஜலசமாதியில் இருந்த மகாகணபதி முனீந்தரரைக் கண்டான். சுந்தரன் வருவதை ஞானதிருஷ்டியில் கண்டார் முனீந்திரர். நிஷ்டை கலைந்தார்; கண்கள் மலர்ந்தார்; சுந்தரனை மார்போடு தழுவிக் கொண்டார்.

இருவரும் ஆலிங்கனம் செய்து கொண்டபோது கங்கை மகிழ்ச்சிப் பெருக்கில் பொங்கியது.

நீர்மட்டத்திற்கு மேல் ஒருமுழ உயரம் எழும்பி "சிவலிங்க ஸ்வரூபமாய்" கரையில் இருந்தவர்களுக்குக் காட்சி அளித்தது.

அந்த சிவலிங்கம் செக்கச் செவேலென்று மாலை நேர சூரியன் போல் ஒளிவிட்டு ஜோதிப் பிழம்பாய் விளங்கியது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இதனைக் கரையில் காத்திருந்த எல்லா மக்களும் கண்டு களித்தனர். கங்கை ஜலத்தின் ஆழத்தில் இருமாபெரும் மகான்களும் வேதாந்த விசாரங்களில் ஈடுபட்டனர்.

அங்கே முனீந்தரர், சுந்தரனுக்கு அஷ்டமா சித்திகள், உச்சிஷ்ட கணபதி உபாசனை, காற்றில் பறப்பது, ஒரே உருவில் பல இடங்களில் ஒரே நேரத்தில் தோற்றமளிப்பது, யாரைத் தொட்டாலும் அவர்கள் சகஜ சமாதி நிலையை அடைவது, இறந்தவர்களைப் பலவித கிரியைகளால் பிழைக்க வைப்பது, மந்திரோபசத்தால் நிஷ்டை கூடச் செய்தல், ஸ்பரிச தீக்ஷையில் ஞான நிலையை அடையச் செய்தல் ஆகிய பல சித்திகளையும் அளித்து ஆசிர்வதித்தார்.

(இவை எல்லாம் ஸ்வாமிகளின் பிற்கால சரிதத்தில் தகுந்த இடங்களில் வெளிப்படும்.)

மூன்று தினங்கள் கடந்தன.

மஹாகணபதி முனீந்தரரும், சுந்தரனும் கங்கை நீரினின்று வெளிப்பட்டு நீரில் நடந்து கரையை அடைந்தனர்.

இவர்களைக்கண்ட மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

பதினாறு தினங்கள் வாரணாசியில் ஒன்றாகவே இருந்தனர்.

பதினாறு நாட்களுக்குள் இருவரும் சேர்ந்து காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கு மகத்தான கும்பாபிஷேகத்தை நடத்தினர்.

மக்கள் அனைவரும் கும்பாபிஷேக நிகழ்வையும்,இருபெரும் மகான்களையும் நேரில் தரிசித்து ஆனந்தம் அடைந்தனர்.

இந்த நிகழ்வு 1848–ம் ஆண்டு,கீலக வருஷம் வைகாசி மாதம் நடைபெற்றது.

(வாரணாசி நகரில் கங்கைக்கரை மணிகர்ணிகா கட்டத்தில் ஸ்ரீமஹாகணபதி முனீந்தரருக்கும், ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளுக்கும் பக்தர்கள் சிலைகள் வடித்து இன்றும் வழிபட்டு வருகின்றனர்.)

சுந்தரனின் ஏழாவது குரு யார் ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



(19.11.2022 அன்று நடைபெற்ற காசி தமிழ்ச் சங்கமம் தொடக்க விழாவில், காசி மாநகரில் கோடகநல்லூர் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் சில காலம் வசித்தது பற்றி பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.)

**சுந்தரனின் ஏழாவது குரு :**

சுந்தரனின் ஏழாவது குரு ஆம்பூர் சோமசுந்தர சாஸ்திரி என்பவர் ஆவார். ஆம்பூரில் வசித்து வந்தார். இவருடைய இயற்பெயர் ராமச்சந்திர சாஸ்திரி என்பது ஆகும். ஆம்பூர் சோமசுந்தர சாஸ்திரிகள் மிகுந்த வேதாவிலாசம் பொருந்தியவர். பரமஞானியாய் விளங்கிய தன் தந்தையிடம் பாடம் கற்றவர். தன் தந்தையிடம் வேத பாடம், சாஸ்திர பாடம், வேதாந்த பாடம் ஆகியவற்றை ஐயம்திரிபறக் கற்று வித்யையில் நிகரற்று விளங்கினார். இளம் வயதிலேயே மனைவியை இழந்தார். ஆனால் மறுமணம் செய்து கொள்ளவில்லை.

ஆம்பூர் சோமசுந்தர சாஸ்திரியார் 1800–ம் ஆண்டு பிறந்தவர். இளம் பிராயத்திலேயே வேதாந்தப் பற்று கொண்டவர். உலகப் பற்று நீங்கியவர். அடிக்கடி சகஜசமாதி நிலையில் கூடிவிடுவார். வெளி இடங்களில் உணவு ஏற்றுக் கொள்ள மாட்டார். தன் சமையலைத் தானே செய்து கொள்வார். ஒருநாளைக்கு ஒரு வேளைதான் உணவு எடுத்துக் கொள்வார். அதுவும் மிக எளிய, சாமானிய உணவாகும்.

ஒருவேளை உண்பவன் யோகி என்றும், இருவேளை உண்பவன் இன்பவாழ்வினன் என்றும், மூன்று வேளை உண்பவன் நோயாளி என்றும், நான்கு வேளை உண்பவனின் உயிர் உடலைவிட்டு நீங்கப் போகிறது என்பதையும் அறிந்த ஞானி அவர்.

(இவர் என்ன உண்பார், எந்த அளவு உண்பார்; எப்பொழுது உண்பார் என்ற விபரங்களும் உள்ளன. இங்கே அது தேவை இல்லை எனக்கருதி விடப்பட்டது.)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பொதுவாக இவர் துறவியல்ல.

இடுப்பில் பஞ்சகச்சம்; மேலே யோக வஸ்திரம்; கழுத்தில் ஒற்றை உத்திராக்ஷம்; உடல் முழுதும் பளிச்சென்று திகழும் விபூதிப் பூச்சு; உச்சந்தலையில் மெல்லிய குடுமி; நூற்றிஎட்டு உத்திராக்ஷ மணி கோர்த்த ஒருமாலை கழுத்தை அழகு செய்யும்; தீர்க்கமான நாசிகள்; யாரையும்,எதையும் ஊடுருவிப் பார்க்கும் கூரிய பார்வை; இதழ்களில் சதா ஒரு புன்சிரிப்பும், தேஜஸூம் நிரம்பிய முகபாவம்; கவலையற்ற முகம்; கேட்டார்ப் பிணிக்கும் வாக்சாதுர்யம். 1851–ம் ஆண்டு இவரிடம் சீடனாகச் சேர்ந்தான் சுந்தரன்.

இத்துணை சிறப்பு மிக்கவரிடம் சுந்தரன் சகஜநிஷ்ட சமாதியின் நுணுக்கங்கள், உபதேச மார்க்கங்களை அறிந்து கொண்டான்.

சுந்தரன் தன் குருஸ்துதியில் ‘அருணிறைந்த பரமசிவமே மூன்றுருவானாற்போல் வந்தடியேனுய்ய பரவிய பாஷ்யமுரைத்த சுந்தர சாஸ்திரிகளையும், பரிவாய் ஞான தருமுயர் விஸ்வேஸ்வராளையும், சகஜசமாதிநிலை சாற்றியான் குரு சோமசுந்தர சாஸ்திரிகளையும் பணிந்து நெஞ்சிட் கொண்டு வாழ்வாய்!’ என்று போற்றித் துதிப்பதைக் காணலாம்.

1874–ம் ஆண்டு ஸ்ரீமுகவருஷம் தைமாதம், தனது ஆத்மா விடுதலை ஆகப் போகிறது என்பதை சோமசுந்தர சாஸ்திரிகள் அறிந்து கொண்டார்; ஆபத்சன்யாசம் ஏற்றுக் கொண்டார்.

அடைச்சாணியில் தன் சீடர்களுக்கு வேதாந்த உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போதே, அவர்கள் காண, “சிவா” என்று கூறிக் கொண்டே ஆத்ம விடுதலை அடைந்தார்.

இவர் சுந்தரனின் ஐந்தாவது குருவான ஸ்ரீவிஸ்வேஸ்வர சாஸ்திரிகளின் புதல்வராவார்.

இவரது சமாதியும், கன்னடியன் வாய்க்காலின் சமீபத்திலுள்ள ஸ்ரீவிஸ்வேஸ்வர சாஸ்திரிகளின் சமாதிக்கு அண்மையிலேயே மந்திர தந்திர பூர்வமாக எழுப்பப்பட்டுள்ளது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீவிஸ்வேஸ்வர சாஸ்திரிகளின் சமாதிக்கு அருகில் ஐந்து சமாதிகள் அமைந்துள்ளன.

வீரவநல்லூர் சோமசுந்தர சாஸ்திரிகள் என்ற சுந்தர சாஸ்திரிகளை முதல் குருவாகவும்,

அடைச்சாணி ஸ்ரீவிஸ்வேஸ்வர சாஸ்திரிகளை இரண்டாவது குருவாகவும், அவரின் புதல்வரான ஆம்பூர் சோமசுந்தர சாஸ்திரிகளை மூன்றாவது குருவாகவும் தம் மனத்தில் குடியேற்றி இவர்களை பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வர வடிவங்களில் வணங்கிய பின்பே தம்முடைய சகல நடவடிக்கைகளையும் தொடங்குவான் சுந்தரன்.

இவ்வாறு சுந்தரனுக்கு ஏழு குருமார்கள் அமைந்தனர். அவர்கள் அனைவரையுமே சுந்தரன் ஒரே அளவில் வைத்தே போற்றினான்.

அவர்களில் பிரஸ்தானதிரியம், வேதாந்த ஞானதத்துவங்கள், சகஜ நிஷ்டை, ஆகியவற்றைப் போதித்த இம் மூவரும் சிறப்பிடம் பெறுவதில் வியப்பேதும் இல்லை அல்லவா!

இனி, ஏழின் பெருமைகள் இச்சரிதத்தில் இடம் பெறுகின்றன.

அவை யாவை?

(இவ்வாறு சுந்தரனிற்கு ஏழு சத்குருநாதர்கள் அமைந்ததை மிகவும் உயர்வாக ஸ்ரீஸ்வாமிகள் பற்றிய குறிப்புகளில் "வைஸிக, காயக", "மஹாவித்வான்", "கலைமாமணி" வா.சு.கோமதிசங்கர ஐயர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் "ஏழு" என்ற எண்ணின் சிறப்பையும் பதிவு செய்துள்ளார்.

அந்த மேதையின் குறிப்பில் உள்ளபடி.....)

"ஏழு என்ற எண் மிகவும் உன்னதமானதாகும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவற்றுள் சில:

இசை ஏழு, அவை ஷட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பன.

**இசையின் பிறப்பிடம் ஏழு :**

மிடறு, நாவு, அண்ணம், சிரசு, நெற்றி, நெஞ்சு, மூக்கு.

**இசையின் ஓசை ஏழு :**

மயில், மாடு, ஆடு, கிரௌஞ்சம், கோகிலம், அஸ்வம், யானை.

**இசைகளின் சுவை ஏழு :**

பால், தேன், தயிர், நெய், ஏலம், வாழைக்கனி, மாதுளங்கனி.

**இசைகளின் மணம் ஏழு :**

மௌவம், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னாவரை, புன்னை.

**இசை எழுத்துக்கள் ஏழு :**

ச,ரி,க,ம,ப,த,நி.

**தாளம் ஏழு :**

துருவ, மட்டிய, ரூபக, சம்பை, திரிபுட, அடதாள, ஏகதாள.

**இசைக்கு இறைவன் எழுவர் :**

விஸ்வாமித்திரர், யமன், அக்னி, சந்திரன், சூரியன், கௌதமன், காசியபன்.

**உலோகம் ஏழு :**

செம்பொன், வெண்பொன், இரும்பு, செம்பு, ஈயம், வெண்கலம், தரா.

**மேலுலகம் ஏழு :**

பூலோகம், புவர்லோகம், சுவர் லோகம், மகா லோகம், ஜனலோகம், தவலோகம், சத்யலோகம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



**கீழுலகம் ஏழு :**

அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதாளம்.

**கடல் ஏழு :**

உவர்நீர், நன்னீர், பால் நீர், தயிர் நீர், நெய்நீர், கருப்பஞ்சாறு நீர், தேன் நீர்.

**சிரஞ்ஜீவியர் எழுவர் :**

அஸ்வத்தாமன், மகாபலி, வியாச பகவான், அனுமன், விபீஷணன், மார்க்கண்டேயன், பரசுராமர்.

**தாதுக்கள் ஏழு :**

நரம்பு, ரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல்.

**தீவுகள் ஏழு :**

நாவலம், இறலி, குசை, கிரௌஞ்ச, புஷ்கர, தெங்கு, கமுகம்.

**நதிகள் ஏழு :**

கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, காவேரி, குமரி, கோதாவரி.

**பிறப்பு ஏழு :**

தேவர், மனிதர், விலங்கு, புல், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்.

**புண்ணியம் ஏழு :**

பயிர்செய்தல், தானம், விரதம், சினேகம், நற்போஜனம், இல்லறம், உற்சாகம்.

**புண்ணிய நகரங்கள் ஏழு :**

அயோத்தி, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை.

**பெண்ணின் பருவம் ஏழு :**

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



**ஆண்களின் பருவம் ஏழு :**

பாலன், மீளி, மறவோன், திறவோன், விடலை, காளை, முதுமகன்.

**பெரியோர் இயல்பு ஏழு :**

அறம், பொருள், இன்பம், அன்பு, புகழ், மதிப்பு, பொறுமை.

**மண்டலம் ஏழு :**

வாயு, வருண, சந்திர, சூரிய, நக்ஷத்திர, அக்னி, திரிசங்கு.

**மலை ஏழு :**

இமயம், கயிலை, மந்தரம், விந்தம், நிடதம், ஏமம், கூடம், நீலம்.

**பருவதம் ஏழு :**

மஹேந்திரம், மலயம், சையம், அநுமந்தம், மிருட்சம், விந்தியம், பாரியாத்திரம்.

**மாதர்கள் ஏழு :**

பிராம்மி, மாஹேச்வரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, சாமுண்டி.

**முனிவர் ஏழு :**

அத்ரி, வசிஷ்ட, கௌதம, காஸ்யப, ஆங்கிரசு, அகஸ்தியர், பரத்வாஜர்.

**வித்தியாதத்துவம் ஏழு :**

கால, நியதி, கலை, வித்தை, ராகம், புருமன், மாயை.

**சந்தம் ஏழு :**

காயத்ரி, உஷ்ணிக், அனுஷ்டுப், பிரகதி, பாப்தி, திருஷ்டுப், சக்தி.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



**அவஸ்தைகள் ஏழு :**

ஜாக்ரம், ஸ்வப்னம், சுஸுப்தி, துரியம், துரியாதீதம், அத்தோதீதம், சன்மயம்.

**பாதகம் ஏழு :**

அகங்காரம், லோபம், காமம், பகை, போஜனப் பிரியம், பேராசை, சோம்பல்.

**ஸப்தமாதர்களின் வாகனங்கள் ஏழு :**

அன்னம், ரிஷபம், மயில், கருடன், சீயம், யானை, பேய்.

**ஸப்தமாதர்களின் ஆயுதங்கள் ஏழு :**

மறை, பினாகம், வேல், ஆழி, கலப்பை, வஜ்ஜிரம், சூலம்.

**வானவில் நிறங்கள் ஏழு :**

ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், வெளிர் சிவப்பு, சிவப்பு.

**நாட்கள் ஏழு :**

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.

**மழையின் வகைகள் ஏழு :**

சம்வர்த்தம் – (ரத்தினக் கற்கள்), ஆவர்த்தம் –நீர்மழை, புஷ்கலாவர்த்தம் – பொன்மழை, சங்காரித்தம் – பூமழை, துரோணம் – மண்மழை, காளமுகி – கல்மழை, நீலவருணம் – தீமழை (எரிமலை.)

**தலைமுறைகள் ஏழு :**

நம் தலைமுறை; தாய்– தந்தை; பாட்டன்–பாட்டி; பூட்டன்–பூட்டி; ஓட்டன்–ஓட்டி; சேயோன்–சேயோள்; பரன்–பரை.

**கடை வள்ளல்கள் ஏழு :**

பேகன், பாரி, காரி, ஓரி, ஆய், அதிகன், நள்ளி.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



**சக்கரங்கள் ஏழு :**

மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விஷுத்தி, ஆக்னா, சகஸ்ராரம்.

**தாளவழி ஏழு :**

செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிபுத்தூக்கு, கொயிற்றூக்கு, நீவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கு.

**ராகசோபிதம் ஏழு :**

ஆர்ச்சிகம், காகிதம், சாமிகம், சுராந்தரம், ஔடுவனம், ஷாடவம், சம்பூர்ணம்

**தளை ஏழு :**

நிரையொன்றாசிரியத்தளை, நேரொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, வஞ்சித்தளை, ஒன்றா வஞ்சித்தளை.

**நீர் ஏழு :**

நதிநீர், அருவிநீர், கடல்நீர், குளத்து நீர், கிணற்று நீர், ஊற்று நீர், மழைநீர்.

**கிழங்குகள் ஏழு :**

கருணை, சேனை, சேம்பு, சிறுகிழங்கு, சர்க்கரைவள்ளி, பிழா, வெற்றிலைவள்ளி.

**நெடுமரம் ஏழு :**

ஆல், அத்தி, அரசு, வேங்கை, கோங்கு,வேம்பு, வாகை.

**பழ வர்க்கங்கள் ஏழு :**

மா, பலா, வாழை, கொய்யா, நாவல், தெங்கு, மாதுளை.

**திருமணத்தின் போது எடுக்கும் வைக்கும் அடிகள் ஏழு :**

பஞ்சமில்லாமல் வாழவேண்டும், ஆரோக்கியமாக வாழ வேண்டும், நற்காரியங்கள் எப்பொழுதும் நடக்க வேண்டும்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுகத்தையும்,செல்வத்தையும் பெற வேண்டும், லக்ஷ்மிகடாக்ஷம் நிறைந்து இருக்க வேண்டும், நாட்டில் நல்ல பருவங்கள் நிலையாகத் தொடர வேண்டும், சனாதன தர்மம் நிலைக்க வேண்டும்.

இதுபோல் ஏழு என்ற எண்ணின் சிறப்பமைதி இன்னும் பல உண்டு.

இந்த எண்ணின் பெருமைக்கு ஏற்றாற்போல் சுந்தரனிற்கும் பெருமை வாய்ந்த, மேதாவிலாசம் நிறைந்த ஏழு சற்குருநாதர்கள் அமைந்தனர்.

அந்த ஆசான்கள் வறுமையால் வாடியவர்கள் ஆயினும் அறவொழுக்கத்திற்கு மாறாக நடக்காதவர்கள்.

அறிவாலும், முயற்சியாலும் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு நல்வழியில் நடந்தவர்கள். இத்தகைய குருமார்கள் களைப் பெற்றது சுந்தரனின் பேறா ?

சுந்தரனை சீடனாகப் பெற்றது ஆசான்களின் அதிர்ஷ்டமா ?

நாம், சுந்தரனையும், ஜானகியையும் பத்தமடையில் தனியாக விட்டுப் பிரிந்து வந்து நாட்கள் பலவாகி விட்டன.

திருமணத்திற்குப் பின் அவர்களின் இல்லறம் எவ்வாறு அமைந்தது ?

சுந்தரத்தின் மாமாவாகிய பத்தமடை வேங்கட சுப்பையர் அவனுக்குத் திருமணம் செய்விக்க வேண்டுமென விரும்பினார்.

அவனின் நண்பர்கள் நாராயண சிவம், ரங்கநாத சிவம் இவர்களின் மூலம் மணம் செய்து கொள்ள எந்தவித ஆக்ஷேபணையும் சுந்தரன் தெரிவிக்கவில்லை என்பதறிந்து மகிழ்ந்தார்.

சாப்தீகமான நிலையில் இருந்த சுந்தரன், கல்யாணம் செய்து கொள்ள விரும்பவில்லை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஆயினும் மாமா, அத்தை ஆகியோரின் அபிலாஷையை நிறைவேற்றுவது தனது கடமை என நினைத்தான்.

அவனின் மாமி சுந்தரனிடம், 'உனக்கு நல்ல குடும்பத்தில் பிறந்த பெண்ணாய்ப் பார்த்து, நல்ல முகூர்த்தத்தில் கல்யாணம் செய்து கண்குளிரக் காண ஆசைப்படுகிறோம்.

உன் அப்பா,அம்மா இருந்தால் உன் திருமணத்தைப் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பார்களோ, அந்த மகிழ்ச்சி எங்களுக்குக் கிடைக்க வேண்டாமா ?

உனக்கு நல்ல இடத்தில் திருமணம் நடக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்யாத நாளே இல்லை.

நீ இப்போது இருப்பதுபோல் உலகம் தெரியாதவனாய், ரிஷிகண கூட்டத்தில் இருக்கும் ஒருவன் போல் இருக்கலாமா?' என இனிமையாகவும், கனிவாகவும், பரிவாகவும் கேட்டார்.

'மாமி! எனக்கெதற்குத் திருமணம் ? எனக்கு இஷ்டமில்லை. ஆயினும் உங்களுடைய மற்றும் உறவினர்களுடைய சந்தோஷங் களுக்கு நான் மறுப்பேதும் சொல்லப் போவதில்லை. திருமணம் ஆனதும் மனைவியாய் வருபவள் என்னில் பாதி ஆகிவிடுவாள். அவளும் என்னைப் போன்று சகஜநிஷ்டை அடையும் பரிபூர்ண நிலையை அடைவாள். இதில் சிறிதும் சந்தேகம் இல்லை. என்னால் அவளும் நற்கதி அடையட்டும். ஆதலால் திருமண முயற்சியை மேற்கொள்ளுங்கள்' என் மாமியிடம் கூறி, திருமணம் செய்து கொள்ள இசைவைத் தெரிவித்தான்.

மாமனும், மாமியும் சுந்தரனின் திருமண முயற்சியில் தீவிரமாக இறங்கினர். திருநெல்வேலி சீமையில் அம்பாசமுத்திர வட்டத்தைச் சேர்ந்த அடைச்சாணி என்ற ஊரில் இருந்த ராமசுப்பையர் என்பவரைப் பற்றிக் கேள்விப்பட்டனர்.

அவர் நியம நிஷ்டங்களில் கண்டிப்பானவர்; ஒழுக்க சீலர்; வேத,வேதாந்தங்களில் மகாபண்டிதர்; அவ்வூர் மக்களாலும், சுற்றியுள்ள கிராம மக்களாலும் புகழ்ந்து போற்றப்பட்டவர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவருடைய பெண் ஸீதை என்கிற ஜானகி. எட்டு வயதுப் பெண். சுந்தரன்—ஜானகி ஜாதகங்கள் தசவிதப் பொருத்தங் களுடன் அமைந்திருந்தன. ஜாதக ரீதியாக இருவரும் பெரும் புண்ணியம் செய்தவர்கள்; ஒருவருக்காகவே மற்றவர் பிறவி எடுத்தவர்; இரண்டு ஜாதகங்களும் சிவகடாக்ஷத்தைப் பெற்றவை என்பதறிந்து மகிழ்ச்சி கொண்டனர்.

ராமசுப்பையரின் கல்வி அறிவினாலும், கல்வி கற்றுத்தந்த பணிவினாலும், அவருக்கு அறிவுடையோர்களிடத்து இருந்த மரியாதையாலும் சுந்தரன் ஈர்க்கப்பட்டான். நீண்டநாள் பழகிய நட்பைப்போல் உணர்ந்தான்.

1843—ம் ஆண்டு, சோபகிருது வருஷம் தைமாதம் பன்னிரண்டு வயது இரண்டு மாதம் நிரம்பிய சுந்தரனுக்கும், எட்டு வயது ஐந்து மாதம் நடந்து கொண்டிருந்த ஜானகிக்கும் அலங்காரக் கொட்டகையில், உற்றாரும், உறவினரும் கூடியிருக்கச் சுபமானதும், மங்களகரமானதுமான கல்யாண வைபோகம் இனிதே நடைபெற்றது.

அந்நாளைய வழக்கப்படி ஐந்து நாள் கல்யாணம்.

வேதகோஷங்களோடும், மங்கள வாத்திய இன்னிசை களோடும், சிவ பஜனைகளுடனும், இதுபோன்ற திருமணம் இதுவரை நடந்ததில்லை என்று அனைவரும் ஒருங்கே கூற இனிதே மணவிழா நடைபெற்றது.

(இந்த நிகழ்வுகளை ஆரம்ப அத்தியாயங்களில் விரிவாகப் பார்த்து உள்ளோம்.)

திருமணத்தின் ஐந்தாம் நாள் சேஷஹோமம் நடைபெற்றது.

அன்றே நல்ல தினமாக இருந்தபடியால் மாலை நான்கு மணி அளவில் சுந்தரன், ஜானகி, மாமா, மாமி மற்றும் உறவினர்கள் புடைசூழ பத்தமடை வந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நான்கு நாட்கள் புகுந்த வீட்டில் தங்கிவிட்டு, பின் பிறந்தகமான அடைச்சாணி வந்து சேர்ந்தாள் ஜானகி. சுந்தர சிவன் உடன் வந்தான்.

சுந்தரன்—ஜானகி இல்லற வாழ்வு எப்போது தொடங்கியது?

அப்போது நடந்த வினோத(!) நிகழ்ச்சி என்ன ?

சுந்தரன் திருமணம் ஆன நாளிலிருந்து இல்லறத்தாருக்கு விதிக்கப்பட்ட சடங்குகளை முறை தவறாமல் செய்து வந்தான்.

அதிகாலையில் செய்ய வேண்டிய சந்தி, ஜப தபங்கள், ஔபாசனம் என்னும் அக்னி பூஜை; காலையில் செய்ய வேண்டிய தேவபூஜை, மூர்த்தங்களுக்கு அபிஷேகம், ருத்ரம்—புருஷசூக்தம்-சமகம் முதலிய மந்திரங்களைக் கம்பீரமான ஒலியுடன் கூறுதல்; மதியம் மற்றும் மாலை வேளை ஜபங்கள்; இரவில் சூதசம்ஹிதை பிரவசனம், சிவ பஜனை என்று முறைதவறாமல் அவன் வாழ்க்கை அமைந்தது.

தன்னுடைய மாப்பிள்ளை சுந்தரனின் தெய்வபக்தி, வழிபாடுகள், செயற்பாடுகள், நெறிமுறைகளைக் கண்டு மனம் மகிழ்ந்தார், ராமசுப்பையர்.

தனக்குக் கிடைத்த மாப்பிள்ளைபோல் வேறு எவருக்கும் அமையாது, அமைந்தது இல்லை என்று பெருமிதம் அடைந்தார்.

சுந்தரனை அழைத்துத் தாமறிந்த அனைத்து சிவபூஜை முறைகளையும் போதித்தார். தான் வெகுகாலம் சிரத்தையுடன் பூஜித்து வந்த பாணலிங்கம், சாளிக்கிராம மூர்த்தங்களை அளித்தார். அத்துடன் நடராஜர், சிவகாமசுந்தரி மூர்தங்களையும் அளித்தார். அவற்றிற்கான பூஜை விதிமுறைகளையும் உபதேசித்தார். அந்த முறையில் பூஜித்தால் சிரேயஸும், ஞானமும், ஈஸ்வர கடாக்ஷமும் கிடைக்கும் என்று போதித்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவரைத் தன் மாமனாராகக் கருதாமல் தனக்கு அமைந்த நான்காவது ஞானகுருவாக மதித்தான், சுந்தரன். தன் மாமனார் உபதேசித்த யாவற்றையும் பக்தி சிரத்தையாகப் பின்பற்றினான்.

சுந்தரனுடைய ஞானம் மேலும் பிரகாசிக்க வேண்டும் என்று விரும்பிய ராமசுப்பையர், சுந்தரனை அவ்வூரிலேயே இருந்த விஸ்வேஸ்வர சாஸ்திரிகளிடம் அனுப்பினார். (இவரைப் பற்றி ஏற்கனவே விரிவாகப் பார்த்து விட்டோம்.)

சுந்தரன் செய்யும் பூஜையில் ஜானகியும் ஆச்சாரத்துடன் கலந்து கொண்டு தேவையான உதவிகளைச் செய்து வருவாள்.

சுந்தரனும், ஜானகியும் ஒரே வீட்டில் இருந்தாலும் தனிமையில் சந்தித்துக் கொள்வதோ, பேசுவதோ, கண் ஜாடைகள் பரிமாறிக் கொள்வதோ கிடையாது.

ஜானகி அடைச்சாணியில் பெற்றோர் வீட்டில் இருந்தாள். சுந்தரன் மட்டும் பத்தமடைக்கும், அடைச்சாணிக்கும் சென்று வருவான். அடைச்சாணியில் இருக்கும் நேரத்தில் பெரும்பகுதியை குரு விஸ்வேஸ்வர சாஸ்திரிகளுடனே பாடம் கேட்பதில் செலவிடுவான்.

அந்த பன்னிரண்டு வயதுப் பிராயத்திலேயே ஒரு மஹாசிவராத்திரி அன்று, அடைச்சாணியில் மாலை முதல் மறுநாள் விடியற்காலை வரை ஆறுகால அபிஷேக பூஜைகளைத் தனி ஒருவனாகவே செய்தான்.

ஊர்மக்கள் பெருமளவில் திரண்டு வந்து அந்த சிறுவன் செய்த சிவபூஜையைக் கண்டு வியப்பும்,களிப்பும் அடைந்தனர்.

1843—தைமாதம் முதல் 1847 பங்குனி முடிய பத்தமடை—அடைச்சாணி என்று நான்கு வருடம், இரண்டு மாதம் வரை அலைந்து மாமனார் வீட்டிற்குச் சென்றான்; விஸ்வேஸ்வர சாஸ்திரிகளிடம் வேதாந்தச் செய்திகளையும் அறிந்து வந்தான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரசிவன் சிறுவயதிலேயே சன்னியாசி, யோகி, தபஸ்வி, பிரம்ம நிஷ்டையிலிருப்போர் ஆகியோரின் அடையாளச் சின்னங் களோடு விளங்கினான்.

மாமா வேங்கட சுப்பையர், சுந்தரனிடம் சிவபக்தி, அனுஷ்டான முறை, வித்வத் திறமை ஆகியவை ஒளிர்விடுவது கண்டு மனம் மகிழ்ந்தார்.

கல்வி கற்று, அறிவைப் பெற்று, மனத்தெளிவுற்று, நல்லொழுக்கத்துடன் நடக்கும் சுந்தரனின் பண்பு கண்டு வியந்தார்.

ஆனால் மற்றொருவரோ சுந்தரனின் ஆன்மீக வளர்ச்சி கண்டு அச்சம் கொண்டார்.

யார் அவர்?

வேதாந்த சாஸ்திரத்தில் சுந்தரனை விஞ்சுவார் எவரும் இல்லை. வேதாந்த அறிவில் பல ஆண்டுகள் பயின்றோரும் கூட சுந்தரசிவனைத் தொடர்பு கொண்டு தம் ஐயங்களைத் தீர்த்துக் கொண்டனர்.

இந்த நிலையில் ஜானகி பருவம் அடைந்தாள்.

உலக வழக்கப்படி சுந்தரனும் ஜானகியும் இல்வாழ்க்கையைத் தொடங்க வேண்டும் என்று ஜானகியின் பெற்றோர்கள் ஆசைப் பட்டனர். நியானமான ஆசைதானே இது!

ஒவ்வொரு நாளும் இடைவெளியின்றி சிவ பஜனை, சிவ ஸ்தோத்திரங்கள், சிவ பாராயணம், சிவ வழிபாடுகள், சிவ தரிசனங்கள், சிவ கைங்கரியங்கள் என்று இருக்கிறானே, வேதாந்த விசாரங்களில் மூழ்கி இருக்கிறானே, வேதங்களைக் கசடறக் கற்றவர்களுக்கு எழும் ஐயப்பாடுகளைத் தீர்ப்பதில் முனைப்பாக இருக்கிறானே, குடும்ப பாரத்தினின்றும் வெகுதூரம் விலகி இருக்கிறானே, இவன் இல்லற வாழ்க்கையில் இருப்பானா? என்ற ஐயமும், கவலையும் அவர்களுக்கு ஏற்பட்டது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இதையே நினைந்து ஏங்கித் தவித்து மனம் நைந்து உருகிப் போயினர். பெண்ணைப் பெற்றவர்களின் நியாயமான கவலை தானே இது.

இவ்வாறான தம் பெற்றோரின் மனக் கலக்கத்தைத் தாயாரின் புலம்பலிலிருந்து ஒருவாறு யூகித்துக் கொண்டாள் ஜானகி.

தன் தாயிடம் தனிமையில் கூறினாள் "ஏன் தேவையின்றி கவலைப்படுகிறீர்கள் ? உங்கள் விருப்பப்படி சாந்தி முகூர்த்தத் திற்கு ஏற்பாடு செய்யுங்கள். அவர் மறுத்துக் கூற மாட்டார். உங்கள் எண்ணம் நல்ல விதமாக நிறைவேறும்" என்று சாந்தமாக, உறுதியாகக் கூறினாள்.

தம் மகள் சிறுமி, அத்துடன் சுந்தரனிடம் ஒருவார்த்தை கூடப் பேசியவள் இல்லை, அவனுடன் பழக்கமும் இல்லை. அவனுடைய குணாதிசயங்கள் இவளுக்கு என்ன தெரியும ? அசட்டுத் தைரியத்தில் ஏதோ பிதற்றுகின்றாள் என்றே அவளுடைய தாயும், தந்தையும் எண்ணினர்.

ஜானகியின் தகப்பனார் ராமசுப்பையர், சுந்தரனின் தாய்மாமன் வேங்கட சுப்பையரிடம் கலந்து ஆலோசிக்கலாம் என பத்தமடை வந்தார்.

தாம் வந்த விபரத்தையும், தனக்குள்ள கவலைகளையும் தெரிவித்தார்.

வேங்கட சுப்பையர், ராமசுப்பையர் கூறியது கேட்டுக் கலக்கம் கொண்டார்.

'சுந்தரன் என்ன சொல்வானோ, எப்படி நடந்து கொள்வானோ என்று தெரியவில்லையே' என்று இருவரும் மருகினர்.

ராமசுப்பையர், 'வயது வந்த பெண்ணை உரிய காலத்தில் அவள் கணவனிடம் ஒப்படைப்பது பெண்ணைப் பெற்றவனின் பொறுப்பல்லவா ? திருமணம் ஆன பெண் எத்தனை காலம்தான் பிறந்த வீட்டிலேயே இருப்பது ? அவ்வாறு இருந்தால் ஊராரின் அவச்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சொல்லும் ஏற்படுமே'என மனம் நெகிழ்ந்து, குரல் தழு தழுக்கக் கூறினார்.

இருவரும் பலவாறு யோசித்து சுந்தரனிடமே சாந்தி முகூர்த்தம் பற்றிக் கேட்டு விடுவது என முடிவெடுத்தனர்.

சுந்தரனை அழைத்து வர ஆள் அனுப்பினர். சுந்தரன் வந்தான். பெரியவர்கள் இருவரையும் பணிவுடனும், பக்தியுடனும் வணங்கினான். சுந்தரத்தைப் பெரியவர்கள் இருவரும் பக்கத்தில் அமரும்படிக் கூறினர்.

புனிதச் சடங்காம் சாந்தி முகூர்த்தம் நடைபெற வேண்டியதன் அவசியத்தையும், கிருஹஸ்தாஸ்ரம தர்மத்தைப் பற்றியும் எடுத்துரைத்தனர்.

'எல்லாம் தர்மங்களையும் கற்ற, அறிந்த, உயர் குடியிற் பிறந்த உன்னிடம் ஆசிரம தர்மங்களை எடுத்துரைப்பது கொல்லர் தெருவில் ஊசி விற்பதற்கு ஒப்பாகும். நாங்கள் உரைப்பதை உரைத்து விட்டோம். உன் கருத்தைத் தெரிந்து கொள்ள ஆவலாய் இருக்கிறோம்' என்று நெஞ்சம் நெகிழக் கூறினார் பெண்ணின் தந்தை.

அவர்கள் பேசி முடியும்வரை பொறுமையுடன் கேட்ட சுந்தரன் எழுந்தான்.

அவர்களைப் பார்த்துப் பணிவுடன் பேசத் தொடங்கினான்.

என்ன பேசினான் ?

சுந்தர சிவன் ராமசுப்பையரை தன் மாமனாராக மட்டும் காணவில்லை. தன் குருநாதராகப் போற்றினான்.

அதுவும் எத்தகைய குருவாய் ?

உள்ளதை உண்டு, விருந்தினரை மகிழ்வித்து, எவருக்கும் எந்தவித இடையூறும் செய்யாதவராய், ஒழுக்கத்திற் சிறந்த ஆசானாய்ப் போற்றினான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எனவே மீண்டும் பெரியவர்களை வணங்கி, குதூகல மடைந்தவனாய், கம்பீரமாகப் பதில் கூறினான்.

'இதில் நீங்கள் கலக்கம் அடைய என்ன இருக்கிறது ? உடனே நல்லநாள் பார்த்து முகூர்த்தம் குறிப்பிடுங்கள். இது நம் தர்மப்படி நடக்க வேண்டிய நல்லதொரு விசேஷம். இதில் இனித் தாமதம் செய்ய வேண்டாம். ஆனால்.....' என்று சிறிது தயங்கினான்.

'ஆனால்... .என்ன ?.... சீக்கிரம் சொல்.' என்று ஆவலுடனும், சிறிது எதிர்பார்ப்புடனும் இருவரும் கேட்டனர்.

சுந்தரன் சொன்னான்: 'திருமணத்திற்கே நீங்கள் உங்கள் சக்திக்கு மீறி சிறப்பாகச் செய்து விட்டீர்கள். எனக்காக இனி ஆடை, ஆபரணம், பண்டம் என்று அநாவசியமாகச் செலவு செய்யக் கூடாது. வீண் செலவுகளைக் குறையுங்கள். முகூர்த்த அறை மட்டும் சர்வ அலங்காரங்களுடன் திகழட்டும். அம்பாள் சாரதா தேவி கொலு வீற்றிருக்கும் மண்டபம் போல் இருக்கட்டும். அறையின் எல்லாப் பக்கங்களிலும் நிலைக்கண்ணாடிகளைப் பொருத்துங்கள். வாசனைப் பூக்களாலும், பூமாலைகளாலும் ஜோடனை செய்யுங்கள். கட்டிலிலே செய்யப்படும் அலங்காரம், அம்பாளின் சன்னிதானத்தில் நுழையும் போது எத்தகைய பக்தியையும், பரவசத்தையும் ஏற்படுத்துமோ அதுபோல் அமையட்டும். அறை எங்கும் எண்ணெய் நிரம்பிய விளக்குகளால் ஜகத்ஜோதியாய் பிரகாசிக்கட்டும். சாம்பிராணி, மட்டிப்பால் பத்திகளின் மணம் எங்கும் பரவி இருக்கட்டும். பன்னீர், சந்தனம் மணம் வீடு முழுவதும் நிறைந்திருக்கட்டும். வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழங்கள் கூடைகள் நிறைய இருக்கட்டும். ஜானகியை சர்வாலங்கார பூஷிதையாய், அவளுக்குண்டான அனைத்து நகைகளையும் பூட்டி, ஆடை ஆபரணங்களால் அம்பாளைப் போல் அலங்கரியுங்கள்......இதை மட்டும் சிறிதும் குறைவின்றிச் செய்து விடுங்கள்.'



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரன் வெகுநிதானமாகப் பேசப்பேச பெரியவர்கள் இருவரும் வாயடைத்துப் போயினர். இரு வீட்டாரும் கட்டுக் கடங்காத மகிழ்ச்சி அடைந்தனர். உற்சாகத்துடன் வெகு குதூகலத்தோடு முகூர்த்தத்திற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யலானார்கள்.

சுந்தரனே 'பெண்ணை ஆடை அணிகளால் அலங்கரியுங்கள்' என்று சொன்னவுடன் தங்கள் பொருள் சக்திக்கு மீறியே செலவு செய்தனர்.

அக்காலத்து வழக்கப்படி சாந்தி முகூர்த்தக் கல்யாணம் மாப்பிள்ளை இல்லத்தில் நடப்பதே முறையாக இருந்தது.

அதன்படி பத்தமடையில் மாமன் வேங்கட சுப்பையர் கிருஹத்தில் முகூர்த்தம் நடக்க ஏற்பாடுகள் நடந்தன.

வீட்டிலுள்ள விசாலமான அறை புதிய கட்டில், மெத்தை, தலையணைகளால் நிறைந்தன. கட்டிலை சப்ரமஞ்சம் போலவும், கோபுரம் போலவும் அலங்கரித்தனர். ஜரிகை, ஜிகினா வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. புஷ்பங்களாலும், புஷ்பச் சரங்களாலும் தொங்கட்டான் போல் அலங்கரித்தனர்.

பறக்கும் தேவதைகள் போன்றும், சிறு சிறு மயில், கிளி, புறா, கருடன் போன்றும் வேலப்பாடுகள் செய்திருந்தனர். கட்டிலைச்சுற்றி வண்ணமயமான ரஸகுண்டுகள் தொங்கின. கட்டிலை ஒரு கோயில் போலவே ஜோடனை செய்திருந்தனர்.

சுருக்கமாக, சுந்தரன் கூறியிருந்ததைவிட அலங்காரம் அதி அற்புதமாய் இருந்தது. சுந்தரனும், ஜானகியும் அந்த அறையில் முதன்முதலாக சந்திக்கும் நிகழ்வு எவ்வாறு நடைபெறப் போகிறது?

சுந்தரனை சிவபிரானுக்கு ஒப்பான ஒரு 'பித்தன்' என்றே ஊர்மக்கள் கருதினர். சதா தியானமும், பஜனையும்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சூதஸம்ஹிதை உபன்யாசமும் செய்கின்ற ஒரு அத்வைத ஞானி என்றே போற்றினர். சன்னியாசி போலவே காட்சி அளிக்கும் துறவு மனப்பான்மை கொண்டவனாகவே அவனைத் துதித்தனர்.

எனவே அவனுக்கு சாந்தி முகூர்த்தம் என்று கேள்விப் பட்டதும் அக்கிரஹாரத்து மக்களும், உற்றார், உறவினரும் ஆச்சரியக் கடலில் மூழ்கினர்.

பெரியோர்கள் நிச்சயித்தபடி சாந்தி முகூர்த்த நன்நாளும் வந்து சேர்ந்தது.

பஞ்சகச்சம் கட்டி யோக வஸ்திரத்துடன் முகூர்த்த மந்திரங்களை முறைப்படி ஓதினான். ஹோமம், விரதம், மந்திரக்கிரியை யாவற்றையும் செம்மையாகச் செய்தான். ஜானகியை பட்டாடை மற்றும் ஆபரணங்களால் அலங்கரித் திருந்தனர்.

சுந்தரன் கூறியபடி ஸ்ரீசாரதா தேவி பிரத்யக்ஷமாக எதிரில் நிற்பது போன்றே காட்சி அளித்தாள். சுந்தரன் வேதமந்திரங்கள் ஓதி முடித்ததும் முகூர்த்த அறைக்குச் சென்றான்.

ஜானகியின் உறவினர்களும், உற்ற தோழிகளும் அவளைக் கேலி பேசியபடியே முகூர்த்த அறையில் விட்டனர்.

(எந்தக் காப்பியத்திலும், இதிகாசத்திலும், சரித்திரத்திலும், கதைகளிலும் இதுவரை நடந்திராத–இனியும் நடக்கமுடியாத ஒரு அற்புத, வினோத நிகழ்வு அங்கு அரங்கேறியது. அத்தகைய நிகழ்வுகளைக் கனவில்கூட யாரும் எண்ணிப் பார்க்க இயலாது.

இதை எழுதும் ஆற்றலும், அறிவும் எனக்கு இல்லாது போயினும் என் குருநாதனைத் தொழுது சிறிது கற்பனையும் கலந்து –வழுஉ அமைதியுடன்–எழுத முயற்சிக்கிறேன்.)

சுந்தரனின் பாதங்களில் விழுந்து வணங்கினாள் ஜானகி. சயனத்திற்கு உரிய கட்டில் அறையின் மேற்பக்கத்துச் சுவரை ஒட்டிப் போடப்பட்டிருந்தது. கட்டிலின் நீளவாட்டமானது தென்வடலாக அமைந்திருந்தது. அக்கட்டிலில் ஜானகியை கிழக்கு நோக்கி அமர



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வைத்தான். (நான்கு) சதுர வடிவமுள்ள ஒரு ஸ்டூலில் மான்தோலை விரித்தான். மேற்குப்புறம் பார்த்து ஜானகியைப் பார்த்து அமர்ந்தான்.

ஜானகி அனைத்துவித அலங்காரங்களுடன் அம்பிகை போல் அமர்ந்திருந்தாள். சுந்தரன் ஸ்டூலில் பத்மாசனம் இட்டு அமர்ந்தான். இரண்டு கைகளையும் தன் முழங்கால்கள் மீது வைத்துக் கொண்டான். உடலை நிமிர்த்தி நேராக அமர்ந்தான். இரு கைகளின் கட்டை விரல்களும் சுட்டு விரல்களோடு சேர்ந்து சின்முத்திரை காட்டியது. கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்தான்.

ஜானகியும் தன் இருகால்களையும் சப்பணமிட்டு நிமிர்ந்து அமர்ந்திருந்தாள். அவள் முகத்தில் தெய்வீகப் புன்னகை தவழ்ந்தது.

சுந்தரன் நிஷ்டையிலிருந்து விழித்தான். ஜானகியின் வலது காதில் ஏதோ ரகசியம் சொல்வது போல் ஓரிரு வார்த்தைகள் கூறினான். வலது கையால் ஜானகியின் சிரசைத் தொட்டான்.

அடைச்சாணியில் குருநாதர் விஸ்வேஸ்வர சாஸ்திரிகள் சிரசைத் தொட்டு ஆசிர்வதித்தபோது சுந்தரன் எத்தகைய பரவச நிலையை அடைந்தானோ, அதே நிலையை ஜானகி அடைந்தாள்.

ஸ்பரிச தீக்ஷை கிட்டியது. ஜானகிக்கு, சுந்தரனால் அந்த க்ஷணம் மந்திரோபதேசம் செய்யப்பட்டது. அந்த கணமே அவள் நிஷ்டையில் ஆழ்ந்தாள். சின்முத்திரை காட்டி ஸ்ரீசாரதாதேவியாய் சுந்தரனுக்குக் காட்சி கொடுத்தாள். ஜானகி சுந்தரனின் முதல் சிஷ்யை ஆனாள்.

பெண்களும் ஞானபாகத்தைப் பெறலாம், ஜீவன் முக்த தசையை அடையலாம் என்பது உலகிற்கு நிரூபிக்கப்பட்டது.

அவர்கள் அந்த கணத்திலிருந்து கணவன்—மனைவி என்ற பந்தத்திலிருந்து விடுபட்டனர்; குரு—சிஷ்யை என்ற உயர்ந்த நிலையை அடைந்தனர். தன் முன்னே அமர்ந்திருப்பது சக்தியே என்பதறிந்தான். சக்தி தன் அனைத்து அம்சங்களுடன் ஜானகி உருவில் அமர்ந்திருப்ப தாய் உணர்ந்தான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரனும், ஜானகியும் நிஷ்டையில் அமர்ந்ததுதான். உடல்கள் அசையவில்லை; கண்கள் திறக்கவில்லை. ஆனால், உலகத்தார் உணர்ந்து கொள்ளும் பொருட்டு சுந்தரனின் உள்ளுணர்வு ஒரு கேள்வியை ஜானகியிடம் கேட்டது. வாய் திறவாமல், அவன் உள்ளுணர்வு கேட்ட கேள்வியும், அதற்கு அவள் உள்ளுணர்வு அளித்த பதிலும் என்ன ?

(இத்தகைய சாந்தி முகூர்த்தம் நடந்த ஆண்டு 1847, சித்திரை மாதம். அப்போது சுந்தர சிவனுக்கு 15 வயது 6 மாதம். கல்வியிற் சிறந்தவன், வேதவேதாந்தங்களில் கரை கண்டவன். குருநாதர்கள் பெருமிதப்படும்படி உள்ள ஒழுக்கசீலன். சிவபூஜை, புனஸ்காரங்கள், நியமம், சூதசம்ஹிதைப் பிரவசனம், சிவபஜனை என்று எல்லாம் அறிந்த சர்வக்ஞன்.

ஜானகிக்கு 11வயது ஒன்பது மாதம். கல்வி கற்றதில்லை. வேத,வேதாந்தங்கள் தெரியாது. தாய்–தந்தையர் அன்றி வேறு குருநாதர்கள் கிடையாது. ஆனால் நல்ல குடியிற் பிறந்த பெண்ணிற்கு உள்ள அனைத்து குணநலங்களும் குறைவின்றி அவளிடம் அமைந்திருந்தன. இப்பின்னணியில் இவர்கள் இருவருக்கும் இடையே நிகழ்ந்த மானசீக உரையாடலைக் கவனிக்கவும்.)

'ஜானகி, என் பிறப்பின் நோக்கமே வேறு. இல்வாழ்க்கை எனக்கு விதிக்கப்பட்டதல்ல. பின் ஏன் உன்னை மணந்தேன் என்ற கேள்வி எழலாம். நல்ல குடியில் பிறந்து, தாய் தந்தையரை மதித்துக் கணவனின் கருத்தறிந்து நடப்பவள் பரிபக்குவமான சன்னியாசி நிலைக்கு உகந்தவள். பெண்களும் சன்னியாச வாழ்க்கைக்கு ஏற்றவர்கள் என்பதற்கு நம் புராண, இதிகாசங்களிலே பல உதாரணங்கள் உள்ளன.

பூர்வ ஜன்மாந்திர சுகிர்த விசேஷத்தால் (நல்வினைப் பயனாய்) சிவானுபூதியில் நாம் தம்பதிகளாய் இணைந்திருக்கிறோம். இந்த உயரிய நிலையை சாதாரண மானிடர்கள் அறிந்து கொள்ள



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மாட்டார்கள். என்னுடைய ஞானபாவம் முழுவதையும் உனக்கு அளித்துள்ளேன். நீயே என்னுடைய முதல் சிஷ்யை ஆவாய்! நீ கேட்க விரும்புவது ஏதாயினும் இருந்தால் கேட்கலாம்.'

'உங்களைத் திருமணம் செய்து கொண்ட அந்த க்ஷணமே தீர்மானித்து விட்டேன்.நீங்கள் ஒரு உன்னதப் பிறவி. இந்த மானிடர் உய்ய மேலிருந்து பூமிக்கு வந்த சாக்ஷாத் சிவனின் அவதாரம் என்று. ஈஸ்வர கிருபையால் இவை அனைத்தையும் என் உள்ளுணர்வு எனக்கு உணர்த்தி இருந்தது.

உங்களுக்கு ஏற்ற பக்குவத்தை அடைய மற்றவர் அறியா வண்ணம் மனதளவில் பயிற்சி எடுத்து வந்தேன்.

நீங்கள் சன்னியாசி, பிரம்ம நிஷ்டையிலிருப்பவர், முனிபுங்கவர், யோகி என்று என் தோழிகள் கேலியாகப் பேசிக் கொள்வர்.

அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்குக் கணவனாய் அமைந்தது இறைவன் படைத்த ஆடவன். ஆனால், எனக்குக் கணவனாய் அமைந்ததோ அந்த இறைவனே! என்பதை அவர்கள் அறியவில்லை; நான் அறிந்து கொண்டேன்.

இந்த நான்கு வருஷங்களாக என்னை நான் இதுபோன்ற சூழலுக்கு ஏற்றவாறு மாற்றிக் கொண்டேன்.

எங்கள் அகத்திற்கு வந்து என் அப்பாவுடன் வேத வேதாந்த விசாரங்களில் ஈடுபடும் போது நீங்கள் அறியா வண்ணம் கதவின் பின்னாலிருந்து நீங்கள் பேசுவதைக் கேட்பேன். அதையே நீங்கள் எனக்கு மறைமுகமாக அளித்த உபதேசமாக ஏற்றுக் கொண்டேன். நீங்கள் கூறிய தத்துவ மார்க்கங்கள் மனதில் பசுமரத்தாணியாய்ப் பதிந்து விட்டன. தேவதியானத்தில் ஈடுபட்டு அதன் சாரம் முழுவதையும் அறிந்து கைவரப் பெற்றேன்.

ஜன்மாந்திரப் புண்ணிய மகிமையால் ஆத்மானுபூதியில் ஆழ்ந்து விட்டேன். இத்தகைய பரவசம் சாந்தி முகூர்த்தன்று வேறு எந்தப் பெண்ணிற்கும் கிடைக்காது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உங்கள் வாழ்க்கையின் அடுத்த பகுதி என்னவென்று எனக்குத் தெற்றெனத் தெளிவாகி விட்டது.

நீங்களே என் குரு! நான் உங்களின் முதல் சிஷ்யை. இந்த பாக்கியத்தை மட்டும் அருளுங்கள்!'

அந்த வேண்டுதலை ஏற்றுக் கொண்டதன் அடையாளமாய் சுந்தரனின் இதழ்களில் மெல்லிய புன்னகை தோன்றியது.

விடியும் நேரம்!

இருவரும் நிஷ்டை கலைந்து எழுந்தனர். காலை ஐந்து மணிக்கு நிஷ்டை கலைந்து வீட்டுக்குள் நுழைந்தாள் ஜானகி.

அவள் தாயாரும், சுந்தரனின் மாமியும் ஜானகியை நோக்கினர்; பெரியவர்கள் புரிந்து கொண்டனர்.

'ஜானகி! உன் வாழ்க்கை சுகமாய் இருக்குமா? ஏதோ ஒரு கவலை எங்கள் மனதை அரிக்கிறது.' என்றனர்.

அதற்கு ஜானகி என்ன பதில் கூறினாள்?

"அம்மா, நேற்றிரவு போல் ஆனந்தத்தை இதுவரை நான் அனுபவித்ததே இல்லை.

நான் சுகமாக இல்லையென்றும், சுகமாய் இல்லாது போய் விடுவேனோ என்றும் நீங்கள் ஏன் வீணே கவலைப்படுகிறீர்கள். என் சுகம் என்ன என்பது பற்றி நீங்கள் எங்ஙனம் அறிவீர்கள்?

சுகம், துக்கம் என்பதெல்லாம் ஒவ்வொருவரின் மன நிலையைப் பொறுத்தது. சில சுக, துக்கங்களை வார்த்தைகளில் கூற முடியாது. அது ஒரு அனுபவம்! வார்த்தைகளும், தீவிரமான செயல்களும் அங்கு பயனற்றுப் போய் விடுகின்றன.

மெலிதான ஒரு புன்னகை, சிறிய தொடுவுணர்ச்சி. அவை போதும். புரிந்து கொண்ட இரண்டு மனதுகளுக்குப் பேச்சு கூட சுமைதான். உலகில் ஒரேபோல மனநிலை உள்ளவர்களும், ஒத்த



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஆன்மீக நோக்கம் உள்ளவர்களும் வாழ்வில் இணைவது என்பது துர்லபம்.

ஆனால் என்னுடைய பூர்வகர்ம பலனால் எனக்கு மிக உன்னதமான ஒருவர் வாழ்க்கைத் துணையாய் கிடைத்துள்ளார். இவர் வாராது போல் வந்த மாமணி. பெரிய பொக்கிஷம்.

மாமி, இத்தனை ஆண்டுகள் இவரை வளர்த்தும், இவருடன் பழகியும் இவரை யார் என்று நீங்கள் அறிந்து கொள்ளவில்லை. நான், நீங்கள் மற்றும் இவருடன் பழகிய, இவரை அறிந்த, இனி அறியப் போகும் அனைவரும் எவ்வளவு பெரிய பாக்கியசாலிகள் என்பதை காலம் உணர்த்தும்.

நேற்று நான் உணர்ந்தது ஆனந்தம்; வெறும் ஆனந்தமல்ல, பிரம்மானந்தம். அந்த சுகானந்தத்தை நான் எவ்வாறு வெறும் வார்த்தைகளால் உங்களுக்கு எடுத்து இயம்புவது ?

நான் அந்த பரம சுகத்தை அனுபவிக்கிறேன். நான் பெரும்பேறு பெற்று விட்டேன். இந்த பரம சுகானந்தம் என்றைக்கும் இப்படியே நிலைத்திருக்க வேண்டும் என்பதே என் பிரார்த்தனை. எக்காலமும், எந்நாளும், எந்நேரமும் இந்த பரமசுகம் என்னுள் இருக்க வேண்டுமென்று என் மனதுள் நீக்கமற நிறைந்திருக்கும் அந்த சர்வேஸ்வரனை வேண்டுகிறேன்.

என் ஈசனை—என் குருவை கண்டு கொண்டேன். அவருடைய அருள் என்றும் கிடைக்க வேண்டும் என அவரின் சரணாரவிந்தத்தில் அடிபணிகிறேன்....' என்று இதுவரை இதுபோல் பேசியறியாத தன் மகளை நோக்கினார் ஜானகியின் தாயார். அவளைப் புதிதாய் பார்ப்பதுபோல் பார்த்தாள். இந்த அளவு இதுவரை பேசியவள் இல்லையே ?

எப்படி இத்தனை அறிவு பெற்றாள் ?
இவள் என் வயிற்றில் பிறந்தவளா ?
இல்லை நேற்றுமுதல் தானே தோன்றியவளா ?
இத்தனை 'சக்தி' எப்படிக் கைகூடியது ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



என் கண்ணிற்கும், அறிவுக்கும் எட்டாத வளர்ச்சி இந்த ஒருநாளில் எவ்வாறு உண்டாகியது ? அதுதான் தெரியவில்லை.'

மலைத்த தாயார் மனம்நெகிழக் கேட்டார்:

'ஏண்டி ! கணவனும், மனைவியும் ஒரு பேச்சுக்கூட இல்லாமல் 'சிவனே' என்றிருப்பதுதான் 'பிரம்மனந்தமோ ?'

மீண்டும் மடைதிறந்த வெள்ளம் போல் ஜானகி பேசினாள்.

என்ன பேசினாள் ?

ஜானகியின் பேச்சைக் கேட்ட பெரியவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

அந்தப் பேதையர்களுக்கு எவ்விதம் புரியும் ?

அவர்கள் இவ்வுலக இன்ப வாழ்க்கையை அன்றோ சுகம் என எண்ணியுள்ளனர் !

ஜானகியோ ஆத்மானந்த இன்பவாரிதியில் திளைத்திருக்கிறாள்.

ஜீவன்முக்தி நிலையைப் பற்றி பேசுகிறாள்.

'சிவனே என்றிருப்பதுதான் பிரம்மானந்தமோ ?'எனத் தாயார் கேட்டதும் மடை திறந்த வெள்ளமென வார்த்தைகள் வந்தன.

அவளா பேசினாள் ?

அவளின் உள்ளிருந்து அந்த பராசக்தியே பேசினாள்.

"சிவனே என்றிருப்பது எளிமையானதா ? உலகில் மிகக் கடினமான ஒன்று 'சிவனே' என்றிருப்பது.

சிவனே என்றிருப்பதென்றால் மனம் தெளிவாக உள்ளது என்று பொருள்.

சிவனேஎன்றிருப்பதென்றால் மனம் சலனம் இல்லாமல் அமைதியாக இருப்பது என்று பொருள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சிவனே என்றிருப்பதென்றால் மனம் எவ்விதக் கவலையும் இன்றி இருப்பது என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் சிந்தனை எவ்விதக் குழப்பமும் இன்றி இருக்கிறது என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் வீணான எண்ணங்களில் இருந்து மனம் விடுபட்டுள்ளது என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் அனைத்துப் பொறுப்புகளையும் 'அவனிடம்' ஒப்படைத்து விட்டேன் என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் அனைத்துத் தளைகளிலும் இருந்து விடுபட்டு விட்டேன் என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் சுதந்திரமான ஆத்மாவாய் நம்மை உணர்வது என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் 'என் செயலால் ஆவது இனி எதுவும் இல்லை'என்பதை உணர்ந்து கொண்டேன் என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால்

'நன்றே வரினும், தீதே விளைகினும்' அவை என்னை பாதிக்காது என்பதை உணர்ந்து கொண்டேன் எனப் பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பதை அறிந்து கொண்டேன் எனப் பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் எல்லாம் நன்மைக்கே என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் 'ஸ்திதப்பிரக்ஞையுடன்' (ஒன்றைப்பற்றி அதில் உறுதியாக) இருத்தல் என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் 'யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்' என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் ஆடாத, அசையாத உறுதியான பக்தியுடன்(அனன்ய பக்தி) உள்ளேன் என்று பொருள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சிவனே என்றிருப்பதென்றால் மனம் இலேசாகி, மனமும், முகமும் விகசித்தல் (மலர்தல்) என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் எந்த ஒரு சூழ்நிலையிலும் முழு மன நிறைவுடன் இருப்பது என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் தன் அளவில் மட்டுமல்ல, தன்னை நாடி வந்தவர்களுக்கும் நிலையான நிம்மதியை வழங்குவது என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் 'பேசாமல் பேசி' சுகம் பெறுவது என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் தனிமையை (ஏகந்தத்தை) அனுபவிப்பது என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் சதாகாலமும் அவனையே (சிவனையே) நினைத்திருப்பது என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் எந்த ஒருசூழலும் நம்மை பாதிக்காமல் நிம்மதியுடன் இருத்தல் என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் தன்னால் பிறரும்,பிறரால் தானும் துக்கமடையாத நிலை என்று பொருள்.

சிவனே என்றிருப்பதென்றால் உலகியல் பொருட்கள் தருவதல்ல இன்பம்,

சிவன் ஒன்றே நிலைத்த இன்பம் என்ற உண்மையை உணர்ந்து கொண்டேன் என்று பொருள்.

உலகில் சாரமுள்ள தெய்வம் சிவனேயாம் என்பதை அறிந்து கொண்டதால் 'சிவனே' என்றிருக்கிறேன். இனி என்னைப் பற்றிய சஞ்சலங்கள் வேண்டாம். ஈரமும், வீரமும் (உறுதியும்) என் நெஞ்சிலே உள்ளன.

இப்படி பரம்பொருளான, எனை ஆட்கொள்ள வந்த தெய்வமாம் சுந்தரனே என் சிவன் எனக் கண்டு கொண்டேன்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



என்றும் அவரை நினைத்து, அவரது சிந்தனையிலேயே மூழ்கி, அவருக்குப் பணிவிடை செய்வதே என் எஞ்சிய வாழ்நாளின் குறிக்கோளாகும்".

பேசத் தெரியாத, பேசி அறியாத ஜானகி இவ்வாறு பேசியதும் பெரிய பெண்டிர் இருவரும் வாய் பேச முடியாத மௌனியாயினர்.

சுந்தரன்–ஜானகி இல்வாழ்க்கை இனி இறைவன்விட்ட வழி என்று தீர்மானித்து ஓரளவு சமாதானம் செய்து கொண்டனர்.

சுந்தரன்–ஜானகி இல்லறம் எப்படி இருந்தது ?

✿✿✿✿✿

'சாந்தி முகூர்த்தம்'(!) நடந்த அடுத்த நாள் தொடங்கி பத்தமடையில் ஜானகி–சுந்தரன் 'இல்லறம்' தொடங்கியது.

அந்த நன்னாள் தொடங்கி ஜானகி இடைவிடாமல் நிஷ்டையில் அமர்ந்தாள்; தியானம் புரிந்தாள்.

ஏனைய நேரங்களில் சுந்தரனுக்கு வேண்டிய பணிவிடைகளைக் கருத்துடனும், கடமையுடனும் செய்து வந்தாள்.

அவர்கள் இருவரிடையே நிலவியது சதி–பதி பாவமன்று; சிஷ்யை–குரு என்ற நிலைமையிலேயே அவர்கள் இல்லறம் பரிணமித்து பரிபூர்ண நிலையை அடைந்தது. இவர்கள் இருவரும் சிற்றின்ப போகங்களை விடுத்து பேரின்ப லட்சியத்தையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தனர்.

கருணை, பொறுமை, பேராசையின்மை, பொறாமையின்மை, நல்லனவற்றில் பற்று, கஞ்சத்தனம் இன்றி பெருந்தன்மையுடன் இருத்தல், மனமகிழ்வு, அகம் புறம் தூய்மை என்ற ஆத்ம குணங்கள் அவர்களிடம் இயல்பிலேயே அமைந்திருந்தன.

நான் இந்த உடல் என்ற எண்ணத்தைத் துறந்து நானே பிரம்மம் என்பதை உணர்ந்தவர்கள்.

அவர்களின் வாழ்வு நித்திய அமைதி, ஆனந்தம் என்ற அடித்தளத்தில் அமைந்தது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எல்லையற்ற பிரம்மம் என்ற பேரின்பத்தில் அவர்கள் ஆழ்ந்திருந்தனர்.

பயமறியாத, ஸ்திரமான, தூய்மையானது அவர்களின் பேரின்ப வாழ்வு.

தன்னுடைய முதல் சிஷ்யையான ஜானகிக்கு பல உபதேச கிரமங்களையும், ஞானமார்க்கத்திற்குரிய வழிமுறைகளையும், பெண்கள் அனுசரிக்கத்தக்க சில தியானங்களையும் போதித்தான் சுந்தரன்.

ஜானகியும், சுந்தரன் போதித்த ஞானமுறைகளை தக்க முறையில் உள்வாங்கிக் கொண்டாள். நெறிதவறாத செய்முறைகளினால் படிப்படியாக ஞானமார்க்கத்தில் உயர்ந்து உள்ளொளி திகழ பெரும் ஞானியாக விளங்கினாள் பெண்குலத்தின் பொன்விளக்காம் ஜானகி.

இந்நிலையில், சுந்தரன் சூதசம்ஹிதை பிரவசனம் திருநெல்வேலி பகுதி முழுவதும் மிகப் பிரசித்தம் அடைந்தது. நாள்தோறும் நிகழ்ச்சிகள் இருந்தன.

சுந்தரன் தனது பதினொரு வயது முதலே சூதசம்ஹிதை உரை நிகழ்த்துவதில் சிறந்து விளங்கினான்.

ஒருநாள் பேச்சு என்பது, ஐந்து, ஏழு, ஒன்பது நாட்கள் தொடர் சொற்பொழிவு என்று மாறியது.

இந்நிலையில் பாணதீர்த்த மலைக்காடுகளில் சுந்தரனுக்கு ஒரு அனுபவம் கிட்டியது.

அந்த அனுபவம் என்ன ?

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது பொதியமலை. (இப்போது தென்காசி மாவட்டம்.) இது அகஸ்தியர் வாழும் மலை என்பர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நீலமலைகள் நிரம்பிய அழகிய இடம். அங்கே வானம் அழகியது, வான்வெளியும் அழகியது. பல்லாயிரம் வகைகளில் இசைக்கும் குயில்களும், கிளிகளும் குலவும் இடம்.

பாபநாசம் மலையும், குற்றால மலையும் அகஸ்தியர் மலை என்றே அறியப்படும்.

இன்றும் அகஸ்தியர் அங்கு வசித்து வருகிறார் என்பது அந்த மலைவாழ் மக்களின் நம்பிக்கை. அம்மாமுனிவர் பன்னிரு வருடத்திற்கு ஒருமுறை மலையினின்று இறங்கி சமவெளிக்கு வந்து மக்களோடு மக்களாய்க் கலந்து உலாவிப் பேசி வருவார் என்பது செவிவழிச் செய்தி.

அம்மலையில் வாழும் பழங்குடி மக்களுக்கு "புளிஞர்கள்" என்று பெயர். இந்த மலைவாழ் மக்கள் ஊருக்குள் வந்து தேன், மான் கொம்புகள், கஸ்தூரி, கவரிமான் முடி, மலையில் விளையும் அபூர்வ பழங்கள் ஆகியவற்றை சந்தையில் விற்றுப் பொருள் பெற்றுச் செல்வர்.

அவர்களுடைய வாழ்க்கை எல்லாம் மலையில்தான் நிகழும். சிலர் பெரிய மரங்களில் பரண் கட்டியும் வாழ்வர். மலைக்காட்டை நன்கு அறிந்தவர்கள். அங்கே பல இடங்களிலும் சுற்றித் திரிவார்கள்.

சுந்தரன் அடிக்கடி பாண தீர்த்தம் சென்று நீராடி அங்குள்ள சிவனாரை வணங்கும் பழக்கம் உடையவன். அங்கு வரும் பொழுது புளிஞர்களுடன் உரையாடி மகிழ்வான். எனவே அவனுடைய குரலை அவர்கள் நன்கு அறிவர்.

சில சமயங்களில் பாணதீர்த்தக் குகையில் சுந்தரன் நிஷ்டையில் இருக்கும் போது, நிஷ்டை முடிந்து எழுந்ததும் உண்பதற்கு பலாப்பழம், சீதாப்பழம், பப்பாளிப்பழம், தேன், கற்கண்டு, பேரீச்சம்பழம் முதலியவற்றை அன்பு மேலீட்டால் அளிப்பர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மனித மனத்தின் பண்பு மேலீட்டால் சுந்தரன் அவற்றை ஏற்றுக் கொள்வான்.

சுந்தரனின் முன்பகுதி வாழ்க்கை, பின்பகுதி வாழ்க்கை ஆகிய இரண்டு நிலைகளிலும் **(1843,1849,1864 ஆண்டுகள்)** பாணதீர்த்தக் குகையில் நிஷ்டையில் அமர்வது வழக்கம்.

அவ்வாறு நிஷ்டையில் இருக்கும் சமயம் குகையிலிருந்து இருவர் பேசும் குரல் வெளியில் உள்ள புளிஞர்களுக்குக் கேட்கும்.

ஒன்று சுந்தரனின் குரல். அவர்கள் அறிந்தது.

மற்றது யாருடைய குரல் ?

உலகத்தில் இரண்டு மஹான்கள் சந்திப்பது அபூர்வம். ஆனால் சுந்தரனின் வாழ்க்கையில் பல மஹான்களைச் சந்தித்து அளவளாவும் வாய்ப்புகள் கிட்டியுள்ளன. சந்தித்த ஒவ்வொரு மஹானும் அறிவுச்சுடராகவும், அபூர்வ சக்தியுள்ளவர்களாகவும் விளங்கி உள்ளனர்.

வித்தையில் அவரவர் துறையில் மேதைகளாகச் சிறந்து விளங்கி உள்ளனர். சுந்தரனிடம் அவர்கள் அனைவரும் அளவு கடந்த பிரேமையும், அன்பும், பெருமதிப்பும் கொண்டிருந்தனர். ஏனெனில் அவர்களுக்கு "சுந்தரன் யார்" என்பது தெரிந்திருந்தது.

1843–சோபகிருது; 1855–ராக்ஷஸ; 1867–பிரபவ ஆகிய ஆண்டுகளில் சுந்தரன் பொதிகை மலைக் குகைகளில் தனிமையில் தவத்தில் அமர்ந்திருக்கிறான்.

ஆனால் ஒவ்வொரு முறையும் மற்றொரு வருடன் சுந்தரன் பேசுவதை புளிஞர்கள் கேட்டுள்ளனர்; பார்த்துள்ளனர்.

சுந்தரன் உருவம் தெரியும்,பேச்சும் கேட்கும். ஆனால் யாருடன் பேசுகிறானோ அந்த மற்றொருவரின் உருவம் தெரியாது; பேச்சு மட்டும் கேட்கும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவரது குரலொலியில் இருந்து அவரை யார் என்று புளிஞர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை.

இந்த அதிசயச் செயற்பாட்டினை மூன்று முறைகளும் மலைவாழ் மக்கள் கேட்டுள்ளனர். இந்த செய்தி சமவெளியில் இருந்த மக்களிடம் காட்டுத் தீபோல் விரைவாகப் பரவியது.

அந்த மற்றொரு மனிதர் 'அகத்திய மாமுனிவர்' என்பதை அவர்கள் ஒருவாறு ஊகித்து விட்டனர்.

சுந்தரனிடம் இதுபற்றி தெரிந்து கொள்ள வினவியதற்கு அவர்கள் கூறியதை அங்கீகரிப்பது போல் மெல்லிய புன்னகை விரிந்தது.

சுந்தரன் எப்போது பாபவிநாசம் செல்கிறான், எப்போது ஊர் திரும்புகிறான் என்பது போன்ற செய்தி ஊர் மக்களுக்குத் தெரியாது.

சுந்தரன் பெற்றிருந்த அபூத அமானுஷ்ய சக்தியால், பொதிய மலையில் நித்திய வாசம் செய்யும் அகஸ்திய முனிவரைக் கண்டு அளவளாவி உள்ளான் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

அகஸ்தியரின் ஆசியுடன் சூதசம்ஹிதை படனத்தை ஐந்து நாட்கள், ஏழு நாட்கள் என்று தொடர்ந்தான்.

அவன் சூதஸம்ஹிதை சொல்லும் முறை பற்றியும், அதன் விளைவாக அவன் வாழ்வில் நிகழ்ந்த முக்கியமான திருப்புமுனை மாற்றம் என்ன ?

சுந்தரன் ஜீவியவந்தனாய் இருக்கும் வரை பல மகான்களை, பெரியவர்களை சந்தித்து உரையாடி உள்ளான். சுந்தரனுக்குக் கிடைத்த பேறு, வெகு சில மகான்களுக்கே கிட்டியுள்ளது.

ஒவ்வொரு மகானும் எந்தெத்தத் துறையில் சாதனை செய்து இந்த மேலான நிலையை அடைந்தனரோ அத்துறைகளிலெல்லாம் சாதகம் கைவரப்பெற்று சுந்தரன் சகல சக்தி பொருந்தியவனாய்த் திகழ்ந்தான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



(அந்த மகான்களுடனான சந்திப்புகளைப் பின்னர் பார்ப்போம்.)

அகஸ்திய மாமுனியை முதல் முறையாக 1843–ம் ஆண்டு (அப்போது சுந்தரனுக்கு வயது 12 என்பதை நினைவில் கொள்ளவும்.) தரிசித்து அவர் ஆசி பெற்றதும் ஸூதசம்ஹிதையைக் கற்பதில் தனிக் கவனம் செலுத்தினான். பிரவசனம் செய்வதில் அவனுக்கு இணை எவரும் இல்லை என்று தன்னிகரற்று விளங்கினான்.

அகத்தியரைச் சந்தித்த பிறகு ஸூதசம்ஹிதையை ஐந்து நாட்கள் சொல்லும் முறையைக் கைக்கொண்டான்.

அதன் செய்திகளை அறிந்து மக்கள் உய்வதற்குரியதான எளிய வழிகாட்டு முறையைக் கைப்பிடித்தான்.

பதினைந்து வயது வரை ஸூதசம்ஹிதைப் பிரவசனம் செய்யும் பொழுது முதலில் ஒவ்வொரு ஸ்லோகமாக வாசித்து அவ்வொன்றிற்கும் பொருள் கூறி வந்தான்.

சில சமயங்களில் ஐந்து நாட்கள் என்ற கணக்கில் அடங்காமல், பல நாட்கள் தொடர்ந்து சொல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

ஸூதசம்ஹிதையின் ஒரு பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டு அதை ஒருநாள் முழுவதும் நன்கு தெளிவாக விளக்குவான்.

பதினைந்து வயது நடக்கும் போது இதிலொரு மாற்றம் செய்தான்.

ஒரு காவியத்தை ஐந்து நாட்களில் சொல்லி முடிப்பதற்கு பஞ்சாஹம் என்றும், ஏழுநாட்களில் பூர்த்தி செய்வதற்கு சப்தாஹம் என்றும், ஒன்பது நாட்களில் நிறைவு செய்வதற்கு நவாஹம் என்றும் பெயர்.

இவ்வாறு ஸூதசம்ஹிதை படனத்தை குறித்த நாட்களில் நிறைவு செய்ய சுந்தரன் ஒரு முறையைக் கையாண்டான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சூதசம்ஹிதையின் ஸ்லோகங்களைக் காலை வேளைகளிலும், அவற்றிற்கான விரிவுரைகளை மாலை வேளைகளிலும் விளக்கமாகச் செய்து வந்தான்.

இரண்டு வேளைகளிலும் அவன் கூறும் ஸ்லோகங்களையும், விரிவுரையையும் கேட்க மக்கள் அதிக அளவில் கூடினர்.

பத்தமடை,களக்காடு, கூனியூர், சேரன்மகாதேவி, வீரவநல்லூர், காருகுறிச்சி, திருப்புடைமருதூர், பிரம்மதேசம், சாட்டுப்பத்து, ரங்கசமுத்திரம், அரியநாயகிபுரம், கரிசூழ்ந்த மங்கலம், தருவை, கோபாலசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, கோடகநல்லூர் ஆகிய ஊர்களில் பஞ்சாஹ முறைப்படி ஸ்லோகப்படனமும், பிரவசனமும் செய்து விரிவுரையை தக்க சான்றுகளுடன் சுட்டிக் காட்டுவான்.

இத்தகைய பிரசங்க முறைகளினால் மக்களை எல்லாம் சிவ வழிபாட்டில் ஈடுபடச் செய்தான். மக்களின் மனதின் அடியில் புகைந்து கொண்டிருந்த பக்தி எனும் நெருப்பைத் தூண்டி விட்டான்.

இத்தகைய பிரவசனத்தின் போது இரண்டு பெரியவர்கள் சுந்தரனுக்கு அறிமுகம் ஆனார்கள்.

சுந்தரன் வாழ்வின் மிக முக்கிய தருணத்தில் அவன் அருகே இருக்கும் பேறு பெற்றனர்.

யார் அவர்கள் ?

சுந்தரனின் பிரசங்க மகிமையால் மக்கள் அனைவரும் சுந்தரசிவனிடம் பக்தி விசுவாசத்துடன் நடந்து கொண்டனர்.

மிகுந்த கட்டுப்பாட்டுடன் அவர் சொற்கேட்டு ஒழுகி வரலாயினர்.

சுந்தரனின் பேச்சு பக்தர்கள் மனதில் தெம்பையும், உத்வேகத்தையும், தைரியத்தையும், நம்பிக்கையையும், சிவபெருமான் மீது அசைக்க முடியா ஈடுபாட்டையும் ஏற்படுத்தின.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



1847–ம் ஆண்டு!

பிலவங்க, ஆவணிமாதம் முதல் தேதியிலிருந்து ஐந்து நாட்கள் கோடகநல்லூரில் பஞ்சாஹம முறைப்படி சுந்தரனின் சூதசம்ஹிதைப் படனம் தொடங்கியது.

அருகிலுள்ள சுத்தமல்லி கிராமத்தில் இருந்தவர்கள் சுந்தரனின் பாண்டித்யத்தைக் கேள்விப்பட்டு ,பிரவசனம் கேட்க கோடகநல்லூர் வந்தனர்.

அவர்களுள் சாஸ்திரங்களில் கரைகண்ட வேதவிற்பன்னர் சூரியநாராயணசிவம் என்பவர் முதன்மையானவர்.

வைதிக சிரத்தை உள்ளவர்;ஒழுக்க சீலர்;வாக்கு வன்மை பெற்றவர்.

இவரை நடுநாயகமாகக் கொண்டு சித்தமல்லி ஊர்மக்கள், கோடகநல்லூர் வந்தனர்.

சுந்தரசிவனைக் கண்டு வணங்கினர்.

அவர்கள் சுந்தரனின் சூதசம்ஹிதை பிரவசனத்தில் மகுடிக்குக் கட்டுண்ட நாகம்போல் மயங்கினர்.

தங்கள் ஊருக்கு சுந்தரசிவன் வருகை புரிந்து உரையாற்ற வேண்டும் எனத் தாழ்மையுடன் விண்ணப்பித்தனர்.

சுந்தரனும் அவ்வன்பர்களின் அழைப்பை ஏற்றுக் கொண்டான்.

கோடகநல்லூரில் பேசி முடித்ததும் சுத்தமல்லி வந்து சேர்வதாக அன்புடன் தெரிவித்தான்.

கோடகநல்லூரில் இரண்டு நாள் படனம் பூர்த்தி ஆகி இருந்தது. இன்னும் மூன்று நாள் பிரவசனம் பாக்கியிருந்தது.

சுந்தரனை சுத்தமல்லி அழைத்து வருவதாக சூரிய நாராயணசிவம் தன் ஊர் மக்களிடம் உறுதி கூறினார். ஏனைய பெருமக்கள் ஊர் திரும்பினர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரசிவனின் மீதி மூன்று நாட்கள் பிரவசனத்தைக் கேட்டு உள்ளம் நெகிழ்ந்து நெக்குருகினார் சூரியநாராயணசிவம்.

இந்நிலையில் இச்சரிதத்தின் முக்கிய தருணத்தில், தவிர்க்க முடியாத பங்கு வகிக்கப்போகும் ஒருவரை நாம் காண வேண்டியுள்ளது.

அவரைப்பற்றிய சிறு அறிமுகம்......

திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் வட்டத்தில் கடையம் என்ற ஊர் உள்ளது. அது வாசம் செய்வதற்கு ஏற்ற அமைதியான இடம். சோலைகள் சூழ்ந்த ஊர். மலைப்பாங்கான சூழல். அம்லைப்பாங்கினிலே கல்யாணி அம்மன் திருக்கோயில் உள்ளது.

இத்தகைய சிறப்புமிக்க ஊரில் சேஷாசலதீக்ஷிதர் என்பவர் வாழ்ந்து வந்தார்.

வைதிக தர்மத்தை உன்னத முறையில் பின்பற்றி வாழ்ந்து வந்தார்.

சிறுவயதிலேயே சாஸ்திர பாடங்களை ஐயம்திரிபறக் கற்றார்.

வேதாகம கர்மத்தினை முறைபிறழாமல் கடைப்பிடித்து வந்தார். படிப்பின் விசேஷத்தால் நல்ல வாக்கு சாதுரியம் மிக்கவராய்த் திகழ்ந்தார்.

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே ஈரம், அகத்தினில் அன்பு, ஐம்பொறிகளை அடக்கி ஆளும் ஆற்றல், பொழுதெல்லாம் பேரருளின் நெறியிலே நாட்டம் , கரும யோகத்தில் நிலைத்து நிற்கும் உறுதி..... இத்தகைய ஒப்புயர்வற்ற வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டவர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இன்னும் ஐந்து நாட்களில் சுந்தரன் வாழ்வில் நிகழப் போகும் மாபெரும் மாற்றத்தின்போது உடன் இருந்தவர். இந்த சரிதத்தில் இப்பொழுதுதான் இவரை அறிமுகப்படுத்தக்கூடிய சூழல் அமைந்துள்ளது.

இவரைப்பற்றிய பிற சிறப்புகள் யாவை?

அக்காலத்தில் படிப்பு நிறைந்துள்ள பல பண்டிதர்கள் மத்தியில் கடையம் சேஷாசலதீக்ஷிதர் தனித்து விளங்கினார். அனைவராலும் கொண்டாடப்பட்டார்.

கடையம் பகுதியில் மிகுந்த புகழ்பெற்று விளங்கினார்.

சிறந்த உபன்யாசகர். அவருக்கு நல்ல சாரீர வளமுண்டு.

இசையை முறைப்படி கற்காது போனாலும் இசையின் நுணுக்கங்கள் அனைத்தையும் அறிந்தவர். ராகங்களை அவற்றின் லக்ஷணங்களுடன் கேள்வி ஞான பரிபக்குவத்தால் நன்றாக இசைப்பார். இசைப்புலவரினும் மேம்பட்டதாக அவரது இசை மிளிரும்.

அவருடைய உபன்யாசங்களின் இடையில் சுலோகங்களைத் தகுந்த ராகங்களில் அமைத்துப் பாடுவார்.

பதம்பிரித்துக் கூறும்போது மக்களின் செவிகளிலே அச்சுலோகங்கள் ஜிலுஜிலுவென்று தண்என்ற தன்மையில் இனிமை தோன்ற ஒலிக்கும்.

பதம்பிரித்துச் சுலோகங்களைச் சொல்லுவதால் அப்பாடல் களின் பொருள் அனைவருக்கும் எளிதில் தெளிவாகப் புரிந்து விடும்.

இவர் பஜனை முறையிலும் ஈடுபட்டு அதிலும் வல்லவராய் இருந்தார்.

அவர் சுந்தரசிவனைவிட பதினைந்து வயது பெரியவர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஆனால் வயதில் இளையவனான சுந்தனைத் தன்னுடைய குருவாகப் போற்றினார்.

சேஷாசலதீக்ஷிதர் சிவபுராணம், மஹாபாரதம், பாகவதம், ஸ்காந்தம், பகவத்கீதை, தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸை, வேதாந்தம் ஆகிய கலைகளை நுட்பமாகக் கற்று, உபன்யாசம் செய்து மக்களைத் தன்பால் ஈர்த்தார்.

வித்தையில் மகாமேதை; வேதவிற்பன்னர்.

இப்படி எல்லாம் சிறப்பாக அமைந்த இவரிடம் சுந்தரன் மிக சினேகபாவமாக நடந்து வந்தான்.

சேஷாசலதீக்ஷிதர் குருபாவத்துடன் சுந்தரனை அணுகினார்; சுந்தரனோ அவரை சினேக பாவத்துடன் நடத்தினார்.

வித்வத் விஷயமாக இருவரும் மிக விரிவாக விவாதிப்பார்கள்.

சுந்தரசிவன் செய்யும் சூதசம்ஹிதைப் பிரவசனம், வேதாந்த உபன்யாசம் ஆகியவற்றை மிகக் கவனமாகக் கேட்பார். அவற்றில் ஒளிரும் தத்துவ விளக்கங்களையும்,அதிசூட்சுமமான அரிதான செய்திகளையும் செவிமடுத்து சுந்தரனின் பேச்சாற்றலுக்கு அடிமை ஆனார்.

சுந்தரனின் மேதாவிலாசத்தைக் கண்டு வியப்புற்றார்.

இதன் காரணமாகவே வித்வத்துவத்தில் பரிபூரணம் நிரம்பிய சிறுவயதுடைய சுந்தரசிவனிடம் அதிக பக்தியும், பணிவும் உடைய சீடராய் விளங்கி வந்தார்.

தமக்கு அனைத்து சிறப்பான வித்யா யோக்கியதாம்சம் இருந்தும், சுந்தரசிவன் தன்னைவிடப் பதினைந்து ஆண்டுகள் இளையவனாய் இருந்தும், அவனுள்ளும் வெளியிலும் ஒளிர்விடும் தேஜஸை அவர் அறிந்து கொண்டார். இவரிடம் சுந்தரனுக்கு அளவிலாப் பாசமும், பரிவும், மரியாதையும் உண்டு.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இதனாலேயே மற்றவர்களுக்குக் கிடைக்காத பெரும்பேறு இவருக்குக் கிட்டியது.

அந்தப் பேறு என்ன ?

சிறிது பொறுத்திருந்து பார்ப்போம்.

சுந்தரன் தனது ஏழாவது வயதிலிருந்தே சேஷாசலதீக்ஷிதரை நன்கு அறிவான்.

சுந்தரசிவன் எங்கெங்கு ஸூதசம்ஹிதையைப் பிரவசனம் செய்கிறானோ அங்கெல்லாம் கடையம் சேஷாசல தீக்ஷிதர் அதன் ஸ்லோகங்களை ராகத்துடன் வாசிப்பார். அவ்வாறு அவர் வாசிப்பது, கேட்பதற்கு மிக இனிமையானதாக இருக்கும். அதற்கு சுந்தரன் அருமையான பொருள் விளக்கம் அளிப்பான்.

சுத்தமல்லி நாராயணசிவம், ரங்கநாத சிவன், நாராயண சிவன் ஆகியோரும் சில சமயங்களில் ஸ்லோகங்களைக் கூறி உதவுவர்.

சுந்தரனின் பிரவசனம் முடிந்தவுடன், கடையம் சேஷாசலதீக்ஷிதர் கேட்பவர் மனதில் பதியும்படி சுருக்கமாக அன்றைய உரையின் சாராம்சங்களைத் தொகுத்துக் கூறுவார். மேலும் சில வியாக்யானங்களைக் கூறுவது சுந்தரனின் உரைக்கு மகுடம் சூட்டியது போல் அமையும்.

புராணங்களின் நயம் மிகுந்த நற்கருத்துக்களை மக்கள் மனதில் பசுமரத்தாணிபோல் பதியும்படி உரை நிகழ்த்துவார்.

சேஷாசலதீக்ஷிதர் சொல்லும் கருத்துக்களை சுந்தரன் மனமகிழ்வு கொண்டு மந்தஹாச முக மண்டலத்துடன் அங்கீகரிப்பான்.

சுந்தரனின் இளவயதிலிருந்தே பத்தமடை கிருஷ்ணய்யர், சூரியநாராயண ஐயர், சங்கரநாராயண ஐயர் ஆகியோர் தோழர்களாவும் சிஷ்யர்களாகவும் விளங்கினர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பதினைந்து வயதில் அவன் ஏற்றுக் கொண்ட சிஷ்யர்கள் ஜானகி, சேஷாசலதீக்ஷிதர், நாராயணசிவம், ரங்கநாத சிவம், சூரியநாராயணசிவம் ஆகிய ஐவர் ஆவார்கள்.

இத்தகைய ஒரு பின்புலத்தில் சுத்தமல்லி ஊர் மக்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற, கோடகநல்லூர் சூதசம்ஹிதைப் பிரவசனம் பூர்த்தியானதும் சுத்தமல்லி பயணமானான்.

சுந்தரனுடன் கடையம் சேஷாசலதீக்ஷிதர், சுத்தமல்லி சூரியநாராயணசிவம், கோடகநல்லூர் ராமசாமி சிவன், நீலகண்ட ஐயர் ஆகியோர் புடைசூழ சுத்தமல்லி கிராமத்தை அடைந்தான்.

நன்கு அலங்கரிக்கப்பட்ட நல்லதொரு உயர்ந்த மேடையில் விழா தொடங்கியது.

விழா மட்டுமா தொடங்கியது ?

வேறென்ன தொடங்கியது ?

சுந்தரன் ஸ்லோகம் சொல்ல, சேக்ஷாசலதீக்ஷிதர் விரிவாய் உரை சொல்ல – அவற்றைக் கேட்பவர்கள் சாராம்சத்தை உள் வாங்கிக் கொள்வார்கள்.

எவ்வாறான உண்மையை சுந்தரன் கூறுகின்றானோ அதைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்று எண்ணம் அவர்களுக்குத் தோன்றும்.

சுத்தமல்லியில் நடைபெறப்போகும் ஐந்து நாள் சூதசம்ஹிதைப் பேருரைக்கு சூரியநாராயணசிவம்

சுலோகங்களைக் காலையில் வாசிப்பது எனவும், மாலையில் அவற்றிற்கு விரிவுரையை சுந்தரன் வழங்குவதெனவும் முடிவாயிற்று.

கடையம் சேக்ஷாசலதீக்ஷிதர், கோடகநல்லூர் ராமசாமிசிவன், நீலகண்ட ஐயர் ஆகிய வேதவித்துக்களும், சாஸ்திர பண்டிதர்களும் முன்வரிசையை அலங்கரித்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஆஸ்திகப் பெருமக்களும், அன்பர்களும் அவை நிறைய அமர்ந்திருந்தனர்.

வெகு ஆர்வத்துடன் ஸூதசம்ஹிதைப் பிரவசனம் கேட்க மிகுந்த ஆவலுள்ளவர்களாக மேடையைச் சுற்றி வெகு நெருக்கமாக அமர்ந்திருந்தனர். கற்றறிந்த, ஞானம் மிக்க ஆஸ்திக அன்பர்கள் நிறைந்த அவையாக விளங்கியது.

(ஒரு குறிப்பு: சுந்தரசிவன் சமஸ்கிருதம் என்கின்ற வடமொழியிலும், தமிழிலும் ஒரு சேர ஆற்றொழுக்காக பிரவசனம் செய்யும் ஆற்றல் உடையவன். அவன் வடமொழியில் பதம் பிரித்துக் கூறும் போதே அதைக் கேட்பவர்கள் அதன் பொருளை எளிதில் புரிந்து கொள்வார்கள். இருப்பினும் தமிழிலும் ஆணித்தரமாக ஆதாரங்களை அடுக்கும் ஆற்றலும் பெற்றவன்.)

சூரியநாராயணசிவம் காலையில் நாற்பது சுலோகங்களை வாசிக்க, மாலையில் அவற்றிற்குப் பொருள் கூறுவான் சுந்தரன்.

ஸூதசம்ஹிதையில் பொதிந்துள்ள புதைபொருளாகிய செய்திகளைத் தன் வாக்கு வன்மையால் விரித்துரைத்துக் கேட்பவரைக் கட்டிப் போடுவான்.

ஸூதசம்ஹிதை சுலோகங்களைத் திரும்பத் திரும்பப் படித்தாலும் ஒரே நிலையைத்தான் அவை விளக்கிக் காட்டும்.

ஆனால் சுந்தரனின் சக்தி மிகுந்த சொல்லாற்றலினால் ஒவ்வொரு முறையும் அரும்பெரும் செய்தியை விளக்குவதாய் அமையும்.

இதுவரை கேட்டிராத வியப்பையும், பிரமிப்பையும் அவனின் பொருளமைதி ஏற்படுத்தும்.

அண்டை ஊர்களில் உள்ளவர்கள் தொலைவை ஒரு தொல்லையாய் நினைக்காமல் பிரயாணம் செய்து அவனின் பிரசங்கம் கேட்க வருவர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இதுபோல் திட்டமிட்டபடி முதல்நாள் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அமைந்தது.

இரண்டாம் நாள் .....

பொழுது புலர்ந்தது.

நாம் செய்த தவத்தால் அறியாமை இருள் நீங்கியது. உதிக்கின்ற பசுமையான ஒளி எங்கும் நிறைந்தது.

அது என்ன ஒளி ?

1847, பிலவங்க வருடம்,ஆவணி மாதம்....

ஒருநாள்......

இரண்டாம் நாள் காலை எட்டு மணி.

சூதசம்ஹிதை நிகழ்ச்சி ஆரம்பமாகியது. சூரியநாராயணசிவம் சுலோகங்களைப் படனம் செய்ய ஆரம்பிக்கும் நேரம்.

சுந்தரசிவன் மேடையில் வந்து அமர்ந்தான். சிவந்த திருமேனி. யாவரையும், எதையும் உள்ளே ஊடுருவிப் பார்க்கும் கூரிய, அருளைப் பொழியும் பார்வை. அரையிலே நேர்த்தியாகக் கட்டிய பஞ்சகச்சம். உடம்பில் யோகவஸ்திரம். மார்பில் தூய்மையான முப்புரிநூல். கழுத்தில் ஏக ருத்ராக்ஷம். சிவப்புப் பட்டுக் கயிறில் கோர்த்து கழுத்திலே கட்டப்பட்டது. செவ்வரி ஓடிய காதுகளில் சிவப்புக் கடுக்கன்கள்.

தலைநிரம்ப அடர்த்தியான அழகாய் அள்ளி முடிந்த குடுமி. நெற்றி, கை, புஜம், மார்பு, வயிறு ஆகிய இடங்களை அலங்கரிக்கும் பால் வெண்ணீற்றுப் பூச்சு. அதிக ஒல்லியாயும், அதிகப் பருமனும் அல்லாத கட்டுமஸ்தான, எவரையும் வசீகரிக்கும் உடல்வாகு. நல்ல உயரம். ஆஜானுபாகுவாக பார்க்கத் திகட்டாத உருவம். களை பொருந்திய முகம். எடுப்பான நாசி. குனித்த புருவம். கொவ்வைச் செவ்வாய். அதில் எப்பொழுதும் தவழும் குமிண் சிரிப்பு. பவளம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



போன்ற மேனி. நிற்கும்பொழுது முழங்கால்களைத் தொடும் உறுதியான நீண்ட கைகள். பரந்து விரிந்த தோள்கள்.

சபையில் வந்து நின்றாலே அனைவரும் எழுந்து நின்று வணங்கும் கம்பீரத் தோற்றம்.

காயத்ரி மந்திரம் ஜபித்து ஜபித்து முகமண்டலத்தில் நிரந்தரமாய்க் குடிகொண்ட தேஜஸ்.

சதா புன்னகை தவழும் இதழ்கள்.

வேத, வேதாந்த மார்க்கங்களில் உறுதியான பற்று.

எப்போதும் சத்சங்கம், சிவநாமங்களோடு கூடிய பேச்சு.

எல்லோரையும் இயல்பாகவே வசீகரிக்கும் குணம்.

இந்த எளியவனால் இவ்வளவுதான் சுந்தரனின் உருவத் தன்மையைப் பற்றி எழுத்தில் வர்ணிக்க முடிகிறது.

வர்ணிக்க வார்த்தைகளுக்கு என்னிடம் பஞ்சம்; சுந்தரனை முழுமையாக வர்ணித்து விட்டால் வார்த்தைகள் எதுதான் மிஞ்சும் ?

இந்த சுந்தரனை இப்பொழுதே அனைவரும் உங்கள் அகக் கண்களாலும், புறக் கண்களாலும் நன்கு மீண்டும் மீண்டும் தரிசித்துக் கொண்டு விடுங்கள்!

இந்தக் கோலம் மறுமுறை கிடைக்காமல் போகலாம்!

சூரியநாராயணசிவம் சுலோகங்களை வாசித்து முடித்தார்.

மணி காலை:8.45.

சுந்தரன், படனம் செய்யப்பட்ட ஒரு பகுதிக்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்தான்.

செவ்விய முறையில் வியாக்யானங்கள் சுந்தரனின் வாயினின்று தங்கு தடையற்ற வெள்ளம்போல் ஓடி வந்தன; அற்புதமான கருத்துக்கள் அமுதக் கனிகளாய் விழுந்தன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அறிஞர் பெருமக்கள் பிரவசனத்தில் கட்டுண்டு திறந்தவாய் மூடாமல் சுவைத்து வந்தனர்.

இந்நிலையில் கடையம் சேஷாசலதீக்ஷிதரை நோக்கி கண் ஜாடை செய்து மேடைக்கு அழைத்தான்.

தன் இருப்பிடத்தை சுட்டிக்காட்டி அதில் அமரச் சொன்னான்; பிரசங்கத்தைத் தொடரச் சொன்னான்.மேடையில்

தன் இருக்கையை விட்டுத் திடீரென எழுந்து நின்றான்.

தன்னுடன் எழுந்த கூட்டத்தினரைப் பார்த்து கைகாட்டி அமரச் செய்தான்.

'சேஷாசல தீக்ஷிதர் அவர்கள் தொடர்ந்து உரை நிகழ்த்துவார். நானும் சிறிது நேரத்தில் சேர்ந்து கொள்கிறேன்.' என்று கூறினான்.

விரைந்து அவையை விட்டு வெளியேறினான்.

வெளியேறி எங்கு சென்றான் ?

கடையம் சேஷாசல தீக்ஷிதர் சுந்தரன் விட்ட இடத்திலிருந்து பிரவசனத்தைத் தொடர்ந்தார். அவர் தொடர்ந்து சூதசம்ஹிதையின் அருமையையும், பெருமையையும் உணர்த்துமாறு பொருளை நன்முறையில் விரித்துக் கூறிவந்தார்.

அங்கு குழுமி இருந்த மக்கள் அவர் கூறியதை விரும்பிச் செவிமடுத்தாலும், சுந்தரன் பாதி பிரவசனத்தில் ஏன் எழுந்து சென்றான் ? என்ற திகைப்பிலேயே இருந்தனர்.

பிரவசனத்தை செவிமடுப்பதில் பாதி மனதும், சுந்தரன் எழுந்து சென்ற காரணம் புரியாததால் பாதி மனதுமாக அல்லாடிக் கொண்டிருந்தனர்; குழப்பமான மனநிலையில் இருந்தனர்.

சேஷாசலதீக்ஷிதர் சுந்தரனின் ஆக்ஞைப் பிரகாரம் விரிவுரையைத் தக்க முறையில் கூறிவந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவருடைய எண்ணமெல்லாம் சுந்தரன் ஏன் பாதி பிரவசனத்தில் எழுந்து சென்றான்? உரையைத் தொடரும் பொறுப்பை நம்மிடம் ஒப்படைத்ததால் சுந்தரனுடன் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு விட்டதே! என்ற கவலையுடன்தான் அவர் பேச்சைத் தொடர்ந்தார்.

ஒரு குழப்பமான மனநிலையில் ஆனால் தக்க முறையில் விரிவுரையைத் தொடர்ந்து நிறைவு செய்யும் நேரம்.......

அந்த அவையில் ஒருவர் நுழைந்தார்.

தபோ முனிவரின் கோலம்.

தலைமுழுதும் முண்டனம் செய்யப்பட்டு, மேலெல்லாம் விபூதிப் பூச்சுடன் காணப்பட்டார்.இடையில்

ஒரு கோவண ஆடையுடன் அந்த ஆண்டி நுழைந்தார்.

யார் அந்த ஆண்டி?

ஏன் இங்கு வந்தார்?

கற்றறிந்தோர் நிறைந்த அந்த அவையில் நுழைந்த அந்த ஆண்டி பிரசங்க மேடையில் ஏறினார்; அமர்ந்தார். சேஷாசல தீக்ஷிதர் விட்ட இடத்திலிருந்து உரையைத் தொடங்கினார்.

குரலைக்கேட்டு அந்த ஆண்டி சுந்தரன் என்பதைத் தெரிந்து கொண்டனர். அதிர்ச்சி அடைந்தனர்.

கண் இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர். சுந்தரசிவன் கோலம் முழுவதும் மாறியிருந்தது.

அரையில் கோவணம், கழுத்தில் ஏக ருத்ராக்ஷம், அழகிய சிகை முழுவதும் களைந்தெறியப்பட்ட முண்டனம், முப்புரியாய் அலங்கரித்திருந்த பூணூலைக் கழற்றியெறிந்த வெற்றுடல், மேலெங்கும் பளிச்சென்ற விபூதிப் பூச்சு, கடுக்கன்கள் கழற்றப்பட்ட காதுகள், பஞ்சகச்சம் கட்டி முனீஸ்வரன் போல் தோன்றியவன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அதை விடுத்து ஒற்றைக் கோவண ஆடையுடன் ஆண்டிபோல் விளங்குகிறான்....

இந்தத் திருக்கோலத்தில் சுந்தரனைக் கண்டதும் கூட்டத்தில் இருந்தவர்கள் வாய்பேசா மௌனிகளாயினர்.

'இது என்ன வேஷம் ? இது என்ன கோலம் ?
இது என்ன காட்சி ?
இது என்ன அவசரம் ?
இது என்ன அர்த்தம் ?'

என்று கேள்விகளைக் கேட்க முடியாமல் திகிலடைந்து அமர்ந்திருந்தனர். இந்தக் கோலத்திற்கான காரணத்தையும், அர்த்தத்தையும் அவரவர் மனதில் கற்பனை செய்து பார்த்தனர்.

இத்துணை மாற்றமான ஒரு கோலமானது அனைவரையும் திடுக்கிடவும், பயப்படவும், திக்பிமை அடையவும் வைத்ததில் வியப்பேதும் இல்லை அல்லவா ?

சுந்தரசிவனோ எதுவுமே நிகழாததுபோல் மேடையில் அமர்ந்து கொண்டு வழக்கம்போல் தங்கு தடையின்றி பிரவசனம் செய்தான். மக்களின் மனமோ சிவனின் உருமாற்றமாகிய தோற்றத்திலும், பிரவசனத்திலும் மாறி மாறி அலை பாய்ந்துக் கொண்டு இருந்தது.

'ஒரு நாணமும் கவலையுமின்றி இப்படி உருமாறி வந்துள்ளானே! யாரிடம் சென்று சன்யாசதர்மத்தை ஏற்றுக் கொண்டான்' என்று அவர்கள் மனம் மருகியது.

மக்களின் முகபாவங்களிலிருந்து அவர்களின் உள்ளுணர்ச்சி களையும், குழப்பங்களையும் அறிந்து கொண்ட சுந்தரன் தனது பிரசங்கம் முடிந்ததும் தனது நிலையை அறிவிப்பதற்காகப் பேச ஆரம்பித்தான்.

என்ன பேசினான் ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரன் பேசலுற்றான் : "ஒருவனுக்கு எந்த நேரத்தில் வைராக்கிய நிலை பரிபக்குவமாகி விடுகின்றதோ அந்த க்ஷணமே– கணநேரத்தில் – அவன் துறவைத் தழுவுதல் வேண்டும் என்பது பெரியவர்களின் கருத்து; சாஸ்திரங்களும் இதையே கூறுகின்றன. சாஸ்திரங்கள் இந்தத் துறவு நிலைக்கு சம்மதம் தெரிவிக்கின்றன. ஒரு குருவின் மூலமாகவே துறவறம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது சாஸ்திர விதியும் அல்ல; கட்டாய நெறியும் அல்ல. அது அவ்வாறு கூறவும் இல்லை.

வைராக்கியம் தோன்றிய உடனேயே தாமதியாது துறவு மேற்கொள்ள வேண்டும் என்பதே நியதி, விதி.

இந்த விதியின் பிரகாரம் நமக்கு பரிபக்குவப்பட்ட வைராக்கிய நிலையானது பிரவசனம் செய்து கொண்டிருக்கும் போது, மின்னல் கீற்றுப்போல் ஒரு நொடியில் சித்தித்து விட்டது.

எனவே எம்முள் இருந்து எழுந்த அழைப்பை உதாசீனப் படுத்தாமல் உடனடியாக ஏற்றுக் கொள்வதுதான் தர்ம நியாயமும், சாஸ்திர சம்மதமும் ஆகும்.அந்த எம் உள்மனதின் அழைப்பை ஏற்றுக் கொண்டு, அதற்குப் பொருத்தமாக உடனுக்குடனேயே இத்துறவுக் கோலத்தை ஏற்றுக் கொண்டோம்."

பாதி பிரவசனத்தின் போது இறைவன் ஆக்ஞை கிடைத்திருந்தாலும் குருவின் வழிகாட்டுதல் இல்லாமல் உடனடியாக சந்நியாசம் ஏற்க முடியுமா? பெரியவர்கள் எவ்வாறு தங்கள் நிலையை மாற்றிக் கொள்கின்றனர்? இது சாஸ்திர சம்மதமா?' என்று சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் அவருக்கு எழலாம்.

யாக்ஞுவல்கியர் வாழ்க்கை, ஸ்ரீராமநந்த பாரதியாரின் கருத்து மற்றும் மகான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் உபதேசம் இவற்றின் துணைகொண்டு, என் சிற்றறிவு புரிந்து கொண்ட அளவில் விளக்கம் தர முயற்சிக்கிறேன்.)

ஸ்ரீ சுந்தரன் ஏற்றுக் கொண்டது வித்வத் சந்நியாசம் ஆகும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இரண்டு விதமான சந்நியாச விதிகள் உள்ளன. அவற்றுள் பல பிரிவுகளுண்டு.

இரண்டு விதமான சந்நியாச விதிகள் :

'விவித சந்நியாசம்' மற்றும் 'வித்வத் சந்நியாசம்.'

விவித சந்நியாசம் என்பது ஞானத்தைத் தேடி—ஞானத்தை நாடித் துறவு கொள்வது.

இவை குடீசகம்,

பஹூதகம்,

ஹம்ஸம்,

பரமஹம்ஸம்,

துரியாதீதம்,

அவதூதம் எனப்படும்.

வித்வத் சந்நியாசம் என்பது ஞானத்தைப் பூர்ணமாக உணர்ந்தோன் மேற்கொள்ளும் துறவு.

இவை சிரவண,

தளன,

நிதித்யாசனம்,

சமாதி முதலியனவாம்.

இந்த சந்நியாச முறைகளைப்பற்றி "ஜீவன்முக்தி விவேகம்" விரிவாகப் பேசுகிறது என்று ஸ்ரீ ராமநந்த பாரதியார் குறிப்பிடுகிறார்.

யாக்ஞவல்கியர் வித்வத் சந்நியாசத்தை மேற்கொண்டவர்.

விவித சன்யாச முறையில்

ஆஸ்வலாயன முனிவர்,

ஜனகர்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தன்னுடைய மனைவி மைத்ரேயி ஆகியவர்களுக்கு உயர்ந்த பிரம்மஞானத்தைத் தோற்றுவித்து ,ஞான ஒளியை ஊட்டிச் சந்நியாசம் கொடுத்தார், யாக்ருவல்கியர்.

சுந்தரன் யாக்ஞவல்கியரின் வழியைப் பின்பற்றி தன்னுள் ஒலியைக் கேட்ட அக்கணத்திலேயே துறவறமாம் பெருநிலையை அடைந்தான்.

அப்படி எனில் மகான்களுக்கு குருநாதர் இல்லையா ?

இருந்தால் அவர் யார் ?

இந்த வினாக்களுக்கு விடை ?

சுந்தரரே! என்னை மன்னியுங்கள்.

சிவனின் அவதாரம் நீங்கள். 'நான் வேறு, சிவன் வேறு அல்ல' என்று திருநீலகண்டரே திருவாய் மலர்ந்தருளப் போகிறார்.

பசியோடு காத்திருந்த அடியார்களுக்கு பரமசிவன் படியளக்கப் போகிறார்.

மதுரையில் சொக்கேசர் கோயிலில் நீங்கள் ஒரு திருவிளையாடல் நடத்தப் போகிறீர்கள்.

ஒரே நாளில், ஒரே நேரத்தில் ஏழு இடங்களில் கும்பாபிஷேகம் செய்யப் போகிறீர்கள். அனைத்து குடமுழுக்கிலும் நீங்கள் ஒரே சமயத்தில் காட்சிதரப் போகிறீர்கள்.

உங்கள் சீடர்களில் ஒருவர் தமிழ் உள்ளவரை நிலைத்து நிற்கும் ஒரு செயலை செய்யப்போகிறார்.

பல ஆன்மீகப் பெரியோர்களை சந்தித்து அவரவர் மொழியில் உரையாடப் போகிறீர்கள்.

பல ஊர் சிவாலயங்கள் உங்களால் குடமுழுக்கு நடத்தப்படும் பெரும்பேற்றைப் பெறப்போகின்றன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உங்கள் அருளால் நீர் நெய்யாகும் மாற்றம் நிகழப் போகிறது.

கோயில்களில் லக்ஷ தீபங்கள் உங்களால் ஏற்றப்படப் போகின்றன.

உங்களால் நகரத்தார் மக்களெல்லாம் ஏக ருத்ராக்ஷம் அணியப் போகிறார்கள்.

உங்கள் வாக்கு வேத வாக்காக விளங்கப் போகிறது.

உங்கள் உள்ளங் கையிலிருந்து அக்னி எழப் போகின்றது.

அன்னதானத்தின் சிறப்பை உங்களால் அகிலமெல்லாம் அறியப் போகிறது.

அந்தரத்தில் அமர்ந்து காட்சி அளிக்கப் போகிறீர்கள்.

சித்த வைத்தியத்திலும், மிருக வைத்தியத்திலும் மிகச் சிறப்பாக விளங்கி பனை ஓலைகளில் பதியப் போகிறீர்கள்.

தற்காலத்துப் பெண்களும் தவவாழ்க்கை மேற்கொள்ளலாம் என்ற புரட்சியை நடத்திக் காட்டப் போகிறீர்கள்.

'நிஜானந்த விலாசம்', 'ஸ்வானுபூதி ரசாயனம்', 'சுவானுபவ ரசமஞ்சரி' ஆகிய தத்துவ நூல்களை எழுதப் போகிறீர்கள்.

சிறுவயதிலேயே வேத, வேதாந்தங்களில் கரைகண்டவராய் விளங்கினீர்கள்.

தமிழையும், வடமொழியையும் இரு கண்களாய் பாவித்து, இவற்றில் புலமை பெற்றுத் திகழ்ந்தீர்கள்.

நீருக்கடியில் சென்று உபதேசம் கேட்டீர்கள்.

பாணதீர்த்தம் மலைக்குகையில் அகஸ்திய மகரிஷியுடன் அளவளாவினீர்கள்.

தாமிரபரணி நதியை மும்முறை வலம் வந்தீர்கள்-ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக.

புதுவிதமாய் சாந்தி முகூர்த்தம் அனுஷ்டித்தீர்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஏழுவிதமான குருமார்களிடம் ஏழுவிதமான ஞானத்தைப் பெற்றீர்கள்.

சிறுவயதிலேயே ஊர் மக்களுக்கு நல்லது கூறி உங்கள் வாக்குப் பலிதத்தை நிரூபித்தீர்கள்.

இளம் பிராயத்திலேயே உள்ளுணர்வு உரைத்ததை ஏற்றுக் கொண்டு உடனடியாக சந்நியாசம் மேற்கொண்டீர்கள்........

இத்தனை சிறப்புகளையும்,இவ்வளவு ஆற்றல்களையும் பெற்ற இறைவனின் அம்சமான உங்களை,

இதுநாள் வரை ‘அவன், இவன்’ என்றே சுட்டியுள்ளேன்.

அறியாமை, திமிர், ஆணவம், சலுகை, மற்றும் அடக்கமின்மை யினால் இவ்வாறு ஒருமையில் விளித்து விட்டேன்.

எண்ணெழுத்து அறியாத இந்த பேதை, நிரக்ஷரகுச்சி, நிர்தாட்சண்யமாக உங்களின் நிரந்தரத்தன்மை தெரியாது பேதைமையால் எழுதிவிட்டேன்.

நீங்கள் எங்கும் நிறைந்தவர் (omnipresent), சர்வ வல்லமை பொருந்தியவர் (omnipotent), எல்லாம் அறிந்தவர் (omniscient) என்பது என் சிற்றறிவிற்கு எட்டாததால் இந்தச் சிறியவன் உங்களை ஒருமையில் வரைந்துவிட்டேன்.

அடியேன் செய்த பிழைகளை கருணை கூர்ந்து மன்னித்து விடுங்கள்.

கண்கள் பனிக்க உங்கள் பாதங்களில் என் சிரசை வைத்துப் பணிகிறேன்.

உங்களின் கடைக்கோடி அடிமைகளில் நான் ஒருவன் எனக் கருதி பிழைபொறுத்து அருள்வீர்களாக!

சுயம்புவான உங்களின் குருநாதர் யார்?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'மகான்களுக்கும் – சந்நியாசிகளுக்கும் குருநாதர் யார்? முதன் முதலில் தோன்றிய மகானின் குருநாதர் யார்?' என்ற கேள்வியை பரீக்ஷித் மன்னன், சுகப்ரும்ம மகரிஷியிடம் கேட்டார்.

மகரிஷி பதில் கூறினார்:

'மகான்களுக்கும், உத்தம சந்நியாசிகளுக்கும் குருநாதர் ஒருவர் கட்டாயம் இருக்க வேண்டும் என்ற சாஸ்திர நியதி இல்லை. அவர்களுக்கும், முதன் முதலாகத் தோன்றிய மகானுக்கும் குருநாதர் என்பவர் 'ஆதிகுரு' என்று அழைக்கப்படும் "தக்ஷிணா மூர்த்தியே" ஆவார்.

அவர் அவதாரம் செய்வதில்லை. என்றும் நிரந்தரமாக, நிலைத்து இருக்கிறார்.

பிரும்மா சிருஷ்டிக்கு ஆதிகாரணமாவார். அவரும் ஒரு காலத்திற்குப் பிறகு மாறலாம்.

ஆனால் பிரும்மா தோன்றுவதற்குக் காரணமான தக்ஷிணாமூர்த்தி காலத்தை மீறியவர். அவரே ஆதிகுரு.

பிரும்மத்தின் ஒரு ஸ்வரூபம் மகான்கள்; மற்றொரு ஸ்வரூபம் குரு.

தர்மத்தின் ஸ்வரூபம் ப்ரும்மா.

பூரணத்திலிருந்து ஒரு பகுதியை எடுத்தாலும் பூரணம் குறையாது இருக்கும். எடுத்ததும் பூரணம்; எடுக்கப் பட்டதும் பூரணம்.

ப்ரும்மம் ஜோதி ஸ்வரூபம். ஒரு பழத்தைப் பாதியாகச் செய்வது போல்அதைப் பாதி செய்ய இயலாது; அப்படிச் செய்தாலும் அதன் ஸ்வரூபம் மாறாது. முழுமையாகவே இருக்கும்.

ஒரு குத்து விளக்கில் ஒவ்வொரு முகத்திலும் திரிகள் வேறு வேறு அளவில் இருந்தாலும், அந்த விளக்கிற்கு எண்ணெய் ஊற்றி ஏற்றினால் எல்லாத் திரிகளிலும் தோன்றும் ஜோதியின் வடிவம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஒன்றுதான். ஐந்து முகம் ஏற்றினாலும் ஜோதியின் வடிவம் ஒன்றுதான்.

பகவானின் ஸ்வரூபம் மகான்கள், துறவிகள்.

ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் ஒரு சுயம்பு. அவருடைய குருநாதர் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியே ஆவார்.

சந்நியாசம் என்பது சந்+நியாசம் என்பதாகும்.

'சந்' என்றால் எது அதுவோ (பிரும்மம்)

'நியாசம்' என்றால் சேர்தல்—வெளிப்படுதல் என்பதாகும்.

சந்நியாசம் என்றால் பிரும்மத்துடன் சேர்தல் என்று பொருள்.

மக்கள் எல்லோரும் சுந்தரசிவன்,சந்நியாசம் மேற்கொண்டு ஸ்ரீ ஸுந்தர ஸ்வாமிகள் ஆனார் என்பதை அறிந்தனர்.

சுத்தமல்லி ஊரில் இருந்தவர்கள் ஒவ்வொருவராக வந்து ஸ்ரீஸ்வாமிகளை வணங்கி ஆசிகளைப் பெற்றனர்.

சுத்தமல்லியில் முதல்நாள் பிரவசனத்தை சுந்தரசிவனாகவும், மற்ற நான்கு நாட்கள் உரையை ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளாகவும் இருந்து நிகழ்த்தினார்.

தாம் சந்நியாசம் ஏற்ற முதல் நாள் அன்றே கடையம் ஸ்ரீசேஷாசல தீக்ஷிதரிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்தார்.

அது என்ன பொறுப்பு ?

'ஆபத் சந்நியாசம்' என்றால் என்ன ?

அதுபற்றி மிகச் சுருக்கமாக.

பிறவிகள் பற்பல எடுத்து சலித்த பின் இறைவன் கருணையினால் 'முக்தி' அடைய வேண்டும் என்ற அசைக்க முடியாத எண்ணம் ஒரு ஜீவனுக்குத் தோன்றும்.

'முக்தி' என்பதற்கு 'விடுதலை' என்று பொருள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எதனிலிருந்து விடுதலை ?

பிறப்பிலிருந்து விடுதலை.

மனதிலிருந்து விடுதலை.

எண்ணங்களிலிருந்து விடுதலை.

செயல்களில்—கர்மாக்களில் —இருந்து விடுதலை.

பற்றுக்களிலிருந்து விடுதலை.

அதனால் வரும் பாவ புண்ணியங்களில் இருந்து விடுதலை.

'ஜீவன் முக்தி' என்றால் ஜீவனுடன் இருக்கும் போதே - உயிருடன் இருக்கும் போதே சமாதிநிலையை – முக்தியை அடைவது.

அவ்வாறு ஜீவன் முக்தி அடைந்தவர்களை 'ஜீவன்முக்தர்கள்' என்கிறோம்.

முக்தி என்பது பிரம்மத்துடன் கலப்பது ஆகும்.

மனதே, நாம் புரியும் நல்லவை கெட்டவைகளுக்குக் காரணம் ஆகும்.

இத்தகைய மனதின் பிடியிலிருந்து விடுபடுவதே உண்மையான விடுதலை ஆகும்.

மனோ நாசமே முக்தி ஆகும்.

உயிருடன் இருக்கும்போதே நாம் நம் மனதை ஜயிக்க வேண்டும். வெற்றுக் கற்பனைகளைக் கடந்து சிந்தையை பிரும்மத்தில் நிலைபெற வைத்தோமேயானால் அதுவே ஜீவன்முக்தி.

'முக்தி என்பதை ஒருவன் வாழ்நாளில் அடைய வேண்டுமே அன்றி இறந்த பின் எங்கோ சென்று முயற்சிப்பது அல்ல' என்று மகரிஷி வசிஷ்டரின் யோகவாசிஷ்டம் தீர்க்கமாகக் கூறுகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பலனைப் பற்றிய சிந்தனை இல்லாத பயிற்சியும், வைராக்கியமும், விடா முயற்சியும் இருந்தால் எந்த நொடியிலும், விநாடியிலும் எப்போது வேண்டுமானாலும் முக்தியை அடையலாம்.

பலன் குறித்தும்,தன்னிலை குறித்தும் கவலைப்படுபவர் களுக்கு முக்திப் பேறு கிடைக்க காலதாமதம் ஆகும்.

இந்தப் பின்னணியில் ஆபத் சந்நியாசம் என்றால் என்ன ? என்று பார்ப்போம்.

"எப்போதும் குருசரணம் நினைவாய் நெஞ்சே!
எம்பெருமான் சுந்தர சிவன்தாள் எண்ணாய்!
முப்பாழுங் கடந்தபெரு வெளியைக் கண்டான்,
முக்தியெனும் வானகத்தே பரிதி யாவான்,
தப்பாத சாந்தநிலை அளித்த கோமான்,
தவம்நிறைந்த சுந்தர சிவன்எனும் ஞானி,
குப்பாய ஞானத்தால் மரண மென்ற,
குளிர்நீக்கி யெனைக்காத்தான், சுந்தர சிவனே!"

முக்தியின் ஒரு பிரிவு சித்தியாகும்.

பன்னெடுங்காலமாக நம் ரிஷிகளும், முனிபுங்கவர்களும், தபஸ்விகளும், யோகிகளும் புலன்களை அடக்கி, மனத்தை ஒடுக்கி கடும் முயற்சியை மேற்கொண்டனர்.

அதன் பயனாக ஞானத்தையும், அதன் மூலம் முக்தியையும் அடைந்தனர்.

பலப்பல ஜன்மங்களுக்குப் பிறகே முக்தி பெற வேண்டும் என்ற ஞானம் தோன்றும்.

இந்தப் பிறவியிலேயே அதை அடைந்திட தங்கள் அறிவால் சில உபாயங்களைக் கண்டுபிடித்தனர். அதைக் கடைப்பிடித்து சித்தி அடைந்தவர்களை சித்தர்கள் என்கிறோம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



முக்தி அடைந்தவர்கள், ஸ்தூல சரீரத்தை விட்டு, சூக்ஷ்ம சரீரத்தோடு பரவெளியிலோ, பஞ்சபூதங்களில் ஒன்றிலோ ஒடுங்கி சமாதி ஆகிவிடுதல் ஆகும். (இது பற்றி பின்னர் விரிவாகப் பார்க்கலாம்.)

அலைகளற்ற கடலைப் போல சலனமற்ற மனநிலையைக் கொண்டவர்களே சந்நியாசிகள். பேதமற்ற மனநிலையில் இருப்பவர்கள்.

பலனைப் பற்றிய சிந்தனை இல்லாத வைராக்கியமும், பயிற்சியும், விடாமுயற்சியும் இருப்பவர்களே சந்நியாசம் ஏற்றுக் கொள்ளத் தகுதியானவர்கள் என்பதை முன்னரே பார்த்துள்ளோம்.

இப்போது எழும் கேள்விகள்...

1) சந்நியாசம் மேற்கொண்டவர்களால் மட்டும்தான் முக்தி அடைய முடியுமா ?

2) ஆபத் சந்நியாசம் என்றால் என்ன ? இந்த சந்நியாசம் எப்பொழுது மேற்கொள்ள வேண்டும்.

இவர்கள் முக்திக்கு உரியவர்களா ?

முதல் கேள்விக்கு விடை இல்லை என்பதே ஆகும்.

பாகவதத்தில் வரும் அஜாமிளன் கதையில் பாவச்செயல்கள் பல புரிந்த அஜாமிளன் கடைசி நேரத்தில் தன்னுடைய புதல்வனை 'நாராயணா' என்று அவன் பெயர் சொல்லி அழைக்கிறான். நாராயணா என்று சொன்னதாலேயே அவனுக்கு வைகுந்தப் பதவி கிடைக்கிறது.

முதலையினால் கால்கள் பிடிக்கப்பட்ட கஜேந்திரன் 'கோவிந்தா' என்று அழைத்ததால் அதுவும் வைகுந்தம் அடைகிறது.

ஜடபரதனும் மானாகப் பிறந்து பின்னரே மோக்ஷம் அடைகிறான்.

பூர்வஜன்ம பலனாலேயே ஒருவனுக்கு சந்நியாசம் சித்திக்கிறது;முக்தியும் கிடைக்கிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சந்நியாசி ஆவதற்கு ஒருவருக்கு யோகமும் (கர்மபலன்) வேண்டும்; யோக்கியதையும் வேண்டும்.

ஆகவே பிரம்மசரியம், கிருஹஸதம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற எந்த ஆசிரமத்தில் உள்ள தகுதியானவர்கள் அனைவரும் முக்திக்கு உரியவர்களே.

ஆபத்சந்நியாசம் எப்பொழுது எடுத்துக் கொள்ள வேண்டும் ?

"அதுவேநீ யென்பதுமுன் வேத வாக்காம்;

அதுவென்றால் எதுவெனநான் அறையக் கேளாய்!

அதுவென்றால் முன்னிற்கும் பொருளின் நாமம்;

அவனியிலே பொருளெல்லாம் அதுவாம்(பிரம்மம்);நீயும்

அதுவன்றிப் பிறிதில்லை !..........."

சந்நியாசம் என்பது மிக நுணுக்கமாக ஆராயப்பட வேண்டிய ஒன்று.

ஒவ்வொரு மகனீயர்களும் ஒவ்வொரு வழியைப் பின்பற்றி பிரம்மத்தில் ஐக்கியமாகி உள்ளனர்.

'இவர் பின்பற்றிய வழியே சரியானது; அவர் பின்பற்றிய வழி சரியன்று' என்ற வாதப் பிரதிவாதங்கள் இன்றும் சிலரின் அறியாமையால் அரங்கேற்றப்படுகின்றன.

சந்நியாசம் வைராக்கியத்தால் ஏற்படுகிறது.

இரண்டு வைராக்கியங்களைப் பற்றிப் பலரும் அறிந்திருப்போம்.

ஒன்று பிரசவ வைராக்கியம்.

மற்றது ஸ்மசான வைராக்கியம்.

இந்த இரண்டு வைராக்கியங்களின் கால அளவு சிலமணி நேரங்களே.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சந்நியாசம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற உறுதி ஏற்பட ஒருகணம் போதும். ஆனால் அது ஆயுள் முழுதும் நீடித்து, நிலைத்து இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பதே சந்நியாச யோகம். (பகவத் கீதை பேசும் யோகங்களில் சந்நியாச யோகம் முக்கியமான ஒன்றாகும்.)

சந்நியாசம் மேற்கொள்ள இளம்பிராயமே ஏற்ற பருவமாகும்.

சந்நியாசம் ஏற்றுக் கொண்டவர்களுக்கு சில நியமங்கள் உண்டு.

பந்த பாசங்களை விட்டொழிக்க வேண்டும்.

ஊரைவிட்டு விலகி இருக்க வேண்டும்.

பிரணவ ஜபத்தை இடைவிடாது ஸ்மரிக்க வேண்டும்.

தேவைகளை மிகமிகக் குறைந்த அளவிற்குச் சுருக்கிக் கொள்ள வேண்டும்.

உடலால், உடையால் ஏற்படுவது துறவல்ல; உள்ளத்தால் துறப்பதே துறவு.

துறவை உயிரோடு இருக்கும் பொழுதே மேற்கொள்ள வேண்டும்.

துறவறம் இயல்பானதாய் இருக்க வேண்டும்; யார் மீதும் திணிக்கப்படக் கூடாது.

நான்—எனது என்ற அகங்கார—மமகாரங்களைத் துறப்பதே துறவு.

தோன்றும் போது 'நான்' தோன்றிய பின் 'எனது' தோன்றும்; அழியும்பொழுது 'எனது' அழிந்தபின் 'நான்' அழியும்.

ஆபத்சந்நியாசம் என்பது இந்த உயிர், இந்தக் கூட்டை விட்டுப் பிரிவதற்கு சில காலத்திற்கு முன் மேற்கொள்ளப்படுவது.

பொதுவாக, மிக உயர்ந்த ஒருசில ஞானிகளைத் தவிர, மற்றவர்கள் குரு மூலமே சந்நியாசம் மேற்கொள்ள வேண்டும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீதியாகபிரும்மம் 96 கோடிமுறை ஸ்ரீராமநாமம் ஜபித்து, இரண்டு முறை ராம்தரிசனம் கிடைத்து பிரம்மத்துடன் கலந்து விட்டார்.ஆயினும் நான்காவது ஆசிரமத்தை விரும்பி ஏற்றுக் கொண்டார்.

பக்தி,பாவம் இவற்றைத் தன் சாகித்தியங்களின் மூலம் இறைவனுக்கு அர்ப்பணித்தார். அவரே தியாகப் ப்ரும்மம்; அவரே நாதப் ப்ரும்மம்.ஆயினும் ஆழ்மனதின் கட்டளையை ஏற்று ஆபத் சந்நியாசத்தை ஏற்றுக் கொண்டார்.கிருஹஸ்தனாய் இருந்த பொழுதே பகவத் ஸ்மரணம், பக்தி, சங்கீதம், உஞ்சவிருத்தி என ப்ரும்மத்துடன் கலந்து விட்டார். இவை சந்நியாசத்தைவிட உயர்ந்த தர்மங்களாகும்.

ஆபத் சந்நியாசம் மேற்கொள்ள வயது ஒரு தடையல்ல. கிருஹஸ்தாஸ்மரத்தில் இருந்து கொண்டே சந்நியாசி எனக் கூறிக்கொள்ளக் கூடாது. கிருஹஸ்தனுக்கு சமாதி கிடையாது; சந்நியாசிக்கே சமாதி உண்டு. சந்நியாசி தவிர மற்றவர்களுக்கு சரீர தகனமே செய்ய வேண்டும் என்பது சனாதன தர்மத்தின் சாஸ்திர விதி.

சப்தரிஷிகளும் இல்லற தர்மத்தைக் கடைப்பிடித்தவர்களே; அவர்கள் துறவியர் அல்லர்.

பொதுவாக மடாதிபதிகள் எவருக்கும் நேரிடையாக சந்நியாசம் வழங்க மாட்டார்கள். மடத்திலுள்ள அனுபவமிக்க துறவியே வழங்குவார்.

ரமண மகரிஷியும், சதாசிவப் பிரம்மேந்திரரும் நமக்குக் கிடைப்பதற்கு அவர்கள் செவிகளில் விழுந்த இரண்டு வார்த்தைகளே போதுமானதாயிருந்தது.

சில மகனீயர்கள் காவி உடுத்தாமலேயே சந்நியாச தர்மத்தைக் கடைப்பிடித்துள்ளனர். சிலர் இடை ஆடையுடன் மட்டுமோ,சிலர் திகம்பரராகவோ திகழ்ந்துள்ளனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இத்துடன் சந்நியாசத்தை விட்டு சரிதத்தில் அடுத்து நிகழ்வது என்ன ?என்று பார்ப்போம்.

“எவ்வகைத் தொழிலும் எண்ணமற் றவனாய்

எவ்வகைப் பயனிலுங் கருத்திழந் தவனாய்

குரங்காய்க் கரடியாய்க் கொம்புடைப் பிசாசாய்

யாதோ பொருளாய் எங்ஙனே நின்றேன்......”

1847–ம் ஆண்டு ஆவணிமாதம் துறவறம் மேற்கொண்டார் சுந்தரர்.

அப்பொழுது 15வயது 9மாதங்கள். ஏறத்தாழ ஆதிசங்கரர் துறவறம் ஏற்ற வயதை ஒட்டி அமைந்துள்ளது.

(சுந்தரஸ்வாமிகள் துறவறம் ஏற்ற நாளிலிருந்து பல இடங்களுக்குச் சென்று சூதசம்ஹிதை பிரவசனம் செய்து மக்களை சிவபக்தியிலும்,சனாதனக் கொள்கைகளிலும் ஈடுபாடு கொள்ளச் செய்து நல்வழிப்படுத்தி வந்தார்.

அக்காலத்தில் எல்லா மக்களும் சுந்தரஸ்வாமிகளின் பேச்சாற்றலைக் கேட்ட மாத்திரத்தில் தர்ம வழியைப் பின்பற்றுவார் ஆயினர்.

மக்களை இவ்வாறு அறவழியில் நிலைபெறச் செய்தது ஸ்வாமிகளின் அமானுஷ்ய சக்தியே ஆகும்.)

சுத்தமல்லி பிரசங்கம் நிறைவு பெற்றதும் சேஷாசல தீக்ஷிதர்,நாராயணசிவம், சூரியநாராயணசிவம், கோடகநல்லூர் ராமசாமி சிவன், நீலகண்ட ஐயர் மற்றும் திரளான மக்கள் புடைசூழ 1847 ம் ஆண்டு, ஆவணிமாதம் 12ம் தேதி, கோடகநல்லூர் வந்து சேர்ந்தார்.

இந்தக் குறிப்பின்படி பார்க்கும் பொழுது சுந்தரர் துறவறம் பூண்டது 1847–ம் ஆண்டு பிலவங்க ஆவணி மாதம் 7 அல்லது 8 ம் தேதி ஆக இருக்க வாய்ப்புண்டு.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



**கோடகநல்லூர் பற்றிய சிறிய குறிப்பு :**

இதுவரை சுந்தரன் என்றும், சுந்தரசிவன் என்றும் ,சுந்தர ஸ்வாமிகள் என்றும் அறியப்பட்டவர் இன்னும் சில நாட்களில் கோடகநல்லூர் சுந்தரஸ்வாமிகள் என்று அறியப்படப் போகிறார்.

இந்த ஊரில் அவ்வாறு சிறப்பாக என்ன நடைபெற்றது என்பதையும் காண உள்ளோம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அழகிய சிற்றூர் கோடகநல்லூர். வாசம் செய்வதற்கு உகந்த ஊராகும்.

தபஸ், நிஷ்டை, ஜபம், ஹோமம், அக்னிஹோத்ரம், ஔபாசனம், சந்தி, நித்திய கர்மாக்கள் செய்வதற்கேற்ற சூழலும், வசதியும் நிறைந்த ஊர்.

நிம்மதியையும்,மனச்சாந்தியையும் அளிக்கும் அழகான ஊர். சோலைகளும், கழனிகளும், காடுகளும் நிறைந்த அமைதியான ஊர். நீர்நிலைகள் குறைவின்றி நிறைந்த ஊர். எக்காலமும் வற்றா வளம் பெற்ற தெள்ளிய தாமிரபரணி ஆற்றின் வடகரையில் அமைந்த ஊர்.

இரண்டு பெரிய அக்கிரஹாரங்களை உடையது. ஒன்று வைஷ்ணவ அக்கிரஹாரம்.

இரட்டை சாரியாக சுமார் ஐம்பது வீடுகள் கொண்டது. மற்றது ஸ்மார்த்த அக்கிரஹாரம். வடமாள் என்ற பிரிவினர்கள் வசிக்கும் தெருவாகும். சுமார் இருநூற்றி ஐம்பது வீடுகள் கொண்டது.

அப்பைய தீக்ஷிதரின் பெண்வழிச் சந்ததியினர் அனேகர் இங்கே வசித்து வந்தனர்.

(உலக நியதிப்படி இவ்விரண்டு அக்கிரஹாரங்களும் இன்று சீர்கெட்டு, சிதிலமடைந்து, பாழ்பட்டு, குட்டிச்சுவர்களாய் நிற்கின்றன; மிகமிகச் சிலரே வசித்து வருகின்றனர் என்று குறிப்புகள் கூறுகின்றன.)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அத்தகைய சிறப்பு மிக்க காலகட்டத்தில் இவ்வூருக்கு விஜய யாத்திரையாக எழுந்தருளிய சிருங்கேரிமடத்தின் முப்பத்து மூன்றாவது பீடாதிபதி ஸ்ரீசச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்மபாரதி மஹாசன்னிதானம் அவர்கள் இந்த ஊரின் வனப்பையும், அழகையும், ஆச்சாரம் நிறைந்த மக்களையும் பார்த்து கோடகநல்லூருக்கு வேறோரு பெயர் சூட்டினார்.

அது என்ன பெயர் ?

"நின்றிடும் பிரமம் என்பார்;—அந்த
நிர்மலப் பொருளினை நினைத்திடுவேன்;
நன்றுசெய் தவம்யோகம்—சிவ
ஞானமும் பக்தியும் நணுகிடவே."

கோடகநல்லூரில் இரண்டு சிவன்கோயில்களும்,ஒரு பெருமாள் கோயிலும், சங்கரமடமும் உண்டு.

வைணவ அக்கிரஹாரத்தில் விஷ்ணு (பெருமாள்) கோயில் உள்ளது. அவ்வாலயத்தின் பின்புறம் குளிப்பதற்கும், காலை மாலை நேரங்களில் ஜபம் செய்வதற்கும் அழகிய நீண்ட படித்துறை உண்டு. இக்கோயிலின் பின்பக்கம் கோயிலையும்,படித்துறையையும் ஒட்டி தாமிரபரணி ஆறு ஓடுகின்றது.

கோடகநல்லூர் பெருமாள் கோயிலில் அமிர்தகலசம் செய்து பெருமாளுக்கு நிவேதனம் செய்தால் நியாயமான பிரார்தனைகள் நிறைவேறும் என்ற நம்பிக்கை. (அமிர்தகலசம் என்பது இனிப்பு ருசிகலந்த, வாசனை சுண்டியிழுக்கின்ற ஒரு பக்ஷணம். அந்த அமிர்தகலச பக்ஷணத்தைப் பெருமாளுக்கு நிவேதனம் செய்து தரிசனம் செய்யவந்த அனைத்து சேவார்த்திகளுக்கும் விநியோகம் செய்வார்கள்.)

சைவ அக்கிரஹாரத்தின் மேல்சாரியை ஒட்டி தாமிரபரணி ஆறு ஓடுகின்றது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அக்கிரஹாரத்தின் தென்கோடியில் ஒரு சிவாலயம் உண்டு.

அம்பாள் பெயர் சௌந்தராம்பாள், ஸ்வாமி பெயர் அபிமுக்தீஸ்வரர். மேற்குப் பார்த்த சிவன் சந்நிதி.

இக்கோயிலின் எதிரில் லோககுருவாகிய ஆதிசங்கராச்சாரிய ஸ்வாமிகளின் திருமடம் இருக்கின்றது.

ஊரின் வடகிழக்கில் ஈசானிய பாகத்தில் மற்றொரு சிவன் கோயில் அமைந்துள்ளது.

சிவகாமசுந்தரி உடனுறை கைலாசநாதர் கோயில்.இங்கே கிழக்குப் பார்த்த சந்நிதி.

ஆதிசங்கராச்சாரியார் மடத்திலே ஸ்ரீசங்கர ஜயந்தி மிக விமரிசையாக நடைபெறும்.

தாமிரபரணியில் ஓடும் தாமிரபரணி மிக அகலமானது.சுமார் இருநூறு – இருநூற்றைம்பது கஜம் அகலமுள்ளது. தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் ஒன்றரை மைல்தூரத்தில் பத்தமடையும், வடகரையை ஒட்டினாற் போல் கோடகநல்லூரும் அமைந்துள்ளன.

தாமிரபரணி ஆற்றின் இருகரைகளிலும் மருதமரங்கள் வானுற ஓங்கி வளர்ந்து அடர்த்தியாய்க் காணப்படும். குளுகுளு என்று குளிர்ச்சியையும் ,நிழலையும் தரும்.ஊரின் செழிப்பை இம்மரங்கள் பறைசாற்றும்.

இத்தனை வளப்பம் நிறைந்த, மனோரம்யமான ஊரைப் பார்த்து விட்டு மஹாசந்நிதானம் ஸ்ரீசச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதி அவர்கள் அக்கிரஹாரங்களின் ஒழுங்கான, அழகான அமைப்பையும், சிவன் கோயில்கள், பெருமாள் கோயில் இவற்றில் சிரத்தையாக நடக்கும் பூஜாமுறைகள், தாமிரபரணி ஆற்றின் அழகு, மக்களின் வித்தை, தர்மசிந்தனை, அவர்களின் அன்றாட நித்யகர்மா செயல்பாடுகள், ஆழ்ந்த பக்தி...... இவற்றையெல்லாம் நுணுகி அறிந்தபின் அவ்வூரை" சின்னக் காலடி" என்று குறிப்பிட்டார்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சிலர் "குட்டிக்காலடி" எனவும் கோடகநல்லூரைக் குறிப்பிடுவார்கள்.

இத்தகைய வளப்பம் செழித்த,ஆன்மீகம் தழைத்த பூமியில் மற்றொரு பகுதியும் இருக்கிறது.

ஆற்றின் தென்கரை, வடகரைகளின் ஓரத்தில் நாணற் காடுகள் அடர்ந்து விளங்கும். தென்பக்கத்துக் கரையைவிட வடபக்கத்துக் கரையிலுள்ள அதாவது கோடகநல்லூரை ஒட்டியுள்ள நாணற்காட்டுப் புதர்கள் மிக அடர்த்தியானவை.

இங்கேதான் விரைவில் ஸ்ரீஸுந்தரஸ்வாமிகள் சிலகாலம் வசிக்கப் போகிறார்.

சந்நியாச தர்மம் ஏற்ற பிறகு முதல் லீலை—மெய்சிலிர்க்க வைக்கும் ஈசனின் திருவிளையாடல் தொடங்கப் போகிறது.

அது என்ன லீலை?

"குறியனந்த முடையோராய்க் கோடி செய்தும்
குவலயத்தில் வினைக்கடிமைப் படாதா ராகி
வெறியுடையோன் உமையாளை இடத்தி லேற்றான்
வேதகுரு பரமசிவன் வித்தை பெற்றுச்
செறிவுடைய பழவினையாம் இருளைச் செற்றுத்
தீயினைப்போல் மண்மீது திரிவார் மேலோர்....."

கோடகநல்லூரை ஒட்டிய கரையிலுள்ள நாணற்காட்டுப் புதர்கள் அக்கிரஹாரத்தின் மேல்பகுதி வீடுகளின் கொல்லைப் புறங்களில் ஆரம்பிக்கும். தாமிரபரணி ஆற்றின் மையம் வரை அடர்த்தியாய்ப் பரவி மண்டிக் கிடக்கும்.

தென்கரையிலுள்ள நாணற்காடு கிழக்கே ஒருமைல் அளவும், மேற்கே ஒன்றரை மைல் தூரமும் இடையீடன்றி அடர்ந்து கிடக்கும்.

இந்த நாணற்காட்டிற்குள் ளே ஒரு யானை நின்றிருந்தால்கூட அது வெளியே தெரியாது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இந்த நாணற்காட்டில் நீர்தேங்கிய சுழற்பள்ளங்களும், புதை சேறுகளும் அனேகம்.

கொடுமையான விஷப்பாம்புகளும், உடலுக்குப் பல்வகையிலும் தாங்கொணா ஊறு விளைவிக்கும் விஷ ஜந்துக்களும் குடியிருக்கும் காடு.

ஊர்மக்கள் எவரும் அதற்குள் நுழையத் துணிந்ததில்லை.

கோடகநல்லூருக்கும் பத்தமடைக்கும் செல்லுவதற்கு வண்டிப்பாலம் எதுவும் கிடையாது.

கோடை காலத்தில் ஆற்றில் தண்ணீர் தொடைஅளவு ஓடும். ஆற்றில் இறங்கி நடந்து செல்லலாம்.

மழைக்காலத்தில் வெள்ளம் இருகரை தொட்டு ஓடும். அப்பொழுது தோணி (படகு) மூலம் அக்கரை செல்லலாம்.

கோடகநல்லூர் ஒரு ஒதுக்குப் புறமான கிராமம்.

அந்த ஊருக்கு வெளி ஊர்களில் இருந்து வரும் அதிதிகளை ஊரினர் போட்டி போட்டுக்கொண்டு வரவேற்று உபசரிப்பர். எந்த வீட்டிற்கும் எவர் வேண்டுமானாலும் விருந்தினராகச் செல்லலாம்.

இத்தகைய சூழ்நிலையில் வித்வத் சந்நியாசம் மேற்கொண்ட ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் தன்னுடைய அன்பர் குழாமுடன் மீண்டும் கோடகநல்லூர் வந்தடைந்தார்.

அங்கு கோயில் கொண்டெழுந்தருளிய அபிமுக்தீஸ்வரர் ஆலய பஜனை மடத்தில் தங்கினார்.

சுந்தரசிவன், சுத்தமல்லியில் துறவறம் மேற்கொண்ட செய்தி பல ஊர்களுக்கும் காட்டுத் தீபோல் பரவியது.

அனைவரும் ஸ்ரீஸ்வாமிகளை வணங்கி விபூதிப் பிரசாதம் பெற்றுக் கொண்டனர்.

ஸ்ரீஸ்வாமிகள் ஆவணி ஒன்று முதல் ஐந்தாம் நாள்வரை இங்கே சுந்தரசிவனாக ஸூதசம்ஹிதை பிரவசனம் செய்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளாக பஞ்சாக முறைப்படி மீண்டும் உபதேசிக்க வேண்டினர் ஊர்மக்கள்.

ஸ்வாமிகளும் எத்தகைய களைப்பும், சலிப்பும் இன்றி அவர்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்.

சூதசம்ஹிதைப் படனத்திற்குரிய ஸ்லோகங்களை நாராயண சிவன் முறைப்படி வாசித்தார்.

ஸ்வாமிகள் விரிவாக உரையாற்றினார்.

ஸ்வாமிகளின் பிரவசனத்தைக் கேட்க அன்பர்கள் கூட்டம் அலைமோதியது.

பஞ்சகச்சம், யோகவஸ்திரம்,விபூதி,ருத்ராக்ஷம் ,காதில் கடுக்கன் என்ற கோலத்தில் சென்ற வாரம் உரையாற்றிய சுந்தரனைக் கண்டவர்கள்,

இன்று,

கோவணாண்டியாக ஸ்வாமிகளை தரிசனம் செய்தனர்.

ஆன்றோர் நிறைந்த அந்த அவையில் ஸ்வாமிகள் பிரசங்கம் செய்யும் அழகையும், கம்பீரத்தையும் பார்த்தால் முனிபுங்கவர் களிடையே பரமசிவனே—தக்ஷிணாமூர்த்தியாக அமர்ந்து பிரசங்கம் செய்வது போலிருந்தது.

ஸுந்தர ஸ்வாமிகளின் உரையில் ஒரு சிறப்பம்சம் உண்டு. அவருடைய பிரசங்கமானது முழுமையாக சமஸ்கிருதத்திலேயே இருக்கும். ஆனால் அனைவருக்கும் புரியும்படி எளிமையாக இருக்கும். தமிழில் சொற்பொழிவாற்றினாலும் ஆற்றுவெள்ளம் போல் வார்த்தைகள் அழகாக அடுக்கடுக்காய் வந்துவிழும்.ஓங்கிய ஞானச்செறிவான கருத்துகள் அருவியாய்க் கொட்டும்.

தமிழையும், வடமொழியையும் தம் இரு கண்களாகப் போற்றினார் ஸ்வாமிகள்.

ஐந்து நாட்களும் புதுப்புதுக் கருத்துகள் உரையில் இடம் பெற்றன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சூதசம்ஹிதையை பஞ்சாக முறைப்படி கோடகநல்லூரில் பூர்த்தியானதும் அன்பர்களை அழைத்தார்.

பிலவங்க வருஷம், ஆவணிமாதம் 18–ம் நாள் அன்று நடந்த நிகழ்ச்சி.

தாம் இதுவரை நெறிமுறை தவறாமல் காலை, உச்சி, இரவு என்று முக்காலமும் போற்றிப் பூஜித்து வந்த 'பாணலிங்கம், நடராஜமூர்த்தி, சிவகாமசுந்தரி மற்றும் சில சாளக்கிராமங்கள்' ஆகியவற்றை

வைதிகமான பரம்பரையில் வந்த ராமசாமி சிவன்,நீலகண்ட தீக்ஷிதர் ஆகியோரிடம் ஒப்படைத்தார்.

அவர்கள் இருவரிடமும் அம்மூர்த்தங்களை சிவன்கோயில் பஜனை மடத்தில் எழுந்தருளச் செய்து நெறிமுறை தவறாமல் வழிபாடு செய்யுமாறு ஸ்வாமிகள் கூறினார்.

அவர்களும் மிகப்பணிவுடன் அம்மூர்த்தங்களை வணங்கிப் பெற்றுக்கொண்டனர்.

ஸ்ரீசுந்தரஸ்வாமிகள் கோடகநல்லூர் மக்களை ஆசிர்வதித்து விடைபெற்றார்.

அடுத்து எந்த ஊர் சென்றார் ?

"பாண்டியநா டெனுந்தேவி திருமுகமே நிகராகப் பயிலுஞ் செல்வ

மீண்டியறம் வளர்வதனுக் கிடமாகு மரிமழவூ ரிதனை மண்ணிப்

பூண்டிலகு செழுந்திலக மெனலாகு முள்ளன்பு
பொருந்தி நின்று
வேண்டியவர் வேண்டியவை பெறவருளுஞ் சிவபெருமான்
மேவுங் கோயில்."
–அரிமழத் தலபுராணம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



(1907–ம் ஆண்டு மு.ரா.கந்தசாமிக்கவிராயரால் இயற்றப்பட்ட, 114 ஆண்டுகள் பழமையான அரிமழத் தலபுராணம்.)

கோடகநல்லூரில் வைதிக சிரத்தை உடையோரும், தேவபூஜை, அனுஷ்டான விதிகள் ஆகியவற்றில் நெறி தவறாதவர்களும், வேதவேதாந்தங்களில் பாண்டித்தியம் உடையவர்களுமான ராமசாமிசிவன், நீலகண்ட தீக்ஷிதர் ஆகியோரிடம் தாம் வழிபட்டு வந்த மூர்த்தங்களை ஒப்புவித்தார் ஸுந்தர ஸ்வாமிகள்.

அந்த மூர்த்தங்கள், ஜானகியின் திருமணத்தின் போது பூர்வாஸ்ரம மாமனார் அடைச்சாணி ராமசுப்பையர் அளித்ததாகும்.

கோடகநல்லூர் மக்களை ஆசிர்வதித்து பத்தமடை நோக்கிப் பயணமானார் ஸுந்தரஸ்வாமிகள்.

ஸ்வாமிகளுடன் சேஷாசல தீக்ஷிதர், நாராயணசிவம், சூரியநாராயணசிவம் ஆகியோரும் உடன் வந்தனர்.

சுந்தரசிவனாக 1847–ம் ஆண்டு பிலவங்க வருஷம் ஆவணிமாதம் பத்தமடையிலிருந்து, கோடக நல்லூர் சென்ற போது ஜானகி, கணவனை அன்புடன் வழிஅனுப்பி வைத்தார்.

சுத்தமல்லியில் சந்நியாசம் ஏற்று ஸுந்தர ஸ்வாமிகளாக அங்கும் பிறகு கோடக நல்லூரிலும் பிரவசனம் பூர்த்தி செய்து பத்தமடை வரும் செய்தி குடும்பத்தினருக்குக் கிடைத்தது.

சுத்தமல்லியில் உபன்யாசம் நடக்கும்போது சுந்தரன், சந்நியாசம் ஏற்றார் என்ற செய்தி மாமனுக்கும், மாமிக்கும் எட்டியது.

அதைக் கேள்விப்பட்டதும் மனது பட்டென்று நின்றுவிடும் போல் ஆனது. அடிவயிற்றைக் கலக்கியது.

குழந்தையியிலிருந்து, பெற்றோர் ஸ்தானத்தில் இருந்து வளர்த்த பாசம் அல்லவா? பெற்றபாசத்தைவிட வளர்த்த பாசம் உயர்ந்ததன்றோ!



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இருவரும் நிலை கலங்கினார்கள். பைத்தியம் பிடித்துவிடும் நிலையை அடைந்தனர். மனம் குழம்பினார்கள். கைகால் ஓடவில்லை. ஜானகியைக் கண்டு கழிவிரக்கம் கொண்டனர். இந்த சிறிய வயதில் இவ்வளவு பெரிய பேரிடியா இவள் தலையில் இறங்க வேண்டும் என்று பரிதவித்தனர்.

இந்தப் பெண்ணிற்குத் தாங்கள்தான் தாங்கமுடியாத துயரை அளித்து விட்டோம் என மருகினர்.

அடிமடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டவர்கள் போல் தாங்கமுடியாத வேதனையில் மூழ்கினர்.

இங்கே இவ்வாறெனில், அடைச்சாணியில் நிலைமை இதைவிடப் பரிதாபமாக இருந்தது.

சுந்தரன், சந்நியாசம் மேற்கொண்டு விட்டார் என்று கேள்விப்பட்டதும், ஜானகியின் தந்தை சினத்தின் எல்லைக்கே சென்றார்.

நன்கு படித்தவர். வேதவிற்பன்னர். ஊருக்கு நியாயம் சொல்லுபவர். நியமமான வாழ்க்கை மேற்கொண்டவர். நல்லது கெட்டதைப் பகுத்துப் பார்ப்பவர். கற்றவர்களால் போற்றப்படுபவர்.

சுந்தரசிவனுக்கே குருவாக இருந்தவர். அவராலேயே இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. அவருடைய மனைவிக்கும் சங்கடம் வயிற்றைப் பிசைந்தது. பெற்ற வயிறல்லவா!

'யாரைக் கேட்டுக் கொண்டு சந்நியாசம் வாங்கினான்?

பெரியவர்களிடம், மனைவிடம் சொன்னனா?

சந்நியாசம் வாங்கிக் கொள்ளும் உத்தேசம் இருப்பவன் ஏன் திருமணம் செய்து கொண்டான்?

என் பெண்தான் கிடைத்தாளா?

எல்லா ஜோசியர்களும் சொன்னார்களே இதுபோன்ற ஜாதகங்கள் அமைவது துர்லபம். உலகிலேயே இதுபோல் சதிபதிகள் அமைய மாட்டார்கள் என்றனரே. என் பெண்ணிற்கு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வாழ்வு இல்லாமல் போய்விட்டதே....' என்று பெற்ற உள்ளங்கள் கதறித் துடித்தன.

பத்தமடை சென்று வெங்கடசுப்பையரைக் கலந்து கொண்டு ஊர்ப் பெரிய மனிதர்கள் மூலம் சுந்தரனுக்கு புத்திமதி கூறி மனத்தை மாற்ற வேண்டும் என்று முடிவு செய்து பத்தமடை வந்தனர் ஜானகியின் பெற்றோர்கள்.

அங்கு ஜானகியின் நிலை என்ன ?

"பல்லுயிரும் படைப்பெய்திப் பங்கயமுங் கலைமானும்
புல்லிமிக வாரணங்கள் பொலிவாயுற் றெண்கணுறீஇ
நல்லவன மேற்கொண்டு நயத்தலினா லெமையாளுஞ்
சொல்லவளை மணந்தவனோர் சொல்லவருஞ் சுவேதநதி"
சுவேதநதி–வெள்ளாறு.

சுந்தரசிவன், ஸூதஸம்ஹிதை பிரவசனத்திற்காக, பத்தமடையில் இருந்து கிளம்பிய நாள்முதல், ஜானகி வீட்டு வேலைகளை எப்போதும் போல நல்லமுறையில் செய்துவந்தாள்.

ஆசார சீலத்துடனும், நியம–நிஷ்டைகளில் எந்தவிதப் பழுது நேராதபடியும் தன் கடமைகளைச் செய்தாள்.

'அதைச் செய், இதைச் செய்' என்று அத்தை சொல்லும்படி வைத்துக் கொள்ளவில்லை. அவர்கள் எண்ணம், தேவை அறிந்து முகமும், மனமும். மலர அனைத்துப் பொறுப்புகளையும் செம்மையாகச் செய்தாள்.

விடிவதற்கு முன்பே காலை 4.00 மணிக்கே எழுந்து வாசல் தெளித்துக் கோலம் போட்டு, வீடு மெழுகி, ஸ்நானம் செய்வாள்.

தன் கணவன் உபதேசித்தபடி சிவபூஜை வழிபாடுகளை முறைப்படி செய்து வந்தாள்.

நாள்தோறும் காலையும்,மாலையும் மாமா மாமியை சிவ–பார்வதி ஸ்வரூபமாக நினைத்து நமஸ்கரித்தாள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சமையலிலும் தான் தேர்ந்தவள் என்பதை நிரூபித்தாள்.

எந்தப் பொருளும் வீணாகாமல் சிக்கனமாகப் பயன்படுத்தினாள்.

வீட்டுக்கு வரும் விருந்தினரை அகமும், முகமும் மலர உபசரித்தாள்.

வாசலில் பிக்ஷைக்கு வருபவர்களுக்குத் தேவையானதை அளித்து வணங்கினாள்.

ஓய்வான நேரங்களில் அத்தைக்கு சிவபுராணம் வாசித்துக் காட்டினாள்.

அத்தை ஓய்ந்து படுத்துக் கொண்டிருக்கும் பொழுது இதமாகக் கால்களைப் பிடித்து பாதசேவை செய்தாள்.

மாமாவும், மாமியும் ஜானகியின் செயற்பாடுகளைக் கண்டு மகிழ்ந்தனர்.

வீட்டிற்கு விளக்கேற்ற வந்த தேவதையாக அவளை மனதிற்குள் கொண்டாடினர்.

ஆனால்....

சுந்தரன்–ஜானகி இல்வாழ்க்கை சரியாக அமைய வில்லையோ என்ற சம்சயம் அவர்கள் மனதை நெருடிக் கொண்டிருந்தது.

இப்பொழுதோ.....

சுந்தரசிவன் சந்நியாசி ஆகிவிட்டான் என்ற செய்தியும் பராபரியாகக் காதில் விழுந்திருக்கிறது. ஜானகியின் மனநிலை இதனால் எந்த அளவு பாதிக்கப்படுமோ என கவலைப்பட்டனர்; பயந்தனர்.

சுந்தரனின் துறவுச் செய்தி அறிந்த ஜானகியின் செயல்பாடுகளில் எந்தவித மாற்றமும் நிகழவில்லை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வீட்டில் அன்றாடம் நடைபெறும் வேலைகளைத் தடைபடாமல் பழுதின்றி எப்பொழுதும்போல் செய்து வந்தாள்.

மாமா, மாமி போல் பதட்டப்படவோ, மனம் குழம்பவோ இல்லை. முகமும் எப்போதும் போல் அன்றலர்ந்த தாமரையாகவே இருந்தது.

சர்வசாதாரணமாக எல்லா வேலைகளையும் செய்து வந்தாள்.

பெரியவர்களாகிய மாமாவும், மாமியும்தான் 'சுந்தரனுக்கு மணம் செய்வித்துத் தவறு செய்துவிட்டோமோ' என்று கழிவிரக்கம் கொண்டனர்.

'இவள் சிறுபெண். அதனாலேயே இல்லறத்தன்மையும், சுந்தரன் சந்நியாசம் ஏற்றதால் இவளுக்கு ஏற்படப்போகும் ஏமாற்றம், வருத்தங்களைப் பற்றியும் புரிந்து கொள்ள முடியவில்லை' என எண்ணினார்கள்.

அதிகாலை நேரம்....

வழக்கம் போல் வாசல் தெளித்துக் கோலம் போட்டுக் கொண்டிருக்கும்போது ஒற்றை மாட்டு வண்டியிலிருந்து அப்பாவும், அம்மாவும் இறங்குவதைப் பார்த்தாள்.

எப்போதும் உள்ள மலர்ந்த முகத்துடன் அவர்களை வீட்டினுள் அழைத்துச் சென்றாள்.

சிறிது நேர சிரமப் பரிகாரத்திற்குப்பின் ஜானகியின் அப்பாவும், மாமாவும் கூடத்தில் பாயில் அமர்ந்தனர். பெண்டிர் இருவரும் சமையற்கட்டின் கதவின் பின்னே மறைவாக நின்றிருந்தனர்.

தொண்டையைக் கனைத்துக்கொண்டு ராமசுப்பையர் பேச ஆரம்பித்தார்.

என்ன பேசினார் ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"சிந்தையெனும் புலத்தினிடைத் திகழறிவு விதைவிதைத்துச்
சுந்தரநூ லாய்தலெனுந் தோயமிட்டு மறதியென
வந்தகளை யறக்களைந்து மகிழ்ச்சியெனும் பயிர்வளர்த்துச்
சந்ததமும் புகழ்பவனைச் சாருவார்மா ணவர்பலரும்."

ராமசுப்பையர் பேசத் தொடங்கினார்:

'சம்பந்தி ஸ்வாமிகளே!

நீங்கள் உங்கள் வீட்டுப் பையனுக்கு நல்ல பாரம்பரியம் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த அடக்க ஒடுக்கமான லக்ஷணமான பெண் வேண்டும் என்று தேடிக் கொண்டிருந்தீர்கள்.

நானும் என் பெண் நல்ல இடமாக, வேதவித்தான குடும்பத்தில் வாழ்க்கைப்பட வேண்டும் என தினந்தோறும் அடைச்சாணி ஆத்மலிங்கேஸ்வரரைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன்.

ஈஸ்வர சங்கல்பத்தில் சங்கரசிவன் என்கிட்ட பாடம் கேட்க வந்தான்.

அவனோட புத்திவிசாலம்,ஞானம்,நித்ய கர்மானுஷ்டான நியமங்கள், வித்யையை கிரஹிக்கக்கூடிய கூர்ந்த அறிவு, ஆஜானுபாகுவான தோற்றம்,இவ்வளவு படித்திருந்தும் வித்வத் கர்வம் இல்லாத பணிவு, பெரியவர்களிடம் அவன் காட்டும் மரியாதை... இத்தனையும்,இத்தனைக்கும் மேலாக ஏதோ ஒண்ணு எங்களை ஈர்த்தது.

இரண்டு குடும்பங்களும் மனம் ஒப்பி நடந்த கல்யாணம் இது. நீங்களும் சுந்தரன் கிட்ட பேசி அவன் சம்மதத்தின் பேர்லதான் கல்யாண முயற்சிகள்ல இறங்கினேள்னு நானும் கேட்டுத் தெரிஞ்சுண்டேன். அவன் கல்யாணம் செஞ்சுக்க அப்பவே மறுத்திருந்தான்னா இந்த சம்பந்தமே நடந்திருக்காது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஆக இது இருவீட்டார் சம்மதத்தோட மனம் ஒப்பி நடந்த கல்யாணம்.

பணம், காசுல பெரிய வசதி இல்லாமப் போனாலும் நாலுநாள் கல்யாணத்தை ஜாம்ஜாம்னு நடத்தினோம்.

நாங்க செஞ்சதுல குற்றம் குறைகள் இருந்திருந்தாலும் நீங்க பொருட்படுத்தாம பெரியமனசோட நடந்துண்டேள்.

ஆனா.... (இந்த இடத்தில் குரல் தழுதழுத்தது)

சாந்தி முகூர்த்தத்தும்போதே ஒண்ணும் சரியா அமையலேன்னு என் ஆத்துக்காரி வருத்தப்பட்டு என்னண்டை சொன்னா.

'போடி அசடு. அவன் சின்னப்பையன், நம்ம பொண்ணு ரொம்பச் சின்னவ. காலம் செல்லச் செல்ல எல்லாம் சரியாயிடும். இனி ஜானகி அவா ஆத்துப் பொண்ணு. எல்லாம் அங்கே இருக்கிற பெரியவா கவனிச்சுப்பா...' அப்படின்னு சமாதானம் சொன்னேன். (முகத்தைத் துண்டால் அழுத்தித் துடைத்துக் கொண்டார். தொண்டையைச் செருமி சரிசெய்தார்.)

'ஆனா இப்பத்தான் தெரியறது, ஒரு அப்பனுக்கு பெண் குழந்தைகள் மேலதான் பாசம் ஜாஸ்தின்னு. என்னதான் புக்ககம் போனாலும் பெண் குழந்தைகளுக்கு அப்பா மேல உள்ள பிரியம் என்னிக்கும் குறையாது, இது உலக இயற்கை.

என் பொண்ணு தகவல் சொல்லி அனுப்பி நாங்க வல்லே. பொண்ணு மேல உள்ள பிரியத்தாலும், மாப்பிள்ளை மேல் உள்ள அக்கறையாலும் வந்திருக்கோம்.

நாங்க....நாம கேள்விப்பட்ட செய்தி, சுந்தரசிவன் சந்நியாசம் வாங்கிட்டான்னு. இப்ப இந்தப் பிரச்னையை எப்படித் தீர்க்கறது ?

ஒரு சராசரி தகப்பன் ஸ்தானத்திலேர்ந்து சொல்றேன். என் குழந்தை புருஷனோட குடித்தனம் நடத்தி, குழந்தைகுட்டிகள் நிறையப் பெத்துண்டு நன்னா இருக்கணும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



யார் சொன்னா சுந்தரம் கேட்பான்? இந்த அசட்டுத்தனமான சந்நியாசத்தைவிட்டு அவன் காஷாயத்தைக் களைஞ்சு எறிஞ்சுட்டு கிருஹஸ்தனா மாறணும்.

அந்தக் காலத்துலயே விஸ்வாமித்திரர் தபஸ் பண்ணிட்டுத் திரும்ப கிருஹஸ்தாஸ்மரத்துக்கு மாறலையா...

சம்பந்தி சொல்லுங்கோ! நான் ரொம்பக் குழம்பிப் போயிருக்கேன். பொண்ணப் பெத்து வளர்த்தப்ப அவமேல இருந்த பாசத்தைவிட, அவ புகுந்த வீடு போனப்பறம்தான் அவ மேல பாசம் இன்னமும் ஜாஸ்தி ஆறது. என்ன படிச்சு என்ன? கடைசில அஞ்ஞானம்தான் மிஞ்சறது. எம் பொண்ணோட வாழ்க்கை நன்னா இருக்கணும். இதுதான் என் பிரார்த்தனை. பெண்ணைப் பெத்தவன்கற ஆதங்கத்துல கேக்கறேன். பதில் சொல்லுங்கோ!'

குரல் உடைந்து அழுகின்ற நிலையை அடைந்தார் நிரம்பக் கற்ற அந்த வேத விற்பன்னர்.

அவர் கேள்விகளுக்குப் பதில் கிடைத்தது.

என்ன பதில்?

"காவிரியின் மேலாகக் கடுகியெழுஞ் சுவேதநதி
பூவிரியுந் தருக்களெலாம் புடையிரியப் புள்ளிரிய
மாவிரியக் கரையிரிய வந்துபடி குநர்வினையாந்
தாவிரியப் பெருக்கெய்தித் தமிழ்நாடு சார்ந்ததால்."

வீட்டு முற்றத்தின் ஓரத்தில் தூணின் பின்னால் மறைந்து நின்றுகொண்டு நாத்தழுதழுக்க, குரல்கம்ம ஒரு பொறுப்பான தந்தை பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த ஜானகி,தந்தையின் முன்னே வந்தார்.

'அப்பா! எனக்கு எத்தனையோ நல்லவிஷயங்களைக் கற்றுக் கொடுத்திருக்கிறீர்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அம்மாவிடம் நான் கற்றுக்கொண்டது வெளிஉலகத்திற்கு வெளிப்படையாகத் தெரியும்.

சமைப்பது, வீடு பெருக்கி மெழுகுவது,கோலம் போடுவது, துணி துவைப்பது, மடித்து வைப்பது, பரிமாறுவது, கட்டுப்பாடோடு நடந்து கொள்வது, ஆசாரமாய் இருப்பது....... இவ்வாறு நான் செய்யும் செயல்கள் வெளி உலகிற்குத் தெரியும்.

ஆனால், உங்களிடம் கற்றுக் கொண்டது வெளி உலகிற்கு, அடுத்தவர்களுக்குத் தெரியாது. ஏன் ?

உங்களிடம் என்ன கற்றுக் கொண்டேன் என்பது உங்களுக்கே தெரியாது.

அறிவு, ஞானம், வித்யை இவற்றை உங்களிடம்தான் கற்றுக் கொண்டேன், உங்களுக்குத் தெரியாமலேயே.

நீங்கள் கணீரென்று உங்கள் சீடர்களுக்குப் பாடங்கள் நடத்துவது உள்ளே இருக்கும் என் காதிலும் விழும். உங்களின் கல்வியின் ஆழத்தை, தர்க்க சாஸ்திர அறிவைக் கண்டு வியந்துள்ளேன். இப்பொழுதும் நான் காதால் கேட்ட உங்கள் வியாகரணங்களையும், வேத விவரணங்களையும் சொல்ல முடியும்.

இவர் உங்களிடம் பாடம் கேட்க வந்தகாலத்தில் நீங்கள் இருவரும் பகிர்ந்து கொண்ட சாஸ்திர விஷயங்கள் இன்னமும் பசுமையாக நினைவில் உள்ளன.

பிரஸ்தானத்ரங்கள், பாஷ்ய பாடங்கள், பூர்வமீமாம்ஸை இவற்றின் நுட்பங்களை ஓரளவேனும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். உங்கள் அறிவின் விரிவைக்கண்டு பூரிப்படைந்துள்ளேன்.

நான் உங்களைக் கண்டு வியந்துள்ளேன். இத்தகைய அறிவும், சாஸ்திர ஞானமும், ஒழுக்கமும், சீலமும், சத்தியத்தை உறுதியாகக் கடைப்பிடிக்கும் பிடிவாதமும் கொண்ட ஒருவரைத் தந்தையாக அடைந்ததற்கு மனதிற்குள் அந்த இறைவனுக்கு என்றும் நன்றி சொல்வேன்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உண்மையையும், நேர்மையையும் இரு கண்களாக மதிக்கும் நீங்கள் இன்று தவறான முடிவை எப்படி எடுத்தீர்கள் என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

துறவு—சந்நியாசம் என்பது அனைத்தையும் வெறுத்து விலகுவதல்ல. அனைவரையும் விட்டு விலகி நிற்பது துறவல்ல.

அனைத்தையும் நேசிப்பதே துறவு, அனைவரையும் பாகுபாடின்றி அரவணைத்துச் செல்வதே துறவு.

அன்பு நிலையிலிருந்து அவர் அருளாளன் என்ற நிலைக்கு உயர்ந்து விட்டார்.

எதை விட்டும், யாரை விட்டும் அவர் விலகவில்லை; ஓடவில்லை.

நம் எல்லோரையும் விட அவருக்கே சொந்த பந்தங்கள் அதிகம். நமக்கு நம் வீட்டினர், நம் குடும்பத்தினர், நம் சுற்றத்தினர்... என்று குறுகிய வட்டத்தில் நமது சொந்த பந்தங்கள் அடங்கிவிடும்.

ஆனால் அவருக்கு.... ?

வானமே தந்தை; பூமியே தாய்; உலகமே வீடு, அனைத்து உயிர்களும் அவருக்கு உறவு.

விஸ்வாமித்திரர் பற்றிக் குறிப்பிட்டீர்கள்.

அவர் வாழ்க்கையே உங்கள் கேள்விக்கான பதில்......'

என்று உணர்ச்சி பொங்க பேசிய ஜானகி

மேற்கொண்டு என்ன சொன்னார்?

"பாண்டியநா டெனுந்தேவி திருமுகமே நிகராகப்
பயிலுஞ் செல்வ
மீண்டியறம் வளர்வதனுக் கிடமாகு மரிமழவூ
ரிதனை மண்ணிப்
பூண்டிலகு செழுந்திலக மெனலாகு முள்ளன்பு



Center for Shaiva Studies. Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பொருந்தி நின்று

வேண்டியவர் வேண்டியவை பெறவருளுஞ் சிவபெருமான்

மேவுங் கோயில்.”

ஜானகி தொடர்ந்து பேசினார்:

‘அப்பா! நீங்கள் கண்ணீர் சிந்திக் கண்டதில்லை. உங்கள் வேர்வையின் பெருமை எங்களுக்குத் தெரியாதது.

இன்று குரல் கம்ம, நாத்தழுதழுக்கப் பேசியது என் மனசை உருக்கி விட்டது. நீங்கள் கம்பீரமானவர் – உருவத்திலும், வித்யையின் மேன்மையிலும்.

என் பொருட்டு, என் எதிர்காலம் குறித்துக் கவலைப் படாதீர்கள்.

தராசின் முள் நடுங்கிக்கொண்டே இருப்பதைப் போல, என்மீது உள்ள பாசத்தால், அக்கறையால் உங்கள் மனம் நடுங்குகிறது.

நீங்கள் எந்தச் சூழ்நிலையிலும் தாழ்ந்து போவதை நான் விரும்ப மாட்டேன்.

தயவு செய்வது நான் சொல்லுதற்கு செவிமடுங்கள்.

‘யாரைக் கேட்டுக்கொண்டு சந்நியாசம் வாங்கினார்?

என்ற கேள்வி எழுவது இயல்பே.

ஆனால், யாரைக் கேட்டுக்கொண்டு சந்நியாசம் வாங்கிக் கொள்ள வேண்டும்?

அது ஒருநொடியில் ஏற்படும் வைராக்கியம்.

அந்த வைராக்கியம் அனைவருக்கும் சித்திப்பதல்ல. எவரையும் கேட்டுக்கொண்டு, விவாதம் செய்து முடித்த பிறகுதான் துறவு மேற்கொள்ள வேண்டும் என்றால் அது பலருக்கும் துறவாக



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அமையாது. எவரையும் கேளாது தானே உறுதிபூண்டு மேற் கொள்வதுதான் துறவு.

மற்றவர்களின் சிபாரிசினால் துறவுநீக்கம் செய்யமுடியும் என நினைப்பது அறியாமையாகும்.

இல்லறத்தவராய் இருந்து துறவறம் மேற்கொண்டு மீண்டும் இல்லறம் திரும்பியவர்கள் சரிதத்தையும் படித்துள்ளோம். அவர்கள் சமூகத்தால் கடுமையாக நிந்திக்கப்பட்டதையும் அறிவோம்.

விசுவாமித்திரர் மாபெரும் ரிஷி.

க்ஷத்திரியராய் இருந்து வசிஷ்டர் வாக்கினாலேயே 'பிரும்மரிஷி' என்று அழைக்கப்பட்டவர். கண நேர மாயைக்குக் கட்டுண்டு இல்லறத்தில் ஈடுபட்டார்.

பலநூறு ஆண்டுகள் கடும் தவம்புரிந்த பின்னர்தான் மீண்டும் ரிஷி ஆனார். ஆனால் இவரோ எந்த மாயைக்கும் உட்படாதவர். பலர், பல நூறாண்டுகள் தவம் செய்து பெற வேண்டியதை – அதன்பெயர் வைராக்கியம்–அவர் ஒரே நொடியில் அடைந்து விட்டார். கௌதமபுத்தர் ஞானத்தைத் தேடி அலைந்தார். ஆனால் ஞானம் என்னைத் தேடி என் வீட்டிற்கு வந்தது; சொல்லாமல் சொன்னது.

சாந்தி முகூர்த்தத்தன்று அவர், என் சிரசில் ஆசி கூறுவதுபோல் கைவைத்ததுமே எவரும் அடைய முடியாத ஞானத்தை, ஆனந்தத்தை அந்த நொடியிலேயே அடைந்து விட்டேன்.

பலவித அலைச்சலுக்குப் பிறகு போதி மரத்தடியில் கௌதமருக்கு ஞானம் கிடைத்தது. கௌதமர் புத்தர் ஆனார்.

ஆனால் இருந்த இடத்திலேயே அந்தப் பரவசம் எனக்குக் கிடைத்து விட்டது.

மனசு தப்புப் பண்ணாது. மனிதர்கள்தான் தப்புப் பண்ணுவார்கள். மனசுக்கு வர்ணமில்லை, பேதமில்லை. ஆனால் மனிதர்களுக்கு இவை உண்டு.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவர் மனசு சொன்னபடி கேட்டிருக்கிறார். அவர் ஞான பானு, அறிவுச் சுடர். அந்தச் சுடர் இனி பிரகாசமாக உலகத்திற்கு வெளிச்சம் தரப்போகிறது.

சிவனே அவர்; அவரே சிவன். அவர் வழியிலே அவரை விட்டுவிடுங்கள். அவர்கிட்ட ஒரே ஒரு வரம்தான் கேட்கப் போறேன்....அவரோட பூர்வாசிரம மனைவியாய்.

ஊருக்குள்ள நுழையப் போகிறார். வாங்க போவோம்......' என்று தெளிவாக, உறுதியாக அந்தப் பெண்தெய்வம் பேசியது.

அந்தப் பெண்தெய்வம் என்ன வரம் கேட்டது ?

"எத்தலமு மிதற்கிணையா விலையென்ன வேழுலகு
நித்தலுங்கொண் டாடுவது நேயமுறக் குழீஇத்தேவர்
புத்தமிழ்தாங் கவிப்புலவர் புகழ்வதுபொன் னிதழிபுனை
யத்தனுறை திருப்பதியா மரிமழத்தை யடுத்ததுவே!"

ஜானகி அம்மாள் இவ்வளவு எடுத்துரைத்தும், ராமசுப்பையர் அவர்களுக்கு ஒரு நப்பாசை இருந்தது.

சுந்தரருக்கு ஆதிநாட்களிலிருந்தே நண்பர்களாய் இருக்கும் ராமசாமி சிவன், நீலகண்ட சிவன் ஆகியோர் மூலமாக சுந்தரரின் மனதை மாற்றி, துறவறத்தை விடுத்து இல்லறத்தின்பால் திருப்பிவிட முடியும் என நம்பினார். சுந்தரசிவனாக இருந்தபோது அவருக்குக் கீழ்ப்படிந்து மரியாதை கொடுத்துப் பழகியவர்கள் அவர்கள்.

ஆயினும் அறிவிற் சிறந்தவர்கள்; வேத பரம்பரையில் வந்தவர்கள். அவர்கள் மூலம் முயற்சித்தால் சுந்தரரின் மனம் மாறி, யாவும் நலமாக அமையும் என்று எண்ணினார்.

வேங்கட சுப்பையரிடமும் தனிமையில் தன் கருத்தைக் கூறினார்.அவரும் 'ஈஸ்வரன் செயல்படி நடக்கட்டும்' என ராமசுப்பையர் கூறியதை ஏற்றுக்கொண்டார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இவர்கள் அனைவரும் வீட்டிலிருந்து கிளம்ப ஆயத்தமான பொழுது வீதியில் ஒரே ஆரவாரம், பக்த கோஷம்.

இவர் வீட்டின் வாசல் வந்ததும் அவை நின்றன.

அனைவரும் வெளியில் வந்தனர்.

திடீரெனத் தன் குழாத்துடன் ஸ்ரீசுந்தரஸ்வாமிகள் வீட்டின் உள்ளே நுழைந்தார்.

ஸ்வாமிகளைக் கண்டதும் வீட்டிலிருந்தவர்களின் கண்கள் குளமாயின.

ஜானகியின் கண்களில் மட்டும் ஆனந்தபாஷ்பம்.

ஸ்ரீஸ்வாமிகளின் முந்தைய உருவத் தோற்றத்திற்கும், இன்றைய உருவத்தோற்றத்திற்கும் உள்ள வேறுபாடுகள் அவர்கள் மனதிலே எழுந்து சொல்ல முடியாத பயப்பிராந்தி பந்தாய் நெஞ்சை அடைத்தது. அவர்களின் முகங்களில் கலவரம் தாண்டவமாடியது.

ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளின் முகமண்டலமும், ஜானகியின் முகமண்டலமும் தான் புன்சிரிப்புடன் தெய்வீகமாய் விளங்கின.

சுந்தரர் அவர்களைப் பார்த்து எந்தவித உணர்ச்சியும் இல்லாத குரலில், 'இந்த வீட்டின் திண்ணையிலிருந்தே என் பிரவசனங்கள் நடைபெறும். என் முதல் சிஷ்யையான ஜானகி விரிவுரைக்கான ஸ்லோகங்களைப் படிப்பாள்' என்று ஜானகி அம்மையார் கேட்க நினைத்ததை –முதல் சிஷ்யை எனும் அந்தஸ்தை–அவரே வழங்கினார்.

வீட்டின் திண்ணையில் அமர்ந்தார்.

சுந்தரர் பிரவசனத்தை ஆரம்பித்தார். தக்க இடங்களில் பொருத்தமான ஸ்லோகங்களைத் தங்குதடையின்றி வாசித்தார் ஜானகி.

ஒவ்வொரு நாளும் பிரவசனமும், ஸ்லோகம் படிப்பதுவும் சிறப்பாக அமைந்தன.

ஒருநாள்......



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பத்தமடை வீட்டுத் திண்ணையில் ஒருமுக்கியமான விஷயத்தை விவரித்துக் கூறிக்கொண்டிருந்தார் ஸ்வாமிகள்.

திடீரென எழுந்தார்.

அரையாடையையும்,அரைஞாண் கயிறையும் உருவி எறிந்தார். மிக வேகமாக நடந்து பத்தமடையையும், கோடக நல்லூரையும் இணைக்கும் தாமிரபரணி ஆற்றை நோக்கி விரைந்தார்; நாணற்காட்டிலே புகுந்தார்;காட்டினுள் மறைந்தார்.

இக்காட்சியைக் கண்ட வேங்கடசுப்பையர், மாமி, ராமசுப்பையர் அவர் மனைவி மற்ற உறவினர்கள், ஊரார்கள் ஆகியோர் கண்களில் கண்ணீர் சோர, செய்வதறியாது திகைத்து நின்றனர்.

ஜானகி அம்மையார் மட்டும் எதுவுமே நடவாதது போல தாம் படித்த ஓலைச்சுவடிகளை ஒழுங்காக கட்டிவைப்பதில் முனைந்திருந்தார்.

சுந்தரரின் செயலைக்கண்ட ஊர்மக்கள் அவருக்கு புத்திசுவாதீனக் கோளாறு ஏற்பட்டு விட்டதோ என எண்ணினர்.

கூட்டத்தில் சிலர் அவர் பின்னே வேகமாய் ஓடினர்.

அவர் வேகத்திற்கு இவர்களால் ஈடுகொடுக்க முடியுமா என்ன?

விடுவிடு என நாணற்காட்டில் நுழைந்தவரைப் பின்தொடர எவருக்கும் தைரியம் இல்லை.

சுந்தரஸ்வாமிகள் எந்தவிதத் தயக்கமோ, பயமோ இன்றி நாணற்காட்டில் நுழைந்தார்.

நாமும் ஸ்ரீஸுந்தரஸ்வாமிகள் திவ்விய சரிதத்தின் முதல்பாகத்தை நிறைவு செய்து முக்கியமான இரண்டாம் பாகத்தில் நுழைகிறோம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"தன்னிகரி லிந்நதியின் றன்மைதெரிந் தளவுரைத்தாந்
துன்னுபுகழ் மிகமேவுஞ் சுவேதகே துப்பெயர்கொண்
டன்னனரி மழநாதன் மலரடியை வழுத்துகதை
தன்னையுஞ்சொல் லுதுமிறைவன் றன்னருளா லெனப்புகல்வான்."

ஸ்ரீஸ்வாமிகளின் செயலைப் பார்த்தவர்கள், அவருக்கு சித்தம் பிறழ்ந்து விட்டதோ என நினைத்தனர். ஆனால், பிரசங்கம் எப்போதும் போல் தங்குதடையின்றி அமைந்ததே! தெள்ளிய நீரோடைபோல், ஆழ்ந்த கருத்துக்களுடன் இருந்ததே! பின்னர் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறார்? என சிந்தனை வயப்பட்டனர்; துடித்தனர்.

விரைந்து ஓடும் அவரைப் பிடித்திழுத்துப் பத்தமடைக்கு திரும்பலாம் என்ற எண்ணத்தில் பின்னே ஓடினர். ஸ்ரீஸ்வாமிகள் வாயுவேகம் மனோவேகமாக ஓடி நாணற் காட்டிற்குள் ஓடி ஊராரின் கண்களிலிருந்து மறைந்தார்.

அந்தப் புதர்க்காட்டிற்குள் செல்ல எவருக்கும் தைரியம் வரவில்லை. இவர்களுடைய மனம் ஸ்வாமிகளின் நிலைக்கு ஒப்பானதல்லவே!

அதற்குள் நுழைய அஞ்சிய அவர்கள் ஊர் திரும்பினர்.

'பசி எடுத்தால் சாப்பிட வெளியில் வந்துதானே ஆக வேண்டும்' என்ற எண்ணத்தில் கலைந்து சென்றனர்.

இந்த நிகழ்ச்சி நடந்தபோது ஸ்ரீஸ்வாமிகளுக்கு பதினைந்து வயது ஒன்பது மாதம்.

சுத்தமல்லியில் வித்வத் சந்நியாசம் ஏற்றது ஆவணி மாதத்தின் முற்பகுதி. இப்போது ஆவணிமாதத்தின் பிற்பகுதி.

ஜானகி அம்மையாருக்கு சரியாகப் பன்னிரண்டு வயது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரஸ்வாமிகள் நாணற்காட்டிற்குள் புகுந்ததும் ஜானகி அம்மாள் மற்றும் குடும்பத்தினர், உறவினர்கள் உடனே புறப்பட்டு கோடகநல்லூர் வந்தனர்.

சுந்தரஸ்வாமிகள் வெளியே வந்ததும் நல்லவார்த்தைகள் கூறி 'ஜானகி சிறுபெண். அவளை நீ கைவிடலாகாது. நடந்ததை எல்லாம் கெட்ட கனவாக மறந்துவிட்டு இல்லற வாழ்க்கையை மேற்கொள்' என்று அறிவுறுத்த வேண்டும் என்று ராமசுப்பையர் உறுதி கொண்டிருந்தார்.

ராமசாமி சிவன், நீலகண்ட சிவன் மற்றும் ஊர்ப் பெரியவர்களிடம் தம் எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

அவர் கூறியது முறையாக இருந்ததால் ஊர்ப்பிரமுகர்கள் அவர் கோரிக்கையை நிறைவேற்ற ஒத்துழைப்பதாக உறுதி கூறினர்.

கோடகநல்லூர் நாணற்காட்டைப்பற்றி ஏற்கனவே நாம் பார்த்துள்ளோம். ஆளை மூழ்கடிக்கும் புதைசேறுகளும்,கொடிய விஷஜந்துக்களும், ரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளும்,உடலிற்கு ஊறுவிளைவிக்கும் பூரான், தேள், நட்டுவாக்கலிகளும், உடலை கம்பளியால் போர்த்தியதைப்போல் அடைஅடையாய்ப் படையெடுத்துத் தாக்கும் தேனிக்களும்.....நிறைந்த காடு.

எனவே,

'எத்தனை நாட்கள் அல்லது நாழிகை சுந்தரரால் அங்கே பயமில்லாமல் இருக்க முடியும் ?எங்கே உட்காருவார் ?எங்கே படுப்பார் ?பயந்துகொண்டு சீக்கிரம் வெளியே வந்துவிடுவார்.' என்று காத்திருந்த மக்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

ஒரு சிலர் வேடிக்கை பார்க்கும் நோக்குடன் பெருங் கூட்டமாகக் கூடிவிட்டனர்.

சிலர் சுந்தரருக்கு புத்தி சொல்ல வேண்டும் என்ற நோக்குடனும்,மற்றும் பலர் வேடிக்கை பார்க்கும் குதூகலத்துடனும் நாணற்காட்டின் வெளியே காத்திருந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இவர்கள் எண்ண ஓட்டங்கள் இவ்வாறிருக்க, ஸ்ரீசுந்தரஸ்வாமிகளின் அனுக்கிரகத்தால் தபசும், நிஷ்டையும் கை கூடிய ஜானகி அம்மையின் செயல்பாடு வேறுவிதமாக இருந்தது.

நல்லவற்றை இந்த மக்களுக்கு உபதேசிக்க வேண்டும், நற்காரியங்களையே செய்யவேண்டும் என்று அவதார புருஷராய் வந்துள்ள ஸ்ரீசுந்தரரின் சரீரத்தில் ஜீவன் தங்கி இருக்க வேண்டும் என்பதற்காக சிறிது உணவை தயாராக வைத்துக்கொண்டு காத்திருந்தார்.

அவர் வெளியே வந்ததும் அவருடைய நிஷ்டானுபூதிக்காக சற்றுபலம் வேண்டும் அல்லவா? அதற்காக இந்த உணவை ஏற்றுக்கொள்ள வரவேண்டும்' என்ற பிரார்த்தனையுடன் காத்திருந்தார்.

அவருடைய பிரார்த்தனை நிறைவேறியதா?

"நாயகற்கு முன்னெழுத லாதிபின்ன ருறங்கல்கடை
நண்ணு முந்நான்
கேயவகைக் குணங்களுறீஇ யீசனெனக் கணவனையே
யெண்ணிப் போற்றிப்
பாயபணிக் கஞ்சாம லருந்ததியே பல்வேறு
படிவங் கொண்டு
தூயவரி மழத்தடைந்தா லெனநிறைவர் கற்புடைய தோகை
மார்கள்."

அனைவரும் தாமிரபரணி படித்துறையில் காத்திருந்தார்கள்.
ஒரு நாளாயிற்று.
ஸ்வாமிகள் நாணற்காட்டிலிருந்து வெளிவரவில்லை.
இரண்டு நாட்கள் சென்றன.
நாணற்காட்டில் மனிதர் அசைவதற்கான எந்த அறிகுறியும் தோன்றவில்லை.


Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கரையோரம் இருந்தவர்கள்,உள்ளே சென்றவர் புதைசேற்றில் மாட்டிக்கொண்டோ, விஷஜந்துகள் கடித்தோ இறந்திருப்பார் என நினைத்தனர்.

உறவினர்கள் மிகுந்த பதைபதைப்புடனும்,சொல்லொணா வேதனையுடனும் ஒவ்வொரு நொடியையும் ஒரு யுகமாகக் கழித்தனர்.

மூன்றாவது நாளும் வந்தது.

நாணற்காட்டில் இருந்து ஸ்வாமிகள் வெளிவரவில்லை.

'அன்ன ஆகாரமின்றி மூன்று நாட்கள் எவ்வாறு ஒருவர் உயிரோடு இருக்க முடியும்? பசியும், தாகமும் எந்த உடலிற்கும் இயல்பாயிற்றே.இத்தகைய சோகத்திற்கு நடுவிலும் வீட்டில் சிறிதேனும் அன்ன ஆகாரம் எடுத்துக் கொண்டுதானே இருக்கிறோம். ஆகாரமின்றி பதினாறு வயதுகூட நிரம்பாத பாலகனின் உடல் எவ்வாறு பசியைத் தாங்கும்?' என்று உறவினர்கள் ஐயுற்றனர்.

மூன்று நாட்கள் காத்திருந்த சாதாரண மக்கள் கூட்டம் மெல்ல மெல்லக் கலைந்து சென்றது.

ஜானகி அம்மாவோ தானும் அன்ன பானம் அருந்தாமல் விரதம் காத்தார். நாணற்காட்டில் இருந்து வெளியே வந்து,தான் சமைத்து வந்த பத்திய உணவை – பிரசாதத்தை ஸ்ரீஸ்வாமிகள் ஸ்வீகரிக்கும்வரை (ஏற்றுக் கொள்ளும் வரை) தானும் எதையும் உண்பதில்லை என்று உறுதியாக இருந்தார்.

தினமும் பத்திய உணவுடன் பதியைநினைந்து ஆற்றின் படித்துறையில் காத்திருந்தார்.

இதைக் கண்ட ஊரார் இரண்டு நாட்கள் ஜானகி அம்மையார் மேல் இரக்கப்பட்டனர்.

மூன்றாம் நாள் 'பைத்தியக்காரி' என்று எள்ளி நகையாடினர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சத்தியத்தையும்,நேர்மையையும்,சந்நியாச விரதத்தை உறுதியுடனும் பின்பற்றுபவர்களுக்கு உலகம் வழங்கும் பட்டம் இதுதானே!

இவர்களை ஜானகி அம்மையார் சிறிதும் கண்டு கொள்ள வில்லை. இவர்களைப் பற்றிக் கவலைப்படவும் இல்லை.

இரவும்,பகலும் நாணற்காட்டையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

உறவினர்களும், ஊர்மக்கள் சிலரும் உடன் இருந்தனர்.

நான்காம் நாளும் மெல்ல நகர்ந்தது.

இதுநாள்வரை நாணற்காட்டில் வண்டுகளின் ரீங்காரமும், அணில், ஓணான், பாம்புகள் ஓடும் சலசலப்பு, இதுபோன்ற சப்தமின்றி வேறு ஒலி எதுவும் கேட்கவில்லை.

ஐந்தாம் நாள்........

காலை பத்துமணி அளவில் நாணற்காட்டின் நடுப்பகுதியில் கிடுகிடுவென வேகமாய் யாரோ நடந்து வருவது போன்ற சப்தம் கேட்டது.

யார் வருகிறார் என்று ஆளின் உருவம் தெரியாவிட்டாலும் ,நாணலின் அடர்த்தி அங்கும்,இங்கும் அசைவதிலிருந்து வருவது மிருகமல்ல மனிதர்தான் எனத் தீர்மானித்தனர்.

நாணற்காட்டில் இருந்து வெளியே வந்தது யார்?

“புலரேமு னெழுந்து நித்திய கருமம்
புகல்விதி முறைப்படி புரிந்து
பலகலை யாய்ந்து பரனைவந் தித்துப்
பரிவின ருடனமு தருந்தி
நிலவுல கினுக்குத் தெய்வத மாகி
நின்றுமா மழைக்கொரு வித்தாய்
மலரவன் முகத்துற் பவித்தவர் மகிமை
வழுத்திட யாவரே வல்லார்.”



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நாணலானது விலகி இடைவெளிவிட்டு அசையும் தன்மையிலிருந்து சுந்தரஸ்வாமிகள்தான் வருகிறார் என்று கரையில் இருந்தவர்கள் ஊகம் செய்தனர்.

உடனடியாக அவர்கள் வீடுகளுக்கு ஓடி பாலும், தேனும், கற்கண்டும் , சுத்தான்னமும், காய்கறியமுதும் எடுத்து வந்தனர்.

ஆம்!

வந்தது ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள்தான்.

நாணற்காட்டின் மத்தியிலிருந்து வெளிப்போந்து தாமிரபரணி படித்துறையில் படி ஏறினார்.

அவதூதராக!

ஊர்மக்கள் அவர் காலடியில் சாப்பாட்டு வகைகள், பக்ஷண, பழங்களைச் சமர்ப்பித்தனர்.

ஜானகி அம்மாள் அன்று வெண்பொங்கலும்,சிறிது வெல்லம் தேங்காய்த் துருவல் கலந்து எடுத்து வந்திருந்தார்.

ஸ்வாமிகள் வெண்பொங்கலில் இரண்டு பிடியும், சிறிது வெல்லம் கலந்த தேங்காயையும் எடுத்து மென்று உண்டார்.

ஊர்மக்கள் ஏமாற்றம் அடையக்கூடாது என்பதற்காக அவர்கள் கொண்டு வந்த உணவுப் பதார்த்தங்களை திரும்பி எடுத்துப் போகச் சொல்லாமல் ஒரு சிறு பகுதியை ஏற்றுக் கொண்டார்.

மீதமுள்ளதை வாங்கி தாமிரபரணி ஆற்றில் துள்ளிக் கொண்டிருக்கும் மீன்களுக்கு உணவாக்கினார்.

சுந்தரஸ்வாமிகள் நாணற்காட்டில் இருந்து வெளியில் வந்ததில் அனைவரும் மகிழ்ச்சி கொண்டனர். (மீண்டும் நாணற்காட்டிற்குள் செல்ல மாட்டார் என்பது அவர்கள் நினைப்பு.)

படித்துறையில் அமர்ந்து சற்றுக் களைப்புத் தீர்ந்ததும் அருகிலுள்ள ஸ்ரீசங்கர மடத்திற்கோ அபிமுக்தீஸ்வரர்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கோயிலுக்கோ ஸ்வாமிகளை அழைத்துச்செல்ல அவரின் பூர்வாஸ்ரம மாமாவும், மாமனாரும் மற்றும் ஊர் பிரமுகர்களும் எண்ணினர். அங்கே அழைத்துச் சென்று 'நல்ல அறிவுரைகள் கூறி' ஜானகியுடன் மீண்டும் இல்லறவாழ்வில் இணைத்துவிட விரும்பினர்.

இவர்கள் எண்ணம் இந்த வழியில் ஓடிக்கொண்டிருக்க ஸ்வாமிகள் படித்துறையிலிருந்து எழுந்தார்; நின்றார். குறிப்பாக எவரையும் நோக்காமல் கூறினார்:

'இனிமேல் இங்கு கூட்டம் போடவேண்டாம். அவரவர் வீடுகளுக்குச் செல்லுங்கள். ஆகாராதிகள் தேவை என்றால் தக்க சமயத்தில் வெளியே வந்து ஏற்றுக் கொள்வோம். இனி எம் பொருட்டு எவரும் உபவாசம் இருக்கக் கூடாது.

ஈஸ்வரன் கட்டளையை ஏற்றே யாம் அவதூதனானோம். சிறிய இடைஆடையும்,அரைஞாண் கயிறுமே எமக்குப் பெரும் சுமையாய் இருந்தன.

ஈஸ்வர ஆக்ஞைப் பிரகாரமே இந்த நாணற்காட்டில் புகுந்தோம் .இன்னும் நான்கு மாதங்கள்வரை இந்த நாணற்காட்டில் வசிக்கும்படி உள்ளழைப்பு வந்துள்ளது.

எம் உடலிற்கு துஷ்ட மிருகங்களோ, விஷ ஜந்துக்களோ எந்த ஊறும் விளைவிக்க முடியாது. இவைகள் எல்லாம் எம்மிடம் பிரியமாகவே நடந்து கொள்ளும். யாம் நல்ல காரியத்தில் ஈடுபட்டு தவம் செய்யப் போகிறோம். எல்லாரும் க்ஷேமமாக இருங்கள்' என அனைவரையும் ஆசிர்வதித்து விட்டு

ஜானகி அம்மையாருக்கு அனைவரின் முன்னிலையிலும் இரண்டு உபதேசக் கருத்துக்களை வலியுறுத்திக் கூறினார்.

அவை என்ன கருத்துக்கள் ?

"சிவகதை கேளாச் செவிமரப் பாவைச் செவியன்றி
செவியுள தன்று



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சிவகதை யுரைப்பார்க் குதவிலார் செல்வஞ்செல்வமென்
றுரைத்திடுநீ தெய்வச்
சிவகதை படியார் கலையறி வாய்ந்து செப்பிடிற்
கலையறி வாஞ் சீர்ச்
சிவகதை நூலைப் பூசியா ரெடுத்த சென்மமுஞ்
சென்மமன் றறிவீர்."

"பஞ்சாக்ஷர ஜபத்தையும், ஸூதஸம்ஹிதை பாராயணத்தையும் விடாமல் செய். இடரினும், தளரினும் இவற்றை விட்டுவிடாதே.

எம் பொருட்டு அன்னம் எடுத்துக் கொள்ளாமல் பட்டினி கிடக்காதே. மீண்டும் எப்பொழுது வெளியில் வருவோம் என்று தெரியாது."

என்று சுருக்கமாக ஜானகி அம்மாவிடம் புகன்றுவிட்டு, மற்றவர்கள் எதுவும் பேசுவதற்கு முன் தடதடவென்று தண்ணீரில் இறங்கி நாணற்காட்டின் நடுப்பகுதிக்குச் சென்று விட்டார்.

உறவினரும், ஊராரும் கவலை தோய்ந்த முகத்துடன் கலைந்து சென்றார்கள்.

கோடகநல்லூரில் ராமசாமி ஐயர் வீட்டில் அமர்ந்துகொண்டு அனைவரும் கலந்தாலோசித்தனர்.

வேங்கடசுப்பையர், ராமசுப்பையர் ஆகியோர் ஊரிலிருந்த சாஸ்திர பண்டிதர்கள், வேதவிற்பன்னர்கள் அந்த ஆலோசனையில் கலந்து கொண்டனர்.

'சாதாரணமாக பகுத்தறிவில்லாத ஆடு,மாடுகள் போன்ற ஜந்துக்கள் நுழைய அஞ்சும் நாணற்காட்டில் இன்னமும் நான்கு மாதங்கள் இருக்கப் போவதாகச் சொல்கின்றானே,இது இயலுமா? நினைக்கும் போதே மனசு அஞ்சுகிறதே! நெஞ்சமெல்லாம் நடுங்குகின்றதே!



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இந்தச் சிறுவயதில் எப்படித்தான் அந்த பயங்கரமான நாணற்காட்டில் இருக்கப் போகின்றானோ? அல்லும் பகலும் உடம்பை வருத்திக் கொண்டு என்ன சாதிக்கப் போகிறானோ?' என்று கவலையுடன் ஊர்மக்களிடம் முறையிட்டார் ராமசுப்பையர்.

எல்லோருக்கும் சுந்தரர் இளம் வயதுடையவராயிற்றே, அன்ன ஆகாரமின்றி பசியைத் தாங்கிக்கொள்ள முடியுமா?

ஞான பரிபக்குவமும், யோக சித்தியும் அடைந்தோருக்குக் கூட இது கடினமாயிற்றே!

இவரை மீண்டும் இல்லற வழிக்குத் திரும்பவும் கொண்டு வருதல் எங்ஙனம்?' என்று சுந்தரரின் மாமாவும்,ஜானகி அம்மையாரின் தந்தையும் பேசிப்பேசிக் களைத்துப் போயினர்.

சுந்தரரின் மாமா வேங்கட சுப்பையரோ

'சுந்தரத்திற்குத் திருமணம் செய்து வைத்து அந்த சின்னப்பெண் ஜானகியின் பாவத்தை ஏற்றுக்கொண்டு விட்டோம். சிறுபெண்ணின் இல்வாழ்க்கையை வீணாக்கி விட்டோம்' என்று ஏங்கித் தவித்துக் கூறினார்.

'சுந்தரன், தண்டு கமண்டலத்துடன் சந்நியாசம் பெறவில்லை. தாயார் தகப்பனாருக்குச் சமதையாய் உள்ள மாமி, மாமாவின் சம்மத்துடன் துறவு பூணவில்லை. திருமணம் ஆகிவிட்டதால் மனைவியின் சம்மதத்துடனேயே துறவு பூண வேண்டும். முறையான தீக்ஷையும் பெறவில்லை. எனவே இந்தத் துறவு செல்லுமா என்பதே கேள்விக்குரியது. ஏதோ ஒரு பிரமையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சந்நியாசம். இவ்விளவயதில் எல்லாவற்றையும் வெறுத்து அவதூதனாகி உள்ளான். அவனுடைய துறவும், அவதூத ஆச்ரம நிலையும் நெறிமுறைக்கு மாறானவை என்று எடுத்துச் சொல்வோம். பெரியவர்கள் நாம் அனைவரும் சேர்ந்து அவன் மனத்தை மாற்றி கிருஹஸ்தாஸ்ரமத்தில் ஈடுபடச் செய்வோம். சுந்தரத்தின் மனோநிலையை நாம் பிடிவாதம் பிடித்தேனும் மாற்றி விடுவோம்.' என்று உறுதிபடப் பேசினார் ராமசுப்பையர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பாவம்! பெண்ணைப் பெற்றவராயிற்றே!

ஊர்ப் பெரியவர்களும் அவர்களுடன் ஒத்துழைப்பதாகக் கூறி விடைபெற்றனர்.

ஜானகி அம்மையாரோ இந்தப் பேச்சுக்களுக்கு செவி கொடுக்காமல் பூஜை அறையில் பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருந்தார்.

ஜானகியின் பெற்றோர் மகளை அழைத்துக் கொண்டு அடைச்சாணி செல்வதாகக் கூறினர்.

வேங்கட சுப்பையர் தம்பதிகளும் ஜானகியை அழைத்துச் செல்ல அனுமதி கொடுத்தனர்.

ஆனால் ஜானகி அம்மையார் அடைச்சாணி வருவதற்கு மறுத்து விட்டார்.

ஏன் மறுத்தார்?

"சிவகதை யன்பாச் செவிவழிக் கேட்டோர் செல்வமுற்

றளவிலாண் டிருந்து

சிவபத மடையுஞ் செவிவழி யறிவர் தேவரா

தியர்துதித் திடுஞ்சீர்ச்

சிவகதை படிப்பார் படிப்பவர்க் குதவி செய்தவர்

பூசைசெய் திடுவோர்

சிவபர னாணை நமன்கதை காணாத் திருவரு

ளுடைய ராய்த் திகழ்வர்."

ஜானகி அம்மாள் பெற்றோருடன் அடைச்சாணி செல்ல விரும்பவில்லை.

'என்னுடைய பதியாகியவரும்,ஞான சாதனத்திற்கும், உபதேசத்திற்கும் குருவான அந்த தபஸ் நிறைந்த தெய்வத்திற்கு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இந்த அடியாள் செய்ய வேண்டிய தொண்டுகளை நான் கடமை உணர்ச்சியுடன் செய்ய வேண்டி உள்ளது.

அவர் எப்போதாகிலும் நாணற்காட்டில் இருந்து வெளி வரலாம். அப்பொழுது அவருக்கு அன்னம் அளிப்பது என் தலையாய பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை விட்டுவிட்டு உங்களுடன் வரமுடியாத சூழ்நிலையில் இருக்கிறேன். எனவே உங்களுடன் வர இயலாது.மன்னித்து விடுங்கள்' என்று பணிவாகக் கூறினார்.

பெண்ணைத் தனியேவிட மனம் இடங்கொடுக்கவில்லை பெற்றவர்களுக்கு. கோடகநல்லூர் அக்கிரஹாரத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு மூவரும் அங்கேயே தங்கி வரலானார்கள்.

பத்தமடையிலிருந்து வேங்கட சுப்பையரும் அவர் பத்தினியும் வாரம் இருமுறை கோடகநல்லூர் வந்து சென்றனர்.

ஜானகி அம்மாள் முகத்தில் மந்தஹாசத்துடன் எவ்விதக் கவலையுமின்றி ஒரு தபஸ்வினியாய்த் தன் கடமைகளைச் செய்து வந்தார்.

அவர் ஒவ்வொரு நாளும் சுந்தரருக்கு வேண்டிய உணவு வகைகளைத் தயாரித்துக் கொள்வார். காலை ஒன்பது மணியிலிருந்து இரவு எட்டுமணிவரை தாமிரபரணி படித்துறையில் காத்திருப்பார். ஆவலுடன் அவர் வரவை எதிர்பார்த்திருப்பார்.

அப்படிக்கட்டிற்கு அதிகமாக எவரும் வந்து செல்வதில்லை. படிக்கட்டிலே ஒன்றரை அடிஅகலமும், இரண்டடி நீளமும் உள்ள ஒரு நார்மடியை விரிப்பார்.

அதில் பத்மாசனத்தில் அமர்வார்.

ஒரே மனதுடன் பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருப்பார்.

ஜபம் உருவேறி ஏறி அவரின் மனம் நல்ல உறுதிப்பாட்டை அடைந்தது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வீட்டில் இருக்கும் போது தம்மை அண்டிவரும் பெண்களுக்கு அவர்கள் மனதில் பதியும்படி வேதாந்த மார்க்கங்களையும், ஸூதஸம்ஹிதையையும் போதிப்பார். ஜானகி என்ற தபஸ்வினியை நோக்கி இரவும்,பகலும் பலபெண்மணிகள் சூழ்ந்து கொண்டிருப்பர்.

இரவு எட்டுமணிவரை சுந்தரர் நாணற்காட்டில் இருந்து வெளிவரவில்லையாயின் வீட்டிற்குத் திரும்புவார்.

பொறுமை, சாந்தம், அடக்கம், ஆசாரம், நெறி ஆகியவற்றின் ஒட்டுமொத்த உருவமாய் விளங்கினார்.

ஒவ்வொரு நாளும் சிறிது வர்க்கான்னம்,சிறிது தயிரன்னம், வாழைப்பழம், முந்திரிப்பருப்பு, திராக்ஷை இவைகளை எடுத்துச் செல்வார்.

இவருடைய நிலையைக்கண்டு ஊர்ப்பெண்கள் இரக்கம் கொண்டனர்.

சிலநாட்கள் சுந்தரர் நாணற்காட்டில் இருந்து வெளிவருவார். சிறிது ஆகாரத்தை உண்டுவிட்டு நாணற்காட்டில் நுழைந்து விடுவார்.

(குறிப்பு:ஸ்வாமிகள் நாணற்காட்டில் புகுந்த முதல் ஒரு மாதத்தில் பத்து நாட்களுக்கு ஒருமுறை வெளியில் வந்து உணவு எடுத்துக் கொண்டார்.

இரண்டாவது மாதம் அது பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை என்றானது.

மூன்றாவது மாதம் ஒரே ஒருநாள் மட்டும் உணவை ஏற்றுக்கொண்டார்.

நான்காவது மாதம் ஒருமுறைகூட காட்டிலிருந்து வெளியில் வரவில்லை.

ஆனால் இதுநாள்வரை அவருடைய உடற்கட்டும், தேககாந்தியும், முகபிரகாசமும் சற்றும் வாடவில்லை. மகான் களுக்கே உரித்தான மகிமைகளில் ஒன்று இது.)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரர் சொன்ன நான்கு மாதங்களில் முதல்மாதம் புரட்டாசியில் நடந்த நிகழ்ச்சி.

வழக்கம்போல் உறவினரும், ஊராரும் அவருடைய வருகையை எதிர்பார்த்துக் கரையில் காத்திருந்தனர்.

ஒருநாள்.....

நாணற்காட்டில் சலசலப்பு ஏற்பட்டது.

ஒரு உருவம் வெளிப்பட்டது.

அவர் அல்லது அது யார் ? என்ன ?

"சுத்தபர தத்துவமாய்த் துரியமுடி வாயெவர்க்குஞ் சொல்லற் கொண்ணா

வித்தகமா யத்துவித விளக்கொளியா யாநந்த விளைவாய்ச் சிவன்

முத்தரசு முளரிமிசை முதிர்ந்தொழுகு மருண்மதுவாய் முதலா மூல

வத்தனுமா மப்பரனே யரிமழத்துட் சுந்தரனா வமர்ந்தா னம்மா."

சுந்தரஸ்வாமிகளின் இளம் வயதிலிருந்தே பத்தமடை கிருஷ்ணய்யர், சூரியநாராயண ஐயர்,சங்கரநாராயண ஐயர் ஆகியோர் அவருடைய நெருங்கிய நண்பர்களாக விளங்கினர். சுந்தரன் சொல்லுவதே அவர்களுக்குக் கட்டளை ஆகும்.

சுந்தர சிவனின் பக்தி, பிரசங்கம், பஜனை, ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகிய செயற்பாட்டில் மனதைப் பறிகொடுத்தனர். சுந்தரனின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு ஒழுகுவார்கள். அப்பொழுதே இவர்கள் சுந்தரனின் சீடர்களாகத் தம்மைக் கருதிக் கொண்டனர்.

சுந்தரர் நாணற்காட்டிற்குள் நுழைந்ததும் தமக்குள் கட்டுப்பாட்டுடன் ஒரு கடமையை மேற்கொண்டனர்.

தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள கோடகநல்லூர் படித்துறையில் ஜானகி அம்மையார் ஸ்வாமிகளின்



Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வரவை எதிர்பார்த்து ஆகாரத்துடன் காத்திருப்பதுபோல், வடகரையில் அமைந்துள்ள கரிசூழ்ந்தமங்கலம் நகர் மயானத்தை ஒட்டிய காட்டில் இவர்கள் ஆகாரத்துடன் காத்திருந்தனர்.

மயானப் பக்கம் உள்ள சுடலைமாடன் கோயிலின் வழியே ஸ்வாமிகள் வந்தால் அவருக்கு ஆகாரம் அளிக்க. சிலசமயம் சுந்தரரின் தமையன் குப்பாணிசிவமும் இவர்களுடன் சேர்ந்து கொள்வார்.

இது ஒவ்வொரு நாளும் நடக்கும் நடைமுறையாகும்.

ஸ்வாமிகள் ஒவ்வொரு முறையும் கோடகநல்லூர் நாணற்காட்டில் இருந்தே வெளியில் வந்தார்.

நாணற்காட்டில் கோடகநல்லூர் பக்கம் சலசலப்பு சப்தம் கேட்டவுடன் விரைந்து ஆற்றைத்தாண்டி அக்கரை சென்று விடுவார்கள்.

அவர்களுக்கு சுந்தரனிடம் அப்படி ஒரு அசைக்க முடியாத பக்தி.

அவருக்கு ஒரு இடர்ப்பாடு என்றால் தாங்க மாட்டார்கள். அவருடைய பாதுகாவலர்கள் போலவே செயல்பட்டார்கள்.

ஒருசமயம்.....

அனைவரும் கோடகநல்லூர் படித்துறையில் காத்திருந்தனர்.

சுந்தரரின் நண்பர் குழாத்தினரும் நாணற்காட்டில் கோடகநல்லூர் பக்கம் சப்தம் கேட்டவுடன் மிக வேகமாக ஆற்றைக் கடந்து அக்கரை சென்று ஜானகி அம்மா மற்றும் ஊரினருடன் சேர்ந்து கொண்டனர்.

அடர்ந்து படர்ந்து ஓங்கி வளர்ந்திருந்த நாணற்காட்டில் இருந்து கன்னங்கரேலென்று ஒரு உருவம் வந்தது.

இருட்டைப்போன்ற கடும்கருமை நிறமுடைய அந்த உருவம் படித்துறையை நோக்கி நாணற்கற்றைகளை மிகக் கவனமாக விலக்கிக்கொண்டு வந்தது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஒருகால் அது கரடியாய் இருக்குமோ என்ற ஐயம் அனைவர் மனதிலும் எழுந்தது.

'கரடி ஊருக்குள் நுழைவதற்கு முன்பு பெண்கள் அனைவரும் வீட்டிற்குச்சென்று பூட்டிக்கொண்டு குழந்தைகளுடன் பத்திரமாய் இருங்கள். ஆண்கள் சங்கரமடத்திற்குச் செல்வோம். கதவைத் தாழிட்டுக் கொண்டு உள்ளே இருப்போம். தாமதியாது அனைவரும் கிளம்புங்கள்' என்று ராமசாமி ஐயர் மடமடவென உத்தரவு பிறப்பித்தார்.

ஜானகி அம்மையாரையும் உடனே கிளம்பும்படி கேட்டுக் கொண்டார்.

ஆனால் மற்றவர்களைப் போல் பதட்டத்திற்கு ஆளாகாமல் தன் மனதில் பட்டதைக் கூறினார்.

என்ன கூறினார் ?

பார்ப்போம்.

"சிவகதையே சரியைமுதற் சிவஞானம் வரைதெரிக்குஞ்
செல்வப் போதஞ்
சிவகதையே நாற்பதத்திற் செல்லுநெறி முறைகாட்டுந்
தீபமேலாஞ்
சிவகதையே நினைத்தவெலாஞ் சித்திக்க வருள்புரியுந்
தேவதாரு
சிவகதையே யிகபரந்தந் தளவில்சுகத் திருத்திவைக்குந்
தெய்வ மாகும்."

❀❀❀❀❀

நாணல் விலகும்போது அதன் இடைவெளியில் கடும் கருமைநிறைந்த ஒருஉருவம் படித்துறை நோக்கி வருவது தெரிந்தது.

அதைக்கண்டு கரையில் இருந்தவர்கள் பயந்தனர்.

ராமசாமி ஐயர் அனைவரையும் அங்கிருந்து விரைவாகக் கிளம்பச் சொன்னார்.

சுந்தரரின் நண்பர்கள் தவிர மற்றவர்கள் வேகவேகமாக வீடு நோக்கி ஓடினர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஜானகி அம்மா இருந்த இடத்தைவிட்டு அசையாது இருந்தார்.

ராமசாமி ஐயர், 'சீக்கிரம் கிளம்புமா. ஏன் தாமதிக்கிறாய்?' என்றார்.

ஜானகி அம்மா அவர் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் பயமில்லாமல் நின்றார்.

ராமசாமி ஐயரைப் பார்த்துக் கூறினார் : 'மாமா! உருவம் என்னவோ கரடிபோலக் கருப்பாகத் தெரிகிறது. மிருகமானால் நாணல்களை இவ்வளவு ஜாக்கிரதையாகவும்,சாவகாசமாகவும் விலக்கிக் கொண்டு வராது. ஸ்வாமிகள் தான் ஏதோ ஒரு உருவில் வருகிறார் என்று என் உள் மனத்தில் தோன்றுகிறது.'

தூரத்தில் பார்க்கும்போது ஏதோ ஒரு உருவம் கருப்பு அடர்ந்த ஒரு கம்பளியைத் தலைமுதல் கால்வரை மூடப்பட்டதுபோல் காட்சி அளித்தது. அந்தக் கம்பளி கால்களை மறைக்கும் கால்சட்டை போலவும், உடல் மற்றும் கைகளை மறைக்கும் முழுக்கைச் சட்டை போலவும், பனிக்காலத்தில் தலையையும், கழுத்தையும் மறைக்கும் குல்லா போலவும் உருவத்தை முழுவதும் மறைக்கும்படியாகத் தோற்றமளித்தது. இவை ஒவ்வொன்றும் தனித்தனியாக இல்லாமல் ஒன்றாகச் சேர்த்துத் தைத்த ஒரே ஆடைபோல் விளங்கியது.

உடம்பு முழுவதும் கரியைப் பூசிக்கொண்ட புலி வேஷக்காரனைப் போல் அந்த உருவம் காட்சியளித்தது.

அந்த உருவம் மெல்ல மெல்ல அருகே வந்தது. பத்தடி தூரத்தில் கூட அடையாளம் காண இயலவில்லை.

அந்த உருவம் ஜானகியை நெருங்கி வந்தது. கிட்டே வந்ததும்தான் அந்த உருவம் ஸ்ரீஸுந்தரஸ்வாமிகள் என்பதை உணர்ந்தார்கள்.

வீடு நோக்கி ஓடியவர்கள் சுந்தரர்தான் வந்திருக்கிறார் என்பது அறிந்து திரும்பி வந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்வாமிகளின் கிட்டே வந்து உடலை உற்றுப் பார்த்தார்கள்.

அவர்களுக்கு அவரின் உடலில் என்ன தெரிந்தது?

பார்ப்போம்.

"அக்கால முதலாக வரிமழவூ ரென்றுபெய ரமைந்த தாகி

யிக்காலத் தினும்விளங்கு மிதற்குநிக ரெத்தலமு மில்லை யெங்கு

முக்காலங் களுமுணரு முனிவரரே யிரவியன்பு முடுகி யீர்ப்பப்

புக்காலந் தரித்தகளப் புண்ணியனைப் பணிந்ததுவும் புகல்வா மன்றே."

❀❀❀❀❀

ஸ்ரீசுந்தரஸ்வாமிகள் கருப்புக் கம்பளியால் போர்த்தப்பட்ட உருவ அமைப்புடன் படிகளில் ஏறினார்.

அங்கிருந்தவர்கள், கிட்டே நெருங்கிச் சுவாமிகளின் உடலை உற்றுப் பார்த்தார்கள்.

கருநிறங்கொண்டதும், வேப்பம்பழ விதையின் அளவுள்ளதுமான, கடித்தால் மிக எரிச்சலைத்தரும் ஒருவகையான காட்டு எறும்புகள் அவரை மொய்த்துக் கொண்டுள்ளன என்பதை அறிந்தார்கள். தேனீக்கூடு வெளியே தெரியாதபடி தேனீக்கள் ஒன்றோடு ஒன்று உராய்ந்து நெருங்கி இருப்பதைப் போல அந்தக் காட்டெறும்புகள் சுவாமிகளின் உடல் முழுவதும் – ஊசிகுத்தும் இடைவெளி கூட இல்லாது அப்பி அடர்ந்து மறைத்திருந்தது.

சுவாமிகளின் கண்ணும், நாசித்துவாரமும், காதுத் துவாரமும், உதட்டின் கீற்றும் தவிர வேறெதுவும் புலனாகவில்லை.

இவ்வாறு விஷத்தன்மை கொண்ட கட்டெறும்புகள் சுவாமிகளின் திருமேனியில் அப்பியிருந்ததைக் கண்ணுற்றதும் அனைவரும் பதறிப் போயினர். சுவாமிகளை இந்த எறும்புகள் கட்டாயம் கடித்திருக்கும், வைராக்கிய சீலரான அவர் அந்த வேதனையைத் தாங்கிக் கொண்டுள்ளார் என நெஞ்சம் நெகிழ்ந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அதற்குள் கிருஷ்ணய்யர் தன் மேலங்கியை எடுத்து அதன் தலைப்பின் குஞ்சத்தால் அவ்வெறும்புகளைத் தட்டிவிட ஆயத்தமானார்.

சுவாமிகள் உடனே அவரைத் தடுத்தார்.

'எறும்புகளைத் தொந்தரவு செய்யாதீர்கள். இக்கட்டெறும்புகள் இந்த சரீரத்தின் மீது மிகுந்த அபிமானம் கொண்டு ஏறி இருக்கின்றன.

மக்களுக்கு என்மேல் அன்பு இருப்பதுபோல இவைகளுக்கும் என் சரீரத்தின் பேரில் அன்பு இருக்கிறது.

சிறிது நேரத்தில் தானாகவே இவை விலகிச் சென்றுவிடும். என் மீது அன்பு கொண்ட இந்த எறும்புகளுக்கு நாணற் செடிகளால் ஊறு நேரக்கூடாது என்பதற்காகவே செடிகளை ஜாக்கிரதையாக விலக்கி மெதுவாக வந்தேன்.' என்று சுவாமிகள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்த எறும்புக் கூட்டம் சாரிசாரியாக படிப்படியே தலையிலிருந்து இறங்கி ஆற்றங்கரையின் பக்கமிருந்த மருதமரத்தின் மேல் ஏறியது.

அந்த எறும்புக் கூட்டம் இறங்கிச் செல்ல ஐந்து நிமிடங்களுக்கு மேலாகியது.

அவை, முழுவதும் கலைந்து சென்ற பின்னர் அன்பர்களிடம் சுவாமிகளாக அவர் கூறிய செய்தி முதல் உபதேசமாக அமைந்தது.

'இந்தக் கட்டெறும்புகள் ஜீவன் முக்தர்கள் திசையில் இருக்கும் பெரும் பேறு பெற்றவை.

அவ்வெறும்புகள் இச்சரீரத்தின் மீது அன்புகொண்டு மொய்த்திருந்தன. இந்த ஜீவனிடத்தில் அவைகளுக்கு அத்தனை அன்பு! அவ்வெறும்புகள் சிறிதும் கடிக்கவில்லை.

இவ்வெறும்புகள் அடுத்த ஜன்மத்தில் பசுக்களாகப் பிறக்கும்.

அப்பசுக்களை அதன் உரிமையாளர்கள் மிகுந்த அன்புடன் பேணிக் காப்பார்கள். அப்பசுக்களைத் தெய்வமாக வணங்குவார்கள்.

இப்பசுக்களைக் கம்பால் அடித்துக் கொம்புகளை உடைப்பவர்கள், கழிகொண்டு கால்களையும், உடம்பையும் அடிப்பவர்கள் பெருந்துன்பத்தைத் தொடர்ந்து வரும் பல பிறவிகளில் அனுபவிப்பார்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


பசுக்களை வணங்கிப் போற்றிக் காப்பவர்கள் அடுத்த பிறவியில் ஜீவன் முக்தர்களாய் விளங்குவார்கள்.

இப்பசுக்கள் தொடர்ந்து வரும் பிறவியில் நற்குணமுடைய மனிதர்களாய்ப் பிறந்து ஞானநெறியில் நின்று, பிரம்மத்துடன் இணைவார்கள்.

இவ்வெறும்புகளெல்லாம் பூர்வ ஜன்மத்தில் நல்ல புண்ணியம் செய்துள்ளன.

நீங்கள் எந்த உயிருக்கும் தீங்கு செய்யாதீர்கள்.

கோசம்ரக்ஷணை என்பது உயர்ந்த நோக்கம் கொண்டவர் களிடத்தில் மட்டுமே தோன்றும்.' என்று ஞானதிருஷ்டியால் உணர்ந்ததை உபதேசித்தார்.

பின்னர் நாணற்காட்டிற்குள் புகுந்து விட்டார்.

அவர் சென்ற பிறகும் அங்கிருந்தவர்கள் ஸ்ரீசுவாமிகள் கூறியது கேட்டு பிரமிப்படைந்து, சற்று நேரம் கழித்துக் கலைந்து சென்றனர்.

(ஸ்வாமிகள் பசுக்களின் மீது அக்கறையாய்ப் பேசி உபதேசித்தது மட்டுமல்ல. ஓலைச்சுவடிகளில் பசுக்கள் மற்றும் மிருகங்களைத் தாக்கும் நோய்கள், அவற்றிற்கு ஏற்படும் காயங்கள் பற்றிக் குறிப்பிட்டு அவற்றிற்கான வைத்திய முறைகளையும் கூறியுள்ளார். அவரின் சீடர்கள் பிரதி எடுத்த அந்த சுவடி அரிமழம் அதிஷ்டானத்தில் பாதுகாப்பாய் இன்றும் உள்ளது.)

இந்த நிகழ்ச்சி நடந்தது 1847–ம் ஆண்டு பிலவங்க வருஷம், புரட்டாசி மாதம்.

ஸ்வாமிகளுக்கு அப்பொழுது 15 வயது 10. மாதம்.

இதைத் தொடரந்து சரிதத்தின் முக்கியமான,நெகிழ்வான நிகழ்வு நடைபெற்றது.

அது என்ன நிகழ்வு ?

"இனைய பாண்டிநாட் டெழில்வள மெம்மள வினதோ
வனைய யார்வலா ரத்திரு நாடெனு மங்கை
புனையு மங்கலம் போன்றொளி ரரிமழ புரியை
நினைவி னுட்கொடு புகலது முள்ளவா நேர்ந்தே."


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தர முனீந்தராள் பிறந்தது முதற்கொண்டு,உபநயன பரியந்தம் சுந்தரன் என்ற பெயரிலும்,

உபநயனநாளிலிருந்து திருமணம் நடக்கும்வரை

கோடிகாயத்ரி ஜபஹோமமும், சூதசம்ஹிதை முதலிய சிவ உபன்யாசங்களும் செய்து அதன்வழி ஒழுகியதால் சுந்தரசிவன் என்றும், (இதுவரை சுந்தரனை அவன், இவன் என்றேதான் நாமும் குறிப்பிட்டோம்.)

சுத்தமல்லியில் வித்வத் சந்நியாசம் ஏற்று துறவை மேற்கொண்டதிலிருந்து சுந்தர ஸ்வாமிகள் என்றும் அழைக்கப்பட்டார்.

அவதூத நிலையில் கோடகநல்லூர் நாணற்காட்டிற்குள் நுழைந்து முதன்முறையாக கோடகநல்லூர் தாமிரபரணியின் படித்துறையில் உபதேசம் செய்ததால்

"கோடகநல்லூர் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள்" என்றும் அறியப்பட்டார்.

பிறந்த க்ஷேத்திரம் கங்கைகொண்டான், வளர்ந்தது பத்தமடை, விஸ்வேஸ்வர சாஸ்திரிகளிடம் பாடம் படித்ததும், திருமணம் செய்து கொண்டதும் அடைச்சாணி, சந்நியாசம் மேற்கொண்டது சுத்தமல்லி......

ஆனால் இந்த ஊர்களுக்குக் கிட்டாத பெருமை கோடகநல்லூர் கிராமத்திற்குக் கிடைத்தது. ஸ்வாமிகளின் பெயருடன் கோடகநல்லூர் இணைந்துவிட்டது.

தபஸ் செய்ததினால் மட்டுமோ, முதல் உபதேசம் செய்ததினால் மட்டுமா அவ்வூருக்கு இத்தனை சிறப்பு ஏற்பட்டது?

இல்லை.

மற்றொரு மிகமிக முக்கிய நிகழ்வு இங்கே நடைபெறப் போவதை நாம் காணத்தானே போகிறோம்!

கோடகநல்லூர் நாணற்காட்டு அதி அற்புத லீலை வெளிஉலகிற்குத் தெரிய வந்தபின் – அவர் அதிவர்ணாசரம தர்மத்தைக் கடைப்பிடித்து, யாவரையும் சிவபூஜை, சிவவழிபாடு, சிவதர்மம், பஞ்சாக்ஷர உபதேசம், ருத்ராக்ஷ தாரணம், விபூதி மஹாத்மியம் ஆகியவற்றை மக்களிடையே பரப்பி அவர்களை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உய்வித்து வந்தமையால் ‘கோடகநல்லூர் சுந்தர ஸ்வாமிகள்’என்றே அன்புடன் அழைக்கப்பட்டார்.

சுந்தரஸ்வாமிகள் சந்நியாசியே ஆயினும் அவருடைய மாமா-மாமி, மாமனார், நண்பர்கள், ஊர்ப் பெரியவர்கள் அனைவரும் அவரை ‘சுந்தரம்’ என்று ஒருமையிலேயே அழைத்து வந்தனர்.

சுந்தரஸ்வாமிகள் நாணற்காட்டிற்குள் நுழைந்த பின்னர், அவரவர் வீட்டில் தயாரித்த பிக்ஷையுடன் ஆற்றங்கரையில் காத்திருப்பர்.

‘சுந்தரம் வெளியே வா,சுந்தரம் வெளியே வா’ என்று உரத்துக் குரல் எழுப்பிக் காத்திருப்பார்கள்.

அவர் வெளியில் வந்தால் மகிழ்ச்சியுடன் பிக்ஷை இடுவார்கள். அவரும் ஒரு சிறிதளவு எடுத்துக் கொண்டு மீதமுள்ளவற்றை தாமிரபரணி ஆற்றில் துள்ளிக்குதித்து விளையாடும் மீன்களை நோக்கி வீசுவார்.

(அந்த மீன்கள் எத்தனை புண்ணியம் செய்திருக்க வேண்டும்!)

ஸ்வாமிகள் நாணற்காட்டிலிருந்து வெளிவரவில்லை என்றால் ,அவர் மனதார பிக்ஷையை ஏற்றுக்கொண்டார் எனக்கருதி, எடுத்த வந்த பிக்ஷான்னத்தை தத்தமது வீடுகளுக்கு எடுத்துச் சென்று தேவதா பூஜா மூர்த்தங்களுக்கு நிவேதனம் செய்வர்.

மானஸீகமாக சுந்தரர் வீட்டிற்கு வந்து பிக்ஷையை ஏற்றுக்கொண்டதாகக் கருதி மகிழ்ச்சி அடைவார்கள்.

பத்தமடைக்கும், கரிசூழ்ந்தமங்கலம் படித்துறைக்கும் இடையில் நதிக்கரையை ஒட்டினாற்போல சுடலைமாடன் கோயில் ஒன்று இருக்கிறது.

அக்கோயிலை ஒட்டினாற்போல அடர்ந்த நாணற்காடு உள்ளது. ஒருநாள்......

ஸ்வாமிகள் யாருக்கும் தெரியாமல் கோடகநல்லூர் நாணற்காட்டிலிருந்து சுடலைமாடன் கோயிலை ஒட்டியுள்ள நாணற்காட்டிற்குள் நுழைந்து பத்மாசனம் இட்டு சகஜநிஷ்டையில் ஆழ்ந்து விட்டார்.

அன்றைய தினம் தாமிரபரணியில் திடீர் வெள்ளம் ஏற்பட்டு,இருகரையும் தொட்டுப் புரண்டு ஓடியது.

இக்கரையிலிருந்து அக்கரை செல்லமுடியாத அளவு வெள்ளம் சுழன்று சுழன்று ஓடியது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எவரும் இறங்கிச் செல்லவும் முடியாது.

கரைபுரண்டு ஓடிய வெள்ளத்தில் கொடிய விஷமுள்ள பாம்பு வர்க்கங்கள் ஸ்ரீஸ்வாமிகளின் உடல்முழுதும் ஊர்ந்து விளையாடின; அங்கும் இங்கும் ஸ்வாமிகளைச் சுற்றி நீரில் நீந்திக் கொண்டிருந்தன. வெள்ளம் அவரை அடித்துக்கொண்டு ஓட முயற்சித்தது.

நடப்பது எதுவும் (அறிந்தும்) அறியாமல் இருந்தார்; அசையாமல் இருந்தார்.

ஸ்வாமிகள் எதிர்க்கரை நாணற்காட்டிற்குள் நுழைந்தது தெரியாமல் கோடகநல்லூர் படித்துறையில் ஜானகி அம்மாவும், தன் வீட்டில் சமைத்திருந்த பிக்ஷையுடன் பெரியவர் ராமசாமி சாஸ்திரியும், அவருடன் வந்தவர்களும், நண்பர்களும் கொட்டும் மழையில் காத்திருந்தனர்.

பிக்ஷை நேரம் நெருங்கியது.

மழை சப்தத்தையும் மீறி 'சுந்தரா, சுந்தரா' 'சுந்தரா' என வழக்கம்போல் மும்முறை உரக்கக் குரல் கொடுத்தார் ராமஸ்வாமி சாஸ்திரி.

வானம் மேலும் இருண்டது; இடி இடித்தது. பளிச்சென்று ஒரு மின்னல் கீற்று.

அந்த வெளிச்சத்தில் ஸ்ரீஸ்வாமிகள் எதிர்க்கரை நாணற்காட்டில் அமர்ந்திருப்பது ஒருநொடி தெரிந்தது.

ஆற்றைக் கடந்து செல்ல முடியாத சூழ்நிலை.

அனைவரும் ஒருமித்த குரலில் எதிர்க்கரையில் நிஷ்டையில் அமர்ந்திருக்கும் ஸ்வாமிகளுக்குக் கேட்கும்படி இடிஓசையை மிஞ்சிய குரலில் 'சங்கரா' 'சங்கரா' 'சங்கரா' எனப் பெருங்குரல் எடுத்துக் கூவினர்.

அப்போது ......என்ன நடந்தது ?

"கண்ணு தற்பிரா னங்கையற் கண்ணியைங் கரத்தோன்
விண்ண வர்க்கிறை சிறைவிடுத் தருள்குகன் வேயாற்
பண்ணி சைக்குழ லாற்பசுப் புரந்தகோ பால
னண்ணு தற்கிட னானதா லரிமழ நகரம்."

ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் திவ்விய சரிதம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



(ஈஸ்வரனை நாம் வழிபடும் போது 'என்னுடைய கஷ்டங்கள் உன் கண்களுக்குத் தெரியவில்லையா? உன் கண் என்ன குருடா? என் பிரார்த்தனைகள் உன் செவியில் ஏறவில்லையா? நீ என்ன செவிடா?' என்று உரிமையாகக் கேட்போம் அல்லவா! அத்தனை உரிமையுடன் மாமாவும், மாமியும், மாமனாரும் நண்பர்களும், ஊர்ப் பெரியவர்களும் சுந்தரம் என்று ஒருமையிலேயே ஸ்வாமிகளை அழைத்தனர்.)

சுடலைமாடன் நாணற்காட்டில் சுந்தரர் நிஷ்டையில் அமர்ந்திருப்பது ஜானகி அம்மையாருக்கும், ராமசாமி சாஸ்திரி களுக்கும் தெளிவாய்த் தெரிந்தது.

நாணற்காட்டின் மத்தியில் சுவாமிகள் அமர்ந்திருந்ததாலும், வெள்ளப் பெருக்கினால் ஆற்றைக் கடந்து செல்ல முடியாததாலும் இக்கரையிலிருந்தே ஸ்வாமிகளை உரக்கக் குரல் எழுப்பி அழைக்கத் தீர்மானித்தனர்.

(இதுவரை ஏதோ ஒரு உந்துதலால் எழுதிவிட்டேன்.

இன்றைய நிகழ்வை எழுத இந்தச் சாதாரண மனிதனின் யத்தனங்களால், அறிவினால் முடியாது.

இறைவா! தாமிரபரணிக் கரையில் மழை கொட்டி அடிக்க, இடி சப்தம் இடைவிடாது காது செவிடுபடும்படி ஒலிக்க, பகல் நேரத்திலேயே கும்மிருட்டு கரியாய் அப்பி இருக்க, கோடகநல்லூர்க் கரையிலிருந்து அனைவரும் 'சங்கரா,'சங்கரா, 'சங்கரா என இடி முழக்கத்தை விடப் பெரிதாய் குரலெழுப்ப நடந்த மாயத்தை எழுத இந்த எளியவனால் இயலுமா? என் எழுத்துக்கு அந்த சக்தி உள்ளதா? அந்த ஆற்றலை அளிக்க உன் பாதரவிந்தங்களைப் பணிகிறேன்.

ஸ்ரீஸ்வாமிகளின் சரிதத்தில் பல வியத்தகு லீலைகள் இடம்பெற்றிருந்தாலும் இந்த நிகழ்வைப் படிக்கும்போது என்னை அறியாமல் கண்கள் பனித்துவிடும்.

பூர்வஜன்ம புண்ணியத்தாலேயே இதை எழுதும் பேறு எனக்குக் கிட்டியுள்ளது என்பதை உணர்ந்து உருகுகிறேன்.

'இந்த உன்னதமான அற்புத நிகழ்ச்சியை எழுதும் வல்லமையை எனக்குக் கொடு இறைவா' என உன்பாதம் பணிந்து மீண்டும் இறைஞ்சுகிறேன்.)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அங்கு அன்று நடந்தது வெறும் நிகழ்ச்சி அல்ல. ஈசன் தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொண்ட புண்ணிய தருணம்.

இதை எப்படி வர்ணிப்பது....? இதை எப்படிச் சொல்லில் வடிப்பது? இதை எழுதும் அருகதை எனக்குள்ளதா? என்னை இயக்கும் இறைவனே! குருநாதனே! மீண்டும் மீண்டும் உம் பாதங்களை என் கண்ணீரால் கழுவுகிறேன். நீரே எனக்குத் துணையாக இரும். என் கைப்பிடித்து நீரே என்னை எழுத வையும்.

கோடகநல்லூர்க் கரையிலிருந்து வளமிக்க குரலில் 'சங்கரா, சங்கரா, சங்கரா' என்று அனைவரும் ஒருசேர மூன்று முறை குரல் எழுப்பினர், ஸ்வாமிகள் சிறிது கூட அசைந்ததாய்த் தெரியவில்லை.

இச்சப்தம் காதில் விழுந்தால் ஸ்வாமிகள் வட்டவடிவமான தோணியில் அமர்ந்து வருவதுபோல் ஜலஸ்தம்பனம் செய்து, தண்ணீரை எதிர்த்து ஆடாமல் அசையாமல் பூப்போல் மிதந்தபடி இக்கரைக்கு வந்துவிடுவார் என அசைக்க முடியாத நம்பிக்கையுடன் காத்திருந்தனர்.

அவர்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. ஆனால் யாரும் எதிர்பாராத வேறொரு மெய்சிலிர்க்க வைக்கும் அதிசயம் நடந்தது.

(மகான்களின் வாழ்க்கையில் மிகமிகச் சிலருக்கு இவ்வாறு நிகழ்ந்திருக்கலாம். யான் அறியேன்.)

அது என்ன அதிசயம்?

"பொருப்பணிகொண் மணிமாடம் பொலியுமரி மழநகரி
லிருப்பணியாக் கொண்டுநல மெய்திவளர்
தருப்பணியுங் கவிகையினார் தம்மன்பா லிறையவர்க்குத்
திருப்பணிசெய் சிறப்பினையும் விருப்பணிநாஞ்
செப்புதுமால்."

❀❀❀❀❀

ஸ்வாமிகள் ஆற்றைப் பார்த்து வடக்குமுகமாக சுடலைமாடன் நாணற்காட்டில் நிஷ்டையில் அமர்ந்திருந்தார்.

ஜானகி அம்மாள், ராமசாமி சாஸ்திரிகள் மற்றும் உடன் வந்திருந்தவர்களுக்கும் ஸ்வாமிகள் அசையாது அமர்ந்திருப்பது புலனாகியது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இவர்கள் ஸ்வாமிகளை வலுமிக்க குரலில் மூன்றுமுறை அழைத்தும் ஸ்வாமிகளிடம் எந்த அசைவும் தோன்றவில்லை.

அனைவரும் இத்தனை மழையிலும், இடி ஒலியிலும் சற்றும் பிரக்ஞை இல்லாது இருக்கிறாரே எனக் கவலைப்பட்டனர். முகத்தில் வழியும் மழை நீருடன் அவர்களின் கண்ணீரும் கலந்து கொண்டது.

மீண்டும் உடலின் சக்தியை எல்லாம் ஒன்று திரட்டி ஆண்கள் அனைவரும், 'சங்கரா சங்கரா சங்கரா' என அடி வயிற்றிலிருந்து குரல் எழுப்பினர்.

இம்முறை பதில் கிடைத்தது.

ஸ்ரீஸ்வாமிகளிடமிருந்து அல்ல.

பின் எங்கிருந்து ?

கண்களைக் குருடாக்குவதுபோல் மின்னல் வெட்டியது. அதை ஒட்டி ஆகாயத்தில் பிரளயமே ஏற்பட்டது போல இடி முழங்கியது.

கருமையான இருண்ட வானத்தில் இருந்து, மேகங்கள் இரண்டு பகுதிகளாகப் பிரிந்தன; விரிந்தன; நிலம் நோக்கி இறங்கின.

இரண்டு பகுதிகளும் இரண்டு பிரம்மாண்ட கரங்களாக மாறின.

அந்தக் திருக்கைகளைப் பார்த்ததும் பூமியில் இருந்தவர் பயந்தனர்; மிரண்டனர்; நடுங்கினர்; குழம்பினர், செய்வதறியாது தடுமாறினர்.

இந்நிலையில் ஆகாயத்திலிருந்து அசரீரி எழுந்தது.

'சங்கரா சங்கரா சங்கரா' என மனமுருகி எம்மை அழைட்தீர்கள். சங்கரன் உங்களைத்தேடி வந்துவிட்டேன். பிக்ஷையை என் கையில் இடுங்கள் காத்திருக்கிறேன்.'

இவ்வாறு கேட்டதும் அனைவருக்கும் சிறிது உணர்வு வந்தது.

உடனே ஜானகி அம்மையார் பாத்திரத்தில் இருந்த பிக்ஷான்னத்தைக் கரண்டியில் எடுத்து தன் எதிரில் நீண்ட வலது கரத்தில் பயபக்தியுடன் இட்டார்.

மூன்று கவளம் வைத்தவுடன் அசரீரி மீண்டும் ஒலித்தது.

'போதும் திருப்தி ஆகிவிட்டேன். அந்த சங்கரன் வேறு; இந்த சங்கரன் வேறல்ல. இருவரும் ஒருவரே!



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இன்று தாமிரபரணித் படித்துறையில் இந்த அன்னபூரணியில் கைகளால் எனக்கு பிக்ஷை கிடைத்து விட்டது.'

இந்த வாக்கியம் முடிந்த கணத்திலேயே அந்தக் கைகள் குறுகி....குறுகி ஆகாயத்தில் கரைந்து மெல்லிய புள்ளியாய் மறைந்து போயின.

இந்நிகழ்ச்சி அங்கிருந்தவர்களை மெய்மறக்க வைத்தது; மெய்சிலிர்க்க வைத்தது. நெஞ்சம் நெகிழ்ந்தனர்.

அனைவரின் கண்களிலிருந்தும் அருவியாகக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

அனைவரும் சுந்தரர் அமர்ந்திருந்த எதிர்க்கரையை இமைக்கொட்டாது நோக்கினர். ஆடாது அசங்காது ஸ்வாமிகள் அங்கேயே இருந்தார்.

நடந்த அனுபவத்தை நினைத்துக் கொண்டே படித்துறையில் இருந்தவர்கள் வீடு திரும்பினர். இரண்டு நாட்கள் சென்றன. சுந்தரர் சுடலைமாடன் நாணல்காட்டிலிருந்து எவரும் அறியா வண்ணம் கோடகநல்லூர் நாணல்காட்டில் மத்தியில் நுழைந்து நிஷ்டையில் அமர்ந்தார்.

வழக்கம்போல் பிக்ஷை அளிப்பதற்கு தாமிரபரணி ஆற்றங்கரையை அடைந்தனர் ஜானகி அம்மையார், ராமசாமி சாஸ்திரிகள் மற்றும் நண்பர்கள். ஸ்வாமியை பிக்ஷை ஏற்க அழைத்தனர். அவரும் நாணல்காட்டிலிருந்து வெளியே வந்தார்.

பிக்ஷயை அவர் ஏற்றுக் கொண்டபின் இரண்டு நாட்களுக்கு முன்பு நிகழ்ந்த அதிசய நிகழ்வைக் கூறினர்.

அதற்கு ஸ்வாமிகள் என்ன பதில் கூறினார் ?

"மருக்காலு மலர்பொதுளும் வாவியொடு வானுறையுந்
தருக்காலுந் தேனாற்றாற் சாலிவள ரரிமழத்தி
னெருக்காலு முடியிறைவ ரின்னருளா லுயர்கயவிப்
பெருக்காலு நிநியாலும் பேர்பெற்றார் குலவணிகர்."



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


"உலகெலாம் போற்றும் உயர்ந்தநல் ஞானி
கலியின் துயர்நீக்க வந்துதித்த ஞானி
அரிமழ மாநகர் வந்தமர்ந்த ஞானி
பரனாம்எம் சுந்தர ஞானி."

இரண்டு நாட்கள் சென்றன. மழையும் நின்றிருந்தது. பிக்ஷை அளிக்க வந்தவர்கள் அழைத்ததும் ஸ்வாமிகள் காட்டிலிருந்து ,படித்துறைக்கு வந்தார்.

பிக்ஷையை ஏற்றுக்கொண்டார்.

ராமசாமி ஐயர் மெல்லிய குரலில் இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த அற்புத நிகழ்வைப்பற்றிக் கூறினார்.

'இந்த அற்புதங்கள் நடந்தபோது நீங்கள் எதிர்க்கரைக் காட்டிலேயே ஆடாமல் அசையாமல் இருந்தீர்கள். வந்தது நீங்கள்தானா? அன்று பிக்ஷையை ஏற்றுக்கொண்டு பசியாறினீர்களா?'

ஸ்வாமிகள் மந்தஹாசப் புன்னகையுடன் பதில் சொன்னார்:

'அசரீரியா? ஆகாயத்தில் நீண்ட கைகளா? அனைத்தும் கோடகநல்லூரில் குடிகொண்டிருக்கும் அபிமுக்தீஸ்வரனின் திருவிளையாடல்.

அன்று பிக்ஷையை நான் ஏற்றுக் கொண்டேன்.

அசரீரியைக் கேட்டவர்களும்,கரங்களைக் கண்டவர்களும் பாக்கியசாலிகள். அவர்களுக்கெல்லாம் இனி பிறவி கிடையாது... என்று சொல்லிக் கொண்டே நாணற்காட்டில் நுழைந்துவிட்டார்.

(அன்று அந்த நிகழ்ச்சியைப் பார்த்தவர்கள் மட்டுமன்றி இந்த லீலையைப் பற்றிப் படித்தவர்கள், படித்தவர்கள் சொன்னதைக் கேட்டவர்கள் அனைவருமே பாக்கியசாலிகள்தாம்.)

திருத்தொண்டர் புராணத்தில்(பெரியபுராணம்)ஈஸ்வரன் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும், திருநாவுக்கரசருக்கும் அவர்களின் பசிப்பிணி நீக்க ஓடோடி வேடம் புனைந்து வந்திருக்கிறார்.

திருக்கழுக்குன்றத்தில் மிகுந்த பசியினால் வாடிய சுந்தரமூர்த்தி நாயனார் மற்றும் அடியார்களின் பசியினைப் போக்க அந்தணச் சிறுவன் வேடம் பூண்டு வீடுவீடாய் நிறையாத ஓடேந்தி


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிக்ஷை எடுத்து அவர்களின் துயர் தீர்த்தார்.

ஆனால் சுந்தரஸ்வாமிகள் சரிதத்தில் வேஷம் பூணாமல் தானே தன்கரம் நீட்டி பிக்ஷை எடுத்துள்ளார். அதுமட்டுமன்றி 'அந்த சுந்தரன் வேறல்ல; இந்த சுந்தரன் வேறல்ல'என்று திருவாய் மலர்ந்திருக்கிறார்.

இதை சர்வவியாபியாய் உள்ள சர்வேஸ்வரனின் ஒப்புயர்வற்றத் திருவிளையாடலே எனக் கருத வேண்டும்.

நாணற்காட்டிலிருந்து விரைவில் வெளிவரப் போகிறார் சுந்தர முனிந்தராள்.

இனி சுந்தர விஜயம் தொடங்குகிறது.

நாணற்காட்டிலிருந்து வெளியில் வந்ததும் இவர் சந்தித்த மகான் யார்?

பார்ப்போம்.

"பூசுவது பூதியையே பூண்பதுகண் மணியினையே
பேசுவது சிவகதையே பெறுவதுநன் மக்களையே
கூசுவது பழியினையே குறைப்பது பா வத்தினையே
ஈசனருட் பெருஞ்செல்வ மிவர்க்கெய்தல் வியப்பேயோ!"

"தலையா யவன்நீயே! அன்பர்கள் நெஞ்சில்
நிலையா னவன்நீயே!கற்றோர் துதிக்கும்
கலையா னவன்நீயே! பக்தர்கள் வாழ்வில்
மலையா னவன்நீயே அன்றோ!"

நாணற் காட்டில் அவதூதராய்ப் பிரவேசித்தது 1847, பிலவங்க வருஷம் ஆவணி மாதம் பிற்பகுதி.

நான்குமாத நிஷ்டை பூர்த்தி செய்து நாணற்காட்டிலிருந்து வெளியில் வந்தது 1848, பிலவங்க வருஷம் மார்கழி மாதத்தின் பிற்பகுதி.

இதிலிருந்து ஸ்ரீசுந்தர திக்விஜயம் ஆரம்பமாகிறது.

இவர் சரிதத்தில் இடம்பெறப்போகும் லீலைகளில் சில, மற்ற மகான்களின் வரலாற்றில் இடம்பெற்றவை போன்றே தோன்றும். அவை மகான்களின் நோக்கமல்ல; குறையுமல்ல. அவர்களைச்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சோதிக்க நினைத்த மானிடரின் ஒரேவிதமான சிந்தனைக் குறைபாடும்,அறிவின் வறட்சியும் ஆகும்.

கோடகநல்லூர் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் பல ஊர்களுக்குச் செல்லப் போகிறார்.அவர் பாதம்பட்ட

இடங்கள் யாவும் புனிதமடையப் போகின்றன.

அனைத்து இடங்களிலும் ஸூதஸம்ஹிதையைப் பிரசங்கம் செய்யப் போகிறார்.

அதில் கூறியிருக்கும் கதைகளையும், அவற்றின் உள்ளார்ந்த தத்துவங்களையும் அன்பர்களுக்கு விளக்கப் போகிறார்.

கதைகளின் மூலம் அவற்றின் சாராம்சமான சிவஞானம், சிவபோதம், சிவானுபவம், சிவபக்தி, சிவதர்மம், சிவாராதனை, சிவத்யானம், சிவமந்திரம் இவற்றைப் பற்றிய தத்துவ விளக்கங்களை மக்களுக்கு அள்ளி வழங்கப் போகிறார்.

அவர்களிடையே சிவபக்தி சாம்ராஜ்யத்தை நிறுவப் போகிறார்.

புராண இதிகாசங்களில் மக்களுக்குப் பற்றுதல் உண்டாகும்படி செய்து, மனிதப்பிறவி எடுத்ததன் பயனை உணரச் செய்யப் போகிறார்.

திசை மாறிச்(வேற்று மதம்) செல்ல இருந்த மக்களின் உள்ளத்தில் சனாதன தர்மத்தின் உயர்வை நிலைநிறுத்தப் போகிறார்.

ஆயிரக்கணக்கான மக்கள் உயர்ந்த ஞானத்தை,வேதாந்த அறிவை, யோகத்தின் வைபவத்தை, ஜீவன்முக்த நிலையை அடைய வழிகாட்டப் போகிறார்.

பல திருக்கோயில்களில் குடமுழுக்கு வைபவம், லக்ஷதீபம் ஏற்றுதல், அன்னதானம் இவற்றை முன்னின்று நடத்தப் போகிறார்.

வாழ்க்கையின் பலநிலைகளில் உள்ளவர்கள் –மருத்துவம், சங்கீதம், சமஸ்தானத்தின் உச்ச பதவியில் இருப்பவர்கள், ஞானிகள், மகான்கள், ஆன்மிக அன்பர்கள், மடாதிபதிகள், அனைத்து இனத்தவர்களும் இவரின் சரிதத்தில் இடம் பெறப் போகின்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



காசி, தக்ஷிணேஸ்வரம், மதுரை, திருவையாறு, சிதம்பரம்.... என்று புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்ளப் போகிறார்.

இவை மட்டுமல்ல.........

மனிதர்கள் முயற்சியால் செய்ய இயலாத அமானுஷ்ய லீலைகளைச் செய்யப் போகிறார்.

இந்த அமானுஷ்ய லீலைகள் என்ன ?

சரிதத்தின் போக்கில் ஒவ்வொன்றாய்ப்.....

"சுந்தரனார் திருக்கோயிற் றூயமணி மண்டபத்தில்
வந்தரனார் கதைகேட்க வகுத்தவிதிப் படிபுரிந்தே
யந்தரநா டதிசயிப்ப வரங்கிருந்து சிறப்பித்தார்
தந்தரநா மெடுத்துரைக்குந் தன்மையதோ சாற்றரிதே!"

"ஆதியாய் அந்தமாய் யாவுமாய் ஆனாய்நீ
சோதியாய்த் தூய சுடராய் ஒளிர்ந்தாய்நீ
வேதமாய் நற்றமி ழின்எழில் ஓங்கார
நாதமாய் நின்றாய் பொலிந்து "

ஸ்ரீசிருங்கேரி மடத்தில் பீடாதிபதியாக இருந்த ஸ்ரீஉக்ரநரஸிம்ம பாரதி மகாசன்னிதானம் அவர்கள் 1789 முதல் 1879 வரை ஜீவியவந்தராய் இருந்தார்.

ஸ்ரீசிருங்கேரி பீடாதிபதியாய் எழுபது ஆண்டுகளுக்கு மேல் இருந்தார்.

இவர்கள் மகாதபஸ்வி.

சந்நியாச தீக்ஷை பெற்றபிறகு ஒரு இடத்திலும் மூன்று நாட்களுக்குமேல் தங்காமல் ஊரூராகச் சென்றார். கோவில், மடம் முதலியவற்றில் தங்குவார்.

செல்லும் இடங்களிலெல்லாம் வேதாந்த உபதேசங்களைச் செய்து மக்களை நல்வழிப்படுத்தி வந்தார்.

இவர் பிக்ஷைக்காக எவர் வீட்டிற்கும் செல்வதில்லை.

'நமது ஊருக்குச் சந்நியாசி ஒருவர் வந்துள்ளார்.அவருக்கு பிக்ஷை இடுவோம் ' என அவ்வூர் மக்களே அவர் தங்கியுள்ள இடம் சென்று பிக்ஷை அளிப்பர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இத்துறவி சந்நியாசிகளுக்கு உரிய ஆசார அனுஷ்டானங்களை நெறிமுறை தவறாமல் கடைப்பிடிப்பார். பண்டிதர்களின் சந்தேகங்களைத் தீர்க்கும் அளவிற்கு வேதவேதாந்தங்களில் ஆழ்ந்த புலமை பெற்ற ஞானி. நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்தவர். வித்தையில் ஆழ்ந்த சிந்தனை உள்ளவர். வேதாந்தக் கருத்துக்களின் உள்ஆழாத்தை உணர்ந்து கையாளுபவர்.

சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் வெகு சிறப்பான தேர்ச்சி பெற்றவர். தமிழில் ஓரளவு உரையாடுவதில் வல்லமை பெற்றிருந்தார்..

இவரை மகான் என்றே மக்கள் கொண்டாடினர்.

இமாலயம், காசி, காஷ்மீர், நேபாளம் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து விட்டுத் தென்னாடு வந்தார். ராமேஸ்வரம், கன்னியாகுமரி தரிசனம் செய்து விட்டு பத்தமடை, பழவூர், கரிசூழ்ந்தமங்கலம் ஆகிய ஊர்களில் வழியாக கோடகநல்லூர் வந்தடைந்தார். இங்கு மூன்றுநாட்கள் தங்கும் பொருட்டு விஜயம் செய்தார்.

அவ்வூரில் உள்ள சிருங்கேரி மடத்தில் தங்கினார்.அன்றைய மடம் என்பது ஒரு ஓலைக்குடிசைதான். முப்பது, நாற்பது பேர் அமரலாம்.

கோடகநல்லூர் மக்கள் மகாசந்நிதானத்தை அக்கூரை வேய்ந்த மடத்திலே தங்க வைத்து உபசரித்தனர். அவர் வந்த அன்று மாலையில் உபதேசம் செய்ய ஊர்மக்கள் கேட்டுக் கொண்டனர். மகானும் ஒப்புதல் அளித்தார்.

பெருந்திரளான மக்கள் கூடியதால் அபிமுக்தீஸ்வரர் கோயில் பிரகாரத்தில் அவருடைய பிரசங்கம் நடைபெற ஏற்பாடாகியது.

அவருடைய நற்புகழை அறிந்திருந்த ஜானகியின் தந்தை, சுந்தரரின் மாமி, மாமி ஆகியோருடன் அவரைச் சந்திக்க விரும்பினார்.

சுந்தரனை மீண்டும் இல்வாழ்க்கை வழியில் திருப்பி, கிருஹஸ்தாஸ்மரத்தை ஏற்றுக் கொள்ள வற்புறுத்தி அறிவுரை கூற வேண்டும் என்று வேண்டுகோளையும் பணிவுடன் கூற விரும்பினார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிரசங்கம் முடிந்ததும் மகாசந்நிதானத்திடம் தன்னுடன் வந்தவர்களுடன் தன் மனக்குறையை இறக்கிவைத்தார் ஜானகியின் தந்தை.

அவரின் வேண்டுகோளைக்கேட்ட மகான் என்ன பதில் உரைத்தார்?

"மருவுபுகழ் வெள்ளாற்று மாதீர்த்தம் படிந்தவர்க்குத்
திருவளருங் கல்விவருஞ் செய்யமகப் பேறுமுண்டா
மொருவகிலாப் பிறவிவினை யொழியுமினு மரிமழத்துப்
பொருவிரலன் றிருவருளும் பொருந்துமிரு புகழாமால்."

"செந்தேன் தமிழாய்ச் செவியில் புகுந்தாய்நீ
செம்மையாய் எம்வாழ்வு சீர்பெறவே தோன்றினாய்
மெய்யான தத்துவம் நல்கினாய் வேறுண்டோ
உய்வதற்கு மற்றோர் வழி?"

கோடகநல்லூரில் தங்கியிருந்த சுந்தரஸ்வாமிகளின் மாமனாரும், மாமியாரும் வேங்கடசுப்பையருடன் மகானைத் தரிசிக்கச் சென்றனர். சுந்தரர் மீண்டும் இல்வாழ்க்கைக்குத் திரும்பிவர மகானின் உதவியை நாடினர்.

கோடகநல்லூர் சிவன்கோயிலில் தங்கியிருந்த ஞானி அவர்களை சந்திக்க நேரம் ஒதுக்கினார்.

முதல்நாள் அவரின் உபதேசம் முடிந்த பிறகு இரவுநேரம் தனிமையில் அவர்களின் சந்திப்பு நடைபெற்றது.

'ஸ்வாமிகளே! என் மருமகன் சிறுவயதில் துறவறம் பூண்டுவிட்டான். என் மகளிற்கோ பதின்மூன்று வயதுகூட ஆகவில்லை. இவள் சிறுபெண். கணவனின் சந்நியாச நிலைபற்றிப் புரிந்து கொள்ளக்கூடிய பருவமும் அல்ல. அதனால் புருஷனின் நிலைபற்றிக் கலங்கினாள் இல்லை. விளையாட்டுத்தனமாக நடந்து கொள்கிறாள். துணிவாக இருப்பதாகக் காட்டிக்கொள்கிறாள். நாம் அவள்மேல் அனுதாபப்படுவதை அவள் விரும்பவில்லை.

இச்செயலை வேடிக்கையாக எடுத்துக் கொண்டிருக்கிறாள். என் பெண்ணின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. வம்சாவளி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அபிவிருத்தி இல்லாது போய்விடுமோ? என்ற கவலை மனதை அரித்துக் கொண்டுள்ளது. இவளுக்குப்பின் திருமணம் ஆனவர்கள் எல்லாம் குழந்தை குட்டிகளுடன் சந்தோஷமாக இருக்கின்றனர்.

பகவான் எங்கள் தலையில் ஏன்தான் இப்படி எழுதினானோ? .....”என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே கண்ணீர்விட்டுக் கதறினார்.

பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த மகான், ஒரு மத்தியதரக் குடும்பத்தின் சராசரி தந்தையின் மன உளைச்சலை, வேதனையைத் தெரிந்து கொண்டார்.

மகாசந்நிதானத்திடம் பத்தமடை, கரிசூழ்ந்த மங்கலம் ஆகிய ஊர்களுக்குச் சென்றிருந்ததால் சுந்தரர் இளவயதிலேயே ஏற்றுக் கொண்ட துறவைப் பற்றி அறிந்திருந்தார்.

‘உங்களின் ஆதங்கத்தை அறிந்துகொண்டேன். சுந்தரரை அழைத்து வாருங்கள். பேசுவோம்’ என்றார்.

சுந்தரனை அழைத்து வருவதா? அது யாரால் முடியும்? சூறாவளிக் காற்றைச் சிறு குப்பியில் அடைப்பது போன்றதல்லவா அது?

இந்த யோசனையினூடே மகானை வணங்கி விடைபெற்றனர் ராமசுப்பையரும், வேங்கடசுப்பையரும்.

ஆனால் இரண்டு நாட்களில் சங்கரர் அந்தத்துறவியை நாடிவரப் போகிறார் என்று இவர்களுக்குத் தெரியாது.

ஏன் மகானைத்தேடி வந்தார்?

“நவமான வரிமழுமா நகர்வயிற்பஃ றீர்த்தத்து
முவமான மிலதாக வுளதுவெள்ளாற் றுயர்தீர்த்தம்
பவமான பிறப்பிறப்பிற் படுந்துன்பந் தீர்த்தமினிச்
சிவமான திருவடைவ மெனச்செப்பச் செய்திடுமால்.”

❀❀❀❀❀

“கல்லாத நானும் கவிபாட அன்பினால்
செல்லாத வார்த்தைகளைச் செப்பனிட்டாய் சீர்பெற்ற



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சொல்லிற்குள் செம்மையாய் வந்தமர்வாய் வித்தகனே
நல்லோர்கள் போற்ற நயந்து."

ஊர் மக்கள் பணிந்து கேட்டுக்கொண்டதிற்கு இணங்க சிருங்கேரி மகான் காலையும், மாலையும் சத்சங்க பிரசங்கத்தை மேற்கொண்டார்.

ஆற்றின் கரையை ஒட்டிய சிவன்கோயில் வெளிப்புறத் திண்ணை மேடையில் அமர்ந்து பேசியதால் கோயிலை அணைந்தாற்போல் இருந்த நாணற்காட்டில் நிஷ்டை கலைந்த நேரத்தில் மகானின் உபந்நியாசம் ஸ்வாமிகளின் செவியில் விழுந்தது.

சொற்பொழிவின் கணீர் சப்தமும், மொழியின் தெளிவும், சொல்லும் கருத்தின் ஆழமும் சுந்தரரைக் கவர்ந்தது. யோகீந்தரரின் வாக்சாதுர்யமும் வேதாந்த நுட்பங்களை விளக்கும் திறமையும் ஸ்வாமிகளை ஈர்த்தது. அவரைத் தரிசிக்க சங்கல்பம் பூண்டார்.

மகானின் உபதேசத்தைக் கேட்க மக்களின் ஆர்வம் பெருகியதால் மாலை மூன்று மணிக்கே சொற்பொழிவு தொடங்க ஏற்பாடாகியது. அன்றுடன் மகாசந்நிதானம் வந்து மூன்று நாட்கள் முடிவடைவதால், அன்று இரவு அடுத்த ஊருக்குச் செல்ல ஏற்பாடுகள் ஒருபக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

நேரம் செல்லசெல்ல பிரசங்கத்தைக் கேட்க மக்கள் கூட்டம் அலை மோதியதால் மகானின் உரையை கோயில் பிரகாரத்திலிருந்த பஜனை மட வாயிலில் திறந்தவெளியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

யதீந்திரர் மிகுந்த உற்சாகத்தோடு பிரசங்கத்தைத் தொடங்கினார். பல நுட்பமான செய்திகளையும், வேதாந்தக் கருத்துகளையும் விமரிசையாக எடுத்துரைத்துக் கொண்டிருந்தார். விறுவிறுப்பாக நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில்...... கூட்டத்தில் பெரும் சலசலப்பு ஏற்பட்டது.

அங்கே....... நாணற்காட்டிலிருந்து வெளிப்பட்டு, கூட்டத்தினரிடையே புகுந்து அவதூத கோலத்தில் ஸ்வாமிகள், யோகீந்தரரை நோக்கி வந்துகொண்டிருந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்வாமிகள் நாணற்காட்டில் இருந்தபொழுது குறிப்பிட்ட ஒருசில குடும்ப உறுப்பினர்களும், நண்பர்களும், ஊர்மக்களுமே வருவர். அவர்கள் ஸ்வாமிகளின் அவதூத நிலையைப் பொருட்படுத்தவில்லை.

ஆனால். . . . . . இங்கே ஊர்ப் பொதுமக்கள், அண்டை ஊர்களைச் சேர்ந்தவர்கள், ஆண், பெண், சிறு பிராயத்தினர் என அனைத்து வகையினரும் இருந்தனர். ஸ்வாமிகளைப்பற்றி அறிந்திராதவர்களும் இருந்தனர். அவர்கள் ஸ்வாமிகள் வந்த கோலம் கண்டு அஞ்சினர், வெட்கப்பட்டனர், அருவெறுப்பு அடைந்தனர், ஆத்திரப்பட்டனர், கூச்சப்பட்டனர், குமுறினர், எரிச்சல் அடைந்தனர், முணுமுணுத்தனர்.

இவர்களின் சலசலப்பினால் யோகீந்தரரின் பேச்சுத் தடைப்பட்டது.

தன்னை நோக்கி வந்த சுந்தரரை சைகையினால் அருகழைத்தார்.

தம் அருகில் இருந்த ஆசனத்தில் அமரச் சொன்னார்.

அவதூத நிலையில் அருகே அமர்ந்திருந்த ஸ்வாமிகளிடம் தன் முதல் கேள்விக் கணையை வீசினார் அந்த மகான்.

அது என்ன கேள்வி ?

"நூலாய்ந்து பாவாக்கி நுண்ணியபல் கலையியற்றி
மேலான புலவரென விளங்குகா ருகவினைஞர்
பாலாதி தருந்தெய்வப் பசுப்புரப்பார் பணிசமைப்பார்
தோலாரு முழவதிர்ப்பார் தொழில்வகைஎம் மளவிற்றோ.

"பிறந்தாய் வளர்ந்தாய் படித்தாய் சிறந்தாய்
மணந்தாய் துறந்தாய் அடைந்தாய் அடவி
அமர்ந்தாய் சிலையாய் மறந்தாய் உலகை
பிடித்தாய் படைத்தவன் பாதம்."

'தங்களைச் சந்திக்க வேண்டுமென்ற அவா இருந்தது. சந்திக்க இயலாது போய்விடுமோ என்ற கவலையும் எழுந்தது. தாங்களே என்னை நாடி வந்தது அடியேன் செய்த பாக்கியம். சந்தோஷம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தங்களைப் பற்றியும், தங்களுடைய தபோபலம் பற்றியும் நிறையக் கேள்வியுற்றோம். தங்களுடன் அதுபற்றி சம்பாஷிக்க வேண்டியுள்ளது.

தங்களுக்கு ஆக்ஷேபனை இல்லையென்றால் அடியேன் உரை நிகழ்ச்சி பூர்த்தியானதும் பேசலாம் அல்லவா? தங்களுக்கு இடையூறு ஏதுமில்லையே!' எனப் பணிவாகக் கேட்டார் மகாசந்நிதானம்.

'தங்களுடன் சம்பாஷிப்பதில் எனக்கும் மிகுந்த விருப்பமே. தங்களைப் போன்ற சாதுக்களுடன் உரையாடுவது பெரும் பேறாகும்.

தங்களுடைய உபன்யாசத்தின் ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களும், வாக்சாதுர்யமும் செவிகளில் அமுதமாய் விழுந்தன. அதனால் உந்தப்பட்டு உங்களை நாடிவந்தேன்.

ஞானவிஷயமாகப் பேசுவதற்குக் காத்திருக்கிறேன்.

தங்கள் பிரசங்கத்தைத் தொடருங்கள். அடியேனும் கேட்கிறேன்.' என்று பவ்வியமாகப் பதில் உரைத்தார் சுந்தரர்.

யோகீந்தரரின் பிரசங்கம் பூர்த்தியானது.

இருபெரு மகான்களும் கோயிலின் உட்பிரகாரம் சென்று ஒரு மேடையில் தனியாக அமர்ந்தனர்.

அவர்களிடையே உரையாடல் தொடங்கியது .

உரையாடல் சமஸ்கிருத மொழியில் இருந்தது.

இருவரும் சாஸ்திரங்களில் கரைகண்டவர்கள்.

ஆசிரமதர்மத்திற்குரிய வாதப் பிரதிவாதங்கள் இருந்தாலும் தர்ம நியாயங்களையும், அவற்றின் ஊடே பொதிந்திருக்கும் நுண்ணிய தத்வார்த்தங்களிலிருந்து விலகாமல் பேசினர். ஒருவர்மேல் மற்றவர் கொண்ட மரியாதையையும், மதிப்பையும் அவர்கள் சம்பாஷணை தெற்றென விளக்கியது.

சுந்தர முனிவரின் வடமொழிப் பேச்சின் வாக்கு சாதுரியம் கண்டு யோகீந்தரர் மகிழ்ச்சி அடைந்தார்; வியப்படைந்தார்.

அவர்களின் உரையாடல் இவ்வாறு அமைந்தது:

'நால்வகை ஆசிரமங்களில் தாங்கள் சந்நியாச தர்மத்தை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். இத்தகைய இளம்பிராயத்தில் வைராக்கியமாக சந்நியாசம் ஏற்றுக் கொண்ட மகான்கள் நம் பாரத



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தேசத்தில் ஒரு சிலர் உள்ளனர். ஆதிசங்கரர், பிரம்மேந்திராள் என்று முன்னோடிகள் உள்ளனர்.

இதில் ஆதிசங்கரர் பிரம்மச்சரிய ஆசிரமத்திலிருந்தும், பிரம்மேந்திராள் கிருஹஸ்தாசிரமத்தில் இருந்த போதும் சந்நியாசம் மேற்கொண்டனர்.

புராணங்களில் யாக்ஞவல்கிய ரிஷி இல்லறத்தவராய் இருந்தே துறவு வாழ்க்கையை மேற்கொண்டார்.

நம் அனைவருக்கும் மிகப் பரிச்சயமான இல்லறத்துறவி ஜனக மஹாராஜா. மாபெரும் நாட்டை ஆண்டு வந்தாலும் வைராக்கிய சீலராய் எதிலும் ஒட்டாமலேயே இருந்தார். எனவேதான் அவரை ராஜரிஷி என்கிறோம். அவர் அனைத்து ஞான சாதனங்களையும் அடைந்தவர். அவருக்கு ஒப்பானவர் நீங்கள். அனைத்து ஞான சாதனங்களை அடையும் சக்தி உங்களிடம் உள்ளது.

அடுத்து உங்களை நம்பி உங்களைக் கைப்பிடித்து வெகுகாலம் இல்லற தர்மத்தைக் கடைப்பிடித்து வாழ வேண்டிய சிறு பெண் ஜானகி. கிருஹஸ்தர்களுக்குரிய பஞ்ச யக்ஞங்களை நீங்கள் இருவரும் சேர்ந்து கடைப்பிடிக்க வேண்டாமா ? இல்லற தர்மத்தை வகித்துவிட்டுப் பின்பு படிப்படியே மற்ற ஆசிரம தர்மங்களையும் ஏற்றுக் கொண்டு உய்யலாம் அல்லவா. . . . . ?'

யோகீந்தரர் பகன்றதை மிகக் கவனமாகவும், பவ்வியமாகவும் கேட்டுக் கொண்ட ஸ்ரீஸ்வாமிகள் பணிவுடன் பதில் உரைத்தார்.

சுந்தரர், யோகீந்தரர் கூறியதை ஏற்றுக் கொண்டாரா ?

"முன்னருறு மூவகையோர் மொழிந்தபணி விடைபுரிந்து
மன்னுபல தொழிலாற்றி மருதநில வளம்பெருக்கிக்
கன்னல்கமு கரம்பையெலாங் கலிவளர்த்து கலிதவிர்த்துத்
துன்னியநட் புரிமைகொடு துலங்குநிறை குவரெங்கும். "

"அலைந்தாய்; திரிந்தாய்; உலகம் தழைக்க
உழைத்தாய்; பொறுத்தாய்;நதியில் மறைந்தாய்;
எழுந்தாய்; நடந்தாய்;சிவந்த உருவம்
மெலிந்தாய்; கலந்தாய் சிவனுள். "



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'முனீந்திரரே! தாங்கள் எடுத்தோதிய அனைத்துச் செய்திகளையும் உள்வாங்கிக் கொண்டோம். தீர்க்கமாக ஆலோசித்து உள்ளாழ்ந்து அறிந்தோம்.

ஆதிசங்கரர் சிஷ்ய பரம்பரையில் தொடர்ந்து வருகின்ற ஜகத்குருக்கள் அனைவரையும் உள்ளும் புறமும் வணங்கி அவர்களின் கட்டளைகளை ஏற்க வேண்டியது அடியேனின் கடமையாகும்,

தாங்களும் கிரமப்படி புனிதம் நிறைந்த ஆதிச்ங்கரர் பரம்பரையில் வரும் சிருங்கேரி மடத்தில் முறைப்படி சந்நியாச தீக்ஷை பெற்றவர்கள். ஜகத்குருக்களுக்குக் கட்டுப்பட்டவன் என்ற முறையில் அடியேன் தங்களுக்கும் கட்டுப்பட்டவனே.

அந்த பாரம்பரிய தீக்ஷா தர்மமே தாங்கள் ஒரு தக்க பெரியவர் என்பதற்குப் போதுமானது.

உலகமே துச்சம் என மதித்து சர்வபரித் தியாகம் செய்து ஒரே இடத்தில் ஸ்திரமாக வாசஞ்செய்யாது

இமயம் முதல் குமரிவரை க்ஷேத்ராடனம் செய்து வருகின்றீர்கள், புண்ணிய நதிகளில் நீராடுகிறீர்கள்.

சந்நியாச தர்மம் குன்றாத வகையில் ஒழுகிவரும் தாங்கள் மதிக்கத் தக்க மாபெரும் ஞானி. இதில் ஐயத்திற்கு இடம் ஏதும் இல்லை.

வேதங்களிலும், சாஸ்திரங்களிலும், ஆகம, புராணங் களிலும், உபநிஷத்களிலும், தர்க்க சாஸ்திரத்திலும் கரைகண்ட மேதாவிலாசம் உள்ளவர்.

உலகம்,உலகத்திலுள்ள அனைத்து சேதன, அசேதனப் பொருட்களைச் துச்சம் என மதிப்பவர். தாங்கள் சார்ந்த ஆசிரமம் மிகவும் மதிப்புடையது,பெருமையுடையது. தங்கள் கரங்கள் தாங்கியுள்ள கமண்டு,தண்டம் ஆகியவற்றின் சக்திக்கும், தங்களின் வாக்கிற்கும் அடியேன் கட்டுப்பட்டவன்.

நாம் இருவரும் தனிமையில் இருப்பதால் ஒரு விஷயத்தைத் தங்களுக்குத் தெரிவிக்க அனுமதியுங்கள். நீங்கள் முக்காலமும் அறிந்த ஞானி.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தங்களின் அறிவுரை, மற்றவர்கள் உங்களிடம் விண்ணப்பித்ததின் அடிப்படையிலேயே அமைந்தது என்பதை அடியேன் அறிவேன்.

மகான்கள் தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக ஈஸ்வரனால் அனுப்பப்படுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் அந்த ஈஸ்வரனே அவதாரமாய் இறங்கி வருகிறார். நதி மூலம், ரிஷி மூலம் ஆகியவற்றை ஆராயக் கூடாது. அதைப் போன்றே அவதாரங்களும் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை. உண்மைகளை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமே அன்றி அதில் வீண் ஆராய்ச்சிகள் கூடாது என்பதைத் தாங்களே நன்கு அறிந்ததுதானே!

தங்களின் கோரிக்கைக்கு அடியேனின் மறுமொழி என்னவாய் இருக்கும் என்பது தாங்கள் அறியாததா?

நம் சனாதன தர்மம் இன்றைய காலகட்டத்தில் எந்த நிலையில் உள்ளது என்பது தங்களுக்குத் தெரிந்ததுதானே?

தாங்களும்,அடியேனும் பயணப்பட வேண்டிய இடங்கள் பல உள்ளன; சந்திக்க வேண்டிய மக்கள் பலர் உள்ளனர்.

ஈஸ்வரனின் கருணையினால் அனுப்பப்பட்ட மகான்கள் அந்த ஈஸ்வரனைத் தங்கள் இதயகமலத்தில் பார்க்கிறார்கள். ஈஸ்வரனால் நிர்ணயிக்கப்பட்ட அன்று, பூதவுடலைத் துறந்து ப்ரஹ்மத்தில் லயிக்கிறார்கள். அவர்களின் ஹ்ருதயத்திலிருக்கும் பரஹ்மம் எங்கும் பரந்திருக்கும் ப்ரஹ்மத்துடன் கலந்து விடுகிறது.

ஜானகியைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். அவள் முந்தைய பல ஜன்மங்களில் செய்த நற்செயல்களின் பலனைத் தற்பொழுது அனுபவிக்கிறாள். வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு 'பாவம்! சிறுபெண். உலகம் தெரியாமல் இருக்கிறாள். இல்லறசுகம் அறியாமல் இருக்கிறாள் எனத் தோன்றும்.

தாங்களே ஜானகியை அவள் பெற்றோருடன் இங்கே வரவழைத்து அவள் அபிப்பிராயத்தைக் கேளுங்கள்.

'ஜானகி, அவரின் பெற்றோர், சுந்தரரின் மாமா, மாமி ஆகியோர் உள்ளே வரவழைக்கப்பட்டனர்.

ஜானகி அம்மையார் தன் கருத்தாகக் கூறியது என்ன?

"எத்தனைதண் ணீர்ப்பந்த ரெத்தனையோ பசுமடங்க



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ளெத்தனைகல் விச்சாலை யெத்தனையோ சத்திரங்க
ளெத்தனையோ வாவிதரு வெத்தனையோ விவர்தரும்
மெத்தனையோ வந்தனையு மித்தனையென் றெவர்புகல்வார்!"

"செய்தாய் குடமுழுக்கு, கோயில் திருப்பணி
செம்மையாய் நாடெங்கும், ஏற்றினாய் தீபங்கள்
லட்சமாய் ஆலயங்கள் எங்கும், உனைத்தொழுதோம்
இச்சையாய் நெஞ்சிலே வைத்து."

இரண்டு மகான்கள் சந்திக்கும்பொழுது ஒருவரை ஒருவர் தெளிவாய்த் தெரிந்து கொள்வார்கள். ஆனால் மற்றவர் எதிரில் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார்கள். சுந்தரர் இங்கு யார் என்று யோகீந்திரர் அறிந்து கொண்டார். ஆனால் வெளியுலகத்திற்கு எதுவும் தெரிந்ததுபோல் காட்டிக் கொள்ளவில்லை.

'மகான் அழைக்கின்றார்' என்ற செய்தி வந்தது. குழுமியிருந்த கூட்டத்தில் இருந்து மாமா, மாமி, தாய், தந்தை சூழ உள்ளே சென்றார் ஜானகி. மற்றவர்கள் மனங்களில் ஒருவித எதிர்பார்ப்பும், ஆவலும், நம்பிக்கையும் தோன்றின.

ஆனால் ஜானகி அம்மையார் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாத நிஷ்களங்கமான மனதுடன் அடக்க ஒடுக்கமாய் வந்தார்.

உள்ளே சென்று இருவரையும் வணங்கி எழுந்தார்.

சுந்தரஸ்வாமிகள், யோகீந்தரரை நோக்கி, 'என்னிடம் கேட்ட கேள்வியை ஜானகியிடம் கேளுங்கள்' என்று வெகு கம்பீரமாகக் கூறினார்.

வணங்கி எழுந்த ஜானகியை ஆசிர்வதித்தார் மகாசந்நிதானம்.

'இவர் இல்லறப் பற்றின்றி யோகம், தபஸ், நிஷ்டை என்று சந்நியாச லக்ஷணங்களுடன் விளங்குகிறார். நீ இவருடன் குடும்ப வாழ்க்கை வாழ்ந்து சுகப்பட வேண்டாமா? உன் மனதில் உள்ள எண்ணம் என்ன? என்ன சொல்லப் போகிறாய்?' என்று வினவினார்.

பன்னிரண்டு வயதும் நான்கு மாதங்களும் நிரம்பிய சிறுமி ஜானகி அம்மையார் கணீரென்று பேசத்தொடங்கினார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'என் வாழ்க்கையில் என்ன குறை நேர்ந்துவிட்டது? இல்லற வாழ்க்கை என்பது என்ன? இல்லறம் என்பது புனிதமான பந்தம் என்பதை மறுப்பதற்கில்லை. நீண்ட காலத்திற்கு முன்னரே திருமண பந்தம் வேண்டாமென்று இளமையை நீத்து முதுமையை விரும்பி ஏற்றுக் கொண்ட ஔவையின் வரலாறு இங்கே ஏற்கனவே பிரபலம். அவரைப் போன்று ஞானபரிபக்குவத்தை அடைவதன்றோ வாழ்க்கை ஆகும்! அதுவன்றோ சுகம்! பிரும்மானந்த சுகம் ஒன்றுதானே உண்மையான சுகம் ஆகும். மாயாப்ரபஞ்சத்தில் கட்டுண்டு மேலே எழ வழிதெரியாமல் அதனுள்ளே அகப்பட்டுத் துன்பப்படுவது சுகமாகுமா? வினைகள் இருக்கும் வரை பிறவிகள் இருந்து கொண்டே இருக்கும். விதியை மாற்ற முடியாது. அனுபவித்தே தீர்க்க வேண்டும். .

சரீர அபிமானமே வாழ்க்கை என்றால் அத்திப் பழத்தில் பல புழுக்கள் தோன்றி மறைவதைப் போல மீண்டும் மீண்டும் பிறவிகளை எடுத்துக்கொண்டே இருக்க வேண்டியிருக்கும். கடலின் கரையில் இருக்கும் மணலை எண்ணினாலும் எண்ணி விடலாம். உயிர்கள் எடுக்கும் பிறவியை எண்ணிட முடியுமா?

எப்பொழுது இந்த உடல், உயிர், பந்தம், பாசம், புகழ், தற்பெருமை, பணம், சரீரசுகம். . . . என்ற தளைகளிலிருந்து விடுபடுகிறோமோ, எப்பொழுது ப்ரும்மத்தில் கலக்க வேண்டும் என்ற ஞானம் தோன்றுகிறதோ அப்பொழுதுதான் நாம் பரிபக்குவம் அடைந்து விட்டோம் என்று அர்த்தம். இவர்களுக்குப் பிறப்பு இன்பத்தைத் தராது;இறப்பு துன்பத்தைத் தராது.

தேகமே ஆத்மாவா? இல்லையே! அல்லும் பகலும் உண்பதும், உறங்குவதும் மட்டுமே வாழ்வாகுமா?

நான்கைந்து பேர்களை வைத்துக்கொண்டு ஊர்க்கதை பேசுவதும், நல்லவர்களைப் பற்றிப் புறங்கூறுவதுமே வாழ்க்கை என்று பலர் கருதிக் கொண்டுள்ளனர். இந்தக் கூட்டத்தினரிடையே புற்றீசல்போல் பிறந்து இறப்பதுதான் வாழ்வாகுமா? எத்தனையோ மகான்கள் தோன்றிய புண்ணியபூமி இது; இனியும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தோன்றுவார்கள். ஏன் ? என் எதிரில் இருக்கும் நீங்கள் இருவருமே மகான்கள் என்று என் உள்ளுணர்வு சுட்டிக்காட்டுகிறது.

'என் கணவர்' என்று உலகோர் கருதிக் கொண்டிருக்கும் 'என் குருநாதரின்' ஒழுக்கமும், சீலமும், நெறியும், கல்வியும், ஞானமும் என்னை வியக்க வைக்கிறது.

இவர் கிருஹ க்ஷேமத்திற்காக அவதாரம் செய்தவரில்லை; உலக க்ஷேமத்திற்காக அவதாரம் செய்தவர்.

நான் அவருக்கு உரியவள்; ஆனால் அவரோ உலகத்திற்கு உரியவர். நான் மட்டுமல்ல இந்த உலகத்தில் உள்ளோர் அனைவருமே அவருக்கு உரியவர்கள்.

அவர் எந்த ஆசிரமத்தில் எந்தக் கோலத்தில் விளங்கினாலும், அவருக்கு ஒரு சிஷ்யை ஆகத் தொண்டு செய்யவே பிறந்துள்ளேன். அவருடைய நிலையை அடைய வேண்டுமென்பதே என்னுடைய பிரார்த்தனை. அதற்காகவே இந்தப் பிறவி எனக்குக் கிடைத்துள்ளது. அவருடைய நிலைக்குப் பாதகம் வராமல் பணிவிடை செய்வதே என் தலையாய கடமையாகும்.

மேலும் பெண்கள் மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைவதற்கான வேதங்களையோ, உபநிஷதங்களையோ கற்பதற்கு அதிகாரம் இல்லை என்று கூறுகின்றனர். ஆனால் திருமணம் நடைபெற்றதும் கணவன் செய்யும் எல்லாக் கிரியைகளுடனும் சம்பந்தப்படுகிறாள். புருஷனுடைய ஒவ்வொரு செயல்களையும் கூடவே இருந்து நிர்வகிக்கிறாள். எனவே அடியவள் அவர் செய்யும் ஞானபக்குவாதி களை ஏற்று அவருடன் ஒத்துழைக்க விரும்புகிறேன்.'

ஜானகி அம்மாள் இன்னும் சில முக்கிய கருத்துக்களைத் தெரிவித்ததுடன் எவரும் எதிர்பார்க்காத ஒரு கோரிக்கையையும் ஸ்வாமிகள் முன் வைத்தார்.

அது என்ன கோரிக்கை ?

"பாரின் மாசு படப்பிறந்து பரம னடியார் பதமறந்து
காரி னலகு குழன்மானார் கலவி விழைந்தார் கன்மமும்பல்
சீரின் மருவு மரிமழம்வாழ் தேவதேவற் கமைந்த வொரு
பேரின் மகிமை யானீங்கிப் பிறவாப் பேறு பெறுவாரே!"



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"பிழைத்தாய் பிழைகள்;பொழிந்தாய் அருளை;
பொறுத்தாய் குறைகள்;உடல்சலி யாது
அலைந்தாய்; நிலைத்தாய் நினைவில்;புகழால்
கலந்தாய் உயிரினில் நாளும்."

"மாயை அநித்யமானது. மாயை அதன் கவர்ச்சியால் ஒவ்வொருவரையும் தன்பால் இழுக்கிறது. மாயையில் விழுந்தவன் அதிலிருந்து மீள்வதில்லை. மாயையை மாயை என்று அறிந்து கொள்ள ஈஸ்வரனோ, குருவோ துணை செய்கிறார்கள். வெகு தீவிரமாக ஈஸ்வரனையோ, குருவையோ பற்றுபவர்களை மாயையால் ஒன்றும் செய்திட முடியாது. அவர்களின் நாமமே நம்மைக் காப்பாற்றிக் கரை சேர்த்துவிடும்.

ஒருவன் எந்த அளவு ஒரு பொருளிடத்தில் இச்சையை அதிகரித்துக் கொள்கிறானோ அந்த அளவு அந்தப் பொருளால் அவனுக்கு துக்கம் உண்டாகிறது. இத்தகைய இச்சைகளை, ஆசைகளை எவன் ஒருவன் துறக்கிறானோ அவன் மேன்மையை அடைகிறான்.

அத்தகைய மேன்மையானவர் 'என் கணவர்' என்று நீங்கள் குறிப்பிடுகின்ற 'என் குருநாதர்.'

குரு 'செய்' என்று சொல்வதற்கு முன்னால் குறிப்பறிந்து செய்ய வேண்டும். அவருடைய வாக்கிலிருந்து வருவதெல்லாம் வேதம். ஏனென்றால் குரு மெய்மையான ஞானத்தை— பிரம்மத்தைக் கண்டவர். அவருடைய வாக்கிலே சத்தியத்தைத் தவிர பிறிதொன்று வராது.

மகனீயர்கள் வாக்கிற்கு விசேஷ சக்தி உண்டு.

குரு வாக்கினால் மட்டுமன்றி அருட்பார்வையாலும் அனுகிரஹிக்கிறார். இது அவரின் விசேஷ தர்மம்.

குரு வாக்கின்படி நடப்பது கஷ்டம் போல் தோன்றினாலும் அது பின்னர் நன்மையே புரியும்.

தன்னை அநந்யமாக பக்தி சிரத்தையுடன் ஆராதிப்பவர்களை அனுகிரஹிப்பது குருவின் விசேஷ தர்மம்.

சிஷ்யர்களின் விசேஷமான தர்மம் குருவைப் போற்றிக் கொண்டாடுவது (ஆச்ரயிப்பது.)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



என்னுடைய குருநாதரை அவ்வாறு போற்றிக் கொண்டாடும் சிஷ்யையே அடியவள். அவரை என் கணவர் என்ற ஸ்தானத்தில் வைத்து நான் பார்த்ததில்லை; அவ்வாறு பார்க்கவும் முடியாது.

படகில் ஏற்படும் சிறு ஓட்டையில் வெள்ளம் புகுந்து படகை மூழ்கடித்துவிடும்.

மனம் என்ற படகில் பக்தி என்ற சிறிய ஓட்டையைப் போட்டு விட்டால், குருவின் அருள் என்ற நீர் மனதிலே புகுந்து மனதைப் பேரின்ப வெள்ளத்திலே மூழ்கடித்து விடும்.

ஒருவன் குருவை அலைந்து தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சாஸ்திரம் சொல்லுகிறது.

ஒருவனுடைய பூர்வ புண்ணியமே அவனை குருவிடம் கொண்டு சேர்க்கிறது. குரு என்று ஒருவரை ஏற்றுக் கொண்டபின் அவர்மீது பூரண நம்பிக்கை கொள்ள வேண்டும். அவர் எது சொன்னாலும் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்க வேண்டும். ஆனால் என்னுடைய குரு என்னைத் தேடிவந்து ஆட்கொண்டார். அடியவளுக்கு இதைவிடப் பெரிய பேறு என்ன வேண்டும்?

நமக்கு எது நல்லதோ அதனையே அவர் கூறுவார் என்ற நம்பிக்கை வேண்டும்.

மனித ஜன்மத்தை அடைந்த பகுத்தறிவுள்ள பெண்களும், அனைத்து வருணத்தாரும் ஞானசாதனத்தைப் பெறவேண்டாமா? ஒவ்வொரு வர்ணத்தவரும் அவரவர்களுக்குரிய தர்மங்களை நெறிமுறை பிறழாமல் செய்து வந்தால் அவர்களும் பிரம்மத்தை அடைய அருகதையுடையவர்கள் அல்லவா! அவர்களும் பிரம்மானந்தத்தை அடைதல் வேண்டாமா? ஸ்தீரிகளும் ஞான மார்கத்தை அடைய தகுதிபெற்றவர்கள் என்பதை உலகத்திற்கு உணர்த்த அவதாரம் செய்தவர் என் குருநாதர். ஆத்மபோதத்தில் திளைத்து இருக்கும் அவருக்கு உற்றதுணையாக இருப்பதுதானே என்னுடைய பெரும் பேறாகும். அதைவிடுத்து இல்லறத்தில் ஈடுபடுவது அடியவளுக்குப் பெருமை சேர்ப்பதாகுமா?'

ஜானகி அதிகம் படித்தவரல்லர். தகப்பனாரின் வேதமந்திர கோஷங்களையும், சாஸ்திர போதனா முறைகளையும் வீட்டிலிருந்தபடியே கேட்டவர்தாம். அவர் இவ்வாறு தத்துவஞானம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பற்றித் தெளிவாக எடுத்துரைத்தது தாய், தகப்பன், உறவினர் களுக்கு பெருவியப்பாக இருந்தது.

இந்த விஷயத்தில் மேற்கோண்டு பேசுவதற்கு ஒன்றுமில்லை என்று புரிந்துகொண்டனர்.

மகாசந்நிதானமும், ஸ்ரீஸ்வாமிகளும் மந்தஹாசப் புன்னகையுடன் ஜானகி அம்மையார் பேசுவதை அங்கீகரித்துப் பாராட்டுவதுபோல் அமர்ந்திருந்தனர்.

இந்த நிலையில் ஜானகி அம்மாள் மீண்டும் பேசத் தொடங்கினார்: 'என் குருநாதருக்கு அடியவளின் வேண்டுதல் ஒன்று உள்ளது. அதை ஸ்வாமிகள் மனம்உவந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்றார்.

அவரின் வேண்டுதல் என்ன ?

"குலம்பொலியக் குடிபொலியக் குணம்பொலியக் கோவேந்தர்
வலம்பொலிய மகம்பொலிய வளம்பொலிய மணம்பொலியப்
புலம்பொலியப் பொன்பொலியப் பொருள்பொலியப் புகழ்பொலிய
நிலம்பொலிய நலம்பொலிய நெற்பொலியிட் டார்களமர். "

"உருத்திராக்க மாலை அணிந்து சிவன்தன்
திருவடியைப் பக்தியினால் தம்முள்ளே போற்றின்
கருவோடு வந்த வினையெல்லாம் தீர்ப்பான்
மருவிலா சுந்தர தெய்வம். "

யோகீந்தரர் ஜானகி அம்மையாரின் பெற்றோர் ,மாமி,மாமன் ஆகியோரைப் பார்த்துக் கூறினார்: 'சுந்தரர் நல்ல பழுத்த ஞானி. பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறைதான் இதுபோன்ற மகான்கள் தோன்றுவர்.

பூர்வஜன்மாந்திர சுகிர்த பலத்தால் சிறுவயதிலேயே ஆத்மபோத நிலையை எய்திவிட்டாள் ஜானகி. இருவருக்கும் இல்லறப்பற்று அறவே இல்லை. இவர்களால் உலகம் மேலும் மேலும் க்ஷேமத்தை அடையும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நீங்கள் எவரும் இவர்கள் விஷயத்தில் தலையிடுவது உசிதமன்று. இவ்விருவர் நிலையும் மிக உத்தமமான மேல் நிலையாகும். இவர்களுக்காக நீங்கள் மட்டுமல்ல இந்த உலகமே போற்றிக் கொண்டாடும் காலம் விரைவில் வரும்.'

யோகியார் சொல்லி முடித்ததும், ஜானகி அம்மாள் பேச ஆரம்பித்தார்.

'ஸ்வாமி! இந்த அடியவளின் வேண்டுதல் ஒன்றை என் குருநாதருக்கு பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

சிவதர்மத்தையும், சிவபுண்ணியத்தையும் பரப்பிவரும் இவர் அருளுரைகள் மக்களைச் சென்று சேர வேண்டுமல்லவா?

உலகில் உள்ள எல்லா உயிர்களிலும் ஈஸ்வரன் இருக்கிறான். அவன் கருணை வடிவானவன். அவனுடன் பக்தி கொண்டவர் களை அவர்களிடம் திடமான சித்தம் எவ்வளவு உள்ளது என்று சோதனை செய்து ஏற்றுக் கொள்கிறான்.

மக்கள் எல்லாரும் தன்பால் நம்பிக்கை கொள்வதற்காக தெய்வமே ஆயினும் சில திருவிளையாடல்களை நடத்த வேண்டியுள்ளது.

மகான்கள் சித்து வேலைகளைத் தெரிந்து வைத்திருந்தாலும் அவற்றை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. அவசியம் இருந்தால் மட்டுமே பயன்படுத்துவர். சித்து விளையாட்டுகளில் கட்டுப்பட்டால் மனது அதில் மட்டுமே லயிக்கும். எடுத்த அவதாரபலன் முழுமையாகக் கிடைக்காமல் போய்விடும் என்பதறிந்தவர் குருநாதர்.

அவருடைய சத்பிரசங்கத்தின் பலன் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமாயின் இந்த அடியவளின் கோரிக்கையை செவிமடுத்து அனுகிரகிக்க வேண்டும். அவர் அவதூத நிலையில் பிரம்மேந்திராள் போல இருப்பது நியாயமானதுதான். அவருக்கு உடையும், பூணூலுமே சுமைதான். ஆனால் தங்கள் மீது அன்பு வைத்தோர் அவரைப் பார்க்கவும், அவர் சொல்வதைக் கேட்கவும் வேண்டுமல்லவா? அவர் உபதேசப்படி நடக்க வேண்டும் என்ற எண்ணம் பக்தர்கள் மனதில் வேரூன்ற வேண்டும் அல்லவா? அவர் சொல், உபதேசம் ஆகியவைகளைக்கேட்டு நல்வழி நடக்க



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வேண்டும் அல்லவா? மக்களுக்கு அவரின் உருவகக் காட்சி மனதில் பதிய வேண்டும் அல்லவா?

அவதூத ஆசிரமத்தின் உயர்தரமான அறிவு நிலையை எட்டாத மக்களுக்கு அவரின் அவதூத நிலையின் மகிமை பற்றி என்ன தெரியும்?

இந்த உன்னதப் பிறவியின் அவதூத நிலையின் தாத்பரியத்தை ஜகத்பிராந்தியிலே உள்ள எளிய மக்கள் எவ்வாறு உணர்ந்து கொள்வர்? அவதூத நிலையை கேலிபேசும் மக்களும் இருக்கிறார்கள் அன்றோ? என் குருநாதர் கேலிக்குரிய பொருளாவதை அனுமதிக்க முடியுமா?

அத்தகைய மக்களிடத்தும் நம்பிக்கையும், மதிப்பும்,பக்தி விசுவாசமும் உயர வேண்டாமா?அது குறைவுபட்டுக் கெட்டுவிடக் கூடாதல்லவா? அவர்களுக்கு என் குருநாதர்மேல் பக்தியும், பயமும்,மரியாதையும், மதிப்பும், ஆகர்ஷண சக்தியும்,வசீகரமும் தானாகவே ஏற்பட வேண்டாமா?

அவர் சொல்லுக்கு கௌரவம் செலுத்தும் புத்தியும்,அவர் சொற்படி நடக்க வேண்டும் என்கிற வைராக்கியமும் மக்களுக்கு ஏற்பட வேண்டாமா?

அவர் உலகத்திற்கு குரு ஸ்தானமாய் இருந்து ஜீவர்களைக் கடைத்தேற்றும் அவதார புருஷரென்று இவரைப் போற்ற வேண்டாமா? இவரிடம் அத்தனை ஈர்ப்பு சக்தியல்லவா அடங்கிக் கிடக்கின்றது.

இவற்றை எல்லாம் என் குருநாதர் மனதில் கொண்டு இந்த அவதூத நிலையை மாற்றிக்கொண்டு அடியவளை அனுக்கிரகிக்க வேண்டும். சிந்தித்து தக்கதொரு முடிவிற்கு வர பிரார்த்திக்கிறேன். அறியாமையில் அதிகப்பிரசங்கித்தனமாக எதுவும் அடியவள் பேசி இருந்தாள் மன்னித்து விடவும்.'

அங்கு கூடியிருந்த பெரியவர்கள் ஜானகி அம்மையாரின் பேச்சைக்கேட்டு அப்படியே திக்பிரமை பிடித்து சிலையாய் இருந்தனர். ஸ்ரீஸ்வாமிகள் மட்டும் முகத்தில் எப்பொழுதும் தவழும் புன்னகையுடன் விரைந்து அவ்விடம் விட்டகன்றார்.

சிறிது பொழுதில் மீண்டும் அங்கே வந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எப்படி வந்தார்?

"தாய்தந்தை யில்லாமே தனித்தவருட் பிழம்புருவை
யாய்தந்து விழிமாலை யகங்குழையத் தரிசிக்க
நோய்தந்த பழிவிலக னோக்கினான் விடவரவின்
வாய்தந்த பெருமதிபோல் விளங்கும் அரிமழமருத் துவனே."

"தேடி அலைந்தாலும் கிட்டாத செல்வமிது
நாடி நமைவந் தடைந்தது, நல்லவர்
கோடி தவம்செய்தும் காணாத தெய்வமிங்கே
ஓடி வருகுது காண்."

திரும்பி வந்த சுந்தர ஸ்வாமிகள் கௌபீனம் அணிந்திருந்தார்; கழுத்தை பட்டுக் கயிற்றில் கோர்த்துக்கட்டிய ஒற்றை உத்ராக்ஷம் அலங்கரித்தது.

இந்நிலையிலேயே தாம் எப்போதும் விளங்கப் போவதாகக் கூறினார்.

மற்றவர்கள் விடைபெற யோகியாரும்,சுந்தர ஸ்வாமிகளும் தனித்து இருந்தனர்.

'தாங்கள் யார் என்பதை அறிந்து கொண்டேன். தங்கள் தரிசனம் கிடைத்தது என்னுடைய பெரும் பாக்கியம். தங்களிடம் வேதாந்த விஷயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டி உள்ளது.' என்று யோகியார் கூறினார்.

ஒரு ஆசானாய் இருந்து அவரின் ஐயங்களைத் தீர்த்து வைத்தார் ஸ்வாமிகள்.

ஒரு ஊரில் மூன்று நாள்களுக்கு மேல் தங்கியிராத யோகியார் ஒருவாரம் தங்கியிருந்து பாடம் கேட்டார்.

அதன் பிறகு ஸ்வாமிகளிடம் விடைபெற்று கால்நடையாக மேலக்கல்லூர்,அரியநாயகிபுரம், திருப்புடைமருதூர் ஆகிய ஸ்தலங்கள் நோக்கிப் பயணமானார்.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் நடந்தது 1848, ஜனவரி, பிலவங்க வருஷம் மார்கழி மாத இறுதியில்.

அப்பொழுது ஸ்ரீசுந்தரஸ்வாமிகளுக்கு 16 வயது ஒரு மாதம். ஜானகி அம்மையாருக்கு 12 வயது நான்கு மாதம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீஸ்வாமிகள்,நாராயண சிவம், ரங்கநாத சிவம்,சேஷாசல தீக்ஷிதர், ஜானகி அம்மையார் ஆகியோருடன் திருநெல்வேலி மாவட்டத்தின் பலபகுதிகளுக்கும் விஜயம் செய்து சூதசம்ஹிதை, சிவபுராணம் ஆகியவற்றைப் பிரவசனம் செய்து வந்தார்.

ஸ்ரீஸ்வாமிகளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, சற்றே திருநெல்வேலி மாவட்டத்தை விட்டு, சில மனிதர்களையும், நிகழ்வுகளையும் அறிய வேண்டியுள்ளதால் தஞ்சாவூர் மாவட்டம் நோக்கிப் பயணம் செய்வோம்.

கும்பகோணத்திற்கு அருகில் கணபதி அக்ரஹாரம் என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரில் பரம்பரை பரம்பரையாக வேத வித்தகர்களாகவும், ஸ்ரீவித்யா உபாஸனை உடையவர் களாகவும் உள்ள குடும்பம் ஒன்று நியம நிஷ்டைகளில் சிறந்து விளங்கியது.

அந்த வம்சத்திலே மகாகணபதி என்பவர் இருந்தார். நான்கு வேதங்களிலும் கரைகண்டவர். ஸ்ரீவித்யா உபாசனை செய்து நெறி தவறாமல் வாழ்ந்து வந்தார்.

வேதம்,வியாகரணம், தர்க்கம், சாஸ்திரம் ஆகியவற்றில் இவர் கூறியதை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

பதினெட்டு வயதிலேயே சகலசாஸ்திரங்களிலும் விற்பன்னராய்த் திகழ்ந்ததால் வயதில் பெரியவர்களும் அவருக்கு மரியாதை செலுத்தினர்.

ஸ்ரீசக்ர பூஜையில் திரிகரண சுத்தியோடு விளங்கியதால் அவர் சொல்லுவது அப்படியே பலிதமாகி வந்தது. தேவியே அவரிடம் நேரில் பேசுவதாக மக்கள் நம்பினர். உண்மையான பக்தர்களிடம் அம்பாள் நேரில் பேசுவாள் என்ற மனோபாவம் அவ்வூர் நல்லவர்களிடம் இருந்தது.

வழக்கம்போல் ஸ்ரீசக்ரபூஜையை விதிப்படி செய்து கொண்டிருக்கும் பொழுது அம்பாள் நேரில் தோன்றி அவருக்கு ஒரு ஆணையிட்டாள்.

அம்பாள் என்ன ஆணையிட்டாள்?

"சீர்வளரும் மறைபுகன்ற திருவாக்கா லிடப்பெற்ற கீர்த்திவாய்ந்த
பேர்வளரு மாணிக்க வாசகநம் பெருமானார் பேசியாங்கு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நார்வளரும் தென்பாண்டி நாடுசிவ லோகமென்ன ஞாலமோரு
மேர்வளரு நன்னாட்டுக் கோட்டையதி லிலங்குசிவ
புரமென்பாரால்."

– ப்ரும்மஸ்ரீ சிவானந்த ஸ்வாமி அவர்களின் மாணாக்கர் அரிமழம் கா. ந. நரசிம்ம சாஸ்திரி அவர்களின் புத்திரர் ஸ்ரீகாமாக்ஷி சாஸ்திரி அவர்கள் இயற்றியது. இவர்கள் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட வம்சாவழியினர். ஜோஸிய சாஸ்திரத்தில் கரைகண்டவர்கள். மிகப் பிரபலமாய் விளங்கியவர்கள்.

(காஞ்சி மகான் அவர்களின் ஜீவியகாலத்தில் அவரை நேரில் தரிசிக்கும் அரிமழம் அன்பர்களிடம் ,பெரியவர் மூன்று விஷயங்களை விசாரிப்பார்.

1. மகான் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் அதிஷ்டானம் எப்படி நடந்திண்டிருக்கு ?
2. வைத்தியர் குடும்பம் நன்னா இருக்கா ?
3. காமாக்ஷி ஜோஸியர் குடும்பத்துக்காரா எங்கே இருக்கா ?

(இரண்டு சந்தர்ப்பங்களில் பெரியவாளின் சந்நிதானத்தில் அடியேனும் இக்கேள்விகளை பெரியவர் திருவாயால் கேட்கும் பேறு பெற்றுள்ளேன்.

மேலே உள்ள செய்யுளை எழுதிய ப்ரும்மஸ்ரீ காமாக்ஷி சாஸ்திரி அவர்கள் ஸ்ரீஸ்வாமிகளின் அத்யந்த பக்தர். மிகச் சிறந்த ஜோஸியராக விளங்கியவர். அவருடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இன்று அகமதாபாத்,கரூர் நகரங்களில் வசித்து வருகின்றனர்.)

"மருத்துவம் ஆய்ந்தவன்நீ ;என்றும் அடியார்
தரித்திரம் நீக்குவாய்நீ; அன்பர் அகத்தில்
அருளினை அள்ளியே தந்தாய்நீ; எங்கள்
சரித்திர நாயக போற்றி!"

அம்பாள் மகாகணபதி அவர்களுக்கு உத்தரவிட்டார்:

'உன்னுடைய வாசஸ்தலத்தை மாற்றிக்கொள். கோதாவரி நதி தீரத்திற்கு வா!அங்கே காத்திருக்கிறேன்.'



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தன்னுடைய இருபத்தி ஒன்றாம் வயதில் கணபதி அக்ரஹாரத்தை விட்டு கோதாவரி நதி தீரத்திலுள்ள இராஜமஹேந்திரம் சென்றார்.

அவருடைய ஆசார அனுஷ்டானத்தையும்,ஆழ்ந்த பக்தியையும், ஆழமான பல்விற்பன்ன சாஸ்திர அறிவையும் கண்டு ஊர்மக்கள் அவரைக் கொண்டாடினர். எவ்விதக் கவலையும் இன்றி தேவி உபாசனையை சிறக்கச் செய்து வந்தார்.

நூற்றுக் கணக்கான மாணவர்கள் அவரை நாடி வந்து சிஷ்யர்கள் ஆனார்கள்.

மகாகணபதி சாஸ்திரிக்கு நரசிம்மன் என்ற புதல்வர் உண்டு. ஏழு வயதில் அவருக்கு உபநயனம் செய்வித்து, சகல வேதங்களையும், சாஸ்திரங்களையும் கற்பித்தார். நரசிம்மனும் தந்தையைப் போலவே அனைத்திலும் சிறந்து விளங்கினார். ஸ்ரீவித்யா உபாசனைக்கு மூலமந்திரமாக உள்ள 'பாலா' மந்திரத்தை போதித்தார். நரசிம்மனிற்கு இருபத்தோரு வயது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது குடும்ப, ஆன்மிகப் பொறுப்புகளை அவரிடம் ஒப்படைத்து விட்டு க்ஷேத்ராடனம் கிளம்பி விட்டார்.

மகாகணபதி சாஸ்திரிகள் ஸ்ரீதேவி உபாசனையுடன் ஸ்ரீஉச்சிஷ்ட கணபதி உபாசனையிலும் சிறந்து விளங்கினார். ஸ்ரீதேவி உபாசனையை மகனுக்கு உபதேசித்துவிட்டு ஸ்ரீ உச்சிஷ்ட கணபதி உபாசனையை மட்டும் தாம் மேற்கொண்டார். பொதுவாக எவரேனும் ஒரு வித்தை –கலை – கைவரப் பெற்று இருந்தால் தம் ஆயுட் காலத்திற்குள் மற்றவருக்கு அதை அவசியம் கற்றுக் கொடுத்தல் வேண்டும் என்பது சாஸ்திர நியதி.

அவ்வாறு செய்யாதவர்கள் பிரம்மராக்ஷஸராகப் பிறந்து, தாகத்திற்குத் தண்ணீர்கூடக் கிடைக்காமல் அலைக்கழிவர்.

மகாகணபதி சாஸ்திரிகள் இமயமலை சென்று கடுந்தவம் இயற்றினார். எதையும் சாதிக்க வல்ல அற்புத சக்திகளை அடைந்தார். அவருடைய ஆற்றலைக் கண்டு அங்கிருந்த மக்கள் அவரை 'கணபதி முனீஸ்வரர்' என்று அழைத்தனர். சில ஆண்டுகள் தபஸ் செய்த பிறகு தன்னுடைய ஐம்பத்தொன்றாவது வயதில் காசியம்பதியை அடைந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சில ஆண்டுகள் சென்றன.

ஒருநாள் மணிகர்ணிகா கட்டத்தில் ஸ்நானம் செய்ய இறங்கினார். நீரில் இறங்கியவர் சிலநொடிகளில் அனைவரின் கண்களிலிருந்தும் மறைந்தார். கூடி இருந்தவர்கள் ஆற்றின் சுழல் இழுத்துச் சென்று விட்டது என்று நினைத்தனர். ஒரு சிலர் முதலை இழுத்துச் சென்றுவிட்டது என்று கூறினர். நதியில் அவர் உடலும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவரின் யோக நிஷ்டையில் நம்பிக்கை கொண்ட ஒரு சிலர் அவர் கங்கை ஆற்றின் அடியில் சமாதி நிஷ்டையில் அமர்ந்து விட்டார் ,மீண்டும் அவர் விரும்பும் போது மேலே வருவார் என்றனர். அதை ஏற்றுக்கொண்ட மக்கள் யோகசமாதிநிஷ்டை கலைந்து அவர் வெளியில் வரும்பொழுது அவரிடம் ஆசிகள் பெறக்காத்திருந்னர்.

ஒருநாள் இருநாட்கள் அல்ல; ஆறுமாதங்கள் ஓடிவிட்டன. அவர் ஆற்றின் மேலே வருவதுபோல் தெரியவில்லை.

நாளாக நாளாக அவரை தரிசிக்கக் காத்திருந்த கூட்டம் கட்டுக் கடங்காமல் போயிற்று.

இந்த நிலையில் சுந்தரஸ்வாமிகள் அங்கே வந்தார்.

பசி தாகத்தை மறந்து மக்கள் பெருங்கூட்டமாய்க் காத்திருப்பதன் காரணத்தைக் கேட்டறிந்தார்.

'ஆஹா!அப்படியா!அவரை நான் போய் அழைத்து வருகிறேன் என்று கூறி கங்கையில் குதித்தார்; இவரும் காணாமல் போனார்.

இதற்குப்பின் நடந்த நிகழ்ச்சிகளை சுந்தரரின் ஏழு குருநாதர்களைப் பற்றிப் பார்க்கும்போது விரிவாகப் பார்த்து விட்டோம்.

சுந்தரர் எந்தெந்த ஊர்கள் வழியாக காசி வந்தடைந்தார்?

அவர் அனுக்கிரகம் செய்ய வருங்கால சீடர்கள் வசிக்கும் ஊருக்குச் சென்றார்.

அந்த ஊர் எது? பின்னாளில் பிரபலமாக விளங்கப்போகும் அவர்கள் எவர்?

"இத்தகைய சிவநேசர் குழூஉ ச்செறிந்த தன்மையினா லிப்பேரேற்கு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மெய்த்தவ மாறிந்நாட் டுக்கோட்டை யெனுஞ்சிவ புரத்தில்
வுத்தமமாம் வடகீழ்பாற் சுவேதநதி வளத்ததொரு நகருமுண்டோங்கு
மத்தாதிருத் தளியனைய ததனாமம் அரிமழமென் றறைவர் மேலோர்."

❀❀❀❀❀

"கல்லாத நானும் கவிபாட உன்அருளால்
செல்லாத வார்த்தையைச் செப்பனிட்டு சீராக
சொல்லிற்குள் வித்தை செயும்நல்ல வித்தகனே
பொல்லாத ஆளப்பா நீ."

மகான்களைத் தேடி பலர் வருவார்கள். ஆனால் இறைவனும், மகான்களும் ஆட்கொள்ள வேண்டி சிலரைத் தேடிச் செல்வர். அவர்கள் பூர்வஜன்ம புண்ணியம் செய்தவர்கள்.

ஜானகி அம்மையார் கூறினாரே 'சிலர் இறைவனைத் தேடிப் போகிறார்கள். ஆனால் என்னை ஆட்கொள்ள இறைவனே தேடி வந்தார்.' என்று அதைப் போன்ற நிகழ்ச்சி இது.

சுந்தரர், பாதயாத்திரையாகக் கிளம்பி காசி செல்லும் வழியில் ஒரு குடும்பத்தை ஆட்கொள்ள விரும்பி அந்த ஊருக்கு வந்தார். தம்முடைய திரிகால ஞானதிருஷ்டியின் சக்திவைபவத்தால் ஏதோ ஒரு நன்மையை மனதிற்கொண்டு பூப்பிரதக்ஷணம் செய்து கொண்டு காசியாத்திரை செய்யக் கிளம்பி விட்டார்.

'சித்தன் போக்கு சிவன் போக்கு' என்பார்கள்.

அந்த "சிவனே" அவர்தானே! அவர் போக்கின் தாத்பர்யம் எவரே அறிவார்!

1848, பிலவங்க வருஷம் தை மாதம் இந்த யாத்திரை தொடங்கியது. பல க்ஷேத்திரங்களை தரிசித்து அங்கே தங்கி மிக நிதானமாக யாத்திரையை நடத்தி வந்தார்கள்.

திருநெல்வேலி, திருச்செந்தூர், மதுரை, பழனி, திருச்சி, திருவானைக்கா, தஞ்சை, திட்டை ஆகிய முக்கிய தலங்களைத் தரிசித்து பின்பு வையைச்சேரி என்ற கிராமத்தை அடைந்தார்.

அந்த ஊரில் துரைசாமி ஐயர்–அருந்ததி அம்மாள் என்ற ஆதர்ச தம்பதிகள் இருந்தனர். ஸ்ரீஸ்வாமிகளைப் பற்றி அதிகம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கேள்விப்பட்டிராத போதும் அவரைப் பார்த்ததும் மாபெரும் மகான் என்று தெரிந்து கொண்டனர். அவரை பக்தியுடன் முறைப்படி தம் வீட்டிற்கு பிக்ஷை ஏற்கவரும்படி வேண்டினர்.

அவர்கள் வீட்டில் ஸ்வாமிகளின் பொற்பாதங்கள் பட்டன.

துரைசாமிஐயர்–அருந்ததி தம்பதியினருக்கு நான்கு புதல்வர்கள். முதல்வர் சாம்பமூர்த்தி; இரண்டாவது புதல்வர் ராமசாமிசிவன்; மூன்றவது புதல்வர் வைத்தியநாதசிவன்; நான்காவது புதல்வர் சிவராமசர்மா என்கிற மீனாக்ஷிஅப்பாசாமி.

தம்முடைய அருளாசிகளை வாரி வழங்கினார் அக்குடும்பத்தினருக்கு.

(இச்சரிதத்தின் தொடக்கத்தில் ராமசாமிசிவன் அவர்கள் ஸ்வாமிகள் மேல் இயற்றிய துதிகள் தொடர்ச்சியாக இடம் பெற்றன. இவருடைய இளவல் மகாவைத்தியநாத சிவன் இசை உலகினரால் போற்றி கொண்டாடப்பட்டு சங்கீத உலகின் பிதாமஹராக விளங்கினார். சரிதத்தின் தொடர்ச்சி கருதி ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளை இப்போதே சுருக்கமாகப் பார்த்து விடுவோம்.)

ஸ்ரீசுந்தர ஸ்வாமிகள் சரிதத்தின் நிகழ்வுகளை விரிவான குறிப்புகளாக எழுதியவர் "வைணிக, காயக"; "மகாவித்வான்"; "கலாசிகாமணி" V.S.கோமதி சங்கர ஐயர் அவர்கள் ஏனோ நூலாக வெளியிடவில்லை.

இவர் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வீணை விரிவுரையாளராக செவ்வனே பணியாற்றியவர்.

இவரின் குறிப்புகள் இந்த சரிதம் எழுத வழிகாட்டியது.

"இசைஉலகில் மகா வைத்தியநாத சிவன்" வாழ்க்கை வரலாற்றை இரண்டு பாகங்களாக டிசம்பர், 1970–ல் கோமதி சங்கரஐயர் வெளியிட்டுள்ளார். இவரின் தந்தை பிரபல சங்கீத வித்வான் வாசுதேவநல்லூர் 'பல்லவி' சுப்பையா பாகவதர் என்பது. இவர் மகா வைத்தியநாதசிவன் அவர்களிடம் இசை பயின்றார்.

இவர் எழுதிய குறிப்புகளை வைத்து நானூறு பக்கங்களுக்கு மேல் மகா வைத்தியநாதசிவன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதி உள்ளார் கோமதிசங்கர ஐயர் அவற்றில் முக்கியமான, நம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்வாமிகள் தொடர்புடைய நிழ்வுகள் என்ன? என்ன? என்று பார்ப்போம்.

"செல்வம் வேண்டினுஞ் சிந்தையுண் மகிழ்ச்சியைச் செறிக்குஞ்
கல்வி வேண்டினுங் நான்முறை வேண்டினுங் கதியின்
மல்க வேண்டினும் வேண்டிய வகையெலாம் வழங்கும்
பல்க வேண்டுவார் பரவிய வரிமழப் பதியே."

"ஊருணி சூழ்ந்த அரிமழம் ஊரிது;
பேரரு ளாளர் மலிந்த நகரிது;
தேடியே வந்து சமாதி அடைந்தவன்;
கேடின்றிக் காப்பான் நமையே."

(V.S.கோமதி சங்கர ஐயர் எழுதிய 'இசை உலகில் மகா வைத்தியநாத சிவன்' என்ற நூலிற்கு வீணைவித்வான் S. பாலசந்தர் அவர்கள் சுமார் இருபத்தைந்து பக்கங்கள் அளவில் ஆங்கிலத்தில் அருமையான முன்னுரை வழங்கியுள்ளார். நம் ஸ்வாமிகளைப் பற்றியும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மகாமகோபாத்திய தக்ஷிணாத்யாய டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்களும் மகாவைத்தியநாத சிவன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை சிறு நூலாக எழுதியுள்ளார். சாமிநாத ஐயர் அவர்களும் ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளின் மேன்மையைப் போற்றியுள்ளார். அவரின் கருத்து ஆரம்ப அத்தியாயம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

வைத்தியநாத சிவன் அவர்களின் தந்தை பஞ்சநதம் என்கிற துரைசாமி ஐயர் சிறந்த சிவபக்தர். திருவையாற்றிலே கோயில் கொண்டுள்ள பிரணதார்த்திஹரர்–தர்மசம்வர்த்தினி ஆகிய மூர்த்தங்களிடம் நிரம்ப பக்தி உண்டு. இவர்கள் சந்நிதிகளில் மனமுருகி கீர்த்தனைகள், பஜனைப் பாடல்களை மனமுருகிப் பாடுவார்.

தம் இரண்டு குழந்தைகளுக்கு தக்க ஆசிரியரை வைத்து சங்கீத பாடங்களை முறைப்படி பயிற்றுவிக்க ஏற்பாடுகள் செய்தார். அன்று மிகப் பிரபலமாக விளங்கிய ஆனைஐயா (ஆனை–மூத்தவர்;



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஐயா–இளையவர்) என்பவர்களிடம் சங்கீதபாடம் கற்றுக் கொடுக்க ஏற்பாடாகியது.

ராமசாமி சிவன்,வைத்தியநாத சிவன் இருவரும் சங்கீத பாடங்கள் கற்றுக் கொள்வதில் மிகவும் ஆர்வம் காட்டினர். அப்பொழுது ராமசாமிசிவன் அவர்களுக்கு வயது 5;வைத்தியநாத சிவன் அவர்களுக்கு வயது 3.

இந்தச் சூழலில்தான் ஸ்ரீஸுந்தரஸ்வாமிகள் வையச்சேரி வீட்டிற்கு விஜயம் செய்தார்.

அனைவரும் ஸ்வாமிகளின் திருப்பாதங்களில் வணங்கி எழுந்தனர். பக்கத்தில் எத்தனையோ கிராமங்கள்,வீடுகள் இருக்க ஸ்வாமிகள் வையைச்சேரி துரைசாமி ஐயர் இல்லம் வந்ததில் ஏதேனும் காரணம் இல்லாமலா இருக்கும் ?

ஸ்வாமிகளின் தீர்க்கமான அருட்பார்வை ராமசாமி சிவன், வைத்தியநாத சிவன் ஆகியோர்மேல் இறங்கியது. இக்குழந்தைகள் பூர்வஜன்ம சுகிர்தத்தால் ஒரு உத்தமமான மகானின் ஆசிகளைப் பெற்றனர். இந்த அனுக்கிரக சக்தி மூலம் அவர்கள் உலகில் பிரகாசிக்க வேண்டும் என்ற ஜன்மாந்திரப் புண்ணிய பலனை அளிக்க காசி யாத்திரையை ஒரு வியாஜ்யமாகக் கொண்டு சுந்தரஸ்வாமிகள் அங்கே எழுந்தருளினார் எனக்கொள்ள வேண்டும்.

அன்றும், மறுநாளும் அந்த வீட்டில் தங்கிவிட்டு தம் காசியாத்திரையைத் தொடங்கினார் ஸ்வாமிகள்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு இவ்விரண்டு சிறுவர்களின் வாழ்க்கையில் எல்லாம் ஏறுமுகந்தான்.

ஏழுவயதிற்குள் வைத்தியநாத சிவன் சங்கீதசாஸ்திரத்தின் சகல நுணுக்கங்களையும் ஐயம்திரிபற கற்றுக் கொண்டார். ராகம், தானம், பல்லவி, நிரவல், ஸ்வரம் இவைகளை இசை இலக்கணம் வழுவாமல் கற்றுத் தேர்ந்து தன்னிகரற்று விளங்கினார். ராமசாமிசிவனோ தேவாரம், திருவாசகம், கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல்கள் என்று தமிழ்ப் பண்களை மேடைகளில் பாடி மக்களை மகிழ்வித்தார். இவ்விருவரும் சேர்ந்தே கச்சேரிகள் நடத்தி வந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இருவருக்கும் தங்கத்தைப்புடம் போட்டது போன்ற பொன்னிறம், நெற்றி, உடல், கைகள் முழுவதும் நிரம்பிய திருநீற்றுப் பூச்சு, கழுத்தில் உத்திராக்க கண்டிகை, கனிவு ததும்பும் உள்ளம், குளிர்ந்த பார்வை, தேனினும் இனிய பேச்சு, தேஜஸ் ஜொலிக்கும் முகமண்டலம். அடக்கமான தோற்றம், சுந்தர ஸ்வாமிகளின் அருளால் மேற்கொண்ட சிவபூஜை, சிவபக்தி, சிவபஜனை ஆகியவற்றுடன் கூடிய எளிமை. இவை அனைவரையும் கவர்ந்தன.

இதற்கும் மேலாக வைத்தியநாத சிவனுக்கு அமைந்த "கௌள சாரீரம்."

அது என்ன "கௌளசாரீரம்"?

(இன்னும் சில நாட்களுக்கு சங்கீதம் தொடர்பான பெயர்களும், நிகழ்ச்சிகளுமே இடம்பெறும். இவை அனைத்துமே நம் ஸ்வாமிகளின் அனுக்கிரக மகிமையை விளக்குவதாகவே அமையும்.)

"கமலையிற் பிறக்கக் காசியி லிறக்கக் கனகவம்
பலமதைக் காண
வமலனே சோதி யாகிய வரையா மருணையை நினைத்திட வவர்க்கு
மும்மலமு மகன்ற முத்தியுண் டென்பர் முடிவிலா
வரிமழம் கேட்கில்
விமலாமா மதனைத் தருமெனி லெவரும் விழைதலப்
புகழ்சொலற் பாற்றோ."

"ஏட்டினில் ஏறிய சொற்கலெல்லாம் உன்எண்ணம்
பாட்டினில் தோன்றிடும் வார்த்தைகள் உன்வண்ணம்;
காட்டினில் நின்றலையும் என்மனதைக் காத்திடல்
நாட்டியக்கா ராஉன் கடனே"

தம்முடைய வாழ்நாளில் ஒவ்வொரு நொடியையும் இசைக்காகவே அர்ப்பணித்தவர் வைத்தியநாத சிவன்.

இவருடைய தோற்றம் : **26.05.1844.** மறைவு : **26.01. 1893.**

இவருடைய மூன்றாவது வயதிலிருந்து, அதாவது 1847 முதல் நம் ஸ்வாமிகளுடனான பரிச்சயம் தொடங்கியது. ஸ்வாமிகள் தஞ்சாவூர் பகுதியில் சூதசம்ஹிதை, சிவபஜனை, சிவமஹிமை பற்றி பிரவசனம் செய்யப் போகும் பொழுதெல்லாம் வையைச்சேரி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



துரைசாமி ஐயர் வீட்டில் தான் தங்குவார். துரைசாமிஐயரின் வேண்டுகோளை ஏற்று பலமுறை ஸூதசம்ஹிதை பிரவசனம், சிவபுராணம், சிவபஜனை ஆகியவற்றை நிகழ்த்தி உள்ளார். வையச்சேரியைச் சேர்ந்தவர்களும், பக்கத்து ஊர்க்காரர்களும் பெருமளவில் கலந்துகொண்டு மிகவும் பயபக்தியுடன் ரசித்துக் கேட்பார்கள். அவர்கள் மகுடிக்குக் கட்டுண்ட நாகம்போல் ஸ்வாமிகளின் பேச்சில் கட்டுண்டு கிடப்பர்.

ராமசாமிசிவன், வைத்தியநாத சிவன் இருவரும் அன்றைய நாளில் மிகச்சிறந்த வாக்யேகக்காரர்களாக விளங்கினர். கீர்த்தனைகளை இயற்றி அவைகளை ராக,தாள லக்ஷணங்களுடன் பாடுவதில் வல்லவர்களாக இருந்தனர்.

ஸ்வாமிகளின் பேச்சைக் கேட்பவர்கள் மகுடிக்கு மயங்கிய சர்ப்பம் போல் கட்டுண்டு கிடந்ததால் "புன்னகவராளி" ராகத்தில் "சுந்தர சிவனை" என்ற பாடலை இயற்றி கேட்பவர்கள் மத்தியில் பாடுவார்கள்.

வைத்தியநாத சிவன் மிக உன்னதமான சிவபக்தர். எந்த ஊர் சென்றாலும் 'சிவன்கோயில் இருக்கிறதா ?'

என்று கேட்பார். அவ்வூர் சிவனை தரிசித்த பிறகே உணவு எடுத்துக்கொள்வார். சிவன்கோயில் உள்ள ஊர்களில் கச்சேரி செய்ய அழைத்தால் யாதொரு தயக்கமுமின்றி ஒத்துக்கொள்வார். நிர்பந்தம் காரணமாக சிவன்கோயில் இல்லாத ஊருக்குச் செல்ல நேரிட்டால் தன்னோடு எடுத்துச் செல்லும் சிவபூஜை பெட்டியிலுள்ள சிவன் விக்ரஹத்திற்கு பூஜை செய்த பிறகே உணவு உட்கொள்வார்.

கச்சேரியின் நடுவில் பெரியபுராணம், தேவாரம், திருவாசகம் ஆகிய பாடல்களுக்குப் பொருத்தமான இசையமைத்துப் பாடுவார்கள் வையச்சேரி சகோதரர்கள். நடுநடுவே ஸ்ரீஸ்வாமிகளிடம் கேட்ட ஸூதசம்ஹிதைப் பிரசங்கமும் செய்வார் வைத்தியநாத சிவன். அவர் சாரீர வளத்திலும், தாள ஞானத்திலும், பல்லவி பாடுவதிலும், ஸ்வரவின்யாசங்களிலும், உச்சரிப்புத் தெளிவிலும் தன்னிகரற்று விளங்கினார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவருடைய சாரீரத்தை “கௌள சாரீரம்” என்று போற்றினர். கௌள என்பது தென்னைமரத்தில் ஒருவகை. ஓடு வெள்ளையும், மஞ்சளும் கலந்த நிறத்தில் இருக்கும். உள்ளே இளநீர் குளிர்ச்சியாகவும், சுவையாகவும் இருக்கும். இவ்வகையான இளநீர் சிவபெருமான் அபிஷேகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

அதுபோன்றே வைத்தியநாத சிவன் அவர்களின் குரல் குளிர்ச்சியும், இனிமையும் பொருந்தியது. அவருடைய சங்கீதம் ஈஸ்வர அர்ப்பணமானது.

எவ்வாறு சேஷாசல தீக்ஷிதர் அவர்களின் பிரசங்கங்களை ஸ்ரீஸ்வாமிகள் விரும்பிக் கேட்பாரோ அதுபோன்று வையைச்சேரி வைத்தியநாத சிவன் அவர்களின் கச்சேரிகளைக் கேட்பதில் ஆர்வம் அதிகம்.

ஒருமுறை புதுச்சேரியில் வைத்தியநாத சிவன் அவர்களின் கச்சேரி நடைபெற்றது. அதில் ஸ்வாமிகள் கலந்து கொண்டார். அடுத்தநாள் மரக்காணத்தில் கச்சேரி ஏற்பாடாகி இருந்தது.

அவ்வூர் மரக்காயர் ஒருவரின் அலங்கரிக்கப்பட்ட சாரட் வண்டியில் சிவன் சகோதரர்களை அழைத்து வர ஏற்பாடாகி இருந்தது.

சகோதரர்கள் ஸ்வாமிகளைப் பணிந்து மரக்காணம் கச்சேரிக்கு வந்து ஆசிர்வதிக்க வேண்டும் என்றனர்.

ஸ்வாமிகள் அவர்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டார்.

அடுத்தநாள் அந்த சாரட் வண்டியில் பயணப்பட்டு ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்த விழாக்கொட்டகையை அடைந்தனர்.

முதலில் இறங்கிய சிவன் சகோதரர்களுக்கு மாலைகள், பரிவட்டங்கள்,சால்வைகள் என்று மரியாதைகள் செலுத்தினர் விழாக்குழுவினர்.

அடுத்து சாரட் வண்டியிலிருந்து ஸ்வாமிகள் இறங்கினார்.

‘போற்றத்தக்க இசை விற்பன்னர்களுடன் வந்திருக்கும் இந்தப் பண்டாரப் பரதேசி யார் ?’ என்று கூட்டத்திலிருந்து ஒருகுரல் உரத்து எழுந்தது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிறகு என்ன நடந்தது ?

“வளம்பொருந்து மரிமழத்துண் மதிபொருந்தத் துதிபொருந்தக்
களம்பொருந்தக் கறைமழுமான் கரம்பொருந்த வெண்ணீறு
குளம்பொருந்த வளரிறைவன் குணம்பொருந்து தவளநதி
யுளம்பொருந்தப் படிந்தவரே யுளபவத்தல் விடிந்தவரே. ”

“சன்மார்க்கம் தாசானு மார்க்கம் சகமார்க்கம்
சத்புத்ர மார்க்கம் எனமார்க்கங் கள்பல;
சுற்றியே நான்அலைந்தேன் இங்கெல்லாம், உன்சேவடி
பற்றியே உய்ந்தனன் காண்.!”

புதுச்சேரியிலிருந்து சென்னைக்கு, மரக்காணம் என்ற ஊர் வழியாகச் செல்ல ஒரு சாலை உண்டு. அங்கு உப்பளங்கள் அதிகம். இஸ்லாமியர்களின் ஒரு பிரிவினர் ஆகிய மரக்காயர்கள் அதிக அளவில் அந்த ஊரில் வசித்து வந்தனர்.

அங்கே சைவமரபைச் சார்ந்த முதலியார் ஒருவர் இருந்தார். பெரும் செல்வந்தர். தமிழில் நல்ல அறிவுத் திறம் பெற்றவர். நற்காரியங்களுக்கு வாரி வழங்கும் வள்ளல். எத்தனையோ சிறந்த அறக்கொடைகளை வழங்கியவர். அந்த நல்லமனிதரை ஊர்மக்கள் அனைவரும் ஒன்றுகூடிப் பாராட்ட விரும்பினர். அதற்காக பிரம்மாண்டமான விழா ஏற்பாடுகள் செய்தனர். செல்வந்தரின் விருப்பப்படி சிவன் சகோதரர்களின் சங்கீத கச்சேரிக்கு ஏற்பாடு செய்தனர். அந்த விழாவை ஒரு முகமதியரே முன்னின்று நடத்தினார். அவருடைய சாரட் வண்டியில்தான் சிவன் சகோதரர்களும்,ஸ்வாமிகளும் வந்து சேர்ந்தனர்.

ஒரு மகானின் அருமைபெருமை தெரியாத, ஞான சூன்யங்களே ‘பண்டாரம், பரதேசி’ என்ற பதங்களைப் பயன்படுத்தி மகானைக் கேவலப்படுத்துவர். ஆனால் பண்டாரம், பரதேசி ஆகியோரும் உன்னதமானவர்கள் என்பது சிறுமதி யாளர்களுக்குத் தெரியாது. ‘பண்டாரம், பரதேசி’என்று உச்சரிக்கின்ற த்வனியிலேயே தங்கள் வெறுப்பை உமிழ்வர். ஆனால் மகான்களுக்கு இந்தக் கடுமொழிகள் எந்த அவமதிப்பையும் ஏற்படுத்தாது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வண்டியிலிருந்து இறங்கிய ராமசாமி சிவன்,வைத்தியநாத சிவன் ஆகியவர்களுக்குக் கிடைத்த மரியாதையும் ,அவர்களுடைய மந்திரோபதேச,ஆன்மீக குருவான ஸ்ரீசுந்தரருக்குக் கிடைத்த மரியாதையும் சிவன் சகோதரர்களை மனம் கலங்க வைத்தது. ஆனால் ஸ்வாமிகளோ மரக்காயர் கூறியது காதில் விழாதது போலவும்,எதுவும் நடக்காதது போலவும்

எப்பொழுதும் முகத்தில் தவழும் மந்தஹாசப் புன்னகையுடன் இருவருடனும் நடந்து வந்தார்.

ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளிடம் சகோதரர்கள் இருவரும் மிகுந்த பயபக்தியுடனும்,பணிவுடனும் நடந்து கொள்வதை மரக்காயர் கவனித்தார்.

மரக்காயர் தம் நண்பர்களிடம் 'ராமசாமி சிவனும், வைத்தியநாத சிவனும் இசையில் நற்றிறம் வாய்ந்த மேதைகள், தமிழை நன்கு கற்ற புலவர்கள். ஒரு சந்நியாசி, ஒரு கோவணாண்டி, சோறுதின்னி அவரிடம் என்ன யோக்கியதை இருக்கிறது ? ஏன் அவரிடம் இவ்வளவு பணிவாக நடந்து கொள்கின்றார்கள் ?' என்று ஏளனமாகக் கூறினார்.

இந்த ஏளனப் பேச்சையும் தொலைவில் அமர்ந்திருந்த ஸ்ரீஸ்வாமிகள் தம் ஞானதிருஷ்டியால் உணர்ந்து விட்டார்கள்.

மரக்காயர் செயலால் ஏனைய உண்மையான அன்பர்களுக்கு ஆன்மீக குருவிடம் எந்த மரியாதைக் குறைவும் ஏற்பட்டு விடக்கூடாதென எண்ணி அவரை மற்ற பொறுப்புக்களைக் கவனிக்க அழைத்துச் சென்றனர் விழாக்குழுவினர்.

மதியம் 1. 00மணி.

மரக்காயர், ஸ்வாமிகளிடம் சென்று சற்று உதாசீனமாக, 'சாமியாருக்கு சாப்பிட என்னவேண்டும் ?' என்றார்.

சுந்தர ஸ்வாமிகள் தாமே இந்த விழாவை நடத்துபவர் போல மிக மிடுக்குடன் அவருக்குக் கட்டளையிடும் தோரணையில் கூறினார்.

அவர் கூறியது கேட்டு மரக்காயர் வியந்தார்; சிவன் சகோதரர்களோ 'நம் ஸ்வாமிகளா இப்படிக் கேட்டார் ?' என மனம் வருந்தினர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அப்படி என்ன கேட்டார்?

“சுந்தரனார் திருக்கோயிற் றூயமணி மண்டபத்தில்
வந்தரனார் கதைகேட்க வகுத்தவிதிப் படிபுரிந்தே
யந்தரநா டதிசயிப்ப வரங்கிருந்து சிறப்பித்தார்
தந்தரநா மெடுத்துரைக்குந் தன்மையதோ சாற்றரிதே/ ”

“ஞானிகள் செப்பிடும் யோகங்கள் நான்குண்டு
யானறியேன் ஒன்றும் இதனிலே, ஆயினும்
பேணியே என்னைநீ காத்திடுவாய் வாழ்வின்அச்
சாணியே சற்குருவே போற்றி.”

‘விழாவிற்கு வந்துள்ள சைவசமயிகள் யாவருக்கும் உணவு தயாராகி விட்டதா? முகமதியர்களுக்கும், அசைவம் உண்பவர் களுக்கும் உணவு அருந்தச் சமையல் தயாராகி விட்டதா? மணி ஒன்றாகப் போகிறது!’ எனக் கம்பீரமாகக் கேட்டார் ஸ்வாமிகள்.

மரக்காயருக்கோ ஒரு கோவணாண்டி தன்னை அதிகாரம் செய்வதா என்று ஆத்திரம் எழுந்தது.

‘எல்லாம் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. எங்கள் உணவு தயாராகி விட்டது. உங்களைப் போன்ற சுத்த சைவ சமயிகளுக்கு உணவு சற்று தாமதமாகும்’ என்று கிண்டலும்,அலட்சியமும் குரலில் வெளிப்படக் கூறினார்.

‘என்னால் அப்படி எல்லாம் காத்திருக்க முடியாது. பசியில் உயிர் போகிறது. நேரம் கடந்து விட்டது. உடனே சமையல் செய்யும் இடத்திற்குப் போய் சற்று இறைச்சியும், சோறும் ஒரு தாம்பாளத்தில் வைத்து எடுத்து வாருங்கள். தாமதிக்காதீர்கள்.’ என்று அவசரப்படுத்தினார்.

மரக்காயரும் கோவணாண்டியை கேலிசெய்ய தமக்கொரு வாய்ப்புக் கிடைத்ததென மகிழ்ச்சியுடன் அசைவ உணவு எடுத்துவர சரசரவென மாமிச உணவு சமைக்கும் இடம்நோக்கி விரைந்தார்.

ஸ்வாமிகள் இவ்வாறு கூறியது கேட்டு சிவன் சகோதரர்கள் அதிர்ச்சியும், அருவெறுப்பும் அடைந்தனர். ஸ்வாமிகள் நாட்கணக்கில், வாரக்கணக்கில் ஏன் மாதக்கணக்கில் கூட எதுவும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உண்ணாமல் இருக்கும் ஆற்றல் பெற்றவர் என்பதை அறிந்தவர்கள் அவர்கள். ஆனால் இன்று இயல்புக்கு மாறாக நடந்துகொள்கிறாரே என்ற அதிர்ச்சியும், 'பசி தாங்க முடியவில்லை. உண்பதற்கு இறைச்சியை எடுத்து வாருங்கள்' என்கிறாரே என்று அருவெறுப்பும் கொண்டனர்.

'ஸ்வாமிகள் அதிவர்ணாஸ்ரமி (ஜாதி, இனபேதம் இல்லாதவர்.) எங்கு வேண்டுமானாலும், எவர் வீட்டிலும் சாப்பிடலாம். எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம். அவரை எந்த தோஷமும் அண்டாது.

ஆனால் அவர் அவ்வாறு எங்கும், எதையும் விரும்பிக் கேட்டுச் சாப்பிடுபவரில்லை; அவ்வாறு சாப்பிட்டதும் இல்லை. தேவைப்பட்டால் மிக எளிய உணவையே சிறிது ஏற்றுக்கொள்வார். இன்று வழக்கத்திற்கு மாறாக நடந்து கொள்கிறாரே!

ஊரில் பல சைவ சமயிகளும், சைவர்களும் என்ன நினைத்துக் கொள்வார்கள் ? மற்றவர்கள் ஸ்வாமிகளின் செயலைப் பார்த்து கிண்டலும், கேலியும், ஏளனமும் செய்வார்களே! பெரிய மனிதர்கள் எல்லாம் தப்பெண்ணம் கொள்ளும்படி நடந்து கொள்கிறாரே' என மனம் கூசினர். வருந்தி தலைகவிழ்ந்து அமர்ந்திருந்தனர்.

அசைவம் சமைக்கும் இடத்திற்குச் சென்ற மரக்காயர் தனக்குக் கிடைத்த நல்ல வாய்ப்பை நினைத்து மனம் மகிழ்ந்தார். பெரிய தாம்பாளத்தை எடுத்தார். அதில் சிறிது சோற்றை நடுவிலேவைத்தார். அதைச்சுற்றி, சரியாக வெந்ததும், வேகாததும், பக்குவமாகாததும் ஆன இறைச்சியை எடுத்துப் போட்டுக் கொண்டார்.

ஒரு மேல் துண்டை எடுத்து இரண்டாக மடித்து, உள்ளே இருப்பது வெளியே தெரியாதபடி அத்தாம்பாளத்தை மூடினார். தாமே எடுத்து வந்து சுந்தர ஸ்வாமிகள் முன்னால் வைத்தார்.

சைவச் சாமியார் இறைச்சி சாப்பிடுவதை வேடிக்கை பார்க்க கூட்டமாய் அனைவரும் வந்து விட்டனர். சுவாமியைச் சுற்றி ஒருவர்மேல் ஒருவர் விழுந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தர ஸ்வாமிகள் குவளையிலிருந்து நீரெடுத்துத் தாம்பாளத்தின் மேல் தெளித்தார்.

'ஏன் தாமதம் செய்கிறார்? மிகுந்த பசியில் துடித்துக் கொண்டிருக்கிறேன். தாமதம் செய்யாது இலையைப் போடுங்கள். இன்று உங்கள் பிக்ஷைதான் ஏற்கப்போகிறேன். தாம்பாளத்தை மூடியுள்ள துணியை எடுத்துவிட்டுப் பரிமாறுங்கள்.'

சுவாமிகள் கூறியதும் இதற்காகவே காத்திருந்த மரக்காயர் இலையைப் போட்டார். சுவாமிகள் இலையில் தண்ணீர் தெளித்து சுத்தம் செய்தார்.

மரக்காயர் தாம்பாளத்தை மூடியிருந்த துண்டை நீக்கினார்.

தாம்பாளத்தில் இருந்தவற்றைப் பார்த்து ஸ்வாமிகள் மரக்காயரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.

அதைக் கேட்டு மரக்காயர் உடல் நடுங்கியது.

அப்படி ஸ்வாமிகள் என்ன கேட்டார்?

"நிலச்சி றப்பையு நிறைபுனற் சிறப்பையு நெடியோர்
புலச்சி றப்பையும் பொருள்வகைச் சிறப்பையும் புனிதக்
குலச்சி றப்பையுங் கோமுறைச் சிறப்பையுங் குறையா
நலச்சி றப்பையும் படைத்ததா லரிமழ நகரம்."

❀❀❀❀❀

"வெண்ணீ றணிந்த திருமேனி ;அன்பர்தம்
கண்ணீர் துடைக்க உடன்நீளும் பொற்கரம்;
பன்னீராய் நாவில் நடமிடும் நற்றமிழ்;
தொன்மையாம் எம் குரு போற்றி."

'பசியாக இருக்கிறது. உண்பதற்கு சிறிது சோறும், இறைச்சியும் எடுத்து வாருங்கள் என்றால் இத்தனை பெரிய தாம்பாளம் நிறைய பலவித கனிவர்கங்களை எடுத்து வந்திருக்கிறீர்! இந்தப் பண்டார பரதேசிக்கு சோறும் இறைச்சியும் எதற்கு? பசியாற கனிவகைகளே போதும் என்று தீர்மானித்து விட்டீர்கள் போலிருக்கிறது!' என்று புன்சிரிப்பு மாறாமல் மரக்காயரைப் பார்த்துக் கேட்டார் ஸ்வாமிகள்.

மரக்காயருக்கு ஒன்றும் புரியவில்லை. தாம்பாளத்தைப் பார்த்தார். அதுநிறைய பலவிதப் பழவகைகள் நிறைந்து இருந்தன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வெலவெலத்துப் போனார். அவர் கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாய் கன்னங்களில் வழிந்தது.

ஸ்ரீஸ்வாமிகளின் முன், துண்டை விரித்தார். மண்டியிட்டு அமர்ந்தார். பாத்தியா ஓத ஆரம்பித்தார். பலமுறைகள் இரு கைகளாலும் தலைக்குமேல் சலாம் வைத்து வணங்கினார். எழுந்தார். கைகட்டினார். உடல் நடுங்கினார்.

'தங்களுடைய அருமை தெரியாமல் சக்தி புரியாமல் மமதையில் ஏதேதோ பேசிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். என்னைக் காப்பாற்ற வேண்டும். எங்களைப் போன்ற கல்வி அறிவு இல்லாதவர்களுக்கு, மகான்களின் மகிமை தெரியாதவர்களுக்கு உங்களின் பெருமை எப்படித் தெரியும் ?ஏதோ தகாதபடி பொறுப்பின்றி நடந்து கொண்டு விட்டேன். உங்கள் உருவுகண்டு,உடைகண்டு எள்ளி நகையாடிவிட்டேன். என் தவறுகளைப் பொறுப்பதுதான் தங்களைப் போன்ற பெரியவர்களுக்கு அழகு. உங்களின் மன்னிப்பை பலமுறை வேண்டுகிறேன்.' என நாத்தழுதழுக்க உரைத்தார்.

'உங்கள பேரில் அடியவனுக்கு எந்த வருத்தமும் கிடையாது. எழுந்திருங்கள். நீங்கள் சத்தியசந்தராய், மனம், மெய், மொழிகளால் திரிகரண சுத்தராய் இருக்க வேண்டும் என்பதே எமது ஆவல். நல்ல எண்ணத்தோடு நன்னெறியில் நில்லுங்கள். ' என்று ஆசி கூறினார்.

நடந்த நிகழ்ச்சிகளைக் கண்டு அங்கிருந்தவர்கள் மெய் சிலிர்த்தனர்.

கூட்டம் கலைந்து செல்லும்பொழுது முதுமையான சைவப் பெரியவர் இவ்வாறு தம் அருகிலிருந்தவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார்: 'இந்த மரக்காயரின் முன்னோர்கள் இரண்டு தலைமுறைக்கு முன்புவரை சைவர்களாய் இருந்தவர்கள். ஆன்மீக நற்பணிகளுக்கு வாரி வழங்கியவர்கள். அதன் பலனாகவே இந்த மரக்காயர் மூலம் தம் அருள் விளையாட்டை நிகழ்த்தியுள்ளார் ஸ்வாமிகள். மரக்காயர் செய்த பாக்கியம்.'

ராமசாமி சிவன் அவர்களுக்கும்,வைத்தியநாத சிவன் அவர்களுக்கும் நடந்ததெல்லாம் கனவாய்த் தோன்றின. 'நாம் ஸ்வாமிகளின் அருகிலேயே இருக்கிறோம். பலகாலம் பழகி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உள்ளோம். அவரைப் பற்றி எல்லாம் தெரியும் என்று நினைத்திருந்தோமே!இதுபோன்ற அற்புத நிகழ்ச்சியை இதுவரை கண்டோமல்ல. அருகில் இருந்தும் நாம் அறிந்துகொள்ள வேண்டியது எவ்வளவு உள்ளது!இன்னும் அவரிடம் என்னென்ன சித்திகள் உள்ளனவோ! அவரைப்பற்றி அவசரப்பட்டு தவறான முடிவுக்கு வந்து விட்டோமே' என வருந்தினர்.

முன்பைவிட ஸ்வாமிகளிடம் மிகப்பணிவுடனும், பேரன்புடனும் ,மரியாதையுடனும் நடந்து கொண்டனர்.

அன்றைய மரக்காணம் கச்சேரி மிகச்சிறப்பாக அமைந்தது. விழாவில் ஸ்ரீஸ்வாமிகளே நடுநாயகமாக விளங்கினார் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

ஒருமுறை ஸ்வாமிகள் வையைச்சேரி வந்தபொழுது சிவன் சகோதரர்களுக்கு சதுர்வேத தாத்பர்ய சங்கிரகம், சிவதத்துவ விவேகம், சூதசம்ஹிதை இவற்றில் பாடம் நடத்துவதாகக் கூறியிருந்தார்.

திருநெல்வேலி அன்பர்கள் சிலரும் ஸ்வாமிகளை இவற்றில் பாடம் நடத்தும்படிக் கேட்டிருந்தனர்.

காசி மாநகரத்தில் இருந்த அன்பர்களும் இதேபோல் கோரிக்கை வைத்தனர்.

சில நாட்கள் சென்றபின் திருநெல்வேலி அன்பர் ஒருவர் சிவன் அவர்களைக் காண வையைச்சேரி வந்த பொழுது காசியிலிருந்து அவருக்கு வந்த கடிதத்தைக் காண்பித்தார்.

அதில் குறிப்பிட்ட நாட்களில் சுந்தர ஸ்வாமிகள் வாரணாசி வந்து நேரில் பாடங்கள் நடத்தியதைக் குறிப்பிட்டிருந்தார்.

'அதெப்படி ? திருநெல்வேலி அன்பர்களுக்கல்லவா அந்த நாட்களில் உபதேச வகுப்புகள் நடத்தினார். எப்படி காசியில் இருந்ததாக எழுதியிருக்கிறார்!' என்று சந்தேகம் தொனிக்கக் கேட்டார்.

கடிதத்தை வாங்கிப் பார்த்த சிவன், அந்த நாட்களில் தனக்கும் மற்ற வையைச்சேரி பகுதியைச் சேர்ந்த அடியார்களுக்கும் அல்லவா பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஸ்வாமிகள், என வியந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அனைவருக்கும் ஒரேவிதமான பாடங்கள்; வெவ்வேறு இடங்கள் ஆனால் ஒரே குருநாதர். மூன்று இடங்களிலும் காட்சி அளித்து உபதேசித்துள்ளார் என்பதை அனைவரும் தெளிந்து கொண்டனர்.

மூன்று இடங்களில் மட்டுமா ?பின்னொரு சமயம் ஸ்ரீஸ்வாமிகள் ஒரேநேரத்தில் ஏழு இடங்களில் காட்சி அளித்தார் என்பதை வைத்தியநாத சிவன் அறியத்தானே போகிறார்.

அது எப்பொழுது ?

"பாரிலுள்ள சிவதலங்கள் பலவற்றுட்
சிறப்புடைத்தாய்ப் பலனை நெஞ்சத்
தோரிலுடன் றருமூர்த்தி யுறுநிலையாய்த் தீர்த்தமுயர்
வுளதாய் மேலாஞ்
சீரிலுயர் சிவதவமான் மியமொன்று கருணைகொடு
செப்பல் வேண்டு
நாரினிறை மனத்தவனே நற்றவனே கற்றவனே
நலஞ் செய்வானே."

"என்அத்தன் என்அம்மை யாரும்நீ தானன்றோ!
என்வினைகள் யாவும் களைவாய்நல் உத்தமனே;
உன்நினைவில் மூழ்கியே என்றும் மகிழ்ந்தேனே;
என்னவன் சுந்தரனே காப்பு!"

ஸ்ரீசுந்தர ஸ்வாமிகள் வேதாந்த நூல்களிலும், சிவபுராணங் களிலும் மிகவும் தேர்ந்தவர். சூதசம்ஹிதை சொற்பொழிவில் அவரை மிஞ்சியவர் எவருமில்லை. சுந்தர ஸ்வாமிகளையும், வைத்தியநாத சிவன் அவர்களையும் ஒருங்கே பார்த்தவர்கள் வியந்து நிற்பர். ஸ்ரீஸ்வாமிகளின் திருமுகமானது சிவப்பிழம்புபோல் ஒளிவீசி யாவரையும் ஈர்த்து பக்தி கொள்ளச் செய்யும். வைத்தியநாத சிவனின் முகம் செக்கச் செவேலென்று சிவசொரூபம் நிறைந்து ஒளிவீசும்.

சிவன் அவர்கள் ஸ்வாமிகளைப் பின்பற்றி மிக எளிமையாக வாழ்ந்தவர். எளிமையான உடை, எளிமையான உணவு என்று வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர். ஸ்வாமிகள் அன்னதானம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



செய்வதில் விருப்பம் கொண்டவர். அதுபோன்றே சிவன் அவர்களும் தன் மாணாக்கர்கள் மற்றும் வறியவர்களுக்கு என்று நாள்தோறும் குறைந்தது ஐம்பது பேர்களுக்குத் தன்வீட்டில் உணவு அளித்து வந்தார்.

'மிகச் சாதாரண நிலையில் இருந்தோம். ஸ்ரீஸ்வாமிகளின் அருட்கடாக்ஷத்தால் பொருள்,செல்வம், புகழ், அந்தஸ்து என்று வசதியாக உள்ளோம். ஸ்வாமிகளின் சீடர்கள் முகம்சுளிக்காது அனைவருக்கும் அன்னதானம் செய்யவேண்டும். இதுவே நம் ஸ்வாமிகளின் மனதைத் திருப்திப்படுத்தும்' என்று கூறுவார்.

ஆனால் அவர் எடுத்துக்கொள்வதோ சிறிது சாதம், வற்றல் குழம்பு, மோர், ஊறுகாய் இவ்வளவுதான். வாசனைத் திரவியங்கள், ஆடம்பர உடைகள், அலங்காரங்களை அவர் விரும்புவதில்லை.

தன்குரல் வளமும், சங்கீத ஞானமும் ஸ்வாமிகள் தனக்கு அளித்த பிச்சை என்று கூறுவார்.

இந்த சரிதம் நிகழ்ந்த காலத்து தஞ்சையை இரண்டாம் சிவாஜியின் மாப்பிள்ளை சகாராம் சாகேப் என்பவர் ஆண்டு வந்தார். அவரின் அரண்மனையிலே எழுபத்திரண்டு மேள கர்த்தாக்களையும் புலப்படுத்தும் பழைமையான செய்யுள் ஒன்றிருந்தது. அதற்கு இசைஅமைப்புகள் – வர்ணமெட்டுகள் - அமைத்துப்பாடி அதனைப் பிரபலப்படுத்த வேண்டும் என விரும்பினார். பட்டணம் சுப்பிரமணிய ஐயர், நாமக்கல் நரசிம்ம ஐயங்கார் போன்ற பல இசைப்புலவர்கள் மூலம் இதனைச் செயல்படுத்தக் கேட்டுக்கொண்டும் அவர்களால் மன்னரின் விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லை.

அரசர், வைத்தியநாத சிவன் அவர்களின் இசையில் மயங்கியவர். அவரைப் போற்றிப் பாராட்டி, பரிசுகள் அளிப்பதில் மகிழ்ச்சி கொள்பவர். தனது எண்ணத்தை சிவன் அவர்களால் மட்டுமே நிறைவேற்ற முடியும் என நம்பினார். அரசசபைக்கு வருகை புரிய வைத்தியநாத சிவன் அவர்களை அன்புடன் அழைத்தார். சிவனும் வந்தார். அரசர் தன் விருப்பத்தைத் தெரிவித்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீசுந்தரஸ்வாமிகளை மனதால் துதித்து அவரின் ஆசிகளை வேண்டினார்.

அரசரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்.

அந்த பழைய செய்யுளுக்கு எழுபற்றிரண்டு மேள கர்த்தாவிலும் இசையமைப்பைச் செய்தார். ஒருவாரத்திற்குள் மெட்டமைத்து செப்பனிட்டார்.

அதனை அரசர் சகாராம் சாகேப் அவையில், ஆஸ்தான வித்வான் வீணை ஆதிமூர்த்தி ஐயர் தலைமையில் அரங்கேற்றினார். இந்நிகழ்ச்சியில் மிகப்பல இசைமேதைகள் அரங்கை அலங்கரித்தனர்.

வைத்தியநாத சிவன் அவர்களின் குரல் வளத்தில் எழுபற்றிரண்டு மேளகர்த்தா ராகங்களும் புதுப்பொலிவைப் பெற்று பளபளத்தன.

முதல் மேளகர்த்தாவாகிய 'கனகாங்கி' என்று தொடங்கி 'ரசிகப்பிரியா' ராகம்வரை தொடர்ந்து பாடினார். சங்கிலித் தொடர் போல் ராகங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் இடைவிடாமல் வந்தன.

அதிஅற்புதமாகப் பாடப்பெற்ற எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகங்களையும் கேட்ட அரசரும் ஏனைய இசைப்புலவர்களும் மட்டில்லா மகிழ்ச்சியை அடைந்தனர்.

சுவை குன்றாமல் இனிமையாக, அற்புதமாகப் பாடி சாதனை படைத்த சிவன் அவர்களுக்கு, 2501/– ரூபாயை அன்புக் கொடையாக அளித்தார். (இன்றைய மதிப்பில் சில லக்ஷம் ரூபாய்கள்) அத்தனை பெரும் தொகையை அன்றைய வித்வான்கள் எவரும் பரிசாகப் பெற்றதில்லை!

அவையில் இருந்த இசைவிற்பன்னர்கள் அனைவரும் வைத்தியநாத சிவன் அவர்களின் திறமையைப் போற்றிப் பாராட்டினர்.

ஆனால் சிவன் அவர்களின் மனம் வருத்தத்தில் ஆழ்ந்திருந்தது. அவருடைய மனசாட்சி உறுத்தியது. நிம்மதி இன்றி நெஞ்சம் அலைபாய்ந்தது.

பரிசு, பாராட்டு என்று சிறப்புகளைப் பெற்ற
வைத்தியநாத சிவன் அவர்கள்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஏன் இத்தகைய மனநிலைக்கு ஆளானார்?

"பழிமாறும் படிகருதிப் பங்கயனைப் பணிந்திதற்கோர்
கழுவாய்தந் திடுகென்னக் கௌரியநாட் டுதீசியின்யாந்
தொழுவாய்மைச் சுந்தரனைத் தோத்திரஞ்செய் தடியில்விழுந்
தெழுவாயே விப்பழிபோ மெப்பழியு மாரியம்மன்."

❀❀❀❀❀

"அருள்வேண்டி உன்பாதம் நாடியே வந்தேன்
கருணை விழியால் அடியேனை நோக்கிடுவாய்;
எப்பொழுதும் உன்னை மறவாத நெஞ்சத்தை
தப்பாமல் தந்திடுவாய் இன்று."

வைத்தியநாத சிவன் அவர்களின் மனம் சஞ்சலப்பட்டது. அமைதி இல்லாமல் அலைக்கழிந்தது.

காரணம்... அவர் அரசவையில் 72 மேளகர்த்தாவில் இசையமைத்துப் பாடிய பழைய செய்யுள் மன்னரைப் பாடிப் புகழ்வதாக–நரஸ்துதியாக–அமைந்திருந்தது.

'நிதிசால சுகமா? ராம, நி சந்நிதி சேவா சுகமா?' என்று பாடிய ஸ்ரீதியாகப்ரும்மத்தின் அடியொற்றி வந்தவர் அல்லவா?

பரம்பொருளையும், ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளையும் மட்டுமே புகழ்ந்து பாடிய வாய், சூழ்நிலையின் காரணமாக அவசியம் ஏற்பட்டுப் பாடிவிட்டதால் மனது நிம்மதி பெறவில்லை.

அடுத்த நாள் காலை திருவையாறு, பஞ்சநதீஸ்வரர் ஆலயம் சென்றார். அங்கு கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள பிணதார்த்திஹரர் சுவாமி சந்நிதியில் மெய்மறந்து நின்றார். கண்களிலிருந்து ஊற்றென கண்ணீர் பெருகியது. மெய்சிலிர்த்தது.

பிரணதார்த்திஹர ஸ்வாமியைக் குறித்து எழுபத்திரண்டு மேளகர்த்தாவையும் பாடி அங்கேயே அரங்கேற்றினார்.

மேளகர்த்தாவை ஆரம்பம் செய்யும்பொழுது

'பிரணதார்த்திஹர' என்று ஸ்ரீ ராகத்தில்,ஆதிதாளத்திலே சொற்கட்டுடன் ஆரம்பித்தார். எழுபத்திரண்டு ராகங்களுக்கும் ராமசாமிசிவன் அவர்கள் சிட்டைஸ்வரம் அமைத்தார்.

இப்பொழுது வழக்கிலுள்ள எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகமாலிகை இதுவேயாகும். ஸ்வாமி சந்நிதியில் பாடிய பிறகே



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வைத்தியநாத சிவன் மனம் அமைதி அடைந்தது.

மேளகர்த்தா ராகங்களை பன்னிரண்டு சக்ரங்களாகப் பிரித்து,ஒரு சக்ரத்திற்கு ஆறு ராகங்கள் வீதம் மொத்தம் எழுபத்திரண்டு ராகங்களையும் பாட்டில் அமைத்துக் கொண்டார்.

இந்தச் 12 சக்ரப்பிரிவு ஒவ்வொன்றும் பொருத்தமான பெயரைக் கொண்டவை.

ஒன்றுமுதல் முப்பத்தாறு வரையுள்ள சக்ரம் சுத்தமத்யமாவதி என்றும்;முப்பத்தேழு முதல் எழுபத்திரண்டு வரை பிரதிமத்யமாவதி என்றும் பகுக்கப்பட்டன. இந்த 72 ராகங்களும் கிரம சம்பூர்ண ராகங்கள் என அறியப்படுகின்றன.

இந்த சாஹித்யத்தை வெறும் பாடல்களாக மட்டும் இசைக்காமல்,புராண,இதிகாச,தமிழ் இலக்கிய, பெரியபுராண நிகழ்வுகளும்,பெயர்களும் அமையும்படி இசைத்தார்.

நக்கீரர்,புனிதவதி(காரைக்கால் அம்மையார்)பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

வைத்தியநாத சிவன் அவர்களின் இசைப்புலமையைக் கேள்வியுற்ற புதுக்கோட்டை சமஸ்தான அரசர் ராமச்சந்திர தொண்டைமான் அவர்கள்,அவருக்கு அழைப்பு அனுப்பினார். அதனை ஏற்று புதுக்கோட்டை சமஸ்தானம் சென்றார். அரசவையில் ஆஸ்தான வித்துவான்களாய் இருந்த வீணை சுப்புக்குட்டி ஐயர், வீணைசுப்பையர் ஆகியோர் கேட்டுக் கொண்டதிற்கிணங்க 'கஜஜம்பை' என்ற தாளத்திலே ஒரு பல்லவியை சங்கராபரண ராகத்திலே அமைத்துப் பாடினார். இளைஞரான சிவனை அரசரும், மற்ற புலவர்களும் புகழ்ந்து கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

மைசூர், எட்டயபுரம், திருச்சிராப்பள்ளி, ஊற்றுமலை, திருநெல்வேலி, குற்றாலம், சென்னை, சிவகங்கை, அரண்மனை சிறுவயல், திருவனந்தபுரம், ராமநாதபுரம், பாலவனத்தம், சிருங்கேரி, திருவாடுதுறை... ஆகிய சமஸ்தானங்களுக்கும், ஜமீன்களுக்கும், ஆதினங்களுக்கும் அவர்கள் அழைப்பின் பேரில் சென்று இசை நிகழ்ச்சிகளும், பெரியபுராண, சிவகதை, சூதஸம்ஹிதைப் பிரசங்கங்களும் செய்து வந்தார். மற்றவர்களுக்கு அளிக்காத பரிசில்களை இவருக்கு வாரி வழங்கினர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கலைஞர்களிடையே போட்டியை விரும்பாதவர் சிவன். அனைத்து வித்துவான்களிடமும் சினேகபாவத்துடன் பழகிவந்தார்.

இசைத்துறையில் இவர்காலத்தில் உச்சத்தைத் தொட்ட இவருக்கு ‘மகா’ என்ற பட்டத்தை அளித்து ‘மகா வைத்தியநாத சிவன்’ என்றழைத்துப் பெருமிதம் அடைந்தவர் யார்?

“திருமாலும் பிரமாவுந் தேவர்கள் முனிவரரும்
பெருமாலுற் றடிபணியப் பெறும்பதியாம் பசுபதிதா
டருமாலுற் றுயர்பதியாத் தழைத்தவரி மழஞ்சார்ந்தார்
கருமாலுற் றெழுபிறவிக் கடற்கரையாங் கதியடைவார்.”

“அனுபவங்கள் தேடி அலைந்த அடியேன்
தனற்கே அபயக்கை நீட்டியே ஆட்கொண்டாய்;
நாடகம் செய்நீயே அந்த அனுபவம்
நானறிந்து கொண்டேன் வியந்து.”

உண்மையான சீடனின் தாகம் என்னவென்று குருவிற்குத் தெரியும். அவர் சீடனின் தாகத்தைத் தணிக்க மாட்டார். மேலும் தாகத்தை அதிகரிக்கச் செய்வார். சீடன் பக்குவப்பட்டவுடன் அவனைத் தன்னோடு சேர்த்துக் கொண்டு விடுவார்.

வைத்தியநாத சிவன் அவர்களின் தாகம் சங்கீதம்தான். அதில் அவரின் தாகத்தை அதிகப்படுத்தினார் சுந்தரஸ்வாமிகள். சிவன் சங்கீத சாகரத்தில் மூழ்கி எடுத்த நன்முத்துக்கள் பலப்பல. இவருக்கு முன்னரும் சில வாக்யேகக் காரர்கள் மேளகர்த்தா ராகங்கள் அமைப்பைப் பற்றி விளக்கி உள்ளனர்.

மேளகர்த்தா ராகங்களின் வரலாறு 1550களில் தொடங்குகிறது. அந்த காலத்தில் ராமமாத்தியா இயற்றிய ‘ஸ்வரமேளகலாநிதி’என்னும் நூலில் மேளகர்த்தா ராகம்பற்றி குறிப்புள்ளது. இவர் விஜயநகரப் பேரரசில் அவைப்புலவராக இருந்த கள்ளிநாதரின் பேரர். இவரை ‘மேளகர்த்தாவின் தந்தை’ என்பர்.

மேளம் என்பது முறைப்படி அடுக்கப்பட்டது, கட்டமைக்கப் பட்டது என்று பொருள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிறகு, கோவிந்த தீக்ஷிதர் என்பவர் 'சங்கீத சுதா' என்ற நூலை ஆக்கினார்.

இவருடைய புதல்வர் புகழ்பெற்ற வேங்கடமஹி.

இவர் 17ம் நூற்றாண்டில் எழுதிய 'சதுர்தண்டிப் பிரகாசிகை' என்ற நூலில் இப்பொழுது பரவலாக அறியப்படும் மேளகர்த்தா அமைப்பு கூறப்பட்டுள்ளது.

இவருக்குப் பின்னர் வாழ்ந்த கோவிந்தாச்சாரியார் இயற்றிய 'சங்கிரக சூடாமணி' என்னும் நூலிலும் மேளகர்த்தா ராகங்கள் பற்றிய விபரங்கள் உள்ளன.

வேங்கடமஹி அவர்கள் 72 மேளகர்த்தாக்களையும் மூன்று பிரிவுகளாகப் பிரித்தார்.

அவையாவன : கல்பித மேள கர்த்தாக்கள், கல்ப்யமான மேளகர்த்தாக்கள், கல்பயிஷ்யமான மேளகர்த்தாக்கள். ஆனால் அனைத்து மேளகர்த்தாக்களுக்கும் இவர் பெயரிடவில்லை.

கிரம, ஸம்பூர்ண ஆரோகண, அவரோகண முறையுடன் கூடிய மேளங்களைக் குறிக்கும் கனகாங்கி,ரத்னாங்கி பெயர்தொகுதிகள் சங்கீத சாராம்ருதத்திற்குப் பிறகு ஏற்பட்டவை. கோவிந்தாச்சார் இயற்றிய 'சங்கிரக சூடாமணி 'இசைநூலில்தான் முதன்முறையாக மேளத்துக்கும் அதற்குகந்த ராகத்திற்கும் உள்ள நுட்பமான வித்தியாசம் தெளிவாக்கப்பட்டுள்ளது இம்முறையைப் பின்பற்றியே மகான் ஸ்ரீதியாகப்ரும்மம் போன்றோர் கீர்த்தனைகள் இயற்றினர்.

'வைத்தியநாதசிவன் அவர்கள் 72 மேளகர்த்தா ராகங்களை வைத்து திருவையாறு பிரணதார்த்திஹரர் மேல் சாகித்தியம் இயற்றினார். அவருக்கு முன்னதாக ராகலக்ஷணங்களைத் தன் கீர்த்தனைகளில் அமைத்து ஸ்ரீதியாகபிரும்மம் அவர்கள் பாடியுள்ளார். முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் 72 மேளகர்த்தா ராகங்களிலும் கிருதிகள் செய்துள்ளார். சங்கீத மும்மூர்த்திகள் ராகலக்ஷணங்களை அணுகி ஆராய்ந்து கீர்த்தனைகளில் நுட்பமாகப் பயன்படுத்திக் கொண்டனர்'.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தஞ்சாவூர் அரசர் சாகேராம் சாகேப் அரசவைப் புலவரான வெங்கடராவ் என்பவர் மன்னர்மீது மேளகர்த்தா ராகங்களைக் கொண்டு செய்யுள் இயற்றியுள்ளார். அதை உரிய ராகங்களில் மெட்டமைத்து இசைத்தார் வைத்தியநாத சிவன். அது நரஸ்துதியாக இருந்ததால் திருவையாறு ஈசன்மேல் மேளகர்த்தா ராகங்களில் தானே சாகித்தியம் இயற்றி இசைத்தார்.

பின்னர் வந்த ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் மைசூர் அரசர் கிருஷ்ணராஜா உடையார் மீதும் ,திருவாங்கூர் அரசர்கள் பெயரிலும் மேளகர்த்தா ராகங்களை அமைத்த பிரசித்தி பெற்ற வாக்யேயக்காரராகத் திகழ்ந்தார்.

ஆண்டவன், அரசன் யார் மீது பாடினாலும் இவர்களின் திறமை போற்றுதலுக்குரியவை.'

தன் பிள்ளைகளுக்கு சங்கீதம் கற்றுத்தர தஞ்சாவூர் அடைந்தார் துரைசாமி ஐயர். மகான் ஸ்ரீதியாகப்ரும்மத்தின் நேரடிச் சீடரான மானம்புச்சாவடி வெங்கடசுப்பையரிடம் கற்றுத்தர அனுமதி வேண்டினார். அவரும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார். வைத்தியநாத சிவன் அவர்கள் தமது ஏழாவது வயதிலேயே பல்லவி பாடும் திறமை அடைந்தார். மகான்கள் ஸ்ரீதியாகப்ரும்மம், ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் ஆகியோரின் ஆசிகளை மிக இளம்வயதிலேயே பெரும் பேற்றைப் பெற்றார்.

பழமாநேரி சுந்தர சாஸ்திரிகள், திருவையாறு பாலகிருஷ்ண சாஸ்திரிகள் ஆகியோரிடம் சைவப்பாடங்களைக் கற்றார்.

பல அவைகளிலும் பாடி பரிசுபெற்ற தொகையைக் கொண்டு வையைச்சேரியில் சிவாலயம் எழுப்பினார்.

திருவையாறு பிரணதார்த்திஹரர்மேல் உள்ள பக்தியால் அவ்வூர் பாவாசாமி அக்ரஹாரத்தில் தெற்குப் பார்த்த வீடுகள் இரண்டு வாங்கினார். ஒன்றில் ராமசாமிசிவன் குடும்பத்தினரும், மற்றொன்றில் வைத்தியநாத சிவன் குடும்பத்தினரும் வசித்து வந்தனர்.

ஒருமுறை கல்லிடைக்குறிச்சி சபையில் பெரியவைத்தியநாத ஐயர், சின்ன வைத்தியநாத ஐயர், சுப்ரமணியதேசிகர். பிச்சுமணி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பாகவதர், ஸ்ரீவைகுண்டம் பாகவதர், தாண்டவராயத் தம்பிரான் ஆகிய சங்கீத மேதைகள் நிரம்பிய சபையில் 'சக்ரவாகம்' என்னும் ராகத்தை விஸ்தாரமாகப் பாடினார். பெரியவைத்தியநாத ஐயரும் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரும் சேர்ந்து 'மகா' என்ற பட்டத்தை அளித்தனர். அன்று முதல் 'மகாவைத்தியநாத சிவன்' என்று மரியாதையுடன் அழைக்கப்பட்டார் .

பெயரும், புகழும் ஒருவருக்குக் கிடைத்துவிட்டால் கூடவே சிலரிடமிருந்து பொறாமையையும், போட்டியையும் அழைத்துவரும். வைத்தியநாத சிவன், மகாவைத்தியநாத சிவன் என்று போற்றப்பட்ட வுடன், ஒரு சங்கீத வித்வான் இவரை இசைப் போட்டிக்கு அழைத்தார்.

யார் அவர் ? அதன் முடிவு என்ன ?

“வாழிநின் திருவடி வாழி திருமுகம்
வாழிநின் புரிசடை வாழி கங்கையும்
வாழிநின் கருணைநின் மாட்டு மெய்யன்பர்
வாழகயென் றினையன வழுத்திப் போற்றுவோம். ”

“ஞானமே நாடிநான் உன்னைச் சரணடைந்தேன்
மோனத் தவத்திருக் கோலம்நீ கொண்டமர்ந்தாய்
ஞாலம் துதித்திடும் நற்குருவே !உன்னைநான்
காலம் முழுதும் துதிப்பேன்.”

மகா வைத்தியநாத சிவன் அவர்கள் காலத்தில் பேருந்து மற்றும் புகைவண்டி போக்குவரத்துகள் தொடங்கி விட்டன. எனவே இடைவிடாமல் பல ஊர்களுக்கும் சென்று கச்சேரிகள் செய்து வந்தார்.

முதன்முதலாக புகைப்படம் எடுத்துக்கொண்ட கர்நாடக இசைப்பாடகர் இவரே. மைசூர் அரண்மனைக்கு அழைப்பின் பேரில் மூன்று முறை சென்று வந்துள்ளார். அங்கு இவருடைய பாடல் இசைத்தட்டாகப் பதிவு செய்யப்பட்டது. இவ்வாறு இசைத்தட்டில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட முதல் கர்நாடக சங்கீதவித்வான் குரல் இவருடையதுதான். (ஆனால் ஒரு தீ விபத்தில் இது எரிந்து விட்டது.)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மூவாயிரம் பேர் அமர்ந்துள்ள சபையில்,மைக் இல்லாமலேயே இவருடைய குரல் கடைசியில் அமர்ந்திருப்பவருக்கும் தெளிவாகக் கேட்கும்படியான கணீர் குரல் வளம் படைத்தவர்.

சமஸ்தானங்கள்,ஜமீன்கள், பொது இடங்கள், தனியார் இல்ல விழாக்கள், கோயில்கள் என்று எங்கும் இசைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அனைத்து வித்வான்களும் இவற்றில் தயக்கமின்றி பங்கேற்கத் தொடங்கினர்.

இவருடைய காலத்தில் வாழ்ந்தவர் மற்றொரு பிரபல வித்வான் பட்டணம் சுப்பிரமணிய ஐயர் என்பவர். இவரும் திருவையாறு வாசிதான். வயதில் மூத்தவர்கள் என்ற முறையில் சிவன் சகோதரர்களிடம் மிக மரியாதையாகப் பழகுவார். இவருடைய சிஷ்ய பரம்பரையும் மைசூர் வாசுதேவாச்சார்,பூச்சி சீனிவாச ஐயங்கார், டைகர் வரதாச்சாரியார் என்று பிரபலமானது.

இவர் வைத்தியநாத சிவன் அவர்களுக்கு நேர்மாறாக ஆடம்பரப்பிரியர், அலங்காரப் பிரியர். சுவையான சைவஉணவை விரும்பி உண்ணும் பிரியர்.

சிவன் அவர்களும், பட்டணம் சுப்பிரமணிய ஐயரும் நல்ல நட்புடனும், மரியாதையுடனும் பழகி வந்த போதிலும் இவர்களின் சீடர்களிடையே அவ்வப்பொழுது சச்சரவுகள் எழுந்துகொண்டே இருக்கும்.

மகாவைத்தியநாத சிவன் அவர்களின் பெருகிவரும் புகழ்,பாராட்டு,பரிசில்கள் இவைகளைக்கண்டு நேரிடையாகவும், மறைமுகமாகவும் புறம்பேசுவோரும் இருந்தனர். ஆனால் இசைரசிகர்களால் மிகவும் போற்றப்பட்ட, பாராட்டப்பட்ட இசைக்கலைஞராய் விளங்கினார் என்பதில் ஐயம் இல்லை.

இவருடைய சீடர்களில் வாசுதேவநல்லூர் சுப்பையா பாகவதர்,பழமனேரி ஸ்வாமிநாத ஐயர்,திருவையாறு கூஞு. சபேச ஐயர்,பாலக்காடு அனந்தராம பாகவதர் ஆகியோர் முக்கியமானவர்கள். இந்த பாரம்பரியத்தில் பின்னர் வந்த முதன்மையானவர்கள் ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், முசிறி சுப்பிரமணிய ஐயர், மதுரை மணிஐயர், மணிகிருஷ்ணசாமி,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கோவிந்தராவ், பம்பாய் சகோதரிகள், TN. சேஷ கோபாலன் என்று பட்டியல் தொடரும்.

திருவையாற்றில் சப்தஸ்தான திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறும். அண்மையிலுள்ள ஏழு ஊர்களைச் சார்ந்த திருக்கோயில்களிலிருந்து ஸ்வாமி–அம்பாள் எழுந்தருளுவர். அந்த சமயத்தில் தில்லைஸ்தானம் ஆற்று மணலில் அமர்ந்து கொண்டு கச்சேரி செய்வது சிவனிற்கு விருப்பமான ஒன்று.

இவ்வாறு எளிமையான நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்வார். சென்னை மாநகரில் மாபெரும் சபைகளிலும் கலந்து கொள்வார். எந்த மேடை ஆனாலும் அவருடைய கச்சேரியின் தரம் ஒன்றுபோலவே சிறப்பாக இருக்கும்.

ஒருமுறை ராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள் ஸ்வாமி தரிசனத்திற்கு திருச்செந்தூர் சென்றார். சதாசிவ நாவலர் என்ற புலவரை மன்னர் ஆதரித்து வந்தார். திருச்செந்தூர் மண்டபத்தில் அவருடைய சொற்பொழிவிற்கு ஏற்பாடாகி இருந்தது. அருவியாக தமிழ் அவர் பேச்சில் கொட்டியது. அனைவரும் தன் பேச்சில் கட்டுண்டுகிடப்பதைக் கண்ட அவர் தனக்கு எதிராக எவரும் வாதம் செய்ய முடியாது எனக்கருதி அறுவகைக் கருத்துக்களைக் கூறி 'இக்கருத்துக்களை உங்களில் எவரேனும் மறுக்க முடியுமா ?' என்று அறைகூவல் விடுத்தார்.

மன்னரோ அனைவரும் வாயடைத்து அமர்ந்திருப்பதைக் கண்டார்.

அரசரின் அழைப்பின் பேரில் அங்கே கச்சேரி செய்ய வந்திருந்த சிவன் அவர்களை மன்னர் நோக்கினார்.

சுந்தர முனியை மானசீகமாகத் தொழுது தன் உரையைத் தொடங்கினார். சதாசிவநாவலரின் அறுவகைக் கருத்துக்களை பலவகையால் ஒன்றன்பின் ஒன்றாக சான்றுகளுடன் மறுத்தார். சிவனின் தமிழ்சொற்பெருக்கின் ஆழத்தையும், விஷய ஞானத்தையும், நியாயமான மறுப்புகளையும்,அவரின் தமிழறிவையும், வடமொழி ஆற்றலையும், வேதாகமங்களில் அவருக்கிருந்த நுட்பமான அறிவையும் அங்கு கூடியிருந்த மகா பண்டிதர்கள் ஒருங்கே போற்றினர். சிவனின் உள்ளத்திலிருந்து



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எழும்பி வரப்பெற்ற கருத்துகளுக்கு ஸ்ரீசுந்தர ஸ்வாமிளே தோன்றாத் துணையாய் இருந்து அருளியுள்ளார் என்பதை உணர்ந்து அவரை மானசீகமாக வணங்கினார்.

ஆண்டுகள் சில சென்றன.

இதனிடையில், சிவனின் புகழும் உச்சம்தொட்டது; செல்வ வளமும் உயர்ந்தது; அவர் செய்யும் தான, தர்மங்களும் பெருகின.

எல்லாத் துறைகளிலும் ஒருவருக்கொருவர் போட்டிக் கழைப்பது அப்பொழுது இயல்பாக இருந்தது. இந்தப் போட்டிகள் தொடர்புடைய குழுவினர்களிடையே விரோதத்தையும் வளர்த்து வந்தது.

ஒருமுறை சென்னை சென்றிருந்தபோது வேணுநாயுடு என்பவர் 'உங்களை மகா வைத்தியநாத சிவன்' என்று கொண்டாடு கிறார்களே, என்னுடன் போட்டியிட்டு வெல்லுங்கள் பார்ப்போம்!' என்று பலர் முன்னிலையில் அறைகூவல் விடுத்தார்.

அவரின் சவாலை விருப்பமில்லாமல் வேறுவழியின்றி ஏற்றுக் கொண்டார்.

போட்டிக்கு போட்டோகடை மாசிலாமணி முதலியார் என்பவர் நடுவராய் இருந்தார்.

போட்டியின் முடிவில் மகாவைத்தியநாத சிவன் அவர்கள் மிகப்பெரிய விலை கொடுக்க வேண்டி வந்தது.

என்ன விலை ?

"திருவளரு மரிமழத்துச் செல்வனார் திருக்கோயிற்
பெருகுதிருப் பணிபுரிவோர் பெறும்பைறு வைகுந்த
மருவியதா மரைக்கண்ணன் மவறயற்குங் கிடைப்பரிதென்
றொருவனுரைப் பதுவியப்போ வுயர்மறைக ளுரைக்குங்கால்."

"உன்னை மறவா மனமது வேண்டினேன்
ஒன்றும் நினையா அறிவது வேண்டினேன்
என்றும் உறங்கா விழியவை வேண்டினேன்
நன்றேஅரு ளும்சுந் தரனே!

வீணை S. பாலசந்தர் அவர்கள் மகாவைத்தியநாத சிவன் அவர்களைப்பற்றி எழுதியுள்ளதில் சில பகுதிகள் சுருக்கமாக:



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'இவர் மக்களால் போற்றிப் பாராட்டப்பட்டவர்—உண்மையில் இவர் அவதார புருஷரேயாவார். அவர் கர்நாடக இசை உலகத்தை வளப்படுத்தப் பிறந்தவர்.

அவர் காலத்திற்கு முன் இல்லாத யாவரும் வியக்கத்தக்கப் பல இசைக்கோவைகளை ஆக்கித்தரும் சிறந்த பணியை மேற்கொண்டார். மகாவைத்தியநாத ஐயர் ஒரு வித்தகச் சித்தர்.

அவர் இளம் பருவத்திலேயே கர்நாடக இசையில் இறையருளால் சிறந்த ஆதர்ச புருஷராக விளங்கி வந்தார். அவர் இசைக்கலையில் மட்டுமல்ல பல கலைகளிலும் ஒரு சிறந்த அறிஞராய் விளங்கினார்.

சாத்திரங்கள், சிவபுராணங்கள், பெருங்காப்பியங்கள், நாயன்மார்களின் பக்திப் பாடல்கள் ஆகியவை அவருடைய உடல் உள்ளம் ஆகியவற்றின் ஒருபகுதியாகவே இருந்தன.

தன்னலமற்று முழு நேரத்தையும் இசைப்பணிக்கே அர்ப்பணித்துள்ள அருளாளரும், சாகித்யகர்த்தாவும்

ஆகிய ஸ்ரீதியாகப்ரும்மம் போன்றவர்களும், எல்லாக் கலைகளிலும் மகாமேதையாக விளங்கிய, சிறந்த இசைவித்வானுமாகிய மாபெரும் மகாவைத்தியநாத ஐயர் போன்றவர்கள் கர்நாடக இசையைப் புனிதமாக்கித் தந்தனர்.

இப்பொழுது கச்சேரிகளில் பல்லவிபாடுவது அருகிவிட்டது. பல்லவி பாடுவது என்பது சாதாரண தாள வேடிக்கை அல்ல. கேட்போருக்கு அவர்களுடைய லய அறிவை வளர்ப்பதோடு நமது பாரம்பரிய இசைச் செல்வத்தைப் பாதுகாத்துத் தருவதும் ஆகும்.

அன்றே, அதாவது நூறுஆண்டுகளுக்கு முன்பே 'சக்ரவாகம்' என்ற அபூர்வ ராகத்தைப்பாடி,தனது 16—வது வயதிலேயே 'மஹா' என்ற பட்டத்தைப் பெற்றார் வைத்தியநாத ஐயர். ஆனால் நூறாண்டுகள் கழிந்த பின்னும் 'வகுலாபரணம், கோகிலப்ரியா, பவப்ரியா, கமனச்ரம, தர்மவதி, நடபைரவி, ஷட்விதமார்கனி, ஸரஸாங்கி, நாகாநந்தினி, நவநீதம், மானவதி, தாதுவர்த்தினி, ரூபாவை, ஜங்காரத்வனி, ரகுப்ரியா, கோசலம் சூலினி, சித்ராம்பரி, காந்தாமணி, ஸாலகம், நாஸிகாபூஷணி ஆகிய ராகங்களைப் பலர்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தொடுவதே இல்லை... இன்று நம்மிடையே இன்னும் ஒருசில வைத்தியநாத சிவன்கள் தேவை.

மகான்கள் தியாகப்ரும்மம் அவர்களும், முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்களும் மேளகர்த்தா ராகங்களிலும் அவற்றின் ஜன்ய ராகங்களிலும் பல கீர்த்தனைகள் இயற்றி உள்ளனர். நமது முன்னோர்கள் நமக்காக விட்டுச்சென்ற அந்த அரியசெல்வங்களை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டாமா ?

கலைஞர்களுக்கிடையே கலையை மேம்படுத்துவதில் போட்டி இருக்கலாம். வித்தையில் நீ பெரியவனா,நான் பெரியவனா என்ற அகந்தை தலை தூக்கக்கூடாது. .

எனக்கு 'மகா' என்று ஒருபட்டம் கொடுத்தால்,நான் வேணுகோபால்தாஸ் நாயுடு அவர்களுக்கு 'மகா,மகா'என்று இரண்டு பட்டங்கள் தருகிறேன் என மகா வைத்தியநாத சிவன் அவர்கள் கூறி போட்டியைத் தவிர்த்திருக்க வேண்டும்.'

சில நண்பர்களின் தூண்டுதலால் வேணு நாயுடு அவர்கள் சிவனைப் போட்டிக்கு அழைத்து விட்டார்.

இந்த போட்டி நடந்தபோது மகாவைத்தியநாதசிவன் அவர்களுக்கு வயது 47.

போட்டி, சாத்தாணித் தெரு ராமையா பிள்ளை என்பவரின் வீட்டில் நடைபெற்றது. 'போட்டியை எப்படி அமைத்துக் கொள்ளலாம் ?' என்று கேட்டார் சிவன்.

'நீங்கள் எந்த ராகம் வேண்டுமானாலும் பாடுங்கள். பல்லவியை நான் அமைத்துத் தரும்படிதான் பாட வேண்டும். இதுதான் நிபந்தனை'.

'சரி! ஒப்புக் கொண்டேன்.'

பொதுவாக இம்மாதிரியான போட்டிகளில் அதிகம் பழக்கத்திலுள்ள தோடி, காம்போதி, சங்கராபரணம், பைரவி, கல்யாணி போன்ற கன ராகங்களில்தான் பாடுவார்கள்.

மகாவைத்தியநாதசிவன் 'நாராயணகௌளை' ராகத்தை எடுத்தார். இதற்கு பல்லவி அமைக்க நாயுடு அவர்களால் முடியவில்லை. தாமே 'சம்போ சிவசங்கர விபோ சாம்பசதாசிவ ஓம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஹரஹர' என்று பல்லவி அமைத்து பாடலை பூர்த்தி செய்தார் மகாவைத்தியநாதசிவன். அவரின் குரல்வளம், இசைஞானம், இசைத்திறம் ஆகியவற்றால் மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம்போல் அவையினர் அமர்ந்திருந்தனர். நடுவர் போட்டோகிராபர் மாசிலாமணி முதலியார் அவர்களும், இசையை ரசித்த பெருமக்களும் சிவன் அவர்கள் போட்டியில் வென்றதாக அறிவித்தனர். வேணுகோபால்தாஸ் அவர்கள் பல்லவி அமைக்க முடியாத வருத்தத்துடனும், தோல்வியால் ஏற்பட்ட சினத்துடனும் அவையைவிட்டு வெளியேறினார்.

மாசிலமணி முதலியார் வெற்றிபெற்ற மகாவைத்தியநாத சிவன் அவர்களுக்கு ஆயிரத்து ஒரு ரூபாய் ரொக்கமும், ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள தோடா, வீரச்சங்கிலி, நடுவில் தங்கம் பதித்த வெள்ளித் தாம்பாளம், விலையுயர்ந்த பொன்னாடை முதலியவற்றைப் பரிசாகக் கொடுத்து சன்மானித்தார்கள்.

இந்த போட்டி நிகழ்வு மனதளவில் மகாவைத்தியநாதசிவன் அவர்களை பாதித்து விட்டது.

இசைக் கலைக்கு ஆற்றவேண்டிய பணிகள் பல இருக்க இதுபோன்ற, மனதில் வடுவை ஏற்படுத்தும் போட்டிகள் தேவைதானா என சிந்தித்தார். சங்கீத மேடைகள் தமாஷா மேடையாகத் தாமும் காரணமாகிவிட்டோமே என வருத்தம் மனதின் ஆழத்தில் பதிந்து விட்டது.

அது அவருடைய உடல் நிலையை சரியாகதபடி பாதித்து விட்டது.

மகாவைத்தியநாத ஐயர் அவர்களுக்கு விடை கொடுக்கும் முன், ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளும், மகாவைத்தியநாதசிவனும் தொடர்புடைய சில நிகழ்வுகளைப் பின்னர் நாம் காண வேண்டியுள்ளது.

எனவே காசியில் இருக்கும் ஸ்வாமிகள் இடம்தேடி செல்வோம்.

அங்கு நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் நம் ஸ்வாமிகள் நிகழ்த்திய அற்புதங்கள் யாவை ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



(சிவன் சகோதரர்கள் தங்களுக்குள்ளே பரிமாறிக் கொள்ளும், அவர்களுக்கு மாத்திரமே புரியும்

பாஷை ஒன்றை சிருஷ்டித்தனர். அதற்கு 'பாண்டவ பாஷை என்று பெயர்சூட்டினர்.

துவாபர யுகத்தில், பாண்டவர்கள் வனவாசத்தின்

பதின்மூன்றாம் ஆண்டை அஞ்ஞாதவாசமாகக் கடைப் பிடித்தனர். விராட நாட்டைத் தேர்ந்தெடுத்து மாறுவேடம் தரித்து பிறர் அறிந்துகொள்ள முடியாதபடி அரண்மனையில் பணியாற்றி வந்தனர்.

அவர்கள் தங்களுக்கு மட்டும் புரியும்படி, பிறர் புரிந்து கொள்ள முடியாதபடி ஒரு பரிபாஷையைப் பேசி வந்தனர். அதற்கு 'பாண்டவ பாஷை' என்று பெயர்.

அதுபோல் ராமசாமி சிவன் அவர்களும், வைத்தியநாதசிவன் அவர்களும், அவர்கள் இருவருக்கு மட்டுமே புரியும்படி சமஸ்கிருத எழுத்துக்களை மாற்றிப்போட்டு பேசி வந்தனர். கச்சேரிகளின் நடுவே இசை தொடர்பான செய்திகளைப் 'பாண்டவபாஷை' மூலம் பரிமாறிக் கொள்வர்.)

"சுந்தர மூர்த்திக் கன்பு துளும்பநின் றருச்சிப் பான்சீர்
வந்தநால் வகையாம் போது வளர்தரு வளமிக் கோங்கு
நந்தன மியற்றி னோர்க ணாம்புகழ் தரத்தி னாரோ
விந்திர னெனவெப் போது மிருந்தர கியற்று வாரால்."

"பல்லா யிரம்கரங்கள் கும்பிடும் உன்னையே
சொல்லா யிரம்கொண்டு செய்திடுவோம் அர்ச்சனை ;
கல்லாத நானுமிங்கே பேரருள் வேண்டியேநின்
மெல்லடி சார்ந்தேன் பணிந்து."

1848–ம் ஆண்டு, கீலக வருஷம், வைகாசி மாதம்.

ஸ்ரீசுந்தரஸ்வாமிகள் முதன் முதலாக கும்பாபிஷேகம் நடத்தியது காசி விஸ்வநாதர்–விசாலாக்ஷி ஆலயமாகும். அவரும், கணபதி முனீந்தரரும் பதினாறு நாட்களில் குடமுழுக்கு நடத்தத் தீர்மானித்தனர்.

செலவிற்குப் பணம் பொருள் எவ்வாறு திரட்டுவது ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தர ஸ்வாமிகள் காற்றில் பறக்கும் சக்தியையும், ஒரே நேரத்தில் பல இடங்களில் நிஜ உருவத்தோடு தோன்றும் சக்தியையும் பெற்றிருந்தார்.

இச்சக்தியினால், கன்னியாகுமரிமுதல் நேபாளம்வரையுள்ள பல இடங்களுக்குச் சென்றார். அரசர்களைக் கண்டார், மகாபண்டிதர்களுடனும், வைதீகர்களுடனும் உரையாடினார். அன்னபூரணி விசாலாக்ஷி சமேத காசிவிஸ்வநாத ஸ்வாமி திருக்கோயில் குடமுழுக்கிற்கு வருகை தரும்படி அழைப்பு விடுத்தார்.

எல்லா தேசங்களிலிருந்தும் அரசர்கள் வந்து குவிந்தனர்; பொன், பொருளைக் குவித்தனர்.

மகாபண்டிதர்கள், வேதவித்துக்கள் வருகை புரிந்தனர்; காசியைக் கயிலாயமாக்கினர்.

கோடகநல்லூர் சுந்தர ஸ்வாமிகளும், மகாகணபதி முனீந்திராளும் ஒருசேர அவர்களுக்கு அருள்பாலித்தனர்.

மக்கள் எல்லாரும் குடமுழக்கின் விமரிசையைக் கொண்டாடினர். காசிதேசத்தரசர் முதற்கொண்டு அனைத்து அரசர்களும் கும்பாபிஷேகச் சிறப்பைக் கூறிப் பெருமிதம் அடைந்தனர்.

வைதீகவித்துக்களுக்கு அரசர்கள் தக்கவாறு சம்பாவனைகள் செய்தனர். சம்பாவனை பெற்ற வைதீகர்கள் பெருமகிழ்ச்சியில் ஆழ்ந்தனர்.

சுந்தர ஸ்வாமிகள் விரும்பியபடி லக்ஷக்கணக்கான மக்களுக்கு விழாநாட்களில் விமரிசையாக அன்னதானம் அளிக்கப் பெற்றது.

இந்த அன்னதானத்தில் ஒருநாள் தட்டுப்பாடு ஏற்பட்டது.

'கூட்டம் அதிகமாக இருக்கிறது. சமைத்த உணவு போதாதுபோல் இருக்கிறது' என்றார் தலைமை சமையல்காரர்.

'அன்னத்தை, அன்னம் பரிமாறும் ஒரு சிறுகூடையில் எடுத்து வாருங்கள்' என்றார் சுந்தரர்.

தலைமை சமையல்காரர் எடுத்து வந்தார்.

கணபதி முனீந்தரரின் முன் அக்கூடையை வைத்தார் சுந்தரர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அன்னபூரணியையும், முனீந்தரரையும் மனதால் துதித்தார். அந்த சின்ன அன்னக் கூடையைத் தொட்டார்.

'எடுத்துச்சென்று பரிமாறுங்கள்.'

தலைமை சமையல்காரர் விழித்தார்.

கொண்டு வந்த சோறுதான் இப்பொழுதும் இருக்கிறது. இத்தனை பெரிய பிரம்மாண்ட கூட்டத்திற்கு இது எப்படிப் போதும்? என்று குழம்பினார். மறுத்துப் பேச மனம் வரவில்லை.

சாமிகள் சொல்லி விட்டாரே! வேறு வழி.

அன்னக்கூடையை எடுத்துச் சென்றார்; பரிமாறினார்.

அன்னம் எடுக்க எடுக்கக் குறையாமல் வந்து கொண்டே இருந்தது. பல பந்திகளுக்கும்,பல ஆயிரம் பக்தர்களுக்கும் அந்த அன்னக்கூடை அன்னம் பரிமாறப்பட்டது.

சாப்பாட்டு பந்திகள் முடிந்ததும் தலைமைச்சமையல்காரர் ஓடோடி வந்தார். இருபெரும் மகான்களின் பாதங்களில் விழுந்தார்.

'ஐயா! உங்களின் மகிமை தெரியாமல் இந்த அன்னக்கூடை அன்னம் எவ்வாறு போதும்? என்று சந்தேகப்பட்டேன். இந்த அன்னக் கூடை உங்கள் திருக்கரங்கள் பட்டதும் அக்ஷய பாத்திரமாகி விட்டது. என் அறியாமையை பொறுத்துக் கொள்ளுங்கள்.'

'இதில் என் மகிமை ஏதும் இல்லை. இதோ பரப்ரும்ம ஸ்வரூபியாய் அமர்ந்திருக்கிறாரே அவரின் கருணாகடாக்ஷம்தான் காரணம்' என்று கணபதி முனீஸ்வரரை சுட்டிக் காட்டினார் சுந்தரர்.

சுந்தரஸ்வாமிகளின் பக்திப்பிரவாகம், சக்திப் பிரபாவத்தைக் கண்டு முனீந்தராள் உள்ளம் பூரித்தார்.

பதினாறு நாட்களுக்குள் நடைபெற்ற சிறப்பான கும்பாபிஷேக விழா கண்டு அனைவரும் வியப்பிற்கு மேல் வியப்படைந்தனர். மகான்களின் அற்புதச் செயலை அறிந்து அவர்களைப் பக்தியால் கொண்டாடினர்.

அன்னபூரணி–விசாலாக்ஷி சமேத காசிவிஸ்வநாதர் ஆலய கும்பாபிஷகம் நிறைவடைந்ததும் மகாகணபதி முனீஸ்வரர் இமயமலைச் சாரலுக்கு யாத்திரை மேற்கொண்டார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இச் சரிதத்தில் ஸ்ரீமகாகணபதி முனீந்தராள் பாதம் பணிந்து அவருக்கு விடைகொடுப்போம்.

அவர்,இமயமலை யாத்திரை மேற்கொள்வதற்கு முன்பு சில யோக சாதனங்களை சுந்தர ஸ்வாமிகளுக்கு உபதேசித்தார்.

அவை என்ன யோக சாதனங்கள்?

"பூமகளை மலர்மகளைப் போலாது தன்கருணைத்
தேமுதவி யறநெறியிற் செலஞானச் சுடர்காட்டிக்
காமுறுமா ருயிர்க்கின்பக் கதியளிக்குங் கலைமகளா
நாமகளை யஞ்சலிப்பா நமதுவினை யுஞ்சலிப்பாம்."

"முந்தை வினையினில் யான்செய்த நற்றவத்தே
முந்தியே வந்து சிறியேனை ஆட்கொண்டாய்
தப்பாமல் கண்முன்னே தோன்றியே சொல்லொன்றும்
செப்பாமல் நிற்றல் அழகோ!"

பல ஆண்டுகள் காசிக்ஷேத்திரத்தில் மகாகணபதி முனிகள் தங்கி இருந்தார். சுந்தரஸ்வாமிகளை சந்தித்து தன்னுடைய அருள் ஆற்றல்களை அவரிடம் வழங்க வேண்டும் என்ற சங்கல்பத்தினாலேயே இத்தனை காலம் அவரை எதிர்பார்த்துக் காத்திருந்தார் எனவும் கொள்ளலாம்.

இனி.......

நாம் காசி நகருக்குச் செல்வோம்.

இமயமலை சாரலுக்குப் புறப்படும் முன் மகாகணபதி முனீந்திரர் ஸ்ரீ உச்சிஷ்ட கணபதி உபாசனையை சுந்தரருக்குக் கற்றுக் கொடுத்தார்.

அஷ்டமா சித்திகளான அணிமா, மணிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசத்துவம், வசித்துவம் ஆகியவற்றை பிரயோகிக்கும் ஆற்றலை அருளினார். இவற்றில் முதல் மூன்றும் உடலால் எய்தும் சித்திகள். பின் ஐந்தும் மனதால் எய்தும் சித்திகள்.

இமயமலை சென்ற பின்னர் மகாகணபதி முனீந்தராளைப் பற்றிய செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கோடகநல்லூர் சுந்தர ஸ்வாமிகளுக்கு வாயுஸ்தம்பம் –ஆகாயத்தில் மிதப்பது;

ஜலஸ்தம்பம்–ஜலத்திற்குள்ளே பலமாதங்கள் இருப்பது;

சமாதி நிஷ்டைநிலை–தம் பிரக்ஞையே இல்லாது எத்துணைக் காலம் வேண்டுமானாலும் சமாதி நிஷ்டையில் ஆழ்ந்து விடுவது ஆகிய சித்திகள் முன்னரே கைவரப் பெற்றிருந்தன.

ஆனால் இந்த சித்துகளில் ஆழ்ந்து விடாமல் தேவையான போதுமட்டும், மக்களுக்குப் பயன்தரும் வகையில் கைக்கொண்டார். ஏனெனில் தமது ஆன்ம பலம் சித்துகளால் திசை திருப்பப்பட்டு விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார்.

கீலக வருஷம் வைகாசி மாதம் காசிவிஸ்வநாதர் ஆலய கும்பாபிஷேகம் நிறைவு பெற்றவுடன் ஆனி, ஆடி ஆகிய இரண்டு திங்கள்கள் தங்கினார்.

ஸூதசம்ஹிதை,சிவபுராணம், வேதாந்த பாடங்கள், விபூதி ருத்ராக்ஷ மகிமைகள் பற்றி ஆங்காங்கே உபன்யாசம் செய்தார்கள்.

ஆவணி மாதம் காசியிலிருந்து புறப்பட்டு புனிதநதிகளில் நீராடி, க்ஷேத்ராடனம் செய்து கொண்டு கார்த்திகை மாதம் இரண்டாவது வாரம் கோடகநல்லூர் வந்து சேர்ந்தார்.

1848 முதல் 1851 வரை திருநெல்வேலி மாவட்டத்தில் பல இடங்களுக்கும் யாத்திரை செய்தார். புதியவர்கள் சீடர்கள் ஆயினர்.

(1851 முதல் ஸ்வாமிகளின் சம்பவங்கள்–அற்புதங்கள் நிறைந்த விஜயயாத்திரை தொடங்குகிறது. )

1848–1851 :இந்த மூன்றாண்டுகளில் நடந்த சில முக்கிய நிகழ்வுகள் என்னென்ன ?

“சுந்தரற்கு மிடப்பாகத் தோகைகயல் விழியுமைக்கு
மைந்தருக்கு மகிழ்வுகொடு வளர்பூசை புரிந்தவர்க்குப்
பந்தவினைப் பயமுமெம பயமுமிலை கயிலைமலை
சந்ததமுஞ் சிந்தைமகிழ் தழைப்பவள ரிடமாமே.”



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"குருநாதர் பொற்பாதம் தேடியே வந்தீர்
பெருமானின் ஆலயம் கண்டீர் ,அவரைக்
கருத்துடனே உள்ளத்தில் போற்றித் தொழுவீர்
அருள்யாவும் பெற்று உயர்வீர்."

ஸ்வாமிகள் 1848–ம் ஆண்டு,கீலக வருஷம் கார்த்திகை மாதம் இரண்டாம் வாரம் கோடகநல்லூர் வந்து சேர்ந்தார்கள்.

ஸ்வாமிகளின் ஆதிகால நண்பர்களாக இருந்து சிஷ்யர்களான நாராயண சிவம்,ரங்கநாதசிவம் மற்றும் சேஷாசலதீக்ஷிதர் ஆகியோர் காசியிலிருந்து திரும்பி வந்த சுந்தரஸ்வாமிகளை தரிசித்து மகிழ்ந்தனர்.

1848–1851 காலங்களில் கோடகநல்லூர், சுத்தமல்லி, கரிசூழ்ந்த மண்டலம், பத்தமடை, வீரவநல்லூர், களக்காடு, காருகுறிச்சி, கல்லிடைக்குறிச்சி, அத்தாழநல்லூர், அம்பாசமுத்திரம், சாட்டுப்பத்து, ரங்கசமுத்திரம், அரியநாயகிபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஊர்களில் பஞ்சாக, ஸப்தாக முறைப்படி சூதஸம்ஹிதை உபன்யாசம் செய்தார்கள்.

திருநெல்வேலியில், தாமிரபரணியின் நடுவில் சுப்ரமணிய ஸ்வாமி திருக்கோயில் ஒன்று உள்ளது. வெள்ளம் வரும்காலத்து அக்கோயில் வெள்ளத்தில் மூழ்கிவிடும். அப்போது கோயில் பூஜைகள் மற்ற வழிபாடுகள் கரையிலுள்ள படிக்கட்டிலிருந்தே செய்யப்படும். அக்கற்கோயில் திருவுருமாமலை என்றழைக்கப்படும்.

அந்த இடம் குறுக்குத்துறை என்று பிரபலமாக அறியப்படும். அமைதிக்குப் பெயர் பெற்ற இடம்.

பிரசங்கம், சத்விஷயங்கள் பேசுவதற்கு ஏற்ற சூழல் அமைந்தது. நிம்மதியாக, நல்லவிஷயங்களைக் கேட்க நினைப்பவர்கள் அங்கே வருவார்கள்.

திருநெல்வேலி வந்தநாள் முதற்கொண்டு சுந்தரஸ்வாமிகள் அந்த குறுக்குத்துறை மண்டபத்தில் வேதாந்த விஷயங்களை உபதேசம் செய்து வந்தார்கள். அப்பொழுது நாராயண சிவம், ரங்கநாத சிவம், சுத்தமல்லி சூரியநாராயண சிவம் ஆகியோரே



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மாணவர்களாய் இருந்து வந்தனர். அவர்கள் ஸ்வாமிகள் கூடவே தங்கி இருந்தனர்.

ஸ்வாமிகளின் உபன்யாசத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் பெருமளவில் கோயில் மண்டபம் வருவார்கள்.

பாளையங்கோட்டை அருகே திம்மராஜபுரம் என்ற ஊரில் சிவசுவாமிகள் என்பவர் வசித்து வந்தார். சமஸ்கிருதம், தமிழ், வேதாந்த சாஸ்திரங்களில் பாண்டித்யம் பெற்றவர். அவர் ஸ்ரீசுந்தர ஸ்வாமிகள் குறுக்குத்துறையில் உரையாற்றி வருவதை அறிந்தார். உடனே தாமதமின்றி குறுக்குத்துறை ஸ்ரீசுப்ரமணியஸ்வாமி மண்டபம் வந்தடைந்தார்.

வேதாந்த விஷயங்களை ஸ்வாமிகள் தெளிவாக, எளிமையாக, ஆதாரங்களுடன் எடுத்துரைப்பதைக் கேட்டார். அவர் விளக்கிய நுட்பச் செய்திகளை அறிந்து மகிழ்ந்தார்.

உபன்யாசம் பூர்த்தி ஆனது. ஸ்ரீஸ்வாமிகளின் திருப்பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார் திம்மராஜபுரம் சிவஸ்வாமிகள். பணிந்து எழுந்தார். வாய்பொத்தி கைகட்டி நின்றார்.

'அடியேனைத் தங்கள் சீடனாக ஏற்றுக்கொண்டு அருள் புரிய வேண்டும். வேதாந்த பாடங்களை என் புத்தியில் ஏற்றி உய்விக்க வேண்டும். ஞானப் பிச்சை எனக்கு இடவேண்டும்.'

சுந்தரஸ்வாமிகளும் இரங்கி விபூதிப் பிரசாதம் கொடுத்தார். அவரைத் தன் மாணவனாக ஏற்றுக் கொண்டார். ஞானப்பிச்சை கேட்டதால்'பிச்சை ஸ்வாமிகள்" என்று தீக்ஷாநாமம் வழங்கினார்.

பிச்சை ஸ்வாமிகள்தான் பின்னாளில் ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளின் சரிதம், பிறப்பு, கல்வி, அறிவு இவைபற்றி ஐந்து செய்யுள்களில் சுருக்கமாக எழுதி உலகத்திற்குத் தெரியப்படுத்தினார்.

ஸ்வாமிகள் இயற்றிய 'நிஜானந்த விலாசம்' என்ற வேதாந்த நூலில் இச்செய்யுள்கள் முதலாவதாக இடம்பெற்றுள்ளன.

இந்த சூழலில் ஒரு பரதேசியார், திருநெல்வேலியில் ஸ்வாமிகளைக் கண்டார். இவர்களின் சந்திப்பு பெரும் திருப்புமுனையாக அமைந்தது. ஸ்வாமிகள், அவர் வாழ்க்கையுடன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஒன்றிப் பிணைந்த ஊருக்கு விஜயம் செய்ய இந்தப் பரதேசியார் காரணமாகப் போகிறார்

அந்தப் பரதேசி யார் ?

"தவமென்னும் புணையேறிச் சாந்தமெனுந் துடுப்பியக்கிப்
பவமென்னு மெழுதிரைமேற் படர்புணரிக் கரையண்மிச்
சிவமன்னு முதுக்குறைவாற் றிகழ்பெரியீர் கேண்மினென
நவமன்னு மகிழ்வினொடு நவிலுவான் சூதமுனி. "

"சிந்தையில் நிற்கும்சீர் சுந்தர போற்றிஎம்
தந்தையும் தாயுமாய் ஊனில் கலந்தாய்நல்
ஓடையின் நீராக தாகம் தணித்தாய்நீ
கோடையின் தூமழையே போற்றி!"

பரதேசியாரைப் பற்றிப் பார்ப்பதன் முன் சிறிய நிழ்ச்சி ஒன்று, சுந்தரரின் இளமைவயது பாடசாலை நண்பர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் சூரியநாராயண, சங்கரநாராயணன், கிருஷ்ணன், முத்துசாமி ஆகியோர். இவர்கள் சமவயதினர்.

பள்ளிக்கூடத்தில் படித்துவந்த ஐந்து வயது முதலே சுந்தரத்தின் கூட இருந்து பாடம் படிப்பதும், பாடம் கேட்பதும், சிவவழிபாடு செய்வதும் வழக்கமாய்க் கொண்டிருந்தனர்.

சுந்தரன்—ஜானகி திருமணம் நடந்த போது இவர்கள் மாப்பிள்ளைத் தோழர்களாக இருந்து வேடிக்கையும், கலாட்டாவும் செய்து கொண்டு விழாவைக் கலகலப்பாக்கினர்.

சுந்தரனின் சாந்தி முகூர்த்தம் நிச்சயமானது. சூரியநாராயண ஐயர், உரிமையுடன் சுந்தரனின் முதுகில் பளீரென்று பலமாகத் தட்டி 'என்னடா! உனக்கு சாந்தி முகூர்த்தமாமே! இனிமேல் எங்களை மறந்து விடுவாய். உன்னுடன் இப்படிப் பழகுவதுபோல் பழக முடியாது. உனக்கு மகிழ்ச்சி. உன்னைவிட ஜானகிக்கு மிகுந்த மகிழ்ச்சிதான் '.

'ஆமாம்! இப்பொழுது இருப்பதுபோல் நான் இனி இருக்க மாட்டேன். எனக்கு மகிழ்ச்சிதான். என்னைவிட ஜானகி அதிகம் மகிழ்ச்சி அடையப்போகிறாள் என்பது உண்மைதான்.'



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



என்று புன்சிரிப்புடன் சுந்தரன் சொன்னதன் உட்பொருள் அப்பொழுது சூரியநாராயண ஐயருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

சுந்தரன் வித்வத் சந்நியாசம் ஏற்றுக் கொண்டதும் இந்த நான்கு முக்கிய நண்பர்களைத் தனியாக அமரச்செய்து கால்மணி நேரம் சொற்பொழிவு செய்வார். இந்த நண்பர்களும் எவ்வித இடையூறுமின்றி சுவைத்துக் கேட்பார்கள். இம்மாணவர் கூட்டம் சுற்றி அமர்ந்து கேட்கும்விதம் ஆதிசங்கராச்சாரியாருடன், சுரேஸ்வராச்சாரியார், பத்மபாதர், தோடகாச்சாரியார், ஹஸ்தாமலகர் ஆகிய நான்கு சீடர்களும் சுற்றிச் சூழ அமர்ந்திருந்து ஞானோபதேசம் கேட்டதைப் போலிருக்கும்.

சூரியநாராயண ஐயருக்கு மட்டும் மனதில் ஒரு உறுத்தல் இருந்து கொண்டே இருந்தது. இத்தகைய மாபெரும் மகான், ஞானியை, சிறு வயதில் முதுகில் தட்டியும், மரியாதைக் குறைவாகவும் இளமையின் துடிப்பில், நட்பின் உரிமையில் பேசிவிட்டோமே என்பதுதான் அது. சுவாமிகளை விளையாட்டாகத் தட்டியதையும், அது சுவாமிகள் முதுகில் வலுவான அடியாக விழுந்துவிட்டதையும் எண்ணி விசனப்பட்டார். சம வயதினராக இருந்ததால் மன்னிப்புக் கேட்கவும், வணங்கி எழவும் தயங்கினார். இத்தகைய தத்தளிப்பில் அவர் வாளா இருந்துவிட்டார். ஆனால், தான் செய்த குற்றத்திற்குரிய பரிகாரமென்ன என்று தவித்தார்.

அவர் வருத்தத்திற்குப் பிராயச்சித்தமும் கிடைத்தது.

சூரிய நாராயண ஐயருக்கு கரிசூழ்ந்த மங்கலத்தில் உள்ள அம்மாள் குட்டி என்கிற அம்முகுட்டி என்பவருடன் திருமணம் நடந்திருந்தது. உரிய காலத்தில் அம்முகுட்டி கருத்தரித்தார். பிறந்த வீடான கரிசூழ்ந்த மங்கலத்திற்குப் பிரசவத்திற்குச் சென்றார். ஒரு சுப நன்னாளிலே ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தார்.

அப்பொழுது ஸ்வாமிகளுடன் பத்தமடையில் இருந்தார் சூரியநாராயணன். அவ்வூர் குளக்கரையின் படிக்கட்டுகளில் இருந்து மாத்தியானிகம் (உச்சிக் காலத்திற்கு முன்பு உபநயனம் ஆனவர்கள் செய்யவேண்டிய நியதி.) செய்து கொண்டிருந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அந்த சமயம் ஐயரின் பின்னால் மெதுவாகப் படியில் இறங்கினார் ஸ்வாமிகள். அவர் முதுகில் மெதுவாக ஒரு தட்டுத் தட்டினார். 'ஏன்டா, மாத்யானிகம் பண்ணுகிறாய். இந்த நேரம் கரிசூழ்ந்த மங்கலத்தில் அம்முகுட்டிக்கு பிள்ளை பிறந்திருக்கிறது. சீக்கிரம் வீட்டுக்குப் போ! சோபனம் சொல்ல பெண்வீட்டார் சிலநிமிடங்களில் வரப்போகிறார்கள்.'

சூரியநாராயண ஐயருக்கு ஸ்வாமிகள் கூறியதைக் கேட்டு உடல் புல்லரித்தது. 'இரண்டரை மைலுக்கு அப்பாலுள்ள கரிசூழ்ந்த மங்கலத்தில் இப்பொழுது நடந்தது எப்படி இவருக்குத் தெரிந்தது ? சோபனம் சொல்ல வரப்போகிறார்கள் என்பது எப்படித் தெரிந்தது ?' என்ற சிந்தனையுடன் வீட்டிற்குச் சென்றார். பெற்றோரிடம் ஸ்வாமிகள் சொன்ன செய்தியைத் தெரிவித்தார். அவர்களுக்கு நம்பிக்கை வரவில்லை. எப்பொழுதுமே உள்ளூரிலேயே இருக்கும் மகான்களையும்,பெரியவர்களையும் என்றும் நாம்தான் நம்புவதும் இல்லை மதிப்பதும் இல்லைதானே!

சிறிது நேரத்தில் வீட்டு வாசலில் வில்வண்டி ஒன்று வந்து நின்றது.

நான்கு சுமங்கலிப் பெண்களும், இரண்டு ஆண்களும் இறங்கினர். பெரியவர்களிடம் பேரன் பிறந்துள்ள செய்தியைக் கூறினார்கள்.

இப்பொழுதுதான் சூரியநாராயணருக்கு, ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் சமவயதினர் ஆயினும் அவர் ஒரு ஒப்பற்ற மகான், திரிகாலம் அறிந்த ஞானி,ஆத்மானுபூதியை எட்டியவர் என்ற உண்மை உறைத்தது.

விருந்தினர்கள் விடை பெற்றுச் சென்றனர்.

தாமதியாது கோயில் குளக்கரைக்குச் சென்றார். அங்கே ஸ்வாமிகள் அமைதியாய் அமர்ந்திருந்தார்.

கால்கள் தடுமாறின; கைகள் நடுங்கின; விழிகள் நீரைப் பொழிந்தன. தண்டம் போல் சாஷ்டாங்கமாக ஸ்வாமிகள் பாதங்களில் விழுந்தார்.

குரல் தழுதழுக்கக் கூறினார்: 'உங்களை சக நண்பன் என்றே இதுவரை பார்த்தேன். என் ஆணவத்தால் உங்கள் பாதங்களில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



விழுந்து வணங்குவதைத் தவிர்த்தேன். நீங்கள் கடவுள் நிலையில் இருப்பவர். என்னிலிருந்து கோடிகோடி மாண்பு பெற்று விளங்குபவர். அன்று உங்கள் முதுகில் அடித்ததை எண்ணி மனம் தடுமாறினேன். ஆனால் உங்களிடம் மன்னிப்புக் கேட்க என் அகந்தை இடம் கொடுக்கவில்லை. இன்று என் முதுகில் நீங்கள் மென்மையாகத் தட்டியதும் என் அகந்தை அகன்று விட்டது. என் குற்றங்களை மன்னித்து, என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்றார்

அதற்கு ஸ்வாமிகள் என்ன பதில் கூறினார் ?

"ஆதிமறை மனுவோதி யாகமத்தின் படிகடுக்கை யணிவார் பூசை
நீதிபெற நித்தியநை மியங்களினா னெடி தினாற்றி
யோதுசிவ னடியார்க ளுடனருந்தன் மகிழ்ந்துறைந்த லுரிமையாக்கித்
தீதில்பல கலையாந்து பொழுதுகழித் தகங்களிப்பர் சிவநூற் செல்வர்."

"தூய மனத்தோடும் உண்மைத் திறத்தோடும்
தாயினும் மேலான சுந்தரனைக் காண
அரிமழம் வந்துஅப் புண்ணியன் பாதம்
பரிவுடன் ஏத்திப் பணிவீர்!"

உடனே சுந்தரஸ்வாமிகள் புன்சிரிப்புடன், 'அந்நிகழ்ச்சியை நான் அன்றே மறந்துவிட்டேனே. அதை இன்னமுமா நினைவில் வைத்திருக்கிறாய் ? எனக்கு அனைவரிடத்தும் அன்புப் பிணைப்பைத் தவிர துவேஷப்பிடிப்பு ஒன்றுமில்லையே! உன் மனத்திலுள்ள குழப்பத்தை நீக்கு. குழம்பிய மனதுடையவன் என்றும் மேலான நிலையை அடையமுடியாது. சிந்தனையைத் தெளிவாக வைத்திரு. அதில் கடவுளைக் குடியேற்று. இறைவனைத் தீவிரமாக உபாஸனை செய். எதை உபாசிக்கிறாய் என்பதைவிட எவ்வளவு தீவிரமாய் உபாசிக்கிறாய் என்பதே முக்கியம். இதை குருவின் உபதேசமாக ஏற்றுக்கொள். குரு எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொண்டு செய்யவேண்டும் என்பதே மரபு."

அன்று மாலை நான்கு சீடர்களும் அருகே இருக்க அவர் உபதேசம் இப்படி அமைந்தது :



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"கலியுகத்தில் குருநாதரிடத்தில் வைக்கும் பக்தி அனைத்து நன்மையையும் அளிக்கிறது. குருநாதருக்கு செய்யும் வந்தனம் நேரிடையாக கடவுளைச் சென்று சேர்கின்றது.

தர்மத்தின் வழியில் நடக்க மறுக்கும் மனத்தை கட்டுக்குள் அடக்கி தர்மத்தின் வழியில் நடக்கப் பழக்கப்படுத்த வேண்டும்.

குருவின் உபதேசங்கள், நீதி சாஸ்திரங்கள் உங்களுக்குக் கசப்பாகத் தோன்றலாம்; பின்பற்றக் கடினமானதாக இருக்கலாம். ஆனால் முயற்சியை விடாமல் முயன்று கொண்டே இருந்தால் அந்த போதனைகள் அமிர்தமயமானவை, அர்த்தமுள்ளவை என்பது விளங்கும்.

நரஸ்துதி–மனிதனைத் தகுதிக்கு மீறிப்போற்றினால் நீங்கள் அவனுக்கு அடிமை என்று பொருள்.ஏதோ பலனை எதிர்பார்த்து அவ்வாறு செய்கிறீர்கள் என்று அர்த்தம். தகுதியில்லாத புகழையும், பாராட்டையும் விரும்புபவன் ஏமாற்றுக்காரனாக இருப்பான்.

ஆண்டவனுக்கு, குருவிற்கு அடிமையாக இருங்கள்; அவர்களைப் போற்றுங்கள். சத்தியத்தைப் பேசுங்கள்; தர்மத்தின் வழி நில்லுங்கள். வாழ்க்கையை நாம் எவ்வாறு பார்க்கிறோமோ அப்படித்தான் புலனாகும். கசப்பான தர்மசாஸ்திரங்கள் வாழ்க்கை நல்வழிப்பட தேவையானவை. தர்மத்தை நாம் பின்பற்றினால்தான் தர்மம் நம்மைக் காக்கும்.

மனித ஜன்மத்தின் மேன்மையை உணர வேண்டும். இந்தப் பிறவி சிறப்புற்று விளங்க அதற்கான தர்மசாஸ்திர மார்க்கங்களை அறிந்து கொள்ள வேண்டும். பகவானுடைய சரணாரவிந்தங்களை அடைவதே மனித வாழ்க்கையின் லக்ஷியமாக இருக்க வேண்டும்.

பொன் பொருளைத்தேடி தேவையானவற்றிற்கு செலவு செய்யுங்கள்; சிறிது சேமித்தும் வைத்துக் கொள்ளுங்கள். ஸத்விஷயங்களிலும், பரோபகாரத்திலும் மீதியைச் செலவழியுங்கள். ஆனால் மேலும் மேலும் பணத்தைத்தேடி உலோபியாக இருந்து சேமித்து வைத்துக் கொள்ளதீர்கள். பிறர்க்கும், தனக்கும் பயனில்லாமல் செல்வத்தை சேர்த்து வைத்துக் கொண்டு வாழ்பவர்கள் பொன்னுடையவருமல்லர், ஞானக்கண் உடையவரும் அல்லர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மற்றவரை ஏமாற்றி,நம்பியவர்களை மோசம் செய்து பணம் சேர்த்தவர்கள், சிலகாலம் வளமாக இருந்தாலும் கொடிய நரகத்தையே அடைவார்கள்.

கலியுகத்தில் பகவானை,குருவை தியானம் செய்யுங்கள்; நாமாவளிகளைச் சொல்லுங்கள். அவர்கள் நம் முன்னே வந்து தரிசனம் தருவார்கள்.இதைப் பார்த்தவன் மீண்டும் மாயையில் .சிக்கமாட்டான்...."

இந்த மந்திர உபதேசங்களைக் கேட்ட அந்த நால்வரும்தான் எத்தனை பாக்கியசாலிகள்!

1851–ம் ஆண்டு சௌம்ய வருஷம் தாமிரபரணி நதிப்பிரதக்ஷணத்தை இரண்டாவது முறையாக சீடர்களுடன் சேர்ந்து செய்தார்.

முதல் நதிப்பிரதக்ஷணம் பன்னிரண்டு நாட்களில் நடைபெற்றது.

இம்முறை நாற்பத்தி எட்டு நாட்களில் பூர்த்தி செய்தார்.

இனி.....

ஸ்வாமிகளைப் பார்க்க திருநெல்வேலி குறுக்குத்துறை வந்த அந்த பரதேசி

யார்?

"சுந்தரப்பேர் தரித்தபரஞ் சோதியுரு வாதிதனைக்
கந்தரத்தே கறுத்திருந்த கடவுண்மா மணிவிளக்கை
யந்தரத்தோர்க் கறிவரிய வற்புதனைப் பொற்பதனைப்
யெந்தரத்தா லுணர்ந்துபுக ழெடுத்தியம்ப லெளிதாமோ."

"சிந்தையில் நின்றாய்எம் சிந்தையில் ஒன்றினாய்
வந்தனம் சொல்லி வணங்கினோம் உன்னையே
தந்தனம் எம்மையே உன்னடி நீழலில்
சுந்தர தேசிக போற்றி."

1852–ம் ஆண்டு, பரிதாபி, வைகாசி மாதம்.

சுந்தர ஸ்வாமிகளைச் சந்திக்க குறுக்குத்துறை வந்த பரதேசியின் பெயர் 'ஒட்டுத் திண்ணைப் பரதேசி' என்பது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பெரிய ஞானி.அதிகம் பேசமாட்டார். கூட்டத்தில் கலந்து இருக்க மாட்டார். வேதாந்தம் தொடர்பாக எவரேனும் சந்தேகங்கள் கேட்டால் தத்துவத்தை எளிமையாக. சுருக்கமாக, புரியம்படிக் கூறிவிட்டு உடனே அந்த இடத்தை விட்டு அகன்றுவிடுவார்.

ஓரிடத்தில் அமர்ந்துகொண்டு உபதேசம் வழங்குவது கிடையாது.

நடந்து செல்லும்போதோ, குளித்துக் கொண்டிருக்கும் போதோ, கோயில் குளங்கள் என்று அலைந்து கொண்டிருக்கும் போதோ, உணவு அருந்தும்போதோ தத்துவக் கருத்துக்கள் மடைதிறந்த வெள்ளம்போல் அவர் திருவாயினின்று வெளிப்படும்.

இவருக்கு ஊணுறக்கம் என்பதில் லக்ஷியமில்லை. ஓரிடத்தில் நியதியாய் இருக்க மாட்டார். வெயில், மழை, காற்று, குளிர், பனி எக்காலம் ஆனாலும் வீதிகளில் திரிந்து கொண்டே இருப்பார். உறக்கம் தேவை என்று ஏற்பட்டால் வீட்டின் திண்ணைகள், கோயிற்படிகள், குளக்கரை, ஆற்றுமணல் காடு, நடமாட்டம் இல்லாத நடுரோடு இங்கெல்லாம் நினைத்த மாத்திரத்தில் படுத்து உறங்கி விடுவார்.

எப்பொழுது படுக்கிறார், எப்பொழுது எழுந்திருக்கிறார் என்று எவருக்கும் தெரியாது.

இவர் தெருக்களில் திரிந்து கொண்டிருப்பதையே மக்கள் கண்டிருக்கின்றனர்.

இது உயர்குடியினர் வசிக்கும் தெருவென்றோ, தாழ் குலத்தவர் வசிக்கும் இடமென்றோ பேதம் கிடையாது. இது வைணவர் வசிக்கும் தெரு, இது சைவர்கள் வசிக்கும் தெரு என்ற பாகுபாடும் பார்க்க மாட்டார்.

அப்பொழுதெல்லாம் அனைத்து வீடுகளிலும் திண்ணை வைத்துக் கட்டுவார்கள். தேசாந்திரிகள், வழிப்போக்கர்கள் எவரும் அங்கே தங்கி ஓய்வெடுக்கலாம். அத்தகைய திண்ணையில் படுத்திருப்பார், அன்றி அமர்ந்திருப்பார். குடிசைவீட்டுத் திண்ணையானாலும் அவருக்கு ஒன்றுதான். இவர் படுப்பதற்கு மூன்றடி நீளமும், ஓரடி அகலமும் உள்ள திண்ணை போதும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுருண்டு படுத்து விடுவார். எனவே இவரை 'ஒட்டுத் திண்ணைப் பரதேசி' என்றே அனைவரும் அழைத்தனர்.

அவருடைய பெயர் எவருக்கும் தெரியாது. அவருக்கே அது தெரியுமோ அல்லது தெரியாதோ!

இவர் காவிஉடை தரித்த சந்நியாசி அல்ல. நாலுமுழ வெள்ளை வேஷ்டியை முழங்கால் முட்டுக்கு மேலே உடுத்தியிருப்பார். தோளில் மாட்டிக் கொள்ள ஒரு பை. அப்பையில் விபூதியும், சில வேதாந்த நூல்களும், பற்பொடியும், ஒரு நான்குமுழ வேஷ்டியும் இருக்கும். இவையே அவரின் சொத்துகள்.

உண்ணும் உணவு சொற்பம். ஓரிடத்தில் அமர்ந்து சாப்பிடமாட்டார். யாரேனும் சாதத்தைப் பிசைந்து உருட்டிக் கொடுத்தால் அதை நடந்து கொண்டே மூன்றுகவளம் சாப்பிடுவார். மீதத்தை தன் சகாக்களான நாய், பூனை, காக்கை இவை களுக்கு வைத்து விடுவார். சாப்பிட்டதும் ஆறோ, குளமோ, கிணறோ சென்று கைகழுவுவார். இருகையேந்தி நீர் அருந்துவார். இதற்குமேல் அன்றையப் பொழுதிற்கு வேறெதுவும் சாப்பிட மாட்டார்.

இவர் வசித்து வந்தது புதுக்கோட்டை நகர் ஆகும்.

ஒரு சமயம் ஒட்டுத்திண்ணைப் பரதேசியார் புதுக்கோட்டையில் தெருவழியே நடந்து சென்றார். அப்பொழுது மதியம் மணி இரண்டு. அத்தெருவில் சாக்கடைத் தண்ணீர் குட்டைபோல் ஓரிடத்தில் தேங்கி இருந்தது. சேறும் சகதியும் கலந்து கூழ்போல் குழம்பி இருந்தது. அக்குட்டையில் நீண்ட நேரம் அமுங்கிக் குளித்த சில பன்றிகள் சுகானுபவத்துடன் வெளியில் வந்தன. மகிழ்ச்சிப் பெருக்கில் தம் உடம்பை சிலிர்த்துக் கொண்டன. அப்படி சிலிர்த்ததும் அவற்றின் மேனியிலிருந்து சாக்கடை நீர் தெளித்து விழுந்தது. சாக்கடை ஓரம் நடந்து சென்றுகொண்டிருந்த பரதேசியார் மேல் அந்த சாக்கடை நீர்த் துளிகள் சிந்தின.

அந்த பன்றிகளைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தார்.

அவ்வளவுதான்.

பின் என்ன நடந்தது?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"பாசமொரு மூன்றுவகைப் படுமாண வங்கன்மம்
பேசுசுத்தா சுத்தமெனப் பெறுமாயை யென்றுரைப்ப
ரீசனுறு குணந்தானே யெலாமறித லான்மாக்கட்
காசகல வறிவித்த லாதிபவா வறைகுவரால்."

"பாட்டாலே நான்உன்னை அர்ச்சித்தேன் ஆன்மிக
நாட்டிலே பக்திப் பயிர்செழிக்க எந்நாளும்
ஓடியே வந்து அடியாரைக் காத்திட
ஆசியை வேண்டினேன் இன்று."

தங்கள் உடல்களிலிருந்த சாக்கடை நீரை பரதேசியார் மேல் தெளித்து விட்டு மீண்டும் அந்த குட்டை நீரில் மகிழ்ச்சியுடன் புரண்டு விளையாட ஆரம்பித்தன, பன்றிகள்.

ஒட்டுத் திண்ணைப் பரதேசியார் அசுத்தநீர் நிறைந்த சாக்கடையென்றும் பாராமல் அதை ஒட்டிய தரையில் விழுந்தார். புரண்டார். அந்தப் பன்றிகளை கைகூப்பி வணங்கினார்.

'ஆகா! என்ன ஆனந்தம். பரமானந்தம். என்ன சுகம். பரபிரும்மத்தில் மனம் ஒன்றி லயித்து இருக்கின்றன. இந்த பரவசநிலை இன்னும் எனக்கு ஏற்படவில்லையே!' என்று கண்களில் நீர்சோரக் கதறினார். பன்றிகள் அக்குட்டையிலிருந்து எழுந்து போகும் வரை அவற்றையே கைகூப்பிப் பார்த்துக் கொண்டிருந்தார். பகுத்தறிவற்ற அந்த பன்றிகள் அடைந்த ஆனந்த சுகத்தை நாம் பெற்றோமில்லையே என்று அடிக்கடி ஏங்கிக் கூறுவார்.

சிலர் இவரை ஞானி என்றனர்; சிலர் பைத்தியமென்றனர்; சிலர் வேஷதாரி என்றனர்; சிலர் சோற்றுக்கு அலையும் சோம்பேறி என்றனர். யானையைப் பார்த்த குருடர்கள் போல் நால்வகையினரும் நான்கு விதமாகக் கூறித் திரிந்தார்கள். அதிகம் பேசாத இவரிடம் மக்கள் சிறிது விலகியே இருந்தனர்.

ஆனாலும் அவரை நேரில் பார்த்ததும் அன்பும், இரக்கமும் கொண்டனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பரந்த இசைஞானம் உள்ளவர்; அருமையான சாரீரம்; வேதாந்தச் செய்யுட்களையும், தேவாரப் பாடல்களையும் இசையுடன் பாடுவார். இவர் இசையை நாள்முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கலாம். மக்கள் கூடியுள்ள இடங்களில் பாடமாட்டார். ஆனால் ஆத்ம சந்தோஷத்திற்காகப் பாடுவார். அவர் அறியாமல் அவர் பாடியதைக் கேட்ட சிலர் பாடும்படி கேட்டால் 'இந்தக் கட்டைக்கு என்ன தெரியும். நான் பாடினால் அது ஊளையிடுவது போல இருக்கும். அதைக் கேட்டு நீங்கள் பயந்து போய் விடுவீர்கள். சுகானுபாவமாக இருக்காது. சிவசிவ என்றிருக்கும் என்னை ஏன் பாடச் சொல்கிறீர்கள்' என்பார். இத்தகைய சிறப்புப் பெற்ற பரதேசியார்தான் சுந்தரஸ்வாமிகளைக் காண வேண்டும் என்ற எண்ணத்தில் புதுக்கோட்டையிலிருந்து பயணப்பட்டு திருநெல்வேலி வந்தார்.

குறுக்குத்துறை சுப்பிரமணிய ஸ்வாமி சந்நிதியில் அமர்ந்து கொண்டு சுந்தர ஸ்வாமிகள் வேதாந்த விளக்கங்களைச் சொல்லுவதை ஒரு மூலையில் அமர்ந்து தூணில் சாய்ந்து கொண்டு கேட்டுக் கொண்டிருந்தார். ஒட்டுத்திண்ணைப் பரதேசியாரின் கண்கள் மூடியிருந்தன. மூடியிருந்த கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாக வழிந்து கொண்டிருந்தது. கல்லையும் கரையச் செய்யும் ஸ்வாமிகளின் உபன்யாசம் பரதேசியாரின் மனதைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

இவ்வாறு கூட்டத்தோடு கூட்டமாய் அமர்ந்து கொண்டு வேதாந்தச் சொற்பொழிவை ஒருவாரம் கேட்டார். மனம் உவந்தார். சுந்தரஸ்வாமிகளின் வாக்வன்மையால் கவரப்பட்டார். நாளுக்கு நாள் பிரசங்கத்திற்கு வரும் கூட்டம் பெருகி வருவதையும், அவர்கள் ஸ்வாமிகளின் சொல்லாற்றலில் ஈடுபட்டு சுவைத்துக் கேட்பதையும் கவனித்தார்.

சாதாரணமாக வேதாந்த விஷயங்கள் என்றால் மக்கள் பயந்து ஒதுங்கி விடுவர். ஆனால் இங்கோ நிலைமை தலைகீழாய் இருப்பதைக் கண்டு மனம் உவந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அப்பொழுது அவருள் ஒரு எண்ணம் பளிச்சென உதித்தது. ஒருநாள் ஸ்வாமிகள் வேதாந்த விசாரணையைப் பூர்த்தி செய்ததும் அவர் அருகில் சென்றார். பாதங்களைப் பணிந்தார்.

தம் உள்ளக் கிடக்கையை ஸ்வாமிகளிடம் பவ்யமாகத் தெரிவித்தார்.

பரதேசியாரின் உள்ளக் கிடக்கை என்ன?

"புண்ணியமுங் கண்ணியமும் பொருந்தியிறை யவனருளா
லெண்ணியவெல் லாமெய்து மிவ்வணிகர் மாளிகைமே
எண்ணியமா மணிக்குடங்க ணடைதட்கு மென்றன்றோ
விண்ணியலு மெழுபுரவி விலகிநா டொறும்போகும்."

"நானிலத்து மக்கள் நலமுடன் வாழ்ந்திட
கால்நோக காடுமே டென்றுபா ராது
அருள்பொழிய ஓடியே இந்நகர் வந்தாய்
கருணையின் தோற்றமே போற்றி."

'தங்கள் பிரவசனம் என் போன்றவனையும் தங்கள்பால் ஈர்த்து விட்டது. தங்கள் வாக்கைக் கேட்கும் மக்கள் அதன்வழி நடக்கத் துடிக்கிறார்கள். நம் பாரத தேசம் இன்று இருக்கும் நிலையில் நம் மக்கள் தடம் மாறிப்போகாமல், சனாதன கலாசாரத்தில் ஊன்றி நிற்க தங்களுடைய உபதேசங்கள் உதவிகரமாக உள்ளன.

நீங்கள் உங்கள் பேருரைகளைத் தொடர்ச்சியாக திருநெல்வேலி பகுதியில் நடத்தி வருவது மகிழ்ச்சியைத் தருகிறது. உங்கள் அருளுரைகளைக் கேட்பவர்கள் பேறு பெற்றவர்கள்.

அடியேனின் வேண்டுகோள் ஒன்று உள்ளது. தயைகூர்ந்து கேட்டு அருள்புரியவும்.

புதுக்கோட்டை சமஸ்தான மன்னரும், மக்களும் ஆழ்ந்த தெய்வபக்தி உள்ளவர்கள். தெய்வ நம்பிக்கை உடையவர்கள். சத்விஷயங்களைக் கேட்பதற்கு ஆர்வமும், ஊக்கமும் அவர்களுக்கு உண்டு. ஆனால் அவர்களை நல்வழியில் செலுத்த



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தகுந்த மாலுமிபோன்ற ஆன்மீகப் பெரியவர் இல்லை. தாங்கள் புதுக்கோட்டை நகருக்கு விஜயம் செய்து சில காலமாவது அங்கு தங்கியிருக்க வேண்டும்.

மக்களிடையே பிரசங்கித்து அன்பர்களை பக்தியின்பால் ஒருமுகப்படுத்த வேண்டும். இது அடியேனின் தாழ்மையான வேண்டுகோள்.' என்று வாய்பொத்தி, பக்தியுடன் கூறி ஸ்வாமிகளின் பாதாரவிந்தங்களில் பணிந்தார் பரதேசியார்.

ஒட்டுத் திண்ணைப் பரதேசியாரின் இனிமையான வார்த்தைகளும், அவரின் வேண்டுகோளில் இருந்த நயமும் ஸ்ரீஸ்வாமிகளை வெகுவாகக் கவர்ந்தன.

அத்துடன் பரதேசியாரைப் பார்த்த மாத்திரத்தில் அவர் ஒரு ஞானி என்பதை உணர்ந்து கொண்டார்.

தன்னை புதுக்கோட்டை நகருக்கு இவர்மூலம அழைப்பது இறைவனின் சித்தமே என்று தெளிந்தார் .

ஸுந்தர ஸ்வாமிகளும் மனமிரங்கி, 'ஆஹா! இறைவனின் சங்கல்பம் அதுவாகில் அவ்வாறே செய்வோம். இன்னும் ஒருவாரத்தில் புறப்படுவோம்' என்றார் புன்முறுவல் முதத்தில் தவழ.

ஒட்டுத் திண்ணைப் பரதேசியாரும் இந்த ஒருவார காலமும் ஸ்வாமிகளுடனேயே தங்கி பிரவசனங்களைச் செவிமடுத்தார்.

1852–ம் வருஷம் மாசி மாதம். அப்பொழுது ஸ்ரீஸுந்தரருக்கு வயது 21.

ஸ்வாமிகளை புதுக்கோட்டை அழைத்து வந்த ஒட்டுத் திண்ணைப் பரதேசியார் வேதாந்தப் பற்றுள்ளவர்கள், சாஸ்திரப் பயிற்சியுடையவர்கள், வேதவிற்பன்னர்கள் ஆகியோரிடம் ஸ்ரீஸ்வாமிகள் அந்நகருக்கு விஜயம் செய்திருப்பதைத் தெரிவித்தார். அவரின் பிரவசனத்திற்கு ஏற்பாடு செய்யும்படித் தூண்டினார்.

அதன்படி பஞ்சாக முறைப்படி சூதசம்ஹிதை பிரவசனம் செய்ய ஏற்பாடாகியது.

காலையில் அவர் மாணவராகிய நாராயணசிவம் சூதசம்ஹிதை ஸ்லோகங்களைப் பாராயணம் செய்ய, இரவு ஏழுமணிக்கு மேல் ஸ்வாமிகள் விரிவுரை கூறினார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



முதல்நாள் விரிவுரைக்கு நூறுபேர்களுக்குள் மட்டுமே வந்திருந்தனர்.

அவரின் அதிஅற்புதமான வாக்வன்மையைக் கேட்டு புதுக்கோட்டை மக்கள் பலரிடமும் கூற இரண்டாம்நாள் கூட்டம் ஆயிரத்தை நெருங்கியது. ஐந்து நாட்களும் தொடர்ச்சியாக சமஸ்தான மக்களெல்லாம் இவர் பிரவசனத்தை விடாமல் கேட்பதில் ஆர்வம் காட்டினர்.

பஞ்சாக முறைப்படி ஸூதசம்ஹிதை உபன்யாசம் பூர்த்தி ஆனது.

எனவே ஒருவார ஓய்விற்குப் பிறகு மீண்டும் ஸூதசம்ஹிதை உபன்யாசத்தைத் தொடர்வது என அவ்வூர் பிரமுகர்களில் சிலரான சுப்ராயசிவன், ராமபாகவதர், ராமசாமி சாஸ்திரி, அப்பு நாயக்கர் ஆகியோர் தீர்மானித்தனர்.

அவ்வூரில் ராமசாஸ்திரி என்ற படித்த மேதை ஒருவர் இருந்தார். ஊர்மக்கள் ஸ்வாமிகளை அளவிற்கு அதிகமாகக் கொண்டாடுகின்றனர் என அவர் நினைத்தார். சற்று அலக்ஷியமாகவே ஸ்வாமிகளிடம் அணுகினார். இதை ஸ்வாமிகளும் அறிந்து கொண்டார்கள்.

ராம சாஸ்திரி நல்ல பராம்பரியத்தைச் சேர்ந்தவர். மெத்தப் படித்தவர். பொதுவில் நல்லவர்தான். ஆனால் ஏதோ பூர்வஜன்மக் குறைபாட்டால் ஸ்வாமிகளிடம் மரியாதைக் குறைவாகவே நடந்து கொண்டார்.

முதல்நாள் மாலை. ஸ்ரீஸ்வாமிகள் விரிவுரையைத் தொடங்கினார்.

முதல் வரிசையில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த ராமசாஸ்திரிகள் திடீரென அசௌகர்யமாக உணர்ந்தார். மயக்கமடைந்தது போல் இருந்தார்.

ஒரு விசித்திரமான,வித்தியாசமான, நிலையில் இருப்பதுபோல் நினைத்தார்.

மேடையில் அமர்ந்திருந்த ஸ்ரீஸ்வாமிகளைப் பார்த்தார்.

அவர் அங்கே இல்லை.

எங்கே சென்றார் ஸ்வாமிகள் ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"பொன்னாரும் விபூதிநலம் பொற்பவுளா ரெனுமுறையான்
மின்னாரும் விபூதியைக்கை விடாதிருக்கு மேன்மையினா
ரெந்நாளும் பசுபதியே யிறையெனலான் மங்கலமா
வன்னான்கண் மணிமாலை யணிந்திருக்குஞ் சிறப்புடையார்."

"நற்பேறு நல்கிடும் ஞானியைக் காணவே
கற்றறிந்த மேதைகளும் கல்லாத மாந்தரும்
நற்கதி மன்னுதல் வேண்டின் புனிதன்தன்
பொற்புரி வந்து தொழுவீர்."

ராமசாஸ்திரிகளுக்கு சற்று மயக்கம் வருவதுபோல் இருந்தது. சற்று நிமிர்ந்து உட்கார்ந்தார். இரு உள்ளங் கைகளாலும் கண்களைத் தேய்த்துக் கொண்டார். கண்விழித்துப் பார்த்தார். பிரசங்க மேடையில் ஸ்வாமிகளைக் காணவில்லை. அவர் அமர்ந்திருந்த ஆசனப் பலகை தெரிந்தது. மேடையில் இருந்த நாராயணசிவம் தெரிந்தார். கூட்டத்தினர் தெரிந்தனர். ஸ்வாமிகள் பிரசங்கம் செய்யும் ஒலி கேட்டது. அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த மண்டபத்திலிருந்த அனைத்தும் கண்களுக்குத் தெரிந்தன. தம் பக்கத்தில் அமர்ந்திருந்தவரிடம் 'சுந்தரர் வெளியில் எழுந்து சென்றுள்ளாரா ?' என்று கேட்டார்.

அருகில் இருந்தவர் அவரை சந்தேகமாக மேலும் கீழும் பார்த்தார். ' நன்றாகத்தானே இருக்கிறார்' என நினைத்தார்.

'உமக்குக் கண்கெட்டுவிட்டதா ? மேடைக்கு மிக அருகில் அமர்ந்து கொண்டு இப்படிக் கேட்கிறீர்களே !

எதிரே நன்றாக பத்மாசனமிட்டு அமர்ந்துள்ளார். வெகு கம்பீரமாக பிரசங்கம் செய்து கொண்டிருக்கிறாரே. பிரத்யக்ஷமாகக் காட்சி தரும் அவர் உங்கள் கண்களுக்கு மட்டும் எப்படித் தெரியாமல் போகமுடியும். ?'

இதைக் கேட்ட ராமசாஸ்திரி சற்று நடுங்கினார். மீண்டும் கண்களைக் கசக்கி விட்டுப் பார்த்தார். எல்லா மக்களின் உருவமும், அங்குள்ள எல்லாக் காட்சிகளும் தெரிந்தன ஸ்வாமிகளின் உருவத்தைத் தவிர. தம்முடைய தகாத எண்ணம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தான் ஸ்வாமிகளின் தோற்றத்தை மறைத்து விட்டது என உணர்ந்தார்.

அவரின் சக்திப் பிரபாவமே இத்தகைய நிகழ்வை நடத்தி, தமக்குப் புத்தி புகட்டி உள்ளது என்பதையும் அறிந்து கொண்டார். ஸ்வாமிகள் ஒரு மகான், அமானுஷ்ய சக்தி பெற்றவர் என்பதைத் தெளிந்து கொண்டார்.

பிரசங்கம் நிறைவு பெற்றது. தம் கண்களால் அவர் உருவத் தோற்றத்தைக் காண முடியாது போனாலும்

மேடையில் அவர் அமர்ந்திருந்த ஆசனத்தின்முன் சென்று சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்.

'என்னை மன்னித்தேன் என்று சொல்லுங்கள். உங்கள் சிஷ்யனாக ஏற்றுக்கொண்டு அருள் செய்தல் வேண்டும்' என்று கதறி அழுதார். இதன் பின்பு ஸ்வாமிகள் அவர் கண்களுக்குப் புலப்பட்டார்.

இவர் செய்கையைப் பார்த்து கூடியிருந்த மக்கள் பிரமை பிடித்து நின்றனர். அவர்களிடம் தன்னுடைய அலக்ஷிய மனப்பான்மையையும், பின்னர் தமக்கு நேர்ந்த அனுபவங்களையும் கூறினார்.

அன்றுமுதல் புதுக்கோட்டையில் ஸ்வாமிகளின் முதல் சிஷ்யராகத் திகழ்ந்தார். ராமசாஸ்திரிகளின் குடும்பம் முழுவதும் ஸ்வாமிகளிடம் பக்தியும், விஸ்வாசமும் கொண்டு விளங்கினர்.

புதுக்கோட்டை வரும் காலங்களில் ராமசாஸ்திரிகள் இல்லத்திலேயே பிக்ஷை நடக்கும்.

மூன்று மாதகாலங்கள் ஸ்ரீஸ்வாமிகள் அங்கே தங்கினார். வேதாந்திகள் கேட்கும் ஐயங்களைத் தீர்த்து வைத்தார். அவர்களின் மனதில் ஸ்வாமிகளின் விளக்கங்கள் பசுமரத்தாணிபோல் பதிந்தன.

புதுக்கோட்டை மக்களுக்கும், ஒட்டுத்திண்ணைப் பரதேசியாருக்கும் ஆசிகளை வழங்கி, மீண்டும் திருநெல்வேலி வந்து சேர்ந்தார்.

அத்தருணத்தில் சிருங்கேரி மடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியார் நரசிம்ம பாரதி (1817–1878) அவர்கள் திருநெல்வேலி விஜயம் செய்திருந்தார்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தர ஸ்வாமிகள் பரம வைதீகக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், அதற்குரிய ஆசார அனுஷ்டானங்களை கடைப்பிடித்திருந்தாலும் சந்நியாசம் ஏற்ற பிறகு அவற்றைக் கைவிட்டு அதிவர்ணாஸ்ரமியாய் இருந்ததாலும், சாதிக் கட்டுப்பாடுகளைத் துறந்ததாலும் திருநெல்வேலி வைதீக அந்தணர்கள் அவரைப் புறக்கணித்தனர்.

எனவே சிருங்கேரி மகாசந்நிதானம் வந்த பொழுது, அவரை அழைக்கவில்லை. சுந்தரஸ்வாமிகளும் அதைப் பொருட்படுத்தவில்லை.

ஆனால்.......

சுந்தர ஸ்வாமிள் வாராதிருப்பதை ஒருவர் கவனித்தார்.

யார் அவர் ?

“எத்தலத்து மகலாத விரும்பவமும் பெரும்பிணியு
மித்தலத்தைக் கண்டவுட னிரிந்தோடு மிதுநிகரா
முத்தலத்து மொருதலமு மொழியவிலை முன்னினர்க்குக்
கைத்தலத்தா மலகமெனக் கண்கண்ட காட்சியதே”

“இறைவனின் ஆட்டத்தில் யாவருமே ஒன்று
மறையவரும் பெண்டிரும் ஆநிரை மேய்ப்போரும்
மாற்றமின்றி ஒப்பரென ஓதினாய், நின்புகழ்
சாற்றல் அரிதே எமக்கு.”

திருநெல்வேலி நகரப் பிரமுகர்கள், வேதவிற்பன்னர்கள், சிருங்கேரி மகாசந்நிதானத்து அபிமானிகள், சமுதாயத்தின் பலதரப்பட்டவர்கள் என அனைவரும் மகாசந்நிதானம் அவர்களை தரிசித்து ஆசி பெற்றனர். மகாசந்நிதானம் அவர்களுக்கு ஏன் சுந்தர ஸ்வாமிகள் வரவில்லை என்ற கேள்வி மனதில் எழுந்தது.

மறுநாள் விடியற்காலை. மடத்தின் வாசல் திண்ணையில் அமர்ந்திருந்த ஒரு துறவியை சிருங்கேரியிலிருந்து வந்திருந்த சிஷ்யர்கள், ‘மகா சந்நிதானம் வருகை புரியும் நேரம் இது. இடத்தைக் காலிசெய்துவிட்டுக் கிளம்புங்கள்’ என விரட்டிக் கொண்டிருந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இந்த நேரத்தில் ஸ்ரீநரசிம்ம பாரதி ஸ்வாமிகள் மடத்தின் வாயிலிற்கு வந்து விட்டார்.

அங்கே ஸுந்தர ஸ்வாமிகள் திண்ணையில் பத்மாசனத்தில் இருப்பதைக் கண்டு விட்டார். சீடர்களைக் கடிந்து அப்புறப்படுத்தினார்.

'மகான் சந்நிதானத்தைத் தேடி வந்தது பாக்கியம். இத்தனை பிரமுகர்கள் மத்தியில் தங்களைக் காணவில்லையே என நினைத்தது. தங்கள் தரிசனம் கிடைத்தது மிக சந்தோஷம். வாருங்கள் உள்ளே செல்வோம்' என்று சுந்தர ஸ்வாமிகளுக்கு முகமன் கூறி மடத்தின் உள்ளே அழைத்துச் சென்றார்.

உள்ளே நுழைந்த மகாசந்நிதானம் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளை வணங்க முற்பட்டார்.அதை உடனே தடுத்து ஸ்வாமிகள் சிருங்கேரி மகாசந்நிதானத்தைத் தொழுதார்.

"தாங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான மடத்தின் பிரதிநிதி. ஸ்ரீஆதிசங்கரர் வழிவந்தவர். அவர் மஹேஸ்வரனின் அவதாரமன்றோ? ஆகவே தாங்கள் அடியேனை வணங்குதல் முறையன்று" என்று பணிவுடன் கூறினார் சுந்தரர்.

"ஆதிசங்கரர் மஹேஸ்வரனின் அவதாரமெனில் இந்த சுந்தரரும் அவ்வாறுதானே! தங்களைப் பணிவதில் தவறேது மில்லை" என்றார் மகாசந்நிதானம்.

இருபெரு மகான்களின் உரையாடலைக் கேட்ட அன்பர்களும், மடத்தின் சிப்பந்திகளும் உணர்ச்சிப் பெருக்கில் உறைந்தனர். இரு பெரும் சிவரூபங்களைத் தரிசித்த பேறு பெற்றோம் என மகிழ்ந்தனர்.

ஸ்ரீசாரதாம்பாள் – ஸ்ரீசந்திரமௌலீஸ்வரர் பூஜையை ஸ்வாமிகள் முன்னிலையிலேயே நடத்தினார். அன்றைய பிக்ஷையை இருவரும் ஒன்றாகவே ஏற்றுக் கொண்டனர்.

அன்று மாலை சிருங்கேரி மடத்தில் சந்நிதானம் அவர்களின் சுபாஷிதத்திற்கு (அருளுரை) ஏற்பாடாகி இருந்தது.

இருவரும் சம ஆசனத்தில் அமர்ந்தனர்.

அவர் இவ்வாறு அருளுரையைத் தொடர்ந்தார்:



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"சிருங்கேரியிலிருந்து யாத்திரையில் இங்கு வந்து ,மகான் சுந்தரரைப்பற்றி எடுத்து இயம்ப வேண்டியதில்லை. இந்நகர் யதீந்திரர்கள் யாவரும் என்னைத் தரிசிக்க ஆவலாய் இருந்தீர்கள். ஆனால் யாம். எம் அருகில் அமர்ந்திருக்கும் இந்த மகானை தரிசிக்க இங்கே விஜயம் செய்துள்ளோம். நேற்று நீங்கள் திருமுகம் பெற்று தரிசித்தீர்கள். அந்த திருக்கூட்டத்தில் யாம் சுந்தர மகானைத்தான் தேடினோம்.

இவர் அவதார புருஷர். மஹேஸ்வரனின் புனர் அவதாரம். சிலரின் பேதமை இவரை விலக்கி வைத்துப் பார்க்கிறது. அந்த பேதமை என்னும் மாயையிலிருந்து வெளியே வாருங்கள். அவ்வாறு வந்தால் இந்த மகான் உருவில் பரமேஸ்வரனையே தரிசிக்கலாம்..."

மஹாசந்நிதானத்தின் உரையைக்கேட்ட யாவரும் பேதமை நீங்கப்பெற்று ஸ்வாமிகளின் பெருமையை அறிந்தனர். அன்று முதல் சுந்தரரை மஹாசந்நிதானம் என்றே மரியாதையுடன் அழைத்தனர்.

சிருங்கேரி ஆச்சாரியார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஸ்வாமிகள் உரை நிகழ்த்தினார்: "ஈஸ்வரனிடம் செலுத்தப்படும் அன்பு பக்தி எனப்படும். இது மனதிலுள்ள காமக்ரோதங்களை வெல்கிறது.

மனதில் முதலில் தோன்றுவது பொறாமை. அந்தப் பொறாமையே நாளடைவில் குரோதமாக வளர்கிறது.

பயம், பொறாமை, கோபம், க்ரோதம், அசத்தியம் ஆகியவை இருக்கும் இடத்தில் ஈஸ்வரபக்தி குறைகிறது. இந்த குணங்கள் உடையவர்களால் என்றும் இறைவனைக் காணமுடியாது.

இறைவன் மீது அடியார்கள் செலுத்தும் அன்பு பக்தி என்றால், அடியார்கள் மாட்டு இறைவன் செலுத்தும் அன்பு அருள் எனப்படும். எத்தகைய துயர் வந்தாலும் பகவானின் மேல் அசஞ்சலமான– அசைக்க முடியாத –பக்தி செலுத்துபவர்களையே இறைவன் அருள்புரிந்து ஆட்கொள்வான். மேற்சொன்ன பொறாமை, க்ரோதம், அசத்தியம் உடையவர்கள் பூர்வஜன்ம கர்மபலனால் நிலவுலகில் பணம், பொருள், புகழ், பாராட்டு என்பவைகளால் உயர்ந்த நிலையில் இருந்தாலும் இறைவனின் இதயக் கதவுகள்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஒருக்காலும் அவர்களுக்குத் திறக்காது. பல பிறவிகள் எடுத்து எடுத்து அல்லல்பட்ட பின்னரே இறைவனால் அவர்கள் ஆட்கொள்ளப்படுவார்கள்.

ஈஸ்வரனைப் பார்ப்பதற்கு பூர்வஜன்மங்களில் எந்தவிதமான அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறதோ அதற்கேற்றாற்போல் கட்டிடம் அமையும். ஒரு அஸ்திவாரத்தைப் போட்டுவிட்டு வேறுவிதமாகக் கட்டிடத்தை எழுப்ப முடியாது. அவரை அறிந்தவர்களுக்கு மட்டுமே எந்த இடத்தில் மாயை அதிகமாக இருக்கும், எந்த இடத்தில் குறைவாக இருக்கும் என்பது தெரியும்.

ஒரு சிஷ்யன் குருசொல்வதை அப்படியே பின்பற்றத் தொடங்கினால் அவனை அந்த குரு காப்பாற்றுவார். குரு கூறுவதை ஆராயமுற்பட்டால் அது அவனுக்கு சந்தேகத்தைக் கொடுக்கும். சந்தேகம் குருவின்மேல் உள்ள பக்தியைக் குறைக்கும். பக்தி குறைந்தால் மனது சஞ்சலமடையும். சிந்தனை குழம்பும். ஆகவே குரு சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள்......."

இவ்வாறு குரு–சிஷ்ய உறவை மிகத் தெளிவாக, எளிமையாக சுந்தரர் எடுத்துக் கூறியதை சந்நிதானம் அவர்கள் அங்கீகரித்தார்.

சிருங்கேரி மகாசந்நிதானம் அவர்கள் திருநல்வேலியில் இருந்த சிலநாட்களிலும் சுந்தரர் அவருடனே இருந்தார். பல வேதாந்த, தத்துவக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

சந்நிதானம் அவர்கள் சுந்தரரிடமும், ஊரினரிடமும் விடைபெற்று, தம் விஜய யாத்திரையைத் தொடர்ந்தார்.

ஒருநாள் பின்மாலை நேரம் நெல்லையப்பர் கோயில் சென்றார் ஸ்வாமிகள். காந்திமதி அம்மன் சந்நிதியல் பல விளக்குகள் ஏற்றி வழிபாடு நடப்பதைப் பார்த்தார்.

அதைப் பார்த்ததும் அவருக்கு ஒரு யோசனை எழுந்தது.

அது என்ன யோசனை ?

"எத்தலமு மிதற்கிணையா விலையென்ன வேழுலகு
நித்தலுங்கொண் டாடுவது நேயமுறக் குழீஇத்தேவர்
புத்தமிழ்தாங் கவிப்புலவர் புகழ்வதுபொன் னிதழிபுனை
யத்தனுறை திருப்பதியா மரிமழத்தை யடுத்ததுவே."



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"சுவைகூட்டும் தேன்போல் இனித்திடும் சொல்லால்
அவையினைக் கட்டியே ஆன்மீகம் சொன்னாய்
கரங்கள் குவித்துப் பணிந்தோர் தமக்கு
வரங்கள் அளித்தாய் உவந்து."

ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளுக்கு இருபத்தி இரண்டு வயது நடந்துகொண்டிருக்கும் பொழுதே அவருக்கு வேதாந்தபரமான சிஷ்யர்களும், உபதேசமார்க்கத்தைப் பெற்ற சீடர்களும், சிவபூஜையை ஏற்றுக் கொண்ட பக்தர்களும், யோகசாதன நெறிநின்ற வர்களும் என நூற்றுக் கணக்கில் சீடர்கள் அமைந்து விட்டனர். எல்லா சீடர்களும் எக்காலத்தும் சுந்தரஸ்வாமிகளிடம் ஒரே உறுதிப்பாட்டுடன் கூடிய அன்புமிக்கவர்களாகவே திகழ்ந்தனர்.

சேரை சுந்தரபாண்டியம் பிள்ளை, ஐயாசாமிபிள்ளை,சிதம்பரம் பிள்ளை, கிருஷ்ணசாமிதருவடியார், சுப்ரமணிய பிள்ளை, சதாசிவத் தருவடியார், நெல்லையப்பபிள்ளை, ராமச்சந்திர மேத்தா,தளவாய் ராமசாமி முதலியார் முதலியோர் முக்கிய மாணவர்கள்.

ஒரு ஐப்பசி மாதம். மாலை பிரதோஷ நேரம். சீடர்களுடன் நெல்லையப்பர் கோயிலை வலம் வந்த பொழுது காந்திமதி அம்மன் கோயிலில் அதிக தீபங்கள் ஏற்றி வைத்திருப்பதைக் கண்டார்.

'இது கோயில் ஏற்பாடா ? அன்றி பக்தர்களின் பிரார்த்தனை வழிபாடா ?' என்று அங்கிருந்தவர்களைக் கேட்டார்.

'இது கோயில் மணியம் சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் யாசகம் எடுத்து நடத்தப்படுவது' என்றனர்.

ஸ்வாமிகள் விசாரித்தது அறிந்து மணியம் அங்கே ஓடோடி வந்தார். ஸ்வாமிகளை சிரமேற் கைகூப்பித் தொழுதார்.

'நீவிர் இக்கைங்கரியத்தை விடாது இயற்றி வாரும். எல்லாம் வல்ல இறைவன் உமக்கு எல்லா நலன்களும் தந்தருள்வார்.' என ஆசிர்வதித்தார்.

சுப்ரமணிய பிள்ளை, ஸ்வாமிகளை மீண்டும் தொழுது கூறினார் : 'திருஅனந்தபுரத்தில் பத்மநாபஸ்வாமி கோயிலில் மகரச்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சங்கராந்தியில் ஒவ்வொரு ஆண்டும் லக்ஷதீபம் ஏற்றி வழிபாடு நடத்துகிறார்கள். அதைப்போல் நெல்லையப்பர் கோயிலில் லக்ஷதீபம் ஏற்றி அனைவரும் தரிசிக்க வேண்டும். அது ஸ்வாமிகளின் கருணையிருப்பின் நடக்கும்'.

'அப்படியே ஆகுக!' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

மறுநாள் மகாலிங்க தீக்ஷிதர் முதலிய பண்டிதர்களை வரவழைத்தார். லக்ஷதீபம் ஏற்றுவதற்கான சாஸ்திரங்கள், விதிமுறைகளைப்பற்றி விவாதித்தார். சுமார் பதினைந்தாயிரம் ரூபாய் தேவைப்படும் என தீக்ஷிதர் தெரிவித்தார்.

பக்தர்கள் சிலருடன் திருநெல்வேலி அருகிலுள்ள ஊர்களுக்கு விஜயம் செய்தார். ஆண்டவனுக்கு லக்ஷதீபம் இடப் போகும் வைபவத்தைப் பற்றி விளக்கினார்.

இருபதினாயிரம் ரூபாய் சேர்ந்தது.

பதினொரு நாட்கள் மஹாருத்ராபிஷேகம், வேதபாராயணம், இதிகாசபுராணபடனம், சூதசம்ஹிதைப் பிரவசனம், சந்தர்ப்பணை, நாநாவித வாத்திய கோஷங்கள், மூர்த்தங்களுக்கு அபிஷேக, அர்ச்சனைகள் என்று சிறப்பாக நடைபெற்றன.

1864–ம் ஆண்டு தைமாதம், திங்கட்கிழமை அமாவாசை, திருவோண நக்ஷத்திரம் கூடிய புண்ணிய நன்னாளில் முதலாவது லக்ஷதீபவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

(அன்று முதல் இன்று வரை ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை நெல்லையம்பதியில் லக்ஷதீபத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.)

விழாச் செலவுகள் போக எஞ்சிய தொகையில் எம்பெருமானுக்கு ஒரு தங்க தீபமும், ஒரு வெள்ளி தீபமும் செய்து கோயிலுக்கு அளித்தார் ஸ்வாமிகள்.

திருநெல்வேலியில் மடத்தில் தங்கி இருந்தபோது சேரை சௌந்திரபாண்டியன் பிள்ளை ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்தார். வந்தவர் ஒரு வேண்டுகோளை ஸ்வாமிகள்முன் சமர்ப்பித்தார்.

அவருடைய கோரிக்கை என்ன?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"அடியவருக் கெளியவனா மருட்கடலே கங்கையணி
முடியவனே யெப்பொருட்கு முன்னவனே நீயாண்ட
படிவடபா லெல்லவரும் படிந்துய்யப் புண்ணியமா
நெடியநதி தருகெனநேர் நின்றுதுதி புகன்றதனால்."

"கருவினில் தோன்றும் உயிர்கள் அனைத்தின்
இருவினை தீர்த்திடும் சுந்தர நல்லோன்
திருவடி போற்றித் துதித்தால் உடனே
குருவாய் வருவான் மகிழ்ந்து."

லக்ஷதீபம் நிகழ்ச்சி நடந்த **1864**–ம் ஆண்டு ஐப்பசி மாதம். ஸ்ரீகாந்திமதி அம்மன் மஹோத்ஸவத்தில், ஏழாம் திருவிழாவில் அம்பிகையைத் தவழும் குழந்தை பாலாம்பிகை வடிவமாகவும், எட்டாம் திருவிழாவில் திருக்கோலாட்டம் இடும் திருமகள் போலும் அலங்கரிக்க ஸ்வாமிகள் உத்தரவிட்டார்.

ஒரு அன்பர் தங்கத்திலே தங்கக் கோல்கள் செய்து ஸ்வாமிகளிடம் சமர்ப்பித்தார். எட்டாம் திருநாள் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற பொருளுதவியும் வழங்கினார். அவற்றை ஸ்வாமிகள் கோயில் அதிகாரிகளிடம் அளித்து, வருடந்தோறும் இத்திருவிழா சிறப்பாக நடத்தப்பெற வேண்டும் என அறிவுறுத்தினார். (இவ்விழா அவ்வாறே இன்றும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.)

வேண்டுதல், வேண்டாமை இலாத ஸ்வாமிகள் பிறர் இத்திருவிழாக் காட்சிகளில் பரவசமடைவது பார்த்துத் தானும் மகிழ்ந்தார்.

இந்நிலையில் பக்தர் சேரை சௌந்தர பாண்டியன் பிள்ளை,குறுக்குத்துறையின் ஒருபுறத்தே உள்ள மூங்கில் பண்ணையில் இருந்த மகாசந்நிதானத்தைத் தேடிக் கண்டார். வணங்கினார்.

'அடியேனை ஆட்கொண்டருள வேண்டும். முக்தி அடையும் மார்க்கத்தை உபதேசித்து அருள வேண்டும்.'

"பிரம்மஞானம் ஒன்றே முக்திக்கு உரியது. அந்த மெய்யறிவை மெய்யறிவினாலேயே காணவேண்டும். ஞானம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



என்றால் பரந்த அறிவு என்று பொருள்படும். ஆழ்ந்து, அறிந்து, உணர்ந்து, பிறருக்கும், தனக்கும் நன்மையாக அமைந்து, எவருக்கும் எவ்விதத் தீங்கும் இல்லாமலிருக்கும் அறிவே ஞானமாகும். இருப்பதாகத் தோன்றலும், இன்பமாகக் காண்டலும், பல உருக்கொண்டு பல பெயர்களால் அழைக்கப்படும் பிரப்பஞ்சப் பொருட்கள் அனைத்துமே சிவம் என்றறிய வேண்டும். சிவமே எல்லாம் என்று உணர்தலே பிரம்மஞானம் ஆகும்.

சித்தம் எல்லாம் சிவமாய் விளங்க வேண்டும். இதற்கு வைராக்கியம் தேவை. இதன் பொருள் தீவிரமான ஆசை, பாசம்தரும் பொருள்களை நீக்குவது என்பதாகும். இன்றைய உலகில் ஆன்மீக வாழ்க்கைக்குத் தீயதைத்தரும் பொருட்களை நீக்கிக்கொள்ளும் தீவிரக் கொள்கை, வைராக்கியமாகும். இதைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால் பல பிரச்னைகள், இன்னல்கள் ஏற்படுகின்றன.

இந்த உலகில் வாழ்ந்து கொண்டே அனைத்திலும் ஈஸ்வரனைப் பார்க்க வேண்டும். ஒருமுறை ஈசனைப் பார்த்தவன் மீண்டும் மாயையில் சிக்கிக்கொள்ள மாட்டான்.

நல்லதை மட்டுமே பார்ப்பதற்கு மனதையும், கண்களையும் பழக்கிவிட்டால் அவை கெட்டவைகளைப் பாராது. பார்த்தாலும் பிரதிபலிக்காது. ஒருவன் எப்பொழுதும் ஈஸ்வரனுடைய நினைவிலே இருந்து, அவன் உருவத்தைப் பழக்கப்படுத்தி இருந்தால் அவை மற்ற உருவங்களைப் பிரதிபலிக்காது. மாயையில் கட்டுண்டிருக்கும் மனதிற்கும், கண்களுக்கும் மாயைதான் தெரியும்.

இந்த உலகத்தை உருவாக்கிய ஒருவன், உலகத்தை உண்டாக்கிய பிறகு அந்த உலகத்திலேயே மறைந்துறைகிறான். அந்த உலகத்தில் அவனைப் பார்ப்பதே ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய முயற்சி.

மாயையில் சிக்கியவன் ஈஸ்வரன் ஒருவன் இருக்கிறான் என்பதையே மறந்துவிடுகிறான். அவன் கண்களுக்குக் கடவுள் தெரிவதில்லை. இந்த மாயை அழியக்கூடியது என்றும் அழிவில்லாத பொருள் இறைவன் மட்டுமே என்பதை அவன் அறிந்து கொள்ளவில்லை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



பகவானை உணர்ந்து கொள்ளும் வரை மாயையை உலகத்தைப் படைத்தவன் என நினைக்கிறான். அதுவே சாஸ்வதம் என நினைத்து மதி மயங்குகிறான். ஆனால் பூர்வ ஜன்ம புண்ணியத்தால் அவன் சிறந்த குருநாதரை அடைகிறான். அவருடைய கடைக்கண் பார்வையால், கருணையினால் மாயை மறைந்து விடுகிறது. கடவுளை அனைத்திலும் காண்கிறான். மாயையை உண்டாக்கிய ஈஸ்வரன் அந்த மாயையுள்ளும் இருக்கிறான். மாயையை நீக்கிப் பார்த்தால் பகவான் புலப்படுவான்..........”

‘காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே’ என்ற சிறு வாசகத்தைக் கண்ட மாத்திரத்தே, மிகப் பெரும் செல்வந்தராய் இருந்த திருவெண்காடர், இடையில் ஒற்றைச் சிறு ஆடையை அணிந்து பட்டினத்தார் ஆனதுபோல் சௌந்திர பாண்டியன் பிள்ளை அவர்கள் இந்த உபதேசத்தைக் கேட்டதும் சமாதிநிஷ்டையில் ஆழ்ந்து விட்டார்.

நீண்ட நேரம் கழித்து நிஷ்டை கலைந்தார்.

இவ்வாறு உபதேசம் செய்த ஸ்ரீஸ்வாமிகளின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார். கதறி அழுதார். ஸ்ரீஸ்வாமிகளின் பாதங்களைக் கண்ணீரால் கழுவினார்.

ஸ்வாமிகளிடம், ‘இந்த அரிய செய்திகளை, தத்துவங்களை, ஸ்வானுபூதிகளை உலகம் அறியும் பொருட்டு ஒரு நூலாகச் செய்தருள வேண்டும்’ என்று வேண்டினார்.

அவர் கேட்டது ஒரு நூல். நாம் பாக்கியசாலிகள். நமக்குக் கிடைத்ததோ மூன்று நூல்கள்.

அவை என்ன நூல்கள் ?

“பல்லாண்டு பலதலத்தும் பரவவரு பலமுழுதுஞ்
சொல்லாண்ட பொருள்கடந்த சுந்தரனார் திருமுன்ன
ரெல்லாண்ட வொருவிளக்கிட் டேத்தினார் பெறுவரெனி
லல்லாண்ட களப்பெருமா எருண்மகிமை யாரளப்பார்.”

“தேடியே சந்நிதி வந்து துதித்தவர்க்கு
ஓடியே வந்து நலமெலாம் நல்குவாய்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நீடிய ஞானம் அளிக்கும் முனிவனைப்
பாடியே பாதம் தொழுவேன்."

ஸ்வாமிகள் அருளிய அமுதமொழிகளை அவரின் சீடர் சதாசிவ தருவடியார் ஓலைச்சுவடிகளில் பதிந்து வந்தார்.

அவற்றைத் தொகுத்து "ஸ்வபானுபூதிரஸாயனம்" என்ற நூல் முதன்முதலாக 1866–ம் ஆண்டு அச்சிலேற்றப்பட்டது. சிவசங்கர் தவே என்கிற குஜராத்தி பிராமண சீடர் இந்நூல் வெளிவர உதவிகள் புரிந்தார்.

அதேபோல் ஸ்வாமிகளின் அருளுரைகளின் தொகுப்பான "நிஜானந்த விலாசம்" என்ற நூல் பதிப்பிக்கப்பட்டது. (முதல்பதிப்பு எந்த ஆண்டில் வெளியாகியது என்ற விபரம் இதுவரை கிடைக்கவில்லை.)

இரண்டாம் பதிப்பு 1904–ஆம் ஆண்டு வெளிவந்தது.

ஸ்ரீஸ்வாமிகள் இரண்டாம் முறையாக தாமிரபரணி நதிப்பிரதக்ஷணம் செய்யும் போது அம்பாசமுத்திரத்தை அடுத்துள்ள நதிக்கரையில் ராமலிங்க சுவாமிகள் என்பவர் நிஷ்டையில் இருந்தார்.

ஸ்வாமிகள் நதிப்பிரதக்ஷணம் வருவதை அறிந்து அவரைச் சந்தித்தார்.

ஸ்வாமிகளுடனான சந்திப்பு அம்பை ராமலிங்க சுவாமிகளின் ஆன்மீக வாழ்வில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியது ?
என்பதைச் சுருக்கமாகப்..... பார்ப்போம்.

"புலனென்னும் கருவியினாற் புங்கவர்க ளளந்தறியி
னிலகுபதி பசுபாச மெனமூன்று பொருளுளவா
னலிபதிதா னேகனென நவில்கின்ற பரம்பொருளாம்
பலபலவான மாவனைத்தும் பசுவாகப் பகருவரால்."



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"வேதத்தின் சாரமாம் அத்வைத தத்துவம்
ஸூத சம்ஹிதை உரைத்து உய்வித்தாய் ;
பேதமின்றி யாவரும் ஈசன்பா தம்சேர
ஓதி உரைத்தாய் வழி."

பாபநாசம் காட்டுப் பகுதியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சங்கரலிங்க ஸ்வாமி கோயிலில் ஸ்வாமிகள்-ராமலிங்க சுவாமிகள் சந்திப்பு நடைபெற்றது. மனித சஞ்சாரம் இல்லாத இடம். இருவரும் சிவபரமான பல செய்திகளைப் பேசி மகிழ்ந்தனர்.

ஸ்வாமிகளை அங்கே ஒருவாரம் தங்கி இருந்து பிரவசனம் செய்யக் கேட்டுக் கொண்டார். ஸ்வாமிகள் மூன்று நாட்கள் தங்க ஒப்புதல் அளித்தார். மூன்று நாட்களும் வேதாந்த, ஸூதசம்ஹிதை, சகஜசமாதி நிஷ்டை ஆகியவைபற்றி ஸ்வாமிகள் பிரசங்கம் செய்தார்.

ஸ்வாமிகளின் மீது ராமலிங்க சுவாமிகளுக்குப் பக்தி மேலிட்டது.

அம்பாசமுத்திரம் நகரில் திருவடிகொண்ட முதலியார் அவர்களுக்கும் உண்ணாமுலை அம்மையாருக்கும், 1804-ம் ஆண்டு ரக்தாக்ஷி வருஷம், மார்கழி மாதம் சதய நன்னாளில் மகவாய்த் தோன்றினார் ராமலிங்கம். 20-வயதில் திருமணம் செய்து வைத்தனர். இல்லற வாழ்க்கையில் பற்றில்லாமல் 1826-விய வருஷத்தில் வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

தீர்த்தாடனமும், க்ஷேத்ராடனமும் செய்து கொண்டு தில்லையம்பதியை அடைந்தார்.

சிவகங்கைத் தீர்த்தத்தில் நீராடி, ராஜசபையாகிய ஆயிரங்கால் மண்டபத்தில் ஓர் ஓரமாக அமர்ந்து சிவத்யானத்திலே ஈடுபட்டார். சில ஆண்டுகள் சென்றன.

1833-ம் ஆண்டு வைகாசி மாதம் அம்பலவாண யோகி என்பார் இவரை ஆட்கொண்டார். உபதேசம் செய்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அபயமளித்தார். அவரிடம் தனக்கு சந்நியாசம் அளித்து ஆட்கொள்ளும்படி வேண்டினார் ராமலிங்கம். 'தாய் தந்தையரிடம் சந்நியாசம் மேற்கொள்ள அனுமதி பெற்றுக்கொள். உரிய காலத்தில் யதீந்திரர் ஒருவர் உன்இடம் தேடி வருவார். உனக்கு காஷாயம் கொடுத்து அருள்வார்' என்றார் முக்காலமும் உணர்ந்த யோகியார்.

அவரின் அறிவுரையை ஏற்று வீடு திரும்பினார். துறவு வாழ்க்கைக்குப் பெற்றோரின் அனுமதி வேண்டினார். 'மகனே! இல்லறத்தில் பற்றில்லாதவனாக சிவயோக சிந்தனையிலேயே இருக்கிறாய். எனவே நீ விரும்பும் துறவு பெற எங்களுக்குத் தடையேதுமில்லை? ஆனால் துறவு பூண்டாலும் எங்கள் பார்வையில் படுவதுபோல் அருகிலேயே ஓரிடத்தில் இரு' ராமலிங்கம் அவர்கள் கூறியதற்கு ஒப்புதல் அளித்தார்.

1836ம் ஆண்டு துர்முகி வருஷம், சித்திரை மாதம், புனர்பூச நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் பாபநாசம் காட்டுப் பகுதியில் பர்ணசாலை அமைத்துக் கொண்டார். ஜபதபங்களில் ஈடுபட்டார். மனது ஒருமுகப்பட்டது.

யோகியார் முன்பு கூறியது போல அந்த பர்ணசாலைக்கு ஒரு யதீந்தரர் வந்தார். காஷாயம் கொடுத்தார். ராமலிங்கம் துறவறம் முறையாக மேற்கொண்டார்.

பர்ணசாலை அருகில் வல்லாள விநாயகர் என்னும் வினை தீர்க்கும் பெருமான் சிலையை நிறுவினார். யாவரும் வந்து வழிபாடு நடத்த ஏற்பாடுகள் செய்தார். அந்த விநாயகரை வழிபட்டு நிஷ்டையில் அமர்ந்தார். நாட்கள், வாரங்கள், மாதங்கள் என்று ஓடின. இவர் நிஷ்டையில் அமர்ந்திருந்த இடத்திற்கு அருகில் பாம்புப்புற்று உண்டாயிற்று. இவர் நிஷ்டையில் அமர்ந்த நாட்கள் கூடக்கூட பாம்புப் புற்றும் உயரமாக வளர்ந்து வந்தது.

அப்பொழுது ஒரு அசரீரி கேட்டது.

அசரீரி கூறியது என்ன?

"மாமழை பொழிக முன்னூல் வகுத்தவா மகங்க ளோங்க
பூமிசை வளங்கள் பல்க புரவலன் செங்கோல் வாழ்க



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நாமலி தமிழ் சிறக்க நவிலரி மழஞ் செழிக்க
தோமிலாச் சைவம் வெல்க துலுங்குக வடியா ரெல்லாம்."

('அரிமழம் தலபுராணம்' நூலிலிருந்து இதுவரை சில கவிதைகள் பார்த்தோம். )

**அசரீரி கூறியது :**

'பாம்புப் புற்றை நீக்குக. அவ்விடத்தில் ஆலயம் எழுப்புக.'

இந்தச் செய்தியைத் தம்மை நாடிவரும் பக்தர்களிடம் தெரிவித்தார் ராமலிங்க சுவாமிகள்.

மறுநாளே அம்பையிலிருந்து செங்குந்த முதலியார் சமூகத்தைச் சார்ந்த செல்வந்தர்கள் அங்கே குழுமினர். பக்தர்கள் உதவியுடன் அம்பாம்புப் புற்றை மிகக் கவனமாக நீக்கினர்.

புற்றின் அடியில் சிறிது ஆழத்தில்.......... ஒரு சிவலிங்க உருவம் காணப்பட்டது. அன்றைய தினமே தாமிரபரணி தீர்த்தத்தால் அபிஷேகம் செய்தனர். மலர்கள் தூவி வழிபாடு நடத்தினர். தூப தீபங்கள் காட்டினர். தேங்காய், வெற்றிலை பாக்கு, அவல், பொரி, கடலை, திராக்ஷை நிவேதனம் படைத்தனர்.

1837, வைகாசி மாதம் அம்பை நகர் செங்குந்தர் முதலியார் பெருமக்கள் ஸ்வாமிக்கு ஒரு கருவறையை மட்டும் எழுப்பினர். கும்பாபிஷேகம் நடத்தினர். பின்னர் சிறுகச் சிறுகக் கோயிலை விரிவுபடுத்தினர். அந்தக் க்ஷேத்திரம் 'சின்னச் சங்கரன் கோயில்' என்று இன்றும் பக்தர்களால் வழங்கப் பெறுகிறது.

அங்கு எழுந்தருளியுள்ள ஸ்வாமி சுந்தரலிங்கர்; அம்பாள் ஆவுடையநாயகி என்கிற கோமதி அம்மை. அந்தக் கோயிலின் புற்றுமண் நோய் தீர்க்கும் மருந்து. அந்தப் புற்று மண்ணைக் கொடுத்தே ராமலிங்க ஸ்வாமிகள் பல கொடிய வியாதிகளையும் குணப்படுத்தி உள்ளார்.

அந்த புற்றுமண் அத்தகைய தெய்வீக சக்தியுடன் இன்றும் விளங்குகிறது.

1868–ம் ஆண்டு வைகாசித் திங்களன்று ராமலிங்க ஸ்வாமிகள் முக்குண்ட தீர்த்தம் என்ற நீர்க்கரையில் நிஷ்டை கூடியிருந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அப்போது..........

'கன்னடியன் வாய்காலின் வடபகுதியில் கோமதி தீர்த்தம் இருக்கிறது அங்கே கோமதி அம்மன் தவம் செய்து கொண்டிருக் கிறாள். அத்தவத்தை மெச்சி சர்வேஸ்வரன் சிவவிஷ்ணு சொரூபமாகிய சங்கரநாராயண உருவத்துடன் காட்சி அளிக்கிறார்' என்பது போன்ற தோற்றம் அவர் அகக் கண்களில் தெளிவாகத் தெரிந்தது.

நிஷ்டை கலைந்து எழுந்தார்.

சங்கரநாராயணர்—கோமதிஅம்மன் காட்சி கிடைத்ததில் மகிழ்ச்சி அடைந்தார். உடல் சிலிர்த்தார். அம்மை—அப்பன் காட்சியினால் தம் வாழ்நாளின் பேற்றைப் பெற்றதாக உணர்ந்தார்.

ராமலிங்க சுவாமிகள் —சுந்தர ஸ்வாமிகள் சந்திப்பின் பொழுது சில மந்திரோபதேசங்களையும், தியானமுறைகளையும், சகஜசமாதி மார்க்கங்களையும் உபதேசித்தார் சுந்தர ஸ்வாமிகள்.

இதனால் பல சித்திகள் கைவரப்பெற்ற ராமலிங்கசுவாமிகள், பல திருடர்களையும், முரடர்களையும், தீயகுணம் படைத்தோரையும், நாஸ்திகவாதிகளையும், பணம் பதவி அதிகாரம் இவற்றுக்காக பிற மதம் மாற எண்ணங்கொண்டவர்களையும் திருத்தினார்; ஆன்மீக வழியில் ஆற்றுப்படுத்தினார்,

இவர் 1876—ம் ஆண்டு ஆனி மாதம் சமாதி அடைந்தார்.

ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளின் உத்தரவின்படி ஸ்ரீசங்கரலிங்க ஸ்வாமிகள் கோயில் மதில் சுவரை ஒட்டினாற்போன்ற இடத்தில் ராமலிங்க சுவாமிகளுக்கு சமாதி எழுப்பப்பட்டது

இத்துடன் ராமலிங்க சுவாமிகளின் வாழ்க்கைக் குறிப்புப் பூர்த்தி அடைகிறது.

ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளின் கீர்த்தி நெல்லைப் பிரதேசம் முழுவதும் பரவியது. சமயப் பற்றும், ஞானத் தேடலும் உடைய பலர் அவரின் சீடர்களாயினர்.

தன் பற்றற்ற நிலையைப் புறத் தோற்றத்திலும் வெளிப்படுத்தினார். யோக சமாதியின் மூலம் பேரின்ப நிலையை எய்தி ஆன்ம ஒளியில் ஒளிர்ந்தார்.

ஒருநாள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அன்று தீபாவளித் திருநாள். மழை பொழிந்து கொண்டிருந்தது. கம்பா நதி மண்டபத்தில் ஸ்வாமிகள், சீடர்கள் புடைசூழ அமர்ந்திருந்தார். பல விஷயங்களைப் பற்றி உபதேசித்துக் கொண்டிருந்தார். அந்த சமயம், அந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் தெய்வமான காமாக்ஷி அம்மனுக்கு பூஜை செய்யும் அர்ச்சகரான சுப்ரமணிய பட்டர் வந்தார். தமது தள்ளாத வயதில் பூஜை சாமான்களை ஒரு கையிலும், மற்றொரு கையில் ஒரு பாத்திரத்தில் நெருப்பையும் கொண்டு வந்தார். மழையில் நெருப்பு முழுவதும் அணைந்து விட்டது.

சுவாமிகள் தன் சீடர்களில் ஒருவரான ஆவுடையப்ப பிள்ளையிடம், அருகிலுள்ள தடிவீரய்யன் கோவில் தெருவிற்குச் சென்று யார் வீட்டிலேனும் நெருப்பு வாங்கி வர ஆணையிட்டார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றொரு சீடரான ராமச்சந்திர மேத்தா என்ற குஜராத்தி பிராமணர் ஒரு கேள்வியை ஸ்வாமிகளிடம் விநயத்துடன் கேட்டார்.

அந்தக் கேள்வியைக் கேட்டு ஸ்வாமிகள் புன்முறுவல் புரிந்தார். மற்றவர்கள் சங்கடத்தில் நெளிந்தனர்.

அப்படிப்பட்டக் கேள்வி என்ன ?

"வெண்ணூல் அணிந்த திருமார்பும் வார்அணி
பெண்ணாள் இடப்புறம் நின்றிட சீர்மிகு
ஊராம் அரிமழும் கோயில் உகந்துவந்த
பேரரு ளாளனைப் போற்று."

தாமிரபரணி ஆற்று வெள்ளத்தைத் தடுத்து கம்பம் (தூண்) போல் நிற்க வைத்த அற்புதம்.

❀❀❀❀❀

கம்பாநதி மண்டபத்தில் ஸ்வாமிகள் தன் சீடர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார்.

உண்ணவேண்டிய உணவு, உண்ணும் முறை பற்றி அன்றைய பேச்சு அமைந்தது.

'உணவு சாத்வீகமானதாக இருக்க வேண்டும். ஜீவராசி களைக் கொன்று அதை உண்ணல் கூடாது. போதை, மயக்கம் தரும் வஸ்துக்களை நீக்க வேண்டும். மிதமாகவே உண்ண வேண்டும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சாத்வீக உணவு சத்தான சிந்தனைக்கு உதவுகிறது. ஆடம்பரத்திற்காக தேவைக்கு அதிகமாக சமைக்கக் கூடாது; சாப்பிடக் கூடாது. எளிமையான, சுத்தமான உணவையே ஏற்றுக் கொள்ள வேண்டும். சாத்வீக உணவே சகிப்புத் தன்மையையும், விட்டுக் கொடுக்கும் மனோபாவத்தையும் வளர்க்கும்.

உண்மை மனிதனாக, உத்தம புருஷனாக விளங்க, காமக்ரோதாதிகளை விட்டுவிட, துர்க்குணங்களைத் துறக்க காய் கனி உணவுகளே சிறந்தவை.

உண்ணும் பொழுது அன்னம் உள்ளங்கையில் படாமல் விரல்களால் உண்ணுவது உத்தமம். ஏனெனில் வலது உள்ளங்கையில் அக்னி உள்ளது........' இவ்வாறு பொன்மொழிகளை உதிர்த்து வந்தார்.

இந்த நேரத்தில்தான் காமாக்ஷி அம்மன் கோயில் அர்ச்சகர் சுப்ரமணிய பட்டர் தமது தள்ளாத வயதில் பூஜைக்குரிய பொருட்களை ஒருகையிலும், மற்றொரு கையில் ஒரு பாத்திரத்தில் நெருப்பையும் எடுத்து வந்தார். மழையில் அக்னி அணைந்து விட்டது.

அவருக்கு எவர் வீட்டிலிருந்தேனும் அக்னியைப் பெற்று வந்து உதவும்படி சீடர் ஆவுடையப்ப பிள்ளையை ஏவினார்.

அப்பொழுதுதான் ராமச்சந்திர மேத்தா இந்தக் கேள்வியைக் கேட்டார்: 'ஸ்வாமிகளே! சற்று முன்பு தாங்கள் கூறியதை நினைவுபடுத்த விரும்புகிறேன். நமது வலது உள்ளங்கையில் அக்னி இருப்பதாகக் கூறினீர்கள். அந்த அக்னியைக் கொண்டு பட்டருக்கு உதவலாமே!'

மற்ற சீடர்கள் மேத்தாவின் கேள்வியால் சங்கடமடைந்தனர். ஸ்வாமிகள் புன்முறுவல் பூத்தார்.

'அப்படியே செய்வோம்' மேத்தா! உன் மேலங்கியைக் கொடு. தனது விலை உயர்ந்த மேலங்கியை எடுத்துத் தயக்கத்துடன் நீட்டினார். ஸ்வாமிகள் அதை மடித்து வைத்து உள்ளங்கையில் தேய்த்தார். குபீர் என்று அக்னி ஜ்வாலை எழுந்தது. மேத்தாவோ அங்கவஸ்திரத்தில் பிடித்த தீயை அணைக்க முயன்றார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'இதை அக்னிபகவானுக்கு அர்ப்பணம் செய்வதே நல்லது' என்றார் ஸ்ரீஸ்வாமிகள்.

அந்த நெருப்பையே அர்ச்சகர் பூஜைக்கு எடுத்துக் கொண்டார்.

கூடியிருந்தவர்கள் ஸ்வாமிகளின் தெய்வீக சக்தியை உணர்ந்து வணங்கினார்கள்.

சீடர்கள் மூலம் அவரின் மகாத்மியம் திருநெல்வேலி எங்கும் பரவியது.

அதே ஐப்பசி மாதம் தாமிரபரணியில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. குறுக்குத்துறை படித்துறையைத் தாண்டி சீறி வந்தது வெள்ளம். ஸ்வாமிகளின் அருகிலிருந்த சீடர்கள், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவோமோ என அஞ்சினர். சீடர்களின் கவலையை உணர்ந்த ஸ்வாமிகள் தம் இடது உள்ளங்கையை நீட்டி நில் என்றார். பாய்ந்து வந்த வெள்ளம் அப்படியே சுவர்போல் எழுந்தது. (ஜலஸ்தம்பனம்) நீர் வடிந்தது; பின் வாங்கியது. அன்பர்கள் ஸ்வாமிகளைப் பணிந்தனர்.

ஆனால் ஸ்வாமிகளின் மகிமையைக் குறைத்தே மதிப்பிட்டுக் கேலி செய்யவும் சிலர் இருந்தனர். அவர்களில் முக்கியமானவர் அந்நகர் கைலாஸபுரம் வக்கீல் ஏ.கிருஷ்ணசாமி என்பவர். அவரும், அவருடைய குமாஸ்தா தருவை டி.ஏ.ராமசுப்பு ஐயர், மற்றும் சில சினேகிதர்கள் ஸ்வாமிகளைக் 'காண' வந்தனர்.

'நீங்கள் நடத்தி வரும் செய்கைகள் யாவும் நம்பத் தகுந்தன அல்ல. வெறும் கண்கட்டு வித்தைகள். இவற்றைப் பற்றி உங்கள் சீடர்கள் என்பவர்கள் பெருமையாகச் சொல்லிக்கொண்டு திரிகின்றனர். நாங்கள் நம்பும்படி அத்தாக்ஷியுடன் நிரூபித்தால் தான் உங்களை ஸ்வாமிகள் என்று ஏற்றுக் கொள்வோம்'.

'வித்தைகள் செய்வதோ, சித்துக்கள் நடத்துவதோ எம் தொழில் அல்ல. அவசியம் நேரும் போது, மற்றவர்களை செம்மைப்படுத்த சில அற்புதங்களில் ஈடுபட வேண்டியுள்ளது. இதுவும் அதுபோன்ற தருணமே! காசியில் உங்கள் உறவினர், நண்பர் எவரேனும் இருந்தால்' நாளை மாத்யானிக காலத்தில் மணிகர்ணிகா கட்டத்தில் சுந்தரன் ஸ்நானம் செய்து கொண்டிருப்பதைக் கவனிக்கவும்' என்று இப்பொழுதே ஒரு தந்தி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கொடுங்கள். அவர்கள் பதிலையும் தந்தியில் உடனே அனுப்பச் சொல்லுங்கள்' என்று கூறி விடைகொடுத்தார் அவர்களுக்கு. அவர்களும் காசிக்கு அவ்வாறே தந்தி அனுப்பினர்.

(தனது குமாஸ்தாவை தனிமையில் அழைத்து ஸ்வாமிகள் தங்கி இருக்கும் மடத்தை ரகசியமாகக் கண்காணிக்கும்படிக் கட்டளையிட்டார் வக்கீல்.)

ஸ்வாமிகள் மடத்தைவிட்டு அன்றும், மறுநாளும் வெளியில் எங்கேயுமே செல்லவில்லை.

மறுநாள் மாலை, காசியிலிருந்து கிருஷ்ணசாமி ஐயருக்கு பதில் தந்தி வந்தது.

'ஸுந்தர ஸ்வாமிகள் மாத்யானிக காலத்தில் மணிகர்ணிகா கட்டத்தில் எங்களுடன் ஸ்நானம் செய்தார். கங்கைக் கரையில் அவர் சூதசம்ஹிதை உபதேசம் செய்தார். நாங்கள் கேட்கும் பாக்கியம் பெற்றோம்'. அந்தத் தந்தியுடன் அலறி அடித்துக் கொண்டு ஸ்வாமிகளை 'தரிசிக்க' மடத்திற்கு வந்தனர் வக்கீலும், நண்பர்களும், அவர் பாதங்களில் பணிந்து வணங்கினர்.

'தங்களைப் பரீக்ஷித்ததற்கு மன்னித்து விடுங்கள். மகான்கள் மகத்துவங்கள் நிறைந்தவர்கள். எங்களைப் போன்ற அறிவிலிகளின் செயல்களை மன்னித்து அருள்புரியுங்கள். சமூகத்தில் பெரிய மனிதர்கள் எனக் கூறிக்கொள்ளும் நாங்கள் உங்களைப் போன்ற மகனீயர்களை பரிசோதித்தால், ஊதாசீனம் செய்தால் மற்றவர்களும் அதே தவற்றைச் செய்வார்கள். அவ்வாறு செய்தால் சமுதாயமே பாழ்பட்டு விடும். அந்த சீர்கேட்டிலிருந்து மீள்வதற்கு நூற்றாண்டுகள் ஆகிவிடும். எங்கள் புறக்கணிப்பு மகான்களை எவ்விதத்திலும் பாதிக்காது. இத்தகைய பாதிப்புகள் ஏற்படக் கூடாதென்றே சில சமயங்களில் உங்கள் மகத்துவங்களை வெளிக்காட்ட வேண்டியுள்ளது. அதை நாங்கள் புரிந்து கொண்டோம். எங்களை மன்னித்து அனுக்கிரகிக்க வேண்டும்'. மஹாசந்நிதானமும் அவர்களுக்கு அனுக்கிரகம் செய்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்வாமிகள், தன் சீடர்களுடன் அடுத்த விஜயத்தைத் தொடர்ந்தார்—மதுரையம்பதியை நோக்கி.

64 திருவிளையாடல்கள் அரங்கேறிய ஹாலாஸ்ய க்ஷேத்திரத்தில் நம் ஸ்வாமிகள் நடத்திய திருவிளையாடல் என்ன ?

"பாலும்ஆ நெய்யும் உடற்கு உறுதியாம்
வேலொடு வாளும் அடலுக் குறுதியாம்
நான்மறை ஓதியோன் பொற்பாதம் ஏத்தினால்
வான்சிறக்கும் வாழ்விற் குறுதி!. "

(ஸ்ரீஸ்வாமிகளின் சரிதத்தின் பல நிகழ்வுகளுக்கு, அவை நடந்த ஆண்டு, மாதங்கள் என்று குறிப்புகள் உள்ளன. சிலவற்றிற்கு கிடைக்கவில்லை.எனவே சில நிகழ்வுகள் முன்பின்னாய் வரலாம்.)

திருநெல்வேலி நகரைவிட்டு ஸ்வாமிகள் தம் மாணவர்கள் புடைசூழ ஹாலாஸ்ய க்ஷேத்ரம் என்னும் மதுரை நகர் வந்தார். அந்நகரின் கண் விளங்கும் விபூதி மடத்தில் எழுந்தருளினார்.

ஒருநாள்.

மதுரை ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில், பொற்றாமரைக் குளக்கரைப் படியில் நாராயண சிவன்-ஸ்வாமிகளின் தலையாய—பால்யகால சிஷ்யர் யோகநிஷ்டையில் அமர்ந்திருந்தார். யானைக்கும் அடிசறுக்கும் என்பதுபோல அவர் நிலைதடுமாறி பொற்றாமரைக் குளத்தில் விழுந்தார். தேகம் நீரில் மூழ்கியது. இவ்விபத்தைக் கண்ட அவ்வாலயத்தில் பூஜை செய்யும் சுப்ரமணிய குருக்கள் கலங்கினார்; துடித்தார்.

பதறி ஓடி ஆலய அதிகாரிகளிடம் விபத்தைப் பற்றித் தெரிவித்தார். அவர்களிடம் உடலை நீரிலிருந்து வெளியில் எடுக்குமாறு முறையிட்டார்.

ஆலய அதிகாரிகள் உடலைத் தேடி எடுக்கும் பணியில் ஆட்களை ஈடுபடுத்தினர்.

வெகுநேரம் தேடியும் அவ்வுடல் அகப்படவில்லை.

ஒருநாள் முடிந்தது; இரண்டுநாள் முடிந்தது. உடலைக் கண்டுபிடிக்க முடியவில்லை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மூன்றாம்நாள் அவ்வுடல் தானாகவே நீரின்மேல் வந்தது; மிதந்தது. அவ்வாலயத்தில் பூஜை செய்யும் சுந்தர குருக்கள், 'இத்தேகம் இங்கு இருக்கும் வரை ஆலய பூஜை செய்யக்கூடாது. இத்தேகத்தை எடுத்துச் சென்ற பின்னர் கோயிலைப் புனிதப்படுத்த வேண்டும். பின்னரே சந்நிதிகள் திறக்கப்படும்' என்றார். கோயில் அதிகாரிகள் காவல்துறைக்குத் தகவல் தெரிவித்தனர்.

காவல் துறையினரும், தீயணைப்புத் துறையினரும் நாராயண சிவன் அவர்களின் உடலை(!) குளத்திலிருந்து எடுத்துப் பொற்றாமரைக்குளப் படியில் கிடத்தினர்.

இந்நிலையில் கோயிலில் நுழைந்தார் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள். பொற்றாமரைக் குளத்தை அடைந்தார்.

அங்கிருந்த காவல்துறை அதிகாரியிடம் 'ஏன் இவ்வளவு கூட்டம் இங்கு கூடியுள்ளது ?' என வினவினார்.

அதிகாரிகள் தாங்கள் அறிந்தவற்றைக் கூறினார்கள்.

'நீவிர் தயைகூர்ந்து அவ்வுடலை விபூதி பிள்ளையார் சந்நிதிமுன் கொண்டு சேருங்கள். ஜீவன் இருக்கிறதா என்று பார்ப்போம்.'

'இவரென்ன பைத்தியமா ? நீரில் மூழ்கி மூன்று நாள் ஆன பின்னர் உடம்பு மிதக்கிறது. இந்த உடலில் உயிர் நிலவி இருக்குமா ? சிறிதுகூட நம்புகிறாற் போல் இல்லையே! பைத்தியக் காரத்தனத்திற்கும் ஒரு எல்லை வேண்டாமா ?' என்பதுபோல் பரிகாசமாக நகைத்தனர்.

ஆனால் அங்கு கூடியிருந்த பொது ஜனங்கள் சிந்தனை வேறு மாதிரி இருந்தது.

'நீங்கள் கேலியாகச் சிரிப்பதன் காரணம் என்ன ? சரீரத்தில் ஜீவன் வந்தால் மகிழ்ச்சிதானே ! இதனால் யாருக்கு என்ன நஷ்டம் ? உடலை விபூதிப் பிள்ளையார் சந்நிதிக்கு எடுத்து வரச்செய்யுங்கள்' என்றனர்.

அதைக்கேட்ட காவல்துறையினர் அரைகுறை மனதுடன் நாராயண சிவனின் உடலை விபூதிப் பிள்ளையார் சந்நிதியில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கிடத்தினர்.

பின் நடந்தது என்ன ?

"இறந்தவர்க்கு நீளாயுள் நல்கினாய்இல் வாழ்க்கைத்
துறந்தவர்க்கு என்றும் துணையாய் இருந்தாய்
பிறந்தவர் உன்பாதம் பற்றியே விட்டால்
பிறவா வரம் என்றும் கொடு."

தற்போதைய சிவகங்கை மாவட்டம், காளையார்கோயில் அருகே திருவேம்பத்தூர் என்ற சிறிய கிராமம்.

அந்த ஊரில் ஸ்ரீஸ்நேகவல்லி ஸமேத ஸ்ரீஏகாம்பரேஸ்வரர் கோயில் கொண்டுள்ள சிவாலயம் உண்டு. இக்கோயில் திருநாவுக்கரசரால் பாடப்பட்ட பெருமை உடையது.

அந்த புகழ்பெற்ற ஆலயத்தில் அத்யானபட்டர் ஒருவர் இருந்தார்.

அவரது புதல்வர்களுள் ஒருவரே நாராயணசிவன்.

இவர் 02.08.1836–ம் ஆண்டு ஆடிமாதம் 20 – ம் நாள்,செவ்வாய்க்கிழமைரேவதி நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் அவதரித்தார்.

சிறு வயதில் சகோதரர்களுடன் ஏற்பட்ட ஒரு பிணக்கினால் ஊரைவிட்டுப் புறப்பட்டு விட்டார்.

பல ஊர், பல தேசம் என்று அலைந்து அடைச்சாணி வந்தடைந்தார்.

அங்கே விஸ்வேஸ்வர சாஸ்திரிகள் என்ற வேத விற்பன்னரிடம் குருகுல வாசம் செய்து வந்த சுந்தரனின் வகுப்புத்தோழனாகச் சேர்ந்தார். ஒன்றாய்ப் படித்து வந்த ரங்கநாத சிவன், நாராயணசிவன், சுந்தரன் மூவரும் இணை பிரியா நண்பர்கள் ஆயினர்.

சுந்தரனை அன்றிலிருந்தே ஆச்சார்ய ஸ்தானத்தில் வைத்தே மரியாதையுடன் இவர்கள் பார்த்தனர்.

அடைச்சாணியில் கோலாகலமாய் நடைபெற்ற சுந்தரன்–ஜானகி திருமணத்தில் இவர்களே மணமகனுக்கு மாப்பிள்ளைத் தோழர்களாய் இருந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரனாயும், ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளாய் சந்நியாசம் ஏற்றபிறகும் சூதசம்ஹிதை பிரவசனத்தின் போது நாராயண சிவன் அவர்களே அதன் ஸ்லோகங்களைப் பல முறை படித்துள்ளார். அவற்றிற்கு சுந்தர ஸ்வாமிகள் விளக்க உரையாற்றுவது வழக்கமாய் இருந்தது.

அந்த நாராயணசிவன் அவர்கள்தான் பொற்றாமரைக் குளத்தில் அமிழ்ந்து சடலமாய்க் காணப்பட்டார்.

'அந்த உடலை விபூதிபிள்ளையார் சந்நிதிமுன் கொண்டு சேர்ப்பீர்' என மீண்டும் ஆணை பிறப்பித்தார் மஹாசந்நிதானம். அவ்வாணையை ஏற்ற அதிகாரிகள் அந்தச் சடலத்தை விபூதிப் பிள்ளையார் திருச்சந்நதி முன்னே கிடத்தினர்.

ஸ்ரீஸ்வாமிகள் அச்சடலத்தின்மேல் விபூதி தாரணஞ் செய்தார். வலது காதில் சில மந்திரங்களை ஓதினார். கனாக்கண்டு விழிப்பதைப்போல் நாராயணசிவன் கண்விழித்துப் பார்த்தார். யாது நடந்ததெனத் தெரியாது சுற்றியிருந்த கூட்டத்தினரை மலங்கமலங்கப் பார்த்தார். விழித்தார். எதிரே மஹாசந்நிதானம் அமர்ந்திருப்பதையும் கண்டார். சுற்றியிருந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். நடந்தவற்றை தொடர்புபடுத்தி ஊகித்து அறிந்த நாராயணசிவம் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தார். ஸ்ரீஸ்வாமிகளின் மலரடிகளைத் தொழுதார்.

'அடியேனை ஆட்கொண்ட தெய்வமே!யான் உமைச் சிக்கெனப் பிடித்தேன். இனி நீரே என் முழுமுதற் கண்கண்ட தெய்வம்' என்று கூறி கண்களில் நீர்வழிய பலமுறை தொழுதெழுதார்.

மதுரைவாசிகள் நடந்தவற்றைப் பார்த்து அதிசயத்து நின்றனர். எங்கு பார்த்தாலும் ஸ்வாமிகளின் பிரபாவமே பரவியது.

(நாராயண சிவன் அவர்கள் 13.06.1910–ம் ஆண்டு வைகாசி சஷ்டி திதியில் அரிமழத்திலிருந்து 15 கி.மீ.தொலைவில் உள்ள கொத்தமங்கலம் என்ற ஊரில் ஜீவசமாதி அடைந்தார்.

இவருடைய சந்ததியைச் சேர்ந்தவர்கள் இவரின் ஆராதனை விழாவை ஆண்டுதோறும் கொத்தமங்கலத்தில் சிறப்பாக நடத்தி வருவதோடு, அரிமழம் ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில் ஸ்வாமிகளின் ஜயந்தி விழாவை ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மாத அனுஷ நக்ஷத்திரத்தில் விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர்.)

நாராயண சிவன் அவர்கள் சிறுவயதில் வசித்து வந்த திருவேம்பத்தூர் ஊரில் ஸ்ரீஸ்வாமிகளின் அனுக்கிரஹத்தால் 'தாழையடிக் கருப்பர்' என்ற கருப்பண்ணஸ்வாமி கோயிலை நாராயண சிவன் எழுப்பினார். அவரின் பரம்பரையினர் இக்கோயிலைப் பராமரித்து வருகின்றனர்.)

ஆலவாய் நகரில் சிலநாட்கள் தங்கி, மதுரை சம்பந்தர் மடத்தில் சூதசம்ஹிதை ஸ்லோகங்களை சூரியநாராயண சிவன் சொல்ல, மகாசந்நிதானம் அவர்கள் அவற்றின் பொருளை விளக்கினார். சேஷாசல தீக்ஷிதர் திருவிளையாடற் புராணம், பெரியபுராணம் ஆகியவற்றின் கதைகளைக் கூறினார். அதைக் கேட்ட பக்தர்கள் அகமகிழ்ந்து சிவ அனுபவத்தில் திளைத்தனர்.

சுத்தானந்த பாரதியாரின் தந்தை, ரமணமகரிஷியின் தந்தை திருச்சுழி வக்கீல் சுந்தரம் அய்யர் ஆகியோர் நாள்தோறும் ஸ்ரீஸ்வாமிகளின் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தவர்களில் முக்கியமானவர்கள்.

ஸ்ரீஸ்வாமிகள் தம் சீடர்களுடன் மதுரையிலிருந்து புறப்பட்டு திரிசிரபுரம், ஜம்புகேஸ்வரம், தஞ்சை ஆகிய தலங்களில் தரிசனம் செய்துகொண்டு திருவிடைமருதூர் ஊரை அடைந்தார்.

அங்கே திருமணம் ஒன்றை சிறப்பாக நடத்தி வைக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு வாய்த்தது.

யாருடைய திருமணம் ?

"அறிந்தோம்யாம் என்றே இருந்தோம் மதியில்
அறியாமை நீங்கா திருந்த பொழுதில்
அறிந்திலம் யாம்என்றே இன்று இருந்தோம்
அறியப்பட் டாய்நீ விரைந்து."

மகான்கள் காரணமில்லாமலேயே அருள் மழை பொழியும் கருணை மேகங்கள். விரும்பியதை அளிப்பதில் கற்பக விருக்ஷத்திற்கு ஒப்பானவர்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



குருவே சிவன். குருவே தெய்வம். குரு வேறு பரமாத்மா வேறல்ல. பக்தர்களைத் தேடிச் சென்று அருள்புரிபவர்கள்.

ஸ்வாமிகள் 1848–ம் ஆண்டு காசி மாநகர் விஜயம் செய்தபொழுது மதுரை, திருசிரபுரம், தஞ்சை, திட்டை, திருவையாறு ஆகிய புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்து வையச்சேரி வந்தார் என்பதைப் பார்த்தோம்.

அங்கிருந்து கும்பகோணம், ஸ்வாமிமலை வழியாக மத்யார்ஜுனமாகிய திருவிடைமருதூர் மகாலிங்கேஸ்வர ஸ்வாமியைத் தரிசனம் செய்து வழிபட்டார்.

அந்த காலகட்டத்தில் திருவிடைமருதூரும், சுற்றியுள்ள கிராமங்களும் அமரசிம்ம மஹாராஜாவின் புதல்வர் பிரதாபசிம்ம மஹாராஜாவின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. சிறுவயதினனான பிரதாபசிம்மன் மக்கள் மகிழும் வண்ணம் நல்லாட்சி புரிந்து வந்தான். சிறந்த சிவபக்தனாகத் திகழ்ந்தான்.

கோயில்களில் எந்தக் குறைபாடுமின்றி நித்திய பூஜைகளும், திருவிழாக்களும் நடைபெற நிவந்தங்கள் அளித்தான். ஆலயங்கள் பக்தி நிறைந்த அடியார்களின் கண்காணிப்பில் இருந்தால்தான் கோயில் சிலைகளும், சொத்துக்களும் பாதுகாப்பாய் இருக்கும் என்பதை உணர்ந்து செயல்பட்டான். மக்களும் மகாலிங்க ஸ்வாமியின் தரிசனத்தில் மனம் மகிழ்ந்திருந்தனர்.

கோடகநல்லூர் சுந்தர ஸ்வாமிகள் திருவிடைமருதூர் வருகிறார் என்பதை அறிந்து உற்சாகம் அடைந்தான் மன்னன். ஊர் எல்லையில் வேத பண்டிதர்கள் புடைசூழ பூர்ணகும்பம் அளித்து வரவேற்றான். பாதங்களில் விழுந்து பணிந்தான். அரண்மனையிலேயே தங்கி அருள்பாலிக்கும்படி வேண்டினான்.

மன்னனின் வேண்டுகோளின்படி அங்கே ஒருவாரம் தங்கியிருக்க ஒப்புதல் அளித்தார்.

அந்த ஒருவாரகாலமும் ஸ்ரீஸ்வாமிகளின் சூதசம்ஹிதை விரிவான பிரவசனம் நடைபெற்றது.

மன்னரும், உறவினர்களும், நெருங்கிய நண்பர்களும், அரசு அதிகாரிகளும், அரண்மனைப் பெண்டிரும் இந்நிகழ்ச்சியைக் கேட்டுப் பயன் பெற்றனர். அரசரைச் சேர்ந்த ஆண்பாலருக்கும், அந்தப்புரப் பெண்பாலருக்கும் ஒருவரை ஒருவர் பார்த்துக்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கொள்வதற்கு இயல்பின்றி தனித்தனியாக இருக்கைகள் அமைத்திருந்தனர்.

ஸ்வாமிகள் அம்ருததாரையாக பிரசங்கித்தார்.

பிரதாபசிம்ம மஹாராஜா உட்பட அங்கு கூடியிருந்த திரளான பக்தர்கள் மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம்போல் ஆடாது அசையாது மனம் நெகிழ, கண்களில் நீர்பெருக ஸ்வாமிகளின் உரையைக் கேட்டனர்.

ஸூதசம்ஹிதை பிரவசனத்தில் மெய்மறந்தனர். அரண்மனை அந்தப்புரப் பெண்களும் ஸ்வாமிகளிடம் குடிகொண்டிருந்த தெய்வாம்சத்தைக் கண்டு பக்தி மேலீட்டால் கைகூப்பித் தொழுத வண்ணம் இருந்தனர்.

ஏழுநாட்களும் சப்தாகமாக ஸூதசம்ஹிதை பிரவசனம் இனிதே நடந்தேறியது. கங்கை பிரவாகமாய் அனைவரின் மனதையும் கொள்ளை கொள்ளும் விதமாக விரிவாகவும், விமரிசையாகவும் நடந்தது.

அவரின் சொல்லாற்றலைக் கேட்டு, இளவயதினரானாலும் இறைவனின் அவதாரமே இவர் எனக் கொண்டாடினர். அவர் அமானுஷ்ய சக்தி பெற்றவர், அவரின் அருளாசி பல அற்புதங்களை நிகழ்த்தும் என்ற நம்பிக்கை பசுமரத்தாணிபோல் அவர்களின் மனங்களில் பதிந்து விட்டது.

பூர்த்தியான அன்று ஸூதசம்ஹிதை ஓலைச்சுவடிகளுக்கும், அரண்மனைக் கோயில் சந்நிதியில் இருந்த பூஜாமூர்த்தங்களுக்கும் வெகு விமரிசையாக தீப, தூப, நிவேதனங்கள், ஆரத்தி செய்யப் பட்டன. அரச பரம்பரையினர் யாவருக்கும் ஸ்ரீஸ்வாமிகள் விபூதி, குங்குமப் பிரசாதம் வழங்கினார்.

முதன்முதலில் அரசபரம்பரையைச் சேர்ந்த ஆண்பாலர்கள் ஒவ்வொருவராக வந்து பிரசாதம் பெற்றுச் சென்றனர். ஸ்வாமிகளின் ஆசிர்வாதங்களைப் பெற்றதில் மனமகிழ்வு கொண்டனர்.

ஆண்கள் யாவரும் சென்ற பின்னர் அந்தப்புரப் பெண்கள் ஒவ்வொருவராக வந்தனர். ஒருவாசல் வழியே வந்து மற்றொரு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வாசல் வழியாக அந்தப்புரம் அடையும் வண்ணம் நெறிமுறை பின்பற்றப்பட்டது.

பிரதாபசிம்ம மன்னனின் மாமன் மனைவி பிரசாதம் வாங்கும் முறை வந்தது. ஸ்வாமிகளின் பாதங்களின் விழுந்து வணங்கிய அவர் குமுறிக்குமுறி அழ ஆரம்பித்தார்.

ஏன் அவ்வாறு அழுதார்?

"கனவிலே நித்தமும் வந்தென்னை ஆண்டாய்
நனவிலே வந்துற்றால் என்குறை தீர்ந்திடாதோ?
காணுகின்ற தோற்றங்கள் நீயெனில் நானுன்னை
நாவினிக்கப் பாடஅருள் செய்."

ஸ்ரீஸ்வாமிகள் அந்த அழைப்பை அங்கீகரித்தார்.

ஆனிமாதம் 5-ம்தேதி அன்று புறப்பட்டு புதுக்கோட்டை, தஞ்சை, கும்பகோணம் வழியாகத் திருவிடைமருதூர் வந்து சேர்ந்தார்.

ஸ்வாமிகளுக்கு அரசன் பிரதாபசிம்மனும், அரசி அம்மணியும் தகுந்த உபசாரங்களைச் செய்தனர்.

அவர் பாதம் தொழுது அனைவரும் ஆசிபெற்றனர்.

மத்யார்ஜுன மஹாலிங்கேஸ்வரரின் லக்ஷதீப விழாவை முன்னிட்டு 1853,பிரமாதிச வருஷம் ஆனி மாதம் 12-ம்தேதி வெள்ளிக்கிழமை முதல் 22-ம்தேதி திங்கட்கிழமை வரை பதினொரு நாட்களும் மஹாருத்ராபிஷேகம், வேதபாராயணம், ஸூதசம்ஹிதை பிரவசனம் முதலியவை சிறப்பாக நடைபெற்றன. எங்கும் மங்கள வாத்தியங்கள் முழங்கின.

ஒவ்வொரு நாளும் இசைக்கச்சேரிகள், பரதநாட்டியம், கதாகாலக்ஷேபம், சிவபுராண சொற்பொழிவுகள் என்று நகரமே களைகட்டி இருந்தது.

தஞ்சை தரணி கேட்க வேண்டுமா? அம் மண்ணின் கலாசாரத்தை, கலைகளின் பெருமையை விழா பறைசாற்றியது.

ஒவ்வொரு நாளும் நெறிபட கோயில் பூஜைகள் நடைபெற்றன.

1853-ம் ஆண்டு, பிரமாதிச வருஷம், ஆனி 22-ம்தேதி திங்கட்கிழமை இரவு ஸ்ரீமஹாலிங்கேஸ்வரர் ஆலயத்தில் லக்ஷ



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தீபங்கள் ஏற்றப்பட்டன.

பஞ்சமூர்த்திகளையும் திருவிடைமருதூரின் நான்கு வீதிகளிலும் பவனிவரச் செய்து விழா சிறப்பிக்கப்பட்டது. எல்லா மக்களும் பக்தி மேலோங்க இவ்விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கடவுளரை வழிபட்டு மனமகிழ்வு கொண்டனர்.

அம்முலு அம்மணிக்கும், பிரதாபசிம்மனுக்கும் ஸ்ரீமஹா லிங்கேஸ்வரர் சந்நிதியில் திருமணம் நடைபெற்றதால், வெண் கலத்தில் அம்முலு அம்மணியின் உருவம் வார்ப்படம் செய்யப்பட்டு சுமார் நான்கு அடி உயரத்தில் பாவை விளக்காக ஒளிர்ந்தது. லக்ஷதீபத்தன்று அந்தப் பாவை விளக்கு மஹாலிங்கேஸ்வரர் சந்நிதியை நோக்கி இருக்கும்படி வைக்கப்பட்டு முதல் தீபமாக ஏற்றப்பட்டது. பிறகு மற்ற விளக்குகள் ஏற்றப்பட்டன.

அம்முலு அம்மணியின் திருஉருவமான இப்பாவை விளக்கு ஒவ்வொரு நாளும் மஹாலிங்கேஸ்வரர் சந்நிதியில் இன்றும் ஏற்றப்பட்டு வருகிறது. எப்போதும் ஈஸ்வர சந்நிதானத்தில் அம்முலு அம்மணி ஜோதிஸ்வரூபமாக விளங்குகிறார்.

மற்றொரு சிறப்பு ஸ்ரீஸ்வாமிகள் செய்துவைத்த முதலாவது லக்ஷதீப விழா இதுவே ஆகும்.

திருவிடைமருதூரிலிருந்தபொழுது, ராமேஸ்வரம் யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்ற விருப்பம் ஸ்வாமிகளின் சீடர்களுக்கு ஏற்பட்டது. ஸ்வாமிகளிடம் : 'மகாசந்நிதானம்! நாம் ராமேஸ்வர யாத்திரை செல்ல திருவுளம் செய்ய வேண்டும்' என்று தம் எண்ணத்தைத் தெரிவித்தனர்.

ஸ்வாமிகள்:' அதற்கென்ன ? ராமேஸ்வரம் யாத்திரை புறப்படுவோம்' என்றார் புன்சிரிப்புடன். அந்த புன்சிரிப்பின் பொருள் சீடர்களுக்கு அப்பொழுது புரியவில்லை.

புரிந்தபொழுது அந்த அனுபவமே புதிதாய் அமைந்தது.
அப்படிப்பட்ட அனுபவம் என்ன ?
"புன்னகை சொல்லும் கதைகள் பலநூறு
அன்னதை முற்றும் அறிந்தவர் யாரோ ?
மவுனத்தில் வித்தை புரிந்திடும் ஈசா
கவனத்தில் நிற்பாய் நிலைத்து. "



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருவிடைமருதூர் அரச குடும்பத்தினரிடம் விடைபெற்று ராமேஸ்வரம் செல்லும் வழியில் புதுக்கோட்டை வந்து ராமசாஸ்திரிகள் இல்லத்தில் ஸ்வாமிகள் குழுவினர் தங்கினர். ஒட்டுத் திண்ணைப் பரதேசியாரும் ஸ்ரீஸ்வாமிகள் குழுவினருடன் சேர்ந்து கொண்டார்.

ஸூதசம்ஹிதைப் பிரவசனம் பஞ்சாகமாக ஐந்து நாட்கள் சொல்லியருளும்படி ஊர்ப் பிரமுகர்கள் கேட்டுக் கொண்டனர்.

அவ்வமயம் தமிழ்நாட்டில் தொண்டைமான் நாடாகிய புதுக்கோட்டை சமஸ்தானத்தின் மன்னராக ராமச்சந்திர தொண்டைமான் விளங்கினார். அவர் ஆன்றோர்களையும், கற்றவர்களையும், சமய அறிஞர்களையும் கலைஞர்களையும் போற்றும் பண்பினர். அவர்களை ஆதரிக்கும் பெருந்தகையாளர்.

ஸ்ரீஸ்வாமிகளின் மகிமையைக் கேள்வியுற்றிருந்த அவர் அரண்மனை கொலுமண்டபத்தில் பிரவசனத்திற்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். வடநாடு, தென்னாடு என்று பல பகுதிகளில் இருந்தும் வந்த வித்வத் ஜனங்கள் அங்கே கூடியிருந்தனர்.

மண்டபத்தின் நடுவே வீராசனத்தில் அமர்ந்து வேதத்தின் சாரமான ஸூதசம்ஹிதை உரையை செம்மையாகச் சொல்லலுற்றார் ஸ்வாமிகள். அறிஞர்களும், பொதுமக்களும், ஆளுமை நிறைந்த அரசர் பிரானும் அமர்ந்திருந்த அந்த சபையில் அமுதவாக்கைப் பொழிந்து கொண்டிருந்தார். வேதங்கள், உபநிடதங்கள் இவற்றிலிருந்து எடுத்துக்காட்டுகள் அருவியாய்ப் பொழிந்தன.

ஆண்களும், பெண்களும்,அனைத்து இன மக்களும் ஞானத்திற்கு உரியவர்கள் என்ற கருத்தை நிலைநாட்டிக் கொண்டிருக்கும் போது சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

தனது உரையைச் சற்றே நிறுத்திவிட்டுக் கூட்டத்தினரை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நோட்டமிட்டார். ஸ்வாமிகளின் உரையைக் கேட்க வந்திருந்த சில வேதியர்கள் குரல் எழுப்பினர்:

'பெண்களும், வேதம் கற்காதவர்களும் ஞானம் பெற, சந்நியாச யோகம் பெறத் தகுதி அற்றவர்கள், ஞானவிசாரம் செய்ய அதிகாரம் பெறாதவர்கள் என்று சுருதியில் சொல்லப்பட்டுள்ளது. உண்மை அவ்வாறிருக்க ஈஸ்வரன் அருட்பிரசாதத்தால் அனைவருக்கும் ஞானம் எளிதில் கிடைக்கும் என்று மஹாசந்நிதானம் உரைப்பது எவ்வாறு பொருந்தும் ?'

'சந்நியாசம் என்பது பந்தபாசங்களினின்று விடுபடுதல். தன்னை வருத்தி உலக நலனுக்காகத் துறவு மேற்கொள்ளுதல். இடம்விட்டு இடம் சென்று உடல் சுகத்தை மறந்து கடவுளை தியானித்தல். தான் அறிந்த உண்மைகளையும், நீதிகளையும் போதித்தல். செயல்களையும், செயல்களின் பலன்களைத் துறந்தவர்கள் ஞானமார்க்கத்திற்கு உரியவரே.

ஞானம் என்பது எதனிடத்திலும் பற்றுக் கொள்ளாமல், புலன்களை அடக்கி ஆத்மாவுடன் சுகித்திருப்பவன். தன்னிலேயே மனநிறைவு அடைந்தவன். எல்லா ஜீவராசிகளையும் சமமாகப் பார்ப்பவன்.

ஞானத்தை அடைந்தவன், அனைத்தையும் அறிந்தவனானாலும் சிறுவனைப் போல் விளையாடுவான்.

மௌனம் வாக்கின் தண்டம்;பலனில் பற்றுக் கொள்ளாமல் செயல்படுவது உடலின் தண்டம்; பிராணாயாமம் செய்வது மனதின் தண்டம். இந்த மூன்றையும் கைக்கொள்பவர்களே திரிதண்டிகள் எனப்படுவர். ஞானத்தின் முதல் மூன்று படிகள் அஹிம்சை, சத்தியம், அமைதி.

இவற்றின் மூலம் மெய்ஞானம் அடைந்த எவரும் பிரம்மத்தை அடைய அருகதை ஆனவர்களே.

இதில் ஆண்–பெண்; உயர்ந்த ஜாதி–தாழ்ந்த ஜாதி என்ற பாகுபாடுகள் கிடையாது.......'



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'உங்களுக்கு இந்த விளக்கங்கள் திருப்தி அளிக்காவிட்டால் இறைவனே உங்கள் சந்தேகத்தை நிவர்த்திப்பான்' என்று கூறி ஒரு அதிசயத்தை நிகழ்த்திக் காட்டினார்.

அது என்ன அற்புதம் ?

"ஞானம் அடைந்தோன் பிரம்மத்தைக் காண்பரே!
வானத்தின் கீழே அனைவரும் ஒன்றே
பிறப்பொக்கும் என்றான பின்னே இவரே
சிறப்பென்ற பேதமை நீக்கு."

ராமசாஸ்திரிகள், தன் புதல்வி சிறுமி சிவகாமியுடன் முதல் வரிசையில் அமர்ந்திருந்தார். அந்த ஐந்து வயது சிறுமியை மேடைக்கு அழைத்தார் ஸ்ரீஸ்வாமிகள். தன் கையில் பிடித்துக் கொண்டார்.

'உனக்கு என்ன வேண்டும் குழந்தாய் ?'

'மகான்களைத் தரிசித்தல் வேண்டும். ஞானானந்தத்தில் திளைக்கும் பேறு வேண்டும். இவை தவிர வேறு என்ன வேண்டும் ?'

'அவ்வாறே ஆகுக!' என்று கூறி குழந்தையின் நெற்றியில் விபூதியைப் பூசினார்; காதில் வீடுபேறு அளிக்கும் சில மந்திரங்களை ஓதினார். சின்முத்திரை காட்டினார்.

ஐந்து வயதுச் சிறுமியின் இந்த பதிலைக் கேட்டு அவையினர் அதிர்ந்தனர். ஆச்சரியப்பட்டனர்.

வீட்டிற்குத் திரும்பியதும், அக்குழந்தை ஸ்வாமிகள் ஓதிய மந்திரத்தைச் சிந்தித்த வண்ணம் சகஜநிஷ்டையில் அமர்ந்தது.

இரு ஜாமங்களாகியும் குழந்தையின் நிஷ்டை கலையவில்லை. இந்த அதிசயக் குழந்தையை ஊரினர் பயபக்தியுடன் தரிசித்துச் சென்றனர்.

பெண்கள் ஞானம் பெறுவதை மறுத்து எதிர்த்து உரையாடிய வேதவிற்பன்னர்களும் சிவகாமியைக் கண்டு தொழுதனர். தமது அறியாமைக்கு வருந்தினர். பிழையை உணர்ந்தனர்.

குழந்தை அசையாமல் நிஷ்டையில் இருந்தது.

மதிய போஜன வேலையும் கடந்தது. எவரும் உணவு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அருந்தாமல் அருகிலேயே இருந்தனர்.

அங்கு வந்திருந்த வெங்கு சாஸ்திரிகள் ஒரு குச்சியில் துணியைச் சுற்றி சிவகாமியின் மூக்கில் நுழைத்தார்.

கண்களை லேசாகத் திறந்து, விழிகளைத் திறக்க விருப்பமில்லை என்பதைப் பார்வையால் உணர்த்தியது. மீண்டும் கண்களை மூடிக்கொண்டது.

சற்று நேரத்தில் மஹாசந்நிதானம் அவர்கள் அங்கே விஜயம் செய்தார். குழந்தையைத் தன் குளுமையான கரங்களால் தடவிக் கொடுத்தார். குழந்தையின் விழிகள் மலர்ந்தன.சுயநிலையை அடைந்தாள். இயல்பாகப் பேசினாள். சிவகாமிக்குத் தன் திருக்கரத்தால் உணவை ஊட்டினார்.

குழந்தை குதித்தெழுந்து ஒன்றும் நடக்காதது போல் விளையாட ஓடிப்போனது. சாதாரண நிலையை அடைந்தது.

இது முதல்நாள் நிகழ்ச்சி. பெண்கள் ஞானம் பெறத் தகுதியானவர்கள் என்பதை உணர்துவதற்காக நடத்தப்பெற்ற லீலை .

இரண்டாம் நிகழ்ச்சியில் மற்றொரு அற்புதம்.

ராமசாமி சாஸ்திரி பிரவசனத்திற்கு மாட்டுவண்டியில் வந்தார். வண்டியை ஓட்டி வந்தவர் அரங்கக்கோனார் என்பவர். சாஸ்திரிகள் முதல் வரிசையில் அமர்ந்து கொண்டிருந்தார். அரங்கக் கோனாரோ மண்டபத்தின் ஒரு ஓரத்தில் நின்றுகொண்டு ஸ்வாமிகளின் உரையைப் பணிவுடனும், அக்கறையுடனும் செவிமடுத்துக் கொண்டிருந்தார்.

பிரசங்கத்தின் மத்தியில் அரங்கக்கோனார் மேடையில் அமர்ந்திருந்த மஹாசந்நிதானத்தை நோக்கி மிக வேகமாக வந்தார்.

மேடை நோக்கி வந்தவர் உரத்துக் குரல் எழுப்பிப் பிரகடனம் செய்தார்.

என்ன அது ?

“பேரழகு சேர்ந்த அரிமழம் நின்றானை
நீரரும்ப வாவிகள் பொங்கும் நகரில்
குலத்தில் பிறந்தோர் தொழுதிடவந் தானை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மலர்தூவி ஏற்றுவோம் நாம்.”

'யானே பிரம்ம ஸ்வரூபம்.' என்று உரத்த குரலில் கூறிக் கொண்டு மேடையின் முன்னே நர்த்தனம் செய்ய ஆரம்பித்தார் அரங்கக்கோனார்.பக்தி மேலீட்டால் மஹாசந்நிதானத்தின் பாதங்களில் விழுந்து வணங்கினார். அவரின் அருகில் அமர்ந்து கொண்டு ஸ்வாமிகள் விட்ட இடத்திலிருந்து வேதாந்தக் கருத்துக்களைப் பிரசங்கிக்கத் தொடங்கினார்.

ஸ்ரீஸ்வாமிகள் விபூதிப் பிரசாதத்தை அரங்கக்கோனார் நெற்றியில் பூசினார். அவர் சுயநிலையை அடைந்தார்.

'வேதாந்த ஸூத்திர பாஷ்யத்தில் சங்கரபகவத்பாதர் கூறியவண்ணம் அனைத்து வருணத்தாருக்கும் வித்யாதானம் செய்வது அந்தணனின் கடமை. இதிகாச புராணங்கள் அனைவருக்குமான தத்துவங்களை விளக்கவன்றோ ஏற்பட்டன. தத்துவ ஞானமடைந்த விதுரரும், தர்மவியாதரும் அந்தணர் அல்லவே! அப்பர் ஸ்வாமிகள் அந்தணர்களாலும் தொழப்பட வில்லையா ?

கல்வி அறிவே இல்லாத திண்ணப்பன் குடுமிநாதரிடம் கணப்பொழுதிலேயே மனத்தைப் பறிகொடுக்கவில்லையா ?

காளத்தியப்பரின் கண்களிலிருந்து குருதி வடிவதைக்கண்டு தன் கண்ணையே அகழ்ந்தெடுத்து அப்பி கண்ணப்பன் ஆகவில்லையா ?

இந்த ஞானத்தை எந்தக் கல்வி அளித்தது ?

முற்பிறவியில் செய்த தவத்தின் பயனன்றோ இது!

இந்த ஞானத்தையும், வைராக்கியத்தையும் வெறும் கல்வியினால் மட்டும் அடைந்துவிட முடியுமா ?பூர்வஜன்ம கர்ம பலம் இருந்தால் மட்டுமே இவற்றை அடைய முடியும். இதில் ஆண் என்றோ பெண் என்றோ

பேதம் ஏன் ?

உயர்குலம், தாழ்ந்தகுலம் என்ற பிரிவினை எங்கே வந்தது ?

இதைத்தானே ஆதிசங்கரரும் கூறுகிறார்.

ஆதிசங்கரர் உரைத்தது அனைத்தும் ஆண்டவன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உரைத்ததற்குச் சமம் அன்றோ!

சங்கரரை நினைத்துத் துதிக்கும்போது குருபரம்பரையை பரமாத்மாவையே முதல் குருவாகக் கொண்டு தொடங்குகிறோம்.

பாரத கலாசாரத்தில் சதாசிவம் என்னும் பரமாத்மாவே முதல்குரு.

அதன்பின் பிரம்மதேவர்.

பின்பு ரிஷிபரம்பரைக்கு ஆதிகால,பிரம்மனின் மானச புத்திரரான வசிஷ்டர்.

பின் அவர் புதல்வர் சக்தி மகரிஷி.

சக்தி மகரிஷியின் புத்திரரும், சீடருமான பராசரமகரிஷி.

அவரின் புதல்வரும்,சீடருமான வியாசபகவான்.

வியாசபகவானின் புதல்வரும், சீடருமான சுகயோகீந்தரர்.

பின் அவரின் சீடரான கௌடபகவத்பாதர்.

அவருடைய சீடர் கோவிந்த பகவத்பாதர்.

அவரின் சீடர் ஆதிசங்கரர்.

இது சங்கர குரு பரம்பரை.

பரமேஸ்வரனில் ஆரம்பமாகி சங்கரர் வரை தொடர்ந்து வந்த வேதவேதாந்த ஞான பரம்பரை எதுவோ அதுவே சனாதன தர்மம்.

வேதம் எந்த பரமாத்மாவிடம் இருந்து வெளிப்பட்டதோ அந்த பரமாத்மா கூறுவதில் நீங்கள்

குறை காணலாமா ?

யாக்ஞவல்கியர்,தம் மனைவி மைத்ரேயிக்கு பிரம்ம வித்தையைப் போதிக்க வில்லையா!

மண் குடத்தில் இருந்தாலும், தங்கக் குடத்தில் இருந்தாலும் தண்ணீர் தண்ணீர்தானே! அந்த இரண்டில் இருக்கும் நீரும் தாகத்தைத் தீர்க்கும்தானே! அதன் இயல்பில் இருந்து மாறுபடுவதில்லையே!

எம்முடைய உடலில் இருக்கும் அதே பிரம்மம்தானே உங்களுடைய மற்றும் அனைவரின் உடல்களிலும் உள்ளது. நமக்குள் வேறுபாடு ஏன் ?.......'

இவ்வளவு தெளிவாக, விரிவாக மஹாசந்நிதானம் எடுத்துரைத்ததை அங்கு கூடியிருந்த மக்கள் அனைவரும் உகந்து



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஏற்றுக் கொண்டனர் ஒருவரைத் தவிர.

அந்த ஒருவர் யார் ?

அவரின ஐயப்பாடு என்ன ?

"ஆவியின் ஒப்பற்ற தாயே !தயாபரனே !
ஆருயிர் பேணிடும் நேசனே ! எங்களின்
ஈசனே ! நீயன்றி வேறுயார் எங்களின்
பாச வினையறுப்பார் செப்பு."

'உங்களை மஹாசந்நிதானம் என்று ஒருசிலர் கொண்டாடுகின்றனர். ஆனால் கடந்த இரண்டு நாட்களாக நடக்கும் நிகழ்ச்சிகளை நானும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

ஒரு ஐந்து வயதுக் குழந்தையை மயக்கம்போட வைப்பதும், ஒரு வண்டிக்காரனைக் கூத்தாட வைப்பதும்தான் உங்கள் ஞானத்தின் வெளிப்பாடா ?

எளிதில் நம்பும் மக்களை சுலபமாக ஏமாற்றிவிடுகிறீர்கள்.

நீங்கள் செய்வதெல்லாம் வெறும் ஜாலவித்தைகள். உங்களது இந்த விளையாட்டுக்களை இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள்.

என்னைப் போன்ற திரிகால சந்தியாவந்தனம் செய்பவர் களிடம், சாஸ்திர சம்பிரதாயங்களை அறிந்த வைதிகர் களிடம் உங்கள் ஜம்பம் செல்லுபடியாகுமா ? அனுபவபூர்வமாக உங்கள் சக்தியை நிருபிக்க முடியுமா ?'

இப்படி குரலில் ஆத்திரம் பொங்க சவால்விடுவது போல் கேட்டவர் சேஷப்பா என்கிற வைதிக பிராமணர்.

இதைக்கேட்ட ஸ்ரீஸ்வாமிகள் சிறிதும் பதட்டமோ, கோபமோ அடையவில்லை.

சேஷப்பா அவர்களை ஒருமுறை தனது கருணை பொழியும் விழிகளால், உதட்டில் இளநகை தோன்ற உற்றுப்பார்த்தார். அந்த பகுத்தறிவாளர் செய்த பூர்வஜன்ம பலத்தால், ஸ்வாமிகளின்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நயனதீக்ஷை உடனே அவருக்குக் கிடைத்தது.

அந்த அற்புதம் அங்கே அரங்கேறியது.

சேஷப்பாவின் சரீரம் அந்த மண்டபத்தில் அப்படியே நான்கடி உயரத்திற்கு எழுந்தது. காற்றில் மிதப்பதுபோல் மிதந்து அரண்மனை வாயிலிலிருந்த தூதுவளம் பந்தலின்மேல் துள்ளி அமர்ந்தது. (சக்தி நிபாதம்). அரை முகூர்த்த நேரம் வரை அந்தப் பந்தலில் இருந்து எழுந்திருக்கவில்லை.

இதனை பயபக்தியுடன் அரசர் உட்பட யாவரும் கண்டு அதிசயமுற்றனர். ஸ்ரீஸ்வாமிகளிடம் உறையும் தெய்வீகத் தன்மையை உணர்ந்து மகிழ்ச்சி அடைந்தனர்.

அப்பால் விழிப்புற்ற சேஷப்பாவும் ஆனந்தக் கண்ணீர் கண்களில் பெருகிட,பதறி ஓடிவந்து மஹாசந்நிதானத்தின் திருப்பாதங்களில் விழுந்து வணங்கினார். சுத்த சத்வகுணம் அவருள் மேவியது.

'அபசாரம்,அபசாரம்.அறிந்து செய்த குற்றம் இது.என் செயலுக்கு வருந்துகிறேன். அடியேனை மன்னித்து, காத்தருளுங்கள். எளியேனையும் உங்கள் பக்தர்களில் ஒருவராக ஏற்றுக் கொண்டு கருணைபுரிய வேண்டும்' என்று கதறினார்.

சரணாகதி என்று வந்தவரை அரவணைக்கும் அருட்கடல் அல்லவா ஸ்ரீஸ்வாமிகள்! அன்று முதல் சேஷப்பாவும் மஹா சந்நிதானம் அவர்களின் சீடர்களில் ஒருவரானார்.

ஸூதசம்ஹிதைப் பிரவசனம் இனிதே நிறைவேறியது.

சில நாட்கள் சென்ற பின்னர் சீடர்களின் விருப்பப்படி ராமேஸ்வரம் யாத்திரை மேற்காண்டார் ஸ்வாமிகள்.

புதுக்கோட்டையில் இருந்து ஏழுசீடர்களுடன் திருப்பத்தூர் வந்தார். இரவு நேரம். இருட்டிவிட்டது.

திருப்பத்தூரில் மன்யம் வெங்கட்ராம ஐயர் என்ற பக்தரின் வீட்டில் தங்கினர்.

ராமசிவன், என்ற சீடரை திருத்தளிநாதர் கோயிலுக்குச் சென்று, பக்தர்களின் இரவு உணவிற்கு மடப்பள்ளியிலிருந்து



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஏழுகட்டிசாதம் வாங்கிவரும்படி அனுப்பினார். உள்ளூர்க்காரரான மன்யம் வெங்கட்ராம ஐயர் கோயிலுக்கு வழிகாட்ட உடன் சென்றார்.

திருக்கோயிலில் விசித்திரமான சம்பவம் நடந்தது.

அது என்ன ?

"காமர் கயல்விளை யாடும் நிறைகுளம்
தாமரைகள் பூத்ததண் நீர்நிலைகள் மேவும்
அரிமழ மாநகர் சேர்ந்தஎம் நேசன்
பரிவுடன் காப்பான் எமையே."

ஸ்ரீஸ்வாமிகளின் சீடர்களில் ஒருவரான ராமசிவன், மன்யம் வெங்கட்ராம ஐயர் வழிகாட்ட திருத்தளிநாதர் கோயிலுக்குச் சென்றார். இக்கோயிலை பைரவர் கோயில் என்றும் அழைப்பார்கள். இங்குள்ள ஞானபைரவர் மிகசக்தி வாய்ந்தவர்.

கோயிலுள் சென்று மடப்பள்ளி வாசலில் சுயம்பாகியைச் (சோம்பாயி) சந்தித்தனர். அவர் தெலுங்கு பிராமணர். தன் உறவினரான மன்யம் வெங்கட்ராம ஐயர் புதிதாக ஒருவரை அழைத்து வருவதைக்கண்டு 'என்ன வேண்டும் ?' என்று கேட்டார்.

'மஹாசந்நிதானம் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் இந்த ஊருக்கு எழுந்தருளி இருக்கிறார்கள். அவருடன் நாங்கள் ஏழு சீடர்கள் வந்திருக்கிறோம். இரவு நேரம். யார் வீட்டிலும் போய்த் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. எனவே ஏழுகட்டி அன்னம் கோயிலில் வாங்கிவாரும் என்று ஸ்வாமிகள் கட்டளையிட்டார். அதுதான் வந்திருக்கிறோம்.'

'இந்த நேரத்தில் வெறும் அன்னம்தான் (சுத்தான்னம்) கிடைக்கும். அர்ந்தஜாமத்திற்குப் பிறகு ஐந்து வகைப் பிரசாதங்களும் கிடைக்கும். உங்கள் இஷ்டம் என்ன ?' என்று கேட்டார் சுயம்பாகி.

'அர்த்தஜாமத்திற்குப் பிறகு பஞ்சான்னமாக ஏழுகட்டிகள் பெற்றுக் கொள்கிறோம்' என்று தெரிவித்துவிட்டு ஸ்வாமிகள் தங்கி இருந்த இடம் திரும்பினர்.

ஸ்வாமிகள் திருப்பத்தூர் வருகைபுரிந்திருப்பதை அறிந்து



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மன்யம் வெங்கட்ராம ஐயர் வீட்டில் ஏகமாய்க் கூடிவிட்டனர் பக்தர்கள். மஹாசந்நிதானம் உற்சாகத்துடன் சொற்பொழிவாற்றத் தொடங்கினார் :

'ஈஸ்வரனிடம் செலுத்தும் பக்தி வளர்ந்து கொண்டே இருக்கும். அது பல அற்புதங்களை நிகழ்த்தும் ஆற்றல் பெற்றது. இடையிடையே சோதனைகள் வரும். அந்த சோதனைகளை வெல்ல பக்தியே உதவும். பக்தி செய்வதில் சிரத்தை வேண்டும். குருபக்தி, ஈஸ்வரபக்தி, சாஸ்திர விசாரணை ஆகியவற்றில் சிரத்தை உண்டானால் வாழும் வாழ்க்கை பயனுள்ளதாய் அமையும்.

வாழ்க்கைக்கு உரியதை நல்வழியில் சென்று அடைய வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் பெரியவர்களை மதித்து, உபசரித்துப் பூஜிப்பதே பக்தியாகும்.

குருவை எந்த நேரத்தில் நினைத்தாலும் அவர் அப்போதே அங்கே இருப்பார். ஆழ்ந்த பக்தியோடு கூப்பிட்டால் குரு உடனே வருவார் என்ற நம்பிக்கை மிகவும் அவசியம். சீடன் முயற்சி செய்வது என்பது முக்கியம். நம்பிக்கையும், முயற்சியும் இணைந்தால் குருஅருள் அனைத்து நற்செயல்களையும் முடித்துத் தரும். இத்தகைய சிஷ்யர்களிடம் கருணைகாட்டி உபதேசிப்பது குருவின் கடமை. குரு சொல்வதை அனுஷ்டானத்தில் கொண்டு வருவது சிஷ்யர்களின் கடமை என்பதையும் மறக்க வேண்டாம்.

உலகில் வாழும் எல்லா உயிர்களுக்குள்ளும் ஈஸ்வரன் உறைகின்றான். அவன் கருணை வடிவானவன். அவனிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவர்களை அவர்களின் திடமானசித்தத்தை சோதனை செய்து ஆட்கொள்கின்றான். சோதனைகள் வந்தபொழுது இறைவனை இன்னமும் இறுக்கமாகப் பற்றிக் கொள்ளுங்கள்...........'

ஸ்வாமிகள் உபதேசத்தில் பொழுது போனதே தெரியவில்லை. சொற்பொழிவு முடியும் பொழுது இரவு மணி 1.00.

திடீரென ஞாபகம் வந்தவர்போல் கோயிலை நோக்கி ஓடினர் மன்யம் வெங்கட்ராம ஐயரும், ராமசிவனும், பஞ்சான்னப் பட்டைகளை வாங்க. நள்ளிரவு தாண்டிய அந்நேரத்தில் அங்கே அவர்கள் கண்டதென்ன ?

"சன்னிதி தேடி வருவோர்க்கு நாளெல்லாம்
அன்னம் வழங்கும் அருள்தெய்வம் உன்னை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மறுத்தவ ருக்கும் மறுப்ப வருக்கும்
மறுக்காமல் செய்வாய் அருள்."

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புகூட கோயில்களில் அர்த்த ஜாமத்திற்கு அப்பம், வடை (எல்லாம் அளவில் பெரியதாக)பால், புளியோதரை, சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல் (சனிக்கிழமைகளில் எள்சாதம்) என்று பிரசாதங்கள் நிவேதனம் செய்யப்படும்.

யாத்ரீகர்களுக்கு அன்னசத்திரம் அல்லது கோயில்களில் மதிய உணவும் வழங்கப்படும். இரவில் நிவேதனமான கோயில் பிரசாதங்கள் விநியோகம் உண்டு. முன்னரே சொல்லிவிட்டால் பட்டைச்சோறை எடுத்து வைத்து விடுவார்கள். அர்த்தஜாமம் முடிந்த பிறகு உரியவர்கள் வாங்கிச் செல்வார்கள்.

இன்றோ....... ?

ராமசிவம் அர்த்தஜாமம் முடிந்தவுடன் கோயிலுக்கு வந்து ஏழு பஞ்சான்னங்களை வந்து வாங்கிக்கொள்ள மறந்துவிட்டார். ஸ்ரீ ஸ்வாமிகளின் சொல்லாற்றலில் நேரம் போனதும் தெரியவில்லை; பசியும் தெரியவில்லை. கோயில் கதவுகள் மூடப்பட்டிருப்பதைக் கண்டு தன்னையே நொந்து கொண்டார். தனது மெத்தனத்திற்கு வருந்தி, ஏமாற்றத்துடன் வெறுங்கையுடன் இருப்பிடம் திரும்பினார். இத்தனை சீடர்கள் பட்டினியாகக் கிடக்கத் தான் காரணம் ஆகிவிட்டோமே என்று வழியெல்லாம் புலம்பிக்கொண்டே வந்தார். வெங்கட்ராம ஐயர் அவருக்கு சமாதானம் கூறித் தேற்றினார். 'இன்றிரவு உபவாசத்தால் எவ்வளவோ பலனுண்டு. வருந்தாதீர்கள்' என ஆறுதல் கூறினார்.

இவர்கள் திருத்தளிநாதர் கோயிலிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த சமயம், ஸ்வாமிகள் தங்கியிருந்த இடத்தில் ஒரு அதிசயம் நடந்தது. அங்கே அனைவரும் சயனித்துக் கொண்டிருந்தனர். மூடப்பட்டிருந்த வீட்டின் வாயிற்கதவை பரிசாரகர் தட்டினார்.

ஒரு சீடர் கதவைத் திறந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'திருநெல்வேலியிலிருந்து வந்த ஸ்வாமிகள் எங்கே ?' வந்தவர் கேட்டார்.

ஸ்ரீஸ்வாமிகள் வெளியே வந்தார். 'யாது செய்தி ?'

'அன்னம் கேட்டவர் காலாகாலத்தில் வந்து வாங்கிக் கொள்ளலாகாதா ? உணவு உங்கள் இடம் நாடிவருமா என்ன? உங்களைத் தேடி வந்து, இந்த பாதிராத்திரிக்கு மேல் தகவல் சொல்ல வைத்துவிட்டீர்களே. வயிற்றுப் பசியைத் தீர்ப்பதைவிட சிவபஜனை ரொம்ப முக்கியமாக்கும் ?'

ஒரு க்ஷணநேரம் ஸ்வாமிகளின் கண்களில் மின்னல்கீற்றுத் தோன்றி மறைந்தது.

'தாய் அறியாத சூலுண்டா ?' வந்தது யாரென்று ஸ்வாமிகளுக்கா தெரியாது ?

அந்த நேரம் கோயிலிலிருந்து வந்து சேர்ந்த இருவரையும் மீண்டும் பரிசாரகருடன் கோயிலுக்குச் சென்று பிரசாதம் வாங்கி வரச் சொன்னார். எவ்வளவு புண்ணியவான்கள் அவ்விருவரும்! மதுரை மண்ணில் பரமசிவன் பாதம் தேய நடந்தது போல் திருப்பத்தூர் மண்ணில் நடந்த பரிசாரகர் பின்னே இருவரும் சென்றனர்.

பரிசாரகர் பூட்டி இருந்த கதவைத் தள்ளினார். எளிதாகத் திறந்து கொண்டது. இருவரின் கைகளைப்பற்றி நேராக மடப்பள்ளிக்கு அழைத்துச் சென்றார்.

'அடாடா! நீவிர் கேட்டபடி ஏழுகட்டிச் சாதம் எடுத்து வைத்திருந்தேன். ஒரு கட்டியைக் காணோமே! எலியோ பூனையோ சாப்பிட்டிருக்கும். இருக்கும் ஆறு கட்டி சாதத்தை எடுத்துக் கொண்டுபோம். '

ராமசாமி ஐயரும், மன்யம் வெங்கட்ராம ஐயரும் அவற்றை வாங்கிக் கொண்டு வெளியே வந்தனர்.

கோயில் கதவு தானாகப் பூட்டிக் கொண்டது. பரிசாரகர் வெளியே வரவில்லை. அவரை அங்கே இங்கே தேடிப் பார்த்தனர். கண்களுக்குத் தட்டுப்படவில்லை. கோயிலின் உள்ளேயே இருந்து விட்டார் போலும். அவர் இருப்பிடம் அதுதானோ ?

இருவரும் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து அப்படியே



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சிலைகளாய்ச் சமைந்துவிட்டனர். பட்டினி கிடக்கும் ஏனைய சீடர்களுக்கு உணவைக் கொண்டு சென்று வழங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றவே இல்லை.

சென்றவர்களைக் காணவில்லையே என்று இவர்களைத்தேடி ஆவுடையப்ப பிள்ளை வந்தார். நடந்த பிரமையிலிருந்து விடுபட்ட இருவரும், அவருடன் ஸ்வாமிகளின் இருப்பிடத்தை அடைந்தனர். கோயிலில் நடந்ததைக் கூறினர்.

பரிசாரகர் தோற்றத்தில் வந்தவர் திருத்தளிநாதரே என அவர்களுக்குத் தெளிவுபடுத்தினார் மஹாசந்நிதானம். மெய்சிலிர்த்தனர் அன்பர்கள். அனைவரும் பிரசாதத்தை உண்டு சற்று ஓய்வு எடுத்தனர்.

மறுநாள் காலை சீடர்களுடன் சிவகாமி அம்பாள் சமேத திருத்தளி நாதர் திருக்கோயில் சென்று அபிஷேகம், அர்ச்சனை செய்தார் ஸ்வாமிகள். நெஞ்சுருகத் தோத்திரம் செய்தார்.

'நமக்கு ராமேஸ்வரம் ராமநாதஸ்வாமி இங்கேயே நேரிடையாக தரிசனம் கொடுத்து விட்டார். சேதுவிற்குப் போன பலன் கிடைத்து விட்டது. நாம் ராமேஸ்வரம் செல்ல வேண்டாம். புதுக்கோட்டை திரும்புவோம்' என்று உத்தரவிட்டார் மஹாசந்நிதானம்.

புதுக்கோட்டையில் ஸ்வாமிகள் தங்கி அருள்பாலித்துக் கொண்டிருந்த போது சில அன்பர்கள் அவரை தரிசித்தனர்.

அந்த அடியார்களுடனான சந்திப்பு இந்த சரிதத்தின் போக்கில் மிக முக்கியமான மாற்றத்தை உண்டாக்கப்போகிறது. இவர்கள் ஸ்வாமிகளின் இனிவரும் அற்புத நிகழ்வுகளை அருகில் இருந்து காணும் பேற்றைப் பெறப்போகிறார்கள்.

நாமும் இந்த திவ்விய சரிதத்தின் மிக உன்னதமான மூன்றாம் பாகத்தில் நுழைகிறோம்.

அந்த அன்பர்கள் யார்?

"மணித்துகில் சார்த்தி வழிபட்ட அன்பர்
அணிமணி பெற்று அவனியில் செம்மையாய்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நற்பே றடைவர்நல் அன்னதானம் செய்பவர்
பெற்றிடுவர் பேறுகள் கோடி. ”

(மதுரை ஸ்ரீமீனாக்ஷி அம்மன் திருக்கோயிலில் ஸ்ரீசுந்தரேஸ்வரர் சந்நிதிக்கு எதிரில் கண்ணூஞ்சல் மண்டபம் உள்ளது. அந்த மண்டபத்தைக் கட்டியவர் மண்யம் வெங்கட்ராம ஐயரின் புதல்வர் மண்யம் முத்துராம ஐயர். மதுரை சித்திரைத் திருவிழாவில் இரண்டாம்நாள் மண்டகப்படியையும் மற்றும் திருக்கல்யாணம் நிகழும் முன்பு காலை நடைபெறும் கண்ணூஞ்சல் மண்டகப்படியையும் இவர் வம்சாவளியினர் இன்றும் சிறப்பாக நடத்தி வருகின்றனர். ஸ்வாமியை தரிசிக்கும் விதமாக சந்நதிக்கு நேரே மண்யம் ஸ்ரீ முத்துராம ஐயர், அவர் மனைவி வெங்கலக்ஷ்மி அம்மாள் உருவங்கள் தூண்களில் சிலைவடிவங்களாக உள்ளன.)

மீண்டும் ஸ்ரீஸ்வாமிகள் புதுக்கோட்டையில் நுழையும் முன்பாக இப்பகுதியின் சிறப்புகள் சிலவற்றையும், பின்னர் அதன் வரலாற்றையும் சிறிது பார்ப்போம்.

ஆசியாவிலேயே மிகப்பெரிய அனந்தசயனப் பெருமாள் திருமெய்யர். (சத்திய மூர்த்திப் பெருமாள்.)

அவரின் திருமுகமண்டலம் ,திருமேனி,திருப்பாதங்களை சந்நிதிக்கு வெளியில் இருக்கும் மூன்று சாளரங்களின் வழியேதான் தரிசிக்க முடியும்.

உலகில் உள்ள அனைத்து நீர்நிலைகளின் பாவங்களைப் போக்குவது திருமயம் சத்திய புஷ்கரணி.

உலகிலேயே சிவன் மற்றும் பெருமாளை ஒருங்கே கிரிவலம் வரும் வண்ணம் அமைந்த சிறப்புமிக்க கோட்டையின் அமைப்பு.

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் ஒரே திவ்விய தேசம் திருமெய்யம்.

இமயமலையைவிட அதிக தெய்வீக ஆற்றலை உடையது திருமெய்யம் மலைக்கோட்டை.

உலகிலேயே வடக்கு திசை பார்த்து தனிக்கோயிலாக வீற்றிருக்கும் பைரவர் திருமெய்யம் கோட்டை பைரவர்.

திருமயம் சத்யகிரீஸ்வரர் கோயிலில் வீற்றிருக்கும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



லிங்கோத்பவர் தமிழகத்திலேயே மிகப்பெரியது.

தென்னிந்தியாவிலேயே மிகப்பெரிய சிவன் சிலை புதுக்கோட்டை – கீரமங்களம் ஊரில் உள்ள சிலை.

ஆசியாவிலேயே மிகப்பெரிய குதிரைசிலை குலமங்களம் பெருங்கரையாடிமீட்ட ஐயனார் கோயில் குதிரைசிலை.

தமிழகத்தின் சப்தகன்னியர் என்றழைக்கப்படுபவர்கள் :

1. திருவப்பூர் மாரியம்மன்.
2. இளஞ்சாவூர் முத்துமாரியம்மன்.
3. கொன்னையூர் முத்துமாரியம்மன்.
4. நார்த்தாமலை முத்துமாரியம்மன்.
5. கீரணிப்பட்டி முத்துமாரியம்மன்.
6. கண்ணனூர் முத்துமாரியம்மன்.
7. சமயபுரம் மாரியம்மன்.

இவர்களில் நான்கு சகோதரிகள் (திருவப்பூர், இளஞ்சாவூர், கொன்னையூர், நார்த்தமலை ) வீற்றிருந்து அருள்பாலிப்பது புதுக்கோட்டை மாவட்டத்தில்.

ராஜராஜசோழன் பதவி ஏற்றதும் முதலில் கட்டிய கோயில் நார்த்தாமலை அருகில் உள்ளது.

மலையே இல்லாத தஞ்சையில் பெரியகோயில் கட்ட பெரும்பெரும் கற்கள் நார்த்தமலையில் இருந்தே எடுத்துச் செல்லப்பட்டன. நார்த்தாமலை–தஞ்சை சாலை அமைக்கப்பட்டு பெரும் பாரம் ஏற்றிய வண்டிகளில் யானைகள் பூட்டப்பட்டு இழுத்துச் சென்றன. ஆகவே ராஜராஜன் நன்றிக்கடனாக எழுப்பிய முதல் கோயில் இங்குதான்.

தமிழ்நாட்டிலேயே அதிக அளவில் சமணர்கள் தங்கி இருந்த முழைகள் (சிறிய குகைகள்)உள்ள இடங்கள் சித்தன்னவாசல், நார்த்தாமலை, குடுமியான்மலை ஆகியவையாகும். காலத்தால் அழியாத 'சித்தன்னவாசல் ஓவியங்கள்' இருப்பதும் இங்குதான். (கல்கியின் 'சிவகாமியின் சபதம்' படித்தவர்களுக்கு இந்த ஓவியங்கள் நினைவிற்கு வரும். )

அன்னியரின் ஆதிக்கத்தால் சீரழிக்கப்பட்டு சிதிலமாகியுள்ள குடுமியான்மலை சிற்பங்களை இன்று கண்டால் கண்களில் குருதி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வடியும்.

மாணிக்கவாசகரை ஞானகுருவாய் வந்து சிவபெருமான் ஆட்கொண்ட திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார்கோயில் தலம் இருப்பதும் இங்குதான். இத்திருக்கோயிலில் கருவறையில் ஈசன் அரூபமாகவும், அருவுருவமாக குருந்தமர வடிவிலும், உருவமாக மாணிக்கவாசகர் வடிவிலும் காட்சி தருகிறார்.

இக்கோயில் சிற்பக் கலைக்கு இணையாக வேறு எங்கும் காணமுடியாது. ஈசனே கட்டிய திருக்கோயில் அல்லவா!கல்லும் கவிபாடும் இக்கலைக்கூடத்தின் சிறப்புகளை எளியவனால் எப்படி விவரிக்க முடியும்?

புதிதாகக் கோயில் கட்டும் ஸ்தபதிகள்

'ஆவுடையார்கோயில் சிற்ப அடங்கலுக்குப் புறம்பாக' என்றே தங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடுவர்.

'பழம்பதிநாதர்' எனப்படும் விருத்தகிரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள திருப்புனவாசல் என்ற தேவார வைப்புத்தலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. இவ்வாலய லிங்கம் அமைந்துள்ள ஆவுடையின் சுற்றளவு தஞ்சை பிரகதீஸ்வரர், கங்கை கொண்ட சோழீஸ்வரர் ஆகியவற்றைவிட பெரியது.

உயரம் 9',சுற்றளவு 82.5' (ஆவுடை)

தஞ்சை பிரஹதீஸ்வரர் லிங்கம் 12.5'உயரம், 55'சுற்றளவு (ஆவுடை); கங்கைகொண்டசோழபுரம் லிங்கம் 13.5'உயரம், 60' சுற்றளவு. (ஆவுடை)

நாயன்மார்களில் குலச்சிறையாரும்,பெருமிழலைக்குறும்பரும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

மயில்கள் சூழ்ந்த விராலிமலையில் அருணகிரிநாதருக்கு, முருகன் காட்சி அளித்தான்.

வேந்தன்பட்டியில் 'நெய் நந்தி' அருள்பாலிக்கிறார்.

வேகுப்பட்டி என்ற ஊரில் தமிழகத்தின் மூன்றாவது பெரிய விஸ்வரூப ஆஞ்சநேயர் காட்சி அளிக்கிறார்.

செவலூர் என்ற இடத்தில் சிறப்பு மிக்க வாஸ்து கோயில் அமைந்துள்ளது.

நற்சாந்துபட்டி என்ற ஊரின் அருகே உள்ள பேரையூரில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நாகதோஷம் நீக்கும் பிரசித்தி பெற்ற நாகநாத ஸ்வாமி கோயில் இருக்கிறது.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்மனும், ஸ்ரீ அரைக்காசு அம்மனும், கோகர்ணேஸ்வரரும், குமரமலை முருகனும் விருப்பமுடன் வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்கின்றார்கள்.

சம்பிரதாய உஞ்சவிருத்தி பஜனை பத்ததியை ஒழுங்குபடுத்தி பிரபலப்படுத்திய கோபாலகிருஷ்ண பாகவதர் இந்த ஊருக்குப் பெருமை சேர்த்தவர். இவரின் சீடர்கள் உலகின் பல பாகங்களில் உள்ளனர்.

இன்னும் கலை, இலக்கியம், சங்கீதம்,கூத்து.... என்று பலதுறை விற்பன்னர்களும் நிறைந்திருந்த சமஸ்தானம்.

இத்தகைய ஆன்மீகச் சிறப்புகளுடன் வேறு சில சரித்திரச் சிறப்புகளும் உள்ளன. அவை யாவை ?

“திசைஎங்கும் சென்றே சைவத்தின் சிறப்பு
இசைகொண்டு ஓங்கிட பொற்பாதம் மண்ணிலே
தேய நடந்தாய் அடியார்க்கு அன்பனாய்
மேவியே செய்தாய் அருள்.”

(புதுக்கோட்டையின் சில சமீபத்திய சிறப்புகள்:)

தமிழகத்தின் இரண்டாவது பெரிய அருங்காட்சியகம் புதுக்கோட்டையில் அமைந்துள்ளது .

தமிழகத்தின் இரண்டாவது பெரிய அரசுஅச்சகம் இங்கே இருக்கிறது.

தமிழகத்தில் முதல் நூற்றாண்டு கண்டது புதுக்கோட்டை நகராட்சியாகும்.

தனி நாணயம் (அம்மன் காசு), தனி முகத்தல் அளவைகள் (புதுக்கோட்டை உழக்கு, படி.) தனி தபால்தலைகள் இவற்றுடன் விளங்கிய ஒரே சமஸ்தானம் இதுவே ஆகும்.

தமிழகத்தில் முதன்முதலில் கார் வாங்கியது புதுக்கோட்டை மன்னர்.

இந்தியாவின் முதல் பெண்மருத்துவர் டாக்டர்.முத்துலக்ஷ்மி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவர்களின் ஊர். அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையின் ஸ்தாபகர். தமிழக சட்டமன்ற மேலவையின் முதல்பெண் உறுப்பினர்.பெண்களைப் பாதுகாக்கும் மசோதாக்களை முன் வைத்து அவை சட்டமாக்கப் பாடுபட்டவர். சென்னை 'ஔவை இல்லத்தை' நிறுவியவர். பத்மபூஷண் விருது பெற்ற முதல் பெண்மணி.

மருத்துவ சேவையையே நோக்கமாகக் கொண்டு ஜாதி, மத பேதமின்றி அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்குத் தன் வாழ்வை அர்ப்பணித்த டாக்டர். சாந்தா அவர்களின் பூர்விகம் திருமெய்யம்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'என்று பாடிய கணியன்பூங்குன்றனார் வசித்த ஊர் கணியன் பூங்குன்றம் என்ற இன்றைய மேலச்சிவல்புரி. இங்கு நூற்றாண்டு கண்ட செந்தமிழ்க் கல்லூரி உள்ளது. இந்த ஊர் புதுக்கோட்டையிலிருந்து சில மைல்கள் தொலைவில் உள்ளது.

சுதந்திரப் போராட்டவீரர் சத்தியமூர்த்தி – காமராஜரின் அரசியல் குரு இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

பாரீஸ், புதுச்சேரி நகரங்களுக்கு அடுத்தபடியாக அழகான நகர அமைப்பையும், நேரான, அழகான வீதிகளையும் கொண்டது (சில காலத்திற்கு முன்பு வரை) புதுக்கோட்டை.

ஆதிமனிதன் புதுக்கோட்டைப் பகுதியில் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இப்பகுதியைச் சுற்றியுள்ள இயற்கைக் குகைகளும், பாறை இருக்கைகளும் தொன்றுதொட்டே மனிதன் இப்பகுதியில் வாழ்ந்து வந்திருக்க வேண்டும் என்று சான்றுகள் பகர்கின்றன.

'சுடுவோர், இடுவோர், தொடுகுழிப்படுப்போர், தாழ்வுநிலை, தாழியிற் கவிப்போர் ......' என மணிமேகலை குறிப்பிடுகின்றது. இத்தகைய தாழிகள், மட்பாண்டங்கள், கல் ஆயுதங்கள், இரும்பு ஆயுதங்கள் மணிவகைகள், வளையல்கள் ஆகிய புராதன சின்னங்களை இவ்வூர் அருங்காட்சியகத்தில் காணலாம்.

இம்மாவட்டத்தின் பல ஊர்கள் தொன்மைச் சிறப்பு மிக்கவை. அத்துடன் சில ஊர்கள் பண்டைய சோழமன்னர்கள் ஆட்சியின் கீழும், சில ஊர்கள் பாண்டிய மன்னர்கள் ஆட்சியின் கீழும் இருந்தன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



புதுக்கோட்டையின் அருகே பாயும் வெள்ளாறு (ஸ்வேத நதி) பாண்டிய, சோழ மன்னர்களின் ஆளுகைப் பகுதிகளைப் பிரிக்கும் எல்லையாக அமைந்துள்ளது.

இம்மாவட்டத்தின் பலபகுதிகளிலும், தென்னிந்தியாவின் மிகப் பழங்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள ஒல்லையூர் பெருஞ்சாத்தன் மற்றும் ஒல்லையூர் பூதப்பாண்டியன், ஆவூர் கிழார், ஆவூர் மூழங்கிழார் ஆகியோர் இப்பகுதியைச் சேர்ந்தவர்களே.

தமிழ் மூதாட்டி ஔவை சிலகாலம் இங்கே வசித்ததாகக் கூறப்படுகிறது.

சோழர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள், முத்தரையர்கள், வேளிர்கள் இப்பகுதியை ஆட்சி செய்துள்ளனர்.

17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தொண்டைமான்கள் இப்பகுதியில் வலிமை பெற்றனர். இவர்கள் 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் விஜயநகர மன்னர்களோடு இப்பகுதிக்கு வந்தனர்.

விஜயநகரப் பேரரசின் தலைசிறந்த மன்னரான கிருஷ்ண தேவராயர் ராமேஸ்வரம் செல்லும் வழியில் திருக்கோகர்ணம் கோயிலைத் தரிசித்துள்ளார். இங்கு கோயில் கொண்டுள்ள அருள்மிகு ஸ்ரீ பிரஹதம்பாள் – ஸ்ரீ கோகர்ணேஸ்வரரை வழிபட்டு பல்வேறு கொடைகளை வழங்கி உள்ளார்.

17-ம் நூற்றாண்டின் மத்திய பகுதியிலிருந்து, பாரததேசம் சுதந்திரம் அடையும்வரை புதுக்கோட்டை சமஸ்தானம் தொண்டைமான்களால் ஆளப்பட்டது.

மேலும் விரிவான சரித்திர நிகழ்வுகளை வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் தொடரட்டும் என்று அவர்கள் வசம் விட்டுவிட்டு நம் சரிதத்தைத் தொடர்வோம்.

நம் சரிதம் நிகழ்ந்த காலத்தில் புதுக்கோட்டை சமஸ்தான மன்னராக ராமச்சந்திர தொண்டைமான் (1839–1886) விளங்கினார் என்பதை முன்னரே பார்த்தோம். 1878–ல் திவானாகப் பதவி ஏற்ற சேஷய்யா சாஸ்திரி என்பவர் அனைத்துத் துறைகளிலும் பல சீர் திருத்தங்களைச் செய்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இந்நகரை பாரீஸ், புதுச்சேரி நகருக்கு இணையாக வடிவமைத்து செயல்படுத்தியவர் இவரே. 'நகரத் திட்டமிடலின் முன்னோடி' என்று போற்றப்படுகிறார்.

புதுக்கோட்டையில் அமைந்துள்ள செங்கற்களால் ஆன நெடிதுயர்ந்த நிர்வாகக் கட்டிடங்கள், ஊரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய பிரம்மாண்டமாக அமைக்கப்பட்ட புதுக்குளம் ஆகியவை இவரின் சிந்தையில் தோன்றி செயல்வடிவம் பெற்றன. இவர் காலத்தில் பல ஆலயங்கள் புனரமைக்கப்பட்டன.

இத்தகைய சிறப்புமிக்க புதுக்கோட்டை நகரத்திற்கு மீண்டும் வருகை புரிந்த ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசிக்க வந்தவர்கள் யார்? மற்றவர்களுக்குக் கிட்டாத எந்த பேறு இவர்களுக்குக் கிட்டியது?

"அகம்பார்த்து நல்லருள் நல்கியே அன்பர்
முகம்பார்த்துக் கார்முகில் என்றே பொழியும்
கருணை மழையே! உனையன்றி வேறோர்
அருள்தரும் தெய்வமும் உண்டோ ? "

அரிமழம் ஒரு அழகிய கிராமம். புதுக்கோட்டையில் இருந்து 10மைல் தொலைவில் தென்கிழக்கில் உள்ளது.

அரிமழத்தின் வனப்பைப்பற்றி 'அரிமழம் மீனாக்ஷி அம்மன் பிள்ளைத்தமிழ்' பாடல்களிலும், 'அரிமழம் ஸ்தல புராணம்' பாடல்களிலும் காணலாம்.

அன்றைய அரிமழத்தின் அழகு இந்நூல்களின் பாடல்களில் வெளிப்பட்டன.

அந்நகரின் தனவணிகர் குடும்பத்தைச் சேர்ந்தவர் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள். அவருடைய புதல்வர் சிவராமன் செட்டியார்.

செல்வச் செழிப்புமிக்க குடும்பம். பெரும் தனவந்தர்.

நகரத்தார் பெருமக்களுக்கு சைவமும், தமிழும் இரண்டு கண்களுக்கு ஒப்பானவை. அவ்வழியில் இயற்கையாகவே இவரிடம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இறைபக்தி இரத்தத்தில் ஊறி இருந்தது.

சிவபக்தியும், சிவசிந்தனையும் அவருடைய சித்தத்தில் நிறைந்திருந்தன. தயையும், கொடையும் நிரம்பிய பண்பினர்.

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்று
ஐம்புலத்தார் ஓம்பல் தலை'

என்ற குறள்வழி வாழ்பவர். பெரியவர்களைப் பண்புடன் பணிந்து பேணும் பெருமை பெற்றவர்.

'செல்விருந்தோம்பி வருவிருந்து' பார்த்திருக்கும் செம்மல்.

'ஊருணி நீர் நிறைந்தது' போல் இப் பேரருளாளரின் செல்வம் விளங்கியது.

ஸ்ரீஸ்வாமிகள் திருநெல்வேலியில் இருந்து புதுக்கோட்டை வந்திருக்கும் செய்தி கேள்விப்பட்டார். உடனே தன் நண்பர்கள் பழநியப்ப செட்டியார், புதுவயல் அழகப்ப செட்டியார், சத்திரம் சின்னையா செட்டியார் மற்றும் வைத்தியம் கிருஷ்ண ஐயர் ஆகியோருடன் அவரை தரிசிக்கப் புறப்பட்டு விட்டார்.

ஸ்வாமிகள் நிகழ்த்திய ஸூதசம்ஹிதை பிரவசனத்தை இவர்கள் செவிமடுத்தனர். அவர் சொல்லாற்றலில் மயங்கினர். புளகாங்கிதம் அடைந்தனர்.

ஒட்டுத்திண்ணைப் பரதேசியாரிடம், மஹாசந்நிதானத்தை நேரில் தரிசித்து உரையாட வேண்டும் என்ற அரிமழம் மெய் அன்பர்களின் விருப்பத்தைத் தெரிவித்தார் சிவராமன் செட்டியார்.

ஒட்டுத் திண்ணைப் பரதேசியார் ஸ்வாமிகளுடன் கலந்து பேசி, அவரின் ஒப்புதலைப் பெற்றார்.

அரிமழத்திலிருந்து வந்த பெருமக்கள் ஸ்வாமிகளைப் பணிந்தனர். தங்களை அவருடைய சீடர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டினர். மஹாசந்நிதானமும் அவர்கள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். அரிமழம் அன்பர்களுக்கு சில மந்திர உபதேசங்கள் செய்தார். அன்று முதல் அவருக்குப் பணிவிடைகள் செய்து கொண்டு அங்கேயே தங்கிவிட்டனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இவ்வாறு மஹாசந்நிதானம் புதுக்கோட்டையில் தங்கி உபதேசங்கள் செய்து கொண்டிருந்த பொழுது தஞ்சையிலிருந்து வந்த ஓவியர் ஒருவர் தில்லை சிற்சபேசரின் திருநடனக் காட்சியை ஓவியமாய் வரைந்து எடுத்து வந்தார்.

'மஹாசந்நிதானம் அவர்களே !இந்தப்படம் பூஜைக்கு உரியதா ?உரியது எனில் தாங்கள் ஏற்றுக்கொண்டு அடியவனுக்கு அருள்புரிய வேண்டும்.'

'ஆடல் பெருமானை அருமையாக வரைந்துள்ளீர்கள் இது பூஜை செய்வதற்கு உகந்த படமே. யாம் ஏற்றுக் கொண்டோம். உங்களுக்கு எமது பரிபூரண ஆசிகள்.'

ஸ்வாமிகளின் திருவுளக் கருத்தை அறிந்து கொண்ட சிவராமன் செட்டியார் அப்படத்திற்கு உரியவிலை கொடுத்தார்; ஸ்வாமிகளிடம் சமர்ப்பித்தார்.

தில்லைநாதன் திருவுருவப்படத்தை திருநெல்வேலி பஜனை மடத்தில் ஸ்தாபிதம் செய்யத் திருவுளம் கொண்டார்.

அடியவர் சிதம்பரம்பிள்ளையை அழைத்தார்.

'திருநெல்வேலி சென்று இப்படத்தை பஜனை மடத்தில் பிரதிஷ்டை செய்து பூஜை, பஜனை முதலியவைகளை முறைப்படி செய்து வாருங்கள்' என்று ஆக்ஞாபித்தார். அவரும் அவ்வாறே செய்தார்.

இந்நிலையில் திருநெல்வேலியில் இருந்து ஸ்வாமிகளுடன் வந்திருந்த சீடர்கள் சேது யாத்திரை செல்லவேண்டும் என்ற வேண்டுகோளை மீண்டும் வைத்தனர்.

ஸ்வாமிகளும் அதே புன்னகையுடன் அவர்களின் கோரிக்கையை ஏற்றார்.

இந்தமுறை சேதுயாத்திரை எப்படி அமைந்தது ?

"செய்தவம்தான் எத்தனை செய்யினும் ஈசனை
மெய்வருந்தி கும்பிட்டு நோற்றாலும் எந்நாளும்
பாச வினைஅகற்றும் ஞானமதைப் பெற்றிட
ஆசானின் பாதமே காப்பு."



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



புதுக்கோட்டை நகரில் எழுந்தருளி இருந்த ஸ்வாமிகளை மன்னர் ராமச்சந்திர தொண்டைமான் அவர்களும், அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் தரிசித்து ஆசிபெற்றனர்.

மன்னரும் அவர் குடும்பத்தினரும் இசை, நாட்டியம், கூத்து ஆகிய கலைகளைப் பேணி வளர்த்தனர்.

சங்கீதத்தில் ஆர்வமுடைய மன்னரிடம் வையச்சேரி ராமசாமி சிவன், வைத்தியநாத சிவன் ஆகியவர்களின் திறமையைப் புகழ்ந்து முன்னர் ஒரு சமயம் கூறியிருந்தார் மஹாசந்நிதானம். அவர்களை அரசவைக்கு வரவழைத்து அவர்களின் கச்சேரியைக் கேட்க விருப்பம் தெரிவித்தார் மன்னர்.

ராஜாங்க சிப்பந்திகள் வையைச்சேரி சென்று உரிய மரியாதைகளுடன் சகோதரர்களைப் புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு அழைத்து வந்தனர்.

தர்பார் கூடியது. நடுநாயகமாக மஹாசந்நிதானம் வீற்றிருந்தார்.

மன்னர், அரச குடும்பத்தினர், இசைவிற்பன்னர்கள், இசை ரசிகர்களால் மண்டபம் நிரம்பி வழிந்தது.

வையச்சேரி சகோதரர்கள் ஸ்ரீஸ்வாமிகளின் பாதங்களில் பணிந்து ஆசிபெற்றனர்.

இசைக் கச்சேரி தொடங்கியது. முறைப்படி கீர்த்தனம், ராகம், தானம், பல்லவி ஆகியவற்றை யாவரும் வியக்கும்படி பாடினார்.

புதுக்கோட்டை சமஸ்தானத்து ஆஸ்தான வித்வான்களாக விளங்கிய வீணை சுப்புகுட்டிஐயர், வீணை சுப்பையர் இருவரும் ஸ்வாமிகளையும், மன்னரையும், சபையினரையும் வணங்கி வைத்தியநாத சிவன் அவர்களைப் பாராட்டிப் பேசியபின் இந்த வேண்டுகோளை வைத்தனர் :

'தஞ்சைத் தரணியின் அரசர் சகாராம் சாகேப் அரசவையில் பாடி அரங்கேற்றிய எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகமாலிகையைக் கேட்க அனைவரும் விரும்புகிறோம்.'

வைத்தியநாத சிவன் அவர்களுக்கு நல்ல சாரீரச் சிறப்பும், இசைக்கு இன்றியமையாத ராக, தாள இலக்கணப்பயிற்சியும், பயிற்சிக்குத் தக்க அறிவும், அறிவிற்குத் தக்க கேள்வி ஞானமும்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அதற்கு இணையாக உயர்தரக் கற்பனயும் இறையருளாலும், குருவருளாலும் அமையப் பெற்றிருந்தன.

சிவன் அவர்கள் முறைப்படி கீர்த்தனம், ராகம், தானம், பல்லவி, நிரவல், ஸ்வரம் ஆகியவற்றைப் பாடி முடித்தபிறகு மேளகர்த்தா ராகங்களை முழுவதும் பாடுவதென்றால் மேலும் அதிக நேரம் ஆகும். எனவே அதைச் சுருக்கமாகப் பாடக்கருதினார்.

ஆதிதாளம் ஒன்பது ஆவர்த்தனத்துக்குள் அழகுறப்பாடித் தன் திறமையை நிரூபித்தார்.

(சங்கீத சாஸ்திரத்தில் தேர்ந்த சான்றோர்கள் சிலர் சரிதத்தைத் தொடர்ந்து படித்து வருகின்றனர். அவர்களுக்காக 'சங்கீத உலகில் மகாவைத்தியநாத சிவன் 'என்ற நூலில் உள்ள தகவல்:ஆதிதாளம் என்பது எட்டு அக்ஷரம் உடையது. இது சதுச்ரஜாதி திரிபுடை தாளமாகும். ஒவ்வொரு அக்ஷரத்திற்கும் ஒரு மேளகர்த்தா ராகம் அமைந்து வரும். ஒரு ஆவர்த்தனமாகிய எட்டு அக்ஷரத்திற்குள் கனகாங்கி என்ற ராகம் முதல் தோடி என்ற ராகம் வரை எட்டு மேளகர்த்தா ராகங்கள் வருவது போல் கற்பனை செய்தார். அவ்வாறு ஒன்பது ஆவர்த்தனத்தனத்துள் (9x8=72) எழுபத்திரண்டு ராகங்களும் அடங்கும்படியான வியத்தகு செயலைச் செய்தார். ஓர் அக்ஷரத்துக்குள் ஒரு மேளகர்த்தா ராகம் அடங்குவதற்காக ஒரு அக்ஷரத்திற்குப் பதினாறு களை வருமாறு தாளத்தை அமைத்துக் கொண்டார்.இந்த மேளராகமாலிகையிலே ராகத்தின் பெயர் மட்டுமே பொருளமைதியுடன் வரப்பெற்று அந்த ராகத்தைப் புலப்படுத்தியது.')

இவ்வாறு உடனடியாகப் பாடுவதற்கு அவரிடம் நிரம்பி இருந்த மேலே கூறிய சிறப்பம்சங்களே காரணமாகும்.

அரசரும், சங்கீத சாஸ்திரம் அறிந்த சம்பன்னர்களும், புலவர்களும், ரசிகர்களும் பெரு மகிழ்வும்,வியப்பும் கொண்டு அவரைப் புகழ்ந்து கூறினர்.

அரசர் சிவன் சகோதரர்களுக்குத் தக்க வெகுமதிகள் அளித்துக் கௌரவப்படுத்தினார்.

ஸ்ரீஸ்வாமிகளிடம் ஆசிகளைப் பெற்றுக்கொண்டு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வையச்சேரி திரும்பினர் சிவன் சகோதரர்கள்.

அடுத்தநாள்.........

சீடர்களின் வேண்டுகோளை ஏற்று ராமேஸ்வரம் செல்லத் தீர்மானம் ஆயிற்று.

மஹாசந்நிதானம் குழுவினர் ராமேஸ்வர யாத்திரை செல்வதற்கு இரண்டு கூண்டுவண்டிகளை ஏற்பாடு செய்தார் சிவராமன் செட்டியார். மற்ற அன்பர்கள் வழிநடைக்குத் தேவையான பொருட்களைச் சேகரித்தனர். அனைத்தையும் சரிபார்த்த பின்னர் ஸ்ரீஸ்வாமிகளிடம் சென்றனர்.

அவரைப் பணிந்து கூறினர் : 'சேது யாத்திரைக்கு வேண்டிய யாவும் சித்தமாய் உள்ளன.'

ஸ்ரீஸ்வாமிகள் ஒருவண்டியில் ஏறி அமர்ந்தார். சீடர்கள் மற்றொரு வண்டியில் அமர்ந்தனர். ஏனையோர் பாதயாத்திரையாக வண்டிகளைத் தொடர்ந்து சென்றனர்.

இருட்டிய சற்று நேரத்தில் யாத்திரை ஆரம்பித்தது.

காளைகளின் கழுத்தில் கட்டிய மணிகள் 'ஜல்ஜல்' என்று ஒலி எழுப்ப வண்டிகள் நிதான நடையில் சென்றன.

சீடர்களின் வண்டி முன்னாலும்,ஸ்வாமிகள் பயணித்த வண்டி பின்தங்கி மெதுவாகவும் சென்றுகொண்டிருந்தன.

கிருஷ்ண ஐயர் நல்ல ஞானஸ்தர். மருத்துவத்துடன் சங்கீதத்திலும் ஈடுபாடு கொண்டவர்.சிறந்த குரல்வளம் அமைந்தவர். அவர் பஜனைப் பாடல்களையும், கீர்த்தனைகளையும் பாடிக் கொண்டு வந்தார். அதனால் அவருடன் நடந்து சென்றவர் களுக்கு நடையின் களைப்புத் தெரியவில்லை. ஸ்வாமிகளும் அவர் பாடுவதை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தார். அப்படியே கண் அயர்ந்தார்.

ஸ்வாமிகள் உறங்கியது அறிந்து இந்த கோஷ்டியினர் அதிகம் இடைவெளிவிட்டு மெதுவாகப் பேசிக்கொண்டு பின்னால் நடந்து வந்தனர்.

யாத்திரை கோஷ்டி திருமயத்தை நெருங்கியது.

நன்கு இருட்டி விட்டது. வானமும் இருண்டு கொண்டு வந்தது. சீடர்கள் அமர்ந்திருந்த வண்டி, ஸ்வாமிகள் அமர்ந்து வந்த



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வண்டியைவிட ஒருமைல் தொலைவு முன்னால் சென்று கொண்டிருந்தது.

போர்வையைப் போர்த்திக் கொண்டு ஸ்வாமிகள் திடீரென முதலில் சென்றுகொண்டிருந்த வண்டியின் எதிரே நின்றார். வண்டியை நிறுத்தினார்.

'வண்டியைத் திருப்பு. மேலே போகவேண்டாம். புதுக்கோட்டைக்குத் தாமதியாது போ' என்று உத்தரவிட்டார். அரைகுறைத் தூக்கத்தில் இருந்த சீடர்களுக்கு 'மஹாசந்நிதானம் ஏன் வண்டியை மீண்டும புதுக்கோட்டைக்குப் போகச் சொல்கிறார்' என்பது விளங்கவில்லை.

ஸ்வாமிகள் உத்தரவை மீற முடியுமா என்ன? வண்டி புதுக்கோட்டை மார்க்கத்தில் திரும்பியது.

ஒருசீடர் முன்னே ஓடி ஸ்வாமிகள் பயணித்த வண்டி ஓட்டுபவரை அணுகினார். புதுக்கோட்டைக்குத் திரும்பிப்போக ஸ்வாமிகள் உத்தரவாகி இருப்பதைத் தெரிவித்தார்.

அவர். குழப்பம் அடைந்தாலும் மறுபேச்சுப் பேசாமல் புதுக்கோட்டை நோக்கி வண்டியைத் திருப்பினார்.

சேது யாத்திரையில் ஏன் இந்த திடீர் மாற்றம்?

"புள்ளுறையும் சோலையில் வண்ண மயிலாடும்
கள்ளுறையும் பூங்கொடியில் வண்டுகள் பாடிடும்
பூங்கமல வாவியுள் மீன்கள் விளையாடும்
பூமகள் நாடிடும் ஊர்."

இரண்டு கூண்டு வண்டிகளும் இரவின் நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு, காளைகளின் 'ஜல்ஜல்' ஒலியுடன் புதுக்கோட்டை நோக்கிப் பயணித்தன.

குளிர்ந்த காற்று இதமாக வீசிக்கொண்டிருந்தது. ஸ்வாமிகளின் வண்டியைப் பின் தொடர்ந்து பாதயாத்திரையாக வந்து கொண்டிருந்த நண்பர்களும் குளிர்ந்த சீதோஷ்ண நிலையை அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

கூண்டு வண்டியில் சற்றே கண்ணயர்ந்திருந்த ஸ்வாமிகள்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கண்மலர்ந்தார். வண்டியின் பின்னால் நடந்து வந்து கொண்டிருந்த கிருஷ்ண ஐயரை அழைத்தார்.

'நாம் காரைக்குடியை அடைந்து விட்டோமா?' என வினவினார்.

'காரைக்குடியா? நாம் மஹாசந்நிதானத்தின் ஆக்ஞைப்படி மீண்டும் புதுக்கோட்டை நோக்கியல்லவா சென்று கொண்டிருக் கிறோம். புதுக்கோட்டை இன்னும் ஐந்துகல் தொலைவில் இருக்கிறது' பணிவுடன் பதில் பகன்றார் பக்தர்.

'யான் வண்டியை விட்டுக் கீழே இறங்கவே இல்லையே! அப்படியானால் உங்களுக்கு வண்டியைத் திருப்பச் சொல்லி உத்தரவு இட்டது யார்?'

என்று கேட்டது ஒன்றும் தெரியாதது போல், எல்லாம் தெரிந்த அந்த பரப்ரும்மம்.

இதற்குள் ஸ்வாமிகள் வண்டியை விட்டு இறங்கவே இல்லை என்ற செய்தி அனைவருக்கும் பரவியது.

வண்டிக்காரரைக் கேட்டனர்.

'என்ன சாமிங்களா! நம்ம ஸ்வாமியை எனக்குத் தெரியாதா? இப்பப் போட்டிருக்கிற இதே போர்வையைப் போத்திக்கிட்டு வந்துதானே எங்கிட்ட வந்து சொன்னாங்க' வண்டியைத் திருப்பு. புதுக்கோட்டைக்குப் போ'ன்னு.'

அந்தவண்டிக்காரர் மிகக் கொடுத்து வைத்தவர்.

சிவபிரானே அவரிடம் ஸ்ரீஸ்வாமிகள் உருவத்தில் வந்து பேசியுள்ளார். இதைவிட வேறு பேறு என்ன வேண்டும் அவருக்கு.

ஸ்வாமிகளுக்காக தாமிரபரணி நதிக்கரையில் கைகள் நீட்டி மூன்று கவளம் பிக்ஷை ஏற்றுக் கொண்டார்.

திருப்பத்தூரில் பரிசாரகராக மண்ணில் நடந்து வந்து

ஆறுகட்டி அன்னம் அளித்து அன்பர்களின் பசிப்பிணி நீக்கினார்.

இன்றோ மஹாசந்நிதானம் உருவில் மஹாதேவன் உயிர்களைக் காத்துள்ளார்.

வண்டிகள் எந்த இடத்திலிருந்து திருப்பப்பட்டனவோ அந்த இடத்திலிருந்து சிறிது தொலைவிற்கு அப்பால் வலிய சூறைக்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



காற்றடித்து, பெரும் புயலாக வீசிப் சொல்லொணா சேதத்தை விளைவித்திருந்தது. பெரியபெரிய மரங்களெல்லாம் வேரோடு சாலையில் விழுந்திருந்தன. அனேக வண்டிகள், ஆடு மாடுகள் முதலியன சேதமாயின. வண்டிகள் திரும்பாமல் போயிருந்தால் இந்தப் புயலுக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கும்;பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கும்.

இந்த செய்திகளை மறுநாள் சில பயணிகள் மூலம் அனைவரும் அறிந்து கொண்டனர்.

தமது திருஅவதாரமாகிய ஸ்வாமிகளையும் மற்ற அன்பர்களையும் காக்கவே, ஸ்வாமிகள் போல் வேடம் தரித்து வந்தது நாடகதாரியான அந்த நாயகனே என்பதை சீடர்களும் ஏனையோரும் அறிந்து கொண்டனர். பரம்பொருளாம் அப்பரமசிவனை வியந்து போற்றினர். சீடர்களும் இதனால் பெருமிதம் கொண்டார்கள்.

ஆனால் ஸ்ரீசுந்தர ஸ்வாமிகள் குழுவினரின் சேது யாத்திரை இரண்டாம் முறையாகவும் தடைப்பட்டுவிட்டது என்னவோ உண்மைதான். சேது யாத்திரை இம்முறை புதுக்கோட்டை யாத்திரையாகவே முடிந்தது.

இந்தத் திருவிளையாடலுக்கும் எதேனும்காரணம் இல்லாமலா இருக்கும்! அது என்ன ?

“வளமான சீர்மிகு ஊர்மேவி நல்லோர்
அளவிலா நல்லருள் பெற்று உயர்வான
உன்பதம் போற்றியே உய்ந்திட எந்நாளும்
நின்னையே வேண்டினேன் நான்.”

சேது யாத்திரை இரண்டாவது முறையாகவும் தடைப்பட்டதில் சீடர்களுக்கு மனதிற்குள்ளே சிறிது வருத்தம்தான். ஆயினும் அவர்கள் அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

புதுக்கோட்டையை அடைந்ததும் ஸ்வாமிகள் உடனடியாக திருநெல்வேலி செல்லவேண்டும் என்று சித்தம் கொண்டார்கள். அங்கே இருந்து யார் அழைத்தார்களோ ?

அரிமழம் அன்பர்கள் ஸ்ரீஸ்வாமிகளிடம் ஊருக்குச் செல்ல உத்தரவு பெறக் காத்திருந்தனர். மஹாசந்நிதானம் அவர்கள்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உத்தரவு வழங்கினார்கள்.

புறப்படும் முன்னதாக சிவராமன் செட்டியார் அவர்கள், ஸ்வாமிகளின் பாதம் தொழுது

“மஹாசந்நிதானம் அவர்கள் அரிமழம் வருகை புரிந்து எங்களை ஆட்கொண்டு அருளவேண்டும் ”என்றார்.

“எம் ஊருக்கு எம்மை அழைக்கிறீர்.

திருநெல்வேலிப் பகுதியில் பயணம் முடித்துக் கொண்டு வருகிறோம்.”

மஹாசந்நிதானம் இவ்வாறு கூறியதன் பொருள் யாதோ? அவரைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்!

ஸ்வாமிகள் புதுக்கோட்டையிலிருந்து நேராக கோடகநல்லூர் வந்தார்கள்.

பக்கத்தில் உள்ள பத்தமடையில் அப்பொழுது ஒரு நிகழ்வு.

அந்த கிராமமே பரபரப்பாய் இருந்தது.

யக்ஞேஸ்வரன் என்ற ஐந்து வயது சிறுவனைக் காணவில்லை. காலையில் நண்பர்களுடன் விளையாடப் போனவன் மாலை ஐந்து மணிவரை வீடு திரும்பவில்லை. நண்பர்களுடன் ஏதேனும் ஒரு வீட்டில் விளையாடிக் கொண்டு இருப்பான் என்று பெற்றோர்கள் நினைத்தனர். நேரம் செல்லச் செல்ல பையன் வரவில்லையே என்ற கவலை மெல்ல எட்டிப் பார்த்தது. பெற்றோர்களுக்குப் பையனின் நினைவு அதிகரித்து வந்தது. தெருவெல்லாம் தேடினர். வீடு வீடாக விசாரித்தனர். கிடைக்க வில்லை. அவனுடன் விளையாடச் சென்ற பையன்களிடமும் துருவித் துருவிக் கேட்டனர். ஆனால் பையனைப்பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. நேரமோ இருட்டிக் கொண்டு வந்தது.

சிலர் பத்தமடையிலிருந்து கோடகநல்லூர் செல்லும் பாதையிலும், வேறு சிலர் தாமிரபரணி ஆற்றுக்குச் செல்லும் வழியிலும், மற்றும் சிலர் அடர்த்தியாக இருள் அடர்ந்து நிற்கும் மருதமரச் சாலையிலும் தேடிச் சென்றனர். பயன் ஏதுமில்லை. பையன் கண்ணில்படவில்லை.

அவரவர் வீட்டுக் கிணறுகள், ஊரிலுள்ள குட்டைகள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கன்னடியன் வாய்க்கால் என்று அனைத்து இடங்களிலும் தேடினர். பையன் நாள்தோறும் சிவன்கோயில் சென்று வழிபடும் பழக்கமுடையவன். எனவே ஒவ்வொரு சந்நிதி,மடப்பள்ளி,கோயில் கிணறு என்று எங்கேயும் தேடினர். பலன் இல்லை.

நேரமோ நன்றாக இருட்டி விட்டது.

பெற்றோர்களும், உறவினர்களும் மனம் நொந்து பிதற்றி புலம்பிக் கொண்டிருந்தனர். தாய், தந்தையின் வயிற்றை ஏதோஒரு சங்கடம் பிசைய சொல்லவொண்ணாத் துயரத்தில் ஆழ்ந்தனர். எவ்வாறோ அன்றிரவு பெரும் மனக்கிலேசத்துடன் நத்தையாய் ஊர்ந்தது.

பொழுது விடிந்தது.

பெற்றவர்களின் துயரம் விடிந்ததா ?

"செம்மனத்தோய் தண்ணிளம் புன்னகையால் மாந்தரின்
தம்மனம் தன்பால் இழுத்தாய் அறம்என்னும்
நல்வழி காட்டி அருளினாய் நல்லறத்தான்
சொல்லே எமக்குத் துணை. "

நல்ல வெளிச்சம் பரவுவதற்கு முன்னரே ஊரினர் யக்னேஸ்வரனைத் தேட ஆரம்பித்தனர். இந்த விஷயத்தில் ஊர்க்காரர்கள் ஒன்றுபட்டு தங்கள் சொந்த அலுவல்களைத் துறந்துவிட்டு ஐந்து வயதுக்குட்பட்ட பாலகனைத் தேடுவதில் முனைப்பாய் இருந்தனர்.

(சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை கிராமப் பகுதிகளில் ஒரு வீட்டில் நிகழும் நல்லது, கெட்டது; சுகம், துக்கம் எதுவும் தங்கள் வீட்டில் நடப்பதாகக் கருதி உதவிக்கு உடனடியாக விரையும் பழக்கம், பண்பாடு நிலவி வந்தது.)

பத்தமடை இந்தமாதிரியான சோகத்தில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த நேரத்தில்தான் சுந்தர ஸ்வாமிகள் கோடகநல்லூர் எழுந்தருளினார்கள். பத்தமடையில் நடந்த இந்தத் துயரமான நிகழ்வின் செய்திகளும், செயல்களும் இன்னும் கோடக நல்லூருக்கு எட்டவில்லை.

பத்தமடையில் சிறுவனைத் தேடும் வேலை மும்முரமாக



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நடைபெற்றுக் கொண்டிருந்தது.

காலை சுமார் எட்டுமணி.

சேரன்மாதேவி செல்லும் வண்டிப்பாதையின் வழியே ஒருவர் கிராமத்தின் தென்பக்கம் ஓடுகின்ற சிறு வாய்க்காலின் ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்தார். அவர் கண்களில் நீரின் கீழே ஏதோ உடல் கிடப்பதுபோல் நிழலாக ஒரு உருவம் தெரிந்தது.

சந்தேகப்பட்ட அவர் வாய்க்காலில் இறங்கினார்.

அது..........

ஐந்து வயது பாலகன் யக்னேஸ்வரனின் உயிரற்ற உடல். அந்த சடலம் நீரின்மேல் மிதப்பதற்குரிய நிலையில் இருந்தது.

தொலைவில் நடந்து சென்று கொண்டிருந்த சிலரைக் கூவி அழைத்தார். அவர்களும் அருகில் விரைந்து வந்தனர். சடலத்தை நீரினின்று வெளியே எடுத்தனர்.

இது விஷயம் ஊருக்குள் எட்டியது. அனைவரும் அடைந்த துயரத்திற்கு அளவே இல்லை.

பெற்றவர்களுக்கு ஒரே பிள்ளை. செல்லமாகச் சீராட்டி, பாராட்டி வளர்த்த பிள்ளை. அருமையாகவும், பெருமையாகவும் கொண்டாடப்பட்ட பிள்ளை. பையன் உடல் கிடைத்தது அறிந்து தாய், தந்தை அலறி அடித்துக்கொண்டு ஓடிவந்தனர். பாலகனை மடியில் கிடத்திக் கொண்டு கதறி அழுதனர்.

பாலகன் மாண்டுவிட்டான். ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டவன் மீள்வானா என்ன? உறவினர்கள் துயரத்தில் செய்வதறியாது தவித்தனர்.

பையன் இறந்து விட்டான்; இனித் திரும்பப் போவதில்லை. நேரத்தைக் கடத்துவதில் பயன் ஏதும் இல்லை என்று புதல்வனைப் புதைப்பதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டனர் ஊர் மக்கள்.

இந்த சமயத்தில் சுந்தரஸ்வாமிகள் தற்செயலாக (!) கோடகநல்லூரில் இருந்து பத்தமடை செல்ல அந்த வழியில் வந்தார்.

அங்கே சிறுவன் யக்னேஸ்வரன் நீரில் முழுகி இறந்தவிட்ட செய்தியைத் தெரிவித்தனர். ஸ்வாமிகள் மிகவேகமாக நடந்து அந்த



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இடத்தை அடைந்தார்.

தாய் தந்தையரின் கதறல் சகிக்கவொண்ணாததாக இருந்தது. உறவினர்கள், ஊரார்களின் துக்கத்தையும் கண்டார்.

சிறிது நேரம் அசைவற்று நின்றார்.

பின்னர்....திருவாய் மலர்ந்தருளினார்.

அதைக்கேட்ட அங்கிருந்தவர்கள் அதிர்ந்தனர்.

அவர்கள் அனைவரும் அதிர்ச்சி அடையும் வண்ணம் ஸ்ரீஸ்வாமிகள் என்ன கூறினார் ?

"தோகை மயிலனைய பார்வதியின் பாகத்தார்
வாகை மலர்சூடும் வேலவனின் அத்தன்
மணிகண்டன் கங்கை அணிந்தவன் பொற்றாள்
பணிவதே எந்தன் கடன்"

'ஏன் அழுகின்றீர்கள் ? எவரும் துக்கம் கொண்டாட வேண்டாம். என்ன நடந்து விட்டதென்று அனைவருக்கும் இத்தனை சோகம் ? யாரும் விசனிக்க வேண்டாம். பையன் இறக்கவில்லை. உயிருடன்தான் இருக்கிறான். எவரும் யாதொரு சப்தமும் செய்யாமல் அமைதியாய் இருங்கள்.'

யக்னேஸ்வரனின் பெற்றோரைப் பார்த்து கனிவான குரலில் கூறினார் மஹாசந்நிதானம்.

பெற்றவர் மனது இந்த சமாதான வார்த்தைகளை ஏற்குமா ? ஐந்து வயது பாலகனை இழந்துவிட்ட தாய்தந்தையரின் கதறலைக் கட்டுப்படுத்துவதற்காகக் கூறப்பட்ட ஆறுதல் வார்த்தைகளாகவே இதைக் கருதினர். பெற்றவர்களும், உற்றவர்களும் அழாமல் இருப்பது சாத்தியமாகுமா ? துக்கம் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கும்வரை அலறித் தீர்ப்பது ஒன்றுதானே வடிகால்.

ஸ்வாமிகள் இவ்வாறு கூறியும் அந்த இடத்திலே சப்தமும் அடங்கவில்லை, ஓலமும் ஓயவில்லை.

ஸ்வாமிகள் பார்த்தார்.

பையனை (பையனின் உடலை) தோளில் போட்டுக் கொண்டார். 'யாரும் என்னைத் தொடர்ந்து வரவேண்டாம்' என்று கட்டளை இட்டார். விடுவிடுவென வேகமாய் நடந்தார். அவருடைய



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வேகத்திற்கு யாரும் ஈடுகொடுக்க முடியவில்லை. திருநெல்வேலி செல்லும் வண்டிப் பாதையில் விரைந்தார். அனைவரின் பார்வையிலிருந்தும் மறைந்தார். சிலர் அவரைப் பின்தொடர முயன்று தோற்றனர். மிக வேகமாக ஓடிவந்த சிலரை ஸ்வாமிகளுடன் வந்த நாராயணசிவன் தடுத்து நிறுத்தினார். அவரை மீறி முன்னால் சென்று ஸ்வாமிகளைப் பின்தொடர எவராலும் முடியவில்லை.

ஸ்வாமிகள், தோளில் சாத்தியிருந்த யக்னேஸ்வரனுடன் மரங்கள் அடர்ந்த காட்டுப்பாதையில் நுழைந்தார். அங்கிருந்த கல் மண்டபத்தை அடைந்தார்.

அந்தக் காலத்தில் பத்தமடையிலிருந்து சேரன்மாதேவி செல்லும் இடையிலேயும், திருநெல்வேலிக்குப் போகும் இடையி லேயும் திருடர்களும், வழிப்பறிக் கொள்ளையர்களும் மிக அதிக அளவில் இருந்தனர். பயணிகள் பயத்துடனேயே இவ்வழியில் செல்வார்கள். இருட்டிய பிறகு யாரும் வழிநடையாகவோ, வண்டி கட்டிக்கொண்டோ பிரயாணம் செய்வது இல்லை.

எனவே இரவில் பயணிகள் பத்திரமாகத் தங்கியிருக்க அந்தப் பகுதி மக்கள் ஒரு கல்மண்டபம் கட்டி இருந்தனர்.

அந்த மண்டபம் ஊரை அடுத்தும், வண்டிப்பாதையை அடுத்தும் அமைந்திருந்தது. நம் சரிதம் நடந்த காலத்தில் அம்மண்டபத்தைச் சுற்றி காடுபோல் மரங்கள் அடர்ந்திருந்தன. பகல் நேரங்களில் கூட மக்களின் நடமாட்டம் இருக்காது.

அந்த மண்டபத்தில் யக்னேஸ்வரனின் உடலைக் கிடத்தினார்.

நேரம் காலை எட்டரை மணி.

அந்த இடத்தில் ஒரு ஈ காக்கை கூட இல்லை. அடர்ந்து நெருங்கிய வேப்பமரங்களிலிருந்து குளுகுளு காற்று வீசியது; உடலை இதமாகத் தழுவிச் சென்றது.

அந்த அமைதியான சூழலைத்தான் ஸ்வாமிகள் விரும்பியது.

அந்தப் பகுதி மக்கள் மஹாசந்நிதானம் அவர்களின் மகிமையிலும், சக்திப் பிரவாகத்திலும், அவர் கூறும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உபதேசங்களிலும் ஆழ்ந்த பற்றுடையவர்கள்தாம், நம்பிக்கை உள்ளவர்கள்தாம்.

ஆயினும் ஸ்வாமிகளைத் தொடர்ந்து செல்ல முடியவில்லேயே என்ற ஏக்கமும் இருந்தது. அவர்களின் உடல் இங்கேயும், மனம் ஸ்வாமிகளிடமும் இருந்தன.

அங்கே கல்மண்டபத்தில் நடந்த அற்புத நிகழ்வு என்ன?

“வான்புகழ் கொண்ட அரிமழம் ஊரினில்
தேன்சுவை ஊறிடும் தீந்தமிழில் செப்பினாய்
அன்பர்கள் உய்ய நிஜானந்த வேதத்தை
நன்மை மிகவும் பொலிய.”

வாய்க்கால் கரையில் இருந்த பெற்றோர்களும், உறவினர்களும், ஊர்க்காரர்களும் மிகுந்த கவலையுடன் ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் பையனைத் தூக்கிச் சென்ற பாதையை வழிமேல் விழிவைத்துப் பார்த்துக்கொண்டேஇருந்தார்கள்.

“ஸ்வாமிகள் பையனை எடுத்துச் சென்று ஒருமணி நேரத்திற்கு மேலே ஆகிவிட்டது.

அவரால் என்ன செய்ய முடியும்? ஜலத்தில் விழுந்து இறந்து போனவனை எப்படிப் பிழைக்க வைக்க முடியும்?

அவர் என்ன சர்வேஸ்வரனா? இறந்தவர்களைப் பிழைக்க வைக்க முடியும் என்றால் இங்கேயே பிழைக்க வைக்கலாமே. இறந்தவனுக்கு எப்படி உயிர் மீண்டும் வரும்?

இந்த முத்திய கலிகாலத்தில் மாண்டவர் மீளும் அற்புதம் நடைபெறுமா?

என்ன தைரியத்தில் யாரையும் அழவேண்டாம் என்று சொன்னார்? எவரையும் பின்னால் வரவேண்டாம் என்று ஏன் தடுத்தார்?

இது என்ன அதிசயம்? என்னதான் நடக்கப் போகிறது? ஒன்றுமே புரியவில்லையே!

பையனைத் தோளில் போட்டுக்கொண்டு கண்காணாத இடத்திற்கு ஏன் செல்ல வேண்டும்?எதற்காக எடுத்துச் சென்றார்?

யாராவது அவர் போனவழியே துணிந்து சென்று என்னதான்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நடக்கிறது என்று பார்த்து வரலாமா ?

நன்மை பயக்கும் காரியமென்றால் இங்கேயே அதை நடத்திக் காட்டலாமே !

யக்னேஸ்வரனோ பெற்றவர்களுக்கு ஒரே பிள்ளை. தலைச்சன் பிள்ளை. ஒருகால் பில்லி, சூனியம் செய்வதற்கு இறந்து போன இந்தக் குழந்தையைப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறாரோ ?

அவர் நல்லமுறையில் மந்திரோபதேசம் செய்வார். சூதசம்ஹிதையை விளக்கமாக உபன்யாசிப்பார்.

சிவவழிபாடு, பஜனை ஆகியவற்றைப் பக்தி ரசம் ததும்ப பாவபூர்வத்துடன் உணர்ச்சி ததும்ப நடத்துவார். தமிழிலும், வடமொழியிலும் பாண்டித்யம் பெற்றவர். அனைத்து சாஸ்திரங் களிலும் மேதாவிலாசம் மிக்கவர். பண்டிதர்களின் ஐயங்களைத் தீர்க்கும் பரந்த ஆழமான அறிவுள்ளவர். சில சித்துக்கள் கைவரப் பெற்றவர்.

பத்தமடையில் இருந்தபோது சிலருக்கு நல்வாக்கு கூறி அதன்படியே நன்மைகள் நடந்து உள்ளன.

வெளியூர்களிலும் அற்புதங்கள் தடத்தியதாக செவிவழிச் செய்திகள் வந்துள்ளன. அவற்றை நாம் நேரில் கண்டோம் அல்ல. இவைதாமே அவரைப்பற்றி நாம் அறிந்தது.

ஒச்சமில்லாத (குறையில்லாத) இறந்த குழந்தையை வைத்துக் கொண்டு மாயாஜாலங்கள் செய்யப் போகிறாரா ? இதுபற்றி எல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோமே. அவரைக் குழந்தையை எடுத்துக் கொண்டு செல்ல அனுமதித்தது தவறோ ?

நாம் எங்கே அனுமதித்தோம். அவரன்றோ தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு வேகவேகமாகப் போனார். இது என்ன சோதனை ?

என்ன நடந்து கொண்டிருக்கிறது ? இன்னும் என்ன நடக்கப் போகிறதோ ?

குடும்பத்தினரின் துயரம் ஒரு சந்நியாசிக்கு எப்படித் தெரியும் ?

'சத்திரா போஜனா, மடா நித்திரா' என்று எங்கோ சாப்பிட்டு எங்கோ தூங்குபவர்தானே. குடும்பஸ்தர்கள் படும் அவஸ்தைகள் அவருக்கு என்ன தெரியும் ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



குழந்தைக்கு முறைப்படி செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகளைக் கூடச் செய்யமுடியாதபடி செய்துவிட்டாரே!....."

இவ்வாறெல்லாம் அங்கிருந்தவர்கள் சிந்தனைகள் ஓடிக் கொண்டிருந்தன. அனைவரும் குழப்பத்தில் ஆழ்ந்தனர் குறிப்பாக கடைசியாகத் தோன்றிய எண்ணத்தினால் ஆத்திரமும், அச்சமும் ஒருங்கே எழுந்தன.

பெற்றவர்கள், மற்றவர்கள் மேல் குறைசொல்ல முடியாது. அவரவர் இழப்பின் வேதனைக்குத் தக்கபடியும், அறிவின் வீச்சிற்கு ஏற்றபடியும் அவர்கள் சிந்தனையின் ஓட்டம் அமைந்தன.

நேரம் செல்லச் செல்ல பையன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கை குறைந்து அவநம்பிக்கை மேலெழுந்தது. அவர்களின் அழுகை குறைந்து ஆயாசமும், ஆத்திரமும் மிகுந்தன.

கல்மண்டபத்தில் கிடத்தப்பட்ட சிறுவன் என்னதான் ஆனான்?

"அனுபூதி மிக்க ரஸாயனம் தந்தான்
பனுவல் நிகர்த்தவோர் மஞ்சரி தந்தே
அருளினான் மானிடர் நற்பே றடைய
கருணையாம் கார்முகில் வேந்தன்."

ஸ்வாமிகளுக்கு, யக்னேஸ்வரனின் பெற்றோர்களாலும், உறவினர்களாலும், ஊரினராலும் இத்தகைய மானசீக 'அர்ச்சனைகள்' நடைபெற்றுக் கொண்டிருந்தன.

பழியும், அபவாதமும் யாரைத்தான் விட்டன?

கேட்டதை எல்லாம் அள்ளி அள்ளிக் கொடுக்கும் மஹாலக்ஷ்மியை மார்பினில் வைத்திருக்கும் மகாவிஷ்ணுவின் அவதாரமான கிருஷ்ண பரமாத்மாவையே ஸ்யமந்தகமணியைத் திருடிவிட்டார் என்ற அபவாதம் சூழவில்லையா?

ராமனையும் வாலியைக் கொன்றதால் 'வில்லறம் துறந்தான்' என்ற பழிவந்து எய்தவில்லையா?

பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ண பகவான் அருளியபடி ஞானிகளுக்கும், மகான்களுக்கும் இவ்வுலகில் எய்தவேண்டிய



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உறுதிப்பாடுகள் எவையும் இல.

இவ்வுலகினரால் அவர்கள் அடைய வேண்டிய பயனும் சிறிதும் இல்லை. அவர்கள் கடமையை செய்து கொண்டே இருக்கின்றனர். பழியும், பாவமும் அவர்களை அண்டாது. பாதிக்காது.

கல்மண்டபத்தில்.....

பாலகனை எடுத்துச் சென்ற மஹாசந்நிதானம் அவனை பஜனை மடத்தின் தரையில் கிடத்தினார்.

அருகில் இருந்த குட்டையில் இருந்து உள்ளங்கையில் நீரை எடுத்து வந்தார். மந்திர உச்சாடனம் செய்தார். அப்பையன் மீது அந்த நீரை (புரோக்ஷணம்) தெளித்தார்.

வீபூதியை எடுத்தார். மந்திரங்களை ஜபித்துக் கொண்டே அவன் சிரசிலிருந்து பாதம்வரை பூசினார். சிறிதுநேரம் சமாதி நிஷ்டையில் அமர்ந்தார்.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு.........

பையன் குடித்திருந்த நீரெல்லாம் பீச்சாங்குழல் நீரை பீச்சி அடிப்பதைப்போல் வாயிலிருந்து வெளியில் வந்தது. ஜலம் முழுவதும் வெளியான பின் சிறிது சிறிதாக மூச்சு வெளியே வரவும், உள்ளே போகவும் தொடங்கியது. ஜில்லிட்டிருந்த உடம்பில் சூடு மெதுவாக ஏறியது. கை, கால்களை லேசாக அசைத்தான். பின் கண்களை மெல்லத் திறந்தான். கைகளை ஊன்றி எழுந்து அமர்ந்தான். யக்னேஸ்வரனுக்கு சிலநொடிகளில் உடம்பில் நல்ல தெம்பு வந்துவிட்டது. ஸ்வாமிகளும் நிஷ்டை கலைந்து எழுந்தார்.

முழு சுரணை அடைந்த பையன் எழுந்து நின்றான்.

பெரியவர்களைக் கண்ட இடத்து வணங்க வேண்டும் என்ற வளர்ப்பு முறையின் நல்ல பழக்கத்தால் ஸ்வாமிகளைத் தரையில் விழுந்து நமஸ்கரித்தான்.

ஸ்வாமிகள் தம் விபூதிப்பட்டையிலிருந்து விபூதியை எடுத்தார். அவன் நெற்றியில் இட்டார். சிறிது விபூதியை அவன் வாயில் போட்டு உட்கொள்ளும்படி செய்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'அம்மாவைப் பார்க்கணும்.'

'சரி வா போகலாம்' ஸ்வாமிகள் சிரித்துக் கொண்டே எழுந்தார். உன்னால் நடக்க முடியாது. உன்னைத் தோளில் தூக்கிக் கொள்கிறேன் வா'

என்ன ஒரு கரிசனம்!

'எனக்குத் தெம்பு வந்துவிட்டது. என்னால் நடக்க முடியும். தினமும் கோயிலுக்கு அம்மாகூட நடந்துதான் போவேன்.'

வாஸ்தவம்தான். தெம்பு இல்லாதபோதுதானே ஆண்டவன் துணையைத் தேடுகிறோம்! அப்போதுதானே தேவைப்படுகிறது.

ஸ்வாமிகளின் கையைப் பிடித்துக் கொண்டான்.

அம்மாவிடம் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் குதித்து குதித்து நடந்து வந்தான்.

மிகவும் புண்ணியம் செய்த பாலகன். ஸ்வாமிகள் தம் தோளில் சுமந்த ஒரே பாக்கியவான் யக்னேஸ்வரன் மட்டுமே!

ஸ்வாமிகளின் கைகளைப் பற்றியபடி சிறுவன் நடந்து வருவது வாய்க்கால் கரையில் இருந்த அனைவரின் கண்களுக்கும் புலப்பட்டது.

அவர்களை பயம் பற்றிக் கொண்டது. எதனால் பயம்?

"செய்ய கமலத் திருவை வதிகின்ற
மெய்யன்பர் சூழ்நன் னகரில் மயிலன்ன
மாதர் மனம்மகிழ ஊர்தேடி வந்தநம்
நாயகன் பாதம் தொழுவோம்."

வாய்க்கால் கரையில் அனைவரும் புலம்பித் தவித்து சற்று ஓய்ந்த தருணத்தில் சற்றுத் தொலைவில் ஸ்ரீஸ்வாமிகள் நடந்து வருவது தெரிந்தது. அவரின் கையைப்பிடித்துக்கொண்டு துள்ளிக் குதித்து வரும் சிறுவன் யார்? யக்னேஸ்வரனா?

இது எப்படி சாத்தியம்? இறந்த பாலகன் எழுந்து வருவதாவது?

வருவது பேய், பிசாசாய் இருக்குமோ?—என்ற ஐயமும், பயமும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஒன்றாக எழுந்தன. அவர்கள் வாய்க்காலை நெருங்கி வரவர அவர்களின் சப்தநாடியும் ஒடுங்கி விட்டன.

பையனை அருகில் கண்டதும் பெற்றோர் 'ஓ' வெனக் கதறி அலறி விட்டனர். அப்பாலகனும் தாய், தந்தையரைக் கண்டதும் ஸ்வாமிகளைப் பிடித்திருந்த கையை விட்டு விட்டு 'அம்மா' என்று கத்தியபடி ஓடோடி வந்தான். தாயை இறுக்க அணைத்துக் கொண்டான். தாயாரோ இன்னது செய்கிறோம் என்று தெரியாமல் பையனை கட்டி அணைத்துக் கொண்டு 'என் செல்லமே,'என் தங்கமே' என்று அரற்றியபடி கன்னங்களில் மாறிமாறி முத்தமாரி பொழிந்தாள். தாயாரின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது.

பையனை இழந்து தவிக்கும்போது கூட இத்தனை அழுகை இல்லை. இறந்து பின் மீண்டு எழுந்து வந்த பையனைப் பார்த்ததும் தன் செயல்களை எல்லாம் இழந்து அதிகமாகக் கதறித் தீர்த்து விட்டாள். பையனை தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டாள்;

மேலே தூக்கிப் போட்டுப் பிடித்தாள்; கன்னத்தில் முத்தம் கொடுத்தாள்; 'ஏண்டா எங்களை இப்படிப் பயமுறுத்திட்டே' என்று கன்னங்களில் செல்லமாகத் தட்டினாள்; 'இனிமே தனியா எங்கேயும் போகாதே' என்று அறிவுரை கூறினாள்; 'பாரு, போட்டுண்டிருக்கிற சொக்கா ஈரமா இருக்கு. வீட்டுக்குப் போனதும் புது சொக்கா தரேன். போட்டுக்கோ!' என்று செல்லமாய்க் கொஞ்சினாள்.

துக்க மேலீட்டை நிறுத்தும் வழியறியாத தாயார் 'நீ எங்கே போனே? எப்படித் திரும்பி வந்தே? சொல்லு' என்று விம்மலின் ஊடே கேள்வி எழுப்பினாள்.

'நான் நண்பர்களோட விளையாடப் போனேனா? சாயந்தரம் ஆனதும் எல்லாரும் வீட்டுக்குப் போறோம்னு கிளம்பிட்டா. நானும் சாயந்தரம் ஆச்சு. சாயரக்ஷைக்குக் கோயிலுக்குப் போகணும்னு நினைப்பு வந்தது. இந்த வாய்க்கால்ல கைகால் அலம்பிண்டு வரலாம்னு இறங்கினேன்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அப்ப.........யாரோ என்னைத் தண்ணிக்குள்ளே புடிச்சு இழுத்த மாதிரி இருந்தது. 'மாட்டேன். மாட்டேன். வரமாட்டேன்.' அப்படின்னு சொல்லத் தோணித்து. ஆனா பேச முடியல்லே. காது, மூக்கு, வாய், தொண்டை எல்லா இடத்துலேயும் தண்ணிபோய் அடைச்சிடுச்சு. பேச முடியலே. மூச்சுவிட முடியலே. யாரோ கருப்பா ஒத்தன் இருட்டுல என்னத் தரதரன்னு இழுத்துண்டு போறமாதிரி இருந்தது. வழியெல்லாம் கல்லு, முள்ளு. காலெல்லாம் கல்லு குத்தி, உடம்பெல்லாம் முள்ளு கிழிச்சு ஒரேவலி; எரிச்சல். அதுக்கப்பறம் என்ன நடந்ததுன்னு தெரியல்ல. கண்ணை முழிச்சுப் பார்த்தா கருப்பா, குண்டா ஒத்தன் முன்னாலே நிக்கறேன். ரொம்ப பயமா இருந்தது. ஒரே இருட்டு.

அந்த நேரத்துல திடீர்னு வெளிச்சம் வந்தது. ஜிலுஜிலுன்னு காத்து வீசினது. அந்த இடம் பூரா வாசனயா இருந்தது. பாத்தா எம் பக்கத்துல நம்ம உம்மாச்சி மாமா. கருப்பா குண்டா இருந்தவன்கிட்ட கோபமா ஏதோ பேசினார். என்ன பாஷைன்னு தெரியலே. அப்புறம் உம்மாச்சி மாமா என் கையைப் பிடிச்சண்டு வெளியிலே வந்தா. வழியெல்லாம் பூவா கொட்டி இருந்தது; ரொம்ப வாசனையா இருந்தது; அழகா காத்து வீசினது; உடம்புல இருந்த காயமெல்லாம் காணாமப் போச்சு; மனசு ரொம்பத் தெம்பா இருந்தது. உம்மாச்சி மாமாவோட நடந்து வந்தது ரொம்ப சந்தோஷமா இருந்தது. எவ்வளவு நேரம் நடந்தோம்கிறது தெரியல்ல. அப்படியே தூக்கம் வந்தது. உம்மாச்சி மாமா என்னைத் தோள்ல போட்டுண்டு நடந்து வந்தார்.

கண்ணை முழிச்சுப் பார்த்தா கல்மண்டபத்துல படுத்துண்டிருக்கேன். உம்மாச்சி மாமா உக்காந்தபடியே கண்ணைமூடித் தூங்கிண்டிருந்தா. கொஞ்சம் நேரம் கழிச்சு உம்மாச்சி மாமா கண்ணைத் திறந்தா. உம்மாச்சி மாமாமவை கீழே விழுந்து நமஸ்காரம் செஞ்சேன். உம்மாச்சி மாமா உடம்பெல்லாம் விபூதி பூசிவிட்டார். வாயிலே போட்டு சாப்பிடச் சொன்னா. சாப்ட்டேன். உம்மாச்சி மாமாகிட்ட 'அம்மாகிட்டே போகணும்னேன் உம்மாச்சி மாமா என்னைத் தூக்கிண்டு வரேன்னார். நான்தான்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நடந்தே வரேன்னேன்.'

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பெற்ற வயிற்றில் பால்வார்த்தாற்போல் இருந்தது. உணர்வும், உணர்ச்சியும் எந்த நிலையை அடைந்தன என வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. வார்த்தைகளுக்கு இங்கு வேலையும் இல்லை; அர்த்தமும் இல்லை; அவற்றை எழுத்தில் வடிக்கவும் முடியாது.

அனைவரும் மஹாசந்நிதானத்தைத் தேடினர். அவர் யாரும் அறியாமல் எப்பொழுதோ அந்த இடத்திலிருந்து அகன்று விட்டார். பத்தமடை நோக்கிச் சென்று விட்டார்.

இனி..........

ஸ்ரீஸ்வாமிகள் முதன்முறையாக அரிமழம் நகரைத் தன் பொற்பாதங்களால் அலங்கரிக்கப் போகின்றார். அன்று (ஸ்வாதி நக்ஷத்திரம் சேர்ந்த) ஆடி பதினெட்டாம் பெருக்கு.

அனைவரும், குறிப்பாக அரிமழம் நகரப் பெருமக்களே! நீங்கள் எந்த ஊரில் இருந்தாலும் வீட்டு வாசலில் கோலமிட்டு செம்மண் பூசுங்கள்.

பாயசம் செய்து இறைவனுக்கு நிவேதனம் செய்யுங்கள். இரண்டு நிமிடங்களேனும் குருவை நினைந்து வணங்குங்கள். அரிமழத்தில் இருப்பவர்கள் அன்று நடக்கும் விசேஷ பூஜையில் கலந்து கொள்ளுங்கள். குருவருள் அனைவருக்கும் துணைநிற்கும். ஆன்மீக நாயகனை ஆவலுடன் வரவேற்போம். நாம் உய்யும் வழியை நமக்கு உரைக்கப் போகிறான்.

அரிமழம்வாசிகள் அதிர்ஷ்டம் செய்தவர்கள் என்ற புகழ்கிட்டப் போகிறது.

தூய சிந்தனையுடன் அத்தூயவனை வரவேற்க ஆயத்தமாகுங்கள்.

மஹாசந்நிதானம் வருகைபுரியும் அரிமழம் நகரின் சிறப்புகள் என்ன?

"நேசர் அகம்மலர ஆசிகள் நல்கிடும்
மாஉருக் கொண்டவன் வேழ முகத்தோன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அருகம்புல் மாலை அணிந்து அமர்ந்தோன்
அரண்மனைப் பிள்ளையே காப்பு "

ஸ்ரீஸ்வாமிகள் தம்முடைய யாத்திரையைத் தொடங்கிவிட்டார்.

அடைச்சாணி, பத்தமடை , கோடகநல்லூர் ஆகிய புண்ணிய பூமியிலிருந்து நாம் விடைபெறுகிறோம்.

ஸ்வாமிகளின் பூர்வாசிரம தாய்மாமன் வேங்கடசுப்பையர், அவர் மனைவி மீனாக்ஷி அம்மாள், மாமனார் ராமசுப்பையர், அவர் மனைவி மற்றும் அவருடைய குருநாதர்கள் இனி சரிதத்தில் இடம்பெற மாட்டார்கள். இந்த புண்ணிய இடங்களையும், பெரியவர்களையும் சிரசு தரையில்பட வணங்கி விடைபெறுவோம்.

கங்கைகொண்டான், திருநெல்வேலி ஆகியவை சரிதத்தில் முக்கிய இடம் வகிக்கப் போகின்றன.

ஜானகி அம்மையார், ராமசுப்பு என்கிற குப்பாணிசிவன் ஆகியோரைப்பற்றி சிறு குறிப்புகள் மட்டுமே சரிதத்தின் இறுதியில் இடம்பெறும்.

இத்தனைக் காலம் இந்த புனித மண்ணில் பயணித்துவிட்டு, ஒப்புயர்வற்ற மஹாத்மாக்களுடன் உறவாடிவிட்டு சட்டென்று பிரிந்து, நிரந்தரமாக விலகி வருவது மனதிற்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. அப்படித்தான் இருக்கும்.

இனி பழையசீடர்களுடனும், புதிய சீடர்களுடனும் புதிய அனுபவங்களைப்பெற புதிய இடங்கள் நோக்கிப் பயணிக்கப் போகிறோம்.

வாருங்கள்.........

அரிமழம் நகரில் ஆலயமணிகளை ஒலிக்கவிடுங்கள்.

வீடுகள் தோறும் விளக்கேற்றுங்கள்.

தென்னங்கீற்று, மாவிலைத் தோரணங்கள் கட்டித் தொங்கவிடுங்கள்.

வாசலில் வாழைமரம் கட்டுங்கள்.

தெருக்களில் சாணி தெளித்து அரிசிமாவு கோலமிட்டு செம்மண் பூசுங்கள்.

வீட்டை நன்றாக அலங்கரியுங்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மங்கல இசை எங்கும் பெருகட்டும்.
சிறுமிகள் கோலாட்டம் போடட்டும்.
நற்குல குடியானவமகளிர் குலவையிடட்டும்.
வேதியர்கள் பூரணகும்பத்துடன் வேதங்கள் ஓதட்டும்.
இன்று ஆடி பதினெட்டு.

பத்தமடையில் இருந்து புதுக்கோட்டைக்கு விஜயம் செய்திருந்த மஹாசந்நிதானம் அவர்களை அரிமழம் சிவராமன் செட்டியார், வைத்தியம் கிருஷ்ண ஐயர், பழநியப்ப செட்டியார், புதுவயல் அழகப்பசெட்டியார், சத்திரம் சின்னையா செட்டியார் ஆகியோர் பணிந்து வணங்கினர். அரிமழம் எழுந்தருள வேண்டுமென விண்ணப்பித்தனர். ஸ்ரீஸ்வாமிகள் அவர்கள் வேண்டுதலை ஏற்று இன்று அரிமழத்தில் தன் திருப்பாதங்களைப் பதிக்கிறார். தன்னுடைய அருட்பார்வையால் இந்த ஊரை கடாக்ஷித்து அருளப்போகிறார்.

'அரிமழம் நகருக்குக் கிடைத்த பேறு நம் ஊருக்குக் கிட்டவில்லையே' என மற்ற ஊரினர் ஏங்கப் போகிறார்கள்.

அரிமழம் மக்களே! ஸ்ரீஸ்வாமிகளின் பெருமையும், அவர் வரவினால் இந்த ஊர் அடையப்போகும் பேறும் இன்று உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்.

நம் அகந்தை,அறியாமை, அலக்ஷியம் இவைகள் அறிவை மறைக்கலாம்.இவற்றைத் துறந்து, இந்த மாயைகளிலிருந்து வெளிவந்து களங்கமில்லா மனதுடன் அந்தத் தூயவரைத் தொழுங்கள்.

மஹாசந்நிதானம் அவர்களின் புதிய பிரபாவங்களும், மேதாவிலாசமும், அமிர்தமயமான வாக்குவன்மையும், அளவிடற்கரிய அருளின் ஆற்றலும் மேலும் மேலும் வெளிப்பட அரிமழம் அடித்தளம் இடப்போகிறது.

இதோ........

அரிமழம் எல்லையை நம் ஸ்வாமிகளின் திருப்பாதங்கள் அலங்கரிக்க ஊருக்குள் நுழைந்து விட்டார்.

ஊரைச்சுற்றியிருந்த காடுகளில் அடர்ந்திருந்த மூலிகை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மரங்களில் இருந்து வந்த நறுமணக்காற்று ஸ்வாமிகளுக்கு வரவேற்புக் கட்டியம் கூறியது.

அக்காடுகளில் இருந்த அபூர்வ மரங்களான'ஜோதி விருக்ஷம்', 'மாரீச மரம்' மற்றும் ஸ்ரீஜயவிளங்கிஅம்மன் கோயிலில் இருந்த 'ஏரழிஞ்சில் மரம்'ஆகியவற்றின் சிறப்புகளை கிருஷ்ண ஐயர் கூறிக்கொண்டு வந்தார்.

இம் மரங்களைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளீர்களா?
இவற்றின் சிறப்புகள் யாவை?

"திருப்பாதம் பட்டதுகாண் நம்ஊர் செழிக்க
அருட்பார்வை கிட்டியோர் ஆனந்தம் கொண்டார்
கருப்பை உயிர்கள் களிகொண்டு துள்ள
தருமழையாய் வந்தான்நம் தேவன் "

அரிமழம் நகருக்குச் சிறப்பு செய்த பல மனிதர்கள் இருந்தனர். அவர்களால் இந்நகர் அடைந்த பயன்கள் பலப்பல. ஆன்மீகம், கல்வி, கொடை, இலக்கியம், அரசியல், தொண்டு, மருத்துவம், சட்டம், ஜோசியம், விளையாட்டு... இப்படி பல துறைகளிலும் சிறந்து விளங்கியோர் ஊருக்கு அணிகலனாய் இருந்தனர்.

நம் சரிதம் நிகழ்ந்த காலத்தில் அரிமழம் இயற்கைவளம் நிறைந்த நகராக விளங்கியது. எப்பொழுதும் நீர்நிலைகள் நிரம்பி இருந்தன.

'பதினோரு நீர்நிலைகள், பதினோரு கோயில்கள்' என்று ஒவ்வொரு நீர்நிலையின் கரையிலும் கோயில்கள் அமைந்த இயற்கை கொஞ்சும் அழகிய ஊர்.

பல மைல்களுக்குப் பரவியிருந்த அரிமழத்து காடுகள் அன்று புகழ்பெற்று விளங்கின. அக்காடுகளில் இயற்கையாய் வளர்ந்த மரங்கள் அவ்வூரின் நீர்வளத்திற்கு உறுதுணையாய் இருந்தன. காட்டில் பொழியும் மழை தங்குதடையின்றி வாய்க்கால்களில் ஓடி உரிய நீர்நிலைகளை அடையும்படி மிகத் துல்லியமாக வரத்து வாரிகள் அமைக்கப்பட்டிருந்தன. நீர்வழிகளை மறித்தோ அடைத்தோ அன்று கட்டுமானங்கள் கிடையாது. சுய



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஆதாயங்களைவிட ஊர்நலனே முதன்மையானது என்ற உன்னத மனப்பான்மை கொண்ட குடிமக்கள்.

ஆகவே ஊர் நன்றாக, நிறைவாக, அமைதியாக இருந்தது.

மஹாசந்நிதானம் அவர்களை காட்டிலிருந்த மூலிகை மரங்களின் தூயகாற்றே முதலில் வரவேற்று மகிழ்ந்தது.

('அரிமழத்திற்கு மனிதர்கள் மட்டுமன்றி மரங்களும் சிறப்புச் சேர்த்துள்ளன. அவைகளைப் பற்றிய சில வரிகள் எழுதுங்கள்' என்று சில அன்பர்கள் கேட்டுக் கொண்டதால் இக்குறிப்பு.)

மனிதர்களின் ஆரோக்கிய வாழ்விற்கு உறுதுணையாய் பல மரங்கள் இருந்திருந்தாலும் மிக முக்கியமான, உன்னதமான, அபூர்வமான மூன்று மரங்களைப் பற்றி மட்டும் சிறிது காண்போம்.

ஆதிகாலத்திலிருந்தே மனிதன் இயற்கையைக் கடவுளாய் வணங்கினான். குறிப்பாக நீர்,நெருப்பு, காற்று, மரங்கள்,மிருகங்கள் ஆகியவற்றைத் தொழுதான். மரங்கள், செடிகள் இவற்றுடன் தெய்வங்கள் பின்னிப் பிணைந்திருந்தன.

அரசமரம் என்றால் பிள்ளையார்,
ஆலமர்ந்த செல்வன் சிவன்,
வேப்பிலையை விரும்பும் மாரியம்மன்,
துளசியை உகந்தணியும் திருமால்,
வெண்தாமரையில் வீற்றிருக்கும் கலைமகள்,
செந்தாமரைச்செல்வி திருமகள்......

இப்படி தெய்வங்களை வணங்கும்போதே இயற்கையையும் சேர்த்தே வணங்கினான்.

மரங்களும்,செடிகளும் மனிதர்களின் பொருளாதாரத்தைப் பெருக்கி வாழ்வாதாரத்துடன் இணைந்திருந்தது மட்டுமல்ல அவை மனிதனின் ஆன்மீகத்துடனும் பின்னிப் பிணைந்திருந்தன.

ஸ்தலம், தீர்த்தம், மூர்த்தம் இவற்றுடன் புண்ணியத் தலங்களில் விருக்ஷங்களும் விசேஷமாகக் கொண்டாடப் படுகின்றன. ஒரு சில இடங்களில் மட்டுமே காணக்கிடைக்கும் அரிய,புனித மரங்கள் அரிமழம் காட்டுப்பகுதியில் இருந்தன.

அவற்றுள் மூன்றை மட்டும் இங்கே பார்ப்போம்.

ஜோதிவிருக்ஷம் என்பது ஓர் அபூர்வமான காயகற்ப மூலிகை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இது மரவகையைச் சேர்ந்தது. சதுரகிரி, கொல்லிமலை, வெள்ளியங்கிரி, சுருளிமலை ஆகிய பகுதிகளில் இன்றும் இம்மரம் அரிதாகக் காணப்படுகிறது.

18 சித்தர்களின் 45 காயசித்தி மூலிகைகளில் முக்கியமானது 'ஜோதிவிருக்ஷம்'

இம்மரத்தின் இலைகள் நாவல்மரத்தின் இலைகள் போல இருக்கும். பூக்கள் வெளிர் நீலத்தில் காணப்படும். மரத்தின் பட்டைகளில் வெடிப்புகள் இருக்கும். அவற்றிலிருந்து பிசின்போல் பால் சுரந்து கொண்டே இருக்கும். பகலில் சாதாரண மரம்போல் தோன்றும் இது குறிப்பிட்ட தினங்களில் இரவு நேரங்களில் தொலைவிலிருந்து பார்க்கும் பொழுது ரேடியம் ஒளிர்வதுபோல் ஒளிவீசும் தன்மை உடையது. இம்மரம் வருடத்தில் ஒருமுறை மட்டுமே பூத்து, கனி கொடுக்கும். இம்மரத்தைப் பார்த்தாலே மனதில் அமைதியும், ஒருமுகப்பட்ட முனைப்பும் தோன்றும்.

ஞானிகளும், மகான்களும், முனிவர்களும் இம்மரத்தை நாடி வந்து தவம் புரிவர். மற்றவர்களால் இம்மரத்தை எளிதில் இனம் கண்டுகொள்ள முடியாது.

(சில ஞானிகளின் சிரசின் பின்னே ஒளிவட்டம் (Aura) இருப்பதுபோல் பார்த்திருப்போம். ஜோதிவிருக்ஷத்தின் கீழ் இருந்து தவம் இருப்பதால் தோன்றிய ஒளியாகக்கூட இருக்கலாம்.)

இம்மரத்தின் பட்டை மிகச் சிறந்த மருத்துவ பலன்களை உடையது. இம்மரத்தின் ஆன்மீக, மருத்துவ, மாந்திரீக பலன்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

பெரியபுராணத்தில் கண்ணப்ப நாயனார் சரிதத்தில், திண்ணப்பன் காளத்தி மலையில் ஏறும்போது ஜோதிவிருக்ஷம் இருந்ததாய் குறிப்பு வருகிறது.

அடுத்து மாரீ(ச)மரம் : மிகமிக அரிதான இம்மரமும் அரிமழம் வனப்பகுதியில் இருந்திருக்கிறது. இம் மரத்தின் சிறப்பு யாதெனில், அடர்ந்த காட்டுப் பகுதியில் கொடிய மிருகம் துரத்திவந்தால், துரத்தப்பட்டவர் இம்மரத்தின் அருகே வந்தால் மிருகத்திற்கு இவர் இருப்பது தெரியாதாம். இம்மரம் வளரும் இடத்தில் பருவமழை தவறாது பெய்யுமாம். ஆகவே இதை மாரிவிருக்ஷம் என்று கூறுவர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இம்மரத்தைப் பற்றியவேறு தகவல் எதுவும் தெரியவில்லை.

அடுத்து நாம் காணப்போகும் மிக முக்கியமான, இன்றும் அரிமழத்தில் காணப்படுகின்ற மரம் பற்றி.

அதன் சிறப்புகள் என்ன ?

"ஆதி விருட்சம் சிவசித்தர் போற்றிய
ஜோதி விருட்சம் மனிதர் மறைந்திடும்
மாரீ விருட்சம் பரமாத்மா என்பதோர்
ஏரழிஞ்சில் நின்றநம் காடு."

**ஏரழிஞ்சில் :**

இம்மரமும் இதன் விதைகளும் விசித்திரமானவை, விசேஷமானவை. இயற்கை நாம் அறியாமலேயே பல உன்னதங்களை நமக்கு வாரிவழங்கிக் கொண்டுதான் இருக்கிறது. இயற்கைக்குப் புறம்பாக நாம் பல இடையூறுகளைச் செய்தாலும் அது நம்மேல் காட்டும் கருணை அபரிமிதமானது. தொல்லைகள் தாங்கமுடியாத போது அதனுடைய சீற்றம் பொங்கி எழுகின்றது.

இருந்தாலும் இயற்கை ஒரு தாய்போலவே நம்மை அரவணைத்துச் செல்கிறது. இயற்கை நமக்குக் கொடுத்த கொடைகளில் ஒன்று ஏரழிஞ்சில் மரம். இயற்கையின் படைப்பில் ஏரழிஞ்சில் ஒரு வரபிரசாதம்.

ஏரழிஞ்சில் மரத்தைப்பற்றி ஆதிசங்கரர் சிவானந்த லஹரியில் இவ்வாறு மேற்கோள் காட்டுகிறார்:

'இரும்பு காந்தக் கல்லை ஊசியும், பதியினை பதிவிரதையான பெண்ணின் மனமும், கடலை நதியும், மரத்தைக் கொடியும், ஏரழிஞ்சில் மரத்தை விதையும் எவ்வாறு விடாமல் நாடிச்சென்று அடைகின்றனவோ அதைப்போல இமைப்பொழுதும் நீங்காமல் சிவனை நெஞ்சில் வைத்திருப்பவர்கள் அவனையே அடைகிறார்கள்.'

'காளியன் என்ற நாகம் கக்கிய விஷத்தால் கடம்ப மரம் எரிந்து சாம்பலானது. கண்ணனின் காலடிபட்டதும் அம்மரம் தளிர்த்து வளர்ந்தது. ராமனின் பாதம் பட்டவுடன் கல்லான



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அகலிகை மீண்டும பெண்ணானாள். விஷ்ணுவின் பாதத்தில் எப்போதும் அமிர்தம் சுரப்பதால் இவை நடக்காதா என்ன? அங்கோல மரத்தின் தைலம் தடவப்பட்ட மாங்கொட்டையைத் தரையில் நட்டால் அப்பொழுதே முளைத்து, பெரிய மரமாக வளர்ந்து காய்த்துப் பழுக்கும். அப்படி இருக்கும் போது விஷ்ணுவின் புனிதத் திருவடிகளில் அமுதம் இருக்காதா என்ன?' என்று ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் கூறியுள்ளார்.

(அங்கோல மரம்—ஏரழிஞ்சில் மரம்)

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த உலகின் ஒப்பற்ற தத்துவஞானி ஆதிசங்கரர் குறிப்பிடுவது இம்மரத்தின் விதைகளையே.

உலகில் எத்தனையோ உயிர்கள் தோன்றி மறைந்தாலும் சில உயிர்களே ஈசனுடன் ஐக்கியமாகின்றன. எதைப் போலவெனில் பல மரங்கள் இருந்தாலும் ஏரழிஞ்சில் மரத்தின் பழங்கள் மட்டும் தாய்மரத்தை விடாமல் ஒட்டிக் கொள்ளும். இம்மரத்திலிருந்து தானாக விழும் பழங்களிலும் விதைகள் முளைக்காது. பழங்கள் கீழே விழுந்த மூன்று நாட்களில் அந்தப்பழத்திலுள்ள விதைகள் தானாகவே நகர்ந்து மரத்தில் ஒட்டிக்கொள்ளும்.

இது ஜீவாத்மா —பரமாத்மா ஐக்கியத்தை சுட்டிக்காட்டுவதாக ஆன்மீக ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

இதைக் காயகற்பமரம் என்று சித்த மருத்துவர்கள் கூறுவர். (இம்மரத்தின் வேர்ப்பட்டை, இலை மற்றும் விதைகளின் மருத்துவப் பயன்கள் பலப்பல. விரிவஞ்சி எழுதவில்லை.)

இப்படி அதிசயங்களும், மருத்துவ அற்புதங்களும் கொண்ட ஏரழிஞ்சில் மரம் அரிமழம் ஸ்ரீஜயவிளங்கி அம்மன் கோயிலில் இன்றும் ஸ்தல விருக்ஷமாக விளங்குகிறது.

(மரங்களின் ஆன்மீக, மருத்துவ, சுற்றுச் சூழல் மதிப்புகள், பெருமைகள் அறியாமல் இயற்கைக் காடுகள் அரிமழத்தில் அழிக்கப்பட்டன. அவற்றுள் ஜோதிவிருக்ஷம், மாரீவிருக்ஷம், பெருந்தரணை மரம் ஆகிய அபூர்வ தாவரங்களும் அடக்கம். தப்பியது ஏரழிஞ்சில் மட்டுமே.)

அரிமழத்தின் வனச்சிறப்பை மஹாசந்நிதானம் அவர்களுக்கு,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வைத்தியம் கிருஷ்ண ஐயர் கூறிவந்தார்.

நாட்டார், நகரத்தார் அனைவரும் சேர்ந்து சிறப்பான வரவேற்பை ஸ்வாமிகளுக்கு வழங்கினர்.

ஸ்வாமிகள் அரிமழம் வரக் காரணமாயிருந்த சிவராமன் செட்டியார் தன் குடும்பத்தினரை அவருக்கு அறிமுகப்படுத்தினார். அனைவரும் அவரை வணங்கி ஆசிகள் பெற்றனர்.

இந்த சமயத்தில் சிவராமன் செட்டியாரின் தந்தை சோமு என்கிற சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தன் புதல்வனைப் பற்றிய கவலையை ஸ்ரீஸ்வாமிகளிடம் தெரிவித்தார்.

அவருடைய கவலை என்ன ?

"தாயானாய் தந்தையும் ஆனாய் அனவரதம்
நோயால் துடித்தோர்க்கு காயகல்பம் ஆகினாய்
வாய்மையால் நாடியே வந்தவர் யாவர்க்கும்
தீமை தொலைத்தாய் விரைந்து."

தனவணிகர் என்றும், செட்டியார் என்றும்,தனவைசியர்கள் என்றும், நாட்டுக்கோட்டை நகரத்தார் என்று அறியப்படும் இனம் தமிழகத்தின் மிகத் தொன்மையான குடிகளில் ஒன்று.

உலகில் ஒவ்வொரு சமூகத்திற்கும் தனிப்பட்ட வரலாறு உண்டு.ஒவ்வொரு சமூகத்திலும் அறிவிலும், ஆற்றலிலும், உழைப்பிலும், ஊக்கத்திலும், விவேகத்திலும், வீரத்திலும் மிக்கு விளங்கி தான் சார்ந்த சமுகத்திற்குப் பெருமை சேர்த்தோர் பலருண்டு. சில சமூகத்தைச் சேர்ந்த மக்கள் இவை யாவற்றிலும் சிறந்து விளங்கினர்.

அத்தகைய சமூகங்களில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூக மக்களும் அடங்குவர்.

"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்."

என்ற குறள் மொழிக்கு எடுத்துக் காட்டாய் விளங்கினர்.

உழைப்பாலும், உயர் பண்புகளாலும்,வணிகச் சிறப்பினாலும், வாய்மைவழி நிற்றலாலும், கட்டுப்பாடான வாழ்க்கை முறையாலும்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சிவதர்மத்தாலும், குலதர்மத்தாலும், பக்தியாலும், தமிழ் மேல் கொண்ட அளவிடற்கரிய பற்றாலும் தனித்து விளங்கினர்.

இவர்களின் வரலாறு 5000ஆண்டுகளுக்கும் முந்தியதாகும். இவர்கள் 'சந்திரகுல கோத்திர வைசியர்கள்' என்று குறிக்கப் பட்டனர். ஆதியில் இவர்கள் புலால் உணவு உண்பவர்களாய் இருந்து பின்பு பலரும் சைவ உணவு உண்பவராய் மாறினர்.

ஆகவே சந்திரகுல கோத்திரத்திலிருந்து சிவகோத்திரத் திற்கு மாறினர்.

தென்காசி–திருச்செந்தார் பகுதியைச் சேர்ந்த 'நாகநாடு' இவர்களின் பூர்விகம். இப்பகுதியைச் கடல்கோள் கொண்டது.

அங்கிருந்து தொண்டைநாடு வந்தனர். பல ஆண்டுகள் தங்களின் தனித்துவமான வணிகத்திறத்தால் அப்பகுதியை வளங்கொழிக்கச் செய்தனர். இந்நிலையில் பிரதாபன் என்ற கொடுங்கோலன் ஆட்சிபீடம் ஏறினான். அவன் கொடுத்த தொல்லைகள் தாங்க முடியாமற் போகவே காஞ்சி மண்ணை விட்டு 8000 நகரத்தார் குடும்பங்களும் புலம்பெயர்ந்து தெற்கு நோக்கி சோழநாடு வந்தனர்.

சோழநாட்டை அப்போது ஆட்சிபுரிந்து கொண்டிருந்த மனுநீதிச்சோழன் தனவணிகர் வரவால் மனம் மகிழ்ந்து அவர்கள் இடையூறின்றி வணிகம் செய்ய உதவினான். 1400 ஆண்டு களுக்குப் பிறகு சோழ அரசவம்சத்திலும் பூவந்திச் சோழன் என்பவன் நகரத்தார் பெண்களுக்குத் தீவினை செய்யத் துணிந்தான். தங்களது செல்வங்களையும், பரம்பரைபரம்பரையாகப் பூசித்து வந்த மரகதவிநாயகரையும் ஆத்மநாதசாஸ்திரி என்பவரிடம் ஒப்புவித்துவிட்டு பாண்டியநாடு நோக்கிப் புலம் பெயர்ந்தனர்.

பாண்டிய மன்னனும் தனவைசியர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிப்பதாக உறுதிமொழி அளித்தான்.

நகரத்தார் மக்கள் காரைக்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள 75 கிராமங்களில் தங்கள் குடியிருப்பை ஏற்படுத்திக் கொண்டனர்.

இவர்கள் வாழ்ந்த பகுதிகளில் ஒன்பது நகரக் கோயில்களை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஏற்படுத்தினர்.

அவையாவன:

1. இளையான்குடி
2. மாத்தூர்
3. வைரவன் கோயில்
4. இரணிகோயில்
5. பிள்ளையார்பட்டி
6. நேமம்
7. இலுப்பைக்குடி
8. சூரக்குடி
9. வேலங்குடி.

'திரைகடலோடியும் திரவியம்தேடு' என்பதற்கு முன் உதாரணமாக விளங்கினர்.போகும் இடமெல்லாம் கோயில்கள் எழுப்பினர். சைவம் வளர்த்தனர்.

'மாதா, பிதா, குரு, தெய்வம், அந்தணர், குலதேவதை இவர்களை வணங்கிப் பூஜிப்பதை நியமமாகக் கொண்டனர்.

63 நாயன்மார்களில் இயற்கை நாயனார், அமர்நீதி நாயனார், கலிக்கம்பர் நாயனார், மூர்த்தி நாயனார், காரைக்கால் அம்மையார் ஆகிய ஐவரும் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

பட்டினத்தார், கோவலன் – கண்ணகி ஆகியோரும் இத்தொல்குடியைச் சேர்ந்தவர்களே.

'நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் இல்லை என்றால் வேதங்களும் இல்லை,கோயில்களும் இல்லை' என்று காஞ்சி பரமாச்சாரியார் பாராட்டிக் கூறியுள்ளார்.

மிகவும் கட்டுக்கோப்பான வாழ்க்கைமுறையைக் கொண்டவர்கள். 'சிவ மதத்திலேயே இருப்பது, அந்நிய மதங்களுக்கு மாறக்கூடாது' என்ற கொள்கையைக் கடைப் பிடிப்பவர்கள். மற்ற இனத்தவரைப்போல கிருஸ்துவத்திற்கோ வேறு மதத்திற்கோ மதம் மாறமாட்டார்கள். (ஆனால் சமீபகாலமாக மிகச்சில தளர்வுகளும், நெகிழ்வுகளும் ஏற்பட்டு வருவது பெரியவர்களை மனம்கலங்கச் செய்கிறது.)



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருட்டு வியாபாரம் கூடாது. தர்மவட்டி வாங்கலாம். ஆனால் செய்யும் தொழிலில் நம்பிக்கை மோசடி செய்யக் கூடாது.

ஏககோத்திரத்தில் திருமணம் செய்து கொள்ளக்கூடாது.

எந்தச் செயலிலும் முன்வழக்கப்படி நடந்து கொள்வது... போன்ற கட்டுக்கோப்பான விதிகளைப் பின்பற்றுபவர்கள்.

இத்தகைய சிறப்பு மிக்க நகரத்தார் பரம்பரையில் தோன்றிய சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் மஹாசந்நிதானத்திடம்,தன் புதல்வன் சிவராமன் செட்டியார் பற்றிய கவலையை வெளியிட்டார்.

அவரின் கவலையை ஸ்வாமிகள் நீக்கினாரா ?

"நகரத்தார் நாட்டினையே நாடியே வந்தாய்
பகரத்தான் ஆற்றலுண்டோ உன்பெருமை எந்நாளும்
சொல்லில் அடங்காப் பெரும்புகழ் வித்தகனைக்
கல்லான்நான் போற்றல் தகுமோ ?"

ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளைப் பணிந்து எழுந்த சோமசுந்தரம் செட்டியார் அவரிடம் பணிவுடன் தன் கவலையைப் பகிர்ந்து கொண்டார்.

'எங்களை உய்விக்க வந்த உத்தமரே! எங்களுக்கு ஒரு குறை உள்ளது. அது கவலையாய் மனதை அரிக்கிறது. நகரத்தார் இல்லங்களில் பையன்களுக்குப் பதினாறு வயதிலேயே திருமணம் செய்து விடுவோம். சிவராமனுக்கோ இப்பொழுது இருபத்தெட்டு வயதாகிறது. இவ்வளவு காலதாமதமாகியும் அவனுக்குத் திருமணம் நடைபெறாதது பற்றிப் பங்காளிகளும், ஊரினரும் பலவிதமாகப் பேசுகின்றார்கள்.

பணம், காசு, தொழில், வசதிகளில் குறையொன்றுமில்லை. பெண்ணிற்கோ, பையனிற்கோ எவ்வளவு விரைவாகத் திருமணம் நடத்தமுடியுமோ அவ்வளவு விரைவாக நடத்துவதுதானே முறை. வயது ஏற ஏற மனதில் பலவிதக் கவலைகள் எழுகின்றன.எங்களின் சாஸ்திர, சம்பிரதாயங்களிலிருந்து வழுவிச் சென்று விடுவோமோ என்ற அச்சம் தோன்றுகிறது. திருமணவயதைக் குடும்பத்தினர் நிர்ணயித்து விவாஹம் செய்து வைப்பதுதானே ஏற்புடையது ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவன் கல்யாணம் செய்துகொண்டு குடும்பஸ்தன் ஆகவேண்டாமா? எப்பொழுது கேட்டாலும்' திருமணத்திற்கு இப்பொழுது என்ன அவசரம்?' என்கிறான். இவன் வயதொத்த ஆண்கள் திருமணம் செய்துகொண்டு குழந்தை குட்டிகளுடன் உள்ளனர். பெண் குழந்தையைப் பெற்றவர்கள் இன்னும் ஓரிரு ஆண்டுகளில் மாப்பிள்ளை தேட ஆரம்பித்து விடுவார்கள். இவன் மட்டும் இத்தனை வயதில் ஒத்த மரமாக நிற்கிறான். ஸ்வாமிகள்தான் கிருபைசெய்து அவனுக்கு நல்லபுத்தி கூற வேண்டும். விரைவில் திருமணம் நடந்து தம்பதி சமேதரராகக் காணவேண்டும்.'

ஸ்வாமிகள் சிவராமன் செட்டியாரைக் கூப்பிட்டுத் தனிமையில் உபதேசிக்கத் தொடங்கினார்.

"இல்லறத்தான் என்ற பதத்தில் கணவன், மனைவி என்ற இருவரின் நடவடிக்கையும் சேர்ந்துள்ளது. இருவருக்கும் பொதுவான மற்றும் தனித்தனியான தர்மங்கள் உள்ளன.இருவரின் நோக்கமும் ஒருமுகமாக தர்மத்தைக் காக்க வேண்டும் என்று இருக்க வேண்டும்.

மற்ற தர்மங்களைப்போல இல்லற தர்மமும் மிக உயர்வானது. இத்தர்மத்தினால் இம்மை, மறுமை ஆகிய இரண்டிலும் கிடைக்கக் கூடிய பலன்களை அடையலாம். நீ செய்யும் தர்மத்தினால் மற்றொரு ஆத்மாவாகிய உன் மனைவியும் நல்ல கதியைப் பெறுகிறாள்.

அந்த பலனும் உன்னைச் சேருகின்றது. உன்னுடைய புண்ணியத்தின் பலன் மற்றொரு ஜீவனையும் அடைகின்றது. அதனால் இருவருக்குமே சிவன் அருள் கிட்டுகிறது. பந்தம், சொந்தம் என்று உன்னுடைய உறவு வட்டம் பெருகுகின்றது.

ஒவ்வொருவரும் தாம் மட்டுமின்றி பிறிதொரு ஆத்மாவையும் நற்கதிக்கு ஆளாக்கும் உன்னத தர்மத்தின் பலனும் இல்லற வாழ்விலே உன்னை வந்தடையும். மனித ஜன்மத்தின் மேன்மையை அறிந்துகொள். இல்லறம் என்பது ஆத்மசாதனை. தர்மசாஸ்திரங் களை அனுசரித்து இல்லற தர்மத்தை ஏற்றுக்கொள். தர்ம நெறிப்படி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வாழும் கிருஹஸ்தன் மற்றவர்களினும் மேலானவன். குடும்ப வாழ்க்கை என்பது நிறைந்த அன்பு, முகமலர்ச்சி, நேசிக்கும் மனம், பாசம், பிரியம், பண்பு, சந்ததி விருத்தி, விருந்தோம்பல், ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளுதல், விட்டுக் கொடுத்தல் என்ற பல கூறுகளை உள்ளடக்கியது. அன்பும், அறனும் இல்வாழ்க்கையின் அடிப்படை.

கணவனும், மனைவியும் சுயநலமின்றி உண்மையுடன் நேசிப்பதே இல்லறத்தின் வெற்றிக் கான ஏணிப்படி. மற்ற உறவுகளைவிட கணவன் மனைவி உறவு வலிமையானது. இல்லற தர்மம் என்பது கடவுளின் படைப்பாகும். பரிசுத்தமான இல்லறம் நடத்தும் அனைவரும் முக்தியை அடைகிறார்கள். நீ திருமணம் செய்துகொண்டு மங்களமடைதல் வேண்டும்.' ஸ்வாமிகளின் அருளுரையை சிவராமன் செட்டியார் ஏற்றுக் கொண்டாரா?

"இல்லற தர்மம் இதுவெனச் சொல்லியே
நல்லறம் காக்க துணைஏற்கச் சொல்லியே
பல்லறம் சொன்னவன் காட்டிய பாதையில்
எல்லோரும் செல்வோம் இனிது."

மஹாசந்நிதானத்தின் அறிவுரையைக் கேட்ட சிவராமன் செட்டியார் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டார். பெற்றோர்கள் இந்த செய்தியைக்கேட்டு மகிழ்ச்சி அடைந்தனர். நல்ல பாரம்பரியமிக்க குடும்பத்தைச் சேர்ந்த முத்துக்கருப்பி ஆச்சி என்பவரை மணமகளாகத் தேர்ந்தெடுத்தனர்.

சிவராமன் செட்டியார்–முத்துக்கருப்பி ஆச்சி ஆகியோர் திருமணம் 1853–ம் ஆண்டு, பரிதாபி வருஷம் தைமாதத்தில் நடைபெற்றது.

சிவராமன் செட்டியாரின் உறவினர்களுக்கு அவர் திருமணம் செய்து கொண்டதில் மிக்க மகிழ்ச்சி.வீடு மிகக் கோலாகலமாய் விளங்கியது.

ஸ்வாமிகள் அரிமழத்தில் தங்கி இருந்தபொழுது அவரது பிரபாவத்தைக் கேள்விப்பட்ட நகரத்தார்கள் சூதசம்ஹிதைப்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிரவசனத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். மஹாசந்நிதானம் அவர்களும் சூதசம்ஹிதையிலிருந்து சில பகுதிகளை மிக விஸ்தாரமாக விளக்கி உரையாற்றினார். அத்துடன் சிவகதைகள் பலவற்றையும் மனதில் பதியுமாறு கூறினார்.

அப்பிரசங்கங்களைக் கேட்ட அரிமழம் மக்கள் மீண்டும் மீண்டும் அவர் பேச்சைக் கேட்க விரும்பினார்கள். ஸ்வாமிகள் மீது அசைக்கமுடியாத பக்தியுடையவர்கள் ஆனார்கள்.

விபூதி,ருத்ராக்ஷ, குரு மகிமைகளைப் பற்றி முதன்முறையாக அரிமழத்தில்தான் விரிவாகப் பேசினார்கள்.

"குருவிடமிருந்து கிடைக்காதது வேறு எங்கிருந்தும் கிடைக்காது. குருவின் அருளினால் மட்டுமே ஒருவன் அனைத்தையும் பெறுகிறான்.

மனம் ஒரு முரட்டு யானை.அதைக் கட்டுப்படுத்தும் அங்குசமே குருவின் உபதேசங்கள். குருவின் வார்த்தைகளைக் கேட்பதும், கேட்டதின்படி நடப்பதுமே பிறவிப் பிணியிலிருந்து நீக்கும். சரீரசுகநிலையைவிட மனதிற்கு சுகம் இன்றியமையாதது. பகவத் நாம ஸ்மரணமும், குருநாம ஸ்மரணமுமே முக்திக்கு வித்தாகும்.

கல்கண்டு இனிக்கும் என்ற உண்மையை உணர அதைச் சுவைத்துப் பார்க்க வேண்டும்.அதைப்போல் குருவின் அருளை அனுபவித்து மகிழ முதலில் குருவின் நாமாக்களைச் சொல்லி, கேட்டு மகிழ வேண்டும்.

குருவைத் தேடி அலைந்த பிறகு அவரை ஈஸ்வரனென்றே ஆராதித்து மகிழ வேண்டும்.அவரை பரிக்ஷை செய்து பார்ப்பதோ, சந்தேகம் கொள்வதோ கூடாது.

வீடுபேறு அடைய மூன்று மூலகாரணிகள் வேண்டும். முதலில் வருவது மானிட ஜன்மமாகும். மானிடப் பிறவி எடுத்தவர்கள மற்ற பிறவிகளைவிட எளிதில் மோக்ஷத்தை அடையலாம்.

மோக்ஷம் அடையவேண்டும் என்ற தீவிர சிந்தனை,முயற்சி இரண்டாவதாகும்.

மூன்றாவதும் மிக முக்கியமானதும் ஆத்மஞானத்தை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஊட்டும் சர்வவல்லமை உடைய குருவினை அடைதல்.

குரு குற்றமற்றவர். குரு குறையில்லாதவர். குரு நேர்த்தியானவர். குரு விருப்பு வெறுப்பு அற்றவர். குரு அமைதியானவர்.குரு நடுநிலை நிற்பவர். குரு கருணை மிக்கவர். குரு தன்னுள் இருப்பதை சீடனுக்கு வழங்குபவர். குரு தன் சீடனை உள்முகமாகப் பார்க்க வைக்கிறார்.

மற்றவர்கள் பார்ப்பதை குரு பார்ப்பதில்லை.குரு பார்ப்பதை மற்றவர்களால் பார்க்க முடியாது.

நம் மனத்தை ஆன்மீகப் பாதையில் எளிதாகச் செலுத்த முடியாது. நம் மனம், உடம்பு, அறிவு ஆகிய மூன்றையும் ஆன்மீக வழியில் செலுத்துபவர் குரு.

மானிடப் பிறவி எடுத்தவர்கள் பரம பவித்திரர்களாயும், உலக மாயைக்கு உட்படாதவர்களாயும், பரம தயை உள்ளவர்களாகவும் உள்ள ஸத்குருவை நாடிச் செல்ல வேண்டும். உங்கள் சிந்தனையும், சொல்லும், செயலும் ஒருங்கிணைந்து தூய்மையோடு விளங்கினால் குருவே உங்களைத் தேடி வருவார்.'

இவ்வாறு குருவின் மகிமை பற்றி விளக்கிய மஹாசந்நிதானம் அவர்கள் விபூதி, ருத்ராக்ஷ மகிமைகளைப் பற்றி விளக்கியது என்ன ?

"குருவின் மகிமை அனைவருக்கும் கூறி
அருளைப் பொழிந்தாய் சிவமதம் ஓங்க
கருணை புரிந்தாய் கடைக்கண்ணின் வீச்சில்
திருவினைச் சேர்த்தாய் இனிது."

விபூதி, ருத்ராக்ஷம், திருவைந்தெழுத்தின் பெருமைகளைப் பற்றி ஸ்ரீஸ்வாமிகள் எடுத்தியம்பியதாவது:

'திருநீறு எனப்படும் விபூதி எனில் பெருமை, செல்வம் எனப்பொருள்படும். மனித உடலில் நெற்றி என்பது மிகவும் முக்கியமான பாகமாகும். நெற்றியின் வழியாகவே மனித உடல் அதிக சக்திகளை உள்ளிழுக்கிறது; வெளியிடுகின்றது.

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஞானத்தினால் சுட்டெரிக்க வேண்டும். அவ்வாறு சுட்டெரித்த பிறகே நிர்மூலநிலையை அடையமுடியும். ஜீவனது மலம் அஞ்ஞானம்; பசுவின் மலம் கோமயம். பசுவென்ற மொழி ஜீவனுக்கும் உரியபெயர். ஆகவே கோமயத்தைச் சுட்டுப் பொடியாக்கித் தூயவெண்ணீராய்த் தரித்திட தரித்திரம் நீங்கும்; திருநீற்றை முறைப்படித் தரிப்பவன் ஞான ஆசிரியனாகத் திகழ்வான்.

விபூதி என்றால் செல்வம் என்று கூறினோம். திருவாலவாயன் அணியும் திருநீறு பொன், பொருள் என்ற சிறு செல்வம் முதல் சிவானுபவச் செல்வம் என்ற ஒப்புயர்வற்ற செல்வம்வரை நல்கக் கூடியது.

மதி மயங்கி சமண மதத்தைத் தழுவி இருந்த பாண்டியனது சூலைநோயைப் போக்கி சிவமதத்தின் பெருமையை உலகிற்கு விளக்கியது விபூதியன்றோ?

சூரியகலை, சந்திரகலை, அக்னிகலை ஆகிய மூன்று நிலைகளையும் கடந்தவர் என்பதை நெற்றியில் அணியும் மூன்று கோடுகள் உணர்த்துகின்றன.

நீறிடுதல் என்பது மாசற்ற சுத்த சாந்த நிலைக்கு அடையாளமாகும். புருவ நடுவே தியானநிலை, ஆத்ம பிரகாசம் உள்ளது. அவ்விடத்தில் தியானம் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காகவே சந்தனம், குங்குமம், திருமண், திருநீறு இடுகின்றனர்.

திருநீறு கல்பம், அணுகல்பம், உபகல்பம், அகல்பம் என்று நான்கு வகைப்படும்.

கிழக்கு அல்லது வடக்கு திசை நோக்கி நின்றுகொண்டு, கீழே சிந்தாமல், வலதுகையின் ஆட்காட்டி விரல், நடுவிரல், மோதிரவிரல் ஆகிய மூன்று விரல்களால் திருநீறை எடுத்து, அண்ணாந்து பார்த்து பூசிக்கொள்ள வேண்டும். திருநீற்றை எடுக்கும்போது திருச்சிற்றம்பலம் என்று கூறி எடுக்க வேண்டும்.பூசும் பொழுது சிவசிவ என்று உதடுபிரியாது மனம் ஒன்றிச்சொல்ல வேண்டும்.

காலை, மாலை, பூஜைக்கு முன்னும்,பின்னும், ஆலயம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



செல்லும் பொழுதும், இரவு உறங்கப்போகும் முன்பும் திருநீறு தரிக்க வேண்டும்.

திருநீறு அணிவதால் இறைசிந்தனை, உயர்ந்த நற்குணங்கள், குறைவற்ற செல்வம், நல்வாக்கு, வாக்குப் பலிதம், இறையன்பர் களின் நட்பு போன்ற நலன்கள் கிட்டும். உடல்நலனும், ரத்த ஓட்டமும் சீர்படும். பாவங்கள் நசியும். தீயவர்களை விலக்கி வைக்கும். தொல்லைகள் தொலையும். அனைத்துப் பேறுகளையும் நல்கும்.........'

இவ்வாறு திருநீறு பற்றி விரித்துரைத்த மஹாசந்நிதானம் அவர்கள் அடுத்து ருத்ராக்ஷ மகிமை பற்றி எடுத்துரைத்தார்.

அவரின் உரை நகரத்தார் பெருமக்களிடையே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

அது என்ன மாற்றம் ?

"திருநீற்றின் ஆற்றலை ஆர்வமுடன் செப்பி
அருளினை நல்கினாய் கேட்டவர் எல்லாம்
இருள்நீங்கி இப்புவியில் நல்லறிவு பெற்றார்
கருணையின் தோற்றமே போற்றி"

மஹாசந்நிதானம் மேலும்தொடர்ந்தார்:

"சிவனின் திருநாமம், திருநீறு, ருத்ராக்ஷம் இம்மூன்றும் கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் மூன்று நதிகளும் ஒன்றுகூடும் திரிவேணி சங்கமம் போல் மிகமிகப் புனிதமானவை. சிவநாமமான திருவைந்தெழுத்தே கங்கை, திருநீறு யமுனை, ருத்ராக்ஷம் சரஸ்வதி. இம்மூன்றும் ஒன்று சேர்ந்தால் நம் பாவங்கள் அனைத்தும் நசிந்துவிடும்.

ருத்ராக்ஷம் சிவனுக்கு உகந்தது. அனைத்துத் தீமைகளையும் களைவது. அஃது சிவனால் அணியப்படுவது. அது சிவபெருமான் நினைவை ஊட்டி, நமக்கு நலனை நல்குகிறது. அதைத் தொட்டாலே நம் உடல் புனிதம் அடைகிறது. இது துன்பம் நீக்கி இன்பம் பயக்கும். சிவன் அணியும் நன்மணி, நம் கழுத்திற்கு ஏற்ற அவன் கண்மணி.

உடலோடு ஒட்டி அணியும் பொழுது பல்வேறு நோய்க்கிருமி களை அழிக்கிறது. இரண்டு ருத்ராக்ஷங்கள் இணைந்து இருப்பது



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கௌரிசங்கர ருத்ராக்ஷம் எனப்படும். இதுமிக அபூர்வமானது. ருத்ராக்ஷத்தை எப்பொழுதும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

அரசர் இல்லாதவிடத்து, அரச முத்திரை அரசரை நினைவு படுத்துவதைப்போல ருத்ராக்ஷம் சிவனை நினைவுபடுத்தும். திருமாங்கல்யம் என்ற ஒரு ஒப்பற்ற ஆபரணமே ஓர் பெண்ணின் மங்கலத்தைக் குறிப்பதுபோல் சிவனடியார்களின் மங்கலத்தை ருத்ராக்ஷம் குறிக்கும்.

வெகுசிரத்தையுடன் ருத்ராக்ஷம் அணியும் விவேகிகள் சிவஸ்வரூபமாகவே ஆகிவிடுகிறார்கள்.

பாவங்கள் தொலைய வேண்டுமெனில் ருத்ராக்ஷம் அணிய வேண்டும். மாலையாகக் கோப்பதற்கு இயற்கையாகவே துளையுள்ள ருத்ராக்ஷம் மிக உயர்ந்தது.

பூச்சி அரித்தது, பின்னமானது, பாதியாக உடைந்தது, மேற்புறம் வழவழப்பாக உள்ளது, அடிபட்டது, முழுமையாக உருண்டையாக இல்லாதது இவ்வாறுள்ள ஆறு வகையான ருத்ராக்ஷங்களை அணியக்கூடாது. ஒரே அளவுள்ள, உறுதியான, பிசுபிசுப்புள்ள, மேற்பகுதி கூர்மையாக உள்ள அழகான ருத்ராக்ஷம் விரும்பியதை எல்லாம் அருளும்; முடிவில் முக்தியை அளிக்கும். ருத்ராக்ஷமணிகளை அணிவது பெரும் பாதகங்களை நசிக்கச் செய்யும்.

பிரம்மச்சாரி, இல்லறத்தான், வானப்ரஸ்தன், துறவி அனைவரும் ருத்ராக்ஷம் அணியலாம். இதை அணிய பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். நெற்றியில் திருநீறணிந்து, உடலில் ருத்ராக்ஷம் தரித்து, திருவைந்தெழுத்தை ஓதி வருபவனைக் கண்டால் சிவபிரானையே தரிசித்த பலன் கிடைக்கும். ருத்ராக்ஷம் பூஜிக்கப்படும் இடத்தைவிட்டு திருமகள் வேறிடம் செல்லமாட்டாள்.

ருத்ராக்ஷத்தைப் பக்தியுடன் அணிந்தால் எங்கும், எதிலும் வெற்றியே! ருத்ராக்ஷம் அணிபவனைக் கண்டு பரமசிவன், ஸ்ரீமந்நாராயணன், துர்கை, கணேசர், சூரிய சந்திராதியர் மற்றுமுள்ள அனைத்து தேவதைகளும் மனம் மகிழ்வர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தர்மம் தழைத்தோங்க, குலம் செழிக்க முறைப்படி மந்திரங்களைக் கூறி ருத்ராக்ஷம் அணியுங்கள். அனைவருக்கும் ஆசிர்வாதங்கள். '

இவ்வாறு ருத்ராக்ஷ தாரண மகிமை பற்றி ஸ்ரீஸ்வாமிகள் பகன்றதைக்கேட்ட நகரத்தார்கள் ஒரு முடிவு எடுத்தனர். சிறுவர் முதல் வயது முதிர்ந்தோர்வரை அனைவரும் ஏகமுக ருத்ராக்ஷம் அணிவது என்று சங்கல்பம் செய்து கொண்டனர்,

இன்றுவரை அதை செயல்முறைப்படுத்தியும் வருகின்றனர்.

'நாகரிகம் (!)' மிக வளர்ந்துவிட்ட இக்காலத்திலும் திருமணம், அறுபதாம் ஆண்டு, எண்பதாம் ஆண்டு நிறைவு விழாக்களில் ருத்ராக்ஷம் அணிவதை குலச்சடங்காகவே இச்சமூகத்தினர் பின்பற்றி வருவது அவர்களின்ஆன்மீக ஈடுபாட்டைப் பறைசாற்றுகிறது.

ருத்ராக்ஷத்தை 'கவடு' என்று கூறுவார்கள். ஸ்வாமிகளின் வாக்கு வன்மையைக் கேள்விப்பட்ட நகரத்தார் பெருமக்கள் தங்கள்தங்கள் ஊர்களுக்கு விரும்பி அழைத்தனர். ஸ்வாமிகளும் அவர்களின் அழைப்பை மனமுவந்து ஏற்றுக்கொண்டு காரைக்குடி, தேவகோட்டை, கீழச்சிவல்பட்டி, கோவிலூர் என்று பல ஊர்களுக்கும் சென்று பிரவசனம் செய்தார். மக்களை – குறிப்பாக நகரத்தார் பெருமக்களை திருவைந்தெழுத்தை ஓதுதல், திருநீறு பூசுதல், ருத்ராக்ஷம் தரித்தல் என்ற சைவத்தின் மும்முனை மார்க்கத்தில் ஈடுபடச் செய்தார்.

(ஸ்வாமிகளைப்பற்றித் தெரியாதவர்கள்கூட அவர்காட்டிய வழியை இன்றும் பின்பற்றிவருவது பெரும் மகிழ்சிக்குரியது.)

மஹாசந்நிதானம் அவர்களின் ஆன்மீக ஆற்றலைக் கண்டுமகிழ்ந்த அரிமழம் நகரத்தார் பெருமக்கள் அவரிடம் ஒரு பெரிய பொறுப்பை ஒப்படைத்தனர்.

அது என்ன பொறுப்பு ?

"கவடு அணிந்தால் பிறவாமை கிட்டும்
கவடு அணிந்தால் குலம்தழைத் தோங்கும்
கவடு அணிந்தால் சிவனாவர் அன்பர்
கவடு அணிந்துய்வோம் நாம்."



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அரிமழம் நீர்வளம் மிகுந்த ஆறும், குளங்களும், கண்மாய்களும் நிறைந்த ஊராய் இருந்தது என்று முன்னரே பார்த்துள்ளோம்.

இந்த ஊரில் பெரிய பொற்குடான், சிறிய பொற்குடான் என்ற இரண்டு குளங்கள் மிகப் பிரசித்திபெற்றவை. பெரியபொற்குடான் என்பது குளிப்பதற்காகவும், சிறிய பொற்குடான் என்பது ஊர்மக்களின் குடிநீர் தேவைக்காகவும் கட்டமைக்கப்பட்டவை.

இவை தோன்றிய வரலாறுகள் மிக சுவாரசியமானவை.

செட்டிநாட்டுப் பகுதியில் நகரத்தாரிடையே ஒரு முக்கியமான கட்டுப்பாடு உண்டு. அதாவது கோயில் கோபுரத்தைவிட வீடுகளை உயரமாகக் கட்டக்கூடாது என்பதாகும். அப்பொழுது அரிமழத்தில் சிவலிங்க விக்கிரஹம் ஒரு மேடையில் எழுந்தருளப்பட்டு, அதற்கு மேலாக கூரை வேயப்பட்டிருந்தது. அது ஆலயமாகக் கொண்டாடப்பட்டது.

அரிமழத்தில் நேமம் கோயில் பிரிவைச் சேர்ந்த நகரத்தார் ஒருவர் மாடி வைத்து வீடு கட்டி விட்டார். அது சிவபெருமான் கோயிலைவிட உயரம் அதிகமாகிவிட்டது.

இதனால் அவர்மீது மற்ற நகரத்தார்கள் புகார் செய்து விசாரணைக்கு ஏற்பாடு செய்தனர். நகரத்தார்கள் கூடினர். விசாரணை நடைபெற்றது.

மாடி எழுப்பி கோயிலைவிட உயரமாக வீடு கட்டியது தவறு என்று தீர்ப்பாகியது.

நகரத்தார் பஞ்சாயத்தின் தீர்ப்பு இவ்வாறு அமைந்தது:

'நகரத்தார்களின் கட்டுப்பாட்டைமீறி மாடிவைத்து வீடு கட்டியது குற்றம் என்பதை இந்த நகரக் கூட்டம் உறுதி செய்கிறது. எனவே நேமம் கோயிலூராருக்கு ரூபாய் இருபதினாயிரம் தண்டம் விதிக்கப்படுகிறது.'

நேமம் கோயிலூராரின் பதில் இவ்வாறு அமைந்தது:

'நடந்த தவறை ஒப்புக்கொள்கிறோம். பணமும் செலுத்தத் தயாராக உள்ளோம். ஆனால் தண்டனை என்பதற்குப் பதிலாக இவ்வூருக்கு தர்மமாக அந்தத் தொகை பயன்பட வேண்டும் என விரும்புகிறோம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இந்நகர மக்கள் அனைவருக்கும் பயன்பாட்டிற்காக ஒரு ஊரணி அமைத்துத் தருகிறோம்.'

பஞ்சாயத்தும் அவர்களின் நியாயமான கோரிக்கையைப் பெருந்தன்மையுடன் ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.

நேமம் கோயிலைச்சேர்ந்த அன்றைய கணக்கிற்கு 45 புள்ளிகளாலும் சேர்ந்து 'பொற்குடான்' ரூபாய் இருபதினாயிரம் செலவில் கட்டப்பட்டது. (இன்று இரண்டுகோடி செலவானாலும் இப்படிக் கட்டமுடியாது.)

முதலில் மாடிவைத்துக் கட்டியதால் இன்றும் அவர்கள் வீடு மாடிவீடு என்றே அறியப்படுகிறது.

ஒருவர் ஊருக்கு நல்லது செய்தால் மற்ற நகரத்தார் சும்மா இருப்பார்களா ?

'45 புள்ளிகள் உள்ள நேமம் கோயிலைச் சேர்ந்தவர்கள் 'பொற்குடான்' கட்டினால் 89 புள்ளிகள் உள்ள நாம் பெரிய குளமாகக் கட்ட வேண்டாமா ?' என போட்டிபோட்டுக்கொண்டு பொற்குடானின் கிழக்கே பெரிய குளமாகக் கட்ட ஆரம்பித்தனர் வைரவன் கோயிலைச் சேர்ந்தவர்கள். அழகான மைய மண்டபத்துடன் அக்குளம் அருமையாக, பிரம்மாண்டமாக எழுந்தது. அளவில் பெரியதான இக்குளம் 'பெரிய பொற்குடான்' என அழைக்கப்பட்டது. அனைத்து மக்களும் நீராடுவதற்குப் பலதுறைகளுடனும், நகரச் சிவன்கோயில் திருவிழாவில் தெப்போற்சவம் நடைபெறவும் இக்குளம் பயன்பட்டது. வருடம் 365 நாட்களும் நீர் நிரம்பி, மக்கள் குளிக்கவும்,துணிதுவைக்கவும் பயனுள்ளதாய் அமைந்திருந்தது.மிக மென்மையான தூய தண்ணீர். (Soft Water.)

இந்த பொற்குடான் ரூபாய் முப்பத்தையாயிரம் செலவில் கட்டப்பட்டது. இன்று பத்து கோடி ஆனாலும் கட்ட முடியாது. அளவில் பெரியதாய் இருந்ததால் இது 'பெரியபொற்குடான்' ஆனது.

"திருவாரூர் தேர் அழகு; திருவிடைமருதூர் வீதி அழகு;
திருவானைக்கா மதில் அழகு; அரிமழம் தெப்பம் அழகு."



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



என்பது போல் இப்பெரிய பொற்குடானில் சித்திரை மாதம் நடைபெறும் தெப்போற்சவம் மிகவும் பிரசித்தி பெற்றது. – சில காலங்கள் முன்பு வரை.

மற்றொரு குளம் அளவில் சிறியதாய் இருந்ததால் அது 'சின்னப்பொற்குடான்' ஆயிற்று. இதன் குடிநீர் அவ்வளவு சுவையானது. இந்த நீரின் சுவையில் மயங்கியவர்கள் மற்ற ஊர்களின் நீரைப்பருகவே விரும்ப மாட்டார்கள் என்றால் மிகையாகாது.

பார்த்தனர் மற்ற கோயில் புள்ளிகள். அவர்கள் பலரும் சேர்ந்து திருநந்தவனம், மடங்கள், வேதபாடசாலை, அன்னசத்திரம், தண்ணீர்ப்பந்தல், பெருமாள் கோயில், முருகன் கோயில் என்று தம் பங்கிற்கு நற்பணிகளில் ஈடுபட்டனர். இவை அனைத்திற்கும் ரூபாய் ஒருலக்ஷம்வரை செலவு செய்தனர்.

நற்காரியங்கள் புரிவதில் அன்றைய மக்கள், குறிப்பாக நகரத்தார் பெருமக்கள் எத்தகைய முனைப்புக் காட்டினர் என்பதை அறியும்பொழுது மகிழ்ச்சியாகவும், பெருமிதமாகவும் இருக்கிறது.

இத்தகைய காலத்திற்குச் சற்று முன்னதாகவே, (அதை ஒட்டியும்) நம் மஹாசந்நிதானம் அவர்களின் அரிமழம் விஜயம் அமைந்தது.

அவரின் பெருமையை அறிந்திருந்த நகரத்தார் பெருமக்கள் குடிசையில் குடிகொண்டிருந்த சிவபெருமானுக்குக் கும்பாபிஷேகம் நடத்தித்தரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என வேண்டினர்.

ஸ்வாமிகள் அவர்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டாரா என்பதை அறிந்து கொள்வதற்கு முன்பு

சிவலிங்கம் ஒரு ஓலைக்குடிசையின்கீழ் அமர்ந்த பின்னணி என்ன?

"நீர்மலி நல்லூர் அரிமழம் ஓங்கிடநற்
பேர்மலி நல்லோர் அகழ்ந்த குளங்கள்
பெருமைசேர் பொற்குடான்கள் நாளும் நிலையாய்
பகருமே அன்னார் புகழ்."



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அரிமழத்திலிருந்து திருநெல்வேலி வந்தார் ஸ்வாமிகள்.

அவரின் அணுக்கச் சீடர்களான நாராயணசிவம், ரங்கநாதசிவம், சேரை சுந்தரபாண்டிய பிள்ளை, ஐயாசாமி பிள்ளை, சிதம்பரம் பிள்ளை மற்றும் நெல்லை பாலகிருஷ்ண கனபாடிகள், சோழநாட்டு முத்து கனபாடிகள் ஆகியோரின் உதவியுடன் திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் இரண்டாம் முறையாக லக்ஷதீப விழாவைச் சிறப்பாக நிகழ்த்தினார். இது நிகழ்ந்தது 1870-ம் ஆண்டு தை அமாவாசை அன்று. மஹாருத்ராபிஷேகம், ரிஷபவாகனக்காக்ஷி முதலியனவும் நடைபெற்றன.

லக்ஷதீப விழாவைச் சிறப்பாக நடத்தியபிறகு கோடகநல்லூர் வழியாக கங்கைகொண்டான் நோக்கிப்பயணமானார் ஸ்வாமிகள்.

ஒரு விடியற்காலை கருக்கல் நேரம்.

கங்கைகொண்டான் ஊரில் நுழைவதற்குமுன் தாமிரபரணி நதியில் கைகால்களை சுத்தம் செய்து கொண்டு படி ஏறி வந்தார் ஸ்வாமிகள். அங்கே எதிர்ப்பட்ட ஒரு அந்தணர் ஸ்வாமிகளை நோக்கிக் கடுமையான சுடுவார்த்தைகளை வீசினார். வேறு எவரும் அங்கே இல்லை.

'என்ன ஓய்! நீர் ஒரு பிராமணனா ? அதிவர்ணாஸ்ரமி என்று கண்டவர்களையும் கூடச் சேர்த்துக்கொண்டு ஊர் சுற்றுகிறீர். அவர்களுடன் சரிசமமாக அமர்ந்து சாப்பிடுகிறீர். எந்த வர்ணத்தவர் ஆனாலும் சந்நியாசம் ஏற்கத் தகுதி ஆனவர் என்று பிரச்சாரம் செய்கிறீர். ஸ்தீரிகளும் சந்நியாசம் ஏற்கலாம் என்கிறீர். நீர் சொல்வது, செய்வது எந்த தர்மத்தில் சேர்ந்தது.? எந்த சாஸ்திரத்தில் உள்ளது ? உம்மைப்போய் மகான் என்று கும்பிட ஒரு கூட்டம்.

செப்படி வித்தைக்காரன் மாதிரி ஏதேதோ மாயாஜாலம் பண்ணி ஜனங்களை ஏமத்தறீர். நீரெல்லாம் நம்ம ஜாதியிலே பிறந்து ஜாதிக்கே கெட்டபெயர் சேர்த்துட்டீர். உம்மை எவனாவது மதிப்பானா ?.......'

அவர் மனதிலுள்ள அழுக்கெல்லாம் வாய்வார்த்தைகளாய் நாராசமாய் வந்து விழுந்தன.

அவருடைய ஏச்சுக்கள் ஸ்வாமிகளின் மனதிலும், முகத்திலும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எத்தகைய சலனத்தையும் ஏற்படுத்தவில்லை.

வதனத்தில் எப்பொழுதும் திகழும் அதே புன்னகையுடன் அந்த அந்தணரைப் பார்த்து வார்த்தைகளில் அருள்பொங்கக் கூறினார்:

'நான் யார் என்று உனக்கு இன்னமும் தெரியவில்லை. கல்விகற்ற அகங்காரமும், ஜாதியின் மேல் உள்ள பிடிமானமும் உன்னை இவ்வாறு பேசச் சொல்லுகிறது. பண்பையும்,பணிவையும் தரவேண்டிய படிப்பு உனக்கு ஆணவத்தையும், அகந்தையையும் அளித்துள்ளது. இவை உன் கண்களை மறைக்கின்றன. இவற்றை சற்றே ஒதுக்கி வைத்துவிட்டு ஞானம், பக்தி என்ற கண்களால் எம்மைப் பார்.

சிலநொடிகள் உன்கண்களை மறைத்திருக்கும் மாயையை விலக்குகிறேன். நன்றாக பார்.

நீர் செய்த பூர்வஜன்ம புண்ணிய பலத்தால் வேறு யாருக்கும் இதுவரை கிட்டாத, இனியும் கிட்டமுடியாத காட்சியை உனக்குக் காட்டுகிறேன். நன்றாகப் பார்த்துக்கொள்.'

அந்தநொடி அங்கே ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

அதுஎன்ன அதிசயம் ?

"முற்றும் துறந்தநல் ஞானியை இவ்வுலகில்
முற்றும் உணர்ந்தோர் எவரும் இருப்பரோ ?
முற்றும் படித்தவோர் பண்டிதர் ஆயினும்
முற்றும் அறிவரோ சொல்."

அங்கே ஒரு அற்புதம் நிகழ்ந்தது.

அந்த பிராமணருக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. செயலற்ற நிலையை அடைந்தார்.

திடீரென்று கண்களைக் கூசச்செய்யும் ஒளிப்பிழம்பு ஒன்று எழுந்தது. அது மண்ணிற்கும், விண்ணிற்கும் இடையில் மிகப் பிரம்மாண்டமாக ஒளிர்ந்தது.

அதன் நடுவே மாபெரும் சிவலிங்கம் தோன்றியது. வெறும் கண்களால் அதன் பரிமாணத்தைப் பார்க்க



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



முடியாது, வெற்று வார்த்தைகளால் அதன் கம்பீரத்தை வர்ணிக்க முடியாது.

அந்த சிவலிங்கத்தின் சிரசில் ஐந்துதலை நாகம் படமெடுத்து ஆடியது;சீறியது.

செயலற்ற தன்மையிலும் அந்தக் காட்சியைக் கண்டு அந்தணர் ஆடிப்போய்விட்டார். எங்கே அந்த நாகம் தன்மீது பாய்ந்து கொத்திவிடுமோ என்று அச்சம் கொண்டார்.

உடல் முழுவதும் வியர்த்தது;நடுங்கியது;நாக் குழறியது.

இந்த அற்புதம் நீடித்தது விநாடி நேரம்தான்.

மீண்டும் இயல்பு நிலை அடைந்தார்.

எதிரே மஹாசந்நிதானம் அவர்கள் எப்பொழுதும்போல் சாந்தம் நிலவிடும் முகத்தில்

புன்னகை தவழ நின்றிருந்தார்.

நெடுஞ்சாண்கிடையாக அந்தப் படித்துறையிலேயே ஸ்வாமிகள் பாதத்தில் விழுந்தார் அந்தணர்.

'அபசாரம்!அபசாரம்!!தாங்கள் யார் என்று தெரியாது ஏதேதோ பேசிவிட்டேன். அடியேனை மன்னியுங்கள்.

எனக்கு புத்தி வந்தது. இந்த நாயேனையும் நயந்துவந்து ஆட்கொண்டீர். நான் செய்த பாக்கியமே பாக்கியம்......இனி நீரே எனக்கு குரு.'

'எழுந்திரு!உன்னுடைய அஞ்ஞானம் உன்னை அவ்வாறு பேசவைத்தது. ஆத்மஞானம் அடைய விரும்புபவன் சகல துவேஷங்களையும் விட்டவனாக இருக்க வேண்டும். அதேபோல் குறுகிய பற்றுகளையும், ஆசைகளையும் விட்டுவிட்டு ஸ்வதந்திரனாக இருக்க வேண்டும்.சிரமமில்லாமல் சுலபமாக மோக்ஷசாம்ராஜ்யத்தை அடைய குருவினைப் பற்றிக்கொள். அவரிடம் பக்திகொண்டு, ஞானமடைந்து முக்தி அடைவதே சிறந்ததாகும்.

உனக்கு இப்பொழுது எட்டு பெண்குழந்தைகள் உள்ளனர். அடுத்து உன் மனைவிக்கு ஆண்குழந்தை பிறக்கும். அந்தக் குழந்தைக்கு என் சிரசில் எது காட்சி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அளித்ததோ அதன் பெயரை வை."

ஸ்ரீஸ்வாமிகள் கங்கைகொண்டான் நோக்கிவிரைந்து சென்றார்.

அந்த அந்தணரின் மனைவிக்கு உரியகாலத்தில் ஆண்மகவு பிறந்தது.

அக்குழந்தைக்கு "நாகம்" என்று பெயர் சூட்டினர்.

கங்கைகொண்டானில் சிலகாலம் தங்கிவிட்டு ஸ்வாமிகள் திருநெல்வேலி திரும்பினார்.குறுக்குத்துறை சுப்ரமணியர் கோயிலில் தங்கினார். அவருக்கு அரிமழம் செல்ல வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

கிருஷ்ணதருவடியார் , சேரை சௌந்திரபாண்டியன்பிள்ளை ஆகியோர் ஸ்வாமிகளின் அருகாமையிலிருந்து அவருக்கு சேவைகள் புரிந்து வந்தனர். ஒரு வினாடிநேரம் கூட அவரைவிட்டுப் பிரியாதிருந்தனர். இந்நிலையில்

சேரை சௌந்திரபாண்டியன் பிள்ளை அவர்கள் இல்லத்தில் மறுநாள் காலை ஒரு மங்களகரமான நிகழ்ச்சி ஏற்பாடாகி இருந்தது. அதில் கலந்துகொள்ள ஸ்வாமிகளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு மாலை வீட்டிற்குச் சென்றார்.

அன்று இரவு பத்து மணிக்கு கிருஷ்ணதருவாடியரிடம் சொல்லிக் கொண்டு புதுக்கோட்டை கிளம்பி விட்டார் மஹாசந்நிதானம்.அங்கே ஒட்டுத்திண்ணைப் பரதேசியாரை சந்தித்துவிட்டு, அவருடன் அரிமழம் செல்ல சித்தம் என்பதைத் தெரிவித்தார்.

ஸ்வாமிகள் புறப்பட்டவுடன் தருவடியார் தன்னுடைய வீட்டிற்குச் சென்றார்.

மறுநாள் காலை வீட்டின் மங்களநிகழ்வு நிறைவுபெற்றது வழக்கம்போல் சேரைசௌந்திரபாண்டியன்பிள்ளை வேதாந்தபாடம் கேட்கவும், சேவை செய்யவும் குறுக்குத்துறை சுப்பிரமணிய ஸ்வாமி கோயிலுக்கு ஓடோடி வந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அங்கே ஸ்வாமிகளைக் காணவில்லை.பதறினார். துடித்தார். அக்கம் பக்கத்தில் உள்ள மனிதர்களிடம் துருவி துருவிக் கேட்டார். எவருக்கும் ஸ்வாமிகள் எங்கே சென்றுள்ளார் என்பது தெரியவில்லை.

தருவடியார் இல்லம் சென்றார்.அங்கே ஸ்வாமிகள் புதுக்கோட்டை புறப்பட்டுச் சென்ற செய்தியைத் தெரிந்து கொண்டார்.

வந்ததே கோபம் பிள்ளையவர்களுக்கு. தருவடியாரைத் திட்டித் தீர்த்தார்.

எதனால் இந்த சினம் ?

"சிவலிங்கச் சின்னமாய் காட்சி யளித்தாய்
பவபயம் நீங்க வழியும் உரைத்தாய்
குருவருள் ஒன்றாலே வீடுகிட்டும் என்றே
அருள்வாக்கு நல்கினாய் நன்று."

ஸ்வாமிகள் குறுக்குத்துறையில் இல்லை என்றவுடன் சேரை சௌந்திரபாண்டியபிள்ளை அவர்களுக்கு உடல் வியர்த்தது;இதயம் படபடவென அடித்துக் கொண்டது;செய்தி ஒன்றும் தெரிய வில்லையே என மனம் ஏங்கித் தவித்தது.

கிருஷ்ண தருவடியார் வீட்டிற்கு விரைந்து ஓடி வந்தார். ஸ்வாமிகள் புதுக்கோட்டை சென்ற விபரம் தெரிந்து கொண்டார்.

'இப்பிரயாணம் திடீரென இரவு நேரத்தில ஏற்பட்டதால் யாரிடமும் தெரிவிக்க இயலாமற் போய்விட்டது. எனக்கு மட்டுமே தெரியும்' என்று கூறிய தருவடியாரைப் பார்த்து சினந்து நோக்கினார்.

'அதெப்படி ஸ்வாமிகளைத் தனியாக அனுப்பலாம் ?

அவருடைய சௌகரிய அசௌகரியங்கள் நம்மை அன்றி யாருக்குத் தெரியும் ? அவருடைய மனோபாவங்கள் மாணவர் களாகிய நமக்குத்தானே தெரியும்.அவருக்கு எப்பொழுது என்னென்ன தேவை என்பது அவரின் அணுக்கத் தொண்டர்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



களான நாம்தானே அறிவோம். அவரைத் தனியாக அனுப்ப எப்படி உமக்கு மனம் வந்தது? அவருக்குத் தொண்டு செய்வதைவிட வேறென்ன முக்கியம் நமக்கு?

ஸ்வாமிகளைத் தனியாக இரவு பத்து மணிக்கு அனுப்பிவிட்டு வீட்டில் நீர் வசதியாகப் படுத்துத் தூங்கிவிட்டீராக்கும். கொஞ்சம்கூட குருசிந்தனை அற்றவராய் இருக்கிறீரே!' என சினத்தில் பொரிந்து தள்ளிவிட்டார்.

தருவாடியாருக்கும் தாம் செய்த தவறு அப்போதுதான் உறைத்தது.

'வீட்டிற்குச்சென்று சிலமாற்று உடைகளை எடுத்துக் கொண்டு உடனே புதுக்கோட்டை புறப்படப்போகிறேன்' என்றார் பிள்ளை. அவருடன் தருவாடியாரும் சிலமாற்று உடைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

இருவரும் உணவுகூட உட்கொள்ளாமல், காலம் தாமதியாது கிளம்பிவிட்டனர். இப்போது போல் அன்றைய நாட்களில் பேருந்து வசதி இல்லாததால் ஒரு குதிரை வண்டி பிடித்தனர். மாலை ஐந்து மணி அளவில் புறப்பட்டு மறுநாள் அதிகாலை மதுரை வந்தனர். அங்கிருந்து வேறொரு குதிரை வண்டியை அமர்த்திக் கொண்டனர். மதியம் ஒரு மணிக்கு திருப்பத்தூர் வந்தனர். அங்கிருந்து குதிரை வண்டியிலேயே பயணம் செய்து மாலை நான்கு மணிக்கு புதுக்கோட்டை வந்து ஸ்வாமிகள் இருக்கும் இடத்தை அடைந்தனர். அதுவரை ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தவில்லை. தொடர்ச்சியாக இருபத்து மூன்று மணிநேரப் பயணம் வண்டியிலேயே.

என்ன ஒரு குருபக்தி!

மஹாசந்நிதானம் இருக்கும் இடம் சென்று வந்தனம் செலுத்தினர். அவரைக்கண்டதும் ஆனந்தமும் துக்கமும் ஒன்றுசேர ஓவெனக் கதறி விட்டனர். ஸ்வாமிகள் ஆறுதல் கூறி அவர்களை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சாந்தப்படுத்தினார்.

மறுநாள் சீடர்களுடன் அரிமழம் புறப்பட்டார்.

அரிமழம் கோயில் திருப்பணிகளைப் பார்வையிட்ட மஹாசந்நிதானம் அவர்கள் மற்றொரு அரிய பணியை மேற்கொள்ள சித்தம் கொண்டார். அதை ஊர்ப் பெருமக்களிடமும் கூறினார். ஆனால் ஸ்வாமிகள் கூறிய திருப்பணியை மேற்கொள்ள மக்கள் அதிகம் சிரத்தை காட்டவில்லை.

பார்த்தார் ஸ்வாமிகள்.

உடனடியாக உண்ணாவிரதத்தை மேற்கொண்டுவிட்டார்.

ஊரார்கள் அக்கறை காட்டாத அவர் கூறிய அந்த அரியபணி என்ன ?

"அரிய பணிகள் பலநூறு செய்தான்
பெரியது என்று அவனுக்கு ஏதுமுண்டோ ?
பாதம் பணிந்தோர் பழவினை யாவையும்
போக்கும் புனிதன் அவன் ."

அரிமழம் எழுந்தருளியுள்ள மஹாசந்நிதானம் அவர்களை சிவராமன் செட்டியார், ராமன் செட்டியார்,வைத்தியம் கிருஷ்ண ஐயர், காமாக்ஷிஜோஸியர் குடும்பத்தினர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் பக்திசிரத்தையுடன் வரவேற்றனர்.

குடமுழுக்கிற்கான திருப்பணிகளைப் பார்வையிட்ட ஸ்வாமிகள் மனநிறைவடைந்தார்.

'அரிமழத்தில் ஆலயப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருவது அறிந்து மகிழ்கிறோம். இங்கு வரும் அன்பர்களுக்கு திருவமுது செய்விக்க ஏற்பாடுகள் ஏதும் செய்துள்ளீர்களா ?பழைய அன்னதான சத்திரம் எதுவும் செயல்பாட்டில் உள்ளதா ?'

'பழைமையான சத்திரம் இருந்தது.ஆனால் இப்பொழுது பயன்பாட்டில் இல்லை......'என்று மென்று முழுங்கினார்கள்.

'அனைவருக்கும் மூன்று வேளையும் உணவு அளிக்கும் விதத்தில் அன்னதான சத்திரம் ஒன்றை உடனடியாகத் தொடங்குங்கள்.முதலில் இக்குறையை நீக்குங்கள்.வருவோருக்கு விருந்தளிக்கும் சத்திரத்தை நிறுவுங்கள்' என ஆணையிட்டார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சத்திரம் தொடங்க வேண்டிய அவசியத்தையும் பலரிடம் வலியுறுத்திக் கூறினார். செல்வந்தர்களோ இதற்கு செவிமடுக்க வில்லை. இதற்கு மனமொப்பாதிருந்தனர்.

பார்த்தார் ஸ்வாமிகள்.

அன்னசத்திரம் ஸ்தாபித்தாலன்றி உணவொன்றும் உட்கொள்ளேன் என்று வீரசபதம் செய்தார். அன்றே அறவழிப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்து விட்டார்.

பிறர் பசிதீர்க்க பலநாள் பட்டினி கிடந்தார். மகான் பட்டினி இருப்பதைப் பார்த்து சகியாத கிருஷ்ண ஐயரும், காமாக்ஷி சாஸ்திரிகளும் நகரத்தார் பெருமக்களிடம் சென்று பேசினார்கள். தவத்திருமேனி வாடுவது ஊருக்கும், மக்களுக்கும் தீங்கு விளைவிக்கும் என்ற சாஸ்திர விதிகளை எடுத்துக் கூறினர்.

பக்தசிகாமணிகளான தனவைசியர்களும் அவர்களின் தரப்பை ஏற்றுக் கொண்டனர். கூட்டமாக அனைவரும் சென்று ஸ்வாமிகளைத் தரிசித்தனர். தங்கள் தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

தாங்கள் தயை நிறந்தவர்கள் என்று செயலில் காட்டினர்.

1854–ல் அவர்கள் எழுப்பிய அன்னதான சத்திரம் நூறாண்டுகளுக்கு மேல் செயல்பாட்டில் இருந்தது நிதர்சன உண்மை.

மஹாசந்நிதானம் அவர்கள் இட்ட கட்டளையைத் தலைமேல் ஏற்றுக் கொண்டனர். ஆலயப் பணிகளையும், அன்னதான சத்திரப் பணிகளையும் மிகச் செவ்வனே செய்து முடித்தனர். அக்கோயிலைத் திருத்தி அமைத்ததும் அது இந்திரலோகம்போல் காட்சி அளித்தது.

மஹாசந்நிதானம் அவர்கள் கும்பாபிஷேகத்திற்கு நாள்குறித்தார். ஜீரணோத்தாரணம் செம்மையாகப் பூர்த்தி ஆனதும் குறிப்பிட்ட நன்னாளிலே புனிதநீர்நிறைந்த கடங்களை அவர் தொட்டு ஆசிர்வதிக்க, வேதகோஷங்கள் விண்ணைமுட்ட, மேளதாளங்கள் முழங்க, பக்தர்களின் ஆரவாரத்துடன் கும்பாபிஷேகம் மிக மங்களகரமாக நடைபெற்றது.

மக்களிடையே தெரிந்தோ, தெரியாமலோ பக்தி வெள்ளம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பெருகி ஓடியது. கடவுள் சிந்தனை மிக்கெழுந்தது.

கும்பாபிஷேகத்தின் சிறப்பு நிகழ்ச்சியாக வையை ராமசாமி சிவன், வைத்தியநாத சிவன் ஆகியோரின் இசைக் கச்சேரி நிகழ்ச்சி ஸ்வாமிகளின் முன்னிலையில் நடைபெற்றது.

அவர்களை ஆசிர்வதித்து சன்மானங்களை வழங்கினார்.

இந்தக் கச்சேரி நிகழ்த்தியபொழுது சிவன் சகோதரர்களுக்கு வயது பதின்மூன்றும், பதினொன்றுமாகும். ஸ்வாமிகளுக்கு வயது இருபத்துநான்கு. இந்தவயதுகளை வைத்துக் கணக்கிட்டால் கும்பாபிஷேகம் நடந்த ஆண்டு 1854, ஆனந்த வருஷம், ஐப்பசி மாதமாகும்.

(இக்குறிப்புகளை ஒட்டியே வா.சு.கோமதி சங்கர ஐயர், சுவாமி ராமானந்த பாரதி,ஸ்ரீயக்ஞ சுப்ரமணிய சர்மா என்கிற ஜி.கே.சுப்பையர், ஏ.வி.சுப்ரமணிய ஐயர் ஆகியோரின் செய்திகள் அமைகின்றன.

1848–ல் காசிநகரில் ஸ்ரீகணபதிமுனீந்தரர் அவர்களுடன் இணைந்து நடத்திய ஸ்ரீவிஸ்வநாதர் ஆலய கும்பாபிஷேகத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் ஸ்ரீஸ்வாமிகளால் முதன்முதலாக நடத்தப்பட்ட கும்பாபிஷேகம் அரிமழம் கும்பாபிஷேகமே ஆகும்.)

ஸ்வாமிகள் மொத்தம் எத்தனை கும்பாபிஷேகங்கள் நடத்தியுள்ளார் ?

"கடையோரும் நற்கதி பெற்றுய்ய நாளும்
மடைதிறந்த வெள்ளம் எனக்கருணை நல்கி
சடைபுனைந்த மேனிக்குப் பஞ்சமுக நாகம்
குடைபிடித்த ஈசனே போற்றி."

மஹாசந்நிதானம் அவர்கள் ஆன்மீகத்தில் மூன்று விஷயங்களில் அதிக கவனம் செலுத்தினார்.

அவையாவன :

1) கோயில் கும்பாபிஷேகம்;

2) அன்னதானம்;

3) ஆலயங்களில் தீபவழிபாடு செய்தல்.

எங்கெல்லாம் ஆன்மீக அன்பர்கள் ஒன்றுகூடி, நீண்ட



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



காலமாக குடமுழுக்கு நடைபெறாத தங்களுடைய கோயில்களின் பால் கவனம் வைக்கும்படி வேண்டுகோள் வைக்கிறார்களோ அதை உடனடியாக ஏற்றுக்கொண்டு செயலில் இறங்கிவிடுவார். அவர் முயற்சியால் கும்பாபிஷேகம் கண்ட ஆலயங்கள் பற்றி ஒவ்வொன்றாய் சரிதத்தின் போக்கில் காண்போம்.

பெருமைமிக்க அரிமழம் நகரசிவன் கோயில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட முக்கியப் பிரமுகர்களில் காரைக்குடி அருகிலுள்ள கோயிலூர் வேதாந்த மடத்தலைவராகிய சிதம்பர ஐயா என்பவரும் ஒருவர். ஸ்வாமிகளின் அருட்பெருக் கெடுத்தோடும் ஆன்மீக உரைகளாலும், உபதேசங்களாலும், செயலாற்றலாலும் கவரப்பட்டு, அவருக்குப் பக்கபலமாக இருந்து கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற உழைப்பை நல்கினார்.

கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்ற பிறகு ஸ்வாமிகளைத் தம்முடைய மடத்திற்கு எழுந்தருளும்படி வேண்டினார்.ஸ்வாமிகள் உடன்பட்டதும் அவரை அழைத்துக்கொண்டு

காரைக்குடி, தேவகோட்டை, கல்லல், புதுவயல், கோட்டையூர், பள்ளத்தூர், கானாடுகாத்தான், நேமத்தான்பட்டி, கீழச்செவல்பட்டி, கொத்தமங்கலம், கடியாபட்டி, ராயவரம் முதலிய இடங்களுக்குச் சென்றார். அனைத்து இடங்களிலும் ஸ்வாமிகளின் பிரசங்கத்திற்கு ஏற்பாடு செய்தார். ஸ்வாமிகளின் வேதாந்த செய்திகளைக்கேட்ட மக்கள், நெறிமுறை தவறாத ஒழுக்கத்தை மேற்கொள்ள உறுதி ஏற்றனர்.

சிலருக்குப் பஞ்சாட்சர உபதேசம் செய்தார்; சிலருக்கு வேதாந்தச் செய்திகளை அறிவுறுத்தினார்; சிலருக்கு யோக மார்கத்தை போதித்தார்; சிலருக்கு சகஜநிஷ்டை கூடும்படியான ஆற்றலை அளித்தார்...... இவ்வாறு நகரத்தார் யாவரையும் சிவகிருபைக்கு ஆளாகும்படி அருள்புரிந்தார்.

ஸ்வாமிகளின் உபதேசத்தைப் பின்பற்றி அவர்கள் நெற்றி, நெஞ்சு, வயிறு, கை, புஜம் முதலிய இடங்களில் விபூதியைப் பூசியும், கழுத்தில் ஏக ருத்ராக்ஷம் அணிந்தும், நாவில் எப்பொழுதும் திருவைந்தெழுத்தை நிறுத்தியும் சிவனடியார்களாகவே காட்சி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அளித்தனர். பலரும் வேஷ்டியைக் கச்சம் வைத்துக்கட்டியே அணிந்தனர்.

சிவன் கோயில் திருப்பணிகள் செய்தல், குளம் வெட்டுதல், நந்தவனம் அமைத்தல், கோசாலைகள் பராமரித்தல், திருமதில் எழுப்புதல், கோபுரம் கட்டுதல், அன்னதான சத்திரம் நிர்வகித்தல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், சிவதர்மங்களுக்கு வாரி வழங்குதல் என்று தூயமனம் தோன்றும்படி செய்தருளினார்கள்.

செட்டிநாடு மட்டுமன்றி தமிழகம் முழுவதும் மஹாசந்நிதானம் அவர்களின் மாண்பை மக்கள் அறிந்து கொண்டனர்.

அரிமழம் கும்பாபிஷேக நிகழ்ச்சியில் பங்கேற்க வந்திருந்த தில்லைவாழ் தீக்ஷிதர்கள் ஸ்வாமிகளை சிதம்பரம் க்ஷேத்திரம் வருகை புரிந்து அருளவேண்டும் என விண்ணப்பித்திருந்தனர்

ஸ்வாமிகளும் தனது செட்டிநாட்டு யாத்திரையை பூர்த்தி செய்தபின்னர் தில்லைப்பதியை அடைந்தார்.

அங்கு நிகழ்ந்த வியத்தகு அற்புதங்கள் யாவை?

“கல்லல் புதுவயல் நேமத்தான் பட்டியொடு
நல்லதோர் கானடு காத்தானும் கோவிலூர்
தேவகோட்டை காரைக்குடி பள்ளத்தூர் ராயவரம்
நேயமுடன் சென்றான் குரு.”

செட்டிநாட்டை விட்டுப் புறப்படும் முன்னர் தேவகோட்டை நகரத்தார் பெருமக்களிடையே ஸ்ரீஸ்வாமிகள் உரை நிகழ்த்தியதாவது:

‘இப்பொழுதே கலிமுற்றிவிட்டது’ என்ற பேச்சு கேட்ட ஆரம்பித்து விட்டது. இந்த நிலை போகப்போக இன்னமும் மோசமடையும். பிறரைவிட நம்மக்களே நமக்கு எதிராக இருப்பார்கள்.

இதிலிருந்து மீண்டு நாம் இறைவனைக் காண்பது எப்படி?

கலியுகத்தில் இறை நாம ஸ்மரணையும்,பஜனையும் நம்மைக் கடைத்தேற்றும் வழிகள் ஆகும். சங்கீத மார்கமாகவும் இறைவனை எளிதில் அடையலாம்.காம,க்ரோத.கோபங்களை விட்டுவிட



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வேண்டும். அறத்தின்வழி அனைவரும் நில்லுங்கள்.

அறம் என்பது என்ன?

'விதித்தன செய்; விலக்கியன நீக்கு' என்பதாகும். அவரவர் கடமைகளை அவரவரே செய்தல் வேண்டும்.

மற்றவர்கள் கடமையைப் பறித்துக் கொள்வது மிருகங்களின் செயலாகும். எந்தக் காரியங்களை செய்யக்கூடாது என்று கூறப்பட்டுள்ளதோ அவற்றை விட்டுவிடுங்கள். நாமஜபம். நாம சங்கீர்த்தனம் செய்தால்தான் ஈஸ்வர சாந்நித்தியம் கிட்டும்.

தர்மம் எவை, அதர்மம் எவை என்று அனைவருக்கும் தெரியும். அதர்மத்தை நடக்கவிடாமல் தடுக்க வேண்டிய கடமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு.

தர்மத்திற்கு சோதனை வந்தால் அதை உயிரைக் கொடுத்தேனும் தடுக்க வேண்டும். தர்மத்தை நிலைநாட்டும் பொறுப்பு அனைவருக்கும் பொதுவானது. தன் உயிர்போனாலும் அதர்மம் நடைபெறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இன்று சனாதனதர்மம் என்று அறியப்படும் வாழ்க்கைமுறை ஆதியற்றது—வரலாற்றுக்கெல்லாம் முந்தையது. நமது தர்மம் மட்டுமே ஒரு மனிதனை மனிதனாக்குகிறது. தானாகவே மெய்யை உணரச் செய்கின்றது. இறுதியில் அவனை இறைவனுடன் ஒன்றச் செய்கிறது.

ஒருவன் தன் வாழ்வை ஒழுக்கமாகவும், நிறைவாகவும், கட்டுப்பாட்டுடனும் வாழ உதவும் கோட்பாடுகளை வலியுறுத்துவது சனாதன தர்மம்.

சத்தியத்தைப் பேசுதல், இனிமையானவற்றைப் பேசுதல், பெரியவர்களை மதித்தல், சுத்தம் பேணுதல், சாத்வீகமான—ஆரோக்யமான உணவுகளை உட்கொள்ளுதல், ஜீவகாருண்யம், இறைவனையும் குருவையும் ஆன்மசுத்தியுடன் வணங்குதல்..... இதுபோல் பல உயர்ந்த கூறுகளைக்கொண்டது. இவற்றை சிலமாதப் பயிற்சிகளால் அடையமுடியாது. இவற்றைப் பின்பற்ற ஆன்மீக பலம் தேவை.

எப்பொழுதும் மனதை சுத்தமாக வைத்துக் கொண்டால் அஞ்ஞானம் நீங்கிவிடும். அப்பொழுது தர்மம் இதுதான் என்பது



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தெற்றென விளங்கிவிடும். இந்நிலையில் குரு உபதேசம் கிடைத்தால் அக இருள்நீங்கி ஞானோதயம் கிட்டுகிறது. ஸத்குருவை அடைந்தாலே மானிட ஜன்மம் எடுத்ததற்கான பலன் கிடைக்கிறது. குரு சொல்லுவதை கிரஹித்துக் கொள்ளுங்கள். உங்கள் மனதின் பரிபக்குவத்திற்கு ஏற்றபடி குருவின் உபதேசம் பல உட்பொருள்களை விளக்கும்.

உண்மையை விரித்துப் பார்க்கின் குரு என்பவர் ஈஸ்வரனுக்கு மேலே என்று கூறலாம். இறைவன் கோபித்துக் கொண்டால், குரு தன் சீடனுக்காகப் பரிந்து பேசி அவரின் கோபத்தைத் தணிக்க முடியும். ஆனால் குரு கோபித்துக் கொண்டால் ஈஸ்வரன்கூட சிஷ்யனுக்குப் பரிந்து பேச வரமாட்டார்.

ஒரு கல்லைக்காட்டி 'இதுதான் இறைவன்' என்று குரு சொன்னால் அந்தக் கல்லை வணங்குங்கள். குரு சொல்லிவிட்டால் கல்கூட தெய்வம் ஆகிவிடும்.

மற்றவர்களுக்குக் கல்லைக் கடவுளாக்கும் ஆற்றல் கிடையாது.

அனைவருக்கும் ஆசிர்வாதம்!'

தில்லைச்சிற்றம்பலம் அடைந்ததும் 'ஒரு கோயிலின் முதன்மையான சந்நிதிக்கு கும்பாபிஷேகம் நடத்தித்தர வேண்டும்' என்று ஸ்வாமிகளிடம் விண்ணப்பிக்கப்பட்டது.

அது என்னகோயில்?
என்ன சந்நிதி?

"வருவினைகள் நீக்கும் வழிமுறை சொன்னாய்
இருவினை போக்கி இறையடி சேரும்
அருளினைக் காட்டிய அன்பநின் பொன்னார்
திருவடி போற்றினோம் என்றும்."

### சிதம்பரம்

தில்லை மரங்கள் அடர்ந்த வனமாக இருந்ததால் 'தில்லை வனம்' என அழைக்கப்பட்டது. இந்நகரின் வடபகுதி 'பெரும்பற்று' என்று அறியப்பட்டது. இங்குள்ள ஈசனை புலிக்கால்களை உடைய



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'வியாக்ரபாதர்' என்ற முனிவர் வழிபட்டதால் 'பெரும்பற்றப்புலியூர்' என்ற பெயர் ஏற்பட்டது.

'அருவ வழிபாடு' என்னும் உருவமற்ற வழிபாடு இங்குள்ள சிற்சபைக்கு வலப்புறத்தில் உள்ள சிற்றறையில் நடைபெறுகிறது. இங்கு தங்கத்தால் ஆன வில்வதள மாலை மட்டுமே தொங்க விடப்பட்டிருக்கும். இங்கே இறைவன் 'ஆகாயம்' என்னும் வெட்டவெளி வடிவில் உள்ளார் என்பது ஐதீகம்.

திருவாசகத்தில் கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம் என்று மாணிக்கவாசகர் சிறப்பித்துக் கூறும் கோயில் சிதம்பரம் திருத்தலத்தையே குறிக்கும்.

274 தேவாரத் திருத்தலங்களுள் தில்லையம்பதியே முதன்மையானது. உலக சிவாகமங்கள் இரவில் வந்தடைவது இத்தலத்தையே. எனவே இங்கு அர்த்தஜாமம் இரவு 10.30 மணிக்கு நடைபெறும்.

சைவசமயக் குரவர்கள் நால்வர் ஒவ்வொருவரும் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று கோயிலின் ஒவ்வொரு கோபுர வாசல்வழியாக வந்து இறைவனைத் தரிசித்துள்ளனர்.

நடராஜரின் ஐந்து சபைகளில் இது 'கனகசபை' ஆகும்.

பஞ்சபூதங்களில் ஆகாய சக்தியான சிதம்பரம், வாயு சக்தியான காளஹஸ்தி, பூமி சக்தியான காஞ்சிபுரம் ஆகிய மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் அமைந்துள்ளன என்று இன்றைய விஞ்ஞானிகள் எட்டு வருட ஆராய்ச்சிக்குப்பின் கண்டுபிடித்துள்ளனர்.

ஆனால் இதையே ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருமூலர் சொல்லிவிட்டார்.

சிதம்பரம் கோயில் மனித உடல் தத்துவத்தை வைத்தே உருவாக்கப்பட்டுள்ளது.

நமது உடலில் ஒன்பது வாசல்கள்; சிதம்பரம் கோயிலுக்கும் ஒன்பது வாசல்கள்.

கோயிலின் கூரை 21,600 தங்கத் தகடுகளால் அமைக்கப்பட்டுள்ளது. மனிதனின் ஒரு நாளைய சுவாசத்தின்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அளவு 21,600.

இந்தத் தகடுகள் 72,000 ஆணிகளைக்கொண்டு பொருத்தப் பட்டுள்ளது. இது மனித உடலில் உள்ள 72,000 நரம்புகளைக் குறிக்கிறது.

பொன்னம்பலம் சற்றே இடது புறம் சாய்ந்துள்ளது. நம் இதயமும் இடதுபுறத்தே உள்ளது.

பொன்னம்பலத்தை அடைய ஐந்து படிகள் ஏறவேண்டும். நாம் முக்தி அடைய பஞ்சேந்திரியங்களையும் வெல்ல வேண்டும்.

சிதம்பரம் கிழக்கு கோபுரத்தில் சிலைகள் ஏதும் இல்லை.

திருச்சிற்றம்பலம் என்பது நம்முள் இருக்கும் ஆன்மாவைக் குறிக்கிறது. அதை உணர்த்தவே ஈசன் இங்கே ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறார். திருச்சிற்றம்பலம் என்று நாம் சொல்லச் சொல்ல மாயை விலகும், ஞானம் பிறக்கும். நம் பாவச்செயல்கள் நீங்கி புண்ணியம் சேர்கிறது.

இந்தப் புண்ணிய நகருக்கு மேலும் புனிதம் சேர்க்க நம் மஹாசந்நிதானம் அவர்கள் தில்லையம்பதியில் திருவடி எடுத்து வைத்தார்.

1855 ம் ஆண்டு ஆனந்த வருடம் தை மாதம் சிதம்பர க்ஷேத்திரம் எழுந்தருளினார்கள்.

வேதத்திலும், சாஸ்திரப் பயிற்சியிலும், வேதாந்தத்திலும் அறிவும், அனுபவமும் மிக்க தீக்ஷிதர்கள் அனைவரும் ஸ்வாமிகளிடம் பேரன்பு கொண்டு வரவேற்றனர். பரம்பரை பரம்பரையாக இறைவனுக்கே தொண்டு செய்யும் 'தில்லைவாழ் அந்தணர்கள்' வேண்டிய உபசாரங்களைச் செய்தனர்.

ஸ்வாமிகள் கோயிலிலேயே தங்கினார். தீக்ஷிதப் பெருமக்கள் அவரைச்சுற்றிப் பணிவுடன் அமர்ந்து கொண்டு வேதாந்த பாடங்கள், சிற்ப சாஸ்திரம் மற்றும் கலை சம்பந்தமான ஐயங்களைக் கேட்பார்கள். அவர்களின் ஐயங்கள் அனைத்தையும் ஸ்வாமிகள் நிவர்த்தி செய்து வைப்பார்.

ஸ்வாமிகள் ஆலயத்தில் தங்கி இருக்கும் தருணத்தில் கீழரத



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வீதியில் – கிழக்குவாசல் தெருப்பக்கத்துக் கோடியில் ஒரு காட்சியைக் கண்டார். அது அவரை மிகவும் பாதித்தது.

மனதை பாதிக்கும் அளவிற்கு அவர் கண்ட காட்சி என்ன?

"தில்லைவாழ் அந்தணர் யாவரும் அன்பினால்
கல்வியில் தேர்ந்தவன் உன்பதம் போற்றியே
செவ்விய ஞானம் அடைந்தனர் உன்புகழ்
செப்புதல் யார்க்கும் அரிதாம்."

சிதம்பரத்தில் தங்கி இருந்த காலத்து கீழரத வீதியில் நிலைபெற்றிருந்த தேர் ஒன்று கீலமாகிக் கிடந்ததைப் பார்த்தார் ஸ்வாமிகள். அந்தக் காட்சியைக் கண்டதும் மனம் பதைபதைத்தார்.

ஆகாய க்ஷேத்திரம் என்ற புகழ்பெற்றது இத்தலம். தில்லை நடராஜரை ஒருமுறை தரிசித்தாலேயே மோக்ஷம் கிடைத்துவிடும். உலகெங்கிலுமிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாய் வந்து தரிசிக்கும் ஆலயம். மார்கழித் திருவாதிரை நாளும், ஆனித் திருமஞ்சனமும் சிறப்பாக நடைபெறும் கோயில்.

திருநீலகண்ட குயவனுக்கும் அவர் மனைவிக்கும் இளமையை மீண்டும் அளித்த புண்ணிய பூமி. நந்தனார் இறைவன் திருவடியை அடைந்த இடம், தேவாரமூவர் மற்றும் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் பாதங்கள் பட்ட மண்... இத்தனை சிறப்பு மிக்கதான புண்ணிய க்ஷேத்திரத்தின் கோயில் ரதம் பழுதடைந்து இருப்பது அந்த ஊருக்கும், நாட்டிற்கும் ஏன் உலகத்திற்கே கேடு என்பதை அறிந்தார்.

அந்தத் தேரை எவ்வாறேனும் பழுது பார்த்து தேர்த்திருவிழாவிற்குப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர சங்கல்பம் செய்து கொண்டார்.

தில்லைவாழ் தீக்ஷிதர்களிடம் தம் எண்ணத்தை வெளியிட்டார்.

தேர் வெகு ஆண்டுகளாகப் பயன்பாட்டில் இல்லாததால் மிகவும் பழுதுபட்டிருந்தது. அதைச் சீர் செய்ய மிகுந்த பொருட் செலவாகும். என்ன செய்வது?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உடனே தில்லையம்பதியிலிருந்து புறப்பட்டார். ரங்கநாதசிவம், சூரியநாராயண சிவம், ஐயாசாமிபிள்ளை, மாவடி சிதம்பரம்பிள்ளை, சேரை சௌந்திரபாண்டியன் பிள்ளை, பத்தமடை கிருஷ்ண ஐயர் ஆகியோருடன் திருவாடுதுறை, திருப்பனந்தாள், தருமபுரம் ஆகிய மடங்களின் மடாதிபதிகளைச் சந்திக்கச் சென்றார்.

கொழுமம் பண்ணையார், பச்சையப்ப முதலியார், கபிஸ்தலம் மூப்பனார், உக்கடைத் தேவர், பூண்டி வாண்டையார், கொடியாலம் வாசுதேவ ஐயங்கார், குன்னியூர் ஐயர் போன்ற பெரும் தனவந்தர்களையும் சந்தித்து நிதிதிரட்ட எண்ணம் கொண்டார்.

நாராயணசிவம், நடராஜசிவம், ஆவுடையப்பபிள்ளை, பஜனை கொ.சிதம்பரம்பிள்ளை ஆகிய நால்வரையும் சேலம் வட்டத்திலுள்ள முத்துகாபட்டி ஜமீன்தாரிணியைச் சந்தித்து நிதிவசூல் செய்ய அனுப்பினார். அந்த நால்வரையும் ஜமீன்தாரிணி அம்மாள் அன்புடன் வரவேற்றார்.

ஜமீன்தாரிணி அவர்கள் சிறந்த சிவபக்தை. மஹாசந்நிதானம் அவர்களிடம் பெரு மதிப்புக்கொண்ட மாணவி. அவர்கள் வந்த காரணம் யாதெனக் கேட்டார். ஸ்வாமிகளின் கட்டளையைத் தெரிவித்தனர். மூன்று நாட்கள் அவர்களைக் காத்திருக்கச் சொன்னார் ஜமீன்தாரிணி அம்மாள்.

மூன்று நாட்களுக்குப் பிறகு........

ஜமீன்தாரிணி அம்மாள் மிகவும் மனம் மகிழ்ந்து ஒரு பெரும்தொகையை அளித்தார் (அன்றைய மதிப்பிற்கு.) ஸ்வாமிகளை விரைவில் வந்து தரிசிப்பதாகவும் தெரிவித்தார்.

தீக்ஷிதர்களும் பெருமுயற்சி எடுத்து தத்தம் கட்டளைக்காரர் களிடம் நிதிவசூல் செய்தனர்.

நிதிவசூல் செய்ய தம் குழுவினருடன் முதலில் கபிஸ்தலம் சென்று மூப்பனாரை சந்திக்க எண்ணம் கொண்டார் ஸ்வாமிகள்.

கபிஸ்தலம் செல்லுங்காலத்து உமையாள்புரம் வழியே செல்லவேண்டி இருந்தது. காலை பத்து மணிக்கு உமையாள்புரம் சென்று சேர்ந்தனர். ஸ்வாமிகளும் ஏனையோரும் எங்கே தங்குவது,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எங்கே உண்பது என்ற எந்தவித சிந்தனையும் இன்றி தங்கள் திட்டத்தை நெறிதவறாமல், நேரம் தவறாமல் செய்வதிலேயே குறியாய் இருந்தனர்.

பத்துமணிக்குமேல் இனந்தெரியாத ஊரில் அதிதிகள் ஏழு பேருக்கு போஜனம் செய்விக்க நல்லமனம் படைத்தவர்கள் எவரேனும் இருப்பார்களா? அவ்வாறு எவரேனும் இருந்தாலும் இனிமேல் சமையல் முடிந்து சாப்பிட நேரமாகிவிடும்.

ஸ்வாமிகளுக்கு ஆகாரம் கிடைத்தாலும், கிடைக்கா விட்டாலும் ஒன்றுதான். தாங்கிக் கொள்வார். ஆனால் உடன் வந்த மற்றவர்கள்? அவர்களால் பசியைத் தாங்கிக் கொள்ள முடியுமா?

அருகில் இருந்த பிள்ளையார் கோயில் குளத்தில் முகம், கைகால் கழுவி படித்துறையில் அமர்ந்து ஓய்வு எடுத்தனர். மற்றவர்கள் பசி கண்டு பொறுக்காது அன்னதானசத்திரம் திறக்க உண்ணாவிரதம் இருந்த ஸ்வாமிகள் இன்று சிஷ்யர்கள் பட்டினி கிடப்பதைக் கண்டார்.

இந்த நிலையில் இவர்கள் இருந்த இடம் நோக்கி ஒரு அம்மையார் விரைந்து வந்தார்.

அவ்வாறு வந்தவர் சொன்ன செய்தியைக் கேட்டு ஸ்ரீஸ்வாமிகளைத் தவிர மற்றவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

அப்படி அங்கு வந்த அம்மணி என்ன கூறினார்?

"ஓடாத தேர்அசைய சிந்தனை செய்தனை
ஓடாய் உடல்தேய ஊரெல்லாம் சுற்றினாய்
நின்று வடம்பிடித்தோர் ஈசனின் நாட்டினில்
சென்று இடம்பிடித்தார் நன்று."

ஸ்வாமிகள் குழுவினரை நோக்கி ஒரு அம்மாள் மிக விரைவாக ஓடிவந்தார்.

'அபசாரம்! அபசாரம்! மஹாசந்நிதானம் அவர்களைக் காக்க வைத்து விட்டேன். வாருங்கள்! நம் கிருஹத்திற்குச் செல்லலாம்.'

'அம்மா! நீங்கள் யார்? இந்தத் தள்ளாத வயதில், வேகாத வெயிலில் ஏன் இப்படி மூச்சிரைக்க ஓடி வருகிறீர்கள்? உங்கள் கிருஹம் எங்கே உள்ளது? எங்களை உங்களுக்குத் தெரியுமா?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



வேறு எவரையோ எதிர்பார்த்து அவர்கள் நாங்கள் என்று தவறாக எண்ணிவிட்டீர்களா?' – என்று சூரியநாராயண சிவம் அந்த அம்மையாரைப் பார்த்துக் கேட்டார்.

'உங்கள் யாரையும் நான் பார்த்ததில்லை. ஆனால் மஹாசந்நிதானம் அவர்களைப்பற்றி பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். அதுவும் நேற்றுத்தான்.

பிரும்மஞான ஸ்வரூபியாக அமர்ந்திருக்கும் இந்தக் கௌபீனதாரிதானே ஸுந்தரஸ்வாமிகள் எனும் பெரும் சித்தர். இத்தனை நேரம் எதோதோ பேசிக் கொண்டிருக்கிறேன் பைத்தியம் போல். முதலில் அவர் பாதம் பணிந்து அவரின் ஆசிகளை பெற்றுக் கொள்கிறேன்....' என்று சொல்லிக்கொண்டே ஸ்வாமிகளின் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தார் அந்த அம்மையார்.

'அம்மா! சபரியைப் போன்றவள் நீ. உன் ஜன்மம் கடைத்தேறி விட்டது. நீ யார் என்பதையும், இங்கே வந்த காரணத்தையும் இவர்களுக்குச் சொல்' என்று திருவாய் மலர்ந்தருளினார் ஸ்ரீ ஸ்வாமிகள்.

'என் பெயர் அன்னம்மாள். அன்பம்மாள் என்று தெரிந்தவர்கள் அழைப்பார்கள். உமையாள்புரத்தைச் சேர்ந்தவள். சிவபக்தை என்பதைத் தவிர என்னைப்பற்றி விசேஷமாக சொல்லிக் கொள்ள வேறொன்றும் இல்லை. நேற்று இரவு பதினொரு மணி இருக்கும். ஒருவர் என் வீட்டின் கதவைத் தட்டினார். கை விளக்குடன் கதவைத் திறந்தேன். வெளியில் யார் என்று பார்த்தேன். மெல்லிய வெளிச்சத்தில் ஒருவர் நின்று கொண்டிருந்தது தெரிந்தது. நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்? உங்களை இதற்குமுன் பார்த்த நினைவில்லையே!'

'நாராயணசிவம் என்பது எனது பெயர். பிரம்மஞானி சுந்தர ஸ்வாமிகளின் முக்கிய சிஷ்யன். ஸ்வாமிகள் வேதாந்த அறிவில் மிகச் சிறந்தவர். அவருக்கு நூற்றுக் கணக்கில் சிஷ்ய கோடிகள் உண்டு. அனைவருமே அவரால் பயிற்றுவிக்கப்பட்டு வேதாந்த விசாரத்தில் சிறந்து விளங்குபவர்கள்.

நாளை காலை பத்து மணி அளவில் மகாதபஸ்வியான



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீ ஸ்வாமிகள் அவருடைய சிஷ்யர்கள் ஆறு பேருடன் இந்த ஊருக்கு விஜயம் செய்கிறார்கள். இந்த ஊர் பிள்ளையார் குளப் படித்துறையில் இருப்பார்கள். அவர்களை வீட்டிற்கு அழைத்து வந்து அதிதி உபசாரம் செய்து பிக்ஷாபோஜனம் அளித்தல் வேண்டும். அவருடைய அருளாசிக்கு நீங்கள் பாத்திரர்களாக வேண்டும்.'

'ஐயா! நான் பரம ஏழை. எந்த வசதியும் அற்றவள். இந்த இரவு நேரத்தில் என் வீடு தேடி வந்து நாளை ஏழு பேருக்கு அதிதி போஜனம் செய்து வை என்று கூறுகிறீர்கள். மஹாதபஸ்விகளுக்கு பிக்ஷாதானம் செய்வது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும். ஆனால் பஞ்சபக்ஷ பரமான்னங்கள் சமைத்துப்போட முடியாது. என்னால் முடிந்ததை அந்த மகான்களுக்கு சமைத்துப் பரிமாறுகிறேன்.

ஆமாம். நீங்களும் வெகுதொலைவில் இருந்து அலைந்து திரிந்து வந்தவர்போல் காணப்படுகிறீர்கள். அரை மணிநேரத்தில் அன்னம் சமைத்து விடுகிறேன். மோர், ஊறுகாய் இருக்கு. சாப்பிட்டு விட்டுப் போங்கள்.'

'உங்களின் அன்பான உபசாரத்திற்கு நன்றி. எனக்குப் பசி இல்லை. மோர் மட்டும் கொடுங்கள். அருந்துகிறேன்."

'ஒரு குவளையில் மோர் கொடுத்தேன். வாங்கிக் குடித்து விட்டுப் புறப்பட்டார். இருட்டில் நொடியில் மறைந்து விட்டார்.

அவர் கூறியபடி ஏழு பேருக்கு சமைத்துவிட்டு வர சிறிது தாமதமாகி விட்டது. மன்னித்து விடுங்கள்.

இப்பொழுதே நேரமாகி விட்டது. மிகுந்த பசியில் இருப்பீர்கள்...'

'அம்மா! நாராயணசிவம் என்பவர் உம்மைத்தேடி நேற்று இரவு வந்ததாகக் கூறுகிறீர்கள். அவர் எப்படி இருந்தார்? இவர்களுக்குச் சொல்லுங்கள்' என்றார் ஸ்வாமிகள்.

அன்னம்மாள் நாராயணசிவனைப் பற்றிக் கூற ஆரம்பித்தார். அவர் பார்த்தது நாராயண சிவனைத்தானா?

"அன்னசத்ரம் வேண்டியே உண்ணா விரதமே
அன்று இருந்தாய் அரிமழம் ஊரில்
உடன்வந்தோர் உண்ணாமல் வாடி இருக்க



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



உடனேதாய் அன்னம்மாள் வந்தாள்."

அன்னம்மாள், ஸ்வாமிகளின் பிரதம சீடர் நாராயணசிவன் அவர்களின் உருவத்தைப் பற்றி வர்ணித்ததும் ஆறு பேரும் அசந்து போய் சிலையாய் நின்றனர். ஸ்வாமிகள் மட்டும் எதுவும் நடவாததுபோல் அமைதியாய் இருந்தார்.

அன்னம்மாள் வர்ணித்தது நாராயணசிவன் தோற்றத்தைக் கூறுவது போலவே இருந்தது.

நாராயண சிவன் மற்ற மூவருடன் சேலம் வட்டத்தில் உள்ள முத்துகாபட்டி சென்று இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. அப்படி இருக்கையில் எங்ஙனம் நேற்று இரவு உமையாள்ரம் வந்திருக்க முடியும்? விந்தையாகவன்றோ உள்ளது!

அவர்கள் அதிசயத்து வாய் பேசா மௌனிகளாயினர்.

தம் சீடர்களை அன்னம்மாளுடன் அவருடைய வீட்டிற்கு அனுப்பி அவர் சமைத்தனவற்றை பிள்ளையார் கோயிலிற்கு எடுத்து வரச்சொன்னார். அந்த ஏழை சமைத்த உணவு என்ன தெரியுமா?

அன்று அதிகாலை நாலரை மணிக்கே அன்னம்மாள் விழித்தெழுந்தார். ஸ்நானம் செய்து உலர்ந்த மடியைக் கட்டிக் கொண்டார். சிவத்தியானம் செய்தார். சிவபக்தியில் சிறந்தவரும், சிவத்யானத்தில் நிறைந்தவரும், எல்லா நற்குணங்களும் ஒருங்கே அமையப்பெற்றவருமான அன்னம்மாள் என்கின்ற அன்பம்மாள் ஸ்வாமிகளுக்கும், அவரின் மாணாக்கர்களுக்கும் நல்லமுறையில் பிக்ஷை அளித்து நற்புண்ணியம் தேடிக்கொள்ள விரும்பினார். அருமையிலும், அருமையாக அமைந்த இந்த சந்தர்ப்பத்தைக் கொண்டாட நினைத்தார். இதைப்பெரும் பாக்கியமாகக் கருதினார்.

அண்டை அசலில் சென்று சிறந்த விருந்திற்கான தானியங்களையும், காய்கறிகளையும், கனிகளையும் பெற்று வந்தார். ஊரில் அன்னம்மாளிற்கு நல்ல பெயர் இருந்ததால் அனைவரும் அவர் கேட்டதைத் தட்டாமல் கொடுத்தனர். சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டே பக்தி சிரத்தையுடன் சமையல் செய்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிக்ஷைக்கு ஏற்றபடி விதவிதமாக வர்க்கான்னங்களும், பொரியல், கூட்டு, துவையல், தயிர்ப் பச்சடி, அவியல், கோசுமலி, மோர்க்குழம்பு, பொரித்த குழம்பு, ரசம், கீரை வகைகள், நல்ல மணமும் சுவையும் நிறைந்த பால்பாயசம், அக்கார அடிசில், வடை, போளி முதலிய படைப்புகளுடன் என்று ராஜபோஜனமாக சமைத்தார். கெட்டித்தயிர், புத்துருக்குப் பசுநெய் மற்றும் முக்கனி வகைகளும் இருந்தன.

சுத்தமானதும் மணமிக்கதுமான உணவைத் தனியொருவராகச் சமைத்திருந்தார்.

இத்தனையையும் எடுத்துக்கொண்டு அன்னம்மாளும், சீடர்களும் ஸ்வாமிகள் இருந்த பிள்ளையார் கோயிலை அடைந்தனர்.

தம் வாழ்நாளை கோயிலுக்கே அர்ப்பணித்துத் தொண்டு செய்துவரும் பரம்பரையில் வந்த ஏழை பூஜகர் அங்கே இருந்தார். அவரை விநாயகருக்குத் தீபாராதனை காட்டச் சொன்னார் ஸ்வாமிகள். அனைவரும் இறைவனைத்தொழுது கற்பூரம் ஒற்றிக் கொண்டனர். அர்ச்சகர் கொடுத்த விபூதியைப் பணிவுடன் பெற்று நெற்றி மற்றும் உடலில் பூசிக்கொண்டனர்.

ஸ்ரீஸ்வாமிகள் தம் விபூதிப் பட்டையிலிருந்த விபூதியை அன்னம்மாளுக்குக் கொடுத்தார்.

பிறகு கோயில் நடை சாத்தப்பட்டது. கோயில் அர்ச்சகரையும் தங்களுடனேயே பிக்ஷை ஏற்றுக்கொள்ளச் சொன்னார்.

'அனைவரும் சேர்ந்தே உண்ணலாம். மொத்தம் ஒன்பது இலை போடுங்கள். நீங்கள் பரிமாறுங்கள்' என்று அம்மாளிடம் கூறினார். அனைவரும் வெளிமண்டபம் வந்தனர்.

ஸ்வாமிகள் தமக்கும், தம் வலப்பக்கத்தில் ஒருவருக்கும் இலை போடச் சொன்னார். எதிர் வரிசையில் ஆறு சீடர்களும், அர்ச்சகரும் அமர்ந்தனர்.

'அனைத்து இலைகளிலும் பரிமாறுங்கள்' என்று ஸ்வாமிகள் கட்டளை இட்டார். சீடர்கள் சிந்தனையில் ஆழ்ந்தனர்.

ஸ்வாமிகளின் பக்கத்து இலை யாருக்கு ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



"சுவாமிகள் லீலைகள் சொல்லத் தகுமோ?
அவாவினால் சொல்லப் புகுதல் முறையோ?
படியாத நான்உரைக்க நாமகளே நாவில்
குடியமர்ந்து நீங்கா திரு."

'நேற்று இரவுவந்த ஸ்வாமிகளின் 'பிரதானசீடர்' நாராயணசிவம் வருவார், அவருக்காகத்தான் இலை போடப்பட்டிருக்கிறது' என நினைத்தார் அன்னம்மாள். இலைகளில் தண்ணீர் தெளித்தார். பின்னர் நெய்யினால் சுத்தி செய்தார். மஹாசந்நிதானம் கட்டளைப்படி எல்லா இலைகளிலும் பரிமாறினார்.

'இன்னும் நாராயணசிவம் என்பவர் வரவில்லையே?' என்றார்.

ஸ்வாமிகள் அவரைப் பார்த்து கனிவு பொங்க, 'நாராயணசிவம் மற்ற மூவருடன் நாமக்கல் அருகிலுள்ள முத்துகாபட்டி ஊரிலுள்ள ஜமீன்தாரிணியைக் காணச் சென்றுள்ளார். இரண்டு நாட்களாகி விட்டன. அவர் இங்கு இல்லை. வெகு தொலைவில் இருக்கிறார்.'

'அப்படியானால் நாராயணசிவன் என்று சொல்லிக்கொண்டு என் வீட்டிற்கு நேற்றிரவு வந்தது...' குரலில் சந்தேகமும், சிறிது பயமும் தொனிக்கக் கேட்டார் அன்னம்மாள்.

சுந்தரர் அவருக்கும், ஏனையோருக்கும் உண்மையை விளக்கினார் : 'நேற்றிரவு உன் வீட்டிற்கு வந்தது நாராயணசிவம் இல்லை. அவன் முத்துகாபட்டியில் இருக்கிறான். எமக்கும், அடியார்களுக்கும் அன்னமளிக்க வேண்டி சிவபெருமான் நடத்திய திருவிளையாடல் இது. நீ கூறிய முகத்தோற்றம், நடையுடை, பாவனை அனைத்தும் நாராயண சிவன் அடையாளத்துடன், உருவத்துடன் ஒத்து இருந்தன.

ஈசனே உன் மனம்உவந்த பக்தியை ஏற்றுக் கொண்டு நாராயணசிவன் உருவில் உனக்குக் காட்சி அளித்துள்ளார். காட்சி அளித்தது மட்டுமன்றி உன் கையால் மோரும் வாங்கிக் அருந்தியுள்ளார். நீ பெரும் பாக்கியசாலி. இனி உனக்குப் பிறவித்தளை கிடையாது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நாராயணசிவமும் மிகுந்த பேறுபெற்றவன். இத்தனை மாணாக்கர்களில் அவன் உருவைத்தாங்கிய வேஷத்தை அந்தப் பெரும் வேஷதாரி ஏற்றிருந்தார் என்றால் அவன் செய்த புண்ணியம்தான் எவ்வளவு உயர்ந்தது!'

இவ்வாறு ஸ்வாமிகள் விளக்கியதும் அங்கிருந்தவர்கள் சொல்லவொண்ணா ஆனந்தத்தையும், உடல் சிலிர்ப்பையும் அடைந்தனர்.

அனைவரும் உண்ண ஆரம்பித்தனர். ஸ்வாமிகளின் பக்கத்தில் போடப்பட்டிருந்த இலையிலும் அனைத்தும் பரிமாறப்பட்டன.

பாயசம், பச்சடி, காய்கறிகள் பரிமாறப்பட்ட பிறகு பழங்கள் இலைகளை அலங்கரித்தன. பலாப்பழம் வைத்த பிறகு அதற்கு சுவை சேர்க்க தேன் படைக்கவேண்டி அந்த ஜாடியைத் தேடினார் அன்னம்மாள். எங்கு தேடியும் அது கிடைக்கவில்லை. ஒருக்கால் வீட்டில் வைத்து விட்டு வந்துவிட்டோமோ எனத் தடுமாறினார்.

அவரின் குழப்பத்தைக்கண்ட ஸ்வாமிகள் 'என்ன தேடுகிறாய்?' என்றார்.

'பலாப்பழத்திற்குப் படைக்க வேண்டி எடுத்து வைத்த தேன் ஜாடியைக் காணவில்லை. ஒருவேளை வீட்டிலேயே வைத்துவிட்டு வந்து விட்டேனோ என சந்தேகமாக இருக்கிறது. வீட்டிற்கு சென்று எடுத்து வருகிறேன்.'

'வீட்டிற்குச் செல்லத் தேவையில்லை. அதோ அந்த தூணிற்குப் பின்னால் இருக்கிறது' என்று இடத்தைச் சுட்டிக்காட்டினார். யார் கண்களுக்கும் எளிதில் தோன்ற முடியாத இடத்தில் இருந்த தேன் ஜாடியை எடுத்து அனைவருக்கும் விளம்பினார் அன்னம்மாள்.

அனைவரும் சாப்பிட்டு முடித்த பின்னர் நாராயண சிவனிற்காகப் பரிமாறப்பட்ட இலை தவிர மற்ற இலைகளை எடுத்து அந்த இடத்தைப் பசுஞ்சாணம் இட்டு மெழுகினார் அன்னம்மாள்.

படைக்கப்பட்ட அந்த இலையை என்ன செய்தார்கள்?

"குழுமி இருந்த அடியார் பெருமை
மொழிதல் எளிதோ? அரிதேயாம் அன்னார்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அருமை தெளிந்து அவர்போல் தமராய்க்
குருவினைப் பேணிக் கொளல்."

"அன்னம்மா! இந்த இலையில் உட்கார்ந்து சாப்பிடு. ரங்கநாத சிவன் உனக்குப் பரிமாறுவான்."

"சிவ சிவ! நாராயண சிவன் அவர்களுக்குப் பரிமாறப்பட்ட இலையில் நான் அமர்ந்து சாப்பிடுவதாவது. அதுவும் ஸ்வாமிகளின் முக்கிய சிஷ்யர்களில் ஒருவரான ரங்கநாதசிவம் பரிமாற.

நான் சாப்பிடுவது முறையல்ல. நான் ஒரு அஞ்ஞானி. நிரக்ஷரகுச்சி. அத்தோடு பெண்பிள்ளை. அவர் ஞானப்பழம். பக்தியில் திளைத்த ஒருவர் எனக்கு சேவை செய்வது தீராத பாவத்தைத் தரும். ஞானத்தில் முதிர்ந்த ஒருவர் பரிமாற நான் உண்பதாவது? அந்தத் தகுதி எனக்கு அறவே கிடையாது."

உடனே ஸ்வாமிகள் அன்னம்மாளை நோக்கி கூறினார்: "நீ ஈஸ்வர கிருபைக்கு முழுவதும் பாத்திரமானவள். ஜீவன் முக்த தசையில் இருப்பவர்களே உண்மையான சிவபக்தராகக் காட்சி தருவார்கள். சிவனை உளமாற பக்தியுடன் வணங்குவதே ஞானமாகும். சிவபெருமானே உன்னைத்தேடி வந்து காட்சி அளித்த பிறகு உன் அன்பின் ஆழத்திற்கு வேறென்ன அத்தாட்சி வேண்டும்? இந்த இலையில் சாப்பிட உன்னை அன்றி வேறு யாருக்குத் தகுதி உள்ளது? தயங்காமல் இந்த இலையில் உள்ள உணவை உண்பாயாக!"

அன்னம்மாள் ஸ்ரீஸ்வாமிகளின் கட்டளைக்கு உடன்பட்டார். உணவு உண்ட பின்னர் சாணத்தினால் அந்த இடத்தை சுத்தம் செய்தார்.

ஸ்வாமிகள் அர்ச்சகரை அழைத்து விநாயகர் சந்நிதியைத் திறக்கச் சொன்னார். கற்பூரம் காட்டச் சொன்னார்.

"ஓம்" என்ற பிரணவ தத்துவம் பற்றி சுமார் ஒருமணி நேரம் பிரசங்கம் செய்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"பிரணவம் என்றால் உயிர் மூச்சு – சுவாசம் என்று பொருள். மனிதன் உயிர்வாழ சுவாசம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் இந்தப் பிரபஞ்சம் உயிர்வாழ 'ஓம்' என்னும் மந்திரம். எனவே இது பிரபஞ்ச மந்திரம்.

பரந்து விரிந்த பிரம்மாண்டமான பிரபஞ்சத்தின் (அண்டம்) சிறிய பகுதி உடல் (பிண்டம்).

'ஓம்' என்பது அ,உ,ம் என்ற மூன்று எழுத்துக்களை உள்ளடக்கியது.

'அ'கரம் உலக உற்பத்தியைக் குறிக்கும். அதற்குரிய தேவர் 'படைப்புக்கடவுள்' எனப்படுவார்; 'உ'கரம் வியாபித்தலைக் குறிக்கும். அதற்குரிய தேவர் 'காத்தல்' கடவுள் எனப்படுவார்; 'ம்' என்பது முடித்து வைப்பதால் அதற்குரிய தேவர் 'சம்ஹாரக் கடவுள்' எனப்படுவார்.

பிரணவம் என்றும் புதியது. எளிதில் அறிந்து கொள்ள முடியாதது. எளிதில் அறிந்து கொள்ள முடியாதவன் இறைவன். அவனைப் பற்றிய ஆராய்ச்சியில் புதுப்புதுக் கருத்துக்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. ஓம் என்றால் 'எல்லாம் நானே, அனைத்திலும் நீக்கமற நிறைந்துள்ளேன்' என இறைவன் தன்னைப் பற்றிக் கூறுவதாக எடுத்துக் கொள்ளலாம். எனவேதான் இறைவனின் ஒவ்வொரு நாமாவளியின் முன்னாலும் 'ஓம்' என்று சேர்த்துச் சொல்கிறோம்.

'ஓம்' நமது சனாதன மதத்தின் புனிதமான குறியீடு. மாண்டுக்ய உபநிஷத் ஓம் என்னும் பிரணவத்தின் பெருமையைப் பேசுகிறது.

ஆதிசங்கரர், 'ஓம்' என்ற மந்திரத்திற்கான விளக்கத்தை 'உபதேச ஸாஹஸ்ரி' என்ற நூலில் விளக்கி உள்ளார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எது ஞானமயமானதோ,
எது ஆகாயத்தைப் போன்று வடிவம் இல்லாததோ,
எது பிறப்பற்றதோ,
எது இறப்பற்றதோ,
எது எல்லாவற்றிற்கும் மேலானதோ,
எது எதனுடன் சேர்க்கை அற்றுத் தனித்து மிளிர்கிறதோ,
எது இரண்டற்றதோ,
எது எப்பொழுதும் ஸ்வதந்திரமாக உள்ளதோ,
எது பரப்ரும்மத்தின் அடையாளமாக இருக்கிறதோ
எது பரப்ரும்மனின் வழிபாட்டிற்கு உறுதுணையாக இருக்கிறதோ..........

அதுவே பிரணவம்; அதுவே ஓம்!
ஓம் ஒலி கேட்டுணர்ந்தால் உள்ளொளி ஞானம் தோன்றும்,
ஓம் ஒலி கண்டுணர்ந்தால் ஒளியொளிர் உருவே தோன்றும்...........”

மஹாசந்நிதானம் உரைத்ததை அனைவரும் அக்கறையுடன் கேட்டுவந்தனர். அன்னம்மாள் மனதில் உபதேசம் ஆழப்பதிந்தது. தனக்கெனவே ஸ்வாமிகள் கூறியதாக எடுத்துக் கொண்டார்.

ஸ்ரீஸ்வாமிகளிடமும், மற்றவர்களிடமும் விடைபெற்று வீட்டிற்கு வந்த அன்னம்மாள் வீட்டில் இருந்த ஒன்றைக்கண்டு அதிசயித்தார். விடுவிடுவென விநாயகர் கோயிலுக்கு வந்தார். கபிஸ்தலம் நோக்கிப் பயணம் செய்ய ஆயத்தமாயிருந்த ஸ்வாமிகளின் பாதங்களில் விழுந்து கதறி அழுதார்.

ஏன் கதறி அழுதார் அன்னம்மாள்?

“ஓம்எனும் ஓங்காரம் ஓதிய முன்னவன்
ஓம்எனும் ஓங்கார நற்பொருள் சொன்னவன்
ஓம்எனும் ஓங்காரம் தானான தற்பரன்
ஓம்எனும் ஓங்காரம் போற்றி!”

மஹாசந்நிதானம் அவர்களின் பிரசங்கத்தின் சாராம்சத்தை மனதிற்குள் அசைபோட்டபடியே வீட்டிற்கு நடந்து வந்தார் அன்னம்மாள். தனக்காகவே அப்பிரசங்கம் அமைந்தாற்போல்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இருந்தது என நினைத்து மனம் மகிழ்ந்தார்.

எடுத்துச் சென்ற பாத்திரங்களை அடுக்கி வைக்கும்போது........

அங்கே.........

தான் வைத்த இடத்தில் தேன் ஜாடி அப்படியே இருப்பதைப் பார்த்தார். தேனும் அது நிறைய இருந்தது.

அப்படியானால் கோயிலில் படைத்தது?

அது ஸ்வாமிகளின் அருளால் தோன்றிய அற்புத ஜாடி என்பதை உணர்ந்தார். வியப்படைந்தார். பெருமிதப்பட்டார்.

ஸ்வாமிகளின் அதிஅற்புதம் நிறைந்த சித்சக்தியை நினைத்து மெய்சிலிர்த்தார்.

ஈஸ்வரனின் அவதாரமாகிய மகானிற்குப் பிக்ஷை செய்விக்கும்படியான பாக்கியம் கிடைத்ததற்கு மனம் நெகிழ்ந்தார்.

வேதாந்த ஞான அறிவு முதிர்ந்தவரின் உபதேசத்தைக் கேட்டது பூர்வஜன்ம சுகிர்தமே என எண்ணினார்.

வீட்டில் தான் சேமித்து வைத்திருந்த நூற்றி ஒரு ரூபாயை எடுத்துக் கொண்டார்.

பிள்ளையார் கோயிலை நோக்கி விரைந்து ஓடினார்.

அங்கே.......

ஸ்வாமிகளின் பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து நமஸ்கரித்தார்.

கண்ணீர் சோர விம்மினார்; அழுதார்; கதறினார்.

அவருடைய சரீரம் துவண்டது.

பேச நா எழவில்லை.

"நான் மிகுந்த புண்ணியம் செய்திருக்கிறேன்.

இறைவனே நேற்றிரவு என் வீடு தேடி வந்தார்.

இன்று......இதோ என் எதிரே காட்சி அளிக்கிறார்.

வீட்டிற்குச் சென்றதும் உங்களின் மகாசக்தியைத் தெரிந்து கொண்டேன்.

நான் வாங்கிய தேன் அந்த ஜாடியில் அந்த இடத்தில் அப்படியே இருக்கிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உங்கள் சக்தியால் வரவழைக்கப்பட்ட தேன்தான் இங்கே படைக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஜாடிகளும் ஒரே நிறம், ஒரே உயரம், ஒரே அளவு.

ஈசனின் கருணையன்றி வேறு எதனால் இது எங்ஙனம் சாத்தியம் ?

இத்துணை ஆத்ம சக்தியும், அருள் சக்தியும் பெற்ற தாங்கள் என்னைக் காத்து ரக்ஷியுங்கள். என்மேல் கருணை காட்டுங்கள். ஞானவைராக்யத்தைக் கைக்கொள்ள அருளுங்கள்......"

(கவனியுங்கள்! வறுமையில் வாடும் அந்தப் பெண்மணி பொன் கேட்கவில்லை, பொருள் கேட்கவில்லை, நீண்ட ஆயுள் கேட்கவில்லை, ஆரோக்கியம் கேட்கவில்லை. ஞான பக்குவத்தை அன்றோ கேட்கிறார்! எதை எவரிடம் எப்படிக் கேட்க வேண்டும் என்று அறிந்த ஞானி அல்லவா அன்னம்மாள்!)

கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருக மறுபடியும் ஸ்வாமிகளை வணங்கி எழுந்தார்.

அவர் பாதங்களில் நூற்றி ஒரு ரூபாயை சமர்ப்பித்து, 'தாங்கள் செய்யப்போகும் தர்மநிதியுடன் இந்த ஏழையின் நிதியையும் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்றார்.

அவருக்குப் பரிபூரண ஆசிகளை வழங்கினார் மஹாசந்நிதானம்.

'நீ வீட்டிற்குத் தேன் எடுக்கச் செல்வதை யாமே தடுத்தோம். பிக்ஷை நடக்கும்பொழுது அந்த இடத்தை விட்டு நகர்வது நல்லதல்ல. உன்னுடைய அபிமான பிக்ஷை படைப்பிற்குப் பாதகம் ஏற்படக் கூடாதென்றே தேன் ஜாடியை வரவழைத்தோம்.

நீ ஜீவன்முக்த தசையில்தான் இருக்கிறாய். இன்று நடந்த உபதேசப்படி தியானம் செய்துவா. எப்பொழுதும் சிவதியானத் துடனும், நியமநிஷ்டைகளுடனும் அதிதிகளை விடாப்பிடியாக உபசாரம் செய்து வா. இந்த புத்தி அனைவருக்கும் கிட்டிவிடாது. சகஜநிஷ்டை முதிர்ச்சி ஏற்பட்டவர்களுக்கே அதிதி சத்சம்ஸ்காரம் செய்ய வேண்டும் என்ற நற்புத்தி வரும். இதன்பலன் இரண்டு வாரங்களுக்குள் உனக்குத்தானே தெரியவரும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

C50. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நீ வழங்கிய தொகை ஈஸ்வரகிருபையோடு கூடியது. கருணையினால் வழங்கிய இந்த நூற்றி ஒரு ரூபாய் கோடியாக வளர்ந்துவிடும்.

உனக்கு ஈஸ்வர கிருபை பரிபூரணம். எக்காலமும் எம் ஆசி உன்னைப் பாதுகாக்கும். ஞான உயர்வில் உன்னை அமர்த்தும்.'

ஸ்வாமிகளும், அவர் குழுவினரும் தெருவில் இறங்கி கபிஸ்தலம் நோக்கிப் பயணப்பட்டனர். அவர்கள் உருவங்கள் கண்களிலிருந்து மறையும்வரை விழிகளில் கண்ணீர் மல்கப் பார்த்துக் கொண்டே இருந்தார் அன்னம்மாள்.

கபிஸ்தலம் சென்று, பின்னர் திருவாடுதுறை ஆதீனம் சென்றார்கள் மஹாசந்நிதானம் குழுவினர்.

அங்கே ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி நடந்தது.

அது என்ன ?

"அன்னகாலை மென்மயில் ஒப்ப திருவுறை
அன்னம்மாள் ஆக்கிய அன்னம் அமுதென்று
அள்ளியே உண்டு அருளினை நல்கினார்
உள்ளங்கள் வாழ்த்த இனிது."

ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் திருவாடுதுறை ஆதீனத்திற்கு எழுந்தருளி உள்ளதை அறிந்தார் மஹாவைத்தியநாதசிவன். அவரை தரிசிக்க அங்கே விரைந்து சென்றார்.

அப்போது மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் ஆதீனத் தலைவராக வீற்றிருந்தார்.அவர் மஹாசந்நிதானம் அவர்களைப் பற்றி முன்னரே அறிந்திருந்தார். அவரின் அறிவாற்றலும், செயல் திறனும் ஈடு இணையற்றவை என்பதைக் கேள்விப்பட்டிருந்தார்.

சூதசம்ஹிதைச் சொற்பொழிவில் அவரை மிஞ்சியவர் எவரும் இலர் என்பதும் ஆதீனத்திற்குத் தெரியும்.

மஹாவைத்தியநாதன் அவர்களின் இசையில் அதிகம் ஈடுபாடு கொண்டவர்.அவரை ஆதீனத்திற்கு வரச்சொல்லி பாடக்கேட்பதில் ஒருமகிழ்ச்சி. ஒவ்வொரு முறையும் சன்மானமாக இருபத்துஒரு ரூபாய் தருவார். அன்று அது மிகப்பெரிய தொகை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மாயவரத்தில் அக்காலத்தில் 'அபயாம்பிகா கடாக்ஷம்' என்ற முதிய அந்தணர் இருந்தார்.கோயில் பாடகர்

யாரைப் பார்த்தாலும் மயூரநாதர்கோயில் அம்பாள் பெயரான அபயாம்பாள் நாமத்தை நினைவுகூறும்வண்ணமாக 'அபயாம்பிகா கடாக்ஷம்' என்பார். அதுவே அவர் பெயராக நிலைத்து விட்டது. சந்நிதானத்தின் முன் அவர் பாடினால் சன்மானமாக முக்கால் ரூபாய் தருவார்.

தனக்கு வெறும் முக்கால்ரூபாய் தரும் சந்நிதானம், வைத்தியநாதசிவனிற்கு பத்து அல்லது இருபது ரூபாய் கொடுக்கிறாரே என்ற ஆதங்கம். தான் எந்தவிதத்தில் குறைந்து விட்டோம் என்ற சுயபச்சாதாபம்.

அவர் வைத்தியநாதசிவன் அவர்களை நேரில் இதுவரை சந்தித்ததில்லை.

இன்று திருவாடுதுறை ஆதீனம் வந்த அவர் சந்நிதானத்தைச் சந்தித்தார். தன் ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்தார்.

'வைத்தியநாத சிவன் என்கிற சிறுவனுக்கு பத்து, இருபது எனக் கொட்டிக் கொடுக்கிறீர். ஆனால் எனக்கு வெறும் முக்கால் ரூபாய் தருகின்றீர்கள். நான் என்ன திறமையில் தாழ்ந்தவனா? அடுத்த முறை அந்தப் பையன் வரும்போது சொல்லுங்கள். நான் சொல்லுகின்ற பல்லவியில் பாடுகிறானா என்று அவன் யோக்கியதை அப்போது தெரிந்துவிடும்.'

சுப்பிரமணிய தேசிகர் சிரித்துக் கொண்டே 'அப்படியே ஆகட்டும். அடுத்தமுறை என்ன, இப்பொழுதே வைத்தியநாத சிவன் இங்குதான் இருக்கிறார்.'

அந்த பிராமணர் இந்த பதிலைக்கேட்டு திடுக்கிட்டு எழுந்து போய்விடுவார் என எதிர்பார்த்தனர். அவரோ மிடுக்குடன்' அப்படியா! இப்பொழுது அகப்பட்டுக் கொண்டாயா ?பாடு பார்க்கலாம். நானும் பாடுகிறேன். நான் பாடிக் காட்டுகிறபடி உன்னால் பாட முடியுமா ?பார்த்து விடுகிறேன்' என்று சிவனைப் பார்த்துக் கூறினார்.

உடனே, 'மொட்டைச் சுவர், கட்டைச்சுவர், தட்டைச்சுவர், குட்டைச்சுவர்' என்று வாய்க்கு வந்ததைப் பாடினார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

C00. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவருக்குச் சிறிது சாரீரம் போதாது. இசையிலும் ஆழ்ந்த ஞானம் கிடையாது. ஆயினும் அந்தப் பல்லவியைச் சம இடத்திலிருந்து முக்காலிடம் தள்ளி 'மொட்டைச்சுவர்' என்றும்; இரண்டாம் விரலாகிய பவித்திரவிரலில் இருந்து முக்காலிடம் தள்ளி 'கட்டைச்சுவர்' என்றும்; முதல் திருதத்தட்டிலிருந்து முக்காலிடம் தள்ளி 'தட்டைச்சுவர்' என்றும்; இரண்டாம் திருதத்தட்டிலிருந்து முக்காலிடம் தள்ளி 'குட்டைச்சுவர்' என்றும் பாடினார்.

அப்பல்லவியை ஆதிதாளத்தில், காம்போதி ராகத்தில் ஒரு ஆவர்த்தனத்தை நான்கு கூறு செய்து, ஒவ்வொரு கால் ஆவர்த்தனமும், முக்காலிடத்தில் பல்லவியின் சொற்கள் அமைந்து வருவது போலப் பாடினார்.

அவர் பாடும்போது சாரீரம் பிசிறு தட்டியும், சில இடங்கள் குளறுபடியாகவும் வந்தன. அவ்வாறு பாடியதைக் கண்டதும் அனைவரும் சிரித்து விட்டனர் – ஸ்வாமிகளைத் தவிர.

மற்றவர்கள் சிரிப்பைப் பார்த்து வந்ததே கோபம் 'அபயாம்பிகா கடாக்ஷத்திற்கு'.

'எங்கே இதைப்போல இங்குள்ள எவராலும் பாட முடியுமா?' என்று சவால் விட்டார்.

அந்த சவாலை யாரேனும் ஏற்றுக் கொண்டனரா?

"அன்பெனும் பூவெடுத்து அர்ச்சித்தோம் நாள்தோறும்
என்புருக சங்கீதம் பாடித் தொழுதோமே
எந்தை பிரானாம் சிவனார் நிகர்த்தஎம்
சுந்தரன் பொற்பாதம் போற்று"

அபயாம்பிகா கடாக்ஷம் மற்றவர்கள் சிரிப்பதைப்பார்த்து ஆத்திரம் அடைந்தார். 'என்ன சிரிக்கிறீர்கள்? சிரித்தால் ஏமாந்து போய்விடுவேன் என நினைக்கிறீர்களா? நான்கு இடங்களிலும் அநாகத எடுப்பு வருவதுபோல் பாட வேண்டும். எவரேனும் பாடுங்கள் பார்க்கலாம். சந்நிதானம் கொடுக்கும் ரூபாயை முடிந்து வைத்துக் கொள்ளத் தெரிகிறது. சால்வை, பட்டு, சோமன் ஜோடு எல்லாம் வாங்கிக் கொள்ளத் தெரிகிறதல்லவா? நான் இல்லாத சமயத்தில் வந்து பண்டார சந்நிதானத்தை ஏமாற்றிப் பணம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வாங்குகிறீர்கள் அல்லவா? எங்கே இந்தப் பல்லவியை வைத்துப் பாடுங்கள் என்று சவால் விடுகிறேன். இதை ஏற்றுக்கொள்ள யாருக்கேனும் திராணி இருக்கிறதா? சங்கீத ஞானம் இருக்கிறதா? இன்று இரண்டில் ஒன்று பார்த்து விடுவோம்'.

பாவம்! அவரின் வறுமையும், தன்னுடைய ஆற்றலை அறியாமல் –அங்கீகரிக்காமல் இருக்கிறார்களே என்ற ஆதங்கமும் அவர் தழுதழுத்த குரலில் தொனித்தன.

சவாலை அங்கிருந்த தியாகராஜ சாஸ்திரிகள் என்பவர் உடனடியாக ஏற்றுக் கொண்டார்.

அந்தக் காலத்தில் பல்லவி என்பது தாளக்கட்டுடன் வருவது போல எந்தச் சொற்களையும் பொருத்திப் பாடுவதுண்டு.

'ஒன்று இரண்டு மூன்று நான்கு.....' என்று எண்களையும்,

'குற்றாலத்துக் குரங்கு, மரத்தைவிட்டு இறங்கு...' என்று புழக்கத்தில் உள்ள வாசகங்களையும், 'யாரடா அவன்... அவனை விட்டேனா தொட்டேனா பார்....' என்ற வசனங்களையும் பல்லவியாக வைத்து சில வித்துவான்கள் வேடிக்கையாகப் பாடுவார்கள். இசைக்கச்சேரி மேடைகளில் இவற்றைப் பாடமாட்டார்கள். தனிப்பட்ட 'ஜமா' சேர்ந்தால் கிண்டலும், கேலியுமாய், பொழுது போக்காக இப்படிப் பாடி மகிழ்வார்கள்; மகிழ்விப்பார்கள்.

தியாகராஜ சாஸ்திரிகள் அபயாம்பிகா கடாக்ஷம் அவர்கள் அருகில் சென்று, 'ஒய் இங்கே வாரும்! உம் சவாலை ஏற்க வைத்தியநாதசிவன் எதற்கு? நானே பாடுகிறேன்' என்றார்.

அந்த முதியவர் எப்படிப் பாடிக் காட்டினாரோ அதேபோல் - அதே அபஸ்வரங்களுடன் அப்படியே பாடினார். அந்த வினோதக் கச்சேரியை அனைவரும் கேட்டு மகிழ்ந்தனர். சாதுவாகிய அபயாம்பிகா கடாக்ஷம் தன் தோல்வியை எண்ணி, இயலாமையை எண்ணி மனம் வேதனைப்பட்டார். கண்ணீர் உகுத்தார். நாத்தழுதழுக்க :

'நான் தோற்றுவிட்டேன். என்னுடைய வறுமையும், என்னுடைய வித்தை முறையாக அங்கீகரிக்கப்படவில்லையே என்ற ஆதங்கமும் என்னைத் கர்வம் பிடித்தவனாய் ஆக்கிவிட்டது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நான் இந்த சபையில் இனி இருக்க அருகதை அற்றவன். இனி இங்கு வரமாட்டேன் இது சத்தியம். கிளம்புகிறேன்....' என்று கண்களில் நீர் பெருக, நடை தள்ளாட கிளம்ப யத்தனித்தார்.

நடந்த அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த மஹாசந்நிதானம் அவர்கள் அபயாம்பிகா கடாக்ஷம் அவர்களை அருகே அழைத்தார்.

அவரிடம் மூன்றே வார்த்தைகளைக் கூறினார். அவர் கூறியதைக்கேட்டதும் முதியவர் அப்படியே ஸ்வாமிகளின் பாதங்களில் விழுந்தார். விம்மல்களுக்கிடையே கேட்டார்

'உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று.

இப்பொழுது அவரது விம்மல் வெடித்துப் பேரழுகை ஆனது.

ஸ்வாமிகள் கூறிய அந்த மூன்று வார்த்தைகள் யாவை?

"சிவமாம் பரம்பொருள் என்றுனை ஓதி
பவமாம் பிறவியை நீந்தியே வந்தோர்
தவமாம் பிறஏதும் செய்திடல் வேண்டாம்
குவலயம் கண்டதோர் உண்மை."

'அன்னம்மாள் உனக்காகக் காத்திருக்கிறாள்'

இந்த மூன்று வார்த்தைகளைத்தான் தன் செவ்விதழ்களிலிருந்து உதித்தார் ஸ்வாமிகள்.

அப்படியே ஆடிப்போய்விட்டார் அபயாம்பிகா கடாக்ஷம்.

'உங்களுக்கு அவளை எப்படித் தெரியும்? நீங்கள் அவளைப் பார்த்தீர்களா? நன்றாக இருக்கிறாளா?' என்று நாத் தழுதழுக்க, அழுகையில் குரல் விம்மி உடையக் கேள்விகளை எழுப்பினார்.

ஸ்வாமிகள் தன் சீடர்களுடன் உமையாள்புரம் சென்றது, சிவபெருமான் அன்னம்மாளுக்கு, நாராயணசிவன் ரூபத்தில் காட்சி அளித்து மோர் கேட்டு வாங்கி அருந்தி மாயமானது, தமக்கும், சீடர்களுக்கும், பிள்ளையார் கோயில் குருக்கள் ஆகியோருக்கு பிக்ஷை அளித்தது, நூற்றி ஒரு ரூபாய் தர்ம நிதிக்கு அளித்தது...' என்று அனைத்தையும் சுருக்கமாகக் கூறினார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



ஸ்வாமிகள் கூறியதைக் கேட்கக் கேட்க பிரமிப்பின் எல்லைக்கே சென்றார் அபயாம்பிகா கடாக்ஷம்.

'அந்த உத்தமியைக் கைவிட்டுப் பிரிந்து வந்ததே உன் இன்னல்களுக்குக் காரணம். வானம் பொய்யாமல் மழை பெய்வதும், வளம் பிழைத்திருப்பதும்,அறங்கள் நிலை பெற்றிருப்பதற்கும் அன்னம்மாள் போன்ற பத்தினிப் பெண்டிரே காரணம். எவருக்கும் கிடைத்தற்கரிய பாக்கியம் அவளுக்குக் கிட்டி உள்ளது. அவளுடைய மாங்கல்யபலம் உன்னைக் காக்கும். உன்தாழ்வு மனப்பான்மையும் இன்றுடன் நீங்கிவிடும். இருவரும் இல்லற தர்மத்தை ஏற்று அடியவர்களுக்கு அன்னதானம் செய்வதை விடாமல் நடத்தி வாருங்கள். அமோகமாக இருப்பீர்கள். ஆசிர்வாதங்கள் ' என்று அருளாசி வழங்கினார்.

'ஆமாம்! என்னுடைய முன்கோபமும், பொறுப்பற்ற நடத்தையும்தான் இந்த நீண்ட பிரிவிற்குக் காரணம் இவ்வளவு கருணை பொங்கப் பேசுகின்றீர்களே. தாங்கள் யார் என்பதை அடியேன் அறியலாமா ?'

இவர்கள் இருவரின் சம்பாஷணையை அங்கிருந்த அனைவரும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். வைத்தியநாத சிவன் அவர்கள் 'தாங்கள் யார் ?' என்று முதியவர் கேட்டதும் உடனே ஸ்ரீஸ்வாமிகளைப்பற்றி சுருக்கமாக எடுத்துரைத்தார்.

'ஒரு மகானின் தரிசனமும், ஆசிகளும் இன்று கிடைத்தது பெரும் பேறு. ஒருநாள், ஒருவேளை மகானிற்கும், அவரின் அடியார்களுக்கும் மனம் உவந்து பிக்ஷை அளித்ததே இவ்வளவு கருணை செய்து பல ஆண்டுகள், அல்ப காரணங்களுக்காகப் பிரிந்திருந்த எங்களை மீண்டும சேர்த்து வைத்து விட்டது. அப்படியானால் நாள்தோறும் நல்லவர்களுக்கு மனம் நோகாமல் அன்னதானம் செய்தால் பிறவித்தளையே அறுந்துவிடும் அன்றோ!

இங்குள்ள சில பொறுப்புகளை முடித்துக் கொண்டு இன்னும் ஒரு வாரத்திற்குள் உமையாள்புரம் செல்கிறேன்' என்று கூறி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்வாமிகளின் பொற்பாதங்களில் மீண்டும் விழுந்து வணங்கினார்.

அபயாம்பிகா கடாக்ஷத்திற்கு விபூதிப் பிரசாதம் கொடுத்து ஆசிர்வதித்தார் மஹாசந்நிதானம்.

ஸ்வாமிகளின் குறிப்பை அறிந்துகொண்ட வைத்தியநாத சிவன் பண்டாரசந்நிதானம் தனக்கு அணிவித்த சால்வை, வழங்கிய இருபத்து ஒரு ரூபாய் ஆகியவற்றை முதியவர் மறுத்தும் அவருக்கு வழங்கினார், ஆதீனம் அவர்களும் அபயாம்பிகா கடாக்ஷத்திற்குத் தக்க மரியாதைகள் செய்தார்.

ஸ்வாமிகள், உமையாள்புரத்திலிருந்து பறப்படும்போது அன்னம்மாளிடம் 'இன்னும் பதினைந்து நாட்களுக்குள் நல்லது உனக்கு நடக்கும்' என்று கூறியிருந்தார். இதைவிட வேறு என்ன நல்லது வேண்டும் ? அவர்களுக்கு.

தேர் செய்வதற்கான நிதியை பல ஊர்களுக்கும் சென்று வசூலித்த பின்னர் தில்லைச்சிற்றம்பலம் சென்றடைந்தார் ஸ்வாமிகள். காலத்தால் அழியாத பல சரிதங்களைப் படைத்த ஒரு பிரபலம் மஹாசந்நிதானம் அவர்களை தரிசிக்கக் காத்திருந்தார்.

யார் அவர் ?

இசையால் தொழுதால் இனிதே வருவாய்
அசையா உறுதி மனதில் இருந்தால்
விரைந்தே வருவாய் பிரிந்தவர் சேர
பரிந்தே அருள்வாய் இனிது"

தமிழக இசைவரலாற்றின் பொற்காலமாக 19–ம் நூற்றாண்டு விளங்கியது. சங்கீதமும்மூர்த்திகள் என்று துதிக்கப்படும் ஸ்ரீதியாகப்ரும்மம், ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீஸ்யாமா சாஸ்திரிகள் வாழ்ந்த பொற்காலம் அது. இவர்கள் தவிர வேறுசில வாக்யேயக்காரர்களும் தத்தம் புலமையால் தெலுங்கு, வடமொழி, தமிழ் மொழிகளில் கீர்த்தனைகள் இயற்றினர்; பாடினர். இவர்கள் கீர்த்தனைகளின் மூலம் பக்திப் பயிரை வளர்த்தனர்.

அவர் 1811–ம் ஆண்டு அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சையில் நாகப்பட்டினம் அருகிலுள்ள நரிமணம் என்னும் ஊரில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



பிறந்தார். சிறுவயதில் முடிகொண்டான் என்ற ஊரில் வாழ்ந்தார். பிறகு குடும்பத்தினர் ஆனைதாண்டவபுரம் குடி பெயர்ந்தனர். இவர் இசைப்பரம்பரைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

தியாகப்பிரம்மத்தின் சமகாலத்தவர் ஆவார். அத்வைதம், யோகசாஸ்திரம் ஆகியவற்றை மாயவரத்தில் ஒரு குருவிடம் கற்றார். தன்னளவில் ஒரு துறவியைப் போலவே வாழ்ந்து வந்தார்.

குடும்பப் பின்னணியும் இசை சார்ந்தே இருந்ததால் இயல்பாகவே சங்கீதத்தின்பால் ஈர்க்கப்பட்டார். சிறுவயதிலேயே பாடல்கள் இயற்றி, பண் அமைத்துப் பாடும் ஆற்றலைப் பெற்றிருந்தார். இவர் காலத்தில் இருந்த மற்ற வாக்யேயக்காரர்கள், சங்கீத வித்வான்கள் அவர் காலத்தில் பழக்கத்திலிருந்த கர்நாடக இசைப் பாடல்களைப் பாடினார். கர்நாடக இசை வித்வான்களின் கச்சேரிகளைக் கேட்டுத் தன் இசை அறிவை மேலும் வளர்த்துக் கொண்டார்; மெருகேற்றிக் கொண்டார்.

அத்வைத சித்தாந்த கருத்துக்களை ஒட்டியே இவர் கிருதிகள் அமைந்திருந்தன. இவை பல வித்வான்களால் பாடப்பெற்று இவர் காலத்திலேயே மிகவும் பிரபலமடைந்தன. பல பாடகர்கள் தங்கள் தேவைக்கேற்றபடி கீர்த்தனைகளை இயற்றித் தரும்படிக் கேட்டுப் பாடுவதும் உண்டு.

இவர் காலத்தில் மராத்திய மன்னர் குலத்தைச் சேர்ந்த அமரசிம்ம மஹாராஜா திருவிடைமருதூரை ஆட்சி செய்து வந்தார். மன்னர் ராமதாஸ் என்னும் இந்துஸ்தானி இசைமேதையை ஆதரித்தார். இவரிடம் இந்துஸ்தானி இசை பயின்றார். இந்த காலகட்டத்தில் இந்துஸ்தானி இசை தமிழகத்திற்குப் புதிது. இந்துஸ்தானி இசை நுட்பங்களைக் கசடறக் கற்றுத் தேர்ந்தார். அவற்றைக் கர்நாடக இசைமுறைக்கு ஏற்றபடி தமது கீர்த்தனைகளில் பயன்படுத்திக்கொண்டார்.

அமரசிம்ம மஹாராஜாவின் அரசவைப் புலவராய் இருந்த புலவர் கனம் கிருஷ்ணையர் இவரின் இசைப்புலமையைப் பாராட்டி சில அபூர்வ கீர்த்தனைகளைச் சொல்லிக்கொடுத்தார். சர்வசமய சமரசக் கீர்த்தனைகள் பாடிய மாயூரம் வேதநாயகம்பிள்ளை,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வைணவ இசைவாணர் அனந்த பாரதியார், தில்லை நடராஜர் மேல் கீர்த்தனைகள் பாடிய சிதம்பர சிவசங்கர தீக்ஷிதர், இசை மேதைகள் வையைச்சேரி ராமஸ்வாமி சிவன், மஹாவைத்தியநாதசிவன் ஆகியோர் இவருடன் நெருங்கிப் பழகிய அன்பர்கள் ஆவார்கள். இவர்களிடையே இசை மற்றும் இயல் பற்றிய கருத்துப் பரிமாற்றங்கள் அடிக்கடி நடைபெறும். இதனால் இவரின் இசைப்புலமையும், கற்பனை வளமும் நன்கு விருத்தியடைந்தன.

ஒருமுறை சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீதியாக ப்ரும்மத்தைச் சந்திக்கச் சென்றார். அவரின் சீடர்கள் அந்த நேரத்தில் 'ஸ்ரீராமஸீதா' என்ற ஆபோஹி ராகப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தனர். 'தாம் இந்த ராகத்தில் அமைந்த கீர்த்தனை ஒன்றும் இயற்றவில்லையே' என்ற எண்ணம் உதித்தது. பின்னர் அந்த ராகத்தில் தில்லைநடராஜர் மேல் ஒரு கீர்த்தனை இயற்றினார். அந்தப் பாடல் இன்றுவரை சிரஞ்ஜீவியாக உள்ளது.

தியாகய்யர் தெலுங்கில் ஐந்து ராகங்களில் பஞ்சரத்ன கீர்த்தனை இயற்றியுள்ளதைப்போல் இவர் தமிழில் நாட்டை ராகத்தில் 'அரகரசிவ சங்கரா; கௌள ராகத்தில் 'சரணாகதி'; ஆரபியில் 'பிறவா வரந்தாரும்'; வராளியில்; ஆடியபாதமே கதி'; ஸ்ரீராகத்தில் 'மறவாமல் எப்படியும்' என்று சிவபிரானைப் போற்றும் ஐந்து கீர்த்தனைகள் இயற்றி உள்ளார்.

இவர் பாடல்களைக் கேட்டால் 'வருவாரோ; வரம் தருவாரோ ?' என்று வியக்கத் தோன்றும்.

தில்லை நடராஜர் மேல் இயற்றிய கீர்த்தனைகளைக் கேட்டால் 'சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா ?' என்று எண்ணத் தோன்றும்.

இவர் திருநீலகண்ட நாயனார், இயற்பகை நாயனார், காரைக்கால் அம்மையார், நந்தனார் ஆகிய நாயன்மார்களின் சரிதங்களை அழகு தமிழில் பாடியுள்ளார். இவற்றுள் 'நந்தனார் சரிதம்' தமிழகத்தின் பட்டி தொட்டி எங்கும் பிரசித்தி பெற்றது.

இத்தகைய சிறப்புமிக்கவரின் பெயர்......

"கோபாலகிருஷ்ண பாரதியார்"



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இவர்தான், மஹாசந்நிதானம் அவர்கள் சிதம்பரம் க்ஷேத்திரம் வந்தது அறிந்து, அவரைச் சந்தித்து ஆசிபெற வந்திருந்தார்.

அதுமட்டுமன்றி தாம் இயற்றிய ஒரு நூலிற்கு ஸ்வாமிகள் பாயிரம் அருள வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்தார்.

யாருடையசரிதம் ? எதற்காகப் பாயிரம் ?

“சரிதம் படித்தோன் சரிதம் அறிந்தோன்
சரிதமாய் ஆன சரித முதல்வன்
அரிதாய் அவதரித்த ஆத்திக நல்லோன்
பரிந்தே தொழுவோம் அவனை. ”

கோபாலகிருஷ்ண பாரதியார் தாம் இயற்றிய ‘நந்தனார் சரிதம்’ என்ற நூலிற்கு பாயிரம் (முன்னுரை) வேண்டும் என ஸ்ரீஸ்வாமிகளிடம் வேண்டுகோள் வைத்தார். ஸ்வாமிகள் :'இந்த நூலிற்கு முன்னுரை வழங்க எம்முடைய நண்பர் மஹாவித்வான் திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களே தகுதி ஆனவர்கள்.அதுவே பொருத்தமாகவும் இருக்கும். அவரை நேரில் சந்தித்து உங்கள் வேண்டுகோளைக் கூறுங்கள்” என்றார்.

ஸ்வாமிகளின் உத்தரவை ஏற்று பிள்ளை அவர்களைச் சந்தித்தார். தாம் எழுதிய 'நந்தனார் சரிதம் ' நூலை சமர்ப்பித்தார். அதைப் படித்துப் பார்த்ததும் அடங்காத சினம் கொண்டார் மஹாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள்.

கோபாலகிருஷ்ண பாரதியாரைப் பார்த்துக் கேட்டார்:

‘எதை அடிப்படையாகக்கொண்டு நந்தன் சரிதத்தை இவ்வாறு எழுதினீர் ?’

‘சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் என்ற காவியத்தின் அடிப்படையில்’

‘சேக்கிழார் பெருமான் எழுதிய வண்ணம் உங்கள் சரிதம் அமையவில்லையே. உங்கள் சொந்தச் சரக்கை அல்லவா திணித்துள்ளீர்கள். நீங்கள் எழுதியவற்றில் எழுத்துப்பிழை, இலக்கணப்பிழை உள்ளன. இருப்பினும் பொறுத்துக் கொள்ளலாம். பொருட்குற்றம், கருத்துப்பிழை உள்ளனவே! உங்கள் கூற்றை எப்படி ஏற்றுக் கொள்வது ?’



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'காலத்திற்கு ஏற்றவாறு புரட்சிகரமான சில மாறுதல்களைச் செய்துள்ளேன். அதை மக்கள் விரும்புவார்கள்.ஏற்றுக் கொள்வார்கள்.'

'மக்கள் விரும்புவார்கள், ஏற்றுக் கொள்வார்கள் என்று இல்லாத ஒன்றை ஏற்றிச் சொல்லுதல் பாவம் அன்றோ! ஏற்கனவே அந்நியன் தனது பிரித்தாளும் சூழ்ச்சி மூலம் பிரிவினைகளை ஏற்படுத்தி அவன் குளிர்காய்ந்து கொண்டுள்ளான். அத்துடன் நம்மிடையே உள்ள மக்களில் ஒரு சிறுபகுதியினர் வாய் இருந்தும் ஊமைகளாய், வாய்மூடி மௌனிகளாய் உள்ளனர். அவர்கள் மீது பழிச்சொல் வரும்படி எழுதுவதுதான் புரட்சியா ? நீரே உம் விரலைக் கொண்டு உம் கண்ணைக் குத்திக் கொள்ளும் மதியீனச் செயலை செய்துள்ளீர். நாளடைவில் சேக்கிழார் பெருமான் எழுதியதை மறந்து நீர் எழுதியதே உண்மை எனக் கொண்டாட ஆரம்பிக்கும் இந்த உலகம். போய் வாரும். உம் எழுத்திற்குப் பாயிரம் கிடையாது.'

மனம் நொந்து கிளம்பினார் கோபாலகிருஷ்ண பாரதியார்.

ஒருநாள் அதிகாலை வேளை.

தன் வீட்டில் உறக்கத்திலிருந்து எழுந்த மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களின் செவிகள் ஒரு அருமையான, இனிய, பொருள் நிறைந்த தமிழ்பாடலைக் கேட்டன.

'வருகலாமே ஐயா...' என்ற மாஞ்சிராகப் பாடலைத் தேனினும் சுவையான தீந்தமிழில் கம்பீரமாக ஒருவர் பாடிக் கொண்டிருந்தார். பாடலின் இனிமையிலும், கருத்தாழத்திலும் மெய்சிலிர்த்துப் போனார் பிள்ளை அவர்கள்.

விடுவிடுவென வீட்டின் உள்ளிருந்து வெளியில் வந்தார். அங்கே திண்ணையில் அமர்ந்து கொண்டு இப்பாடலை மெய்மறந்து, கண்களில் நீர்பெருக பாடிக்கொண்டிருந்தார் கோபாலகிருஷ்ண பாரதியார். பாடிமுடித்ததும் அவரை உள்ளே அழைத்துச் சென்றார்.

'உம் கதையில் கருத்துப்பிழை இருக்கிறது. அதை நான் என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.ஆயினும் உம் தமிழிசை மீது கொண்ட காதலால் பாயிரம் தருகிறேன். பெற்றுக் கொள்ளும்' என்றார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தான் எழுதிய நந்தனார் சரிதத்திற்குப் பாயிரம் கிடைத்த மகிழ்ச்சியில் ஸ்வாமிகளை தரிசிக்கச் சென்றார் கோபாலகிருஷ்ண பாரதியார்.

ஸ்வாமிகளைப் பணிந்து பாயிரம் கிடைத்த நற்செய்தியைக் கூறினார்.

'தங்கள் அருளாசியால் நந்தனார் சரிதத்திற்கு நல்லமுறையில் பிள்ளை அவர்களிடமிருந்து முன்னுரை கிடைத்தது. உங்களின் கருணைக்கு எது சமானம் ஆகும்?'

'இது தில்லைச் சபாபதியின் கருணை. வேறு தெய்வம் அவருக்கு சமானமாகுமா?' என்று ஸ்வாமிகள் உரைத்ததும் அந்த வார்த்தைகளைக் கொண்டே காலம் முழுதும் நிலைத்திருக்கும் கீர்த்தனை ஒன்றை அவர் முன்னரே அங்கேயே இயற்றினார் கோபாலகிருஷ்ண பாரதியார்.

அது என்ன கீர்த்தனை?

"பாரதிக்குப் பாயிரம் சேர துணைசெய்தாய்
பாரதம் ஊர்ந்தவன் பாதம் பணிந்தான்
சபாபதி மேலான தெய்வம் என்றான்
தயாநிதி உன்தாள் சரண்"

(கோபாலகிருஷ்ண பாரதியின் 'நந்தன் சரிதம்' நூலில் பொருள்குற்றம், கருத்துப்பிழை உள்ளதெனக் கூறி தன்னுடைய குருநாதர் திரிசிரபுரம் ஸ்ரீமீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அவர்கள் தொடக்கத்தில் பாயிரம் தர மறுத்ததை 'என் சரித்திரம்' என்ற தன் சுயசரிதை நூலில் மகோமகோபத்தியாய கலாநிதி உ.வே.ஸ்வாமிநாத ஐயர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.)

1767–ம் ஆண்டு மே 4–ந் தேதி திருவாரூரில் அவதரித்தவர் ஸ்ரீதியாகப்ரும்மம். இவர் வால்மீக முனியின் அவதாரமாகக் கருதப்படுகிறார்.இவரது தந்தை ராமபிரும்மம், தாயார் சீதம்மா.

தந்தையிடம் ராமதாரக மந்திர உபதேசமும், ராம கிருஷ்ணானந்த யதீந்தரிடம் 'ராமஷடாக்ஷாரி மந்திர' உபதேசமும் பெற்றார். அவர் தியாகப்ரும்மத்திற்கு 'நாரத உபாசனை மந்திரத்தை' உபதேசித்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பக்தியுடன் அதை உச்சரித்து வந்த இவருக்கு நாரத முனிவர் காட்சி கொடுத்தார். சங்கீத ஸ்வர ரகசியங்கள் அடங்கிய 'ஸ்வரார்ணவம்' என்ற அரிய நூலை வழங்கினார்.

இவர் பிறந்த சிறிது காலத்தில் குடும்பத்தினர் திருவாரூரிலிருந்து, திருவையாறு நகருக்குக் குடிபெயர்ந்து வந்தனர்.

எட்டு வயது முதலே சீதா, ராமர், லக்ஷ்மணர், அனுமன் விக்ரகங்களுக்கு அன்றாடம் பூஜை செய்வார். அப்போது தெலுங்கு, சமஸ்கிருதத்தில் ராமபிரான் மீது கீர்த்தனைகளை இயற்றி,அவரே ராகமும் அமைத்துப் பாடுவார்.

ஒரு தவமுனிவரின் வாழ்க்கை முறைப்படி தினசரி உஞ்சவிருத்தி மூலம் ராமபிரான் என்னும் பரம்பொருளின் திருப்புகழைப் பாடிப் பணிந்தார்.

இவருடைய கீர்த்தனைகள் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குபவை. பல அபூர்வ ராகங்களில் கீர்த்தனைகள் இயற்றி உள்ளார்.

ஸொண்டி வெங்ட்ரமணய்யர் என்னும் குருவிடம் முறைப்படி கர்நாடக சங்கீதம் பயின்றார். தனது தாத்தா வைத்திருந்த பல இசைநூல்களைப் படித்தார்.

இவர் பாடிய முதல் கீர்த்தனை 'நமோ நமோ ராகவாய....' என்பது.

ராமநாம மந்திரத்தை 96 கோடி முறை ஜபிக்குமாறு ராமகிருஷ்ண யதீந்திரர் என்ற மகான் கூறினார். 21–ஆண்டுகளில், சராசரியாக ஒரு நாளைக்கு 1,25,000 முறை ராம நாமத்தை ஜபித்தார். அதைப் பூர்த்தி செய்து ராமபிரானின் தரிசனத்தைப் பலமுறை பெறும் பாக்கியத்தை அடைந்தார்.

இம் முக்கிய சந்தர்ப்பங்களில் 'ஏலநீதயராது' (அடாணா ராகம்), கனுகொண்டினி '(பிலஹரி ராகம்)' ஆகிய கீர்த்தனைகளைப் பாடினார்.

கீர்த்தனைகள் இயற்றுவது, அவற்றுக்கு இசை அமைத்துப் பாடுவது, வேதபாராயணம் செய்வது, புராணங்கள் கற்பது,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இசையை மற்றவர்களுக்குக் கற்பிப்பது என்ற உன்னத வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தார். பல புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை செய்து அங்கெல்லாம் கீர்த்தனைகள் பாடினார்.

நன்றாகப் பாடுவதோடு வீணையும் நன்கு வாசிப்பார்.

'கின்னரீ' என்ற தந்தி வாத்தியத்தை வாசிப்பதிலும் சிறந்து விளங்கினார். வால்மீகி முனிவர் 24000 ஸ்லோகங்களில் ராமாயணத்தைப் பாடியது போல இவர் 24000 கிருதிகள் இயற்றியதாகக் கூறுவோர் உண்டு. 2400 என்று கருதுவோரும் உண்டு. இவர் கனராக பஞ்சரத்னம், நாரத பஞ்சரத்னம், திருவொற்றியூர் பஞ்சரத்னம், கோவூர் பஞ்சரத்னம், ஸ்ரீரங்க பஞ்சரத்னம், லால்குடி பஞ்சரத்னம் ஆகிய கிருதிகளையும்;

'பிரகலாத பக்தி விஜயம்', 'நௌகா சரித்திரம்' முதலிய இசை நாடகங்களையும் இயற்றி உள்ளார்.

எல்லா கர்த்தா ராகங்களிலும் கிருதிகள் இயற்றி இருக்கின்றார்.

இவர் ஜோதிடம், கணிதத்திலும் வல்லமை பெற்று விளங்கினார்.

இந்திய இசை வரலாற்றில் வேறு யாருக்கும் இல்லாத மிகப்பெரும் சிஷ்யபரம்பரை இவருக்கு உண்டு. தஞ்சாவூர் ராமராவ், வீணை குப்பையர், உமையாள்புரம் கிருஷ்ண பாகவதர், வாலாஜபேட்டை வெங்கடரமண பாகவதர், வாலாஜபேட்டை கிருஷ்ண பாகவதர் உமையாள்புரம் சுந்தர பாகவதர், சித்தூர் ராதாகிருஷ்ணைய்யர், நெமம் சுப்ரமணிய ஐயர், கோவிந்த சிவன், கன்னையா பாகவதர், அமிர்தலிங்கம் பிள்ளை, தில்லை ஸ்தானம் பரம்பரையினர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர் சித்தி அடைவதற்கு முன்பு வந்த தசமி இரவில் இன்னும் 10தினங்களில் இறைவனின் பாதாரவிந்தத்தைச் சேர்வதாகக் கனவு கண்டார். இதனை அச்சமயத்தில் இயற்றிய 'கிருபை நெல' என்ற சஹானாராக கிருதியில் விவரித்துள்ளார்.

இவரது கீர்த்தனைகள் உள்ளத்தை உருக்கும் பாவத்துடன் அமைந்திருக்கும். சங்கதிகள் மூலம் கிருதிகளை மிகவும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அழகுபெறச்செய்யலாம் என்பதை நிரூபித்தார்.

1847-ம் ஆண்டில் தமது 80-வது வயதில் ஸ்ரீதியாகராஜ ஸ்வாமிகள் ஸ்ரீராமனின் பாதத்தை அடைந்தார்.

இத்தகைய சிறப்புகளைப் பெற்ற ஸ்ரீதியாகப் பிரம்மத்தின் ஆபோஹி 'ராகக் கிருதியைக் கேட்டிருந்த கோபாலகிருஷ்ண பாரதியார், அதே ராகத்தில், தில்லைச் சிற்றம்பலத்தில் மஹாசந்நிதானத்தின் முன்னிலையில்

'சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா' என்று பாடினார்.

முத்துகாபட்டி சென்றிருந்த நாராயண சிவன் குழுவினர் ஜமீன்தாரணி அம்மாள் அளித்த நன்கொடையைப் பெற்றுக் கொண்டு சிதம்பரம் வந்தனர்.

தேர் செப்பனிடவும், இரண்டு கோயில்கள் கும்பாபிஷேகம் நடத்தவும் எவ்வளவு நிதி வசூல் ஆனது ? எவ்வளவு செலவானது ?

"பக்திப் பயிர்வளர்த்து சங்கீதம் பாடியே
முக்தி அடைந்திட்ட மூவரும் உன்காலம்
எத்திக்கு சென்றாலும் ஆன்மீகம் போற்றிய
சத்திய தெய்வம்நீ வாழி!"

ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளின் மாணவியான முத்துகாபட்டி ஜமீன்தாரிணி அம்மாள் அவர்கள் நாராயணசிவம் அவர்களிடம் ரூபாய் 3001/-தன் பங்கிற்கான நன்கொடையாகக் கொடுத்து அனுப்பி இருந்தார்.

'இதைக் கொண்டு சிதம்பரம் கோயில் தேர் வேலையை ஆரம்பியுங்கள். வேண்டியபோது அவ்வப்போது என்னால் முடிந்த உதவியைச் செய்ய சித்தமாக இருக்கிறேன். நானும் சிதம்பரம் வந்து ஸ்வாமிகளைக் கண்டு வணங்கி, சிவகாமசுந்தரி-நடராஜர் தரிசனத்தையும் செய்து கொள்கிறேன். தேர் செப்பனிடும் வேலையையும் பார்க்க வேண்டி உள்ளது. ஸ்வாமிகளிடம் என் பணிவான வணக்கத்தைத் தெரிவியுங்கள்.'

தேரை செப்பனிடும் பணிக்காகவும், சிவகாமசுந்தரி அம்மன் சந்நிதி மற்றும் இளமையாக்கினார் கோயில் கும்பாபிஷேகத்திற்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



காகவும் அதிகம் பேரை ஸ்வாமிகள் சென்று சந்திக்கவில்லை.

திருவாடுதுறை ஆதீனம், கபிஸ்தலம் மூப்பனார், பூண்டி வாண்டையார், குன்னியூர் ஐயர், உக்கடைத் தேவர், கொழும்பண்ணையார், கொடியாலம் வாசுதேவ ஐயங்கார் ஆகியோரிடம் மட்டுமே நிதி திரட்டப்பட்டது.

அவ்வாறு திரட்டப்பட்ட நிதி ரூபாய் பதினாறாயிரத்து நூற்றி இருபத்தெட்டு ஆகும்.

தேரைச் செப்பனிடும் வேலையும், கும்பாபிஷேக வேலைகளும் தொடங்கின.

சில நாட்களில் முத்துகாபட்டி ஜமீன்தாரிணியும் வந்து சேர்ந்து கொண்டார். மஹாசந்நிதானம் அவர்களை வணங்கி ஆசி பெற்றார்.

தேர் வேலையில் தேர்ந்த ஸ்தபதியிடம் தேரைச் செப்பனிடும் பணி ஒப்படைக்கப்பட்டது. அந்த வேலையை மேற்பார்வையிட தக்க தீக்ஷிதர்கள் அமர்த்தப்பட்டனர்.

அக்காலத்தில் தச்சுத் தொழிலாளியின் கூலி இரண்டணா. (இக்கால மதிப்புப்படி பன்னிரண்டு பைசா.)

நடராஜர் கோயிலில் கட்டளை வகையில் அன்னம் நிவேதனம் செய்யப்படும். தச்சுவேலை செய்வோருக்கு இரண்டணா கூலியுடன் மதியம் நிவேதனம் ஆன அன்னமும் கொடுக்கும்படி சுந்தரஸ்வாமிகள் ஏற்பாடு செய்தார். அதனால் தேர் செப்பனிடும் பணி வெகு துரிதமாக, ஒழுங்காக குறைபாடின்றி நடைபெற்றது. தேர் புதுப் பொலிவுடன் கம்பீரமாக விளங்கிற்று.

ஒவ்வொரு ஆண்டிலும் மார்கழித் திருவாதிரை நாளிலும், ஆனித் திருமஞ்சன நாளிலும் நடராஜாவைத் தேரில் எழுந்தருளச் செய்வார்கள்.நான்கு ரத வீதிகளிலும் வெகு கம்பீரமாகப் பவனி வருவார்.

ஜமீன்தாரிணி அம்மாள் தேர்த் திருப்பணிக்கு மேற்கொண்டு இரண்டாயிரம் அளித்து முழுமையான செலவினை ஏற்றுக் கொண்டார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்வாமிகள் நிதி திரட்டிய பதினாறாயிரத்து நூற்றி இருபத்தெட்டு ரூபாயில் சிவகாமசுந்தரி அம்மன் கோயில், இளமையாக்கினார் கோயில் கும்பாபிஷேகங்கள் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் வேதோக்தமாக, யாகசாலை பூஜைகளுடன் சிறப்பாக நடைபெற்றன.

மார்கழித் திருவாதிரைத் திருநாளும் வந்தது. நடராஜமூர்த்தி எழுந்தருளியுள்ள கனகசபைக்கும், சிவகாமசுந்தரி எழுந்தருளியுள்ள அம்பாள் கோயிலுக்கும் வேதகோஷங்கள் வானைப் பிளக்க, பதினொரு கும்பங்கள் வைத்து, ருத்ரபாராயணத்துடன் விழா தொடங்கியது.

சிவகாமசுந்தரி அம்மன் விழாவின் ஒன்பதாம் நாளன்று ரதத்தில் எழுந்தருளப் பண்ணுவார்கள்.

அந்த நாளும் வந்தது.

ரதம் மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டது. மக்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஸ்வாமி, அம்பாளை தேரில் எழுந்தருளப் பண்ணினர். தேவியின் முகம் பொலிவோடும், கருணையோடும் விளங்கியது.

நடராஜருக்கும், சிவகாமசுந்தரிக்கும் ஏராளமான ஆபரணாதி நகைகளிட்டு அலங்காரம் செய்யப் பட்டிருந்தது. நகைகளின் பிரகாசத்தில் மூர்த்தங்களின் திருமுகங்கள் அதிகமான அருள்சுரப்புத்தோன்றி பக்தர்களை அனுக்கிரஹிப்பது போல் இருந்தன.

விழாவிற்கு வந்திருந்த வைத்தியநாதசிவன், அப்பையதீக்ஷிதரால் சிவகாமசுந்தரிமேல் வர்ணிக்கப்பெற்ற மூன்று ஸ்லோகங்களை ராகமாலிகாவில் இசைத்தார். அப்பாட்டை அனைவரும் மனமுருகிச் சுவைத்தனர். அவர் பாடுவதை அம்பாளே ரசித்து ஆமோதிப்பதுபோல் இருந்தது.

சிவனின் பாடலைக் கேட்டு மெய்மறந்த கோபாலகிருஷ்ண பாரதியார் அப்போதே அம்பாளின் பெயரில் ஜகன்மோகினி ராகம், ரூபக தாளத்தில் 'சிவகாமசுந்தரி...' என்ற பாடலை இயற்றிப் பாடினார். அம்பாள் ரதத்தில் எழுந்தருளியதும் அவளின் முகம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


ஜகஜ்ஜோதியாய் மின்னியதால் ஜகன்மோகினி ராகத்தில் இப்பாடல் அமைக்கப்பட்டது என்பர்.

தேர்த்திருவிழா முடிந்த பின்னரும் ஸ்வாமிகள் தன் சீடர்களுடன் தில்லையம்பதியிலேயே சிலகாலம் தங்கியிருந்தார்.

நாள்தோறும் சிவகங்கை தீர்த்தத்தில் நின்றுகொண்டு அவர் ஜபம் செய்வது வழக்கம்.

சிவகங்கை தீர்த்தம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது, ஒருநாள்........

அதிகாலைப் பொழுதில் நீரில் நின்றுகொண்டு ஜபத்தில் ஈடுபட்டிருந்த மஹாசந்நிதானம் அவர்களை வெள்ளம் அடித்துக்கொண்டு சென்று விட்டது. சீடர்கள் நீரில் இறங்கித் தேடினர். அவரைக் காணவில்லை.

ஸ்வாமிகள் என்ன ஆனார் ?

"தில்லையில் தேரினைச் சீராக்கி ஓடவிட்டாய்
இல்லையே என்னாது வாரி வழங்கினர்
நல்லுள்ளம் கொண்ட பெருந்தனக் காரர்கள்
எல்லாமும் உன்னருள் ஆசி"

ஜகன்மோகினி என்பது அக்காலத்தில் அபூர்வ ராகமாகும். 1855–ம் ஆண்டு, மார்கழி மாதம், திருவாதிரைத் தேரோட்டத்தில், 'சிவகாமசுந்தரி' கீர்த்தனை கோபாலகிருஷ்ண பாரதியாரல் இயற்றிப் பாடப்பட்டது.

அப்போது, சுந்தரஸ்வாமிகளுக்கு இருபத்து நான்கு வயது, கோபாலகிருஷ்ண பாரதிக்கு வயது நாற்பத்து நான்கு, முத்துகாபட்டி ஜமீன்தாரிணிக்கு வயது நாற்பது, ராமசாமிசிவன் வயது பதின்மூன்று, வைத்தியநாத சிவன் வயது பதினொன்று. இவர்கள் அனைவரும் தேரின் கீழ்த்தட்டிலிருந்து நடராஜரையும், அம்பாளையும் நன்றாகத் தரிசனம் செய்து கொண்டார்கள். தீக்ஷிதர் கற்பூரம் காட்டி, விபூதிப் பிரசாதம் வழங்கினார். இவர்கள் ஐவரும் ரதத்தின் முன்னால் நான்கு வீதிகளிலும் நடந்து சென்றனர்.

அந்நாளிலிருந்து இந்நாள்வரையிலும் ஸ்வாமிகள் புதிப்பித்த தேரிலேயே நடராஜரும்–சிவகாமி அம்மையும் எழுந்தருளி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பவனிவந்து கொண்டிருக்கின்றனர்.

ஸ்வாமிகள் சிலகாலம் சிதம்பரத்தில் தங்கி இருக்க சித்தம் கொண்டார்கள். அவர் கீழச்சந்நிதியிலிருந்த

கோபாலகிருஷ்ண பாரதியின் பிரதம மாணாக்கர் பொன்னுசாமி தீக்ஷிதர் வீட்டில் தங்கினார்கள். அங்கே சூதசம்ஹிதைப்படனம், வேதாந்த விசாரங்கள், சிவபரமான உபன்யாசங்கள் இவைகளை மக்கள் மத்தியில் பிரசங்கம் செய்தார்கள். மக்களும் ஸ்வாமிகளின் சத்சங்கத்தில் கலந்து கொண்டனர்.

இந்து தொன்மவியல் கணக்கின்படி மனிதர்களின் ஒரு ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒருநாள் ஆகும்.

ஒருநாளில் ஆறுகால பூஜைகள் கோயில்களில் மனிதர்கள் நடத்துவது போல (அப்படித்தான் நடக்க வேண்டும்.) தேவர்கள் ஆண்டுக்கு ஆறு பூஜைகள் –அபிஷேகங்கள் சிதம்பரம் கோயிலில் செய்கின்றனர்.

**அவையாவன :**

1. சித்திரை மாதம் திருவோண நக்ஷத்திரத்தில் கனகசபையில் காலையில் அபிஷேகம்.
2. ஆனி மாதம் உத்திர நக்ஷத்திரத்தில் ராஜசபையில் அதிகாலையில் அபிஷேகம்.
3. ஆவணிமாதம் பூர்வபக்ஷ சதுர்த்தசியில் கனகசபையில் மாலையில் அபிஷேகம்.
4. புரட்டாசிமாதம், பூர்வபக்ஷ சதுர்த்தசியில் கனகசபையில் மாலையில் அபிஷேகம்.
5. மார்கழி மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் அதிகாலையில் அபிஷேகம்.
6. மாசி மாதம் பூர்வபக்ஷ சதுர்த்தசியில் கனகசபையில் மாலையில் அபிஷேகம்.

ஸ்ரீஸ்வாமிகளின் அனுக்ரஹ பிரசாதத்தால் நடராஜர் கோயில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தேர் மார்கழி திருவாதிரை அபிஷேகத்திற்குப் பிறகு மீண்டும் ஓட ஆரம்பித்தது.பெண்கள் அதிக அளவில் கலந்து தேர் இழுத்தனர்.

சிவகாமசுந்தரி அம்பாள், நடராஜர் இப்புதிய தேரில் மார்கழி திருவாதிரையில் பவனி வந்ததை பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கண்டு களித்தனர்.

ஸ்வாமிகள் சிதம்பரத்தில் தங்கி இருக்கும் நாட்களில் தம் மாணவர்களுடனும், சில தீக்ஷிதர்களுடனும் அதிகாலை நாலரை மணிக்கே விழித்தெழுந்து, சிவகங்கை தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, அங்குள்ள கல்மண்டபத்தில் அமர்ந்து ஜபதபங்கள் செய்வார்கள்.

பின்பு கோயிலில் நுழைந்து நடராஜாவைத் தரிசனம் செய்து கொண்டு,பால் நிவேத்தியப் பிரசாதம் வாங்கிக் கொண்டு அவரவர்கள் இல்லம் திரும்புவார்கள்.

பின்னர் பதினொரு மணிக்கு ரத்னசபாபதி தரிசனம், மாலை ஐந்து மணி அளவில் சாயரக்ஷை தரிசனம், இரவு பத்து மணிக்கு நடக்கும் அர்த்தஜாம தரிசனம் ஆகிய நான்கு தரிசனங்களையும் விடாமற் செய்வது வழக்கம்.

இத்தகைய சமயத்தில் ஒருநாள்.......

சீடர்கள், சில தீக்ஷிதர்கள் குழாத்துடன் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் சிவகங்கை புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தார்.அனைவரும் ஜபதபம் செய்ய முனைந்தனர்.

சிவகங்கை திருக்குளம் நூறடி அகலமும், முன்னூறு அடி நீளமும் கொண்ட நீண்ட செவ்வக வடிவிலான திருக்குளம். அக்குளத்தைச்சுற்றி கற்கள் பாவப்பட்ட அழகிய தோற்றமுடைய படித்துறைகள் உண்டு.

திருக்கோயிலில் வீற்றிருக்கும் சிவகாமசுந்தரி சமேத நடராஜாவிற்குச் செய்யும் அபிஷேகத் தீர்த்தம் இத் திருக்குளத்தில் சேரும்.

இக்குளத்துப் படித்துறைகளிலும், மண்டபங்களிலும் அதிகாலை வேளை பல்லாயிரக் கணக்கான மக்கள் அமர்ந்து ஜபதபங்கள் செய்யும் அழகைக்காண ஆயிரம் கண்கள் வேண்டும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீஸுந்தரஸ்வாமிகள் தம் ஆஸ்ரம தர்மத்தின்படி சில அனுஷ்டானங்களைப் படிக்கட்டில் அலைமோதும் தண்ணீரில் நின்று செய்து கொண்டிருந்தார்கள். சகஜநிஷ்டானுபரராய் தியான சமாதியில் மூழ்கி இருந்த அவர் திடீரென்று மல்லாந்து ஜலத்தில் விழுந்ததை சீடர்களும், மற்றவர்களும் பார்த்தனர். தண்ணீர் அவரை மிக வேகமாக இழுத்துச் சென்றதையும் கண்டனர். அவரைக் காப்பாற்ற எண்ணி நீச்சல் தெரிந்தவர்கள் குளத்தில் குதித்தனர். அவர்களுக்கு ஸ்வாமிகள் தட்டுப்படவில்லை.

நீரில் விழுந்தஸ்வாமிகள் எங்கேதான் சென்றார்?

"மன்னன் நடராஜர் தேரில் கொலுவிருக்க
அன்பன் அருகிலே அன்னை சிவகாமி
நாணத்தால் கண்புதைத்து மென்முறுவல் செய்வதைக்
காணக்கண் கோடியே வேண்டும்."

பொதுவாக மகான்களும், மடாதிபதிகளும், சந்நியாச ஆசிரமத்தை மேற்கொண்டவர்களும் ஜபதபங்கள் செய்துதான் சகஜநிஷ்டை அடையவேண்டும் என்ற விதியேதும் இல்லை. ஆயினும் கர்மாக்களை 'ஸ்வாமிகளே செய்கிறார் நாமும் செய்ய வேண்டும்' என்ற உந்துதல் பக்தர்களுக்கு ஏற்படும். இல்லை என்றால் நித்யகர்மாக்களில் அவர்களுக்கு சிரத்தை ஏற்படாது.

ஆகவே ஸ்ரீஸ்வாமிகளும் நித்ய அனுஷ்டானங்களை ஈடுபாட்டுடன் செய்வார்.

இவ்வாறு நிஷ்டையில் இருந்த சமயம்தான் சிவகங்கை குளத்தில் மல்லாந்து விழுவதை அங்கிருந்தவர்கள் கண்டனர்.

நீச்சல் தெரிந்தவர்கள் குளத்தில் தாமதியாது குதித்தனர். ஸ்வாமிகளைத் தொட்டு மீட்க முயற்சிப்பதற்குள் ஸ்வாமிகள் விரைவாக நடுக்குளத்திற்குச் சென்றார். அவர்கள் பார்வையிலிருந்து மறைந்தார். ஆழத்தில் அமிழ்ந்தார்.

நீரில் குதித்தவர்கள் தங்கள் முயற்சி வியர்த்தமானது அறிந்து வருந்தினர்; கரைசேர்ந்தனர்.

வினாடிகள் நிமிடங்கள் ஆகி, நிமிடங்கள் மணி ஆகின. தீக்ஷிதர்களும், பொதுமக்களும் கவலையுடன் கரையில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



காத்திருந்தனர். ஸ்வாமிகள் நீரில் மூழ்கிய செய்தி அறிந்து மேலும் கரையில் கூட்டம் சேர்ந்தது.

கிட்டத்தட்ட மூணேமுக்கால் நாழிகைக்குப்பிறகு, அதாவது ஒன்றரை மணி நேரம் சென்று ஸ்வாமிகள் சிவகங்கை நீரில் பத்மாசனக கோலத்தில் அமர்ந்தபடி மிதந்து வந்தார். தியானத்தில் ஆழ்ந்திருந்தார். எவராலும் செய்ய இயலாத செயலாய் நீரில் பத்மாசனக் கோலத்தில் நிமிர்ந்து அமர்ந்த நிலையில் கீழ்க்கரை மண்டபத்தை நோக்கி மிதந்து வந்தார். இவ்வற்புத நிகழ்ச்சியை நான்கு திசைப் படிக்கட்டுகளில் குவிந்து இருந்த ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு வியப்புற்றனர்.

காலை ஆறரை மணி அளவில் ஸ்வாமிகள் நிஷ்டை கலைந்து கரையேறினார். இந்த அற்புதச் செயலைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த எவரும் நடராஜர் கோயிலுக்கு பால்நிவேத்தியம் வாங்கக் கூடச் செல்லவில்லை.

ஸ்வாமிகளின் சிஷ்யர்கள் ‘ஏதோ ஒரு காரண காரியத்திற்காகவே இந்தத் திருவிளையாடலை நடத்தி ஸ்வாமிகள் தம் கண்களில் இருந்து மறைந்து உள்ளார் ’என்பதை உணர்ந்திருந்தனர். அதனால் அவர்கள் ஸ்வாமிகள் நீரில் விழுந்து மறைந்ததும் அதிர்ச்சி ஏதும் அடையவில்லை.ஆனால் தீக்ஷிதர்களும், பொதுமக்களும் இந்த அதிர்ச்சியிலிருந்து மீளமுடியாமல் இருந்தனர்.

ஸ்வாமிகள் மண்டபம் வந்து சேர்ந்ததும் அங்குள்ள யாவரும் அவரின் பாதங்களில் விழுந்து வணங்கினர். அவரிடமிருந்து விபூதி பிரசாதம் பெற்றுக் கொண்டனர். அதன்பின்பு ஸ்வாமிகளும், மற்றவர்களும் கோயிலில் நுழைந்து நடராஜரைத் தரிசனம் செய்தனர். சிவகாம சுந்தரி சமேத நடராஜரை வலம் வந்தனர். பெரிய பிரகாரத்தையும், வெளிப்பிரகாரத்தையும், நான்கு ரதவீதிகளையும் வலம் வந்தனர். பின்னர் கீழச்சந்நிதியில் உள்ள பொன்னுசாமி தீக்ஷிதர் வீட்டிற்கு வந்தார்கள்.

அன்று மாலை சூதசம்ஹிதைப்படனமும் இரவில் சிவபஜனையும் பூர்த்தி ஆன பின்னர், தனித்திருந்த



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மஹாசந்நிதானம் அவர்களிடம் அவருடைய சீடர்கள் 'காலையில் சிவகங்கைக் குளக்கரையில் நடைபெற்றதைச் சொல்லியருள வேண்டும்' என்று வணங்கிக் கேட்டனர்.

ஸ்வாமிகள் தன் சாந்தமான முகத்தில் எப்பொழுதும் தவழும் புன்னகையுடன் கூறத் தொடங்கினார்

என்ன கூறினார் ?

"தில்லைப் பதியில் சிவகங்கை நீரினில்
மல்லாந்து வீழ்ந்து நொடியில் மறைந்தாய்
எவர்எவர் தேடியும் காணாது நின்றாய்
அவர்அவர் நெஞ்சில் நிறைந்தாய். "

சற்றே விச்ராந்தியாக இருந்த மஹாசந்நிதானம் அவர்களிடம் சீடர்கள் மிக ஆவலாய் ஒரு வினாவை எழுப்பினர். ஒருசில பக்தர்களும் அங்கு இருந்தனர்.

'நாங்கள் சாதாரணமான மனுஷ்ய ஜன்மாக்கள். நித்ய கர்மாக்களை நியமப்படி செய்ய வேண்டியவர்கள். ஆனால் தாங்களோ மஹா ஞானி. மகான். நீங்கள் ஏன் ஜபதபங்கள், நித்யகர்மாக்கள் செய்ய வேண்டும் ? தயை கூர்ந்து விளக்குங்கள்'

'ஈஸ்வரனே ஆனாலும் மனிதனாக அவதாரம் எடுத்து விட்டால் அந்தப் பிறவிக்கு ஏற்பட்ட கர்மாக்களை அவன் செய்தே ஆகவேண்டும். அவன் விதிவிலக்கல்ல. கர்மாக்களுக்கு மகான்களும், சந்நியாசிகளும் கட்டுப்பட்டவர்களே. சந்நியாசிகளுக்கும் கர்மா கட்டாயம் உண்டு. அந்த சரீரத்தில் கர்மாவின் பலனுடன் ஒட்டாமல் நிற்பவன்தான் ஞானி.

'ஸ்வாமிகள் நீரில் மூழ்கியதும் என்ன நடந்தது ? ஒரு நொடியில் உங்களைத் தேடித் தண்ணீரில் குதித்தவர்களின் கண்களில் இருந்து எப்படி மறைந்தீர்கள் ? இது உங்களுக்கு மிக எளிமையான செயல் என்பது நாங்கள் அறிந்ததே. ஆயினும் இந்த பக்தர்களும் தங்கள் திருவாக்கினால் தெரிந்து கொள்ள அருள் புரியுங்கள். '



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'நீரில் நின்று ஜபம் செய்து கொண்டிருந்த பொழுது தில்லை அம்பலத்தான் எம்மை அழைத்தான். நீரினில் மூழ்கி மற்றவர் கண்களில் படாதவண்ணம் மறைத்துக் கொண்டேன். அந்த மூன்றே முக்கால் நாழிகையில் யாம் திருக்கயிலாயம் சென்று ஈசனைத் தரிசித்து அவரின் ஆனந்த தாண்டவக் காட்சியைக் கண்டு வந்தோம்.......'

இதைக்கேட்டதும் அங்கிருந்த சீடர்களும், அன்பர்களும் 'ஆகாஹாரம்' செய்தனர். அனைவர் கண்களிலும் பக்தியின் மேம்பாட்டால் கண்ணீர் தாரைதாரையாய் வழிந்தது.

'என்ன அற்புதம்! என்ன பாக்கியம்!!' என்று கூறி மஹாசந்நிதினம் அவர்களின் பாதங்களில் விழுந்து வணங்கினர். மெய் சிலிர்த்து நின்றனர்.

'ஸ்வாமிகள் அவர்கள் நடராஜப் பெருமானின் சப்த தாண்டவங்களைப் பற்றியும், அவற்றில் ஒன்றான தாங்கள் கண்ட ஆனந்ததாண்டவம் பற்றியும் அறிந்துகொள்ள ஆவலாய் உள்ளோம். தயைகூர்ந்து அடியவர்களுக்குத் தெரிவியுங்கள்' என்று பணிவாகக் கேட்டனர்.

'சப்த தாண்டவங்கள் என்பது சிவபெருமான் ஆடிய ஏழு வகையான தாண்டவங்களாகும். தண்டு முனிவருக்கும், பரத முனிவருக்கும் இறைவன் இந்த தாண்டவங்களைக் கற்பித்தார். இத்தாண்டவங்களின் மூலமாக சிவபெருமான், ச ரி க ம ப த நி என்ற ஏழுஸ்வரங்களைப் படைத்தார்.

இந்த ஏழு தாண்டவங்கள்,
காளிகா தாண்டவம்
சந்தியா தாண்டவம்
கௌரி தாண்டவம்
சம்ஹாரதாண்டவம்
திரிபுர தாண்டவம்
ஊர்த்துவ தாண்டவம்
ஆனந்த தாண்டவம் என்று அழைக்கப்படுகின்றன.

இவற்றுள் ஆனந்ததாண்டவம் பிரபஞ்ச இயக்க தாண்டவமாகக் கருதப்படுகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களை இயக்கும் தாண்டவமாக இத்தாண்டவம் அமைந்துள்ளது. இது பிரபஞ்ச இயக்க நடனம் எனவும் போற்றப்படுகிறது. இத் திருக்கோலத்தைக் கண்டுதான் அப்பர் ஸ்வாமிகள் 'குனித்த புருவம் கொவ்வைச் செவ்வாயும்... மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே!' என்று பாடினார். தில்லையில் ஈசன் ஆடிய இத்தாண்டவத்தை திருக்கயிலையில் இன்று நேரில் காணும் பேற்றை யாம் பெற்றோம்.

சிவப்பரம்பொருளின் தாண்டவங்கள் உலக நலனைப் பேணவே நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு தாண்டவங்களும் வெவ்வேறு வகையான மெய்ப்பொருள் கோட்பாடுகளை விளக்குகின்றன.

அத்துடன் மட்டுமல்ல நூற்றிஎட்டு பரதநாட்டிய நிலைகளைக் குறிக்கும் நடன தாண்டவங்களை சிவபிரான் ஆடியுள்ளார்......'

மஹாசந்நிதானம் அவர்களின் விளக்கத்தைக் கேட்டு அனைவரும் மனநிறைவு எய்தினர்.

ஸ்வாமிகள் தம் பதினொரு வயது முதலே ஜலஸ்தம்பம், வாயுஸ்தம்பம், அஷ்டமா சித்திகள் அனைத்தும் கைவரப் பெற்றிருந்தார். எல்லாவிதத் தெய்வத் திருவிளையாடல்களையும் செய்து காட்டி மக்களிடையே சிவாபிமானத்தை நிலைநிறுத்தி வந்தார்.

இந்த நிகழ்வுகள் நடைபெற்ற நாள் 1856–ம் ஆண்டு, நளவருஷம், மாசி 16–ம் தேதி.

அடுத்த நாளே ஸ்வாமிகள் தன் சீடர்களை திருநெல்வேலி அனுப்பிவிட்டு, நாராயணசிவனை மட்டும் அழைத்துக் கொண்டு காசி மாநகர் நோக்கிப் பயணமானார்கள்.

அங்கிருந்து கல்கத்தா சென்றனர்.

அங்கு நடந்த அபூர்வ நிகழ்வு என்ன?

"ஈசனின் தாண்டவம் கண்டஉன் ஆற்றலைப்
பேசவும் கூடுமோ? நல்லடியார் உந்தனைச்
சூழ்ந்து இருக்க அனைவரும் உய்ந்திட
சூதனின் சம்ஹிதை சொன்னான் வாழி!"



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்வாமிகள் தம் பிரதம மாணவரான நாராயண சிவத்தை அழைத்துக் கொண்டு சிதம்பரத்திலிருந்து காசி நகர் நோக்கிப் பயணப்பட்டார்.வழியில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடினர். புனிதக் கோயில்களில் தரிசனம் செய்தனர்.

வழியிலுள்ள முக்கியமான ஊர்களில் ஸூதசம்ஹிதைப் பிரவசனத்தையும், சிவதர்ம ஸூத்திரங்களையும், மக்களின் ரசனைக்கு ஏற்றவாறு தமிழிலும், சமஸ்கிருதத்திலும், உள்ளூர் பாஷைகளிலும் எடுத்துரைத்தார்கள். சில ஊர்களில் ஸூதசம்ஹிதையைப் பஞ்சாக முறைப்படி விரித்துரைத்தார்கள்.

ஸ்வாமிகளும், நாராயணசிவனும் காசிப்பதியை அடைந்தனர். பல தீர்த்தகட்டங்களில் ஸ்நானம் செய்தனர். பல மூர்த்தங்களைத் தரிசித்தனர்.கணபதி முனீந்தரருடன் இணைந்து கும்பாபிஷேகம் நடத்திய காசி விசாலாக்ஷி அம்மனையும் விஸ்வநாதரையும் தரிசித்துக் கொண்டு கல்கத்தா நகருக்குப் பயணமாயினர்.

ஸ்வாமிகள் அந்தந்தப் பகுதிகளில் வழங்கும் பாஷைகளில் பேசும் ஆற்றல் பெற்றவர். எங்கு இந்த மொழிகளைக் கற்றுக் கொண்டார் என்பது தர்க்கத்திற்கு அப்பாற் பட்டது.

வங்காளத்தில் யாத்திரை செய்தபோது வங்காள மொழியிலேயே அங்கிருந்தவர்களிடம் பேசினார். அம்மொழியிலேயே ஸூதசம்ஹிதையை உபன்யாசித்தார். நாராயண சிவனிற்கு இது ஆச்சரியம் அளிக்கவில்லை.

ஒருசமயம்....

ஹுப்ளி நதியில் ஒரு படகில் சீடருடனும், சில அன்பர்களுடனும் பயணம் செய்து கொண்டிருந்தார்.

திடீரெனப் பெரும்புயற்காற்று சுழன்று சுழன்று அடித்தது. கங்கை நதி கொந்தளித்தது. காற்றின் வேகத்தில் படகு அங்கும், இங்கும் அலைக்கழிந்தது; படகின் ஒரு மூலையிலிருந்து அடுத்த மூலைக்குத் தூக்கி எறியப்பட்டனர்; ஒருவர் மீது ஒருவர் மோதிக் கொண்டனர். படகு கவிழ்ந்துவிடும் என்று அனைவரும் அஞ்சினர்.

அந்தப் புயற்காற்றிலும் அனைவருக்கும் வியர்த்தது. அனைவர் முகத்திலும் பயம் தாண்டவமாடியது. படகோட்டியின் கையிலிருந்த துடுப்பு காற்றின் வேகத்தில் நழுவி கங்கை ஆற்றில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



விழந்து விட்டது. அனைவரும் செய்வதறியாது பதைத்தனர்; திகைத்தனர்.

அனைவரும் தங்களுக்கு ஹீப்ளி நதியில் ஜலசமாதி என்ற முடிவுக்கு வந்தனர். தத்தமது இஷ்ட தெய்வங்களை வேண்டிக் கொண்டனர்.

இந்த நிகழ்வுகளால் ஒரு சிறிதும் பாதிக்கப்படாத ஸ்வாமிகள் அந்த ஆடும் படகில் எழுந்து உறுதியாக நின்றார். அனைவர் முகங்களையும் கண்டார். அவற்றில் காணப்படும் பீதியையும் உணரந்தார்.

எவரும் எதிர்பாராத ஒரு செயலைச் செய்தார்.

அவர் செய்த செயல் என்ன ?

“ஆடும் படகினில் ஆடாது நின்றாய்நீ
வாடும் உயிர்களின் துன்பம் தொலைந்திட
கங்கை நதியினில் மாயம் புரிந்திட்டு
எங்கள் நினைவில் நிலைத்தாய். ”

(காசியிலிருந்து மஹாசந்நிதானம் அவர்கள் ஏன் கல்கத்தா சென்றார் ? என்ற கேள்விக்கு கங்கை நதியின் அக்கரையில் தக்ஷிணேஸ்வரத்தில் வசித்து வந்த ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரை சந்தித்து உரையாட என்று ஒருசிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். அவரைச் சந்திக்கச் சென்ற பொழுதிலே படகு புயலில் சிக்கியது என அவர்கள் கூறுகின்றனர். ஆனால் பரமஹம்சரை சந்தித்தற்கான எந்தக் குறிப்பும் ஸ்வாமிகளின் சரிதத்திலோ, ராமகிருஷ்ணரின் வரலாற்றிலோ காணப்படவில்லை என்பது வேறு சிலரின் வாதம்.

நம் பாரததேச மகான்களின் வாழ்க்கைச் சரித்திரங்கள் பரம்பரை பரம்பரையாக நமக்கு செவிவழிச் செய்திகளாகவே வந்து சேர்ந்துள்ளன. சரியான முறையில் அனைத்து மகான்களின் வரலாறும் பதிவு செய்யப்பட்டிருக்குமாயின் இன்னும் பல அரிய தகவல்கள் கிடைத்திருக்கும்.)

படகில் பயணம் செய்பவர்களின் பயத்தை உணர்ந்து கொண்டார் ஸ்வாமிகள்.அவர்களுக்குத் தைரியம் கூறினார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீஸ்வாமிகள் ஆடும் படகில் உறுதியாக எழுந்து நின்றார்.

'காளிமாதா, உலக மாதா உடனே இங்கே ஓடிவா!' என்று உரக்கக் கணீரென்று குரல் எழுப்பினார்.

எப்படி வந்தாளோ, எங்கிருந்து வந்தாளோ தெரியாது. ஒரு இளம்பெண் கையில் துடுப்புடன் அப்படகில் தோன்றினாள். (அவள் காளியைத் தவிர வேறு யாராய் இருக்க முடியும்!) துடுப்பை நீரில் துழாவினாள். அங்கும் இங்கும் நீரில் அலைக்கழிந்த படகு கரை நோக்கிச் சீராக மிதக்க ஆரம்பித்தது. தோணியில் இருந்தவர்கள் தைரியம் அடைந்தனர்.

படகு கரையை அடைந்தது. அனைவரும் பத்திரமாக இறங்கினார்கள். படகோட்டிய பெண்ணிற்கு நன்றி சொல்ல அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். அவள் அங்கு இல்லை. நடந்தவை அனைத்தும் ஸ்வாமிகள் மஹிமை என்றறிந்து அவர் பாதத்தில் விழுந்து வணங்கினர்.

(மேலே கூறிய திருவிளையாடலை ஸ்ரீகிருஷ்ண.கே.ராமபத்ர சாஸ்திரிகள் என்பவர் 'லோகோபகாரி' என்ற வாரப் பத்திரிக்கையில் எழுதி உள்ளார்.)

கல்கத்தாவில் இருந்து திருநெல்வேலி திரும்பிய ஸ்வாமிகள் மீண்டும் அரிமழம் வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்து இரண்டு மைல் தொலைவில் இருந்த பனையூர் என்ற இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு நிஷ்டையில் அமர்ந்தார்.

அவரை வைத்தியர் கிருஷ்ணய்யர் அவர்களும் காமாக்ஷி ஜோசியர் அவர்களும் அருகிலிருந்து கவனித்துக் கொண்டனர். கிருஷ்ணய்யர் அவர்களுடன் சித்தவைத்திய முறைபற்றி விரிவாக உரையாடினார்கள். ஸ்ரீஸ்வாமிகள் மிருக வைத்தியத்திலும் பூரண அறிவு பெற்றிருந்தார். அவை பற்றிய குறிப்புகள் ஓலைச்சுவடிகளில் பதிந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சாத்தப்பையா என்பவர் ஸ்வாமிகளிடம் சீடனாகச் சேர்ந்தார். ஸ்வாமிகளின் தேவைகளைப் பொறுப்புடன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கவனித்து வந்தார். ஆத்ம ஞானத்தில் அவர் முழுமை பெற்று விளங்கியதை ஸ்வாமிகள் தெரிந்து கொண்டார். மாதங்கள் சில சென்றன. சாத்தப்பையாவை அழைத்தார். 'நீ முழுமையான ஞானத்தைப் பெற்றுள்ளாய். தனியாக ஒரு மடத்தை ஸ்தாபித்து சீடர்களை உருவாக்கிக்கொள்.உனக்கு எம் ஆசிகள்.'

சாத்தப்பையா அரிமழத்தில் ஒரு மடத்தை நிறுவினார். சீடர்கள் அவரை நாடி வந்தனர். சில ஆண்டுகளுக்குப் பிறகு அரிமழத்தில் அவர் சமாதி கொண்டார். அந்த இடம் 'சாத்தப்பையா மடம்' என்ற பெயரில் இன்றும் உள்ளது.

ஒருநாள்.....

பனையூரில் இருந்த ஸ்வாமிகளைத்தேடி சிவராமன் செட்டியார், சுப.ராமன் செட்டியார், காமாக்ஷிஜோசியர், கிருஷ்ணய்யர் மற்றும் ஊர்ப்பிரமுகர்கள் ஆகியோர் வந்தனர். ஸ்வாமிகளிடம் தம் கோரிக்கையைப் பணிவுடன் சமர்ப்பித்தனர்.

அவர்கள் கோரிக்கை என்ன ?

"காளியின் பூரண ஆசிகள் பெற்றவன்
யாளியின் ஆற்றலுடன் அன்பரைக் காத்தனை
பொங்கிடும் பூம்புனல் மத்தியில் உன்பதம்
கங்கையின் நீரிலும் மேலாம்."

ஸ்ரீஸ்வாமிகளிடம் பக்தர்கள் முறையிட்டனர்: "மஹா சந்நிதானம் அவர்கள் அரிமழத்திற்கு எழுந்தருள வேண்டும். மகான்களுக்கு அனைத்து ஊர்களும் ஒன்றே, அனைத்து மக்களும் சமமானவர்களே.

நாங்கள் தவறேதும் செய்திருந்தால் பொறுத்தருள வேண்டும். சந்நிதானம் அவர்களுக்கும்,அவர் அடியார்களுக்கும் இயன்ற வசதிகளை செய்துதரக் காத்திருக்கிறோம்."

ஸ்வாமிகள் பதிலேதும் உரைக்காமல் நாராயணசிவனைப் பார்த்தார்கள். குறிப்பறிந்த சிவன் கிருஷ்ண ஐயருக்கு ஜாடை காட்டினார். அதைத் தெரிந்துகொண்டு சிவன் பின்னே சென்றார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இருவரும் தனியாக ஒருமரத்தடியில் அமர்ந்து சிலநொடிகள் பேசினர்.

பின்னர் ஸ்வாமிகள் இருக்கும் இடம் நோக்கித் திரும்பி வந்தனர்.

கிருஷ்ண ஐயர், அரிமழம் ஊர்ப்பிரமுகர்களை தனியாக அழைத்துச் சென்று பேச ஆரம்பித்தார் :

“மஹாசந்நிதானம் அவர்களை நம்ஊர் நகரச் சிவன் கோயில் கும்பாபிஷேகத்தை நடத்தித்தர வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டோம். அவரும் அந்தப் பணியை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு நம் அனைவரையும் ஆசிர்வதித்தார். ஆனால் ஒரு கட்டளையை நிபந்தனையாக விதித்தார்.அதை நிறைவேற்றாததால் உண்ணா நோன்பிருந்தார்.

நாம் அனைவரும் சென்று அவரிடம் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டோம்.

அனைவருக்கும் அன்னதானம் வழங்க ஒரு அன்னதான சத்திரம் பொதுப்பணத்தில் நிறுவப்பட்டது. ஆனால் கும்பாபிஷேகம் முடிந்த சிலநாட்களுக்குள் அது மூடப்பட்டு விட்டது. அதுவே ஸ்வாமிகளின் வருத்தத்திற்குக் காரணம். யாரேனும் நிரந்தரமாக அன்னசத்திரம் நடத்தினால் சந்நிதானம் அவர்கள் மகிழ்வார்கள். அரிமழமும் வருவார்கள்.”

நாராயணசிவம் தெரிவித்த கருத்துக்களை கிருஷ்ண ஐயர் மூலம் தெரிந்து கொண்டனர் ஊர்ப் பிரமுகர்கள்.

நகரத்தார் பெருமக்கள் தங்களுக்குள் கலந்து பேசினர். அவர்களுள் வ.பெரி. குடும்பத்தினர் நித்திய அன்னதானம் செய்யவும், அதற்கான ஒரு நிலையான சத்திரத்தை நிறுவி அதை நிர்வகிக்கவும் முன் வந்தனர்.

தங்களின் அன்னசத்திரம் திறக்கும் முடிவை ஸ்வாமிகளிடம் பணிந்து தெரிவித்தனர்.

1857–ம் ஆண்டு நளவருஷம் தம் திருக்கரங்களால் அச்சத்திரத்தைத் திறந்து வைத்தார். அன்னதான விழா மக்கள் மகிழ்ச்சி அடைய நல்ல முறையில் நடைபெற்றது.

(ஸ்வாமிகளின் அருளாசியால் திறக்கப்பட்ட சத்திரம் சுமார்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நூறு ஆண்டுகளுக்கு மேல் சிறப்புடன் செயல்பட்டது. அன்னதான சத்திரத்தை நிர்வகித்த குடும்பத்தினரின் வீடு ‘சத்திரம் செட்டியார் வீடு’ என்று இன்றும் அழைக்கப்படுகிறது.)

அரிமழத்தில் மஹாசந்நிதானம் அவர்களும், அவரின் சீடர்களும்தங்கி இருக்க சிவராமன் செட்டியார் அவர்கள் இடம் அளித்துப் புண்ணியம் பெற்றார்.

மாதங்கள் சில கடந்தன......ஸ்வாமிகளின் ஞானகுருவாகிய விஸ்வேஸ்வர சாஸ்திரிகள் அடைச்சாணியில் சித்தியாகி விட்டாரென்ற தகவல் வந்து சேர்ந்தது. சற்றும் தாமதம் செய்யாமல் அடைச்சாணியை அடைந்தார்.

ஸ்ரீவிஸ்வேஸ்வர சாஸ்திரிகள் சமாதி அடையும் முன்பு தம் அருகிலிருந்த சீடர்களிடம் சுந்தரஸ்வாமிகளைப் பற்றிக் கூறியுள்ளார்.

என்ன கூறியிருந்தார்?

“பனையூரில் பாங்குடனே நற்றவம் செய்தாய்
தனதூரில் தங்க அரிமழத்தார் கேட்டிட
அன்ன மளித்திடும் சத்திரம் கட்டிடச்
சொன்ன உயர்ந்தோனே வாழி!”

சற்றும் தாமதியாது அடைச்சாணி நோக்கிக் கால்நடையாகப் பயணப்பட்டார் ஸ்வாமிகள்.

கரடு முரடான சாலைகளில் கடுகி விரைந்தும், , நீர் நிறைந்த ஆறுகள், ஓடைகளைக் கடந்தும், வயல் வரப்புகளில் வேகமாய் நடந்தும் திருமயம், திருப்பத்தூர், மதுரை, திருநெல்வேலி, கோடகநல்லூர், அரியநாயகிபுரம், முக்கூடல், ரெங்கசமுத்திரம், பனஞ்சாடி ஆகிய ஊர்களின் வழியாக அடைச்சாணியை அடைந்தார்.

தம்முடைய ஞானகுருவாகிய விஸ்வேஸ்வர சாஸ்திரிகளின் சமாதியை தரிசித்தார்; வணங்கினார்.

பின்பு கிராமத்தார்களுடனும், விஸ்வேஸ்வர சாஸ்திரிகளின் பூர்வாசிரம குடும்பத்தாருடனும் அளவளாவினார்.

சாஸ்திரிகள் சித்தியாவதற்கு ஆறு ஆண்டுகளுக்கு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



முன்பாகவே சந்நியாச தர்மத்தை ஏற்றுக் கொண்டார். சந்நியாசம் வாங்கிக் கொண்டவர்கள் கிருஹஸ்தர்களின் வீடுகளில் தங்கக் கூடாது என்பது நியதி. எனவே தீக்ஷைபெற்றுத் துறவறம் ஏற்ற பின்பு அடைச்சாணி காங்கேயன் வாய்க்கால் அருகில் அரசரடிப் பிள்ளையார் கோயிலின் வடபால் ஒரு பர்ணசாலை அமைத்துக் கொண்டார்.

அவருடைய அன்றாட பிக்ஷையை யாரேனும் தங்களுடைய வீட்டிலேயே தயார் செய்து அந்த பர்ணசாலையில் கொண்டு வந்து வைப்பார்கள். ஒரு வேளை மட்டும் அந்த பிக்ஷையை சிறிது ஏற்றுக் கொள்வார். உறுதியான வைராக்கிய சித்தத்துடன் பழுத்த ஞானானுப பூதியிலே திளைத்திருந்தார். சகஜ சமாதி நிஷ்டையிலேயே ஆழ்ந்திருந்தார்.

அவருக்கு வயது 94. தாம் சித்தி அடைய வேண்டிய தக்க தருணம் இதுவே எனத் தீர்மானித்தார்.

தன் சீடர்களை அழைத்து அவர்களுக்கு உபதேசிக்க வேண்டிய தத்துவங்களையும், அறிவுரைகளையும் மீண்டும் போதித்தார்.

சிஷ்ய லக்ஷணங்களை விவரித்துக் கூறினார்:

"சிஷ்யனுக்குப் பிரதான லக்ஷணம் விநயம். 'சிக்ஷ' என்றால் கற்றுக் கொடுப்பது. எவன் கற்றுக் கொள்கிறானோ அவன் சிஷ்யன். சிக்ஷயன் என்பதே சிஷ்யன் ஆயிற்று. சாதாரண ஒரு மாணவனும் குருவின் போதனையால் சேஷனாக உயர்ந்து சிஷ்யனாகிறான்.

எவனொருவன் தன்னுடைய ஐம்புலன்களையும் அதன்வழியே போகவிடாமல் தண்டித்து–சிக்ஷை–அடக்கி ஆள்கிறானோ அவனே சிக்ஷயன்.

சிஷ்யன் ஐம்புலன்களையும் அடக்கி அடக்கமாக–விநயமாக இருப்பவனே 'விநயன்,' அதனாலேயே சிஷ்யனுக்கு 'விநீதன்' என்ற மற்றொரு பெயரும் உண்டு.

பெற்றோரைவிட்டு குருகுலவாசத்தில் குருவோடு கூடவே வசிப்பதால் 'அந்தேவாஸி' எனவும் அழைக்கப்படுகிறான்.

என்னுடைய சிஷ்யன் சுந்தரன் 'என்னுடன்' வசிக்கவில்லை. ஆனால் 'என்னுள்ளே' வசிக்கிறான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவன் என் ஹிருதயத்தில் இடம் பெற்றுவிட்டதால் அவனே 'அந்தேவாஸி'. சுந்தரன் சித்த பக்குவமும், புத்தி தீக்ஷண்யமும் உள்ளவன். அத்துடன் விநயமும் உள்ளவன். பரம விநயத்தினால் குருவையே சரணாகதி என்று அடைந்தவன்.

'குரு' என்பதற்கு 'இருட்டைப் போக்கடிக்கறவர்என்று அர்த்தம். 'கு' என்பது அந்தகாரம்; 'ரு' என்பது அதை நிவர்த்தி செய்வது. மாயை, அஞ்ஞானம் என்ற இருட்டிலிருந்து ஞானம் என்னும் ஒளியைப் பாய்ச்சுபவர் குருவே ஆகும்.

சுந்தரனுக்கு, தர்மம், பக்தி, ஞானம் இவற்றை சொல்லிக் கொடுக்கும் ஆச்சாரியனாகவும், ஒழுக்கத்துடன் ஜீவனத்திற்கு வழிகாட்டும் குருவாகவும் பலர் இருந்துள்ளனர். ஆனால் அவர்களுக்குக் கிடைத்த ஒப்பற்ற ஒரு சிஷ்யன் சுந்தரனே!

சுந்தரன் மிகப்பெரும் ஞானி. அவன் காலத்தில் அவன் அடையும் சிறப்பைவிட ஒரு நூற்றாண்டு சென்ற பின்னரே அவன் மஹிமையை உலகம் தெரிந்து கொள்ளும். அவன் பெருமையை உணர்ந்து போற்றுபவர்கள் அடையும் பேறுகளை அளவிட முடியாது..."

1857–ம் ஆண்டு நளவருஷம் விஸ்வேஸ்வர சாஸ்திரிகள் சித்தியடைந்தார். அவரின் சமாதியைத் தொழுதார் ஸ்ரீஸ்வாமிகள். விஸ்வேஸ்வர சாஸ்திரிகளின் பூர்வாசிரம குமாரராகிய ஆயக்குடி சோமசுந்தர சாஸ்திரிகளைத் தம் குரு ஸ்தானத்தில் வரித்தார். அடிக்கடி இருவரும் சந்தித்துப் பற்பல வேதாந்த விஷயங்களை பற்றி கலந்துரையாடினர்.

(ஸ்ரீஸ்வாமிகளின் ஏழுகுருமார்களைப் பற்றியும் சரிதத்தின் தொடக்கத்திலேயே விரிவாகப் பார்த்து விட்டோம்.)

சில மாதங்கள் சென்றன........

ஸ்வாமிகள் மீண்டும் தம் யாத்திரையைத் தொடங்கினார்.

அதன்பின் மஹாசந்நிதானம் அவர்கள் நிகழ்த்திக்காட்டிய அற்புதங்கள் ஒன்றன் பின் ஒன்றாய்த் தொடர்ந்து நடந்தன.

அவற்றுள் ஸ்வாமிமலையில் நிகழ்ந்த அற்புதச்செயல் என்ன ? என்பதை முதலில் பார்ப்போம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



"குருவடி போற்றியோர் குன்றாய் உயர்ந்தார்
திருவடி பற்றியோர் நல்லருள் பெற்றார்
செருக்கறுத்து உன்னையே போற்றியோர் தம்மின்
பெருமை அளத்தல் அரிதே!"

மஹாசந்நிதானம் அவர்களின் திக்விஜயம் தொடங்கியது.

அடைச்சாணியிலிருந்து தஞ்சை நகர் நோக்கிப் பயணமானார் தன் சீடர்களுடன்.

வையைச்சேரி சென்று சில நாட்கள் தங்கினார்.

வைத்தியநாதசிவனுடன் ஸ்வாமிமலை சென்று ஸ்வாமிநாதப் பெருமானை தரிசனம் செய்தார்.

கீழே இறங்கி அக்ரஹாரம் ஒன்றின் வழிமயாக வரும்பொழுது ஒரு வீட்டில் அழுகுரல் கேட்டது. வீட்டிலுள்ளவர்களின் கதறல் கேட்பவர்களின் வயிற்றைப் பிசைந்தது. அந்த வீட்டை நோக்கி விடுவிடுவென நடந்தார்.

அது ஒரு வேதவிற்பன்னரின் வீடு.நான்கு வேதங்களிலும் ஆழ்ந்த அறிவு பெற்று 'சதுர்வேத சிகாமணி' என்று ஊரினரால் போற்றப்பட்ட மத்திய வயதுடையவர், அவ்வீட்டில் தன் மனைவி யுடனும், ஒரே புதல்வனுடனும் வசித்து வந்தார். புதல்வனுக்கு வயது பதினாறு. பெயர் குப்புஸ்வாமி.

அவன் திருமண வயதை எட்டியதால் குடும்பத்திற்கு ஏற்ற பெண்பார்த்து திருமணத்திற்கு நாள் குறிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நண்பர்களுடன் நீர்நிலையில் குளிக்கச் சென்றிருக்கிறான். எங்கோ புதரிலிருந்த கொடிய விஷமுள்ள சர்ப்பம் அவனைத் தீண்டி விட்டது. அவனுடைய உடலை நண்பர்கள் வீட்டில் கொண்டு சேர்த்தனர். குளிக்கப் போனவன் குளிர்ந்து போய் வந்தான். வாயில் நுரைதள்ள, உடல் நீலம் பாரித்து கிடத்தப் பட்டிருந்தான்.

கூப்பாடும், ஆரவாரமும், ஓலமிட்டு அழும் அவலக்குரலும் கேட்டு அவ்வீட்டினுள் நுழைந்தார். வீட்டு வாசலில் ஒரே கூட்டம், கூச்சல். ஸ்வாமிகளைப் பார்த்ததும் குப்புஸ்வாமின் தாயார் விரைந்து ஓடிவந்து அவர் பாதங்களில் விழுந்து கதறினார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'ஐயா! தவசிரேஷ்டரே! நீங்கள் யார் என எங்களுக்குத் தெரியாது. ஆனால் என் குழந்தைக்கு உயிர்பிச்சை கொடுக்கும் தெய்வமாய் உங்களைப் பார்க்கிறேன். என் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை கொடுங்கள்.'

தன் பாதங்களில் விழுந்து கதறி அழுத பெண்ணையும், அவள் அருகில் கவலையே உருவாக நின்றிருந்த சதுர்வேதியையும், கீழே கிடத்தப்பட்டிருந்த உடலையும் ஒரு நொடி தனது தீக்ஷண்யம் மிக்க கண்களால் பார்த்தார்.

ஒரு கணம் கண்களை மூடி ஜபித்தார். வீட்டின் கொல்லைப்புரம் சென்று அங்கிருந்த வெற்றிலைக் கொடிக்காலி லிருந்து கைப்பிடி பறித்தார். வீட்டினுள் சென்றவர் வெற்றிலையை வாயில் போட்டு நன்றாக மென்றார். வெற்றிலைச்சாறு வாயில் வடிந்தது. குப்புஸ்வாமியின் தலையைத் தன் மடியில் வைத்துக் கொண்டார். கிட்டிப் போயிருந்த அவன் வாயை விரல்களால் அகலத் திறந்தார். தன் வாயிலிருந்த வெற்றிலைச்சாற்றை அவன் வாயினுள் புகட்டினார்.

கிணற்றடிக்குச் சென்று வாளிவாளியாகத் தண்ணீரைத் தலையில் ஊற்றிக்கொண்டார். உள்ளே வந்து குப்புஸ்வாமியின் உடல் அருகே எப்பொழுதும் போல நிமிர்ந்து அமர்ந்து கொண்டார். கண்களை மூடி நிஷ்டையில் ஆழ்ந்தார்.

இரண்டு நாழிகை நேரம் சென்றது. அசையாது கிடந்த அவன் உடலில் சிறிது அசைவு தோன்றியது. உடலில் நீலம் மாறியது.

மெலிதாக முனகினான். மரத்துப் போயிருந்த அவன் கைகால்கள் உணர்ச்சியைப் பெற்றன. எழுந்து அமர்ந்தான். பெற்றவர்களும், மற்றவர்களும் மகிழ்ச்சியில் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

நிஷ்டை கலைந்து எழுந்த ஸ்வாமிகள் எதுவும் நடவாதுபோல் அவ்விடத்தை விட்டு விரைவாக அகன்றார். எவராலும் அவரைப் பின்தொடர்ந்து செல்ல இயலவில்லை. வைத்தியநாதசிவன் வேகமாக ஓடி அவருடன் சேர்ந்து கொண்டார்.

இருவரும் திருவாடுதுறை ஆதீனம் சென்றனர். ஆதீனகர்த்தா அம்பலவாண தேசிகர் அவர்கள் ஒரு விக்ரஹத்தை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



ஸ்வாமிகளிடம் கொடுத்து அதை வையைச்சேரியில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் நடத்தவேண்டும் என்ற தன் அவாவைத் தெரிவித்தார்.

அது ஒரு நடராஜர் விக்ரஹம்.

அம்பாள் இல்லாது எவ்வாறு குடமுழுக்கு நடத்துவது?

ஸ்வாமிகளின் அருளால் அம்மனும் கிடைத்தாள்.

எப்படி?

(சுந்தரஸ்வாமிகள் நாராயணசிவன், யக்ஞேஸ்வரன் மற்றும் குப்புஸ்வாமி ஆகிய மூன்று பேருடைய உயிரை மீட்டுத் தந்துள்ளார்கள்.

புராண, இதிகாசங்களிலும், பெரியபுராணத்திலும் மாண்டவர் இறையருளாலும், இறையருள் பெற்றவர்களாலும் மீண்டுள்ளனர்.

திங்களூரில் அரவம் தீண்டி இறந்த அப்பூதி அடிகளாரின் மகனை அப்பர் பெருமான் பதிகம்பாடி உயிர்ப்பித்தார்.

திருமருகலில் வணிகர் மகனைப் பாம்பு தீண்ட, திருஞான சம்பந்தர் பதிகம்பாடி அவனுக்கு மீண்டும் உயிர் கொடுத்தார்.

திருமயிலையில் அரவம் தீண்டி இறந்து சாம்பலாய் இருந்த பூம்பாவைக்கு திருஞானசம்பந்தர் உயிர் கொடுத்தார்.

அவினாசியில் முதலைவாயில் சென்ற சிறுவனை ஏழுஆண்டுகள் கழித்து, சுந்தரர் பதிகம்பாடி மீட்டு வந்தார்.

அவை போன்ற நிகழ்வே இது. அவர்கள் பதிகம் பாடினார்கள். ஸ்வாமிகள் தன் ஆன்மபலத்தால் உயிர்களை மீட்டார் எனக்கொள்ள வேண்டும்.)

“மாண்டவர் மீண்டனர் ஆன்ம பலத்தினால்
ஆண்டவனாய் வந்தங்கே காத்தருள் செய்தனை
அப்பரும் சுந்தரரும் சம்பந்தர் ஞானத்தில்
ஒப்புமை ஆவார் உனக்கு.”

திருவாடுதுறை ஆதீனம் அவர்கள் நடராஜர் விக்ரஹம் தமக்குக் கிடைத்த வரலாற்றைக் கூறினார்:

’வைத்தியநாத சிவனுக்கு எப்பொழுதும் மனதில் ஒரு குறை இருந்து வந்தது. வையைச்சேரி திருக்கோயிலில் ஸ்ரீமங்களாம்பிகை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சமேத ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் குடிகொண்டுள்ளார்.

வைத்தியநாத சிவன் நடராஜப் பெருமானிடம் அளவுகடந்த பக்தியும், ஈடுபாடும் உடையவர். தனது ஊரான வையச்சேரி கோயிலில் நடராஜப் பெருமான், சிவகாமசுந்தரி விக்ரஹங்கள் இல்லையே என்ற நீங்காத குறையே அது.

சிவகாமி அம்பாள் சமேத நடராஜரை பிரதிஷ்டை செய்து, கோயில்கட்டி அதற்கு கும்பாபிஷேகம் நடத்த வேண்டுமென்பது அவரது நெடுநாளைய ஆசை.அதை யாமும் ஊகித்து அறிந்து கொண்டோம். அவ்விருப்பத்தை விரைவாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று ஆடுதுறை அண்ணலைப் பிரார்த்தித்துக் கொண்டோம்.

ராமசாமிசிவன், வைத்தியநாத சிவன் மற்றும் எமக்கும் ஒரு இரவில் ஒரே மாதிரி கனவு தோன்றியது. அக்கனவில் நடராஜப் பெருமான் காட்சி அளித்து 'திருவாடுதுறை நாணற்காட்டிலிருந்து வெளிப்படுவேன். சிவகாம சுந்தரி அம்மன் வையைச்சேரியில் நிலத்திலிருந்து தோண்டி எடுக்கப்படுவாள். அவைகளைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் நடத்த எம்முடைய அம்சமுள்ளவன் வருவான்.அவன் திருக்கரங்களால் கும்பாபிஷேகம் நடைபெறும் 'என அசரீரியாய்த் தெரிவித்து மறைந்தார்.

ஒரேமாதிரியான இந்தக் கனவை மூவரும் பகிர்ந்து கொண்டோம்.

நாட்கள் ஓடின.

ஆதீனத்திற்கு பாத்தியப்பட்ட நாணற்காட்டை அழித்து அங்கு ஒருலக்ஷம் தென்னங் கன்றுகளையும் மற்றும் பயன்தரும் பழமரச் செடிகளையும் வைத்து 'லக்ஷத் தோப்பை' உருவாக்க எண்ணினோம். நாணற்காட்டை அழித்து, வெட்டித் திருத்தினார்கள் பணியாட்கள். அவ்வாறு செய்து வரும்பொழுது அதில் செம்பு, பித்தளை, வெண்கலம் முதலிய பஞ்சலோகங்களால் ஆன பல விக்ரஹங்கள் கிடைத்தன.அவற்றுள் ஒன்றுதான் பஞ்சலோகத்தால் ஆன இந்த அழகிய நடராஜர் விக்ரஹம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



ஒரு ஸ்தபதியை வரவழைத்து விக்ரஹத்தைப் பார்க்கச் செய்தோம். விக்ரஹத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்தார். எந்தக் குறைவுமின்றி, பின்னம் எதுவுமில்லாமல், சர்வலக்ஷணங்களுடன் விளங்குவதாகத் தெரிவித்தார்.

இன்று விநாயக சதுர்த்தி நன்னாள். இந்த விக்ரஹத்தை உங்களிடம் ஒப்படைக்கிறோம்.இனி எல்லா விக்னங்களும் நீங்கட்டும். உங்கள் கருணையினால் விரைவில் சிவகாமி அம்மன் விக்ரஹமும் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை உள்ளது. தங்களுடைய திருக்கரங்கரங்களால் வையைச்சேரியில் கும்பாபிஷேகம் நடக்கும் நாளை எதிர்பாக்கிறோம். வைத்தியநாதசிவனின் உள்ளக்கிடக்கையும் விரைவில் பூர்த்தி ஆகட்டும்."

என்று திருவாடுதுறை ஆதீனம் அவர்கள் நடராஜர் விக்ரஹம் கிடைத்த வரலாற்றை விரிவாகக் கூறினார்.

நடராஜர் விக்ரஹத்தைப் பயபக்தியுடனும், மகிழ்ச்சியுடனும் ஆதீனத்திடம் இருந்து பெற்றுக்கொண்டார் சிவன்.

ஸ்ரீஸ்வாமிகளுடன் வையைச்சேரி நோக்கிப் பயணமானார்.

சிவகாமசுந்தரி அம்மன் சிலை எப்பொழுது கிடைத்தது? எப்படிக் கிடைத்தது ?

"நடராஜர் நர்த்தனம் ஆட விருப்பால்
உடனாய செல்வி சிவகாம வல்லி
இடமிருந்து எம்மேல் அருள்மழை தூவ
கடனாகக் காத்தருள் வாய். "

ஸ்ரீ விநாயக சதுர்த்தி நன்னாளில் பஞ்சலோக நடராஜர் விக்ரஹம் திருவாடுதுறை ஆதீனம் அவர்களால், மஹாசந்நிதானம் முன்னிலையில், வைத்தியநாத சிவன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

நடராஜர் கிடைத்து விட்டார்; சிவகாமி அம்மன் கிடைக்க வேண்டுமே!

அதுவும் 'பூமியிலிருந்தே கிடைக்கும்' என சிவபிரான் கனவில் தோன்றி அருளியுள்ளார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வைத்தியநாத சிவன் மிகவும் எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டவர். தான, தர்மங்களையும், தம் மாணாக்கர்களின் தேவை அறிந்து உதவுவதிலும் தன்னிகரற்று விளங்கினார் என்பதை முன்னரே பார்த்துள்ளோம். சொல்லிலும், செயலிலும் அப்பழுக்கற்ற ஆன்மீகவாதி. கச்சேரி மூலம் பெறும் பணம், பரிசுகளை ஆலயத் திருப்பணிகளுக்கே பயன்படுத்தினார்.

கச்சேரி செய்ய வெளியூர் சென்றால் அவர் அந்த ஊர்க்காரரிடம் கேட்கும் முதல் கேள்வியே 'உங்கள் ஊரில் சிவாலயம் இருக்கிறதா ?' என்பதே.

அந்த ஊர் சிவாலயத்தில் வணங்குதல் செய்துவிட்டே தன் அன்றைய உணவை எடுத்துக் கொள்வார். சிவாலயம் இல்லாத ஊர்களில் தான் கையோடு எடுத்துச் செல்லும் பூஜைப் பெட்டியில் உள்ள பூஜா விக்ரஹங்களுக்கு ஆராதனை செய்து விட்டே உண்பார்.

தன்னுடைய அனைத்துக் கச்சேரிகளிலும் முதலாவதாக விநாயகர் துதியைப் பாடுவார். இரண்டாவதாக ராமஸ்வாமி சிவன் சிதம்பரம் நடராஜப்பெருமான் பேரில் இயற்றிய, நாட்டைக்குறிஞ்சி ராகத்தில் அமைந்த 'எக்காலத்திலும் மறவேனே' என்ற சாஹித்தியத்தைப் பாடுவதை மரபாக வைத்திருந்தார்.

சிவனிற்கு, நடராஜப்பெருமான் மீது அந்தஅளவு பக்தி; ஈடுபாடு. தன்னுடைய ஊரில் நடராஜப் பெருமான் – சிவகாமி அம்மனுக்குத் தனி சந்நிதி கட்டி கும்பாபிஷேகம் செய்ய விரும்பினார்.

ஸ்வாமிகளிடம், 'நடராஜர் கிடைத்து விட்டார். அம்பாள் எப்போது கிடைப்பார் ?' என்று கேட்டார்.

'விநாயருக்கு உகந்த ஆவணி வளர்பிறை சதுர்த்தியில் – விநாயகசதுர்த்தியில், ஐயன் கிடைத்தான். அம்மை சித்ரா பௌர்ணமியில் தன்னை வெளிப்படுத்திக் கொள்வாள்' என்று அருளினார்.

ஸ்வாமிகள் வையைச்சேரியிலிருந்து திருநெல்வேலி புறப்பட்டுச் சென்றார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



இன்னும் ஏழுமாதங்கள் காத்திருக்க வேண்டுமே என்ற கவலை எழுந்தது சிவனிற்கு.

நாட்கள் கடந்தன.

அந்த ஆண்டு கோடையும் வந்தது.கோடைவெயில் வழக்கத்திற்கு மாறாகத் தகித்து எடுத்தது.நீர் நிலைகள் வறண்டு போயின.அகஸ்தீஸ்வரர் கோயில் கிணற்றிலும் ஒருசொட்டுத் தண்ணீர் இல்லை.கோயில் விக்ரஹங்களின் அபிஷேகத்திற்குக் கூட நீண்டதொலைவு சென்று, ஊற்றுதோண்டி அந்த நீரை எடுத்துவரவேண்டி இருந்தது.

பல மரங்கள் நீரின்றிப் பட்டுப்போயின. மேய்ச்சலுக்குச் சென்ற கால்நடைகள் அருந்த நீரின்றி மெலிந்தன. பஞ்சம் தலைவிரித்தாடியது.

அந்தக்கால மக்கள் தாம் இடர்ப்பட்டாலும் ஆலயப் பணிகளுக்கு எவ்வித இடையூறுகளும் வரக்கூடாது என்பதில் மிகக் கவனமாய் இருந்தனர். தம்மை வருத்திக் கொண்டேனும் ஆலயச் செயல்பாடுகளுக்கு உதவி வந்தனர்.

'நம்மால் புதிய கோயில்களைக் கட்ட இயலாது போனாலும் இருக்கின்ற கோயில்களை முறைப்படி நல்லமுறையில் பராமரிக்க வேண்டும்' என்ற எண்ணம் அவர்களிடம் இருந்தது.

அகஸ்தீஸ்வரர் சந்நிதானத்திலே உள்ள கிணற்றில் ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்யக்கூட நீர்இன்றி காய்ந்து வற்றி வறண்டிருந்தது. அக்கிணற்றைத் தூர்எடுத்து, ஆழப்படுத்தும் பொறுப்பை வைத்தியநாதசிவன் ஏற்றுக் கொண்டார். அக்கிணறைத் தோண்டச் செய்தார்.

தூர் எடுக்கும் பணி தொடங்கியது.

அப்பொழுது அந்த அதிசயம் நிகழ்ந்தது.

அது என்ன அதிசயம் ?

(நீங்கள் யூகித்ததேதான்.)

"வறட்சியால் வாடும் பயிர்கள் தழைக்க
திரட்சியாய் வந்த மழைமேகம் போலே
பணிந்திடும் பக்தர் குறைதீர்த்தே என்றும்
கனிவாகக் காப்பாய் இனிது."



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வையச்சேரி சிவாலயம் காலத்தால் மிகமுற்பட்டதாகும். அகஸ்திய முனிவர் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபட்டதால், ஸ்வாமி, அகஸ்தீஸ்வரர் என்று வழங்கப்படுகிறார். அத்தகைய பழமையான கோயிலின் கிணற்றில் தூர்வாரும் பொழுது ஆழத்தில் ஒருவிக்ரஹம் கிடைத்தது. ஸ்தபதியை வரவழைத்து சோதித்துப் பார்த்ததில் அது சிவகாமி அம்மன் ஸ்வரூபம் என்று ஊர்ஜிதமானது. எந்தவித உச்சமும் இல்லாது,பரிபூரண லக்ஷணங்களுடன் விளங்கியது. அத்துடன் மட்டுமில்லாது திருவாடுதுறையில் ஆதினம் நல்கிய நடராஜர் விக்ரஹத்திற்கு ஏற்றாற்போல் பொருத்தமாக இருந்தது.

சிவன் சகோதரர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

சிவகாமி அம்மன் சிலை கிடைத்த ஆனந்தப் பெருக்கில், ராமசாமிசிவன் "இனிமேல் ஆயினும் உந்தன் கருணைக்கண் பாரம்மா" என்ற கீர்த்தனையை இயற்ற அதை அப்போதே பாடினார் வைத்தியநாத சிவன்.

அன்று சித்ரா பௌர்ணமி தினம்.

அன்று இரவு எங்கிருந்தோ வந்த கருமேகங்கள் வானில் கூடின. காற்று சுழன்று சுழன்று அடித்தது. சிறிது நேரத்தில் காற்று நின்றது. அந்தக் கோடையில் பூமி நனைய, உள்ளங்கள் குளிர மழை இரண்டு நாட்களுக்குக் கொட்டித் தீர்த்தது. கிணறு, குளங்கள் மற்ற நீர்நிலைகள் நிரம்பின. செடிகொடிகள் துளிர்த்தன.

மழைநின்றதும் நடராஜர் – சிவகாமசுந்தரி அம்மன் சந்நிதானப்பணிகள் ஸ்வாமிகளின் அனுக்ரஹத்தின் பேரில் தொடங்கின. கோயில் விரிவுபடுத்தப்பட்டது. விநாயகர், சூரிய பகவான் சந்நிதிகள் ஸ்வாமிகளின் அருளாணைப்படி புதிதாக கட்டப்பட்டன. பழமையான கோயிலின் பிராகாரத்தின் மதிற்சுவரை அடுத்து நடராஜர்–சிவகாமசுந்தரி மூர்த்தங்களைப் பிரதிஷ்டை செய்தார்கள். திருநெல்வேலியில் இருந்த ஸ்வாமிகளுக்கு முறைப்படி அம்மன் சிலை கிடைத்த தகவல் தெரிவிக்கப்பட்டது. கும்பாபிஷேகத்தை அவர் முன்நின்று நடத்த வேண்டும் என்ற வேண்டுகோளும் வைக்கப்பட்டது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



ஸ்வாமிகள் வையைச்சேரி வந்து சேர்ந்தார்கள்.

கும்பாபிஷேகத்திற்கு நாள் குறிக்கப்பட்டது.

பதினொரு நாட்களுக்குக் கோலாகலமான விழாவாகக் கொண்டாடப்பட்டது. நாள்தோறும் இசைக்கச்சேரி, கதாப்பிரசங்கம், வேதபாராயணங்கள், நாதஸ்வரக் கச்சேரி என்று அமர்க்களப் பட்டது. விழாவிற்கு வரும் மக்களின் பசிப்பிணி நீங்க, அன்னதானத்திற்கு மிகச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன.

வையைச்சேரிக்கு வருகை தந்த ஜானகி அம்மையார் தம்கையினால் சமைத்து அன்னதானத்தில் ஈடுபட்டார். வித்வான்கள், வைதிகர் மற்றும் ஊர் பொதுமக்களுக்குத் தம் கைகளால் அன்னம் பரிமாறுவதில் இன்பம் அடைந்தார்.

பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்தங்களுக்கு நித்தியப்படி பூஜை நடக்கவும், நிவேத்தியத்திற்காகவும் சிறிது நிலத்தை நிவந்தமாக எழுதிவைத்தார் வைத்தியநாத சிவன்.

கும்பாபிஷேகத்திற்கான அனைத்து செலவுகளையும் வைத்தியநாதசிவன் அவர்களே ஏற்றுக் கொண்டார்.

கும்பாபிஷேக விழாவைக்காண உள்ளூர் மக்கள் மட்டுமன்றி பக்கத்திலுள்ள திருவையாறு, மெலட்டூர், திட்டை, நல்லிச்சேரி, சூலமங்கலம், அகரமாங்குடி, கோனூர், திருக்கருகாவூர் ஆகிய கிராமங்களில் இருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கலந்து கொண்டனர்.

திருவாடுதுறை ஆதினம் அவர்கள் முன்னிலையில் கடங்களை ஸ்வாமிகள் தொட்டு ஆசிர்வதித்துக் கொடுக்க வையைச்சேரி நடராஜர் – சிவகாமசுந்தரி அம்மன் சந்நிதி கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நிறைவேறியது.

சங்கீத வித்வான்கள் குடமுழுக்கு அழைப்பை ஏற்றும், ஸ்வாமிகளைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவலிலும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்து குவிந்தனர்.

சங்கீத நிகழ்ச்சிகளின் முத்தாய்ப்பாக வைத்தியநாத சிவன் அவர்களின் கச்சேரி அமைந்தது. அதுவும் புதுமையான முறையில். வயலின், மிருதங்கம், கடம், மோர்சிங் என்ற பக்க வாத்தியங்கள்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உபபக்க வாத்தியங்கள் இல்லாத வாய்ப்பாடு கச்சேரி.

கும்பாபிஷேக விழாவிற்கு மைசூர் சமஸ்தானத்திலிருந்து பெரும் புகழ்பெற்ற வீணை மேதைகள் வீணை சேஷண்ணா, பக்ஷி வீணை சுப்பண்ணா, வீணை சாமண்ணா என்ற முப்பெரும் இசை மேதைகளும் வந்திருந்தனர். சங்கீத உலகில் இமயத்திற்கு ஒப்பான வைத்தியநாத சிவனுடன் இணைந்து கச்சேரி செய்ய அவர்கள் விரும்பினர்.

மற்ற பக்கவாத்தியங்கள் இல்லாமல் வீணைகளைப் பக்கவாத்தியமாக வைத்து அன்றைய கச்சேரி அமைந்தது.

ராகம், தானம் வாசிக்கும் வகையில் சேஷண்ணாவும், பல்லவி ஸ்வரம் வகையில் சுப்பண்ணாவும் சிறந்து விளங்கியவர்கள். அன்றைய கச்சேரியில் 'விலோஹிதம்' என்ற தாளத்தில் சிவன் அவர்கள் பல்லவி பாடக் கேட்க விரும்பினர். எவ்விதத் தயக்குமுமின்றி, எளிமையாக, வெகுநாட்கள் பாடாந்தரம் செய்ததுபோல் பைரவி ராகத்தில் ராகம்,தானம் பாடி 'ஹரஹர சங்கர சிவபாஹிமாம்' என்ற பல்லவியை வெகு விஸ்தாரமாகப் பாடினார். அனைவரும் அவ்விசையில் மயங்கி 'அற்புதம், அற்புதம்' என்று பாராட்டினர்.

கும்பாபிஷேக நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றன.

மஹாசந்நிதானம் அவர்களை அணுகிய திருவாடுதுறை ஆதீனம் அவர்கள், எந்த மனித முயற்சியினாலும் செய்ய இயலாத ஒரு பணியை ஸ்வாமிகள் ஏற்று நிறைவேற்ற வேண்டும் எனப் பணிந்து உரைத்தார்.

அது என்ன பணி ?

"திருப்பணிகள் செய்வதற்கே திக்கெட்டும் சென்றாய்
அருமையாம் ஒன்றென உன்வாழ்வில் ஏதுமுண்டோ ?
மண்மீது வந்துதித்து நீபுரிந்த லீலைகள்
எண்ணில் அடங்காதே யாம்."

'ஒரு மதம் உயிர்ப்புடன் இருக்க அதற்குரிய சடங்குகள் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolka



திருவிழாக்களும், கும்பாபிஷேகங்களும், நித்திய பூஜைவிதிகளும் இதற்காகவே உருவாகின. இவை முடக்கப்பட்டால் மெல்ல மெல்ல நமது மதம் சீர்கேடு அடையும். அந்நியரின் ஆதிக்கத்தில் நம்நாடு கட்டுண்டு இருந்தாலும் நம் மக்களிடையே ஆழமாக வேரோடிய நம்பிக்கைகள், கொண்டாடும் திருவிழாக்கள், குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்தப்பெறும் குடமுழுக்குகள், கோயில்களில் முறைப்படி நடத்தப்படும் பூஜைகள் இவை அனைத்தும் நம் மக்களின் நாடி நரம்புகளில் ஊறிப் போனவை. இத்தகைய விழாக்கள் ஆன்மீகத்தை மட்டும் வளர்க்கவில்லை, பலதரப்பட்ட மக்களின் பொருளாதாரத்தையும் வளர்த்து அவர்களின் வாழ்வியலுடனும் பின்னிப்பிணைந்து கிடப்பவை.

தேவாரம், திருவாசகம் என்று ஓதுவார்கள் ஓதும்பொழுதும், மந்திரங்கள் உச்சாடனம் செய்யும் பொழுதும் எழுகின்ற நேர்நிலை அதிர்வலைகளின் ஆற்றலை அளவிட முடியாது. ஆன்மிகத்தில் திளைத்த ஆத்திகவாதிகள் இதை நன்கு உணர்ந்தவர்கள். மற்றவர்களுக்கு இதை அறிந்து கொள்ளும் அறிவும்,ஆற்றலும் கிடையாது. புதிதாக ஆலயங்கள் எழுப்பி குடமுழுக்கு நடத்துவதைவிட, இருக்கின்ற பழமையான கோயில்களைச் சீரமைத்து, குடமுழுக்கு நடத்திப் பராமரிப்பதே தலையாய கடனாகும்.

அந்நிலையில் பாதுகாக்கப்பட வேண்டிய, செப்பனிட்டு குடமுழுக்கு நடத்த வேண்டிய திருக்கோயில்கள் இங்கே உள்ளன.

தேவார மூவராலும் பாடப்பெற்ற முதன்மையான ஏழூர்க் கோயில்கள் செப்பனிடப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன.இவை

“சப்தஸ்தானம்” என்ற பெயரில் புகழ்பெற்று விளங்குகின்றன. தமிழகத்தில் சப்தஸ்தானங்கள் என்று குறிப்பிடப்படும் திருத்தலங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

சக்ராபள்ளி சப்தஸ்தானம்

கும்பகோணம் சப்தஸ்தானம்

கரந்தட்டாங்குடி சப்தஸ்தானம்

திருநல்லூர் சப்தஸ்தானம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கஞ்சனூர் சப்தஸ்தானம்
நாகப்பட்டினம் சப்தஸ்தானம்
காஞ்சிபுரம் சப்தஸ்தானம்
என்று பல சப்தஸ்தானங்கள் இருந்தாலும்....

திருவையாறும், அதைச்சுற்றியுள்ள ஆறு கோயில்களும் சேர்ந்த 'திருவையாறு சப்தஸ்தானம்' மிக முக்கியமானவை ஆகும்.

திருவையாறு
திருப்பழனம்
திருச்சோற்றுத்துறை
திருவேதிகுடி
திருக்கண்டியூர்
திருப்பூந்துருத்தி
திருநெய்த்தானம்

ஆகிய ஏழு திருத்தலங்களும் 'சப்தஸ்தானங்களுள்' இன்றியமையாதனவாகும்.

இந்த ஏழு கோயில்களுக்கும் மஹாசந்நிதானம் அவர்கள் முயற்சி மேற்கொண்டு கும்பாபிஷேகங்களை நடத்தித்தர வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும்." – என்று தம் எண்ணக்கிடக்கையை வெளியிட்டார் திருவாடுதுறை ஆதீனத் தலைவர் அவர்கள்.

அருகிருந்த மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் :"

ஆதீனம் அவர்களின் கோரிக்கையை மஹாசந்நிதானம் அவர்கள் ஏற்று நடத்தித்தர வேணடும் என்பதே, அடியவனின் வேண்டுகோளாகும்" என்று பணிவுடன் கூறினார்.

அவர்களின் வேண்டுகோளை ஸ்ரீஸ்வாமிகள் ஏற்றுக் கொண்டாரா ?

"பாழாய்க் கிடந்திடும் கோயில்கள் ஆங்கே ஓர்
ஏழாம் அவற்றை எலாம்செப் பனிட்டே
குடமுழுக்குச் செய்யப் பொறுப்பினை ஏற்று
நடத்திட வேண்டினர் ஆன்றோர். "



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolka



ஆன்மிகம், வரலாறு, சமயம், மொழி, கல்வி ஆகிய பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கிய வித்தகர்கள் மூவரும் சப்தஸ்தான கும்பாபிஷேகம் நடத்துவது பற்றி கலந்துரையாடினர். சப்தஸ்தானங்களையும் நேரில் கண்டு தரிசிக்க சங்கல்பம் கொண்டார் சந்நிதானம் அவர்கள். திருவாடுதுறை ஆதினம், மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு ஆசிகளை வழங்கி திருவையாறு வந்தடைந்தார்

உலகில் பல சமயங்கள் உள்ளன.அவையெல்லாம் எந்தக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டன என்ற காலவரையறை உடையன. நமது சனாதன தர்மத்தின் தோற்றம் அறியப்படாதது மிகப்பழமையானது.

ஏனைய சமயங்கள் ஒவ்வொரு கால எல்லையையுடைய ஒவ்வொரு மனிதரால் தோற்றுவிக்கப்பட்டன. சைவ சமயமோ காலத்தைக் கடந்த இறைவனால் அளிக்கப்பட்ட கொடையாகும். எனவே இது கால எல்லைகளைக் கடந்தது.

நமதுமதம் நம்மை நல்லாற்றுப்படுத்தி நிறைவைத் தருவதாகும். சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமான் விளங்குகின்றார். இவரே பரம்பொருள். இத்தகைய பரம்பொருள் குடியிருக்கும் ஏழூர்க் கோயில்களைத் தரிசனம் செய்ய சைவசமயத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய நம் ஸ்வாமிகள் புறப்பட்டார்.

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டுமேலுந்தி
அலைந்த போதாக வஞ்சேலென் றருள்செய்வா னமருங்கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே."

என்று திருஞானசம்பந்தப் பெருமானால் போற்றிப் பாடப்பெற்ற திருவையாறு க்ஷேத்திரத்தில் நுழைந்தார் ஸ்வாமிகள். காவிரி மற்றும்காவிரியின் கிளை ஆறுகளான குடமுருட்டி, வெண்ணாறு, வெட்டாறு, வடவாறு என்னும் ஐந்து ஆறுகளாகப் பிரிந்து செல்வதால் திருவையாறு என காரணப்பெயர் பெற்றது.

திருவையாற்றில் ஐயாறப்பனையும், அறம் வளர்த்த நாயகியையும் தரிசனம் செய்து கொண்டார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூன்று நாயன்மார்களின் பாடல்பெற்ற சிவாலயம்.

அப்பர் பெருமான் திருக்கயிலாயக் காட்சியைத் தரிசித்த தலம் இதுவேயாகும். வடகயிலையில் சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோலத்தை அப்பர் பெருமானுக்குக் காட்டி அருளினார். இக்காட்சியைத் தரிசித்த அப்பர், இவ்வாறு திருப்பதிகம் பாடுகிறார் :

"மாதர் பிறைக் கண்ணி யானை மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந்து ஏத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்றன போது
காதல் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறியாதன கண்டேன்"

என்று களிறு, கோழி, வரிக்குயில், சேவல், மயில், அன்றில்,ஏனம், கருங்கலை, நாரை, பைங்கிளி முதலிய பறவை இனங்களும், மிருக வகைகளும் தத்தம் இணைகளோடு அப்பருக்கு காட்சி அளித்தன.

சிவபெருமான், பார்வதி அம்மையாருடன் மணக்கோலத்தில் தோன்றி அருளினார். எனவே

அனைத்து இனங்களுமே இணைகளாகத் தோன்றுகின்றன. இவற்றைக் 'கண்டறியாதன கண்டேன்' என்று பதினொரு திருப்பதிகங்களில் பாடினார்.

மற்ற சப்தஸ்தானத் தலங்களின் சிறப்புகள் யாவை ?

"ஆன்றோர் வதியும் திருவையாறு ஏனைய
சான்றோர் சிறந்த திருப்பழனம் சோற்றுறை
வேதிகுடி கண்டியூர் பூந்துருத்தி நெய்த்தானம்
ஆதியாம் ஏழூர் இவையாம் "

சிலாத முனிவர் என்பவர் மக்கட் பேறு இல்லாததால் மிகவும் வருந்தி ஐயாறப்பனை வேண்டினார். அவர் வேண்டுதலுக்கு இரங்கி சிவபெருமான் அவர்முன் தோன்றினார். 'முனிவரே! நீர் புத்திரகாமேஷ்டியாகம் செய்யவும். யாக சாலை அமைப்பதற்காக நிலத்தை உழும்பொழுது ஒரு பெட்டி கிடைக்கும். அதில் ஒரு புத்திரன் இருப்பான். ஆனால் அவனுக்கு ஆயுள் பதினாறுதான்...' என்று கூறி மறைந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



அப்படியே அந்த முனிவரும் யாகம் செய்ய நிலத்தை உழ ஒரு பெட்டி கிடைத்தது. அதனுள்ளே நான்கு தோள்கள், மூன்று கண்கள், பிறைச்சந்திரனை அணிந்த முடியோடு ஒரு குழந்தை இருக்கக் கண்டார்.

'என்ன குழந்தை இப்படி இருக்கிறதே ?' என விசனப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது 'பெட்டிய மூடித் திற' என்று அசரீரி கேட்டது. சிலாத முனிவர் அவ்விதமே செய்தார். இப்பொழுது பெட்டிக்குள் அழகிய ஆண் மகவு இருந்தது.

ஜனகர் நிலத்தை உழும்போது ஒரு பெண் குழந்தையைக் கண்டெடுத்தார். கொழுமுனையில் கிடைத்ததால் அதற்கு சீதை எனப்பெயர் சூட்டினார். அதைப்போன்றே சிலாத முனிவர் நிலத்தை உழும் பொழுது ஒருபெட்டியைக் கண்டார். அதனுள்ளே ஒரு அழகிய ஆண்மகவு இருந்தது. அக்குழந்தைக்கு ஜப்பேசன் எனப் பெயர் சூட்டி வளர்த்தார்.

அக்குழந்தை ஞானசூரியனாக விளங்கியது. சிறுவயதிலேயே கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கியது. சிவபக்தியில் ஈடுபட்டு எந்நேரமும் சிவநாமமே உச்சரித்து வந்தது.

அந்த ஞானக் குழந்தை தனக்கு ஆயுள் பதினாறு ஆண்டுகளே என்று சிவபெருமான் கூறியதை அறிந்து கொண்டது.

குழந்தை சிறுவனாகியது.

பஞ்சநதீஸ்வரர் கோயில் திருக்குளத்தில் ஜப்பேசன் இறங்கினான். கழுத்தளவு நீரில் நின்று கொண்டான். கடுந்தவம் புரிந்தான். நீருக்குள் இருந்து தவமியற்றியதால் அங்கிருந்த மீன் முதலிய நீர்வாழ் ஜந்துக்கள் அவன் உடலை அரித்து, குதறித் தின்ன ஆரம்பித்தன. பெற்றோர், புதல்வன் படும் துயர்கண்டு மிக மனம் வருந்தினர். இந்நிலையில் சிவபெருமான் மனம் இரங்கினார். அவரின் பேரருட்காட்சி சிறுவனுக்குக் கிடைத்தது. வெறும் எலும்புக் கூடாய் இருந்த ஜப்பேசனின் நிலைகண்டு இரங்கி ஈசன் கங்கைநீர், மேகநீர், அறம்வளர்த்த நாயகியின் திருமுலைப்பால், ரிஷிபதேவரின் வாயின் நுரைநீர், பிரம்மனின் கமண்டல நீர் ஆகிய ஐந்து நீர்களையும் கொண்டு தாமே அபிஷேகம் செய்தார்.

(என்ன ஆச்சரியம்! எப்பொழுதும் ஈசனுக்கே அன்பர்களும்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அடியார்களும் அபிஷேகம் செய்வர். இங்கே ஒரு அன்பனுக்கு இறைவனே அபிஷேகம் செய்தார். இதுதான் நம் சனாதன தர்மத்தின் சிறப்பு.)

ஐயாறப்பர் ஜப்பேசருக்கு ஞான உபதேசம் செய்தார். அவனுக்கு "நந்தீசர்" என்ற தீக்ஷாநாமம் சூட்டி சிவகணங்களின் தலைவராக்கி, முதல் குருநாதனாகும் தகுதியையும் அருளினார்.

அத்துடன் நில்லாது ஐயாறு அப்பன், தானே முன்னின்று திருமழபாடி வைத்தியநாதர் கோயிலில், வியாக்ரபாதர் முனிவரின் திருமகள் சுயம்பிரகாசையைப் பங்குனி புனர்பூசம் நக்ஷத்திரத்தன்று திருமணம் செய்து வைத்தார்.

அதன் தொடர்பான விழாவே சப்தஸ்தானத் திருவிழாவாகும்.

திருப்பழனம் கோயிலில் இருந்து பல்வகைப் பழங்கள்,

திருச்சோற்றுத்துறையிலிருந்து திருவமுது வகைகள்,

திருவேதிகுடியிலிருந்து திருமணத்தை சிறப்பாக நடத்தி வைக்க வேதியர்கள்,

திருக்கண்டியூரிலிருந்து மகரகண்டிகை மற்றும் ஆபரணங்கள்,

திருப்பூந்துருத்தியிலிருந்து பலவித புஷ்பவகைகள்,

தில்லைஸ்தானம் (திருநெய்த்தானம்) ஊரிலிருந்து நெய் முதலான அபிஷேகப் பொருட்கள்,

நந்திகேஸ்வரர்—சுயம்பிரகாசை திருமணத்திற்கு அனுப்பி உபசரித்தனர்.

அதற்கு நன்றிக்கடனாகத்தான் திருவையாற்று இறைவனும் இறைவியும், ஆறுகோயில்களுக்கும் அலங்கரிக்கப்பட்ட கண்ணாடிப் பல்லக்கில் எழுந்தருளுகின்றனர். அங்கிருந்து வரிசைக்கிரமமாக பிற தலங்களுக்குச் சென்றதும் அக்கோயில்களில் உள்ள இறைவனும், இறைவியும் தத்தமது பல்லக்குகளில் எழுந்தருளி திருவையாற்று இறைவன் – இறைவி பல்லக்குடன் சேர்ந்து கொள்வார்கள். கடைசித் தலமான திருநெய்த்தானத்தில் இரவுவாணவேடிக்கையுடன் விழா சிறப்புற நடைபெறும். சப்தஸ்தானவிழாவின் நிறைவாக பொம்மை பூப்போடும் நிகழ்ச்சி இடம்பெறும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



இத்தகைய சிறப்புமிக்க, 'தென்கயிலாயம்' என்று போற்றப்படும் திருவையாறு ஆலயத்தின் பிரணதார்த்திஹர ஸ்வாமிகளையும், முப்பத்திரண்டு அறங்களை வளர்த்த தர்மசம்வர்த்தினி அம்மனையும் தரிசித்துக் கொண்டார் மஹாசந்நிதானம் அவர்கள். திருக்கோயிலிலிருந்து தென்கிழக்கே காவேரிக் கரையில் 1847,ஜனவரி 6–ம்தேதி, புஷ்யபகுள பஞ்சமி தினத்தில் முக்தி அடைந்த ஸ்ரீதியாகப்பிரும்மம் அவர்களின் சமாதிக்குச் சென்று நிஷ்டையில் அமர்ந்தார்.

பிறகு சப்தஸ்தானங்களைச் சேர்ந்த பிற ஆலயங்களுக்கும் சென்று தரிசனம் செய்து கொண்டு அரிமழம் வந்தடைந்தார்.

அங்கே சிவராமன் செட்டியாரின் தந்தை சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் ஒரு மாபெரும் குறையுடன் ஸ்ரீஸ்வாமிகளைச் சந்திக்கக் காத்திருந்தார்.

அவரின் குறை என்ன ?

"அறம்வளர்த்த நாயகி உள்ளம் மகிழ்ந்தே
கரம்பற்றி அண்ணல் ஐயாறப்பன் ஊரில்
இசைஞானி எம்தியா கைய்யனைப் போற்றி
திசையெல்லாம் சென்றாய் விரைந்து."

திருவையாற்றிலிருந்து புறப்பட்ட ஸ்வாமிகள்
திருப்பழனத்தில் பெரியநாயகி உடனுறை ஆபத்சகாயேஸ்வரர்,
திருச்சோற்றத்துறையில் அன்னபூரணி சமேத ஓதவனேஸ்வரர்,
திருவேதிக்குடியில் மங்கையர்க்கரசி உடனாய வேதபுரீஸ்வரர்,
திருக்கண்டியூரில் மங்களாம்பிகை உடனுறை பிரம்மசிரக்கண்டேஸ்வரர்,
திருப்பூந்துருத்தியில் சௌந்தர்யநாயகி உடனமர் புஷ்பவனேஸ்வரர்,
திருநெய்த்தானத்தில் பாலாம்பிகை சமேத நெய்யாடியப்பர்
ஆகிய தெய்வங்களை தரிசித்து அரிமழம் வந்து சேர்ந்தார்.

சென்ற இடங்களிலெல்லாம் ஸ்ரீஸ்வாமிகளையும், அவருடன் வந்த சீடர்களையும் அன்புடன் வரவேற்று உபசரித்தனர்.

சப்தஸ்தான யாத்திரையைப் பூர்த்தி செய்துகொண்டு அரிமழம் சென்றடைந்தனர்.

அவரின் வரவை சிவராமன் செட்டியார் அவர்களின்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தந்தையும் மற்றும் உறவினர்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

தங்கள் மனக்குறையை மஹாசந்நிதானம் அவர்களிடம் தெரிவித்து,அதற்கு அவர்மூலம் நிவர்த்தி தேட விரும்பினர்.

சிவராமன் செட்டியார் – முத்துக்கருப்பி ஆச்சி இவர்கள் திருமணம் 1853–ம் ஆண்டு, பரிதாபி வருஷம், தைமாதத்தில் நடந்தபொழுது சிவராமன் செட்டியார் அவர்கள் வயது 28. பொதுவாக நகரத்தார்கள் கட்டுப்பாடு மிக்கவர்கள். பையன், பெண் ஆகியோர் மனங்களில் காமம் நுழைவதற்கு முன்னரே திருமணம் நடத்தி விடுவார்கள். அன்றைய காலகட்டத்தில் ஜாதி, மத எல்லைகளைக் கடந்து கலப்புத் திருமணங்கள் நடக்கத் தொடங்கிய போதும் அந்த மாயவலையில் விழாமல் தத்தமது குடும்ப தர்மங்களை மிகச்சிறப்பாகக் காத்து வந்தனர்.

ஏழை, பணக்காரர் என்று எந்த நிலையில் இருந்தாலும் தங்கள் இனக்கட்டுக்கோப்புத் தகர்க்கப்படாமல் கவனமாய்ப் பார்த்துக் கொண்டனர்.

இந்நிலையில் சிவராமன் செட்டியார் அவர்களின் திருமணம் நடைபெற்றதே மிகக் கால தாமதமாகத்தான். திருமணம் முடிந்து பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்பொழுது அவருக்கு வயது 43.

குடும்பம் தழைத்தோங்க வாரிசு இல்லையே என்று அவரின் தந்தையும், உறவினர்களும் மனம் சோர்ந்து வருந்தினர்.

சிவராமன் செட்டியார் அவர்கள், ஸ்வாமிகள் மேல் உள்ள அபரிமிதபக்தியால் அவர் செல்லும் தலங்களுக்கெல்லாம் வையச்சேரி, திருவாடுதுறை, சப்தஸ்தானங்கள், புதுக்கோட்டை என்று உடன் சென்றுகொண்டிருந்தார்.

அரிமழம் வந்த ஸ்வாமிகளை சிவராமன் செட்டியாரின் தந்தையும், உறவினர்களும் தரிசித்து வணங்கினர்.

“மஹாசந்நிதானம் அவர்களே! சிவராமனிற்கு இப்பொழுது நாற்பத்து மூன்று வயதாகிவிட்டது. தங்களின் கருணையினால் அவனுக்குத் திருமணம் நடந்து பதின்மூன்று ஆண்டுகள் ஆகின்றன. குடும்பம் தழைத்தோங்க இன்னும் பிள்ளைச் செல்வம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



ஏற்படவில்லை. மயக்குறு மக்கள் இல்லாத இல்வாழ்க்கை பயனற்றுப் போய்விடுகிறது. எங்கள் வழிவழி சந்ததியினர் உங்களுக்குத் தொண்டு செய்ய எங்கள் இல்லத்தில் குழந்தை பிறந்து துள்ளி விளையாட வேண்டும். இவன் வயது உள்ளவர்கள் பேரன், பேத்தி எடுத்து விட்டனர். ஸ்வாமிகளின் அனுக்ரஹ பூரிதத்தால் எங்கள் குலம் தழைத்தோங்க வேண்டும். ஸ்வாமிகள் அருள்பாலிக்க வேண்டும்" என்று தங்கள் வேண்டுகோளை சமர்ப்பிக்கும் பொழுது கண்கள் கரகரவென நீரைச் சொரிந்தன; நா தழுதழுத்தது.

ஸ்வாமிகள் அவர்கள் கோரிக்கையைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டார். வந்தவர்கள் வணங்கி விடைபெற்றுச் சென்றவுடன் சிவராமன் செட்டியாரை அழைத்தார்.

மஹாசந்நிதானம் அவரிடம் என்ன கூறினார்?
"உற்றார் குறைகள் உறவினர் வேண்டுதல்
சுற்றத்தார் துன்பங்கள் கூடியோர் அல்லல்கள்
பெற்றவர் சொல்லும் பெருந்துயர் எல்லாமும்
முற்றிலும் தீர்த்த முதல்வன்."

ஸ்ரீஸ்வாமிகள் சிவராமன் செட்டியார் குடும்பத்தினரின் கவலையைப் புரிந்து கொண்டார். அவர்களுக்குக் கருணை புரிய திருவுளம் கொண்டார்.

சிவராமன் செட்டியாரை அழைத்தார்.

அருகில் அமரச் செய்தார்.

அவர் வலது காதில் ஒரு மந்திரத்தை உபதேசித்தார்.

'இதை தொண்ணூற்றாறு நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் விடாமல் காலையும், மாலையும் ஜபித்து வாருங்கள். தொண்ணூற்றாறு நாட்களும் இரவு எட்டு மணியிலிருந்து ஒன்பது மணிக்குள் சிவதரிசனம் செய்து வரவும். பிறகு நவக்ரஹத்தை ஒன்பது முறை பிரதக்ஷணம் செய்யவும். சிவபிரானை வழிபட்டு வெளியில் வரும்பொழுது கோபுரவாசலிலுள்ள படிக்கட்டின் கீழே வடக்கு முகமாக அமர்ந்து கொண்டு சிவநாமத்தை 108முறை மனம் ஒன்றி உச்சரிக்கவும். பின்பு எழுந்து வீடு திரும்புதல் வேண்டும்.'



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



என்று அருளுரை வழங்கினார்.

சிவராமன் செட்டியார் அவர்களின் குடும்ப உண்மை நிலையறிந்து ஸ்வாமிகள் அவருக்கு உபதேசம் செய்தார். ஸ்வாமிகளின் கட்டளையைக் கடவுள் பக்தியுடனும், சிரத்தை யோடும், நெறிதவறாமல் கடைப்பிடித்தார் செட்டியார். இதனால் முத்துக்கருப்பி ஆச்சி அவர்கள் கருத்தரித்தார். உற்றார்களாலும், உறவினர்களாலும் மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

1870–ம் ஆண்டு, பிரமோதூத வருஷம், வைகாசி மாதம் எட்டாம் நாள் முத்துக்கருப்பி ஆச்சி அவர்கள் ஒரு ஆண்மகவை ஈன்றெடுத்தார். உறவினர்களும், ஊர்மக்களும் பெரிதும் குதூகலம் அடைந்தனர். சிவராமன் செட்டியார் வீடு கோலாகலமாய் விளங்கிற்று. ஆண்மகவு பிறந்ததை திருவிழாப்போல் கொண்டாடினர்.

சிவராமன் செட்டியார் தம்பதியினருக்கு மஹாசந்நிதானம் அவர்களின் அனுக்கிரஹ விசேஷத்தாலும், உபதேச மகத்துவத் தாலும் குழந்தை பிறந்தபடியால் வம்சப் பெயரான சோமு என்பதுடன், சுந்தரஸ்வாமிகளின் கருணையை நிலைத்து நினைவு கூறும்விதமாக சுந்தரன் என்ற பெயரையும் இணைத்து 'சோமசுந்தரம்' என்று நாமகரணம் சூட்டினர்.

(இன்றுவரை அப்பரம்பரையில் சோமசுந்தரம் என்ற பெயர் குழந்தைகளுக்கு இடப்பட்டு வருகிறது. இந்த வம்சாவளியினர் தொடர்ச்சி பற்றி பின்னர் நாம் விரிவாகப் பார்க்க வேண்டியுள்ளது.)

பெயர் சூட்டுவிழா, காதுகுத்து விழா ஆகியன மிகச் சிறப்பாக யாவரும் மெச்சும்படி நடந்தன. இந்நிலையில் சப்தஸ்தான கும்பாபிஷேக விழா ஏற்பாடுகள் பற்றி ஸ்வாமிகளிடம் கலந்து உரையாட திருவாடுதுறை ஆதினம் அவர்கள் விரும்பினார்.

எனவே நாராயணசிவம், கிருஷ்ணய்யர், சிவராமன் செட்டியார் மற்றும் ஏனைய சீடர்களுடன் திருவாடுதுறை பயணம் செய்தார் ஸ்வாமிகள்.

இந்தமுறை ஒரு 'வள்ளல்' அவர்களைச் சந்தித்து உரையாட ஸ்ரீஸ்வாமிகள் சித்தம் கொண்டார். எனவே அவர் இருக்கும் இடம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



நாடிச் சென்று உரையாடினார்.

யார் அந்த வள்ளல் ?

"கருணையினால் ஓர்மைந்தன் தோன்றிட நல்ல
அருள்புரிந்தாய் அன்னவன் நற்குலம் நாளும்
தழைத்திட நல்லுப தேசம் நவின்ற
மழைமேகத் தெய்வமே போற்றி"

அரிமழத்திலிருந்து புறப்பட்டஸ்ரீஸ்வாமிகளும் அவரின் சீடர்களும் தில்லைச்சிதம்பரம் நோக்கிப் பயணப்பட்டனர். அங்கே வழக்கம்போல் கிழக்குச்சந்நிதித் தெருவிலுள்ள பொன்னுசாமி தீக்ஷிதர் வீட்டை அடைந்தனர்.

அந்த ஊரில்தான் அந்த வள்ளல் அப்பொழுது முகாமிட்டிருந்தார். மஹாசந்நிதானம் அவர்கள் தில்லை வந்த தகவல் அறிந்து, அவரை சந்திக்க விருப்பம் கொண்டார். தன் அன்பர் ஒருவரை அனுப்பி சந்திப்பதற்கான நேரம் கேட்டுவரச் சொன்னார்.

அந்த அன்பரும் ஸ்வாமிகளைச் சந்தித்து இருவரும் சந்திப்பதற்கான தகுந்த நேரம் எப்போது அமையும் என்று கேட்டார். அதைக்கேட்ட ஸ்வாமிகளும், 'சிவ சிவ! யாமல்லவோ அவரை நேரில் வந்து தரிசிக்க வேண்டும். உடனே கிளம்புவோம்!' எனக் கூறித் தம் சீடர்களுடன் புறப்பட்டார்.

ஸ்வாமிகள் சந்திக்க விரும்பிய அந்த முக்கியப் பிரமுகர் யார் ?

ஸ்வாமிகளை விட எட்டு ஆண்டுகள் வயதில் பெரியவர். 1823–ஆம் ஆண்டு,அக்டோபர் ஐந்தாம் நாள், சுபானு வருஷம், புரட்டாசி மாதம், 21–ம்நாள், ஞாயிற்றுக்கிழமை,சித்திரை நக்ஷத்திரத்தில், மாலை 5.54 க்கு அவதரித்தார்.

'எந்த உயிரையும் கொல்ல எவருக்கும் உரிமையில்லை. உயிரைக் கொல்லுதல் இறைவன் முன் மிகப்பெருங்குற்றமாகும். அப்பாவம் ஏழு பிறவிகளுக்கும் தொடர்ந்து வரும். அக்குற்றத்திற்கான தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும். அதிலிருந்து தப்பவே முடியாது. தண்டனை தீரும்வரை பிறவிகள்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எடுத்துக்கொண்டே இருக்க வேண்டும்.

ஞானமே மனிதனைத் துன்பத்திலிருந்து விடுவித்து அமைதியைக் கொடுக்கும். ஆன்மநேய ஒருமைப்பாடு அமைதிக்கு வழிகாட்டும்.

மனிதனின் இறுதி நிலை இறப்பது அல்ல.இறைவனுடன் கலப்பது ஆகும். இறைவன் ஒளிவடிவானவன். இறைவனிடமிருந்து வந்த உயிர்கள் மீண்டும் அந்த ஜோதியிலேயே கலக்கும்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழவேண்டும். உலகில் அனைத்து உயிர்களுக்கும் இறைவன் சமமான உரிமையை அளித்து அருளியுள்ளான்.

எல்லா உயிரும் நமக்கு உறவுகளே. இறைவனின் தனிப்பெருங் கருணையினால் பஞ்சபூதங்கள் உருவாக்கப்பட்டன. இறைவனின் ஆற்றலால் உயிர்களுக்கு வேண்டிய அனைத்தும் புவியில் வழங்கப்படுகின்றன.'

.......இவை இவரின் தத்துவங்களாகும்.

இவர்,
அருளாசிரியர்,
நூலாசிரியர்,
இதழாசிரியர்,
பதிப்பாசிரியர்,
போதகாசிரியர்,
இறையன்பர்,
உரையாசிரியர்,
சித்த மருத்துவர்,
சொற்பொழிவாளர்,
ஞானாசிரியர்,
தீர்க்கதரிசி,
மொழி ஆய்வாளர்
என்ற பன்முக ஆற்றல் பெற்றவர்.
இவர் யார் ?
"அறிவு உடையோர் பரிவு உடையோர்
செறிவான பண்பு உடையோரும் ஆழ்ந்த



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



இறைஞான பக்தி உடையோரைப் போற்றல்
மறையோதும் பண்பர் இயல்பு.”

இவரின் சமகாலத்தவர்களில் சிலர் :
காஞ்சிபுரம் மஹாவித்வான் சபாபதி முதலியார்
திரிசிரபுரம் மஹாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை
ஆறுமுக நாவலர்
சோடசாவதானம் தி.க.சுப்பராய செட்டியார்
அஷ்டாவதானம் சபாபதி முதலியார்
சிதம்பரம் சபாபதி பிள்ளை.

வளரும் பிள்ளைகளுக்கு இவர்வழங்கிய அறிவுரைகள் என்றும் போற்றத் தக்கவை. அவை ஆவன :

நல்லோர் மனதை நடுங்கச் செய்யாதே
தானம் கொடுப்போரைத் தடுத்து நிறுத்தாதே
மனமொத்த நட்புக்கு வஞ்சகம் செய்யாதே
பொருளை இச்சித்துப் பொய்சொல்லாதே
பசித்தோர் முகத்தைப் பாராதிராதே
இரப்போர்க்கு என்றும் இல்லை என்னாதே
குருவை வணங்கக் கூசி நிற்காதே
வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சத்தை அழிக்காதே
தந்தை தாய் மொழியைத் தள்ளி நடக்காதே.

இவ்வாறு சொல்லாதே, செய்யாதே என்று எதிர்நிலைச் சொற்களைப் பயன்படுத்தியவர் பின்னாளில் ‘வேண்டும், வேண்டும்’ என்று நேர்நிலைச் சொற்களை வைத்துக் கவிபாடினார்.

1851–ம் ஆண்டில் ஒழிவிலொடுக்கம்,1855–ல் தொண்டை மண்டல சதகம், 1857–ல் சின்மய தீபிகை ஆகிய நூல்களைப் பதிப்பித்தார்.

மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற உரைநடை நூல்களையும் எழுதினார்.

தொடக்க காலத்தில் தீவிர சிவதத்துவக் கருத்துக்கள் கொண்ட காலத்தால் அழியாத பலபாடல்களை இயற்றினார்.

பக்தி ரசம் சொட்டச்சொட்ட பல்லாயிரம் பாடல்களைப் பாடிய



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இவர் காமச்சுவை நிரம்பிய 'இங்கிதமாலை' என்ற நூலையும் விருத்தப் பாக்களால் பாடியுள்ளார்.

பலரும், இவருக்குப் பக்தி ரசம் கொண்ட பாடல்களை மட்டுமே பாடத்தெரியும் என்று பகடி பேசியதால் இவ்வாறு ஒரு நூலை இயற்றினார் என்பர்.

"மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மின்னிய அவைஇடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும் புலவர்க்கே!"

என்ற இலக்கணக் கூற்றின்படி தம்மைப் பழித்ததனால் தம் ஆற்றலைக்காட்ட இவ்வாறு பாடினார் என்று கூறுவோரும் உள்ளனர்.

'ஆன்மநேய ஒருமைப்பாடு எங்கும் தழைக்க, இவ்வுலகமெல்லாம் உண்மை நெறி ஓங்கிட வேண்டுமாயின் எவருக்கும், எவ்வுயிர்க்கும், எவ்விடத்தும் இலங்கும் தெய்வம் ஒன்றே, அவரே அருட்பெருஞ்ஜோதி' என்றார்.

இவர் இயற்றிய திருவருட்பா அனைத்தும் அடங்கிய ஓர் அருள் ஞானக் களஞ்சியமாக கருதப்படுகிறது. இது உண்மையை உரைக்கவந்த இறை நூலாக சமரச சுத்த சன்மார்க்கத்தினரால் கருதப்படுகிறது. இதில் பற்பல சாதனா ரகசியங்களும், சிவரகசியங்களும், சித்துக்களும் அடங்கியுள்ளதாகக் கருது கின்றனர். எந்த ஒரு சித்த புருஷரும் வெளிப்படையாக எடுத்துரைக்காத செய்திகளைத் திருவருட்பா எடுத்துரைப்பதாகக் கூறுகின்றனர். இதில் இடம் பெற்றுள்ள பாடல்கள் அனைத்தும் ஒன்பது வகையான இலக்கணங்களைக் கொண்டுள்ளன.அவை எண்ணிலக்கணம், எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம், உரையிலக்கணம், புணர்ச்சியிலக்கணம், ஒற்றிலக்கணம் என்பவை ஆகும்.

இப்பாடல்கள் அனைத்தும் இறைஉணர்வின் உந்துதலால் அருள்நிலையில் பாடப்பட்டவை என்று கருதப்படுகின்றன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



1865–ம்ஆண்டு ‘சுத்த சன்மார்க்க சங்கத்தையும்’, 1867–ல் ‘சத்திய தர்மச்சாலையையும்’, 1870–ல் ‘சித்தி வளாகத்தையும்’, 1872–ம் ஆண்டில் ‘சத்திய ஞானசபையையும்’ தோற்றுவித்தார்.

இத்தகைய சிறப்புப் பெற்ற இவர் சிதம்பரம் ராமலிங்கம் பிள்ளை என்றும், திருஅருட்பிரகாச வள்ளலார் என்றும் போற்றப்படுகிறார்.

இவர்தான் நம் ஸ்வாமிகளைச் சந்தித்து உரையாட விரும்பினார்.

மஹாசந்நிதானம் அவர்களோ தாமே அவரைச் சந்திக்கப் புறப்பட்டார்.

ஸ்வாமிகளை வாசலுக்கு வந்து வரவேற்ற ராமலிங்க அடிகளார், அவரை அன்புடன் வரவேற்று மடத்தின் உள்ளே அழைத்துச் சென்றார். தம் எதிரே ஆசனம் அளித்து அதில் அமர வேண்டினார். ஸ்வாமிகள், அடிகளாரின் எதிரே இருந்த ஆசனத்தை எடுத்து அடிகளின் பக்கத்தில் போட்டுக்கொண்டு அமர்ந்தார்.

ஸ்ரீஸ்வாமிகள் ஏன் அவ்வாறு செய்தார்?

“சத்திய ஞான சபையும் சிறந்தவோர்
சித்தி வளாகமும் சுத்தசன் மார்க்கமும்
சித்தத்தில் கொண்ட அடிகளார் வேண்டிட
உத்தமர் தேடியே வந்தார்.”

வள்ளலார் தன் எதிரே அமரும்படி பலமுறை கேட்டுக் கொண்டும், அதற்கு உடன்படாமல் அவரின் பக்கவாட்டில் சிறிது தள்ளியே அமர்ந்தார் ஸ்வாமிகள்.

ஞானவிஷயமாக இருவரும் மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து உரையாடினார்கள். ஞானத்தின் வல்லமையையும், அருள் சார்ந்த ரகசியங்களையும், இறைஉண்மைகளையும் அவர்கள் விவாதித்தனர்.

ஸ்வாமிகள் சிதம்பரம் வருகை புரிந்திருப்பதை அறிந்து வையைச்சேரியிலிருந்து ராமசாமி சிவன், வைத்தியநாத சிவன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஆகியோரும் அங்கே வந்து அவரின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

'தில்லையம்பதியில் இருக்கிறோம். அப்பெருமானைப் போற்றி பாடலொன்றை அருள வேண்டுகிறோம்' என்று மஹாசந்நிதானம் அவர்கள் வள்ளலாரிடம் விண்ணப்பித்தார்.

"தடித்த ஓர்மகனைத் தந்தைஈண் டடித்தால் தாயுடன் அணைப்பாள்தாய் அடித்தால்

பிடித்தொரு தந்தை அணைப்பன்இங் கெனக்குப் பேசிய தந்தையும் தாயும்

பொடித்திரு மேனி அம்பலத் தாடும் புனிதநீ ஆதலால் என்னை

அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும் அம்மைஅப் பாஇனி ஆற்றேன்"

என்று எழுசீர்க் கழிநெடிலடி ஆசியவிருத்தத்தில், 'பிள்ளைச்சிறு விண்ணப்பம்' பாடலைப் பாடினார்.

சங்கீத இரட்டையர்கள் என்று போற்றப்பட்ட சிவன் சகோதரர்கள் வந்திருப்பது அறிந்து இரண்டு பாடல்களைப் பாடினார் அடிகளார். அந்தப் பாடல்களுக்கு உடனடியாக ராமஸ்வாமி சிவன் அவர்கள் ராகங்கள் அமைக்க, வைத்தியநாத சிவன் அவர்கள் பாடினார்.

ராமலிங்க அடிகளார், 'தெண்ட னிட்டே னென்று சொல்லடி' என்ற பாடலைத் தில்லை நடராஜர் மேல் இயற்ற, தோடி ராகத்தில் ராமசாமி சிவன் இசை அமைக்க, உடனே அதை ராக ஆலாபனை செய்து விரிவாகப் பாடினார் வைத்தியநாத சிவன்.

அடுத்து வைத்தீஸ்வரன், வைத்தியநாத ஸ்வாமி பெயரில், 'நல்ல மருந்திம் மருந்து—சுகம் நல்கும் வைத்தியநாத மருந்து' என்ற பல்லவியில் அமைந்த பாடலை அடிகளார் இயற்றினார்.அதைக் காம்போதி ராகத்தில் ராமசாமி சிவன் அமைக்க, ஸ்வரக் கோர்வை களுடன் அப்பாட்டிற்கு அழகு செய்தார் வைத்தியநாதசிவன்.

ராமலிங்க அடிகளாரும் அவரின் அணுக்கச் சீடர் தொழுவூர் வேலாயுத முதலியார், மஹாசந்நிதானம் மற்றும் அவரின் சீடர்கள் இந்த இன்னிசை விருந்தைக் கேட்டு மகிழ்ந்தனர்.சிவாம்சம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



பொருந்திய அவ்விரு மகான்களும் சிவன் சகோதரர்களுக்கு ஆசிகள் வழங்கினர்.

இருபெரும் சைவசமய ஞானிகளும் பிரபஞ்ச ரகசியங்களையும், ஞானவிஷயங்களையும் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் பேசி மகிழ்ந்தனர். விடை பெறும் பொழுது தன்னிடமிருந்த வாழைமட்டையில் உள்ள விபூதியை வள்ளலார் நெற்றியில் இட்டார் மஹாசந்நிதானம் அவர்கள். அவருக்கிட்ட விபூதியை எடுத்துத் தன் விபூதிமட்டையில் சேர்த்துக் கொண்டு அங்கிருந்த அனைவருக்கும் பிரசாதமாக அதை வழங்கினார்.

இருவரும் அருள் கலந்த புன்னகையுடன் வந்தனம் கூறிப் பிரியாவிடை பெற்றனர்.

பொன்னுஸ்வாமி தீக்ஷிதர் இல்லம் திரும்பி வந்தவுடன், அன்பர்கள் மஹாசந்நிதானத்திடம் , 'அடிகளாரின் எதிரில் போடப்பட்டிருந்த மனையில் அவர் தங்களைப் பலமுறை அமரச் சொல்லி வேண்டினார். ஆனால் ஸ்வாமிகள் எதிரில் அமராமல் அவரின் பக்கத்தில் அமர்ந்தீர்கள். அதற்கான காரணம்யாது? அறிந்துகொள்ள ஆவலாய் இருக்கிறோம்.' என்று வினயத்துடன் கேட்டனர்.

அதற்கு ஸ்ரீஸ்வாமிகள் கூறிய பதிலைக் கேட்டு அவர்கள் மிகுந்த ஆச்சரியம் அடைந்தனர்.

ஸ்வாமிகள் அப்படி என்ன கூறினார் ?

"வடலூர் அடிகளுடன் ஞானமார்க்கம் பற்றி
உடலும் மனமும் சிலிர்க்க விரிவாகப்
பேசிய வித்தகனே! உன்அருளை வேண்டியே
நேசிப்போர் சேர்வரே உன்தாள்."

'ஏன் வள்ளலாரின் எதிரில் அமராமல், பக்கத்தில் அமர்ந்தீர்கள் ?' என்று அன்பர்கள் கேட்டதற்கு, மஹாசந்நிதானம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவர்கள் என்றும் மாறா புன்முறுவலுடன் பதில் கூறினார்: "வள்ளலார் தம் முன்பாக அமர்வோரின் சக்தியை உடனே உள்இழுத்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றவர். அவர் ஒரு ஞான சித்தர். இது மனது சம்பந்தப்பட்டது. நினைத்த மாத்திரத்தில் பார்க்கும் பார்வையிலேயே தனது முன்னால் இருக்கும் ஒருவரின் கவனத்தைத் தன் பக்கம் திருப்ப முடியும். எதிரில் உள்ளவரின் மனதில் உள்ளதையும் அறிய முடியும். அவரின் ஆற்றலை முழுவதுமோ, ஒரு பகுதியையோத் தன்பால் ஈர்த்துக் கொள்ள வள்ளலாரால் முடியும். ஆகவே அவர் எதிரில் அமர்ந்து கொள்வதைத் தவிர்த்தேன்."

(மனிதப்பிறவி எடுத்த யாவருக்கும் வெளிமனம், உள்மனம் என்று இரண்டு உள்ளன. வெளிமனம் தனக்குத் தேவை யில்லாதவற்றைக் காலப்போக்கில் மறந்துவிடும். ஆனால் உள்மனம் மிகப்பெரும் சக்தி வாய்ந்தது. வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு சம்பவத்தையும் ஆழ்மனதில் அப்படியே சேமித்து வைத்துக் கொள்கிறது. ஒருவனுடைய எண்ணங்கள் இந்தப் பிரபஞ்சத்தோடு தொடர்புடையது.உள்மனம் இப்பிரபஞ்சத்தின் சக்தியை உள்வாங்கிக் கொள்கின்றது. இந்த உள்சக்தியை நம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டோமானால், பிறருடைய மனத்திலும், நடவடிக்கைகளிலும் மாற்றத்தைக் கொண்டுவர முடியும்.

தன்னுடன் நேரில் மோதும் எதிரியின் பலத்தில் பாதி வலிமையை வாலி பெற்று விடுவான் என்று ராமாயணம் உரைப்பதை இங்கு ஒப்புநோக்கலாம்.)

வள்ளலாருடனான சந்திப்பு நிறைவடைந்த மறுநாள் ஸ்வாமிகள் திருவாடுதுறை சென்று ஆதினத்தை சந்தித்தார். சப்தஸ்தான கும்பாபிஷேக ஏற்பாடுகளைப் பற்றி இருவரும் கலந்துரையாடினர்.

ஒரே நேரத்தில் ஏழூர் குடமுழுக்கு நடத்துவதற்குப் பெருந்தொகை தேவைப்படும். அதற்கான நிதி திரட்ட மஹாசந்நிதானம் அவர்கள், கொழும்பு, காசி, சென்னை ஆகிய இடங்களுக்குச் சென்று தக்கவர்களைச் சந்தித்துப் பொருளுதவிக்கு ஏற்பாடு செய்வதெனத் தீர்மானித்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



சப்தஸ்தான கும்பாபிஷேக வரவு–செலவு கணக்குகள் பார்க்கும் பொறுப்பு சிவராமன் செட்டியார் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரையும்,சில சீடர்களையும் அழைத்துக் கொண்டு

ஸ்ரீஸ்வாமிகள் கொழும்பு பயணமானார்கள்.

இலங்கையிலிருந்த சைவ ஆன்மீக அன்பர்களும், நகரத்தார் பெருமக்களும் ஸ்வாமிகளைப் பரிபூரண அன்புடனும், மரியாதையுடனும் வரவேற்றனர்.

வீடுகள் அனைத்தும் தோரணங்களாலும், மாவிலைகளாலும், அழகிய கோலங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேளதாளங்கள், வேதகோஷங்கள், தேவார திருவாசகப் பாடல்கள் முழங்க ஸ்வாமிகளை வணங்கி வரவேற்றனர். அப்பகுதி மக்களின் சைவநெறிப்பற்றைக் கண்டு அவர் அகம் மகிழ்ந்தார்.

ஸ்வாமிகளை வரவேற்கும் பொறுப்பு ஸ்ரீலங்காவின் தலைசிறந்த தமிழ்ச் சான்றோர் ஒருவர் வசம் ஒப்படைக்கப்பட்டது. தமிழ் உரைநடை செவ்விய முறையில் வளர்வதற்கு உறுதுணையாய் இருந்தவர். எனவே 'தமிழ் உரைநடையின் தந்தை' எனப் போற்றப்பட்டார்.

திருக்குறள் பரிமேலழகர் உரை, நன்னூற் காண்டிகை போன்ற இலக்கிய,இலக்கண நூல்களையும்; திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் போன்ற நூல்களையும் பிழையின்றிப் பதிப்பித்தவர். தன்னுடைய பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருத, ஆங்கில மொழிகளில் புலமை பெற்று விளங்கினார்.

யாழ்ப்பாண நகரில் ஆங்கிலேய கிருஸ்துவப் பாதிரிமார்கள் தங்கள் மதத்தைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். பள்ளிகள் பல அமைத்து அவற்றின் மூலம் தீவிர மதப்பிரச்சாரமும், மதமாற்றமும் செய்தனர். மருத்துவத் துறையிலும், கல்வி நிலையங்களிலும் தங்கள் கால்களை ஊன்றினர். ஆங்கிலமொழியில் வல்லமை பெற்றவர்களுக்கு மட்டுமே வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கினர். சைவம் தங்கள் மதம் பரவுவதற்குத் தடையாய் இருப்பது அறிந்து அதை அடியோடு அழித்திட முயன்றனர். மெல்ல மெல்ல சைவத்தின் முக்கியக் கூறுகளைத்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தங்கள் மதத்தில் புகுத்திக் கொண்டனர். வேலை வாய்ப்பும், பெரும் பணம் கொடுத்தும் சைவத்தின் ஒருபிரிவினரை தம் பக்கம் இழுத்தனர். சைவர்கள் என்ற பெயரில் இருந்து கொண்டே சைவத்தைப் பழிக்கும் பணியில் ஈடுபட்டனர் அவர்கள்.

இவை கண்டு பொறுக்காது சீறி எழுந்த சிங்கம் இவர்.

இவர் யார் ?

“சைவம்தழைத் தோங்க திருக்கோயில் செம்மையுற
தெய்வமாய் வந்த முதல்வனே தூயோன்நின்
காலடிகள் ஆழி கடந்து நடந்தன
காலடியின் தோன்றலே வாழி!

பழங்காலத்தில், சுமார் 150 ஆண்டுகள் முன்புவரை இலக்கியங்கள் அனைத்தும் ஏட்டுச்சுவடிகளிலேயே இருந்தன. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு, தமிழகத்திற்கு வந்த பிறகே ஓலைச்சுவடிகள் அச்சில் ஏறி நூல்வடிவம் பெற்றன.இலக்கிய வரலாற்றின் திருப்பு முனையாக அச்சு இயந்திரத்தின் வருகை அமைந்தது.

ஏட்டிலிருந்து அச்சுப் பதிப்பது மிகக் கடினமான பணி.ஏட்டில் உள்ளவற்றைப் புரிந்துகொண்டு, எந்தப் பிழையும் நேராமல் அச்சில் பதிப்பது மிக அரிதான செயலாகும்.இத்தகைய அரும்பணியை மேற்கொண்ட தமிழ்ச் சான்றோர்களுள்,முன்னோடிகளுள் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் முதன்மை ஆனவர்.

இன்றைக்குத் தமிழ் இலக்கணங்களும், இலக்கியங்களும் அச்சு வடிவில் நம் கைகளில் தவழ்வதற்கு இவரே காரணம். ஏட்டுச்சுவடிகளிலிருந்து பழந்தமிழ் நூல்களை மீட்டுக் கொடுத்த பெருமைக்கு உரியவர்கள் ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை, உ.வே.ஸ்வாமிநாத ஐயர், எஸ்.வையாபுரிப்பிள்ளை என்று அந்தப் பட்டியல் நீளும்.

‘தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்த பெரும்பணிக்கு அடித்தளம் அமைத்தவர் ஆறுமுக நாவலர், சுற்றுச்சுவர் எழுப்பியவர் சி.வை.தாமோதரம்பிள்ளை, கூரை வேய்ந்தவர் உ.வே.சாமிநாதையர்’ என்று திரு.வி.க கூறியுள்ளது தமிழ்ப்பதிப்பு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



வரலாற்றை விளக்குவதாக உள்ளது.

இவருடைய பாட்டன், பூட்டன் அனைவருமே தமிழறிஞர்கள். இத்தகைய புகழ்மிக்க மரபில் தோன்றிய ஆறுமுகம் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். எந்த இலக்கியத்தைப் பற்றியும் மடைதிறந்த வெள்ளம் போல் கருத்துக்களைப் பொழிந்து தள்ளும் இவருடைய சொல்லாற்றலைப் பாராட்டி திருவாடுதுறை ஆதீனம் அவர்கள் இவருக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கினார். அதுமுதல் 'ஆறுமுக நாவலர்' என்றே அனைவராலும் அழைக்கப்பட்டார்.

சிறப்புமிக்கப் புலவர்களிடம் படித்து இளமையிலேயே தமிழிலும், வடமொழியிலும் நன்கு புலமை பெற்றிருந்தார். யாழ்ப்பாணம் வெஸ்லியன் மெதடிஸ்ட் மிஷன் மத்தியக் கல்லூரியில் ஆங்கிலமொழியைக் கற்றதுடன் அக்கல்லூரியிலேயே ஆங்கிலத்தையும், தமிழையும் கற்பிக்கும் ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார்.

ஏட்டுச் சுவடிகளைப் பதிப்பிக்கும் பணியில் முனைந்து ஈடுபட்டார். இதற்காகச் சொந்தமாக அச்சு இயந்திரம் வாங்கி அச்சுக்கூடம் ஒன்றை நடத்தினார். அதற்கு

'வித்தியானுபாலன யந்திரசாலை' என்று பெயரிட்டார். மரபுவழியாகப் பெற்ற தமிழ்ப்புலமையும், ஆங்கிலக் கல்வியும் இவரது பதிப்புப்பணி சிறக்க உதவின.

தமிழ் உரைநடை இவருக்கு முன்பு மிகக் கடினமானதாக, எளிதில் புரிந்து கொள்ள முடியாததாக இருந்தது. இவர்தான் ஆங்கிலத்தைப் போன்றே அரைப்புள்ளி (கமா), முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி ஆகிய நிறுத்தத்திற்குறிகளை தமிழுக்கு முதன்முதலில் அறிமுகப்படுத்தினார்.

இலங்கையில் ஆங்கிலேய அரசு, வருவாயைப் பெருக்க மதுபானக் கடைகளைத் திறந்தன. மதுவிற்பனை மூலம் அரசின் வருவாய் உயர்ந்தாலும் மக்களின் வருமானமும், தன்மானமும் பாதிக்கப்படுகிறதே என மனம் வெதும்பினார். 'இலங்கை பூமி சரித்திரம்' என்ற நூலில் 'வறுமைக்கும், துன்பத்திற்கும், சகல பாவங்களுக்கும் பிறப்பிடம் மதுவே' என அரசாங்கத்திற்கு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எதிராகக் குரல் எழுப்பினார். இவரே மதுவிலக்குக் கொள்கையின் முன்னோடியாகத் திகழ்ந்தார். மதுவிற்கு எதிரான இவரின் சொற்பொழிவுகளைக் கேட்டு பலர் மதுஅருந்துவதை நிறுத்தினர்.

இந்துமதத்திலிருந்து கிருஸ்துவ மதம் மாறியவர்களை மீண்டும் தாய்மதம் திரும்பிவரச் செய்ததில் இவர்பங்கு மகத்தானது. இவர் ஆற்றும் உரைகளைக் கேட்டு புதிதாக கிருஸ்துவமதம் மாறிச்சென்றவர்கள் மீண்டும சைவத்திற்கே திரும்பினர். அங்ஙனம் திரும்பி வந்தவர்களுள் கிங்ஸ்பெரி என்ற பெயரைக் கொண்டிருந்த தமிழறிஞர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களும் ஒருவர். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் பட்டதாரி என்ற பெருமைக்கு உரியவர்.

சொற்பொழிவுத்துறையில் முன்னோடிகள் எனப் போற்றப்படும் வ.உ.சி, திரு.வி.க.ஆகியோருக்கு நெடுநாட்கள் முன்னதாகவே இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் ஈடுஇணையற்ற சொற்பொழிவாளராகத் திகழ்ந்தவர் இவரே!

இத்தகைய சிறப்பு மிக்கவர் திருவாடுதுறை ஆதீனம் அவர்களின் அன்பிற்கு உரியவராகத் திகழ்ந்தார்.

சுந்தர ஸ்வாமிகள் அவர்களின் இலங்கை வருகைபற்றி ஆதீனம் முன்னதாக இவருக்குத் தகவல் தெரிவித்திருந்தார். ஸ்வாமிகளின் வருகையை மிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்.

ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளையும் அவருடன் வந்தவர்களையும் வரவேற்க மிகச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

ஆறுமுகநாவலர் தம் நண்பர்களுடன் ஸ்வாமிகள் தங்கியிருந்த மடத்திற்குச் சென்றார். மஹாசந்நிதானம் அவர்களை அனைவரும் வணங்கினார்கள். உரையாடலைத் தொடங்கும் முகமாக நாவலருக்கு, ஸ்ரீஸ்வாமிகள் ஒரு கட்டளை இட்டார். அதை செவிமடுத்த நாவலரும் அவரின் நண்பர்களும் ஆச்சரிய மடைந்தனர்; அதிர்ச்சியும் அடைந்தனர்.

ஸ்வாமிகள் அவ்வாறு என்னதான் கூறினார்?

“அழகு பொலியும் இலங்கைப் பதியில்
பழகு தமிழ்ப்பா வலன்நற் றமிழ்வேந்தன்
ஆறுமுக நாவலன் நல்வரவு கூறிட



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



ஏறுபோல் வந்தான் தலைவன்."

நல்லூர் ஆறுமுக நாவலர், இலக்கணம், சமய நூல்கள், காப்பியங்கள் என 60 நூல்களைப் பதிப்பித்தார். இலக்கணம் தொடர்பாகவும், சைவசமயத்திற்கு விளக்கமளிக்கும் 24 நூல்கள் எழுதியுள்ளார்.

ஆங்கில நூல்கள் பதிப்பிக்கப்படுவதைப் போன்றே உள்ளடக்கம், பொருள் அடைவு, பாட வேறுபாடு, அடிக்குறிப்பு ஆகிய பகுதிகளுடன் மிகச்சிறப்பாக பதிப்புச் செய்தார். பதிப்புப் பணியில் ஈடுபடுவோருக்கு இவரே இன்றும் வழிகாட்டியாய் விளங்குகின்றார்.

இவர் பதிப்பித்த நூல்களில் சில:

அகத்தியர் தேவாரத் திரட்டு
இலக்கணக்கொத்து
இலக்கணச் சுருக்கம்
இலக்கண விளக்கச் சூறாவளி
இலக்கண வினா–விடை
இலங்கை பூமி சாஸ்திரம்
ஏரெழுபது
கந்தபுராண வசனம்
கந்தபுராணம்
கொலைமறுத்தல்
கோயில்புராணம்
சிதம்பர மான்மியம்
சிவஞானபோதம்
சிவராத்திரி புராணம்
சிவாலய தரிசனவிதி
சுப்ரமணிய போதகம்
சூடாமணி நிகண்டு
சேது புராணம்
சைவ சமயநெறி
சைவ தூஷண பரிகாரம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சௌந்தர்ய லஹரி உரை
திருக்கோவையார் மூலம்
திருத்தொண்டர் புராணம்
திருமுருகாற்றுப்படை
திருவாசகம்
திருவிளையாடற் புராணம்
தொல்காப்பியம் சூத்திர விருத்தி
நன்னூல் காண்டிகை உரை
நைடதம் உரை
பிரபந்தத் திரட்டு
பெரியபுராணம் வசனம்.

இவ்வாறு இணையற்ற சமயத் தொண்டும், தமிழ்த்தொண்டும் புரிந்துள்ள இவரிடம் மஹாசந்நிதானம் அவர்கள் கேட்டார்கள் :

"தமிழ்மொழி வளர்ச்சிக்கும், சைவசமய மறுமலர்ச்சிக்கும் தாங்கள் ஆற்றிவரும் தொண்டு அளவிடற்கரியது. தாங்கள் பதிப்புத்துள்ள, எழுதியுள்ள உரைகளெல்லாம் சான்றோர்களால் போற்றப்படும் உன்னத நிலையை அடையும்.

தங்களின் கல்விப்பணி, சமயப்பணி, பதிப்பாசிரியர் பணி, சமூகப் பணி அனைத்தும் காலங்கள் கடந்தும் நிற்கும். புத்துயிர் பெற்றுவரும் தமிழ் உரைநடையின் தந்தை நீங்கள். செந்தமிழைப் பேணி வளர்த்த பெரும் புலவர்.

நீங்கள் இதுவரை எழுதியது அனைத்தும் தமிழாய்ந்த சான்றோர்களுக்காக எழுதப் பட்டவை. சைவப் பயிர் தழைத்து வளர,பக்தி எனும் வேர் ஆழமாகப் பாய வருங்கால சந்ததியினருக்குப் பயன்படும்படி, இன்றைய சிறுவர்கள் மனதில் அழுத்தமாகப் பதியும்படி நீங்கள் தொண்டாற்ற வேண்டும். கொன்றை வேந்தன், நல்வழி, ஆத்திசூடி ஆகிய சிறுவர் இலக்கியங்களை வளர்க்க வேண்டிய பொறுப்பை உங்களிடம் அளிக்கிறோம். இந்நூல்களையும் செம்மையாகப் பதிப்பித்து குழந்தைச் செல்வங்களுக்குப் பரிசாக அளியுங்கள்."

மஹாசந்நிதானம் கூறியது தொடக்கத்தில் ஆச்சரியத்தை அளித்தாலும், அவர் கூறியதின் பொருள் நாவலரின் மனதில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



ஆழமாகப் பதிந்தது. அவரின் அறிவுரையை ஆசிகளாக ஏற்றுக் கொண்டு சிறுவர்கள் இலக்கியத்தைப் பதிப்பிக்கும் பணியையும் மேற்கொண்டார் நாவலர்.

(ஆறுமுக நாவலரைப்பற்றி எழுதுவதற்குப் பல செய்திகள் உள்ளன. சைவத்திற்கும்,தமிழ்மொழிக்கும் அவர் ஆற்றிய தொண்டு சொற்களில் அடங்காது. இவர் வர்ணாசிரம தர்மத்தை முழு மனதுடன் ஆதரித்தார். வர்ணாசிரம தர்மத்தைக் கடைப்பிடிப்பதாலேயே சைவம் தழைத்து வளரும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தார். சைவ ஆகமத்தை ஊக்குவித்தார். ஆயினும் பேர்சிவல் எனும் பாதிரியாருடன் சென்னை சென்றார். கிருத்துவ விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்து, அச்சில் ஏற்றினார்.

ராமலிங்கம் பிள்ளை தாம் பாடிய அருட்பா பாடல்களைத் திருமுறைகளுடன் ஒப்பிட்டு, ஆலய விழாக்களில் அவற்றிற்குப் பதிலாகத் தம் பாடல்களையே பாட வேண்டும் என்று வலியுறுத்தினார். இதைக்கண்டு வெகுண்ட ஆறுமுக நாவலர் 'போலி அருட்பா மறுப்பு' என்ற நூலை வெளியிட்டார். இது தொடர்பாக வழக்கு நடைபெற்றதெல்லாம் தனிக்கதை.)

ஆறுமுக நாவலுருடன் இலங்கையின் பலபகுதிகளுக்குச் சென்று அங்கு பொருளுடனும்,புகழுடனும் விளங்கிய தனவணிகர்கள், சைவ அன்பர்களைச் சந்தித்து உரையாடிய ஸ்வாமிகள் சப்தஸ்தான கும்பாபிஷேகம் நடத்துவதற்கான பொருளுதவியைப் பெற்றார்.தம் சீடர்களுடன் ராமேஸ்வரம் வந்தார். ராமநாதஸ்வாமி தரிசனம் செய்து கொண்டு தஞ்சை நோக்கிப் பயணப்பட்டனர்.

கும்பாபிஷேகம் நடத்துவதற்காகப் பெறப்பட்ட கணிசமான தொகையுடன் தஞ்சை நோக்கி வந்து கொண்டிருந்த ஸ்வாமிகளையும், அவருடன் வந்தவர்களையும் வழிப்பறிக் கொள்ளைக் கூட்டம் ஒன்று பயங்கர ஆயுதங்களுடன் சுற்றி வளைத்தது.

பின்னர் என்ன நடந்தது ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"நல்லூரின் நாவலன் பக்கம் இருந்திட
செல்லும் இடமெல்லாம் நம்சைவம் ஓங்கிட
ஓயாது நற்செய்தி நாளும் நவின்றநீ
வாராது வந்த மணியே!"

மஹாசந்நிதானம் அவர்களையும், சீடர்களையும் வழிப்பறிக் கொள்ளையர்கள் வல்லநாட்டுப் பொத்தை என்ற இடத்தில் வழிமறித்துக் கொண்டனர். அவர்களிடமிருந்த பொருள்களை அபகரிக்க நெருங்கினர். அந்த சமயம் ஸ்வாமிகள் தன் சீடர்களை நோக்கி சிவநாமாவளியை உரக்கச் சொல்லும்படி ஆணையிட்டார். அவர்களும் அதற்குப் பணிந்து சிவநாமாவளியை சொல்லத் தொடங்கினர்.

இந்தத் திருக்கூட்டத்தை நெருங்கிய திருடர்களுக்கு ஒவ்வொரு அடியாரும் ஆயுதம் தரித்த ராணுவவீரர்போல் தோன்றவே, அவர்கள் பயந்துபோய் ஓட்டம் பிடித்தனர்.

(இதே போன்ற ஒரு நிகழ்வு தியாகப்ரும்மம் அவர்கள் வாழ்க்கையிலும் நடந்துள்ளது. இவர் பலதலங்களுக்குச் சென்று அங்கங்கே பலகீர்த்தனைகளை இயற்றிப் பாடினார். ஒருமுறை கோவூர் முதலியார் அவர்கள் ஸ்ரீராமபிரான் உற்சவங்களுக்காக ஆயிரம் பொன்னை ஸ்ரீதியாகப்ரும்மத்தின் பல்லக்கில் வைத்து விடுகிறார். நாகலாபுரம் கள்வர்கள் வழியில் வழிமறித்தனர். அந்த நேரம் ராம–லக்ஷ்மணர் ,சேவகர்கள் வடிவில் வந்து, திருடர்களை விரட்டி அடித்தனர்.

அப்போது ஸ்ரீதியாகப்பிரும்மம், தர்பார் ராகத்தில் பாடிய 'முந்து வெனக' என்ற பாடலின் கருத்தைக் காணலாம்.

'முரனையும், கரனையும் கொன்றவனே! ராம, நீ என் முன்னும் பின்னும் இருபுறங்களிலும் எழுந்தருளி வருக. என்னை நன்கு காப்பாற்ற வருக! உன் திருவழகைப்போல் எங்கேயும் கண்டதில்லை ரகுநந்தனே! நீ விரைந்து வருக!

புகழ் வாய்ந்த சூரியவம்சம் என்னும் கடலில் உதித்த சந்திரனே! கோதண்டத்தைக் கையில் ஏந்தி வா! அளவிடமுடியாத



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



பலத்தைக் கொண்டவனே! உன் அருகில் இருந்து கொண்டு தொண்டு செய்யும் இலக்குவனோடு வா!

கஜேந்திரன் என்ற யானையைக் காப்பாற்றியவனே! சக்கரவர்த்திக் குமாரா! ஓம்காரம் என்னும் பிரணவத்தில் வாழ்பவனே, வா! பாகவதர்களை நேசிப்பவனே! தியாகராஜனைக் காப்பாற்ற வா!'

ஸ்ரீதியாகப்ரும்மம் வரலாற்றில் கீர்த்தனை பாடியதும் ராம, லக்ஷ்மணர் வில்அம்புடன் வந்து திருடர்களை விரட்டி அடித்துவிட்டு மறைந்துபோய் விடுகின்றனர். ஸ்வாமிகள் சிவபஜனை செய்ததும் சீடர்கள் அனைவரும் சிவகணங்களாகத் திருடர்களுக்குக் காட்சி அளித்தனர்.

அந்தத் திருடர்கள் கூட பாக்கியசாலிகளே!

(மகான்களின் சரிதங்களில் இவைபோன்ற இணையான நிகழ்ச்சிகள் இடம்பெறுவதுவும் இயல்பே!)

இலங்கைப் பயணம் நிறைவடைந்த சில நாட்களில் ஸ்ரீஸ்வாமிகள் தம் குழுவினருடன் காசி மாநகர் சென்று, மன்னரைச் சந்தித்து சப்த ஸ்தான கும்பாபிஷேகத்திற்கு நிதிபெற்று வந்தார்.

பின்னர் மஹாசந்நிதானம் அவர்கள் தம்முடைய சிஷ்யர்களுடன் சென்னை நகர் வந்தடைந்தார். அங்கிருந்த கூர்ஜர பிராமணர்களின் வேண்டுகோளின்படி புஷ்பகிரி மண்டபத்தில் தங்கினார்.

சென்னை ஏகாம்பரேஸ்வரர் அக்ரஹாரம், 27–ம் எண் உள்ள வீட்டில் வசித்து வந்த ஜீவாபாய் அம்மையாரும், அவரது கணவர் சுப்பராய டாக்கரும் ஸ்வாமிகளின் ஸூதசம்ஹிதைப் பிரவசனத்திற்கு ஏற்பாடு செய்தனர். பஞ்சாக முறையில் நடத்த திட்டமிடப்பட்டது. அவர்கள் ஸ்வாமிகளைச் சந்தித்து உபதேசமொழியைப் பெற்றுக் கொண்டனர்.

விபூதி, ருத்ராக்ஷ மகிமைபற்றி முதல்நாளில் உரை நிகழ்த்தினார். இவரின் உரைவீச்சைக் கேட்ட டாக்கர் தம்பதிகள் ஸ்வாமிகளிடம் தம்மை சீடர்களாய் ஏற்றுக்கொள்ள வேண்டினார்கள். அம்பாசங்கர் தவே, ராஜாராம் தருவாடி, ராஜீபாய் அம்மாள் ஆகியோரும் மஹாசந்நிதானத்தின் பரம சிஷ்யர்கள் ஆனார்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சூதசம்ஹிதை இரண்டாம்நாள் படனத்தைக்கேட்க வந்த ஒருசிலர் மஹாசந்நிதானத்தின் மகிமையை ஐயுற்று அவரிடம் ஒரு சவாலை முன்வைத்தனர்.

அது என்ன சவால் ?

"வழிகாட்ட வந்ததோர் தெய்வத்தை ஆங்கோர்
வழிப்பறிக் கூட்டம் மறித்ததும் ஆசான்
அடியார்கள் ஈசன் கணங்களாய் அங்கே
நொடியில் மாறினர் காண்."

சென்னையில் சூதசம்ஹிதைப் பிரசங்கம் இரண்டாம்நாள் தொடங்கும் நேரம். கூட்டத்தில் புகுந்துவிட்ட நாத்திகக் கருத்துக்களைக் கொண்ட சிலர் ஸ்வாமிகளின் புறத் தோற்றத்தைப் பற்றி மிகக் கேவலமாகப் பேசி, கேலி செய்து சிரித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஸ்வாமிகளின் மஹிமையைப் பற்றி சந்தேகித்துப் பகடி பேசிக் கொண்டிருந்ததால் கூடியிருந்தவர் களிடையே சலசலப்பு ஏற்பட்டது.

'இவர் ஆன்மிகத்தில் கரை கண்டவர் என்று போற்றப்படுகிறார். மந்திர, தந்திரங்கள் அறிந்தவர் என்று கொண்டாடப்படுகிறார். இவர் சாதனைகள் என்று சொல்லப்படும் அனைத்துமே கண்கட்டு வித்தைகள்; ஏமாற்று வேலைகள். இவரைத் தலையில் வைத்துக் கொண்டாடுபவர்கள்தான் இவருக்கு இல்லாத ஆற்றல்களை இருப்பதாய்க் கூறிக் கொண்டாடுகின்றனர். எங்கே நம் எதிரில் ஏதேனும் தந்திரத்தை செய்து காட்டட்டுமே பார்ப்போம்!நம் பகுத்தறிவின் முன் இவர் வித்தைகள் எதுவும் எடுபடுகிறதா என்று காண்போம்!' என்று இரண்டு, மூன்று பேர்கள் பேசிக்கொண்டி ருந்தது நூற்றுக் கணக்கான அன்பர்களின் கவனத்தையும் சிதற அடித்தது.

சூதசம்ஹிதைக்குப் பொருள் கூறிக்கொண்டிருந்த மஹாசந்நிதானம் அவர்கள் தம் பேச்சை நிறுத்தினார். திடீரென இருந்த இடத்திலிருந்து உயரே எழும்பினார்.எந்தவித ஆதாரமுமின்றி அந்தரத்தில் பத்மாசனக் கோலத்தில் சூதசம்ஹிதைப் பிரவசனத்தைத் தொடர்ந்தார். அன்பர்கள்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



பக்தியால் மெய்சிலிர்த்துக் கைகள் கூப்பி வணங்கினார்கள். வம்பு பேசிய வீணர்கள் உடலும், மனமும் குறுகிப் போயினர். புறத் தோற்றத்திலும், புறத்தேடலிலும் உழன்று கொண்டிருந்த அந்த சிறுமதியாளர்கள், மனிதனின் ஆற்றலை அகத் தேடலுக்குத் திருப்பிவிடும் முயற்சிதான் தந்திரம் என்பதைப் புரிந்து கொண்டார்களோ என்னவோ, அந்த இடத்தை விட்டு விரைந்து ஓடிப் போனார்கள். இந்த அதிசய நிகழ்வு கண்டு அன்பர்கள் ஸ்வாமியின் பாதம் பணிந்து தொழுதனர்.

(தந்திரம் என்பது ஒருவன் தன்னை உயர்ந்த நிலையில் உணர உதவும் சாதனமாகும். சமஸ்கிருதத்தில் தந்திரம் என்ற வார்த்தைக்கு 'முடிவற்ற', 'இணைப்பு', 'வாழ்க்கை' என்று பொருள். தந்திரம் என்பதை வாழ்வை முடிவற்ற இன்பத்துடன் இணைப்பது என்று ஆன்மீகப் பொருள் கொள்ளலாம். மஹான்கள் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்த மந்திர, தந்திர சாதனைகளில் ஈடுபட வேண்டுமென்ற அவசியம் கிடையாது. ஆயினும் சிலரின் தவறான சித்தாந்தங்களை–கொள்கைகளை உடைத்தெறிய மிகச்சில, அத்யாவசிய சந்தர்ப்பங்களில் இத்தகைய அதிசய நிகழ்வுகளைக் கைக்கொள்கின்றனர்.)

ஸ்வாமிகளின் சொல்லாற்றலையும், இந்த அதியற்புத நிகழ்வையும் கண்ணுற்ற, கூர்ஜர பிராமணப் பெண்மணி ராஜீபாய் அம்மாள்டகட் என்பவர் மஹாசந்நிதானத்திற்கு சகஸ்ரார்ச்சனை, அதாவது ரூபாய் 1008/–காணிக்கையாக சமர்ப்பித்தார். அந்த அம்மையாரின் தர்ம சிந்தனையையும்,தாராள மனதையும் அனைவரும் போற்றிப் பாராட்டினர்.

பஞ்சாக முறைப்படி சூதசம்ஹிதைப் படனம் பூர்த்தி ஆனதும் மற்றுமோர் படனத்திற்கு ஏற்பாடு செய்தார் ராஜுபாய் டகட் அவர்கள். ஜீவாபாய் மற்றுமுள்ள டாக்கர் வம்சத்தினரும் மற்றும் மேத்தா குடும்பத்தினர்களும் மஹாசந்நிதானம் அவர்களின் திருவுருவப் படத்தை இன்றும் பூஜித்து வருகின்றனர்.

ஸ்வாமிகளின் ஆசிர்வாதப்படி கூர்ஜரப் பிராமணர்கள் நெற்றியில் பஸ்பம் தரித்து, ருத்ராக்ஷம் அணிந்து, சிவபூஜை செய்வதைத் தற்காலம்வரை கடைப்பிடித்து வருகின்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மேலும் சில நாட்கள் சென்னையில் தங்கியிருந்துவிட்டு, கும்பாபிஷேகத்திற்குச் சேர்ந்த நிதியுடன் திருவையாறை அடைந்தார் மஹாசந்நிதானம் அவர்கள்.

சப்தஸ்தான கும்பாபிஷேகங்கள் எவ்வாறு நடைபெற்றன ?

"பகுத்து அறிய முடியாதோர் முன்னர்
வெகுண்டு எழாமல்தன் னாற்றலைக் காட்டி
திருந்தியே ஓடவைத்தாய் நம்பி இருந்தோர்
பொருந்தினர் உன்தன் அடியே."

காசி, சென்னை ஆகிய இடங்களில் கும்பாபிஷேகத்திற்கு நிதி திரட்டிய பின்னர் ஸ்வாமிகள் தன் சீடர்களுடன் திருவாடுதுறை வந்தடைந்தார். ஆதீனம் அவர்களிடம் தன்னிடம் சேர்ந்திருந்த நிதியை ஒப்படைத்தார்.

ஆதீனத்தைச் சந்திக்க அப்பொழுது அங்கே ஒரு இளைஞர் வந்தார். அவருக்கு வயது 16,தமிழ் கூறும் நல்லுலகம் அவர் செய்யப் போகும் அருந்தொண்டிற்குக் கடன்பட்டுள்ளது;நன்றி செலுத்தப் போகிறது. இவர் இல்லையேல் தமிழ் இலக்கியங்கள் பல தமிழர்களின் கவனத்திற்கு வராமலேயே போயிருக்கும். கரையான்அரித்தது போக,அனல் கொண்டது போக,புனல் அடித்துச்சென்றது போக மீதி இருந்த தமிழ் நூல்களைக் காப்பாற்றியவர். பின்வரப்போகும் தமிழாய்ந்த சான்றோர்கள் அவரை 'தமிழ்த் தாத்தா' என்று போற்றி கொண்டாடப் போகிறார்கள்.

அவர்தான்........ திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களின் தலைமாணாக்கர்... உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் ஸ்வாமிநாத ஐயர். சுருக்கமாக இன்று நாம் அறியும் 'உ.வே.சா' அவர்கள்.

ஆனந்த வருஷம், மாசிமாதம் 9–ம் தேதி திங்கட்கிழமை 1855–ம் ஆண்டு, பிப்ரவரி, 19–ம்தேதி கும்பகோணத்திற்கு அருகே உள்ள உத்தமதானபுரம் என்ன சிற்றூரில் வேங்கடசுப்பையர்–சரஸ்வதிஅம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவரின்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



தந்தை ஒரு இசைக் கலைஞர். உ.வே.சா. அவர்கள் தமது தொடக்கக் கல்வியையும், இசைக் கல்வியையும் உத்தமதானபுரத்திலேயே பெற்றார். குடும்பம் மிகவும் வறுமையில் வாடியதால் இவரின் தந்தை குடும்பம் நடத்துவதற்கே மிகவும் சிரமப்பட்டுள்ளார். பல இடங்களுக்குச் சென்று ராமாயண விரிவுரை நடத்தி ,அதில் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் குடும்பத்தை நடத்தி வந்தார்.

வறுமையின் காரணமாக உ.வே.சா.அவர்களின் குடும்பம் அரியலூர் வந்தது. அங்கே இரண்டு ஆண்டுகள் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படித்தார்.

இவரின் தந்தை பிழைப்பைத்தேடி ஊர்ஊராக அலைந்ததால் சாமிநாதனின் படிப்பும் பல ஊர்களில் தொடர்ந்தது. அக்காலத்தில் காகிதம் பள்ளிக்கூடம்வரை வரவில்லை. மணலிலும், எழுத்தாணி கொண்டு பனை ஓலையிலும் எழுதிப் பழகினார்.

உ.வே.சா.சிறுவயதில் விளையாட்டு, படிப்பு இரண்டிலும் ஆர்வமுள்ளவராய் இருந்தார். ஆனால் அவரின் தந்தையோ கல்வியில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டும் என்பதில் கண்டிப்பாக இருந்தார்.

உ.வே.சா.அவர்களுக்கு சிறுவயதிலேயே ஆங்கில எழுத்துக்களை எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. இவருடைய முதல் தமிழ் ஆசான் சடகோப ஐயங்கார் என்பவர். சாமிநாதனுக்குத் தமிழின்பால் தணியா ஆர்வம் ஏற்படும் வண்ணம் இவர் கற்பித்தார்.

சிதம்பரம் பிள்ளை என்பவர் இவர் தந்தையின் நண்பர். அவரிடம் திருவிளையாடற்புரர்ணம் என்ற நூலைத் திருத்தமாகக் கற்றார். அந்தக் காலத்தில் கல்வி என்பது வகுப்பறையில் அமர்ந்து,பாடம் வாரியாக ஆசிரியர் சொல்வதைக் கேட்டுக் கற்பதன்று. தமிழ் நூல்களை, இலக்கியங்களை, காப்பியங்களைத் தகுந்த ஆசானைத் தேடிச்சென்று ஐயம் திரிபறக் கற்பதே ஆகும். நன்னூல், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களையும், பிள்ளைத்தமிழ், கோவை முதலிய இலக்கியங்களையும் இவ்வாறே உ.வே.சா கற்றார்.

உ.வே.சா கவிதை எழுதும் முறையையும் பயின்று வந்தார். இந்நிலையில் அவருக்குத் திருமணம் செய்து வைக்க அவரின்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பெற்றோர்கள் விரும்பினர். இளம்வயதில் மணம் முடிப்பது அக்காலப் பழக்கம். பதினாறு வயதிற்குள் மணம் முடியாதிருந்தால் அது பெரும் குறையெனக் கருதப்பட்டது. எனவே உ.வே.சா அவர்களுக்குத் திருமணம் நடந்தேறியது. உ.வே.சா அவர்களுக்கு வயது பதினான்கு, மணப்பெண்ணிற்கு அப்பொழுது வயது எட்டு.

திருமணம் நிறைவேறினாலும் அவருக்கு ஒரு பெரும் மனக்குறை இருந்தது.

அது என்ன ?

“தமிழாய்ந்த நல்லோர் உனைச்சேர்ந்தார் நல்ல
அமிழ்தான ஆசிகள் கூறித் தகையோரை
ஆட்கொண்ட அன்புப் புனலே அடியவர்
கேட்ட வரம்தந் தருளே!”

உ.வே.சா என்ற உ.வே.சாமிநாத ஐயர் தோன்றி இருக்கா விட்டால் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு சிலப்பதிகாரம் பற்றிய சிந்தனையே வந்திருக்காது.

அகநானூறும், புறநானூறும் அகழ்வாராய்ச்சிக்குப் போயிருக்கும். மணிமேகலையின் மாண்பு தெரிந்திருக்காது. எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் தமிழர்களுக்கு எட்டாமலேயே இருந்திருக்கும்.சங்க இலக்கியங்கள் என்று நாம் இன்று பெருமையாகப் பேசுகிறோம். அந்த சங்ககால மக்களின் வாழ்க்கை, பண்பாடு, கலை, நாகரிகம் ஆகியவை நமக்குத் துல்லியமாகத் தெரிகிறது என்றால் அதற்கு உ.வே.சா ஐயர் அவர்களே காரணமாவார். இவர் தோன்றியிருக்காவிட்டால் தமிழையும், தமிழ் இலக்கியத்தைப் பற்றியும் நாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இத்தகைய அரிய சேவைக்காக அவர் மேற்கொண்ட சீரிய முயற்சிகள் ஏராளம்; பட்ட சிரமங்களும், செலவழித்த தொகையும் தாராளம்.

பின்னாட்களில் வந்து தமிழ்க்காவலர்கள் என்று சொல்லிக் கொண்ட பலர் காணாமல் போயிருப்பார்கள்.

பேருந்து வசதிகள் அதிகம் இல்லாத அக்காலத்தில் திருவாடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் என்று பல ஆதின



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



மடங்களுக்கும் நடந்தே சென்று ஓலைச்சுவடிகளைச் சேகரித்தார். அன்றைய காலகட்டத்தில் ஆதினங்களிடையே ஒற்றுமைப் போக்கும் நிலவவில்லை. (உ.வே.சா.அவர்கள் ஓலைச்சுவடிகளைச் சேகரிக்கப் பட்டபாட்டையும், அலைந்த அலைச்சலையும், வறுமையிலும் இவற்றிற்காகச் செலவழித்த தொகைகளையும் அறிந்தால் உண்மையான தமிழ்நேசர்கள் ரத்தக்கண்ணீர் வடிப்பர். அது ஒரு தனிக்கதை, சோககாவியம். )

இவர் ஏட்டுச்சுவடிகளைப் பார்த்து அப்படியே பதிப்பிக்க மட்டும் செய்யவில்லை. சிதைந்து, மறைந்த வாக்கியங்களையும், வார்த்தைகளையும், எழுத்துக்களையும் தேடித்தேடிச் சென்று கண்டுபிடித்துத் தக்க இடங்களைக் கண்டுபிடித்துச் சேர்த்து முழுப்பொருளும் விளங்கும்படி செய்தார்.

ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு போன்ற செய்திகளை முதன்முறையாகத் தொகுத்து வழங்கும் முறையை செயல்பாட்டிற்குக் கொண்டு வந்தார். அவர் தோன்றிய காலத்தில் இருந்த தமிழின் நிலைக்கும் அவர் மறைந்தபோதிருந்த தமிழின் நிலைக்கும் மடுவிற்கும், மலைக்கும் உள்ள வேறுபாடாகும்.

தமது அச்சுப் பதிப்பிக்கும் பணியினால் தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், செழுமையையும் உலகறியச் செய்த மாபெரும் அறிஞர் இவர். 90க்கும் மேற்பட்ட நூல்களை அச்சில் ஏற்றினார்; 300க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும், கையெழுத்தேடு களையும் சேகரித்தார். தன்னுடைய சொத்துக்களை விற்றுப் பல தமிழ் இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். இவரது குடும்பம் மீளமுடியாத வறுமையில் வாடிய போதும் தம் தமிழ்ப் பணியை நிறுத்தவில்லை. இவர் குடும்பம் தீராத வறுமையில் வாடிய போதும் இவருடைய தந்தை குடும்பம் பிழைப்பதற்கும், இவர் கல்வி கற்கவும் மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டார். இவருக்கு நல்ல கல்வி கற்பித்து, சிறப்பான எதிர்காலத்தை அமைத்துத்தர வேண்டும் என்பதில் தீவிர முனைப்பும், ஆர்வமும், கவலையும் கொண்டிருந்தார். பல தமிழ்நூல்களை சாமிநாதனுக்கு அவரே கற்பித்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தமிழாசிரியர் எங்கு இருப்பாரோ அந்த இடம் நோக்கிச் சென்று கொண்டே இருப்பார் உ.வே.சா. தமிழ்ப் புலவர்கள் எவரையேனும் பார்த்துவிட்டால் போதும், அவரிடம் கல்வி கற்றுக்கொள்ள இவர் மனம் ஏங்கும். இவர் அடைந்த இமாலய வெற்றிக்கு இவரின் கடின முயற்சியும், குடும்பத்தினரின் தியாக உணர்வும் அடித்தளமாய் அமைந்தன.

'தமிழ்தான் எனது சொத்து. அதுவே என் அறிவுப் பசிக்கு உணவு' என்ற உறுதி கொண்டிருந்தார் உ.வே.சா.

விருத்தாசலம் ரெட்டியார் என்ற தமிழறிஞரிடம் சிலகாலம் தமிழ் கற்றார். பாடல் எழுதும் நுணுக்கங்களை அவரிடம் அறிந்து கொண்டார். புத்தகங்களைப் படிப்பது மட்டும் போதாது, படித்தவர்களை அணுகிப் பாடம் கேட்க வேண்டும் என்பதையும் தெரிந்து கொண்டார்.

ஆகவே, திருவாடுதுறை ஆதினத்தில் தமிழ் கற்பித்துக் கொண்டிருந்த புகழ்பெற்ற திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் மாணாக்கராகச் சேர்ந்தார். அவரிடம் ஐந்து ஆண்டுகள் பயின்று தமிழறிஞர் ஆனார்.அதனால் ஆதினத்தின் தொடர்பும் ஏற்பட்டது. கல்வியுடன், இசையையும் கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் கற்று வந்தார். தொடக்கத்தில் கும்பகோணம் கல்லூரி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்த அவர், பின்னர் மாநிலக்கல்லூரியில் சேர்ந்தார்.

சீவகசிந்தாமணியைக் கற்றுக் கொடுக்க முயன்றபோது ஏட்டுச்சுவடியை மிகச் சிரமத்திற்கிடையே படித்துப் பாடம் நடத்தினார். விடுபட்ட பகுதிகளைச் சேர்த்து அந்நூலை அச்சில் ஏற்றினார். தமிழ்மக்கள் அளித்த நல்லூக்கம் காரணமாக மேலும் பலநூல்கள் அச்சில் ஏறின. இவருடைய வாழ்க்கை வரலாற்றைத் தமிழின்பால் பற்றுக்கொண்டவர்கள் அனைவரும் படித்துப் போற்றிக்கொண்டாட வேண்டிய ஒன்றாகும்.

கல்லூரியில் ஆசிரியராய் இருந்தபோதும், பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்பதை விட்டுவிடவில்லை. அவரிடம் அளவிடமுடியாத பற்றும், பக்தியும் கொண்டிருந்தார். இந்நிலையில் பிள்ளை அவர்கள் உ.வே.சா. அவர்களுக்கு மேற்கொண்டு பாடம் நடத்த ஒரு நிபந்தனை விதித்தார். அந்த நிபந்தனையால் சற்றே



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata.



மனம் கலங்கிய ஐயர் அவர்கள் திருவாடுதுறை ஆதினம் அவர்களிடம், பிள்ளை அவர்களின் நிபந்தனை பற்றிக் கலந்து ஆலோசனை பெற வந்தார்.

அங்கே ஆதினம் அவர்களுடன் மஹாசந்நிதானம் அவர்களும் எழுந்தருளி இருந்தார்கள். ஸ்வாமிகளை முன்பே அறிந்திருந்த உ.வே.சா அவர்கள், தாம் பிள்ளை அவர்களிடம் மேற்கொண்டு பாடம் படிப்பதற்கு அவர் விதித்துள்ள கட்டளையைக் கூறினார்.

அது என்ன முன்னீடு (நிபந்தனை) ?

"தாய்மொழி போற்றியோன் தன்நிகரில் ஆதினம்
வாய்மொழி கேட்கவே வந்தனன் அங்கே
உயர்ஞானம் கொண்டவன் பக்கம் இருந்து
துயர்தனை நீக்கினான் வாழி".

தமிழ்மொழிமேல் உ.வே.சா.அவர்களுக்கு இருந்த பற்றை அளவிடமுடியாது.

'இவ்வுலக (லௌகிக) வாழ்க்கைக்கு ஆங்கிலம் இன்றியமையாதது; அவ்வுலக (ஆன்மிக) வாழ்க்கைக்கு சமஸ்கிருதம் வழிகாட்டும்' என்று எவரேனும் உரைத்தால் உடனே இவ்வாறு பதில் அளிப்பார் : 'அன்னைத்தமிழ் இவ்வுலக, அவ்வுலக வாழ்க்கை இரண்டிற்கும் இன்றியமையாதது.'

தமிழ்க் கல்வி கற்பதிலும், கர்நாடக இசையைக் கற்றுக் கொள்வதிலும் இவர் ஆர்வம் காட்டி வந்தார். இவருடைய தந்தையின் நண்பராகிய கும்பகோணம் வக்கீல் வெங்கடராவ் என்பவர் 'உ.வே.சா. தமிழ் கற்பதினாலும், இசையைப் பயிலுவதாலும் யாதொரு பயனுமில்லை.ஆங்கிலம் படிக்கச் சொல்லுங்கள். அரசு வேலை ஏதேனும் கிடைக்கும். குடும்பத்தின் பொருளாதாரமும் மேம்படும்' என்று ஐயர் அவர்களின் தந்தையிடம் கூறினார். இதை அறிந்து வேங்கடராவ் மீது அடங்காச் சினம் கொண்டார் உ.வே.சா. அதன்பின் அவருடன் பேசுவதைத் தவிர்த்தார்.

மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் திருநாகைக் காரோணம், நைடதம், திருக்குடந்தை திரிபந்தாதி, பழமலை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திரிபந்தாதி, மறைசையந்தாதி. தில்லை அந்தாதி, மீனாக்ஷி அம்மன் பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரஸ்வாமி பிள்ளைத்தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், சீர்காழிக் கோவை, அஷ்டபிரபந்தங்கள், கண்ணப்பநாயனார் புராணம் ஆகிய நூல்களைக் கற்றார்.

இவரைப் போலவே ஆசிரியரும் வறுமையில் வாடிக் கொண்டுதான் இருந்தார். 'வறுமையும், புலமையும் சேர்ந்தே இருப்பது இந்நாட்டின் சாபம்' என்று உ.வே.சா.குறித்துள்ளார்.

இந்நிலையில் திருவாடுதுறை ஆதினம் சுப்ரமணியதேசிகரை ஆசிரியருடன் சந்தித்தார். அவருக்கு ஒரு பாடலைக்கூறி அதற்கு விளக்கமும் அளித்தார் ஐயர் அவர்கள். அந்தப் பாடலின் விளக்கத்தைக் கேட்டு மகிழ்ந்த ஆதினம் அவர்கள் புத்தகங்களை அவருக்குப் பரிசாக அளித்தார். அந்தப் பரிசைப் பெற்று அகமகிழ்ந்தார் உ.வே.சா அவர்கள். பொன்னைப் பரிசாக அளித்திருந்தால் கூட இவ்வளவு மகிழ்ந்திருக்க மாட்டார். தேசிகரின் அன்பு அவரை நெகிழ வைத்தது.

மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, திருவாடுதுறை ஆதினம் சுப்பிரமணிய தேசிகர் ஆகியோர் மீதிருந்த அளவிட முடியாத பற்றினாலும், பாசத்தாலும் அவர்கள் தன்மீது கொண்ட அக்கறையாலும் திருவாடுதுறையை நீங்கி வேறூர் செல்வதில்லை என்ற முடிவில் இருந்தார் உ.வே.சா ஐயர் அவர்கள்.

இந்நிலையில் குடும்பத்தின் வறுமையும், கடன் தொல்லையும் உ.வே.சா அவர்களை மிகவும் வாட்டியது. கோபால கிருஷ்ண பாரதியாரிடம் இசை பயின்று வந்ததால் தன் தந்தையுடன் புராண விரிவுரைக்குச் சென்று பாடல்கள் பாடினார். இவரின் இசையில் மயங்கிய மக்கள் அதிக அளவில் புராண விரிவுரைக்கு வந்தனர். அதனால் சிறிது வருவாய் கூடியது. ஆனால் அது வறுமையை விரட்டும் அளவிற்கு இருக்கவில்லை.

தந்தையார் வறுமையால் குடும்பம் நடத்த இன்னல்படுவது கண்டு மனம் பொறாது ஐயர் அவர்கள் ஒரு செல்வந்தர் வீட்டிற்குச் சென்றார். கவி இயற்றிப் பாடினார். அவர் அளித்த நெல்லுடன் வீடு திரும்பினார். இதுதான் இவர் இயற்றிய முதல் செய்யுள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



பிற்காலத்தில் கலைமகள் துதி, திரிலோகமாலை, ஆனந்தவல்லியம்மை பஞ்சரத்னம் ஆகிய செய்யுள் நூல்களை இயற்றினார்.

உ.வே.சா அவர்கள் பிறந்ததுதான் ஆனந்த ஆண்டே தவிர இவர் வாழ்வில் ஆனந்தம் இல்லாதே இருந்தது.

இந்நிலையில் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் தம் மாணவருக்குத் தீர்மானமான ஒரு கட்டளை இட்டார்.

'கல்வி கற்றுத் தமிழில் சிறந்து விளங்க வேண்டுமெனில் இசை பயிலுவதை விட்டுவிடு. அன்றி இசை பயிலுவதில் ஆர்வம் இருந்தால் கல்வி பயிலுவதை நிறுத்தி விடு. இரண்டு குதிரைகளில் சவாரி செய்ய எண்ணாதே!' என்பதே அது.

இதனால் மனம் கலங்கிய ஐயர் அவர்கள், ஆதினம் சுப்பிரமணிய தேசிகரிடம் கலந்தாலோசித்து அறிவுரை பெறவந்தார். அவருடன் மஹாசந்நிதானம் இருப்பது அறிந்து இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தார். அவர்களிடம் தன் ஆசானின் கட்டளையைத் தெரிவித்து அவர்களின் மேலான அறிவுரையை வேண்டினார்.

ஆதினம் அவர்கள் மஹாசந்நிதானம் அவர்களை நோக்கினார்.

மஹாசந்நிதானம் அவர்கள் திருவாய் மலர்ந்தார்.
அவர் என்ன கூறினார்?
"வறுமையும் சான்றோர் புலமையும் சேர்ந்தே
பொறுமையைச் சோதிப்பின் நல்லோர் தமது
நிலையின் நழுவார் தவறும் புரியார்
தலைநிமிர்ந்து நிற்பரே என்றும்."

"கல்வியா? இசையா? என்ற கேள்வி உன் முன் நிற்கிறது.

கல்விக்குப் பிள்ளைவாள் அவர்களும், இசைக்குப் பாரதியாரும் ஆசானாய் அமைந்துள்ளனர்.

இசைக்கு எங்ஙனம் இனிமையும் சுவையும் உண்டோ, அதேபோல் தமிழுக்கும் இனிமையும் சுவையும் உண்டு. வடமொழிபோல் உலகின் மூத்த மொழிகளில் தமிழும் ஒன்று. இசையும், மொழியும் மனிதர்களை இணைக்கும் பாலம்.வறுமையில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நீ தடுமாறும் பொழுதெல்லாம் உன்னைத் தாங்கிப் பிடித்தவை மொழியும் இசையுமே!

மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களை யாம் நன்கறிவோம். அவர் ஒரு கருத்தைத் தெரிவிக்கிறார் என்றால் அதில் காரண, காரியமில்லாது போகாது. நீ அனுமனை நிகர்த்தவன். உன் ஆற்றலை நீ இன்னுமும் அறியவில்லை. நீ சங்கீதத்தைத் தேர்ந்தெடுத்தாலும், தமிழ் கற்பதைத் தேர்ந்தெடுத்தாலும் தனித்த சிறப்புடன் விளங்குவாய்.

'இனிமையும், நீர்மையும் தமிழென லாகும்' என்று பிங்கலந்தை என்ற நிகண்டு நூல் கூறுகிறது. இசை எவ்வாறு மனிதனையும் மற்ற உயிரினங்களையும் இசையவைக்கிறதோ, அதைப்போன்ற ஆற்றலை மொழியும் கொண்டுள்ளது. இசை, உயிரினங்களைப் பணியவைக்கும் அருஞ்சாதனம். இதை சிரவணகலை என்றும் அழைப்பர். படித்தவர் முதல் பாமரர் வரை இசை பரவிநிற்கின்றது.

ஆனால்......பாமரரைப் படித்தவர் ஆக்குவது கல்வி மட்டுமே.

நம் காலகட்டத்தில் சங்கீத மும்மூர்த்திகள் என்று போற்றப்பட்ட தியாகப்பிரும்மம், முத்துசாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரி ஆகியோர் தோன்றி ஈசனடி சேர்ந்து விட்டனர். இந்த வாக்யேயக்காரர்களின் வம்சாவளியினரும், சிஷ்யபரம்பரையினரும் அதிக அளவில் பல்கிப் பெருகி உள்ளனர்.கல்வி உலகில் அத்தகைய நீண்ட பரம்பரை இல்லாதது ஒரு குறையே ஆகும்.

இன்றையச் சூழலில் பிள்ளைவாள் அவர்களைப்போல் கற்றுக் கொடுக்கும் ஒரு ஆசான் கிடைப்பது அரிதிலும் அரிதாகும். உன்னால் தமிழ் பெருமை அடையப்போகிறது. தமிழ் உள்ளவரை உன் சாதனைகள் நிலைத்து நிற்கும். பல தடைகளும், இன்னல்களும் உன் முயற்சியில் குறுக்கிடும். ஆயினும் அனைத்தையும் வென்று தமிழின் மூத்த காவலனாக நீ விளங்கப் போகிறாய். இசையைப் பேணி வளர்க்க பல சந்ததிகள் தோன்றியுள்ளனர் என்பது எமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. இன்றைய சூழலில் மொழியின் சிறப்பை மீட்டெடுக்க உன்னைப் போன்ற வெகுசிலரே உள்ளனர். நீ குடியிருக்கும் வீடுகூட உனக்கு இல்லாது போகும். எந்தப் பிரதிபலனையும் பாராது உன் கல்விப்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



பணியைத் தொடர்ந்து செய். நற்றமிழர் மனங்களில் நீ என்றும் நீங்காது இருப்பாய்.

முன்னோரின் சாத்திரங்கள், நூல்களை தேடிப் போ! உன்னால்,மறைவாய் உள்ள நூல்களெல்லாம் மக்களின் பார்வைக்கு வரும். உன்னை யாரேனும் விரும்பவில்லை எனினும் உன்னைத் தவிர்த்துவிட்டு இனி அவர்களால் தமிழ் இலக்கியங்களைப் படிக்க இயலாது.

உன்னுடைய தாகம் தீர்க்கத் தமிழ்மேகம் மழைபொழியும். அப்படியும் உன் தாகம் தீராது.முயற்சி செய். உன் ஆசிரியர் சொல்லும் வழி செல். ஆசிர்வாதங்கள்!'

இத்தகைய பயனுள்ள அறிவுரையையும், ஆசிகளையும் வழங்கிய மஹாசந்நிதானத்தையும், அவர் மொழிந்ததை புன்னகையால் அங்கீகரித்து ஆசிகள் வழங்கிய ஆதினத்தையும் பணிந்து வணங்கி விடைபெற்றார் உ.வே.சா.அவர்கள்.

அவரின் வாழ்வில் மாற்றத்தை,ஒரு முக்கிய திருப்புமுனையை ஏற்படுத்திய மஹாசந்நிதானம் பற்றி உ.வே.சா அவர்கள் கூறியது என்ன ?

"நல்ல கருத்தை அருளியே நற்றமிழின்
நல்ல தலைமகனை நானிலம் போற்றிட
கற்றோர் சபைஅறிய ஆசிகள் கூறிய
பெற்றவரின் மேலாய் மிளிர்ந்தாய். "

மஹாசந்நிதானம் கூறிய அறிவுரைகளைக் கவனமுடன் கேட்டுக் கொண்டார் உ.வே.சா அவர்கள்.

திருவாடுதுறை ஆதினம் அவர்களும் மஹான் கூறியதை வழிமொழிந்தார். தன்மீது தனி அக்கறை கொண்ட இரு ஆன்றோர்கள் கூறியதை ஏற்றுக் கொண்டார் ஐயர் அவர்கள்.

'என் சரித்திரம்' என்ற தன் சுயசரிதையில் மஹாசந்நிதானம் அவர்களைப்பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"சிவபக்திச் செல்வத்தைத் தமிழ்நாட்டில் நன்றாகப் பரவச் செய்து பெரும் புகழுடன் விளங்கிய புண்ணிய சீலர்கள் பலர். அத்தகைய மகான்களுள் திருநெல்வேலியைச் சார்ந்த



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கோடகநல்லூர் ஸ்ரீசுந்தரஸ்வாமிகள் ஒருவர். நான் திருவாடுதுறை மடத்தில் படித்து வந்த காலத்தில் அங்கே இவர்களைத் தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இவர்களுடைய தோற்றப் பொலிவையும், இன்னுரைகளையும், அறிவுரைகளையும் கண்டும், கேட்டும் மிகவும் இன்புற்றேன், பயன்பெற்றேன்.

சிவச்சின்னங்களின் பெருமையையும், சிவபூஜையின் சிறப்பையும், சிவபக்தியின் மேன்மையையும், சிவபக்தர்களின் உயர்வையும் தம்முடைய பிரசங்கங்களால் தமிழ்நாட்டார் உள்ளங்களில் நன்றாகப் பதியும்படி வெளிப்படுத்திய மேம்பாடு இவர்களுக்கு உண்டு.

பலசிறந்த வித்வான்களும், சாதுக்களும் இவர்களுடைய நல்லுபதேசத்தைப் பெற்றுத் தமக்கும், பிறருக்கும் சாந்தி ஏற்படும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஸ்வாமிகளுக்கு வடமொழியில் சிறந்த பயிற்சி உண்டு. இவர்கள் தம் உபன்யாசங்களின் இடையிடையே தமிழ்ச்செய்யுட்கள் பலவற்றையும் சொல்லுவார்கள். சங்கீத ரத்னமாக விளங்கிய ஸ்ரீமஹாவைத்யநாத சிவன் அவர்கள் இப்பெரியவர்களிடம் ஈடுபட்டு சிவகதாப் பிரசங்கங்களையும், உபதேசங்களையும் கேட்டறிந்து மேன்மையுற்றனர்..............”

உ.வே.சா அவர்களின் வாழ்க்கை, பிள்ளைஅவர்களிடம் முழுநேர மாணவன் ஆனதும், அதன் பிறகும் எவ்வாறு அமைந்தது ?

மிகச் சுருக்கமாக் காண்போம்.

பிள்ளை அவர்கள் அபார நினைவாற்றல் கொண்டவர். பாடங்களைப் படித்த வேகத்தில் மனதில் பதியவைத்துக் கொண்டுவிடுவார். திருத்தலங்களின் வரலாற்றை விவரித்து ஏராளமான தலபுராணங்கள் பாடினார். பிள்ளைத்தமிழ் நூல்களை அதிகமாகப் பாடியதால்

‘பிள்ளைத்தமிழ் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை’ என்று போற்றப்பட்டார். 19–ம் நூற்றாண்டில் அதிகமான தமிழ் நூல்களை எழுதியவர் இவரே என்ற சிறப்பை உடையவர். இவரது படைப்புகள் அனைத்துமே செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. இவர் படைத்த நூல்களின் எண்ணிக்கை 75.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



பெரியபுராணத்தைப் பலமுறை படித்தவர். அதைச் சொற்பொழிவு செய்வதில் வல்லவர்.

மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் பல இலக்கண, இலக்கிய நூல்களை உ.வே.சா கற்றார். அறநூல்கள், காப்பியங்கள், சித்தாந்த சாத்திரங்கள், பேருரைகள், சிற்றிலக்கியங்கள் அனைத்தையும் ஆசிரியர் கற்பித்தார். மாணவர்தான் வறுமையில் வாடினார் என்றால் ஆசிரியரும் அவ்விதமே வறுமையில் வாடினார். இவரிடம் கற்க வரும் மாணவர்களைச் சொந்தப் பிள்ளைகள்போல் கருதி உணவும் இடமும் அளித்துக் குருகுலமுறையில் பாரபட்சமின்றி பாடம் நடத்தினார். கவிதைகள் பாடிச் சன்மானமாகப் பெற்றதை மாணவர்களுக்காகச் செலவு செய்தார்.

திருவாடுதுறை ஆதினம் அவர்கள் இருவரும் தங்குவதற்கு இலவச இடவசதி அளித்தார். தமிழில் முதல் புதினமான பிரதாபமுதலியார் சரித்திரத்தை எழுதிய மாயூரம் வேதநாயகம் பிள்ளையுடன் நெருங்கிய நட்பில் இருந்தார் பிள்ளை அவர்கள். அவர்மீது வைத்திருந்த பெருமதிப்பின் காரணமாக அவரைப் பாராட்டி ‘குளத்துக் கோவை என்னும் நூலை இயற்றினார். மாயவரத்தில் முன்சீபாக இருந்த அவர் மூலம் உ.வே.சா அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கேட்டுச் சென்றார்.

அவர் என்ன கூறினார் ?

“உலகம் புகழும் தமிழ்த்தாத்தா சொல்லின்
திலகம் எனத்திகழ்ந்த பிள்ளை அவர்கள்
வறுமையில் வாடிய காலையும் என்றும்
செருக்குடன் வாழ்ந்தனர் காண். ”

மாயவரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள், கும்பகோணம் தியாகராஜன் செட்டியாரை சந்திக்கும்படி கூறினார். இவர் அந்நகர் கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியர். அவரை இருவரும் சந்தித்தனர். மீனாக்ஷிசுந்தரம் பிள்ளைஅவர்களிடம், செட்டியார் கூறினார் : ‘சாமிநாதன் கற்கவேண்டியதை முழுவதும் உங்களிடம் கற்றுக் கொள்ளட்டும். அதன்பிறகு வேலைஅவனைத்தேடிவரும்’ என்று அவருடைய வேண்டுகோளை மறுத்து விட்டார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிள்ளை அவர்களிடம் தாம் கற்பதைத் தொடர்ந்தார்.

நினைப்பது போல் எதுதான் நடக்கிறது! மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் தமது 61-ம் வயதில் சிவனடி சேர்ந்தார். உ.வே.சா அவர்களின் சோகத்தை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. துயரம் சூழ்ந்தது. அன்றாட வாழ்க்கைக்குப் பிறர்கையை எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலை. நிரந்தர வருமானம் உள்ள ஆசிரியப்பணி கிடைத்தால் பயனுள்ளதாக இருக்குமே என்ற எண்ணம் எழுந்தது.

ஆறுதலாக அந்த எண்ணமும் நிறைவேறியது. . தியாகராஜன் செட்டியார் அவர்கள் தம் வேலையை விட்டுவிட முடிவு செய்தார். தாம் பணியாற்றிய இடத்தில் ஐயர் அவர்களை நியமிக்க கல்லூரி நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டார். நிர்வாகத்தினரும் உ.வே.சா அவர்களின் தகுதியை சோதித்துப்பார்த்தனர். அவரின் திறமைகண்டு வியந்து பணியில் அமர்த்திக் கொண்டனர்.

வேதநாயகம்பிள்ளை, சந்திரசேகர கவிராஜபண்டிதர் ,திரிசிரிபுரம் கோவிந்தபிள்ளை, ராவ்பகதூர் பட்டாபிராமபிள்ளை ஆகிய பெரும் தமிழ்ச்சான்றோர்களின் நட்பும் கிடைத்தது.

பாண்டி நாட்டில், திருவாடுதுறை ஆதினம் பெயரில் ஒரு மடாலயம் கட்டப்பட்டது. அதற்கு 'சுப்பிரமணிய தேசிக விலாஸம்' என்று பெயரிடப்பட்டது. இந்த அழகிய மடாலயத்தைச் சிறப்பித்து பல தமிழ்ப் புலவர்கள் 86 பாடல்களை இயற்றி இருந்தனர். ஐயர் அவர்கள் 8 பாடல்கள் இயற்றிப் பாடினார். மேலும் சில பாடல்களை இணைத்து இப்பாடல் திரட்டை வெளியிட்டார். இதுவே முதன் முதலாக ஐயர் அவர்கள் பதிப்பித்த நூலாகும்.

கும்பகோணம் கல்லூரியில் சேர்ந்ததனால் திருவாடுதுறையை விட்டுப் புலம் பெயர வேண்டியதாயிற்று. அம்மடத்தின் மீது பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த உ.வே.சா அவர்கள் அங்கிருந்த ஒவ்வொரு ஜடப் பொருள் மீதும் பற்று வைத்திருந்தார். அவற்றைப் பிரிந்து சென்றதை இவ்வாறு குறிப்பிடுகிறார் : 'அவை ஜடப் பொருள்கள் அல்லவா,அவற்றின் மீது அவ்வளவு பற்றிருப்பது பைத்தியக்காரத் தனமல்லவா என்று பிறருக்குத் தோன்றும். என்னுடைய உலகம் திருவாடுதுறை மடத்தில் இருந்தது. அங்குள்ள பொருள்களைப்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



பிரியும்பொழுது உலகத்தையே பிரிவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது' (இத்தகைய உணரச்சி அன்புடைய இதயம் கொண்டவர் களுக்கு வாழ்க்கையில் ஒருமுறையேனும் ஏற்பட்டிருக்கும்.)

மடத்திலிருந்து விடைபெற்றுச் செல்ல வந்த ஐயர் அவர்களுக்கு மாறாத அன்பின் வெளிப்பாடாக ஆதினம் அவர்கள் பல பரிசுப் பொருட்களுடன் காலணியும், குடையும் அளித்தார். ஏனெனில் அதுவரை வறுமை காரணமாக உ.வே.சா அவர்கள் காலணி அணிந்ததில்லை; குடை பிடித்ததும் இல்லை. ('இறுமாப்புடைய நடையும் குடையும் என்னிடம் இல்லை' என்று ஐயர் அவர்கள் முன்னர் குறிப்பிட்டிருந்ததை நினைவில் கொண்டு ஆதினம் இவற்றைப் பரிசில்களாக அளித்தார்.)

கும்பகோணத்தில் முன்சீபாக ராமசாமி முதலியார் என்ற தமிழறிஞர் இருந்தார். உ.வே.சா அவர்களின் நல்லூழினால் அவருடைய நட்பு ஏற்பட்டது. முதலியாரும் மஹாசந்நிதானம், ஆதினம், மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை ஆகியோரைப்பற்றி நன்கறிந்திருந்தார். எனவே இவர்களைப்பற்றிப் பேசுவதில் மகிழ்ச்சி கொண்டனர். (ஸ்வாமிகளின் காலத்திற்குப் பின்பு நடந்த நிகழ்வுகளையும் தொடர்பு கருதி இங்கே பார்த்து விடுவோம்.) அவர் நட்பினால் பல புதிய துறைகளை அறியும் வாய்ப்பு உ.வே.சா அவர்களுக்குக் கிடைத்தது.

உ.வே.சா அவர்களிடம் 'தாங்கள் படித்த நூல்கள் யாவை?' என்று முதலியார் அவர்கள் வினவினார்.

'அந்தாதிகள், பிள்ளைத்தமிழ், கோவை, பிரபுலிங்கலீலை, சிவஞானபோதம், நைடதம் மற்றும் சித்தாந்த சாத்திரங்கள், பேருரைகள், அஷ்டபிரபந்தங்கள், கண்ணப்பநாயனார் புராணம், சிற்றிலக்கியங்கள்.....'

'நிறுத்துங்கள். இவ்வளவுதானே! நீங்கள் கற்றது ஒரு படிப்பா? இவற்றைப் படித்து என்ன பிரயோசனம்? உங்கள் படிப்பு உங்களுக்குத் திருப்தி அளித்திருக்கலாம். எனக்கு அளிக்க வில்லை. இவையெல்லாம் பிற்கால நூல்கள். இவற்றிற்கு ஆதாரமான,மூலமான நூல்களைப் படித்துள்ளீர்களா? சீவக சிந்தாமணி படித்துள்ளீர்களா?'



Center for Shaiva Studies, Pondicherry Collection

C00. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'இல்லை. நூல் கிடைக்கவில்லை. கிடைத்தால் கண்டிப்பாய்ப் படிப்பேன்.'

'இந்தாரும். அந்நூலின் நகல். படித்துப் பாரும்.'

பிள்ளை அவர்களிடம் கற்றதை ஒரு பொருட்டாக மதியாமல், அனேக தமிழ் நூல்களை ஆழமாகக் கற்றிருந்தும் அவற்றில் திருப்தி அடையாமல்,மதிக்காமல் இவ்வாறு தூக்கிஎறிந்து முதலியார் பேசிவிட்டாரே என்ற வருத்தம் எழுந்தது.

இந்த சிறிய நிகழ்வு உ.வே.சா அவர்களின் வாழ்வில் ஏன் தமிழ் இலக்கிய வரலாற்றின் போக்கில் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது.

எப்படி ?

"கற்றது எல்லாமும் கல்வியா ? பிள்ளையிடம்
பெற்றது எல்லாம் அறிவாமோ ? நற்பெருங்
காப்பியம் கற்காது பாடம் படிப்பது
ஒப்புமோ கற்றவர் முன்னே."

✿✿✿✿✿

சீவக சிந்தாமணி காப்பியத்தின் நகலைப் பெற்றுக் கொண்டார் உ.வே.சா. நச்சினார்க்கினியர் உரையுடன் படிக்கத் தொடங்கினார். பல இடங்களில் பொருள் விளங்கவில்லை. அந்நூல் சமணமதக் கோட்பாடுகளைக் கொண்டிருந்ததால் சமணமதத்தைப் பின்பற்றுவர்களை சென்றடைந்து ஐயங்களைத் தீர்த்துக் கொண்டார். ஒருசொல் புரியாவிட்டாலும் தகுந்தவர்களை அணுகி விளக்கம் பெற்றார். தாமே சீவகசிந்தாமணிக்கு உரை எழுத ஆரம்பித்தார். இந்த உரையினைப் படிப்பவர்கள் பொருள் தெரியாது தடுமாறக் கூடாது என்பதில் உறுதியாய் இருந்தார்.

அந்தக் காலத்தில் எத்தகைய வாகன போக்குவரத்து வசதிகள் இல்லாதபோதும் கூட கால்நடையாகவே பலநூறு மைல்கள் நடந்தார். தேவையான விடுபட்ட சுவடிகளைத் தேடி 'நள்ளிருளோ, கொள்ளு பகலோ,குறிக்கும் கடுமழையோ, அள்ளு பிணியோ, அவதியோ, உள்ளம் தடுக்கும் பகைகள் எதுவரினும், தள்ளிஅடுக்கும் தமிழ்ச்சுவடி தேடிக்கொடுக்கும் தரணிபுகழ்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



தமிழ்தாத்தாவாக' விளங்கினார்.

இப்பணியில் ஏராளமான பொருட்செலவு, மன உளைச்சல், உடல் அசதி, கடின உழைப்பு ஏற்பட்டாலும் உற்சாகத்துடனேத் தம்பணியில் ஈடுபட்டார்.

இந்நிலையில் கும்பகோணத்திலிருந்து சென்னைக்குப் பணிமாறுதலில் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. தலைமை ஆசிரியர் பவர்துரை, தியாகராஜசெட்டியார் மற்றும் ஆதினம் சுப்பிரமணிய தேசிகர் ஆகியோர் சீவகசிந்தாமணி தொடர்பான சில பிரதிகளைக் கொடுத்து உதவினார்கள். மேலும் சில பிரதிகளைத் தேடியபோது தஞ்சாவூரில் விருசபதாச முதலியாரிடம் இருப்பதாகத் தெரிந்து கொண்டார். அவரை நேரில் சந்தித்துப் பிரதிகளைக் கேட்டபொழுது, 'சமணர்களுக்கு மட்டுமே இப்பிரதிகளை வழங்குவேன். ஏனையோர்க்கு அல்ல' என்று மறுத்து விட்டார். சில சமண நண்பர்களை உடன் அழைத்துச் சென்று, அவர்கள் சிபாரிசின் அடிப்படையில் அப்பிரதிகளைப் பெற்றார். இவ்வாறு பல இடங்களில் அலைந்து, அறிஞர்களைத் தேடித்தேடிச்சென்று சந்தித்தார். அவர்களில் சிலர் சீவக சிந்தாமணி நூல் வடிவம் பெறுவதற்கு முன்பணம் கொடுத்து உதவினர்.

தமிழ் அறிஞர் சி.வை.தாமோதர முதலியார் அவர்களைச் சந்தித்தபொழுது அவர் கூறினார் : 'இந்த முயற்சியை நீங்கள் கைவிட்டு விடுங்கள். நானே சீவகசிந்தாமணியைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். உங்களிடமுள்ள ஓலைச்சுவடிகளை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள். நூலைப் பதிப்பிக்க செலவு அதிகம் ஆகும். என்னிடம் பொருள் உள்ளது. மிக எளிதாக, விரைவில் பதிப்பித்து நூலை வெளியிட்டு விடுவேன்.'

உ.வே.சா அவர்கள் இதற்கு ஒப்பவில்லை. ராமசாமி முதலியாரும் 'இப்பணியை தாமோதரம்பிள்ளையிடம் உங்கள் குறிப்புகளைக் கொடுத்து விடுங்கள். நிதி திரட்டுவது உங்களுக்கு மிகக் கடினமான பொறுப்பாகும்' என்றார். புரசைவாக்கம் அஷ்டாவதானம் சபாபதி முதலியார் அவர்களும் இக்கருத்தையே வெளியிட்டுத் தளர்வூட்டினார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'நான் ஏன் பதிப்பிக்கக் கூடாது? அந்த நூலையும், உரையையும் பலமுறை படித்து ஆராய்ந்துள்ளேன். அதற்கு ஆதாரமான பல சுவடிகளையும் சேகரித்துள்ளேன். யார் தடுத்தாலும் என் முயற்சியை நிறுத்திக் கொள்ளக் கூடாது என்ற முயற்சி என்னிடம் உள்ளது' என்று பதிலுரைத்தார்.

நூலை அச்சில் ஏற்றும் பொழுது உ.வே.சா அவர்கள் ஒய்வு ஒழிவில்லாமல் உழைக்க வேண்டியதாயிற்று. அவரின் இம்மாபெரும் பணி நல்லவிதமாக முடிய சோடசவதனம் சுப்புராய செட்டியார், வேலுச்சாமி பிள்ளை, திருமானூர் கிருஷ்ணையர் மற்றும் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் (ராஜாஜி) ஆகியோர் (Proof Readerகளாய் இருந்துள்ளனர்.) உறுதுணையாய் இருந்தனர். இவர்கள் இரவு முழுவதும் கண்விழித்து, கையெழுத்துப் பிரதிகளைப் படித்து, பிழை திருத்தம் செய்தனர்.

நூலை அச்சிடுவதற்குத் தனிப்பட்ட முறையில் வந்த இடையூறுகள் அல்லாமல், அச்சுநகல்களைத் திருட முயற்சிகள் நடைபெற்றன. இந்த முயற்சியை ராஜாஜி மற்றும் வேலுசாமிப்பிள்ளை ஆகியோர் முறியடித்தனர். சீவகசிந்தாமணி நூல் மிகச் சிறந்த முறையில் வெளியிடப்பட்டது. வாசகர் நலன்கருதி பல அரிய செய்திகளை, குறிப்புகளை, தகவல்களைக் கொடுத்துப் பெரும் புரட்சியை ஏற்படுத்தினார். முதல் பிரதியை, இந்நூல் வெளிவர வித்திட்ட ராமசாமி முதலியாரிடம் வழங்கினார். அவர் அடைந்த ஆனந்தம் அளவிட முடியாதிருந்தது.

சுப்பிரமணிய தேசிகர் தம் மகிழ்ச்சியை வாழ்த்துகள் மூலம் வெளியிட்டார்.

அடுத்து ஆநந்தருத்ரேசர் வண்டுவிடுதூது, மயிலை அந்தாதி, சிலப்பதிகாரம், ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெருங்கதை, எட்டுத்தொகை, மணிமேகலை, சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் என 90 நூல்களைப் பதிப்பித்தார். சுமார் 3000 ஒலைச்சுவடிகள் அச்சில் ஏறின. ஒலைச்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



சுவடிகளை அழிவில் இருந்து காத்ததுமட்டுமென்றி, அவற்றிற்கு நூல் வடிவம்கொடுத்து அடுத்த தலைமுறையினர் அறிந்து கொள்ள வழிவகுத்தார்.

வறுமையில் பிறந்து, வறுமையில் வாழ்ந்து, தமிழை வளம்பெறச் செய்தவர், வறுமையிலேயே மறைந்தார்.

பழைய நூல்களைப் பதிப்பித்துத் தமிழ்த் தொண்டாற்ற வேண்டும் என்ற குறிக்கோளைத் தவிர வேறெதையும் உ.வே.சா தம் வாழ்நாளில் சிந்தித்ததே இல்லை. 28.05.1942ல் திருக்கழுக்குன்றத்தில் தன் இறுதிமூச்சை விடுத்து, தமிழ்த்தாயின் பாதங்களை அடைந்தார்.

தமிழ் அன்னைக்கு அணிசேர்த்தவர்களில் உ.வே.சா முதன்மையானவர். அவரது அரும் முயற்சி இல்லாதிருந்தால் பல தமிழ்க் கருவூலங்கள் காலத்தால் அழிந்திருக்கும். சிந்தனைத் தெளிவும், விடாமுயற்சியும், தொலைநோக்குப் பார்வையும், எத்தனை இன்னல்கள் வந்தாலும் எண்ணியதை முடிக்கும் துணிவும், தமிழின் மேல் கொண்ட தீவிர ஈடுபாடும் அவரது சாதனைக்குத் துணை நின்றன.

இத்தனை சிறப்புகளைப் பெற்றிருந்த தமிழ்தாத்தா உ.வே.சா அவர்கள் தம் ஆசான்களாய், வழிகாட்டிகளாய் மூவரைப் போற்றி வணங்கினார். அவர்கள் : மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள், திருவாடுதுறை ஆதினகர்த்தர் சுப்பிரமணிய தேசிகர், மஹாசந்நிதானம் ஆகியோர்.

இனி சப்தஸ்தான கும்பாபிஷேக ஏற்பாடுகள் எவ்வாறு இருந்தன ? இதன் உச்சகட்ட சிறப்பு என்ன ?

"எட்டுத் தொகைபத்துப் பாட்டென்று யாருக்கும்
எட்டாக் கனியாய் இருந்ததோர் நூல்களாவும்
யாவரும் கற்றிடும் வண்ணமே அச்சிலேற்றி
பாமரரும் கற்றுயர்ந்தார் காண்."



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்வாமிகள் காசி, சென்னை ஆகிய நகரங்களுக்குச் சென்று அன்பர்கள் அளித்த தொகையை திருவாடுதுறை ஆதினம் அவர்களிடம் கொடுத்தார். கூர்ஜர பிராமணர்கள் காணிக்கையாக அளித்த 'கௌரி சங்கர மாலை'யை அணிந்து கொண்டார் அருளாசி வழங்கினார்.

திருவையாறு, திருசோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருநெய்த்தானம், திருப்பூந்துருத்தி, திருப்பழனம் ஆகியவை சப்தஸ்தானங்களாகும். இவற்றுடன் திருமழபாடி க்ஷேத்திரத்திற்கும் குடமுழுக்கு நடத்த வேண்டும் என ஆதினம் அவர்கள் தன் சித்தத்தைத் தெரியப்படுத்தினார்:

'குடமுழுக்கு ஒவ்வொரு கோயிலிலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படவேண்டிய ஒருமுக்கிய ஆன்மிகச் சடங்காகும். இதன்மூலம் உள்ளிருக்கும் கடவுள் சிலைகளின் தெய்வீகத்தன்மை புதுப்பிக்கப்படுகிறது. புனித ஆறுகளின் நீர் நிரம்பப் பெற்ற குடங்கள் மந்திர உச்சாடனங்களின் மூலம் தெய்வத்தன்மை பெறுகின்றன. இத்தகைய தெய்வத்தன்மை நிரம்பிய நீரால் அபிஷேகம் செய்யப்பட்ட தெய்வச் சிலைகளும், உச்சியில் இருக்கும் கலசங்களும் தெய்வத்தன்மையைப் பெறுகின்றன. எனவேதான் குடமுழுக்கு செய்யப்பட்ட கோபுரங் களைத் தரிசிப்பதே கோடி புண்ணியம் தரும் என்று கூறுகிறோம். சப்தஸ்தானக் கோயில்களுக்கும் மற்றும் திருமழபாடி கோயிலுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்று பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. இப்பொழுதே முயற்சி செய்தால்தான் இன்னும் சிலமாதங்களில் இவ்விழாவை நடத்த முடியும். எவ்வித இடையூறுமின்றி குடமுழுக்கு ஒரே நாளில், ஒரே முகூர்த்தத்தில் நடைபெற மஹாசந்நிதானம் அவர்கள் அருள்புரியவேண்டும்.'

கும்பாபிஷேகம் ஆவர்த்தம், அனாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம் என்று நான்குவகைப்படும். இந்தக் கோயில்கள் அனைத்தும் புனராவர்த்தம் வகையில் சேர்கின்றன.கருவறை,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிரகாரம், கோபுரம், தெய்வச்சிலைகள் பழுதுபட்டிருந்தால் பாலாலயம் செய்து அவற்றைப் புதுப்பித்து, வர்ணம் தீட்டி கும்பாபிஷேகம் நடத்துவது புனராவர்த்தனம் ஆகும்.

இத்தனை திருக்கோயில்களுக்கும் ஒருசேர கும்பாபிஷேகம் நடைபெறுவதைக்காண பத்தமடையிலிருந்து குப்பாணிசிவம், ஜானகி அம்மாள் ஆகியோரும் மற்ற சீடர்களும் வந்து சேர்ந்தனர்.

எட்டு ஆலயங்களிலும் மந்திர ஜபங்களோடு, கும்ப ஜபம், அரச்சனை, தீபகற்ப நிவேத்தியம் மற்றும் வைதிகச் செயல்களும் பங்கமில்லாது நிறைவேற ஒவ்வொரு சீடர்களுக்கும் பொறுப்புகளை ஆதினம் அவர்கள் பகிர்ந்தளித்தார். அந்த அந்த ஆலயங்களைக் கண்காணிக்கவும், செலவுகள் முறையோடு தடையன்றி நடைபெறவும், எந்தத்தக் கோயில்களில் என்னென்னத் திருப்பணிகள் நடைபெற வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பும் இந்த சீடர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

எவரெவருக்கு எந்தக் கோயிலின் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன ?

“ஏழுடன் ஒன்று இணைத்துமே எட்டாய்
அழகுடன் ஆலயக் கும்ப அபிஷேகம்
பாங்குற நன்றாய் நடந்திட அன்பர்கள்
ஆங்கே விரைந்தனர் காண். ”

சப்தஸ்தான மற்றும் திருமழபாடி ஆலயங்களுக்கு மிகப் பிரம்மாண்டமான அளவில் குடமுழுக்கு நடத்த தீர்மானிக்கப் பட்டது. ஏற்பாடுகள் முழுமூச்சாக நடைபெற்றன.

திருவையாறு ஆலயங்களுக்குப் பொறுப்பு குப்பாணிசிவம், ராமசாமி சிவன்,வைத்தியநாத சிவன் ஆகியோர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

திருச்சோற்றுத்துறை ஆலயத்திற்கு மாவடி சிதம்பரம்பிள்ளை, நாராயணசிவம் ஆகியோரும்,

திருவேதிகுடி ஆலயத்திற்கு ரங்கநாதசிவன், சதாசிவதருவடியார், கிருஷ்ண தருவடியாரும்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருக்கண்டியூர் ஆலயத்திற்கு சேஷாசல தீக்ஷிதர், ராமச்சந்திர மேத்தா,

ஆவுடையப்பபிள்ளையும், திருப்பூந்துருத்தி ஆலயத்திற்கு ராமசாஸ்திரிகள்,பிச்சி சாமி (திம்மராஜபுரம் சிவஸ்வாமிகள்), சுப்புராயசிவன் ஆகியோரும்,

திருப்பழனம் ஆலயத்திற்கு ராமுபாகவதர்,ராமஸ்வாமி சாஸ்திரிகள், அப்பு நாயக்கரும்,

திருநெய்த்தானம் ஆலயத்திற்கு ஸ்ரீகிருஷ்ணய்யர்,

காமாக்ஷிஜோஸியர், சூரியநாராயண சிவன் ஆகியோரும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

அனைத்து ஆலயங்களுக்கான வரவு செலவு கணக்குகளைப் பரிசீலனை செய்யும் பெரும்பொறுப்பு சிவராமன் செட்டியார் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

மஹாசந்நிதானம் அவர்கள் கும்பாபிஷேகத்தில் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தாரோ அந்த அளவு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவதிலும் கவனம் செலுத்தினார் என்பதை முன்னரே பார்த்துள்ளோம்.

இந்த எட்டு ஸ்தலங்களில் கும்பாபிஷேக வேலைகளில் ஈடுபட்டிருந்த அனைத்து ஊழியர்களுக்கும், ஊர்மக்களுக்கும் அன்னதானம் வழங்க மிகச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஜானகி அம்மாள் வையைச்சேரியில் தங்கி இருந்து விழாவில் பங்குபெற வந்திருந்த வேதவிற்பன்னர்கள், வித்வான்கள், அவர்களின் சீடர்களுக்கு அறுசுவை உணவு சமைத்துப் பரிமாறுவதில் பேரின்பம் அடைந்தார்.வேதவிற்பன்னர்களும், வித்வான்களும் இத்தகைய மாபெரும் நிகழ்வில், இதுவரை நடைபெற்றிராத உற்சவத்தில் கலந்து கொள்வதைப் பெரும் பாக்கியமாகக் கருதினர். சிவன் சகோதரர்கள் கும்பாபிஷேக விழாவில் பங்குபெற வந்த வித்வான்கள் மகிழ்ச்சி அடையும்படி அனைவருக்கும் நிகழ்ச்சிகளைப் பகிர்ந்து அளித்தனர்.

கும்பாபிஷேகத்திற்கு முன்னரே இத்தனை மக்கள் கூடிவிட்டதால் செலவினம் மிக அதிகமானது. ஒரு மாபெரும் சக்கரவர்த்தியால்கூட எண்ணிப்பார்க்க முடியாத பிரம்மாண்டமான ஏற்படுகளை ஒரு கோவணான்டி செய்வது எவ்வளவு பெரிய



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சாதனை என்பது சிந்தித்துப் பார்ப்பவர்கள் தெரிந்து கொள்வார்கள்.

பொதுப்பணம் என்பதால் மிகக் கட்டுப்பாட்டுடன் செலவு செய்தாலும் கையிருப்புக் கரைந்து வருவது

சிவராமன் செட்டியார் அவர்களுக்குக் கவலையைத் தோற்றுவித்தது.

கிருஷ்ண ஐயர் அவர்களிடம் தம் கவலையைத் தெரிவித்தார்.இருவரும் வைத்தியநாத சிவன் அவர்களை சென்றடைந்து பொருளாதார நிலைமையை எடுத்துக் கூறினார்கள்.

அவர், 'மஹாசந்நிதானம் அவர்களிடம் சொல்லி ஆலோசனை கேட்போம்' என்றார். திருவையாறு கோயிலில் கும்பாபிஷேகப் பணிகளை மேற்பார்வை செய்துகொண்டிருந்த ஸ்வாமிகளை அணுகி நிலைமையைப் பணிந்து கூறினர்.

இவர்கள் கூறியதைப் பொறுமையுடன் கேட்ட மஹாசந்நிதானம் அவர்கள் அடுத்துச் செய்தது அவர்களுக்கு மட்டுமல்ல,அங்கிருந்த அனைவருக்கும் அதிர்ச்சியூட்டியது.

அப்படி ஸ்வாமிகள் என்ன செய்தார்?

"வேதமோதும் விற்பன்னர் நல்லிசை கற்றங்கே
கானம் இசைத்திட வந்தவர் மற்றங்கே
வாத்திய விற்பன்னர் எல்லோரும் சீரடி
போற்றியே வந்தனர் அங்கே"

பண்டைய காலங்களில் ஆலயங்களை மையமாக வைத்தே ஊர்கள் அமைந்தன.கோயில்களால் பிரபலமான ஊர்கள் பலப்பல. ஆன்மீகம் மட்டுமன்றி பல ஊர்களின் பொருளாதாரம் கோயில் களை வைத்தே வளர்ந்தன. கோயில்களைக் கட்டும் போதும், கட்டி முடித்த பிறகும் பலருடைய வாழ்க்கை ஆலயங்களைச் சுற்றியே அமைந்தன; இன்றும் அவ்வாறேதான்.

புதிதாக ஆலயங்கள் எழுப்பி முதல் கும்பாபிஷேகம் நடந்த பிறகு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடத்த வேண்டும்.

கும்பாபிஷேகத்திற்கான விதிமுறைகளை வாமதேவர் எழுதியுள்ளார். சிவபெருமானின் ஐந்து முகங்களில், வலது கைப்புறம் இருப்பவர் வாமதேவர். முருகப் பெருமானுக்கு சிவன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கும்பாபிஷேக தத்துவங்களை விரித்துரைக்கிறார். அதை வாமதேவர் உலகத்திற்குத் தெரியப்படுத்துகிறார்.

இவர் வேதகால ரிக்வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முனிவர். இவர் கௌதம முனிவரின் புதல்வர்.

'கோயிலை வேதசாஸ்திர முறைப்படி கருங்கற்களைக் கொண்டு கட்ட வேண்டும். அதில் யந்திர ஸ்தாபனம் செய்ய வேண்டும். தெய்வத் திருவுருவங்களை அங்கேபிரதிஷ்டை செய்ய வேண்டும்.

கோயில் கும்பாபிஷேகம் நான்கு வகைப்படும்.

ஆவர்த்தம் : ஓரிடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து, மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்யப்படுவது.

அனாவர்த்தம் : பல ஆண்டுகள் பூஜைகள் இல்லாமலும், இயற்கையின் சீற்றங்களால் சிதலமடைந்திருந்தாலும், அக்கோயிலைப் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்வது.

புனராவர்த்தனம் : கருவறை, பிரகாரம்,கோபுரம் முதலியன பழுதுபட்டிருந்தால் பாலாலயம் செய்து அவற்றைப் புதுப்பித்து, அஷ்டபந்தனம் சார்த்தி, விக்ரஹங்களைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வது.

அந்தரிதம் : கோயிலுள் ஏதேனும் தகாதன நேர்ந்து விட்டால் அதன்பொருட்டு செய்யப்படும் சாந்தி.

மிகவும் சிதிலமடைந்த கோயில்களை மீண்டும் புதுப்பித்துக்கட்டி கும்பாபிஷேகம் செய்ய வேண்டும். அதன்பிறகே நித்திய அபிஷேகங்கள், பூஜைகள் செய்யப்பட வேண்டும். அப்படிப் புனர்நிர்மாணம் செய்யும் பொழுது தெய்வ விக்ரகங்களைப் பாதுகாத்தும், நித்திய பூஜைகள் தடைபெறாமல் நடைபெறவும் செய்யப்படும் சம்பிரதாயமே பாலாலயம் ஆகும். ஜீர்ணோத்தாரண, புனருத்தாரண கும்பாபிஷேகங்களின் பொழுது ஆலயங்களில் உள்ள மூர்த்தங்களின் சாந்நித்தியத்தை அத்திப்பலகையில் உருவம் வரைந்து அதன்மீதோ அல்லது உற்சவ விக்ரகத்தின் மீதோ மாற்றுவார்கள். இதை 'இளங்கோயில்' என்பார்கள். அதற்கு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



நித்தியப்படி பூஜை நடத்த வேண்டும். இவ்வாறு ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள தெய்வங்களின் சாந்நித்தியத்தை அத்திப் பலகையின் மீதோ, உற்சவ விக்ரகங்களின் மீதோ மாற்றுகிறது நிகழ்வினை 'பாலாலயம்' அல்லது 'பாலஸ்தாபனம்' என்று சொல்வார்கள். இந்த நிகழ்வும் சிறிய கும்பாபிஷேகம் போன்றே நடைபெறும். பாழடைந்த அல்லது உரிய காலத்தில் கும்பாபிஷேகம் நடைபெறாத கோயிலில் பூஜை செய்தால் ஊருக்கு, உலகிற்குத் தீங்கு உண்டாகும்.

பாலாலயம் செய்து, திருப்பணி முடிந்த பின்னர் அனைவரின் ஒத்துழைப்புடனும் கும்பாபிஷேகம் செய்தால் இடையில் நிகழ்ந்த பூஜை குறைபாடுகள் நீங்கிவிடும். ஊருக்கும் நன்மை ஏற்படும்...' என்று கும்பாபிஷேக விதிகளையும்,அது எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்ற சம்பிரதாயங்களையும் வாமதேவர் மேலும் விளக்குகின்றார்.

இந்தவிதி முறைகளில் ஏற்பட்ட சிறிய நழுவலே நிதிப்பற்றாக் குறைக்குக் காரணம் என்பதைத் திருஷ்டியில் உணர்ந்தார் மஹாசந்நிதானம் அவர்கள். உடனே செயலில் இறங்கினார். அதுவே அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்தது.

ஸ்ரீஸ்வாமிகளின் செயலால் அக்குறை தீர்ந்ததா?

"குறைகளற்ற எங்கள் பெருமான் நடந்த
குறையொன்றை கண்டான் அதனை உடனே
அகற்றி செயலில் இறங்கியே அன்பர்
முகங்கள் மலரவே செய்தான்."

எழுபது ஆண்டுகளுக்கு முன்புவரை ஆடவர்களில் மிகப்பலர் (எந்த ஜாதி, இனமாயினும்)கச்சம் வைத்துதான் வேஷ்டி கட்டிக் கொள்வார்கள். தோளில் உத்தரீயம் என்கின்ற அங்கவஸ்திரத்தை அணிந்து கொள்வார்கள்.

ஸ்வாமிகள், கிருஷ்ணய்யர் அணிந்திருந்த உத்தரீயத்தை இழுத்து எடுத்துக் கொண்டார். எவருடனும் பேசாமல் விடுவிடு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



என்று ஆட்கொண்டார் சந்நிதி அமைந்துள்ள தெற்குவாசல் பக்கம் வந்தார். வாசலில் அமர்ந்தார். துண்டை விரித்துப்போட்டார். ஸ்வாமிகளைப்பற்றி அதிகம் தெரியாத சிலர் யாரோ ஒரு பிச்சைக்காரன் சாலையில் அமர்ந்து பிச்சை எடுக்கிறான் என நினைத்து தம் கையிலிருந்த சில தம்படிகளைப் போட்டனர். ஸ்வாமிகளை அறிந்தவர்கள் 'இவ்வளவு பெரியமகான் துண்டை விரித்து பிச்சை எடுக்கிறார்' என்பது அறிந்து பதறி ஓடிவந்தனர்.

எதற்காக இந்த நிலைமை ? என்று அறியாமலேயே சிலர் தாங்கள் அணிந்திருந்த விலைமதிப்பற்ற நகைகளை அந்தத் துண்டில் சமர்ப்பித்தனர். வேறுசிலர் பொன்காசுகளைப் பணிவன்புடன் வழங்கினர். சீடர்கள் வாய்மூடி அனைத்தையும் கவனித்து வந்தனர். மஹாசந்நிதானம் எதற்காக இப்படிச் செய்கிறார் என்று புரிந்து கொண்டனர். ஆனால் வாய்திறந்து யாரும் எதுவும் கேட்கவில்லை.

மக்களும் எதைப்பற்றியும் யோசிக்காமலேயே வாரி வழங்கினர். சிலநாழிகைப் பொழுதிலேயே ஸ்வாமிகளின் எதிரே விரித்திருந்த துண்டு நிறைந்து விட்டது.

தர்மம் என்ற நீதி நெறி மக்களிடையே பரவலாக இருந்த காலம் அது. கொடையுள்ளம், கருணை, தயை கொண்ட மக்கள் ஸ்வாமிகளைச் சுற்றி நின்று கொண்டு பொன்னையும், பொருளையும் வாரிவழங்கினர். இதுவரை மௌனமாய் இருந்த ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தார்:

"இந்த உலகத்தைத் தாங்கி நிற்கும் அச்சாணி தர்மம் ஆகும். அந்த தர்ம சிந்தனை உங்களிடையே நிறைந்து உள்ளது என்பதை இன்று இந்த உலகம் அறிந்து கொண்டது. தர்மம் என்பதே உண்மை;தர்மம் என்பதே சட்டம். இது மனித குலத்தின் தன்மையை உயர்த்துகிறது. தர்மம் செய்பவர்களை தர்மம் காப்பாற்றுகிறது. தர்மம் செய்தவர்களின் வாழ்க்கை வளமையாகவும், செழுமை யாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும். இந்த கும்பாபிஷேகத்திற்கு ராஜாக்களையும், ஆதினத் தலைவர்களையும், மிகப்பெரும் தனவந்தர்களையும் சந்தித்து பொருள் சேர்க்கப்பட்டது. ஒரு கும்பாபிஷேக நிகழ்வில் ஊர்மக்கள் பலரின் பங்களிப்பும் இருக்க வேண்டும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



இந்தப் புண்ணிய கைங்கரியத்தில் இயன்ற அளவு அனைவரையும் ஈடுபடுத்த வேண்டும்.

சமுதாயத்தைத் தாங்கி ஓரிழையில் ஒன்றிணைப்பதுவே தர்மம். உண்பது, உறங்குவது, பயம் போன்றவை மனிதனுக்கும், மிருகத்திற்கும் பொதுவானவை. மனிதனையும், மிருகத்தையும் வேறுபடுத்திக் காட்டுவது தர்மமே ஆகும். தர்மத்தைச் செய்யாதவனும், தர்மம் செய்யாமலேயே தர்மம் செய்ததாய்க் காட்டிக் கொள்பவனும் மிருகமே.

மக்கள் ஒருவரை ஒருவர் தர்மத்தினாலேயே காத்துக் கொள்கின்றனர். (இது ஒரு முக்கியமான, பொருள் பொதிந்த கருத்து. ஸ்வாமிகளின் இந்தக் கருத்திற்கு விரிவுரை எழுதினால் மிக நீண்டுகொண்டே போகும்.)

சிவபெருமானின் உடுக்கை ஒலியின் ஒருபுறத்திலிருந்து எழுந்த சப்தமே 'தர்ம' என்பது. இன்று அந்த சர்வவியாபியான சர்வேஸ்வரனின் ஆலயங்களின் கும்பாபிஷேகத்திற்கு எளிய மக்கள் அனைவரும் மனம் உவந்து வாரிவழங்கி இருக்கிறீர்கள். இதைத்தான் அந்த ஈஸ்வரன் விரும்பினான். இனி கும்பாபிஷேக வேலைகள் தொடர்ந்து நடைபெறும். அனைவருக்கும் ஆசிகள்."

மஹாசந்நிதானத்தின் இந்த அருளுரைகளைக் கேட்டவர்களின் கண்களில் இருந்து – சீடர்கள் உட்பட – கண்ணீர் கரகரவென்றுப் பெருகி வழிந்தது. அனைவரும் தெருவென்றும் பாராமல் கீழே விழுந்து வணங்கினர்.

ஆதினங்கள் மற்றும் சீடர்களிடம் கும்பாபிஷேகத் தேதியைக் குறிப்பிட்டார்.

அவர்கள், இவ்வளவு குறுகிய காலத்திலா என வியந்தனர். திருப்பணிகளை விரைந்து பூர்த்தி செய்ய முடியுமா என்று சிறிது ஐயமும் கொண்டனர்.

மஹாசந்நிதானம் அவர்கள் கும்பாபிஷேகத்திற்குக் குறித்த நாள் எது ?

"அரசர்கள் ஆதினங்கள் மற்றும் அருள்சேர்
தரமிகு பண்ணைகள் அன்புடன் தந்த
பொருளெல்லாம் போதாது துண்டை விரித்தே
அருளாளன் சேர்த்தான் பணம்."



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அங்கு கூடியிருந்த மக்கள் சப்தஸ்தானங்கள் மற்றும் திருமழபாடி ஆகிய திருக்கோயில்களுடன் மேலும் மூன்று கோயில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்தித் தரும்படி வேண்டினர். திருத்திங்களூர், திருக்கடுவெளி,திருப்பெரும்புலியூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் ஊர்களின் ஆலயங்களுக்கும் சேர்த்துக் கும்பாபிஷேகம் நடத்தித்தர வேண்டுகோள் வைத்தனர். அதற்குண்டான செலவிற்கான நிதியை வசூலித்துத் தர உத்தரவாதம் அளித்தனர். ஸ்வாமிகள் அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். வசூலான பொருளும், பணமும் சிவராமன் செட்டியார் பொறுப்பில் விடப்பட்டன.

இந்தக் கும்பாபிஷேகங்களுக்குத் தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் பணம் வசூல்செய்து அனுப்பினர். பல பக்தர்கள் தஞ்சை நகருக்கே வந்து கும்பாபிஷேகப் பணிகளில் உதவி செய்தார்கள். தஞ்சை மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த மக்களும், வைதிகப் பயிற்சி உடைய தீக்ஷிதர்களும், கனபாடிகளும் வந்திருந்து இரவு பகலாக உழைத்தனர்.அனைத்து ஏற்பாடுகளும் மும்முரமாகவும், பிரம்மாண்டமாகவும் நடைபெற்று வந்தன.

அனைத்து ஊர்களிலும் பிரபல வித்வான்களின் கச்சேரிகள் நடைபெற்றன. புகழ்பெற்ற நடனமணிகளின் நாட்டிய நிகழ்ச்சி களில் ரசிகர்கள் குவிந்தனர். தேவார இன்னிசை அனைத்துக் கோயில்களிலும் தேமதுரமாய் ஒலித்தன. நாதஸ்வர ஓசை சுநாதமாய் காற்றில் மிதந்து வந்தது. இந்தக் கலைஞர்கள் அனைவரும் அவரவர் துறையில் சிறந்து விளங்கியவர்கள்.

வாணவேடிக்கைகள் வானத்தில் வர்ணஜாலங்கள் காட்டின.

கொல்லம் 1047–ம்வருஷம் ஆங்கிரச வருஷம் வைகாசி மாதம், 1872–ம் ஆண்டு ஒரு நன்னாளில் திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம், திருப்பெரும்புலியூர், திருமழபாடி, திருத்திங்களூர், திருக்கடுவெளி ஆகிய கோயில்களுக்கு அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடத்தப்படும் என மஹாசந்நிதானம் அறிவித்தார். அதேவருஷம் ஆனிமாதம் 3–ம் தேதி திருக்கண்டியூர் ஆலயத்திலும், ஆனி மாதம் 9–ம் தேதி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



திருவையாறு திருக்கோயிலிலும் கும்பாபிஷேக நடத்த உத்தரவளித்தார். மிகக் குறைந்த கால இடைவெளியில் அனைத்துத் திருப்பணிகளும் பூர்த்தி ஆகவேண்டுமே என்ற கவலையும் அன்பர்களுக்கு இருந்தது. 'எல்லாவற்றையும் ஸ்வாமிகள் பார்த்துக் கொள்வார்' என்ற நம்பிக்கையும் இருந்தது.

சுமார் ஒரு லக்ஷம் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட வேண்டும் என்று ஸ்வாமிகள் கட்டளை இட்டார். 'விழாவிற்கு வரும் அதிதிகளுக்கு தங்க இடம் அளித்து அமுது படைத்து விருந்தோம்பும் மனுஷ யக்ஞத்தை ஸ்வாமிகள் வலியுறுத்திக் கூறினார். அவர்களை இறைவனாகக் கருதிப் போற்ற வேண்டும். ஏனெனில் அன்னதானம் என்பது பிரதிபலனை எதிர்பாராத அன்பினால் உருவாவது. அது உலகையே ஒரு குடும்பமாகக் கருதி அன்பு செய்வதாகும். இதுவே நமது பண்பாடு. பஞ்ச யக்ஞங்களில் ஒன்று இந்த மனுஷ யக்ஞம். இந்த பஞ்ச யக்ஞங்களைப் பின்பற்றுவதே ஆன்மிகம் ஆகும். ஆன்மிகம் நம் வாழ்விலிருந்து வேறுபட்ட ஒன்றில்லை. அனைத்திலும் இறைவனைக்கண்டு அனைத்தையும் இறைவனாக வணங்குவதே நமது தர்மம்' என்பதை வலியுறுத்திக் கூறினார்.

மஹாசந்நிதானத்தின் இந்த உத்தரவை சிரமேற்கொண்ட ஆதினகர்த்தர்களும், பொதுமக்களும் ஸ்வாமிகளைப் பணிந்து ஒரு அசாத்தியமான வேண்டுகோளை வைத்தனர்.

அது என்ன வேண்டுகோள் ?

"துண்டை விரித்தார் துவண்டனர் அன்பர்கள்
பண்டைய கோயில்கள் கும்ப அபிடேகம்
நன்றாய் நடந்திட பொன்னை அளித்தனர்
குன்றாய் விளங்கிய மக்கள்."

நாதஸ்வரக் கலைஞர்கள் தஞ்சைத் தரணி முழுவதும் பரவி இருந்தனர். அவர்கள் அனைவரும் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள போட்டி போட்டுக் கொண்டு வந்தனர். அன்றைய காலத்தில் நாதஸ்வரக் கலைஞர்கள் 'கச்சேரி வாசிக்கப் போகிறேன்' எனக்கூற மாட்டார்கள். 'சேவைக்குப் போகிறேன்' என்று அடக்கத்துடன் கூறிக்கொள்வார்கள். அத்தகைய



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நாதஸ்வரக் கலைஞர்களான சாவேரி கீழ்வேளூர் கந்தசாமிப் பிள்ளை, கோட்டை சுப்பராயப் பிள்ளை, கூறைநாடு நடேசபிள்ளை, மன்னார்குடி சின்னப்பக்கிரி, திருவாரூர் சாமிநாதபிள்ளை, ஆண்டிக் கோயில் கருப்பையா பிள்ளை, செம்பனார் கோயில் சகோதரர்கள் மற்றும் யாழ்ப்பாணம், திருப்பாம்புரம்,கீரனூர் கலைஞர்கள் என்று தலைசிறந்த நாதஸ்வரக் கலைஞர்கள் ‘சேவை’ செய்யக் காத்திருந்தனர்.

அதுபோன்றே பெயர் பெற்ற தவில் வித்வான்களும் வந்திருந்தனர். தவில் நாதஸ்வரத்தைவிட காலத்தால் முந்தியது. 17–ம்நூற்றாண்டில்தான் நாதஸ்வரம் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் 15–ம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் திருப்புகழில் 12–இடங்களில் தவில் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

கர்நாடக இசைக்கச்சேரிகளில் பிரதான பாடகர்தான் முதலில் தொடங்குவார். பக்கவாத்தியம் பின்தொடரும். வயலின், புல்லாங்குழல், வீணை போன்ற வாத்தியங்களின் தனிக் கச்சேரிகளிலும் அந்தந்த வாத்தியங்கள்தான் முதலில் தொடங்கும்.

நாதஸ்வரக் கச்சேரிகளில் நாதஸ்வரம்தான் பிரதான வாத்தியம்; தவில் பக்க வாத்தியம். ஆனால் நாதஸ்வரக் கச்சேரி தொடங்கும் பொழுது முதலில் தவில் வாசிப்போடுதான் தொடங்கும். இது தவில் வாத்தியத்தின் தனிச் சிறப்பு.

நீடாமங்கலம், திருமுல்லைவாயில், கும்பகோணம், திருநகரி, நாச்சியார் கோயில், யாழ்ப்பாணம், திருவாளப்புத்தூர், ஹரித்வாரமங்கலம், வலையப்பட்டி, அம்மாபேட்டை, அம்மாசத்திரம், மன்னார்குடி, திருக்கடையூர், வேதாரண்யம் ஆகிய ஊர்களி லிருந்து தவில் கலைஞர்கள் குவிந்த வண்ணம் இருந்தனர்.

அதைப்போன்றே பிரபல சங்கீதவித்வான்களும், விதூஷிகளும் பங்கு பெற்றனர். பட்டணம் சுப்ரமணிய ஐயர், நாமக்கல் நரசிம்ம ஐயங்கார், பெரிய வைத்தியநாத ஐயர், சின்ன வைத்தியநாத ஐயர், சேஷண்ணா, சாமண்ணா. சுப்பண்ணா, சுப்புகுட்டி ஐயர், வீணை சுப்பையர் இப்படிப் பல வித்வான்களும் ஒருங்கே கூடிவிட்டனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolka



கோவிலூர் மடாதிபதி சிதம்பர ஐயா அவர்களும் வந்திருந்து ஸ்வாமிகளுக்கு உறுதுணையாய் இருந்தார்கள்.

அனைத்துக் கலைஞர்களுக்கும் முறையாக ஆலய கும்பாபிஷேக நாட்களில் கச்சேரிகளுக்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. ஏழு ஊர்களுக்கு கும்பாபிஷேகம் ஒரேநாள், ஒரே முகூர்த்தம் குறிக்கப்பட்டது. அந்தந்த ஊர்ப் பிரமுகர்களும், ஆலய நிர்வாகிகளும், பொதுமக்களும், வித்வான்களும் தங்கள் தங்கள் ஊர் கும்பாபிஷேகத்திற்கு ஸ்வாமிகள் நேரில் கலந்து கொண்டு நடத்தி வைத்து அனுக்கிரகிக்க வேண்டும் என்று பணிந்து கேட்டுக் கொண்டனர். இதில் அவர்களுக்கிடையே போட்டி மனப்பான்மை இருந்தது.

அவர்கள் அனைவரும் ஸ்ரீஸ்வாமிகள் உரைத்த பதிலைக் கேட்டவுடன் மிக்க மகிழ்ச்சியும், பிறகு இது எப்படி சாத்தியம் என்று ஐயமும் கொண்டனர்.

அவ்வாறு மஹாசந்நிதானம் அவர்கள் என்ன கூறினார்?

"பல்துறை வித்தகர் ஆன்மீக விற்பன்னர்
நல்லவே கூறும் சிறந்த மடத்தின்
உயர்ந்தோர் அனைவரும் ஒன்றாகக் கூடி
உரைத்தனர் சாமிகள் முன்னர்."

திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருப்பெரும்புலியூர், திருமழபாடி, திருத்திங்களூர், திருக்கடுவெளி, திருநெய்த்தானம் ஆகிய ஏழு ஆலயங்களுக்கு அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் கொல்லம் ஆண்டு, ஆங்கிரஸ வருஷம் வைகாசி மாதம், 1872-ம் ஆண்டு ஜூன் மாதம் நடத்துவதெனத் தீர்மானித்ததை ஒட்டி அந்தந்த ஊர்ப்பொதுமக்களும், வித்வான்களும் மஹாசந்நிதானம் அவர்கள் கும்பாபிஷேகம் நடைபெறும் சமயத்தில் தத்தமது ஊருக்கு எழுந்தருளி நிகழ்ச்சியை நடத்தித்தர வேண்டுமென்று ஒருமித்த குரலில் வேண்டுகோள் வைத்தனர். ஸ்வாமிகள் புன்முறுவலுடன், ஒவ்வொரு ஊரினரிடமும் அவர்கள் ஆலயக் குடமுழுக்கு நடத்தித் தருவதாக ஒப்புதல் அளித்தார்.

பொதுமக்கள் முதலில் மகிழ்ச்சி அடைந்தனர். உடனேயே



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவர்களுக்கு ஐயமும் எழுந்தது. 'ஒரேநாளில், ஒரே முகூர்த்தத்தில், வேறுவேறு ஊர்களில் நடைபெறும் ஏழு கும்பாபிஷேகத்தில் எப்படி ஒருவர் கலந்து கொள்ள முடியும்?' ஆயினும் ஒருவருக்கும் வாய்திறந்து கேட்கும் தைரியம் இல்லை.

அஷ்டபந்தன கும்பாபிஷேக வேலைகள் வேதமுறைப்படி மிகச் சிறப்பாக செய்யப்பட்டு வந்தன. வித்வாம்சர்கள், கனபாடிகள், தீக்ஷிதர்கள், சாஸ்திரிகள், மாணாக்கர்கள், நகரத்தார்கள், பிரபுக்கள், ஆதினகர்த்தாக்கள் ஆகியோர் கலந்து கொள்ள சாரிசாரியாக வந்தனர்.

லக்ஷபிராமண போஜனத்திற்கும் ,அன்னதானத்திற்கும் மிக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.அன்னதானத்திற்கான காய்கறிகள், அரிசி முதலிய தானியங்கள், பழவகைகள் மலைபோல் குவிந்திருந்தன. வாழை இலைக்கட்டுகள் அடுக்கடுக்காய் இருந்தன. திருவையாறிலிருந்து கும்பாபிஷேகம் நடைபெறும் ஊர்களுக்குத் தேவைக்கேற்றபடி பொருட்கள் பிரித்து அனுப்பப்பட்டன.

இவ்வளவு பிரம்மாண்டமான நிகழ்வுகளுக்குப் பொறுப்புடன் அனைத்தும் செய்யப்பட்டிருந்தாலும் திருநெய்த்தானத்தில், குறிப்பிட்ட நேரத்தில் பந்தியில் பரிமாறத் தேவையான நான்கு குடங்கள் நெய் வந்து சேரவில்லை. பரிசாரகர்கள் கையைப் பிசைந்து கொண்டிருந்தனர்.

மேற்பார்வை செய்து கொண்டிருந்த உள்ளூர் பிரமுகர் பஞ்சநதேஸ்வர சாஸ்திரிகளிடம் விஷயத்தைக் கூறினர். அவர் க்ருஷ்ணய்யர், காமாக்ஷி ஜோசியர் ஆகியோரைத் தொடர்பு கொண்டு விபரத்தைத் தெரிவித்தார்.

அனைத்துப் பொருட்களும் திருவையாற்றில் மொத்தமாக சேகரிக்கப்பட்டு ஏழு ஊர்களுக்கும் பிரித்து அனுப்பப்படும் என்பதால் அங்கே சென்று எடுத்துவரத் தீர்மானித்தனர். நெய்யாடியப்பர் ஆலயம் சென்று தொழுது, வந்துள்ள இடரை விரைந்து தீர்க்க வேண்டினர்.

அன்னதானத்திற்கு இலைபோடும் நேரம் நெருங்கிக்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolka



கொண்டிருந்ததால் திருவையாறு சென்று நெய்க்குடங்கள் எடுத்துவர ஒருமாட்டு வண்டியில் மூவரும் புறப்பட்டனர்.

நேராக அனைத்து கணக்கு வழக்குகளையும், பொருட்களின் இருப்பு விபரங்களையும் விரல் நுனியில் வைத்திருந்த அரிமழம் சிவராமன் செட்டியாரை அணுகி விபரத்தைத் தெரிவித்தனர். திருநெய்த்தானத்திற்குக் கொடுத்தனுப்ப கால்வீசம் நெய்கூட இருப்பில் இல்லை.

பின் என்ன செய்தனர்?

"நெய்இல்லை என்று அறிந்ததும் உள்ளமும்
மெய்யும் விதிர்த்தனர்; செய்வ தறியாது
நெஞ்சம் கலங்கினர் நெய்யாடி யப்பரைத்
தஞ்சம் அடைந்தனர் காண்."

காவேரிக் கரையில் காசிக்குச் சமமாகக் ஆறு திருத்தலங்களில் திருவையாறும் ஒன்று. மற்ற ஐந்து தலங்கள்: திருவெண்காடு, சாயாவனம், மயிலாடுதுறை, திருவிடைமருதூர் மற்றும் ஸ்ரீவாஞ்சியம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புகளையும் உடையது திருவையாறு. ஏழு நிலைகளையும், ஐந்து பிராகாரங்களும் உள்ள பெரிய கோயிலாகும்.

மூலவர் ஐயாறப்பர் சுயம்பு லிங்கமாகும். இந்த லிங்கம் பிருத்வி லிங்கம் ஆகையால் அபிஷேகம் செய்யப்படுவதில்லை. ஆவுடையார் மேல்மட்டுமே அபிஷேகம் செய்யப்படும். லிங்கத் திருமேனிக்கு புனுகுச் சட்டம் சாற்றப்படும்.

இறைவி தர்மசம்வர்த்தினி அம்மன், காஞ்சி காமாட்சியைப் போன்றே, இறைவனிடம் இருநாழி நெல்பெற்று 32 அறங்களையும் செய்தமையால் அறம்வளர்த்த நாயகி என்று அறியப்படுகிறாள். இறைவி, இடக்கரம் இடுப்பில் ஊன்றியபடியும், மேல் இருகரங்களில் சங்கு, சக்கரத்துடன் காணப்படுவதால், இந்த அம்பிகை மஹாவிஷ்ணு அம்சமாகக் கருதப்படுகிறாள்.

ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி, மஹாவிஷ்ணுவிற்கு குருவாக இருந்து வேதங்களை உபதேசித்த தலம். அப்பர் கயிலாயக் காட்சியைக்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கண்ட திருத்தலம். இத்திருத்தலத்தில் முருகப்பெருமான் வில், வேல், அம்பு ஆகிய படைக்களங்களுடன் வில்லேந்திய 'தனுசு சுப்ரமணியர்' ஆகத் திகழ்கிறார். அருணகிரிநாதர் திருப்புகழில் தனுசு சுப்பிரமணியரைப் பாடி உள்ளார்.

ஆலயத்தின் தெற்கு கோபுர வாசலில் உள்ள ஆட்கொண்டார் சந்நிதி மிகவும் பிரசித்தமானது. இச்சந்நிதி வாயிலில் எப்பொழுதும் குங்குலியம் மணந்து கொண்டே இருக்கும்.

'ஓலமிட்ட விநாயகர்' சந்நிதியும் புகழ்பெற்றது. இறைவன் இங்கு ஆதிசைவராக வந்து 'தனக்குத்தானே பூஜை' செய்து கொண்ட சிறப்பும் உடையது இவ்வாலயம். மூன்றாம் பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் நின்று வடக்கு நோக்கி 'ஐயாறா' என்றழைத்தால் ஏழுமுறை அது எதிரொலிக்கும். இத்திருத்தலத்தில் தென்கயிலாயம், வடகயிலாயம் ஆகிய இரு சந்நிதிகள் முக்கியமானவை.

வழக்கமாக அர்த்தநாரீஸ்வரர் சிற்பங்களில் சிவபெருமான் வலப்புறமும், உமையம்மை இடப்புறமும்தான் காணப்படுவர். ஆனால் இத்தலத்தில் சிவபெருமான் இடப்புறமும், உமையம்மை வலப்புறமும் அமைந்திருப்பதைக் காணலாம்.

நான்காம் திருச்சுற்றில் சூரியபுஷ்கரணி உள்ளது. அந்த புஷ்கரணியை ஒட்டியுள்ள விநாயகர் சந்நிதியின் எதிரே மஹாசந்நிதானம் அவர்கள் பத்மாசனத்தில் அமர்ந்திருந்தார்கள். அவரைத் தேடி சிவராமன் செட்டியார், பஞ்சநதேஸ்வர ஐயர். காமாக்ஷி ஜோசியர், கிருஷ்ணய்யர் ஆகியோர் வேகமாய் வந்தனர். ஸ்வாமிகளிடம் திருநெய்த்தானம் அன்னதானத்திற்குத் தேவையான நெய்க்குடங்கள் இன்னும் வந்து சேராத செய்தியைப் பதட்டத்துடன் கூறினார்கள்.

ஸ்ரீஸ்வாமிகள் நடத்திய அற்புதம் ஒன்று அங்கே நிகழ்ந்தது. அது என்ன ?

"திருவையாறு கோயிலின் சூரிய தீர்த்தம்
அருகினில் நிட்டையில் ஆழ்ந்த குருவை
நெருங்கியே நெய்த்தானம் வேண்டிப் பணிந்தே
அருமை நிலையை உரைத்தார். "



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



சீடர்கள் கும்பாபிஷேக சமயத்தில் அன்னதான சந்தர்ப்பங்களுக்காகத் திட்டம் செய்யப்பட்டிருந்த நெய் வந்து சேராதிருப்பதை மஹாசந்நிதானம் அவர்களிடம் தெரிவித்தார்கள்.

'அப்படியா! இன்னும் நெய் வந்து சேரவில்லையா? நான்கு குடங்களை எடுத்து வாருங்கள்' என்று ஆணையிட்டார்.

நான்கு குடங்களை எடுத்து வந்தனர்.

'இந்தக் குடங்களை ஸூரியபுஷ்கரணித் தீர்த்தத்தால் நிரப்புங்கள்.'

குடங்கள் தீர்தத்தால் நிரப்பப்பட்டு ஸ்வாமிகளின் முன்னே வைக்கப்பட்டன. அதில் திருநீற்றைத் தெளித்தார்.திருவையாறு அப்பனை உள்ளம் குளிரத் துதித்தார்.

'இக்குடங்களை திருநெய்த்தானம் எடுத்துச் சென்று அன்னதானத்திற்குப் பயன்படுத்துங்கள்' என்று உத்தரவிட்டார். தண்ணீர் நிறைந்த குடங்களின் வாய் வாழைஇலையால் கட்டப்பட்டன. வந்த வண்டியிலேயே பஞ்சநதேஸ்வர ஐயர், காமாக்ஷி ஜோசியர், கிருஷ்ணய்யர் ஆகியோர் திருநெய்த்தானம் திரும்பினர். உரிய நேரத்தில் அன்னதானத்திற்கு இலைகள் போடப்பட்டன. நெய் பரிமாறப்பட வேண்டி குடங்கள் திறக்கப்பட்டன.

நீர்நிறைந்த குடங்களில் தூயநெய் நிரம்பியிருந்தன. போஜனத்திற்கு அந்தநெய்யே பயன்படுத்தப்பட்டது.

போஜனம் பந்தி முடியும் சமயம் திட்டம் செய்திருந்த இடங்களிலிருந்து நான்கு நெய்க்குடங்கள் வந்து சேர்ந்தன.

அந்த நெய்க் குடங்களை எடுத்துச் சென்று மஹா சந்நிதானத்தை மீண்டும் சந்தித்தனர் திருநெய்த்தான பொறுப்பாளர்கள். அவர்களிடம் 'நீங்கள் முன்னமே இந்தத் தடாகத்திலிருந்து நான்கு குடங்கள் தீர்த்தத்தை எடுத்துச் சென்றுள்ளீர்கள். நீங்கள் எடுத்து வந்துள்ள நான்கு குட நெய்யையும் இந்தத் தீர்த்தத்திலேயே சேர்த்து விடுங்கள்' என்றார்.

நான்கு குட நெய்யையும் குளத்தில் கவிழ்த்தனர். குடங்களிலிருந்து நெய் கொட்டவில்லை; தீர்த்தம் கொட்டியது. இது கண்டு அனைவரும் அதிசயித்து வியந்து நின்றனர். அங்கு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வந்திருந்த மஹாஜனங்களும், சீடர்களும் மஹாசந்நிதானத்தின் பாதகமலங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தனர்.

1872–ம் ஆண்டு ஆங்கிரஸ வருஷம் வைகாசி மாதம் கும்பாபிஷேக நாளும் வந்தது.

ஏழு திருக்கோயில்களுக்கு அன்று கும்பாஷேகம் ஒரே நேரத்தில் நடைபெற இருந்தது.

திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருப்பெரும்புலியூர், திருமழபாடி, திருத்திங்களூர், திருப்பழனம் ஆகிய திருத்தலங்களில் நடைபெற்ற குடமுழுக்கு விழாவில் எதில் கலந்து கொண்டார் ஸ்வாமிகள் ?

"குடங்களில் நீர்நிறைத்து மந்திரம் ஓதி
குடங்களில் நீர்எல்லாம் தூயநெய் ஆகி
பசித்தே புசித்திட வந்தவர் எல்லாம்
ருசித்தே மகிழ்ந்தது கண்டோம்"

திருச்சோற்றுத்துறை பக்தர்களுக்கு பரம சந்தோஷம் – மஹாசந்நிதானம் அவர்கள் தங்கள் ஊர் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு ஆசிகள் வழங்கியதால்.

திருவேதிகுடி மக்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை – தங்களுடைய ஊர் திருக்கோயிலின் குடமுழுக்கில் ஸ்வாமிகளின் தரிசனமும் ஆசிர்வாதங்களும் தங்களுக்குக் கிடைத்ததைப்பற்றி.

திருப்பெரும்புலியூர் அன்பர்களின் உற்சாகம் கரை புரண்டோடியது – ஸ்ரீஸ்வாமிகள் தங்கள்ஊர் கும்பாபிஷேகத்தில் நேரடியாகக் கலந்து கொண்டு தங்களைக் கௌரவித்ததில்.

திருமழபாடி மக்களுக்கு,தங்களின் வேண்டுகோளை ஏற்று ஸ்வாமிகள் தங்கள்ஊர் ஆலய கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்ததில் பெரும் சந்தோஷம்.

திருத்திங்களூர் அடியார்கள், தங்கள் ஊர் குடமுழுக்கில் ஸ்வாமிகள் கலந்து கொண்டு வாழ்த்தியதில் பேரின்பம் கொண்டனர்.

திருப்பழனம் ஊர்மக்கள் தங்கள் ஊர் கும்பாபிஷேகத்தை நேரில் வந்து சிறப்பாக நடத்திக் கொடுத்த ஸ்வாமிகளின் கருணையைப் போற்றினர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



திருநெய்த்தானம் ஜனங்களின் சந்தோஷம் கரைகடந்ததாய் இருந்தது. ஸ்வாமிகள், நெய்யாடியப்பர் ஆலய கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டது மட்டுமன்றி, ஊர்மக்கள் அனைவருக்கும் ஆசிகளை வாரி வழங்கியதைப்பற்றிப் பேசிக் களித்தனர்.

ஆம்!

மஹாசந்நிதானம் அவர்கள் ஏழூர் கும்பாபிஷேகத்திலும் ஒரே நேரத்தில் கலந்து கொண்டு நடத்தி வைத்தார். அந்தந்த ஊர் மக்களுக்கு ஆசிகளையும் வாரி வழங்கினார்.

மேற்கண்ட ஏழு ஊர்களின் கும்பாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற முன்ஏற்பாடுகள் செய்து, பொருட்களை சேகரித்து, தேவை ஏற்பட்ட பொழுது மேல் உத்திரீயத்தை விரித்து மக்களிடம் 'பிச்சை' எடுத்து, அனைத்து திருக்கோயிலின் கும்பாபிஷேகங்களுக்கும் ஒரேநாள், ஒரே முகூர்த்தம் குறித்து ஏழு ஊர்களின் கும்பாபிஷேகத்திலும் ஒரே சமயத்தில் கலந்துகொண்டு, காட்சி அளித்து, மக்களுக்கு ஆசிகள் வழங்கிய மாட்சியை என்னவென்று விளம்புவது ? எங்ஙனம் வியப்பது ?

கும்பாபிஷேகத்தன்று இரவு அனைத்து ஊர் கோயில்களிலும் இறைவனும், இறைவியும் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி காட்சி அளித்தனர்.

அதே ஆண்டு ஆனி மாதம் 3–ம் தேதி திருக்கண்டியூர மற்றும் ஆனி 9–ம் தேதி திருவையாற்றிலும் குடமுழுக்கு வைபவத்தை நடத்தி வைத்தார். இவற்றில் கலந்துகொண்ட அன்பர்களுக்கும், அடியார்களுக்கும், பொதுமக்களுக்கும் தம் ஆசிகளை வாரி வழங்கினார்.

(இப்பகுதி மக்களுக்கோ, ஆலய சிப்பந்திகளுக்கோ, ஆன்மிக அன்பர்களுக்கோ 1872–ம் ஆண்டு நடைபெற்ற இந்த அதி அற்புத நிகழ்வுகள் பற்றித் தெரியுமா ?இவ்வாலயங்களில் இது பற்றிய குறிப்புகள் ஏதும் உள்ளதா ? கேள்விப்பட்டவர்களேனும் எவரும் உள்ளனரா ?)

செட்டிநாட்டுப் பகுதியைச் சேர்ந்த கீழச்சிவல்பட்டியில் உள்ள ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் கும்பாபிஷேகத்தை அதே ஆண்டு முன்நின்று நடத்தி வைத்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அடுத்து மஹாசந்நிதானம் அவர்கள் நடத்தியது எந்த ஊரின் ஆலய கும்பாபிஷேகம் ?

“திங்களூர் சோற்றுத் துறையுடன் நெய்த்தானம்
பங்கமில் சீர்மழ பாடி பெரும்புலியூர்
வேதிகுடி மற்றும் திருப்பழனம் தோன்றினான்
ஆதியாம் எங்கள் பரமன். ”

பத்தமடை, கடியாபட்டி ஆகிய ஊர்களில் கும்பாபிஷேகங்களை நடத்தினார்.

கீழச்சிவல்பட்டி என்ற ஊரில் சிவபிரதிஷ்டை செய்து மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் நடத்தி வைத்தார்.

இவற்றை நடத்தி வைத்தவுடன் முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் சென்றார். இத்தலம் முருகப்பெருமானின் இரண்டாவது படைவீடாகத் திகழ்கின்றது.

அசுரர்களின் தலைவனான சூரபத்மனின் தொல்லைகளைத் தாங்கமுடியாத தேவர்கள், சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர்களின் வேண்டுதலை ஏற்ற சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறுபொறிகளை உண்டாக்கினார். அதிலிருந்து முருகப் பெருமான் தோன்றினார். சிவபெருமானின் கட்டளையை ஏற்று சூரபத்மனை அழிக்க இவ்விடம்வந்தார்.

முருகப்பெருமானின் அருள் வேண்டித் தவமிருந்த தேவர்களின் குருவான வியாழபகவானுக்குத் தரிசனம் அளித்தார். அவர் மூலமாக அசுரர்களின் வரலாற்றைத் தெரிந்து கொண்டார்.

தன் படைத்தளபதியான வீரபாகுவை, சூரபத்மனிடம் தூதாக அனுப்பினார். அசுரன் சிறைப்பிடித்திருக்கும் தேவர்களை விடுதலை செய்யும்படி வீரபாகு கேட்டார். ஆணவத்தின் உச்சியில் இருந்த சூரபத்மன் இந்த கோரிக்கைக்குச் செவி சாய்க்கவில்லை. விதி அவன் பிடர் பிடித்து உந்தியது.

வீரபாகு தூது தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து முருகன், படை எடுத்துச் சென்று சூரபத்மனை ஐப்பசி மாதம் வளர்பிறை சஷ்டி அன்று திருச்செந்தூரில் வதம் செய்தார். முருகப்பெருமான் சூரனை ஆட்கொண்ட பிறகு, தனது வெற்றிக்கு நன்றி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



தெரிவிக்கும் விதமாக சிவபூஜையை இங்கே செய்தார். வெற்றி வீரராய்த் திகழ்ந்த முருகன் 'ஜயந்திநாதர்' என்று போற்றப்பட்டார்.

பிற்காலத்தில் இப்பெயர் 'செந்தில்நாதர்' என்று மருவியது. 'திரு ஜயந்திபுரம்' பிற்காலத்தில் 'திருச்செந்தூர்' என்று பெயர் பெற்றது.

முருகப்பெருமான் தனக்குக் காட்சி அளித்த இடத்தில் குருபகவான் ஒரு திருக்கோயில் எழுப்ப விரும்பினார். விஸ்வகர்மாவிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார். கடலோரத்தில் அழகிய கோயில் எழுந்தது. இக்கோயில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமையானது. கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள முருகனின் திருத்தலம் இதுவாகும். அலைகள் கொஞ்சி விளையாடும் இடமாதலால் ஆலயம் அமைந்துள்ள இடம் 'திருச்சீரலைவாய்' என்றழைக்கப்படுகிறது.

முருகனுக்குரிய ஆறுபடைவீடுகளில் திருச்செந்தூர் மட்டும் கடற்கரை ஓரம் அமைந்துள்ளது. ஏனைய ஐந்து படை வீடுகளும் மலைகளில் அமைந்துள்ளன. முருகப் பெருமான் இத்தலத்தில் கடலைப் பார்த்தபடி கிழக்கு நோக்கி காட்சி அளிக்கிறார். பங்குனி உத்திரம், திருக்கார்த்திகை, வைகாசி விசாகம், கந்த சஷ்டி ஆகியவை முக்கியத் திருவிழாக்களாகும். கந்தசஷ்டி இத்திருக்கோயிலில் பன்னிரண்டு நாட்கள் கொண்டாடப்படுகிறது.

பொதுவாக கோயில்களில் ஒரு தெய்வத்திற்கு ஒரு உற்சவ மூர்த்தி மட்டுமே இருக்கும். திருச்செந்தூரில் ஷண்முர், ஜயந்திநாதர், குமாரவிடங்கர், அலைவாய்ப் பெருமாள் என்று நான்கு உற்சவர்கள் உள்ளனர். இந்த நான்கு உற்சவர்களும் தனித்தனி சந்நிதியில் இருப்பது இவ்வாலயத்தின் சிறப்பு. இங்கே முருகன் 'ஞானகுருவாக' அருளுகின்றார். இத்திருக்கோயிலில் வழங்கப்படும் பன்னீர் இலை விபூதி மிகப் பிரசித்தமானது. இது தீராத நோய்களைத்தீர்க்கும்.

இத்தனை பிரசித்திபெற்ற கோயிலின் அர்ச்சகர்களிடையே ஒற்றுமை இல்லாதிருந்தது. ஒருவருக்கொருவர் பிணங்கியே இருந்தனர். அவர்களின் பிரச்சனைகள் தீர்வதற்கான வழிமுறை எவருக்கும் புலப்படவில்லை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவர்களின் கருத்து வேறுபாடுகள் உச்சத்தில் இருந்த நேரம் மஹாசந்நிதானம் அவர்கள் திருச்செந்தூர் வந்தடைந்தார்.

திருக்கோயில் பிரச்சனையை ஸ்ரீஸ்வாமிகளின் கவனத்திற்கு எடுத்து வந்தனர் ஆலய நிர்வாகிகளும், ஊரின் முக்கியப் பிரமுகர்களும்.

அர்ச்சகர்களிடையே நிலவிய கருத்து வேறுபாடுகள் ஸ்வாமிகளால் தீர்க்கப்பட்டனவா ?

"குடமுழுக்குப் பல்நகரில் மக்களெல்லாம் போற்ற
உடனுறை தெய்வங்கள் ஆசிகள் நல்கிட
சீராய் முடித்ததன் பின்னே சிறப்பான
சீரலைவாய் வந்தடைந்தான் எம்மான்"

இந்த பூமியில் போக மோக்ஷங்களைத்தரும் தலங்கள் பல இருந்தாலும் அவை யாவும் சந்தேகமின்றித் திருச்செந்தூர் தலத்திற்கு அடுத்தவையே.........வசிஷ்டர்.

பிரம்மஹத்தி செய்தவனும், வேதங்களைப் பழித்தவனும் கூட ,திருச்செந்தூரில் ஒருநாள் வசித்தால் பரிசுத்தமாகி விடுவான்........வாமதேவர்.

இந்தத் தலத்தின் தீர்த்த மகிமைக்கு ஈடானது எதுவும் இல்லை........ஜாபாலி முனிவர்.

நூறு அஸ்வமேத யாகங்களின் பலனை திருச்செந்தூர் வாசத்தால் கோடிமடங்கு அதிகமாகப் பெறலாம்........ விஸ்வாமித்திரர்.

ஒருவன் பிரயாகையில் நீராடும் பலனை கார்த்திகை நக்ஷத்திரத்தன்று ஒருமுறை இந்தத் தலத்தில் நீராடினால் அடைந்து விடுகிறான்.......காஸ்யப முனிவர்.

ரிஷிகள் காசியில் ஒருவருடம் தவம்புரிந்து அடையும் புண்ணியத்தை திருச்செந்தூரில் ஒரே நாளில் அடைந்து விடலாம்........மார்க்கண்டேயர்.

பலநாட்கள் செய்யவேண்டிய தவத்தை திருச்செந்தூர் தரிசனம் ஒன்றினாலேயே அடைந்து விடலாம்......மௌத்கல்யர்.

இவ்வாறு மாபெரும் முனிவர்களால் போற்றப்பட்ட தலம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata.



திருச்செந்தூர்.

குருமஹாதசை அல்லது குருபுத்தி மிக மோசமான இருந்தால் அவர்கள் திருச்செந்தூர் வந்து சுப்ரமணியரைத் தரிசித்து ஸ்ரீஆதிசங்கரரின் சுப்ரமண்யபுஜங்கத்தையோ, குமரகுருபரரின் கந்தர் கலிவெண்பாவையோ ஒருமுறை பக்தியுடன் பாராயணம் செய்தால் போதும், அனைத்துத் துன்பங்களும் நீங்கிவிடும். பூத, பிரேத, பைசாச உபாதைகளிலிருந்து விடுபட்டு பூரண நலம் பெறலாம்.

ஆதிசங்கர பகவத்பாதாளுடன் ஏற்பட்ட வாதத்தில் அபிநவகுப்தர் தோற்றுப் போனார். தோல்வியைத் தாங்கமுடியாத அவர், ஆபிசாரவேள்வியைச் செய்தார். ஆதிசங்கரப் பெருமானுக்குத் தாங்க முடியாத உடலை வருத்தும் வயிற்றுவலி (குன்ம) நோய் ஏற்பட்டது. கர்நாடகாவிலுள்ள கோகர்ணத் திருத்தலத்தில் தங்கி வழிபாடு செய்து வந்த ஆதிசங்கரரின் கனவில் தோன்றிய சிவபெருமான் 'என் குமாரன் சுப்ரமணியன் குடியிருக்கும் புண்ணியத் தலம் திருச்செந்தூர். அங்கு சென்று அவனைத் தரிசனம் செய். உன் நோய் முற்றிலும் குணமாகிவிடும்' என்றார்.

கோகர்ணேஸ்வரர் ஆணைப்படி திருச்செந்திலம்பதி அடைந்த ஆதிசங்கரர் ஷண்முகன் சந்நிதியில் மனம் உருகி நின்றபோது செந்தில் வேலவன் தரிசனம் அவருக்குக் கிட்டியது. போற்றிகள் கொடுத்த பன்னீர்இலை விபூதியைத் தரித்துக் கொண்டார். ஆதிசங்கரரின் நோய் விரைவில் குணமாகியது. திருச்செந்தூர் சுப்பிரமணியனைத் துதித்து மனமுருகி 33 ஸ்லோகங்களைப் பாடினார். அதுவே 'ஸ்ரீசுப்ரமணிய புஜங்கம்' என்று போற்றப்பட்டது. அதில் 25–ம் பாடலில் பன்னீர் இலை விபூதியின் மகிமையைப்பற்றி உரைக்கிறார்:

"சுப்ரமண்யா! உன்னுடைய இலை விபூதியைக் கண்டாலே கால் கை வலிப்பு, காசநோய் குன்மம், குஷ்டம் முதலான எல்லா நோய்களும் நீங்கிவிடும். எல்லா விதமான செய்வினைகள், பூதம், பிசாசு, தீவினைகள் யாவும் விட்டு விலகிவிடும்."

இவ்வாறு ரிஷிகளாலும், ஆச்சாரியர்களாலும் போற்றப்பட்ட



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருச்செந்தூர் தலத்தை வாழ்வில் ஒருமுறையேனும் தரிசித்துவிட வேண்டும்.

அத்துடன், அருணகிரிநாதரால் 83–திருப்புகழ் பாடல்களை இத்தல முருகன் மேல் பாடியுள்ளார்.

அறுபடை வீடுகளில் மிகப்பெரிய கோயில் கொண்டதலம் என்ற சிறப்பும் திருச்செந்தூருக்கு உண்டு. தெய்வீகச் சிறப்பும், தனித்துவமும் கொண்ட திருக்கோயில் இது.

இத்தகைய சிறப்பு மிக்க திருத்தலத்திற்கு எழுந்தருளிய மஹாசந்நிதானம் அவர்களை காசி சாமி, மவுன சாமி, ஆறுமுகசாமி, தேசியமூர்த்தி சாமி ஆகியோர் வரவேற்று உபசரித்தனர்.

கோயிலில் பணிபுரியும் அர்ச்சகர்களை ஸ்வாமிகள் சந்தித்துப் பேசவேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் வைத்தனர். அதை ஏற்றுக்கொண்ட ஸ்வாமிகள் தாம் தங்கி இருந்த மடத்திற்கு அர்ச்சகர்களை வரவழைத்தார்.

அவர்களிடம் என்ன சொன்னார்?

“அலைபாயும் ஆலயத்தின் அர்ச்சகர் எல்லாம்
அலைபாயும் உள்ளமுடன் வெம்பி இருந்தனர்
நம்பியே வந்தநல் லோர்கள் உரைத்ததை
நம்பியே ஏற்றான் நயந்து,”

‘உலக தர்மத்தையும், ஆலய நெறிமுறைகளையும் கட்டிக் காப்பது உங்கள் கடமை. ஒவ்வொரு ஆலயத்திற்கும் தனித்தன்மையான நடைமுறைகள் உண்டு. நமது சனாதன தர்மத்தைக் கட்டிக் காப்பதே ஆலயங்கள்தான். ஆகவேதான் நம்மை ஆண்டவர்கள், நம்மை ஆள்பவர்கள் நம் ஆலயத்தைத் தகர்ப்பதிலும், அதன் சொத்துக்களைக் கொள்ளையடிப்திலும் குறியாக இருந்தனர்; இருக்கின்றனர். நம் கலாசாரத்தை, பண்பாட்டைத் தகர்த்து அதன் மூலம் தங்களின் மதங்களைப் புகுத்த முற்படுகின்றனர். நம் ஆலயங்கள் நம் உயிரினும் மேலானவை. அவை நமது பாரம்பரியத்தை,பண்பாட்டைப் பேணிக் காக்கின்றன. இந்த அமைப்பைத் தகர்த்து விட்டால் நம் பாரத கலாசாரம் நொறுங்கிச் சின்னபின்னமாகிவிடும். இதைத்தான் நம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



எதிரிகள் செய்து வருகின்றனர்.

நீங்கள் அனைவரும் உங்கள் உடல், பொருள், ஆவி, இன்பம் அனைத்தையும் இறைவனுக்காகத் தியாகம் செய்பவர்கள். உங்களின் இந்தத் தியாகம்தான் உலகத்தைச் செழிப்பாக வைத்துள்ளது. நீங்கள் அறியாமலேயே உலக க்ஷேமத்திற்காக மாபெரும் சேவையைப் புரிந்து வருகிறீர்கள். இறைவனிடம் முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு, மிகமிகக் குறைந்த வருவாயில் இடைவிடாது சேவை செய்து வருகின்றீர்கள்.

'அர்ச்சாகஸ் ஹரி சாக்ஷாத்' என்கிறது வேதம். அர்ச்சகர்கள் ஹரியின் சொரூபம். இறைவன் தன் இதயத்திலிருந்து தோற்று வித்ததால் வைணவ சம்பிரதாயத்தில் இவர்களுக்கு ஸ்ரீவைகானசர்கள் என்று பெயர். மிகப்புனிதமான இறைவனின் ப்ரதி அவதாரம் நீங்கள்.

இறைவனுக்கு இணையான ஒருவரால்தான் இறைவனைப் பூஜிக்க முடியும். உலக ஜீவராசிகளைக் காக்கவும், தன்னை ஆராதிப்பதற்கும்

தோற்றுவிக்கப்பட்டவர்களே நீங்கள்.

அன்றிலிருந்து இன்றுவரை இடையறாது பகவானைப் பூஜித்து வருபவர்கள்தான் அர்ச்சகர்கள். உங்களின் பூலோகப் பிறப்பு நைமிசாரண்யம் என்ற புண்ணிய க்ஷேத்திரத்தில் தொடங்கியது. உலகில் முதலில் ஆண்டவனால் படைக்கப்பட்ட மனித இனத்தினர் அர்ச்சகர்கள்தான். பிறகுதான் மற்ற ஜீவராசிகளை பகவான் படைத்தார் என்பது வேத வழி வரலாறு.

கிருத யுகத்தில் தேவர் உலகம் மற்றும் அசுரர் உலகம் ஆகிய இருவேறுபட்ட உலகினரிடையே யுத்தம் நடந்தது.

திரேதாயுகத்தில் இருவேறு நாடுகளில் உள்ளவர்கள் ஒருவருடன் ஒருவர் போர் செய்தனர்.

துவாரயுகத்தில் ஒரே நகரில் இருந்தவர்களிடையே சண்டை நடைபெற்றது.

ஆனால்......இந்த கலியுகத்தில் நமக்குள் இருக்கும் நல்லவை—கெட்டவை இவற்றிற்கிடையே எப்போதும் மோதல் நடந்துகொண்டே இருக்கின்றது.

நாம் நம்மிடையே நல்லவற்றை வளர்த்துக்கொண்டால் கெட்டவை தானாக அழிந்து போய்விடும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உரிய பயிற்சியும், தகுதியும் பெற்றுள்ள நீங்கள் சிறிய மனஸ்தாபம் காரணமாக வேறுபட்டு நின்றால் உலகம் உங்களைப் பார்த்துப் பரிகசிக்கும். உங்கள் ஒவ்வொருவரின் நடவடிக்கையும் வெளியில் உள்ளவர்களால் கூர்மையாகப் பார்க்கப்படுகிறது என்பதை மறந்து விடாதீர்கள். இதனால் பாதிப்பு நமது சனாதன மதத்திற்கும், நமது கட்டுக்கோப்பான வாழ்க்கை முறைக்கும் என்பதைநினைவில் வைத்துக்கொள்ளுங்கள். உங்களின் அசைக்க முடியாத கடமை உணர்ச்சியும், ஈஸ்வரன் மேல் நீங்கள் கொண்ட மாறாப்பற்றும் உங்களுக்கு நல்வழியைக் காட்டும். உங்களிடம் உள்ள வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக இருங்கள். சூரபத்மன், சுப்ரமணியனின் வேல்பட்டு அழிந்த இடம் திருச்செந்தூர். உங்களிடையே உள்ள ஆணவம், பணிவு என்ற வேல்பட்டு அழியட்டும்.... ஆசிர்வாதங்கள்."

திருச்செந்தூரில் அர்ச்சகர்களிடையே நிலவிய வேற்றுமையைக் களைந்து, ஒற்றுமையை நிலைநாட்டினார்.

(இச்சரிதத்தின் இந்நிகழ்ச்சியில் இடம்பெற்ற துறவிகள் காசிசாமி –கி.பி.1882–ம் ஆண்டு இக்கோயிலுக்கு வசந்த மண்டபம் கட்டினார்; மவுனசாமி –1895–ல் மண்டபத்தைக் கட்டி முடித்தார். வள்ளிநாயகசாமி–கிரிப்பிரகாரத்திற்குக் கொட்டகை வேய்ந்தார். ஆறுமுகசாமி–கருங்கல் தூண்கள் அமைத்தார். தேசியமூர்த்தி சாமி–ராஜகோபுரம் எழுப்பினார்.)

திருச்செந்தூரில் இருந்து அடுத்து ஸ்வாமிகள் சென்ற தலம் எது?

"கர்வமாம் ஆணவம் மற்றுமோர் கன்மமுடன்
தர்மம் அதர்மம் மறைக்கும் மாயையுடன்
செய்வதறி யாது கலங்கியே நின்றோர்க்கு
உய்வதற்கு நல்வழிசொன் னான்காண்."

திருச்செந்தூரிலிருந்து புறப்பட்ட மஹாசந்நிதானம் அவர்கள் திருநெல்வேலியை அடைந்தார்.

திருநெல்வேலி மாவட்டம் 1790–ல் கிழக்கு இந்தியக் கம்பெனியால் தோற்றுவிக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசி விக்டோரியா அவர்களின் நேரடிப் பார்வையில் வந்தது. சில ஆண்டுகள்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



ஆற்காட்டு நவாபின் கட்டுப்பாட்டில் இருந்தது. மீண்டும் 1801-ம் ஆண்டு ஆங்கிலேயர் இந்நகரைக் கைப்பற்றினர். பாளையங்கோட்டை – திருநெல்வேலி ஆகிய இரண்டு பகுதிகளை உள்ளடக்கியதாக இந்த நகர் விளங்கியது. முதலில் பாளையங்கோட்டையைத் தலைமை இடமாகக் கொண்டே இம்மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இடமே ஆங்கிலேயர்களின் ராணுவத் தலைமை இடமாக விளங்கியது.

திருநெல்வேலி,பாளையங்கோட்டை ஆகியவை ‘இரட்டை நகரங்கள்’என்று அழைக்கப்பட்டு வந்தன.

நம் ஸ்வாமிகள் வாழ்ந்த காலத்தில் மக்களின் சமுதாய வாழ்வில் கிறிஸ்துவர்கள், முகமதியர்களின் தாக்கம் இப்பகுதியில் அதிகம் இருந்தது. மக்களிடையே நம் சனாதன மதத்தின் பெருமையை நிலைநாட்டிட இம்மாவட்டத்தின் பல இடங்களுக்கும் சென்று சமய விழிப்புணர்வைத் தூண்டினார் என்பதை முன்னரே பார்த்துள்ளோம்.

ஸ்ரீகாந்திமதி அம்மன்–நெல்லையப்பர் ஆலயம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இக்கோயில் தென்வடலாக 756 அடி நீளமும், மேற்கு கிழக்காக 378 அடி அகலமும் கொண்டு விளங்குகிறது. ஆசியாவின் மிகப்பெரிய சிவத்தலம் இதுவே ஆகும். இக்கோயிலின் திருத்தேர் தமிழ்நாட்டின் மூன்றாவது பெரிய தேர் ஆக விளங்குகிறது.

திருநெல்வேலி வந்து சேர்ந்த மஹாசந்நிதானம் அவர்கள் இத்தகைய சிறப்புமிக்க திருக்கோயிலில் மூன்றாவது முறையாக ‘லக்ஷதீப’ வழிபாட்டை மிகச்சிறப்பாக நடத்தினார். பக்தர்கள் பலரும் மிக பரவசத்துடனும், பக்தி சிரத்தையுடனும் லக்ஷதீப வழிபாட்டை தரிசித்து மகிழ்ந்தனர். ஸ்ரீஸ்வாமிகளின் சீடர்கள் நாராயணசிவம், ரங்கநாத சிவம், சேரை சௌந்தரபாண்டியன் பிள்ளை, பிச்சை சாமிகள், சூரியநாராயண சிவன், ராமசாமி சிவன், நீலகண்ட ஐயர், கிருஷ்ண தருவாடியார், சதாசிவ தருவடியார், முத்து செல்லம் ஐயர், ஐயாசாமி பிள்ளை, மாவடி சிதம்பரம் பிள்ளை, ராமச்சந்திர மேத்தா ஆகியோர் லக்ஷதீப விழாவிற்கான ஏற்பாடுகளை விரிவாகச் செய்திருந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இந்த நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே ஸ்வாமிகளின் பூர்வாசிரம மனைவி ஜானகி அம்மையார் அவர்கள் சிவகதி அடைந்த செய்தி கிடைத்தது. திருமணம் இருவருக்கு மிடையே நடந்திருந்தாலும் அவர்களிடையே குரு–சிஷ்யை பாவமே நிலவி வந்தது. சிஷ்யனுக்குப் பிரதம லக்ஷணம் விநயம். மிகச் சாதாரணமாய் இருந்து குருவின் அருளால் உயர்நிலையை அடைபவன் சிஷ்யன். தன்னுடைய இந்திரியங்கள் கண்டபடி போகாமல் கட்டுப்படுத்தி வாழ்பவன் சிஷ்யன்.

இந்த மூன்று நிலைகளையும், லக்ஷணங்களையும் உள்ளடக்கிய உன்னதப் பெண் திலகம் ஜானகி அம்மையார்.

கணவருடனான முதல் சந்திப்பிலேயே, அவரின் மனோநிலையை அறிந்து அதன்படி தன் வாழ்க்கையைத் தவ வாழ்க்கையாய் அமைத்துக் கொண்ட உயர்ந்த பெண்மணி ஜானகி அம்மையார்.

ஏட்டுப்படிப்பு எள்ளளவும் இல்லாது போயினும், தன் தாயிடமும், அத்தையிடமும் தன்கணவரை விட்டுத்தராது, அவரின் உன்னத லக்ஷியங்களை உயர்த்திப் பிடித்த உத்தம மனம் கொண்டவர் ஜானகி அம்மையார்.

தந்தை தன்மாணாக்கர்களுக்குப் பாடம் நடத்துவதை வீட்டின் உள்ளிருந்தபடியே காதால் கேட்டு, அவற்றின் கருத்துக்களை உள்வாங்கி ஞானத்தால் நிமிர்ந்து நின்ற நிறைகுடம் ஜானகி அம்மையார்.

இளம்வயதிலேயே கணவன் சந்நியாசயோகம் ஏற்றுக் கொண்டு, கற்றோர் போற்றும் உயர்ந்த நிலையை அடைந்த பின்னர், எந்த நிலையிலும் அவரை அண்டிநில்லாமல் சுயமாக தவ வாழ்க்கையை மேற்கொண்ட உத்தமப் பெண் ஜானகி அம்மையார்.

பகவானே தனக்கு குருவாக எழுந்தருளி இருக்கிறார் என்பதை உணர்ந்து அதை வெளி உலகிற்குத் தெரியப்படுத்திய உன்னதப் பிறவி ஜானகி அம்மையார்.

'தான்தான் குருவிற்கு அத்யந்தம், வேண்டியவள்' என்ற எண்ணத்தை எழவிடாமல் செய்து என்றும் எளிமையாய் வாழ்ந்தவர் ஜானகி அம்மையார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மஹாசந்நிதானம் அவர்களின் அனைத்து சீடர்களையும் மேலோராய்ப் பாவித்து உரிய மரியாதையுடன் நடந்து கொண்ட பெரும் தெய்வம் ஜானகி அம்மையார்.

அகவாழ்க்கையைத் துறந்த அப்பெண் துறவி புறவாழ்வினையும் துறந்து ஈசனினின் பாதகமலங்களில் ஒன்றினார்.

மங்கையர்க்கரசியார்,காரைக்கால் அம்மையார், ஔவையார் வரிசையில் வைத்துப் போற்றத்தக்க மங்கையர் திலகம் ஜானகி அம்மையார் இப்பூத உடலை நீத்து சிவனடிக்கீழ் சேர்ந்தார்.

ஜானகி அம்மாள் திருநெல்வேலி, நெல்லையப்பர் ஆலயத்தில் நடத்தி வந்த பத்ர தீப சேவையை. அவர் ஈசன் திருவடி சேர்ந்தவுடன் உமையாள்புரம் அன்னம்மாள் தொடர்ந்து நடத்தி வந்தார்.

கண்களில் நீர்சோர சரிதத்தைப் படித்துவரும் அனைவர் சார்பிலும் மானசீகமாக அவரை வணங்கி பிரியாவிடை கொடுப்போம்.

ஸ்ரீஸ்வாமிகளின் அடுத்த யாத்திரை எந்த ஊருக்கு ?

“அகவாழ்வு மற்றும் புறவாழ்வும் நீத்து
அகவை குறைபடினும் ஆன்ம வழியினில்
நின்றே இறையடி சேர்ந்தவோர் பெண்தெய்வம்
நன்றே நமைஎன்றும் காக்கும். ”

திருநெல்வேலி மாவட்டப் பயணத்தின் அடுத்த கட்டமாகத் தாம் அவதாரம் செய்த கங்கைகொண்டான் சென்றார்கள் மஹாசந்நிதானம் அவர்கள். அவ்வூர் வாசிகள் ஸ்ரீஸ்வாமிகளைப் பணிவுடன் அணுகினார்கள். அங்கு குடிகொண்டுள்ள ஆனந்தவல்லி சமேதரான கைலாசநாதர் கோயிலுக்கு அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நடத்தித்தர வேணுமாய் விண்ணப்பித்தனர். ஸ்வாமிகளும் தம் இசைவைத் தெரிவித்தார். ஸ்வாமிகள் ஒரு செயலில் ஈடுபட்டுவிட்டார் என்றால் முழுமூச்சாக அதில் இறங்கி விடுவார்கள் என்பதைப் பார்த்துள்ளோம்.

அஷ்டபந்தன கும்பாபிஷேகப் பணியில் ஈடுபட சம்மதித்ததும், அரிமழத்திற்கு ஆள் அனுப்பி சிவராமன் செட்டியார் மற்றும் காமாக்ஷிஜோசியர், கிருஷ்ணய்யரை வரவழைத்தார். வழக்கம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



போல் கும்பாபிஷேக வரவு செலவு பார்க்கும் பொறுப்பு செட்டியார்வசம் விடப்பட்டது. மேற்பார்வைப் பொறுப்புகள் மற்ற இருவரிடமும் ஒப்படைக்கப்பட்டன.

ஒரு வருடத்திற்குமேல் உழைத்து, நாடெங்கும் சென்று நிதிவசூல் செய்து தஞ்சை மாவட்டத்தில் ஒன்பது ஆலய குடமுழுக்குகளை மிகச்சிறப்பாக செய்த ஸ்வாமிகளின் செயற்கரிய சாதனையை அனைவரும் அறிந்திருந்தனர். எனவே அவரது அவதார தலத்துக் கும்பாபிஷேகத்தையும் சிறப்பாக நடத்தித் தருவார்கள் என்று ஊரினர் நம்பிக்கை கொண்டனர்.

நமது மஹாசந்நிதானம் அவர்கள் அவதரித்த இந்த புனிதபூமியில் அமைந்துள்ள திருக்கோயில் வரலாற்றை சுருக்கமாகப்

முன்னொரு காலத்தில் புளியமரங்கள் அடர்ந்த காடாக இந்தப்பகுதி விளங்கியது. மேய்ச்சலுக்காக நிறையப் பசுக்கள் இந்தக் காட்டிற்கு வரும்.அவற்றில் ஒரு பசு,புளியமரத்தின் அடியில் உள்ள பொந்திற்குள் பாலை சொரிந்தது. அதனை மாடு மேய்க்கும் ஆயன் பார்த்து விடுகிறான். மாடு பொந்தில் பால் சொரிந்த செய்தி ஊருக்குள் பரவி மன்னன் செவிகளை எட்டியது. தனது படை பரிவாரங்களுடன் அங்கு வந்த பொந்தைத் தோண்ட உத்தரவிடுகிறான். அங்கே ஒருபுற்றும், சிவலிங்கமும் தென்படுகின்றன. ஸ்வாமி குடிகொண்டிருந்த புளியமரத்தை வெட்டாமல் திருக்கோயில் ஒன்று அங்கே எழுப்ப அரசன் ஆணையிட்டான். அவன் கட்டளைப்படியே புளியமரத்தை வெட்டாமல் கோயில் கட்டப்படுகிறது.

ஸ்வாமி ஸ்ரீகைலாசநாதர் எனவும், அம்பாள் ஸ்ரீஆனந்தவல்லி எனவும் பெயர் பெற்றனர்.

பாண்டிய நாட்டில் உள்ள சைவக் கோயில்களில் சற்றே அபூர்வமாக மூலஸ்தான மற்றும் உற்சவ அம்மன் மூர்த்தங்கள் நான்கு திருக்கரங்களுடன் விளங்குகின்றன.ராமேஸ்வரம், சிவசைலம், கரிவலம்வந்தநல்லூர், கங்கைகொண்டான் ஆகிய நான்கு பாண்டியநாட்டுத் தலங்களில் அம்மன் நான்கு திருக்கரங்களுடன் அருள்புரிகிறார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



இத்திருக்கோயிலில் நவகிரஹங்களுக்குத் தனிச்சந்நிதி கிடையாது.

தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய ராஜராஜ சோழனின் மகன் கங்கைவரை படையெடுத்துச் சென்று வெற்றபெற்றதால் 'கங்கைகொண்டான்' என்று போற்றப்பட்டான். அவனது வழிவந்த குலோத்துங்க சோழன் ,தன் ஆட்சிக்காலத்தில் இவ்வூருக்கு ராஜேந்திர சோழனின் நினைவாக 'கங்கைகொண்டான்' எனப் பெயரிட்டான்.

இத்திருத்தலத்தில் இறைவன் வாமதேவரிஷிக்குக் காட்சி கொடுத்துள்ளார். வாமதேவரிஷிக்கு இங்கே தனிச்சந்நிதி உள்ளது.

இத்தகைய சிறப்புகளைக் கொண்ட இக்கோயிலின் திருப்பணிகள் குப்பாணிசிவன் அவர்கள் மேற்பார்வையில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. குப்பாணிசிவன் பம்பரமாய்ச் சுழன்று நுணுக்கமாக ஒவ்வொரு வேலையையும் கவனித்து வந்தார். ஒருசமயம் கோயிலின் மேல் தளத்தில் வர்ணம் தீட்டுபவர்களுடன் பேசிக் கொண்டிருப்பார்; அடுத்தநொடி மளிகைக் கடையில் பட்டியல்படி சாமான்கள் சரியாக, தரமாக இருக்கின்றனவா என்று சோதனை செய்வார்; அதற்கடுத்தநொடி சிவராமன் செட்டியார் அவர்களிடம் கணக்கு ஒப்புவித்துவிட்டு, தேவைக்கேற்ப பணம் பெற்றுக் கொண்டிருப்பார்; விழாவை நடத்த வந்திருக்கும் ஆகம, வைதிக விற்பன்னர்களைத் தக்கபடி வரவேற்று அவர்களுக்கு ஜாகை வசதிகள் ஏற்பாடு செய்யக் கிளம்பி விடுவார்;திரும்பிப் பார்த்தால் பரிசாரகர்களுக்கு அடுத்தவேளை என்ன சமைக்க வேண்டும் என்று திட்டம் சொல்லிக் கொண்டிருப்பார்;

அடுத்த நொடியே அலங்காரத்திற்கான மாலைகள், புஷ்பங்கள் சரியாக உள்ளனவா என்று சோதித்துக் கொண்டிருப்பார்; அடுத்த நிமிடம் வருகின்ற வித்வான்களை வரவேற்று அவர்களின் தேவைகளைக் கேட்டுக் கொண்டிருப்பார்.

ராமாயணத்தில் அண்ணன் ராமனுக்கு, தம்பி லக்ஷ்மணன் பக்க துணையாக இருந்தார்.இங்கோ தம்பி ஸ்ரீசுந்தரருக்கு அண்ணன் குப்பாணிசிவன் பக்கபலமாக இருந்தார். சிறு வயதிலிருந்தே தம்பியின் சிவபூஜைக்கு அபிஷேக நீர் எடுத்து



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வருவது, பூக்கள் கொய்து தருவது, விக்ரகங்களை முறையாக எடுத்து வைப்பது... என்று பல விதங்களிலும் உதவி செய்தவர்தானே!

ஸ்ரீமுகவருஷம், வைகாசி மாதம் 19-ம் தேதி, ஆங்கில வருடம் 1873, மே மாதம் கங்கைகொண்டான் கோயில் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. வையைச்சேரியில் இருந்து இசைமன்னன் மகாவைத்தியநாத ஐயரும் அவருடைய அண்ணன் ராமஸ்வாமி ஐயரும், கங்கைகொண்டான் வந்து கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு கச்சேரி செய்து சிறப்பித்தனர். சிலநாட்கள் தங்கி இருந்து ஸ்வாமிகளுக்கு உறுதுணையாக இருந்து கும்பாபிஷேகப் பணியில் ஒத்துழைத்தார்கள்.

ஸ்ரீஸ்வாமிகள் தம் ஜீவிய காலத்தில் இருபத்து மூன்று ஆலயங்களுக்குக் கும்பாபிஷேகம் நடத்தி வைத்திருக்கிறார்கள். அறுபத்து நான்கு ஆலயங்கள் என்பாரும் உண்டு. அவர் பிறந்த தலமான கங்கைகொண்டானில் நடத்தியதே அவரின் கடைசிக் கும்பாபிஷேகமாக அமைந்தது.

கங்கைகொண்டான் ஆலயத்தின் கும்பாபிஷேகம் சிறப்பாக நடத்தி முடித்த பிறகு திருநெல்வேலியில் சிலகாலம் தங்கி இருந்தார்.குலசேகரபட்டிணம் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி ஸ்வாமிகள் தம்முடைய சீடர்களுடன் அங்கே சென்றார்.

அந்த ஊர்மக்கள் சூதசம்ஹிதைப் படனத்தை பஞ்சாகமாக நடத்த ஏற்பாடு செய்திருந்தனர்.மிகத் திரளாக மக்கள் கூடி ஸ்வாமிகளின் அருளுரையைக் கேட்டார்கள். முதல்நாள் பிரவசனம் நிறைவுபெற்றது. அவரின் வாக்வன்மையில் அனைவரும் கட்டுண்டனர்.

இரண்டாம்நாள் நிகழ்ச்சி தொடங்கியது.சிறிது நேரத்தில் ஸ்வாமிகள் மௌனமானார்கள்.நாராயணசிவம் அவர்களைப் பிரவசனத்தைத் தொடரும்படி ஜாடை காட்டினார்.

மஹாசந்நிதானம் அவர்கள் பிரவசனத்தை நிறுத்திவிட்டு ஏன் மௌனமானார்கள்?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



“அவதரித்த ஊரினில் ஆனந்த வல்லி
தவம்புரிந்து தான்அடைந்த நாதருடன் அங்கே
குடிகொண்ட கோயில் குடமுழுக்கு கண்டே
அடியார் மகிழ்ந்தனர் காண்.”

மாவடி சிதம்பரம் பிள்ளையை ஜாடையில் அருகில் அழைத்தார் மஹாசந்நிதானம் அவர்கள். நாராயணசிவன் அவர்களின் பிரவசனத்திற்கு இடையூறு இல்லாமல் இருவரும் மண்டபத்தை விட்டு வெளியே வந்தனர்.

ஸ்வாமிகள் மௌனம் கலைத்தார். மெல்லிய குரலில், ரகசியமாக பிள்ளையிடம் கூறினார் :'மேலே ஆகாயத்தைப்பார். குப்பாணி சிவன் போய்க்கொண்டிருக்கிறான் பார். அதோ அங்கே பார்' என்று அவர் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுட்டிக் காண்பித்தார். புகை போன்ற ஒரு உருவம் மேலே மேலே போய்க் கொண்டிருப்பது துல்லியமாகத் தெரிந்தது பிள்ளை அவர்களுக்கு.

தொண்டை அடைத்தது; கண்கள் கலங்கின சிதம்பரம்பிள்ளை அவர்களுக்கு.

'நம் குப்பாணி சிவன்.....'வார்த்தைகளை முடிக்க முடியாமல் தொண்டை தழுதழுத்தது அவருக்கு.

'ஆமாம்! அவன் தன் கைலாய யாத்திரையைத் தொடங்கி விட்டான். ' மெல்லிய குரலில் பதிலைச் சொல்லிவிட்டு சிறிது மௌனமாக இருந்தார். பிறகு மண்டபத்தின் உள்ளே சென்றார் ஸ்வாமிகள்.

பீடத்தில் அமர்ந்தார்.

நாராயணசிவன் விட்ட இடத்திலிருந்து சூதசம்ஹிதை உரையைத் தொடர்ந்தார்.

நான்காம் நாள் படனம் முடிந்தது. இரவில் கதாகாலட்சேபமும், சிவபஜனையும் முடிந்த பின்னர் தம்முடைய சீடர்களுடன் கடற்கரையோரம் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அசாதாரணமான பலத்த சப்தம் அவர் தொண்டையிலிருந்து எழுந்தது. சீடர்களும், அண்மையில் இருந்தவர்களும் திடுக்கிட்டுப் போயினர். இதுபோன்ற ஒரு சப்தத்தை இதுவரை கேட்டிராத சீடர்கள்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இந்த ஒலியைக் கேட்டதும் ஸ்வாமிகளை அணுக அஞ்சினர். இருப்பினும் சிலநொடிகள் சென்ற பின்னர், 'இதென்ன ? ஏன் இந்த பலத்த சப்தம் ?'என்று பணிவுடன் கேட்டனர்.

'பத்தமடைக் கோயில் நகைகளைக் கொள்ளை அடிக்க திருடர்கள் உள்ளேபுக முயற்சித்தார்கள். பலத்த குரல் கொடுத்து உறக்கத்தில் இருந்த ஊர்மக்களை சப்தம் போட்டு எழுப்பி விட்டோம். அவர்கள், கோயிலில் புக இருந்த திருடர்களைப் பிடித்து தண்டித்து விட்டார்கள் என்று பதிலுரைத்தார்.

இரண்டு நாட்களில் குப்பாணிசிவன் சிவலோகப்பிராப்தி அடைந்த தகவலையும், பத்தமடைக் கோயிலில் திருடர்கள் பிடிபட்ட செய்தியையும் உறுதி செய்து குலசேகரபட்டினத்திற்குக் கடிதங்கள் வந்து சேர்ந்தன.

ஸ்வாமிகளைச் சூழ்ந்திருந்த பக்தர்கள் இவற்றை அறிந்து ஆச்சரியத்தில் மூழ்கினார்கள்.

சூதசம்ஹிதைப் பிரவசனத்தை பூர்த்தி செய்து கொண்டு மஹாசந்நிதானம் அவர்கள் சீடர்களுடன் திருநெல்வேலி வந்து சேர்ந்தார்கள்.

அவரைத் தரிசித்து வணங்கி ஆசிகள் பெற ஒரு இளைஞர் காத்திருந்தார். மெத்தப் படித்தவர்; தமிழ் அபிமானி; ஸ்வாமிகளின் போதனைகளாலும், நுட்பமான தத்துவக் கருத்துக்களாலும் கவரப்பட்டவர். அவர் மேனாட்டுத் தத்துவ அறிவிலே அதிகம் பயிற்சி பெற்றவர். தத்துவத்துறையில் பெரும் பட்டம் பெற்றவர். நமது நாட்டுத் தத்துவ அறிவை ஸ்வாமிகளிடம் கற்றுணர விரும்பினார்.

இன்று தமிழ் கூறும் நல்லுலகம் தலையில் வைத்துக் கொண்டாடும் ,போற்றும் அந்த இளைஞர் யார் ?

தனித்த ஒருஉறவும் இன்றி உடனாசு
சனித்த ஒருஉறவும் அற்று கடல் சூழ்
உலகிய உதித்தோர் அனைவரும் அன்பாய
விளங்கிட நின்றனன் எந்தை

மஹாசந்நிதானம் அவர்களை தரிசிக்க வந்த இளைஞர் பிறந்த தேதி ஏப்ரல் 4,1855.கேரளாவில் உள்ள ஆலப்புழாவில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



பிறந்தார். தந்தை பெயர் பெருமாள், தாயார் பெயர் மாடத்தி அம்மாள்.

இளவயதிலேயே சைவமதத்தின்பால் பற்றுக்கொண்டு விளங்கினார். தேவாரம், திருவாசகம் மற்றும் சமய வழிபாட்டு நூல்களைக் கற்றுத் தெளிந்தார்.

இவருக்குத் தமிழாசிரியராக விளங்கியவர் நாகப்பட்டினம் நாராயணசாமி என்ற தமிழறிஞர். இவரிடமே வேதாசலம் என்பவரும் பின்னர் பாடம் படித்தார். இவரை மறைமலை அடிகள் என்று சொன்னால் தமிழ்கற்ற அனைவரும் நன்கு அறிவார்கள்.

இவர் தன் இளம் பருவத்தில் தமிழ்ப்புலவரான தன்னுடைய தந்தையிடம் திருக்குறள், மூதுரை, பழமொழி, சிறுபஞ்சமூலம் போன்ற அறநூல்களைப் பழுதின்றிக் கற்றார்.

கடந்த நூற்றாண்டில் நமது நாட்டில் மதமாற்றப் பிரசாரம் மிகத் தீவிரமாக நடைபெற்று வந்தது. அதன் விளைவாக உயர் குடும்பத்தைச் சேர்ந்த சில இளைஞர்கள் கிறித்துவ மதத்திற்கு மாறினர். கிருத்துவ சமய நிறுவனங்கள் பல கல்விக்கூடங்களைத் திறந்தன. அவற்றில் ஆங்கிலக்கல்வி போதிக்கப்பட்டது. ஆங்கிலம் படிப்பது பெருமையாகக் கருதப்பட்ட காலம் அது. ஆங்கிலம் படிக்க. வந்தவர்களை கிருத்துவத்தைத் தழுவச் சொன்னார்கள்.

இந்த கட்டாய மதமாற்ற முயற்சி அன்றைய இந்துக்களிடையே ஒரு எழுச்சியை உண்டாக்கியது. இந்து இளைஞர்களுக்கு ஆங்கிலக் கல்வி அளிக்கும் ஒரு உயர்நிலைப் பள்ளியை திருநெல்வேலியில் நிறுவினார்கள். இந்தக் கல்விக் கூடம் அமைய இந்த இளைஞர் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். 1877–ல் தனது ஆசிரியப் பணியைத் தொடங்கினார். திருநெல்வேலி ஆங்கில - தமிழ்க் கல்விச்சாலையின் தலைவராக இரண்டாண்டுகள் பணியாற்றினார். இந்தக் கல்விக் கூடமே 1878–ல் 'இந்துக் கல்லூரியாக' உயர்ந்தது. அதன் முதல்வராக இவரே அப்பணியில் அமர்த்தப்பட்டார்.

இவர் பின்னர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவத்துறை ஆசிரியராகச் சேர்ந்தார். 1880–ல் எம்.ஏ.பட்டம் பெற்றார். அக்காலப் பாடத்திட்டப்படி மேனாட்டுத் தத்துவ



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அறிவிலே அதிகம் பயிற்சி பெற்றிருந்தார். நமது நாட்டுத் தத்துவஞான அறிவைப் பற்றியும், நூல்களைப்பற்றியும் அறிந்துகொள்ள ஆசைப்பட்டார். அக்கல்லூரியில் தத்துவத்துறைப் பேராசிரியராக இருந்த முனைவர் ஹார்வி துரையின் தொடர்பு இவருக்குக் கிடைத்தது.

மூன்றாண்டுகள் அங்கு ஆசிரியராகப் பணியாற்றிய பின்பு, திருவனந்தபுரம் அரசர் அரண்மனை வருவாய்த்துறையின் தனி அலுவலராக நியமிக்கப்பட்டார்.1885–ல் ஹார்விதுரை பேராசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றபொழுது, அக்கல்லூரியின் தத்துவத்துறையின் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

திருவனந்தபுரத்தில் 'சைவப்பிரகாச சபை'யினைத் தோற்றுவித்து சைவசமயத் தொண்டாற்றி வந்தார். இவருக்கு ராவ்பகதூர் உட்பட பல பட்டங்கள் கிடைத்தன.

இத்தகைய சிறப்புகளைப் பெற்றிருந்த, இனியும் பெறப்போகின்ற அந்த இளைஞர் தன் 'ஞானகுரு 'வாக ஸ்ரீசுந்தரஸ்வாமிகளை (ஏகலைவனைப்போல்) மானசீகமாக வரித்துக் கொண்டார். அவரை நேரில் சந்தித்து ஆசிகள் பெற வந்தார்.

யார் அந்த இளைஞர் ?

“ஞானகுரு வாக விளங்கிய உன்னையே
தானாக நாடியே வந்துன் னடிக்கீழ்
வணங்கியே பாடங்கள் கேட்டான் தமிழாம்
அணங்கினைப் பாடியே நின்றான். ”

இந்த இளைஞருக்கு கல்வெட்டு ஆராய்ச்சியிலும் ஈடுபாடு உண்டு. திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சியைச் செய்து, அதனை 1894–ம் ஆண்டில் வெளியிட்டார்.

பத்துப்பாட்டு பற்றிய ஆராய்ச்சியை ஆங்கில மொழியில் எழுதி சென்னை கிறித்துவக் கல்லூரி இதழில் வெளியிட்டார். மற்றும் நூற்றொகை விளக்கம்,திருவிதாங்கூர் பண்டைமன்னர் கால ஆராய்ச்சி (Early Sovereigns of Travancore) ஆகிய



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



நூல்களையும் வெளியிட்டார்.

தமிழ் இலக்கியத்தில் அதீத ஈடுபாடு கொண்டிருந்த இவர், 'தமிழில் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன் இலக்கியம் என்ற ஒன்று இல்லை.திருஞானசம்பந்தர் கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டிற்குப்பிற்பட்டவர்' என்று கால்டுவெல் அவர்கள் கூறிய பொய்யை வன்மையாக மறுத்தார். 'பாவம், கால்டுவெல் சங்க இலக்கியங்கியங்களைப் படிக்கவில்லை போல் இருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் இலக்கியங்கள் செழிப்புற்று விளங்கின.திருஞானசம்பந்தரின் காலமும் கி.பி.ஏழாம் நூற்றாண்டாகும்' என்று சான்றுகளுடன் நிலைநாட்டினார். நம்பியாண்டார் நம்பி அவர்களின் காலம்பற்றியும் எழுதியுள்ளார்.

திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக் காஞ்சி ஆகிய பத்துப்பாட்டில் இடம்பெற்ற இம்மூன்று பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். 'சாஸ்திர சங்கிரகம்' என்ற நூலையும் எழுதினார். இந்நூல் ஒரு உபன்யாசமாக எழுதப்பட்டு திருவனந்தபுரம் கலாசாலையில் வாசிக்கப்பட்டது. தமிழ் உரைநடைக்குப் புதியதொரு பரிணாமத்தையும், வடிவத்தையும் இந்நூல் தந்தது.

இவர் சிறிதும், பெரிதுமாக சுமார் இருபது நூல்களை எழுதி உள்ளார்.

மகோமகோபாத்யாய தக்ஷிணாத்யாய கலாநிதி உ.வே. சாமிநாத ஐயர் அவர்களுடன் நெருங்கிய நட்பில் இருந்தார். சட்டாம்பி ஸ்வாமிகள், தைக்காட்டு ஐயாவு ஸ்வாமி, நாராயண குரு ஆகியோருடனும் தொடர்பில் இருந்தார்.

இத்தகைய சிறப்புகளில் சிலவற்றை ஏற்கனவே பெற்றும், பிறவற்றைப் பின்னர்வரும் காலங்களில் பெறப்போகும், தமிழ்த்தாய்க்கு அணி செய்த இந்த இளைஞர் மஹாசந்நிதானம் அவர்களை நாடி வந்தார்.

**குரு–சிஷ்ய சந்திப்பு இவ்வாறு அமைந்தது :**

ஸ்ரீஸ்வாமிகளை தரிசித்த மாத்திரத்திலேயே உடலில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுவதை உணர்ந்தார். மனம் முழுவதும் இதுவரை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அறியாத பரவசம் பரவுவதை அறிந்து கொண்டார்.

மஹாசந்நிதானம் அவர்களின் சந்நிதியில் அமர்ந்ததும் எதுவும் பேசமுடியாத உன்னத நிலையை எய்தினார். தாம் அறிந்து,தெளிந்து கொள்ள வேண்டியவைகளை எந்தவித உரையாடலும் இன்றி புரிந்து கொள்ள முடிந்ததை அறிந்து வியந்தார். 'பேசாமல் பேசி சுகம் பெறும்' வித்தை கைவந்ததில், நன்றிப் பெருக்கால் இளைஞரின் கண்கள் பனித்தன.

தன்னுடைய ஞானகுருவை அறிந்து கொண்டதில் மனம் நிறைவடைந்தார். இந்த இளைஞர் மஹாசந்நிதானம் அவர்களைச் சந்தித்ததும் இவர் வாழ்வில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன.

இவர் எழுதிய மற்ற இலக்கிய, ஆராய்ச்சி நூல்களை மறந்தாலும் இவர் புகழை நிலைநாட்ட இந்த ஒரு நூல் போதும்.

செந்தமிழ் மொழிக்கு 'முத்தமிழ்' என்ற பெயருண்டு. இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டு தொன்றுதொட்டு முத்தமிழ் என்றே அழைக்கப்பட்டு வருகிறது. இவர் வாழ்ந்த 19–ம் நூற்றாண்டில் இயல், இசையையும்விட நாடகத்தமிழ் சற்றே நலிவுற்றுக் காணப்பட்டது.

தொல்காப்பியம் குறிப்பிடும் 'நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம்' என்ற கருத்தையும்; பட்டினப்பாலை கூறும் 'பாடல் ஓர்ந்தும் நாடகம் நடந்தும்' என்று படிக்கும் போதும்; குறுந்தொகையில் வரும் 'நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்து வீசிவீங்கு இன்னியங் கடுப்ப' என்ற வரிகளை ரசிக்கும் போதும் நாடகத் தமிழுக்கு உயிரூட்டவேண்டும் என்ற வேட்கை இவரிடம் கிளர்ந்தது.

எனவே ஒரு நாடக நூலை இயற்றினார். தமிழ் நாடக வளர்ச்சியில் அந்நூல் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அந்த நூலை இயற்றிய இளைஞர் சுந்தரனார். இவரை சுந்தரம் பிள்ளை என்று அழைத்தனர். இந்த நூலை இயற்றிய பிறகு நூலின் பெயரையும் இணைத்து "மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை" என்று போற்றப்பட்டார்.

இவர் இயற்றிய நூலிற்கும் நம் ஸ்வாமிகளுக்கும் என்ன



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolka



தொடர்பு ?

"சுந்தரனார் சுந்தரரின் தாள்பணிந்தே அன்னவர்
மந்திரமாய்ச் சொன்ன அருளுரை கேட்டு
தமிழ்தழைக்கக் காப்பியம் ஒன்றைப் படைத்து
அமிழ்தம் அளித்தார் நமக்கே"

தமிழுக்கும், கல்விக்கும் தன்னை அர்ப்பணித்தவர் சுந்தரம் பிள்ளை அவர்கள். இவர் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி, தமிழ் இலக்கிய சரிதம், தமிழ் நாடகம், தத்துவநூற் புலமை, கல்வெட்டுத் திறனாய்வு ஆகியவற்றில் மேம்பட்டு விளங்கினார். இவற்றில் சிறந்த நூல்களை இயற்றி இத்துறைகள் வளர்ச்சி அடைய உதவினார்.இவர் புதுமையைப் போற்றியதுடன் பழமையைக் கொண்டாடும் பண்பினையும் பெற்றிருந்தார்.

தமிழ்ப் புலமை மரபு காலனிய ஆட்சியின் தொடக்க காலத்தில் பல நெருக்கடிகளைச் சந்தித்தன. வேலை வாய்ப்புகளிலும், அரசாங்க நிர்வாகத்திலும் ஆங்கிலம் படித்தவர்களே அமர்த்தப் பட்டனர். மதமாற்றத்திற்கு காலனி அரசு இதைப் பயன்படுத்திக் கொண்டது. இந்த நிலையில் பழம் மரபுகளை மீட்டெடுக்க சங்க இலக்கியங்களை அச்சில் ஏற்றும் முயற்சியை தமிழ்ப்புலவர் பெருமக்கள் மேற்கொண்டனர். இதற்கு உ.வே.சா அவர்கள் இவர்களுக்கு முன்னோடியாக விளங்கினார். இவரைப் பின்பற்றிப் பழம் நூல்களை அச்சிடும் பணியில் முதலாவதாக விளங்கினார் சுந்தரம் பிள்ளை அவர்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் புகழ்பெற்று விளங்கிய தமிழ்ப்பெரியோர்கள் என பெ.சுந்தரம் பிள்ளை, ராவ்பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை, மாயூரம் வேதநாயகம் பிள்ளை, வி.கனகசபைப் பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார், சுப்ரமணிய ஐயர் எனப்படும் ராஜமய்யர் ஆகியோர் எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

சுந்தரம் பிள்ளை அவர்கள் அறிவை பேரறிவு, சிற்றறிவு, புலனறிவு என்று மூன்றாக வகுக்கின்றார். திருநெல்வேலியில் சைவமும், தமிழும் புத்துயிர் பெற்று விளங்கிய காலத்தில் இவர் பணி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிருங்கேரி மஹாசந்நிதானம்
ஸ்ரீஸ்ரீஸ்ரீ வித்யாதீர்த்த பாரதி ஸ்வாமிகள்

தமிழ்தாத்தா
உ.வே.ஸ்வாமிநாத ஐயர்

திருவாடுதுறை ஆதீனம்
ஸ்ரீ சுப்ரமணிய தேசிகர்



காஞ்சி மஹா பெரியவர்



யாழ்பாணம் ஆறுமுக நாவலர்

நாதப்ரும்மம் ஸ்ரீதியாகைய்யா அவர்களுக்கு
காட்சி அளித்த ஸ்ரீஸீதா ராமர்

Center for Shaiva Studies, Pondicherry Collection.

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



திரு.சிவ.சோமசுந்தர செட்டியார்
அரிமழம்

சிருங்கேரி மஹாசந்நிதானம்
ஸ்ரீஸ்ரீஸ்ரீ உக்ரநரசிம்ம பாரதி ஸ்வாமிகள்



திரு.சோம. சிவராமன் செட்டியார்
அரிமழம்

திரு.பேராசிரியர். மனோன்மணியன்
பெ. சுந்தரம்பிள்ளை



ஸ்ரீ மகா வைத்தியநாதர் ஐயர்



திரிபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தொடங்கியது.

அக்கால சுதேசி அறிஞர்களிடம் மூன்று விதமான போக்குகள் நிலவின. அவர்களில் ஒருபிரிவினர், மரபார்ந்த சுதேச மத, தத்துவ நிலைப்பாடுகளில் உறுதியாக நிலைத்து நின்றனர், பிரிதொரு பிரிவினர் ஐரோப்பிய கலாசாரத்தில் கரைந்துபோய் சுதேச மத, தத்துவ நிலைகளைக் குறை கூறுவதில் பெருமை கொண்ட அடிமைப் புத்தியினர், மூன்றாவது பிரிவினர் சுதேச மரபுகளை விட்டுக் கொடுக்காது, அதேசமயம் காலனி ஆதிக்கத்தால் அறிமுகமான அறிவுப் பரப்பை உள்வாங்கிக் கொண்டு தம் மத,தத்துவங்களைப் பரப்புதலில் ஈடுபட்டனர்.

இத்தகைய பிரிவினில் சுந்தரம் பிள்ளை அவர்கள் மூன்றாவது பிரிவைச் சார்ந்து நின்றார்.

இந்த நிலையில் கோடகநல்லூர் ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளைத் தன்னுடைய ஞான குருவாக ஏற்றுக் கொண்டார். சமயநெறி, வேதாந்தம், சைவசித்தாந்த சாத்திரங்கள், தத்துவம் ஆகியவற்றில் தமக்கு ஏற்படும் ஐயங்களை மஹாசந்நிதானம் அவர்களிடம் கேட்டுத் தெளிந்து கொண்டார்.

ஸ்ரீஸ்வாமிகளை தத்துவகுருவாக ஏற்றுக்கொண்ட சுந்தரம் பிள்ளை தம்முடைய நாடக நூலான "மனோன்மணீயத்தில் " சுந்தர முனிவர் என்னும் பாத்திரத்தைப்படைத்து, அவர் மூலம் நாடகம் தொடங்கி,தொடர்ந்து, பின் நிறைவுபெறுவதாக அமைத்திருந்தார். அப்பாத்திரத்தின் மூலம் பல அரிய தத்துவங்களைப் போதித்தார்.

சுந்தரம்பிள்ளை அவர்களின் காப்பியத்தில், மஹாசந்நிதானம் அவர்களின் கருத்துக்கள் எங்கெங்கே, எவ்வாறு இடம் பெற்றன ?

அவற்றுள் சிலவற்றைப்......... பார்ப்போம்.

"சுந்தரம் பிள்ளைஎன் றோர்சீடன் செய்தநற்
சுந்தரம் ஆனதோர் நாடகக் காப்பியம்
கற்றவர் போற்றும் மனோன்மணீயம் நாளுமே
நற்றமிழ்போல் நிற்கும் நிலைத்து."

சிலப்பதிகாரம் 'நாடகக் காப்பியம்' என்றால் மனோன்மணீயம் 'காப்பிய நாடகம்' என்று போற்றப்படுகிறது. ஒப்பற்ற காவிய நூலான



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்களால் 1891–ம் ஆண்டு வெளியிடப்பட்டது. 1879–ல் தொடங்கி சுமார் பன்னிரண்டு ஆண்டுகளில் இக்காப்பியத்தை எழுதி முடித்தார். தமிழ் தாத்தா உ.வே.சா அவர்கள் இந்நாடக நூலை அவ்வப்போது படித்து, திருத்தங்கள் செய்து, ஊக்குவித்து வந்தார்.

லிட்டன்பிரபு என்கிற ஆங்கிலேயர் எழுதிய 'இரகசிய வழி' (The secret way) எனும் நூலைத்தழுவி எழுதப்பட்டது இந்த நாடகம்.வரலாற்றுத் தொடர்புடையது போன்றும், தமிழ்நாட்டில் நிகழ்ந்தது போன்றும் அமைந்துள்ளது.

சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயம் நாடக நூல் தமிழைப் புதியதொரு துறைக்கு திசை திருப்பி விட்டது. தமிழ் நாடக வளர்ச்சிக்குத் திருப்பு முனையாக அமைந்தது. இன்பியல் நாடகமான இதில் தமிழின் பல பா வகைகள் இடம்பெற்றுள்ளன. கடவுள் வாழ்த்தையும் சேர்த்து மொத்தம் 4502 அடிகளில் இந்நாடகம் அமைந்துள்ளது. 1893–களில் இந்நூல் கல்லூரிகளில் முதன்முதலாகப் பாடநூலாக வைக்கப்பட்டது.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் அதனதன் தேவைக்கு ஏற்பத் திட்டமிட்டு அமைத்து இருக்கிறார். கதைப்போக்கின்படி ஒவ்வொருவரும் எந்த எந்த இடத்தில் வரவேண்டுமோ, அந்தந்த இடத்திலேயே வருகின்றனர். எவ்வளவு பேசவேண்டுமோ அவ்வளவே பேசுகின்றனர்.

இந்தக் காப்பிய நாடகத்தின் தொடக்கத்தில் வந்து, கதையை நடத்திச் சென்று, இன்பமாக நிறைவு செய்வது சுந்தர முனிவர் பாத்திரமாகும். இவரின் படைப்பு, கண்ணியம் நிறைந்த ஒன்றாகும். கருணையே வடிவானவராகப் படைக்கப்பட்டு இருக்கிறார். காடு, மேடுகளில் அலைந்து, மலைக்குகையினில் கடுந்தவம் புரியும், தனிமையை விரும்பும் முனிவராய்க் காட்டாமல், மக்களோடு மக்களாய்க் கலந்து மக்கள் நலம் பேணுபவராய், மன்னனுக்கு தக்க அறிவுரைகள் கூறி நெறிப்படுத்தும் முனிவராய் படைக்கப் பட்டிருக்கிறார். அதனால் நாடகத்தின் தொடக்கமே இவ்வாறு அமைகிறது:

"சுந்தர முனிவன் சிந்துர அடியும்;



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வாரிசம் போன்ற மலர்ந்த வதனமும்;
கருணை அலையெறிந் தொழுகுங் கண்ணும்;
பரிவுடன் முகிழ்க்கு முறுவலும்;
........புரையறு உரையும்;
சாந்தமுந் தயை தங்கிய உடலும்...”

“முனிவரர் என்றிடிற் கனிவுறுங் கல்லும்.”
“...திருவடி தீண்டப் பெற்றவிச் சிறுகுடில்
அருமறைச் சிகரமோ ஆலநன் னீழலோ
குருகுல விஜயன் கொடித்தேர்ப் பீடமோ
யாதென ஓதுவன் ?...”

“ஊன்வரு பெருநோய் தான்விட அடைந்த
அன்பரின் புறஇவ் வருளுறத் தாங்கி
வந்தருள் கிருபா சுந்தர மூர்த்தி!”

என்று மஹாசந்நிதானம் அவர்களைப் படம்பிடித்துக் காட்டி நம் கண்முன்னே கொண்டு வருகிறார்.

இக்காப்பியத்தில் சுந்தரமுனிவரின்சீடர்களாய் வரும் நிஷ்டாபரர், கருணாகரர் உரையாடல்களிலும், ‘சிவகாமி சரிதம்’ என்ற இன்னிசைப் பாட்டிலும், நாராயணன் உள்ளிட்ட மற்ற கதாபாத்திரங்களின் மூலமும் ஸ்வாமிகளின் வேதாந்தக் கருத்துக்களும், ஞான அனுபவ உண்மைகளும் வெளிப்படுகின்றன.

நூலின் முகவுரைக்கு அடியிலும், முடிவிலும் “குரு சுந்தர சரணாலயம்” என்று வரைந்திருப்பதிலிருந்து சுந்தரம் பிள்ளையின் குருபக்தி வெளிப்படுகிறது.

‘இந்த நாடகத்தை எழுதுவதினால் தமிழில் நாடக இலக்கியம் இல்லாத குறையை ஓரளவு பூர்த்தி செய்வது எனது நோக்கம்’ என்று ஆசிரியர் குறிப்பிட்டு எழுதி இருப்பது உண்மையே ஆகும். ஆயினும் நாடகத்தை நுட்பமாகப் படித்துப் பார்த்தால், அதைவிட சிறந்த நோக்கத்துடனே இந்த நாடகம் எழுதப்பட்டிருப்பது புலனாகும். அது தன்னுடைய ஞான, வேதாந்த குருவான ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளுக்கு காணிக்கை செலுத்துவது என்பதே. நாடகத்தின் கதையிலும், கருத்திலும், உரையாடல்களிலும் இந்த நோக்கம் வெளிப்படுவதைக்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



காணலாம்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் ஸ்வாமிகளிடம் அவர்தம் ஒப்புதல் கேட்டு கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்தார்.

அது என்ன கோரிக்கை ?

"சுந்தர நல்முனியின் நற்கருணைப் பார்வையும்
சிந்துர வண்ணம் நிகர்பொன் திருவடியும்
அன்றலர்ந்த தாமரை ஒத்த வதனமும்
நன்மையை நாளுமே நல்கும்."

எவன் தன்னிடத்திலேயே தான் மகிழ்வாக இருக்கின்றானோ அவனே ஞானி ஆவான். வைராக்கியம், விவேகம், மனவடக்கம், புலனடக்கம், தியாகம், சாந்தம், அமைதி, முழுமைபெற்ற அறிவு, சமாதானம், கருணை, ஞானம், பொறுமை, அஹிம்சை, முமுச்சுத்துவம், சத்தியம், தர்மம், தயை போன்ற நற்குணங்கள் அமைந்தவர் மகான் எனப்படுவார். நம் பாரதத்தில் அவதரித்த அத்தகைய மகான்களில் ஒருவர்தான் ஸ்ரீசுந்தர ஸ்வாமிகள்.

அவருடைய தலை மாணாக்கர்களில் ஒருவர் சுந்தரம்பிள்ளை அவர்கள். அவர் மகானை சாஷ்டாங்கமாகப் பணிந்தார். அந்த நமஸ்காரத்தில் அன்பு இருந்தது; பணிவு இருந்தது; பக்தி இருந்தது.

(சாத்திரங்களில் ஐந்து வகையான மரபுவழி வரவேற்பு முறைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் 'நமஸ்காரம்' என்பதும் ஒன்று. நமஹ என்ற சொல்லிற்கு 'ந மம:' அதாவது 'என்னுடையது அல்ல என்ற பொருள்தரும். பெற்றோர், குருமார்கள், ஆசிரியர்கள், மரியாதைக்கு உரியவர்கள், பெரியவர்கள் ஆகியோரை நெடுஞ்சாண்கிடையாகக் கீழே விழுந்து வணங்குதல் நம் பண்பாடு.)

வணங்கி எழுந்தபின் தன் கருத்தினைக் கூறினார்:

"கருணை வடிவாய் வந்த முனீஸ்வரரே! எல்லாம் அறிந்த தங்களிடம் யான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆர்வமும் ஞானமும் அணிகலனாய்க் கொண்டவரே! குரு மூர்த்தியே! ஸ்வாமிகளின் போதனையும், விளக்கங்களும் நூல்வடிவில் வந்தால் உலகத்திற்குப் பயன்படும். குருநாதர் சம்மதம் அளித்தால்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அப்பணியை அடியேன் தொடங்குவேன்.''

குருநாதர் : 'யாம் அரிமழம் செல்லும் நேரம் நெருங்கி விட்டது. சிறிது காலம் பொறுத்திரு'.

ஸ்வாமிகளின் நூல் 'நிஜானந்த விலாஸம்' என்ற பெயரில் பின்னர் அச்சிடப்பட்டது. அதைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களே பதிப்பித்தார்.

ஸ்வாமிகள் திருநெல்வேலி பஜனை மடத்தில் தங்கி இருந்த பொழுது சுந்தரம் பிள்ளை முதலிய மாணாக்கர்களும், சீடர்களும், 'ஸ்வாமி, யாவர்க்கும் பயனளிக்குமாறு பிரம்மகீதையைத் தமிழில் மொழி பெயர்த்து அருளவேண்டும்' எனக் கேட்டுக் கொண்டனர்.

மஹாசந்நிதானம் அவர்கள், அதற்கிணங்க தாம் சொல்லச் சொல்ல சொக்கலிங்கம் பிள்ளை அவர்களை எழுதச் செய்தார். இதற்கு முன்னரே தத்துவராய ஸ்வாமிகள் மொழிபெயர்த்த பிரம்ம கீதையொன்று ஏட்டிலிருப்பதாக ஐயாசாமிப் பிள்ளை அவர்கள் தெரிவித்தார். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் இருவர் உரையும், மொழிபெயர்ப்பும் ஒன்றுபோலவே அமைந்திருந்தது. ஆகவே ஸ்வாமிகள் அவர்கள் விசேஷ உரை ஒன்றை எழுதினார்கள். அந்த சிறப்பு உரை பின்னர் சென்னபட்டிணத்தில் அச்சிடப்பட்டது.

இவ்வாறு நமதுஸ்வாமிகளிடம் சுந்தரம் பிள்ளை அவர்கள் கொண்ட பக்தி அளவிடற்கரியது.

'ஞானதயாநிதி நங்குருநாதன்
ஈனனாம் என்னையும் இழுத்தடி சேர்த்த
வானநற் கருணை.....'என்றும்,
'...................நம்நிலை
கண்டுளம் இரங்கிக் காத்தருள் புரிந்து தொண்டு கொண்டார்
சுந்தரன் கருணை
நமக்கென் உரித்தோ ? நானா உயிர்கள்
எவர்க்கும் அது பொதுவன்றோ ? இயம்பீர்.
எங்கிலை அவனருள் ? எல்லையில் அண்டம்
தங்குவ தனைத்தும் அவனருட் சார்பில்.......'என்றும்,
'எல்லாம் அவனருள் அல்லா தில்லை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolk



என்னனு பவமிது....
நெருப்பிடை இழுதென நெக்குநெக் குருகி
இருப்பவர் பிறர்க்கும் இராப்பகல் உழைப்பர்
ஒருபயன் கருதார்.........'எனவும்,
'தேவரீர் செய்யும் திருவரு ளுக்குமா
றெதுவும் உளதோ ? ஆ ஆ அடிகாள்
வழுதியர் பலர்பலர் வழிவழி காக்கும்
முழுமதித் தொழுகுலத் தெய்வம் நீ....'

எனவும் பற்பல இடங்களில் மஹாசந்நிதானம் அவர்களை, அவரின் கருணையைப் போற்றுகின்றார்.

"காலம் என்பது கறங்குபோற் சுழன்று
கீழது மேலாய் மேலது கீழாய்
மாற்றிடும் தோற்றம் என்பது மறந்தனை......" போன்ற ஸ்வாமிகளின் தத்துவக் கருத்துக்கள் அவரின் திருவாய் மூலம் வெளிப்படுவதாக காப்பியத்தை அமைத்துள்ளார்.

தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் நன்கு அறிந்த பேராசிரியரின் ஒப்பற்ற ஆசான் நம் மஹாசந்நிதானம் என்பதைப் பலரும் அறிந்திலர் என்பது வருத்தத்திற்குரியது.

சுந்தரம்பிள்ளை அவர்கள் நம் ஸ்வாமிகளைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றைப் பதிவு செய்திருந்தால் மிகச் சிறப்பாக இருந்திருக்கும்;பல புதிய செய்திகளும் நமக்குக் கிடைத்திருக்கும்.

சுந்தரம் பிள்ளை அவர்கள் தமது 42–ம் வயதில், 26, ஏப்ரல் 1897–ம் ஆண்டு சிவனடி சேர்ந்து விட்டார். இன்னம் சிறிது காலம் வாழ்ந்திருந்தால் ஸ்ரீஸ்வாமிகளின் வாழ்க்கை வரலாற்றை எழுதி இருக்கலாம்.

ஸ்வாமிகள் அருளிய மற்ற நூல்கள் யாவை ?
"ஒப்பற்ற சீடனைத் தீந்தமிழ் பாடவைத்து
எப்பற்றும் இல்லாநீ கண்டே மகிழ்ந்தாய்இந்
நானிலம் உள்ளவரை நற்றமிழ் கற்றவர்
பாநலம் ஏத்தி மகிழ்வர். "

மஹாசந்நிதானம் அவர்களிடம் பிரம்மகீதை, சூதசம்ஹிதை,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பெருந்திரட்டு, அத்வைத சித்தாந்தங்களைக் கற்றறிந்தார் சுந்தரம் பிள்ளை அவர்கள். இந்த சித்தாந்தத்தை அடிப்படையாக வைத்தே 'மனோன்மணீயமும்' அதன் உட்கதையான' சிவகாமியின் சரிதமும் எழுதப்பட்டன.

'மதுரை திரவியம் தாயுமானவர் ஹிந்து கல்லூரி'யைத் (MTD Hindu College) திருநெல்வேலியில் தொடங்கக் காரணமாய் இருந்தார். இரண்டாண்டுகள் அக்கல்லூரியின் முதல்வராகவும் இருந்தார்.

இவர் ஸ்ரீஸ்வாமிகளின் 'நிஜானந்த விலாசம்' நூலைப் பதிப்பித்தார்.

சுந்தரஸ்வாமிகளின் நூல்களைப் பற்றிய ஒரு சுவாரசியமான செய்தி. இன்றைய நூலாசிரியர்கள் போல் சிந்தனை செய்து ஓலைச் சுவடியிலோ காகிதத்தில் எழுதுகோல் கொண்டு எழுதுவதோ அல்ல. அவர் வேதாந்த நுட்பங்களை, சூதசம்ஹிதை பிரவசனத்தின் போதோ, சிவபுராண சொற்பொழிவின் போதோ, சீடர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போதோ சொல்லுவதை சீடர்கள் குரு வாக்கியங்களாக எழுதிக் கொள்வார்கள். அதை ஸ்வாமிகளிடம் சமர்ப்பிப்பார்கள். அவர் பிழை திருத்தம் பார்த்து செப்பனிட்டுத் தருவார். அவ்வாறு எழுதப்பட்டு பிறகு அச்சில் ஏறியவைதான் அவருடைய நூல்கள்.

அவருடைய நடை வேதாந்தக் கருத்துகள் நிரம்பியதாகவும், தமிழும் வடமொழியும் கலந்த மணிப்பிரவள நடையில் கடினமாக இருந்ததாலும், வேதாந்த பரிபாஷைகள் மிகுந்திருந்ததாலும் இன்றைய தலைமுறையினரில் பெரும்பான்மையோர் அவற்றைப் படித்துப் புரிந்து கொள்வது என்பது துர்லபம்.

சுவாமிகள், முன்னோர்கள் கருத்துக்களை சங்கர பகவத்பாதாள் காட்டிய வழியில் பின்பற்றியவர். காலத்திற்கேற்ற நல்ல புதியபுதிய கருத்துக்களையும் தெரிவித்துள்ளார். ஆயினும் அவரது உரையைப் படித்துத் தெளிவது என்பது இன்றைய



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolka



காலகட்டத்தில் மிகப் பலருக்குக் கடினமான ஒன்றேயாகும்.

ஆனால் மக்கள் கடவுள் பக்தியில் ஈடுபட்டு கசடற வாழ வேண்டும் என்பதே அவருடைய சித்தமாகும்.

மஹாசந்நிதானம் அவர்களின் மூன்று வேதாந்த விளக்க நூல்கள்

1) ஸ்வாநுபூதி ரசாயனம்

2) ஸ்வாநுபவ ரஸமஞ்சரி

3) நிஜானந்த விலாஸம் என்பவை ஆகும்.

இவை தவிர பிரம்மகீதைக்கு தத்துவராயர் செய்த மொழிபெயர்ப்பிற்கு விசேஷ உரை எழுதி உள்ளார்.

**ஸ்வாமிகளின் முதல்நூல் ஸ்வாநுபூதி ரசாயனம் :** 125 பக்கங்கள் உள்ள இந்நூலில் 22 பிரகரணங்கள் அல்லது அத்தியாயங்கள்உள்ளன.

**ஸ்வாநுப ரஸமஞ்சரி :** இதுவும் 22 பிரகரணங்களைக் கொண்டது. வேதாந்த விஷயங்களைப் பொருளாகக் கொண்டு பல ஆழ்ந்த கருத்துக்களை நுட்பமாக விளக்கி உள்ளார்.இந்த நூலின் நடையும் முதல் நூலைப் போலவே இன்றைய நிலைக்குக் கடினமானதே ஆகும்.

**நிஜானந்தவிலாசம் :** 200 பக்கங்களும் 14 பிரகரணங்களும் கொண்டது. இந்தநூல் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் பதிப்பித்ததால் ஏனைய இரண்டு நூல்களைவிட படிப்பதற்கு லகுவாக இருக்கிறது. இந்த நூல் குரு–சிஷ்ய சம்வாதமாக அமைந்துள்ளது. அரிமழத்தில் இருந்தபொழுது எழுதியவற்றை, முன்னர் எழுதிய பகுதிகளுடனும் இணைத்து பிரசுரிக்கப்பட்டது.

சுந்தர ஸ்வாமிகள், பிரம்மகீதைக்கு தத்துவராயார் செய்திருக்கும் தமிழ்ச் செய்யுள் மொழிபெயர்ப்பிற்கு விசேஷ விரிவுரை எழுதியுள்ளார் என்பதைப் பார்த்தோம். இதுவும் எளிய நடையில் அமைந்ததல்ல.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இந்த சரிதத்தில் அதிகமாகக் கொண்டாடப்பட்ட சூத சம்ஹிதையின் வரலாறு என்ன?

“பகவான் புகல அடியவன் கேட்ட
பகவனின் கீதை நிலைபெற்றாற் போல
இகபரம் சொல்லிய சுந்தரன் வாக்கு
சகத்தில் நிலைபெற் றிருக்கும்.”

பதினெண் மஹாபுராணங்களில் பத்து சிவபுராணங்கள். இவற்றில் மிகப் பெரியது ஸ்காந்த புராணம். நூறாயிரம் ஸ்லோகங்களால் ஆனது; ஆறு சங்கிதைகளைக் கொண்டது. இதில் சங்கர சங்கிதையும் ஒன்று. சங்கர சங்கிதையில் உள்ள பல கண்டங்களில் சிவரகசிய கண்டமும் ஒன்றாகும். இது 13000 கிரந்தங்களையும் ஏழு காண்டங்களையும் உடையது.

உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷகாண்டம், உபதேச காண்டம் என்பன அவை.

இவற்றில் உபதேச காண்டம் தவிர மற்ற ஆறு காண்டங்களையும் உள்ளடக்கியது கச்சியப்ப சிவாச்சாரியாரின் தமிழ் கந்த புராணம்; 135 படலங்களையும், 10135 பாடல்களையும் கொண்டது. முருகப் பெருமானின் வரலாற்றை முழுமையாகவும், முறையாகவும் கூறுகின்றது.

உபதேச காண்டம் என்னும் பெயரில் 15–ம் நூற்றாண்டில் வாழ்ந்த இரு பெரும் புலவர்கள் தமிழில் இரண்டு நூல்கள் செய்துள்ளனர்.

அப்புலவர் பெருமக்கள்:

1) கோனேரியப்பர் 2 )ஞானவரோதயர்.

தமிழில் இயற்றப்பட்ட இரண்டு உபதேச காண்டங்களை ஒப்பிடும் பொழுது ஞானவரோதயர் நூல் வடமொழி நூலை அடியொற்றியதாக உள்ளது.

கோனேரியப்பர் நூல் தமிழில் உள்ள கந்தபுராணத்தைத் தழுவியதாக உள்ளது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolka



மகாபுராணம் என்பது வடமொழி புராணத்தை அப்படியே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது என்பதாகும்.

இதிகாசம் என்பது காவிய அமைப்போடு பாடப்பட்ட மகாபுராணத்தின் ஒருபகுதி.

வடமொழி புராணத்தின் ஒருபகுதி என்பதைக்காட்ட

சங்கிதை, கண்டம், காண்டம் என்னும் சொல் சேர்க்கப் பட்டிருக்கும். தல வரலாறு, அடியார் புராணம் என்பவை போல.

கோனேரியப்பர் உபதேச காண்டத்தை 4347 செய்யுள்களில் பாடி உள்ளார். இதில் சூரன் முதலியோரின் முன்னை வரலாறும், விபூதி மஹிமை, ருத்ராக்ஷ மஹிமை,சிவநாம மஹிமை ஆகியவை கூறப்பட்டுள்ளன.

ஞானவரோதயர் பாடிய உபதேச காண்டம் வயலூர் முருகன் அருளால் பாடப்பெற்றது. இவரது உபதேச காண்ட நூல் 2600 பாடல்களைக் கொண்டது. இவருடைய மாணாக்கர் கவிகாளமேகம் ஆவார்.

ஸ்கந்த புராணம், பதினெட்டு புராணங்களில் அளவில் பெரியது. இப்புராணம் இரண்டு வடிவங்களுடன் உள்ளது. ஒன்று சம்ஹிதை மற்றொன்று காண்டம் எனப்படும். சம்ஹிதை என்றால் தொகுப்பு என்று பொருள்.

அவை 1) சனத்குமார சம்ஹிதை – 36000 பாடல்கள்;
2) சூதசம்ஹிதை – 6000 பாடல்கள்;
3) சங்கர சம்ஹிதை – 30000 பாடல்கள்;
4) வைஷ்ணவ சம்ஹிதை – 5000பாடல்கள்;
5) ப்ரும்ம சம்ஹிதை – 3000 பாடல்கள்;
6) சௌரசம்ஹிதை – 1000 பாடல்கள்

என்ற முறையில் அமைந்துள்ளன.

இந்தப் புராணத்தின் மூலபாடம் முழுவதையும் தமிழில் முதலில் வெளியிட்டவர் யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலர். இவரே கந்த புராணத்தை வசன நடையிலும் எழுதி வெளியிட்டார்.

இந்தப் புராணம் பல்வேறு சடங்குகள் பற்றி மிக விரிவாகப் பேசுகின்றது. பிரசித்த பெற்ற ஸ்ரீஸத்யநாராயணர் கதை இப்புராணத்தில் உள்ளது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மூலநூலான ஸ்கந்த புராணத்தில் உபதேசகாண்டமும் அதில் உள்ளடங்கிய ஸூதசம்ஹிதையும் இடம் பெற்றுள்ளன. ஆனால் கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தபுராணத்தில் இவை இடம் பெறவில்லை என்பதை முன்னரே பார்த்துள்ளோம்.

வடமொழியிலும் ஏனைய மொழிகளிலும் மிகவும் புலமை வாய்ந்த சுந்தரர் ஏன் மற்ற புராணங்களையும், கண்டங்களையும், காண்டங்களையும், சம்ஹிதைகளையும் விடுத்து ஸூதசம்ஹிதையைத் தேர்ந்தெடுத்தார்? அப்படி அதன் சிறப்பு என்ன?

"சம்ஹிதை என்றதோர் தத்துவ போதனை
நம்பியே வந்தோர்க்கு நல்கிப் பிறவியாம்
பாச வினைகள் அறுத்து இறைவனின்
பாத மலரடி சேர்த்தான்."

மஹாசந்நிதானம் அவர்கள் ஸூதசம்ஹிதையை விசேஷமாகத் தமது பிரவசனத்திற்கும், சொற்பொழிவுளுக்கும் எடுத்துக் கொண்டார். ஏன்? காரணம் அவர்களுடைய மனதில் ஆழமாகப் பதிந்திருந்த சிவபக்தியே ஆகும்.

இசைத்துறையில் உள்ளவர்கள் ஒரு ராகத்தில் ஈடுபட்டு அந்த ராகத்தின் ஜீவனைப் பிழிந்து தருவார்கள்.

சில சமயச் சொற்பொழிவாளர்கள் ஒரு குறிப்பிட்ட புராண, இதிகாச, காப்பியக் கதையைச் சுவைபடச் சொல்லுவதில் சிறந்து விளங்குவார்கள்.

ஆன்மீகத் துறையில் தோன்றிய ஆன்றோர்களில் சிலர் ஒரு இஷ்ட தேவதை வழிபாட்டை விசேஷமாக அருளுவார்கள்.

நமது ஸ்வாமிகள் வடமொழியில் ஆழ்ந்த பாண்டித்தியம் பெற்றவர். பதினென் புராணங்கள், சதுர் வேதங்கள், வேதாந்தங்கள், பல மொழி இலக்கியங்கள் ஆகியவற்றில் பெரும் புலமை பெற்றுத் திகழ்ந்தவர். எதைப் பற்றியும் தெளிவாக,கேட்டார் பிணிக்கும் தகையவாய்ப் பேசும் நாவன்மை உடையவர்.ஆயினும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolka



ஸ்வாமிகளுக்கு சிவமஹாபுராணங்களிலும், அதிலுள்ள ஸ்காந்தத்திலும், குறிப்பாக ஸ்காந்தத்தின் ஒருபகுதியான சூதசம்ஹிதையிலும் ஆர்வம் அதிகமாய் இருந்தது.

சூதசம்ஹிதை, நைமிசாரண்யத்தில் சூதமுனிவரால் ரிஷிகளுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. சூதசம்ஹிதைக்கு வித்யாரண்யர் என்று அறியப்படும் மாதவச்சாரியார் சமஸ்கிருதத்தில் உரை எழுதி இருக்கிறார். இதில் சிவமஹாத்மிய காண்டம்,ஞானயோக காண்டம், முக்தி காண்டம், யக்ஞவைபவ காண்டம் ஆகிய நான்கு பகுதிகள் உள்ளன. யக்ஞவைபவ காண்டத்தின் இறுதிப் பகுதிதான் பிரம்மகீதை எனப்படும். இதில் பன்னிரண்டு அத்தியாயங்கள் உள்ளன.இந்தப் பகுதியைத் தத்துவராயர் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அதில் 541 பாடல்கள் உள்ளன. பிரம்ம கீதையில் சாந்தோக்யம், பிருஹதாரண்யம் உள்பட ஏழு உபநிடதங்களின் சுருக்கம் காணப்படுகிறது.

சூதசம்ஹிதை மஹாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களால் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டது. வல்லூர் தேவராஜபிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது.

அக்காலத் தமிழறிஞர்கள் பலரும் வடமொழியிலும், தமிழிலும் புலமை பெற்றிருந்தனர். சூதசம்ஹிதையைத் தமிழில் அருமையாக மொழிமாற்றம் செய்ததற்காக மஹாவித்வான்மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களை ஸ்வாமிகள் பாராட்டினார். தம் பிரவசனத்தின் போது, தமிழ் சூதசம்ஹிதைப் பாடல்களைப் பாகவதர்களைப் பாடச்சொல்லிக் கேட்டு ஆனந்திப்பார் மஹாசந்நிதானம் அவர்கள்.

ஸ்வாமிகளின் பிரவசனங்கள், கேட்பவர் மகிழும்படியும், உணரும்படியும் அமைந்திருக்கும்.

சொல்லும் கருத்துக்கள் தெளிவாக, அழகாக இருக்கும். பேச்சு சொற்கள் தர்க்க முறைக்கு மாறுபடாது இருக்கும். 'உரைப்பது எடுத்துக்காட்டுடனும், அனுபவத்துடனும் மிளிரும். பேச்சு உண்மைதான்' என்று கேட்பவர் உணரும்படி அமைந்திருக்கும். பேச்சு ஒரு கலை, அது பேராற்றல் வாய்ந்தது என்பது அனைவரின் உள்ளத்திலும் ஊடுருவும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நம் சனாதனமத சந்நியாசிகளின் மனம் கவர்ந்த நூல் சூதசம்ஹிதை.

சம்ஹிதை தர்மத்தை முக்கியமாகக் கொண்டது;ஞானம் அதனுள் அடக்கம் எனக்கூறுவது. புராணம் என்பது ஞானத்தைப் பிரதானமாகவும் தர்மத்தை சாதனமாகவும் கூறுவது.

முற்பிறவியில் செய்த நற்பயனே ஒருவனை சிவபக்தியில் சேர்க்கும். அந்த பக்தி முறையாக சிவன் பெயரைக் கேட்டல், திருத்தலங்களைத் தரிசித்தல், அவன் நாமத்தைச் செப்புதல் என்பதாகும்.

சூதசம்ஹிதை சகல பாவங்களையும் நசிக்கச் செய்யக் கூடியது. மிகவும் மங்களகரமானது. மோக்ஷத்தை அளிக்கக் கூடியது. பயத்தை நாசம் செய்யக் கூடியது. புத்தி, சக்தியை அளிக்கக் கூடியது. மாயையை விலக்கவல்லது.

இத்தகைய சிறப்புகளை உடைய சூதசம்ஹிதை பக்தர்களை அடையவேண்டும் என்பதில் மஹாசந்நிதானம் அவர்கள் விருப்பப்பட்டதில் வியப்பேதும் இல்லையே!

திருநெல்வேலியில் இருந்து கிளம்பும் முன்னதாகத் தம்முடைய அருளுரையை சீடர்களுக்கு வழங்கினார் ஸ்வாமிகள். அந்த உரையின் முக்கியத்துவம் என்ன ?

"நல்லோர்க்கும் கற்றறிந்த ஞானியர் என்போர்க்கும்
எல்லோர்க்கும் ஏற்றம் தரும் தர்மம் பூமியில்
நாளும் வளர உரமாகிப் போனவன்
தாளினை நன்றாய்ப் பணிவோம். "

மஹாசந்நிதானம் அவர்களின் அருளுரையைக் கேட்க கிருஷ்ண தருவாடியார், சதாசிவ தருவாடியார்,முத்து செல்லமையர், ஐயாசாமிபிள்ளை, மாவடி சிதம்பரம்பிள்ளை, ராமச்சந்திர மேத்தா, ஆவுடையப்ப பிள்ளை, கொ.சிதம்பரம் பிள்ளை, பிச்சு ஸ்வாமிகள், சேரை சௌந்திரபாண்டியன் பிள்ளை,காந்திமதிநாதப் பிள்ளை, கோடகநல்லூர் ராமசாமி சிவன்,நாராயணசிவன், சூரியநாராயண சிவன், சேஷாசல தீக்ஷிதர், நீலகண்ட ஐயர், சொக்கலிங்கம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata.



பிள்ளை, பெ.சுந்தரம் பிள்ளை ஆகிய சீடர்களும் மற்றும் திரளான பொதுமக்களும் கூடியிருந்தனர்.

"என்றும் எங்கும் நிலைத்திருக்கும் பொருள் ஒன்றே ஒன்றுதான். அதுவே பரப்ரும்மம். அது 'ஸத்' என அறியப்படுகிறது. அதுவே 'பரமாத்மா' எனவும் அழைக்கப்படுகிறது. ப்ரும்மம் ஒன்றே மெய்ப்பொருள்.

அனைத்து உயிர்களிலும் உயிராகவும்,அறிவாகவும்இருப்பது ஜீவாத்மா. அகில உலகிற்கும் அடிப்படையாய், மெய்ப்பொருளாய் இருக்கும் பரமாத்மாவும், ஜீவாத்மாவும் வேறு வேறு அல்ல. இரண்டும் ஒன்றே.

பிரம்மம் என்ற சொல் உண்மையான மெய்ப்பொருள் என்பதைக் குறிக்கும்.உபநிஷதங்களும் இதையே உறுதி செய்கின்றன.உபநிஷதக் கருத்துக்களே நமக்கு முடிவான கருத்துக்கள். அவைதரும் அறவுரைகளும், அறிவுரைகளும் உறுதியானவை,இறுதியானவை. இவற்றின் அடிப்படையில் ஆன்மா பிறப்பற்றது. ஆகவே அழிவில்லாதது. பிறப்பு, வளர்ச்சி, இறப்பு ஆகியவை இந்த ஸ்தூலமான சரீரத்தைப் பாதிக்கும்; ஆன்மாவைப் பாதிக்காது.

நாம் ஆன்மா என்பதை மறந்துவிட்டு புலன்களும், மனமும் கொண்ட இந்த உடலையே 'நான்' என்னும் மாயையில் உழன்று கொண்டிருக்கிறோம். நம் மனமும், புத்தியும் கூட மாயையால் தோற்றுவிக்கப்பட்டவையே.

இறைவனின் சக்தியாலேயே மாயை உண்டாகிறது.

இருப்பதை மறைக்கும் இயல்பு மாயைக்கு உண்டு. இது ஆவரணம் எனப்படும்.

அதேபோல் இல்லாததை இருப்பதாய்க் காட்டும் இயல்பும் உண்டு. இதை விஷேபம் என்பர்.

பரமாத்மா பல ஜீவாத்மக்களாகத் தோன்றுவதுபோல் தெரிவது அவித்தை என்னும் அஞ்ஞானம் ஆகும்.

மாயை சத்துவ குணத்தால் தோன்றுவது. அவித்தை ராஜஸ,தாமஸ குணங்களால் தோன்றுவது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தகுதி வாய்ந்த ஒரு குருவைநாடி அவருடைய உபதேசத்தின்படி வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொண்டால் மாயையைக் கடந்து விடலாம்.

பிரம்மம் நோக்கி ஆன்மாவைச் செல்லவிடாமல் தடுப்பது, சுற்றி மறைத்துக் கொள்வது 'கோசம் 'எனப்படும்.இது,அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என ஐந்து வகைப்படும்.

ஆன்மா, பார்க்கப்படாமல் பார்க்கும்; கேட்கப்படாமல் கேட்கும்; நினைக்கப்படாமல் நினைக்கும்; அறியப்படாமல் அறியும்; அதைத் தவிர வேறு பார்ப்பவரில்லை; வேறு கேட்பவரில்லை; வேறு நினைப்பவரில்லை; வேறு அறிபவரில்லை; அதுதான் உனது ஆன்மா.

உண்மைப்பொருள் ஒன்றே அனைத்துமாய் நிற்கிறது. எல்லாமே ஈஸ்வரன்தான். அவரே அனைத்துமாகவும், அனைத்தின் சாராம்சமாகவும், உயிர்நாடியாகவும் விளங்குகின்றார். அவரே முழுமுதற் பொருள். அவரே பரமசிவன். அவரே எல்லா வடிவமாகவும், எல்லா வடிவங்களையும் கடந்தும் நிற்கிறார்.

பிரம்மத்தை நேர்முகமாக அறிந்தவரே பிரம்மஞானி எனப்படுவார். இவர் பிரம்மமாகவே ஆகிவிடுகிறார் என்பது உபநிஷத வாக்கியம். "

ஆன்மாவைப் பற்றி மஹாசந்நிதானம் அவர்களிடம் சில ஐயங்களை அடியார்கள் எழுப்பினர். அவர்களின் ஐயங்கள் யாவை ?

"ஆன்மாவின் அந்தரங்கம் யாவும் அடியார்க்கு
சான்றோன் விளம்பியதை செப்பிடும் என்செயல்
கானக் குயிலின் குரல்கேட்டு அங்குஓர்
காகம் கரைந்தாற்போல் அன்றோ!"

சீடர்கள் கேட்டார்கள் : 'மனித வாழ்க்கையின் இலக்கு என்ன ?'

"முக்தி "

'முக்தியைத் தவிர வேறு இலக்கு நம் சனாதன மதத்தில் கிடையாதா ?'

"ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்கையும் அடைய வேண்டும். தர்மம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata


என்பது அறநெறி; அர்த்தம் என்பது செல்வம்; காமம் என்பது அறவழியில் வரும் இன்பம்; இறுதியாக மோக்ஷம் என்னும் விடுதலை. அனைவரும் இந்த நான்கு புருஷார்த்தங்களையும் அடைய வேண்டும். தர்மம் காட்டிய வழியில் நின்று இவைகளை அனுபவிக்க வேண்டும். பற்பல அனுபவங்கள் ஏற்பட ஏற்பட வைராக்கியம் சிறிது சிறிதாக வரும். நடுவயதிலோ, முதுமையிலேயோ ஒருவன் கட்டாயம் முக்தி என்னும் இலக்கை அடைய முயல வேண்டும்.

'முக்தி என்னும் இலக்கை அடைய வயது வரம்பு ஏதேனும் உண்டா?'

இல்லை. அவரவர் கர்மவிதிப்படி மோக்ஷத்தை அடையும் வயது மாறுபடும். ஆதிசங்கரர் தம்முடைய முப்பத்திரண்டாம் வயதிலேயே சிவனுடன் ஐக்கியமானார். அவருடன் ஒப்பிடும் பொழுது யாம் நீண்ட காலம் இங்கு தங்கிவிட்டாற்போல் தோன்றுகிறது. (குறிப்பாக சீடர்களுக்கு எதையோ உணர்த்தும் யுக்தி இது.)

'முக்தி என்றால் என்ன?'

"நாம் அணியும் உடைகளும், அணிகலன்களும், நாம் வசிக்கும் வீடும், நாம் அனுபவிப்பதாக நினைக்கும் எதுவும் நாமாக முடியாது என்பதை உணரவேண்டும். இதை உணர்ந்தவர்களுக்கு இடையில் அணியும் ஆடையும் ஒரு சுமையே! நம்முடைய தனித்தன்மை என்பது புலன்களிலிருந்து, புலன்கள் தரும் இன்பங்களிலிருந்து ஒதுங்கி நிற்றலே ஆகும். உடலும், புலன்களும், மனமும், அகங்காரமும் பின்னிப் பிணைந்துள்ள இந்த உடல் உண்மையான 'நான்' அல்ல. இதை அனுபவத்தின் மூலம் உணர்ந்து கொண்டால், நம்முள்ளிருந்து ஆனந்தநிலை வெளிப்படும். இந்த ஆனந்தநிலையை எய்திவிட்டால் உடலை உகுப்பது கடினமாய் இராது. இந்த நிலையை அடைவதே 'முக்தி' எனப்படும். அப்பொழுது துன்பமும், துயரமும் முற்றிலும் மறைந்து விடுகின்றன. இந்த நிலையில் உடலை உகுப்பது பரவசநிலையைத்தரும். இவர்களுக்கு மறுபிறவி கிடையாது."

'முக்தி நிலை அடைய என்ன செய்ய வேண்டும்?'


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"விவேகத்தையும்,வைராக்கியத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். இவற்றைப்பெற சகிப்புத் தன்மையையும், பொறுமையையும், புலனடக்கத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். தக்க குருவை நாடி உபதேசம் பெறவேண்டும். தியானிக்க வேண்டும்."

'யோகம் என்றால் என்ன ?'

"தனிப்பட்ட ஒரு ஜீவாத்மாவை பரம்பொருளான பரமாத்மாவுடன் இணைப்பதே யோகம் எனப்படும். (இந்தக் கருத்தை ஒட்டியே பெ.சுந்தரம் பிள்ளை அவர்கள் மனோன்மணீயம் காப்பியத்தில் 'சிவகாமியின் சரிதத்தை' படைத்திருப்பார்.) இந்த இணைப்பிற்கு உதவக்கூடிய ஆன்மீகப் பயிற்சிகள்

நான்காகும். அவை பக்தியோகம், கர்மயோகம், ராஜயோகம், ஞானயோகம் என்பன ஆகும். இறைவனின் மீதான பக்தியை வளர்த்துக் கொண்டு, அவருடைய நாமரூபங்களைத் தியானித்து, அவருடைய திருநாமங்களை எப்பொழுதும் உச்சரித்துக் கொண்டிருக்க வேண்டும்.

நம் கடமைகளைச் சீராகவும், சுயநலமின்றியும், நல்லொழுக்கத்துடன் செய்வதால் மனம் தூய்மை அடைகிறது. இதன் மூலம் இறுதியில் ஆன்ம தரிசனத்தைப் பெறலாம்.

'முக்தி நிலை அடைவதில் குருவின் பங்கு என்ன ?'

அறியாமை என்னும் இருளை அகற்றி, ஞானம் என்னும் விளக்கை ஏற்றுபவரே குரு எனப்படுவர். குருவின் துணையில்லாமல் ஆன்மீக வாழ்வு இயலாத ஒன்று. சாஸ்திரங்களின் சாரத்தை நன்கறிந்தவராகவும், இறைவனில் ஒன்றி இருக்கக் கூடியவராகவும் உள்ள ஒருவரே தக்க குருவாக முடியும்.குரு, தன் சீடனிடம் அதிகம் பரிவும், அக்கறையும் கொண்டவராக இருக்க வேண்டும்.

சீடன் கற்றுக் கொள்வதில் ஆர்வம் உள்ளவனாகவும், ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிப்பவனாகவும் இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மீக வாழ்வில், ஆன்மீகப் பேருண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற தணியாத ஆர்வம் உள்ளவனாக இருக்க வேண்டும். கடின உழைப்பும், தளராத



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



குருபக்தியும், மிகுந்த பணிவும் மிகவும் அவசியம். குரு உபதேசித்த மந்திரத்தை ஆழ்ந்த நம்பிக்கையுடனும், பொருள் உணர்ந்தும் ஓத வேண்டும்.”

இவ்வாறு மஹாசந்நிதானம் அவர்களிடம் பொருள் பொதிந்த, தர்க்க ரீதியான வினாக்களை எழுப்பினர் சீடர்கள்.

அடுத்துப் பலருக்கும் உள்ள, முக்கிய வினா ஒன்றை ஒரு சீடர் எழுப்பினார்.

அது என்ன வினா ?

“குருவினைத் தேடியே நற்சீடன் அங்கே
அருகினில் சேர்வான் அறிவார்ந்த சீடனை
நாடியே நற்குருவும் வந்திடுவார் என்பதற்கு
ஈடில்லா நம்குருவே சான்று.”

சீடர்களின் அடுத்த வினா : ‘மனிதர்களுக்கு மறுபிறவி உண்டா ?உண்டெனில் எவ்வாறு மறுபிறவி ஏற்படுகிறது ?’

“உண்டு. அவரவர் கர்ம வினைப்பயன் காரணமாக மறுபிறவி ஏற்படுகின்றது. நம்முடைய நல்வினை, தீவினைகளின் பயனாக பல பிறவிகள் எடுக்க வேண்டி உள்ளன. பாவம், புண்ணியம் எது மீதமிருப்பினும், அவற்றின் மாறுதல்களுக்கு ஏற்ப மறுபிறவி இருந்தே தீரும். ஆன்மா எந்த மாறுதலுக்கும் உட்படாதது. ஆனால் மனம், உடலால் கட்டுண்ட ஜீவாத்மா, கர்மத்தின்பலன் இவற்றைப் பொறுத்து மறுபிறவி என்ற தளையில் சிக்கிவிடும். இந்தத் தளைகளில் இருந்து நீங்கிய நிலையே முக்தி நிலையைத் தரும்.

ஒவ்வொருவரும் ஆன்மீகத்தில் மலர்ந்து, முதிர்ந்து விடுதலை பெறவேண்டும்.விவேகமும், ஞானமும் தளைகளை அறுக்கத் துணை நிற்கும்.”

‘பாவம் என்பது என்ன ? புண்ணியம் என்பது என்ன ?’

பிறருக்கு நன்மை செய்வது புண்ணியம்; தீமை செய்வது பாவம். செய்யக் கூடாததைச் செய்யும் பொழுதும், செய்ய வேண்டியவற்றைச் செய்யாத போதும் ஒருவனைப் பாவம் சூழ்கிறது. ஆன்மீக முன்னேற்றத்தை இது தடுப்பது மட்டுமல்லாது, சமூக நலனையும் பாதிக்கின்றது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சாஸ்திரங்கள் விதித்துள்ள செயல்களையும், கடமைகளையும் சீராகச்செய்து வருபவர்கள் புண்ணியத்தை அடைகிறார்கள்.

அஹிம்சை, சத்தியம், தயை, தானம், பொறுமை, பணிவு, புலனடக்கம், சாந்தம், உடல்தூய்மை, தவம், பக்தி இவை ஒவ்வொருவரும் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை நற்குணங்களாகும்.

நம்மைச் சுற்றியுள்ளவர்களின் துன்பைத்தைக் குறைப்பதற்கு நாம் சிறிதேனும் முயல வேண்டும். அவ்வாறு செய்யவில்லை எனில் நமக்கு நாமே துன்பத்தைத் தேடிக்கொள்பவர்கள் ஆவோம். துன்பப்படுபவர்களுக்கு உதவுவதன் மூலம் ஒரு நல்ல கர்மவினையை நாம் செய்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.உலகம் அனைத்திற்கும் நியதி ஒன்றே. அந்த உண்மைப்பொருள் அன்பும், இரக்கமும் ஆகும்.

நம் மனத்தில் எழும் எண்ணங்களும், செயல்களும் பரிவு, அன்பு, இரக்கம் போன்றவைகளாய் இருந்தால் நமது குணநலன்களும் அவற்றைப் பிரதிபலிக்கின்றன. அத்தகைய நல்ல எண்ணங்களும், செயல்களும் உடனேயோ சற்றுக் காலம் தாமதித்தோ நமக்கு வந்து சேர்கின்றன.

நமது எண்ணங்களும், செயல்களும் வெறுப்பு, கோபம், அற்பத்தனம் போன்றவைகளாக இருந்தால் அவ்வாறே நமக்குத் திரும்பக் கிடைக்கின்றன என்பதை மறந்து விடாதீர்கள்.

நமது சனாதன மதத்திற்கு இயற்கையாகவே ஒரு வலிமையும், எத்தகைய சிக்கல்களையும் சமாளிக்கும் திறனும் உண்டு. நமது மதமும் கலாச்சாரமும் மிக உயர்வானவை. ஒவ்வொருவரின் இதயத்திலும் இறைவன் ஆன்மாவாக உள்ளுறைகிறார் என்பதை நமது வேதாந்தம் வலியுறுத்துகிறது.

அறநெறி மற்றும் நல்லொழுக்கங்கள் ஆகியவை வேதாந்தத்தின் வேர்கள். இவற்றைக் கடைப்பிடிப்பவர்களை அறநெறி, நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்கும் மற்றவர்கள் தேடிவந்து இணைவார்கள். அறநெறி, நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்காமல் இருப்பவர்கள் இவர்களைவிட்டு விலகி விடுவார்கள். எனவேதான் சத்சங்கத்தின் மூலமே ஜீவன்முக்தி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



அடைய முடியும். அனைவருக்கும் ஆசிர்வாதங்கள்!" என்று பொருள் புதைந்த தமது அருளுரையைப் நிறைவு செய்தார்கள் மஹாசந்நிதானம் அவர்கள்.

பஜனை மடத்தில் கூடியிருந்த அன்பர்களே!சீடர்களே!

மஹாசந்நிதானம் அவர்களின் இந்த அருளுரையைக் கேட்ட நீங்கள் பாக்கியசாலிகள். ஸ்வாமிகளை நன்கு தரிசனம் செய்து கொள்ளுங்கள். அவரின் தாமரைப் பாதங்களைப் பணியுங்கள். அவரின் பரிபூரண ஆசிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஏனெனில்.......

ஸ்ரீஸ்வாமிகள் அரிமழம் நோக்கிப் புறப்படுகிறார். அவரின் இந்த ஸ்தூல தேக தரிசனம் இனி உங்கள் புறக்கண்களுக்கு தோன்றாமல் போகலாம். எனவே கண்குளிர தரிசித்துக் கொள்ளுங்கள்.

அடுத்து மஹாசந்நிதானம் அரிமழம் அடைவதற்குள் அவரின் வாழ்க்கையுடன் இணைந்திருக்கும் பேற்றைப் பெற்ற–நாம் ஏற்கனவே அறிந்த இருசீடர்களின் வாழ்க்கையின் பின்பகுதி நிகழ்வுகள் எவ்வாறு அமைந்திருந்தன ?

"வேதத்தின் சாரமாம் தன்னை எளியோரும்
ஓதியே ஓர்ந்து உணர்ந்திடும் வண்ணம்
உரையினைச் செய்தனை வீட்டினை நல்கும்
தலைவனென்றே நாங்கள் அறிந்தோம். "

மஹாசந்நிதானம் அவர்களுடன் நெருங்கிய நட்பு வட்டத்தில் இருந்த மகாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, உ.வே.சாமிநாத ஐயர் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக முன்னர் பார்த்து விட்டோம். சீடர்களில் நாராயணசிவம்,மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றையும் தெரிந்து கொண்டோம்.

இன்னும் பார்க்க வேண்டியவை ராமஸ்வாமி சிவன், வைத்தியநாத நாதசிவன் ஆகிய இரு சீடர்கள் வாழ்க்கையின் சில பகுதிகள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இந்த சரிதத்தைப் படித்து வந்தவர்கள், நாம் சரிதத்தின் இறுதிப் பகுதிக்கு வந்து விட்டோம் என்பதை நன்கு உணர்ந்து இருப்பார்கள். இதில் தொடர்புடைய சிலரைப் பற்றிய குறிப்புகளைத் தரவேண்டிய கடமையும் உள்ளது.

**முதலில் ராமஸ்வாமி சிவன் அவர்கள் பற்றி :**

வையச்சேரி கிராமத்தில் இசையிலும், தமிழிலும், வடமொழியிலும், ராமாயணம், மஹாபாரதம், தேவாரம், திருவாசகம், வேதவேதாந்தங்கள் ஆகியவற்றில் புலமை பெற்றோரும் வசித்து வந்தனர். இவர்கள் சிவபக்திச் செல்வர்களாய் விளங்கினர். அத்தகைய சான்றோர்களில் பஞ்சநதம் ஐயர் என்கிற துரைசாமி ஐயரும் ஒருவர்.

வையச்சேரியிலேயே பிறந்து, வளர்ந்து, இசைபயின்று, சிறந்து விளங்கியவர்கள் ஆனை,ஐயா சகோதரர்கள் .இவர்கள் பல்லவி நிரவல் செய்வதில் மிகவும் வல்லவர்கள் என்று போற்றப்பட்டனர்.

இவர்களிடமும், தன் தந்தையிடமும் இசையினைப் பயின்றார் துரைசாமி ஐயர். ஆனை, ஐயா இசைப்பரம்பரையில் பிறந்த பெண்ணை இவருக்குத் திருமணம் செய்து வைத்தனர். அவர் தாயு என்று அழைக்கப்பட்ட அருந்ததி. இருவரும் மனமொத்த தம்பதியராய், குறைவான வருவாயில் நிறைவான வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

துரைசாமி ஐயருக்கு அக்காலத்துப் பிரபல இசை வித்வான்களாக விளங்கிய சிவகங்கை பெரிய வைத்தியநாத ஐயர், சின்ன வைத்தியநாத ஐயர், இரட்டைப்பல்லவி சிவராம ஐயர், பல்லவி சுப்பராய ஐயர் ஆகியோர் நெருங்கிய நண்பர்களாய் இருந்தனர்.

துரைசாமி ஐயர் இசையைத் தொழிலாகக் கொள்ளாமல் கடவுள் சந்நிதியில் மனமுருகிப் பாடும் பக்தராய் விளங்கினார். இவரது குழந்தைப் பருவம் முதல் திருவையாறில் குடிகொண்டுள்ள ப்ரணதார்த்திஹரன்–தர்மசம்வர்த்தினி ஆகிய மூர்த்தங்களின் மேல் மாறாப்பற்றுடையவராய்த் திகழ்ந்தார். கீர்த்தனைகளையும், பக்திப் பாடல்களையும் பஜனை கோஷ்டியுடன் பாடிக்கொண்டு செல்வார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



அவ்வாறு ஒருநாள் 'சக்கணி ராஜ மார்க்கமு...' என்ற கரஹரப்ரியா ராக கீர்த்தனையைப் பாடிக்கொண்டு செல்லும் பொழுது, அவருடைய குரலின் இனிமையில் மயங்கிய ஒருவர், துரைசாமி ஐயரை அணுகினார்.

'கீர்த்தனையை பாவத்துடன், அர்த்தம் சிதையாமல் தெளிவாகப் பாடினீர்கள். உங்களுக்கு ப்ரணதார்த்திஹரன்–தர்மசம்வர்த்தினி அம்மன் அருள் பரிபூரணமாக உண்டு.

நான்கு புத்திரர்கள் உங்களுக்குப் பிறப்பார்கள்.அவர்களில் இருவர், ஒரு மஹானின் அருள் பெற்று சங்கீத உலகில் அழியாப் புகழ்பெற்று விளங்குவார்கள்.' என்று ஆசி வழங்கினார் அந்த முதியவர்.

அவ்வாறு ஆசி வழங்கியவர் யார் ?

அவரின் ஆசி பலித்ததா ?

"உன்னடிக் கீழ்அமர்ந்து பாடம் செவிமடுத்த
பொன்னடி யார்கள் பலநூறு என்றனர்
சென்னி தனில்பாதம் வைத்தே உயர்ந்தவரை
உன்னியே போற்றுவோம் நாம்."

துரைஸ்வாமி ஐயருக்கு ஆசிவழங்கியவர் நாதப்ரும்மம் என்று போற்றப்படும் தியாகப்ரும்மம்.

நாரதமுனியின் மறுஅவதாரமென்று கருதப்படும் அவரின் வாக்கு பொய்க்குமா என்ன ?

துரைஸ்வாமி ஐயர்–அருந்ததி தம்பதியினருக்கு இல்லறத்தின் பயனாய் நான்கு ஆண்மகவுகள் பிறந்தனர்.

அவர்களுக்கு,
சாம்பமூர்த்தி,
ராமஸ்வாமி சிவன்,
வைத்தியநாத சிவன்,
சிவராமசர்மா என்று பெயரிட்டு வளர்த்தனர்.

இந்த நால்வருக்குள், சிறுவயது முதலே ராமஸ்வாமி சிவன் அவர்களும், வைத்தியநாத சிவன் அவர்களும் இணைபிரியாது இருந்தனர். ராமாயணக் காப்பியத்தில் அண்ணன் ராமனின் நலனிற்காகத் தன் நலன்களைத் தம்பி லக்ஷ்மணன் தியாகம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



செய்தான். இங்கோ தம்பி வைத்தியநாத சிவனின் வளர்ச்சிக்காக, புகழிற்காகத் தன்னைப் பின்னணியில் நிறுத்திக் கொண்டார் அண்ணன் ராமஸ்வாமி சிவன். இவர்கள் இருவரும் இசையில் மிகவும் ஆர்வம் கொண்டு விளங்கினர். இவ்விருவரில் வைத்தியநாத சிவன் அவர்களின் குரல் நயமும், இசைத்திறனும் மேலோங்கி வளர்ந்தன. தமிழ் இலக்கியத் திறனும், இசைஞானத் திறனும் ராமஸ்வாமி சிவனிடம் மிகுந்து இருந்தன.

மெலட்டூர், தஞ்சை, மானம்புச்சாவடி, திருவையாறு ஆகிய ஊர்களுக்குச் சென்று வித்வான்களிடம் இசை பயின்று வந்தனர். இவர்கள் இருவரும் பால்ய பருவத்திலேயே ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் இருந்ததால் ‘இசை உலக இரட்டையர்கள்’ என்று அழைக்கப்பட்டனர். சாரீர வளம்,இசைஞானத்திறன், இசையைச் செயல்படுத்தும் வகை ஆகியவை வைத்தியநாத சிவனிடம் குருவருளாலும், திருவருளாலும் சிறப்புற்று இருந்தாலும், அண்ணன் ராமஸ்வாமி சிவனுக்குப் பணிந்து அன்புடனும், மரியாதையுடனும் நடந்து கொண்டார்.

ராமஸ்வாமி சிவன் தமிழில் நல்ல பற்றுடையவர். பல தமிழ் நூல்களைக் கற்று அவற்றின் திட்ப நுட்பங்களை அறிந்தவர். நினைத்தவுடன் எதையும் செய்யுள் வடிவிலே படைக்கும் ஆற்றலையும் பெற்றிருந்தார்.

முதல் முறையாக பாதயாத்திரையாகக் காசிக்குப் புறப்பட்ட ஸ்வாமிகள் வையைச்சேரி வந்தார். அவரின் அருட்பார்வை பாலகர்களாய் இருந்த இவர்களின் மேல் பட்டது. பிறகு இவர்கள் வாழ்வில் நடந்ததெல்லாம் அதிசயங்களே!

இவர்கள் காலத்தில் இசை ஞான பலத்தில் மிக்க அறிவுடையோர்களாய் சிறப்புற்று விளங்கிய சிவகங்கை பெரிய வைத்தியநாத ஐயர், சின்ன வைத்தியநாத ஐயர், பட்டினம் சுப்ரமணிய ஐயர், கோயம்புத்தூர் ராகவ ஐயர், குன்னக்குடி கிருஷ்ண ஐயர், பரமேஸ்வர பாகவதர், சென்னை வேணுகோபாலதாஸ் நாயுடு, பல்லவி சேஷய்யர், ருத்ர ஐயர், போட்டோகிராபர் மாசிலாமணி முதலியார், பிடில் சுப்பராயர், திருக்கோடிக்காவல் பிடில் கிருஷ்ண ஐயர், பிடில் வெங்கோபராவ்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிடில் ராமைய்யா பிள்ளை, சென்னை பொன்னுசாமி நட்டுவர், பிடில் கிருஷ்ணசாமி முதலியார், மாயூரம் வீணை வைத்தியநாத ஐயர், திருவனந்தபுரம் வீணை கல்யாணகிருஷ்ண பாகவதர், வீணை ராமச்சந்திர பாகவதர், மைசூர் வீணை சுப்பண்ணா, சேஷண்ணா, சாமண்ணா, புல்லாங்குழல் சரபசாஸ்திரி, தஞ்சை மிருதங்கம் நாராயணசாமிஅப்பா, சாமாராவ், துக்காராம், சேதுராமராவ்...... இவர்களுடன் நட்புணர்வுடன் பழகினார். வைத்தியநாத சிவன் மிக இளவயதிலேயே இசைத்துறையில் ஒப்புயர்வற்று உயர்ந்து விளங்கினார்.

வைத்தியநாத சிவன் அவர்களின் சாதனைகளை ஏற்கனவே விரிவாகப் பார்த்து விட்டோம்.

காசிநகரை அடைந்த நம் ஸ்வாமிகள், மணிகர்ணிகா கட்டத்தில் கங்கைநதியின் அடியில் ஆழத்தில் ஆழ்ந்த தியானத்தில் இருந்த கணபதி யதீந்ததரைச் சந்தித்து உரையாடியதும், அவர் ஸ்வாமிகளுக்கு 'உச்சிஷ்ட கணபதி' உபாசனையை அருளியதையும் அறிவோம். தம் வாழ்நாள் முடிவதற்குள் தாம் கற்றுக்கொண்ட உபாசனையை தகுந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு உபதேசித்திட வேண்டும் என்பது நியதி.

மஹாசந்நிதானம் அவர்கள் கணபதி முனீந்தரரால் தனக்கு உபதேசிக்கப்பட்ட 'உச்சிஷ்ட கணபதி உபாசனை'யை யாருக்கு உபதேசம் செய்தார் ?

"சங்கீத ஆழியில் மூழ்கியே முத்தெடுத்த
மங்காத ஆற்றலுடை நாயகர் தம்மீது
பொங்கு புனல்அருவி ஒப்பக் கருணை
பொழிந்தநம் புண்ணியனைப் போற்று"

ராமஸ்வாமி சிவன் தமிழ், இசை, வடமொழி ஆகிய மூன்றிலும் அதிஅற்புத வல்லமை பெற்று விளங்கினார். அவர் ஏகசந்தக் கிராஹி.அதாவது ஏதேனும் ஒரு செய்தியையோ, கீர்த்தனை யையோ, செய்யுளையோ, ஸ்லோகத்தையோ ஒருமுறை கேட்டால் போதும். அதை மனதில் பதியவைத்துக் கொண்டு,அப்படியே



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருப்பிச்சொல்லுவார்.

வைத்தியநாத சிவன் த்விசந்தக் கிராஹி.அதாவது இரண்டுமுறை கேட்ட அளவில் மனதில் பதிய வைத்துக் கொண்டு விடுவார்.

சமஸ்தான அரசர்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள், புலவர் பெருமக்கள், இசையுலக மேதாவிகள் இவர்களைப் போற்றிக் கொண்டாடினார்கள்.

ஆனால் உள்ளூர் மக்களோ ராமஸ்வாமிசிவன் அவர்களைக் கேலி செய்து 'மசகன்' (கொசு) என்று அழைத்தனர். உள்ளூர் மக்களுக்கு அவருடைய பெருமை தெரியவில்லை, இல்லை தெரிந்திருந்தும் அவரைக் கிண்டல் செய்வதில் ஒரு குரூர திருப்தி கண்ட சிறுமதியாளராய் இருந்தனர். இதை ராமஸ்வாமி சிவனும் அறிந்திருந்தார். அவர்களை அவர் லக்ஷியம் செய்வதில்லை.

இதனை ராமஸ்வாமி சிவன், 'நின்னையே நம்பினேன்......' என்ற கீர்த்தனையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"......பூமியில் யாவரும் பாவியேன்றேச
பஜித்திடும் நெஞ்சமும் பஞ்சுபோல் வீச
மாரியிருளிலென் மனமுமே கூச
மசகனென்றனை யனைவரும் ஏச"

ஊரார் ஏசினால் என்ன ?இவர் மனம் கூசினால் என்ன ?

ஸ்வாமிகளின் கருணா கடாக்ஷம் இவர்மேல் விழுந்தது.

வையைச்சேரியில்.....

ஒருநாள்.......

அன்று விநாயக சதுர்த்தி நாள்.

காலை நேரம்........

ஒரு மகான் வையைச்சேரி அக்ரஹாரத்தின் வழியே நடந்து வந்து கொண்டிருந்தார். வீதியில் மக்கள் போவதும், வருவதுமாய் இருந்தார்கள். ஆயினும் எவர் கண்ணிற்கும் அவர் புலப்படவில்லை. ஆனால் தன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த ராமஸ்வாமியின் கண்களுக்கு மட்டும் அந்த மகான் புலப்பட்டார். அந்த மகானைத் தரையில் விழுந்து வணங்கினார். தம் வீட்டிற்கு அழைத்தார். அவரும் ராமஸ்வாமி சிவனின் வீடுவரை வந்தார்.தெரு வாசலுடன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


நின்றுவிட்டார். வீதியில் இருந்தவர்களுக்கும், வீட்டினுள் இருந்தவர்களுக்கும் இவர்கள் இருவரும் புலனாகவில்லை. ஆனால் இவ்விருவருக்கும் மற்றவர்களின் உருவங்களும் அவர்களின் செயல்களும் தெளிவாய்த் தெரிந்தன.

அவ்விருவரும் நின்றுகொண்டிருந்த சிவனின் வீட்டு வாசலில் அழகான ஓர் ஹோமகுண்டம் உருவானது. அங்கே ஒரு விநாயகர் உருவச்சிலை தோன்றியது. ஹோமத்திற்குரிய அனைத்து சாமான்களும் நிரம்ப இருந்தன.அந்த மகான் வடக்கு நோக்கி அமர்ந்தார். ராமஸ்வாமி சிவன் கிழக்குப் பார்த்து உட்கார்ந்தார்.

மந்திர உச்சாடனத்தை மகான் ஆரம்பித்தார்.ஹோமம் வளர்க்கப்பட்டு ஆகுதிகள் செய்யப்பட்டன. அக்னி வலம் சுழித்து ஓங்கி உயர்ந்து எழுந்தது. கணபதி ஹோமம் முறைப்படி நிறைவு பெற்றது.

மகான் ராமஸ்வாமி சிவனுக்கு 'உச்சிஷ்ட கணபதி' மந்திர உபதேசம் செய்தார்.உபதேசம் பெற்றுக்கொண்ட சிவன், உபதேசம் செய்தவரை மும்முறை சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்தார்.

இந்தச் செயல்கள் எல்லாம் எவருடைய கண்களுக்கும் தெரியவில்லை. இது ஒரு மாயாஜாலம் போல் நடந்தது.

'நாம் ஓதிய மந்திரத்தை இடைவிடாது ஜபித்து வா. இவ்வுபாசனையை விடாமற் செய்தால் க்ஷேமம் உண்டாகும்'. இவ்வாறு கூறிய மகான் ராமஸ்வாமி சிவனுக்கும் தெரியாமல் எவ்வாறோ மறைந்து விட்டார். விநாயகர் விக்ரஹம், ஹோம குண்டம், பூஜைக்குப் பயன்பட்ட பொருட்கள் அனைத்தும் மாயமாய் மறைந்தன. அங்கு ஹோமம் நடந்ததற்கான எந்தச் சுவடும் தெரியவில்லை.

ராமஸ்வாமி சிவன் தெருவிலிருந்து வீட்டிற்குள் இயல்பாகச் சென்றார்.

அன்று விநாயகர் சதுர்த்தி ஆனதால் பூஜையில் அமர்ந்த ராமஸ்வாமி சிவன் சொப்பனம் போல் தமக்கு நடந்த "உச்சிஷ்ட கணபதி" உபதேச மந்திரத்தை ஜபிக்கத் தொடங்கினார். உபதேச முறைப்படி பூஜையும் செய்தார்.

அவர் வழிபாட்டின் புதுமுறைகளைக் கண்டு வீட்டினர்


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திகைத்தனர்.

அவரின் புதிய பூஜைமுறையைக் கண்டு ஓரளவு அச்சங் கொண்ட குடும்பத்தினர் அதுபற்றிக் கேட்டனர்.

அதற்கு அவர் உரைத்த பதிலுரை என்ன?

"கணபதி என்றிட வல்வினை ஓடும்
குணநிதி எந்தன் தலைவன் உரைத்தஇவ்
மந்திர வார்த்தை மனதில் பதிந்திட
சுந்தரனைப் போற்றித் தொழுதான்."

வையச்சேரி வந்திருந்து எவர் கண்ணிலும் படாமல் ராமஸ்வாமி சிவன் அவர்களுக்கு 'உச்சிஷ்ட கணபதி' மந்திரோபதேசம் செய்தவர் நம் ஸ்வாமிகள்தான் என்று கூறவும் வேண்டுமா?

ராமஸ்வாமி சிவன் பூஜை செய்யும் முறைகளில் மாற்றங்களைக் கண்ட வீட்டினர் கவலை அடைந்தனர். அவரின் பூஜையின் தீவிரத் தன்மையையும், புதுமுறைகளையும் கண்டு அதன் காரணத்தைக் கேட்டனர். நடந்த உண்மையைக் கூறினால் அனைவரின் ஏளனத்திற்கும் தாம் ஆளாக நேரும் என்பதை எண்ணினார். அவர் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறாமல், இது உச்சிஷ்ட கணபதி பூஜைவிதி என்பதை மட்டும் தெரிவித்தார்.

இவ்வித பூஜை விதிமுறைகளை அதுவரை கண்டிராத அவ்வீட்டில் உள்ளவர்கள், திடீரென இப் பூஜையைச் செய்ய வேண்டிய காரணம் என்ன என்பது பற்றி ஐயம் கொண்டனர். ஆனால், அன்றுமுதல் ஆயுள் உள்ள வரைக்கும் அப்பூஜையை அவர் தவறாமல் செய்து வந்தார்.தமக்குக் கிடைத்த உபதேச விபரத்தை வைத்தியநாத சிவன் உட்பட எவரிடமும் தெரிவிக்கவில்லை.இவர் தேடிப்போய் உபதேசம் பெறவில்லை. ஸ்ரீஸ்வாமிகள் தேடிவந்து உபதேசத்தை அருளினார் என்றால் இவர் செய்த புண்ணியத்தை அளவிடமுடியுமோ?

மஹாசந்நிதானம் அவர்கள் எல்லாக் கலைகளிலும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



பரிபக்குவம் பெற்றவர்.அவர் பலவகையான சித்துகளில் வல்லவர். (அவற்றைத் தேவையான அளவிற்கு மட்டுமே குறைந்த அளவில் பயன்படுத்தவார்.) கடினமான செயலையும் எளிதில் செயல் படுத்தும் ஆற்றல் உள்ளவர்.கணபதி முனீந்திரரால் உபதேசிக்கப்பட்ட உச்சிஷ்ட கணபதி உபாசனையில் சிறந்து விளங்கியவர். சிவன் குடும்பத்திற்கு ஞானகுருவாய் இருந்தவர்.

ஸ்வாமிகள் ராமஸ்வாமி சிவனைத் தேர்ந்தெடுத்து, உச்சிஷ்ட கணபதி உபாசனையை உபதேசித்தார். அதை ராமஸ்வாமி சிவன் அவர்கள் யதுகுல காம்போதி ராகத்தில் இயற்றிய கீர்த்தனையில் இவ்வாறு பாடுகிறார்:

“எவரிகழ்ந்தாலென்ன எவர் புகழ்ந்தாலென்ன
இதிலென்ன குறை மனமே
திடமிகு சுந்தர தேசிகனருளாலே
முடிவில்லா ஞான வடிவானேன் புவிமேலே.”

இவ்வாறு மசகன் என்று அழைக்கப்பட்ட ராமஸ்வாமி சிவன் அவர்கள் ‘ஞான வடிவானன்’ ஆனதற்கு நம் மஹாசந்நிதானம் அவர்களின் கருணையே காரணம் ஆகும்.

‘உச்சிஷ்ட கணபதி’ உபதேசம் பெற்ற பிறகு, அதி தீவிரமாக ராமஸ்வாமி சிவன் உபாசித்தார். முகமண்டலத்தில் தேஜஸ் கூடியது. அவரது முகத்தில் எப்போதும் புன்னகை தவழ்ந்தது. தைரியலஷ்மி அவரிடம் குடிகொண்டாள். எப்பேர்ப்பட்டவர்களின் கவலையையும் தீர்க்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். வித்யாவீரம் முகத்தில் செறிந்து ஒளிவீசியது. மனோவசியசக்தி மிளிர்ந்தது.

எப்பொழுதும் தீவிர யோசனையில் உள்ளவர்போல் காட்சி அளித்தார். அவரை அணுகவே குடும்பத்தினர் அஞ்சினர். வைத்தியநாத சிவன் மேல் உள்ள பாசம் மட்டும் எள்ளளவும் குறையாமல், கூடிக்கொண்டே வந்தது. வைத்தியநாத சிவன் சிவவழிபாட்டிலும், ராமஸ்வாமி சிவன் கணபதி வழிபாட்டிலும் ஈடுபட்டதால் இத்தெய்வங்களின் அனுக்ரஹ சக்தி பரிபூரணமாக



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஏற்பட்டது. இத்தெய்வங்களின் கருணாகடாக்ஷத்தால் இவர்கள் தொட்டது துலங்கியது; வித்தைகள் சிறந்தன; அனைத்தும் மங்களகரமாகவே அமைந்தன.

ராமஸ்வாமி சிவன், மஹாவைத்தியநாதசிவன் இவ்விருவரின் ஞான வலுவிற்கு ஸ்ரீசுந்தர ஸ்வாமிகள் ஸத்குருவாக அமைந்தார்.

ராமநாதபுரம் சேதுபதி அரசராகிய முத்துராமலிங்கத் தேவர் சிவன் சகோதரர்களை 'இரட்டைப் புலவர்' என்றழைத்தார். ராமஸ்வாமி சிவனுக்கு 'மோனைச் சிங்கம்', 'சாகித்தியப்புலி' ஆகிய சிறப்புப் பட்டங்களை வழங்கினார்.

இத்தகைய சிறப்பு மிக்க ராமஸ்வாமி சிவன் அவர்களின் இறுதிக் காலம் எவ்வாறு இருந்தது ?

"தானேமுன் வந்து அருளினை நல்கியதால்
நாடாளும் மன்னரும் பட்டங்கள் பொன்னாடை
காசு பணம்அளித்துப் போற்றினர் தம்அவையில்
மாசற்ற சோதரர்களை!"

மஹாசந்நிதானம் அவர்கள் அனைத்துக் கலைகளிலும் வல்லமை உடையவர். இவர்போலச் சிவத்தொண்டுகள் எவரும் செய்திலர். இவரது முயற்சியால் அறுபத்து நான்கு சிவஸ்தலங்களுக்குக் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டன. இருபத்து மூன்று என்பன சில. இதற்கு முன்னால் எவரும் இவ்வளவு கோயில்திருப்பணிகளை நடத்தியதில்லை. ஸ்வாமிகள் நடத்திய பெரும்பான்மையான கும்பாபிஷேகங்களில் சிவன் சகோதரர்கள் கலந்து கொண்டு இசை நிகழ்ச்சிகளை நடத்திச் சிறப்பித்துள்ளனர்.

சிவன் சகோதரர்கள் சிவபெருமான் அருளைப்பெற சுந்தரஸ்வாமிகளே முக்கிய காரணமாவார்கள். இவர்களின் முன்ஜன்மப் புண்ணியத்தாலேயே ஞானகுருவாய் ஸ்வாமிகள் இவர்களுக்கு அமைந்தார்.

தம் கீர்த்தனைகள் பலவற்றில் ஸ்ரீஸ்வாமிகளைப்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



பற்றிக்குறிப்பிட்டுப் பாடித் தன் நன்றிக்கடனைச் செலுத்தி உள்ளார் ராமஸ்வாமி சிவன் அவர்கள். ஸ்வாமிகளின் ஆத்மசக்தியை நன்கு அறிந்து கொண்டவர்.

இவருடைய மிகச் சிறந்த சாதனை பெரியபுராணத்தைக் கீர்த்தனைகளாகப் பாடியது ஆகும். அந்நூலில் விநாயகர் துதி, சுப்ரமணியர் துதி முதலிய துதிகளுடன் குருவந்தனம் செய்ய வேண்டி இருந்தது. குருவந்தனமாக, புன்னகவராளி ராகத்தில்,

'சுந்தர குருவை நிரந்தரம் பணிந்து நான்
தொந்தமகன் றேனே'

என்று பாடல் இயற்றித் தம் நன்றியை வெளியிட்டார். (இதுபற்றி விரிவாக முன்னரே பார்த்து இருக்கிறோம்.)

ராமஸ்வாமி ஏராளமான கீர்த்தனைகள், கண்ணிகள், விருத்தங்கள், வெண்பாக்கள் முதலியவைகளைச் செய்துள்ளார். இசைப்பா வகைகளும், இயற்பா வகைகளும் நூற்றுக் கணக்கில் செய்துள்ளார்.

சிவன் சகோதரர்களுடைய வாழ்க்கை வையைச்சேரியிலும், சங்கீதக் கச்சேரிகளுக்காகச் சென்ற அனைத்து ஊர்களிலும் மிக மகோன்னதமாகவும், மகிழ்ச்சி தருவதுமாகவும் அமைந்திருந்தது. வையைச்சேரியிலிருந்து, சிவன் குடும்பத்தினர் திருவையாறு க்ஷேத்திரத்திற்குக் குடி பெயர்ந்தனர். பாவாசாமி அக்ரஹாரத்தில் மேற்குப்பக்கம் உள்ள இரண்டு வீடுகளை சிவன் சகோதரர்கள் கிரயம் செய்து கொண்டனர். தெற்குப் பார்த்த வீடுகள். நாள்தோறும் தர்மசம்வர்த்தினி—ப்ரணதார்த்திஹரர் தரிசனம், இசைக் கச்சேரிகள், வித்வான்களுடனான சந்திப்பு என்று வாழ்க்கை அமைதியாக நடந்து கொண்டிருந்தது. மஹாவைத்தியநாதசிவன் உடல்நிலை திடீரென சீர்கேடு அடைந்தது. 1893—ம் ஆண்டு, தை வெள்ளிக்கிழமை அன்று தம்முடைய 49—ம் வயதில் ப்ரணதார்த்திஹரர் பாதகமலங்களை அடைந்தார்.

மஹாவைத்தியநாத சிவன்காலம் சென்றபிறகு, ராமஸ்வாமி சிவன், 'விஜயசங்கிரஹம்' என்ற இரங்கற்பா நூலொன்றைச் செய்தார். அதில் மஹாவைத்தியநாதசிவன் அவர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் மற்றும் அவர் பெற்ற சிறப்புகள்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. ராமஸ்வாமிசிவன், தன்மனைவி மக்கள்மீது வைத்த அன்பைவிடத் தன் தம்பிமேல் வைத்திருந்த பாசம் அளவிடற்கரியது. அவ்விருவரின் உடல்கள்தான் வெவ்வேறே ஒழிய உயிர் ஒன்றுதான் என்பதுபோல் வாழ்ந்தனர். தம் உயிருக்குயிரான தம்பி திடீரென மறைந்தபின் தாளமுடியாத அதிக துக்கத்தினால் பீடிக்கப்பட்டார். தம் திறனை இழந்தார்; தம் நிலையை மறந்தார். ஒவ்வொரு ஊராகத் திரிந்தார். 1895–ம் ஆண்டு, மஹாவைத்தியநாத சிவன் அவர்களின்முதன்மைச் சீடர் பல்லவி சுப்பையர் வசித்து வந்த வாசுதேவநல்லூர் வந்தார்.

பல்லவி சுப்பையர் அவர்கள், 'ஸ்வாமிகளால்உங்களுக்கு உபதேசிக்கப்பட்ட 'உச்சிஷ்ட கணபதி' மந்திரத்தை ஏன் உங்கள் மாணாக்கர்கள் யாருக்கும் நீங்கள் உபதேசம் செய்யவில்லை ?' என்று கேட்டதற்கு, 'என் குருநாதர் சுந்தர ஸ்வாமிகள் அதற்கான உத்தரவை அளிக்கவில்லை. நான் இன்னும் மூன்று ஆண்டுகளில் உடலை உகுத்து விட்டுப் பரம்பொருளுடன் சேர்ந்து விடுவேன். எனக்கு செய்யப்பட்ட உபதேசம் என்னுடனே மறைந்துவிடும்.' என்று பதிலுரைத்தார்.

சில மாதங்களில் சந்நியாசம் மேற்கொண்டார்.

அவர் கூறியபடியே 1898–ம் ஆண்டு மறைந்தார்.

ஆனால் எங்கே, எப்படி மறைந்தார், அவர் சமாதி எங்கே இருக்கிறது என்ற விபரங்கள் சென்ற ஆண்டுவரை (2021) தெரியாமல் இருந்தது. கடந்த ஆண்டு வையைச்சேரி ஆனை – ஐயா பரம்பரையினரின் தீவிர முயற்சியால் ராமஸ்வாமி சிவன் சமாதி இருக்கும் இடம் கண்டு பிடிக்கப்பட்டது.

மதுரை அருகிலுள்ள அழகர்கோயில் மலையில் ஸ்ரீசுப்ரமணியர் கோயிலிலிருந்து நூபுரகங்கை போகும் வழியில் இடப்புறம், அடர்ந்த செடிகொடிகள், முட்புதர்களுக்கிடையே ராமஸ்வாமிசிவன் அவர்கள் சமாதியான இடம் இருப்பது தெரிய வந்துள்ளது. அந்த இடம் வௌவால்களாலும், விஷ ஜந்துக்களாலும் சூழப்பட்டுள்ளது. பழமுதிர்ச்சோலை சுப்ரமணியப் பெருமானே அவர் சமாதி அடையவேண்டிய இடத்தைக் காட்டியதாகவும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கூறப்படுகிறது.

அவரின் சந்ததியினரால் சமாதி நன்கு பராமரிக்கப்படும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது.

இனி,

மஹாவைத்தியநாதசிவன் அவர்களின் பிற்கால நாட்கள் எவ்வாறு அமைந்திருந்தது ?

"இரட்டைப் புலவர்கள் கற்றறிந்த மேன்மை
புரட்டியே போட்டது சங்கீத மேடையை;
பக்தியால் கட்டுண்டு சாமிகள் அன்பினால்
முக்தியே கண்டார் முடிவில். "

மகாவைத்தியநாத சிவன் அவர்களின் வாழ்க்கை நிரம்பிய சுவையுள்ளது – அவரது இசையைப் போன்று. அவர்மீது இசை ரசிகப் பெருமக்களும், அரசர்களும், ஆதீனத் தலைவர்களும். புலவர்களும், இசை உலக வித்வான்களும் மிகுந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தனர்.இவர் ஞானிபோல் வாழ்ந்தார். யோகிபோல் பற்றற்றிருந்தார். சந்நியாசி போல மனத்துறவு பூண்டிருந்தார். அவருடைய சொல்லும், செயலும் சிவார்ப்பணமாகவே இருந்தன. புகழின் உச்சத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் எப்படி வாழவேண்டும் என்பதற்கு முன் உதாரணமாக இருந்தார். இந்த நற்குணங்கள் அனைத்தும் மஹாசந்நிதானம் அவர்களின் அருட்கடாக்ஷத்தால் ஏற்பட்டவையே.

உண்ணும் உணவிலிருந்து, உடுக்கும் உடை வரை மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார். ஆடம்பரத்தை வெறுத்தார். பகட்டையும், படோடாபத்தையும் ஒதுக்கினார். இவர் காலத்தில் இவரை அறியாத இசைவாணர்களே இல்லை எனலாம்.

இறைபக்தி மிகுந்தவர். வையைச்சேரி கோயிலில் தம்மால் நிறுவப்பெற்ற நடராஜர், சிவகாமசுந்தரி மூர்த்தங்களுக்கு அபிஷேக, அலங்கார,உபசாரங்கள் செய்து வழிபட்டார். தானதர்மங்களில் மிகுந்த ஈடுபாடு உடையவர்.

தம் கச்சேரிகளுக்குக் கட்டணம் வசூல் செய்வதை விரும்பாதவர். சென்னையில் ஒரு சபாவில் இவருடைய இசை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கீழபூங்கொடி ஸ்ரீ ராமநாத அத்யானபட்டர்



ஸ்ரீ கோவிந்தராஜ பட்டர்

சுள்ளனி ஸ்ரீ பரமேஸ்வர அத்யான பட்டர்

ஸ்ரீவைத்தியநாத சிவன் அவர்கள் வழிபட்ட ஸ்ரீநடராஜர் திரு உருவப் படம்

ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகள் பிரதம சீடராகிய ஸ்ரீ பிச்சு சாமிகள் என்று பெயரில் வழங்கப்பட்ட ஸ்ரீ திம்ம ராஜபுரம் சிவ சுவாமிகள்

புகழ் பெற்ற புதுக்கோட்டை சமஸ்தான திவான் ஸ்ரீசேஷய்யா சாஸ்திரி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸுந்தர ஸ்வாமிகள் திருக்குட
நன்னீராட்டுப் பெருவிழா 14-06-2019

அரிமழம் அரண்மனை பிள்ளையார்

ஸ்ரீ நாராயணசிவன் ஜீவசமாதி
கொத்தமங்கலம்

கங்கைகொண்டான் ஊரில் ஸ்ரீஸ்வாமிகள்
அவதரித்த இல்லம்

காசி மணிகர்ணிகா கட்டத்தில் மஹான்
கணபதி முனீந்திரர்-மஹான்
ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் சிலா ரூபங்கள்.

பாளையங் கோட்டை
ஸ்ரீஸ்வாமிகள் விக்ரஹ விஜயம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta





Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அரிமழம் மு.பாலசுப்ரமணியன் கோவை

முத்தமிழ் அரசி சரஸ்வதி ராமநாதன்– V.ராமசுப்ரமணியன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நிகழ்ச்சிக்கு இவர் அறியாமல் கட்டாயக் கட்டணம் வசூலித்த (கட்டணம் அன்றைய நாலணா, எட்டணா) சபா நிர்வாகியைக் கடிந்து கொண்டு, அங்கு கச்சேரியைச் செய்யாமல் அருகிலுள்ள பார்த்தசாரதி கோயிலில் கச்சேரி செய்தார். திரளான ரசிகர்கள் கலந்து கொண்டு ரசித்தனர்.

இவருடைய நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் எப்படி வருமானம் கிடைக்கும் தெரியுமா?

நிர்வாகிகள் கச்சேரி அரங்கில் ஒரு பெரியதுண்டை விரித்து வைத்து விடுவார்கள். இசையை ரசிக்க வருபவர்கள் நாலணா, எட்டணா, ஒரு ரூபாய் என்று அவர்களால் இயன்றதைத் துண்டில் விரும்பிப் போடுவார்கள். இவருடைய கச்சேரிக்குக் கூட்டமும் அதிகம் வரும்; இவ்வாறான துண்டு வசூலும் கணிசமாய் ஆயிரம் ரூபாய்க்குமேல் இருக்கும். அதில் முந்நூற்றைம்பது ரூபாய் பெற்றுக் கொள்வார். தனக்கு நூற்றைம்பது ரூபாயை சன்மானமாக வைத்துக் கொண்டு, பிடில் வித்வான் திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் அவர்களுக்கு நூற்றி இருபத்தைந்து ரூபாயும், மிருதங்க வித்வான் தஞ்சாவூர் வெங்கோபராவ் அவர்களுக்கு எழுபத்தைந்து ரூபாயும் பிரித்து அளிப்பார். (இவர்கள் இருவரும்தான் வைத்தியநாத சிவன் அவர்களின் கச்சேரிக்குப் பெரும்பாலும் பக்கவாத்யக் கலைஞர்களாக இருப்பார்கள். அன்றைய நாளில் பக்கவாத்யக் கலைஞர்கள் எவரும் பெற்றிராத தொகை அது.) சபா நிர்வாகிகளுக்கும், நிகழ்ச்சி அமைப்பாளர் களுக்கும் துண்டுப்பணமே அதிக வருமானத்தைத்தரும்.

கர்நாடக இசைக் கச்சேரிகளைக் கேட்கவே மாட்டேன் என்று பிடிவாதமாய் இருந்தவர்களையும் இவரின் குரல்வளம் கட்டிப்போட்டுவிடும்.

ஒருமுறை........

1891–1892–ல், கரவருஷம், சித்திரை மாதம் சிதம்பரம் நடராஜர் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அவ்விழாவிற்கு வையைச்சேரி ராமஸ்வாமி சிவன், மஹாவைத்தியநாத சிவன் ஆகியோர் இசைக்கச்சேரி நிகழ்த்த வந்திருந்தனர். அங்கே 89–வயதான கோபாலகிருஷ்ண பாரதியாரும் இருந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவருடைய சீடர் பொன்னுசாமி தீக்ஷிதரும் உடனிருந்தார்.

நடராஜப் பெருமான் சந்நிதியில் இவர்கள் அனைவரும் மஹாதீபாராதனையைக் கண்டு மகிழ்ந்தனர்.

அப்பொழுது அங்கு நடந்த சுவையான நிகழ்ச்சி என்ன?

"அண்ணன் நிழல்போல் தொடர குரல்வள
வண்ணத்தால் நல்லிசை நல்கியே நாடெல்லாம்
நற்புகழ் பெற்றான் மகாவைத் தியநாதன்
பல்லாண்டு வாழ்வான் நினைவில்."

வடமொழி, தென்மொழிப் பண்டிதர்களால் போற்றிப் புகழப்பட்டவர் அப்பைய தீக்ஷிதர். இவர் பரம்பரையில் வந்தவர்தான் நம் ஸ்வாமிகள். தீக்ஷிதர் எண்ணிலடங்கா நூல்கள்செய்துள்ளார்.

சிவ ஸ்தோத்திரங்கள் பல இயற்றியுள்ளார். அவற்றுள் 'உன்மத்த பஞ்சாத் 'என்பது கற்றறிந்தோர்களால் மிக உயர்வாகக் கொண்டாடப்படும் ஒருநூல். அது ஐம்பது ஸ்லோகங்களைக் கொண்டது. அவற்றுள் ஆத்மார்ப்பன ஸ்துதியாக ஐந்து ஸ்லோகங்கள் உள்ளன.

சிதம்பரம் நடராஜர் சந்நிதியில் கூடியிருந்த சிறந்த இசைக் கலைஞர்களில் ராஜு சாஸ்திரிகளும் ஒருவர்.இவர் உலகப் புகழ்பெற்ற பண்டிதர்களால் போற்றப் பட்டவர். கருத்துச் செறிவுள்ள இந்த ஐந்து ஸ்லோகங்களை அவர் சிவஸ்துதியாகச் செய்து கொண்டிருந்தார். அவர் தம்மை மறந்து பக்தி வெள்ளம் உள்ளத்தில் ததும்ப சிவன்பால் மனத்தை ஈடுபடுத்தித் துதித்துக் கொண்டிருந்தார். அவர் துதிப்பதைக் கேட்டு அருகில் இருந்தவர்கள் மனமுருகி நின்றனர்.

ராஜு சாஸ்திரிகள் பாடி முடித்ததும், கோபால கிருஷ்ண பாரதியார் தம் அருகில் நின்று கொண்டிருந்த ராமஸ்வாமி சிவன், வைத்தியநாத சிவன் ஆகியோரை அவருக்கு அறிமுகப் படுத்தினார்.

ராஜு சாஸ்திரிகள் சிவன் சகோதரர்களின் திறமைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். ஆனால் அவர்களை நேரில் பார்த்துப் பேசிப்பழகும் வாய்ப்பு ஏற்பட்டதில்லை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'மஹாவைத்தியநாத சிவன் நயமான குரல்வளம் பெற்றவர். அவரின் இன்னிசை தேனினும் இனியதாகும். வடமொழியில் சிறந்த அறிவு பெற்றவர். தென்மொழியில் உயர்ந்த பண்டிதர். இசையில் இமயச் சிகரம். இவருடைய குரல்வளத்தின் மகிமையால் இசையிலுள்ள எல்லா நுட்பங்களும் ரஸவித்தாய் விளங்கும். பிக்ஷாண்டார்கோயில் சுப்புராயர், அந்தனூர் சுப்பையர் ஆகியோருக்கு இணையாகப் பாடக்கூடியவர். தாங்கள் அவருடைய இன்னிசையைக் கேட்டு மகிழ வேண்டும்.' என்று கோபாலகிருஷ்ண பாரதியார், ராஜு சாஸ்திரிகளிடம் தெரிவித்தார்.

'நான் இவர்கள் இசையை இதுவரை கேட்டதில்லை.கேட்க வேண்டும் என்ற மோகமும் எனக்கு இல்லை. இருந்தாலும் வடமொழியை எவ்வாறு உச்சரிக்கிறார் என்று பார்க்கலாம். நடராஜர் சம்பந்தமாக ஏதேனும் தெரிந்திருந்தால் ஒன்றிரண்டு ஸ்லோகங்களைச் சொல்லச் சொல்லுங்கள்' என்றார் ராஜு சாஸ்திரிகள்.

ராஜு சாஸ்திரிகள் துதிசெய்து பாடிய அதே ஐந்து ஸ்லோகங்களைப் பதப்பொருள் கெடாமல் பல ராகங்களிலும் இயக்கிப் பாடினார் சிவன். அங்கு குழுமியிருந்த ஆயிரக் கணக்கான மக்களின் பேச்சொலியும், அவர்களின் நெரிசலில் ஏற்பட்ட சப்தங்களும் உடனடியாக அடங்கின.

பறவைகள் தங்கள் இயக்கத்தை நிறுத்தின.

செடி கொடிகள் சிவனின் கானத்தைக் கேட்டு அசையாது இருந்தன.

கோயில் தீக்ஷிதர்களும் மந்திரங்கள் ஓதுவதை மறந்தனர்.

ஆலய ஊழியர்கள் கோயில் மணியை அடிப்பதை நிறுத்தி இசையில் மயங்கினர்.

ஆடவல்லான் தன் கூத்தை ஒருகணம் நிறுத்தவும், மற்ற தெய்வங்கள் எல்லாம் அவனுடன் சேர்ந்து வைத்தியநாத சிவனின் கானத்தை ரசித்தனர்.

பரமன், படித்தவர், பாமரர் என்று அனைவரும் இசையைச் சுவைத்தனர்.

மஹா வைத்தியநாத சிவன் அவர்கள் பாடப்பாட அதில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பலவிதக் கருத்துக்கள் தோன்றின.

சொற்சுவையும், பொருட்சுவையும் மேலோங்கின.

இசையின் அழகும், செழிப்பும் சிறப்பாய் மிளிர்ந்தன.

அனைவரின் கண்ணிற்குள்ளும் நடராஜ மூர்த்தியும், அவர் தாண்டவமாடும் காட்சியுமே தெரிந்தன.

எந்த வர்ணனையைப் பண்டிதர்கள் சுவைப்பார்களோ அந்த வர்ணனையை உணர்ந்தார்கள்.

அந்த ஐந்து ஸ்லோகங்களைக் கானம் செய்ய சுமார் ஒருமணி நேரம் ஆயிற்று.

அந்த இசையை நின்று கொண்டே கேட்ட மக்களுக்குக் கால்வலி இல்லை;பசிப் பிணியில்லை;எந்தவிதக் களைப்பும் தோன்றவில்லை;மக்களின் நெரிசலின் துன்பமில்லை.

இத்தகைய பக்திமயமான சூழலில் நடராஜப் பெருமானே மகாவைத்தியநாத சிவன் உருவத்தில் கானம்செய்வதாக நினைத்து மெய்சிலிர்த்தார்கள்.

இசையைக் கேட்டு ஆனந்திக்க வேண்டுமென்ற விருப்பம் இல்லாத, மோகம் இல்லாத ராஜீ சாஸ்திரிகள் அவர்கள் மகாவைத்தியநாத சிவன் அவர்களின் இசையைக் கேட்டு என்ன கூறினார் ?

"தில்லை நடராஜன் கூத்தை மறந்தனன்
எல்லையில் பக்தியில் மக்கள் மிதந்தனர்
தொல்லைகள் எல்லாம் மறந்தே சிவனவன்
சொல்லில் மயங்கியே வீழ்ந்தார். "

இசையைக்கேட்டு ஆனந்திக்க வேண்டுமென்ற மோகம் இல்லை என்று கூறிய ராஜு சாஸ்திரிகள் மஹாவைத்தியநாதசிவன் சிவஸ்தோத்திரமாகிய ஸ்லோகங்களை இசைக்கத் தொடங்கியதைக் கேட்டார். ஆரம்பத்தில் 'இவர் என்ன வடமொழி உச்சரிப்புத் தெளிவுடன் பாடிவிடப் போகிறார்' என்று அலட்சியமாகக் கேட்க ஆரம்பித்தவர் சில நொடிகளிலேயே சிவனின் குரலின் இனிமையிலும், இசையின் பாவத்திலும், உச்சரிப்பின் தெளிவிலும் மயங்கினார். கண்கள் தாமாகவே



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மூடிக்கொண்டன.கண்களிலிருந்து கரகரவென ஆனந்தக் கண்ணீர் பெருகி வழிந்தது. சிவன் பாடப்பாட சாஸ்திரியின் கண்களிலிருந்து கண்ணீர் கரைபுரண்டோடியது. அவர் மனக்கண்ணில் நடராஜரின் நர்த்தனம் தெரிந்தது. ஆடல் வல்லானின் உதட்டில் புன்னகை தோன்றியது. மஹா வைத்தியநாத சிவன் பாட ஆரம்பத்ததிலிருந்து சாஸ்திரி கண்களைத் திறக்கவே இல்லை. திறந்தால் நடராஜர் தரிசனம் மறைந்து விடுமோ என்ற அச்சம். இவர்நிலை கண்ட மற்றவர்களின் விழிகளிலும் நீர் அருவியாய் ஓட ஆரம்பித்தது. சிவன் பாடி முடியும்வரை எவரும் கண்களைத் திறக்கவில்லை;வழிந்த கண்ணீர் நிற்கவில்லை.

ஒரு மணி நேரம் சென்றதே தெரியவில்லை. எந்த ஒரு சிறந்த,உன்னதமான அனுபவமும் ஒரு முடிவிற்கு வந்துதானே ஆகவேண்டும். மஹாவைத்தியநாத சிவன் பாடி முடித்தார். நடராஜப் பெருமானும் ஆடி முடித்தார்.

ராஜுசாஸ்திரிகள் கண்களைத் திறந்தார். தன்னைப் பிணைத்திருந்த அனுபவத்திலிருந்து மீண்டு வந்தார். நடராஜரை வணங்கினார். அந்த முதியவர், வைத்தியநாத சிவனை இறுகத்தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டார். ‘சுந்தர மூர்த்தி நாயனார் சிவபெருமானை வசப்படுத்தி தூது போக நடந்து சொல்ல ஏவினார். தாங்கள் அவரை வசப்படுத்தி ஹிருதயத்திற்குள்ளேயே நடனமிட வைத்துவிட்டீர்கள். அந்த நடராஜமூர்த்தியை இந்த ஒருமணி நேரமும் எனது இதயத்தில் குடியமரச் செய்து விட்டீர்கள். இதுவரையில் கனகசபையில் ஆடும் அந்த நர்த்தன ஈசன் என்னை ஆட்கொண்டு விட்டான். இன்னும் அவன் தாண்டவம் என்னுள்ளே நடந்து கொண்டிருக்கிறது. என்ன ஆனந்தம்!என்ன ஆனந்தம்!! என்னவோர் பரமானந்தம்!!! இது போன்றதோர் ஆனந்தப் பரவசத்தை எக்காலத்திலும் நான் அடைந்ததில்லை. இனியும் அடைவேனா என்பது ஐயமே.

ஸ்லோகங்கள் உங்கள் வாயிலிருந்து வரும்பொழுது சொற்பொருள் மனதைக் கவர்ந்தது; இசையானது தேகம் முழுவதும் பரவி மெய்மறக்கச் செய்து விட்டது.

அற்புதம்! அற்புதம்!



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நான் இசையில் ஈடுபட்டவன் அல்லன். அப்பேர்பட்ட அரசிகனுக்கும் இசையின் மேலாம் தன்மையைக் கண்ணெதிரே காட்டி விட்டீர்கள். இசையின் ஈஸ்வரத்தன்மையை இன்று உங்கள் மூலம் நான் கண்ணெதிரே அறிந்து கொண்டேன். இதுநாள்வரை உங்கள் இசையைக் கேட்காத அதிர்ஷ்டஹீனனாக இருந்து விட்டேன். உங்கள் திறமையை மதிக்கத் தெரியாத மமதையாளனாக இருந்து விட்டேன். இதோ இந்த நடராஜப் பெருமானின் அருளினால் அவர் சந்நிதியிலேயே பலர் பண்டிதர்கள் புடைசூழ உங்கள் வாக்கின் இனிமையையும், சம்பத்தையும் அறிந்து கொண்டேன். அந்தப் புண்ணியம் கிடைக்கும் பாக்கியம் இன்றுதான் கிட்டியுள்ளது. உங்களால், உங்கள் இசையால் இன்றுநான் புனிதன் ஆனேன்' என்று பலவாறு போற்றிப் புகழ்ந்தார்.

இவ்வாறு இசையில் பற்றில்லாதவரையும் ஈர்க்கும் ஆற்றல் சிவனின் குரல்வளத்திற்கு இருந்தது.

இவரின் இசைத்திறமைக்கு ஏற்றம் எதனால் ஏற்பட்டது?

சிவபெருமான் திருவருளால் இசை ஞானசெல்வத்தை நிரம்பப் பெற்றவர். சிவத் தியானத்திலும், சிவபூஜையிலும் ஸ்ரீசுந்தர ஸ்வாமிகள் இவரை ஈடுபடுத்திய ஆச்சாரியார்ஆவார்கள்.ஆகவே அத்வைத தத்துவத்தில் உள்ளம் ஊறியவர். பரம தேசிக சிகாமணியாக விளங்கியவர். சர்வ சித்தி பெற்ற சுந்தர மகானின் கருணையின் பலத்தால் கலையுலகில் சிறந்தோங்கி விளங்கினார். ஸ்வாமிகள் ராமஸ்வாமி சிவனுக்கும், வைத்தியநாத சிவனுக்கும் செய்த அனுக்ரஹ பலத்தால் இருவரும் இசையில் சிம்மங்கள் போல் விளங்கினார்கள்.

இத்தகைய சிம்மங்களுக்கும் அன்று சில போட்டியாளர்கள் இருந்தனர்.

ஏன் ? எதனால் ? யார் அவர்கள் ?

"வையம்புகழ் நீர்வளம் மிக்கதோர் சீரார்
வையைச்சேரி தன்னில் சுந்தரனின் பக்தியில்
மேவியே பார்புகழும் பேர்பெற்றான் பாட்டிசையில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நாவிலுயர் வைத்திய நாதன்”

மஹாசந்நிதானம் அவர்கள் தமது பதினாறாவது வயதில் காசி யாத்திரை செய்தார்கள். திருநெல்வேலியிருந்து பாதயாத்திரையாக செல்லும் வழியில் வையைச்சேரி வந்தார்கள். பஞ்சநதம் என்கிற துரைசாமி ஐயரும் அவருடைய தர்மபத்தினி அருந்ததி அம்மையாரும், ஸ்வாமிகளை வரவேற்று உபசரித்து, பாதபூஜை செய்து பிக்ஷை அளித்தார்கள். அத்தம்பதியரின் புதல்வர்களில் ஒருவரான வைத்தியநாத சிவனிற்கு அப்பொழுது மூன்று வயது. அன்றே ஸ்வாமிகளின் அருட் கடாக்ஷம் அவர்மீது விழுந்து விட்டது.தஞ்சைப் பகுதிக்கு வரும்பொழுதெல்லாம் வையைச்சேரி சென்று, துரைசாமி ஐயர் வீட்டில் தங்குவார்கள். சிவப்பிரசங்கம், சிவகதைகள், சூதசம்ஹிதைப் பிரவசனம் ஆகியவை அவர் வீட்டில் நடைபெறும்.

பலநூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு ஸ்வாமிகளின் ஆசிகளைப் பெறுவார்கள்.

சிறுவயது முதலே ஸ்வாமிகளின் அமுதமொழிகளைக்கேட்டு, வைத்தியநாத சிவனின் உள்ளத்தில் பக்திப்பயிர் செழித்து வளர்ந்தது. சிவபக்தியிலும், சிவபஜனையிலும் மனதை ஒருமுகப்படுத்தி ஈடுபட்டார். ஏழு வயதிலேயே, குருநாதர்களிடம் சங்கீதத்தை முழுமையாகப் பயின்று மேடை ஏறி கச்சேரி செய்யத் தொடங்கி விட்டார்.

இவருடைய சமகாலத்தவர்களாக நூற்றுக் கணக்கான பிரபல வித்வான்கள் இருந்தனர்.

அவர்களில் சிலர்,

திருவனந்தபுரம் வேதஸ்ரீ பரமேஸ்வர பாகவதர், சாம்ப பாகவதர், கிட்டு பாகவதர், மொக்கே கணபதி பாகவதர், ராமஸ்வாமி பாகவதர், மலையாளம் வைத்தி பாகவதர், வில்லடி மஹாதேவ பாகவதர், வீணை கல்யாண கிருஷ்ண பாகவதர், வீணை ராமச்சந்திர பாகவதர், கோயம்புத்தூர் ராகவ ஐயர்.

பாலக்காடு அனந்தராம பாகவதர், செங்கோட்டை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


சீதாராமஸ்வாமி பாகவதர், திருநெல்வேலி வீணை சின்னையா பாகவதர், பிச்சுமணி பாகவதர், ஸ்ரீவைகுண்டம் சுப்பையர், பத்தமடை விஸ்வேஸ்வர சிவன், வாசுதேவநல்லூர் பல்லவி சுப்பையா பாகவதர், ஆழ்வார்குரிச்சி அனந்தகிருஷ்ண பாகவதர், எட்டையபுரம் பாலுஸ்வாமி தீக்ஷிதர், நகரம் முத்துஸ்வாமி கவிராயர், வாசுதேவநல்லூர் மூக்கரைக் கந்தசாமி புலவர், சிவகங்கை பெரிய வைத்தியநாத பாகவதர், சிவகங்கை சின்ன வைத்தியநாத பாகவதர், குன்னக்குடி கிருஷ்ண ஐயர், ஆவுடையார் கோயில் சுப்ரமணிய ஐயர், திருப்பெருந்துறை தக்ஷிணாமூர்த்தி சிவன்,

ராமநாதபுரம் பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார், புதுக்கோட்டை வீணை சுப்புக்குட்டி ஐயர், புதுக்கோட்டை வீணை சுப்பையர், அண்ணாசாமி சாஸ்திரி, சுப்புராய சாஸ்திரி, இரட்டைப் பல்லவி சிவராம ஐயர், மானம்புச்சாவடி வேங்கட சுப்பையர், வீணை ஆதிமூர்த்தி ஐயர், மிருதங்கம் நாராயணசாமி அப்பா, சாமாராவ், துக்காராம், சேது ராமராவ், பெரிய ராமஸ்வாமி பாகவதர், திருவையாறு பிடில் சாம்பசிவ ஐயர், பிக்ஷாண்டார் கோயில் சுப்பராயர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர், பிடில் வெங்கோபராவ், திருக்கோகர்ணம் நாராயணஸ்வாமி ஐயர், கடம் நாராயணஸ்வாமி ஐயர், உமையாள்புரம் ஸ்வாமிநாத ஐயர், பழமாநேரி ஸ்வாமிநாத ஐயர், புல்லாங்குழல் சரபசாஸ்திரிகள், மெலட்டூர் சுப்பையர், மாயூரம்வீணை வைத்தியநாத ஐயர், கோட்டு வாத்தியம் கிருஷ்ணய்யர், சென்னை போட்டோகிராபர் பிடில் மாசிலாமணி முதலியார், ஆர்மேனியம் கந்தஸ்வாமி முதலியார், வேணுகோபாலதாஸ் நாயுடு, பிடில் கிருஷ்ணசாமி முதலியார், நெய்க்காரப்பட்டி பல்லவி சேஷ ஐயர், மைசூர் கிருஷ்ண ஐயங்கார், வீணை சாமண்ணா, வீணை சேஷண்ணா, வீணை சுப்பண்ணா, பக்ஷி வீணை சாம்பு ஐயர்........

இன்னும் பட்டியல் தொடர்கிறது.

இவர்களில் பலரும் வயதிலும், இசை அனுபவத்திலும் வைத்தியநாத சிவனைவிட மூத்தவர்கள்.

பட்டணம் சுப்ரமணிய ஐயர் போன்று ஒருசிலர் மட்டும் வயதில்


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இளையவர்கள்.

இவர்கள் அனைவருமே மஹாவைத்தியநாத சிவன் அவர்களின் இசை மேதமையைப் போற்றிப் பாராட்டியவர்களே. ஆனால் மற்ற துறைகளைப்போல் இசை உலகிலும் போட்டியும், பொறாமையும் தலைதூக்கத் தொடங்கிய காலம் அது.

பட்டிணம் சுப்ரமணிய ஐயரின் சீடர்களுக்கும், வைத்தியநாத சிவன் சீடர்களுக்கும் சிலசமயங்களில் உரசல்கள் ஏற்பட்ட வண்ணமே இருந்தன.

அந்த உரசல்கள் எதனால் ஏற்பட்டன?

"இசைஉலகில் சிம்மமாய் எத்திக்கும் போற்றும்
இசையுடன் வாழ்ந்த சிவனையே அன்புடன்
நல்லோர்கள் போற்றினர் பொல்லா மனத்தினர்
சொல்லாலே போர்தொடுத்தார் காண்"

மஹாவைத்தியநாத ஐயர் மிகச் சிறந்த கர்நாடக இசைக் கலைஞர், வாக்யேகக்காரர்களில் ஒருவர் எனப் போற்றப்படுபவர். சங்கீத மும்மூர்த்திகளுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படுபவர்.

தாளப்ரஸ்தானம் சாமாசாஸ்திரிகள், பல்லவி கோபால ஐயர், வீணை பெருமாள் ஐயர் ஆகியவர்களுக்குப் பிறகு கர்நாடக இசையில் தன்னிகரற்று விளங்கியவர். ஏழு வயதிற்குள் ராகம், பல்லவி பாடும் திறமையைப் பெற்றார். ஒன்பது வயதிற்குள்ளேயே சங்கிரக சூடாமணி, சங்கீத ரத்னாகரம் முதலிய சங்கீத லக்ஷண நூல்களை ஆராய்ந்து தெளிந்தவர்.

இசையுடன் தமிழும், சமஸ்கிருதமும் கற்றார்.

தன் தந்தையிடம் பஞ்சாக்ஷர உபதேசம் பெற்றார்.

ஞான குருவாக ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளிடம் அதர்வர்ணாச்ரமம், சதுர்வேத தாத்பர்ய சங்கிரகம், சிவதத்துவ விவேகம், சூதசம்ஹிதை ஆகியவற்றில் உபதேசம் பெற்றார்.

பழமானேரி சுந்தர சாஸ்திரிகள், திருவையாறு பாலகிருஷ்ண சாஸ்திரிகள் ஆகியவரிடம் சைவநூல்களைப் பாடம் கேட்டார்.

பிறவிக் கலைஞர் இவர். சங்கீதத்துடன் சிவகதைகளை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


உபன்யாசம் செய்பவராக விளங்கினார். ஒவ்வொரு இடத்திலும் சங்கீதம் ஒருநாள், சிவகதை ஒருநாள் என்று ஹரிகதை இலக்கணம் போன்று சிவகதை சொல்பவராகத் திகழ்ந்தார்.

இவருடைய சங்கீத குருமார்கள் வையைச்சேரி ஆனை–ஐயா என்று அறியப்படும் ஆனை ஐயர், ஐயாவைய்யர் சகோதரர்கள். சிவனின் தாய்வழி உறவினர்கள். இவர்கள் சிவ–சக்தி பக்தர்கள்; தேவி உபாசகர்கள். தெலுங்கிலும், தமிழிலும் சில கீர்த்தனைகள் இயற்றி உள்ளனர். சிறந்த வாக்யேயக்காரர்கள் என்று போற்றப்பட்டவர்கள். கிருதிகளில் 'உமாதாச' என்ற முத்திரையைப் பயன்படுத்துவர்.

வையைச்சேரி ஆலயத்தில் உறையும் மங்களாம்பிகை – அகஸ்தீஸ்வரர், திருவையாறு ஆலய தர்மசம்வர்த்தினி அம்பாள்–பிரணதார்த்திஹரர் மேலும் கீர்த்தனைகள் இயற்றி உள்ளனர். ஞான, வைராக்யம் வேண்டும் தத்துவக் கருத்துகள் பாடல்களில் மிளிரும்.

இவர்கள் தியாகப்ரும்மம் அவர்களின் சமகாலத்தவர்கள். தினந்தோறும்,

திருவையாறு வீதிகளில் பஜனை மற்றும் கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டு ஐயாறப்பனை தரிசிக்கும் இசை ஆர்வலர்கள். ஒருமுறை தியாகப்பிரும்மத்தின் பஞ்சரத்னங்களில் ஒன்றான வராளி ராகத்தில் அமைந்த 'கனகன ருசிரா...' என்ற கீர்த்தனையை ஆனை ஐயா சகோதரர்கள் ஊனும், உள்ளமும் உருகும்படி பாவத்துடன் பாடிக்கொண்டு கோயிலை வலம்வந்து கொண்டிருந்தனர். தன் சீடர்களுடன் அப்பொழுது தியாகைய்யா அவர்கள் கோயிலில் நுழைந்தார். அவர்களின் குரலின் இனிமையிலும், பாடும் பாவத்திலும் மனம் குழைந்த தியாகய்யர் ஆனைஐயா சகோதரர்களுடனே கோயிலை வலம்வந்து அவர்களுக்கு பரிபூரண ஆசிகளை வழங்கினார்.

ஆனைஐயா சகோதரர்களின் கிருதிகளில் தோடி ராகத்தில் அமைந்த 'அம்பா நின்னு'; சங்கராபரணத்தில் 'மஹிமை தெரிய தரமா'; தன்யாசியில் 'பருவம் பார்க்க நியாயமா'; நாதநாமக்ரியையில் 'இந்தபரக'; கேதாரத்தில் 'பஜனை சேயவே'; கல்யாணியில் 'மனம்


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வைத்தருள்'; ஆனந்த பைரவியில் 'எத்தனைதான் வித்தை கற்றாலும்' முதலியன பிரபலமானவை.

இவர்கள் தஞ்சையை ஆண்ட இரண்டாம் சரபோஜி மன்னரால் ஆதரிக்கப்பட்டவர்கள்.

இத்தகைய சிறப்புமிக்க ஆனை–ஐயா சகோதரர்களின் உறவினரும், சீடருமான வையைச்சேரி வைத்தியநாத சிவன் அவர்களைப்பற்றி விரிவாகப் பார்த்து விட்டோம்.

இனி பட்டணம் சுப்ரமணிய ஐயர் இசைப் பின்புலம் என்ன ?

"இசையினில் நின்றோர் இசையினைப் போற்ற
இடையினில் வந்தோர் குழுவாய்ப் பிரிந்து
இணைந்திருந் தோரைப் பகடையாய் ஆக்க
இறைவனங்கே புன்னகை செய்தான்."

பட்டணம் சுப்ரமணிய ஐயர் அவர்கள் 1845–ம் ஆண்டு திருவையாறில் பிறந்தார்.

இவருடைய தந்தை பெயர் பரதம் வைத்தியநாத ஐயர்.இவருடைய பாட்டனார் பரதம் பஞ்சநத சாஸ்திரி, தஞ்சையை ஆண்ட இரண்டாம் சரபோஜி மன்னரின் அரசவை இசைக் கலைஞராய் இருந்தார். தாய் மாமன் மெலட்டூர் கணபதி சாஸ்திரி, கோத்தவாசல் வெங்கட்ராம ஐயர் மற்றும் தியாகய்யரின் நேரடி சிஷ்யரான மானம்புச்சாவடி வேங்கடசுப்பையர் ஆகியோரிடம் கர்நாடக இசையினைப் பாடம் பயின்றார்.

சிறுவயதில் இவருக்குக் குரல்வளம் சிறப்பாக அமையாததால் விடியற்காலம் காவிரி ஆற்றில் கழுத்தளவு நீரில் நின்று கொண்டு சாதகம் செய்து பழகுவார். சிறிது சிறிதாக குரல் இவர் வசப்பட்டது; வளம் பெற்றது .

இளவயதிலேயே இசைத்திறனில் தன்னிகரற்று விளங்கினார். நூற்றுக் கணக்கான தியாகைய கீர்த்தனைகளைப் பாடும் புலமை பெற்றிருந்தார்.

அபூர்வ ராகங்களில் தனிக் கவனம் செலுத்தி நூற்றுக் கணக்கான கீர்த்தனைகள் இயற்றியும்,பாடியும் புகழ்பெற்றார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


ஸ்ரீதியாகப்ரும்மத்திற்குப் பின்னர் சிறந்த வாக்யேகக்காரராகத் திகழ்ந்தார்.

தம்முடைய பதினாறாவது வயதில் கச்சேரி மேடை ஏறினார்.

இவருடைய சிஷ்யபரம்பரை மிகப் பெரியது.அவர்கள் அனைவரும் பின்னாளில் மிகவும் புகழ்பெற்று விளங்கினார்கள். அவர்களில் சிலர் மைசூர் வாசுதேவாச்சார், சரபசாஸ்திரிகள், பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார், டைகர் வரதாச்சாரியார்,பைரவி கெம்பே கௌடா, எம்.எஸ். ராமஸ்வாமி, காக்கிநாடா சி.எஸ். கிருஷ்ணஸ்வாமி ஆகியோர். இவர்கள் சிறந்த வாக்யேகக் காரர்களாகவும் பிரகாசித்தனர்.

சங்கீத மும்மூர்த்திகளின் காலத்தினரையும், அவர்களின் பிந்தைய தலைமுறையினரையும் சங்கீதத்தால் இணைக்கும் பாலமாய்த் திகழ்ந்தார்.

இவர் பேகடா (வேகடை) ராகம் பாடுவதில் தனித்துவம் பெற்றுத் திகழ்ந்தார். எனவே 'வேகடை சுப்ரமணிய ஐயர்' என்று மைசூர் மஹாராஜாவால் பட்டம் சூட்டி அழைக்கப்பட்டார். பேகடா மட்டுமின்றி சஹானா, ஹம்ஸத்வனி ராகங்கள் பாடுவதிலும் சிறப்புப் பெற்று விளங்கினார்.

மைசூர் மஹாராஜா ஸ்ரீஜயராஜேந்திர ஒடையரு இவரை ஆதரித்த புரவலர்களில் ஒருவர்.

ஒருமுறை மைசூர் வித்வத் சபையில் மூன்று நாட்கள் பேகடா ராகத்தை விரிவாகப் பாடினார்.

முதல்நாள் அந்த ராகத்தை ஒன்றரை மணி நேரத்திற்கு மேல் நிரவல் செய்தார்;

அடுத்தநாள் ஒன்றரை மணிநேரம் மத்திம காலத்தில் தானம்; அடுத்தநாள் 'ராம நாமமே ஜீவனமே...' என்ற பல்லவியை இரண்டு மணிநேரம் பாடினார்.

இவர் வர்ணம், ஜாவளி, தில்லானா, கீர்த்தனைகள் ஆகிவற்றை இயற்றுவதில் தனித்திறமை பெற்றிருந்தார். இசைக்கச்சேரி தொடங்கும் பொழுது இவருடைய நவராகமாலிகா அல்லது ஆபோஹி வர்ணத் தொடக்கமே முழு நிகழ்ச்சியின் விறுவிறுப்பிற்குக் கட்டியம் கூறிவிடும்.


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஷண்முகப்ரியாவில் 'மரிவேறு திக்கவெரய்யா'; லதாங்கியில் 'மரிவேறு திக்கெவரு'; பிலஹரியில் 'பரிதான மிச்சிதே'; என்றும் பசுமையான, சாகாவரம் பெற்ற கதனகுதூகலத்தில் 'ரகுவம்ஸசுதா' ஆகிய கீர்த்தனைகள் நிரவல், கல்பனா ஸ்வரங்களுக்கு ஏற்றவையாக இன்றும் விளங்குகின்றன. இவருடைய கிருதிகளைக் கொண்டே முழுநேரக் கச்சேரி நடத்திவிடலாம். இவரை 'சின்ன தியாகையர்' என்று அன்பர்கள் அழைத்தனர்.

128 அக்ஷரங்களைக் கொண்ட சிம்மநந்தன தாளத்தில் அமைந்த பல்லவி இயற்றிய பெருமையும் இவருக்கு உண்டு. தான் பாடும் கச்சேரியில் தான் இயற்றிய சாஹித்யங்களைக் கூடியவரை பாடுவதில்லை என்ற கொள்கையைக் கடைப்பிடித்தவர்.

வாழ்க்கையின் பின்னாட்களில் தன்னுடைய இரண்டு பெண்களின் சங்கீதப்பயிற்சிக்காகத் திருவையாறிலிருந்து சென்னைபட்டணம் சென்று வசித்ததால் 'பட்டணம் சுப்பிரமணிய ஐயர்' என்று அழைக்கப்பட்டார்.

இவர் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் கீர்த்தனைகள் இயற்றி உள்ளார்.

இவருடைய கிருதிகளில் வெங்கடேஸ்வரா, ஆதிவெங்கடேஸ்வரா, ஸ்ரீவரதவெங்கடேஸ்வரா, ஆகிய முத்திரைகளில் ஒன்று இடம் பெறும்.

மஹாவைத்தியநாத சிவன் அவர்கள் ஸ்ரீஸ்வாமிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மிகவும் எளிமையான வாழ்க்கை முறையை மேற்கொண்டவர்.

ஆனால் பட்டணம் சுப்ரமணிய ஐயர் அவர்களோ.... நல்ல சுகி. உல்லாசப் பிரியர். ஆடை அலங்காரங்களில் அதிக மோகம் கொண்டவர். சுகந்தமான வாசனைகளில் அதிகம் விருப்பம் உடையவர். அத்தர், ஜவ்வாது, புனுகு, சந்தனம் என்று மேனியெல்லாம் மணக்கும். நல்ல வாசமுள்ள மலர்களைத் தலையில் சூடிக் கொள்வார். ஒரு வீதியில் நுழைந்தார் என்றாலே அந்த வீதி முழுக்க நறுமணம் வீசும். உடம்பின் போஷாக்கில் அதிக கவனம் செலுத்துவார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


வாய் சிவக்க வெற்றிலை பாக்கு போட்டு சுவைப்பார். மாப்பிள்ளைபோல் காட்சி அளிப்பார். வீட்டில் நாள்தோறும் கல்யாணச் சாப்பாடுதான். அன்றைய காலகட்டத்தில், இவரைப் போன்ற உடல் சுகம் அனுபவித்தவர்கள் வேறு எவரும் இல்லை எனலாம்.

மஹாவைத்தியநாத சிவன் வாழ்க்கைமுறை எப்படி இருந்தது?

"கதன குதூகலம் கீர்த்தனையைக் கேட்போர்
வதன முழுதும் பரவியே நெஞ்சில்
வழிந்தோடி சிந்தையில் ஓடியே நாட்டில்
செழித்தது இன்னிசைப் பாட்டு."

மஹா வைத்தியநாத சிவன் அவர்களின் வாழ்க்கை முறை இதற்கு நேர்மாறானது.

ஸ்வாமிகளைப் பின்பற்றி அவரைப்போன்றே மிக எளிமையான, படாடோபமில்லாத வாழ்க்கை. அவருக்கு வாசனை என்பதே ஒத்துக் கொள்ளாது. எந்த நறுமணத்தையும் பயன்படுத்தியதில்லை.

பழங்கள்,ஊதுபத்தி மற்ற புகையின் வாடையே ஒத்துக் கொள்ளாது. அதிக மணமுள்ள புஷ்பங்கள் இவருக்கு ஆகாது. வையைச்சேரி வீதியில் யாரேனும் எலுமிச்சம்பழம் விற்க வந்தாலோ, எடுத்து வந்தாலோ இவருடைய தொண்டை கட்டிக் கொள்ளும். நல்ல சுவையான சாப்பாடு சாப்பிட்டவரன்று. நாள்தோறும் வற்றல் குழம்பு சாப்பாடுதான். உப்பில் இரண்டு நாட்கள் ஊறவைத்த மணத்தக்காளிதான் பொறியல், அவியல், துவையல் எல்லாம் அவருக்கு.

பேச்சு மிக மென்மையாக, இனிமையாக இருக்கும்.

இசையில் நல்ல திறமைமிக்கவர்களும், ஆழ்ந்த புலமை மிக்கவர்களும் போற்றும்படி ஏழுவயதிலேயே கச்சேரிகள் செய்யத் தொடங்கி விட்டார். பதினாறு வயதிலேயே சிவகங்கை மன்னர் முன்னிலையில் 'இசையின் இரண்டு மத்தகஜங்கள்' என்று போற்றப்பட்ட பெரிய வைத்தியநாத சிவன், சின்ன வைத்தியநாத சிவன் ஆகியோர்களால் 'மஹா வைத்தியநாத சிவன்' என்ற


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பட்டத்தைப் பெற்றுவிட்டார். எல்லா வித்வான்களிலும் இசைச்சிறப்பு மேலோங்கி நிற்பவர் என்ற சிறப்புப் புகழையும் பெற்று விட்டார்.

பட்டணம் சுப்ரமணிய ஐயர் அவர்கள் தம் பதினாறு வயதில் மேடையேறி, முப்பத்தி இரண்டாம் வயதில் புகழின் உச்சத்தைத் தொட்டார். இவருடைய சீடர்களும் இசையில் மிகச் சிறந்தவர்களாக விளங்கினார்கள்.

முதன் முதலில் கிராமபோன் பதிவு கொடுத்தவரும், புகைப்படம் எடுத்துக் கொண்ட பாடகர் என்ற பெருமையும் சிவன் அவர்களுக்கே உரியது. நம்முடைய போதாத நேரம் இவ்விருவரின் இசைத்தட்டுகளும் நமக்குக் கிடைக்கவில்லை.

மஹா வைத்தியநாத சிவன் அவர்களுக்கு எந்த ராகமும், தாளமும், பல்லவியும் மிக எளிமையாகக் கைகூடிவிடும் .அவற்றை மிக அநாயாசமாகப் பாடும்வல்லமைஉண்டு. பட்டணம் சுப்ரமணிய ஐயர்

தோடி, கல்யாணி, மோகனம் போன்ற கனராகங்களையும், பேகடா, சுத்தசாவேரி, கமாஸ், பூர்ணசந்திரிகா, கன்னடகௌளை, பலமஞ்சரி, நாட்டைக்குறிஞ்சி, பரசு, செஞ்சுருட்டி, காபி, ஜனரஞ்ஜனி, கேதாரம், கரகரப்ரியா, சாளகபைரவி, ஹுஸேனி, மாஞ்சை, ஆஹிரி முதலிய ராகங்களை மணிக்கணக்கில் ஆலாபித்து அழகுசெய்து தமது சாதக பலத்தால் மிக எளிமையாகப் பாடிவிடுவார். அன்றும், இன்றும், என்றும் ரசிகர்கள் விருப்பமாய் இருக்கும் 'கதனகுதூகலம் 'என்ற ராகம் இவருடைய கண்டுபிடிப்பே.இவர் பாடுவது போல வேறு எவரும் இந்த ராகங்களைச் சிறப்பாகப் பாட முடியாது. பல்லவி பாடுவதற்குக் கனராகமாகிய தோடி, கல்யாணி, காம்போதி பைரவி, சங்கராபரணம் ஆகிய ஐந்தோடு பேகடா, நாட்டக்குறிஞ்சி, கரகரப்ரியா இவைகள் விசேஷ இடம் பிடிக்கும். இவருடைய கனமான, கம்பீரமான,அழகான சாரீரத்தில் இந்த ராகங்கள் மெருகு பெற்றுக் கேட்பவர்களைப் பரவசப்படுத்தும்.

இந்த ராகங்களை பட்டணம் சுப்ரமணிய ஐயர் பாடிக் கேட்பதில் வைத்தியநாத சிவன் அவர்களுக்கு ஆர்வம் உண்டு. அவ்வாறு அவர் பாடிக் கேட்டு,மகிழ்ந்து பாராட்டி உள்ளார்.

வையச்சேரியிலிருந்து, திருவையாறு பாவாஸ்வாமி அக்ரஹாரத்தில் சிவன் அவர்கள் வீடு வாங்கி வசிக்க ஆரம்பித்த



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


பின் எப்பொழுதேனும் இருவரும் சந்தித்துக் கொள்வார்கள். மலர்ந்த முகத்துடன் முகமன் கூறி இரண்டொரு வார்த்தைகள் பேசிக் கொள்வார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஆவணி அவிட்டத்து அன்று புதுப்பூணூல் அணிந்ததும், வைத்தியநாத சிவன் அவர்களின் வீடு தேடி வந்து அவர் பாதம் பணிந்து ஆசிகள் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் பட்டணம் சுப்ரமணிய ஐயர் அவர்கள்.

பின், இவர்களிடையே பிணக்கு எவ்வாறு ஏற்பட்டது?

"ஆவே றுருவாயின் பால்வேறு உருவாமோ?
பால்போல் வித்தைகள் யாவும் படைத்தான்
தனக்குள் இணைந்தே உறையுமே ஆபோல்
பிணக்குகள் நம்மிடை ஏனோ?"

மஹா வைத்தியநாத சிவன் அவர்கள் தங்கத்தைப்புடம் போட்டது போன்று பொன்னிற வடிவம். நெற்றி, உடல், கைகள் முழுவதும் நிரம்பிய திருநீற்றுப்பூச்சு. கழுத்தில் ருத்ராக்ஷ கண்டிகை.சைவப்பழம் போல திருக்கோலம். கனிவு நிறைந்த உள்ளம்.குளிர்ந்த பார்வை. தேனினும் இனிய பேச்சு. தேஜஸ் மிளிரும் முகமண்டலம்.அடக்கமான தோற்றம். சிவபக்தி. இவரது காட்சி கண்டோரைக் கவரும். அணிவது அய்யம்பேட்டை சாயவேஷ்டி. முக்கியமான தருணங்களில் பஞ்சகச்சம்.

பத்து வயதிற்குள் பல ஊர்களிலும் இசைக் கச்சேரி செய்து பல மடாதிபதிகள், ஜமீன்தார்கள், பிரபுக்கள், இசைப்புலவர்கள், அரசர்கள்,ஹரிகதா காலக்ஷேபம் நடத்தும் பெரியவர்கள் ஆகிய அனைவரின் நட்பையும், ஆதரவையும் பெற்றார்.இவருடைய கச்சேரியைக் கேட்ட திரளான மக்கள் தேன் உண்ட வண்டுபோல் மயங்கிக் கிடப்பார்கள்.

இவரது சாரீரத்தைக் 'கௌள சாரீரம்' என்பார்கள். குளம் என்றால் வெல்லம்.இவருடைய குரல் வெல்லம்போல் இனிப்பானது, சுவையானது. தொண்டையிலிருந்து வெளிவரும் ஒலியானது சங்கநாதம் போல ஹுும்காரத்துடனும், கனத்துடனும், கணிப்புடனும் குளிர்ச்சியாகக் காதில் பாயும்.


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அந்தக் காலத்தில் ஒலிபெருக்கி கிடையாது. அமர்ந்து பாட மேடை கிடையாது. ஜமுக்காளத்தைத் தரையில் விரித்து அமர்ந்துகொண்டு பாடுவதே வழக்கம்.வயலின், மிருதங்கம் என்ற பக்க வாத்தியங்கள் – ஏன் தம்புரா கூட இல்லாமல் பாடியுள்ளார். இருநூறடி தூரத்தில் இருப்பவர்களுக்கும் இவர் குரல் தெளிவாகக் கேட்கும். இசையின் திட்ப நுட்பப் பகுதிகள் அருகே இருப்போரும், தொலைவில் இருப்போரும் தெளிவாக உணர்ந்து அனுபவிக்கத் தக்க அளவில் இருக்கும்,இவர் பாட ஆரம்பிக்கும் பொழுதே குரல் தம்புரச் சுருதியுடன் இணைந்து நல்ல நாதக் கட்டுடன் கம்பீரமாக ஒலிக்கும். இவர் கச்சேரி செய்ய ஆரம்பித்தால் கூடியுள்ள மக்கள் அமைதி ஆகிவிடுவார்கள். அதுவரை இவருடைய திவ்விய தேஜஸைக் கண்டு களிப்பார்கள்.

இவர் வீட்டில் ஐம்பதிற்கும் குறையாத சீடர்களுக்கு போஜனம் நடைபெறும். எவரிடமும் குருதக்ஷிணை எதுவும் பெற்றுக் கொள்ளமாட்டார். துணிதுவைப்பது, கால்பிடித்து விடுவது, கடைக்குப் போவது போன்ற எடுபிடி வேலைகளுக்கு ஏவமாட்டார். தன்மானத்துடன் அவர்கள் வித்தை கற்கத் தூண்டுகோலாய் இருந்தார்.

இசையின் இலக்கிய, இலக்கணப்பகுதிகள் சிவனின் பன்னிரெண்டாம் வயதிற்குள்ளேயே கைகூடிவிட்டன. இவருடைய அண்ணன் ராமஸ்வாமி சிவன் இயற்றிய பெரியபுராணக் கீர்த்தனைகள் கச்சேரியில் இடம் பெறும்.சஹானா ராகத்தில் அமைந்துள்ள 'நந்திதேவர் மங்களம்' என்ற பாடலுடன் நிகழ்ச்சியை நிறைவு செய்வார்.

ஒவ்வொரு ஆண்டும் சப்தஸ்தானத் திருவிழாவில் திருவையாறிலிருந்து ஸ்வாமி–அம்பாள் புறப்பாட்டில் கலந்து கொள்வார். தேவார, திருவாசக, பெரியபுராணக் கீர்த்தனைகளைப் பாடிக் கொண்டே செல்வார். மற்ற ஆறு ஊர் ஸ்வாமி–அம்பாள் பல்லக்குகளும் தில்லைஸ்தானம் சென்றடையும். அங்கே ஆற்று மணலில் அமர்ந்து கொண்டு விடியவிடிய கச்சேரி செய்வார். சில சமயங்களில் பட்டணம் சுப்ரமணிய ஐயரும் இவருடன் சேர்ந்து பாடுவார். அப்போது ரசிகர்கள் ஆரவாரம் செய்து தங்கள்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். எத்தகைய ஆடம்பரமும் இல்லாத எளிமையான வித்வானாக சிவன் திகழ்ந்தார்.

வேதாந்த அறிவு சிவன் சகோதரர்களிடம் இளவயதிலேயே குடிகொண்டிருந்தது. தமது ஐயங்களைத் தீர்த்துக் கொள்ள திருநெல்வேலி சென்று, ஸ்ரீஸ்வாமிகளின் சீடர்களான ஐயாசாமிப்பிள்ளை, சிதம்பரம் பிள்ளை ஆகியோரிடம் பாடங்கள் கேட்டனர். அவர்கள் வாயிலாக வேதாந்த ரகசியங்களில் தெளிவு பெற்றனர். ஒருசமயம் பஞ்சத்தினால் அங்கு மக்கள் வாடுவதைக் கண்டு மனம் வருந்தினர். பஞ்சம் தீர்க்கும் கீர்த்தனைகளை உடனே புனைந்தனர், பாடினர். மழைபொழிந்தது. மக்களின் பசிப்பிணி தீர்ந்தது.

ஒவ்வொரு ஆண்டும் வையைச்சேரியில் மார்கழி மாதம் முழுவதும் கையில் ஜால்ரா எடுத்துக்கொண்டு வீதிகள் தோறும் பஜனை செய்து அகஸ்தீஸ்வரர் கோயிலை அடைவார். இவரைப் பின்பற்றி அக்ரஹார மக்கள் அனைவரும் வருவார்கள்.

பட்டணம் சுப்ரமணிய ஐயரும், மஹாவைத்தியநாத சிவனும் எத்தகைய அகங்காரமுமின்றி ஒருவரோடொருவர் பழகினும் இவர்களின் மாணாக்கர்களிடையே 'இருவரில் இசையில் யார் சிறந்தவர்' என்ற போட்டாபோட்டி நடந்து கொண்டே இருக்கும். கோயில், கடைவீதி, திருவிழா, கச்சேரி என்று எங்கு எதிர்ப்பட்டாலும் அவர்களிடையே வாக்குவாதம்தான்.

இந்தப் பிரச்னை எத்தகைய சோகமான சூழலில் முடிவிற்கு வந்தது? இல்லை அதற்குப் பிறகும் தொடர்ந்ததா?

"வித்தை அறிந்தோர் பணிவுடன் என்றுமே
தத்தம் வழியில் புகழினைப் பெற்றனர்
வற்றிய ஓலைகள் ஆங்கே கலகலக்க
கற்றறிந்தோர் கொண்டர் பணிவு."

வையைச்சேரி கிராமத்தில் அக்காலத்தில் இசைக்கலைஞயை கசடறக் கற்ற புலவர்களும், கேள்வி ஞானத்தால் இசையை இனிமைபெறப் பாடும் ஆற்றலுள்ளவர்களும் பலர் இருந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வையச்சேரி, இசைக் கலைஞர்கள் வாழும் ஊர் என்று அந்தநாட்களில் பெயர் பெற்றிருந்தது. தேவாரம், திருவாசகம், திருப்புகழ், பாடுவோரும், பஜனைப் பாடல்கள் பாடுவோரும் அதிக அளவில்இருந்தனர். சிவன் வயதில் இவர்களைவிடவயதில் இளையவரானாலும், அவர் அனைவராலும் மதிக்கப்பட்டார்.

செயற்கை அலங்காரங்களில் மஹாவைத்தியநாத சிவன் அவர்களுக்கு விருப்பம் கிடையாது. ஆபரணங்கள் எதுவும் அணிந்து கொள்வதில்லை. அவருக்குப் பொன்னால் செய்யப்பட்ட நகைகளில் விருப்பமில்லை.ஆயினும் லோக குருவாகிய சிருங்கேரி சாரதா பீடம் ஸ்ரீஸ்ரீசங்கராச்சாரியார் அனுக்ரஹித்து அளித்த வீரகண்டிகையை வலக்கையில் எப்பொழுதேனும் அணிந்து கொள்வார். சொக்கம்பட்டி ஜமீன்தார் வேண்டுதலை ஏற்று அவர் பரிசாக அளித்த வீரக்கழலை கச்சேரி செய்யும் போது அணிந்து கொள்ளுவார்.

திருவனந்தபுரம் சமஸ்தானத்தில் இசை வல்லுநர்களுக்கு மற்ற பரிசுப் பொருட்களுடன் பட்டு வஸ்திரம்

பரிசாக அளிப்பார்கள். சமஸ்தானத்தில் பச்சைவண்ணப் பட்டுப் பீதாம்பரம் பெறுவது மிகவும் உன்னதமாகக் கருதப்படும். அதற்கடுத்து, சிவப்புப் பீதாம்பரம், நீலம், ஊதா, மஞ்சள் என்று ஐந்து வகையாகத் தரங்கள் பிரித்துத் தரப்படும். இதற்கு மேல் சிறப்பான இசைக்கலைஞர் எவரும் இல்லை என்று மதிக்கப்படுபவர்களுக்கே பச்சைப் பட்டுப் பீதாம்பரம் பரிசிலாக அளிக்கப்படும். இது அரசாங்கத்தின் அந்நாளைய விதிமுறையாகும். அவ்வாறு திருவனந்தபுரம் அரசரின் கரங்களால் மற்ற சன்மானங்களுடன் பச்சைப்பட்டு பரிசாகப் பெற்றவர் மகாவைத்தியநாத சிவன் அவர்கள்.

சிவனின் இசையில் மயக்கம் கொண்ட மைசூர் மஹாராஜா அவர்கள் சந்தன மரத்தில் நுண்ணிய வேலைப்பாடமைந்த கைத்தடி ஒன்றைப் பரிசளித்தார்கள். சாணுக்கு சாண் தங்கப்பூண் கட்டப்பட்டது.

அரசர்களுக்குப் பாதுகாவலர் இருப்பது போல் மஹாவைத்தியநாத சிவன் அவர்களுக்கு மாங்குடி சங்கரன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



என்பவர் நல்ல பாதுகாவலராக விளங்கினார்.சிவனுக்கு நடந்த சிறப்புகள், அரசர்கள் அளித்த பரிசுகள், அவருடைய பெருமைகள் யாவும் மாங்குடி சங்கரன் அவர்களுக்குத் தெரியும்.

மஹா வைத்தியநாத சிவன் அவர்கள் மைசூர் சென்ற வந்த பிறகு சுகவீனமடைந்தார். ஓயாத அலைச்சல்; இடைவெளியில்லாது நிகழ்ச்சிகள்; குடும்ப நலத்தைக் கவனியாது விட்டோமோ என்ற உறுத்தல். இவை அனைத்தும் அவர் உடல்நிலையை பாதித்தது.

திருவையாறு வீட்டில் இருந்த ஒருநாள். மனைவி காமாக்ஷியை அழைத்தார். அவரிடம் நாத்தழுதழுக்கக் கூறினார்: 'எதற்கும் கவலையுறாதே. ஈஸ்வரனாகிய நம்முடைய குரு சுந்தர ஸ்வாமிகள் நம்மைக் கைவிடமாட்டார். சிவத்யானத்தை விடாமற் செய். இனி உனக்கு அதுதான் தேவை. குடும்பக் கவலைக்கு ஆளாகாதே.'

மஹா வைத்தியநாத சிவன் அவர்கள் உடல்நலம் குன்றி படுத்த படுக்கையாக இருக்கிறார் என்று கேள்விப்பட்ட ராமநாதபுரம் மன்னர் சேதுபதி அவர்கள் ராமஸ்வாமி சிவனை வரவழைத்தார். வைத்தியநாத சிவன் அவர்களின் உடல்நிலைபற்றி கனிவோடு விசாரித்தார். 'மஹா வித்வான்களான தாங்கள் எல்லாம் எந்தவித இன்னலுக்கும் ஆளாகக் கூடாது. பொருள் பற்றிக் கவலைப் படாதீர்கள். என்னுடைய பொக்கிஷம் தங்களுடையதே ஆகும். தம்பி அவர்களின் உடல்நிலையை நன்றாகக் கவனியுங்கள்' என்று கூறி எப்பொழுதும் கொடுக்கும் சன்மானத்தைவிட பன்மடங்கு கொடுத்து அனுப்பினார்.

இதைப்போன்றே திருவாடுதுறை ஆதினம் அவர்களும் பெருந்தொகையை அடியவர் ஒருவர் மூலம் கொடுத்தனுப்பினார்.

நந்தன வருஷம் ஆவணிமாதம் ஒன்பதாம் நாளில் நோயுற்றார். உடல்நலம் நாளுக்குநாள் சீர்கேடடைந்தது. நினைவை இழந்தார். எத்தனையோ மருத்துவர்கள் அவருக்குத் தக்க மருந்துகளைக் கொடுத்தும் பயன் ஏதும் இல்லை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தைமாதம் பிறந்தது. தை வெள்ளிக்கிழமை. 26.01.1893 அன்று நடந்த அதிசயத்தைப்பற்றி மக்கள் பலகாலம் பேசிக்கொண்டிருந்தனர்.

அது என்ன அதிசயம் ?

" பட்டங்கள் பாராட்டு மேலாம் பதவிகள்
பட்டினால் பீதாம் பரங்கள் கையினில்
மிளிர்ஒளிக் கைத்தடி காலினில் தண்டை
உயர்ந்தோர் அளித்தனர் நன்கு "

மஹாவைத்தியநாத சிவன் அவர்கள் தம்முடைய இசைக் கச்சேரிகளுக்கும், சிவகதைப் பிரசங்கங்களுக்கும் வழங்கப்படும் சன்மானப் பொருட்களாகிய பட்டு வஸ்திரங்கள், பட்டுச் சால்வைகள், பட்டுப் பீதாம்பரங்கள் ஆகிய உயர்தர ஆடைகளையும், மோதிரம், கைச்சங்கிலி, கழுத்துச் சங்கிலி, பொற்காப்பு ஆகிய பொன்னாபரணங்களையும், நவரத்ன ஆபரணங்களையும், ருத்ராக்ஷ மணிகளாலான மாலைகளையும், நவரத்னங்கள் இழைக்கப்பட்ட நகைகளையும் தாம் பயன்படுத்துவதே இல்லை. வையச்சேரி ஆலயத்தில் அவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட நடராஜ மூர்த்திக்கும், சிவகாமசுந்தரி அம்மனிற்கும் அணிவிக்கக் கொடுத்துக் கண்குளிரக் கண்டு மகிழ்வார். வையைச்சேரி கோயில் நித்ய பூஜைக்கெனத் தம்முடைய நிலத்தின் ஒருபகுதியைக் கோயிலுக்குத் தானமாக வழங்கினார்.

இத்தகைய தர்மிஷ்டரான சிவன் நோய்வாய்ப்பட்டு படுத்தபடுக்கையாய் இருக்கிறார் என அறிந்து இசை அன்பர்களும், வையைச்சேரி மற்றும் திருவையாறு மக்களும் சோகத்தில் ஆழ்ந்தனர்.

இவர் வாழ்க்கை பற்றிய சிறிய குறியீடு—இதைப் படித்துவரும் இசைக்கலைஞர்கள், ரசிகர்களுக்காக :

இசைக்கு ச ரி க ம ப த நி என்ற ஏழு ஸ்வரங்கள் சிறப்பானதாகும். அதைப் போல சப்தஸ்தானம் எனப்புகழ்பெற்ற ஏழு திருக்கோயில்களைத் தரிசிப்பதில் விருப்பம் உள்ளவர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இசைக்குப் பன்னிரண்டு முக்கிய ஸ்வரஸ்தானங்கள் உண்டு.அதுபோல் ஒவ்வொரு நேரத்திலும் மொத்தம் பன்னிரண்டு மாணாக்கர்களே இவர் வீட்டில் ஒருசேரத் தங்கி இசை பயின்று வந்தனர்.

இசைக்கு இருபத்தி இரண்டு சுருதிகள் (அலகு) முக்கியமானவை ஆகும். அதைப்போல், திருவாங்கூர் மஹாராஜா (ஆயில்யம் திருநாள், விசாகம் திருநாள்), மைசூர் மஹாராஜா, வேங்கடகிரி, பித்தாபுரம், புதுக்கோட்டை, எட்டயபுரம் அரசர்கள், திருவாடுதுறை ஆதினங்கள் (சுப்ரமணிய தேசிகர், அம்பலவாண தேசிகர்), தர்மபுர ஆதீனம், சொக்கம்பட்டி, சிங்கம்பட்டி, ஊற்றுமலை, பாலவனத்தம்,ஐயம்பாளையம், கன்னிவாடி, தங்கபுரம், நங்கவரம் ஜமீன்தார்கள், தளவாய் குமாரஸ்வாமி முதலியார், தாண்டவராயபிள்ளை, கொழுமம் பண்ணை, தஞ்சை சாகாராம் சாகேப், ராமநாதபுரம் சேதுபதிகள் (முத்துராமலிங்க சேதுபதி, பாஸ்கர சேதுபதி) என்று இருபத்தி இரண்டு வகையான மஹாராஜாக்கள், அரசர்கள், ஜமீன்தார்கள், பண்ணையார்கள் ஆகியவர்களால் போற்றி கௌரவிக்கப்பட்டவர் மஹா வைத்தியநாத சிவன் அவர்கள்.

ராக இலக்கணங்கள் முப்பத்திரண்டு. அதைப்போல இவருடைய ஞானகுருவாகிய ஸ்ரீசுந்தர ஸ்வாமிகள் அவர்களுடன் இருந்து அவரின் உபதேசங்களைக் கேட்டது முப்பத்திரண்டு ஆண்டுகளாகும்.

சிலப்பதிகாரம் இசைக்கு நாற்பற்றொன்பது வனப்புகளைக் கூறுகின்றது. இதைப்போல் பூமியில் இவர் வாழ்ந்த ஆண்டுகளும் நாற்பற்றொன்பது ஆண்டுகளே ஆகும்.

ஆயகலைகள் அறுபத்து நான்கு என்பது போல் மஹாசந்நிதானம் அவர்கள் நடத்திய கும்பாபிஷேகங்கள் அறுபத்து நான்கு.ஸ்வாமிகள் தமிழ்நாட்டில் முதலில் நடத்திய அரிமழம் நகர சிவன் கோயில் மற்றும் இறுதியாக நடத்திய கங்கைகொண்டான் கும்பாபிஷேகங்கள் வரை, பலவற்றில் கலந்து கொண்டு இசைநிகழ்ச்சிகளை நடத்தி உள்ளார் மஹாவைத்தியநாத சிவன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவர்கள்.

இத்தகைய பெருமைகளையும், பேறுகளையும் பெற்றவர் சிவன் அவர்கள்.

ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளின் அருளினாலும், கருணையினாலும், அனுக்கிரகத்தாலும் இசைத்துறையில் இத்தகைய புகழை அடைய முடிந்தது என்று மஹாவைத்தியநாத சிவன் அவர்கள் பக்தியுடன் கூறிக்கொள்வார்.

தேவகோட்டையில் நகரத்தார்கள் ஆதரவில் அண்ணன் ராமஸ்வாமி சிவன் அவர்களுடன் சேர்ந்து, ஐந்து மாதங்கள் தொடர்ந்து பெரியபுராண இசைச்சொற்பொழிவு நடத்தினார். இவரின் இசை உரையைக் கேட்டு மகிழ்ந்த நகரத்தார் பெருமக்கள் அறுபத்து மூவர் படம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார்கள். அந்தப் படத்தை பூஜை அறையில் தன் பார்வையில் எப்பொழுதும் படும்படி வைத்திருந்தார்.

உடல்நிலை பாதிக்கப்பட்டு ஆறு மாதங்களாகின. நினைவும் தப்பிவிட்டது. அந்த நிலையிலும் அறுபத்துமூவர் படத்திலேயே பார்வை நிலைகுத்தி இருந்தது.

ஐயாறப்பர் ஆலயமணி ஓசை கேட்டது. திடீரென படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்தார்.

அன்று தை வெள்ளிக்கிழமை. ஐயாறப்பர் கோயிலில்கூட்டம் அலைமோதியது. அம்மனுக்கு மாவிளக்கு போடுபவர்களும், விளக்கேற்றுபவர்களும் என்று பெண்கள் கூட்டம் மிக அதிகமாக இருந்தது.

அனைவரும் ஒரு அதிசயத்தைக் கண்டனர்.

கைத்தடியை ஊன்றியபடி மெதுவாக மஹாவைத்தியநாத சிவன் அவர்கள் கோயிலுள் நுழைந்தார். அனைவரும் அவரை வணங்கி மரியாதையோடு வழிவிட்டனர். பிள்ளையார், பிரணதார்த்திஹரர், தர்மசம்வர்த்தனி ஆகிய சந்நிதிகளில் தரிசனம் செய்து கொண்டு பிரகாரத்திலுள்ள சுப்ரமணியர் சந்நிதிக்கு முன் நின்று வணங்கினார். மீண்டும் சிவன் சந்நிதியில் நுழைந்தார்.

அப்பொழுது பஞ்சநதீஸ்வரர் ஆலய உச்சிக்கால மணி 'கணீர் கணீர்' என்று ஒலித்தது. தீபாராதனை தொடங்கியது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அருகில் இருந்த மஹாவைத்தியநாத நாத சிவன் கருவறைக்குள் நுழைவது அங்கிருந்தவர்கள் பார்வைக்குப் புலப்பட்டது. பிறகு மஹா வைத்தியநாத சிவன் எவர் கண்களுக்கும் புலப்படவில்லை.

அப்படி எனில் வீட்டில் பிரக்ஞை அற்று இருந்த வைத்தியநாத சிவன் என்ன ஆனார் ?

“அரசர்கள் ஆதீனம் நாட்டார் பொருளால்
அரசரை விஞ்சிய நல்லோர் நகரத்தார்
பொன்னை பொருளை வழங்கினார் சிவனையே
நெஞ்சினில் வைத்தார் நெகிழ்ந்து.”

மஹாவைத்தியநாத சிவன் அவர்கள் ஆறு மாதங்களுக்குப் பிறகு எழுந்து அமர்ந்ததைப் பார்த்ததும் வீட்டில் உள்ளவர்கள் இவரின் உடல்நிலை தேறிவிட்டது என்று மகிழ்ச்சி கொண்டனர்.

அமர்ந்த நிலையிலேயே தன்னுடைய இஷ்டதெய்வமான பிரணதார்த்திஹரனை மனதாரத் துதித்தார். ஞானகுருவாம் ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளை சிந்தனை செய்தார். அப்பொழுது கோயில் உச்சிக்கால பூஜை மணி ஓசை கேட்டது. கையை உயர்த்தி வணங்க முற்பட்டார். அப்படியே சாய்ந்தார். ஈசன் அவரை ஆலயத்திற்கு அழைத்துச் சென்று தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டார்.

எங்கு பிரணதார்த்திஹரனை முன்னிறுத்தி மேளராகமாலிகா பாடினாரோ அந்த இறைவனின் ஜோதியில் கலந்து விட்டார்.

ஒரு பெரிய இசை சகாப்தம் இசைப்பதை நிறுத்திக் கொண்டது.

இவர் வாழந்த காலம் கர்நாடக இசையின் மறுமலர்ச்சிக் காலம் என்று சொல்லலாம். வித்வான்கள் கோயில் திருவிழாக்கள், அரசவை, சபாக்கள், மண்டபங்கள் என்று வெளியில் சென்று பொதுமக்கள் மத்தியில் பாடி சன்மானங்களைப் பெற்று வருவது வழக்கத்திற்கு வந்தது.

புகைவண்டிகள் ஓடத்துவங்கியதால் பல ஊர்களுக்கும், நகரங்களுக்கும் பயணம் சென்று கச்சேரி நடத்துவது நடைமுறைக்கு வந்தது. அவ்வாறு அன்றைய காலகட்டத்தில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அதிகம் பயணம் செய்த இசைக் கலைஞர்களில் மஹாவைத்தியநாத சிவன் முதலாவதாக விளங்கினார்.

அத்துடன் விரும்பத்தகாத விதமாக தலையாய இசைக் கலைஞர்களிடையே போட்டி உணர்வு தலைதூக்கியது. அவர்களின் சீடர்கள் இதற்குத் தூபம் போட்டனர். இதனாலேயே சிவன் அவர்களும், பட்டணம் சுப்ரமணிய ஐயர் அவர்களும் வைரிகள் என்பது போல் ஒரு பிம்பம் உருவாக்கப்பட்டது. சில நிகழ்வுகளும் அதை உறுதி செய்வதாய் அமைந்தன.

மழைவிட்டும் தூவானம் விடாத கதை இது!

மஹாவைத்தியநாத சிவன் மறைந்த பிறகு, ராமஸ்வாமி சிவன் 'விஜயசங்கிரகம்' என்ற அஞ்சலி நூலை எழுதினார். சில விவாதத்திற்குரிய கருத்துக்கள் அதில் இடம்பெற்றன. அவற்றை அவர் தவிர்த்திருக்கலாம். அந்த நூலைப் படித்த பட்டணம் சுப்ரமணிய ஐயர் அவர்கள் சில கருத்துக்களுடன் உடன்படாமல் சினம்கொண்டார். 'சங்கிரக கண்டனம்' என்று எழுதி நூலாக வெளியிட்டார்.இறந்தவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக அவர் ஒதுங்கி இருந்திருக்கலாம். அவ்வாறு நடக்கவில்லை.

கண்டனத்தைக் கண்ணுற்ற சிவனின் பிரதம சீடர்களில் ஒருவரான பழமாநேரி ஸ்வாமிநாத ஐயர் அவர்கள் 'கண்டனத்திற்கு மண்டனம்' என்று எழுதி பட்டணம் சுப்ரமணிய ஐயருக்குத் தன் மறுப்பைத் தெரிவித்தார்.இவ்வாறு குருபக்தியை காட்டிக் கொண்டார். அன்று தொடங்கிய இத்தகைய போட்டி மனப்பான்மை பல துறைகளிலும் பரவியது.

இவையெல்லாம் மறக்கப்பட வேண்டிய நிகழ்வுகள்.

கர்நாடக இசைரசிகர்களுக்கு என்ன ஒரு ஆறுதல் என்றால் சிவன் மற்றும் பட்டணம்சுப்ரமணிய ஐயர் ஆகியோரின் சிஷ்ய பரம்பரை இன்றுவரை நல்லவிதமாகப் பல்கிப் பரந்துள்ளது.

மஹாவைத்தியநாத சிவன், சங்கீத பரம்பரையில்

வாசுதேவநல்லூர் பல்லவி சுப்பையா பாகவதர், அஷ்டபதி, பதம் பாடுவதில் சிறந்து விளங்கிய பழமாநேரி ஸ்வாமிநாத ஐயர்,நிரவல் செய்வதில் நிகரற்று விளங்கிய டி.எஸ். சபேச ஐயர், ஹரிகதையின் அரசர் என்று போற்றப்பட்ட பாலக்காடு அனந்தராம



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பாகவதர், ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர்,முசிறி சுப்ரமணிய ஐயர், மதுரை மணி ஐயர், மணி கிருஷ்ணஸ்வாமி, டி.கே. கோவிந்தராவ், பாம்பே சகோதரிகள் சரோஜா–லலிதா என பலர் சிறந்து விளங்கினார்கள்.

பட்டணம் சுப்ரமணிய ஐயர் இசை வாரிசுகளாக மைசூர் வாசுதேவாச்சார், பூச்சி சீனிவாச ஐயங்கார், டைகர் வரதாச்சாரியார், ஜி.என். பாலசுப்ரமணியம், எம்.எல். வசந்தகுமாரி என்று புகழ் பெற்ற நக்ஷத்திரப் பாடகர்கள் ஜொலித்தனர்.

இவர்களில் பலர் வாக்யேயக்காரர்களாகவும் முத்திரை பதித்தனர். இந்த இரண்டு மாபெரும் இசை சிம்மங்களின் வாரிசுகளாக இன்றும் பலர் சங்கீத மேடைகளை அலங்கரித்து வருகின்றனர்.

மஹாவைத்தியநாத சிவன் அவர்களுக்குக் கிடைத்த மற்ற இரண்டு மாபெரும் சிறப்புகள்:

அன்றைய சிருங்கேரி மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ ந்ருசிம்ம பாரதி ஸ்வாமி அவர்கள் மஹாவைத்தியநாதசிவன் அவர்களை ஆசிர்வதித்து வடமொழியில் பாடல் இயற்றி உள்ளார் என்றொரு செய்தி.

மற்றொன்று

1929–ம் ஆண்டு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைக் கல்லூரி தொடங்கப்பட்டது. இசைக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் கர்நாடக இசை வளர்ச்சிக்கு வித்திட்டவர், பாடுபட்டவர் சிலைகளை வைக்கத்தீர்மானித்தனர். பொருள் பொதிந்த,பக்தி– பாவம் நிறைந்த கீர்த்தனை இயற்றுதல், பாட்டிற்கேற்ப ராக தாளங்களில் வர்ண மெட்டுக்கள் அமைத்தல் ஆகியவற்றில் அறிவு பெறவேண்டும் என்றகுறிப்பை உணர்த்தும் வண்ணம் கல்லூரி நுழைவாயிலின் இடப்புறம் ஸ்ரீதியாகப்ரும்மம் அவர்களின் சிலை நிறுவப்பட்டது.

இசை இலக்கணம், பாட்டு இயற்றுதல் ஆகியவற்றோடு இசை சிறக்கும்படி கச்சேரி செய்தல், தமிழ் அறிவின் திறத்தை வெளியிடும்படி தேவாரம், திருவாசகம், திருப்புகழ் ஆகியவற்றையும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பாட வேண்டும் என்ற குறிப்பை உணர்த்தும்படி வலதுபுறம் மஹாவைத்தியநாத சிவன் அவர்களின் சிலை அமைக்கப்பட்டது.

ராஜாசர் அண்ணாமலை செட்டியார் அவர்கள், மகான் தியாகராஜ ஸ்வாமிகள், இசைமேதை மஹாவைத்தியநாத சிவன் ஆகிய இவ்விருவர் சிலைகளையும் நிறுவுவதற்கு முன்னர் அன்றைய இசைப்புலவர்கள் , பல்கலைக் கழக அதிகாரிகள் ஆகியோருடன் பன்முறை கலந்து ஆலோசித்தார்கள். அவர்களின் ஒப்புதல் பெற்ற பின்னரே செட்டிநாட்டு அரசர்

தகுதியும், சிறப்பும் மிக்க இவர்களின் திருவுருவங்கள் இசைக் கல்லூரியின் தலைவாயிலை அலங்கரிக்கவேண்டும் என்று முடிவு செய்தார்கள். செயல்படுத்தினார்கள்.

மஹா வைத்தியநாத சிவன் குணத்தில் சிறந்தவர். இசையில் மகா மேதை.தமிழிலும், வடமொழியிலும் ஆழ்ந்த அறிவுடையவர். சிவபக்தியில் சிறந்தவர். ஒழுக்க சீலர்.ஈகையில் மேலானவர்.பழகுவதற்கு எளிமையானவர். இனிமையாக, மென்மையாகப் பேசுபவர். பிறர் அறியாமல் தானம், தர்மம் செய்பவர்.

பசித்தவருக்கு உணவு அளிப்பதில் மகிழ்ச்சி கொள்பவர். ஏழை,எளியவர்களிடம் அன்பு காட்டுபவர். மூத்தோரிடம் பணிவும், அடக்கமும் உடையவர்.ஏனைய பாகவதர்களிடம் அழுக்காறு கொள்ளாதவர்.தமது இசை வல்லமையைப் பிறருக்குக் காட்டவேண்டும் என்ற எண்ணம் இல்லாதவர்.மாணவர்களிடம் பரிவு கொண்டவர்.ஆசார அனுஷ்டானங்களை முறையாகக் கடைப்பிடித்தவர்.வேதாந்த ஞானம் மிக்கவர்.சிவபக்தி மேலிட்டவர்.தம்முடைய ஞானகுரு ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளின் பரிபூரண ஆசியைப் பெற்றவர்.

நம்முடைய சந்நிதானம் அவர்கள் பாதயாத்திரை யாக திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டு அரிமழம் வந்து சேர்ந்த கால இடைவெளியில் சிவன் அவர்களின் சிறப்புமிக்க வாழ்க்கை ஏட்டின் சில பகுதிகளை இதுவரை பார்த்தோம்.

மஹாசந்நிதானம் அவர்கள் அரிமழம் வந்து சேர்ந்த பொழுது, அந்த பகுதியில் மிகுந்த அதிகாரம் படைத்த, மக்களின் அன்பையும்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பெருமதிப்பையும் பெற்று விளங்கிய ஒரு பிரபலம் அவரை சந்திக்கக் காத்திருந்தார்.

யார் அந்த பிரபலம் ?

“ஆள்படை அம்பு அணிதேர்ப் புரவியென
நால்வகைச் செல்வம் குவிந்தே இருப்பினும்
நோயில் விழுந்து மெலிந்தே இறைவனின்
பாதம் அடைந்தான் சிவன்.”

இவர் 1828–ம் ஆண்டு மார்ச் 22–ம் தேதி அன்றைய ஆங்கிலேய மதராஸ் ராஜதானிக்கு உட்பட்ட தஞ்சாவூர் மாவட்டத்தில் அமராவதி என்ற ஊரில் பிறந்தார். இவருடைய பெற்றோரின் ஆறு குழந்தைகளில் கடைக்குட்டி இவர்தான். இவருடைய தந்தை வைதீக பிராமணர். வறுமையில் வாடிய குடும்பம். இவருடைய தந்தைக்கு குடும்பத்தை நிர்வகிப்பது பிரம்மப் பிரயத்தனமாக இருந்தது. குடும்பத்தின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு–இவருக்கு ஒன்பது வயது நடக்கும் பொழுது – தாய்மான் கோபால ஐயர் இவரை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். மதராஸ் பட்டினத்திற்கு அழைத்துச் சென்று படிக்க வைத்தார்.

தமிழ் மொழியை, தமிழறிஞர் ஒருவரிடம் பயின்றார். பிரான்சிஸ் ரோட்ரிக்ஸ் என்பவர் தோற்றுவித்த தனியார் ஆங்கிலப்பள்ளியில் 1837–ம் ஆண்டில் சேர்ந்தார். ‘ரெவரண்ட் பாதர்’ ஆண்டர்சன் அவர்கள் தம்பெயரில் தொடங்கப்பட்ட பள்ளியில் இவருக்கு ஆங்கிலமும், பைபிளும் போதித்தார். (இதுவே பின்னர் சென்னை கிறிஸ்துவக் கல்லூரி ஆக உயர்ந்தது.) 1841ல் மதராஸ் அரசாங்காத்தாரால் ஆரம்பிக்கப்பட்ட கல்விக் கழகப் பள்ளியில் படிப்பைத் தொடர்ந்தார். 1848 வரை அங்கே பயின்றார். பொருளாதாரப் பிரச்னையால் படிப்பைத் தொடரமுடியவில்லை. அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் புகழ்பெற்ற E.B.பொவல் என்பவர். திறமையான இந்த ஏழை மாணவன் மேல் இரக்கம்கொண்டு பச்சையப்பா பள்ளியில் சேர்த்து விட்டார். அரசின் உதவித்தொகை கிடைக்கவும் வழிவகை செய்தார். இவருடைய வகுப்புத் தோழர்கள் பின்னர் பிரபலமான ராமு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஐயங்கார் மற்றும் மாதவராவ் ஆகியோர்.

இதனிடையில் 1847–ல் இவருடைய தாய்மாமன் கோபால ஐயர் காலமானார்.

அதே ஆண்டு கோனேரிராஜபுரம் ஊரைச் சேர்ந்த சுந்தரியுடன் திருமணம் நடைபெற்றது.

ராமு ஐயங்காருடன் சேர்ந்து மேடை நாடகங்களைத் திறம்பட நடத்தி வந்தார். மேடைப் பேச்சிலும் தனித்திறமையை வளர்த்து வந்தார்.

தனது பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தார். 1848–ம் ஆண்டு, 29 ம் தேதி ,மே மாதம் பட்டப் படிப்பில் முதன்மை மாணவனாக முதல்வகுப்பில் தேர்ச்சி பெற்றார். தங்கப் பதக்கம் வென்றார். அந்த ஆண்டு செப்டம்பர் மாதம் அரசாங்க வருவாய்த்துறையில் எழுத்தராகப் பணியில் சேர்ந்தார். விரைவில், திறமையினால் மே,1851 ல் மசூலிப்பட்டினம் தாசில்தார் ஆகப் பதவி உயர்வு பெற்றார். பிறகு 1853 ல் சிரஸ்ததார், 5, மே 1855–ல் தலைமை சிரஸ்ததார் என்று அடுத்தடுத்து முன்னேற்றம் கண்டார். இமாம் கமிஷனில் 1858 முதல் 1865 வரை பதவி வகித்தார்.

அதே ஆண்டு நவம்பரில் தஞ்சை மாவட்ட துணைக் கலெக்டராக நியமிக்கப்பட்டார். ஏப்ரல் 1866–ல் தஞ்சை நகராட்சியின் துணைத் தலைவராக நியமனம் செய்யப்பட்டார். 1869ல் வருவாய்க் கழகத்தின் தலைமை சிரஸ்ததார் ஆனார்.

1872–ம் ஆண்டு, இவருடைய படிப்பின் ஆழத்தையும், எதையும் உடனடியாகக் கிரகித்துக் கொண்டு செயலாற்றும் அறிவுத் திறனையும் கேள்விப்பட்ட திருவாங்கூர் சமஸ்தான அரசர் இவரைக் காண விரும்பினார். தன்னுடைய அதிகாரிகளுள் ஒருவரை அனுப்பி, அரண்மனைக்கு அழைத்து வரச்செய்தார்.

தன்னுடைய சமஸ்தானத்தின் திவான் பதவியை வழங்கி கௌரவித்தார். அதுவரை அப்பதவியில் இவருடைய வகுப்புத் தோழர் மாதவராவ் இருந்து வந்தார். சமஸ்தான அரசரின் கட்டளைகளை மீறி செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டினால் மாதவராவ் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

அந்த ஆண்டு திருவாங்கூர் சமஸ்தான திவானாக இவர்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நியமிக்கப்பட்டார். 'இந்தப்பதவியை ஏற்கவேண்டாம், திருவாங்கூர் மஹாராஜா ஆயில்யம் திருநாள் தன்னிச்சையாக செயல்படுபவர், உரிய மரியாதை உங்களுக்குக் கிடைக்காது' என எச்சரித்து கொச்சின் மஹாராஜா இவருக்குக் கடிதம் எழுதினார். துரதிருஷ்டவசமாக அந்தக் கடிதம் ஆயில்யம் மஹாராஜாவின் கைகளை அடைந்தது. இவர் அதைப் பார்க்க நேரவில்லை.

இவருடைய காலத்தில்தான் சமஸ்தான மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான வர்கலாவில் இரண்டு ஏரிகளை இணைக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டது. முப்பது மைல் நீளமுள்ள திருவனந்தபுரம் – திருவாங்கூர் சாலைப் போக்குவரத்து தொடங்கப்பட்டது.

முதன்முதலாக முறையான மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஆனால் மஹாராஜா உடனான இவரின் தொடர்பு சுமுகமாக இருக்கவில்லை.

1877–ல் திருவாங்கூர் சமஸ்தான திவான் பதவியிலிருந்து விலகினார்.

திருச்சிராபள்ளியைத் தன் வாசஸ்தலம் ஆக்கிக் கொண்டார். அதே ஆண்டு 'வறட்சி நிவாரணக் குழு' வின் துணைத்தலைவர் மற்றும் செயலாளராக அரசாங்கம் இவரை நியமித்தது. இவர் வறட்சி நிவாரணப் பணிகளில் செம்மையாக செயல்பட்டதால்,

அதே ஆண்டு மதராஸ் சட்டமன்றக்குழுவிற்கு துணைத் தலைவராக ஆங்கில அரசால் நியமித்தது.

1878 ன் தொடக்க காலம் வரை அப்பதவியை வகித்தார்.

இத்தகை சிறப்புகளைப் பெற்ற, இவற்றைவிட சிறந்த பதவிகளையும், பட்டங்களையும் இனிப்பெறப்போகும் இவர் நம் ஸ்வாமிகளைப் பார்க்க அரிமழத்தில் ஏன் காத்திருந்தார்?

"வறுமையே வந்துற்ற போதிலும் தன்னின்
திறமையால் நற்பதவி தேடியே வந்திட
வெற்றியே பெற்றான் அனைத்திலும் அன்னவன்
பெற்றியை என்சொல்வேன் நான்."



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



1878–ம் ஆண்டின் தொடக்கத்தில் இவர் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் திவானாக நியமிக்கப் பட்டார்.

அப்பொழுது ராஜஸ்ரீ பிருஹதம்பதாஸ ராஜா ராமச்சந்திர தொண்டைமான் பகதூர் அரசராக இருந்தார்.தொண்டைமானின் தந்தை ரகுநாத தொண்டைமான், தாயார் ராணி கமலாம்பாள் ஆயி சாகேப். இவர் திவானாகப் பொறுப்பேற்ற காலம் அந்த சமஸ்தானத்தின் மிக மோசமான இருண்ட காலகட்டமாகும். சரியான வருமானம் இல்லாததால் ஆங்கிலேயக் கம்பனிக்குக் கப்பம் செலுத்த முடியவில்லை. எனவே மன்னருக்கு அளிக்கப்பட்டிருந்த 'மாட்சிமை தங்கிய' ('His Highness') என்று சிறப்பு நீக்கப்பட்டது. ராமச்சந்திர தொண்டைமான் ஒன்பது வயதில்,1837–ல் பட்டத்திற்கு வந்தார். இவர் மைனராக இருந்தபடியால் பிரிடிஷ் அரசின் அரசியல் முகவர் 'Regent' மன்னரின் சார்பில் ஆட்சி புரிந்து வந்தார்.

1844–ம் ஆண்டு தொண்டைமானை பிரிட்டிஷ் அரசு மன்னராக அங்கீகரித்தது.

இவருடைய ஆரம்ப ஆட்சிக்காலம் வீண் ஆடம்பரங்களாலும், தேவையற்ற செலவுகளாலும், அதீத பொருளாதாரச் சிக்கல்களாலும் சூழப்பட்டிருந்தது. 1859 மற்றும் 1873 ஆகிய ஆண்டுகளில் 'His Excellency' என்பதைப் பயன்படுத்த மீண்டும் அரசருக்குத் தடைவிதித்தது. புதுக்கோட்டை சமஸ்தானத்தின் அவல நிலையைக் கண்டு மனம் பொறுக்காத T.மாதவராவ் அவர்கள் தன்னுடைய நண்பரும், வகுப்புத் தோழரும், நேர்மைக்கும், கண்டிப்பிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய இவரை புதுக்கோட்டை சமஸ்தான திவானாக நியமிக்கும்படி ஆங்கிலேய அரசிற்குப் பரிந்துரை செய்தார்.

இவருடைய பரிந்துரையை ஏற்றுக் கொண்டு A.சேஷைய்யா சாஸ்திரி அவர்களை திவானாக நியமித்தது. முன்னதாக சேஷைய்யா அவர்களின் திறமையையும், நாணயமான செயலாற்றலையும் தெரிந்திருந்த பிரிட்டிஷ் அரசு மாதவராவ் அவர்களின் கோரிக்கையை உடனடியாக ஏற்றுக் கொண்டது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



புதுக்கோட்டை சமஸ்தானத்தின் முதல் திவான் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

பின்னர் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் நடந்ததெல்லாம் மாயாஜாலம்தான்.

உடனடியாக சமஸ்தானத்தில் நடைபெற்று வந்த ஆடம்பரச் செலவுகளுக்குத் தடைவிதித்தார்.

எங்கெங்கு பணம் விரயமாக்கப்படுகிறது என்பதைக் கண்டறிந்து அவற்றைத் தடுத்தார்.

சமஸ்தானத்திற்கு வரவேண்டிய வருமானம் எந்தெந்த வழிகளில் ஒழுகிச் செல்கிறது என்று உடனடியாகக் கண்டறிந்து நிர்வாக ஓட்டைகளை அடைத்தார்.

எந்தெந்த இனங்களில் வரவு காட்டப்படாமல் செலவினங்கள் மட்டும் நடைபெறுகிறது என்பதைக் கண்டுபிடித்து, தகுந்த நடவடிக்கைகளை எடுத்தார்.

மன்னரைச் சுற்றி நின்று, வெற்றுத் துதிபாடி வயிறு வளர்த்தோரை இனம் கண்டு வெளியேற்றினார்.

மக்களுக்குப் பயன்தரும் திட்டங்களைச் செயல்படுத்த முன்னுரிமை தந்தார்.

வேலை வாய்ப்புகளை மேம்படுத்த, அந்தப் பகுதிக்கேற்ற சிறுதொழில் தொடங்குவோருக்கு இடம், பண வசதிகளுக்கு ஏற்பாடு செய்தார்.

புதிய நீர்நிலைகளை ஏற்படுத்துதல், பழைய நீர்நிலைகளை மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு தூர் வாருதல், காடுகளைப் பராமரித்தல், சாலைகள் அமைத்தல்.....என்று மக்கள் நலம்சார்ந்த திட்டங்களை நிறைவேற்றினார். சமஸ்தானத்திற்கும் இந்த திட்டங்களின் செயல்பாடுகளின் மூலம் வருவாய் பெருக வழிவகுத்தார்.

புதுக்கோட்டை நகரை பாரிஸ் நகருக்கு இணையாக சீரான குறுக்கு, நெடுக்கு என்ற நீண்ட நேரான சாலைகளை அமைத்தார். நகர்ப்புறக் கட்டுமானத் திட்டங்களுக்கு (Town Planning) இவரே முன்னோடி.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வையைச்சேரி ஸ்ரீசிவகாம சுந்தரி அம்பிகா சமேத ஸ்ரீ சித் சபா நாதர்

ஸ்ரீ ஸுந்தர சுவாமிகள் – ஜானகியம்மாள்

அதிஷ்டானத்தில் 100008
காயத்ரி ஜப ஹோமம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் கிளை வழி வம்சாவழியினர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அருள்மிகு

சுந்தரேஸ்வரர் – மீனாட்சியம்மன் தங்ககவசம்

அரிமழம்

அழகுமிளிரும் அரிமழம் தெப்பம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# ஸ்ரீ ஜயவிளங்கியம்மன்
## அரிமழம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மக்களின் தண்ணீர் தாகத்தை இன்றுவரை தீர்த்துவரும் ஏரியை ஒத்த புதுக்குளம் இவரால் கட்டப்பட்டதே. நகரின் நடுவில் அமைந்துள்ள பல்லவன் குளம் திட்டம் இவருடைய சிந்தனையில் உதித்ததாகும்.

புதுக்கோட்டை சமஸ்தான மற்றும் அரசு அலுவலகங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் சிறப்பாகக் கட்டப்பட்டன. தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய அச்சுக் கூடம் என்று போற்றப்படும் அச்சுக்கூடத்தை நிறுவினார்.

சந்தாசாகிப் என்பவனால் புதுக்கோட்டை அரண்மனை எரிக்கப்பட்டது. பழைய அரண்மனையைவிட புதிய, பிரம்மாண்டமான, கம்பீரமான அரண்மனையைக் கட்டிமுடித்தார். (இன்று இந்த அரண்மனையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது.)

'நவீன புதுக்கோட்டையின் தந்தை' என்று இன்றும் போற்றப்படுகிறார் இவர்.

இத்தகைய அனைத்து சிறப்புகளுக்கும், பெருமைகளுக்கும் உரியவரான சேஷய்யா சாஸ்திரி அவர்கள், புதுக்கோட்டை சமஸ்தானத்தின் கீழ்வரும் அரிமழத்தில் முகாம் (Camp) செய்திருந்தார்.

அப்பொழுது அங்கு எழுந்தருளியிருந்த மஹாசந்நிதானம் அவர்களைச் சந்திக்க வேண்டிய சூழல் அவருக்கு ஏற்பட்டது.

அது என்ன சூழல்?

"புதுகை நகருக்குப் புத்துயிர் ஊட்ட
வருகை புரிந்தாய் வளம்பெறச் செய்தாய்
குளம்பல வெட்டியே நீர்நிலை சீராய்
வளம்கொழிக்கச் செய்தனை நன்று"

புதுக்கோட்டை சமஸ்தான மன்னர்களின் குலகுருவாய் இருந்தவர் சதாசிவப் பிரம்மேந்திராள். இவர் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அத்வைத வேதாந்தி. கர்நாடக இசை அறிஞரும் ஆவார். போதேந்திர சரஸ்வதி மற்றும் ஸ்ரீதரவெங்கடேச ஐயாவாள் ஆகியோர் இவரின் சமகாலத்தவர்கள். இவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அவதூதராக விளங்கிய, அனைத்தையும் கடந்த மகாஞானி.

புதுக்கோட்டை சமஸ்தான மன்னர் விஜயரகுநாத தொண்டைமான் அவர்களுக்கு தக்ஷிணாமூர்த்தி மந்திரத்தை மண்ணில் எழுதிக் கொடுத்தார். அந்த மண் இன்றும் அரண்மனையில் உள்ள தக்ஷிணாமூர்த்தி கோயிலில் உள்ளது. சதாசிவபிரம்மேந்திராள் நெரூரில் ஜீவசமாதி அடைந்ததும் அங்கே அதிஷ்டானம் எழுப்பவும், அருகே சிவன்கோயிலை அமைக்கவும் புதுக்கோட்டைமன்னர் இடம் அளித்து உதவினார். புதுக்கோட்டை தேவஸ்தான இந்து சமய அறநிலையத்துறை ஆவணங்களில் இத்தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

மகான்களையும், ஞானிகளையும் புதுக்கோட்டை மன்னர் பரம்பரையினர் என்றும் மதித்துப் போற்றியும், ஆதரித்தும் வந்துள்ளனர். மஹாசந்நிதானம் அவர்கள் புதுக்கோட்டை நகருக்குப் பலமுறை எழுந்தருளியிருந்தார் என்பதையும், மன்னர் ராமச்சந்திர தொண்டைமான் இவரைக் கொண்டாடி வந்தார் என்பதையும் முன்னரே பார்த்திருக்கிறோம்.

திவான் அவர்கள் ஸ்வாமிகளின் அருமை, பெருமைகளைப் பற்றி செவிவழிச் செய்தியாகக் கேள்விப்பட்டிருந்தாலும் இதுவரை நேரில் தரிசித்ததில்லை.

எனவே அரிமழம் வந்திருந்த சேஷய்யா சாஸ்திரி, அங்கு ஸ்வாமிகள் விஜயம் செய்திருப்பது அறிந்து அவரைக் காண அவாக் கொண்டார்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் மிகப் பெரும் செல்வாக்கு மிக்க, அதிகாரம் படைத்த திவான் அவர்கள் அரிமழத்தில் முகாம் செய்கிறார் என்பதை அறிந்து மகிழ்ந்து ஊர்ப்பிரமுகர்கள் பலரும் அவரை ஒன்றுகூடி வரவேற்றனர். ஜயவிளங்கி அம்மன் கோயில் அருகே வசதியான கூடாரம் அமைத்து அங்கே தனது பரிவாரங்களுடன் தங்கி இருந்தார் திவான்.

திவான் அவர்களுக்கு, மற்ற எவருக்கும் இல்லாத ஒரு புது மாதிரியான குறைபாடு. அவர் இலையில் அமர்ந்து சாப்பிடுவதை சமீப காலமாக எவரும் பார்த்ததில்லை. ஆச்சாரம் என்பதனால் பார்க்கக் கூடாது என்ற தடை ஏதும் இல்லை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பருத்த சரீரம். முன் தள்ளிய மிகப் பெரிய வயிறு. தனக்கு எதிரில் இலையில் பரிமாறப்படும் உணவையும், பதார்த்தங்களையும் கைநீட்டி எடுத்து சாப்பிட முடியாத ஒரு அவலநிலை. இலையில் என்ன பரிமாறி இருக்கிறது என்று குனிந்து பார்த்துத் தெரிந்து கொள்ள முடியாத கொடுமை.

அவருடைய வலதுகைப் பக்கம் இலையைப்போட்டு, அதில் பரிமாறப்படுவதைப் பக்கவாட்டிலேயே எடுத்துச் சாப்பிடத்தான் முடியும். என்ன ஒரு பரிதாபத்திற்குரிய நிலைமை?

இந்தக் குறையை ஸ்வாமிகளால் நிவர்த்திக்க முடியுமா? மற்றவர்களைப்போல், எதிரே இலைபோட்டு, அதில் பரிமாறப் படுவதை நேரே எடுத்து உண்ணும் பாக்கியம் தமக்கு மீண்டும் கிடைக்குமா? என்ற கேள்விகள் அவர் மனதைக் குடைந்து கொண்டே இருந்தன.

மஹாசந்நிதானம் அவர்களை நேரில் தரிசிக்கவும், அவரிடம் தன் குறையைத் தீர்க்கப் பிரார்த்திக்கவும் விரும்பினார்.எனவே தனக்குக் கீழ்உள்ள அதிகாரியை ஸ்வாமிகளை அழைத்து வர அனுப்பினார்.

திவான் அவர்களின் குறைபாடு நிவர்த்தி ஆனதா?

"பட்டம் பதவிகள் ஆள்பவர் ஆயினும்
சட்டம் இயற்றும் புலமை இருப்பினும்
இட்டமாய் உண்ண முடியாக் குறையினைத்
திட்டமாய் வைத்தான் இறைவன்."

மஹாசந்நிதானம் அவர்கள் தன் சீடர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார். அவர்களின் சந்தேகங்களுக்கு தீர்வு சொல்லிக் கொண்டிருந்தார்.

'குருபக்தியும், இறை பக்தியும் உள்ளவர்களுக்கு ஏன் சோதனைகள் வருகின்றன? மிகக் கஷ்டமான சூழ்நிலையில் பக்தர்களை ஏன் இறைவன் கைவிட்டு விடுகிறான்?'

"இறைவனும், குருவும் யாரையும், எப்பொழுதும் கைவிடுவதில்லை. இவர்கள் மேல் அன்னன்ய பக்தி (அசைக்க முடியாத)கொண்டவர்கள் இறைவனையும், குருவையும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சந்தேகிக்கமாட்டார்கள். பக்தனுக்கு சோதனையும், கஷ்டங்களும் வரும்பொழுது இவர்கள் பக்தனின் அருகிலேயே இருக்கிறார்கள். ஒரு பக்தன் கஷ்டம் என்று எண்ணிக் கொண்டிருப்பது உண்மையில் துயரமாகவே இருக்காது. இன்பம், துன்பம்; கஷ்டம், சுகம் என்பதெல்லாம் மனதின் மாயையே. காண்பது அனைத்தும் கானல்நீர் என்பதை உணர்ந்து கொண்டவர்களுக்குக் கவலையும் கிடையாது; கஷ்டங்களும் கிடையாது.

குருவின் கட்டளை எதுவாகிலும் அதற்கு மனம் கோணாது கட்டுப்படுபவனே சிறந்த சீடன். அது அவனின் கடமை. சீடன் பெறுகின்ற புகழ், பெருமை அனைத்தும் குருவைச் சார்ந்ததே. குரு அளித்த பிச்சை அது.

பக்தன் சேவை செய்யும் தொண்டனாகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். தான் வழிபடும் தெய்வமே தனக்கு அனைத்தும் என்பதில் பரிபூரண நம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். இறைவனிடம் அசைக்க முடியாத விஸ்வாசம் வேண்டும். பக்தனுக்கு என்று தனியாக எதுவும் கிடையாது; இருக்கலாகாது.

பகவானின் பரிபூரண சக்தியாய், அம்சமாய் வந்தவர்கள் மகான்கள்.இறைவனின் சக்திக்குச் சற்றும் குறையாத மஹான்கள் அவதரித்து பக்தர்களுக்கு அனுக்ரஹம் செய்கின்றனர். அவர்களை உயர்த்துகின்றனர்.

மஹான்களைப் பார்ப்பது அரிது. பார்த்தாலும் அவர்களின் அருளுரைகளை நேரில் கேட்பது அதனினும் அரிது. ப்ரம்மத்தின் சங்கல்பத்தினால், ப்ரும்மத்தின் அவதாரம் இல்லாத காலத்தில், மஹான்கள் தோன்றுகின்றனர். அவதாரத்தினால் எந்தவித தர்மம் நிலைநாட்டப்படுகிறதோ, அந்த தர்மமானது ப்ரம்மத்தின் பிரதிநிதிகளான மஹான்களால் நிலைநாட்டப் படுகிறது.

கலியுகத்தில் குருநாதரிடம் தீவிர பக்தி செலுத்தினால் அது அனைத்தையும் அளிக்கிறது. இதை சாஸ்திரங்களும் கூறுகின்றன. முயற்சி செய்தால் பலன் கிடைக்கும். முயற்சி செய்யுங்கள்.

அனைவருக்கும் ஆசிர்வாதங்கள்!"

ஸ்ரீஸ்வாமிகள் இவ்விதம் அனுக்ரஹபாஷணம் பூர்த்தி செய்யும் தருவாயில் திவான் சேஷய்யா சாஸ்திரி அனுப்பிய அதிகாரி ஸ்வாமிகளை தரிசிக்க உள்ளே நுழைந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பின்னர் நடந்த சுவையான—படிப்பினை தரும்—நிகழ்ச்சி என்ன ?

"தெய்வமும் நல்லதோர் ஆசானும் வேறாமோ ?
செய்யும் தவமும் பலனும்தான் வேறாமோ ?
தென்தமிழ்ச் சொல்லின் சுவைபோல் இறைவனில்
ஒன்றியே நிற்பான் குரு."

வந்தவர் ஸ்வாமிகளைப் பணிவாக வணங்கினார். பவ்யமாகப் பேசினார்.

'சமஸ்தான திவான் வந்திருக்கிறார். தங்களைப் பார்க்க வேண்டுமாம். அழைத்து வரச் சொன்னார்'

ஸ்வாமிகளிடமிருந்து வந்த பதில் சுருக்கமாக,உறுதியாக இருந்தது.

'அவரை இங்கே வரச்சொல்.'

இந்த பதிலைக்கேட்டு சமஸ்தான அதிகாரி தயங்கினார். ஒரு சமஸ்தானத்தின் சக்தி வாய்ந்த, சர்வ அதிகாரம் பெற்ற திவானை ஒரு கோவணாண்டி வரச்சொல்வதா ? இதைப்போய் திவானிடம் சொன்னால் அதை எப்படி எடுத்துக் கொள்வார் ?திவான் கட்டளையிட்டும் ஒருவர் வர மறுப்பதா ? தன்மீது கோபப்பட்டு 'ஒரு சந்நியாசியைக் கையோடு அழைத்துவரும் துப்புக்கூட இல்லையா ?' என்று அர்ச்சனை நடக்குமா ?

ஒருநொடி இந்த சிந்தனை எல்லாம் அதிகாரியின் மனதில் விரிந்தது. இந்த எண்ணங்களுடனேயே திவான் இருக்குமிடம் வந்தார்.

ஸ்வாமிகளை வரவேற்கத் தயாராக இருந்த திவான் ஆவலுடன் 'ஸ்வாமிகள் வந்து விட்டாரா ?' என வினவினார்.

'உங்களை அங்கே வரச்சொன்னார்.' வார்த்தைகளை மென்று விழுங்கியபடி பயத்துடன் பதில் கூறினார்.

திவான், கூர்மையான மதி படைத்த அறிவாளி அல்லவா ? தன் தவறை அந்த க்ஷணமே உணர்ந்து கொண்டார்.

'எத்தனை படித்து, எவ்வளவு உயர்ந்த பதவி வகித்து என்ன பிரயோஜனம் ? ஒரு மஹானை எப்படி நடத்த வேண்டும் என்ற



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


சாதாரண அறிவு கூட எனக்கு இல்லாது போயிற்றே! தக்க மரியாதையை அளிக்கத் தவறிய பாவத்தைச் செய்துவிட்டேனே! படித்திருந்து என்ன பயன்? என் அகந்தையினால் அவரை அழைத்து வரச் சொன்னேனே! நானல்லவோ அவரைத் தேடிப் போயிருக்க வேண்டும்!' என்று புலம்பினார்.

மெதுவாக எழுந்து கூடாரத்திற்கு வெளியே வந்தார்.அவரைப் பார்த்ததும்

சாரட் வண்டி ஓட்டுபவர் வேகவேகமாக வண்டியைக் கூடாரத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தி, பவ்யமாகக் கைகட்டிக் கொண்டு கட்டளைக்குக் காத்திருந்தார்.

கை ஜாடையினாலேயே 'வேண்டாம்' என்று சைகை காட்டினார்.

தன் பருத்த உடலை சுமந்து கொண்டு மெதுவாக அரிமழம் மண்ணில் நடக்க ஆரம்பித்தார்.அவர் பின்னாலேயே இரண்டு அலுவலர்கள் பின்தொடர்ந்து வந்தனர்.

சித்ரகூடத்தில் ராமனைச் சந்திக்கச் சென்ற பரதனைப் போல் கைகளைத் தலைமேல் கூப்பியபடி, கண்களில் நீர்வழிய மஹாசந்நிதானம் எழுந்தருளியிருந்த குடிலை நோக்கி மெதுவாக நடந்தார்.

காலணி அணியாமல், தலைப்பாகை இல்லாமல், சர்வ அதிகாரம் படைத்த திவான் அவர்கள் நடந்து வருவதை அனைவரும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர்.

குடிலின் வாசலில் சிவராமன் செட்டியார், கிருஷ்ண ஐயர், காமாக்ஷி ஜோசியர், ராமன் செட்டியார் ஆகியோர் நீண்ட வெள்ளைக்கல் ஆசனத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். திவான் அவர்கள்

குடிசையை நோக்கி வருவதைப் பார்த்தனர். பதைபதைத்து எழுந்து நின்றனர்.

அவர்களை அணுகிய திவான் சொன்னார் 'சேஷய்யா வந்திருக்கிறேன். அடியேன் மஹாசந்நிதானம் அவர்களை இப்பொழுது சந்திக்க முடியுமா?'' என்று நாத்தழுதழுக்கக் கேட்டார்.

ஸ்வாமிகள், தாம் அழைத்தும் வரவில்லை என்பதால் சினந்து


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கொள்வாரோ என்ற பயத்தில் இருந்த நால்வரும், திவான் அவர்களின் பணிவான, நிதானமான பேச்சைக் கேட்டு ஒருவாறு நிம்மதி அடைந்தனர்.

சிவராமன் செட்டியார், குடிசையின் உள்ளே சென்று ஸ்வாமிகளின் அனுமதியைப் பெற்று வந்தார்.

சேஷய்யா சாஸ்திரி உள்ளே சென்றார்.

அங்கே அவர்கள் இருவருக்கும் நடைபெற்ற உரையாடல் என்ன ?

“தன்தவறைத் தான்உணர்ந்து தன்னிலை தாழ்ந்தன
பொன்னார் திருவடியைப் பற்றிட வந்தான்
செருக்கு புகழ்செல்வாக் கெல்லாம் புறத்தே
நிறுத்திப் பணிவுடன் வந்தான்”

அது 1878–ம் ஆண்டு.

சேஷய்யா சாஸ்திரி புக்கோட்டை திவானாகப் பதவி ஏற்று சில வாரங்களே ஆகியிருந்தன.

1878 முதல் 1894 வரை அப்பதவியில் இருந்தார்.இந்தப் பதினாறு ஆண்டுகளில் அவர் சாதித்த சாதனைகளில் சிலவற்றை ஏற்கனவே சுருக்கமாகப் பார்த்து இருக்கிறோம். இவரின் இந்த சாதனைகளுக்குத் தூண்டுகோலாக–அடிப்படையாக அமைந்தது மஹாசந்நிதானம் அவர்களுடனான சந்திப்பு.

ஸ்வாமிகள் அமர்ந்திருந்த சிறிய குடிசைக்குள் குனிந்து தனது உடலை ஒருக்களித்து உள்ளே நுழைந்தார்.

அது முன்மாலை நேரம். மேலே வேய்ந்திருந்த ஓலைக் கீற்றுகளின் இடைவெளியில் சூரிய கிரணங்கள் நுழைந்து ஸ்வாமிகள் மேல் விழுந்து இருந்தன. ஸ்வாமிகள் நல்ல பொன்னிற மேனியர். மாலை நேரச் சூரிய ஒளிபட்டு சாக்ஷாத் சிவபெருமானே அமர்ந்திருப்பதுபோல் ஜொலித்துக் கொண்டிருந்தார். சேஷய்யா சாஸ்திரிகளுக்கு அமர்ந்த திருக்கோலத்தில் சிவபிரான் காட்சி அளித்துக் கொண்டிருந்தார்.

அத்தனை ஆழமான படிப்பாளி, சிறந்த அறிவாளி ஸ்வாமிகளின் கருணை பொருந்திய அழகிய முக காந்தியில் ஒருகணம் லயித்துப் போய் நின்றார். திவானின் ஆஜானுபாகுவான



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


உடல்வாகும், இரட்டைநாடி சரீரமும் கீழே விழுந்து நமஸ்கரிக்க முடியாமல் தடை செய்தன.அவருடைய உயரத்திற்கு சிரம் கூரையைத் தொட்டுக் கொண்டு இருந்தது.

கூப்பியகரம் கூப்பியபடியே இருந்தது. கண்களில் இருந்து கண்ணீர் கன்னங்களில் வழிந்து கொண்டிருந்தது. எதற்கு வந்தோம், எதைக் கேட்க வந்தோம் என்பதை மறந்து விட்டார். தன்னுடைய குறையை மறந்தார். அங்கே கனத்த மௌனம் நிலவியது.

‘சேஷய்யா! உனக்கு என்ன வேண்டும்? கேள்’ மௌனத்தைக் கலைத்தார் ஸ்வாமிகள்.

‘என்னை மன்னித்தேன் என்று சொல்லுங்கள். தங்களுடைய மகிமை தெரியாது அழைத்து வரச்சொன்ன பாவி நான். வாழ்க்கையை அனுபவிக்கிறேன் என்று அதைத் தொலைத்து விட்டது இப்போது தெரிகிறது.’

‘எப்பொழுது செய்த தவறை உணர்ந்து வருந்தி விட்டாயோ அப்பொழுதே அந்த தவறு இல்லை என்றாகி விடுகிறது. உன்னுடைய குறை என்னவென்று அறிவேன்.

அவதாரங்களே ஆயினும் அவர்களும் கர்மபலனுக்கு உட்பட்டவர்களே! கர்மா என்பது செயல். செயல் இல்லாமல் எவரும் இல்லை. செயலே பாவ,புண்ணியங்களை நிர்ணயிக்கிறது. விதைத்ததே விளையும். கர்மபலன் இருக்கும் வரை பிறவிகள் தொடரும். தவம் செய்தால் சக்தி கிடைக்கும். கர்மாவைத் தொலைத்தாலே முக்தி கிடைக்கும்.

பூர்வ ஜன்ம புண்ணியத்தால் உனக்கு சிறந்த கல்வியும் பதவியும் கிடைத்துள்ளன. அதே பூர்வ ஜன்ம கர்மத்தால் ஒரு வினோதமான குறைபாடும் உனக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிறவியில் இந்த குறைபாடு தீர்க்கப்பட்டால், மீண்டும் பிறவி எடுத்து எஞ்சியுள்ள கர்மாவைத் தீர்க்க வேண்டி இருக்கும்.உன் முடிவு என்ன?’

இதற்கு திவான் அளித்த மறுமொழி என்ன?

“துன்பமும் இன்பமும் என்றும் தொடருமே
முன்வந்து நின்றேநம் கர்ம வினையாவும்


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தீர்ந்திடும் காலம் வரையில் பிறவிகள்
சேர்ந்தே வரும்என் றுணர். ”

"கர்ம வினையினால் என்னைப் பீடித்துள்ள இந்தப் பிணியை அனுபவித்தே தீர்த்துக் கொள்கிறேன். உங்கள் தரிசனம் கிடைத்த உடனேயே மனதில் தெம்பு வந்து விட்டது.

இந்தப் பிறவியிலேயே கர்மவினையிலிருந்து வெளிவர வழிகாட்டுங்கள், ஸ்வாமிகளே."

'நீ மட்டுமல்ல. அனைவரும் கர்மாவின் தளையிலிருந்து ஏதேனும் ஒரு பிறவியில் விடுபட்டு வெளியே வருவார்கள்.ஆனால் எத்தனை பிறவிகளில் என்பதுதான் கேள்வி.

கர்மாவை மட்டும் அனுபவித்தேதான் தீர்க்க வேண்டும்.

நல்லதை நினை. நல்லதைச் செய். நல்லதே நடக்கும்.நல்லது செய் என்பது மற்றவர்களுக்குப் பயன்படும்படியான,திருப்தி அளிக்கும் செயல்களைச் செய் என்பதாகும்.

ஒரு மந்தையில் ஆயிரம் பசுக்கள் இருந்தாலும், கன்றுக்குட்டி அதன் தாயை எப்படி அடையாளம் கண்டு கொண்டு செல்லுகின்றதோ, அவ்வாறே அவனவன் வினைப்பயனும் அவனிடம் சரியாக வந்து சேரும்.

நீ செய்யும் நல்லது அல்லது கெட்டது; தர்மம், துரோகம் எதுவானாலும் அவற்றை இப்பிறவியிலோ, இனிவரும் பிறவியிலோ அனுபவித்தே தீரவேண்டும். நல்ல காரியங்கள் செய்வதன் மூலம் உனக்கு நல்லதே நடக்கும்.

மற்றவர்களுக்கு நன்மையளிக்கும், நிறைவை அளிக்கும் செயல்களில் முதன்மையாக இருப்பது அன்னதானம். முடிந்த பொழுதெல்லாம் அன்னதானம் செய்.

குளங்கள் புதிதாக கட்டு. இருக்கின்ற நீர்நிலைகளை தூர்வாரி ஆழப்படுத்து.

பயன்தரும் மரங்களை, பழம் தரும் மரங்களை வளர்க்க முயற்சி செய்.

ஆலயப்பணிகளை அதிகம் மேற்கொள். பழைய கோயில்களை புனருத்தாரணம் செய்; புதிய கோயில்கள் கட்டி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கும்பாபிஷேகம் நடத்து. நமது ஆலயங்கள் ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டவை ஆயினும், மக்களின் பொருளாதார வளர்ச்சியும் அதில் இணைந்துள்ளது.

நல்ல சாலைகளை அமைத்தால் மக்கள் மேற்கொள்ளும் பயணம் எளிமை ஆகும்.

நீ எந்த செயல் செய்தாலும் உன்னிடம் உண்மையும், நேர்மையும் நிலைத்து இருக்கட்டும். இவை இரண்டும் இல்லாமல் ஒருவன் செய்யும் எந்தச் செயலும் பாவச் செயலே ஆகும். அவனைச் சார்ந்தவர்களையும் அப்பாவம் பற்றிக் கொள்ளும்.

புகழ்ச்சியால் பெருமிதம் கொள்ளாதே;இகழ்ச்சியால் மனம் தளராதே. அனைத்தையும் ஆண்டவனுக்கு அர்ப்பணித்து விடு.

உலகத்தில் வாழ்ந்து வந்தாலும் உலக வாழ்விலே, உலகப் பொருட்களிலே பற்றில்லாமல் இரு. ஈஸ்வரனைப் பற்றிய எண்ணத்தையும், உபாசனையையும் விட்டுவிடாதே.

சத்சங்கத்தை விட்டுவிலகாதே!'

மஹாசந்நிதானம் அவர்களின் அருளுரைகளை ஆசியுரைகளாக ஏற்றுக் கொண்டார் சேஷய்யா சாஸ்திரி.

மஹாசந்நிதானம் அவர்களிடம் உத்தரவு வாங்கிக் கொண்டார். புறப்படத் தயாரானார்.

"நாளை உணவு அருந்தும் பொழுது, இலையை எதிரில் போட்டு பரிமாறச்சொல். அந்த ஒருவேளை மட்டும் நேராக எடுத்து உன்னால் சாப்பிடமுடியும். ஆசிர்வாதங்கள். "

அவ்வாறே நடந்தது.

ஆனால் திவான் அவர்களுக்கு வேறொரு பிரச்சனை ஏற்பட்டது.

அது என்ன?

"ஆசானின் ஆசியுரை கேட்டவுடன் அவ்விடத்து
மாசெல்லாம் நீங்கியே சிந்தை தெளிந்து
நயந்தவை செய்த திவான்என்று நாளும்
நிலைத்த புகழினைப் பெற்றார். "

மஹாசந்நிதானம் அவர்கள் அருளியபடி அடுத்தநாள் உணவு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எடுத்துக் கொள்ளும்பொழுது திவானிற்கு நேராக இலை போட்டு பரிமாறப்பட்டது. திவான் அவர்களுக்கு இலை தெரிந்தது. அதில் பரிமாறப்பட்டவை தெரிந்தன. கையை நேராக நீட்டி எடுத்துச் சாப்பிட முடிந்தது. ஸ்ரீஸ்வாமிகளைத் தியானித்தபடியே உணவருந்தினார்.

உணவருந்தி சற்று சிரமப்பரிகாரம் செய்து கொள்ள நினைத்தபொழுது விக்கல் எடுக்க ஆரம்பித்தது. தண்ணீர் அருந்தினார். விக்கல் நின்றுவிடும் என்று நினைத்தார். ஆனால் இடைவெளியின்றி விக்கல் தொடர்ச்சியாக வந்தது.

திண்ணப்பன், இறைவனின் ஒரு கண்ணிலிருந்து குருதி வருவதைக்கண்டு கதறினான். மூலிகைகளைப் பறித்து வந்து சாறு பிழிந்தான். குருதி வழிவது நிற்கவில்லை. பதறினான். வருந்தினான். கலங்கினான். ‘ஊனுக்கு ஊனிடல் மருந்து’ என்பது நினைவிற்கு வந்து தன் ஒரு கண்ணைக் கிடந்து அப்பினான். இறைவனின் கண்ணிலிருந்து குருதி வடிவது நின்றது.

இப்பொழுது ஈசனின் அடுத்த கண்ணிலிருந்து ரத்தம் வடிந்தது. இம்முறை திண்ணப்பன் கதறவில்லை, பதறவில்லை, வருந்தவில்லை, கலங்கவில்லை. காரணம் இதற்கு என்ன சிகிச்சை என்பது அவனுக்குத்தான் தெரிந்து போயிற்றே! எனவே அடுத்த கண்ணை அகழ்ந்து எடுத்து அப்பிட முயன்றான். கடவுள் அவன் கைகளைப்பிடித்துத் தடுத்து ‘நில்லு கண்ணப்ப’ என்று மும்முறை கூறி, திண்ணப்பனைக் கண்ணப்பர் ஆக்கினார்.

அதுபோல், அருகிலேயே பிறவி நோய் தீர்க்கும் மருத்துவர் இருக்கிறார் என்பதைத் திவான் தெரிந்து கொண்டு விட்டாரே! பின் எதற்கு விசாரம்? மீண்டும் ஸ்வாமிகளைப் பார்க்கச் சென்றார்– தொடர்ந்து வரும் விக்கலுடனேயே.

சேஷய்யாவைப் பார்த்து மஹாசந்நிதானம் அவர்கள் என்றும் மறையாத மந்தஹாசத்துடன் கேட்டார்.

‘மழைவிட்டு விட்டது. இன்னமும் தூவானம் விடவில்லையா? அப்படி உட்கார்’ என்று குடிசையின் வாசலில் இருந்த திண்ணையில் அமரச் சொன்னார்.

சிவராமன் செட்டியார் அவர்களை அழைத்து ஒருபடி பிடிக்கும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஒரு சொம்பு நிறைய குடிதண்ணீர் எடுத்துவரச் சொன்னார். சொம்பில் நீர் எடுத்து வந்தார் செட்டியார். சேஷய்யாவிடம் கொடுக்கச் சொன்னார்.

'இந்த சொம்பு ஜலம் முழுவதையும் மேலே அண்ணாந்து பார்த்தபடி தூக்கிக்குடி. சொம்பு வாயில் படக்கூடாது, கடகடவென்று ஒரே மூச்சில் குடி '

சேஷய்யா, ஸ்வாமிகள் சொன்னபடி செய்தார். பருத்த சரீரம் அல்லவா! சிறிது பெரு மூச்சு வாங்கியது.

ஆனால்.....

என்ன ஆச்சரியம்! அவரின் விக்கல் உடனடியாக நின்றுவிட்டது.

மூச்சும் நிதானமாகியது.

மஹாசந்நிதானம் அவர்களைக் கைகூப்பி வணங்கி கண்கள் நீர் சொரிய விடைபெற்றார்.

மஹாசந்நிதானம் அவர்களின் சரிதத்தில், அவர் நிகழ்த்திய லீலா வினோதங்களில் இதுவே இறுதியானது.

ஸ்வாமிகளைச் சந்தித்து அவரின் அருளினால் பிறவித்தளை நீக்கப்பெற்ற திவான் அவர்களின் செயல்பாடுகள் எவ்வாறு அமைந்தன?

"ஊரின் இடுக்கண் களைந்த திவானாரின்
ஊறு களைந்தே உபதேசம் செய்தான்
உறுபிணி நீங்க உபாயமும் சொன்னான்
திருவடியை என்றும் தொழுவோம்."

புதுக்கோட்டை சமஸ்தானம் 1685–வரை ராமநாதபுரம் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1686–ல் பிரிந்து தனி சமஸ்தானம் ஆகியது. 1948 முடிய பிரிடிஷாரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அந்த ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

விஜயநகரப் பேரரசின் மன்னரான மூன்றாம் ஸ்ரீரங்கரிடம், ஆவுடை ரகுநாதத் தொண்டைமான் படைத்தளபதியாக இருந்தவர்.

இவருடைய வீரத்தையும், போர்க்களத்தில் நிகழ்த்திய


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சாகசங்களையும் பாராட்டி, 1639–ம் ஆண்டு 'ராயராகுத்த ராயவஜ்ரீடு ராயமன்னீடு ராய'

என்ற பட்டத்தையும், ஏராளமான நிலங்களையும், பரிசுகளையும் அளித்தார் விஜயநகரப்பேரரசர். அரசர்களுக்குரிய அம்பாரி யானை, முரசு யானை, சிங்கம் இவற்றுடன் பல்லக்கு பயன்படுத்தும் உரிமையையும் வழங்கினார்.

1661–ம் ஆண்டு ஆவுடைய ரகுநாத தொண்டைமான் காலமானார். இவருடைய மறைவிற்குப் பிறகு ரகுநாதராய தொண்டைமான் தன் தந்தையின் வசமிருந்த கறம்பக்குடி, பிலாவிடுதி பகுதிகளை ஆட்சி செய்தார். அப்போது தஞ்சாவூர் விஜயராகவ நாயக்கர் படையில் சேர்ந்து போர்க்களத்தில் தனது வீரத்தையும், திறமையையும் வெளிப்படுத்தினார். விஜய ராகவ நாயக்கர் இவருக்கு 'பெரிய ராஜபாண்டியன்' விருதையும், 'விஜய' பட்டத்தையும், வைரமாலையையும் பரிசாக வழங்கினார்.

மதுரை நாயக்கர் ராணிமங்கம்மாள் படையில் சேர்ந்து, குஸ்தம்கான் என்பவனிடமிருந்து மதுரையை மீட்டார். இல்லை என்றால் அவனால் மதுரை முழுமையாகக் கொள்ளையடிக்கப்பட்டு, பலவகைகளிலும் சீரழிந்திருக்கும். இதற்கு நன்றிக்கடனாக திருச்சிராப்பள்ளி நகரக் காவலனாக இவர் நியமிக்கப்பட்டார்.

இவரது பேராற்றலைக் கேள்விப்பட்ட ராமநாதபுரம் சேதுபதி மன்னர் இவரையும் இவர் சகோதரர் நமனத் தொண்டைமானையும் அரசவைக்கு வரவழைத்து அவர்களுக்கு மிக உயர்ந்த ராணுவப் பதவிகளை வழங்கினார். இந்த சகோதரர்களின் தங்கையான காதலிநாச்சியாரை மணந்து கொண்டு பட்டமகிஷி ஆக்கினார்.

கி.பி.1686–ல் திருமயம்,குளத்தூர், கறம்பக்குடி ஆகிய பகுதிகள் அடங்கிய சமஸ்தானத்தை ஏற்படுத்தி அதன் முதல் மன்னராக விஜயரகுநாத தொண்டைமானை நியமித்தார். இவர் ஆட்சிக்குட்பட்ட சிங்கமங்கலம், கலசமங்கலம் என்ற ஊர்கள் அழிந்த பின்னர் அவைகள் இருந்த இடத்தில் ஒரு புதிய நகரை உண்டாக்கினார்.அதற்கு "புதுக்கோட்டை" என்று பெயர் சூட்டினார்.

புதுக்கோட்டை சமஸ்தான மன்னர்கள் யாவரும் ஆங்கிலேய



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


அரசிற்கு உற்ற துணையாக இருந்தனர்.

1780–ல் ஹைதர் அலி கர்நாடக சமவெளியில் பேரிடி விழுந்தாற்போல் ஆங்கிலேயரைத் தாக்கினான். தென்னாட்டு சமஸ்தான மன்னர்கள் யாவரும் ஹைதர் அலியுடன் கைகோர்த்தனர்–புதுக்கோட்டை சமஸ்தான மன்னரைத்தவிர. ஹைதர் அலி எதிரிப் படை வீரர்களையும், அப்பாவி மக்களையும் கொன்று குவித்து மிக வேகமாக முன்னேறி புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள ஆதனக்கோட்டைவரை வந்துவிட்டான். இந்நிலையில் புதுக்கோட்டை சமஸ்தானப் படைகள் அவனையும், அவனது படைகளையும் எதிர்த்துப் போராடி, புறமுதுகிட்டு ஓட வைத்தனர்.

ஹைதர் அலியின் மகன் திப்புசுல்தானிற்கு எதிராகவும் புதுக்கோட்டை மன்னர் ஆங்கிலேயருக்கு உதவி புரிந்தார்.

இத்தகைய வீரப் பரம்பரையில் வந்தவர்தான் ஸ்ரீபிரஹதம்பாள்தாஸ் ராஜா ராமச்சந்திர தொண்டைமான் பஹதூர். இவர் பட்டத்திற்கு வந்தபோது ஒன்பது வயதுச் சிறுவன். இவர் பட்டத்தை ஏற்கும் உரிய வயது வரையில் இவரின் சார்பில் ஆங்கிலேயப் பிரதிநிதி ஆட்சி புரிந்து வந்தார்.

இந்த மன்னர் ஆட்சி புரிந்தபொழுதுதான் சேஷய்யா சாஸ்திரி பிரிட்டிஷ் அரசால் புதுக்கோட்டை சமஸ்தான திவானாக 1878–ன் தொடக்கத்தில் நியமிக்கப்பட்டார். திவான் பொறுப்பை ஏற்ற சில நாட்களுக்குள்ளேயே அரிமழம் வந்தார். ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளைத் தரிசித்து அவருடைய அருளுரைகளைக் கேட்கும் பேறு பெற்றார்.

ஸ்ரீஸ்வாமிகள் கூறிய அறிவுரைகளை இவர் கடைப்பிடித்து, செயலாற்ற முடிந்ததா ?

“எக்கோட்டை ஆனாலும் வீரச் செறிவால்
புதுக்கோட்டைக் கீடு இலையே ஆன்றோர்
உரைத்த மொழியெல்லாம் ஏட்டினில் கண்ட
உரையால் உணர்ந்தனம் இன்று. ”

மஹாசந்நிதானம் அறிவுறுத்தியபடி ஆட்சியை நடத்தினார் திவான் சேஷய்யா சாஸ்திரி. மக்கள் நலன்சார்ந்த பல சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். நகர திட்டமிடலின் முன்னோடி


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



என்று போற்றப்பட்டார். புதுக்கோட்டையில் இன்றும் நெடிதுயர்ந்து நிற்கும் செங்கற் கட்டிடங்கள் இவரது மேற்பார்வையில் கட்டப்பட்டன.

புதுக்கோட்டையின் தாகம் தீர்க்கும் புதுக்குளம் இவரது சிந்தனையில் உருவானதே!

ராமச்சந்திர தொண்டைமான் காலத்தில் பல கோயில்கள் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றன. 1886–ல் ராமச்சந்திர தொண்டைமானின் மறைவிற்குப் பிறகு, பிரஹதம்பாள்தாஸ் பைரவ மார்த்தாண்ட தொண்டைமான் மன்னராக அறிவிக்கப்பட்டார். அப்பொழுது அவருக்கு வயது 11தான். எனவே ஆட்சிப்பொறுப்பை திவான் சேஷய்யா சாஸ்திரி வசம் ஆங்கிலேய அரசு ஒப்புவித்தது.

ஸ்வாமிகளின் அருளாணைப்படி அன்னதானம் தொடர்ந்து நடைபெற ஏற்பாடுகள் செய்தார். சமஸ்தானத்தின் வடக்கு மேற்குப் பகுதியில் அன்னவாசல் மற்றும் ஊரின் தென்கிழக்கே அரிமழம் சாலையில் அன்னசத்திரம் ஆகிய இடங்களில் யாத்திரீகர் களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்தார்.

முதன் முதலில் போக்குவரத்து தொடங்கப்பட்டதும் இந்த சமஸ்தானத்தில்தான்.

தனி அரசாட்சி, தனி சட்டம், தனிநாணயம், தனி முகத்தல் அளவு என்ற சிறப்புகளைக்கொண்ட ஒரே சமஸ்தானமாக விளங்கியது. இங்கே வெளியிடப்படும் நாணயம் ‘அம்மன் காசு’ என்று வழங்கப்பட்டது. பண்டமாற்றத்திற்கு அம்மன் காசு பயன்படுத்தப்பட்டது. இக்காசின் ஒருபுறம் புதுக்கோட்டை மன்னர்கள் வழிபட்ட பிரஹதம்பாள் அம்மனின் உருவம் பொறிக்கப் பட்டதால் இப்பெயர் பெற்றது. இதைப் ‘புதுக்கோட்டை அம்மன் சல்லி’ என்றனர்.

புதுக்கோட்டை அரசின் அதிபதியாக பிரஹதம்பாள் அம்மன் விளங்கினார். அந்த அம்மனின் பிரதிநிதியாகவே மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். மன்னர்களின் பெயர்கள் ‘பிரஹதம்ப தாச’ என்றே தொடங்கும். இவ்வாறு ஆன்மீகம், அரசாட்சியுடன்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இணைந்திருந்ததால் செங்கோல் நடுநிலை தவறாது இருந்தது.

சாஸ்திரி காலத்தில்தான் புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன; நீதிமன்றங்கள் கட்டப்பட்டன. நீதி பரிபாலனம் மிக நேர்மையாகவும்; குற்றத்திற்கான தண்டனைகள் கடுமையாகவும் இருந்தன.

**1894–ம்** ஆண்டு திவான் பதவியிலிருந்து ஓய்வு பெற்று, அமைதியான ஆன்மீக வாழ்க்கையை மேற்கொண்டார்.

**1868–ம்** ஆண்டு சென்னை பல்கலைக்கழக fellowship இவருக்கு அளிக்கப்பட்டது;

**1878–ல்** பிரிடிஷ் அரசு 'Companion of the Order of the Star of India' என்ற சிறப்புப் பட்டத்தையும்;

**1901–ம்** ஆண்டு 'Knight commander of the Order of the Star of India' என்ற உயரிய அங்கீகாரத்தையும்;

**1902–ம்** ஆண்டு 'Knight Commander to the Crown' என்ற சிறப்புமிகு பாராட்டையும் வழங்கிஇவருடைய உன்னத சேவைகளை அங்கீகரித்தது.

புதுக்கோட்டை சமஸ்தான வளர்ச்சிக்குப் பாடுபட்ட இவர் மஹாசந்நிதானம் தனக்கு வழங்கிய அருளை எப்பொழுதும் மனதில் நிறுத்திச் செயலாற்றினார்.

வறுமையில் பிறந்து, வறுமையில் வாடிய சேஷய்யா சாஸ்திரி இறையருளாலும், குருவருளாலும், உண்மையையும், நேர்மையையும் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு உயர்ந்தார்; உச்சம் தொட்டார். அதனால்தான் அவர்புகழ் இன்றும் நிலைத்து நிற்கிறது.

இவர் 29, அக்டோபர் 1903–ல் தன்னுடைய 75 ம் வயதில் இனி பிறப்பிலா முக்தி நிலை அளிக்கும் இறைவனடி சேர்ந்தார்.

(தன்னலம் கருதாது புதுக்கோட்டை சமஸ்தானத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட இவரின் பெயரை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் இருக்கும் ஒரு சாலை தாங்கிக் கொண்டுள்ளது.)

இனி மீண்டும் அரிமழம்.......

மஹாசந்நிதானம் அவர்கள் தம் சீடர்களை அழைத்து அவர்களுக்கு ஒரு கட்டளை இட்டார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அது என்ன கட்டளை ?

"குருவருளை என்றும் குறைவறப் பெற்ற
திருவளர் சேஷய்யா என்றதோர் பொக்கிஷம்
நாட்டிற்கு நல்லதெல்லாம் செய்தே இறைவனின்
நாட்டை அலங்கரிக்கச் சென்றார். "

தம்முடைய அரிமழம் சீடர்களிடம் மஹாசந்நிதானம் அவர்கள் கூறினார்:

"நாளை உபதேசத்திற்கு வரும் பொழுது உங்கள் குழந்தைகளை அழைத்து வாருங்கள்."

ஸ்வாமிகளின் ஆணைப்படி சிவராமன் செட்டியார் தம் புதல்வர் சோமசுந்தரம், கிருஷ்ண அய்யர் தம் மைந்தன் சுப்ரமணியன், காமாக்ஷி ஜோசியர் தம் மகன் நரசிம்மன் ஆகியோரை அழைத்து வந்தனர். மற்றவர்களும் தத்தம் வாரிசு களுடன் வந்தனர்.

ஸ்வாமிகள் தம் ஆசனத்தில் அமர்ந்தார்.தம் எதிரே அருகினில் சிறுவர், சிறுமியரை அமரச் செய்தார்.அக்குழந்தைகள் மீது தம் அருட்கண்களைப் பதித்தார். பெற்றோர்கள், பெரியவர்கள் சற்றே பின்னால் அமர்ந்திருந்தனர்.

ஸ்வாமிகள் என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலுடன் காத்திருந்தனர்.

தமது ஆசியுரையைத் தொடங்கினார் :

"உங்களுக்கு அப்பா, அம்மா ஆகியோர்தான் கண்கண்ட தெய்வங்கள். அவர்கள் மூலம்தான் நீங்கள் குருவையும், சாமியையும் தெரிந்து கொள்கிறீர்கள்.

உங்கள் வளர்ச்சியின் பின்னால் பெற்றவர்களே இருக்கின்றனர். உங்களுக்கு நண்பர்கள், பிற உறவுகள் பல இருக்கலாம். ஆனால் தாய் ஒருவரே; தந்தை ஒருவரே.

நீங்கள் எல்லோரும் நன்றாகப் படிக்க வேண்டும்.அதுதான் உங்கள் தாய், தந்தையருக்கு மகிழ்ச்சியைத் தரும். எப்பவும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சத்தியத்தைப் பேசுங்கள். அத்துடன் ஈஸ்வரனையும் நினைக்க வேண்டும். எந்தக் காரியம் செய்தாலும் சிரத்தையுடன் செய்யுங்கள். சிரத்தையுடன் செய்தால் மட்டுமே கர்மா செய்ததாகக் கணக்கு.

நீங்கள் பகவானிடம் பக்தி செலுத்தினால் அவர் அனைத்தையும் உங்களுக்கு அளிப்பார். இதற்கு பிரஹலாதனும், துருவனுமே உதாரணங்கள். நம் இதிகாச, புராணங்கள்தான் குழந்தைகளுக்கும் நல்ல அறிவைப் புகட்டும்படி அமைந்திருக்கின்றன.

ஒவ்வொரு சிறுவரும் இவர்களைப்போல விளங்க முயற்சி செய்ய வேண்டும்.

உங்களுக்காகவே ஆத்திசூடி,கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை ஆகிய நூல்கள் உள்ளன.

அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி மற்றும் பெரியவர்களை மதித்துப் போற்றுங்கள். இவர்கள்தான் ஆன்மீகக் கதைகளைச் சுவையாகக் குழந்தைகளுக்குச் சொல்லுவார்கள். இவர்களிடம் ஏட்டுப் படிப்பு அதிகம் இல்லாது போனாலும், தலைமுறை தலைமுறையாக பக்தியை உங்களைப் போன்ற சிறுவர்களுக்குக் கதைகள் மூலம் புகட்டுகின்றார்கள்.

குருவைப் போற்றுங்கள். அவர்கள்தான் உங்கள் அறிவுக் கண்களைத் திறக்கின்றார்கள். உலகத்தை நன்கு உற்றுப் பார்க்கச் செய்கின்றார்கள். சிறுபிராயத்தில் உங்களின் கைகளைப் பற்றி வழிநடத்துகின்றார்கள்; நல்ல வழியைக் காட்டுகின்றார்கள். பக்தி நிறைந்த, கற்றறிந்த நல்ல ஆசிரியர் அமைந்து விட்டால் மாணவரின் வாழ்க்கை சிறப்பாக அமைந்துவிடும். மாணவர்கள் தவறுகள், குற்றங்கள் செய்யமாட்டார்கள். ஒழுக்கமான, நேர்மையான ஆசிரியர்கள் இல்லாது போனால் மாணவர்கள் கெடுவது மட்டுமன்றி எதிர்கால சமுதாயமும் சீர்கேடு அடைந்துவிடும்.

எந்தச் சூழ்நிலையிலும் சத்தியத்தைக் கைவிட்டு விடாதீர்கள். ஈஸ்வரன் தர்மத்தில் இருக்கிறான். ஸத்தியத்தில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இருக்கிறான். தர்மசாஸ்திரத்தில் இருக்கிறான்.நீங்கள் அனைவரும் சத்தியத்தின் வழியிலும்,தர்மத்தின் வழியிலும் நில்லுங்கள்.

நீங்கள் அனைவரும் வருங்காலத்தில் உங்கள் துறையில் சிறந்து விளங்குவீர்கள். ஆசிர்வாதங்கள்!"

மஹாசந்நிதானம் அவர்களின் ஆசிகளைப்பெற்ற அந்த சிறார்கள் மிகப்பெரும் பாக்கியசாலிகள். ஸ்வாமிகள் ஆசிர்வதித்தபடியே பிற்காலத்தில் அவரவர் துறையில் பெயரும், புகழும் பெற்று விளங்கினார்கள்.

இரண்டு நாட்களில் தம் சீடர்களுக்கு உபதேசம் வழங்கினார்.

அந்த உபதேசம் இரண்டு விதங்களில் சிறப்புப் பெற்றன.

அந்த சிறப்புகள் யாவை ?

"தொடர்ந்திடும் நாட்கள் சிறப்பொடு தோன்ற
சுடர்விடும் ஆற்றலோடு பண்புகள் சேர்ந்தே
இனிய பணிகள் பொறுப்புடன் செய்யக்
கனிவாய் உரைத்தனன் வாழ்த்தி!"

தம் சீடர்கள் அருகே அமர்ந்திருக்க அவர்களுக்கு ஆசியுரையயை வழங்கினார்.

(மஹாசந்நிதானம் வழங்கிய அருளுரைகளில் இதுவே மிக நீண்டது; ஆழமான தத்துவங்களை உள்ளடக்கியது. சிற்றறிவு புரிந்து கொண்ட வகையில் எளிமையாக எழுத முயற்சி செய்கிறேன்.)

"இறைவன் முதல், நடு, இறுதி என்று (ஆதிமத்யாந்தம்) என்ற முந்நிலைகளையும் கடந்தவன். இந்த முப்பொருளும் இல்லாத முழுமுதல்வனை நினைந்து தவம் செய்வர் யோகிகள். அதற்கு ஏகாந்தநிலை (தனித்திருத்தல்), மௌனம், யோகத்தில் ஆழ்ந்திருத்தல் (தன்னுள் ஒடுங்குதல்) என்ற மூன்றையும் சாதனமாகக் கொள்வார்கள். இவற்றின் மூலம் பலசாதனைகள் செய்யும் வல்லமை பெறுவார்கள். அவர்களின் அறிவு பரம ஆனந்தப் பெருவெளியில் நிலைபெற்றிருக்கும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இந்த பூவுலகத்தில் ஜன்மம் எடுத்து விட்டால் கர்மாவை அனுபவித்தேதான் தீர்க்க வேண்டும். அவதார புருஷர்களும், சர்வேஸ்வரனும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. கர்மாவை அனுபவித்தேதான் தீர்க்க வேண்டுமென்றால் ஈஸ்வரனும், குருநாதரும் எதற்காக என்ற கேள்வி எழலாம்.ஒருவனின் பாவ புண்ணியத்தை சரிசமன் செய்வதுவே இவர்களின் வேலை.

ஒருவனின் கணக்கில் புண்ணியம் அதிகமாகிப் போய் விட்டால், ஒரு சிறிய பாவத்தை, பக்தன்–சிஷ்யன் அறியாமலேயே ஏற்படுத்தி அதில் அவனை ஈடுபட வைத்து விடுவர். அதிகப்பற்றை – புண்ணியத்தை சரிசெய்து விடுவார்கள். அதன் பிறகு மீதி ஒன்றும் இருக்காது. சரிசமம் ஆகிவிடும்.

இந்தக் கலியுகத்தில் ஈஸ்வரனைக் காண்பது மிகவும் துர்லபம். ஆனால் குருநாதர் கிடைப்பது அதனினும் அரிது. ஆயினும் மனம் ஒன்றிணைந்த முயற்சியினால் அவரைக் கண்டடைய முடியும். பூர்வ ஜன்ம புண்ணியம் இருந்தால் நல்ல குருநாதர் கிடைப்பார்.

சாதாரணமாக மனிதப் பிறவிகள் ஏழு என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.பகவான் ஒருதடவை அல்ல, இரண்டு தடவை அல்ல, ஏழுதடவை சந்தர்ப்பங்கள் தருகிறார். ஏழதடவை அனுக்ரஹம் செய்கிறார். அதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்குத்தான் முன்னரே கூறியுள்ளேன் ‘சத்ஸங்கத்தை நாடுங்கள்’ என்று. ‘கூன், குருடு, செவிடு, பேடு’ நீங்கிப் பிறந்துள்ளீர்கள். எனவே அறிவை நல்வழிச் செலுத்துங்கள்.

மஹான்களை–குருவைப் பார்ப்பது அரிது !பார்த்தாலும் அவர்கள் வாயால் ஒருசொல் கேட்பது அரிது !மிகப் பெரும் பாக்கியம் செய்தவர்களுக்கு மட்டுமே குருவின் உபதேசம் கிடைக்கும்.குருவைப் பார்த்த உடனேயே குருவைப்பற்றி உணரந்து கொள்கிறான் சிஷ்யன்; அதைப்போலவே சிஷ்யனைப் பார்த்த உடனேயே சிஷ்யனைப் பற்றி உணர்ந்து கொள்கிறார் குரு. இது குரு–சிஷ்ய பாவத்தின் உயர்ந்த தத்துவம்.

எப்படி மலையில் ஏறி ஒரு சிகரத்தை அடைய விரும்புபவன் அதைக் குறித்து நினைத்துக்கொண்டிருந்தால் மட்டும் அடைய முடியாது. சிகரத்தில் ஏறுவதற்கான முயற்சிகளைச் செய்ய



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வேண்டும். அதைப்போல ஈஸ்வரனைக் காண வேண்டும் என்று விரும்புபவன் அதற்குத் தேவையான முயற்சிகளைக் கைக்கொள்ள வேண்டும். ஈஸ்வரனைக் காணவேண்டும் என்ற முயற்சியும், ஈஸ்வரனின் மேல் அசைக்க முடியாத பக்தியும் இருந்தால் நிச்சயம் அவன் ஈஸ்வரனைக் காண்பான்........"

மஹாசந்நிதானம் அவர்கள் தன்னுடைய உபதேசத்தின் நடுவே சிறிது இடைவெளிவிட்டார். கண்களை மூடி ஒரு நிமிஷம் ஆழ்ந்த நிஷ்டையில் ஆழ்ந்தார். தீர்க்கமாக மூச்சை உள்ளிழுத்து வெளியில் விட்டார்.

'இந்த உரையின் முடிவில் உங்களுக்கு ஒரு முக்கியமான செய்தியை சொல்லப் போகிறேன்' என்றார்.

அந்த முக்கியமான செய்தி என்ன?

"உயர்ந்தோர் உரைக்கும் உபதேசம் என்றும்
தவறாது நல்லோர் செவியை அடைந்து
தலைமுறை தாண்டி நிலையாக நின்றால்
உலகம் பயனுற வாழும்."

"மோக்ஷம் என்பதை பிரம்ம அறிவினால் மட்டுமே அடைய முடியும். அந்த பிரம்ம அறிவை தகுந்த ஒரு குரு மூலமே பெற முடியும்.

ஆன்மிகத்தில் குரு–சிஷ்ய உறவு முதன்மை ஸ்தானத்தை வகிக்கின்றது. குரு ஒரு வழிகாட்டும் ஞானவிளக்கு. குரு இல்லாமல் ஆன்மிகத்தில் முன்னேற மிகமிகக் குறைந்த அளவில் ஒரு சிலரால் மட்டுமே முடியும். அனைவருக்கும் இது சாத்தியமாகக் கூடியதல்ல. குரு தன் மனத்தில் சுடர்விடும் ஞான தீபத்தை சீடன் மனத்திலும் ஏற்றுகிறார். ஒரு விளக்கிலிருந்து மற்றொரு விளக்கு ஏற்றப்படுகிறது.

குருவைச் சேர்ந்த அனைத்தும் சீடர்களுக்கே போய்ச்சேரும். அன்பு, அஹிம்சை, சத்தியம், ஒழுக்கம், பக்தி, வைராக்கியம், விவேகம், கருணை இவை அனைத்தும் இனி உங்களைச் சேரும்.



Center for Shaiva Studies. Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சீடனைக் காப்பது குருவல்ல. குருவின் மீது சீடர்கள் கொண்ட அனன்ய பக்திதான்.

அவதாரங்களுக்கும் குருமார்கள் உண்டு. அவர்கள் குருவைத் தேடிச்சென்று அடைந்திருக்கிறார்கள். அதன் மூலம் குருவின் முக்கியத்துவத்தை நமக்கு வலியுறுத்தி உள்ளனர்.

எப்பொழுதும் மலர்ச்சியுடன் இருத்தல், இரக்க குணம், இனிமையாகப் பேசுதல், பிறரை எள்ளி நகையாடாதிருத்தல் இவை நற்பண்புகளின் பாற்படும். இத்தகைய நற்குணங்கள் ஒரு சீடனுக்கு இன்றியமையாததனவாகும்.

உலகின் முதல்குரு தக்ஷிணாமூர்த்தி ஆகும். இவர் சிவபெருமானின் அம்சமே. யோகமார்க்கத்தில் சிவன் என்பவர் நமக்கு உண்மையை உணர்த்தும் ஆன்மீக குரு. நம் அக இருளைநீக்கி உள்ளொளியாகத் திகழ்பவர்.

சிவன் என்றால் மங்களம் என்று பொருள்.

அரிசி என்ற ஒரு மூலப்பொருளிலிருந்து பலவிதமான பதார்த்தங்களைச் செய்ய முடிவதுபோல், சிவன் என்ற சக்திக்குப் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. மனிதன் தன் பக்திக்கும், வசதிக்கும் சௌகரியத்திற்கும் ஏற்ப பலவிதமான தெய்வ வடிவங்களை உருவாக்கி வழிபட்டு மகிழ்கிறான். இதில் சிவலிங்க வழிபாடு என்பது பக்தனின் பந்தபாசங்களை அறுத்து முக்தியின் பாதைக்கு அழைத்துச் செல்லும். சிவலிங்கத் திருமேனியின் சக்தி அதிர்வுகளை அளவிடமுடியாது.

வேதங்கள் ஐந்தில் மத்தியமாக வருவது கிருஷ்ண யஜுர் வேதம். கிருஷ்ணயஜுர் வேதத்தின் மையமானது ஸ்ரீருத்ரம். ஸ்ரீருத்திரத்தின் மத்தியமானது நமசிவாய என்ற பஞ்சாக்ஷர மந்திரம். சிவ என்பது சிவபெருமானையும், சிவா என்பது அம்பிகையையும் குறிக்கும். சிவமூர்த்தி, சிவசங்கரீ, சிவசக்த்யைக்ய ரூபிணி லலிதாம்பிகா என்று ஸ்ரீலலிதா



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சகஸ்ரநாமம் குறிப்பிடுகிறது. இதிலிருந்து சிவனும், சக்தியும் ஒன்றிணைந்த அர்த்தநாரீஸ்வர வடிவமே சிவலிங்கம் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்.

'தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்' என்பது திருமந்திர வாக்கு. தெள்ளத் தெளியாத போதும் ஜீவனின் ஸ்வரூபம் சிவலிங்கம் என்பது மறைமுகமாக உணர்த்தப்படுகிறது. இந்த பூதவுடல் தாண்டி நம் எல்லோரின் நிதர்சன ரூபமும் சிவலிங்கம்தான்.

உலகில் மனிதன் தோன்றுவதற்கு முன்பே சிவலிங்க வடிவம் தோன்றி விட்டது.

கலியுகம் பிறந்தது 5000ஆம் ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது என்று திட்டமாகக் கணக்கிட்டுள்ளனர். நாம் நமது சனாதன தர்மத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அது நிலைத்திருப்பதற்கான வழி என்ன என்பதையும் பார்க்க வேண்டும். நாம் நமது மதத்தைப் போற்றினால் மட்டும் போதாது. நமது தத்துவ ஞானத்துடன், கல்வி ஞானத்தையும் செம்மையான வழியில் பேண வேண்டும்.அது பின்வரும் சந்ததியினரைக் காக்கும் அரணாக விளங்கும்" என்று அதற்கான வழிமுறைகளையும் கூறினார்.

அந்த வழிமுறைகள் என்ன ?

"புவனம் சிறக்க புதுவழி காட்டி
சிவபிரான் அம்சமாம் சுந்தரன் செப்பிய
நல்லுரை தேர்ந்த நயமிகு பிள்ளைகள்
பல்லோர் புகழவே வாழ்ந்தார். "

மஹாசந்நிதானம் அவர்கள் தன் அருளுரையைத் தொடர்ந்தார்.

"நமது தேசத்தின் உயிர்நாடிகளான நம் சனாதன மதமும் ,கல்வி முறையும் மிகவும் சீர்கெட்டு வருகின்றன. நம் பண்பாடு,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கலாச்சாரத்திற்கு எதிரான கல்வி முறை பயிற்றுவிக்கப்படுகிறது. மேலை நாட்டு மோகத்திற்கு உட்பட்டு சிறிது சிறிதாக மக்கள் ஒழுக்கத்தைப் போதிக்கும் நம் கல்விமுறையை கைவிட்டு விலகிச்செல்கின்றனர். இதனுடைய தாக்கம் இன்னும் சில பத்தாண்டுகளில் மிக விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது. நாம் ஆன்மீகக் கருத்துக்களை வலியுறுத்தும் கல்வி முறையிலிருந்து விலகி, உலகாதாய சௌகரியங்களைக் காட்டும் கல்விமுறையை நோக்கி நழுவிச் செல்கிறோம். இதைத் தடுத்து குழந்தைகளை நல்வழிப்படுத்த வேண்டும் என்றுதான் சில நாட்களுக்குமுன் கல்விபயிலும் மாணாக்கர்களை வரச் சொல்லி பேசினேன். உங்கள் குழந்தைகளின் கல்விமுறையில் கவனம் வையுங்கள். பள்ளியில் கற்றுக் கொள்வதைவிட, பெற்றோர் களிடமிருந்துதான் அவர்கள் அதிகம் பெற்றுக் கொள்கிறார்கள். எனவே அவர்களின் பொருட்டேனும் நீங்கள் சமுதாயத்தில் நேர்மையானவர்களாக இருப்பது அவசியமாகிறது.

அடுத்து நம் தர்ம மதத்தின்முன்னே தோன்றும் அச்சுறுத்தல்கள் அபரிமிதமானவை. நமது வைதிகமதம் மிகவும் க்ஷீணித்துக் கொண்டு வருகிறது. மனிதர்களாகப் பிறந்த எவரும் சரிசெய்ய முடியாத துர்பாக்கிய நிலைக்கு நம் புராதனமதம் இன்று தள்ளப்பட்டு விட்டது. நம் மத நாகரிகங்களை மற்ற மதத்தினர் எடுத்துக் கொள்ள ஆரம்பித்து விட்டனர். இந்த அவல நிலையிலிருந்து விடுபட குருவின் உபதேசம் தேவைப்படுகிறது.

ஆதிசங்கரர் ‘பிரச்நோத்தர ரத்னமாலிகா’ ஸ்லோகத்தில் உபதேசிக்கிறார் : ‘எது விஷம் ?’ என்பது கேள்வி.

பதில்: ‘அவதீரணா குருஷு’ – குருமார்களை அவமதிப்பது விஷம். குருவை அவமதிப்பது விஷம் என்றால், குருவை மதிப்பது அமிர்தமாகும் என்றுதானே பொருள். குருவை மனதார நினைத்து நமஸ்காரம் பண்ணுங்கள்.

அதுபோல் செவிகளுக்கு எது அமிர்தம் என்ற கேள்விக்கு, ‘குரு அளிக்கும் நல்ல உபதேசம்தான் அமிர்தம்’ என்கிறார். எனவே குருவின் உபதேசங்களைக் கேட்டு அவற்றைக் கடைப்பிடியுங்கள்.

சரி, குரு என்பவர் யார் ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தத்துவார்த்தைங்களை நன்கு கற்று அறிந்தவர்; அனுபவம் பெற்றவர்; அதன்படி ஒழுகுபவர். அத்துடன் சதாகாலமும் சீடர்களின் நலனுக்காக,மேன்மைக்காக முயன்று கொண்டிருப்பவர்; சீடர்களின் பாவங்களை எல்லாம் நெம்பி எடுத்து நிவர்த்தி செய்பவர்; சீடர்களுக்கு மோக்ஷத்தின் வழியைக் காட்டுபவர்.

ஒருவனின் கர்மபலன் நல்லவிதமாக இருந்தால் மட்டுமே அவன் நல்ல குருவை அடைய முடியும். அவரால் மட்டுமே அவனது கர்மா தீர்க்கப்படும். அவன் மட்டுமே குருவின் சொத்தாகி விடுகிறான். எவன் ஒருவன் வேதம் படித்து அதன்வழி நடந்து, ஒழுக்கமான, குடும்ப வாழ்க்கையைச் சீராக நடத்தி, ஐம்புலன் களையும் சலனமில்லாமல் நிலைநிறுத்தி, அஹிம்சையைக் கடைப்பிடித்து, நம்பிவந்தவர்களுக்கு துரோகம் செய்யாது, தொழில் தர்மம் தவறாமல் நடந்து, சுயநலமின்றி, நேர்மையாய், கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்து, செழுங்கிளை தாங்கி வாழ்கிறானோ அவன் குருவின் அருளைப் பரிபூரணமாகப் பெற்றவன் ஆகிறான்....... ”

மஹாசந்நிதானம் அவர்களின் உபதேச மொழிகளை அவரின் சீடர்கள் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தனர். ஸ்ரீஸ்வாமிகள் மேலும் என்ன உரைத்தார் ?

“தத்துவத்தின் சாரமெல்லாம் வெள்ளமாய் அவ்விடம்
முத்தாக சீடர் மனத்தில் பொழிந்தது
சத்தியத்தின் நாயகன் சொன்ன தனைத்துமே
புத்தியில் நின்றது காண். ”

மஹாசந்நிதானம் அவர்கள் தன் உபதேசத்தைத் தொடர்ந்தார்:

“எவன் ஒருவன் குரு உபதேசித்த மந்திரத்தை சரிவரக் கூறி, அவர்சொல்லியபடி நடக்கிறானோ அவன் நற்கதியை அடைகிறான். தன்னுடைய சுயநலத்தைத் துறந்து அறம், பொருள், இன்பம், மோக்ஷம் என்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் (உறுதிப் பாடுகள்) நாடாது, எந்தவித எதிர்பார்ப்புமின்றி குருவிற்குத்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தொண்டு செய்ய வேண்டும். சிஷ்யனுக்கு எதைத் தர வேண்டுமென்பது குருவிற்குத் தெரியும்.

என்னுடைய சீடர்கள் அதிதி (விருந்தினர்) உபசாரத்தை விடாது பின்பற்றுங்கள். அதிதி, உணவை உண்டு மனப்பூர்வமாக செய்யும் ஆசிர்வாதம், அன்னமளித்தவனை ரக்ஷிக்கும். அன்னம் அளிப்பதைத் தொழிலாகச் செய்பவர்களைத் தவிர, இல்லறத்தவர்கள் அதிதிக்கு உணவளித்து விட்டு அதற்குப் பணம் பெற்றுக் கொள்வது மகாபாவமாகும். தான் கஷ்டப்பட்டாலும், விருந்தினருக்கு திருப்திகரமாக சாப்பாடு போடவேண்டும். அதனால் தேவர்கள் மனம் நிறைவடைந்து அன்னதாதாவை ஆசிர்வதிப்பார்கள்.

எதைச் செய்தாலும் பக்தியுடன் செய்யுங்கள். மடி, ஆசாரம் இருந்தாலும், பக்தி இல்லை என்றால் பூஜை செய்வதால் பயனேதும் இல்லை. இரண்டு நிமிஷம் பூஜை செய்தாலும், இரண்டு புஷ்பங்களை எடுத்துப் போட்டாலும் அந்த உள்ளத்தில் இருக்கும் பக்திதான் முக்கியம். மணிக்கணக்காக தியானம், பூஜை செய்தாலும் பக்தி இல்லையேல் பலனேதும் இல்லை.

ஈஸ்வரனின் ஆக்ஞையைப் பின்பற்றுவது குருவின் கடமை. (குருவே ஈஸ்வர ஸ்வருபம்தானே!) குருவின் கட்டளையை கடைப்பிடிப்பது சீடனின் கடமை. ஈஸ்வரனின் அருள் இருந்தால்தான் மனிதப் பிரயத்தனம் வெற்றி பெறுகிறது. இறைவனின்

கருணையினாலேயே இந்த உலகம் இயங்குகிறது; தர்மம் நிலைத்து நிற்கிறது; அந்த தர்மமே இப்புவியைக் காப்பாற்றுகின்றது. அந்த தர்மத்தின் ஸ்வரூபமே கடவுள்.

எந்த ப்ரஹ்மத்தை – இறைவனை – நாம் போற்றி வணங்குகின்றோமோ அந்த ப்ரஹ்மமே நமக்கு உள்ளுணர்வைத் தருகிறது. அதன்மேல் உள்ள அசையாத பக்தி நம்மை நல்வழிப்படுத்துகிறது.

குழந்தை விஷமம் செய்யும்போது தாய் கண்டிப்பதுபோல, தப்பு செய்யும் பக்தனை இறைவன் தண்டித்து தடுத்தாட்கொள்கிறான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்' என்பதைப் போல் கடவுளை, குருவினைச் சிக்கெனப் பிடியுங்கள். அவ்வாறு பிடிப்பதற்கு முன்பு பல சோதனைகளை பக்தன் எதிர்கொள்ள வேண்டி வரும். அந்த சோதனைகளை வென்று வந்த பிறகுதான் இறைவன் 'சாலப்பரிந்து' அருளினை வழங்குவான்.

துஷ்டனும், அயோக்கியனும், பாவியும் கூட பின்னொரு நாளிலோ, பிறவியிலோ இறைவனை நினைத்தே ஆக வேண்டும். இறைவன் இருப்பது சத்தியம். அவரைக்காணத் தடையாக உள்ள மாயையை வெல்ல குருவருளே துணை.குருவின் திருவருளைப் பெறுவதே ஒருவனின் குறிக்கோளாக இருக்க வேண்டும். ....''

இந்த நேரத்தில் கிருஷ்ணய்யர் ஒரு ஐயத்தை எழுப்பினார்.

அது என்ன ஐயம் ?

மேலும் சில தத்துவக் கருத்துக்களை மஹாசந்நிதானம் அவர்கள் தொடர்ந்து உபதேசிக்கும் பொழுது இந்த ஐயத்திற்கு விடைகிடைத்ததா ?

"தத்துவங்கள் அங்கே மழைத்துளியாய் வந்தன
முத்தான சீடர்கள் முக்குளிக்கும் பேறுபெற்றார்
சொல்லாமல் சொன்னதையும் சொல்லவே வந்ததையும்
கல்லாமல் கற்றனர் நல்லோர்."

'ஒரு மனிதன் ஞானம் அடைவதற்கு குருவின் வழிகாட்டுதல் தேவையா ?குரு இல்லாமல் ஞானத்தை அடைய முடியாதா ? குருவின் உபதேசம் அனைவருக்கும் பொதுவானதா ? இங்கிருப்பவர்கள் தங்களின் திருவாக்கிலிருந்து இதற்கான விளக்கத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகக் கேட்கிறேன். தயை கூர்ந்து சொல்லி அருளுங்கள். 'என்று கிருஷ்ணய்யர் கேட்டதும், மஹாசந்நிதானம் அவர்கள் மீண்டும் அருள்வாக்கைப் பொழியத் தொடங்கினார்:

"அனைவரும் ஞானம் பெற குருவின் வழிகாட்டுதல்,குருவின் துணை தேவை என்பது பொது விதி. ஆயினும் சில விதிவிலக்குகள் முன்னரும் இருந்திருக்கிறது; இனியும் இருக்கும். ஆன்மிக



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சாதனையால் தங்களுக்குத் தாங்களே குருவாய் அமைந்தவர்கள் புராண, இதிகாச காலங்களிலும் உண்டு.

குருவானவர் மக்களுக்கு உபதேசம் மட்டுமே அளிக்க முடியும். ஆன்மிக சாதனையை அவரவர்களேதான் செய்து உயர்வடைய வேண்டும்.விதை ஒன்றே ஆனாலும் நிலத்திற்குத் தகுந்தார் போலவே விளளச்சலும் இருப்பது இயற்கையின் நியதி.நல்ல நீர்பாய்ச்சி,உரம் இட்டு அந்த நிலம் என்னும் நல்லாளை நன்கு பராமரிக்க வேண்டும். ஞான வேட்கை உள்ளவர்களுக்கே குருவின் உபதேசம் கிடைக்கும். குரு உபதேசிக்கும் மந்திரம் பொதுவானாலும் குரு பக்தியும், குரு உபதேசித்த மந்திரத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கையும் ஏற்பட்டால் மட்டுமே மந்திர சித்தி கிடைக்கும். மந்திரத்தை அனைவரும் பெற்றுக் கொண்டாலும் பக்குவப்பட்டோரின் உள்ளங்களில் மட்டுமே அது பதிந்து வெளிப்படுகிறது. உடனடியாக இல்லாவிட்டாலும் சற்றுத் தாமதமாகவேனும் குரு உபதேசித்த வழியில் நடந்தால் ஞானம் சித்திக்கும்.

பல சந்தர்ப்பங்களில் குருவின் உபதேசம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டதாகவே இருக்கும். அது எப்படிப்பட்டது என்பதைக் குருவே தீர்மானிப்பார். ஒருவருக்கான உபதேசம் மற்றவருக்குப் பொருந்த வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் உபதேசத்தில் உயர்ந்தது, தாழ்ந்தது என்ற பேதம் கிடையாது. அவரவருக்கு, அவரவருக்கான குருவின் உபதேசமே சிறந்தது.இதை கேள்வி கேட்காமல் பின்பற்றினால் கண்டிப்பாக ஞானம் சித்திக்கும்.

குரு உபதேசத்தின் சாத்திய, அசாத்தியங்களைப் பற்றி ஆராயாமல் அவர் சொன்னதைப் பின்பற்றுங்கள். இந்த உலகத்தில் ஈடு செய்ய முடியாதது குருவின் உபதேசம்தான். சமுத்திரம் பூராவும் சூழ்ந்த இந்த பூமி பூராவையும் அதனுடைய செல்வங்களுடனும், வளங்களுடனும் குரு தக்ஷிணையாகக் கொடுத்தாலும் அவர் தருகிற உபதேசத்திற்கு அது ஈடாகாது.''

'ஞானத்தை நல்கிய குருவிற்குப் பிரதியாக என்னதான் செய்வது ?' – என்று கேட்டார் கிருஷ்ணய்யர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"கைநிறைய புஷ்பங்களை எடுத்துக்கொள்ளுங்கள். அவர் பாதங்களில் அவற்றைப் பக்தியுடன் சமர்ப்பியுங்கள். சிரசால் நமஸ்கரியுங்கள். கருணை, பக்தி, சத்தியம், பெற்றோரைப் பேணுதல், பெரியவர்களை மதித்தல், சிந்தனை–சொல்–செயல் மூன்றிலும் இறைவனை எப்பொழுதும் நிலைபெறச் செய்தல், தான் என்ற அகங்காரமின்றி எளிமையாய் இருத்தல்...... இவ்வாறு சீடன் இருப்பதே குருவிற்கு நீங்கள் செய்யும் பிரதியாகும். "

இவ்வாறு உயர்ந்த தத்துவங்களை, வேதாந்தசாரங்களைச் சொல்லிக் கொண்டு வந்த ஸ்வாமிகள், மேலும் சில கருத்துக் களைக் கூறி தம் உபதேசத்தைப் பூர்த்தி செய்தார்.

அந்த சில கருத்துக்கள் வருவது உரைக்கும் செய்திகளாக அமைந்தன.

அவை என்ன ?

"சொலல்வல்லன் சொன்ன அருள்மொழி யெல்லாம்
செவிவழியே உள்ளம் புகுந்து மருத
நிலத்தில் விழுந்ததோர் வித்தாய் முளைத்து
நலம்யாவும் இப்புவிக்குச் செய்யும். "

"ஒரு ஜீவனின் அறியாமையை நீக்குபவர் குரு. ஞானத்தைப் புகட்டுபவர் குரு. ஞானம் என்னும் அமுதத்தை ஊட்டி, பிறவி என்னும் நோயை நீக்கும் தெய்வீக மருத்துவர் குரு.

குருவும் மற்ற மனிதர்களைப் போன்றே சாதாரணமானவர் களாகப் பிறக்கின்றார். அவரது அயராத முயற்சிதான் ஞானத்தை அடையச் செய்கிறது. ஞானம் அனைவருக்குள்ளும் இருந்தாலும் அதை அடையும் முயற்சியில் ஈடுபடுபவனுக்கே அது தெளிவாகிறது. சகலர்களுக்கு உலக மாயத்திலிருந்து விடுபடுவது பிரம்மப் பிரயத்தனமாகி விடுகிறது. ஒரு சிந்தனையிலிருந்து மற்றொரு சிந்தனைக்குத் தாவி விடுகின்றனர். இவர்கள் மதிமயக்கத்தில் பிரம்மம் என்ற உண்மையை மறந்து விடுகின்றனர். தெளிந்தவர்களுக்கு சிந்தனை மயக்கம் இல்லை. இந்த 'தெளிவுறு ஞானம்' பெற்றவர்கள் மகான்கள் ஆகின்றனர்.

ஒருவன் எவ்வளவுதான் தியானம், தவம், உபாசனை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



செய்திருந்தாலும், அவனுடைய மனத்தின் தீய எண்ணங்கள் அழிக்கப்பட வேண்டும்.அவ்வாறு அழிக்கப்படாவிட்டால் ப்ரஹ்மத்தைக் காண இயலாது. தீய குணங்கள் நல்ல குணங்களின் பலனை அடையவிடாமல் தடுக்கின்றன.இதில் முதல் கட்டமாக உங்களுக்கு யாரேனும் தீங்கு செய்திருந்தால் அவரை மன்னித்து விடுங்கள். மன்னிப்பதைவிட உயர்ந்தது அவர் செய்த தீங்கை மறந்து விடுவது. அதனினும் உன்னதமானது தீங்கு செய்தவருக்கும் நன்மை செய்வது.

நீங்கள் அனைவரும் பகவன் நாமாவை உச்சரியுங்கள். ஒருவன் சிறப்பாக வளர்க்கப் பட்டிருந்தாலும் தீயவர்களின் சேர்க்கையினால் சில கெட்ட குணங்களை அடைகின்றான். ஈஸ்வரனின் நாமமானது ஒரு மனிதனின் குணத்தை மாற்றுகிறது. ஈஸ்வரனின் பரிபூரண அனுக்ரஹம்பெற்றவர்களுக்குஎதிராக எந்த மந்திரமும் வேலை செய்யாது.

ஜபம் வேறு. தியானம் வேறு.ஜபத்தில் ஆரம்பித்து தியானத்தில் நிலைத்து இருங்கள். மந்திர ஜபம் செய்தால் கர்மாவின் தாக்கத்திலிருந்து விடுதலை பெறலாம். மந்திர ஜபம் மனசை சுத்தம் செய்யும்.

கர்மாக்களை முறையாகச் செய்யுங்கள். ச்ரத்தை இல்லா கர்மா, பலன் தராது. நித்திய கர்மாவை தினமும் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். கர்மாவை எவரும் விடமுடியாது. யுகதர்மத்தை அனுசரித்து எல்லோரும் தர்மசாஸ்திரத்தைப் பின்பற்ற வேண்டும்.

யாருக்கும் துரோகம் செய்யாதீர்கள். எந்தத் தவறுக்கும் பிராயச்சித்தம் உண்டு. ஆனால் நம்பிக்கை துரோகத்திற்கும், மித்ர (நட்பு) துரோகத்திற்கும் பிராயச்சித்தமே கிடையாது. கங்கையில் குளித்தாலும் அந்தப் பாவம் போகாது.

உண்மை மனிதனாக, உத்தம புருஷனாக விளங்க காமக் குரோதாதி முதலான ஆறு துர்க்குணங்களையும் விட்டு விடுங்கள். அவற்றால் ஏற்படும் துக்கத்தை ஒழித்துப் பற்றின்றி பணியாற்றுங்கள். மனதைத் தூய்மையாக வைத்திருங்கள். சத்சங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் சுத்தமான மனதுடன் இருந்தால் ஈசன் தீயவர்களை உங்களிடமிருந்து விலக்கி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வைத்துவிடுவார். நல்லவர்கள் உங்களை நாடி வருவார்கள்.உயர்ந்த லக்ஷியத்தை மனதில் நிலை நிறுத்திக் கொள்ளுங்கள்.......”

இந்த இடத்தில் சற்று நிறுத்தி அங்கிருந்த அனைவரையும் தம் கருணைக் கண்களால் தீர்க்கமாக நோக்கினார்.

“உங்களுக்கு ஒரு செய்தியைச் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது.....” என்று தொடர்ந்தார்.

அது என்ன செய்தி ?

“கர்மத்தின் நின்று ஒழுகிடச் சொன்னவன்
தர்மத்தின் பாதை இதுவெனக் காட்டியே
மற்றொரு கீதை நவின்ற தலைவன்தன்
பொற்றா மரையடிப் பற்று.”

மஹாசந்நிதானம் அவர்கள் என்ன சொல்லப் போகிறார் என்பதை சரிதத்தைத் தொடர்ந்து படித்து வருபவர்கள் எளிதில் யூகித்திருப்பார்கள். எந்த ஒரு அவதாரமும், பிறப்பும், நிகழ்வும் என்றோ ஒரு இறுதியை அடைந்தே ஆக வேண்டும். இது இயற்கையின் மாற்ற முடியாத நியதி. அந்த கட்டத்தை நாம் நெருங்கி விட்டோம் என்பதை மனதின் பெரும் பாரத்துடன் தெரிவிக்க வேண்டியுள்ளது.

ஆயினும் அதற்கு முன்னர், சீடர்களின் பரம்பரையினர் பற்றி சுருக்கமாகப் பார்த்து விடுவோம்.

மஹாசந்நிதானம் அவர்களின் அருளாணைக்கு இணங்கி, பெரியவர்களின் ஆசிகளுடன் 1853–ம் ஆண்டு சிவராமன் செட்டியார்– முத்துகருப்பி ஆச்சி திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

செட்டியார் அவர்களுக்கு அப்பொழுது வயது 28. 1869–வரை பிள்ளைப்பேறு பாக்கியம் கிட்டவில்லை.

இதனால் கவலையடைந்த குடும்பத்தினர்,ஸ்வாமிகளை அணுகித் தங்கள் வம்சம் தழைத்தோங்க சிவராமன் தம்பதியினருக்குப் பிள்ளைப்பேறு வேண்டிப் பணிந்தனர். ஸ்வாமிகளும் ஒரு மந்திரத்தை சிவராமன் செட்டியார் அவர்களின்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வலது செவியில் ஓதி உபதேசித்தார்.

1870–ம் ஆண்டு பிரமோதூத வருஷம், வைகாசி மாதம் 8–ம் தேதி முத்துக் கருப்பி ஆச்சி அவர்கள் ஒரு ஆண் மகவை ஈன்றார்கள். ஸ்வாமிகளின் அனுக்ரஹ விசேஷத்தாலும், உபதேச மகத்துவத்தாலும் குழந்தை பிறந்தபடியால் வம்சப் பெயரான சோமு என்பதுடன் சுந்தரம் என்ற பெயரையும் இணைத்து, குழந்தைக்கு சோமசுந்தரம் என்று பெயரிட்டு மகிழ்ந்தனர். சுந்தர ஸ்வாமிகளின் நினைவு இன்றும் அக்குடும்பப் பெயர்களில் நிலவி வருகின்றது.

சில ஆண்டுகளில் ஒரு பெண்வாரிசும் தோன்றியது. வள்ளியம்மை என்று அக்குழந்தைக்குப் பெயரிட்டனர்.

சோமசுந்தரம் செட்டியார் உரிய வயதை அடைந்ததும், அவருக்கும், சிவகாமி ஆச்சி என்பவருக்கும் 1892–ம் ஆண்டு கர வருஷம், தைமாதம், பெரியவர்கள் பேசிமுடித்த வண்ணம் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த தம்பதியருக்கு 1903–ம் ஆண்டு சோபகிருது வருஷம், ஆனிமாதம், 27–ம் தேதி ஆண்மகவு பிறந்தது. குழந்தைக்கு சிவராமன் என்று ஐயாவின் பெயரைச் சூட்டினர். உரிய காலத்தில் சிவராமன் செட்டியாருக்கு, உமையாள் ஆச்சி என்பவரைப் பெற்றோர்கள் திருமணம் செய்து வைத்தனர். இவர்களுக்கு நான்கு புதல்வர்கள், மூன்று புதல்வியர் என்று சந்ததிகள் பெருகின.

சிவராமன் செட்டியார், சோமசுந்தரம் செட்டியார், சிவராமன் செட்டியார்........என வாழையடி வாழையாக, பரம்பரை அறங்காவலர்கள் என்ற முறையில் ஸ்ரீமஹாசந்நிதானம் அவர்களின் அதிஷ்டானத்தை நிர்வகித்து வருகின்றனர்.

ராமன் செட்டியார் பரம்பரையினரும் பல்கிப்பெருகி பல ஊர்களில் வசித்து வருகின்றனர்.

ஸ்ரீஸ்வாமிகளின் மற்ற உள்ளூர் சீடர்களில் காமாக்ஷி ஜோசியர் பரம்பரையில், அவர் வம்சாவளியினர் நரசிம்ம ஜோசியர், பாலகிருஷ்ண சாஸ்திரிகள், ரகுபதி ஐயர் ஆகியோர் அரிமழத்தில் பல வருடங்கள் இருந்தனர். தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட இவர்கள் ஜோசியக் கலையில் மிகப் புகழ்பெற்று விளங்கினர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta





கோடகநல்லூர் ஸ்ரீ ஆனந்தகௌரி சமேத அபிமுத்தீஸ்வரர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீ கைலாசநாதர் ஸ்ரீ சிவகாமி ஆனந்த கௌரி
வையைச்சேரி

அம்மணி அம்மாள் பாவைவிளக்கு,
திருவிடைமருதூர்.

ஸ்ரீ ஸுந்தர ஸ்வாமிகள் உற்சவவிக்ரஹம்

புதுக்கோட்டை சமஸ்தான தர்பார்

'வைணிக, காயக' 'மகாவித்துவான்' 'கலாசிகாமணி'
V.S.கோமதி சங்கர ஐயர்

வையைச்சேரி வாக்யேயக்காரர் ஆனை, ஐயா
வம்சாவளியைச் சேர்ந்த திரு.S.வெங்கட்ரமணன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட வைத்தியம் கிருஷ்ணய்யரின் பரம்பரையின் சுப்ரமணிய ஐயர், ராமகிருஷ்ண ஐயர்...என்று அந்த வம்சாவளியினர் இன்றும் அரிமழத்தில் வசித்து வருகின்றனர்.

திருநெல்வேலிக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்யும் பொழுது சிலசமயம் சிருங்கேரி மடத்திலும், சிலசமயம் குறுக்குத்துறை கோயிலிலும் பெரும்பாலும் பஜனை மடத்திலும் தங்குவது வழக்கம். அந்த பஜனைமடம் ஸ்வாமிகளின் பிரதம சீடர்களில் ஒருவரான சிதம்பரம்பிள்ளை அவர்களுக்குச் சொந்தமானது. திருநெல்வேலி டவுன் தெற்கு ரத வீதியிலுள்ள இவருடைய பங்களாதான் பஜனை மடமாக இருந்திருக்கிறது. ஸ்வாமிகள் ஜீவசமாதி ஆனதும் இந்த பஜனை மடம் ஸ்ரீசுந்தர நடராஜ பஜனைமடம் என்று அழைக்கப் பட்டது. இந்த மடத்தில்தான் ஸ்ரீசுந்தரஸ்வாமிகள் கொண்டுவந்த தஞ்சாவூர் ஓவியத்தில் ஆன பெரிய நடராஜர்படம் இருக்கிறது. (இந்தப்படத்தை தஞ்சாவூர் ஓவியர் ஒருவரிடம் அரிமழம் சிவராமன் செட்டியார் அவர்கள் வாங்கி ஸ்வாமிகளுக்கு சமர்ப்பித்தது.)

இப்பொழுதும் இக்கட்டிடம் இருக்கிறது. ஆனால் பஜனைகள் ஏதும் நடைபெறவில்லை.

இனி மீண்டும் அரிமழத்தில் சீடர்கள் நடுவில் அருளுரை வழங்கிய மஹாசந்நிதானம் அவர்களிடம் வருவோம். அவர் வழங்கிய அருளுரைகளில் இது இரண்டு விதங்களில் சிறப்பு வாய்ந்தவை என்பது முன்னதாக கூறப்பட்டிருந்தது.

அப்படி என்ன சிறப்புகள்?

"ஆழ்கடல் முத்தென தர்மத்தின் தத்துவத்தை
மூழ்கியே தானெடுத்து நானிலம் உய்யவே
வாரியே நல்கிய வள்ளல்நம் கருணையின்
வாரிதி பாதம் பணிவோம்."

ஸ்வாமிகள் அத்யந்த சீடர்களுக்கு நிகழ்த்திய உரைகளுள் இதுவே மிக நீண்டது. அத்துடன் மஹாசந்நிதானம் அவர்களின் நேரிடையான, இறுதியான மந்திர உபதேசமும் இதுவே.

மஹாசந்நிதானம் அவர்கள் அங்கிருந்த சீடர்கள்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நால்வரையும் தனியே அழைத்தார்.

"அழைப்பு வந்துவிட்டது. இந்த சரீரத்தை உகுக்கும் நேரம் வந்து விட்டது" என்று எந்தவிதச் சலனமும் இல்லாமல் கூறினார்.

கேட்டவர்கள் ஒரு கணம் விழித்தார்கள். ஸ்வாமிகள் என்ன சொல்லுகிறார் என்பதை அறிவிற் சிறந்த நால்வராலும் அறிந்து கொள்ளமுடிந்தது. துக்கம் தொண்டையை அடைத்தது. ஸ்வாமிகள் சொல்லுவது தாம் நினைப்பதாக இருக்காது என்று தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ள விரும்பினர். அதுவாக இருக்கக் கூடாது என்று ஆசைப்பட்டனர். நால்வரும் விக்கித்து பிரமை பிடித்து நின்றனர். அவர்களுக்கு பந்து போல் ஒன்று உருண்டு வந்து நெஞ்சை அடைத்தது. கண்கள் இருண்டன. தலைக்குள் இருள் கவ்வியது. இருந்த இடத்திலேயே தட்டாமலை சுற்றுவது போலிருந்தது. பூமி பிளந்து பாதாளத்திற்குள் நழுவி, நழுவி மிக ஆழத்திற்குச் செல்வது போல் உணர்ந்தனர். புதைசேற்றில் மாட்டிக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே மூழ்கி மூச்சுத் திணறுவதுபோல் செயலற்று இருந்தனர். மூளை இருண்டு செயலற்றுப் போனதால் பிரமை பிடித்து அசையாது நின்றனர்.

அந்த ஐப்பசி மாசக் குளிரிலும் நால்வருக்கும் உடல் வியர்த்து வியர்வை வழிந்தது.

சில நிமிஷங்கள் இந்த விரும்பத்தகாத பயங்கர மௌனம் நிலவியது. எப்படியும் நிதர்சனத்திற்கு வந்துதானே ஆக வேண்டும்! சற்றே நிதானத்தை அடைந்ததும் சிவராமன் செட்டியார் அவர்கள்

'ஸ்வாமிகள் என்ன சொல்றீங்க ?புரியலயே' என்று வாய் குழறக் கேட்டார்.

"பரமேஸ்வரனிடமிருந்து அழைப்பு வந்து விட்டது. நாள் குறித்தாகி விட்டது."

'ஸ்வாமிகளே நீங்கள் எங்கள் ஊருக்கு வருகிறீர்கள் என்று எவ்வளவு சந்தோஷமாய் இருந்தோம். இப்படி ஒரு சுமக்க முடியாத துக்கத்தைக் கொடுத்து விட்டீர்களே' – என்றார் ஜோசியர் காமாக்ஷி சாஸ்திரி.

"எது துக்கமில்லை ? எல்லாம் துக்கம்தான். துக்கத்துக்கு நடுவில இருக்கற சந்தோஷத்தைப் பார்க்கக் கற்றுக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கொள்ளுங்கள். பிறப்பு துக்கம், வாழ்கின்ற போது துக்கம்,இறப்பு துக்கம்.....இப்படி துக்கத்திற்குப் பட்டியல் போட்டால் நீண்டு கொண்டே போகும். மனதை எப்பொழுதும் சுத்தமாக, சந்துஷ்டியாக வைத்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றையும் மறந்து சிவநாமாவை ஜபியுங்கள். எல்லா துக்கமும் ஓடிவிடும். "

'ஸ்வாமிகள் நீங்கள் சொல்லிவிட்டீர்கள். ஆனால் எங்களால் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லையே.நீங்கள் இல்லாத நிலையை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லையே. நாங்கள் வலுவிழந்த சாதாரண மனிதர்கள்தானே" என்று புலம்பினார் கிருஷ்ணய்யர்.

இதற்கு ஸ்வாமிகள் அளித்த பதில் வாக்கியங்கள் பொருள்பொதிந்தவை; எக்காலத்திற்கும், எவருக்கும் பொருந்தி வரக்கூடியவை.

அப்படி என்ன உரைத்தார்?

"காலையும் மாலையும் தோன்றி மறைந்திடும்
ஆலைவாய்க் கன்னல் உயிர்கள் பலகோடி
உய்ந்திட வந்தே உபதேசம் சாற்றியஎம்
உத்தமன் நாமம் ஜபிப்போம். "

"இவ்வளவு உபதேசித்தும் நீங்கள் மாயையிலிருந்து விடுபடவில்லை. நீங்கள் துக்கம் என்று நினைப்பது என்ன என்பதை நான் அறிவேன். ஆனால் உண்மை எதுவென்று தெரியாமல் உங்கள் மனது தத்தளிக்கின்றது. அது, மாயையை உண்மை என்று நினைக்கிறது. நான் உபதேசித்ததைக் கேட்டால் மட்டும் போதாது.அதை நடைமுறையில் பின்பற்றுங்கள். உங்கள் துன்பம் தூசாகப் பறந்து விடும். மனதைத் தெளிவாக வைத்துக் கொள்ளுங்கள். மனதில் தெளிவு ஏற்படாதவரை ஜீவாத்மா பரமாத்மாவை உணர்வதில்லை. மனது விருப்பு, வெறுப்பு; வேண்டுதல், வேண்டாமை; இன்பம், துன்பம் என்ற சுழல்களில் சிக்கித் தவிக்கிறது....."

'அப்படியானால், இந்த சுழல்களிலிருந்து வெளிவர எங்களுக்கு சந்நியாச யோகத்தை அருளிவிடுங்கள்' என்றார்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ராமன் செட்டியார்.

நால்வரையும் தீர்க்கமாகப் பார்த்தார் ஸ்ரீஸ்வாமிகள்.

"சந்நியாசம் என்பது கடமையிலிருந்து தப்புவதற்காக ஏற்பட்டதல்ல. அப்படிச் செய்தாலும் உங்கள் கர்மா உங்களைத் தொடர்ந்து வந்துகொண்டேதான் இருக்கும். சந்நியாசிகளுக்கும் கடமைகள் உண்டு. அவை கிருஹஸ்தர்களின் கடமைகளைவிட மிகக் கடுமையானவை.உங்களாலும், உங்கள் சந்ததியினராலும் நிறைவேற்றப்பட வேண்டிய கர்மாக்கள் பல இருக்கின்றன. கடமைகள் முடிக்கப்படாவிட்டால் அவை முடிக்கப்படும்வரை ஜன்மாக்கள் தொடரும். ஜன்மாக்கள் தொடரும்வரை ஈஸ்வரனைக் காண முடியாது. சந்நியாசம் வாங்கிக் கொள்வதால் உங்கள் கர்மாக்கள் தீர்ந்து விட்டதாய் ஆகி விடாது.அவ்வாறு நினைப்பதும் பெரும் பாவம் ஆகும்.

இல்லறத்தில் இருந்து கொண்டே அவரவர் தர்மங்களைச் செய்து வாருங்கள். உங்கள் கடமைகளைச் செய்து வருவதோடு குருவையும், ஈஸ்வரனையும் நினையுங்கள். த்யானம் செய்கிறேன் என்று கர்மாவைவிட்டு விடாதீர்கள். கர்மா நீங்காதவரை வெறும் தியானத்தால் பயன் இல்லை. இல்லற தர்மத்தைச் சரிவர செய்தே நீங்கள் பிறப்பில்லா நிலையை அடைவீர்கள்."

சற்று இடைவெளிவிட்டு மீண்டும் தொடர்ந்தார்.

"நால்வரும் நிதர்சனத்திற்கு வாருங்கள். என்று, எப்பொழுது, எந்த இடத்தில் ஜீவசமாதி ஆகப்போகிறேன் என்று சில நாட்களில் தெரிவிக்கிறேன்.

ஜீவசமாதி அடைந்தவுடன் அதன்மேல் பீடம் அமையுங்கள். அந்த பீடத்தில் நர்மதா பாணலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யுங்கள். இது மிக விசேஷமான, அபூர்வமான அர்த்தநாரீஸ்வர தத்துவத்தை உள்ளடக்கிய லிங்கம். அதற்கு சென்னையில் கூர்ஜரர்கள் அளித்த கௌரி சங்கர மாலையை அணிவியுங்கள். பாணலிங்கம் திருநெல்வேலி பஜனை மடத்தில் இருக்கிறது. அதை நாராயண சிவனை எடுத்து வரச் சொல்லுங்கள்.அத்துடன் யாம் பூஜித்த ஸ்படிக லிங்கங்கள், யந்திரங்கள், சாளிக்ராமம் ஆகியன நீலகண்ட தீக்ஷிதரிடம் உள்ளன. இவை அனைத்தும் சிவராமன் செட்டியார்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

திருநெல்வேலி, பத்தமடை, அடைச்சாணி, கோடகநல்லூர், வீரவநல்லூர், வையச்சேரி, உமையாள்புரம், கோவிலூர், தேவகோட்டை, கீழச்சிவல்பட்டி, திருவாடுதுறை, தஞ்சாவூர், புதுக்கோட்டை...... ஆகிய ஊர்களுக்குத் தகவல் சொல்லி அனுப்புங்கள் " என்று கட்டளை இட்டார்.

குடிலுக்குள் நுழைந்தார். படலை சாற்றிக் கொண்டு நிஷ்டையில் அமர்ந்தார். சீடர்கள் வெளியே காத்திருந்தனர். பல மணித்துளிகள் சென்றன. ஸ்வாமிகள் படலைத் திறந்தார். சிவராமன் செட்டியார் அவர்களையும், கிருஷ்ண ஐயரையும் உள்ளே வர உத்தரவாகியது.

அவர்களிடம் சில முக்கிய செய்திகளைத் தெரிவித்தார்.

அவை என்ன செய்திகள்?

"மோனத்தில் என்றும் நிலைத்து இருந்தஓர்
ஞானஒளி பூமியின் ஆழத்தில் தன்னைப்
புதைத்துக் கொண்டு உலகமுய்ய ஆலம்
விதையாய் முளைத்திடும் காண் "

"கோயில்கள் எல்லா ஊர்களிலும் இருக்கலாம்; இருக்க வேண்டும். ஆனால் ஜீவசமாதிகள் அப்படி அல்ல. மிகவும் புண்ணியம் செய்திருந்தாலன்றி ஜீவசமாதி ஒரு இடத்தில் அமையாது. இந்த சரீரத்துடன் எம்முடைய நினைவு. எண்ணம் ஆகியவையும் அரிமழத்தில் புதைக்கப்படும்.

ஜீவசமாதியின் பெருமைகள் வெளிப்பட ஆண்டுகள் பல ஆகலாம். யாம் ஒரு மடத்தையோ, சங்கத்தையோ நிறுவவில்லை. ஆகவே எமக்கு வாரிசு என்று எவரையும் நியமிக்கும் தேவையும் ஏற்படவில்லை. நீங்கள் அனைவரும் எமக்கு ஒன்றே.

மற்ற இருவரும் உணர்ச்சியின் மிகுதியில் இருக்கின்றனர். நீங்கள் இருவரும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி நிதானத்திற்கு வந்து விட்டீர்கள். ஆகவே உங்களை அழைத்தேன். ராமன் செட்டியாரையும், காமாக்ஷி ஜோஸியரையும் சமாதானப் படுத்துங்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஜீவசமாதி அடைந்ததும், அதிஷ்டானம் இங்கே எழுப்பப்பட வேண்டும்......"

ஸ்வாமிகள் உரையின் நடுவே சிறிது இடைவெளிவிட்ட நேரத்தில் சிவராமன் செட்டியார் கேட்டார்: 'அதிஷ்டானம் அமைப்பது எப்படி? அதைப்பற்றிய விதிமுறைகள் எதுவும் எங்களுக்குத் தெரியாதே!'

ஸ்வாமிகள் அவர்கள் அதிஷ்டானம் எப்படி எழுப்ப வேண்டும் என்பதைக் குறிப்பிட்டார். பின்னர் அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

ஸ்வாமிகள் ஜீவசமாதி ஆகப்போகிறார் என்ற செய்தி அரிமழம் மற்றும் சுற்றியுள்ள ஊர்கள் அனைத்திலும் பரவிவிட்டது. ஸ்வாமிகள் இருக்கும் இடம்தேடி படைபடையாய் மக்கள் வந்தவண்ணம் இருந்தனர். நடந்தும், மாட்டு வண்டி கட்டிக் கொண்டும் வந்தனர். நடந்து வந்தவர்கள் குழந்தைகளைத் தோளில் போட்டுக் கொண்டு வந்தனர்.ஸ்வாமிகளைக் கடைசி முறையாகத் தரிசித்துவிட வேண்டும் என்ற ஆர்வம் ஒவ்வொருவர் முகத்திலும், ஸ்வாமிகளைப் பிரியப் போகிறோமே என்ற துக்கம் உள்ளத்திலும் இருந்தது.

நாட்கள் செல்லச்செல்ல ஸ்வாமிகளை தரிசிக்கும் கூட்டம் அதிகமாகிக் கொண்டே இருந்தது. இதற்கிடையில் திருநெல்வேலியிலிருந்து சேரை சௌந்தரபாண்டியன் பிள்ளை, பிச்சு ஸ்வாமிகள், நாராயணசிவம், ரங்கநாத சிவன், சூரியநாராயண சிவன், ராமச்சந்திர மேத்தா, பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, கடையம் சேஷாசல தீக்ஷிதர், கோடக நல்லூர் ராமஸ்வாமிசிவன், நீலகண்ட தீக்ஷிதர், பத்தமடை கிருஷ்ண ஐயர்,சங்கரநாராயண ஐயர், ஐயாசாமிப் பிள்ளை, சிதம்பரம் பிள்ளை, கிருஷ்ணஸ்வாமி தருவடியார், நெல்லை சதாசிவத் தருவடியார், சுப்ரமணிய பிள்ளை தளவாய் ராமசாமி, ஆவுடையப்ப பிள்ளை, வக்கீல் ஏ. கிருஷ்ணஸ்வாமி ஐயர், சுப்புராய சிவன், நீலகண்ட சிவன்; வையச்சேரியிலிருந்து ராமஸ்வாமி சிவன், வைத்தியநாத சிவன்,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


புதுக்கோட்டையில் இருந்து ஒட்டுத் திண்ணைப் பரதேசியார், சுப்பராயசிவன், ராமசிவன், ராமபாகவதர், ராமஸ்வாமி சாஸ்திரி, அப்பு நாயக்கர், ராமசாஸ்திரி, வீணை சுப்புக்குட்டி ஐயர், வீணை சுப்பையர், சேஷப்பா, உமையாள்புரத்தில் இருந்து அன்னம்மாள், அபயாம்பிகா கடாக்ஷம்; திருநெய்த்தானத்தில் இருந்து பஞ்சநதேஸ்வர சாஸ்திரி; திருப்பத்தூரில் இருந்து மன்யம் வெங்கட்ராம ஐயர்; சென்னையிலிருந்து ராஜாராம் தருவாடி, அம்பாசங்கர் தவே, ராஜீபாய் அம்மாள் என்று அடியார்களும், சீடர்களும், அன்பர்களும் அரிமழத்தில் குவிந்து விட்டனர்.

திவான் சேஷய்யா சாஸ்திரியும் வருகை தரப்போகிறார் என்ற செய்தியும் பரவியது.

இத்தனை அன்பர்கள் சேர்ந்திருந்தும் ஒரு கலகலப்போ, சந்தோஷமோ,குதூகலமோ எவரிடத்தும் தென்படவில்லை. அனைவரும் கவலை தோய்ந்த முகத்துடனேயே காணப்பட்டனர்.

எந்த நாளை இவர்கள் சந்திக்க விருப்பப்படவில்லையோ, அந்த நாளைப் பற்றிய அறிவிப்பும் வந்தது.

அந்த நாள் எந்த நாள் ?

"மக்களெல்லாம் உய்ந்திட நல்வழி காட்டியே
பக்தர்கள் கொண்டாட பார்முழுதும் பாதங்கள்
தோய நடந்தானை எம்ஐயனை நம்வாய்
ஓயவே ஏத்துவோம் என்றும்."

மஹாசந்நிதானம் அவர்கள் ஜீவசமாதி அடையும் நாளையும், நேரத்தையும் பார்ப்பதற்கு முன்னர் ஜீவசமாதி வகைகளைப்பற்றி சிறிது காண்போம்.

பரீக்ஷித்து மஹாராஜா சுகப்பிரம்ம மஹரிஷியிடம் கேட்கிறார்: "ஜீவசமாதி என்றால் என்ன ? அவை எத்தனை வகையானது ?"

சுகர் : "ஜீவசமாதி என்பது சிவனிடமிருந்து வந்த ஜீவன் ஆவியாகி மீண்டும் சிவனை அடைவதாகும். ஞானிகள், யோகிகள், சித்தர்கள், மகான்கள், சாதுக்கள் போன்றவர்கள் சித்தம் எனும்


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அறிவைக் கொண்டு மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பஞ்சேந்திரியங்களையும் வெல்கின்றார்கள். இதற்காக வாழ்வில் கடுமையான ஒழுக்கத்தையும், உயர்ந்த தவநெறிகளையும் மேற்கொள்கின்றனர்.

உடலையும், உள்ளத்தையும் புனிதமாக–மாசின்றி வைத்திருக்கின்றனர்.

இறைவனைக் காண முயன்று கொண்டிருப்பவர்கள் பக்தர்கள்; கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்.

இறைவனைப் பற்றிய சிந்தனையுடன் சின்முத்திரையுடன் யோகிகள் அமரும் ஆஸ்ரமம் 'யோகாஸ்ரமம். 'இந்த சின்முத்திரை, பாவங்களை அகற்றக் கூடியது : துன்பங்களை களையக் கூடியது.

ஜீவசமாதி என்பது முடிவுபெறும் நிலை அல்ல. பகவானால் நியமிக்கப்பட்ட காரியங்களைக் குறிப்பிட்ட காலத்தில் நிகழ்த்திக் காட்டிய பிறகு அவனுடன் கலப்பதே முக்தியாகும்.இறைவனே அவதாரம் எடுத்து வந்தாலும் அவனுடைய ஸ்தூல சரீரமே இங்கிருந்து செயலாற்றிப் பின்பு சூக்ஷமத்துடன் கலந்துவிடும். இவர்களின் உடல், மன செயல்பாடுகள் நின்று போயிருக்கும். ஆனால் உயிர் நிலைத்து இருக்கும். ஆகவே ஜீவசமாதியில் அமர்ந்தவர்களை இறந்தவர்களாகக் கருதக்கூடாது. அவர்கள் என்றும் ஜீவியவந்தர்களே.

நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களால் ஜீவசமாதியின் மகிமையை எடுத்துரைக்க இயலாது; புரிந்து கொள்ளவும் முடியாது. அத்தகைய புனிதம் நிறைந்தது ஜீவசமாதி. அதைத் தரிசிப்பது ஒரு எல்லையற்ற ,உணர்ச்சிகள் பொங்கும் அனுபவம்.புண்ணியம் செய்தவர்களே மகானின் ஜீவசமாதியை நாடி வரமுடியும்.

ஜீவசமாதி அடைந்த தெளிந்த ஞானம் கொண்ட மகான்களின் உடலைக் குழி தோண்டி,நிலவறையில் இருத்திப் புதைக்க வேண்டும். அதுவே நியதியும், புண்ணியமும் ஆகும். இவர்களை எரியூட்டக் கூடாது. ஆனால் மனிதர்களை புதைக்கக் கூடாது. எரியூட்ட வேண்டும். ஞானிகள், மகான்களை எரிப்பதும், ஏனைய மனிதர்களுக்குச் சமாதி எழுப்புவதும் நாட்டிற்குப் பல கேடுகளை விளைவிக்கும். அந்தத் தவறைச் செய்யும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



குடும்பத்தினரும் பிற்காலத்தில் சொல்லவொண்ணா துயர்களை அனுபவிப்பார்கள்.

மஹான்கள் ஜீவசமாதி அடைவது ஐந்து வகையானது.

1. பிருத்வியில் (மண்ணில், பூமியில்) சமாதி அடைதல்.
2. அப்புவில் (நீரில்) சமாதி அடைதல்.
3. தேஜஸில் (அக்னியில்) சமாதி அடைதல்.
4. ஆகாசத்தில் (வெளியில்) சமாதி அடைதல்.
5. வாயுவில் (காற்றில்) சமாதி அடைதல்.

மனை, சாலையின் பக்கம், குளக்கரை, ஆற்றின் படுகை, கடல் அருகில், மணம் கமழும் மலர்சோலை,

அடர்ந்த காடு, மலைச்சாரல், நகரின் புனிதமான இடம் ஆகியவை ஜீவசமாதி அமைக்க ஏற்ற இடங்கள்."

பரீக்ஷித்து : 'பஞ்ச பூதங்களில் சமாதி அடைவதைப்பற்றிக் கூறினீர்கள். அவற்றைப் பற்றி சிறிது விரிவாகக் கூற வேண்டுகிறேன்.'

பரிக்ஷீத்து மன்னன் அறிந்து கொள்ள விரும்பிய பஞ்சபூதங்களில் சமாதி என்பது என்ன ?

நாமும்—

"அடிமுடி காணாத ஜோதியின் ரூபம்
சடைமுடி முண்டம் தரித்த மகான்கள்
இறப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை
மறந்திலோம் என்றும் அவரை."

சுகர் மேலும் தொடர்ந்தார்:

"ஜீவசமாதியைத் தரிசனம் செய்தால் மனம் நிம்மதி அடையும்; மனம் அமைதியாகும்; நோய்கள் தீரும்; வேண்டுதல்கள் நிறைவேறும்.

அங்கு நிலவும் நுண்ணிய அதிர்வலைகள் வலிமை மிக்கவை. அவற்றின் ஆற்றல் அளவிடற்கரியது. ஏனைய சந்நிதானங்களில் ஏற்படும் நல்ல திருப்பங்களைவிட ஜீவசமாதியில் நிலவும் அதிர்வலைகளால் ஏற்படும் திருப்பங்கள் விரைவில் நல்லன யாவற்றையும் தரும். இத்தகைய நுண் அதிர்வலைகளை அங்கேயே



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உணர முடியும். ஜீவசமாதிகள் கோயில்களுக்கு இணையான–அவற்றிற்கும் மேலான தெய்வீகத் தன்மை கொண்டவை. ஆகவே ஜீவசமாதியில் வைக்கப்படும் வேண்டுதல் உயர்நிலை உடையதாக இருக்க வேண்டும். 'ஞான வைராக்கியம்' மற்றும் 'வீடுபேற்றை' வேண்டின் நிச்சயம் சித்திக்கும்.

சிறுசிறு பிரச்சனைகளையும் அதற்கான தீர்வுகள் வேண்டி செய்யப்படும் பிரார்த்தனைகளையும் தவிர்த்தல் நலம்.

நதி கடலில் கலப்பதுபோல் யோகிகளின் ஜீவபோதமானது பரபோதத்துடன் இணைந்து பரபோதமாகி விடுகின்றது. அந்தி வேளை வரும்பொழுது தன்கூட்டைத்தேடி வரும் பறவையைப் போல ஞானியின் மனம் இருதயத்தில் ஒடுங்கி விடுகிறது. அப்போது "ஓம்" என்ற பிரணவ ஒலி மட்டும் பரவெளி எங்கும் நிறைந்திருக்கும்.

அந்த ஆதிநாதத்தைக் கேட்படியே ஞானியின் பிராணன் ஒடுங்கி "ஓம்" என்னும் ஓசையின் வடிவினனாகிய பரமாத்ம சொரூபத்துடன் இணைந்து எங்கும் வியாபித்து நிற்கும். இதுவே மரணமில்லாப் பெருவாழ்வு. இது மரணமல்ல. இது ஜீவ–பரமாத்ம ஐக்கியம். சரீரம் வீழ்ந்து போகாமல் அதன் துணைகொண்டே இறைவனுடன் கலக்கும் நிலை. அந்த நிலையில் அவர்கள் அங்கிங்கு எனாதபடி எங்கும் வியாபித்து இருந்து தம்மை நம்பிக்கையுடன் நாடிவரும் அன்பர்களுக்கு அருள்மழை பொழிந்து வருகின்றார்கள்.

ஜீவசமாதி என்பது ஞானிகள் தம் உடல்வாழ்க்கையைத் தாமே விரும்பி முடித்துக் கொள்ளும் தருணமாகும். இது தற்கொலை யுமல்ல; மரணமுமல்ல. தன்னைப் படைத்த ஆதியோடு தன்னை இணைத்துக் கொள்ளும் செயலாகும். முடிவில் "ஓம்" என்னும் பிரணவத்தின் வடிவினனான பரமாத்மாவின் திவ்ய சொருபம் என்ற நிலையை அடைகின்றனர்.

மனம், வாக்கு கடந்த தெய்வீக உள்அனுபவமே ஜீவசமாதி. இத்தகைய பூரணத்தை எட்டிய நிலையே ஜீவசமாதி தத்துவமாகும். ஜீவசமாதி என்பது உயிர் என்ற ஆத்மாவானது, ஒரு உடலைத் தேர்ந்தெடுத்து அதில் சஞ்சரிக்கும் பொழுது, எவ்வளவு



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தூய்மையானதாக இருந்ததோ, அதே தூய்மையான நிலையுடன் பரமாத்மாவிடம் ஒருங்கிணைவது என்று பொருள். இத்தகைய நல்ல சிந்தனைகள் குடிகொண்டிருப்பதால்தான் ஜீவசமாதிகளில் நேர்நிலை அதிர்வுகள் நிரம்பி இருக்கும்.

இவ்வாறு பொறிவாயில்களை அடக்கி, வெளிக் கரணிகளால் பாதிக்கப்படாமல் ஜீவசமாதி அடைபவர்களைப்பற்றி 'பகவத் கீதை 'யும் விளக்கி உள்ளது.

இனி பஞ்ச பூதங்களில் சமாதி அடைவது பற்றிக் கூறுகிறேன்.கேள்!"

சுகர் பரீக்ஷித்திடம் கூறியது என்ன ?

"உத்தம ஞானிகள் ஓரைந்தும் காத்தநல்
சித்தர்கள் தன்னை அறிந்த மகான்கள்
உலகினைக் காத்திட வந்தஆன் றோரைத்
தலையாலே ஏத்திப் பணிவோம். "

பரீக்ஷித்து:'என்னதான் மகான்கள் தோன்றினாலும் பகவான் தோன்றியது மாதிரி இருக்காதே. அவ்வாறாயின் மகான்கள் மூலம் எவ்வாறு தர்மம் நிலைநாட்டப்படும் ? கலியுகத்தின் கடைசியில் பகவான் 'கல்கி' அவதாரம் எடுப்பார் என்று சொல்லப்பட்டுள்ளதே. அதற்கு முன்பாகவே தர்மம் நலிந்து போனால் யார் ரக்ஷிப்பார்கள் ?

சுகர் : "தர்மம் எக்காலத்திலும் நலிவதில்லை. தர்மம் தனக்கு அழிவு வருவதுபோல் தோன்றினால் தன் சக்தியைக் காட்டித் தானே நிலை நிறுத்திக் கொள்ளும்.எந்த யுகத்திலும் தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்குவது மாதிரி தோன்றும்.ஆனால் அது பொய்த் தோற்றமே.

பகவானால் பத்து அவதாரங்கள் என்று முன்னமேயே தீர்மானிக்கப்பட்டு விட்டது.அதில் கலியுகத்தில் ஒரேஒரு அவதாரம் உண்டு. அது 'கல்கி' அவதாரம் ஆகும். கலியுகத்தில் 'பகவான் உண்டா ? அவரைக் கண்ணில் காட்ட முடியுமா ? இல்லாத கடவுளுக்கு ஏன் இத்தனை ஆலயங்கள் ?' என்று நிரீஸ்வரவாதிகள் நிந்தனை செய்வார்கள். அவர்களின் கூட்டம் பெருகுவதுபோல் தோன்றும். ஆலயங்களை இடிப்பதும், ஆண்டவனை நிந்தனை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



செய்வதும், கோயில் சொத்துக்களை அபகரிப்பதும் அந்த நிரீஸ்வரவாதிகளின் கொள்கையாய் இருக்கும்.

கலிமுற்றி, தான் அவதாரம் செய்யும் காலத்திற்கு முன்னரே பகவான் தன்னுடைய ஸ்வரூபமான மகான்களைத் தோற்றுவிப்பார். கலியுகத்தில் தோன்றும் மகான்களின் எண்ணிக்கை மற்ற யுகங்களில் இருந்ததைவிட அபரிமிதமாக இருக்கும். இந்த மகான்கள் தங்கள் காலத்தே நிலவும் அதர்ம மார்க்கங்களை அழித்து தர்மங்களை நிலைநாட்டுவார்கள்.

நீ திரேதாயுக காலத்தை மனதில் வைத்துப் பேசுகிறாய். கலியுகத்தில் பகவானே நேரில் வந்து தரிசனம் கொடுத்தால் கூட 'நீ பகவான்தானா?' என்று மூடர்கள் கேட்பார்கள்.

("அவஜானந்தி மாம் மூடா:மானுஷ்யீம் தனுமாச்ரிதா:!
ஈசோ நாஸ்தி அப்ரத்யக்ஷத்வாத்!!"—பகவத் கீதை)

என்ன நடக்கும் என்பதை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தீர்மானமாகக் கூறிவிட்டது நமது கிரந்தங்களும், உபதேசங்களும்.

பகவானைத் தெரிந்து, பகவானை நம்பி,பகவானைத் திடசித்தத்துடன் பக்திசெய்தால் போதும். பகவான் கலியுகத்தில் ஒரு அவதாரம் போதும் என்று சொல்லிவிட்டார். ஆனால் அவரே மகான்கள் மூலம் தோன்றுவார். இவை எல்லாம் பாகவதத்தில் உள்ளன."

பரீக்ஷித்து: 'மகான்கள் என்பவர் யார்? மகான்கள் தோன்றுவது சுலபமா?

சுகர் : "மகான்கள் தோன்றுவது சுலபம் என்று எண்ணாதே. அதேபோல் பகவான் வேறு, மகான்கள் வேறு என்று வித்தியாசமாக நினைக்காதே. மஹான்கள் அனைவரும் ஈஸ்வரனே! இவர்கள் மூலம் தம் லீலைகளைச் செய்வார் பகவான்.

ஒருதாய் அருந்தவம் இயற்றி பகவானை மனம் உருகிப் பிரார்த்தித்தால் மஹான் பிறப்பார். அத்தகைய தாயைத் தோற்றுவிப்பதும் இறைவனே! (பிரும்மமே). இவர்கள் மூலம் தர்மம் ரக்ஷிக்கப்படும்."

பரீக்ஷித்து : 'மஹான்களால் அனைவரையும் தர்ம வழியில்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருப்ப முடியுமா?'

சுகர் : "ராமபிரானாலும், கண்ண பெருமானாலுமே அனைவரையும் திருத்த முடியவில்லை; திருப்ப முடியவில்லை. கலியுகத்தில் மக்களைத் திருத்துவது இன்னும் கடினமாகவே இருக்கும்.அந்த யுகத்தில் உண்மைக்குத் தரும் மதிப்பைவிட பொய்நிறைந்த வீண் பகட்டிற்குத் தரும் மதிப்பு அதிகமாய் இருக்கும். பத்து பேர் திரும்பினால் போதும்; திருந்தினால் போதும். அந்த பத்துப் பேர்கள் மஹானைப் புரிந்துகொண்டு பின்பற்றினால் போதும். அவர்களுக்கு நிகழும் அற்புதங்களைப் பார்த்து, நாமும் பகவானைப் பிரார்த்தித்தால் அவர்கள்போல் ஆகலாம் என்று தோன்றும். மனதின் தத்துவமே மற்றவன் செய்யும் அரிய காரியத்தைத் தானும் செய்ய வேண்டுமென்பதே. இவர்களும் மஹானைப் பின்பற்றத் தொடங்கினால் 'அஷ்டலக்ஷிமிகளும்' அருள் புரிவார்கள். இவர்களுக்குள் ஸாந்நித்யம் ஏற்படும். ஆகையால் தர்மம் தழைக்கும். தன் பக்தர்களுக்குச் சோதனைகள் ஏற்படும்பொழுது மஹான்கள் அனுக்ரஹிக்க ஓடிவருவார்கள்"

(இத்தகைய மஹான் நம் ஸுந்தர ஸ்வாமிகள் என்றுசொல்லித் தெரிய வேண்டியதில்லை.)

பரீக்ஷித்து : 'மஹான்கள் உண்டாவதற்கும், லீலைகள் செய்வதற்கும், பிரும்மத்துடன் கலப்பதற்குமான நியதிகள் யாவை ?பகவானின் அவதாரமே மஹான்கள் என்றால் ஒரே சமயத்தில் பல மஹான்கள் தோன்றுவது எங்ஙனம் ?'

இதற்கு சுகப்ரும்மரிஷி விரிவான விளக்கத்தை அருளுகிறார்.

அத்தகைய விளக்கம் என்ன ?

"மகான்கள் மகிமை அடங்குமோ சொல்லில் ?
மகாத்மியம் கூறவொரு எல்லையும் உண்டாமோ ?
பொங்கிவரும் கங்கையின் சீற்றம் சிறியதோர்
சங்கில் அடங்குமோ சொல் !"

'மஹான்கள் உண்டாவதற்கும், லீலைகள் செய்வதற்கும், பிரும்மத்துடன் கலப்பதற்கும் நியதிகள் உண்டா ? முதன்முதலில் மஹானுக்கு குருநாதர் யார் ?' என்று பரீக்ஷித்து ராஜா கேட்ட



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கேள்விகளுக்கு மாமுனிவர் சுகர் பதில் அளித்தார்.

"முதன்முதலில் தோன்றிய மஹானிற்கு முதல்குரு ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியே ஆவார். அவரே ஆதிகுரு பகவான் ஆவார். சிருஷ்டியைச் செய்யும் பிரும்மாவும் ஒரு காலத்தில் மாறலாம். ஆனால் அவருக்கும் காரணமான தக்ஷிணாமூர்த்தி என்றும் மாறாதவர். அவர் காலத்தை மீறியவர்.

ப்ரும்மத்தின் ஒரு ஸ்வரூபம் மஹான்கள். மற்றொரு ஸ்வரூபம் தக்ஷிணாமூர்த்தி. அவர் தர்மத்தின் ஸ்வரூபம். அவரே ப்ரும்மம்; அவரே பூர்ணம். பூர்ணத்திலிருந்து ஒரு பகுதியை எடுத்தாலும் மிஞ்சி இருப்பதும் பூர்ணமே. எடுத்ததும் பூர்ணம்; எஞ்சி இருப்பதும் பூர்ணம்.

பகவான் ஜோதி ஸ்வருபம். அதைப் பாதியாகச் செய்தாலும், சிறுசிறு பின்னமாக ஆக்கினாலும் அது குறைவுபடாது. முழுமை யாகவே இருக்கும்.

ஒரு குத்துவிளக்கு இருக்கிறது. இதற்குத் திரிகள் பெரியது, சிறியது என்றிருந்தாலும், அந்த விளக்கிற்கு எண்ணெய் ஊற்றி, திரி போட்டு ஏற்றினால் எல்லாத் திரிகளிலும் தோன்றும் ஜோதி வடிவம் ஒன்றாகவே இருக்கும். குத்து விளக்கில் ஒருமுகம் ஏற்றினாலும், ஐந்து முகங்கள் ஏற்றினாலும் ஒரே ஜோதி வடிவமாகவே இருக்கும். எண்ணெயும், திரியும் உள்ளவரை ஜோதி இருக்கும். ஆதியில் இருந்த ஜோதி ஒன்றே எனினும், எத்தனை முகங்கள் ஏற்றுகிறோமோ அத்தனை முகங்களாய் விளங்கும். ஜோதி எதிலும் குறைந்து தெரியாது.

("பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே" – இதையே பதஞ்சலி யோக ஸூத்ரம்" பூர்வேஷாமபி குரு : காலேனாவச்சேதாத்" என்கிறது.)

பகவானின் அம்சம் மஹான். மஹான் பகவானேதான். பகவானின் ஒருபகுதியாக மஹான்கள் இருந்தாலும், எப்படி ஒரு விளக்கில் எத்தனை முகங்கள் ஏற்றினாலும் முதல் முகத்தின் ஜோதி குறைவதில்லையோ, அதைப்போன்றே முதல் குருநாதராம் தக்ஷிணாமூர்த்தியின் ஒளி குறைவதில்லை. ஒவ்வொரு மஹானுக்கும் ஒவ்வொரு குருநாதர் இருந்து கொண்டு குருபரம்பரை தொடரும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இனி பஞ்ச பூதங்களில் சமாதி அடைவதைப்பற்றிக் கூறுகிறேன் :

ஒரு மஹான் அவதாரம் செய்து, லீலைகள் புரிந்து, காலம் வரும்பொழுது ஜீவன் முக்த நிலையில் பிருதிவியில் (பூமியில்) சமாதி அடைந்து, ப்ரும்மத்துடன் கலப்பது.உடல் தேவைப்படாத பொழுது—பிராரப்தம் முடிந்தவுடன்—உடலை உதிர்த்து விடுவது.

(உ—ம் : ராகவேந்திர ஸ்வாமிகள்)

ஒரு மஹான் தோன்றி ஜீவனை விடும்பொழுது சரீரம் நீரில் இருந்தால், அப்புவில் சமாதி எனப்படும். யோக மார்க்கத்தில் சித்தி பெற்று தம்முடைய இறுதி மூச்சுக்காற்றைக் கணக்கிட்டு, அதை நீரில் விடுதல் ஜலசமாதி எனப்படும்.

(உ—ம் :ராமர், பரதன், லக்ஷ்மண், சத்ருக்னன்)

ஒரு மஹான், பகவானை நெருப்பின் ஜோதி ஸ்வரூபமாக தியானித்து அதில் லயித்து, தம் உடம்பை மறந்து, தானும் அந்த ஜோதியில் கலப்பது.

அங்கு உடல் மறைந்துவிடும். உடல் சென்ற இடத்தைக் காணமுடியாது.

(உ—ம்:ராமலிங்க அடிகளார்)

ஆகாசத்தில் சமாதி என்பது ஒரு யோக முறை. ஆகாசம் ஆதியும், அந்தமும் இல்லாதது. அதைப்போன்றே மஹான் திடீரென மறைவார்; அவரின் சரீரமும் மறையும். தனக்கு ஒரு ஸமாதி இருக்கக் கூடாது , அதற்குத் தனியாக பூஜை செய்யக்கூடாது என்ற எண்ணம் கொண்ட மஹான் ஆகாசத்தில் கலந்து விடுவார். அவ்வாறு மறைவதை எவரும் தம் கண்களால் காணமுடியாது.

ஆகாசத்தில் சேர வேண்டும் என்பது ஒரு உபாசனை.

பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உருவான இந்த சரீரம் பஞ்சபூதத்தில் கலக்க வேண்டும் ,அதிலும் ரூபமற்று மறைய வேண்டும் என்று சங்கல்பம் கொண்டவர்கள் ஆகாசத்தில் சமாதியாவதைத் தேர்ந்தெடுப்பார்கள். இதுவும் பகவானின் தீர்மானமே.

(உ—ம் : ஆதிசங்கரர், பட்டணத்துப் பிள்ளையார்)

பரீக்ஷித்து : 'ஆகாசம் பற்றிக் கூறினீர்கள். ஆகாயம் என்றும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சொல்கிறோம்.

இரண்டும் ஒன்றா ?

இதற்கு சுகப்ரும்மரிஷி என்ன பதிலுரைத்தார் ?

"மெய்வாய் செவிமூக்கு கண்என்ற ஐம்பொறிகள்
பொய்யேயாம் என்றுணர்ந்த ஞானிகள் தத்தம்
வழியில் சமாதியும் கண்டார்நாம் உய்ய
வழியும் விளம்பினார் நன்கு."

சுகர் : "ஆகாசம் வேறு, ஆகாயம் என்பது வேறு.

ஆதியும், அந்தமும் இல்லாதது ஆகாசம். எங்கும் இருப்பது ஆகாசம். அதைப்போல் ஆதியும், அந்தமும் இல்லாதவன் இறைவன்.

நாம் பார்ப்பது ஆகாசம் (Ether) அல்ல. நம் கண்களுக்குத் தெரிவது ஆகாயம் (sky). பகவான் வெட்டவெளியில் (Ether) இருக்கிறான். நம் மனதிலும் வெட்டவெளி(Cutting Space) உள்ளது. வெட்டவெளியும், ஈஸ்வரனும் ஒன்றே எனக்கருதி வெட்ட வெளியைத் தியானிப்பவர்களும் உண்டு. வெட்டவெளிக்குப் பரிணாமம் இல்லாததுபோல் பகவானுக்கும் பரிணாமம் கிடையாது.

கண்ணுக்குப் புலப்படுவது ஆகாயம்; கண்களுக்குப் புலப்படாதது ஆகாசம். ஜோதி தத்துவத்திலும் ஆகாச தத்துவத்திலும் உடலுடன் இறைவனுடன் கலக்க முடியும். ஆகாச தத்துவத்தில் மஹானுடைய சரீரம் ஆகாசமாகவே ஆகிவிடுகிறது. வேதத்தில் மிக நுட்பமாக, மறைமுகமாகச் சொல்லியிருப்பதை சுருக்கமாக உ.னக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறேன். இதற்கு 'தஹரவித்யை' என்று பெயர்.

மஹான்கள், வாயுவில் கலப்பதையும், ஆகாசத்தில் கலப்பதையும் கண்களால் காணமுடியாது.

ஆனால் இவற்றை நம்ப வேண்டும். மஹான்கள் தங்கள் உடலை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ள முடியும். இவ்வாறு சமாதி அடைவதில் மஹான்களுக்கு எந்தவித சிரமமும் இருக்காது.

மஹான்கள் தங்கள் உடலை உகுத்து விட்டாலும்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிரபஞ்சத்தில் எங்கும் ஆகாசம் போல வியாபித்து விடுவார்கள். அவர்கள் ஈஸ்வர ஸ்வரூபமாக எங்கும் காட்சி தருவார்கள்.

(உ–ம் : சிருங்கேரி சமஸ்தானத்தின் 10வது பீடாதிபதியான ஸ்ரீஸ்ரீஸ்ரீ வித்யா சங்கர மஹாசந்நிதானம் அவர்கள் லம்பிகாயோகத்தில் ஈடுபட்டு வாயுவில் ஜீவசமாதி அடைந்தார் .)

இப்படி பஞ்ச பூதத்தில் கலக்கும் மஹான்கள் எதில் கலந்தாலும் வேறுபாடு கிடையாது. ப்ரும்மத்திலிருந்து வந்த மஹான்கள் ப்ரும்மத்தில் கலந்து விடுகின்றனர். இதில் சிறியது, பெரியது என்ற பேதமும் கிடையாது; உபாஸனா மார்க்கத்தில் எந்தவித வித்தியாசமும் கிடையாது.

ஸமாதி தத்துவமான ஜோதியில் அல்லது ஆகாசத்தில் கலந்தவர்களுக்கு எந்த நேரம் மறைந்தார், எந்த இடத்தில் மறைந்தார் என்று காலம், இடம் நிர்ணயம் செய்வது கடினம்.”

பரீக்ஷித்து : ‘ஜீவசமாதி அடைந்த பிறகு ஜீவன் எங்கே செல்கிறது ? ஜீவன் என்பதுவும், உயிர் என்பதுவும் ஒன்றா ?’

பலருக்கும் உள்ள ஐயம் இது. நம் ஸ்வாமிகளின் ஜீவசமாதி நிலையை அறிந்து கொள்ள இது மிக முக்கியமான கேள்வி.

இதற்கு சுகப்ரம்மரிஷி என்ன விளக்கம் அளித்தார் ?

“சுகப்பிரம்மம் சாற்றிய தத்துவம் என்றும்
சகத்தில் நிறைந்து நிலைத்தே இருக்கும்
தயக்கத்தில் நீங்கி விலகியே வந்து
மயக்கம் தெளிந்தனம் இன்று. ”

சகப்ரும்ம ரிஷி : “ஜீவன் வேறு; உயிர் வேறு. உயிர் தங்கிய உடல் அல்லது உடலில் உள்ள உயிர், மாயைக்குக் கட்டுப்பட்டது. ஜீவன் மாயைக்குக் கட்டுப்படாதது. ஜீவசமாதியில் உயிர் உடலைவிட்டுப் பிரிந்த பின்னும் ஜீவன் பிரம்மத்துடனேயே இருக்கும். ஒரு மஹான் உடலில் உயிர் இருந்தபோது என்ன லீலைகளைச் செய்தாரோ, ஜீவசமாதிக்குள் இருக்கும் பொழுதும் அதே லீலைகளைத் தொடருவார். மஹானின்

உடலிலிருந்து உயிர்தான் ‘விடுதலை’ ஆகிவிட்டதே அன்றி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta


ஜீவன் அங்கேயே வியாபித்திருக்கும். பிரம்மம் வியாபித்துள்ள இடமெல்லாம் ஜீவனும் வியாபித்திருக்கும். (omni present). மஹானின் தபோபலத்தால் ஜீவசமாதியும், அந்த மண்ணும் மகத்தான ஆற்றலைப் பெறுகின்றன.

ஜீவசமாதி அமைந்த இடத்தின் மண்ணை எடுத்து வேறு இடத்தில் பிருந்தாவனமோ, சமாதியோ அமைத்தாலும் அங்கும் அந்த மஹானுடைய அனுக்ரஹம் பரிபூரணமாகக் கிடைக்கும்.

எந்த வகையில் சமாதி அடைந்தாலும் பிரும்மத்தை அடைய ஜீவன் வாயுவைத்தான் பயன்படுத்த வேண்டியுள்ளது. (வாயவ்ய சரீரம்) காரணம் வாயு சர்வ வியாபி. எந்த ஜீவனும் மற்ற நான்கு பூதங்களில் கலந்து சமாதிநிலை அடைந்தாலும் வாயுவில் கலந்தே பூர்ணசமாதி நிலையை அடைகிறது.

அதேபோல் பிராப்தம், பிராரப்தம் என்பது உடலுக்குத்தான். ஜீவனுக்கு இல்லை. வாயுவைக் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் ஸ்பரிசத்தால் உணர்கிறோம்.

கலியுகத்தில் ப்ரும்மத்துடன் கலக்க குருவிடம் சரணாகதி அடைய வேண்டும். சரணாகதி அடைந்தால் மட்டும் போதாது அவர் சொல்லும் வார்த்தைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.சிஷ்யன் எதை அனுஷ்டிக்க வேண்டுமென்று குருவிற்குத் தெரியும். அதைத்தான் அவர் சொல்லுவார். குருவிடம் சரணாகதி அடைந்து விட்டால் நம் பிராரப்த கர்மாக்கள் நீங்கும். அல்லது அதன் வேகம் குறைவுபடும்.

குரு தத்துவம் என்பது, தீயவழிகளில் மனது ஓடாது மனதைக் கட்டுப்படுத்தும். திடமான பக்தியும், ஒருமுகப்பட்ட வைராக்கியமும் இருந்தால் அதுவே சரணாகதி எனப்படும்.குருவிடம் சரணாகதி அடைந்து அவரின் ஆசியை, அருளைப் பெற்றவன் முக்தி அடைகிறான்.

சரணாகதி என்பது ‘இனி எனக்குக் கதி வேறு எவருமில்லை. நீ என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள். எனக்கென்று எதுவுமில்லை.’ நன்றே வரினும், தீதே விளைகினும் யான் ஏதும் அறிகிலன். என் உடல், பொருள், ஆவி அனைத்தும் உனதே’ என்று ஒப்படைத்து விடுவதே சரணாகதி தத்துவம் ஆகும்.


Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பொறுப்பை அவனிடம் விட்டுவிட்டால், நம்மைக் கடைத்தேற்றும் பொறுப்பு பகவான் உடையதாகி விடுகிறது. பகவான் தன் சீடனைக் காப்பாற்றுகிறான், நல்வழி காட்டுகிறான், துயர் துடைக்கிறான், நற்கதி அடையச்செய்கிறான்.

இறைவன் பக்தனுக்கு நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், சேவகனாய் ஆகிவிடுகிறான். குருவைத் தொடர்ந்து ‘சிக்’ எனப் பிடித்தால் அவர், சீடனுக்கு மோக்ஷத்தை அளிப்பார்.

‘முக்தி என்பது ஒருவன் தன் வாழ்நாளில் அடையப்பட வேண்டுமே அன்றி, இறந்த பிறகு எங்கோ சென்று அடைவது அல்ல’ என்று வசிஷ்டர் தம் ‘யோகவாசிஷ்டம்’ என்ற கிரந்தத்தில் தீர்க்கமாகச் சொல்லியிருக்கிறார்.தக்க குருவிடம் சரணாகதி அடைந்தால் அவர் உன் க்ஷேமத்தைக் கவனித்துக் கொள்வார்.

குருவை நம்பு; குருவிடம் சரணாகதி அடை. முக்தி அடைவாய்.” என்று சுகப்பிரும்ம ரிஷி, மஹான்கள் பஞ்சபூதங்களில் சமாதி அடைவது பற்றியும், சரணாகதி தத்துவம் குறித்தும், அதன் மூலம் மோக்ஷம் அடைவது எங்ஙனம் என்றும் விரிவாகக் கூறினார்.

நம் மஹாசந்நிதானம் அவர்கள் பிருதிவியில் (மண்ணில்) ஜீவசமாதி ஆகத் திருவுளம் கொண்டார்.

ஜீவசமாதி ஆகும் இடம், அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்று சீடர்களிடம் விவரித்தார். அவர்களும் கண்ணீர் மல்க பக்தியுடன் கேட்டுக் கொண்டனர்.........

அதற்கு முன் இந்த சரிதத்தை எழுதும் பெரும் பேறு பெற்ற இந்த அறிவிலியான அடியேன் சில செய்திகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய கடமை உள்ளது.

அவை என்ன செய்திகள் ?

“தவத்தோன் உரைத்திட்ட நல்மொழி யெல்லாம்
உவப்புடன் கேட்டதும் பாண்டவ மன்னன்
பவபயம் நீங்கியே ஒப்புயர் வில்லா
பகவான் திருவடி சேர்ந்தான்.”

இந்த உலகத்தின் வெளிச்சம் அதிகம் படாத மஹானைப்பற்றி



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எழுதுவதால் ஒரு குறுகிய வட்டத்தைதான் சென்றடையும் என்பது நான் எதிர்பார்த்ததுதான். அன்பர்களுக்குப் பரிச்சயமான, ஊடகங்களால் அதிகம் பேசப்பட்ட, கவனிக்கப்பட்ட மஹான்கள் சென்றடைந்த எல்லைகளின் விஸ்தீரணம் அதிகம். அவர்களைப் பற்றிப் பேசுவதற்கு, எழுதுவதற்குத் தகவல்கள் பல தளங்களிலும் பரந்து விரிந்து கிடைக்கின்றன. பேசுவதற்கும், எழுதுவதற்கும் பல விற்பன்னர்கள் உள்ளனர்.

இந்த சரிதத்தைப் படிக்க வாய்ப்புக் கிடைத்த சில நூறு பேர்களில் பலர் மஹாசந்நிதானம் அவர்களைப் பற்றிக் கேள்விப்படாதவர்களாய் இருந்திருக்கலாம்; கேள்விப்பட்டிருந்தவர் களுக்கும் இதில் சொல்லப்பட்ட பல செய்திகள் புதியதாகத் தெரியலாம்.

இதை வாசகர்களுக்குப் பரிச்சயமான, பிரபலமான ஒரு எழுத்தாளர் எழுத முற்பட்டிருந்தால் பல அச்சு ஊடகங்கள் பிரசுரிக்க போட்டிபோட்டுக் கொண்டு முன்வந்திருப்பார்கள். வாசகர் வட்டமும் பெரிதாய் இருந்திருக்கும்.

எழுதப்பட்ட நம் மஹானைப் பற்றி ஒருசிலருக்கே தெரியும்; எழுதுபவனைப்பற்றி மிகப் பலருக்குத் தெரியாது.

மற்ற மஹான்களின் சரித்திர நிகழ்வுகளுக்கு, சுந்தரரின் சரித நிகழ்வுகள் எந்த விதத்திலும் குறைந்ததல்ல என்பது அடியேனின் தாழ்மையான அபிப்பிராயம்.

ராமகிருஷ்ண பரமஹம்சருக்கு ஒரு விவேகானந்தர் அமைந்ததைப் போல இவருக்கு உலகளாவிய புகழ் வாய்ந்த சீடர் இல்லாதது;

ராமலிங்க அடிகளார் போன்று எளிய தமிழில் இவர் செய்யுள்கள் இயற்றாதது;

ரமண மஹரிஷிகளை வெளியுலகத்திற்கு அறிமுகப் படுத்திய ஸ்ரீசேக்ஷாத்ரி ஸ்வாமிகள் போன்ற மற்றொரு மஹான் இவர் லீலைகளை எடுத்தியம்பாதது;

எக்காலத்திற்கும் பொருந்திவரும் கல்கண்டு போன்ற இவர் உபதேசங்கள் மக்களைச் சென்றடையும் எளிய மொழி நடையில் அமையாமல், நிரடலான மணிப்பிரவள நடையில் அமைந்தது .......



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இப்படியான காரணங்களை சராசரி மனிதர்கள் அடுக்கிக் கொண்டு போகலாம்.

பகவானின் அம்சமான மஹான்கள் காரண காரியங்களோடே அவதாரம் செய்கின்றார்கள். ஒருவரை மற்றொருவருடன் ஒப்பு நோக்குவது அறிவுடமை ஆகாது. மஹான்களுக்குத் தெரியும், தாம் எப்பொழுது வெளிப்பட வேண்டுமென்று. இன்றும் நாம் அறியாத மஹான்கள் எங்கெங்கு உள்ளனரோ ?

மஹான் சுந்தரரைப் பற்றி அரைகுறையான,சில தவறான செய்திகளுடன் ஒரு 'ஆடியோ' சில ஆண்டுகளுக்கு முன்பு சுற்றில் இருந்தது. அதைக் கேட்ட, என்னை அறிந்த சிலர் 'அரிமழம்' பெயர் அந்த ஆடியோவில் பேசப்பட்டாதால் என்னைத் தொடர்பு கொண்டு ஸ்வாமிகளைப்பற்றி மேலும் விபரங்களைக் கேட்டனர். எனக்குத் தெரிந்த அளவில் ஸ்ரீஸ்வாமிகள் சரிதத்தை சுருக்கமாகக் கூறி, அந்த ஆடியோவில் இருந்த உண்மைக்குப் புறம்பான முக்கியமான ஓரிரு செய்திகளையும் திருத்தி விளக்கமளித்தேன்.

அப்பொழுது ஸ்ரீஸ்வாமிகளைப் பற்றி ஆதாரப்பூர்வமான சரிதத்தை எழுதினால் என்ன ?என்ற எண்ணம் வலுப்பெற்றது.

மஹாசந்நிதானம் அவர்களின் அதிஷ்டானம் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமைக்கும்,இன்றிருக்கும் நிலைமைக்கும் வேறுபாடு ஏதேனும் உள்ளதா ?

"தர்மம் நலிவடைந்த போதும் அதர்மமே
தர்மம் எனமக்கள் நம்பிய போதிலும்
தர்மம் நிலைபெற சான்றோர்கள் தோன்றியே
தர்மத்தை ஏந்தியே நிற்பர்."

ஸ்வாமிகள் ஜீவசமாதி ஆனபின்பு (இதைப் பிறகு பார்ப்போம்), நாராயணசிவன் மூலம் கொண்டு வரப்பட்ட நர்மதா பாணலிங்க மூர்த்தம், பக்தி சிரத்தையுடன். மந்திர பூர்வமாக ருத்ர,சமக, புருஷசூக்த, மந்திர அபிஷேகம், அர்ச்சனைகளுடன், பிரதிஷ்டை செய்யப்பட்டது. நித்தியப்படி பூஜை, தீப தூப நிவேத்தியங்கள் தக்கவர்களைக் கொண்டு தேவதா விஸ்வாசத்துடன் நடைபெற்று வந்தன.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பின்பு அந்த ஜீவசமாதிக்கு அதிஷ்டானக் கோயில் கட்டப்பட்டது. அழகிய ராஜகோபுரமும், மூலஸ்தான கோபுரமும் எழுப்பப்பட்டன. சாந்நித்தியம் நிரம்பிய திருக்கோயிலாக விளங்கியது. சிவராமன் செட்டியார் அவர்களின் சொந்தப் பணத்திலும், வெளியில் சேகரித்த பணத்திலும் கோயில் கட்டப்பட்டது. 1895–ம் ஆண்டு, ஜய வருஷம், தைமாதம் 26–ம் தேதி மிகச் சிறப்பாக அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடந்தேறியது. இவ் வைபவத்தில் கந்தர்வகான வையச்சேரி மஹாவைத்தியநாத சிவன் அவர்களின் கச்சேரி விமரிசையாக நடந்தது.

இந்த கும்பாபிஷேகச் சிறப்பைப் பற்றி வையை ராமசாமிசிவன் அவர்கள் தோத்திரப் பாவும், திருநெல்வேலி மாவடி சிதம்பரம் பிள்ளை அவர்கள் அஷ்டபந்தனக் கவிதையும் இயற்றினர்.

அதிஷ்டானத்தின் சொத்தாக எண்பது ஏக்கருக்கும் மேலான நிலத்தை அன்றைய திவான் சேஷய்யா சாஸ்திரிகள் வழங்கினார். இந்த நிலங்கள் அரிமழம், முனசந்தை, கீழப்பனையூர் ஆகிய ஊர்களில் இருந்தன.

ஸ்ரீசுந்தர ஸ்வாமிகளுக்கு ராஜகோபுரத்துடன் எழுப்பப்பட்ட அதிஷ்டானக் கோயில் கும்பாபிஷேகம் நடந்த இரண்டு மாதங்களில், ஜய வருஷம் பங்குனி மாதம், உத்தராயண புண்ணிய காலத்தில் சிவராமன் செட்டியார் அவர்கள் ஸ்ரீமஹாசந்நிதானம் அவர்களின் திருவடியைச் சேர்ந்தார்.

தந்தைக்குப் பின்னர் தனயன் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் அதிஷ்டானப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அப்பொழுது அவருக்கு வயது இருபத்தாறு.

ஸ்ரீஸ்வாமிகளின் அதிஷ்டான ஆராதனையை ரங்கசமுத்திரம் மிராசுதார் S.N. சங்கர ஐயர் 45ஆண்டுகள் தொடர்ந்து நடத்தி வந்தார்.

சோமசுந்தரம் செட்டியார்–சிவகாமி ஆச்சி தம்பதியினருக்கு 1903–ம் ஆண்டு, சோபகிருது வருஷம், ஆனிமாதம் 27–ம் தேதி ஒரு ஆண்மகவு பிறந்தது. அக்குழந்தைக்கு சிவராமன் என்று பெயர் சூட்டி சிறப்பாக வளர்த்து வந்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



1938–ம் ஆண்டு சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் சிவலோகப் பிராப்தி அடைந்ததும், தம் முன்னோர்கள் வழியில் சிவராமன் செட்டியார் அவர்கள் அதிஷ்டானத்தை நிர்வகித்து வந்தார்.

1986 வரை பரம்பரை டிரஸ்டியான திரு.சிவ.சோம.சிவராமன் செட்டியார் அவர்கள் திறம்பட அதிஷ்டானத்தை நிர்வகித்து வந்தார். இவர் மிக மென்மையாக, கனிவாகப் பேசும் இயல்பினர். அனைவரையும் அனுசரித்துச் செல்லும் எளிமையான பண்பினர். இவர் 26.01.1987–ல் தமது 84–ம் வயதில் சுந்தரர் திருவடி சேர்ந்தார்.

மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு பிரஜோத்பதி ஆண்டு, கார்த்திகைத் திங்கள் 25–ம்நாள், புதன்கிழமை, 11.12.1991 அன்று கும்பாபிஷேகம் நடத்தப் பெற்றது.

இன்றைய பரம்பரை அறங்காவலர் அதிஷ்டானத்தின் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதிஷ்டானத்திற்கு புதிதாக ஒரு அர்ச்சகர் நியமிக்கப்பட்டார். அவர் வைணவ சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்.

இவர்கள் மூலம் மஹாசந்நிதானம் அவர்கள் ஜீவசமாதியில் இருந்து லீலைகளை நடத்தத் திருவுளம் கொண்டார்.

அப்படி என்ன மாற்றங்கள் நிகழ்ந்தன ?

"உன்னிலே நீமறைந்தாய் உன்ஆற்றல் காணாது
மண்ணிடை மாந்தர் எதுவென் றறியாது
தம்மிலே தாம்மயங்கி செய்திடும் ஆற்றலை
எங்கேயோ தேடி அலைந்தார். "

அந்த வைஷ்ணவர் பெயர் கோவிந்தராஜன். ஊர் மதுரை. 2003 ல் அரிமழம் வந்தவர் இதையே சொந்த ஊராக ஏற்றுக் கொண்டார்.

ஸ்வாமிகளின் சித்தம் என்ன நினைத்ததோ!

கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளாக தனிமையில் இருந்த ஸ்வாமிகளைத் தரிசிக்க அன்பர்கள் அதிக அளவில் புதிய பரம்பரை அறங்காவலர் காலத்தில் வரத்தொடங்கினர்.

பரம்பரை அறங்காவலர் குடும்பத்தினர் ஆராதனை விழாவை சிறப்பாக நடத்தி வருகின்றனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்வாமிகளின் சிஷ்யராய் இருந்த நாராயணசிவன் அவர்களின் நேரடி பரம்பரை வாரிசுகளான பெங்களூரு வேம்பு ஐயர் குடும்பத்தினர் மஹாசந்நிதானம் அவர்களின் ஜயந்தி விழாவை கடந்த பதினைந்து ஆண்டுகளாக நடத்தி வருகின்றனர். அத்துடன் சந்நியாச தர்மத்தை ஏற்றுக்கொண்ட நாராயணசிவன் அவர்களின் ஆராதனை விழாவையும் அவர் சமாதி அடைந்த அரிமழத்தை அடுத்த கொத்தமங்கலம் என்ற ஊரில் ஆண்டுதோறும் நடத்துகின்றனர்.

ஒவ்வொரு குருவாரம் (52), மாதாந்திர குருபூஜை தேய்பிறை தசமி(12), மாதாந்திர பௌர்ணமி (12), ஒவ்வொரு மாதமும் அனுஷ நக்ஷத்திரம் (12), மகாசிவராத்திரி, ஆராதனை, ஜயந்தி என்று ஆண்டிற்கு 100 நாட்களுக்கு மேல் அன்னதானம் நடைபெற்று வருகிறது. இவைதவிர பக்தர்களின் வேண்டுகோள் நிறைவேறியதற்கு அன்னதானம் அளிக்கின்றனர். ஸ்வாமிகளின் அவதார நக்ஷத்ரமாகிய அனுஷ நன்னாளில் ஒவ்வொரு மாதமும் திருவாசகம் முற்றோதல் சந்நிதியில் நடைபெறுகின்றது. அன்று அன்னதானமும் உண்டு.

ஸ்ரீஸ்வாமிகள் அன்னதானத்திற்கு மிக முக்கியத்துவம் தந்தவர். அரிமழத்தில் தாம் சொன்னபடி அன்னசத்திரம் தொடங்கப்படவில்லை என்று ஊரினுள் நுழையாமல் இருந்ததையும் நாம் பார்த்திருக்கிறோம்.

அரிமழம் அதிஷ்டானத்தில் அன்னதானம் செய்வதை கிடைத்தற்கரிய பாக்கியமாகப் பக்தர்கள் கருதுகின்றனர்.

நித்திய அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, நிவேத்தியம் முறையாகச் செய்யப்பட்டு வருகின்றன.

விகாரி ஆண்டு வைகாசித் திங்கள் 31–ம்நாள், வெள்ளிக்கிழமை, 14.06.2019 அன்று அதிஷ்டானத்தின் மூன்றாவது கும்பாபிஷேகம் மிக விமர்சையாக நடைபெற்றது.

அதிஷ்டானத்தில் வேத சிவநெறிக் கழகம் டிரஸ்டி குடும்பத்தினரால் நடத்தப்படுகிறது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஒவ்வொரு ஆண்டும் ஆடிமாதம் கடைசி வியாழக்கிழமை நடைபெறும் திருவிளக்கு பூஜையில் பெண்கள் அதிக அளவில் கலந்து கொள்கின்றனர்.

1008 கலசாபிஷேகமும்

10008 காயத்ரி ஜப ஹோமம் 10.11.2020 அன்றும்,

100008 காயத்ரி ஜப ஹோமம், சார்வரி வருஷம், தைமாதம் 14 ம் நாள் 27.01.2021, புனர்பூச நக்ஷத்திரம், புதன்கிழமை தொடங்கி; மாசி மாதம்11 ம் நாள், திருவாதிரை நக்ஷத்திரம், திங்கட்கிழமை 22.02.2021, (27 நாட்கள்) வரை சிறப்பாக நடைபெற்றன.

அரிமழம் ஸ்வாமிகளின் அதிஷ்டானத்திற்கு கல்வியாளர் திரு. பரமசிவம் தங்கவேலு அவர்களால் அன்னதானக் கூடம் கட்டித் தரப்பட்டுள்ளது.

08.09.2022 அன்று பெரியகருப்பன் செட்டியார் மங்கை ஆச்சி அவர்கள் நினைவாக சமையல் கூடம் புதிதாகக் கட்டப்பட்டு திறப்பு விழா கண்டது.

28.01.2023 சனிக்கிழமை ரத ஸப்தமி அன்று தொடங்கி 100008 காயத்ரி ஜப ஹோமம் 26.02.2023 மாசி மாதம் ஸப்தமி அன்று பூர்த்தி ஆனது.

தற்போதைய பரம்பரை அறங்காவலர் குடும்பத்தினர் ஸ்ரீஸ்வாமிகளின் மேல் கொண்ட ஈடுபாடே இத்தகைய நல்மாற்றங் களுக்குக் காரணம்.

**நகரசிவன் கோயில் :**

மஹாசந்நிதானம் அவர்கள் முதன்முதலாக நடத்தியது அரிமழம் நகரச் சிவன் கோயில் கும்பாபிஷேகம்.

இரண்டாவதை நன்னீராட்டுப் பெருவிழா விசுவாவசு ஆண்டு, வைகாசித் திங்கள் 30–ம் நாள் 12.06.1903 அன்று நடைபெற்றது.

சிறு கட்டடமாய் இருந்த இந்த திருக்கோயில் நகரத்தார்களின் கூட்டு முயற்சியால் கற்கோயிலாக பிரம்மாண்டமாய் எழுப்பப்பட்டு,

மூன்றாவது குடமுழுக்கு தாரண ஆண்டு சித்திரைத் திங்கள் 23–ம் நாள் 05.05.1944 அன்று சிறப்பாக நடைபெற்றது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அடுத்து நடைபெற்ற நான்காவது நன்னீராட்டுப் பெருவிழா மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

அதன் சிறப்பு என்ன ?

"கொய்த மலர்கொண்டு தம்கரத்தால் உந்தன்
மெய்யடி வீழந்து வணங்கியே பூசித்த
நல்லடியார் மேதினியில் சீர்கொண்டு வாழந்துநின்
மெல்லடி சேர்ந்தார் இனிதே "

நான்காவது கும்பாபிஷேகத்தைத் தம் திருக்கரங்களால் நடத்தி வைத்தவர் சிருங்கேரி ஸ்ரீசாரதா பீடம்;தக்ஷிணாம்னாய பீடம்;வியாக்கியான சிம்மாசனத்தின் முப்பத்தி ஐந்தாவது பீடாதிபதியாக வீற்றிருந்த மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்.இவர் முன்னிலையில் அரிமழம் நகர சிவன் கோயில் பாலாலயம் நடைபெற்றது.அவர் திருக்கரங் களாலே ஆறு மாதங்களில் விளம்பி வருஷம் வைகாசி மாதம், 5–ம்நாள் வெள்ளிக்கிழமை, 23.05.1958 ல் ஜீரணோத்தாரண மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

அப்பொழுது மஹாசந்நிதானம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியது:".... இந்தத் திருக்கோயிலின் முதல் கும்பாபிஷேகம் மஹான் கோடகநல்லூர் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் திருக்கரங்களால் நடைபெற்றது. சிருங்கேரி சமஸ்தானத்தில் அன்று எழுந்தருளி இருந்த எம் ஆச்சார்யாள் திருவாக்கினால் "மஹாசந்நிதானம் "என்று அறிமுகப்படுத்தப்பட்டவர் ஸுந்தர மஹான். சிருங்கேரி மடத்திற்கும் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகளுக்கும் இடையே நிலவிய பந்தம் என்றும் தொடர்ந்து வரும்.........."

அரிமழம் விஜயத்தின் இரண்டு முறையும் ஸ்ரீசிருங்கேரி சந்நிதானம் அவர்களுக்கு, அதிஷ்டான வாயிலிலிருந்தே பூரணகும்ப மரியாதை வழங்கப்பட்டது.

ஐந்தாவது நன்னீராட்டுப் பெருவிழா ஆனந்த வருஷம் தைமாதம் 20 ம் நாள் ஞாயிற்றுக்கிழமை 02.02.1975 அன்றும்;

ஆறாவது குடமுழுக்கு பிரஜோத்பதி ஆண்டு ஐப்பசித் திங்கள் 4ம்நாள், திங்கட்கிழமை, 21.10.1991 அன்றும்;



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஏழாவது கும்பாபிஷேகம் ஸ்ரீபார்த்திப ஆண்டு வைகாசித் திங்கள் 27 ம்நாள் வெள்ளிக்கிழமை, 10.06.2005 அன்றும்;

எட்டாவது கும்பாபிஷேகம், விளம்பி வருஷம் கார்த்திகை மாதம் 26 ம்நாள் புதன்கிழமை 12.12.2018 அன்றும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன.

இப்பொழும் எந்தத் திருக்கோயிலிலேனும் கும்பாபிஷேகம் நடைபெறுவதில் எதுவும் இடையூறுகள் இருந்தால், அரிமழம் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் அதிஷ்டானம் வந்து வேண்டிக் கொண்டால் தடைகள் நீங்கி, இனிதே கும்பாபிஷேகம் நடைபெறும்.

மஹாசந்நிதானம் அவர்களால் அதிகபக்ஷம் போதிக்கப் பட்டவை கர்ம யோகம், பஞ்சாக்ஷர மஹிமை, அன்னதான சிறப்பு, விபூதி–ருத்ராக்ஷ தாரணம் நேர்மையுடனும், உண்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று சிறுவயதினருக்கு உபதேசம் செய்தது ஆகியவற்றுடன் ஒழுக்கம் சார்ந்த நம் கலாசாரக் கல்வியின் அவசியம், பெண்களும் மந்திரோபதேசம் மற்றும் சந்நியாசத்திற்கு உகந்தவரே என்று அன்றைய சூழலில் துணிந்து கூறியது–செயல்படுத்தியது மற்றும் சிதிலமடைந்த பல திருக்கோயில்களை புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் நடத்தியது.......இப்படிப் பலப்பல.

மஹாசந்நிதானம் அவர்கள் ஜீவசமாதியில் நுழைவதற்கு முன்பாக சில செய்திகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளன.

அவை யாவை ?

“செம்மனத்து சோதியான் ஆற்றலைச் செப்பிட
எம்மனத்து வார்த்தைகள் போதாவே தம்மனத்து
நாநயம் மிக்கோர் பலருண்டு அவர்தம்பொற்
பாதம் பணிந்தனன் யான். ”

எழுதத்தெரிந்தவனுக்கு எழுத்து கடவுள் தந்த வரம். அதில் பணிவும், உண்மையும் இருக்க வேண்டுமே தவிர, ‘நான்’ என்ற அகந்தையும், பகட்டும் கூடாது. ‘நீங்கள் நினைப்பதை இன்று பதியாவிட்டால், நாளை நீங்கள் நினைக்காததை மற்றவர்கள் பதிந்து விடுவார்கள்’. எனவே நான் நினைத்த நல்லதைப் பதிந்தேன்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீஸ்வாமிகளின் சரிதம் சத்தியமானது; நித்தியமானது. அவற்றில் நிகழ்ச்சிகள், சில வர்ணனைகள் எழுத்தாளன் போக்கில் அமைக்கப்பட்டவை. இதை 'Poetic Justice' என்று கூறலாம். பல புதிய பக்தர்களையும், ஆன்மிக அன்பர்களையும் என் எழுத்துச் சென்றடைந்து ஏதேனும் நேர்நிலை பாதிப்புகளை ஏற்படுத்தி இருந்தால், அவர்கள் ஸ்வாமிகளின் சந்நிதி நோக்கி வந்தால் அதையே இந்த எழுத்தின் வெற்றியாகக் கருதுவேன்.

எப்பொழுதும் எனக்குள் இருந்து, என்னை ஆட்கொண்டு வழிநடத்தும் மஹான் ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளின் பாத கமலங்களைப் பணிந்து என் எழுத்தை அவருக்குக் காணிக்கை ஆக்குகிறேன்.

இனி.....

சரிதத்தில் நுழைவோம்.

ஸ்வாமிகள் ஜீவசமாதியுள் புகும் நாள் என்று ?

"சரிதத்தை ஊன்றிப் படித்தோர் மனதின்
அரியதாம் தத்துவம் ஆழவே பதிந்தோர்
தெரிதரக் கொண்டதோர் அன்பால் மகிழ்வை
சொரிந்தோர் அனைவருக்கும் நன்றி!"

'மரணமில்லாப் பெருவாழ்வு தாங்கள் அடையலாமே. ஏன் ஜீவசமாதியில் புக திருவுளம் கொண்டீர்கள் ?' ஆதங்கத்துடனும், ஆற்றமையுடனும் சிவராமன் செட்டியார் மஹாசந்நிதானம் அவர்களை வினவினார்.

அப்பொழுது ஸ்வாமிகள் சில சீடர்களுடன் குடிலில் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

அவர் திருவாய் மலர்ந்தார்.

"மரணமில்லாப் பெருவாழ்வு என்பது என்றைக்கும் இந்த உடலுடன் இருப்பது என்று பொருளல்ல. உடல் இல்லாது போனாலும் ஜீவனின் இயக்கத்தை எங்கும், எப்பொழுதும் நிரந்தரமாகச் செலுத்துவது ஆகும். 'ஓம்' என்ற பிரணவத்தின் வடிவினனான பரமாத்மாவோடு தம்மை இணைத்துக் கொள்ளுதல்.அது இறப்பு அல்ல; பேரின்பத்துடன் ஆன இணைப்பு.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மனம், வாக்கு கடந்த தெய்வீக அனுபவம் இது. உங்களின் புறக்கண்களுக்கு யாம் தென்படமாட்டோம். ஆனால் எல்லா உலகங்களும், ஜீவராசிகளும், சேதன–அசேதனப் பொருட்களும் எம் பார்வையில் இருந்து தப்பாது. அனைத்தையும் கவனித்துக் கொண்டிருப்போம்; அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருப்போம். இந்த ஜீவனை பரத்தோடு இணைத்துக் கொள்ளப் போகிறோம்; பூரணத்தை அடையப் போகிறோம்; பேரானந்தப் பெருவெளியில் லயிக்கப் போகிறோம். இதற்குப் ப்ரம்ம நிர்வாணம் என்று பெயர்.

உலக நன்மையை வேண்டியே ஜீவசமாதி கொள்கிறோம். எம்முடைய அதிர்வுகள் இங்கு எதிரொலித்துக் கொண்டே இருக்கும்.எம்முடைய சரீரம் ஜீவசமாதி அடையும் இடத்திற்கு 'நிலவறை' என்று பெயர்.

(ஒரு குறிப்பட்ட இடத்தைக் காட்டி) இதோ! இங்கே ஒன்பது சாண் ஆழத்திற்குக் குழியைத் தோண்டுங்கள். அதிக ஆழம் கூடாது. அந்த மண்ணை குழியைச் சுற்றி ஐந்து சாணுக்கு அப்பால் கொட்டிப் பரப்புங்கள். சதுரவடிவமாக இல்லாமல் ஓரளவு முக்கோண வடிவமாக நிலவறை இருக்கட்டும். அதன் பக்கங்கள் மூன்று சாண் அளவு இருக்கட்டும்.

யாம் பத்மாசனத்தில் அமர்ந்த பிறகு பொன், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு ஆகிய பஞ்சலோகங்களையும், நவரத்னங்களையும் இடுங்கள். அதன்மேல் தர்பைகளை விரித்து, திருவெண்ணீற்றையும், பொன்னிற சுண்ணாம்புப் பொடியையும் கொட்டுங்கள். மலர்கள், சந்தனம், புனுகு கஸ்தூரி மற்றும் பன்னீர் கலந்து குழியைச் சுற்றித் தெளியுங்கள்.

எம் உடல் முழுவதும் சட்டையைப் போல திருநீற்றைப் பூசுங்கள். அருகம்புல், வில்வ மாலை அணிவியுங்கள். நறுமணப் பொடியைத் தூவுங்கள். பத்மாசனத்தில் இருக்கும் திருவடியில் பொரி, இளநீர் வைத்து நிவேதனம் செய்யுங்கள். அதைத் தொடர்ந்து எம் திருமுகம், செவிகள், கண்கள் ஆகியவைகள் மூடும்படி உடல் முழுவதும் பரிவட்டம் கட்டுங்கள்.

திருவெண்ணீறு, நறுமணசுண்ணாம்புப்பொடி, தர்ப்பைப் புற்கள், வில்வ இலைகள் மற்றும் மலர்கள் கொண்டு குழியை



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



முழுவதும் நிரப்புங்கள். எம் உடல் அசைவற்றுப் போனாலும் ஜீவன் இங்கேயே இருக்கும். பிறகு திருவிளக்கு ஏற்றுங்கள். இவ்வாறு சமாதிக்கிரியைகளைச் செய்யுங்கள்.

ஜீவசமாதியின் மேல் மூன்றடிக்கு மூன்றடி மேடை அமையுங்கள். அதில் நர்மதா பாணலிங்கத்தைக் கிழக்கு நோக்கிப் பிரதிஷ்டை செய்யுங்கள். மற்ற இடங்களில் அதிகம் காணப்படாத 'அர்த்தநாரீஸ்வர' ('உமையொரு பாகன்') லிங்கம் அது.

அதை தரிசிப்பவர்கள் சிவசக்தியை ஒருசேர தரிசித்த பாக்கியத்தைப் பெறுவர். அதற்குப் பக்தியுடன் பதினாறு வகையான உபசாரங்களுடன் நிவேத்தியம் செய்யுங்கள். தீபாராதனை காட்டுங்கள். எம்முடைய ஆற்றலும், அருளும், உயிரோட்டமும் அங்கிருந்து இந்த அண்டம் முழுவதும் பரவும்.''

(தெளிந்த ஞானம் கொண்ட மஹான்களின் ஜீவசமாதி அமைய வேண்டிய அவசியத்தையும், சடங்குகளையும் திருமூலர் மிகத் தெளிவாக, அழுத்தமாகக் கூறியுள்ளார்.)

ஒரு ஊரில் மஹானின் ஜீவசமாதி இருப்பது மஹா புண்ணியமாகும். ஜீவசமாதி உள்ள இடத்திற்குச் சென்றால் மனம் அமைதியடையும். நோய்கள் தீரும். நல்ல நுண் அதிர்வலைகளை உணரலாம். ஜீவசமாதிகள் கோயில்களுக்கு இணையான, சில இடங்களில் அதற்கும் மேற்பட்ட தெய்வசாந்நித்தியமமும், மரியாதையும், ஆற்றலும் பெற்று விளங்கும். அவை அஞ்ஞானத்தை நீக்கி, மெய்ஞானத்தை அளிக்கும்.

இத்தகைய மேன்மைமிக்க ஜீவசமாதி அரிமழத்தில் அமைய மஹாசந்நிதானம் அவர்கள் தேர்ந்தெடுத்த நாள் எது ?

"அந்தமில் ஞானி இறைவனை எண்ணியே
அந்தமில் ஆற்றலைப் பெற்று அகிலமெலாம்
எண்ணிலா லீலைகள் மண்ணிலே காட்டிடும்
அண்ணலை நாளும் தொழுவோம்''

வெகுதானிய வருஷம், ஐப்பசி மாதம் 6 ம் தேதி, கிருஷ்ண பக்ஷ தசமி, திங்கட்கிழமை (1878, அக்டோபர் 21.) அந்த நாள் என்று ஸ்வாமிகள் சங்கல்பம் செய்துவிட்டார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சிவராமன் செட்டியார் அவர்களும் மற்றவர்களும் ஆற்றொணாத் துயருடன் இனி செய்ய வேண்டிய கிரியைகளில் மனதில் பாரம் அழுத்த ஈடுபட்டனர்.

அது ஐப்பசி மாதம் அல்லவா!முதல்நாள் வானமும் மெய்யன்பர்களின் தாங்கமுடியாத சோகத்தை பிரதிபலிப்பதுபோல் கொட்டித் தீர்த்தது.

மறுநாள் முதல்நாள் மழை பொழிந்ததற்கான எந்தவித அடையாளமுமின்றி 'பளிச்'சென விடிந்தது. சூரியபகவானும் மஹாசந்நிதானம் ஜீவசமாதி அடையும் வைபவத்தைக் காணும் ஆசையில் தன் கதிர்களை விரித்துக் கிழக்குத் திசையில் உதயமானான். மரங்களின் இலைகளில் முதல்நாள் இரவு பெய்திருந்த மழையில் தங்கியிருந்த நீர்த்துளிகள், காற்றில் அசைந்து பூமியில் பன்னீர்த் துளிகளாய் விழுந்தன.

பசுக்கள் தங்கள் கழுத்தில் கட்டியிருந்த மணிகள் அசைந்து சப்தமிட தம் கன்றுகளை நினைத்து மடியிலிருந்து பாலை பூமியில் சொரிந்து கொண்டிருந்தன.

மஹாசந்நிதானம் அவர்கள் ஜீவசமாதியில் அமரப்போகும் இடம்நோக்கி மக்கள் சாரிசாரியாய் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் எழுப்பிய 'சுந்தரா' 'சுந்தரா' என்ற ஒலி விண்ணை எட்டியது.

வானுறை தேவர்களும், தேவகன்னிகைகளும் ஜீவசமாதி மீது பூக்களைச் சொரிய, புவிமாந்தர் கண்களுக்குப் புலப்படாமல் விண்ணில் காத்திருந்தனர்.

சத்திய லோகத்தில் பிருகு, யாக்ஞவல்லி, சப்தரிஷிகள் மற்றும் அனைத்து வேதவித்துக்களையும் சதுர்வேதங்களையும் பாராயணம் செய்யும்படி சரஸ்வதியும், பிரும்மாவும் உத்திரவிட்டனர்.

வைகுண்டத்தில் இருந்து திருமகளும், திருமாலும் தம் அருட்கடாக்ஷத்தை அரிமழம் நகர்மீது பொழிந்து கொண்டிருந்தனர்.

கைலாயத்தில் பூரணனான தன்னின் ஒருபகுதியாய்த் – தானே ஆன சுந்தரன் தன்னுள் மீண்டும் ஐக்கியமாகப்போகும் நிகழ்விற்காக உமாதேவியுடன் சுந்தரர் காத்திருந்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்வாமிகளின் அருளாணைப்படி நிலவறை கட்டப்பட்டது.

ஸ்வாமிகள் அரிமழம் கிராமத்தின் எல்லைக் காளியாய் விளங்கிய (விளங்கும்) ஸ்ரீஜயவிளங்கியம்மனை தரிசித்து வந்தார். மஹானே ஆனாலும், பகவானின் அவதாரமே ஆனாலும் பூவுலகிற்கு வந்த விட்டால் இந்த நியதிகளுக்குக் கட்டுப் பட்டவர்கள் தானே.

அதோ.....அந்த நேரமும் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

திரண்டிருந்த பக்தர்கள் யாவரும் 'அதோ ஸ்வாமிள், அதோ ஸ்வாமிகள் 'என்று ஒருசேரக் குரல் எழுப்பினர்.

தற்காலிகமாக அமைக்கப்பட்ட மேடையில் ஏறி அங்கு குழுமியிருந்த பக்தர்களுக்கு தரிசனம் அளித்துக் கொண்டிருந்தார்.

எப்பொழுதும் போல் முகத்தில் மந்தஹாசம்; அருளைப் பொழியும் கூர்மையான கண்கள்; சூரியனைவிட ஒளிவீசும் உடலின் தேஜஸ்; தங்கத்தில் வெள்ளியைப் பூசினாற்போல் உடலெங்கும் தூய வெண்ணீறு; நெடிதுயர்ந்த வலிமையான மெலிந்த தேகம்; தோளிலிருந்து முழங்கால்களைத் தொடும் கைகள்; எடுப்பான கூரிய நாசிகள்; குனித்த புருவங்கள்; சூதசம்ஹிதை, வேதங்களை ஓதிய கொவ்வைச் செவ்வாய்கள்; அதில் எப்பொழுதும் திகழும் குமிண் சிரிப்பு; குருநாதர்களிடம் பணிவுடன் பாடங்களைக் கேட்ட செவிகள்; இடுப்பில் அரையாடை;கழுத்தில் மிளிரும் ஒற்றை ருத்ராக்ஷம்......

அங்கிருந்த அனைவரையும் தம் கருணை பொங்கும் விழிகளால் நோக்கினார். மீண்டும் மீண்டும் பார்க்கத் தோன்றும் அந்த மஹானின் உருவத்தைக் கண்களால் பருகி மனத்தில் இருத்திக் கொள்ள அங்கிருந்தவர்கள் முயன்று கொண்டிருந்தனர்.

நீங்களும் அவரை நன்றாக தரிசனம் செய்துகொள்ளுங்கள்.

ஒரு நிமிட நேரம்தான்!

விரைந்து நிலவறைக்குள் நுழைந்தார்.

அங்கே நிழ்ந்தது என்ன ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பரம்பரை டிரஸ்டி சோம.சிவ.குடும்பத்தார்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மஹான் நாராயணசிவன் வம்சாவளியின்
நான்காம் தலைமுறையைச் சேர்ந்த
ஸ்ரீ G.வேம்பு ஐயர்,பெங்களூரு.



சோம.சோமசுந்தரம் செட்டியார்
பரம்பரை தர்மகர்த்தா – மஹான் கோடகநல்லூர்
ஸ்ரீ சுந்தர சுவாமிகள் அதிஷ்டானம் அரிமழம்

திரு.ச.முத்துக்குமார் DSP (Retd.)
அரிமழம்

கல்லாடர் கிருஷ்ணமூர்த்தி
சத்திரம்

ஸ்ரீ நாரயணன்
அர்ச்சகர்–அரிமழம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"ஆண்டவனே ஆயினும் இவ்வுலகில் தோன்றும்
மானிடர் யாவருமே பூவுலகில் ஊழ்வினைக்கு
ஏற்பவே தம்வினைகள் நீங்கி இறைவனின்
பொற்பாதம் சேர்வர் மகிழ்ந்து."

அரிமழம் இதுவரை கண்டிராத கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. மஹானின் அருட்கடாக்ஷம் தம் மீது பட்டதற்குப் பக்தர்கள் பரவசப்பட்டார்கள்; தலைக்குமேல் கூப்பிய அவர்களின் கரங்கள் கூப்பியபடியே இருந்தன.கண்களில் கண்ணீர் பிரவாகமெடுத்து ஓடியது. 'சுந்தரா' 'சுந்தரா' என்று அனைவரும் பித்துப் பிடித்தவர்கள் போல் அரற்றிக் கொண்டிருந்தனர். அவர்களின் நெஞ்சை துக்கம் பந்தாய் வந்து அடைத்தது.

நிலவறையில் உடன் இருந்தவர்களின் நிலையை வார்த்தைகளில் வடிக்க முடியாது. இடம் சிறியதாகையால் மிகச் சிலரே அங்கே இருந்தனர்.

1831–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3–ம்தேதி, கர வருஷம், கார்த்திகை மாதம் 20–ம்நாள், சனிக்கிழமை, அமாவாசை அன்று, அனுஷநக்ஷத்திரம், விருச்சிக ராசி கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி நாழிகை 26 விநாடி 15 க்கு யக்னேஸ்வர சிவன்–காமாக்ஷி அம்மாள் தம்பதியினருக்கு, திருநெல்வேலி கங்கைகொண்டானில் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தையின் அண்ணன் குப்பாணி சிவன் என்னும் ராமசுப்பன்.

ஜீவசமாதியின் பீடத்திற்கான மூன்றுக்கு மூன்று சதுரமான கல்லை சிவராமன் செட்டியார் அவர்கள் முதன்முதலாக வைத்தார்கள்.

ஸ்ரீஸ்வாமிகள் சின்முத்திரை காட்டியபடி அதில் பத்மாசன கோலத்தில் அமர்ந்தார்கள். கண்கள் மெல்ல மூடின.

அக்குழந்தைக்கு மதுரையில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஈசன் சுந்தரனின் பெயரை வைத்தனர்.மிகுந்த அழகுடனும், தேஜஸுடனும் விளங்கியதால் அது காரணப்பெயரும் ஆனது.

கோயிலூர் சிதம்பர ஐயாசாமிகள், ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதியபடி மஹாசந்நிதானம் பூத உடல் முழுவதும் திருநீற்றைப் பூசினார்கள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அன்றைய பிராமண குடும்பங்களில் விளங்கிய குல வழக்கப்படி குழந்தைக்கு நாமகரணம், ஜாதகரணம், அன்னப்ரச்னம், சௌளம் முதலிய சமஸ்காரங்கள் முறைப்படி செய்யப்பட்டன.

ஒட்டுத் திண்ணைப்பரதேசியார் சமாதிக் குழிக்குள் பொன், வெள்ளி, ஈயம், செம்பு, இரும்பு ஆகிய பஞ்ச உலோகங்களைப் பயபக்தியுடன் இட்டார்.

சுந்தரனுக்குப் பதினெட்டு மாதங்களும், குப்பாணி சிவனிற்கு மூன்று வயதும் ஆகும் முன்பே அவர்களின் பெற்றோர் ஒருவர்பின் ஒருவராக சிவலோகப்பிராப்தி அடைந்தனர்.

சாத்தப்பையா ஸ்வாமிகள் நவரத்னங்களைக் குழியில் இட்டார்.

குழந்தைகளின் தாய்மாமனாகிய வெங்கடசுப்பையர் தம் மனைவியின் ஆலோசனையின் பேரில், அந்த இரு குழந்தைகளையும் தம் ஊராகிய பத்தமடைக்கு அழைத்துச் சென்றார்.

கடையம் சேஷாசல தீக்ஷிதர் தரையில் தர்ப்பைகளைப் பரப்பினார்.

சுந்தரன் மூன்று வயதிலேயே தாய்மாமனுடன் கோயிலுக்குச் சென்று வழிபடத் தொடங்கினான். நான்கு வயதில் மழலைக் குரலில் வில்வதளங்களால் அர்ச்சனை செய்தான். அந்த வயதிலேயே ருத்ரம், புருஷஸூக்தம் சொல்லத் தொடங்கிவிட்டான்.

வைதிகசீலரான ஸூரியநாராயண சிவன் வில்வதளங்களை அடுக்கினார்.

சிறுகுழந்தைகள் காலையும், மாலையும் பெற்றோரையும், பெரியவர்களையும் கீழே விழுந்து வணங்கினால் ஈஸ்வரகிருபை கிட்டும், பாவம் தொலையும், புண்ணியம் சேரும் என்பதை ஒரு பெரியவர் மூலம் தெரிந்து கொண்டான். அன்று முதல் மாமா, மாமியை இருவேளைகளும் கீழே விழுந்து வணங்கினான்.

திருமழபாடி சிவப்பிரகாச ஸ்வாமிகள் புனித பஸ்மத்தால் அபிஷேகம் செய்தார்.

இவ்வாறு மேலும் தொடரும் நிகழ்ச்சிகள் யாவை ?



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



"நிட்டையில் கூடியே கண்களை மூடியே
சட்டைபோல் மேனியில் வெண்ணீறு பூசியே
கட்டைபோல் சற்றும் அசையா திருந்துபின்
இட்டமாய் ஈசனுள் சேர்ந்தான்."

(அரிமழத்து ஆச்சிமார்களும், குடியானவப் பெண்டிரும் தங்கள் கைவண்ணத்தைக்காட்டி ஓலையில் முடைந்த கூடைகளை —செட்டிநாட்டில் கொட்டான் என்பார்கள்— நூற்றுக் கணக்கில் சிவராமன் செட்டியார் வசம் ஒப்படைத்திருந்தனர். அவை திருவெண்ணீறு, தர்ப்பைப் புற்கள்,அருகம்புல், பொன்னிற சுண்ணாம்புப் பொடி, வில்வம், பலவகையான மலர்கள், புனுகு ஜவ்வாது சந்தனம் நிரம்பிய வாசனைப்பொட்டலங்கள், செக்கில் ஆட்டிய தூய நல்லெண்ணெய்க் குடங்கள், சந்தனக் குடங்கள் ஆகியவற்றால் நிரம்பி இருந்தன.)

துர்முகி வருஷம் புரட்டாசி மாதம் உத்தமமான விஜயதசமி அன்று சுந்தரனை திண்ணைப்பள்ளிக் கூடத்தில் சேர்த்தார்கள்.

ரங்கநாதசிவன் ஒருகூடை வெண் சங்குப்பூவைக் குழியில் கொட்டினார்.

சுந்தரனுக்கு ஏழு குருநாதர்கள் அமைந்தனர். அவர்கள் சங்கர ஐயர் என்கின்ற சுப்பையா சாஸ்திரி, பத்தமடை கிருஷ்ண கனபாடிகள், வீரவநல்லூர் சோமசுந்தர சாஸ்திரிகள், சுந்தர சாஸ்திரிகள், அடைச்சாணி விஸ்வேஸ்வர சாஸ்திரிகள், மஹாகணபதி முனீந்திரர், ஆம்பூர் சோமசுந்தர சாஸ்திரி ஆகியோர். இவர்களிடம் தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம், வேத வேதாந்தங்கள், புராணங்கள், இதிகாசங்கள், தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸை, அஷ்டமாசித்திகள்......ஆகியவற்றை ஐயமறக் கற்று சிறந்த மாணவனாய் விளங்கினான். அனைத்துக் கலைகளிலும் கரைகடந்து விளங்கினான். சூதசம்ஹிதை, இதிகாச, புராணங்கள் பிரவசனம் செய்வதுகேட்டு அவன் பேச்சாற்றலில் ஊரினர் மயங்கினர்.

ராமசிவன் ஒரு கூடை பலாச புஷ்பத்தைக் குழியில் சமர்ப்பித்தார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உபநயனம் ஆன காலத்தில் இருந்து விவாஹம் ஆகும்வரை ஒருவேளை விடாமல் இடையூறின்றி முறைப்படி பத்தமடை, அடைச்சாணி ஆகிய ஊர்களில் ஒருகோடியே நூற்றிஎட்டு காயத்ரி ஜபஹோமம் செய்தான். இதைப்பூர்த்தி செய்ய ஐந்து ஆண்டுகள் ஒன்பது மாதங்கள் ஆயின.

கல்லிடைக்குரிச்சி சின்னப்பட்டம் நமசிவாய தேசிகர், பொன்னிறச் சுண்ணாம்புப் பொடியைத் தூவினார்.

சுந்தரனின் பக்தியின் மேம்பாட்டைக் கண்ட ஊர்மக்கள் அவனை சுந்தரசிவன் என்றே அழைத்தனர். அவன் ஊரினருக்குக் கூறிய குறிகள் எல்லாம் பலிப்பது கண்டு அவனைத் தெய்வப்பிறவியாகவே போற்றினர்.அவன்மேல் பாசமும், தயையும் கொண்டனர்.

சிதம்பரம் பொன்னுஸ்வாமி தீக்ஷிதர் குழியைச் சுற்றிப் பன்னீர் தெளித்தார்.

**1843**–ம் ஆண்டு மார்கழிமாதம் முதல் முறையாக தாமிரபரணி நதிப்பிரதக்ஷணம் செய்தார். மூன்று விதமாக மூன்று முறை நதிப்பிதக்ஷணம் செய்தவர் இவரே.

சேரை சௌந்திரபாண்டியன் ஜவ்வாது, புனுகு கலந்த வாசனைத் திரவியத்தைத் தெளித்தார்.

**1843**–ம் ஆண்டு தைமாதம் அடைச்சாணி வேங்கடசுப்பையர் திருமகள் ஜானகியை சுந்தரனுக்குத் திருமணம் செய்து வைத்தனர். சாந்தி முகூர்த்தத்தன்று மனைவிக்கு ஞான உபதேசம் செய்தார்.

கரமனை நாராயண சிவன் அருகம்புல்லைச் சமர்ப்பித்தார்.

**1847**–ம் ஆண்டு தம்முடைய **16** வது வயதில் சித்தமல்லியில் வித்வத் சந்நியாசமும், பின்னர் அவதூத நிலையும் அடைந்தார்.

கிருஷ்ணஸ்வாமி தருவாடியார் குழியில் ரோஜாப்பூ இதழ்களைத் தூவினார்.

**1848**–ம் ஆண்டு முதன்முதலாகப் பாதயாத்திரையாகப் பல தலங்களுக்குச் சென்றார். காசி செல்லும் வழியில் வையைச்சேரி துரைசாமி ஐயர் கிருஹத்திற்கு எழுந்தருளி ராமஸ்வாமி சிவன், வைத்தியநாத சிவன் ஆகியோரை ஆட்கொண்டருளினார். பிறர் கண்களுக்குத் தெரியாதபடி ராமஸ்வாமி சிவனிற்கு உச்சிஷ்ட



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கணபதி உபாசனையைப் பின்னர் வழங்கினார்.

வையைச்சேரி சகோதரர்கள் குரு ஸ்துதி இயற்றி சங்கீத அஞ்சலி செலுத்தினர்.

சுந்தரர் காசிமாநகர் சென்று மணிகர்ணிகா கட்டத்தில் ஆறுமாதங்களுக்கும் மேலாக ஜலசமாதியில் இருந்த கணபதி முனீந்திரரை நதியின் ஆழத்தில் சென்று தரிசித்தார். மூன்று நாட்கள் கங்கை நீரின் அடியில் தர்மவிசாரங்கள் செய்தனர். இருவரும் நீரின் அடியிலிருந்து மேலெழும்பிய போது கங்கைநீர் சிவலிங்க வடிவத்தில் தோன்றியது கண்டு அங்கிருந்தவர்கள் இவர்களைப் பணிந்து வணங்கினர். இரு அவதார புருஷர்களும் சேர்ந்து காசி விஸ்வநாதர் ஆலய கும்பாபிஷேகத்தை பதினாறு நாட்களில் நடத்தினர்.

ஸ்வாமிகளின் பிரதான சீடர்களில் ஒருவரான பிச்சு ஸ்வாமிகள் ஸ்வாமிகளின் வரலாற்றை சுருக்கமாகக் கவிதையில் வடித்தார்.

(நிலவறை மிகச் சிறியதாகையால் மரியாதை செலுத்தியவர்கள் உடனடியாக நிலவறையை விட்டு வெளியேறி, வெளியில் இருப்பவர்களுக்கு உள்ளேவர வழிவிட்டனர்.)

அடுத்து வரும் அன்பர்கள், அடியார்கள் யார் யார்?
"அன்பர்கள் வந்தனர் அஞ்சலி செய்யுங்கால்
தன்னிலை தாம்மறந்து கண்ணீர் பெருக
தலைவனின் பாதம் பணிந்து கதறி
சிலையென நின்றனர் அங்கே"

ஸ்வாமிகள் கோடகநல்லூர் தாமிரபரணி ஆற்றங்கரையில் கொடிய விஷஜந்துகளும், தேனிக்களும் நிறைந்த அடர்ந்த நாணற்காட்டில் நிஷ்டைகூடி இருந்தார். பல நாட்களாக பிக்ஷை எடுத்துக் கொள்ளவராமல், எவரும் புகமுடியாத அந்த நாணற்காட்டிலேயே இருந்தார். கரையில் இருந்தவர்கள் 'சுந்தரா' 'சுந்தரா' எனக் கல்லும் கரையும்படி உருகி அழைத்தனர். நிகழ்ந்தது தெய்வ அதிசயம். வானிலிருந்து இரண்டு கரங்கள் நீண்டு பிக்ஷையை ஏற்றுக்கொண்டு மறைந்தன. அசரீரி கேட்டது : 'அந்த



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரன் வேறல்ல; இந்த சுந்தரன் வேறல்ல'. முழுமுதற் பொருளான சிவபெருமானே சுந்தரரின் பிக்ஷையைத் தாம் ஏற்றுக்கொண்ட திருவிளையாடல் நிகழ்ந்தது.

புதுவயல் அழகப்ப செட்டியார் வாசம் மிகுந்த மரிக்கொழுந்து இதழ்களை சமர்ப்பித்தார்.

சுந்தரரின் அருமை தெரியாது, அதிவர்ணாஸ்ரமி என்று ஊர்மக்கள் ஒதுக்கி வைத்திருந்தனர். விஜய யாத்ரையாக கோடகநல்லூர் வந்த

சிருங்கேரி சாரதாபீட மடாதிபதி ஜகத்குரு மஹாசந்நிதானம் உக்ரநரஸிம்மபாரதி அவர்கள் ஸ்வாமிகளை வரவழைத்துத் தம் வாக்கால் 'கலியுக சுந்தரம்'; 'அவதார புருஷர் '; 'மஹாசந்நிதானம்' என்று அவரை விளித்து தம் அருகில் சம ஸ்தானம் அளித்து அமரவைத்தார். ஊர்மக்களும் ஸ்வாமிகளின் மகிமையை அறிந்து கொண்டனர்.

திருநெல்வேலி ஆவுடையப்பபிள்ளை நந்தியாவட்டை இதழ்களைக் குழியில் இட்டார்.

கம்பா நதிக்கரையில் ஒரு தீபாவளி நன்னாளில் தம்வலது உள்ளங்கையிலிருந்து நெருப்பை வரவழைத்த லீலையை இயற்றினார்.

ராமச்சந்திர மேத்தா மல்லிகை மலர்களால் அபிஷேகம் செய்தார்.

திருப்பத்தூர் நகரில் சிவபெருமானே, நடுநிசி நேரத்தில், திருத்தளிநாதர் கோயில் மடப்பள்ளியிலிருந்து சுயம்பாகி உருவத்தில் ஆறுபிரசாதப் பட்டைகளை எடுத்துவந்து, வீதிகளில் கால்கள் பதிய நடந்து வந்து சீடர்களின் பசியை நீக்கினார்.பின் மாயமாய் மறைந்தார்.

திருப்பத்தூர் மன்யம் வெங்கட்ராம ஐயர் தும்பைப் பூக்களைத் தூவினார்.

திருநெல்வேலி காந்திமதி அம்மன்—நெல்லையப்பர் திருக்கோயிலில் மூன்றுமுறை லக்ஷதீபத்திருவிழாவைச் சிறப்பாக நடத்தினார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சதாசிவத் தருவாடியார் ஜாதிமலர்களை சமர்ப்பித்தார்.

அகஸ்தியமாமுனி வாழும் பொதியமலை சென்று அவருடன் சம்பாஷித்தார்.

நெல்லையப்பப் பிள்ளை அவர்கள் நாகலிங்கப் பூக்களைக் குழியில் வைத்தார்.

தம்முடைய முதல்நூலான 'ஸ்வாநுபூதி ரஸாயனம்' எழுத்து வடிவில் வர அனுக்ரஹித்தார். பின்பு 'ஸ்வாநுபூதி ரஸமஞ்சரி, 'நிஜானந்த விலாசம்' ஆகிய நூல்களும் வெளிவந்தன. 'பிம்மகீதைக்கு' உரை எழுதினார்.

தளவாய் ராமஸ்வாமி முதலியார், இருவாட்சிப் பூக்களைச் சொரிந்தார்.

புதுக்கோட்டையில் உபதேசம் செய்யும் பொழுது பெண்களும் ஞானத்திற்கு உரியவரே என்பதை ஐந்து வயது சிறுமி மூலம் நடத்திய லீலையில நிரூபித்துக் காட்டினார்.

புதுக்கோட்டை ராமசாஸ்திரிகள் மருகு புஷ்பங்களைத் தூவினார்.

அந்த ஊரிலேயே ரங்கக் கோனார் உடலில் பிரும்ம ஸ்வரூபத்தை நிறுத்தி திருவிளையாடல் புரிந்தார்.

அப்பு நாயக்கர் மகிழம் பூக்களைக் குழியில் இட்டார்.

புதுக்கோட்டையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் வழியில், சிவனே சுந்தரர் வடிவில் வந்து பக்தர்கள் பயணம் செய்த வண்டிகளை புதுக்கோட்டைக்குத் திருப்பி அனுப்பி, பெரும் விபத்திலிருந்து காப்பாற்றினார்.

ராமஸ்வாமி சாஸ்திரி சம்பங்கி புஷ்பங்களை சமர்ப்பித்தார்.

மரக்காணத்தில் ஒரு இஸ்லாமியர் நன்கு மூடியபடி, பரிமாறுவதற்கு எடுத்து வந்த அசைவ உணவை சைவ உணவாக மாற்றி, அவருக்கும் அருளினார்.

சுப்பராயசிவன் கரவீர புஷ்பங்களை வைத்தார்.

தில்லையம்பலத்தில் சிற்சபேசருக்குத் தேர் ஒன்றைச் செய்து அதில் அம்மையப்பன் பவனிவர ஏற்பாடு செய்தார்.இரண்டு சந்நிதிகளுக்கும் கும்பாபிஷேகம் நடத்தினார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ராமபாகவதர் செண்பகப் பூக்களை குழியில் வைத்தார்.

ஒரே நேரத்தில் காசி, வையைச்சேரி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் காட்சி அளித்தார்.

சிவசங்கர் டாக்கர் புன்னாகப் பூக்களைத் தூவினார்.

புஷ்பாஞ்சலி இன்னமும் தொடர்ந்ததா? பின் என்ன நிகழ்ந்தது?

"பெருகிடும் கண்ணீர் வதனம் நனைக்க
உருகிடும் அன்புடன் பூக்களால் பூசிக்க
அன்றவன் ஜீவன் பரமனுடன் சேர்ந்ததை
அன்பர்கள் கண்டனர் அங்கே."

பல சித்திகள் பெற்ற அம்பை ராமலிங்க ஸ்வாமிகளுக்கு அருள்பாலித்து அவருக்கு சங்கரலிங்க ஸ்வாமி கோயிலின் பின்புறம் சமாதி எடுக்க ஆணைபிறப்பித்தார்.

ராமலிங்க முதலியார் மனோரஞ்சித மலர்களைத் தூவினார்.

அரிமழத்தில் சிவன்கோயில் திருப்பணி செய்யப்பட்டது. இவரது திருக்கரங்களால் தனித்து நடத்தப்பட்ட முதலாவது கும்பாபிஷேகம் இதுவே ஆகும். அன்னதான சத்திரமும் இவர் முயற்சியால் நடக்க ஏற்பாடாகியது.

சத்திரம் சின்னையா செட்டியார் மருதாணி மலர்களால் பூஜித்தார்.

திருவிடைமருதூரை ஆண்டு வந்த பிரதாபசிம்ம மஹாராஜாவிற்கும், அம்முணு அம்மணி அவர்களுக்கும் மஹாலிங்கேஸ்வரர் சந்நிதியில் பெரியவர்கள் ஆசியுடன் திருமணத்தை நடத்தி வைத்தார்.

குன்னியூர் ஜமீன்தார் வெண்தாமரை இதழ்களைச் சமர்ப்பித்தார்.

வையைச்சேரியில் மங்களாம்பிகா சமேத அகஸ்தீஸ்வரர் ஆலயத்தில் சிவகாமசுந்தரி அம்மன், நடராஜப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஸ்வாமிகளின் திருக்கரங்களால் கும்பாபிஷேகம் நடத்தப்பெற்றது.

பச்சையப்ப முதலியார் நாயுருவி புஷ்பங்களைச் சாற்றினார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



உமையாள்புரத்தில் அன்னம்மாள் அவர்கள் இல்லத்திற்கு, சிவபெருமான் நாராயணசிவன் உருவத்தில் சென்று மறுநாள் காலையில் அங்குவரும் சுந்தரர் மற்றும் அவரின் சீடர்களுக்கு அன்னம் தயாரித்து விருந்து அளிக்கும்படிக் கூறிச்சென்றார். மனைவியைவிட்டுப் பிரிந்திருந்த 'அபயாம்பாள் கடாக்ஷத்தை 'அவருடன் சேர்த்து வைத்தார்.

அபயாம்பாள் கடாக்ஷம் நெல்லி இதழ்களைத் தூவினார்.

தில்லைசிதம்பரம் சிவகங்கைத் தீர்த்தத்தில் ஜபம் செய்து கொண்டிருக்கும் பொழுது மல்லாக்க நீரில் விழுந்தார். 300 அடி நீளமும், 100 அடி அகலமும் கொண்ட அக்குளத்தில் பலர் தேடியும் ஸ்வாமிகளின் சரீரம் கிடைக்கவில்லை. நீண்ட நேரம் சென்ற பின்னர் பத்மாசனக் கோலத்தில் நீரின் மேல் மிதந்து வந்தார். அந்த நேரத்தில் மஹாசந்நிதானம் அவர்கள் திருக்கயிலாயம் சென்று வந்தது அறிந்து அங்கிருந்த அனைவரும் அவர் பாதம் பணிந்தனர்.

கோபாலகிருஷ்ண பாரதியார் வெள்ளருக்கால் துதித்தார்.

கோடகநல்லூரில் நீரில் மூழ்கி இறந்திருந்த யக்னேஸ்வரனையும், ஸ்வாமிமலையில் சர்ப்பம் தீண்டி மாண்ட சிறுவனையும் திருவெண்ணீறு பூசி, ஜபம் செய்து உயிர்ப்பித்தார்.

யக்னேஸ்வரன் விஷ்ணுக்ராந்தி மலரால் அர்ச்சித்தார்.

மதுரை பொற்றாமரைக் குளத்தில் மூழ்கி மூன்றாவதுநாள் கண்டெடுக்கப்பட்ட திருவேகம்புதூர் நாராயணசிவன் அவர்களின் உயிரற்ற சடலத்தை விபூதிப்பிள்ளையார் சந்நிதிக்கு எடுத்துவரச் சொன்னார். சடலத்தின் மீது விபூதியைத் தாரணம் செய்து செவியில் மந்திரங்களை ஓதினார். நாராயண சிவம் தூக்கத்தில் இருந்து விழிப்பதுபோல் எழுந்தார். ஸ்வாமிகளின் பிரதானசீடர்களில் ஒருவரானார்.

நாராயணசிவன் அவர்கள் புரசினால் பூஜித்தார்.

சென்னையில் மஹாசந்நிதானம் அவர்களின் சொல்லாற்றலில் ஈடுபாடு கொண்ட கூர்ஜர பிராமணர்கள் கௌரிசங்கரமாலையை சமர்ப்பித்தனர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ராஜாராம் தருவாடி பாதிரி மலர்களைச் சொரிந்தார்.

வடலூர் ராமலிங்க அடிகளாரின் அழைப்பின் பேரில் அவ்ரை சிதம்பரத்தில் சந்தித்தார். அவர் எதிரில் இருந்த ஆசனத்தில் அமராமல் பக்கவாட்டில் அமர்ந்து உரையாடினார்.காரணம் எதிரில் அமர்ந்திருப்பவரின் ஆற்றலை கிரஹித்துக் கொள்ளும் சக்தி வள்ளலாருக்கு உண்டு.

சுப்பராய டாக்கர் கோவிதாரத்தைக் குவித்தார்.

சப்தஸ்தானங்களுக்கு ஒரேநாளில் ஒரே நேரத்தில் கும்பாபிஷேகம் நடத்தினார்.எல்லா இடங்களிலும் அதே நேரத்தில் பக்தர்களுக்கு தரிசனம் அளித்தார்.

தேவகோட்டை பழனியப்பசெட்டியார் தங்க அரளி புஷ்பத்தால் பூஜித்தார்.

அந்த சமயம் ஒருலக்ஷம் பேருக்கு நடைபெற்ற அன்னதான விருந்திற்கு, தில்லைஸ்தானத்திற்கு பந்திக்கு நெய்வந்து சேரவில்லை. அங்கிருந்து பஞ்சநதேஸ்வர சாஸ்திரிகள் பதட்டத்துடன் விரைந்து வந்தார்.அவரிடம் சந்திர தீர்த்தத்திலிருந்து நான்கு குடங்கள் நீரை மொண்டு அதைப் பரிமாறச் சொன்னார். நீர் நெய்யாகியது. உரியநேரத்தில் அன்னதானம் சிறப்பாக நடைபெற்றது.

பஞ்சநதேஸ்வர சாஸ்திரிகள் ஆம்பல் பூவைத் தூவினார்.

குலசேகரபட்டினத்தில் இருந்தபொழுது பூர்வாசிரம அண்ணன் குப்பாணிசிவன் சிவலோகம் சென்றுகொண்டிருந்ததை அன்பர்களுக்குக் காட்டினார்.பத்தமடை கோயிலில் திருடவந்தவர்களை குலசேகரபட்டினத்தில் இருந்து பெருத்த குரல்கொடுத்து விரட்டினார்.

முட்டுச்சந்து மீ.கிருஷ்ணன் கொடிரோஜா மலர்களை இட்டார்.

பத்தமடை, கடியாட்டி, கீழச்சிவல்பட்டி உட்பட 63 ஊர்களுக்கு ஸ்வாமிகள் தம்திருக்கரங்களால் கும்பாபிஷேகம் நடத்தினார். அவர் இறுதியாக நடத்திய 64வது கும்பாபிஷேகம் அவரின் அவதார ஸ்தலமான கங்கைகொண்டான் ஊரில் அமைந்துள்ள ஸ்ரீஆனந்தவல்லி சமேதராயுள்ள ஸ்ரீகைலாஸநாதர் ஆலயம் ஆகும்.

வக்கீல் கிருஷ்ணஸ்வாமி ஐயர் பட்டிப்பூக்களைக் குழியில் இட்டார்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கொல்கத்தா ஹுப்ளிநதியில் ஸ்வாமிகள் சீடர்களுடன் படகில் போய்க் கொண்டிருந்தார்.படகு ஆபத்தான சுழலில் சிக்கிக் கொண்டது.இவரின் பிரார்த்தனையை ஏற்று காளிமாதாவே படகோட்டியாக வந்து படகை பத்திரமாகக் கரை சேர்த்தார்.

காமாக்ஷி ஜோஸியர் ஓரிதழ் தாமரைகொண்டு அர்ச்சித்தார்.

குழந்தைகளும் நல்ல கல்வி கற்க வேண்டும், ஒழுக்கத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்று விரும்பினார்.விபூதி,ருத்ராக்ஷம் அணிய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி அவர்களை ஆசிர்வதித்தார்.

மாவடி சிதம்பரம்பிள்ளை அடுக்கு நந்தியாவட்டையால் அர்ச்சித்தார்.

சுந்தரம்பிள்ளைக்குத் தத்துவ ஆசானாய் விளங்கி தத்துவஞானத்தை போதித்தார்.அவர் தத்துவப் பேராசிரியராக சுடர்விட வழிகாட்டினார்.

சுந்தரம் பிள்ளை அவர்கள் ஆவாரம் மலர்களைப் பொழிந்தார்.

புதுக்கோட்டை திவான் சேஷய்யா சாஸ்திரிகள் ஒருமுறை மட்டும் நேராக அமர்ந்து சாப்பிடுவதற்கும், அவருக்குத் தொடர்ந்து வந்த விக்கலை நிரந்தரமாக நிறுத்துவதற்கும் அனுக்ரஹம் செய்தார்.

வைத்தியம் கிருஷ்ணய்யர் செந்தாமரை இதழ்களால் பூஜித்தார்.

(அர்ச்சித்தார், பூஜித்தார், தூவினார், இட்டார்,பொழிந்தார் என்று கூறினால் கையளவு என்று எண்ண வேண்டாம். கூடைகூடையாக சமர்ப்பித்தனர் என்று பொருள்.)

இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது வானில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது.

அது என்ன ?

“பலநூறு பூக்கள் பலவகை சுண்ணம்
பலவேறு வாசனைத் தூள்கள் நிலவறை
எங்கும் பரவியே நன்மணம் வீசிட
எங்கும் நிறைந்தான் தலைவன்.”



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சாக்ஷாத் பரமேஸ்வரனின் அம்சம் மஹான் அப்பய்ய தீக்ஷிதர். அவர் வம்சாவளியில் வந்தவர் ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள். இவரும் பரமேச்வரனின் அவதாரமே!

நிலவறை முழுவதும் மணம்மிக்க பூக்களால் நிரம்பி வழிந்தது. சுகந்தமான வாசனை எங்கும் பரவியது. மேலே வழிந்து நின்ற புஷ்பங்களும் நிலவறைக்குள்ளேயே திணிக்கப்பட்டன. ஸ்வாமி களின் கட்டளையை ஏற்று நிலவறை சமாதியில் அமர்த்தி அவர் கூறிய முறைப்படி அனைத்தையும் பிறழாது செய்து விட்டனர்.

கடைசி நபராக கிருஷ்ணய்யர் வெளியில் வந்ததும் எவராலும் துக்கத்தைத் தாங்க முடியவில்லை. ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறித் தீர்த்து விட்டனர். உண்மை நிலை மறைந்து, உணர்ச்சிகள் மேலோங்கி நின்ற தருணம் அது. ஒருவராலும் பேச முடியாத சூழ்நிலை. கண்களில் நீர் பெருக, விம்மி விம்மி அழுதனர்.

ஒரு கடமையின் நிமித்தமாக பொறுப்புகளை நிறைவேற்று வதில் இதுவரை கவனம் பிறழ்ந்து இருந்தது. அந்தக் கடுமையான கடமை நிறைவேறியதும் அனைவரையும் ஒரு இறுக்கம் சூழ்ந்து கொண்டது. அபிஷேகித்த மலர்களைக் களைந்து மஹாசந்நிதானம் அவர்களை மீண்டும் வெளியில் கொண்டு வந்துவிடலாமா என்ற எண்ணமும் சிலருக்குத் தோன்றியது.

இத்தகைய இறுக்கமான சூழ்நிலையில் கணீரென்று ஒரு குரல் எழுந்தது.

அது......திவான் சேஷய்யா சாஸ்திரிகளின் குரலே ஆகும். ஆம் அவரேதான். தமது பருத்த சரீரத்தின் காரணமாக நிலவறையில் அவரால் நுழைய முடியவில்லை. எனவே வெளியில் ஒரு மரத்தடியில் அவருக்கேற்ற ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

அவர் பேச ஆரம்பித்தார். அது கட்டளை இடுவதுபோல் இருந்தது.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



“மகான்கள் மரிப்பதில்லை. அவர்களுக்கு அழிவு, மரணம்,இறப்பு என்பதே கிடையாது. நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களுக்கே பிறப்பு–இறப்பு–மீண்டும் பிறப்பு என்பதெல்லாம். மகனீயர்கள் தாம் நினைத்த மாத்திரத்தில் தோன்றுவார்கள். நினைத்த க்ஷணத்தில் மற்றவர்களின் கண்களிலிருந்து தம்மை மறைத்துக் கொள்வார்கள். அவர்கள் ஒரு உடலுடன் அவதாரம் எடுத்தாலும் அதே உருவத்தோடோ, வேறு உருவங்களிலோ பல இடங்களிலும் தோன்றி லீலைகள் செய்வார்கள். நம் ஸ்வாமிகளும் இந்த லீலைகளைச் செய்திருப்பதை நாம் அறிவோம்.

என்னுடைய போதாத கொடுப்பினை ஸ்வாமிகளுடன் ஓரிரு முறைகளே அவருடன் பழக்கம் ஏற்பட்டு தரிசிக்க முடிந்தது. அவருடைய அருளைப் பெற்றேன். ஆனால் அதை நான் அவ்வாறு எடுத்துக் கொள்ளவில்லை. ஸ்வாமிகள் ஜீவசமாதி ஆவதற்கு முன்பு இந்தக் குறுகிய காலத்திற்குள்ளேயே என்னை ஆட்கொண்டு விட்டார் என மகிழ்ச்சி அடைகிறேன். இத்தகைய பாக்கியம் எவருக்குக் கிடைக்கும்!

நீங்கள் எல்லாம் மஹாசந்நிதானத்துடன் பல வருடங்கள் இணைந்து ,அவரைப் புரிந்து கொள்ளும் பேறு பெற்றவர்கள். ஸ்வாமிகள் மஹாதேவனின் அம்சம். அவரிடமிருந்து அவரே வந்தார். அவரே அவருடன் ஒன்றாய்க் கலந்து விட்டார்.தாயின் குரலைக் கேட்டு விரைந்து ஓடிவரும் கன்றைப்போல் இறைவனின் குரல் கேட்டதும் தாமதியாது அவர் சேர வேண்டிய இடத்தைச் சென்றடைந்து விட்டார்.

மஹான்கள் ஜீவசமாதி ஆவது வருத்தப்பட வேண்டிய ஒரு நிகழ்வு அல்ல. அது கொண்டாடப்பட வேண்டிய விழாவாகும். ஒவ்வொரு ஆண்டும் இந்த நாள் ஆராதனை விழாவாகக் அனுசரிக்கப்பட வேண்டும். ஸ்வாமிகள் இங்கிருந்தபடியே உலகம் முழுவதும் உள்ள தன் பக்தர்களுக்குத் தன் கருணையை, அருளை வாரிவாரி வழங்குவார்.

மேலே ஆகாயத்தைப் பாருங்கள். காலை முதல் இரண்டு கருடன்கள் இட வலமாக வட்டமிட்டுக் கொண்டே உள்ளன.இது



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மிக நல்ல சகுனமாகும். ஸ்வாமிகள் இதோ இந்த காற்றில் கலந்து விட்டார்; நீரில் கரைந்திருக்கிறார்; மலர்களின் வாசங்களில் மறைந்திருக்கிறார்; பஞ்ச பூதங்களில் கலந்திருக்கிறார்; என்னில் இருக்கிறார்; உங்களில்இருக்கிறார்; நம் அனைவருள்ளும் இருக்கிறார். மனம் உருகி அழைத்தால், கூப்பிட்ட குரலுக்கு–நாம் எங்கிருந்தாலும் ஓடிவருவார். எந்த ரூபத்திலும் வருவார். நாம் அவர்மேல் அனன்ய பக்தி செலுத்துவோம்.

விரைவில் சிறப்பான அதிஷ்டானம் எழுப்புங்கள். எல்லாவித உதவிகளையும் சமஸ்தானம் செய்யும்.

அதிஷ்டானத்தின் நுழைவுவாயிலின் முன்பு விநாயகர் கோயில் கட்டப்பட வேண்டும். அந்த விநாயகர் ‘அரண்மனைப் பிள்ளையார்’ என்று அழைக்கப்படுவார்.

திவான் அவர்களின் ஆழமான பேச்சு பக்தர்களின் வேதனையைக் குறைத்தது. நிலவறையின் வழியைமூட ஒரு சதுரமான வெள்ளைக்கல் தயாராக இருந்தது. அதை திவான் அவர்கள் தொட்டுக் கொடுக்க சிவராமன் செட்டியார், ஜோஸியர் காமாக்ஷிசாஸ்திரிகள், நாராயண சிவன், திருநெல்வேலி சுந்தரம் பிள்ளை, வைத்தியர் கிருஷ்ணய்யர் ஆகிய ஐவரும் சுமந்து சென்று நிலவறை வழியை மூடினர்.

அந்த நேரம் அனைவரும் எழுப்பிய ‘சுந்தரா சுந்தரா’ என்ற கோஷம் விண்ணை எட்டியது.

மற்ற ஜீவசமாதிகளுக்கும், அரிமழம் ஸுந்தரர் ஜீவ சமாதிக்கும் என்ன வித்தியாசம்?

“நூல்பல தேர்ந்தவர் முத்திரை காட்டியே
கால்மடக்கி பத்மா சனத்தில் அமர்ந்தார்
அறையினில் நிட்டையில் கூடியே ஆதி
இறையில் இணைந்தனர் இன்று”

திவான் அவர்கள் தம் இரங்கல் உரையை முடித்ததும்,

வைத்தியம் கிருஷ்ணய்யர் சுருக்கமாக ஒரு கருத்தை வெளியிட்டார்:



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



'நாம் ஓரளவு ஸ்வாமிகள் ஜீவசமாதியான அதிர்ச்சியிலிருந்து மீண்டு வருகிறோம். என் சிற்றறிவிற்கு எட்டியவரை இன்று நிகழ்ந்த ஜீவசமாதி வைபவம் சற்றே வேறுபட்டது. ஏனைய பல ஜீவ சமாதிகளில் மஹான்கள் சமாதி பீடத்தில் அமர்ந்து நிஷ்டையில் மூழ்குவார்கள். ஒரு நேரத்தில் அவர்களின் இயக்கம் நின்றவுடன் சமாதியை எழுப்புவார்கள். ஆனால் இங்கே... (அவர் குரல் தழுதழுத்தது) மஹாசந்நிதானதம் அவர்களின் ஆணைப்படி ஜீவனுடன் இருக்கும் பொழுதே மலர்க் குவியல்களாலும், திருநீற்றாலும், பொன்னிற சுண்ணப்பொடியாலும், வாசனைப் பொருட்களாலும் அவர் ஜீவசமாதியில் அமர்ந்திருந்த நிலவறையை நிறைத்தோம். அவரின் இயக்கம் நின்றதை எவரும் அறியோம். அவர் இன்னமும் இங்கேதான் ஜீவனுடன் இருக்கிறார். இங்கிருந்து கொண்டே எங்கும் வியாபித்து இருப்பார்.'

பிறகு, சுந்தரம்பிள்ளை அவர்கள் பேசினார்.(இவரே பின்னாளில் ' பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை' என்று புகழ்பெற்றவர்.)

"மஹான் என்றால் கடவுள்,பெரியோன் என்று பொருள். மக்களைத் தம் அரும்பெரும் செயல்களால் தம்பால் ஈர்த்தவர் மகான்.

தர்மவழி நிற்பவராகவும், நற்பண்பு உடையவராகவும், தவசீலராகவும், மக்களை நல்வழிப்படுத்துபவராகவும் விளங்குபவரே மகான். இவர் தன்னுள் இருக்கும் ஆன்மாவை அனுபவ பூர்வமாக உணர்ந்தவர். தங்களுக்குள் தாங்கள் அனுபவிக்கும் இறைதத்துவத்தைத் தம்மை நாடிவரும் அடியார்களும் காணுமாறு அருள்புரிபவர்கள்.

நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் பௌதிக உடல், மனம், புத்தி, சூட்சும அகம்பாவம், ஆத்மா இந்த அம்சங்களைக்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



கொண்டுள்ளோம். அகம்பாவம் என்பது– நாம் வேறு, இறைவன் வேறு என்று நினைப்பதாகும்.ஆனால் மகான்களுக்கு இந்த அகம்பாவ அம்சம் கிடையாது. இத்தகைய இரண்டற்ற நிலையை எய்தியவர்களே மகான்கள்.இவர்களுக்கு ஆத்மபேதம் கிடையாது. உலகம் முழுவதற்கும் இவர்கள் பொதுவானவர்கள்.

எந்தவிதமான மாயையையும் உடைத்துக் கொண்டு வெளிவரும் தத்துவம் குரு–சிஷ்ய தத்துவம். தத்துவங்களிலேயே மிகச் சிறந்தது இதுவே ஆகும்.நம் குருநாதர் அருளிய உபதேசங்களைப் பின்பற்றி அவற்றின் வழி ஒழுகுவதே நாம் அவருக்குச் செலுத்தும் உன்னத அஞ்சலியாகும்.

இந்தப் புண்ணிய ஸ்தலத்தில் இன்று ஒரு சூளுரை செய்கிறேன். பின்வரும் நாட்களில் யான் ஒரு நாடகக் காப்பியம் படைப்பேன். அதில் எம் குருநாதரை இன்றியமையாத, கண்ணியமான , முக்கிய பாத்திரமாக அமைப்பேன். மகான் எனக்கு அருளிய தத்துவங்களை அவர் மூலம் உலகத்திற்குத் தெரிவிப்பேன். தமிழ் கூறும் நல்லுலகம் அந்த நூலைக் கொண்டாடும்.

‘சிவந்த அடிகள்;மலர்ந்த மதிமுகம்;கருணை ஒழுகும் கண்கள்; பரிவு காட்டும் புன்னகை;.....குற்றமற்ற பேச்சு; கருணையைத் தாங்கிய உடல்......’ இவற்றுடன் எம் குருநாதர் காட்சி தருவார்.

’பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்

எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல் ........’என்று பரம்பொருளாம் எம் குருநாதரைப் போற்றும் விதமாக, தெய்வதத்துவத்தை வெளிப்படுத்தும் விதமாக வாழ்த்துப்பாடல் அமையும்.நம் குருநாதர் எங்கும் இருப்பார், எப்பொழுதும் இருப்பார்; என்றும் இருப்பார். எனவே அவர் ஆணையின்படி நர்மதா பாண லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்வோம்.”



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அரிமழம் கட்டட வேலைகளிலும், தச்சு வேலைகளிலும் என்றும் சிறந்து விளங்குவது. கொத்தனார் பெருமக்கள் அழகான பீடத்தை அமைத்தனர். அதில் நல்ல நேரத்தில் வேதமந்திரங்கள் முழங்க அர்த்தநாரீஸ்வர சொரூபமான நர்மதா பாணலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பதினாறு வகையான அபிஷேகங்கள் நடைபெற்றன; மலர்களால் அலங்கரிக்கப்பட்டது; தூபதீப ஆராதனைகள் காட்டப்பட்டன.

மணிகள் ஒலித்தன.
நாதஸ்வரம் மங்கல இசையைப் பொழிந்தது.
அனைவரும் 'சுந்தரா ' 'சுந்தரா' என்று துதித்தனர்.
அந்த ஒலி காற்றில் கலந்து நீக்கமற எங்கும் நிறைந்தது.
அந்த நாமம் நமக்கும் நல்வழி காட்டுவதாகுக!
ஓம் சாந்தி!ஓம் சாந்தி!!ஓம் சாந்தி!!!
"சரிதம் படித்தோர் சரிதம் அறிந்தோர்
சரிதம் சிறப்பினைக் கேட்டோர் தவமாய்ப்
புரிந்து உரைத்தவர் யாவருக்கும் நன்மை
புரிவான் அரிமழத்து நாதன்!"

குழந்தையின் கோடுகள் ஓவியம் ஆனது
மழலையின் வார்த்தைகள் காவியம் ஆனது
அடியேன் எழுத்தும் சரிதம் ஆனது
முடிவிலா ஈசன் அருளால்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



1. "ஆரூர் பிறந்திட தில்லையைக் காண
அருணையை சிந்திக்க காசியில் மூச்சடங்க
நாளும் அரிமழம் ஊர்ப்பெயர் கேட்டிட
மாளுமே நம்வினை யாவும். "

2. அழிந்தது ஆணவம் மாயை மயக்கம்
ஒழிந்தது;வானவர் உள்ளம் மகிழ
எழுந்தது நற்றவ சிந்தனை;பெற்றோர்
பொழிந்தனர் நல்லருள் இங்கே."

3. பூசுவோம் நீற்றை அணிவோம் உருத்திராக்கம்
பேசுவோம் சுந்தரன் காதையை;பக்தராய்ப்
பாடுவோம் நற்புகழை;கூடியே யாவரும்
ஆடுவோம் உள்ளம் களித்து.

4. மருவிலா வெள்ளாற்றின் மாண்பை உரைக்க
திருவருள் கூடி வருக !நுரைநிறை
கங்கைக்கு ஈடான ஆறென்று போற்றியே
சங்கநாதம் செய்குவோம் நாம்.

5. சுந்தர தேசிகன் தானுகந்து நாடியே
வந்தமர்ந்த தூய மணிக்கோயில்;நாட்டமுடன்
தேடியே வந்தவர்க்கு இம்மை நலமெல்லாம்
கோடியாய் சேர்ந்திடும் காண்.

6. அங்கம் குழைந்திட கண்ணீர் பெருகிட
சுந்தரனைக் கும்பிட இன்மை நலமெல்லாம்
பங்கமின்றி வந்தடையும் முன்வினைப் பாவங்கள்
பஞ்சாய்ப் பறந்திடும் காண்.

7. சீர்வளர் நன்னகர் தன்னை நாடியே
சீலநிறை சுந்தரன் கால்நோவ வந்தான்
பேர்வளரும் மாசில்லா ஊராம் அரிமழத்தை
பார்சிறக்கச் செய்தான் அருளால்.

8. சிவனேசச் செல்வர்கள் சீலமுடன் வாழும்
சிறப்பான ஊராம் அரிமழம் நோக்கியே
மும்மலம் நீங்கிய சுந்தரன் வந்தான்தன்
செம்பாதம் மண்ணில் பதிந்து.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



9. செல்வம் விரும்பியோர் சீருடன் வந்தனர்
கல்வியை வேண்டியோர் பண்புடன் வந்தனர்
நற்கதி வேண்டியோர் கண்ணீரைத் தந்தனர்
பொற்பதம் பற்றி வணங்கி.

10. அடியவர்க் கென்றும் எளியோனாய் நாளும்
நொடியினில் வந்தே அருளைப் பொழிய
அரிமழம் ஊரில் உறைந்திடும் சீலன்
திருவடி ஏத்தித் தொழுவோம்.

11. எங்கும் கடவுள் எதுவும் கடவுளாம்
அங்கும் கடவுள் இங்கும் கடவுளாம்
மாயையை நீக்கிப் பரமனைக் கண்டவர்
யாவரும் இங்கே கடவுள்.

12. அதுவும் கடவுள் இதுவும் கடவுள்
எதுவும் கடவுள் மனம்அது நன்கு
தெளிந்து குருவைத் தொழுதிட எங்கும்
எளிதாய்த் தெரிவான் கடவுள்.

13. நீயும் கடவுள் அவனும் கடவுளே
நானும் கடவுள் அதுவும் கடவுளே
அத்வைத ஞானம் தெளிந்தவர் யாவர்க்கும்
வித்தைகள் தானே கூடும்.

14. பாரத மெங்கும் பலகாதம் சுற்றியே
நானிலத் தோர்க்கு நல்வழி காட்டினாய்
சொல்லாண்ட வேந்தன்எம் சுந்தர தேசிகனைப்
பல்லாண்டு பாடிப் பணிவோம்.

15. கம்பநதி மண்டபம் தன்னில் நடத்திய
சம்பவம் கூறிடும் தத்துவம் யாரே
அறிவர் முழுதாய் ?அனைத்தும் அறிந்த
இறைவன் வடிவினோய் போற்றி.

16. புகலறும் புண்ணிய கீர்த்தியோய் !உன்னைப்
பகலும் இரவும் மனதில் இருத்தி
அகமே குழைந்து பணிந்தேன் நிலைத்த
புகழைத் தருவாய் எனக்கு.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



17. உலக முதல்வன் உருத்திரன் மைந்தன்
நிலவினைச் சூடியோன் அன்பினைப் பெற்றோன்
கருமை நிறத்தவன் ஞானக் கொழுந்தின்
அருமையாம் பாதம் தொழுவோம்.

18. கற்றிலன் நற்றமிழ் ஓதி அறிந்திலன்
கற்றவர் சுற்றமும் சேர்ந்திலன் நானுமே
கேளாதார் யாவரும் உன்சரிதம் பாடிட
மாளாத காதலால் வந்தேன்.

19. அருமணி எங்கள் அரிமழம் வந்தே
பெருமை யடைந்திட கோயில் அமர்ந்தாய்
உருகியே பாடிய தற்குறி என்னைக்
கருத்துடன் காப்பாய் கனிந்து.

20. ஞானி வருக! சமநிலை கூடிய
யோகி வருகவே! ஞான நலமொரு
கோடி தருக! மனமது நாடியே
ஓடி வருகவே தேடி!
(ஒற்றில்லாத வெண்பா)

21. வேதா கமத்தின்மெய் ஞானப் பொருளாக
ஆதார சக்தியாய்த் தோன்றிடும் அம்மையே!
தாதாவைப் போலப் பொருள்தனை நல்கிடும்
மாதாவுன் தாளே சரண்.

22. திருநந்தி தேவனை சென்னியில் வைத்தே
உரைக்கின்றேன் சுந்தரன் உன்னத காதை
வருமிச் சிறப்பெல்லாம் உன்னடிக் கேயாம்
பிழைகளைக் காப்பாய் பொறுத்து.

23. தாய்தந்தை இன்றி உலகினில் தோன்றி
நோய்தந் தடியாரை ஆட்கொண்ட வள்ளல்
பழவினை தீர்த்தே அருளிடும் தெய்வம்
அரிமழ(ம்) சுந்தரனைப் போற்று.

24. சீர்மிக்க ஊராம் அரிமழம் தன்னிலே
பேர்பெற்ற சித்த மருத்துவ தெய்வமாய்
எளியோர் தொழுதிட வந்தவன்
களிப்புடன் நானும் தொழுதேன்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



25. தமிழும் சைவமும் இவரிரு கண்கள்
அமிழ்தெனப் போற்றியே உச்சிமேற் கொள்வர்
நகரத்தார் ஆற்றல் அடங்குமோ சொல்லில்?
பகரத்தான் சொற்களே இல்லை.

26. காசினில் என்றும் கணக்காய் இருப்பவர்
யாசிப்போர்க் கென்றும் வழங்கி மகிழ்வர்
தனவணிகர் மேன்மை உரைத்தல் சிறியோன்
எனக்கு இயலுமோ இங்கு.

27. கல்விக்கும் பள்ளிக்கும் ஆலயம் எழுப்பவும்
செல்வத்தை ஓராமல் நல்கி அகிலத்தில்
ஓங்கு புகழீட்டி உச்சம் அடைந்தவர்
பாங்கைப் பகர்தல் எளிதோ?

28. கார்மேகக் கூட்டமுடன் கர்ணனையும் விஞ்சியவர்
பாரில் கொடையிலே பாரியையும் மிஞ்சியவர்
தர்மமும் தானமும் காத்திட இப்புவியில்
கற்பகமும் ஈடோ இவர்க்கு?

29. அண்டரும் நான்முகத்து அய்யனும் பால்நிற
வெண்கடலில் பள்ளியே கொண்ட திருமாலும்
கண்களால் காண இயலா அரியோனே!
தொண்டன்முன் வந்து அருள்வாய்!

30. ஆலயங்கள் அன்னதானக் கூடங்கள் மாமன்னர்
மாளிகையை விஞ்சும் பேரெழில் இல்லங்கள்
ஆழ்கடல் ஓடியே தேடிய செல்வங்கள்
பாழ்படாது நிற்க அருள்வாய்.

31. ஆடல் அரசும் நற்கூடல் தேவியும்
பாடும் பொருளாய் மனதில் நிலைத்தனர்
வாடும் பொழுதில் வினைகள் களைந்திட
ஓடியே வந்தருள் செய்!

32. பணிவுடன் இன்சொல்லும் பண்பும் திருவும்
கனிவுடன் நற்கருணையும் நெஞ்சில் நிறுத்தியே
ஊருக்கு நற்பணி ஆற்றிடும் நல்லறிவை
காருண்ய மூர்த்தி தந்தான்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



33. அந்தணர் ஓம்பலும் ஆவினம் காத்தலும்
முந்தையோர் காட்டிய நல்வழி செல்லலும்
தந்தையார் கூற்றை மறவா திருப்பதும்
எம்மூர் நகரத்தார் மாண்பு.

34. அந்தமில் நற்றமிழ் வல்லோர்தம் ஊனில்
சிந்தையில் மூச்சில் உறைந்தே ஒளிர்விடும்
இந்திரர் ஒப்ப உயர்ந்து விளங்கிட
கந்தவேள் காப்பான் இனிது.

35. பூமலர் அமர்ந்தவன் நான்முகம் கொண்டவன்
ஆணவம் நீக்கி பிரணவ தத்துவம்
ஓதியே உய்வித்த உத்தமன் வேலவன்
சேவடி ஏத்தித் தொழுவோம்.

36. ஆயதாம் மூதூர் அரிமழம் ஊரினில்
மேவியே வந்து அருளைப் பொழிந்தவன்
மாயோன் மருகன் குறத்தி மணவாளன்
நாயகன் பாதம் கதி.

37. கற்பனை என்றனர்;கற்சிலை என்றனர்
தற்பரன் உன்னைக் கணமும் தொழுதிலர்
கயவரே ஆயினும் கல்லோரா னாலும்
மயிலேறி வந்துநீ காப்பாய்.

38. அரன்இடப் பாகம் அமர்ந்தவள் ஐந்து
கரத்தவன் அன்னை;அறுமுகத் தேவனைத்
தாமரை வாவியில் சேர்த்தே அணைத்தவள்
ஏழையைக் காக்க வருக!

39. அரிமழத்து அன்னையே!மீனாட்சி அம்மே!
பரிந்தினிது வந்திடுவாய் நாயேனைக் காக்கவே
வட்டக் கருவிழி மங்கையே!பாவியேன்
பட்டிடும் இன்னல்கள் தீர்ப்பாய்.

40. நல்லோர் குடியில் பிறக்கவே வைத்தவன்
பல்லோர் புகழ உயர்வாய் நிலைத்திருக்க
தந்தையும் தாயும் ஒழுக்கம் புகட்டியே
தங்கமாய்த் தாங்கினர் காண்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



41. தெய்வங்கள் எல்லாமும் என்னுடன் கூடியே
வையத் துயர்தீர்க்கும்!இப்பூ வுலகின்
இன்பங்கள் வந்தடைய வாழ்த்தினைச் சொல்லியே
இன்னிசை பாடி வரும்.

42. தூயவன் உள்ளத்தில் மாயமாய்த் தோன்றினாய்
சேயவன் என்னைத் திருத்திப் பணிகொண்டாய்
மாயவன் மாதவன் போற்றும் மருகனாம்
வேலவன் உன்னைப் பணிந்தேன்.

43 கற்றைக் குழலில் மதியை அணிந்தவன்
பொற்றா மரையடி போற்றி வணங்கிடும்
நற்றவ ஞானிகள் யாவரும் இப்புவியில்
உற்றவ ராவார் இனிதே!

44. அம்மையும் அப்பனும் ஒன்றெனத் தேர்ந்தபின்
பின்னை வினைகள் தொடர்ந்தே வருமோ?
திருவடி பற்றியே ஞானம் அடைந்தேன்
குருவடி என்றும் துணை.

45. படைத்தவன் பல்லுயிர் காக்கும் அருளை
உடைத்தவன் என்னுள் உறைபவன் இந்தக்
கடையேனைக் காக்கும் கடமை உடையவன்
சடையனைப் போற்றுவேன் என்றும்.

46. சுந்தரன் என்றதோர் ஒப்பற்ற மாமணி
தந்திரம் செய்தே மனதுள் புகுந்தான்
மந்திரத்தில் கட்டுண்ட நாகம்போல் நானுமே
சுந்தரனில் மூழ்கினேன் இன்று.

47. சந்நியாச ரூபனாய் தேடியே வந்தவன்
அஞ்ஞானம் நீக்கி சமாதி புகுந்தான்
அரிமழும் உய்யவே நல்லருள் ஆட்சி
பரிவுடனே செய்கிறான் இங்கு.

48. எண்தகு அய்யன் சிவனார் வடிவமே
எண்ணத் தகுமோ அவனது லீலைகள்
விண்ணக தெய்வம் இருகரம் நீட்டியே
உண்டனன் தன்பெயர் சொல்லி.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



49. கங்கை அணிந்தவன் இவ்வுல குய்யவே
கங்கையைக் கொண்டான் நகரில் உதித்தனன்
திங்களைச் சூடிய எம்பிரான் ஆற்றலை
இங்குயான் செப்பல் முறையோ ?

50. அண்ணலென் ஈசன் வடிவினை சிந்தையில்
எண்ணிடில் எல்லையில் இன்பம் பயக்குமே
கண்ணில் நிறைவாய்த் தோன்றிடும் அய்யனை
நண்ணியே போற்றினேன் நான்.

51. பண்டொரு காலத்தில் பண்ணிய செய்தவம்
புண்ணியமாய்ப் பொங்கிய திங்கே! பெருமழை
நண்ணியே பெய்தாற்போல் நானிலம் உய்ந்திடப்
புண்ணியன் வந்தான் அருகே!

52. நாற்பெரும் வேதங்கள் நாளும் விளக்கியே
ஏற்றதோர் ஈசனின் ஏற்றமும் கூறியே
பார்முழுதும் பாதத்தால் ஓங்கி அளந்தவன்
சீர்தனை சிந்தையில் வைப்போம்.

53. பிறந்தும் வளர்ந்தும் சிவனை நினைந்தும்
சிறப்புடன் சீரடி ஏத்தியும் வாழ்தலே
புவியில் யாவர்க்கும் வீடளிக்கும் என்றுரைத்த
தவநேசன் செவ்வடியே காப்பு.

54. ஓரேழு நற்றவ ஞானிகள் உன்னடி
பேரருளால் தேடியே வந்து தொழுவரே!
நன்மை தருநம் அரிமழும் சாமியின்
மேன்மையைச் செப்பியே உய்வோம்!

55. அந்தமில் ஆகம சாற்றைப் பிழிந்து
முந்து தமிழுடன் மூத்த மொழியாம்
வடமொழி தன்னிலும் தானுரைத்த ஆற்றல்
கடந்தே சிறக்கும் புவியில்.

56. அன்னவன் மேன்மையை முற்றிலும் சொல்லிட
உன்னடி தேடியே வந்தனன் பாற்கடல்
பள்ளிகொள் ஆதிசேடன் ஆயிரம் நாவையும்
அள்ளியே தந்திடு வாய்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



57. "செம்மைசேர் எங்கள் சற்குருவே நின்னடி
மும்மலம் தீர்த்திடும் மாமருந் தென்ப
தறிந்தோம் பணிந்தோம் நெகிழ்ந்தோம் கசிந்தோம்
மறந்திலோம் உன்பெற் றியை."

58. சிந்தும் கருணை விழிகளில் மின்னிட
மைந்தன் அடியனைக் காக்க வருவாய்
பரமன் உனையன்றி வேறொன் றறியா
அறிவினை நாளும் அருள்வாய்.

59. தூயவை யாவினும் தூயவன் நீயன்றோ!
மேவிய பக்தர் மனக்குறை தீர்த்திட
பாவியர் ஆயினும் சூழ்ந்திடும் ஊழ்வினை
நோயினைத் தீர்ப்பாய் விரைந்து.

60. மூலத்தின் மூத்தோன் முதிரா இளையவன்
காலத்தைக் கட்டும் கருணை முதல்வன்
ஞாலம் அளக்கும் அறிவின் வடிவினன்
சீலத்தின் தோற்றமே போற்றி.

61. பொன்னென்பேன் பூவென்பேன் கார்முகில் நீர்என்பேன்
கண்ணின் ஒளிஎன்பேன் மண்ணின் மணிஎன்பேன்
பண்ணின் சுவைஎன்பேன் நன்மலர் வாசமென்பேன்
எண்ணம் புகுந்த உனையே!

62. மாகம் திகழும் அரிமழம் ஊரில்
பாகின் மொழிநிகர் பாவையர் போற்றி
விசும்புற ஓங்கிய ஆலயம் போந்தே
பசும்பொன் அணிகள் அளிப்பர்
மாகம்–வானளாவிய மாளிகைகள்.

63. சிறைமீட்டார் காளியுடன் சேத்துமேல் ஏறி
கரைஅமர்ந்த அய்யனார் மாரியுடன் நாளும்
விளங்கிய ஆற்றலுடன் வீற்றிருக்கும் அம்மன்
துலங்கியே அரசாளும் ஊர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



64. ஊர்தோறும் ஊரணிகள் ஊரணி மேடெங்கும்
பேர்அருள் அள்ளி வழங்கிடும் பிள்ளையார்
சீர்மிகு தென்கலை கேடில் வடகலை
பார்மீதில் உண்டோ வேரூர் ?

65. கல்லானும் யானே !கசடனும் யானேயாம் !
பொல்லானும் யானே !அசடனும் யானே !
புவியிற் சிறந்தவோர் பேதை எனையும் !
கலியுகத் தெய்வமே காப்பாய்.

66. மண்ணென்றால் உந்தன் திருவடி மண்ணாவேன்
பொன்னெனில் உன்திரு மார்பின் அணியாவேன்
சொல்லெனில் உன்புகழ் பாடிடும் சொல்லாவேன்
கல்லானைக் காக்க வருக !

67. எந்நெறி யாயினும் உன்நெறி யன்றியோர்
செந்நெறி யாதும் அறிந்திலன் யானே
ஒருகண மேனும் அடியவன் என்னின்
கரதலம் பற்றி அருள்.

68. விருப்புடன் பாதங்கள் பற்றியே எங்கள்
கருப்பனை வேண்டி சரிதம் எழுதினேன்
நேரான சிந்தனை என்னுள்ளே வந்திட
சீராய் அருள்வாய் நீயே !

69. மாடம் நிறைஊர்; மண்டபம் உள்ளஊர் ;
கோபுரம் கொண்டஊர்; கோபாலர் வாழுமூர்;
அன்னதானக் கூடம் நிறைந்தநல் ஊரிது
அந்தணர் மேவிடும் ஊரே !

70. குன்றக் குடியின் மலையில் அமர்ந்தோன்
செந்தண்மை கொண்டே ஒழுகிடும் எங்கள்
குடியின் குலதெய்வம் ;செம்பொன் நிறத்தோன்
வடிவேலன் காப்பான் எமை.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



71. நெஞ்சிலே நீங்கா தமர்ந்த இறைவனே!
வஞ்சமே இன்றி அருளைப் பொழிந்திடும்
சேஷாத்ரி நாதனே!சேவித்தேன் உன்பாதம்
சேயெனைக் காக்க வருக!

72. மீனாட்சி மைந்தனே!நான்மாடக் கூடலின்
நாயகனே!நல்லவர் நாடிடும் தூயவனே!
தாயாக வந்தே அருளும் குழந்தையாம்
ஆனந்தன் பாதம் சரணம்.

73. சிவனென்பார் நீலகண்டன் என்பார் சடைசூழ்
சிரசினில் நீர்மலி கங்கை சுமந்த
கங்கா தரனென்பார் மீனாட்சி நாதனென்பார்
எங்கும் நிறைந்தானைப் போற்று.

74. அந்தமில் ஞானம் படைத்தோய் குறைவில்லா
செந்தமிழில் உன்புகழ் பாடிட ஓடியே
வந்த அறிவிலா இச்சிறுவன் தன்னையும்
முந்தியே காத்திடல் வேண்டும்.

75. மண்டு பிணியால் வருந்தும் துயரினைக்
கண்டு களிப்பையோ ?இன்னமும் தாமதமேன் ?
பண்டு வயல்சூழ் அரிமழம் ஊரினைக்
கொண்டு அருளும் பிரானே!

76. நஞ்சை அருந்தினாய்;பெண்ணை இடம்வைத்தாய்;
தஞ்சம் எனத்தாள் பணிந்தால் மகிழ்வுடன்
அஞ்சேல்!எனஅபயம் நல்கி அருளினாய்
மஞ்சுசூழ் வெற்பின் அரசே!

77. நானோர் விளையாட்டு பொம்மையா உன்கையில்
நாயகன் உன்செவி என்குறை கேட்டிலையோ ?
யாரிடம் சொல்லி அரற்றுவேன் ?என்துயர்
நீங்கிட ஓடி வருவாய்.

78. தையலைத் தலையில் சூடிய என்னுயிர்
அய்யனே!தில்லையின் மன்னனே!நாளுமே
நைய்யும் மெலியும் அடியனைக் காக்க
வையம்போற்ற வந்தருள் வாயே!



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



79. பொய்யான வாழ்வினை நச்சியே இவ்வுலகில்
செய்பிழைகள் எண்ணில் அடங்கி விடுமோ ?
அவையெல்லாம் சிந்தையில் கொள்ளாது காப்பாய்
வையைசேரி ஆளும் பிரானே!

80. அண்டரும் நான்முக அய்யனும் பால்நிற
வெண்கடல் பள்ளியே கொண்ட திருமாலும்
கண்களால் காண இயலா அரியோனே!
தொண்டனைக் காத்து அருள்வாய்.

81. சிவனார் குலம்விளங்க சீரெல்லாம் சேர
அவனியிலே பட்டங்கள் பெற்றுச் சிறக்க
வையைச்சேரி தேடியே வந்தாய் அருளை
வையைபோல் வழங்கினாய் அன்று!

82. நாதனாம் ஏகனின் நல்லருள் பெற்றே
மேளகர்த்தா ராகங்கள் மேன்மையாய்ச் செய்தான்
மஹாவைத் தியநாதன் அய்யாறு அப்பன்
மஹாசந் நிதியில் தானே!

83. ஊர்காணா துள்ளே நுழைந்தான்;நுழைந்தவன்
யாரும் அறியா துபதேசம் நல்கினான்
ஓதிய வேதம் உரைத்த நொடியிலே
காற்றில் மறைந்தான் கடுகி!

84. ஓதி உணர்ந்த உயர்நல(ம்) மிக்கவன்
கோதில்லா சுந்தரன் காதையை ஈடில்லா
சூதனை ஏத்தித் தொழுது உரைத்திட
பேதையேன் வந்தேன் பணிந்து.

85. மறைபல கூறிடும் உட்பொருள் யாவும்
இறைவனின் சத்திய வாக்கேயாம் என்று
பிறையணி பித்தனாம் சித்தனின் வார்த்தை
மறவாது சிந்தையில் கொள்வோம்.

86. சீலம் மிகுந்த அரிமழம் நாட்டினில்
மேன்மை மிக்க நகரத்தார் நாட்டாரும்
வேதம் பயின்ற அந்தணர் யாவரும்
பேதமின்றி வாழ்வது கண்டீர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



87. வளவயல் நீர்சூழ் மருதம் செழித்து
கிளைநிறை தொங்கும் கனிகள் நிறைந்த
அருள்உறை நல்லூர் அரிமழம் தன்னின்
பெருமையைச் செப்பிட வந்தேன்.

88. திருமருவும் கல்வியும் செல்வமும் நாளும்
அருகிலே வந்திடும்; நற்குடும்பப் பெண்டிர்
கருவிலே நற்றிரு வந்தே அமரும்
அரிமழம் என்றுரைத் தாலே!

89. இயலானது கொண்டுன் திருநாமம் பாட
முயலாதான் இம்மூடன்; மாறிடும் புத்தி
செயலது அற்று மயங்கியே நிற்கும்
அயலானையும் காத்தல் கடன்.

## இயல்—கல்வி

90. கற்றும் செவியுறக் கேட்டும் உரைப்பினும்
முற்றும் நின்புகழ் சொல்லிட வல்லவன்
அல்லேன்; ஈசனே பொல்லான்இக்
கல்லானையும் காக்க வருக!

91. வான்மழை பெய்நிலத்தில் நெல்வளர்க்கும் நாட்டாரும்
ஞானமறை ஓதியே வேள்விசெய் பார்ப்பர்
திரைகடல் ஓடி தனம்பெருக்கும் தர்மம்
மிகுவைசியர் வாழும் நிலம்.

92. திருவடையும் சீரடையும் நாவினில் என்றும்
உருக்கொண்டு நாமகளின் ஆற்றல் அடையும்
கருவினில் நன்மக்கட் பேறுமங் குண்டாம்
அருணா சலநாதன் போற்றி

93. மாசிலாப் பொன்னே! ஒளிரும் மணிவிளக்கே!
காசினியில் மானிடர் உய்ய நடந்து
அரிமழம் வந்தாய்! அருளினை வேண்டிப்
பரிவுடன் பாடுமெனைக் காப்பாய்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



94. காடுவெட்டி நன்செய் நிலத்தைத் திருத்தியே
மேடுகட்டி நீரின் வரப்பு உயர்த்தியே
நீர்பாய்ச்சி நன்னெல் வளர்க்கும் உழவர்
வேர்ஆவர் எங்கள் பதிக்கே!

95. புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகிப்
பல்விருட்சம் ஆகிப் பறவையாய் பாம்பாகிப்
கல்லா மனிதராய் சந்நிதி வந்தவர்க்கு
நல்லருள் செய்வாய் கனிந்து.

96. சிவந்த நிறத்தோனே! நல்லுரை நல்கிடும்
செம்பவள வாயோனே !செம்மை திறம்பாநின்
செவ்வடி பற்றினேன்;பேரருள் கூட்டுவாய்
பல்வடி வான இறைவா!

97. அய்யன் திருவடியை அன்புடன் சிந்திப்போர்
வையத் துயர்யாவும் தீருமே! மேதினியில்
மெய்யான இன்பங்கள் தேடியே வந்திடும்
பொய்யில்லை உண்மை ஈது.

98. ஞான வழிநின்றே வேள்விக்கும் அந்தணர்
வான மழைகண்டு வளம்பெருக்கும் வேளாளர்
ஆழி வழிபோய் பொருளைக் குவித்தநல்
காழியர் வாழும் நகர்.
(காழியர்–உறுதியானவர்;நிலையானவர்.)

99. ஓடியே வந்துன்னை சேவிக்க வருபவர்
பாடியே உன்புகழ் பார்மிசை சேர்த்தவர்
ஆடியே உன்நாமம் நாளும் உரைப்பவர்
கூடியே வாழ்வர் இனிது.

100. கண்ணிரெண்டு பெற்றுன்னைக் கண்டவர் நற்றவம்
பண்ணியோர் என்றறி! ஈசனாம் சுந்தரன்
மண்ணிலே வந்துதித்தான், மானிடரே நல்லவனை
நண்ணியே நாளும் தொழுவீர்!



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



101. அமுதமாய் நற்கருத்தை நாளுமே உந்தன்
குமுதவாய் ஓதிடும்;கேட்டுப் பயனுற்றோர்
சிந்தையும் நெஞ்சும் நெகிழ்ந்தே திருவடி
வந்தே பணிவர் மகிழ்ந்து.

102. அய்யாறு மற்றும் பலநூறு ஆலயங்கள்
அய்யனின் நோக்கால் குடமுழுக்கு கண்டன
மெய்யடியார் ஆனந்தம் கொண்டு குவிந்தனர்நின்
செவ்வடி போற்றிப் பணிந்தார்.

103. சானகியைக் கைப்பிடித்தாய் இல்லற தர்மத்தின்
சாத்திரங்கள் ஓர்ந்தவன் ஞானா சிரியனாய்
ஓதிய தத்துவங்கள் கைக்கொண்டே உன்னுடைய
பாதியே பக்தையும் ஆனாள்.

104. கல்லாரும் கற்றாரும் தத்துவம் கண்டிட
எல்லார்க்கும் நல்லா சிரியனாய் வந்தநீ
சொல்லிய நல்மொழி யாவும் அனைவருக்கும்
கல்லில் செதுக்கிய வேதம்.

105. ஆயிரம் உண்டிங்கு வேற்றுமை என்றுரைத்து
பூவரவாய் மெல்லப் புகுந்த மிலேச்சர்கள்
காரியம் யாவினும் கைக்கொண்டு நம்மக்கள்
வீரியம் யாவும் சிதைத்தார்.

106. எவ்வடிவில் உன்னைத் துதித்தாலும் அட்டியின்றி
அவ்வுருவாய் ஆங்கே எழுந்தருளி அன்பர்க்கு
வேண்டுவன வேண்டிய வண்ணம் தருநிதியே!
யாண்டும் என்னிடர் தீர்ப்பாய்.

107. அந்நாள் தொடங்கியே இந்நாள் வரையிலும்
எந்நாளும் உன்னை மறவாத நல்மனம்
வேண்டினேன்;வேறொன்று வேண்டாத பேதையேன்
மண்டுகம் என்னையும் காப்பாய்!

108. அதுவெனில் நீயேயாம்! நீயெனில் என்றும்
அதுவேயாம்! நீயும் அதுவும் பிறிதில்லை;
இத்தத்துவம் புத்தியில் கொண்டோர் அறிவரே
அத்வைத தத்துவ சாரம்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



109. ஆற்றிடும் என்பணி யாதென் றறிந்திலன்
பெற்றிடும் காசிலும் பற்றினை நீக்கினேன்;
குரங்கின் நியாயமும் பூனையின் பரிவும்
கரதலப் பாடமே ஆகும்.

110. வேதத்தின் உட்பொருளாய் நின்றான்;வேண்டிய
வேழத்தின் வேதனை தீர்க்கவே புள்ளின்மேல்
வேகமாய் வந்தான் சுடராழி ஏந்திய
வேந்தன் இடரினைத் தீர்ப்பான்.

111. வேள்வணிகர் இல்லங்கள் தோறும் உறைபவளே!
நாள்தோறும் உன்பாதம் பற்றித் தொழுதேன்
அடியவன் வேண்டல் திருச்செவி ஏறுமோ ?
கடுகியே வந்துநீ காப்பாய்.

112. சீத மதிஒளியில் செம்பொன்னாய்த் தோன்றும்
தாதவிழ்பூ சூடிய நம்பெருமான் நாயகன்
ஆலய கோபுரம் கண்ணாரக் கண்டாலே
தேடிய பாவங்கள் தீரும்.

113. செந்நிறத்தான் செம்மனத்தான் செம்பவள வாயினான்
சுந்தர தேசிகன் பொன்னடி போற்றினால்
தன்னையே தான்தருவான் இப்புவியில் எந்நாளும்
அன்பரைக் காத்திடமுன் நிற்பான்.

114. பொன்னுடை யோரும் பொருளுடை யோரும்நற்
மன்னு புகழுடை யோரும் மதிநிறை
மிக்கவ ராயினும் இல்லோரே இவ்வுலகில்
மக்கட்பே றில்லா தவர்.

115. கார்மேகங் கண்ட மயிலோ ? விண்ணிடை
நீர்பெற் றுயர்ந்த விளைநிலமோ ?பூமியில்
யார்செய்த பேறோ சிவனாய சுந்தரன்
பார்மீதில் வந்துதித்தான் இன்று.

116. வையத்து துயர்நீங்க மாயம் பலபுரிந்து
தெய்வமே இங்கு மனமிரங்கி வந்தது
மெய்வகையாய்ப் பாதம் பணிந்தோரைக் காக்க
கைதூக்கி விடுவான் என்றும்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



117. மாமறை நோற்றோர் வதியும் பதியில்
தூமலர்ப் பொன்னடி பூமியில் தோயவே
ஆநிரை நல்லூர் அரிமழம் தேடியே
தூயவன் வந்தனன் இன்று.

118. மறைமுதல்வன் நாநிலம் உய்யவே விண்ணின்
மழையென மண்ணிலே நற்பதி தேடி
அரிமழம் வந்தான்;அருளைப் பொழிந்தான்
அரனவன் பாதம் தொழுவோம்.

119. கங்கையின் வெள்ளம் சங்கில் அடங்குமோ?
சங்கரன் பெற்றி எழுதவும் கூடுமோ?
மூடன்நான் பாடுதல் காவியம் ஆகுமோ?
ஆடல் அரசே! உரை

120. உலகம் முழுதையும் ஈன்றஎம் தாயே!
நலம்பல நல்கிடும் ஈசன் துணையே!
தொல்வினைத் தீதால் உன்னைட் தொழுதறியாப்
பாலனையும் காத்தருள் வாயே!

121. தவம்புரிந்தான்;நாளும் தவறாது ஈசன்
சிவன்நாமம் செப்பினான்;உலகம் உய்யவே
காயத்ரி வேள்வி ஒருகோடி செய்தனன்
தீதெல்லாம் நீங்கிட வே!

122. பிறவிப் பிணிநீக்கும் வைத்தியன் நீயே!
சிறப்புகள் யாவும் அளிப்பவன் நீயே!
அகஇருள் நீக்கியே ஞானம் வழங்கும்
பகலவன் உன்செவ்வடி காப்பு.

123. இனிநான் உணர்வதற் கொன்றில்லை யார்க்கும்
இனியவன் உன்சீரடி போற்றிப் பணிந்தேன்
கனிநாணும் இன்மொழி கொண்டோய்!எனக்கு
இனிபிறவாப் பேற்றை அருள்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



124. அந்தமில் நான்மறை ஓதியே நற்றவ
செந்தமிழ் நாட்டில் பவனியே வந்தனன்
சிங்கள நாடும் வடபுலமும் கால்பதித்து
எங்கும் அருளினாய் நன்று.

125. அந்தி நிறத்தவன் ஞானக் கொழுந்தினன்
புந்தியில் நன்றே அமர்ந்தவன் ஐந்து
கரத்தவன் யானை முகதோன் தன்னை
அகத்தினில் வைத்துப் பணிவோம்.

126. ஆதியாம் யானை முகத்தான் திருவடி
நீதியாய் நெஞ்சில் நிலையாய் இருத்தி
சிறுமையாம் ஆணவம் நீங்கியே வாழ
அறுமுகன் அண்ணனைப் போற்று.

127. ஐங்கரனே நின்மலனே நித்திலத்து நாயகனே
சின்மயனே சீரெல்லாம் நல்குவாய்;நாளெல்லாம்
உன்பாதம் பற்றியே நற்றுதி செய்குவேன்
கந்தனுக்கு மூத்தோனே காப்பாய்.

128. பிறப்பு இறப்பு இரண்டும் இலாதான்
இறைவன் இவனென ஞானியர் ஓர்வர்
இகபர இன்பங்கள் யாவும் அளித்து
அகம்புறம் நின்றான் இனிது.

129. அரிமழம் நன்னகர் நாடியே வந்து
பரிவுடன் ஆசிகள் நல்கிடும் எங்கள்
அரண்மனைப் பிள்ளையார் தண்தாள் பணிந்து
உரைத்திட வந்தேன் சரிதம்.

130. என்குறை யாவும் இறையே அறிந்திடும்
முன்வினைப் பாவம் அனைத்தையும் நீக்கிடும்
கந்தனின் பொன்னடி பற்றிக் கழறிட
சந்நிதி தேடியே வந்தேன்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



131. எண்ணும் எழுத்தும் எனக்கே உரைத்தாய்
பண்ணிய பாவம் கடுகியே நீங்கிட
பன்னிரு தோளுடன் பக்கமே வந்தஅப்
புண்ணிய மூர்த்தியைப் போற்று.

132. முறையறியா என்னையும் செந்தமிழ்ப் பாவின்
கரையறியா தற்குறி என்னையும் விலக்கியே
தள்ளாது நற்றமிழை என்னுள் தணியாது
அள்ளிப் புகட்டினாள் வாணி!

133. உள்ளத்தில் உள்ளானை ஊனுயிரில் நின்றானை
அள்ளவே குறையா அமிழ்தத் தமிழினைத்
வள்ளலெனத் தந்தானை என்குல தெய்வமாம்
வள்ளி மணாளனை ஏத்து.

134. நெற்றியின் மத்தியில் கண்ணுடை தெய்வமவன்
தெற்கு திசைபார்த்து முத்திரை காட்டியே
நால்வருடன் ஆலின்கீழ் வீற்று இருப்பவன்
நால்வகைப் பேறும் அளிப்பான்.

135. தூயனே !நேசனே !மாயோனே !ஈசனே !
ஆசானே !தேவனே !லோக குருநீயே !
ஜீவனே !வேத உருவே !தயாகரா !
சீரே கருணா ரசமே !

**(ஒற்றில்லா வெண்பா)**

136. வித்தையின் வித்தே !அமுதமாம் ஞானத்தின்
சத்தே !வினைகளைத் தீர்க்கும் குருவே!
தயையின் வடிவே !கபாலி உன்தாள்
இயைந்து பணிந்தனன் நான்.

137. வேதமும் நீயே !உலகுய்ய வந்திட்ட
வேந்தனும் நீயே !அறுபத்து நான்கு
வடிவத்தின் ஆதாரம் நீயே! சிவனாம்
படிமமாய் வந்தவன் நீயே!



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



138. பொய்யுரையா மக்கள் வாழ்ந்து வளம்சேர்
வையச்சேரி ஊரினில் கால்பதித்து நல்லருள்
செய்து சிவன்சோத ரர்கள் மனம்மகிழ
பெய்தாய் அருள்மழை யை.

139. பலகற்ற ஆன்றோர்கள் சொல்லார்தம் வன்மை
அலகிலா ஆற்றல் உடையோர் உரையார்தம்
செம்மை;அறிந்தோர் சபைதன்னில் ஆடிடும்
பொய்மை தணியும் அடங்கி.

140. நல்லறமும் நல்லின்பம் ஒண்பொருள் கொண்டதோர்
சொல்லறமும் நல்கியே நல்வழி காட்டினாய்
பல்லறம் கற்றதோர் மானிடர் ஏத்தியே
அல்லல் தொலைத்தே மகிழ்ந்தார்.

141. நல்லவை கேட்டல் அரிது;கேட்டதன்பின்
செல்லல் அரிது;பழுதறக் கற்றல்
அரிது;முழுதும் அஃதுணர்ந்து நிற்றல்
அரிதிலும் மிக்க அரிதாம்.

142. குளம்வெட்டி ஆலயம் கட்டி நிறைவாம்
உளம்தொடும் கல்வியின் சாலை அமைத்து
மணம்மிகு நந்தவனம் கண்டு மகிழ்ந்தார்
குணம்கொண்ட நற்சிரேட் டர்கள்.

143. உழுவயல் ஆக்கி இயற்கை வேளாண்மை
செழுமையாய் செய்து நலம்சேர் சிறந்த
பழமரங்கள் நட்டு வளம்சேர்க்கும் வேளார்
அழகுற வாழ்ந்திடும் ஊர்.

144. சமன்செய்து தூக்கும் துலாக்கோல் போலும்
அமைந்த வணிகர்; திறன்வாய்ந்த பொன்செய்
வினைஞர் ; மரத்தில் கலைகண்ட தச்சர்
இணையாய் வசிக்கும் ஊர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



145. நந்தா மணிவிளக்கே !விந்தாது வேகமாய்
முந்தோடி என்னைக் கைதூக்கிக் காத்திடு!
முந்தீய கர்மங்கள் முற்றிலும் மாய்ந்திட
சுந்தாக ஓடி வருவாய்.

146. கருவான நாள்முதலாய் உந்தன் மேலாம்
திருவடி காண உடலூன் தவிக்க
உருகியே எய்த்து இளைத்தேன் பரமா!
கருணையால் காத்திடு என்னை.

147. பொற்றாள் பணிந்தே அடியேன் கதறினேன்
குற்றவேல் செய்ததில் குற்றமேதும் உண்டோ?
சிற்றாள் பலரினும் சிற்றாள் எனையும்என்
சுற்றமும் காப்பாய் கனிந்து.

148. சிந்திப்பார் செய்வினை எல்லாமும் தீர்த்திடும்
முந்தியே முப்புரம் எய்த முதல்வனே!
நன்மடந்தை பாகம் மகிழ்ந்த கல்யாண
சுந்தரன் சேவடி போற்றி!

149. துலங்கு சிகையும் மணம்நிறை கொன்றை
விளங்கு முடியினில் நாகமும் திங்களும்
பொங்கிவரும் ஆறும் பொலிவாய் அமைந்தவன்
ஓங்கு புகழ்அளிப்பான் என்றும்.

150. நெற்றியில் கண்ணுடையான் ஏறு உகந்தேறி
பெற்றியை நல்கும் தகையோன் பணிந்தோர்க்கு
வெற்றி அளித்திடும் நீரிட்ட நெற்றியர்
ஏற்றம் அளிப்பான் நமக்கு.

151. கட்டிவிட்ட செஞ்சடையில் கங்கையைக் கொண்டவன்
மட்டவிழ்ந்த கோதை உடனிருக்க மட்டற்ற இன்பம்
திருஆல வாயன் வழங்குவான் அன்னான்
திருவடியே காப்பு எமக்கு.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



152. நமசிவாய என்னுமோர் ஐந்தெழுத்தில் ஆன்மா
அபாயமில்லை என்றறிந்து ஒன்றினால் அஃதே
தவமாகும் ஈசன் திருவடிப் பேறருளும்
உபாயமாகும் என்ப துணர்.

153. வேதம் பயின்றோர் திருநீறு பூசியோர்
நீதிவழி ஏகியோர் கண்டமதில் தூய
உருத்திராக்கம் சூடியோர் இல்லங்கள் தோறும்
உமையொடு ஈசன் இருப்பான்.

154. மாலோடு மறையவன் தானும் மறுவுருவில்
காலோடு கங்கை மிளிர்முடி தேட
காணவொண்ணா பேருருவாம் எங்கள் ஐயன்திருப்
பாதம் பணிந்தேத் துவாம்.

155. பாம்பை அணிந்தவன் தாழ்சடை முடிந்தவன்
சாம்பல் பூசியே சாத்திரங்கள் சொல்பவன் ;
ஓம்பல் எருதேறி வேதங்கள் ஓதுபவன்
தேம்பல் பிறைமதியோன் காப்பான்.
ஓம்பல்—வலிமையான
தேம்பல்—ஒளிநிரம்பிய.

156. சிந்தா மணிசெல்வன் சிங்கார வேலவன்
நந்தாத சோதியாய் நம்குடியில் தோன்றினான்
நல்லுள்ளம் கொண்டவர் நாடியே வந்தனர்
பொல்லாதோர் ஓடியே சென்றார்.

157. தோன்றாத் துணையாய் வருவோனே !வேலவா !
பன்னிரு தோளுடையோய் !பக்தனைக் காத்திடு !
என்சொல்லிப் போற்றின் மனமிரங்கி ஓடியே
என்முன் வருவாய் குகனே !

158. சிவமே வருக ! நலமே தருக !
சிவநிறை கூடி பவமது ஓடிட
யோகி வருக ! ருணமது மாறவு
மோடி வருக ! வருக !!



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



**(ஒற்றில்லா வெண்பா)**

159. மாடாக வந்தாலும் முக்கண்ணன் ஏறிடும்
மாடாக வேண்டும் எழுதிடும் ஏடென்றால்
தேவார ஏடாக வேண்டும் அவன்கர
ஓடாக வேண்டும் இன்றேல்.

160. சுடலைப் பொடிபூசி ஆனந்த மாக
நடனம் புரியும் கபாலிக நாயகன்
பாதம் பணிந்து நம்குறை கூறினால்
சாதகங்கள் செய்வான் நமக்கு.

161. பெற்றவள் ஒக்கும் புனிதன் உனக்கேயான்
குற்றவேல் செய்து குறைகள் களைவேன்
அரிமழும் வந்தமர்ந்த சுந்தர நேசா!
பரிந்தென்னைக் காத்திட வா!

162. மங்கள ரூபன்! மங்கையின் பாகன்!
சங்கடம் நீக்கும் சதுர்வேத காரணன் !
வண்டுகள் தேறல் அருந்தும் அரிமழும்
சுந்தரனைக் காணவே ஓடிவா!

163. ஆன்இடை அஞ்சுடன் அன்பினால் நீராட்டி
தேன்வழியும் பூக்கள் நிரம்பவே கொண்டு
மலர்ப்பாதம் அர்ச்சித்தேன் சுந்தர நாத!
கனிவுடன் காப்பாய் எனை!

(ஆன்இடை பஞ்சகவ்யம்)

164. அஞ்சுதலை நாகம் சிரமேல் நின்றாட
அஞ்சுதலை நீக்கி அருளைப் பொழிந்தாய்
விஞ்சிடும் உன்னாற்றல் செப்பிடல் கூடுமோ ?
தஞ்சமே என்றும்உன் பாதம்.

165. "பொன்அணி நாளும் பொருந்திடச் செய்திடும்
நன்மணிக் கொல்லர் வடிவேலன் ஆசியால்
நண்ணியே வந்துறையும் நல்லதோர் ஊராம்இப்
புண்ணிய பூமியைப் போற்று!"



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



166. "நியதியே கூறுவார்;நீதி தவறார்;
நடுநிலை மாறார்;நிலையில் திரிந்திடார்;
நல்லதோர் தீர்ப்பினை அம்பலம் ஏறியே
நல்கிடும் முத்தான ஊர்."

167. "தறியினில் நெய்தார்;தரணி புகழும்
நெறியினில் நின்றார்; புகழுடன் வாழ்ந்தார்;
அரிமழம் ஊரினில் ஆடைகள் செய்தே
பெருமை யுடைத்தார் இனிதே!"

168. "நாட்டார் நகரத்தார் நல்லொழுக்கம் பேணியே
நாட்டமுடன் நல்லவை கூறும் மறையோர்
சிறுதொழில் வித்தகர் முக்குலத்தோர் முத்தரையர்
சிறப்பாய் வதிந்தனர் இங்கே "

169. "எல்லாரும் எல்லாமும் பெற்று நலமுடன்
பல்லோரும் போற்றப் பகையின்றி ஒற்றுமையாய்
கல்லாரும் கற்றாரும் ஒன்றாய் இணைந்தனர்
நல்லோர்கள் வாழ்த்த இனிது. "

170. வான்மழை நன்கு பொழிக !வனவளம்
பூமிசை மல்க;நிலநீர் நிலைகள் செழிக்கவே!
நான்மறை வேள்வி மறையவர் ஓதிட
கோன்முறை நன்னெறி செல்க!



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ராமகிருஷ்ண ஐயர் (மணி ஐயர்)

"நீயறிந்த செந்தமிழ் யான்அறிந் தேனல்லன்,
நீபடித்த செய்யுள்கள் யான்படித் தேனல்லன்;
ஓலைச் சுவடியில் ஓயாது கற்றவனே!
ஓய்வறியா உன்பாதம் போற்றி!"

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

# மஹான்
# ஸ்ரீஸுந்தர ஸ்வாமிகள் அதிஷ்டானம்

அரிமழம்.




Center for Shaiva Studies, Pondicherry Collection